# தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்புரவாகுதல்

# THE AT-ONE-MENT BETWEEN GOD AND MAN

# வேதாகமப் பாடங்கள்

"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும்
அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்
பிரகாசம் போலிருக்கும்".

தொகுதி 5

# தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்புரவாகுதல்

# THE AT-ONE-MENT BETWEEN GOD AND MAN

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவும் அவரே; இதற்குரிய சாட்சி ஏற்றங்காலங்களில் விளங்கி வருகிறது." "இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்." 1 தீமோ.2:5,6; ரோமர் 5:11

மறுபதிப்பு : 2009

**சென்னை வேதமாணவர் சபை**

22, முதல் தெரு, ராஜீவ் நகர்,
காலடிப்பேட்டை, சென்னை - 600 019.

STUDIES IN THE SCRIPTURES
VOLUME V

THE AT-ONE-MENT
BETWEEN
GOD AND MAN
*Tamil Version*

I Edition 2005 - 1000 copies
II Edition 2009 - 1500 copies

**NOT FOR SALE**

*Translated by :*
**COIMBATORE BIBLE STUDENTS**
*Retranslated by :*
**CHENNAI BIBLE STUDENTS**
*No.22, 1st Street, Rajiv Nagar,*
*Kaladipet, Chennai-600 019,*
*India.*

# அர்ப்பணிப்பு

**ராஜாதிராஜாவுக்கும் கர்த்தாதிகர்த்தாவுமானவருக்கும்**

*புத்திர சுவிகாரத்துக்குக் காத்துக்கொண்டிருக்கும்
பிரதிஷ்டைக்குட்பட்ட அவருடைய பரிசுத்தவான்கள்
மற்றும்
கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளும் விசுவாச வீட்டார்கள்
மற்றும்*
தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருந்து
தவித்து பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகள் ஆகியோரின் நலன்களுக்காக

**இந்தப் பணி அர்ப்பணிக்கப்படுகிறது.**

*"தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம்
இன்னதென்று எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கறதற்கு," "அந்தக்
கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில்
பெருகப் பண்ணினார். காலங்கள் நிறைவேறும்போது
விளங்கும் நியமத்தின்படி சகலமும் கிறிஸ்துவுக்
குள்ளே கூட்டப்படவேண்டு மென்று
தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்
முடைய தயவுள்ள சித்தத்
தின் இரகசியத்தை எங்
களுக்கு அறிவித்தார்."
(எபே. 3:11, 1:8 - 10)*

**போதகர் ரசல் அவர்களால் 1899ல் எழுதப்பட்டது.**

# வெளியீட்டாளரின் முன்னுரை

சகோதரர் சார்லஸ் டி. ரஸ்ஸல் அவர்கள் எழுதிய "தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஒப்புரவாகுதல்" என்கிற இந்த ஐந்தாவது தொகுதியின் தமிழாக்கத்தின் திருத்தப்பட்ட பதிப்பை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இதன் ஆசிரியர் வேதாகம ஆதாரத்தைக் கொண்டு பாவத்தினிமித்தம் தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உண்டான பகைமையை நீக்கி கிறிஸ்துவின் மூலம் இருவரும் ஒப்புரவாகுதலை விளக்கியுள்ளார். " எல்லாரையும் மீட்கும் பொருளாக" இயேசு கிறிஸ்து பலியானார் என்கிற வேதாகம அடிப்படைக் கருத்தையே மறுக்கிற வேத விமர்சகர்கள், பரிணாமவாதிகள், விநோதமான சித்தாந்தவாதிகள் வாழுகிற இக்காலத்தில் சரியான விசுவாசக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுதல் அவசியம். ஏனெனில் இது தேவன் ஒரு விசை பரிசுத்தவான்களுக்கு ஒப்புவித்த மகா பரிசுத்தமான விசுவாச கோட்பாடாகும்.

வேதத்தை ஆழ்ந்து படித்து, அதனுடைய தீர்க்கதரிசனங்களை அறிந்து கொள்ள விரும்புகிற தேவ பிள்ளைகளுக்கு இந்த புத்தகம் ஓர் இணையற்ற வழிகாட்டியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இதை ஜெபத்துடன் வெளியிடுகிறோம்.

- வெளியீட்டாளர்

# தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஒப்புரவாகுதல்

## ஆசிரியரின் முன்னுரை

இத்தொகுப்பின் முதல் பதிப்பு முதன்முதலில் 1899ல் வெளியிடப்பட்டது. இப்போது அநேக உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல்வேறு நாகரீகமடைந்த தேசத்தார்களின் கரங்களில் தவழ்கிறது. இந்தப் புத்தகத்தின் வாயிலாக வேதாகமத்தின் சத்திய கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டிருப்பதால் வேதாகமத்தை தெளிவாக விளங்கிக் கொள்ள இது மிகச்சிறந்த கையேடு என்று பல கடிதங்கள் வந்தவண்ணமிருக்கின்றன. ஒருசிலர், வேதாகமத்தின் ஒருசில பகுதிகள் மிக ஆழமாக ஆராயப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது என்கின்றனர். ஒருசிலர் மற்ற பகுதிகள் மிக அனுகூலமான விளக்கத்தைத் கொடுக்கின்றன என்கின்றனர். ஒருசிலர் வேதாகமத்தின் எல்லாப் பகுதிகளுமே மிகச்சிறப்பாக விளக்கபட்டிருக்கிறது என்கின்றனர். "மாசற்றவரான" இயேசு கிறிஸ்து பெத்லகேமில் அற்புதமான பிறப்பைப் பற்றிய அத்தியாயம் அநேகருக்கு ஆவிக்குரிய புதிய வெளிச்சம் கிடைத்தாகவும், இன்னும் சிலர் அறிவியலின்படியும் புதிய வெளிச்சம் கிடைத்தாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த நூல் வெளிவந்து (1899) 19 ஆண்டுகளுக்குப் பின்னர், இதனை படித்த அநேக வேத சாஸ்திரிகள் தங்களுடைய கொள்கைகளில் பல தவறுகளுள்ளதை உணர்ந்தனர். திருச்சபையின் பயணத்திற்குரிய திட்டவட்டமான நோக்கம் இன்னதென்று அறிய இந்நூல் வாய்ப்பாக உள்ளது என்று எழுதுகின்றனர். 19 ஆண்டுகள் கழிந்தபின்னரும் மாறிக் கொண்டுவரும் எந்தச் சூழ்நிலைகளிலும் வேதாகமக் கருத்துக்கு எவ்வித மாறுபாடுமின்றி இக்கால வேதமாணவர்களுக்கும் இசைவான கருத்தாக உள்ளது. "ஈடு பலி,"

“சமவிலைக்கிரயம்” என்கின்ற கருத்தே இந்நூலின் மையக் கருத்தாக விளங்குகிறது. மீட்பு சம்பந்தப்பட்ட மற்ற எல்லா கொள்ளைகளுக்கும் ஆதாரமான கொள்கையான “சமவிலைக் கிரயம்” என்ற கொள்கையே பிரகாசிக்கிறது. அப்போஸ்தலர்கள் நித்திரையடைந்ததிலிருந்து இப்போது வரை நமது மீட்பின் வரலாறு மறைக்கப்பட்டதாயும், மறக்கப்பட்டதாயும் உறக்கத்திலிருந்தது. முழு வேதாகமக் கொள்கைகளுக்கும் இந்த ஈடுபலியான “சமவிலைக் கிரயமே” திறவுக்கோல் என வேத மாணவர்கள் கண்டறிந்தனர். இதனை சரியாகப் புரிந்து கொண்டால்தான் மற்ற கொள்கைகள் எது சரி, எது தவறு எனப் புரிந்து கொள்ள இயலும்.

நமது கருத்துக்கள் வேதாகமப் பாடத்தோடு எவ்வாறு பொருந்துகிறது என்பதை ஆராய்ச்சியோடு கருத்தூன்றிப் படிக்கின்றவர்களுக்கு எல்லாம் தெளிவாக விளங்குவதில் ஆச்சரியமில்லை. வேதாகமக் கொள்கையான ஈடுபலி , சமவிலைக்கிரயம் என்ற கொள்கையில் எந்தவித மாற்றமும் கிடையாது. காலங்கள் கடந்தாலும் நமது கொள்கையில் மாற்றம் ஏற்படுவதில்லை. இந்த கொள்கை, காலங்கள் செல்லச் செல்ல பிரகாசமடைவதை நாம் நன்கு புரிந்து கொள்கிறோம். இந்தப் பாடத்தைத் பற்றிய வேதாகமக் கருத்துக்கள் எக்காலத்திலும் மாறக் கூடியவையல்ல. நாம் தவறு செய்யக் கூடியவர்கள். பரிசுத்தாவியினால் வழி நடத்தப்படுகிற யாவரும் புரியாத பகுதிகளையும் கூட புரிந்து கொள்ளும் நிலைமைக்கு வழி நடத்தப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. படிப்படியாக, தேவன் தமது திட்டத்தை வெளியரங்கமாக்குவதைக் கண்டு திகைக்க வேண்டியதில்லை. மாறாக, நாம் மகிழ்ச்சியடைகிறோம். இதில் நாம் மன்னிப்பு கேட்பதற்கு ஒன்றுமில்லை. “மீட்பு,” “சமஈட்டுக்கிரயம்” என்ற கொள்கை மெல்லிய வெளிச்சத்திலிருந்து தற்போது மிகப்பெரிய பிரகாசமாயிருக்கிறது.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆதாமுக்கும் அவனுடைய சந்ததியினருக்கும் ஈட்டுகிரயம் கொடுக்கத் தனது பரலோக மகிமையை விடவேண்டியதாயிற்று என்பதை, இப்பொழுது நாம் பார்க்கிறோம். இதற்காக அவர், ஆவிக்குரிய சுபாவத்தை விட்டுவிட்டு

மனித சுபாவத்தில் வர வேண்டியதாயிற்று. எப்படியெனில், பூரண மனிதனாகிய ஆதாமுக்கு ஈட்டுக் கிரயம் கொடுக்க ஒரு பூரண மனிதன் தேவைப்பட்டது என, நாம் காண்கிறோம். யோர்தான் நதியில் இயேசு கிறிஸ்து தனது 30ஆம் வயதில் ஞானஸ்நானம் பெற்று, அனைவரையும் மீட்கும் பொருளாக, தம்மை ஈடுபலியாக ஒப்புவித்தார். ஆதாமையும், அவன் சந்ததியையும் மீட்பதற்காக தம்மையே ஏற்ற வேளையில் ஈடுலியாகச் செலுத்தினார். அவர் சிலுவையில் தனது ஜீவனையே ஈட்டுக்கிரயமாக தியாகம் செய்தார். இதனால் தான், அவர் சிலுவையில் தனது ஜீவனை விடும்போது "எல்லாம் முடிந்தது" என்றார். மனுக்குலத்தின் தந்தையாகிய ஆதாமின் பாவத்திற்கு ஈடாக வேறு எந்த ஈடுபலியும் செலுத்த இயலாது. ஆதாமுக்கு ஈடுபலியாக இயேசு தன்னை செலுத்தியது அப்போதே தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவ்வாறு ஈடுபலி அப்போழுதே ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பின் ஆதாமும் அவருடைய பாவச் சந்ததியும் இயேசு கிறிஸ்துவை அப்பொழுதே ஏற்றுக் கொண்டிருப்பார்கள். இந்த ஈட்டுக்கிரயமானது ஆதாமுக்காகவும், அவன் சந்ததிக்காகவும் முன்கிரயமாக பிதாவாகிய தேவனிடத்தில் கொடுத்து வைக்கப்பட்டது. ஏற்ற சமயத்தில், தேவ திட்டத்தின்படி கொடுத்து வைத்த, இயேசு கிறிஸ்துவின் முன்கிரயம் ஆதாமின் சந்ததி கணக்கில் பற்று வைக்கப்படும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்து எழுப்பப்பட்டவுடன், பூமிக்குரிய ஜீவியத்தில் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவராய் கீழ்ப்படிந்ததற்கு வெகுமதியாக தெய்வீக சுபாவத்துடன் கூடிய ஆவியின் சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டார். "அவரை தேவன் எல்லாவற்றுக்கும் மேலாக உயர்த்தி... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்."

இயேசு பூமியிலிருந்தவரை ஈடுபலியின் விலைக் கிரயத்திற்கு எந்தவித பயனுமில்லை. அவர் தனது சீடர்களைக் கூட பிதாவினிடத்தில் ஐக்கியப்படுத்த முடியவில்லை. எனவே, "நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன்" என்றார். மேலும் தொடர்ந்து அவர், "நான் போகாவிட்டால் பரிசுத்தாவி உங்களிடத்தில் வரார்" என்றார். நமது கர்த்தர் பரமேறிய

பத்து நாட்களுக்குப் பின்னர், அவர் கட்டளைப்படி அவருடைய சீடர்கள் ஒரு வீட்டின் மேலறையில் கூடினார்கள். அப்பொழுது பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்களைப் பெற்றனர். இதுவே கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தால் அவர்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு சாட்சியம் ஆகும். இயேசு தனது ஈடுபலியின் புண்ணியத்தை பிதாவினிடத்தில் கொடுத்து வைத்திருந்தார். அதை அப்போஸ்தலர்களிடத்தில் கொடுக்கவில்லை. ஏனெனில் அதை வைத்திருக்க அவர்களுக்கு உரிமையில்லை. அது முழு மனுக்குலத்திற்கும் உரிய மீட்புக்கிரயமாகும். நமது கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது முழு மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதத்தை அவர்கள் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ளவில்லை. தங்கள் மீட்பரோடு இந்தப் பங்கைக் காட்டிலும் பெரிதான பங்கை, சாகாமை போன்ற ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். இந்த ஈட்டுக் கிரயபலி ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுக்க திட்டமிடப் பட்டிருந்தது. ஆதாமின் கீழ்ப்படியாமையினால் ஆதாமும் அவன் முழு சந்ததியும் பாவத்திற்குட்பட்டு பூமிக்குரிய ஜீவியத்தையும், பூமிக்குரிய உரிமைகளாகிய மகிமைகளையெல்லாம் இழந்திருந்தனர். ஈட்டுக்கிரயபலி நமது கர்த்தரின் இரண்டாம் வருகைக்குப் பின்னரே ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும் பரிகாரமாக ஏற்றுக் கொள்ளப்படும். அதாவது அவர் தனது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்போது, கீழ்ப்படியாத குணமுள்ள மனுக்குலம் முழுவதும் சீர்பொருந்தும்போது அவர்கள் பிதாவுடன் ஒப்புரவாகி நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். எத்தனை பேர் அவருடைய ஈட்டுக்கிரயபலியை விசுவாசித்தார்களோ அவர்கள் அனைவரும் பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

இயேசு கிறிஸ்து செலுத்திய ஈடுபலி அல்லாமல் திருச்சபையாருக்குரிய அழைப்புக்கு வேறொரு ஈடுபலி செலுத்த வேண்டிய அவசியமில்லை. கிறிஸ்துவின் ஈடுபலியே போதுமானது. ஆனால் திருச்சபையாரோ கிறிஸ்துவைப் போல பிதாவுக்கு மரண பரியந்தம், விசுவாசமும், கீழ்ப்படிதலுமுள்ளவர்களாக இருப்பதை நிரூபித்துக் காட்டவே அழைக்கப்பட்டிருக்கின்றனர். இப்படி நிரூபித்து வாழ்ந்து காட்டுகிறவர்களை, பிதாவாகிய தேவன் இயேசு

கிறிஸ்துவை தலைமையாகக் கொண்ட இராஜரீக ஆசாரியக் கூட்டத்தில் ஒருவராக ஏற்றுக் கொள்வார். இவர்களே மகிமைக்குரிய பரலோக மணவாளனாகிய கிறிஸ்துவை மணக்கப் போகும் மணவாட்டி வகுப்பார். இவர்களும் கிறிஸ்துவைப் போல பிதாவாகிய தேவனோடு உடன்படிக்கை செய்தவர்களாயிருக்க வேண்டும். "பலியினாலே என்னோடு உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டிச் சேருங்கள்." -சங். 50:5

இப்படிப்பட்ட பரிசுத்தவான்கள் அழைக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டு விசுவாசமுள்ளவர்களாகக் காணப்பட்டு மகிமையடைந்த மணவாட்டி கிறிஸ்துவுடன் இணைந்து இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து உலக மக்களை ஆசீர்வதிக்கும் போது தான் உலக இரட்சகருடைய மீட்புக் கிரயபலி பூரணப்படும். அப்பொழுதுதான் அவர் முன்கிரயமாக பிதாவிடம் கொடுத்த ஈட்டுக்கிரயபலி முழுவதுமாக நிறைவேறித் தீரும். எனவேதான் இயேசு சிலுவையில் தன் ஜீவனை விடும்போது, "பிதாவே என் ஆவியை உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன்" என்றார். அதாவது எனது ஜீவனை மட்டுமல்ல, என்னுடைய எல்லா உரிமைகளையும் உம்மிடத்தில் ஒப்படைக்கிறேன் என்றார். இந்த சுவிசேஷ யுக முடிவில் நீதியினிடத்தில் சமர்பிக்கப்படும்போது, அது இனி இரட்சகரின் கணக்கில் இராமல், ஆதாமுக்கும் அவனது சந்ததிக்கும் மாற்றப்படும். அப்போது பிதாவகிய தேவன் ஆதாமையும் அவன் சந்ததியினரையும் மீட்ட உலக இரட்சகருக்கே பிரஜைகளாக மாற்றி விடுவார். அதன் பின்னரே ஆயிர வருட அரசாட்சி துவங்கும். அப்பொழுது அனைத்துலக மக்களும் கிறிஸ்துவின் மக்களாயிருப்பார்கள். அப்பொழுது அவர்கள் ஆதாமுக்குள்ளாக இழந்த எல்லாவற்றையும் திரும்பப் பெற்று ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் பாவம், மரணமாகிய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பார்கள்.

இதற்காகவே இயேசு கிறிஸ்து தமது பரம வாசஸ்தலத்தைவிட்டு பாமர மனிதனாக பூமிக்கு வந்தார். ஆனால் 19 நூற்றாண்டுகளாக அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய திருச்சபை வகுப்பாரின் பலி , தங்கள் மீட்பரைப் போல

ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஏனெனில் இயேசு மட்டுமே பரிசுத்தமுள்ளவரும், பாவத்துக்கு விலகினவருமாய் இருந்து சரியான ஈடுபலி செலுத்தினார். நாமோ அபூரணராய் குற்றமுள்ளவர்களாய், பாவிகளாய் இருப்பதால் அத்தகைய ஈடுபலியை தேவன் ஏற்றுக் கொள்ள மாட்டார். அப்படியானால் தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்க பலியாக என்ன செய்யலாம் ? இயேசு கிறிஸ்துவோடு நாம் ஆவியின் நிலையை அடைய அனுமதி பெறுவது எப்படி ? தேவனோடு பலியினால் உடன்படிக்கை செய்தவர்களுக்கு பாவமேயில்லாத இயேசுவின் புண்ணியத்தை ஈடாக ஏற்றுக் கொள்வது தேவ நீதியாகும். அப்படிப்பட்டவர்களுக்காகவே இயேசு பரிகாரியானார். இயேசு கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தை இவர்கள் மேல்சாட்டுவது அடமானம் வைத்த பொருளுக்கு ஈட்டுக்கிரயம் செலுத்துவதற்கு ஒப்பாயிருக்கிறது. ஈட்டுக்கிரய பலிக்கு இது எவ்வகையிலும் பொருந்தக் கூடியதே. கிறிஸ்துவின் ஈடுபலி முதலில் திருச்சபையாருக்கு சமன் செய்த பிறகு, ஆயிர வருட அரசாட்சியில் அகில உலக மக்களின் பாவத்திற்கு சமன் செய்வதற்கு எந்த தடையுமில்லை.

திருச்சபையார் தங்களுடைய எல்லா பூமிக்குரிய வாழ்க்கையையும் உரிமைகளையும் விட்டுக் கொடுத்தாக வேண்டும். அவ்வாறு விட்டுக் கொடுக்கும்போதுதான் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகவும், கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாகவும் ஆவிக்குரிய நிலையைப் பெறுவார்கள்.

இந்த அடிப்படையில் கிறிஸ்துவின் நீதியை அநேகருக்கு சமன் செய்து கொடுப்பதால் மனுக்குலம் முழுவதும் முந்தின சீருக்கு கொண்டு வரப்பட்டு ஆசீர்வாதம் பெறுவார்கள். நாமும் கர்த்தருக்குள் நம்மை முழுமனதோடு தத்தம் செய்வதால் இயேசு கிறிஸ்து நமது மாபெரும் மீட்பரும், மத்தியஸ்தரும் மகாபிரதான ஆசாரியருமாகிறார். இவர்கள் பரிசுத்தாவியைப் பெற்று தேவ சுபாவத்திற்கு மாறி, பிதாவினிடத்திற்குச் செல்லக் கூடியவர்களாக மாற்றப்படுவார்கள். இவர்கள் பூமியை விட்டு ஆவிக்குரிய நிலையில் பிதாவிடத்திற்குச் செல்வார்கள். இவர்கள் எல்லாருக்கும் இயேசுவே தலையாக இருப்பார். மற்ற மனுக்குல மக்கள் பூரண மனித சுபாவத்தைப் பெற்று பூமியில் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

இயேசுவின் தியாகபலியில் திருச்சபையாரும் பங்கடைவார்கள். அவர்கள் தங்களுடைய எல்லா உரிமைகளையும், உடைமைகளையும் தேவனுக்குத் தத்தம் செய்தால் அப்படியாகும். தேவனுடைய பிரதான ஆசாரியர் தம் பலியோடு திருச்சபையாரின் பலியையும் தேவனுக்கு ஒப்புக் கொடுப்பார். இப்படியாக "கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நாம் நிறைவேற்ற வேண்டும்." அவரோடு கூட நாம் பாடுபட்டால் அவரோடு கூட ஆளுகையும்செய்வோம். ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மரித்த பின்னர்தான் இந்த உன்னத நிலையை அடைவார்கள். அவர்கள் மரிக்கும் தறுவாயில்தான் தெய்வ நீதியில் அவர்களுடைய குறைவை கிறிஸ்து தமது நீதியைக் கொடுத்து சரி செய்வார். புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி ஆதாமிடமிருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட திருச்சபையாரை கிறிஸ்து தம் நீதியினால் ஒப்புரவாக்குகிறார்.

இதே தொகுதியை நாம் மீண்டும் எழுத முற்பட்டால், அநேக மாறுதல்களை செய்ய வேண்டியிருக்காது. ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக சிறிய மாறுதல் செய்ய நேரிடும். இதை வாசகர்கள் தங்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதில் சொல்லப்பட்ட கருத்திற்கோ, விளக்கத்திற்கோ எக்காலத்திலும் மாற்றம் தேவைப்படாது. இப்போது எழுதினாலும் வாசகர்களுக்கு நாம் ஏற்கனவே தெளிவாக்கிய அந்த கருத்துக்களில் மாற்றம் இராது.

புதிதாக சில விளக்கவுரைகள் பிற்காலத்தில் எழுதப்பட்டாலும் வாசகர்கள் அதை வாசிக்க வேண்டுகிறேன். ஆனாலும் ஆசிரியரின் முன்னுரையை கவனத்தில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். புதிதாகப் படிப்பவர்கள் இதே ஆவலோடு ஆறாவது தொகுதியின் முன்னுரையையும் படிக்க வேண்டுகிறேன்.

*கர்த்தருக்குள் உங்கள் உடன் ஊழியன்,*

*புரூக்கிலின், நியூயார்க்.* **சார்லஸ் டி ரஸ்ஸல்**

*அக்டோபர் 1, 1916*

# பொருளடக்கம்

## அத்தியாயம் 1

## ஒப்புரவாகுதலி ன் தத்துவமும் மெய்த்தன்மையும்

*வேதாகம கருத்துப்படி இந்த ஒப்புரவாகுதல் கிறிஸ்தவ அடிப்படைக் கொள்கை-இதைக் குறித்து மூன்று வித கருத்துக்கள்-பூர்வீக பாரம்பரிய கருத்து, நவீன கருத்து; இவ்விரண்டையும் இணைத்து இசைவுபடுத்தும் வேதாகம கருத்து-பரிணாமக்கொள்கை ஒப்புரவாகுத-ன் உண்மைக்கு விரோதமானது-தேவநீதி நிறைவேறுதலுடன் ஒப்புரவு-வளர்ந்து வரும் சபையுடன் ஒப்புரவு-வருங்கால உலகத்துடன் ஒப்புரவு-இடைக்கால சிங்காசனமும் இராஜ்யமும் நீக்கப்படும்போது மாபெரும் இறுதி விளைவு. ...1*

## அத்தியாயம் 2

## ஒப்புரவாகுதலின் ஆசிரியர்

*சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவன்-பாவிகளின் இரட்சகர், கிறிஸ்து மூலம்-"ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்"-"தம்மில்தாமே ஜீவனுடையவர்"-இருக்கிறவராகவே இருக்கிறவர்-தவறான பாரம்பரியம்-போ-யான வசனங்களே அடிப்படை-பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பதை வேதத்தின்படி காண்பித்தல்-யேகோவா என்ற சொல்லையும் கர்த்தர் என்ற பெயரையும் வேதாகமம் பயன்படுத்தும் முறை-பழைய ஏற்பாட்டில் தேவன் என்ற வார்த்தை-புதிய ஏற்பாட்டில் தேவன் என்ற வார்த்தை-இசைவான வேதாகம சாட்சியங்கள்-"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" - "தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை" - "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு." ...23*

## அத்தியாயம் 3

## ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் ஒரே பேறானவர்

*அவர் யார்?-அந்த வார்த்தையானவர், ஒரு தேவன்-யேகோவா தேவனுடைய ஒரே பேறானவர்-வேதாகமத்தின் சாட்சி- "அவர்*

ஐசுவரியமுள்ளவராயிருந்தார்" - "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னே நான் இருக்கிறேன்" - "ஆதியும் அந்தமும்" - "யேகோவா பூர்வ முதல் என்னை தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்" - வார்த்தை மாம்சமானார்- அவதாரம் எடுக்கவில்லை-தம்மைத் தாமே தாழ்த்தினார்- ஐசுவரியமுள்ளவராயிருந்த அவர் நம் நிமித்தம் தரித்திரரானார்-இந்த சாட்சியத்தில் வஞ்சகம் ஏதுமில்லை-நம் ஆண்டவருடைய நடத்தை ஏமாற்றும் நோக்குடையதல்ல-பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவர். ...91

## அத்தியாயம் 4

## ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் மாசில்லாதவர்

முரணானவைகளாக காணப்படுகிற வசனங்களை இசைவுள்ளதாக்குதல் - மேரி மாதா பாவமில்லாதவர் என்ற ரோமன் கத்தோலிக்கரின் போதனை நிலைநிறுத்தப் படவில்லை-தெய்வீக எற்பாட்டிற்கு இயேசுவின் பாவிகளுக்கு விலகின பிறப்பு அவசியம்-இல்லையென்றால் ஈடுபலி சாத்தியமில்லை-புரோட்டோ பிலாஸத்தையும் ஜீவனையும் இணைக்கும் விஞ்ஞானத்தின் நவீன அனுமானம்-லோகோஸ் மாம்சமானது - ஸ்திரீயின் பிறப்பு இன்னும் புனிதமடையவேண்டும்-அபூரண தாய் எப்படி மாசற்ற ஒருவரை பிறப்பிக்க முடிந்தது-வேதம் உறுதிப்படுத்துவது போல இதே கோட்பாடுதான் தெய்வீக திட்டத்தின் மற்ற அம்சங்களில் செயல்படுத்தப்படுகிறது. ...111

## அத்தியாயம் 5

## ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் "தம்முடைய சகோதரருக்கு ஒப்பானார்," "நம்முடைய பலவீனங்களைக்குறித்து பரிதபிக்கக்கூடியவர்"

அவருடைய சகோதரர்கள் யார்-எதில் அவர் ஒப்பானார்-நாம் சோதிக்கப்படுவதுபோல அவரும் எல்லா காரியங்களிலும் சோதிக்கப்பட்டார், ஆனால் பாவம் இல்லாதிருந்தார்-வனாந்தர சோதனைகள்-நம்முடைய சோதனைகளுக்கு ஒத்திருந்தன-அவைகளில் சில "தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக் கத்தக்கவைகள்" - நம்முடைய கர்த்தர் சோதனைமூலம் பூரணராக்கப்பட்டார் என்பதின்

*பொருள்-குமாரனாயிருந்தாலும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்-எப்படி அவர் பாவமில்லாமல் பாவமாம்சத்தின் சாயலானார்-அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டார்-எப்படி அவர் நமக்காக "பரிதபித்தார்."* ...124

## <u>அத்தியாயம் 6</u>

## ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் தாவீதின் குமாரனும், தாவீதின் ஆண்டவரும்

*எப்படி தாவீதின் குமாரன்-சாலொமோன் வழியாக யோசேப்பின் வம்ச அட்டவணை-நாத்தான் வழியாக மரியாளின் வம்ச அட்டவணை - உயர்ந்தவனை தாழ்த்தி, தாழ்ந்தவனை உயர்த்துதல்-எப்பொழுதிலிருந்து கிறிஸ்துவுக்கு தாவீதின் ஆண்டவர் என்ற பெயர்-"நித்திய பிதா" என்ற நாமத்தின் பொருள் - எப்படி உறுதிப்படுத்துகிறது, எப்படி நடைமுறைக்குரியது-கிறிஸ்துவின் பிள்ளைகள் யார்-சபை அவரது "சகோதரர்கள்"-நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனின் பிள்ளைகள்.* ...155

## <u>அத்தியாயம் 7</u>

## ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் "மனுஷ குமாரன்"

*இந்த நாமம் எதை அர்த்தப்படுத்தவில்லை-எதை அர்த்தப்படுத்துகிறது-அதன் கீர்த்தி விவாதத்திற்கிடமில்லாதது, வேறு யாராலும் உரிமைகொண்டாட முடியாதது-உலகத்தின் பார்வையில் மனுஷ குமாரன்-பிலாத்துவின் கருத்து-ரூசோவின் கருத்து-நெப்போலியனின் கருத்து"நாம் விரும்பத்தக்க ரூபம் அவரிடத்திலில்லை", "அவருடைய முகப்பார்வை அந்தக்கேடு அடைந்தது" என்ற வசனங்களின் உட்பொருள்-"பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்."-"அவர் முற்றிலும் அழகுள்ளவர்."* ...183

## <u>அத்தியாயம் 8</u>

## ஒப்புரவாகுதலின் மார்க்கம் தேவனுடைய பரிசுத்த ஆவி

*பரிசுத்த ஆவியின் கிரியை-இப்பொழுதும் ஆயிர வருட யுகத்திலும்-பரிசுத்த ஆவிக்கு பலவிதமான விளக்கப் பெயர்கள், "அன்பின் ஆவி," "சத்திய ஆவி"*

*முதலானவை - எதிர் மாறாக, "அசுத்த ஆவி," "வஞ்சக ஆவி," "பயத்தின் ஆவி" முதலானவை-பிரதிப்பெயர்ச் சொல் பயன்படுத்துதல்-ஆவிஎன்ற வார்த்தையின் உட்பொருள்- "தேவன் ஆவியாயிருக்கிறார்"-"பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை"-பரிசுத்த ஆவியின் வரங்கள்-வல்லமையை அல்லது பரிசுத்த ஆவியை மாற்றுதல்-ஆவி அளவுடனும், ஆவி அளவில்லாமலும்-உலகத்தின் ஆவி, அந்திகிறிஸ்து-இதற்கும் பரிசுத்த ஆவிக்கும் உள்ள போராட்டம்-ஆவியின் போராட்டங்கள் பரிசுத்த வான்களுக்குள்ளேயும் புறம்பேயும்-பொறாமையை இச்சிக்கிற ஆவி-ஆவியின் போதனை-தேற்றரவாளன், பாரகிளெடோஸ்-அவர் உங்களை எல்லா சத்தியத்துக்குள்ளும் முழு ஒப்புரவிற்குள்ளும் வழிநடத்துவார்-அற்புத வரங்கள் நின்றவுடன் ஆவியின் மேற்பார்வை இராது. ...203*

## <u>*அத்தியாயம் 9*</u>

# ஞானஸ்நானம், சாட்சி, ஒப்புரவாகுத-ன் ஆவியினால் முத்திரையிடப்படுதல்

*ஆவியின் ஞானஸ்நானம் ஒன்றுதான்-மூன்று பகுதிகளாக-இந்த ஞானஸ்நானத்தின் உட்கருத்து-"பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள்"-எல்லா மாம்சத்தின் மேலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியின் வேறொரு ஞானஸ்நானம்-இதன் உட்கருத்து-ஆவிக்காக ஜெபித்தல்-ஆவியின் சாட்சி-இதன் முக்கியத்துவம்-இது இல்லாமல் தேவனோடு சமாதானமில்லை-அது தன்னிடம் இருக்கிறதா இல்லையா என்பதை சிலரே அறிந்திருக்கின்றனர்-இதுவே நான் அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிற காரியம்-ஆவியின் சாட்சியை அறிந்துகொள்வதெப்படி-ஆட்சிமுறையில் வேறுபாடுகள்-ஆவியின் சாட்சியம்-ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல்-ஆவியினால் நிறைந்திருத்தல்-ஆவியின் முத்திரை-அது முத்திரையிடும் வாக்குத்தத்தம்-மீட்பின் நாள் வரை-உன்னத நிலையை அடைய வாஞ்சிக்க வேண்டும்-தக்கவைத்துக்கொள்ள வேண்டும். ...271*

## <u>*அத்தியாயம் 10*</u>

# தெளிந்த புத்தியுள்ள ஆவி

*தேவ ஆவி அவருடைய ஜனங்களி-ருந்து பயமுள்ள ஆவியை நீக்கும்-மனுக்குலம் பொதுவாக மாம்சத்திலும் ஆவியிலும் தெளிவற்றவர்கள்-பரிசுத்த ஆவி எந்த பொருளில் தெளிந்த புத்தியுள்ள ஆவி-பலனை*

அளிக்கும் செயல்பாடுகள்-தெளிந்த புத்தியுள்ள ஆவிக்கு ரூபகாரங்கள். ...329

## அத்தியாயம் 11

## ஒப்புரவாகுதலின் பரிசுத்தஆவி மறுக்கும் செய்திகளை ஆழ்ந்து ஆராய்தல்

முரணாக காணப்படுகிற வசனங்களை ஆராய்தல்-ஆவியை அவித்துப் போடாதிருங்கள்-பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்-சத்திய ஆவி-தேற்றரவாளன்-பரிசுத்த ஆவியால் நிறைந்திருத்தல்-பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லுதல்-கர்த்தருடைய ஆவியை சோதித்தல்-பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்-ஆவியானவர் சொன்னார்-பரிசுத்த ஆவிக்கு நலமாக கண்டது-பரிசுத்த ஆவியினால் தடைபண்ணப்பட்டது-பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார்-பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்தது-பரிசுத்த ஆவி ஒரு போதகர்-பரிசுத்தராலே பெற்ற அபிஷேகம்-ஆவியானவர் வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார்-ஆவியானவர் உலகத்தை கண்டித்து உணர்த்துவது எவ்வாறு-இதனாலே பரிசுத்த ஆவி இன்னதென்றும், அந்திகிறிஸ்துவின் ஆவி இன்னதென்றும் அறிவீர்கள். ...349

## அத்தியாயம் 12

## ஒப்புரவாகுதலின் பாடம் - மனிதன்

மனிதன் என்றால் என்ன? - பழமைவாதிகளின் கருத்து-விஞ்ஞான பூர்வமான பதில்-வேதாகமப் பதில்-மனிதனின் சரீரம்-மனிதனின் ஆவி-மனிதனின் ஆத்துமா-தவறான மொழிபெயர்ப்பினால் குழப்பம்-ஆத்துமா பெருகுதல்-மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆத்துமா செல்லுகிற இடமாகிய “ஹேதேஸ்,” “சியோல்” என்றால் என்ன? ஆவிக்குரிய செய்திகளை ஆழ்ந்து ஆராய்தல். ...405

## அத்தியாயம் 13

## ஒப்புரவினால் உண்டாகும் நித்திய ஜீவனுக்கும் சாகாமைக்கும் உரிய நம்பிக்கை

பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியின் மனப்பூர்வமான நம்பிக்கை-இவைகள் ரூபகாரங்கள் அல்ல-ஒப்புரவாகுதலின் வாக்குத்தத்தங்களும்

புறவேலைகளும் ரூபகாரங்கள்-தனித்தன்மையும் வேற்றுமையும்-மனித ஆத்துமா சாகாமையுடையதா? அல்லது சாகாமையை பெறக்கூடிய நம்பிக்கை உண்டா? -தேவ தூதர்கள் சாகாமையுடையவர்களா? -சாத்தான் சாகாமையுடையவனா? -சுவிசேஷத்தின் மூலம் நித்திய ஜீவனும் சாகாமையும் வெளியரங்கமானது-வேதத்தில் சாகாத, சாகாமை என்ற வார்த்தைகளின் கிரேக்க மூலம்-சபையின் நம்பிக்கையும், இரட்சிக்கப் பட்ட மனுக்குலத்தின் நம்பிக்கையும் எந்த வகையில் வேறுபாடுகின்றன. ...523

## அத்தியாயம் 14

## ஒப்புரவாகுதலின் அவசியம் - சாபம்

சாபம் வருங்கால தீமையல்ல, தற்கால தீமை-எல்லார் மேலும் கேடு எங்கே, ஏன் வந்தது-பாவத்திற்கு விரோதமான தேவனுடைய உக்கிரம் எப்பொழுது தீரும்-இப்பொழுதும் வருங்காலத்திலும் தப்பித்துக்கொள்-தேவன் மேற்கொண்ட திட்டத்தில் ஒப்புரவாகுதல் அவசியம்-தேவதூதர்களுக்கும் வருங்கால சிருஷ்டிகளுக்கும் மனிதன் ஒரு உதாரணம். ...555

## அத்தியாயம் 15

## “எல்லாரையும் மீட்கும் பொருள்” ஒப்புரவாகுதலுக்கு ஒரே அடிப்படை

மீட்கும் பொருள் இல்லாமல் ஒப்புரவாகுதல் இல்லை-உறுதிசெய்யப்பட்டது ஆனால் பலவந்தப் படுத்தப்படவில்லை-மீட்கும் பொருளாயிருத்தல் ஒரு நன்மையானது-மீட்பு மற்றும் மீட்கும் பொருளின் முக்கியத்துவம்-மனிதனுக்காக மீட்கும் பொருள் என்ன செலுத்தப்பட்டது?- விசுவாசத்தினால் நீதிமானாகுதல் உறுதிப்படுத்தப்பட்டது- “கிரயத்துக்குக் கொள்ளப் பட்டீர்கள்” -யாரால்? - யாரிடமிருந்து? - என்ன நோக்கத்திற்காக? - எப்படி அன்பு நீதியுடன் ஒத்துழைத்தது- “எல்லாரையும் மீட்கும்பொருள்” திரும்ப எடுத்துக்கொள்ளப்படவில்லை-முதல் ஆதாமின் தந்தையின் நிலை உரிமை இரண்டாம் ஆதாமால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டது - மீட்கும் பொருள் மன்னிப்பல்ல-மனிதனுடைய மரணம் மீட்கும் பொருள் அல்ல-மனித இனம் முழுமைக்கும் மீட்பு என்ற கோட்பாட்டினரின் தவறான வாதம்-மீட்கும் பொருளினால் தேவநீதி கட்டுண்டிருக்கவில்லை-ஒரே

நாமம்-மத்தியஸ்தரின் முறைமை மோசேயினால் அடையாளப்படுத்தப்பட்டது-மீட்கும்பொருள், பதிலீடு-வேறொரு திட்டம் இருக்கக்கூடுமா? ...573

<u>**அத்தியாயம் 16**</u>

## ஒப்புரவாகுதலின் ஊழியம் அல்லது ஒப்புரவாகுதல்

இந்த ஊழியம் இராஜரீக ஆசாரியத்துவத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது-ஒப்புரவாகுதலை போதிக்க அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளது-இந்த சந்தோஷ செய்தி ஏன் பாராட்டப்படுவதில்லை-இந்த ஊழியத்தின் பலன்கள்-துன்பமும் மகிமையும்-இது எப்படி விசுவாசத்தை சோதிக்கிறது-உண்மையுள்ளவர்கள் மட்டுமே வருங்கால ஒப்புரவாகுத-ன் வேலையில் பங்கு பெறுவார்கள். ...671

## அத்தியாயம் 1

# ஒப்புரவாகுதலின் தத்துவமும் மெய்த் தன்மையும்

வேதாகம கருத்துப்படி இந்த ஒப்புரவாகுதல் கிறிஸ்தவ அடிப்படைக் கொள்கை-இதைக் குறித்து மூன்று வித கருத்துக்கள்-பூர்வீக பாரம்பரிய கருத்து, நவீன கருத்து; இவ்விரண்டையும் இணைத்து இசைவுபடுத்தும் வேதாகம கருத்து-பரிணாமக்கொள்கை ஒப்புரவாகுத-ன் உண்மைக்கு விரோதமானது-தேவநீதி நிறைவேறுதலுடன் ஒப்புரவு-வளர்ந்து வரும் சபையுடன் ஒப்புரவு-வருங்கால உலகத்துடன் ஒப்புரவு-இடைக்கால சிங்காசனமும் இராஜ்யமும் நீக்கப்படும்போது மாபெரும் இறுதி விளைவு.

கிறிஸ்தவ மதத்தில் ஒப்புரவாகுத-ன் கொள்கையே, அடிப்படையாக அமைகிறது. தெய்வீக அறிவியலில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பதால் இந்தப் பாடத்தைத் தெளிவாய் அறிந்திருத்தல் அவசியம். இதை எல்லாக் கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். பொதுவாக ஒப்புரவாகுதலை எல்லாரும் விசுவாசித்தாலும் அறிந்து உணர்ந்திருப்பவர் வெகுசிலரே. இதைப்பற்றி பலதரப்பட்ட கருத்துக்களும் கொள்கைளும் ஒன்றுடன் ஒன்று பொருந்தா வண்ணம் சொல்லப்படுவதால் விசுவாசம் சரியான, நிலையான விசுவாசமாயிராமல் பலவீனப்படுகிறது. மாறாக, இந்த மிக முக்கியமான பாடத்தை தேவ வார்த்தை கூறுகிறபடி எக்கோணத்திலிருந்து பார்த்தாலும்,தெய்வீக மீட்பின் திட்டத்திற்கு அடிப்படையாக விசுவாசத்தில் வேர் கொள்ளச் செய்கிறது. விசுவாச அஸ்திபாரம் சரியான கொள்கையில் நிறுத்தப்படவேண்டும்.

*அதனால் சரியான விசுவாசத்தின் சத்தியத்தையும், அதற்கெதிரான நம்பிக்கையையும் வேறுபடுத்தி பார்க்க முடியும். அடிப்படையான விசுவாசம் சரியாக ஸ்திரப்படுத்தப்பட்டால் மேற்கொண்டு அதன் மேல் கட்டப்படுகின்ற ஒவ்வொரு விசுவாசக் கிரியைகளும் அடிப்படையோடு இசைந்து இருக்கும். அதனால் மேற்கொண்டு கட்டப்படுகிற யாவும் பரிபூரணமாக அமையும். எந்தவொரு கருத்தும், கொள்கையும் இந்த ஒப்புரவாகுதல் என்கிற உரைகல்லுடன் உரசிப் பார்த்து அதன் மூலம் அவைகள் உண்மையிலேயே தங்கமா, பித்தளையா எனத் தீர்மானிக்கலாம். ஒப்புரவாகுதலைக் குறித்த இரு பொதுவான கருத்துக்கள் :*

*1. பாரம்பரிய நோக்கின்படி தெய்வீகச் சட்டத்தை மீறியதால் மனிதன் தேவ கோபாக்கினைக்குள்ளானான். ஆனாலும் தேவ நீதியால், பாவியாகிய அவனுக்கு ஒரு மீட்பு ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்துவின் பலியினாலே அவன் பாவங்களுக்கு மன்னிப்பும் மீட்பும் உண்டாயிற்று. பாவியை,தேவனுக்கு ஏற்றவனாகச் செய்வதே ஒப்புரவாகுதலுக்குரிய முழுப் பணியின் நோக்கம்.*

*2. ஒப்புரவாகுதலைப் பற்றி பாரம்பரியமல்லாத மற்றகருத்து இந்தப் பாடத்தை எதிர்ப்புறத்திலிருந்து காண்கிறது. (ஒருசில காலங்களில் ஒருத்துவக்காரர்களும், எம்மதமும் சம்மதமே என்பவர்களும் சொல்லிக் கொண்டிருந்த இந்தக் கருத்து தற்போது வேகமாக எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலும் நம்பப்படுகிறது.) அதன்படி பாவியின் பாவத்திற்காக ஒருபலி தேவையில்லை என்று அனுமானிக்கிறது. தேவ கோபத்தை, மரணத்தீர்ப்பை, தேவ சாபத்தை அசட்டை செய்கிறது. அதன்படி ஒப்புரவாகுதல் தேவையில்லை என்றும், எந்தத் தடையுமில்லாமல் மனிதன் தேவனை அணுகலாம் என்றும் கூறுகிறது. ஆனால் மனிதன் பாவத்தை விட்டுவிட வேண்டும், நீதியைத் தேடிட வேண்டும் என்ற இவ்விரண்டின் மூலம் தேவனோடு ஒப்புரவாகி விடுகிறான் என்பது கருத்து. இதனால் இந்த ஒப்புரவாகுதலை எந்த முறைகளையும் பின்பற்றாமல் மனுக்குலம் பெற முடியும், தன் பாவங்களுக்காக வருந்தி திருந்தினால் மட்டுமே போதும், அல்லது நிபந்தனை இல்லாமல் தேவ மன்னிப்பை பெறலாம் என்பது அவர்களது கருத்து.*

இத்தவறான அனுமானத்தின்படி பார்க்கும்போது நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரது போதகத்தால் பாவத்தைவிட்டு நீதிக்குத் திரும்பும்படி கூறப்பட்ட ஆலோசனைகளால் ஒப்புரவாகுதலில் பங்கு கொள்கிறான் என்ற கருத்து தவறாகிறது. ஆனால் பாவத்திற்குப் பரிகாரமான பலியாக ஈடுபலி என்ற கருத்தில் அல்ல.

3. நாம் ஏற்றுக் கொள்கிற வேதாகம கருத்தை வேத சாஸ்திரிகள் கவனியாமல் விட்டுவிட்டார்கள். முன்கூறப்பட்ட இரண்டையும் சேர்த்து வேதாகமப்படி ஒப்புரவாகுதல் என்றால் என்ன என்பதைக் குறித்து தெளிவாகக் காண்போம்.

a) மனிதன் பூரணமாக தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். மனப்பூர்வமாக கீழ்ப்படியாமையால் அந்த நிலையிலிருந்து விழுந்து கோபாக்கினைக்குட்பட்டான். இதுவே சாபம். இதனால் முழு மனுக்குலமும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாக கோபாக்கினையின் பிள்ளைகளாக ஆனார்கள். - எபேசி 2:2,3

b) தேவன் தமது பிரமாணத்தின்படி, கீழ்ப்படியாத சிருஷ்டியை நியாயப்படி மரணத்தால் தண்டித்தார். இப்படி இரக்கமில்லாமல் 4000 ஆண்டுகள் கழிந்தன. இருந்தபோதிலும், தம்முடைய நீதி, நியாயத்துடன் அன்பையும் மனதுருக்கத்தையும் இணைத்து இறுதியாக ஒரு மீட்பின் திட்டத்தை தண்டனைக்கு ஈடாக, ஒரு மாற்றாக ஏற்படுத்தினார். இதன்மூலம் தேவன் தம்முடைய நீதியை நிலைநாட்டுகிறவராகவும், அதே சமயத்தில் இயேசுவினிடத்தில், விசுவாசமாயிருக்கிறவர்கள் நீதிமானாகிறதற்கும், ஏற்ற காலத்திலே கிறிஸ்துவை கிருபாதார பலியாக ஏற்படுத்தினார். (ரோம. 3:25,26) இத்திட்டதின்படி நீதி பிறழாமலும் அதே சமயத்தில் ஆக்கினைக்குட்பட்டவர்கள், அதிலிருந்து விடுபடவும் செய்தால், தெய்வ அன்பு, ஞானம், வல்லமை, வெளியரங்கமாவதுடன், தேவ தூதருக்கும் மனுக்குலமாகிய அவருடைய சிருஷ்டி முழுமைக்கும், ஆசீர்வாதமான சிலாக்கியத்தையும் பாக்கியத்தையும் உண்டாகச் செய்தார். எபேசி 3: 9-12

c) முதல் தகப்பனாகிய ஆதாமின் மீறுதலுக்காக, தெய்வீகத்

*திட்டத்தின்படி நமது அருமை மீட்பர் மரிக்க வேண்டியதாயிற்று. "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே, இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." - 1 தீமோ. 2:6*

d) *பாவங்களுக்காகச் செலுத்தப்படும் பலியினாலே ஒப்புரவாக்குதலின் பணி முழுமை பெறாது. சரியான நீதி முறைப்படி பலி ஈடாக இருக்க வேண்டும். பாவத்திற்கு ஈடாக பலி செலுத்தும் போது அதுவும் நீதிக்காகச் செலுத்தப்படும்பொழுது அது மனிதன் கணக்கில் எழுதப்பட வேண்டும். இந்த ஈட்டிற்கு மனிதன் கடன்பட்டுள்ளான். இந்த கடன் கணக்கு முழுமையாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. ஏனெனில் இயேசு கிறிஸ்து நீதியாக ஆதாமுக்காகவும், அவனது சந்ததிக்காகவும் தனது ஜீவனை கொடுத்தார். இப்படிப்பட்ட தம்முடைய விலைமதிப்பற்ற இரத்தத்தால் ஆதாமின் சந்ததியை கிரயத்துக்கு வாங்கிக் கொண்டதால் இயேசு எல்லாருக்கும் ஆண்டவரும் கர்த்தருமாயிருக்கிறார். ரோம 14:9*

e) *ஆதாமிற்கும் அவன் வழியில் வந்த அனைவருக்கும் கொடுக்கப்பட்டமரணத்தீர்ப்பானது மாற்றி எழுத முடியாததாக இருந்தது. ஆதாமின் இனம் முழுமையாகச் செத்துக் கொண்டே சாகவேண்டியதாக இருந்தது. இதற்கு மாற்று வழியே இல்லாமல் இருந்தது.*

f) *விழுந்து போன மனுக்குலம், மீண்டும் தேவ நீதி, நியாயத்தை அடையக்கூடாத, நிலையில் இருந்தது. ஆனால், பிதாவின் பிரதிநிதியான இயேசு கிறிஸ்து பிதாவின் திட்டப்படி தேவநீதியை நிறைவேற்ற முன்வந்து நீதியாகப் போதித்தல், சீர்திருத்துதல், மீண்டும் புதுப்பித்தல் ஆகிய பணிகளைச் செய்து விழுந்துபோன மனுக்குலத்தை நீதி நியாயத்திற்கு, உட்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஏற்கனவே ஆக்கினைக்குட்பட்ட மனுக்குலம், தேவ நீதியால், சீர்திருத்தப்பட்டு பூரணப்படுத்தப்பட்டு சரியான நீதியின் நிலைமைக்கு இறுதியில் மாற்றப்படும்.*

g) *தேவனிடத்திலிருந்து மனிதனை ஆரம்பத்தில் இந்த தேவ ஆக்கினைத் தீர்ப்பே பிரித்தது. மனுமக்கள் 6000 ஆண்டாக,*

மேன்மையான நிலைமையிலிருந்து விழுந்து, பிரிந்து சீர்கெட்டு, தீய செய்கைகளால் தேவனுக்கு விரோதமானவர்களாக ஆகிவிட்டனர். தந்திரமுள்ள, விரோதியான சாத்தானாலும், அறியாமையாலும், மூட நம்பிக்கைகளாலும், தெய்வீக சுபாவமும், தெய்வீக திட்டமும் மனிதருக்கு, மிக தவறாக எடுத்துக் காட்டப்பட்டன. தெய்வீக அருளையும், மன்னிக்கும் மாண்பையும் மறக்கக் கூடிய அளவு, கவனிக்காமல் விடப்பட்டுவிட்டன. இயேசுவின் மீட்கும் கிரயத்தை தேவன் ஏற்றுக்கொண்டு, பாவிகளை மன்னித்து அவர்களுக்கு நித்திய ஜீவனை அருளிச் செய்ய அவரது ஈடுபலியே முக்கியக் காரணமாக இருந்தது. இந்த நற்செய்தியைப் பெரும்பாலான மனிதர்கள் தங்கள் மந்தமான விசுவாசத்தால் ஏற்றுக் கொள்வதில்லை. எல்லா ஜனங்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிற சாத்தானின் வஞ்சகத்தால் சிலர் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். (வெளி 20:3) ஏனெனில் அவர்கள் தேவன் ஒருவர் உண்டு என்று விசுவாசிப்பதில்லை. வேறு பலர், தேவன் அன்பும், கிருபையும் இல்லாதவராக, நித்தியத்திற்கும் எல்லாரையும் வாதிக்கின்ற வல்லமை பொருந்தியவராக இருக்கிறார் என்றும் எண்ணுகிறார்கள். வேறு சிலர் குழப்பமான பாபேலைப் (குழப்பம்) போல தெய்வ சுபாவத்தை மாறுபாடான சுபாவமென நினைக்கின்றனர். இன்னும் பலர், எதை விசுவாசிப்பதென்றும் அறியாமல் இருக்கின்றனர். வேறு பலருக்கு தேவனுக்குச் சமீபமாக நெருங்குதல், அவர்களது அறியாமையினாலும் பயத்தினாலும் தடைபடுகிறது. இவ்வளவு மாறுபாடானவற்றிற்கு மத்தியிலும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனண்டையிலே நெருங்க தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறவர்களோ மிகச் சிறுபான்மையோராகிய சிறுமந்தை மட்டுமே.

h) எனினும் பாவங்களுக்கு செலுத்தப்பட்ட பலியோ சிலருக்காக அல்ல, எல்லாருக்குமாகும். ஒவ்வொரு சிருஷ்டிக்கும் நற்செய்தியாகிய தேவ கிருபையின் கீழ், சிருஷ்டிகரோடு ஒப்புரவாகுதலை, தனது விலையேறப்பெற்ற இரத்தத்தால் எல்லோரையும் மீட்ட அவரை எல்லாருக்கும் அறியச் செய்வதே தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

i) இதுவரை இந்த ஒப்புரவாகுதலின் பயனைச் சபை மட்டுமே அடைந்தது. ஆனால் வேதகாம போதனையின்படி இந்த சபை, இராஜரீகமான, பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவுடனே கூட, ஒரு ஆசாரிய ராஜ்யமும், ராஜரீக ஆசாரியக் கூட்டமுமாக அயிர வருட ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட இருக்கிறது. இந்த ராஜரீக ஆசாரிய கூட்டம், பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது பூமியின் சகல குடும்பங்களையும் தற்போது சாத்தானால் குருட்டாட்டத்தில் வைக்கப்பட்டுள்ள தவறுகள், தீமைகள், எல்லாவற்றினின்றும் நீக்கி, தேவனோடு ஒருமனப்பட்டு ஒப்புரவாக்கும் பணியைச் செய்வார்கள்.

j) இந்தக் கருத்துக்கேற்ற வண்ணமாக அப்போஸ்தலர்களுடைய வாக்கும் உள்ளது. விசவாசிகளாகிய சபையார், ஒப்புரவாக்கப் பட்டிருக்கிறார்கள். தேவனைப் பொருத்த வரையில் இந்த ஒப்புரவாக்குதல் பத்தொன்பது நூற்றாண்டுகட்கு முன்னரே நிகழ்ந்தது. ஆனாலும் விசவாசிகள் மாத்திரமே, தேவ கிருபையினாலே இந்த ஒப்புரவாகுதலை ஏற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தைப் பெற்றனர். மற்ற மனுக்குலம் முழுவதற்கும் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இந்த பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். *II கொரி 4:4*

k) வேதமும் இதற்கு இசைவாக, சாத்தான் யாரையும் மோசம் போக்காதபடி அவனைக் கட்டுவதே ஆயிர வருட அரசாட்சியில் கிறிஸ்துவின் முதற்பணியாகும் எனக் கூறுகிறது. *(வெளி 20:3)* தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு இணங்க, தேவ இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் பொழுது பூமியில் தேவனைப் பற்றிய அறிவு சமுத்திரம் ஜலத்தினால் நிரம்பியிருக்கிறது போல நிறைந்திருக்கும். அப்பொழுது சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் எல்லாரும் தேவனை அறிந்துகொள்வார்கள். ஆகையால் கர்த்தரை அறிந்து கொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டுவதில்லை. *(எபி 8:11)* கர்த்தர் கற்பித்த ஜெபத்திலும் “உம்முடைய ராஜ்யம் வருவதாக” உம்முடைய சித்தம் பூமியிலே செய்யப்படுவதாக என்றே வேண்டப்படுகிறது. இதையே தான்,

அப்போஸ்தலரும், "எல்லாரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்கிறார். Iதீமோ. 2:4

l) ஒப்புரவாக்குதலின் இரு கட்ட நிகழ்ச்சிகளிலும், நீதிமுறைமையின்படி எல்லா மனிதரும் தேவனோடு ஒரு மனப்பட்டு, ஒப்புரவாக்கப்பட்டு சர்வ சிருஷ்டியும் முழுசத்திய வெளிச்சத்திலும், அறிவிலும் வளர்ந்து புதிய உடன்படிக்கையின் பாக்கியங்களையும், சந்தர்ப்பங்களையும் பூரணமாக அனுபவிப்பதென்பது ஆயிர வருடத்தின் முடிவிலேயாகும். வேண்டுமென்றே தங்கள் சுய அறிவால் கிறிஸ்து மூலமாய் அருளப்பட்ட இந்த தேவகிருபையைத் தள்ளிவிட்ட எவரும், ஜனத்திலே இராதபடி அழிக்கப்படுவர். கர்த்தருடைய பிரசன்னத்தினாலும், அவருடைய மகிமையின் பலத்தினாலும், என்றுமில்லாமல் அழிக்கப்படுவர். எதிர்கால உயிர்த்தெழுதலும், எந்த நம்பிக்கையுமில்லாமல் அழித்து ஒழிக்கப்படுவர். அப் 3:22; II தெச. 1:9,10

m) மாபெரும் ஒப்புரவாக்குதலின் பணி நிறைவேறும் பொழுது, பரலோகத்தில் உள்ளவைகளும், பூலோகத்தில் உள்ளவைகளும் தேவ சித்தத்திற்கு இசைந்து கிறிஸ்து மூலமாய் பெற்றுக் கொண்ட கிருபைகளுக்காகவும் தயாளங்களுக்காகவும் ஸ்தோத்தரிப்பார்கள். ஏனெனில் இனி பெருமூச்சு, கண்ணீர், கவலை, மரணம் எல்லாம் ஒழிந்துபோகும். இந்த ஒப்புரவாகுதலின் பணியால், நமது மீட்பருடைய பலியால், தெய்வீக நீதி முறைமை துவக்கப்பட்டு, நித்திய ஜீவனுக்குப் பாத்திரமான யாவரும் தேவனோடு ஒருமனப்பட்டிருப்பார்கள், ஒப்புரவாக்கப் பட்டிருப்பார்கள்.

ஒப்புரவாகுதல் என்ற சொல்லே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே எற்கனவே ஒரு வேறுபாடோ, மாறுபாடோ இருப்பதை உணர்த்துகிறது. சிருஷ்டிகளுக்கும், சிருஷ் டித்தவருக்கும் வேறுபாடு இல்லாதிருந்தால் ஏற்கனவே ஒருமனப்பட்டிருப்பவர்களை ஒப்புரவாக்க இந்த ஒப்புரவாக்குதலின் பணி அவசிய மற்றதாயிருக்கும். ஏற்கனவே வேதாகமத்திற்கும், தற்கால சித்தாந்தமாகிய பரிணாமவாதத்திற்கும் முரண்பாடு உள்ளது. பல

ஆண்டுகளாகவே பல்வேறுபட்ட கிறிஸ்துவ மண்டலங்களிலே வித்தியாசமான வேதாந்த தத்துவங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன.

பரிணாமவாதம், மனிதன் தேவசாயலிலும், தேவரூபத்திலும் இருப்பதை மறுக்கிறது. மனிதனின் வீழ்ச்சியையும் மறுக்கிறது. சரியான நீதிமன்றத்திற்கு முன் நிற்கக்கூடிய நிலையில் மனிதன் இருக்கவில்லை என்றும் எந்த வழக்கும் நடத்திடக் கூடிய பாவம் செய்யவில்லை என்றும் அவனுக்கு மரண தண்டனை தீர்ப்பிடப்படவுமில்லை என்றும் கூறுகிறது. மரணம் ஒரு தண்டனை என்று பரிணாமவாதம் கருதுகிறதில்லை. மாறாக பரிணாம வளர்ச்சியின் இன்னொரு படி என்கிறது. மேலும் தேவசாயலையும், ரூபத்தையும் இழந்து, பாவத்திற்குள் வீழ்ந்து படிப்படியாக பலவீனமடைந்ததை மறுத்து, குரங்கு நிலையி-ருந்து மனிதன் படிப்படியாக வளர்ந்து தேவ சாயலையும், ரூபத்தையும் அடைகிறான் என்கிறது. இவ்விதமாய் நினைப்பதால் தேவன் பட்சமாக மனிதனைத் தீர்ப்பிட்டு, அவனைக் கீழான நிலையிலிருந்து, அதாவது பாவ நிலையிலிருந்து மேலான நிலைக்கு கொண்டுவந்த பாவநிவராண பலியின் மூலமாக உண்டாகும் தேவநீதியையும் மறுப்பதோடு பாவ நிவராண பலி செலுத்தப்பட மனிதன் எந்தப் பாவமும் செய்யவில்லை என்கிறது. இவ்விதமான சிந்தனையால், கிறிஸ்து பாவ பரிகாரமாக பலியாகவில்லை, மாறாக எந்தவொரு தேசபக்தனும் தன் தேசத்துக்காகப் பலியாவான். இவ்விதமாகத் தன்னுடைய இனத்தை மேம்பாடு அடையவும் விடுதலை அடையவும் உதவிட அவர் தன்னைப் பலியாக்கினார் என்றும் இவர்கள் கூறக்கூடும்.

ஆனால் தேவ வாக்கானது இந்த வாதத்தை முழுமையாக மறுக்கிறது. அறிவியல் பூர்வமானது என்று, பொய்யாக அழைக்கப்படும் பரிணாமவாதத்திற்கும், வேதாகம போதனைக்கும் இசைவு இருக்க நியாயமில்லை. பரிணாமக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறவர்கள் வேதாமக் கொள்கையை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனாலும் அநேக கிறிஸ்தவ மக்கள், இப்படிப்பட்ட முரண்பட்ட கொள்கையுடைய பரிணாம வாதத்தையும், வேதத்தையும் இணைக்க வீண்முயற்சி செய்கிறார்கள். எந்தமட்டும் பரிணாம வாதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ, அந்த

மட்டும் தேவன் போட்ட விசுவாசத்தின் அஸ்திவாரத்திலிருந்து வெகுதூரம் விலகுகிறார்கள். இதனால் எதிரியானவன் ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கிற அநேக தவறான கருத்துக்களில் தங்களை இழப்பார்கள். தெய்வ நோக்கைவிட்டு, இப்பிரபஞ்சத்தின் ஞானவழியிலே சென்று தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படுவார்கள். ஆனாலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தை" உடையவர்களாக அதில் நிலைத்திருப்பார்கள். இவ்விதமாய் வேதாகமம் காட்டுகின்ற ஒப்புரவாக்குதலின் கொள்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருப்பார்கள்.

வேதாகமம், தேவன் தம்முடைய சாயலிலும் தம்முடைய ரூபத்தின்படியும் - மனதாலும், ஒழுக்கத்தாலும், மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதாக தெளிவாகச் சான்று பகர்கிறது. அதாவது பூமிக்குரியவனான மனிதன் ஒழுக்கத்திலும், பகுத்தறிவின் சாயலிலும் ஆவிக்குரிவரான தன்னைச் சிருஷ்டித்தவருக்கு ஒப்பானவனாக இருந்தான். தேவன் ஆதியிலே தன் சிருஷ்டிகளோடு தொடர்பு கொண்டிருந்ததாகவும், தன்னுடைய கை வேலைப்பாடு என்று அங்கீகரித்ததாகவும், ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், மிகப் பிரியமானதாகவும், மிக நன்றாய் இருந்ததாகவும் வேதம் அறிவிப்பதோடு, பூரணமாயிருந்த ஆதாமுக்கு முன்பாக ஜீவன் அல்லது மரணம், ஏதாவது ஒன்றைத் தெரிந்து கொள்ளும்படியாக வைக்கப்பட்டது என்றும் கூறுகிறது. ஆதாம் மீறுதலுக்குட்பட்டபோது அந்த மீறுதல் வேண்டுமென்றே பூரண அறிவோடு ஆதாமால் செய்யப்பட்ட செயல். அதனாலே "ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை" என்று வேதம் கூறுகிறது. பாவத்தின் சம்பளமாகிய மரண தண்டனை தொடங்கியதை கூறுகிறது. மனித குலம் முழுவதற்கும் பல நூற்றாண்டுகளாக மரண ஆக்கினைத் தீர்ப்பு தொடர்ந்ததை வேதம் கூறுகிறது. விசுவாசமுள்ள ஆபிரகாமுக்கு தேவன் முழு மனுக்குலத்தையும் சாபமாகிய மரணத் தீர்ப்பிலிருந்து ஆசீர்வாதமாக மாற்றுகின்ற திட்டத்தை உடனடியாக அல்ல, பிற்பாடு வெளிப்படுத்தினார் என்று வேதம் கூறுகிறது. ஆதி 1:31; 2:17; 3:23; 1 தீமோ 2:14; ஆதி 12:3; 18:18; 3:17.

பாவத்திற்குத் தண்டனையான சாபம், மரணமாயிருப்பதால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதமானது, மரணத்தினின்று ஜீவனை பெறுவது, அதாவது முடிவில்லாத ஜீவனை பெறுவது என்று பொருளாகும். ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட காரணத்தால் உலகை ஆசீர்வதிக்கும் பணியை நிறைவேற்றுகின்ற இரட்சகர், ஏதாவது ஒருவகையில் ஆபிரகாமின் சந்ததியில்தான் வருபவராக இருத்தல் வேண்டும். இதே வாக்குத்தத்தம் தெளிவாக ஈசாக்கிற்கும், யாக்கோபிற்கும், இஸ்ரயே-ன் புத்திரருக்கும் திரும்பக் கூறப்பட்டது. தீர்க்கதரிசிகளும் கூட, வர இருக்கிறவராகிய மேசியா தமது பாவங்களுக்காக அல்ல, நமது பாவங்களுக்காகத் தன் ஜீவனை மரணத்தில் ஊற்றுகிறவராக, பாவ நிவாரண பலிக்காக கொல்லப்படுகிற ஆடாக இருக்க வேண்டும் என்றும், பாவத்திற்காக பலியான பின்னர், பலி ஏற்கப்பட்டதையும் அதன் விளைவையும் விவரித்தார்கள்; தற்போது உலகில் இருக்கிற துன்பம், இருள், இருண்ட செய்கைகள், அழுகையின் ஓலங்கள் ஆகிய, முதல் பாவ சாப விழுகையின் விளைவுகள் முற்றிலுமாக மாற்றப்படும் என்றும், ஆசீர்வாதங்களும், புதிய ஜீவனும் உலகில் இதுவரை காணாத சந்தோஷமும் வரப்போகிற நீதியின் சூரியனாகிய, அந்த ராஜாவின் இராஜ்யம் ஆரம்பமாகும்போது இந்த மகிமையின் ஆசீர்வாதங்களெல்லாம் தொடரும் என்றும் விளக்கினார்கள். ஏசா 53:10-12; 35; 60; 61

அப். பேதுரு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசும்போது, மனிதன் குரங்கிலிருந்து படிப்படியாக முன்னேறி பரிணாம வளர்ச்சியாலே பூரணம் அடைந்தான் என்று கூறவில்லை. மாறாக, இதற்கு எதிரிடையாக, கிறிஸ்து சகலருக்கும் மீட்பைக் கொண்டுவர பலியிடப்பட வேண்டும் என்று, தேவன் தம்முடைய தீர்க்க தரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தார். முன்னறிவித்தபடியே, இறுதியாக கர்த்தருடைய இரண்டாம் வருகையில் இளைப்பாறுதலின் காலம் வரும்போது எல்லாம் சீர்பொருந்தப் பெறும். (அப். 3:19-21) அப். பேதுரு "உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் முன்னுரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித்தீரும் காலம்" என்று சொல்லுவதைப் பரிணாமக் கொள்கையோடு

இணைத்துச் சிந்திப்பார்களேயானால், அப்படிப்பட்டவர்கள் காரண காரியம் அறியாதவர்கள், ஏனென்றால் மனிதனின் பூர்வீக நிலைமை குரங்காக அல்லது அதற்கு கீழான நிலைமையாக இருக்குமானால் அப்போஸ்தலர்கள் சொல்லுகின்ற நம்பிக்கை நிறைந்த இளைப்பாறுதலி ன் காலங்கள், முன்னிருந்த சீரான நிலைக்கு வருதல் ஆகியவை கேலிக் கூத்தாக, முட்டாள்தனமாக இருக்கும்.

அப்போஸ்தலரின் வார்த்தை பரிணாமக் கொள்கைக்கும் முற்றிலும் மாறாகவும் ஒருமனப்படுதல், ஒப்புரவாகுதல் என்கிற வேதத்தின் கொள்கைக்கு மிகவும் இசைவாகவும் இருக்கிறது. பாவத்தின் கீழ் விற்கப்பட்ட மனுக்குலம் பாவத்திற்கு அடிமையாகி, பாவத்தினால் அதாவது ஆதாமின் முதல் கீழ்ப்படியாமையினால், உண்டான பாவத்திற்குத் தண்டனையாக மரணத்தினால் செத்துக் கொண்டே சாகிறது. பேதுரு பிரசங்கம் பண்ணின சீர்திருத்தலின் காலத்தைப் பற்றிய நற்செற்தியைக் கூறும்பொழுது நன்மையான மேன்மையான மாபெரும் காரியம் ஒன்று இழக்கப்பட்டதென்றும், அது கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது மீட்கப்பட்டு, இந்த மீட்பு பூரணமாகி அதன் விளைவால் யாவும் சீர்த்திருத்தப்படும் என்றும் கூறினார். தேவ ஆவியின் ஏவுதலினாலே இந்தச் சீர்திருத்தலின் நம்பிக்கை எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் ஏற்பட்டதினால் அவர்கள் யாவரும் இதைப் பிரகடனப் படுத்தினார்கள்.

இதுபோலவே எல்லா அப்போஸ்தலர்களும், தேவ தயவிலிருந்து மனிதன் விழுந்ததிலிருந்து தேவ நீதிக்கு இசைவாக ஒப்புரவாகுதலுக்கு கிறிஸ்துவின் சிலுவை வரை குறிப்பிடுகின்றனர். அதன் பிறகு, கர்த்தரை அறிகிற அறிவின் சந்தர்ப்பத்தின் மூலம், மனுக்குலம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படக்கூடிய காலமாகிய ஆயிர வருட யுகத்தைக் குறித்தும், தேவனோடு ஒப்புரவாகுதலுக்கு உதவி செய்வது குறித்தும் எடுத்துக் காண்பித்தார்கள். கிறிஸ்துவின் சரீரமாகவும், மணவாட்டியாகவும், கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட பலி யின் மூலம் உலகத்தை ஆசீர்வதிக்கிற வேலையில் மேசியாவுக்கு உதவிட தெரிந்துகொள்ளப்பட்ட சபையைக் கூட்டிச் சேர்க்க தகுந்த காலம் இந்த யுகம் என்பதையும் எல்லோரும் எடுத்துக் காண்பிக்கின்றனர்.

*அப்-பவுல் இதுபற்றிக் கூறுவதைக் கவனிப்போம். "ஒரு மனிதனுடைய கீழ்ப்படியாமையினாலே இவ்வுலகில் பாவமும், பாவத்தின் விளைவால் மரணமும் பிரவேசித்தது." ஆதி பெற்றோரிடமிருந்து பாவமும், பாவ சுபாவமும் ஆண்டு வந்ததால் எல்லாரும் பாவிகளாயினர். அப்-பவுல், பேதுரு மற்றும் ஏனைய தீர்க்கதரிசிகள் பரிணாமவாதக்காரர்கள் அல்ல. பவுல் சுவிசேஷத்தின் பிரதான நம்பிக்கையைக் குறித்து கூறுகிறாதவது: "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." (ரோம. 5:8-9) மனுக்குலம் முழுவதும் தேவ கோபாக்கினைக்கு உட்பட்டிருந்ததாக உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது; கிறிஸ்துவின் இரத்தமே அதிலிருந்து காக்கவல்லது என்றும், நமது நிமித்தமே அவர் பலியானார் என்றும் அந்தப் பலியே தேவ அன்பையும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதாக இருக்கின்றது என்றும் அறிவிக்கப்படுகிறது. இந்த ஒப்புரவாக்குதலின் பணியே யாவற்றையும் முற்சீருக்குக்குக் கொண்டுவர காரணமாயிருக்கிறது என்றும் அப்போஸ்தலர் காண்பிக்கிறார். "மனுஷனாலே பாவமும் (ஆதாமின் கீழ்ப்படியாமையினால்) பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று." "ஆகையால் ஒரே மீறுதலினால் எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு (மரணத் தீர்ப்பு) உண்டானது போல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பும் (திருத்திய தீர்ப்பு) உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய (ஆதாம்) கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல ஒருவருடைய (இயேசு) கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப் படுவார்கள்". (புதிய உடன்படிக்கை வாய்ப்பினால்) ரோம. 5:12, 18, 19*

*இதே அப்போஸ்தலர் ஒப்புரவாகுதலைப் பொருத்தமட்டில் நாம் பாவிகளாயிருக்கையில் தேவ குமாரனின் மரணத்தால், நாம்*

ஏற்கனவே தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம் என்று இறந்த காலத்திலே இதன் நிச்சயத்தை எடுத்துக் காண்பிக்கின்றார். (ரோ. 5:10) இவ்விடத்திலே பாவி தன் பாவத்தை உணர்ந்து தேவனிடத்தில் ஒப்புராவகுதலை காண்பிக்காமல், எதிரிடையாக நம் சுயமுயற்சியினால் இது நிறைவேறாமல், நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்துவினாலே இது நிறைவேறிற்று என்கிறார். தலையும், மணவாளனுமாயிருக்கிற கிறிஸ்துவினால் சபை, மகிமைப்படுத்தப்பட்டு உலகை ஆசீர்வதிப்பதாக எடுத்துக் காண்பிக்கிறார். இதில் கிறிஸ்துவின் மூலமாக தேவன் காண்பிக்கின்ற கிருபையின் அறிவை எல்லாரும் அடையும்படியான திட்டத்தையும், ஏதேனில் இழந்தவற்றை எல்லாம் திரும்பப் பெற்று சிருஷ்டிகரோடு, ஒருமனப்பட்டு தேவதயவினால் ஆயிர வருட அரசாட்சியில் மீண்டும் சீர்திருந்தப் பெறும் திட்டத்தையும் காண்பிக்கிறார்.

ரோம. 8:17-24ல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தைக் கவனிக்கவும். இங்கே அப்போஸ்தலர், சபைக்குரிய விசேஷித்த இரட்சிப்பையும், அதன் பிறகு ஏகமாய்த் தவிக்கிற சிருஷ்டியாகிய உலகத்திற்கு வருகிற இரட்சிப்பையும் வேறுபடுத்திக் காண்பிக்கிறார்; தற்காலத்தில் கிறிஸ்துவுடன் பாடுகளை சகிப்பதில் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் மகிமையில் பங்கு பெறுவார்கள் என்று கூறி கிறிஸ்துவின் உடன் சுதந்தரராகிய சபையின் கவனத்தைத் திருப்புகிறார்; வரப் போகிற மகிமையை ஒப்பிடும்போது, தற்கால பாடுகள் ஒரு பாடல்ல என்றும் உறுதியளிக்கிறார்; வேத புத்திரர் வெளிப்பட காத்துக் கொண்டிருக்கிற, தவித்து பிரசவ வேதனைப்படுகிற சர்வ சிருஷ்டிக்கும், சபையின் பாடுகள் நிறைவடைந்து மகிமையடைவது ஒரு அடிப்படையாக இருக்கும் என்றும் கூறுகிறார்.

தேவபுத்திரர் யாரென்று இன்னும் வெளிப்படவில்லை. உலகம் அவர்களை அறியவில்லை. அவர்களுடைய தலையாகிய கிறிஸ்துவையும் உலகம் அறியாது. "உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வாதிக்கப்படும்" என்று ஆபிரகாமிற்கு சுவிசேஷமாய் முன்னறிவித்தபடி (கலா 3:8, 16, 29) தேவன் ஆபிரகாமுக்குச் செய்த வாக்குத்தத்தத்தினாலும், உலகம் ஆசீர்வாதமான ஒரு பொற்காலத்தை நோக்கி போகிறதென்று வெகு ஆவலாக அந்த ஆசீர்வாதத்தின்

காலத்தை அவர்கள் நிச்சயமற்ற தன்மையோடும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் தேவ புத்திரர் வெளிப்படவும், தேவ குமாரர்களாகிய சபை, மகிமைப்படவும் தேவனுடைய நியமனத்தால் ராஜாக்களும், ஆசாரியர்களுமாக நியாய விசாரணை தொடங்கும் ஆயிரவருட அரசாட்சியைக் குறித்தும் அது அமையும் முறை குறித்தும் அறியாமல் இருக்கிறார்கள்; ஆனால் அந்த நாளுக்குக் காத்திருக்க வேண்டுமென்று தோன்றுவதில்லை.

மேலும் அப்போஸ்தலர் கூறுகிறாதவது : ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே மனுக்குலம் முழுவதும் மாயைக்குட் பட்டிருக்கிறது. தேவ ஏற்பாட்டின்படி நம்பிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது. பாவத்திற்கு ஒரு பலி செலுத்தப் பட்டிருப்பதால், மனுக்குலம் பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்தும் அதன் தண்டனையாகிய மரணத்திலிருந்தும் விடுதலையாகி (வியாதி, வருத்தம், துன்பம் அகியவற்றிலிருந்து விடுதலையாகி) தேவனுடைய பிள்ளைகளின் சுதந்தரமாகிய மகிமையின் சுதந்திரத்தை (வியாதி, சோதனை, வருத்தம், துன்பம் ஆகியவைகளிலிருந்து விடுதலை) அடைவார்கள். முதல் மனிதனின் கீழ்ப்படியாமையினால் மனுக்குலம் சுயாதீனத்தை இழந்தது. மோசே நிழலாக காண்பித்த பெரிய தீர்க்கதரிசியும், இரட்சகருமாகியவரால் கல்வாரியில் செலுத்தப்பட்ட மகா பலியினால் ஒப்புரவாகுதலை நிறைவேற்றி முடித்ததால் இந்த சுயாதீனத்துக்கு திரும்பும் கிருபையை மானிடர்கள் பெறுவார்கள். (அப். 32:22, 23) ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற சபையாரும் ஒப்புரவாக்கப்பட்டு காணப்பட்டாலும், முழு உலகம் ஒப்புரவாகும் வரை இந்த ஒப்புரவாகுதலின் பணி நிறைவடையாது. ஆகவே அப்போஸ்தலன், காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கை அல்ல என்றும், நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரத்தைக் காணும் முன்பே நம்புவோமேயானால் அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம் என்கிறார். (ரோம. 8:23-25)

ஒப்புரவாகுதலின் இரண்டு பணிகள் :

1. அநீதியை அகற்றி நீதியை உண்டாக்குதல்

2. பிரிந்திருக்கிறவைகளை நமது கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையினால் மத்தியஸ்தம்

பண்ணி, தேவ திட்டத்தின்படி இசைவுள்ளவர்களாக்கி, ஒரு மனப்பாட்டுக்குக் கொண்டு வருதல்.

தகப்பனாகிய ஆதாம் பூரண மனிதனாக இருக்கும்போது, தமது சிருஷ்டிகருடைய எல்லாக் கட்டளைக்கும் கீழ்படிந்து நடந்ததால், அவர்களுக்குள்ளே ஒரு உடன்படிக்கை இருந்திருக்க வேண்டும். ஆனால் அது வெளியாக்கப்படவில்லை. பூரண ஜீவனை ஆதாமுக்குக் கொடுத்ததோடு பூமியிலுள்ள யாவற்றையும், பறவைகளையும், மிருகங்களையும் ஆளும்படியாக அருளிச் செய்யப்பட்டது. அதே சமயத்தில் ராஜாதி ராஜாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனால் அருளிச் செய்த இந்த ஆசீர்வாதங்களை இழக்க நேரிடும் என்பதே அந்த உடன்படிக்கையின் சாரம். அதாவது நிபந்தனையின்பேரில் நித்திய ஜீவன் கொடுக்கப்பட்டது. நிபந்தனையை மீறியதால் மரணத் தீர்ப்பை வருவித்துக் கொண்டான்.

ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே, மரண தண்டனை என்னும் மாபெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதற்கு நிவாரணமாக தேவாதி தேவன், ஒரு புதிய உடன்படிக்கையின் மூலம் ஒரு மீட்பை ஏற்படுத்தினார். இந்த புதிய உடன்படிக்கையின் மூலமாக தேவன் ஒரு புறமாகவும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய கிறிஸ்து மத்தியிலும், தண்டனைக்குட்பட்ட பாவிகள் மறுபுறமாகவும் ஒப்புரவாகுதல் நியமிக்கப்பட்டது என அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். இந்த மத்தியஸ்தரின் பணியைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்யும் முன்னர், அவருடைய புதிய உடன்படிக்கையை தம்முடைய விலை மதிப்பற்ற இரத்தத்தினால், முத்திரையிடுவது அவசியமாயிற்று. (மத்.26:28; மாற். 14:24; எபி 7:22; 9:15-20) இதுவே புதிய உடன்படிக்கையின் இரத்தம். தேவன் தமது நீதியின்படி எந்தப் பாவியுடனும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, ஒரு மத்தியஸ்தன் மூலமாகவோ சிபாரிசின் மூலமாகவோ, மரண தண்டனையை மாற்றி மன்னிப்பு அளிக்கமாட்டார். தேவ நீதி நினைவு கூறப்பட வேண்டும். நிறைவேறித் தீரவேண்டும். எனவே இயேசுவின் மரணத்தால்தான் புதிய உடன்படிக்கை முத்திரையிடப்படுகிறது. அதன் மூலம் தேவனுக்கும், மனிதனுக்கும் ஏற்படுகிற ஒப்புரவாகுதல் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மத்தியஸ்தரும் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

தேவனோடு இசைவாகுதல், அவரோடு ஒப்புவராகுதல் என்பது இயேசுவின் மரணத்துக்கு முன் முடியாததாக இருந்தது. இப்பொழுதோ கிறிஸ்து தமது விலைறேப்பெற்ற இரத்தத்தால் முதலில் மீட்பைப் பெற்றுத் தந்தார். எனவே யார் தேவனிடம் நெருங்க, இசைய (ஒரு மனப்பாடு) ஒப்புரவாக விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் (இயேசு கிறிஸ்து) மூலமாக மட்டுமே ஒப்புரவாகலாம். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." (யோவா 14:6.) இந்தக் காரணம் கொண்டு கிறிஸ்துவின் ஜீவ பலிக்கு முன் ஜீவித்தவர்கள் "ஊழியக் காரர்கள்" என்றும் தேவனுடைய "நண்பர்கள்" என்றும் அழைக்கப்பட்டனர். எவரும் இந்த உன்னதமான தேவகுமாரர் என்ற மேன்மையான நிலைமைக்கு வரவில்லை. மேலும் தேவ தயவும், நித்திய ஜீவனும் வேறு யாருக்கும் வாக்களிக்கப்படவுமில்லை. யோவா. 1:12; மத் 11:11.

தேவனுடைய நீதிக்கு ஆதாரமான பாவநிவாரண பலியின் மகத்துவத்தை அறியாதவர்கள், தேவனுடைய நீதியை நிலை நாட்டுவதைக் குறித்தும், ஒப்புரவாகுதலின் (ஒரு-மனப்-பாடு) அடிப்படைகளை நிறைவேற்றுவது குறித்தும் அறியாதிருக்கின்றனர். இயேசுவின் பலியை ஏற்றுக் கொள்பவர்கள் கூட, புதிய உடன்படிக்கையின் முத்திரை, மனிதன் தேவனிடத்தில் ஒரு-மனப்-பாடு அடைவதன் இசைவை உணராது இருக்கிறார்கள். புதிய உடன்படிக்கைகையின் மூலமாக மனிதர் தேவனோடு ஒப்புரவானவர்களாகக் கருதப்படுவார்கள்.

விசுவாசத்தினாலே, ஒப்புரவாகுதல் மனுக்குலம் முழுவதற்கும் உடனடியாக ஏற்பட்டு விடாது. விசுவாசத்தைக் கொண்டு உடனடியாக ஒப்புரவாகுதலின் பணி தொடங்கலாம். ஆனால் தேவனுக்கும், மனிதருக்கும் இடையே ஏற்பட வேண்டிய ஒருமைப்பாடு தேவதிட்டப்படி இன்னும் விரிவானது. மகா உன்னதமானது. நீதிபரராகிய தேவனுடைய நியாயப் பிரமாணத்தின்படி நீதியை நடப்பித்து, மத்தியஸ்தர் மூலமாகத் தேவனிடத்திற்குத் திரும்பி ஒரு மனப்பட விரும்புகிறவர்கள், பிதாவினால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள். ஏனெனில் யாவரும் அபூரணராய் இருக்கிறார்கள். இவர்களை

சீர்பொருந்தச் செய்வது மத்தியஸ்தரின் (தலையும் சரீரமும்) பணியாயிருக்கிறது. பாவ நிவராண பலியைச் செலுத்தியதின் மூலமாக பாவிகளை அவர் ஏற்றுக் கொள்ளலாம். ஆனாலும் தேவப்புத்திரராக ஏற்றுக் கொள்வதும், நித்திய ஜீவனை அளிப்பதும், அழிவிலிருந்து விடுதலையாவதும், இந்த மீட்புக்காக, தம்மையே ஜீவ பலியாகத் தந்த இந்த மாபெரும் பரிசினை மனுக்குலம் முழுவதும் தெளிவாகத் தெரிந்திருப்பது மாத்திரமல்ல, உடனடியாக அவரது வழியை ஏற்றுக் கொண்டு மனம் புதிதாகிறதினாலே மறுரூபம் அடைய புத்தியுள்ள ஆராதனை செய்கிறவர்களாயும் ஆகவேண்டும். மனிதகுலம் முழுவதும் பிதாவின் பிரதிநிதியாக மனதாலும், நடத்தையாலும் பூரணப்படவேண்டும். இப்படி அவரை ஏற்றுக் கொண்டவர்கள் மத்தியஸ்தரின் பணியாகிய ஒப்புரவாகுதலை மெய்யாகவே நிறைவேற்றி முழு மனுக்குலத்தையும், கிறிஸ்துவினாலே பூரணப்படுத்தி தேவனுக்கு முன்பாக ஒரு மனப்பட்டிருப்பார்கள்.

மத்தியஸ்தரின் இந்த மகத்தான பணி ஆயிரம் வருட யுகம் நெடுகிலும் நீடிக்கும். இந்த நோக்கத்திற்காகவே மேசியாவின் இராஜ்ஜியம் பூமியில் எல்லா அதிகாரத்தோடும் வல்லமையோடும் நிறுவப்படும். இந்த நோக்கத்திற்காகவே அவர் ஒவ்வொரு தீய சக்தியையும் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்ய வேண்டும். ஆனால் பூமி முழுவதும் மெய்த்தேவனின் தெய்வீக அன்பு, கிருபை ஆகியவற்றை அறிய தடையாயிருக்கிற தடைக்கற்களை அகற்றி யார் ஒருவன் தேவனிடத்தில் திரும்ப விரும்பினாலும் திரும்பும் வகையில், புதிய உடன்படிக்கை இருக்கும். புதிய உடன்படிக்கையின்படி இந்த மாபெரும் மத்தியஸ்தரின் பணி தேவ அதிகாரம் பெற்று, தேவனோடு கிறிஸ்து மூலமாய் இசைந்திருக்க விரும்பும் யாவரையும் ஆசீர்வதித்து புணர்வாழ்வளிப்பதும், அதே சமயத்தில் ஆயிர வருட ஆட்சியின் மகிமையான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தேவ ஏற்பாடாகிய ஒப்புரவாகுதலை மறுத்து எதிர்ப்பவர்களை ஜனத்திலிராதபடிக்கு என்றென்னும் அழித்து விடுவதும் நிறைவேறும். அப். 3:23; மத். 25:41,46; வெளி 20:9, 14,15; நீதி. 2:21-22

ஆயிர வருட அரசாட்சிக் காலத்தில் ஒப்புரவாகுதலின்

நோக்கத்திற்காக தேவன் ஏற்பாடு செய்து வைத்திருக்கிற திட்டம் முழுமையாய் நிறைவேறி முடிவடையும்போது, அது ஆயிர வருட அரசாட்சியின் முடிவு காலமாயிருக்கும். அப்போது பாவிகளும் கலக்காரர்களும் இல்லாமல் போவதால், இயேசு கிறிஸ்துவுக்கு அந்த மத்தியஸ்தம் செய்யும் பணியும் இல்லாமலிருக்கும். வேண்டுமென்றே பாவிகளாக ஜீவித்தவர்கள் சங்கரிக்கப்படுவார்கள். தேவனோடு இசைந்திருக்க விரும்புகிறவர்களெல்லாம் பூரணமடைந்திருப்பார்கள். அப்பொழுது நமது கர்த்தருடைய தீர்க்கதரிசனமாகிய "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் (முந்தின நிலைமைகள்) ஒழிந்து போயின என்று விளம்பினது" என்பதும் நிறைவேறும். வெளி 21:4; சங். 67:1-7

மாபெரும் இராஜாவும் மத்தியஸ்தருமாகிய இயேசு கிறிஸ்து தமது பணியை முடித்து பிதாவுக்கு யாவற்றையும் ஒப்புவிப்பார் என்று அப்போஸ்தலர் (1 கொரி 15:24-28) விளக்கினது போல மனுக்குலம் முழுவதற்கும் செய்த மீட்புப் பணியில் என்னென்ன நிரந்தரமான விளைவுகளை எதிர்பார்க்கலாம்?

(1) புதிய உடன்படிக்கையை தமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் முத்திரையிட்டு அந்த உடன்படிக்கையின் கிருபைகள் மனுக்குலம் அனைத்திற்கும் கிடைக்கும்படியாக செய்தல்.

(2) "சிறு மந்தைக் கூட்டம்" ஒப்புரவாகுதலை அல்லது தேவனோடு இசைவை ஏற்படுத்துகிற "ஒரு ராஜரீக ஆசாரியக் கூட்டம்." "நற்கிரியைகளில் வைராக்கியம் காட்டியவர்கள்," தேவ ஊழியத்தில் தங்கள் ஜீவனையே கொடுக்க முன்வந்தவர்கள், தங்கள் மீட்பரை மெய்யாகப் பிரதிபலிப்பவர்கள், தேவ ஏற்பாட்டினாலே ஆயிர வருட அரசாட்சியில் உடன் சுதந்தரராக இருக்கக்கூடிய தகுதியைப் பெற்றவர்கள், இவர்கள் தேவ சாயலை அடைவார்கள். (1 பேது 2:9,10; தீத்து 2:14; ரோம. 8:29)

(3) முழு சீர்திருத்தமும் முழு ஒருமனப்பாடும் கொண்ட சந்தோஷ பரிபூரண மனிதர்களால் பூமி நிறைந்திருக்கும். எல்லா மனுக்குலமும் தெய்வ சித்தப்படி தேவ தயவு அடைகிறதற்கு

விருப்பமாக இருப்பார்கள். எல்லாரையும் சீர்திருத்தி நீதியில் கற்பிக்கப்பட்டு தேவனிடத்தில் விசுவாசமாயிக்கும் ஆவியில் முழுக்கட்டுப்பாட்டுடன் இருப்பதோடு, பரிசுத்த ஆவியின் கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, விசுவாசம், சாந்தம் ஆகிய குணங்களைக் கொண்டிருப்பார்கள். அதனாலே குற்றமற்றவர்களும், யாவரும் எந்தக் குற்றமும் சாட்டக்கூடாதவர்களுமாய், எந்தச் சோதனைகளையும் தாங்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

(4) தேவ தயவு பெறத் தகுதியற்றவர்கள், பூமியை கெடுத்துக் கொண்டு இருக்கிறவர்கள், பூமியில் யாவருக்கும் உபகாரம் செய்யாதவர்கள், தங்கள் சிருஷ்டிகரை மகிமைப் படுத்தாதவர்கள் ஆகிய மற்ற எல்லா வகுப்பினரையும் அழித்துப் போடுதல்.

இப்படியாக ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் உலகம் தேவனோடு ஒரு மனப்பட்டு முழுமையாக தேவ தயவைப் பெற்றிருக்கும். ஆதாம் பாவம் செய்யும் முன்பு இருந்த நிலைமையாகிய பரிபூரண நிலையில் தேவனோடு ஒருமனப்பட்டிருப்பார்கள் என்பதுடன் தீமை என்ன, அதனால் வரும் விளைவுகள் என்ன என்பதை அறிந்து உணர்ந்த அனுபவமும் அவர்களுக்கு உண்டாயிருக்கும். பாவம், பாவ வாழ்க்கை, ஞானம், நீதியை நாடுதல், அதனால் உண்டாகும் லாப நஷ்டங்கள் ஆகிய பாடங்களைக் கற்றிருப்பார்கள். ஆதாம் உண்டாக்கப்பட்டபோது இருந்ததை விட பல துறைகளிலும் பல நுண்ணறிவுகளைப் பெற்று திறமையையும், அறிவையும் வளர்த்திருப்பார்கள். இந்த பிரயோஜனமான பாடங்களை மனிதர்கள் மாத்திரமல்ல, பரிசுத்த தேவதூதரும் தேவநீதி, அன்பு, ஞானம், வல்லமை ஆகியவற்றின் சமத்துவத்தை சாட்சியாகக் கண்டுகளிக்க வாய்ப்புண்டு. இந்தப் பாடங்களை எல்லாரும் கற்ற பிற்பாடு இந்த அண்டவெளியிலே மற்ற கிரகங்களிலே இனி சிருஷ்டிக்கப்படப் போகிற யாவரும் கற்றுக் கொள்ள வாய்ப்புண்டு.

இனி யுக யுகமாய் நீடிக்கப்பட்டு நிரந்தரமாக இருக்கப்போகின்ற காலங்களில் மைய வரலாறாக சொல்லப்படுவது யாதெனில் கல்வாரியில் நிறைவேற்றப்பட்ட மாபெரும் ஈடுபலி ,

அதனால் உண்டான மீட்பும், ஒப்புரவாகுதலும், தேவனுடைய அன்பும், நீதியுமாகிய சகலமும் சர்வ சமம் என காண்பிக்கப்படுதலும் ஆகும்.

இந்த ஒப்புரவாகுதல் என்கிற பாடம் மிக முக்கியமானது என்பதாலும், கர்த்தரின் பிள்ளைகள் அநேகர் அதைச் சரிவர புரிந்து கொள்ளாததாலும் சரியான தத்துவத்தை புரிந்து கொள்ள அநேக தடைக்கற்கள் இருப்பதாலும், இந்த நூலில் கீழ்க்காணும் பகுதிகளாக அவற்றைப் பிரித்து தொகுத்துத் தருகின்றோம்.

1. ஒப்புரவாகுதல் திட்டத்தின் ஆசிரியராகிய சர்வல்லமையுள்ள (யேகோவா) தேவன்.

2. விழுந்து போன மனிதர் யாவருக்கும் மத்தியஸ்தராக இருந்து தம்முடைய ஜீவ பலியாலே சமாதான காரணராகி ஒப்புரவாகுதலை செய்து அதனால் உண்டாகும் விசேஷ நன்மையான பலன்களை எல்லாரும் பெற்றுக் கொள்ளும்படியாக செய்தவர்.

3. பரிசுத்த ஆவியின் மூலமாக தேவனோடு ஒப்புரவாகி அதன் ஆசீர்வாதங்களை மனுக்குலம் அடைதல்.

4. யாருக்காக இந்த மாபெரும் திட்டமாகிய ஒப்புரவாகுதல் தீட்டப்பட்டதோ அந்த மனுக்குலத்தைப் பற்றியவை.

5. ஒப்புரவாகுதலில் மூல அல்லது மையக் கருத்தாகிய ஈடுபலி, மீட்புக்கிரயம்.

இந்தப் பாடங்களை தொடர் சிந்தனையாக தொகுத்துப் படிப்பதின் மூலம் தேவ திட்டம் நமக்கு தெளிவாகவும் முறைமையாகவும் முழுமையாக திருப்தியளிப்பதாகவும் இருக்கும் என்று நம்புகிறோம். அதோடு மிக முக்கியமான இந்த ஒப்புரவாகுதலில் பாடத்தைப் பற்றி நினைக்கப்பட்ட தவறான கருத்துக்களைப் போக்குவதோடு எந்த மனிதனுடைய கருத்தையும் விசுவாசத்தையும் கொண்டு நோக்காமல் தேவ வார்த்தையைக் கொண்டே நோக்க வேண்டும். மனித கற்பனைகளை விட்டுவிட்டு, ஏற்கனவே கூறப்படுகிற பொதுவான தத்துவங்களை மனதில் கொள்ளாமல், தேவனுடைய ஆலோசனையை ஏற்று, தேவப் பார்வையில் தேவ வார்த்தையின் போதனையை அறியும் ஆவலோடு

தேடுகிறவர்கள் கண்டடைவார்கள். தட்டுகிறவர்களுக்கு திறக்கப்படும் என்ற மாபெரும் போதகர், இதோ இதனை திறக்கிறார். *"அவர்கள் கர்த்தராலே போதிக்கப்பட்டு இருப்பார்கள்." ஏசா. 54:13*

## அத்தியாயம் 2

# ஒப்புரவாகுதலின் ஆசிரியர்

*சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவன்-பாவிகளின் இரட்சகர், கிறிஸ்து மூலம்-"ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்"-"தம்மில்தாமே ஜீவனுடையவர்"-இருக்கிறவராகவே இருக்கிறவர்-தவறான பாரம்பரியம்-போலியான வசனங்களே அடிப்படை-பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பதை வேதத்தின்படி காண்பித்தல்-யேகோவா என்ற சொல்லையும் கர்த்தர் என்ற பெயரையும் வேதாகமம் பயன்படுத்தும் முறை-பழைய ஏற்பாட்டில் தேவன் என்ற வார்த்தை-புதிய ஏற்பாட்டில் தேவன் என்ற வார்த்தை-இசைவான வேதாகம சாட்சியங்கள்-"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" - "தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை" - "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு."*

கல்வாரியில் தொடங்கிய ஒப்புரவாகுதலின் மாபெரும் தேவ திட்டத்தைக் குறித்து இதுகாறும் வாசித்தோமே அதன் ஆசிரியர் மெய்த்தேவனாகிய "யேகோவா" ஆகும். இத்திட்டம், ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியின் ராஜ்யங்களை சீர்ப்படுத்தும் ஆயிர வருட ஆட்சி முடிவின் காலத்தில், பிதாவுக்கு முழுமையாக கீழ்ப்படுத்தும் போது முடிவடையும். இதற்கு இசைவாக வேதாகமத்தில் எத்தனையோ குறிப்புகள் உண்டு. உதாரணமாக, "நான் இஸ்ரயேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய யேகோவா." *(ஏசா 43:3)* "நான் நானே யேகோவா; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை." *(ஏசா 43:11)* "நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தது முதல், உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிறேன். ஆகையால் நீ

என்னையன்றி வேறே தேவனை அறிய வேண்டாம். என்னையன்றி இரட்சகர் ஒருவருமில்லை." (ஓசி. 13:4) "தாம் ஒருவரே ஞானமுள்ளவராகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்கு கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்." (யூதா 25) "எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்." (1 தீமோ 4:10; தீத்து 1:3; 2:10)

இந்தக் கருத்தை உள்ளபடியே ஏற்றுக் கொண்டால் பிதாவாகிய சர்வவல்ல (யேகோவா) தேவன், இரட்சகரும் மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தின் ஆசிரியரும் ஆவதுடன், தமக்குச் சித்தமான பிரதிநிதிகளைக் கொண்டு அதனை நிறைவேற்றுபவராயும் இருக்கிறார். இதனை நன்கு புரிந்து கொண்டால், பரலோக தந்தையையும் பரலோக மைந்தனையும் பற்றிய பல தவறான கொள்கைகளை அகற்றவும், மனுக்குல மீட்பின் கருத்துக்களை புரிந்திடவும் இயலும்; கிறிஸ்தவர்களாகத் தங்களை எண்ணிக் கொண்டிருக்கிற அநேகர் தேவ தூஷணமான நோக்கங்களை விட்டொழிக்கலாகும். உதாரணமாக அவர்களது நோக்கின்படி பரலோகப் பிதா, மகா கோபத்தில் பாவியாகிய மனுஷனைக் கொல்ல, சித்திரவதை செய்ய வகை தேடிய வேளையில், பரலோக மைந்தனாகிய நமது கர்த்தராகிய இயேசு மிகுந்த அன்பினாலும் கிருபையினாலும் குறுக்கிட்டு, தேவகுரோத, விரோத, கோபாக்கினையைத் தான் மனிதருக்காகப் பெற்றுவிட்டு அதனால் தேவனை திருப்திபடுத்தினார் என்று எண்ணுவது எவ்வளவு தவறு? தேவனோ நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவரன்றோ? இவர்களது திட்டவட்டமான முடிவு, (யேகோவா) தேவன் நீதியாய் நடப்பவர், அவர் கோபம் மாறாது என அவரைப் பழி வாங்குபவராகக் காட்டுவதேயாகும். ஒரு பாவியினால் பாவத்துக்குப் பிராயச்சித்தம் செய்வது கூடாத காரியம். ஏனெனில் ஒரு பாவி பாவம் செய்யவில்லை. ஆனால், பாவம் இன்னதென்று அறியாமலிருந்தவன் பாவம் செய்தான். எனவே பாவமற்ற ஒருவரின் பலியே ஏற்புடையதென்று விலைக்கிரயமாக இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தி பாவிகளான முழு

மனுக்குலத்தையும் மீட்கும் திட்டத்தை வடித்தார். எனவே பிதாவின் மெய்யான நீதியை சரிவரப் புரிந்துகொள்ள, பழைய தப்பறையான கொள்கைகளிலிருந்து விடுபட்டாக வேண்டும். அதன் பின்னர்தான் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் நிதானித்து மெய்யான தேவ தயவிலும், அன்பிலும், தேவ ஞானத்திலும் உண்மையான வளர்ச்சியடைய வாய்ப்புண்டு.

பரலோகப்பிதா எல்லாப் பெருந்தகையான குணங்களிலும், சிறப்புகளிலும், பரிபூரணமுள்ளவராய் விளங்குகிறார் என்பது இதுவரை சரியான பார்வையில் நமக்கு எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அவர் நீதியில் பரிபூரணராயிருக்கிறார். எனவே அவர் சொன்ன செம்மையான நீதியின் தீர்ப்பை அவரால்கூட மாற்ற முடியாது. அவர் ஞானத்தில் பரிபூரணமுள்ளவராயிருக்கிறார். மனிதனைப் படைத்ததோடல்லாமல், அவன் தவறும்போது அவனை மீட்டு ஒப்புரவாக்குவதற்கு திட்டத்தையும் ஒழுங்கையும் ஏற்படுத்தியுள்ளார். அவருடைய திட்டம் பரிபூரணமாயிருப்பதால் அதை மாற்றம் செய்வதற்கோ, மறுமுறை சிந்திப்பதற்கோ, பிழை ஏற்படுவதற்கோ வாய்ப்பில்லை. இதன் அடிப்படையில் வேதவசனம் “நான் கர்த்தர், நான் மாறாதவர்” என்று கூறுகிறது; மேலும், “உலகத் தோற்றமுதல் தேவனுக்கு தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது” என்று கூறுகிறது. அவர் அன்பில் பரிபூரணமுள்ளவராயிருக்கிறார். அவருடைய அன்பைக் காட்டிலும் மிகுதியான அன்பை எவரிடமும் பெற இயலாது. அவரிடமிருக்கக்கூடிய எல்லா இயல்புகளிலும் நீதி, ஞானம், வல்லமை ஆகிய குணங்கள் ஒரே சமன்பாட்டில் உள்ளன.

அவருடைய தெய்வீக ஞானத்தில் எந்த பாவிகளிடத்தில் இரக்கம் காட்டவேண்டுமோ அவர்களிடத்தில் இரக்கத்தைக் காண்பிக்கிறார். குறைவானவர்களுக்கு குறையை நிறைவாக்கி, குறைவையும், நிறைவையும் சமன் செய்கிறார். வல்லமையில் அவர் பரிபூரணராயிருக்கிறார். வல்லமையினாலே மற்ற நல்ல நோக்கங்கள், திட்டங்கள், நியாயம் ஒழுங்கு கிரமப்படி அவர் ஆதியில் விரும்பிய ஒவ்வொன்றையும் செய்து முடிக்கும் ஆற்றலுடையவராயிருக்கிறார். எனவே தான், “என் வாயி-ருந்து புறப்படும் வசனமும் இருக்கும். இது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான்

*விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பிய காரியமாகும்படி வாய்க்கும்" என்கிறார். (ஏசா 55:11; மல்கி. 3:6; அப்.15:18)*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கொண்டுவரப்பட்ட மீட்புக்கு மாபெரும் யேகோவா தேவன்தானே ஆதி காரணமாயிருக்கிறார் என்பது ஆவிக்குரிய கண்ணோட்டமாகும். இதனால் யேகோவா தேவனை மிக நன்றாகப் புரிந்து கொள்ளுகிறோம், அவருடைய நேசத்தை அறிந்து கொள்வதால் அவரை அன்பாக நேசிப்பதோடு அவரை ஆராதிக்கிறோம். பிதாவாகிய தேவனுக்கு நாம் இத்தகைய கனத்தையும் மரியாதையையும் கொடுப்பதினால், நம்முடைய கர்த்தரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கும் கனத்தையும் மரியாதையையும் விட்டு வழிவிலகிப் போவதில்லை. பரலோகத்திலிருந்து வந்த குமாரனில் மகிமையுள்ள பிதாவின் சாயலைக் கண்டு அவரை (உடன்படிக்கையின் தூதனாகவும், மனுக்குலம் முழுவதையும் பிதாவாகிய தேவனின் ஆசீர்வாதத்தால் நிரப்புபவர் என்றும்) அடையாளம் தெரிந்து கொள்கிறோம். இவரையல்லாமல் எந்தவொரு ஆசீர்வாதமும் பூச்சக்கரத்துக் குடிகளுக்குக் கிடைக்காது. இதற்கேற்ற வண்ணமாக பிதாவாகிய தேவனின் மெய் பிரதிநிதியாக மீட்பு பணிக்கான யாவற்றையும் பிதாவாகிய தேவன் கூறியபடியே நமது ஆண்டவர் செய்து முடித்தார் என்பதற்கு கீழ்க்காணும் வேத ஆதாரங்களைக் கவனிக்கலாம்.

*"நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது... மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குத-னாலும் நம்மை இரட்சித்தார்." தீத்து 3:4-6*

*"இஸ்ரயேலுக்கு மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்." அப்.5:31*

*"நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் கட்டளையிட்டபடியே, இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்"... - 1 தீமோ.1:1*

*"நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது... தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே." -1 தீமோ. 2:3,5*

*இதைப்பற்றி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையைக் கவனிப்போம்:*

*"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்."- யோவா. 3:17*

*"நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை, நான் கேட்கிறபடியே நியாயந் தீர்க்கிறேன்." - யோவா. 5:30*

*"பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்." யோவா. 20:21*

*"அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்." மாற் 13:32*

*"பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல." அப். 1:7*

*"என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது." யோவா. 10:25*

*"என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன்." லூக். 24:49*

*"நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருக்கிறேன்." யோவா. 5:43*

*"நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்." யோவா. 12:50*

*"என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்." யோவா. 14:28*

*"நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்." யோவா. 20:17*

## "அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்"

வேதாகமத்தின் கடைசி புத்தகத்தில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே கூறுகிறதாவது : "தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும்... தம்முடைய ஊழியக்காரனாகிய யோவனுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம்." (வெளி 1:1) பாவத்திலிருந்தும் அதன் சாபத்திலிருந்தும் விடுவிக்கப்படும் மனுக்குலத்தின் இரட்சிப்பின் திட்டமாகிய ஒப்புரவாகுதல் குறித்து இது ஒரு சிறந்த விளக்கப்படமாகும். இதுகுறித்து வெளி 5லில் கூறப்பட்டுள்ளது. உள்ளும் புறமும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த சுருளை தன் வலது கையில் வைத்திருக்கிற வராகவும், சிங்காசனத்தின் மீது வீற்றிருக்கிறவராகவும் தீர்க்க ஆயுசுள்ள பரமபிதா காணப்பட்டார். தேவ திட்டமாகிய சுருள் தேவனுடைய வலது கரத்தில் இருந்ததற்குக் காரணம், அதனை வாசித்து அறியக்கூடிய தகுதியுடையவர்கள் வரும் வரை அவருடைய கரத்திலும் வல்லமையிலும் வைக்கப்பட்டு இருந்தது. அதனை வாசித்து அறியக்கூடிய தகுதி பெற்ற ஒருவரே, பிதாவின் பிரதிநிதியாகவும் இத்திட்டத்தை செயல்படுத்தக் கூடியவராகவும் பிதாவினால் மகிமைப் படுத்தப்பட்டவராகவும் இருக்க முடியும். "நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக, நீதியுள்ளவராய்" கல்வாரியில் கர்த்தராகிய இயேசு பாடுபட்டதுவரை இந்த அடையாளமான படம் காண்பிக்கிறது. அவரே இந்தப் புத்தகத்தை வாசிக்கவும் திறக்கவும் முத்திரைகளை உடைக்கவும் தகுதியுள்ளவராக நிரூபித்துக் காட்டினார். தேவ திட்டத்தையுடைய சுருளை எடுக்கவும், வாசிக்கவும் முத்திரைகளை உடைக்கவும் இயேசு கிறிஸ்து வரும்வரை எவரும் பார்த்திரராயிருக்கவில்லை.

பிதாவாகிய தேவனிடத்தில் கீழ்ப்படிந்தவராகி, மேலான நிலைமையை விட்டு, பாவமாம்ச சாயலில் வந்து, தம்மை வெறுமையாக்கி, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத் தானே தாழ்த்தியதால் பிதாவாகிய தேவனுக்கு கீழ்ப்படிந்தவராக மட்டுமல்ல, எல்லா நம்பிக்கைகளுக்கும் பாத்திரரானார். "தேவன் எல்லாவற்றிற்கும்

மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" என அப்-பவுல் அறிவிக்கின்றார். (பி-. 2:9-11) நமது மனக்கண்முன் சித்திரம் போல் காட்டப்படும் நிகழ்ச்சி என்னவெனில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகவும் உலகின் பாவங்களை சுமந்து தீர்த்து, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைச் செய்து புத்தகத்தைத் திறப்பதற்குரிய தகுதியைப்பெற்றவர் எனவும் நிரூபிக்கப்பட்டார். (வெளி 5:9-13) "தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதன் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டீர்." சர்வவல்ல தேவனின் பிரதிநிதியாகவும், உடன்படிக்கையின் தூதனாகவும் இயேசு உயர்த்தப்பட்டதாக சித்தரிக்கப்படுகிறார். தேவனுடைய சித்தத்திற்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்ததாலும் கீழ்ப்படிந்ததாலும், பரமபிதாவின் ஏற்பாட்டினால் அவரது சிங்காசனத்தில் பங்குபெறும் பாக்கியம் பெற்றார். வானசேனைகளுக்கு முன்பாக இது பிரகடனப்படுத்தப்பட்டது: "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்." கடைசியாக, சிருஷ்டிகள் யாவும், யேகோவா தேவன் தான் ஒரே பேரான குமாரனே தன்னுடைய சிங்காசனத்தில் பங்குபெறும்படியாக எல்லாவற்றிக்கும் மேலாக உயர்த்தினார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதை ஆமோதிக்கும்படியாக அவர்கள், "சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும், கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக" என்று ஆர்ப்பரித்தார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தின பிதாவையும் உயர்த்தப்பட்ட குமாரனையும் எல்லாரும் கனம் பண்ண வேண்டும் என்பது நமக்கு

*போதிக்கப்படுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. (யோவா. 5:23)*

*இயேசு மகிமையடைந்ததை, "தன்னைத்தானே தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்ற தெய்வீக சட்டத்தை, சித்திரப்படமாக அப்போஸ்தலர்கள் விளக்குகின்றார்கள். அடையாள சித்திரப் படத்தில் (வச. 13) காட்டியுள்ள காட்சியில் இயேசு கிறிஸ்து மகிமை, கனம், வல்லமை, இராஜ்யம் கொடுக்கப்பட்ட மகிமையடைந்த நிலை, இயேசுவுக்காக பரமபிதா தன் சிங்காசனத்தை கொடுத்துவிட்டார் என்பது பொருள் அல்ல. இதனால் பிதாவும் குமாரனும் ஒருவரே என்று பொருள் ஆகாது. பிதாவும் குமாரனும் வெவ்வேறு என்பது தெளிவாக்கப்படுகிறது. துதி, ஸ்தோத்திரம் ஆகியவற்றில் பிதாவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தை நமக்கு, "என் பிதா எனக்கு ஒரு இராஜ்யத்தை ஏற்படுத்தினது போல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்" என்பதை ஞாபகப் படுத்துகிறது. (லூக். 22:29) மீண்டுமாக அவர் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு, "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடு கூட உட்கார்ந்தது போல, ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடுகூட உட்காரும்படி அருள் செய்வேன்" (வெளி. 3:21) என்று கூறுகிறார்.*

*மீட்புப் பணி முழுவதையும் பிதாவாகிய தேவன் குமாரன் மூலம் செய்கிறார் என்பதற்கு மேலும் ஆதாரமாக அப்போஸ்தலர் கூறுகிறதைக் கவனிக்கவும். "இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்திற்கும் சுதந்திரவாளியாக நியமித்தார், இவரைச் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்... தம்மால் தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். இவர் தேவ தூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்." மேலும் அவர் கூறுகிறதாவது: "பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும்*

ஆசாரிய ஊழியம் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு." மேலும் அப்போஸ்தலர் கூறுகிறாதவாது: "இவரோ பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்." (எபி. 1:2-4; 8:1; 10:12) விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமான கிறிஸ்து, தமக்கு உண்டான சந்தோஷத்தினிமித்தம், சிலுவை அவமானத்தை பொருட்டாக எண்ணாமல் சகித்ததால், தேவனின் வலது பாரிசத்தில் என்றென்றும் வீற்றிருக்கத் தக்க சிலாக்கியத்தைப் பெற்றார் என அப்போஸ்தலர் கூறுகின்றார். மேலும் அப்போஸ்தலர் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், தாம் கிறிஸ்துவை மரித்தோரிடமிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன். எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உட்கார்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினார்" என்று கூறுகின்றார். (எபி. 12:2; எபேசி. 1:17-22) "அவர் பரலோகத்துக்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார்; தேவ தூதர்களும் அதிகாரங்களும், வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது." (1 பேது. 3:22) என அறிவிக்கிறார்.

பாவிகளுக்காகத் தம்மைத் தாமே பலியாகக் கொடுத்த இயேசு

கிறிஸ்துவின் அற்புதமான கீழ்ப்படிதலுக்காக பிதாவாகிய தேவன், அவரை பரலோக மகிமையினாலும் கனத்தினாலும் உயர்த்தினார் என்பதை இந்த வேத வசனங்கள் தெளிவாகக் காண்பிக்கின்றன. அவைகளெல்லாம் இயேசுவை பிதாவென்று ரூபகாரப்படுத்தவில்லை என்பதோடு பிதாவின் ஸ்தானமாகிய சிங்காசனத்தை அவர் எடுத்துக்கொள்ளவில்லை என்பதையும் காண்பிக்கிறது. ஆனால் வலது பக்க சிங்காசனமே அவருக்கு அளிக்கப்பட்ட மகிமையாகும். கிறிஸ்துவை மேன்மையான நிலைமைக்கு செல்லும்படி அருள் செய்த பரலோகத்தின் தெய்வீகத் தந்தை, கனத்திலும் மகிமையிலும் எல்லாவற்றிலும் எல்லாரையும் விட உன்னத நிலைமையில் இருக்கிறார். இயேசுவை பிரதான ஸ்தானமாகிய வலது பாரிசத்தில் சிங்காசனத்தில் பங்குபெறும் படியாகச் செய்து பரலோக இராஜ்யத்தை பரிபாலிக்க அருள்செய்து தூதர்களையும் வான சேனைகளையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினார். பிதாவினால் இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட வல்லமையைக் குறித்தும் அவர் உயர்த்தப்பட்ட நிலைமையைக் குறித்தும் அப்போஸ்தலர் மிகவும் அழுத்தமாக எழுதினாலும், அதில் எந்த வசனத்திலும், அவர் பிதாவுக்கு சமமாக உயர்த்தப்பட்டதாகவோ அல்லது பிதாவுக்கு மேலாக உயர்த்தப்பட்டதாகவோ கூறவில்லை. எனவே ஆயிர வருட அரசாட்சியைக் குறித்து அவர் எழுதும்போது, "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்கு கீழாக்கிப் போகும்வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். சகலத்தையும் அவரது பாதத்திற்கு கீழ்ப் படுத்தினாரே; ஆகிலும், சகலமும் அவருக்கு கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" என்றும் கூறுகிறார். *-1 கொரி. 15:25-28*

## "தம்மில் தாமே ஜீவனுடையவர்"

சர்வ வல்லமையுள்ள தேவன் தமது பெயரை "யேகோவா"

என்று குறிப்பிட்டுள்ளார். இந்தப்பெயரின் பொருள் என்னவென்றால் "தம்மில்தாமே ஜீவனுடையவராக இருப்பவர்" அல்லது "சாகாமையுள்ளவர்" என்பதாகும். "சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் அபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை." (யாத். 6:3) இதற்குப் பின்னர் தன் ஜனத்தாரிடையே இந்த யேகோவா என்ற பெயரால் பேசினார். பழைய ஏற்பாட்டில் இந்த யேகோவா என்ற பெயர் நூற்றுக்கணக்கான இடங்களில் காணப்பட்ட போதிலும், மொழி பெயர்ப்பாளர்கள் அதனை மறைத்து விட்டு "கர்த்தர்" என தவறாக மொழிபெயர்த்து விட்டனர். இருந்தபோதிலும் "கர்த்தர்" என்று தடித்த எழுத்துக்களில் அச்சிடப்பட்ட இடங்களிலெல்லாம் "யேகோவாவையே" குறிக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

தேவன் இஸ்ரயேலருக்குக் கொடுத்த முதலாவது கட்டளையில். "உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி (எனக்கு நிகராக) உனக்கு வேறே தேவர்கள் (வல்லமையுள்ள) உண்டாயிருக்க வேண்டாம்... உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்..." (யாத். 20:2-5) என்று குறிப்பிடுகின்றார்.

மேலும், மோசே, "இஸ்ரயேலே கேள், நம்முடைய தேவனாகிய யேகோவா ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூறுவாயாக" என்று கூறுகிறார். (உபா. 6:4,5) இந்தப் பகுதியைத் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சத்தியத்தின் அடிப்படைக் கொள்கையாக எடுத்தியம்பினார். இயேசுவிடம் கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனையென்ன? என்று கேட்டபொழுது, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக" என்றார். (மத். 22:37,38) மறுபடியும் ஏசாயா 42:8-ல் நாம், "நான் யேகோவா, (கர்த்தர் என்று தவறாக மொழி பெயர்த்ததில் இதுவும் ஒன்று) இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரங்களுக்கும் கொடேன்" என வாசிக்கிறோம். இந்த வேதப் பகுதி நமக்குக் கற்பிப்பது

*என்னவென்றால் "யேகோவா" என்ற தனிப்பெரும் நாமம் பிதா ஒருவரையே குறிப்பிடுமாகையால் வேறு எவருக்கும் இந்த மகிமை கிடையாது என்பதாகும். "அவர் ஜோதிகளின் பிதா," "மாறாத தன்மையுடையவர்" என்பதை நமது கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்குப் பின்னர் மேசியாவைக் குறித்துச் சொன்ன தீர்க்க தரிசனத்தில் அவரைப்பற்றி யேகோவா தேவனுடைய கௌரவிக்கப்பட்ட, தெரிந்து கொள்ளப்பட்ட குமாரன் - ஊழியக்காரன் என்று கூறப்படுகிறது. மேலும் அவரைக் குறித்துக் கூறுவதாவது:-*

*"இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர் மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்." (ஏசா. 42:1) "அவர் நியாயத்தை பூமியிலே நிலைப்படுத்து மட்டும் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை, அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருக்கும். வானங்களைச் சிருஷ்டித்து, அவைகளை விரித்து, பூமியையும், அதிலே உற்பத்தியாகிறவைகளையும் பரப்பினவரும், அதில் இருக்கிற ஜனத்துக்குச் சுவாசத்தையும் அதில் நடமாடுகிறவர்களுக்கு ஆவியையும் கொடுக்கிறவருமான கர்த்தராகிய தேவன் சொல்லுகிறாதவது: நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும், கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன். நான் கர்த்தர், இது என் நாமம்." - ஏசா. 42:4-8*

## யேகோவா என்ற நாமம் மகிமையின் தேவனாகிய பிதா ஒருவருக்கே உரியது

*வேதாகமத்தில் பல இடங்களில், "யேகோவா" என்று வருவதெல்லாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் பொருந்தும் என்றும், ஆகையால் இது பிதாவாகிய தேவன் ஒருவருக்கே பொருந்தும் விசேஷித்த பெயர் அல்ல என்றும் பலர் கூறுகின்றனர். இது தவறு. அவர்கள் வாதத்தை ஆதரிக்கிறதாக கூறுகிற வசனத்தை*

ஆராய்வோம். மேலே சொன்ன வசனங்கள் யேகோவா என்ற நாமமுடைய, தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிற பிதா ஒருவரையே குறிக்கும் என்பதை நிருபிப்போம்.

*1. இயேசு கிறிஸ்துவையும் கர்த்தர் என்று குறிக்கும் சொல் எரேமியா தீர்க்கதரிசனத்தில், "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும், நீதியையும் நடப்பிப்பார்... அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே" என்று கூறப்பட்டுள்ளது.- (எரே. 23:5-6)*

இந்த இடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய ஆயிர வருட அரசாட்சியையும் குறிப்படுகிறது. நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்ற சொல், எபிரேய பாஷையிலே யேகோவா-ஜிட்கனோ ஆகும். இதை மொழி பெயர்த்தவர், பிதாவுக்குக் கொடுக்கும் மகிமையை இயேசுவுக்கும் தரவேண்டும் என்ற ஆர்வத்தில் "கர்த்தர்" என்று மொழி பெயர்த்து விட்டார். இதை மொழி பெயர்ப்பாளர் சரியாக மொழி பெயர்த்திருக்க வேண்டுமானால் "யேகோவாவின் நமது நீதிபரர்" என மொழி பெயர்த்திருக்க வேண்டும். இந்த பெயர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிரியைகளுக்கும் ஆட்சிக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. தேவ நீதியின் பிரதிநிதியாக இயேசு கிறிஸ்து விளங்குகிறார். தேவ நீதி விளங்க ஆதாமுக்கு ஈடுபலியாக மரித்ததின் மூலம், உலகப் பாவத்திற்குரிய தண்டனையை ஏற்றுக் கொண்டார். இதன் மூலம் தேவன் தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்குகிறார். எனவே இந்தப் பெயரைத் தவிர வேறெந்த பெயரும் கிறிஸ்துவுக்கு சரிவரப் பொருந்தாது.

இதே தீர்க்கதரிசி இதே சொற்றொடரை (யேகோவா-ஜிட்கனோ) மறுபடியும் எழுதுவதைப் பார்த்து கருத்து மாறுபாடு கொள்ளக்கூடாது. மொழிபெயர்ப்பாளர்கள் இந்த சொற்றொடருக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதே ஆங்கில வார்த்தை இருந்தும் கூட மற்ற இடங்களில் தடித்த எழுத்துகளில் போட்டதுபோல் இங்கே போடவில்லை. ஏன்? இந்த

"யேகோவாவின் நமது நீதிபரர்" என்பது, பிற்காலத்தில் ஆள்வதற்காக அமையப் போகிற முழு திருச்சபையாகிய புதிய எருசலேமுக்குக் கொடுக்கப்படும் பெயராக உள்ளது. ஏரே. 33:16

மகிமையடைந்த திருச்சபையாருக்கு இப்பெயர் எப்படிப் பொருந்துமென்றால், தேவநீதியை நிறைவேற்ற அவர்கள் பட்ட பாடுகள், உபத்திரவங்களைச் சகித்ததினாலேயே ஆகும். (கொலோ. 1:24; I பேதுரு 5:9) மனைவி கணவனின் சுகதுக்கங்களில் பங்குகொள்வது போல் திருச்சபையும் கிறிஸ்துவோடுகூட பாடுகளை சகிப்பதினால் அவரது மகிமையிலும் பெயரிலும் பங்கு பெறுகிறது. திருச்சபை, கிறிஸ்துவின் சரீரம் என அழைக்கப்படுவதனால் இந்தப் பெயருக்கும் பங்குள்ளவர் களாவார்கள். வெளி. 3:12; 19:7. 21:9

யேகோவா என்ற இந்த பதம் இன்னொரு வார்த்தையோடு இணைந்து வருகிறது. ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கை பலியிட்ட மலை, ஈசாக்குக்குப் பதிலாக ஒரு ஆட்டுக்கிடா கொடுக்கப்பட்ட இடம், தெய்வாதீனமாக தமது குமாரனுக்குப் பதிலாக ஆட்டுக்குட்டியை பலியிட்டதால் அந்த மலைக்கு ஆபிரகாம் "யேகோவாயீரே" என்று அழைத்தான். இதற்கு பொருள் "யேகோவாவுடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும்" (ஆதி. 22:14) என்பதாகும். மோசே தான் கட்டிய பலிபீடத்திற்கு "யேகோவாநிசி" என்று பெயரிட்டான். அதற்கு யேகோவா என்கொடி என்று அர்த்தமாம். (யாத். 17:15) கிதியோன் ஒரு பலி பீடத்தைக் கட்டி "யேகோவா ஷாலோம்" எனப் பெயரிட்டான். அதற்கு "யேகோவா சமாதானம்" என பொருள் ஆகும். (நியாய 6:23,24) வரவிருக்கிற நகரத்தைக் குறித்து தீர்க்க தரிசனம் கூறுகையில் "யேகோவா ஷம்மா" என குறிப்பிடுகின்றார். அதற்கு "யேகோவாவின் அதிசயம்" என்று பொருள். (எசேக். 48:35)

2. ஆபிரகாமுக்கும் (ஆதி. 18:1) மோசேக்கும் (யாத். 3:3-15) தரிசனமானது பிதாவாகிய தேவனல்ல, இயேசுவே. அதாவது அவர் மனிதனாக மரியாளிடத்தில் தோன்றுவதற்கு முன் இருந்த நிலையில் தோன்றியிருக்க வேண்டும். அப்படி தோன்றியபோது யேகோவா என்று பெயர் கூறியிருப்பதால், பிதாவே யேகோவா என்ற நாமத்தை இயேசு கிறிஸ்துவுக்கும் கொடுத்திருக்க வேண்டும் என்று

நினைக்கலாம். இப்படி எண்ணுவது தேவையற்றது, சரியானதுமல்ல. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட தெய்வ ஏவலுக்கு இசைந்து, தேவனுடைய பிரதிநிதியாக வரும்போது தமது தூதன் தன் பெயரைச் சொல்லாமல் யாருக்காக, யாரால், அனுப்பப் பட்டாரோ அவர் பெயரை உபயோகித்துக் கொள்ள தேவன் அனுமதித்தார் என்பதே சரி. யாத்திராகமம் 3:2-ல் மோசேயோடு கூட பேசியவர் ஒரு தூதனேயல்லாமல் பிதாவாகிய தேவனல்ல. இந்த கவுரவமான பணிக்கு அனுப்பப்பட்ட தூதர் யோவா 1:1இல் கூறப்பட்ட வார்த்தையானவரே. இவரே மரியாள் வயிற்றில் மனிதனாகப் பிறப்பதற்கு முன்பு இருந்த நிலைமையில் இருந்தார். இவ்விடத்தில் மோசேக்கு வல்லமை தரக்கூடிய அதிகாரத்தையும், மோசேயிடம் பேசவேண்டியவற்யையும் சர்வ வல்லமை பொருந்திய பிதாவாகிய தேவனிடத்தில் பெற்றுக் கொண்ட இயேசு கிறிஸ்து, அவருடைய பிரதிநிதியாக, அவருடைய கவுரவமான ஆணையை மோசேக்குக் கொடுத்தருளினார்.

3. ஏசாயா 40:3ல் சொல்லப்பட்ட பணி யோவான் ஸ்நானகனுடைய பணியைக் குறிப்பதேயாகும். "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்." இந்தப் பகுதியில் யேகோவா என்பது இயேசுவைக் குறிக்கும் என சிந்திக்கலாம். ஆனால் அது அப்படியல்ல, உண்மையில் யேகோவாவினால் மகிமைப் படுத்தப்பட்ட ஊழியக்காரராகிய இயேசுவை குறிக்கும். அவர் மனிதர்களுக்கு மத்தியில் யேகோவாவின் முழுப் பிரதிநிதியாவார். எனவேதான் இயேசுவே "என் பிதா என்னை அனுப்பினார்;" "நான் கேட்கிறபடியே நியாயந் தீர்க்கிறேன்;" "நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை;" "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்று கூறுகிறார். தூதராக அனுப்பப்பட்டவரை நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் ஏற்கனவே காண்பித்திருந்தபடி உண்மை என்னவென்றால், யோவான் ஸ்நானகன் அனைத்து மாம்ச திருச்சபை மக்களுக்கும் நிழலாயிருக்கிறார். மாம்சத்திலுள்ள திருச்சபையார் ஆவிக்குரிய நிலைக்கு வரும்போது தலையாகிய கிறிஸ்துவுடன் கூட, ஆவிக்குரிய மகிமையிலே இணைந்து, யேகோவா தேவனுடைய வழியை ஆயத்தப்படுத்துவார்கள். அப்போது அவருடைய பாதபடியான பூமி மகிமையில் நிறைந்திருக்கும். இந்த தீர்க்க

தரிசனம் முழுமையாக எப்போது நிறைவேறுமெனில், ஆயிர வருட அரசாட்சியின் இறுதியில் முழுமையாக நிறைவேறித் தீரும். 1 கொரி. 15:24-28; யோவா.6:57; 5:30; 10:28 ஒப்பிட்டுக் காண்க.

4. இயேசு கிறிஸ்து "மகிமையின் கர்த்தர்" என்று அப்போஸ்தலரால் வர்ணிக்கப்படுகிறார். (1 கொரி.2:8) பிதாவாகிய தேவனை சங். 24:7-10ல் "மகிமையின் இராஜா" என்று கூறப்பட்டுள்ளதால், இயேசுவே பிதாவாகிய தேவன் என்பதற்கு இது ஆதாரமாக இருக்கிறது என்கின்றனர். இது தவறான வாதம். நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, ஆயிரவருட யுகத்தில் யேகோவா தேவனின் நாமத்தினாலும் வல்லமையினாலும் பூமியை நீதியின் செங்கோல் கொண்டு ஆட்சி செய்யும்போது, அவர் "மகிமையின் இராஜா" எனப்படுவார். அதே அப். "மகிமையின் கர்த்தர்" என்று குறிப்பிட்ட அதே நிருபத்தில், அவரது ராஜ்யம் மகிமையின் உச்சக்கட்டத்தை அடையும்போது, அவருக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தின "தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு" இராஜ்யத்தை அவருக்கு ஒப்புவித்து பிதாவுக்கு கீழ்ப்பட்டிருப்பார் என்று கூறுகிறார்.

5. கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியைப் பற்றிய எழுத்தோவியமாக, இரண்டு தீர்க்க தரிசனங்களில் விளக்கப்பட்டுள்ளது. "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம், பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு மலைகளுக்கு மேலாக உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்திற்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்திற்கும் போவோம் வாருங்கள்; அவர் தம்முடைய வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்... அவர் ஜாதிகளுக்குள் நியாயம் தீர்த்து திரளான ஜனங்களை கடிந்து கொள்வார்." ஏசா. 2:2-4; மீகா 4:1-3

ஆயிர வருட அரசாட்சியின்போது கிறிஸ்து நீதியாய் நியாயம் தீர்த்து இராஜ்யத்தை தனதாக்கிக் கொண்டு யேகோவா தேவனின் நாமத்தில் ஆட்சிபுரிவதால் இயேசுவுக்கு யேகோவா என்கின்ற நாமம் பொருந்தும் என்று கருதப்படுகிறது. அது அப்படியல்ல, பிதாவாகிய தேவனிடமிருந்து அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின்

*மூலமாக எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு வருகிறது என்பதே உண்மை. (1 கொரி. 8:6) இவ்விதமாகவே நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு மாதிரி ஜெபத்தைக் கற்றுக் கொடுத்தார். "பரலோகத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே... உமது இராஜ்யம் வருவதாக, உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போலவே பூலோகத்திலும் செய்யப்படுவதாக." (மத். 6:10) இம்மாதிரியே மீகா 4:8லும் சொல்லப்படுகிறது. அங்கே கிறிஸ்து (தலையாகிய கிறிஸ்துவும் சரீரமாகிய சபையும் - புதிய எருசலேம்) "மந்தையின் துருக்கம்" என அழைக்கப்படுகிறார். அவராலேயே ஆதாமினால் மனுக்குலம் ஏதேனில் இழந்துபோன மகிமையை கல்வாரியில் இயேசு மீட்டுக் கொடுத்த செயல் சித்தரிக்கப்படுகிறது.*

*6. "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே... இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது." (மீகா. 5:2). சங். 90:1-2-ல் "யேகோவா ஆகிய நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்" என்று மோசே குறிப்பிட்டதையே சான்றாக எடுத்துக் கொண்டு இயேசு கிறிஸ்துவும் என்றென்றைக்கும் தேவனாய் இருப்பதாகக் கூறி இயேசுதான் யேகோவா என்கின்றனர்.*

*இது காரண காரியத்திற்குட்படாத உதாரணம். இங்கு தவறான சான்றாகக் கூறப்பட்டிருக்கிறது என்பதே நமது பதில். இன்னும் ஏராளமான வேதாகம வசனங்களில், "யேகோவா" என்ற சொல்லை நேர்மாறாக இயேசு கிறிஸ்துவுக்கும் தவறாக பயன்படுத்துகின்றனர் என்பது மட்டுமல்ல, இந்த வசனங்கள் சொல்லுகின்ற இடங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவையல்ல யேகோவா தேவனையே குறிக்கும் என்பதை மீகா. 5:4 லில் தெளிவாக விளக்குகின்றார். "அவர் நின்று கொண்டு, கர்த்தருடைய பலத்தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்; ஆகையால் அவர்கள் நிலைத்திருப்பார்கள். அவர் இனிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் மகிமைப்படுவார்."*

*இந்தக் காரியத்தைக் குறித்து அதிகப்படியான விளக்கம் ஏதுமில்லை. அப்படி என்றால் மீகா. 5:2க்கு என்ன பொருள்? "அவருடைய புறப்படுதல் (முன்னறிவிக்கப்பட்டது) அநாதி*

நாட்களாகிய பூர்வத்தினுடையது (அவருடைய வருகையும் மேசியாயிசமும் தெய்வீக திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது)."

7. மேலும் ஏசாயா 25:6-9 லில் குறிப்பிட்டிருக்கிறது, ஆயிர வருட அரசாட்சியைப் பற்றியது. இதைக் காண்பித்து சிலர் யேகோவா என்ற பெயர் இயேசு கிறிஸ்துவுக்கும் உரியது என்கின்றனர். "சேனைகளின் கர்த்தர் (யேகோவா) இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார். அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்... கர்த்தராகிய தேவன் (யேகோவா) எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார்."

இது அதற்கு ஆதாரமாக இல்லை என்று நாம் கூறுகின்றோம். இந்த வசனங்களை சொல்லுகின்றவர் மகிமையின் கிறிஸ்து என்றும், இது அவருடைய ஆயிர வருட அரசாட்சியின் பணி என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். "யேகோவாவே, நீரே என் தேவன், உம்மை உயர்த்தி, உமது நாமத்தை துதிப்பேன்" என்று முதல் வசனம் கூறுகிறது. இது ஆயிர வருட அரசாட்சியின் முடிவின் விளைவாக இருக்கும். அப்போது கிறிஸ்துவின் பணி முற்றிலுமாக முடிக்கப்பட்டு பிதாவாகிய தேவனே எல்லாவற்றிலும் உயர்ந்திருப்பார். எல்லாம் அவருடைய கட்டுப்பாட்டில் கீழ்ப்படிந்திருக்கும். மேசியா, யேகோவா தேவனின் வல்லமையுள்ள ஊழியக்காரராகவும் பிரதான ஊழியக்காரராகவும், பூமியில் வருவார். எனவே அவர் இம்மானுயேல் - "தேவன் நம்மோடு இருக்கிறார்" என அழைக்கப்படுகிறார். இந்தக் கருத்தை அப்.பவுல் முழுமையாக எடுத்தாளுகிறார். இந்த தீர்க்கதரிசன நிறைவேறுதலைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் ஆயிர வருட அரசாட்சியில் ஆதாமினால் உண்டான மரணத்தைப் பரிகரிக்கும்போது இவ்வாறு குறிப்பிடுகிறார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்." I கொரி. 15:57.

8. யேகோவா என்ற நாமம் இயேசு கிறிஸ்துவுக்கும் பொருந்தும் என நினைப்போர் கூறும் சில வசனங்களை நாம் கவனிக்க வேண்டும். அதில் ஒன்று, "நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்" (ஏசா 9:6)

என்பதாகும்.

இந்த வேத வசனத்தின் முழு அர்த்தத்தையும் நாம் பிறகு பார்ப்போம். இந்த குறிப்புகள் எதிலும், யேகோவா என்ற நாமம் நம்முடைய கர்த்தரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவை குறிப்பதாக இல்லை. அப்படியிருக்குமானால், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அடைமொழிகளில் இந்த யேகோவா என்ற நாமமும் சேர்க்கப்பட இதுவே சரியான இடமாக இருந்திருக்கும். ஆனால் அதற்கு மாறாக, அடுத்த வசனமே, "சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (வச. 7) என குறிப்பிடுகிறது.

9. ... "யூதா பட்டணங்களை நோக்கி, இதோ, உங்கள் தேவன் என்று கூறு. இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்... மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார்." ஏசாயா. 40:9-11

வேதாகமத்தில் ஒரே ஒரு வேதப்பகுதியில்தான், நமது இரட்சகர் மகா உன்னதப் பெயராகிய "யேகோவா" என்ற நாமத்தில் அழைக்கப்படுகிறார். அந்த இடத்திலும் அவருடைய பெயரால் அழைக்கப்படாமல் யேகோவாவின் "புயம்" என அழைக்கப்படுகிறார். "யேகோவா தேவனின் வல்லமையான புயம் அவருக்காக ஆளுகை செய்யும்." எல்லா துரைத்தனத்தையும் அதிகாரத்தையும் பரிகரித்து, பிதாவுக்குக் கீழ்ப்படுத்தும் வரையில் அவர் ஆளுகை செய்ய வேண்டியது. அவர் நியாயத் தீர்ப்பு செய்து இறுதி வெற்றி பெறும்வரைக்கும், பூமியை யேகோவாவின் பாதப்படியாக்கிப் போடும் வரைக்கும், பிதாவாகிய தேவனுக்கு இராஜ்ஜியத்தை ஒப்புக் கொடுக்கும் வரைக்கும் அவர் ஆளுகை செய்வார். I கொரி. 15:24-28; மத். 12:20

உதாரணமாக இன்னும் பல்வேறு இடங்களில் தேவனுடைய பிரதிநிதியாக கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லியிருப்பதைப் பார்ப்போம்: "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசிக்கிறவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது." (ஏசா 53:1) (இந்த யுகத்தில் கர்த்தருடைய புயத்தை எவரும் கண்டவர் இலர் - மாபெரும் வல்லுநர்கள், அறிவாளிகளும்

*கூட கண்டவர்கள் இல்லை...). "அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார்." - ஏசா.53:3; யோவா.12:38*

*"...தீவுகள் எனக்குக் காத்திருந்து, என் புயத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கும்." - ஏசாயா 51:5,9*

*"எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார்; பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்." - ஏசா. 52:10*

*"அவருடைய (யேகோவாவின்) புயமே அவருக்கு இரட்சிப்பாகி... மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் (யேகோவா) சொல்லுகிறார்." - ஏசா. 59:15-20*

*10. இதைக்குறித்து யோவான் 12:41-ல் "ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்" என வாசிக்கிறோம். இது ஒருவேளை ஏசாயா 6:1ஐக் குறிக்கிறதாகச் சிலர் நினைக்கின்றனர். ஆனால் ஏசாயா 6:1-ல் கூறப்பட்ட எபிரேயச் சொல் (ஆதோனாய்) யேகோவாவைக் குறிக்காது. ஆண்டவரையே (இயேசு கிறிஸ்து) குறிக்கும். யேகோவா என்ற நாமம் பிதாவாகிய தேவன் ஒருவரையே குறிக்குமேயல்லாமல் வேறு எவரையும் குறிக்காது. சில விசேஷக் காரணங்களுக்காக பிதாவாகிய தேவனால் அனுப்பப்படும் தூதர்கள், அவர் நாமத்தில் பேசும்போது மாத்திரமே அந்தப்பெயரால் அழைக்கப்படுவார்களேயல்லாமல் வேறு எச்சமயத்திலும் அந்த பெயரைப் பயன்படத்தக்கூடாது.*

*இதிலே ஆதோனாய் என்ற பெயரை சில வேளைகளில் பிதாவுக்கும் குறிப்பிடுவதுண்டு. நாம் அதைப்பற்றி இங்கு விவாதிக்கவில்லை. ஆனால் இந்த இடத்தில் இந்தச் சொல், பிதாவாகிய தேவனைக் குறிக்காமல் இயேசு கிறிஸ்துவையே குறிக்கும். இது போலவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் அவருடைய ஆயிர வருட அரசாட்சியைக் குறித்தும் ஆதோனாய் என்ற*

*சொல்லால் குறிக்கப்பட்டுள்ளதை சங்.2:4-9 வசனங்களில் காணலாம். "பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார், ஆண்டவர் அவர்களை இகழுவார். அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப் பண்ணுவார்... கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்."*

*சிலர் ஏசாயா 6:1-ல் காணப்படுகின்ற "ஆதோனாய்" (கர்த்தர்) என்கின்ற சொல் ஏசாயா 6:3,5-ல் குறிப்பிட்டபடி யேகோவாவையே குறிக்கும் என்கின்றனர். அது தவறு. துதிக்குப் பாத்திரராயிருக்கின்ற பிதாவாகிய தேவனைக் குறிக்காமல், "உடன்படிக்கையின் தூதனாகிய தேவதூதரையே" குறிக்கும். மறுபடியுமாக 8-ஆம் வசனத்தை மிகக் கூர்ந்து கவனிப்போமேயாகில் அந்த செய்தியை கொடுப்பது யேகோவா தேவன் அல்ல என்பதும், தேவன் தாமே நியாயம் தீர்க்காமல் குமாரனை நியமித்திருக்கிறார் என்பதும், ஏனெனில் "பிதாவானவர் தாமே.... நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" என்பதும் தெரியவருகிறது. மத். 23:34-35; யோவா. 5:22,27*

*வேறு சில இடங்களில் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் சொல் பிதாவாகிய தேவனைக் குறிப்பதாக சொல்லப்படும் இடங்களும் உண்டு. இயேசு கிறிஸ்துவை குறிக்கும் சொல் பொதுவாக கர்த்தர் என்றே பொதுவான மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் மொழிபெயர்த்துள்ளனர். மல்கியாவின் ஆகமத்தில் யேகோவா தனியாகவும் இயேசுகிறிஸ்துவை உடன்படிக்கையின் தூதனாகவும் காண்பிக்கப்பட்டதைக் காண்போம். "இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன். அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்திற்குத் தீவிரமாய் வருவார். இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்... அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்குபடிக்கும், நீதியாய் காணிக்கைகளைச் செலுத்தும் படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்." - (மல்கியா 3:1-4)*

இதைப்போன்றே, மேசியாவைப்பற்றிக் கூறும் சங்கீதக் காரனின் பிரபலமான குறிப்பைக் காணலாம். “எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர், உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது, ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார்... தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது. உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர், ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்.” *(சங். 45-2,6,7)* திருச்சபையானது பிதாவின் குமாரத்தியாகவும், மணவாளனாகிய ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகவும் வருணிக்கப்படுகிறது. இராஜாவின் குமாரனை மணவாளனாக ஏற்றுக் கொள்ளும் படியாக திருச்சபைக்கு புத்திமதி சொல்லப்பட்டது. “அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார், அவர் உன் ஆண்டவர், (ஆதோன் - யேகோவா அல்ல) ஆகையால் அவரைப் பணிந்து கொள்.” *(சங். 45:2-11; எபி. 1:8,9; I கொரி 11:3; எபே. 5:23; யோவா 5:23)*

*11.* ஏசாயா தீர்க்கதரிசனத்தில் யேகோவா என்ற சொல் இயேசு கிறிஸ்துவுக்குப் பொருந்துமா என சிந்திப்போம். “சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள், அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக.” *(ஏசா 8:13)* இதில் முக்கியமான கருத்து அடுத்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. “அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார், ஆகிலும் இஸ்ரயேலின் இரண்டு கோத்திரத்திற்கு தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும் எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார்.” *(ஏசா. 8:14)* இதை ஒரு ரூபகாரமாக நாம் ஏற்க இயலாது. இந்த வசனத்தில் மூன்றாவதாக ஒரு நபரைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. (யேகோவாவையும் தீர்க்க தரிசியையும் தவிர சொல்லப்பட்டுள்ளது) அவர்தாம் நமது அண்டவர் இயேசு. மேலும் இயேசு கிறிஸ்து கூறுவதாவது: “சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே வேதத்தை முத்திரையிடு என்றார். நானோ... கர்த்தருக்குக் காத்திருந்து... நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின்

*கர்த்தராலே இஸ்ரயேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்." - ஏசாயா 8:16-18; எபி. 2:13ஐ ஒப்பிடவும்.*

*12. சங். 110-ஐ இயேசுவை யேகோவா என்று சொல்வதற்கு, ஆதாரமாகக் கூறுகிறார்கள். அவ்வாறு இல்லையென்றே நாம் வாதிடுகிறோம். நேர் எதிராக ரூபகாரப்படுத்தப்பட்டுள்ளது. "கர்த்தர் (யேகோவா) என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்... நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார். உம்முடைய வலது பாரிசத்தி-ருக்கிற ஆண்டவர், தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார்." - சங். 110:1,4,5*

*இங்கே யேகோவாவின் வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டு, ஒரு புதிய முறைமையின்படி ஆசாரியராக ஆக்கப்பட்டவர் யாரென்பதை புரிந்து கொள்ளாத எவரும் தனது தவறான அபிப்பிராயத்தினால் நிச்சயமாக குருடாக்கப்பட்டவராக இருக்கிறார். வலது பாரிசத்துக்கு உயர்த்தப்பட்டவர் தான்தான் என்பதை நமது ஆண்டவர் கூறும் விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்; தன்னை "ஆதோன்," தாவீதின் ஆண்டவர், யேகோவாவினால் உயர்த்தப்பட்ட ஆண்டவர் என்று காண்பிக்கிறார். (மத். 22:44,45)*

*அப்.பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினபோது, இதே வார்த்தையை இவ்விதமாக உபயோகித்தார். இதேவிதமாக அப்.பவுலும் கூறுகிறார். அப். 2:34,35; எபி.1:13; 10:12-13*

*13. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வல்லமையுள்ள போதகரென்று சொல்-யிருப்பதால், ஏசா. 54:13ல் "உன் பிள்ளைகள் எல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டு இருப்பார்கள்" என்ற தீர்க்கதரிசனம் அவரில் நிறைவேறியிருக்கிறது என்று கூறப்படுகிறது. இந்த மாறுபாடு உள்ள வார்த்தைகளுக்கு விடையாக, நாம் கர்த்தருடைய வார்த்தையையே கேட்போமாக. இதே தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை மேற்கோள்காட்டி இயேசு*

கூறும்போது, இந்த தீர்க்க தரிசனத்தில் கூறப்பட்டுள்ள யேகோவா நானல்ல, என்று தெளிவாக்கினார். அவருடைய வார்த்தைகள்: "எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டு இருப்பார்கள் என்று தீர்க்க தரிசன ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்கிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்." யோவான். *6:45*

மகா தேவனாகிய யேகோவா, நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தவர் மட்டுமல்ல, அவர் மகா பெரிய போதகருமாய் இருக்கிறார். மனுக்குல மீட்பிற்கான அவரது திட்டத்தை அவருடைய அறிவுக்கூர்மையான தேவபிள்ளைகள் இதுவரை கண்டுகொள்ளவில்லை. இந்த திட்டம் தேவஞானம், அன்பு, நீதி, நியாயம் ஆகியவைகள் இணைந்து ஒன்றுக்கொன்று இசைவாக, பூரணமாகக் கொண்டுள்ளது.

அப்பொழுதும் சரி, இப்பொழுதும் சரி, பிதாவாகிய தேவனால் நியமிக்கப்பட்ட மிகப்பெரிய போதகர் இயேசு கிறிஸ்துவே. நமது அருமை மீட்பராகிய அவரே இதனை சுருக்கமாகப் போதித்தார். தான் போதிக்கிற இந்த வார்த்தைகளை முன்பே பிதாவினிடத்தில் கற்றுக்கொண்டேன் என்று வெளிப்படையாக கூறவில்லையா? இயேசு கூறுகிறதாவது: "நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன்:" "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாக இருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாகியிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்வான்... தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாக இருக்கிறான்." "நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பிய பிதாவினுடையதாய் இருக்கிறது." "நான் உம்முடைய வார்த்தைகளை அவர்களுக்குக் கொடுத்தேன்." "அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டார்கள்." "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்." - யோவான் *7:16-18; 8:38; 14:24; 17:6,14,17*

அதுபோலவே கர்த்தர் தனக்குக்கீழே போதகர்களாக அப்போஸ்தலரை நியமித்தார். இன்னும் மற்றவர்களையும் கர்த்தரின் மந்தைக்கு போதகர்களாகவும், மேய்ப்பர்களாகவும் நியமித்து, "என் மந்தையை மேய்ப்பாயாக" என்று போதித்தார். "உங்களைக் குறித்தும், தேவன் (கிறிஸ்து) தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தைமுழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாய் இருங்கள்." (அப்.20:28) இந்த போதகர்கள் தங்களுடைய சுய போதகத்தைப் போதிக்க கூடாது. போதித்தால் அது "உலக ஞானமாக" கருதப்படும். தேவ ஜனங்கள் தேவனால் போதிக்கப்பட்டு இருப்பார்கள். தேவனுடைய சத்தியம், திட்டம், மேன்மை, குணநலன்கள் ஆகியவற்றை உள்ளபடியே போதிக்க வேண்டுமேயல்லாமல், மனிதனது சுய போதனையை போதிப்பவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி போதிக்கிறவர்கள் அல்ல, பிதாவினுடைய திவ்விய திட்டம், சத்தியம், மேன்மை, நித்திய நியாயப் பிரமாணங்களின் அடிப்படையில் வளர்ந்த "கிறிஸ்துவின் போதனைகளையும்," "அப்போஸ்தலரின் போதனைகளையும்" போதகர்கள் கவனமாய்ப் போதிக்க வேண்டும்.

தற்காலத்தில் அநேகர் தங்களைத் தாங்களே பெருமையுடன் போதகர் என்று அழைத்துக் கொள்வதைப் போல, சுயமாய் போதிக்கக்கூடாது. இயேசு கிறிஸ்துவைப் போலவும், அப்போஸ்தலரைப் போலவும் மெய்யான போதகராய் இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவினுடைய எளிய, அடக்கமான சொற்றொடர்களை கவனியுங்கள். அதைவிட சிறந்த சொல்லோவியங்கள் எதுவுமில்லை. "நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்கு போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்." (யோவான். 8:28) யேகோவா தேவனுக்கு, இயேசு கிறிஸ்துவைப் போல அடக்கமும், விசுவாசமும், கீழ்ப்படிதலுமுள்ள வேறு எவரேனும் இருக்கக்கூடுமோ என்று அதிசயிக்கிறோம். எனவே தேவன் எவருக்கும் கொடுக்காத வல்லமையையும், கௌரவத்தையும், வலதுபுற சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பாக்கியத்தையும் கொடுத்து, எல்லா மனுஷருக்கும் மேலாகவும் அவரை உயர்த்தினார். இவ்விதமாக கர்த்தராகிய இயேசு

கிறிஸ்து நமக்கு எவற்றைக் கற்பித்தாரோ அவற்றையெல்லாம் பிதாவின் மூலமாக நன்கு கற்றுத் தேறியிருந்தார். அதற்கு சாட்சியாக தேவ ஆவியினால் ஏவப்பட்ட வசனத்தைக் கவனிப்போம். "அவர் குமாரனாய் இருந்தும், பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்." - எபி.5:8; பிலி . 2:8

பெரிய போதகராக இயேசுவை ஏற்படுத்தின மாபெரும் போதகராக யேகோவா இருக்கிறார் என்பது தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது. மனுக்குலம் முழுவதற்கும் மீட்பின் அதிபதியாக விளங்க வேண்டும் என்பதற்காக இரக்கம், விசுவாசமுமுள்ள பிரதான ஆசாரியராக இயேசுவையே தேவன் ஏற்படுத்தினார். பாடனுபவிப்பதனால் வரக்கூடிய அனுபவங்களை கற்றுக் கொள்ள வேண்டியது அவருக்கு அவசியமாக இருந்தது. (எபி.2:9-10) நீண்ட காலத்திற்கு முன்பாகவே சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள், யேகோவா தேவனால் இயேசு கிறிஸ்துவுக்குக் கற்பிக்கப்பட்டிருப்பதையும் இயேசு நியாயப் பிரமாணத்தை நேசிக்கவும் நியாயப் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கவும் நன்குக் கற்றுக் கொண்டதையும் வெளிப்படுத்துகின்றன.

"இளைப்படைந்தவர்களுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் (அதோனோய் யேகோவா) எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார். காலை தோறும் என்னை எழுப்புகிறார். கற்றுக் கொள்கிறவர்களைப் போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார். கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார், நான் எதிர்க்கவுமில்லை, நான் பின் வாங்கவுமில்லை, அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன், அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை." ஏசா. 50:4-10; மத். 26:67; 27:26,30; ஏசா. 53:11

இந்தப் பாடத்தைப் பற்றி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாட்சியை கேட்போம். மனுக்குல முழுவதற்கும் இராஜரீக ஆசாரியராக மகா உன்னதநிலை அடைவதற்கு ஆயத்தமாக சொல்லப்படும் இடங்களை கவனிப்போமாக: "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற

பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும், அவர் தமது கண்கண்டபடி நியாயந் தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் இருப்பார்." - ஏசா. 11:2-4 "அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப் படுகிறவர்களுக்கு (வியாதிகள், பலவீனங்கள்) உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்." இப்போது சபைக்கும், ஆயிர வருட யுகத்தில் உலகத்திற்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். எபி. 2:18

மேலும் தீர்க்கதரிசனமாக மேசியாவைக் குறித்து வேதம் சொல்லுகிற வார்த்தைகளைக் கவனிப்போம். "ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்." "எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரை துதிப்பேன்." (சங். 16:7-11) தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிறதை நற்செய்தியாளர் இவ்வாறு உறுதிப்படுத்துகின்றார். "பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர் மேல் இருந்தது... இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்." லூக். 2:40-52

இந்த பாடத்தைக் குறித்து எல்லா முக்கிய வசனங்களையும் பரிசோதித்துப் பார்த்து, யேகோவா என்கிற மாபெரும் நாமத்தை, பிதாவாகிய தேவனுக்குத் தவிர வேறு யாருக்கும் பயன்படுத்தக் கூடாது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்கிறோம். இந்த நாமத்தை பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டு, மற்ற யாருக்கும் பயன்படுத்துவது தடை பண்ணப்படுகிறது என்றும் நிச்சயப்படுத்துகிறோம்.

தேவஞானம், அன்பு, நீதி, வல்லமை ஆகியவைகளுக்கு மைய இருப்பிடமாக பிதாவாகிய தேவன் விளங்குகின்றார். ஏனெனில் இதுவே சத்தியம். இதற்கு மாறான கருத்துக்களெல்லாம் அசத்தியமும் தீமையுமாகும். இதுவரை நாம் பார்த்த ஆதார மேற்கோள்களெல்லாம் இயேசு கிறிஸ்துவே சொன்னவை; பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டு தங்கள் வாயின் மூலமாகச் சொன்னவைகள். பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் ஒருவரே என்று

மேற்கண்ட எந்த மேற்கோளிலும் சொல்லப்படவில்லை. மனிதர்களின் உபதேசத்தில் அல்லாமல் வேறு எதிலும் மகிமையிலும், வல்லமையிலும், பிதாவானவரும், இயேசு கிறிஸ்துவும் சமமானவர்கள் என்று சொல்லப்படவில்லை.

மேலும் பிதாவாகிய தேவன், தமது உடன்படிக்கையின் தூதனும் பிரதான ஊழியக்காரருமாகிய இயேசு கிறிஸ்துவின் மேன்மையைக் குறித்து பொறாமைப் படவில்லை. மாறாக அவர் மீது அதிக பிரியம் வைத்தார். அந்தஸ்திலும், அதிகாரத்திலும் தனக்கு மட்டுமே கீழ்ப்பட்டவராக இருந்த இயேசுவை மற்ற எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை கவனியுங்கள்: "பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய் செய்யமாட்டார். அவர் எவைகளை செய்கிறாரோ, அவைகளை குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்கு காண்பிக்கிறார், நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்கு காண்பிப்பார். பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, குமாரனும் தமக்கு சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். அன்றியும் பிதாவை கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படி, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்பு செய்யாமல், நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். குமாரனை கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்." யோவா. *5:19-23*

வேதாகமத்தில் சொல்லப்பட்ட ஒப்புரவாகுதலின் திட்டத்திற்கு ஆசிரியராயிருக்கிற பிதாவாகிய தேவனுக்கும் அவருடைய தாசனாகிய கிறிஸ்துவுக்குமுள்ள வேற்றுமையை தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அவசியம். "பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரே பேறான குமாரன்," "அவரது நேச குமாரன்" இந்த ஒப்புரவாகுதலின் ஊழியத்தை எவ்வாறு செய்து முடித்தார் என்று அறிய ஒப்புரவாகுதல் என்ற தத்துவம் என்ன என்பது பற்றி நாம் சரியாக புரிந்து கொள்ளவேண்டும். ஏராளமான கிறிஸ்தவர்கள் பிதா

யார்? குமாரன் யார்? என்பதிலேயே குழப்பமாயிருப்பதால், ஒப்புரவாகுதல் என்ன என்பது தெரியாமல் முழுமையாக குழப்படைந்திருக்கின்றனர். இதனால் தெய்வீக வெளிப்பாடாகிய இந்த விசுவாசத்தின் அடிப்படையிலிருந்து நழுவி விழக்கூடிய அபாயகரமான நிலையில் இருக்கின்றனர்.

பிதாவுக்கும், குமாரனுக்கும் உள்ள வேற்றுமையையும், நமது மீட்புக்கு உள்ள தொடர்பையும் குறித்து அப்.பவுல் தெளிவாக வலியுறுத்தி எடுத்துச் சொல்லுகிறார்."ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்... பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது, அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." *(I கொரி 8:4,6)* அதாவது ஒரே நித்திய தேவன் நமக்குண்டு, எல்லா ஜீவராசிகளுக்கும் சிருஷ்டி கர்த்தாவும் மூலமும் அவரே, நாம் அவருக்கென்று படைக்கப்பட்டோம். நமக்கு ஒரே ஒரு இயேசு கிறிஸ்து என்னும் மத்தியஸ்தரும் உண்டு. மத்தியஸ்தர் மூலமாக பிதாவாகிய தேவன் தம்முடைய எல்லாத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவர் மூலமாக நமக்கு பாவ மன்னிப்பு கிடைத்திருக்கிறது. அவருடைய இரத்தத்தின் மேல் விசுவாசம் வைத்ததினால் கிடைக்கப்பெற்ற பாவ மன்னிப்பினால் பிதாவோடு ஒப்புரவாகி அவருடைய மகிமைக்கு பாத்திரவான்களாகிறோம். ரோம. *5:1*

## பாதிரிமார்களின் பாரம்பரியம், அதை ஆதரிக்கின்ற போலி ஆதாரம் - தவறாக கூட்டி எழுதப்பட்டவை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகை மீட்டு இரட்சித்தார் என்பது மாத்திரமல்ல; அவர் உலகை இரட்சிப்பதற்கு முன்பாகவே, உன்னதமான கௌரவமான நிலையில் இருந்தார் என்பதையும், முழு ஒப்புரவாக்குதலின் பணி அவரால் அவரைக் கொண்டு தான் நிறைவேற்றப்படும் என்பதையும் பின்வரும் அத்தியாயங்களில் பார்ப்போம். இப்பொழுது நாம் இந்த மாபெரும் ஒப்புரவாக்குதலின் திட்டத்தின் ஆசிரியரை அடையாளம் காண

முயற்சிப்போம். பொதுவான கிறிஸ்துவ மண்டலங்களின் குழப்பமான கொள்கையாகிய திருத்துவத்தை ஆதரிக்கிறவர்கள் கூட யார் இந்த திட்டத்தை ஏற்படுத்தியவர், இந்த திட்டத்தை நிறைவேற்றியவர் யார் என்பதை புரிந்து கொள்வதில்லை. திருத்துவ போதகர்களேகூட இப்படிப்பட்ட கேள்விகளை கேட்கும் போதுதான் மிகுந்த குழப்பமடைந்து திருத்துவமென்பதே விளங்கிக் கொள்ள முடியாதது என்று கூறிவிடுகின்றனர். ஆகவே நாம் இப்படிப்பட்ட அடிப்படை விசுவாசக் கருத்தை வேத கருத்துக்களைக் கொண்டு ஆராய்தல் அவசியம். திருத்துவம் என்பதற்கு வேதத்தில் எங்கும் ஆதாரம் கிடையாது. நாம் எற்கனவே அநேக வசனங்களை கவனித்து ஆராய்ந்ததில் வேதம் சொல்லுகிறபடி, ஒரே ஒரு சர்வ வல்லமையுள்ள கடவுள்தான் உண்டு. இரண்டோ, மூன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கடவுள்களோ இல்லை. வேதாகமத்தில் திருத்துவம் என்ற வார்த்தை ஓர் இடத்தில் கூட இல்லை. திருத்துவத்துக்குச் சமமான வேறு அர்த்தங்கொள்ளும் வார்த்தைகளும் இல்லை. அல்லது ஏதாவது ஒரு காரணம் காட்டி இந்த கருத்தை ஆதரிக்கிற வசனம் எங்கும் காணப்படவில்லை. திருத்துவக் கொள்கையில் உள்ளவர்கள் தங்களின் சொந்தக் கருத்துக்களை திணிக்க முயலும்போது, மிக மோசமாக தாங்களும் விளங்கிக் கொள்ள முடியாமல் கேட்கிறவர்களும் விளங்கிக் கொள்ள முடியாமல் குழம்புகின்றனர். இப்படி வாதிடுபவர்கள் ஒரே மூச்சில் ஒரே தேவன் தான் எனக் கூறுகின்றனர். (வேதாகமம் ஒரே தேவன் என வலியுறுத்திக் கூறும் கருத்தை எவராலும் மறுக்க முடியாது) ஆனாலும் அதே மூச்சில் அவர்கள் மூன்று தேவர்களும் உண்டு என்றும் கூறுகின்றனர். (ஏனெனில் இது வேதக் கொள்கையல்ல மனித பாரம்பரியத்தால் ஏற்பட்டது. முதன் முதலில் போப்பு மார்க்கத்தில் ஆரம்பித்து வழிவழியாய் தொடர்ந்தது).

ஆனால் மூன்று கடவுள்களும் ஒரே கடவுளாய் இருப்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஞான உபதேசத்தில் போதிக்கப்படுவதுபோல் சமவல்லமை, சம மகிமையுள்ள மூன்று கடவுள்கள் உண்டு என்பது உண்மையானால் ஒரே கடவுள்தான் உண்டு என்று கூறுவது பொய்யாகும். “பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது” என்று பவுல்

உறுதிபடக் கூறுகிறார். பிதா தாம் கௌரவித்த குமாரனைவிட பெரியவராய் இருக்கிறார் என்றும், மரணத்திலிருந்து அவரே தன்னை உயிர்த்தெழச் செய்தார் என்றும், அதற்குப்பின்னர் அவரை உன்னதமான நிலைக்கு உயர்த்தினார் என்றும், அவரை இராஜ்ஜியத்திற்கு இராஜாவாக ஏற்படுத்தினார் என்றும், கடைசியில் அந்த இராஜ்யத்தை பிதாவே எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருப்பதற்கு அவரிடம் ஒப்புக் கொடுத்துவிட்டு, தாமும் கீழ்ப்பட்டிருப்பார் என்றும் இயேசுதாமே சாட்சி பகர்ந்தார். இது உண்மையானால் ஒன்றுக்கு மேற்பட்ட சமவல்லமையுள்ள பல கடவுள்கள் இருக்க முடியாது. ஆனால் பின் வரும் அத்தியாயங்களில் இயேசு கிறிஸ்துவும் ஒரு தேவன் என்பதையும், அவரையும் நாம் கனம் பண்ணவேண்டும் என்பதையும் விளக்கமாக எடுத்துரைப்போம். பிதாவை கௌரவிப்பது போலவே குமாரனையும் நாம் கௌரவிக்க வேண்டும். குமாரனை கௌரவிக்கிறவன் குமாரனை உன்னதத்திற்கு உயர்த்திய பிதாவையும் கௌரவிக்கிறான் என்றும் சொல்லுகின்ற வேதமே தான், எல்லாருக்கும் பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள ஒரே தேவன் உண்டு, என்ற கொள்கையை, வேதத்திலுள்ள எல்லா ஆகமங்களும் ஒரே குர-ல் தெரிவிக்கின்றன. “ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும்” அப்.பவுல் அறிக்கையிடுகிறார். *1 கொரி. 11:3*

வேதாகமத்தில் ஒரே ஒரு இடத்தில், இந்த திருத்துவ கொள்கையை ஆதரிக்கிற வசனம் காணப்படுகிறது. அந்த வசனம் பிற்கால ஆராய்ச்சியாளர்களால் தப்பாகக் கூட்டி எழுதப்பட்ட வசனம் என்று, ஒரேமுகமாக ஏற்றுக்கொண்டனர். பிற்காலத்தில் புதிய திருப்புதல் வேதாகமங்களில் அந்த வசனத்தையே எடுத்துவிட்டனர். அவ்வாறு திருத்திய மொழிபெயர்ப்பை எழுதிய யாவரும் திருத்துவக் கொள்ளையுடையவர்களே. வேதாகமத்தில் இவர்கள் கூறிய ஒரே ஒரு ஆதாரம் என நம்பிக் கொண்டிருந்த அந்த வசனத்தை, தங்கள் கொள்கைக்கு ஆதாரம் என்று அவர்கள் இஷ்டப்படி அதைச் சேர்க்க எண்ணியிருந்தாலும், அவர்கள் மனச்சாட்சி இடங் கொடுக்காததால்

அதை நீக்கிவிட்டனர்.

இதனால் இது பொது மொழிபெயர்ப்பை எழுதியவர்களின் தவறு என்றும் கூற நியாயமில்லை. ஏனெனில் அவர்கள் மொழி பெயர்த்த கால கட்டத்தில் (கி.பி.1611) இந்த தவறு கண்டு பிடிக்கப்படவில்லை. (கி.பி.4-ஆம் நூற்றாண்டின் சீனாய் மூலப்பிரதியை ஆராய்ந்தபோது 1859-ல் தான், தப்பாகக் கூட்டி எழுதப்பட்ட வாக்கியங்கள் வெளிப்பட்டன.) ஏனெனில் பொதுவான மொழி பெயர்ப்பின் காலத்தில், நூற்றுக்கணக்கான மூலங்கள் கிடைத்திருந்தாலும், அவைகளெல்லாம் கி.பி.7-ஆம் நூற்றுாண்டுக்குப் பிற்பட்டவை. எனவே வேத வல்லுநர்கள் இதை மறுப்பதற்கில்லை என்கின்றனர். இந்த வேத வல்லுநர்கள், பாகுபாடின்றி நடுநிலைமையாய் நின்று இக்கருத்தைத் தெரிவித்தனர். திருச்சபையில் இந்த திருத்துவக் கொள்கை பற்றிய கலவரமேற்பட்டபோது, திருத்துவக் கொள்கைக்காக வாதிட்டவர்கள் தங்களுக்கு எதிராய் வாதிட்டவர்கள் முன்பு, கதிகலங்கிப் போய் திருத்துவக் கொள்கையை நிரூபிக்க வேறு எந்தவித ஆதாரங்களும் கிடைக்காததால் தப்பாகக்கூட்டி எழுதப்பட்ட வாக்கியங்களை சேர்த்து விட்டனர். திருத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்த ஒரு பாதிரியாரின் கைவேலையாகத் தான் இது இருக்க முடியும் என்பதில் ஐயமில்லை. எனவே அந்த வசனம் பரிசுத்தாவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வசனமல்ல. பலவீனமான இந்தத் திருத்துவ கருத்துக்கு போதுமான வேத ஆதாரங்கள் இல்லையாதலால், திருத்துவக் கொள்கைக்கு ஆதாரமாக இந்த வசனம் இருக்கக்கூடும் என்ற நோக்கத்தில் எழுதியிருக்கக்கூடும். ஆனால் தேவன் எதை விரும்புகின்றார் என்றால் தாம் கொடுத்த வார்த்தைகளே போதுமானது என்பதையே. தேவ மனிதன் அவைகளில் தேறியவனாக இருக்க வேண்டும். அவைகளில் ஒன்றையும் கூட்டக்கூடாது. எதிராளியான சாத்தான் இதைக் கூட்டி எழுதினால் தான் பொருள் விளங்கும் என வஞ்சகமாக எழுத வைத்துவிட்டான். இது எப்படி உள்ளது என்றால் தேவன் ஏதோ தவறு செய்து விட்டதுபோலவும், சர்வ வல்லரின் கருத்தை எழுதுகின்றவன் திருத்துவதுபோலவும் இருக்கிறது. 7-ஆம் நூற்றாண்டிலேயே இவ்வாறு எழுதிய வேத பாரகன்

யாராயிருந்தாலும் அவன் தேவனுக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும். இப்படித் தவறாகக்கூட்டி எழுதியதால் சத்தியத்தையறிய வாஞ்சையாய் இருக்கிறவர்களை திசை திருப்பிய பழிக்கெல்லாம் பதில் சொல்லியே தீரவேண்டும்.

இந்தத் தப்பாகக் கூட்டி எழுதப்பட்ட வசனம் 1 யோவான் 5:7 ஆகும். "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள், பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று." இந்த வசனத்தை எடுத்துவிட்டால் பிறவேத கருத்துக்களில் வேற்றுமை கிடையாது. இருப்பினும் பல நூற்றாண்டுகளாய் இது இருந்து வந்ததால் பொருளற்ற அந்த வசனத்தால் குழப்பங்களே மிஞ்சியது. உதாரணமாக, இந்தத் திருத்துவ வேத வசனத்தை ஏற்றுக் கொண்டால், பிதாவாகிய தேவனும் குமாரனும் பரிசுத்தாவியும் மூவரும் ஒன்றாக பரலோகத்தில் ஒரே சாட்சி தருகின்றனர். அந்தச் சாட்சி இயேசுவே கிறிஸ்து என்பது. பரலோகத்திலே இயேசுவை கிறிஸ்து என்று அறியாதவர்கள் யார்? இந்தக் கேள்வியே அபத்தனமானது. பிதாவுக்கோ, குமாரனுக்கோ, பரிசுத்தாவிக்கோ பரலோகத்தில் யாரும் சாட்சியிட வேண்டிய அவசியமில்லை. எதிராளியான சாத்தான் வஞ்சகமாக வசனத்தை புகுத்த சரியான இடமாக அது இருந்தது. அவனுக்கு ஊழியம் செய்ய விரும்புகிற ஒரு ஊழியனையும் கண்டுகொண்டான்.

புதிய திருப்புதல்களில் இந்த வசனம் அடியோடு நீக்கப்பட்டுவிட்டது. மட்டுமல்லாது புதிய நவீன மொழிபெயர்ப்புகளான எம்பாடிக் டையக்லாட், யங்ஸ் வேதாகம மொழிபெயர்ப்பு, அமெரிக்கன் பைபிள் யூனியன் மொழிபெயர்ப்பு, இம்ப்ரூவ்டு மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் நீக்கப்பட்டு விட்டது.

"5-ம் நூற்றாண்டுக்கு முன்னரே எழுதப்பட்ட கிரேக்க மூலங்களில் இந்த வசனம் அடியோடு காணப்படவில்லை. ஆரம்பகால கிரேக்க மூலங்களிலே லாகிரேக்க சபைகளிலோ அல்லது ஆரம்ப கால பாதிரிமார்கள் எழுதிய லத்தீன் மூலங்களிலோ இந்த வசனம் கிடையாது. அக்காலத்தில் இதுபற்றிய பாடங்கள் பேசப்படும்போது கூட அதற்குரிய வேத சான்றுகள் அப்போது இருக்கவில்லை. எனவே இது தப்பாகக் கூட்டி எழுதப்பட்டது என்பது நிரூபணமாகிறது." இவ்வாறு இம்ப்ரூவ்டு மொழிபெயர்ப்பு கூறுகிறது.

"லாங்" என்பவர் எழுதிய வேதாகம விளக்கவுரையில், இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: *"எல்லா கிரேக்க மொழி மூலங்களிலும் சில இடங்களில் முற்றுப் பெறாமல் விடப்பட்டுள்ளன. சீனாய் மூலத்திலும் (மிகப் பழைய கிரேக்க மூலம்) அவ்வாறே பல இடங்களில் முற்றுப் பெறாமல் விடப்பட்டுள்ளன. எல்லா லத்தீன் மூலங்களிலும் 8-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மூலங்களிலும் கைப்பிரதிகளில் மூன்று வித்தியாசமான மூலப்பிரதிகள் இருக்கின்றன. திருத்துவக் கொள்கை, வேறுபாடுகளைப் பற்றி பிற்காலத்தில்தான் பிரச்சனை எழுந்ததே தவிர அக்காலத்தில் லத்தீன் பாதிரியார்களில் ஒருவர் கூட இந்த திருத்துவத்தைப் பற்றி பேசவேயில்லை."*

ஹட்சனின் கிரேக்க - ஆங்கில வேதாகம ஒத்துவாக்கிய அகராதி சொல்லுகிறதாவது:-

*"15-ஆம் நூற்றாண்டு அல்லது 16ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட கிரேக்க மூலப்பிரதிகளில் இந்த சொற்கள் இடம் பெறவில்லை."*

திறமையான வேத விற்பன்னர்கள் என அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்டவர்கள் அவற்றை தப்பாகக் கூட்டி சேர்க்கப்பட்டதாக சாட்சி பகர்கின்றனர் **லி**சர் ஐசக் நியூட்டன், பென்சன், கிளார்க், ஹாரன், கிரீஸ்பக், டிஸ்சென்டார்ப், டிரேகல்லஸ், லாக்மேன், ஆல்போர்டு. ஆல்போர்டின் கூற்றுப்படி :

*"பரிசுத்த வேதாகமத்தைத் திறனாய்வு செய்யும்போது எந்த ஒரு உள்நோக்கத்தையும், ஒரு பிரிவு சார்ந்த விசுவாசத்தையும் உடையவராயிராமல், விருப்பு வெறுப்பின்றி நடுநிலைமையில் இருந்தாக வேண்டும். அவைகள் உண்மை என்பதற்கு கடுகளவும் நியாயமில்லை."*

டாக்டர். கான் ஸ்ட்டன்டைன் டிஸ்சென்டார்ப் இவ்வாறு சொல்லுகிறார் :

*"தொடர்ந்து வேதாகமத்தில் தப்பாகக் கூட்டி எழுதப்பட்டவைகள் அச்சிடப்பட்டு வந்தால் அது பக்தியையல்லாமல் அவ பக்தியையே உருவாக்கும்."*

பேராசிரியர் T.B. வால்சே இவ்வாறு வினவுகிறார்:

*"சத்தியமும், கபடற்ற தன்மையும் நம்மிடமிருக்குமானால், இந்த தவறான வாக்கியங்கள் ஆங்கில வேதாகமத்தில் இடம் பெறலாமா? தன்னுடைய ஜெர்மானிய மொழி பெயர்ப்பில் லுத்தர் விளக்காமல் விட்டுவிட்ட வாக்கியங்களை, அவர் இறந்து 50 ஆண்டுகளான பின்பு இடைச்செருகலாக ஏதேனும் சேர்க்கலாமா?"*

இந்தப் பகுதியைக் குறித்து டாக்டர் ஆடம் கிளார்க், கூறுகிறாதவது: *"இந்த வசனம் சத்தியமென்று ஏற்றுக் கொள்வதற்கில்லை.*

அச்சுப்பொறி கண்டுபிடிப்பதற்கு முன்பிருந்த எந்த மூலப் பிரதிகளிலும் இந்த வாசகம் காணப்படவில்லை. "டுபுளின்" என்ற இடத்திலுள்ள திருத்துவக் கல்லூரியில் இருந்த மூலப்பிரதி மான்போர்ட்டீ" என்ற மூலப்பிரதியைத் தவிர மற்ற எந்தப் பிரதியிலும் இந்த வாசகம் காணப்படவில்லை. மேலும் 112 மூலப்பிரதிகளிலும் இந்த வாக்கியம் காணப்படவில்லை. சிரியா, அரேபிய, எத்தியோப்பிய, காப்படிக், சகாடிக், ஆர்மினிய, சிலாவோனிய போன்ற மூலப்பிரதிகளில் காணப்படவில்லை. சுருங்கக்கூறின் "வல்கேட்" என்ற மூலத்தைத் தவிர மற்ற எல்லா புராதன மூலத்திலும் இது இல்லை. பழைய மூலத்திலும் சரியான பிரதிகளிலும் கூட இந்த வாக்கியம் காணப்படவில்லை. பூர்வீக கிரேக்க பாதிரிமார்கள் எழுதி வைத்த மூலங்களிலும், இலத்தீன் பாதிரிமார்கள் எழுதி வைத்த மூலங்களிலும் இந்த வசனம் காணப்படவில்லை."

மெதடீஸ்ட் சபையை ஸ்தாபித்த ஜான் வெஸ்லீ, திருத்துவக் கொள்கையை ஆதரித்தவர் ஆவார். அவரே கூட தன் பிரசங்கத்தில் செர்வதூஸ் என்பவர் பேசிய வார்த்தையில் இருந்து மேற்கோளாக காண்பித்ததாவது: "திருத்தவம்," "ஆள்தத்துவம்" என்ற சொற்றொடர்கள் வேதாகமத்தில் இல்லாததால் அவற்றை பயன்படுத்த தயங்குகிறேன் என்றார்." மேலும் அவர் கூறுகிறதாவது, "நான் நேரடி வார்த்தைகளையே வற்புறுத்துவேன். அவைகள் விளக்கப்படாமல் வேதத்தில் இருக்கிறது." அவர் திருத்துவக் கொள்கைக்காக மிகச் சிரமப்பட்டு வாதாடினார். ஏனெனில் இந்த வசனத்தை அப்போதிருந்த பூர்வீக பிரதிகள் மூலம் சரியானது என நம்பினார். உதாரணமாக 1611லில் கிங் ஜேம்ஸ் வர்சனை மொழிபெயர்க்கும் போது எட்டு மூலப்பிரதிகள் கிடைத்திருந்தன. அவைகளெல்லாம் 10-ஆம் நூற்றாண்டிற்கு முந்தியவைகளல்ல. இப்போது 700 மூலப்பிரதிகள் கைவசம் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் சில, அதாவது வத்திகான் 1209 மூலம், சீனாய் மூலம் ஆகியவை கி.பி.350 ஆம் ஆண்டைச் சார்ந்தவை.

## பிதா குமாரனைக் குறித்தும் அவர்களது ஒற்றுமையைக் குறித்தும் வேதாகமம் போதிப்பவை

திருத்துவ விசுவாசத்திலுள்ள குழறுபடிகள் என்ன? வேற்றுமைகள் என்ன? என்பதையும், மெய்த்தத்துவமாகிய யேகோவா என்ற பிதாவையும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்ற பரலோக குமாரனையும், பரிசுத்தாவியையும் குழப்பமின்றி புரிந்து கொள்ள வேண்டும். பேர்ச்சபையின் விசுவாசப் பிரமாணம்

கூறுகிறபடி பிதா, குமாரன், பரிசுத்தாவி ஆகிய மூவரும் ஒன்றாய் இருக்கின்றனர் என்பதும் அவர்கள் சம மகிமை, சம வல்லமையுடையவர்கள் என்பதுமே திருத்துவக் கொள்கை. மாபெரும் தெய்வீக மீட்பின் திட்டத்தில் பிதா, குமாரன், பரிசுத்தாவியின் செயல்பாட்டில் ஒருமைப்பாடு எவ்வாறு இருக்கிறது என்று வேதாகமத்தில் காண்பிக்கப் பட்டிருக்கிறது. பிதாவும், குமாரனும் ஒருவரே என்பது முரணான கருத்து. பிதாவானவர் குமாரனை மகிமைப்படுத்தினார் என்று வேதாகமத்தில் கூறப்பட்டதால், மகிமைப்படுத்தியவர் வேறு, மகிமைப்படுத்தப்பட்டவர் வேறு என்பது புலனாகிறது. பிதாவானவர் குமாரனை எல்லாவற்றுக்கும் மேலாக உன்னத நிலைக்கு உயர்த்தி, எல்லா நாமத்திலும் மேலான நாமத்தைத் தந்தருளினார் என்று சொல்லும்போது, பிதாவுக்கு அடுத்தபடியாக உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டார் என்பதே சரியானது. வானத்திலும் பூமியிலும் சகல பரிபாலனத்தையும் தமக்கு பிரதிநிதியாக இருந்து ஆளும்படியாக தேவன் குமாரனை பணித்திருக்கிறார். வேதாகமத்திலுள்ள அநேக வசனங்கள் பிதாவே குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார் என்று பறைசாற்றுகிறது. பிதாவினால் தனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற சந்தோஷத்தின் நிமித்தம், அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்தார்; கிறிஸ்துதான் பரலோகப் பிதாவின் முதலாவது ஒரே பேறான குமாரன்; பிதா தன்னிடம் கொடுத்த பணிகளை செய்து முடித்த பின்பு, ஆயிர வருட அரசாட்சியின் முடிவில், பிதாவிடம் பூமியின் இராஜ்யங்களை ஒப்படைத்து அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். “தான் பிதாவிடமிருந்து வந்ததாகவும், தன்னுடைய சுய சித்தத்தின் படியல்லாமல், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே வந்தேன்,” என்றும் தான் உபயோகித்த வல்லமை தன்னுடையதல்ல, பிதாவினுடையது என்றும் அறிக்கையிட்டார். “என்னிலும் என்பிதா பெரியவராய் இருக்கிறார்” என்றும் அவர் திட்டமாய் கூறினார். தீர்க்க தரிசனங்களின் கூற்றுப்படி தான் உடன்படிக்கையின் தூதன் என்று அழைக்கப்பட்டாரேயல்லாமல் உன்படிக்கையின் நாயகன் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளவில்லை. புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் பிரகடனப்படுத்தியது போல, அவர் புதிய

உடன்படிக்கையின் மத்தியஸ்தர். "தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனாகிய கிறிஸ்து அவரே." பலவிதமான வேதாகம வசனங்கள் பரலோகத் தந்தையையும் அவருடைய குமாரனையும் இருவரும் ஒருவரே அல்ல என்பதையும், அவர்களுடைய வல்லமையிலும் மகிமையிலும் வேறுபட்ட நிலைமைகளையும், இசைவாகவும் உறுதிப்படவும் தெளிவாக்குகிறது. திட்டம், சித்தம், நோக்கம் ஆகிய மூன்றிலும் இவ்விருவரும் ஆழமான ஐக்கியமும் ஒத்த நோக்கமுடையவர்கள் என்பது தெளிவு. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே குமாரன் தன்னுடைய சுய சித்தத்தை தியாகம் செய்ததால், குமாரன் மாபெரும் தேவ திட்டத்தை செயல்படுத்த தகுதியுடையவரானார். பிதாவின் ஆவியால் நிறைந்து ஒவ்வொரு சிறிய செயல்பாட்டிலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். (யோவா **6:38-39**)

எல்லாவற்றிற்கும் மேலாக பிதா, குமாரன் என்ற இரு சொற்களே இருவருக்குமுள்ள வேற்றுமையை வெளிப்படுத்துகிறது. ஏனெனில் பிதா என்றால் ஜீவனைக் கொடுப்பவர், குமாரன் என்றால் ஜீவனைப் பெற்றவர் என்பது புலனாகிறது. பிதா யாரிடமிருந்தும் ஜீவனைப் பெறவில்லை. ஏனெனில் அவரே உயிரினங்களுக்கெல்லாம் ஜீவ ஊற்றும், ஆதாரமும் ஆனவர். இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமல்லாமல் அவர் மூலமாக ஜீவன் பெறுகின்ற அனைத்துலக மக்களுக்கும் ஜீவ ஊற்றானவர். "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது, அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." இந்த பாடத்தின் தலைப்பில் உள்ள இவ்வசனம் வேதாகமத்தில் மற்றெல்லா வசனத்தோடும் இசைவாக இருக்கிறது என வெளியரங்கமாக விளக்கிக் காண்பிக்கிறது. இதில் அப்போஸ்தலர், பிதாவும் குமாரனும் வல்லமையிலும் ஆள்தத்துவத்திலும் ஒன்றல்ல என்பதை தெளிவாக்குகிறார்.

இங்கே சொல்லப்பட்ட கருத்தை கவனித்து வாசிக்கின்ற எவரும் பிதாவாகிய தேவன் வேறு, குமாரனாகிய கிறிஸ்து வேறு

என்பதை உறுதிபடவும் இசைவாகவும் அறிந்து தெளிவடைவர். திருத்துவக் கொள்கை என்பது காரண காரியத்திற்கு அப்பாற்பட்டது. விளக்க முடியாதது என்பதை அனைவரும் ஒத்துக் கொள்வர். இதை திருத்துவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்கள் கூட ஏற்றுக் கொள்ளுவர். விளங்கமுடியாத இந்த திருத்துவக் கொள்ளையை விளக்குவதற்கு முயற்சி செய்வதற்கு பதிலாக, இது விளக்க முடியாத "இரகசியம்" என்று கூறுகின்றனர். இந்த விநோதமான கொள்கையாகிய மூன்று கடவுளும் ஒருவரே, ஒருவரே மூன்று ஆட்கள் என்பதற்கு எந்த வேத ஆதாரமும் கிடையாது. இதனை மறுக்கிற வேத வசனங்கள் ஆதியாகமம் துவங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை ஏராளமாக உள்ளன. இந்த வசனங்கள் திருத்துவக் கொள்கைக்கு முரணானது எனவும் காரண காரியத்திற்குப் புறம்பானது எனவும் நேரடியாகவும், மறைமுகமாகவும் சாட்சி பகர்கின்றன. இது கிறிஸ்தவர்களுக்குள்ளேயும், புராட்டடஸ்டன்டு மத பிரிவினருக்குள்ளேயும் காணப்படுகின்ற சிக்கலான குழப்பமான பகுத்தறிவுக்கு முரணான கொள்கையாகும். வேதாகமத்தில் நம்பிக்கை வைத்திருக்கின்ற புராட்டடஸ்டன்டு பிரிவினர் வேதத்தில் சொல்லப்படாத இந்த கருத்தை ஏன் விசுவாசிக்கின்றனர் என்று கேட்கக்கூடும். இப்படிப்பட்ட தவறான கருத்தை, எதிராளியான சாத்தான் போப்பு மார்க்கத்தின் மூலமாக, தேவனுடைய திட்டத்தையும், குணாதிசயத்தையும், வசனத்தையும் இருளடையச் செய்ய புகுத்தினான் என்பதே நமது பதில். "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்." (I கொரி4:4). தெளிந்த தூய சத்தியத்திற்குள் வரமுடியாதபடி முழு உலகையும் மூட நம்பிக்கைக்குள், இருண்ட திரைகளுக்குள், தூய சத்தியத்தைக் காணயியலாத நிலைக்குக் கொண்டு சென்று கெட்டுப் போகும் ஆலோசனைகளையும், போ-யான வேத சாஸ்திரங்களையும் சாத்தான் பரப்பிவிட்டான்.

கிறிஸ்துவின் மகிமையான சத்தியத்தின் ஒளியை சாத்தான் எவ்வாறு தடை செய்ய முடியும்? கிறிஸ்துவை விட்டு வழிவிலகச் செய்வதே சாத்தானின் வேலையல்லவா? சத்தியத்தையும்

வேதாகமத்தையும் புரட்டி அது காரண காரியத்திற்கு ஒத்து வராதென்றும், வசனங்கள் ஒன்றிற்கொன்று முரணானது என்றும் கூறி, தெய்வீக திட்டத்திலும் வார்த்தையிலும் உள்ள ஒருமைப்பாட்டை சரியாய் புரிந்து கொள்ள முடியாதபடியும், சத்தியத்தின் அழகைக் காண முடியாதபடியும் மனுமக்களை குழப்புவதே சாத்தானின் நோக்கம். சாத்தானின் அபத்தமான சிந்தனையின்படி மக்கள் மெய்த் தேவனை சரிவர புரிந்து கொள்ளாதபடி என்னென்ன போலியான போதகங்கள் உண்டோ அவைகளையெல்லாம் செய்து வருகிறான். அதன்படி, காரண காரியமின்றி மனிதனுடைய போதனையின்படி சரிவிகித பொய்க் கலப்பால் வீணான விசுவாசத்தை ஏற்படுத்திவிட்டான். மெய்யான விசுவாசத்திற்கு எதிராக போலியான விசுவாசப் பிரமாணங்களை ஏற்படுத்திவிட்டான்.

காரண காரியங்களை பகுத்தறிகின்ற பகுத்தறிவுவாதிகளை திருச்சபைகளிலிருந்து விலக்கி, மூடநம்பிக்கைகளை ஏற்றுக் கொள்கின்ற மதவாதிகளை மட்டும் பல நூற்றாண்டுகளாக விரோதியான சாத்தான் தந்திரமாக சபைகளில் சேர்த்துக் கொள்ளும் பணியை செய்து வருகிறான். சத்தியம் போல் தோன்றுகின்ற அசத்தியத்தை, நேர் எதிர்மாறான தப்பறைகளை ஸ்தாபித்ததன் மூலம் சில விலையேறப்பெற்ற சத்திய உண்மைகளை சாத்தான் மூடி மறைத்துவிட்டான். இதன் காரணமாக கர்த்தருடைய ஜனங்கள் சத்தியத்திலே முன்னேற தடைகள் ஏற்பட்டன. இருண்ட காலங்களில் மக்கள் தங்களை அடிமையாக்குகின்ற விசுவாசப் பிரமாணங்களாகிய அறியாமைத் திரையை விலக்கிவிட்டு தற்காலங்களில் வேதாகமத்திலுள்ள சரியான விசுவாசத்தைத் தாங்களாகவே ஆராயும் பகுத்தறிவைத் தந்த தேவனுக்கு நன்றி செலுத்துவோமாக! ஆனால் உலகப் பிரகாரமாக ஞானிகளுக்கு இந்த ஞானம் மிகத் தாமதமாகக் கிடைக்கிறது. சிலர் விசவாசப் பிரமாணத்தையும் வேதாகமத்தையும் நியாயப்படுத்தி ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்தியுள்ளனர். சிலர் விசுவாசப் பிரமாணத்தைத் தள்ளுபடி செய்வதால், வேதாகமத்தையும் தள்ளுபடி செய்துள்ளனர். தேவ வார்த்தையிலிருந்து மெய்யான வெளிச்சத்தைக் காண முயற்சி செய்யாமல், மனித தத்துவங்களுக்கும் சுயநலக் கோட்பாடுகளுக்கும் சாய்ந்து போவதால், வேதாகமத்தைத் தங்கள்

சொந்த இஷ்டத்திற்குப் புரட்டுகின்றனர்.

ஆகவே வேதாகமத்தில் தவறு கண்டுபிடித்தல், பரிணாமம், கிறிஸ்துவ விஞ்ஞானம், பிரம்மஞானம், சத்தியவேதத்தை மறுக்கும் கோட்பாடுகள் ஆகியவை தற்காலத்தில் துரித முன்னேற்றமடைந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆதித்திருச்சபையின் விசுவாசப் பிரமாணங்களெல்லாம் சிதறுண்டு கைவிடப்பட்டன. வேதாகமத்தில் எந்தத் தவறுமில்லை, தங்களது விசுவாச பிரமாணத்தில்தான் கோளாறு என்று அறிந்தவர்கள் வெகு சிலரே. "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்தையும்," "பூர்வ பாதையையும் அவர்கள் தேடுகின்றனர்." எரே **6:16; யூதா 3.**

ஆரம்ப கால திருச்சபையின் போதகம் திருத்துவ போதகமல்ல. ஆயினும் இவ்வளவு காலமாக ஆதியில் இல்லாத திருத்துவம் எப்படி வேரூன்றியது? 3-ஆம் நூற்றாண்டுக் காலத்திலிருந்து தொடர்ந்து வந்த பழமையான கொள்கை இந்த திருத்துவக் கொள்கை அல்லவா? ஆம். திருத்துவக் கொள்கை முதன்முதலாக இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலத்தில் மெல்ல தலையெடுக்கத் துவங்கியது. முதலாம் நூற்றாண்டில் திருத்துவக்கொள்ளை சிறிதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் எழுதியவைகளில் இது தெளிவாகக் காணப்படுகிறது. திருத்துவக் கொள்கை இயற்கையிலேயே ஒரு போராட்டத்தில் ஆரம்பித்தது.

முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவையே பிரதான முக்கிய மையமாக போதித்தனர். ஆனாலும் அவர் தந்தை என்றோ, அவர் பெயர் யேகோவா என்றோ குறிப்பிடாமல், யேகோவாவின் குமாரர் என்றே குறிப்பிட்டனர். உலகை ஆசீர்வதிக்க அனுப்பப்பட்ட மேசியா என்றும், தேவ இராஜ்யத்தை ஸ்தாபிக்கவும், பாவம், ஒழுங்கீனம் ஆகியவற்றால் கெட்டுப் போன உலகை மீட்டு, ஒழுங்கை நிலைநாட்டவே அனுப்பப்பட்டார் என்றும் போதித்தனர். இயேசு கிறிஸ்துவை தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்று பலர் கூறியதைப் போன்றே, சிலர் அவர் வஞ்சகர் என்றும், சிலர் அவர் ஒரு நல்ல மனிதர் அவ்வளவுதான் என்றும், சிலர் அற்புதமாக பிறந்தவர் என்றும்,

ஆனால் அதற்கு முன்னர் அவர் இருந்ததில்லை என்றும் கூறினர். சிலர், அவர் இவ்வுலகத்திற்கு வருமுன்னே ஆவிக்குரிய ஜீவியாக வான மண்டலங்களில் வாசம் பண்ணினார் என்றும், மனுக்குலத்தை மீட்க மனிதனாக இந்த பூமிக்கு வந்தார் என்றும், அவர் மிக உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டார் என்றும், இதற்காக "பிதாவை கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்றும் கூறுகின்றனர். போரிடும் சுபாவமுடையவர்கள் தாங்கள் செய்த சிறிய செயல்களைக்கூட பெரிதாக கூறுவர் என்பது யாவரும் அறிந்ததே. எனவே நமது கர்த்தரைக் குறித்து பல்வேறு கருத்துக்களையுடையவர்களெல்லாம் தங்களின் சொந்தக் கருத்தைத் தாங்களாகவே உயர்வு நவிற்சியாகக் கூறியது தவறாயிற்று. இன்னும் சிலர் உயர்த்திக் கூறுவதில் உச்சநிலைக்குச் சென்று அவரே பிதாவானவர் என்று கூறிவிட்டனர். இதுவும் தவறே.

"மத அகராதி" என்ற புத்தகத்தின் தொகுப்பாசிரியரும் பதிப்பாளர்களில் ஒருவருமான டாக்டர். லைமென் ஏப்பட் என்பவர் திருத்துவக் கொள்கையையுடைவர் ஆவார். அந்த மத அகராதியின் 944-ஆம் பக்கத்தில் கூறப்படுகிறதாவது:

> "4-ஆம் நூற்றாண்டு வரையில் திருத்துவக் கொள்கை ஒரு கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பின்னர் படிப்படியாக ஒருத்துவக் கொள்கையோடு திருத்துவக் கொள்கையையும் சமரசமாக்க தீவிரமாக முயன்றனர். ஒருத்தவம், திருத்துவம் ஆகிய பிரச்சினைகளை சமரசம் செய்யும் முயற்சியின் விளைவாக திருத்துவக் கோட்பாடு தோன்றியது... திருத்துவக் கொள்கை என்பது இந்து மதத்தின் மிக முக்கிய கொள்கையாகும். இந்த திருத்துவக் கொள்கை பாரசீகம், எகிப்து, ரோமன், ஜப்பான், இந்தியா மற்றும் பூர்வீக கிரேக்க புராணங்களிலும் அறியப்படுகிறது."

பழைய காலத்தில் பல தெய்வ வழிபாடு பல தேசங்களில் இருந்தபோதிலும், இஸ்ரயேலில் மட்டுமே ஒரே தெய்வ வழிபாடு இருந்தது. கிரேக்க புராண இதிகாசங்களில் பல தெய்வங்களைப் பற்றி கூறப்படுகின்றது. அவைகள் எல்லாம் சம வல்லமையுடையது, இவ்வளவு கடவுள்கள் பிற தேசத்தில் காணப்படும்போது யூத கடவுள் ஒருவராகக் கூறப்பட்டது இகழ்ச்சியாக எண்ணப்பட்டது. யூதர்களுக்கு கடவுள் பஞ்சம் ஏற்பட்டதாக இகழ்ந்தனர். எனவே புற ஜாதியி-ருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள் திருத்துவக்

கொள்கையை எளிதில் ஏற்றுக் கொண்டனர். உலக முழுவதும் பல தெய்வ வழிபாடு கொண்டிருந்த போதிலும் இஸ்ரயேல் மட்டும் ஒரு தெய்வ வழிபாடு உடையதாக இருந்ததால், இரண்டுக்குமிடையே சமரசப்படுத்தும் முறையில் மூன்று தெய்வ வழிபாடு தோன்றியது. வேத சாஸ்திரத்தில் மூன்று கடவுள்கள் உண்டு எனவும், அம்மூவரும் ஒன்றே எனப் போதிப்பதும் போதனைகளிலேயே இது அரிய நுட்பமாக கருதப்பட்டது. இதனிமித்தம் யூதர்களி-ருந்து மதம்மாறிய அநேக விசுவாசிகள் புற ஜாதிகளின் திருத்துவக் கொள்கையை திருச்சபையில் ஏற்றுக் கொண்டனர். ஏற்கனவே புற ஜாதியினர் ஐசிஸ், டயானா போன்ற பெண் தேவதைகளை வணங்கி வந்ததால், அவர்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாறியபோது, அநேக புற ஜாதிகளைத் திருப்திப்படுத்துவதற்கு மரியாள் வழிபாட்டை புகுத்துவிட்டனர். இந்த போதனைகளை ஏற்றுக் கொண்டபோது திருச்சபையினர் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் அவருடைய ராஜ்யத்தைப் பற்றிய நம்பிக்கையும் கைவிட்டு உலகை மதமாற்றம் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்றுக் கொண்டனர். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம், போப்பு மார்க்கத்தின் மூலமாக உலகெங்கும் பரவி, உலகை ஆளும் என்றும், அந்த பூமிக்குரிய இராஜ்யத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதியாக போப் இந்த உலகை ஆட்சி செய்வார் என்றும் நம்பியிருந்தனர்.

ரோம கத்தோலிக்க திருச்சபையினரும், புரட்டஸ்டன்ட் திருச்சபையினரும் திருத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நேரடியாக நகரத்திற்குச் சென்றடைவார்கள் என்ற மூடநம்பிக்கையை மக்களிடையே புகுத்தியதால் மக்கள் திருத்துவக் கொள்கையை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கின்றனர். அதே சமயத்தில் திருத்துவத்தை புரிந்து கொள்ள முடியாது என்றும் ஒத்துக் கொண்டனர். ஆகையால் இதை யாரும் விசுவாசிக்கவில்லை. ஏனெனில் புரியாத கொள்கைகளை எவரும் விசுவாசிக்க முடியாது. ரோமன் கத்தோலிக்க திருச்சபையினரும், புரட்டஸ்டன்ட் திருச்சபையினரும் திருத்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் அவர்களின் ஜெபங்களில் பிதாவை நோக்கி (இயேசு கிறிஸ்துவையே பிதா என்று நினைத்து) ஜெபம் செய்து இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஜெபிக்கிறேன் என்று முடிக்கிறார்கள். இது

திருத்துவத்துக்கு ஏற்புடையதல்ல, அவர்கள் சொற்கள் பிதா வேறு, குமாரன் வேறு என்பதை குறிப்பதாக உள்ளது. கத்தோலிக்க திருச்சபையினர் திருத்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் ஜெபங்களில் ஆள்தத்துவ வேற்றுமையை நன்கு உணர்ந்துள்ளனர் என்பதை தெரிவிக்கின்றனர். எப்படியெனில், தங்கள் ஜெபங்களை கீழ்நிலையிலுள்ள பரிசுத்தவான்களிடம் பரிந்துரைத்து அவர்கள் மரியாளிடம் பரிந்துரைத்து, மரியாள் இயேசு கிறிஸ்துவிடம் பரிந்துரைத்து இயேசு கிறிஸ்து பிதாவிடம் பரிந்துரைத்து ஜெபங்களைக் கேட்கச் சொல்லுகின்றனர்.

இந்தத் தப்பறையான கொள்கையை இருண்ட காலங்களில் போப்பு மார்க்கத்தால் புராட்டஸ்டன்ட்களிடமும் பரவி பாரம்பரிய மூட நம்பிக்கைகளால் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்டது. இந்த கொள்கைக்கு வேத ஆதாரம் இல்லாதிருந்த போதிலும், புரிந்து கொள்ள முடியாத போதிலும் எல்லாரிடமும் பகிரங்கமாக பிரகடனப்படுப்பட்டுவிட்டது. திருத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களை வேதவிரோதி என்று ரோமன் கத்தோலிக்கர்கள் சொல்லுவதோடு மட்டுமல்லாமல், மற்றும் ஏனைய கிறிஸ்தவ மண்டலங்களின் கூட்டமைப்பும் அவ்வாறே தீர்ப்பிடுகிறது. சத்தியமே வல்லமையானது, இறுதி வெற்றி பெறப் போவது சத்தியமே. தேவனுடைய ஜனங்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் தேவனிடத்திலும், தேவனுடைய வார்த்தையிலும் அவர்களுடைய விசுவாசத்தையும், குணாதிசயத்தையும் சோதிப்பதற்கு தேவன் இதை அனுமதித்தார். எனவே சத்தியத்தை ஆராய்கிற ஒவ்வொருவரும் தனக்குத் தானே உண்மையுள்ளவர்களாக இருப்பதோடு, தேவ வார்த்தையை அடிப்படையாகக் கொண்டிருப்பது அவசியம். அந்தத் தேவ வார்த்தை நம்மை இரட்சிப்புக்கு ஏதுவாக ஞானத்தில் வழிநடத்தும். ஆகவே சத்தியமே நம்மை பரிசுத்தப் படுத்தும். மாறாக தப்பறையோ தீய விளைவுகளை பயக்கும்.

## பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும்

திருத்துவக் கொள்கைக்கு வேதத்தில் எங்கும் ஆதாரம் காணப்படவில்லை. திருத்துவக் கொள்கைக்கு ஆதாரமாக அவர்கள்

காட்டும் வசனங்களை ஆராய்வோம்.

இயேசுவை தேவன் என்று சொல்லப்பட்டிக்கிறது. ஆனால் தேவன் ஒருவரே. ஆகவே பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும் ஒருவராகத்தான் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். எனவே இதை வேத வசனத்தின் வெளிச்சத்தில் ஆராய்வோம். பழைய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பாளர்கள் அனைவருமே "தேவன்" என்று மொழிபெயர்த்திருக்கிற பல்வேறு சிறப்புப் பெயர்களை ஒரே மாதிரியாக மொழிபெயர்க்காததால் நாம் கஷ்டப்படுகிறோம். உதாரணமாக:

## பழைய ஏற்பாட்டில் தேவனுக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறப்புப் பெயர்கள்

1. வேதாகமத்தில் பிதாவாகிய தேவனுடைய பெயரை எட்டு இடங்களில் (ஆங்கில வேதாகமத்தில் நான்கே இடங்களில்) "யேகோவா" என்று குறிப்பிட்டுள்ளனர். அந்த எட்டு இடங்களிலும் பொதுவாக தேவன் என்றோ கர்த்தர் என்றோ குறிப்பிட முடியாது. (யாத். 6:2,3; சங். 83:17; ஏசா 12:2; 26:4; ஓசி 12:5; எரே 33:2 சங் 68:4) பொதுவாக தேவன் என்று 298 தடவை எழுதப்பட்டுள்ளது. கர்த்தர் என்பது 5,000 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. "ஆதோனாய்" என்கிற எபிரேயச் சொல் பொதுவாக கர்த்தர் என்ற பொருளைக் கொண்டாலும் ஒரே இடத்தில் தேவனைக் குறிப்பிடுவதாக உள்ளது.

3. "ஆதோன்" என்பதற்கு ஆண்டவர், எஜமான், கர்த்தர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4. "எலோஹிம்" என்கிற எபிரேயச் சொல் ஏலோவா, ஏலா, ஏல் என்றெல்லாம் சுமாராக 2500 முறை எழுதப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் பெரும்பாலும் "யேகோவா" தேவனையே குறிக்கும். சில இடங்களில் இதே சொல் தேவனையல்லாமல் மற்றவர்களையும் குறிப்பிடுவதாக நிரூபிக்கலாம். எனவே அந்த வசனத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் சிந்தித்துத் சீர்தூக்கிப் பார்த்து யாரைக் குறிக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம். இதை வேத வசனங்களைக் கொண்டு தெளிவுபடுத்த முயல்வோம்.

சந்தேகத்திற்கு இடமின்றி "எலோஹிம்" என்பது "வல்லமையுள்ளவர்" என்று பொருள்படும். இது சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவனுக்கும் பொருந்தும் என்பதையும் அறிக. இது எந்த தேவ தூதனுக்கும் கூட பொருந்தும். ஏனெனில் அவர்களும் வல்லமையுள்ளவர்களே. சர்வ வல்லவரின் பிரதிநிதிகளாக இவர்கள் செயல்படுவதால் இவர்களும் வல்லமையுள்ளவர்களே. மாபெரும் திறமைமிக்க பெருமைமிக்க பலரும், அவர்களுடைய செயல் பாடுகளினால் வல்லமையுள்ளவர்கள் என்னப்பட்டு எலோஹிம் என்று அழைக்கப்பட்டனர். ஆங்கிலத்தில் Sheep என்ற வார்த்தை ஒரு செம்மறி ஆட்டையோ (ஒருமை) அல்லது அதன் கூட்டத்தையோ (பன்மை) குறிப்பதுபோல, எலோஹிம் என்ற வார்த்தையும் ஒருவரையோ அல்லது பலரையோ குறிப்பதாக உள்ளது.

கீழ்க்காணும் உண்மைகளை பொதுவான மொழிபெயர்ப்பு வேதாகமத்திலிருந்து சான்றாக எடுத்துக் காட்டுவோம்.

இப்படி பல இடங்களில் ஆதோன் (கர்த்தர், ஆண்டவர்), ஆதோனாய் (எனது கர்த்தர்) தேவன் (எலோஹிம்) என்று வந்தாலும், பிதாவாகிய தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் பொதுவான சொல்லாக இருந்த போதிலும், "யேகோவா" என்ற சொல் பிதாவையே குறிக்கும். இயேசுவைக் குறிக்காது.

## எலோஹிம் (வல்லமையுள்ளவர்) என்பது "தேவதூதர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது

"நீர் (யேகோவா) அவனை தேவ தூதரிலும் (எலோஹிம்) சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்." (சங். 8:5)

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அப்போஸ்தலர் பவுல் எலோஹிம் என்ற வார்த்தைக்கு, சரியான கிரேக்க மொழி பெயர்ப்பில் "தேவதூதர்" (ஏஞ்சலோஸ்) என்று குறிப்பிட்டுள்ளார். நமது கர்த்தர் தன்னை எவ்வளவாக தாழ்த்தினார் என்று அவர் கூறுகிற இடத்திலே "தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு" என்று குறிப்பிடுகிறார்.

## எலோஹிம் என்ற பதம் "தேவர்கள்" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது

*புற ஜாதியாரின் போலியான தேவர்களைக் குறிப்பிடும் இடத்திலே "எலோஹிம்" என்ற சொல் 196 தடவை எடுத்தாளப்பட்டுள்ளது. இந்த தேவர்களும் வல்லமையானவர்களாக இருந்து தங்களை பக்தியோடு வழிபட்டவர்களுக்கு பல சலுகைகளை கொடுத்துள்ளதால் அவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.*

## யேகோவா (சர்வ வல்லமையுள்ளவர்) வல்லமையுள்ள மற்ற தேவர்களுடன் (எலோஹிம்) ஒப்பிடப்படுதல்

*"கர்த்தாவே (யேகோவா) என் ஜெபத்திற்கு செவி கொடுத்து என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்... ஆண்டவரே தேவர்களுக்குள்ளே (எலோஹிம்) உமக்கு நிகருமில்லை; உம்முடைய கிரியைகளுக்கு ஒப்புமில்லை." சங். 86:6-8.*

*"கர்த்தரே (யேகோவா) மகாதேவனும் (யேல்) எல்லா தேவர்களுக்கும் (எலோஹிம்) மகாராஜனுமாய் இருக்கிறார்." - சங். 95:3*

*சங்கீதம் 50:1-ல் "வல்லமையுள்ள தேவனாகிய (சொல்லர்த்தத்தின்படி தேவர்களுக்கெல்லாம் தேவன் - யேல் எலோஹிம் - வல்லமையுள்ளவர்களில் வல்லவர்) கர்த்தர் (யேகோவா) வசனித்து....."*

*சங்கீதம் 29:1-2-ல் "பலவான்களின் (யேல் - தேவர்கள்) புத்திரரே, கர்த்தருக்கு (யேகோவாவுக்கு) மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; யேகோவாவுக்கே அதைச் செலுத்துங்கள்; யேகோவாவுடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே யேகோவாவைத் தொழுது கொள்ளுங்கள்."*

*ஆதி 17:1-ல் "கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வ வல்லமையுள்ள தேவன் (யேல்). யாத் 15:11லில் "கர்த்தாவே, தேவர்களில் (யேல் - வல்லமையுள்ளவர்கள்) உமக்கு ஒப்பானவர் யார்?"*

*ஆதி 14:23லில் "வானத்தையும், பூமியையும் உடையவராகிய*

*உன்னதமான தேவனாகிய (யேல்) யேகோவாவுக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்."*

*சங். 96:4-ல் "யேகோவா, பெரியவரும், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் (எலோஹிம் - வல்லமையுள்ளவர்கள்) பயப்படத் தக்கவர் அவரே."*

*இந்த உதாரணங்கள் போதுமானவைகளே. இன்னும் அதிகமான உதாரணங்கள் தேவைப்படுபவர்கள் வேதாகமத்தில் ஆராய்ந்து பார்த்துக் கொள்ளலாம்.*

## எலோஹிம் என்ற சொல் மனிதர்களையும் குறிக்கும்

*196 இடங்களில் தேவனைக் குறிக்கும் சொல்லான எலோஹிம் என்பதில் பாதியாவது வல்லமையுள்ள மனிதர், இராஜாக்கள், இளவரசர்கள், பிரபுக்கள் ஆகியோரைக் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. எலோஹிம் என்ற சொல் கர்த்தருடைய ஜனங்களையும் குறிக்கும் என்பதை இனி பார்ப்போம்.*

*ஆதியாகமம் 23:6 இல் ஆபிரகாம் எலோஹிம் என்று அழைக்கப்பட்டிருக்கிறார். எலோஹிம் என்பதற்கு வல்லமையுள்ளவர் என்று பொருள் கொண்டு பொதுவான மொழி பெயர்ப்பு வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "எங்களுக்குள்ளே நீர் மகா பிரபு (எலோஹிம்)."*

*யாத். 7:1 மோசே பார்வோனுக்குத் தேவனாக அழைக்கப்படுகிறார். "... உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன் (எலோஹிம்)."*

*யாத் 21:6 இஸ்ரயேலை நியாயம் தீர்க்கிறவர்களை எஜமான் (எலோஹிம்) என்று வேதம் கூறுகிறது. "அவன் எஜமான் அவனை நியாயாதிபதிகளிடத்தில் (எலோஹிம்) அழைத்துக் கொண்டு போய்..."*

*யாத் 22:8-9 "திருடன் அகப்படாதே போனால், அந்த வீட்டுக்காரன் தானே பிறனுடைய பொருளை அபகரித்தானோ, இல்லையோ என்று அறியும்படி நியாயாதிபதிகளிடத்தில் (எலோஹிம்) அவனைக் கொண்டு போக வேண்டும்... இரு திறத்தாருடைய வழக்கும் நியாயாதிபதிகளிடத்தில் (எலோஹிம்)*

*வரக்கடவது, நியாயாதிபதிகள் (எலோஹிம்) எவனைக் குற்றவாளி என்று தீர்க்கிறார்களோ, அவன் மற்றவனுக்கு இரட்டிப்பாகக் கொடுக்கக்கடவன்."*

*யாத். 22:28 - "நியாயாதிபதிகளைத் (ஆங்கிலத்தில் தேவர்கள் - எலோஹிம் என்று எழுதப்பட்டுள்ளது) தூஷியாமலும்..." இதைக் குறித்து அப்.பவுல் கூறியிருக்கிறார். (அப்.23:5)*

## பரிசுத்தவான்கள் எலோஹிம் என்று அழைக்கப்படுகின்றனர்

*சங். 82:6-7 "நீங்கள் தேவர்கள் (எலோஹிம்) என்றும் நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப் போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப் போல விழுந்து போவீர்கள்."* பரிசுத்தவான்கள் கூட கிறிஸ்துவைப் போல தியாக பலியாக மரிக்க வேண்டும். ஆதாம் தன் பாவத்தினால் மரித்தது போலன்று.

இதை இயேசு மேற்கோளாகக் காட்டுகிறார். "தேவ வசனத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தேவர்கள் என்றும், அவர்களுக்கு கேட்கின்ற செவியிருக்க வேண்டும் என்றும் இப்படிப்பட்ட வகுப்பாருக்கே இது பொருந்தும் என்றும் கூறுகிறார்.

*(சங்கீதம் 82 முழுவதும் தற்போது அவரது பிரசன்ன காலத்தில் கிறிஸ்தவ மண்டலத்தை மீட்டு நியாயம் தீர்க்க தேவனால் நியமிக்கப்பட்ட நமது ஆண்டவராகிய இயேசுவைக் குறிப்பிடுகிறது. "தேவ சபையில் (அரசியல், பொருளாதாரம், சமுதாயம், மதப்பிரபுக்கள் ஆகியோர் மத்தியில்) தேவன் (எலோஹிம் - கிறிஸ்து இப்போது உலகை நியாயந்தீர்க்க தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறார்) எழுந்தருளியிருக்கிறார்." அவர் இந்த பிரபுக்களை நியாயம் விசாரித்து நேர்மையான தீர்ப்பு வழங்குகிறவராக தேவனுடைய பிரதிநிதியாக இருக்கிறார். அவர்கள் "அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள். அந்தகாரத்தில் (அவர்களது கொள்கையின் பலனை இது குறிக்கிறது) நடக்கிறார்கள். தேசத்தின் (சமுதாய உலகம்) அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது." இதுவே அவரது தீர்மானம். தற்கால ஒழுங்குகளை ஒட்டுப்போட்டு சரிபண்ண முயற்சிப்பது பயனற்றது. அவைகள் எல்லாம் கலைக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாக புதிய வானமும், புதிய பூமியும் - புதிய ஒழுங்கும் ஏற்படுத்தப்படும். வசனம் 6, 7. அவரிடம் விசுவாசமுள்ள "சிறு மந்தையை" குறிப்பிடுவதாயிருக்கிறது.*

*அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படும்போது - தெரிந்து கொள்ளப்பட்ட திருச்சபையையார் அனைவரும் மரணத்தின் மூலம் திரைக்கப்பால் சென்றுவிட்ட பிறகு - கிறிஸ்து இவ்வாறு அழைக்கப்படுவார்: "தேவனே (எலோஹிம்) எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்; நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர்." அவர் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னதாக நியாயத்தீர்ப்பைத் துவங்குவதில்லை. அப்போது "யாதொரு ஜாதியரும் தோன்றியது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்." உலகத் தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் நிறைவேறித்தீரும் காலத்தில் பொறுமையானவர்களை தாழ்த்தி, தாழ்மையானவர்களை உயர்த்துவார். அப். 3:19-23)*

*"பிரியமானவர்களே, இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாக" என்னப்படுவதால் தெய்வ கிருபையால் அந்த "தெய்வ சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாவோம்" என்ற நம்பிக்கையைப் பெற்றிருக்கிறோம். யோவா. 10:34,35; I யோவா. 3:2; II பேது 1:4.*

## எலோஹிம் என்பது "மாபெரும்," "பலம் பொருந்திய" என்ற பொருளிலும் சொல்லப்பட்டுள்ளது

*எலோஹிம் என்ற பதம் மாபெரும், பலம் பொருந்திய என்ற பொருளில் உயிரற்ற பொருட்களையும் சம்பந்தப்படுத்தி கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, "மாபெரும் (எலோஹிம்) திகில்" என்று I சாமு. 14:15லும், "மகா (எலோஹிம்) போராட்டம்" என்று ஆதி. 30:8லும், "மகத்தான (யேல் - வல்லமையுள்ள) பர்வதம்" என்று சங். 36:6லும், "பராக்கிரமசாலிகளில் வல்லவர்களும் (யேல்)" என்று எசே. 32:21லும், "எனக்கு வல்லமை (யேல்) உண்டு" என்று ஆதி. 31:29லும் கூறப்பட்டுள்ளது.*

## புதிய ஏற்பாட்டில் "தேவன்," "கர்த்தர்" என்ற வார்த்தைகள்

*புதிய ஏற்பாட்டில் எளிமையாய் வெகுசில சொற்களே குறிப்பிடப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டில் கர்த்தர் என்றும் தேவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதால் எது பிதாவைக் குறிக்கும் எது குமாரனைக் குறிக்கும் என்று அடையாளம் காண முடியாதபடி உள்ளது. இதைக் கருத்தாய் வாசிப்பவர்களே, எந்த வார்த்தை யாரைக்*

குறிக்கும் என்று நிதானித்துக் கொள்ள முடியும். வாக்கிய அமைப்பைப் பொருத்தும் சில இடங்களில் "தியோஸ்" (Theos) என்று இரண்டு இடங்களில் வரும் வாக்கியத்தில் ஒன்றில் கிரேக்க மொழி இலக்கணப் பண்புச்சொல் சேர்ந்து வருகிறது. உதாரணமாக யோவான். 1:1ல் "அந்த வார்த்தை தேவனிடத்தில் (ho theos) இருந்தது, அந்த வார்த்தை ஒரு தேவனாயிருந்தது (Theos)." மிகவும் ஜாக்கிரதையான மாணாக்கன் அப்போஸ்தலரின் எண்ணத்தை அறிந்து கொள்வதில் கஷ்டப்படுவதில்லை. உண்மையிலேயே மொழி இவ்வளவு தெளிவாக இருந்தும் நாம் இதுவரை நீண்ட காலமாக நிதானிக்காமல் விட்டுவிட்டது ஆச்சரியமாயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில், பரலோகப் பிதாவையோ அல்லது பரலோகத்திலிருந்து வந்த நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையோ அல்லது போ-க் கடவுள்களையோ குறிக்க ஒரே கிரேக்கப்பதம் "தியோஸ்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு விதிவிலக்காக "கூரியோஸ்" என்ற பதம் ஒரு இடத்தில் தேவன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் "கர்த்தர்," "எஜமான்" என்று சரியாக மொழி பெயர்க்காமல் "தேவன்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அப்.19:20-ல் கூரியோஸ் என்ற சொல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறிப்பதாகவும், அப்.17:18லில் டெய்மோனியன் என்ற சொல் அந்நிய தேவதைகளைக் (பிசாசுகளின் ஆவிகள்) குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப் பட்டுள்ளது.

கர்த்தர் (Lord) என்ற அடைமொழி யேகோவா தேவனைக் குறிப்பதற்கும், இயேசு கிறிஸ்துவை குறிப்பதற்கும், மனிதனைக் குறிப்பதற்கும், தூதர்களைக் குறிப்பதற்கும் கூரியோஸ் என்ற ஒரே கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கூரியோஸ் என்பது ஆண்டவர் அல்லது கர்த்தர் என்பதையே குறிக்கும். கூரியோஸ் என்ற பதம் அடிக்கடி எஜமான், ஆண்டவர் என்ற பொருளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. விதிவிலக்காக despotes என்ற பதம் ஐந்து இடங்களில் ஆண்டவர் என்பதைக் குறிப்பதாக வருகிறது. இதை தமக்குத்தாமே அதிகாரி (Autocrat) அல்லது ஆளும் உரிமை என (Sovereign) மொழி பெயர்த்திருந்தால் சரியாக இருக்கும். உதாரணமாக,

1. லூக்கா 2:29 - "ஆண்டவரே, (despotes) உமது

*வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்."*

*2. அப்.4:24,26 - "கர்த்தாவே* (despotes) *நீர் வானத்தையும், பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்... கர்த்தருக்கு* (Kurios) *விரோதமாகவும், அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் இராஜாக்கள் எழும்பி நின்று அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங் கூடினார்கள்."*

*3. II பேதுரு 2:1 - "...அவர்கள் கேட்டுக் கேதுவான வேதப் புரட்டுக்களைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை* (despotes) *மறுதலித்து தங்களுக்குத் தீவிரமாய் அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்."*

*4. யூதா 4 - "...ஒன்றான ஆண்டவராகிய தேவனையும்* (despotes) *நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுத-க்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்..."*

*5. வெளி 6:10 - "பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே,* (despotes) *தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத் தீர்ப்பு செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மகா சப்தமிட்டுக் கூப்பிட்டார்கள்."*

*"ரபூனி" என்ற மூலச் சொல் ஒருமுறை ஆண்டவரே என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மாற்கு 10:51*

*கூரியோனோ என்ற சொல் கர்த்தாதி கர்த்தர் என்று ஒருமுறை மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. I தீமோ 6:15*

## தேவத்துவம்

*புதிய ஏற்பாட்டில் தேவத்துவம்* (GODHEAD) *என்ற சொல்லுக்கு சரியான விளக்கமில்லை. எனினும் சரியான விளக்கமென்னவெனில், "அநேக சரீரங்களிலிருந்தாலும் தலை ஒன்றே," அதாவது நாமேல்லாரும் வெவ்வேறு அங்கமாயிருந்தாலும் நமக்கெல்லாருக்கும் தலை கிறிஸ்துவே என்பதாகும். தேவனே*

*கிறிஸ்துவின் மூலமாக நம்மை வழிநடத்துகிறார் என்பதாகும். உதாரணமாக,*

*1. ஓ தியோஸ் என்ற கிரேக்கச் சொல் ஆங்கிலத்தில்* Godhead *என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (அப்.17:29*) *"நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திர வேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் (ஓ தியோஸ்) ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது." புதிய ஏற்பாட்டில் இதே வார்த்தை "தெய்வீகம்" என்ற பொருளில் காணப்படுகிறது. II பேது 1:3-4*

*2. தீயோடஸ்* (Theiotes) *என்ற கிரேக்கச் சொல், ரோம 1:20ல் தேவத்துவம் அல்லது தெய்வீகம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. "... அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்." இது புதிய ஏற்பாட்டில் ஒருமுறை மட்டும் கூறப்பட்டுள்ளது.*

*3. கொலோசெயர் 2:9-ல் தீயோடஸ்* (Theotes) *என்ற சொல் தேவத்துவம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது தெய்வீகம் என்றே மொழிபெயர்க்கப்பட வேண்டும். "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." இது புதிய ஏற்பாட்டில் ஒரே முறை மட்டுமே வருகிறது.*

*மகிமையடைந்த கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாயிருக்கிறார். அவருடைய பரிபூரணம் - ஏராளமான ஞானம், கிருபை வல்லமை ஆகியவை திருச்சபையின் பணிகளை நிறைவேற்றும் திறமை மட்டுமன்றி, பிதாவின் பிரதிநிதியாக தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்கத் தேவையான எல்லா தகுதியும் அவருக்குள் வாசமாயிருந்தது."*

**"உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக"**

*- மத் 4:10 -*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எந்த கண்டனமுமின்றி ஆராதனையை ஏற்றுக்கொள்வதால், அவரையே யேகோவா தேவன்*

*என்று சிலர் கருதுகின்றனர். மேலே சொன்ன நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையின்படி தேவாதி தேவனாகிய யேகோவாவைத் தவிர வேறு யார் ஆராதனையை ஏற்றுக் கொண்டாலும் தவறாகும் என்று தெரிகிறது. ஆனால் அப்படியல்ல என்று நாங்கள் கூறுகிறோம். வேதத்தை விளக்கும்போது ஒரு பாகத்தை மட்டும் பார்த்து விளக்கம் கொள்ளலாகாது. மற்ற வேத வசனங்களையும் ஒத்துப் பார்த்து சரியான பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும். "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்." "தேவர்களே, நீங்களெல்லாம் அவரைத் தொழுது கொள்ளுங்கள்," "தேவ தூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள்." (சங். 2:7; 97:7; எபி. 1:5-6) இவை கிறிஸ்துவைக் குறித்து பிதாவாகிய தேவனின் கட்டளை. இந்த வசனங்களின்படி, இயேசு கிறிஸ்துவுக்கும் ஆராதனை செய்ய வேண்டும் என்று தெரிகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் இதை அறிவார். கடந்த காலங்களில் யேகோவாவின் தூதர்களாக வந்த ஒவ்வொருவரும், யேகோவாவின் தூதர் என்ற மரியாதையின் நிமித்தம் வணங்கப் பட்டார்கள் என்பது இயேசு கிறிஸ்துவுக்குத் தெரியும். தான்தான் தூதர்களிலேயே பிரதான தூதர் என்றும், பிதாவாகிய தேவனின் "ஒரே பேறான குமாரன்" என்றும், "உடன்படிக்கையின் தூதன் என்றும், பிதாவே தன்னை பரிசுத்தப்படுத்தி உலகத்திற்கு அனுப்பினார் என்றும், யார் குமாரனைக் கனம் பண்ணுகிறார்களோ அவர்கள் பிதாவாகிய தேவனையும் கனம் பண்ணுகின்றனர் என்ற சத்தியத்தையும் இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார்.*

*"குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனாயிருக்கிறான்." யோவா.5:23; மல். 3:1) என்று வேதம் கூறுகிறது.*

*புதிய ஏற்பாட்டில் "ஆராதனை" என்ற பதத்திற்கு ப்ரோஸ்கினோ* (proskuneo) *என்பது கிரேக்க வார்த்தையாகும். அதற்கு கையை முத்தமிட்டு மரியாதை செய்வது என்று பொருளாகும். அதாவது நாய் தன் எஜமானின் கையை நக்குவது போலாகும். அது மரியாதையைக் குறிக்கும் செயல்பாடாகும்.*

*பழைய ஏற்பாட்டில் "ஆராதனை" என்று*

*மொழிபெயர்க்கப்பட்ட எபிரேயச்சொல்லுக்கு ( ஷா-கவ் shaw-kaw) தலைவணங்கி ஆராதித்தல் என்பது பொருளாகும். இதனுடைய முக்கியத்துவம் மரியாதை செலுத்துவதாகும். இந்தச் சொல் 170 முறை வருகிறது. இதில் பாதி மட்டுமே தேவனை ஆராதிப்பது பற்றி குறிப்பிடுகிறது. இந்தச் சொல் 74 முறை வணங்குதல், குனிதல், வந்தனம் செய்தல் என்ற அர்த்தத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக, “ஆபிரகாம்... அவர்களைக் கண்டவுடனே அவன் கூடார வாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டோடி தரை மட்டும் குனிந்து ஆண்டவரே (Adonai)... கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரட்டும். உங்கள் கால்களைக் கழுவி மரத்தடியில் சாய்ந்து கொண்டிருங்கள்.” (ஆதி. 18:2-4) அவர்களை “மூன்று புருஷர்” என்று நினைத்துதான் இந்த செயலுடன் இந்த வார்த்தைகளை பேசினான்.*

*லோத் இதேபோன்று தன்னிடம் வந்த இரண்டு தூதர்களை தரை மட்டும் “குனிந்து (ஷா-கவ்)” வணங்கினான். ஆதி 19:1*

*ஆபிரகாமும் ஏத்தின் புத்திரர்களுக்கு “வந்தனம் (ஷா-கவ்)” செய்தான். ஆதி. 23:7,12*

*ஈசாக் யாக்கோபை ஆசீர்வதிக்கும்போது “ஜனங்கள் உன்னை சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும் (ஷா-கவ்), ....உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள் (ஷா-கவ்)” என்றான். ஆதி. 27:29*

*தாவீது சவுலுக்கு “தரைமட்டும் குனிந்து வணங்கினான் (ஷா-கவ்).” I சாமு. 24:8*

*“அபிகாயில்... தாவீதுக்கு நேராகத் தரையில் முகங்குப்புற விழுந்து பணிந்தாள் (ஷா-கவ்).” அதேபோல தாவீதின் ஊழியக் காரரிடம் “தரை மட்டும் முகங்குனிந்து (ஷா-கவ்)” தன்னை தாவீதுக்கு அடியாள் என்று கூறினாள். I சாமு 25:23,41*

*“தெக்கோவா ஊராளாகிய ஒரு ஸ்திரீ இராஜாவோடு பேசப் போய் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி (ஷா-கவ்) இராஜாவே இரட்சியும் என்றாள்.” யோவாபும் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி (ஷா-கவ்) இராஜாவை வாழ்த்தினான்.” II சாமு 14:4, 22,23*

"மேவிபோசேத் தாவீதினிடத்தில் வந்தபோது முகங்குப்புற விழுந்து வணங்கினான் (ஷா-கவ்)." II சாமு 9:6

இங்கே கூறப்பட்டிருப்பவைகள் தேவன் இஸ்ரயேலர்களுக்குக் கொடுத்த முதலாம் கட்டளையாகிய "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம் … அவர்களை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" என்பதற்கு முரணாக உள்ளது என நினைக்ககூடாது. தேவனுடைய நாமத்தைக் கொண்டு தேவதூதர்கள் யூதர்களிடையே செய்திகளை கொண்டு வரும்போது, அவர்கள் தேவதூதர்களை வணங்கின அந்த மரியாதை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது கண்டனத்திற்குரியதன்று. ஆகவே முதலாம் கட்டளை நமக்கு எச்சரிப்பது என்னவெனில் சிலை வணக்கத்தையும், அந்நிய தேவர்களின் வணக்கத்தையும் நாம் நிச்சயமாகச் செய்யக்கூடாது என்பது தான். அப்படி செய்வோமாகில் தேவன் அதனைப் பொறுத்துக் கொள்ள மாட்டார். ஆகவே எந்தவொரு யூதனும் இயேசு "தேவனால் அனுப்பப்பட்டவர்" என்பதை உணர்ந்து அவரை வணங்கி அவரில் பயப்படுகிறவனாயிருந்தால், இயேசுவை "தேவனுடைய குமாரன்" என்று உணர்ந்து, அவரிடத்தில் மரியாதை செலுத்தினால் அது ஒரு மிக உன்னதமான பயபக்தியாகும்.

யூதர்கள் தெய்வ வணக்கத்திற்கு மிக உயரிய மரியாதை செலுத்தினர். மனித வணக்கத்தைச் சாதாரணமாகக் கொண்டிருந்தனர். எனவே இயேசு, தேவனுடைய குமாரன் என்று தன்னைக் கூறியபோது, அவர் தெய்வ தூஷணம் சொல்லுகிறவர் என்றும், விக்கிரக ஆராதனைக்காரர் என்றும் நினைத்து பரிசேயர்கள் அவரையும் அவருடைய சீடரையும் கல்லெறியத் துணிந்தனர். தேவ வணக்கத்தையும், மனித வணக்கத்தையும் தெளிவாக புரியாதவரை இந்தக் குழப்பங்கள் நீடித்துக் கொண்டிருக்கும். எந்த வார்த்தைகளால் தேவனைத் தொழுது கொள்ளுகிறோமோ அந்த வார்த்தைகளை மனிதனுக்குப் பயன்படுத்தலாகாது.

சிலர் இன்று இவ்வார்த்தைகளை போலி கிறிஸ்து, அந்தி கிறிஸ்து போன்ற மதப் பெரியார்களுக்குப் பயன்படுத்துகின்றனர். போப்புக்கு கொடுக்கும் மரியாதை, கனம் ஆகியவை தவறான வழிபாடாகும். ஏனெனில் போப்பு தன்னை "கிறிஸ்துவின் பிரதிநிதி"

*என்று கூறிக் கொள்கிறார். இதன் காரணமாகவே சாத்தான் இயேசுவை தன்னை வணங்கும்படி கூறியபோது இயேசு, அவனையும் பூமியில் அவனது அதிகாரத்தையும் அங்கீகரிக்க மறுத்துவிட்டார். யேகோவாவின் கட்டளைகளுக்கு எதிராக செயல்படுவதெல்லாம் தீய சக்தியாகும். சாத்தானுடைய ஆளுகையில் தீமையை தீமையென்று ஒதுக்காதபடி ஏற்றுக் கொண்டிருப்பது வழக்கமாகிவிட்டது. இது தவறானது ஆகும். தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பதில் சாத்தான் தேவனுக்கு விரோதியாயிருந்தான். இயேசு அவனைப்பார்த்து: நான் யேகோவா தேவனையும் அவரது தீர்க்க தரிசன கட்டளையாகிய "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாக" என்பதையும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். நீ அவரது விரோதியாக இருப்பதால், நான் உனக்கும் உனது முறைமைகளுக்கும் மரியாதை செலுத்தவோ அல்லது உன்னை பணிந்து கொள்ளவோ முடியாது என்றார்; எங்களது நோக்கமெல்லாம் முற்றிலுமாக வேறானது. உன்னிடத்தில் எனக்கு ஒன்றுமில்லை என்றார். மத். 4:10 யும் உபா.10:20, 21யும் ஒப்பிடுக.*

*இயேசு, யேகோவா தேவனுக்கு குமாரனாகவும் தாசனாகவும் இல்லாமல் அவருக்கு விரோதியாக தன்னை நிலை நிறுத்தியிருந்தால் அது அவரது பிதாவை அவமரியாதை செய்வதாகவும், பாவமான காரியமாகவும், விக்கிரகாராதனையாகவும் இருந்திருக்கும். மாறாக, தேவகுமாரனுக்குரிய கனத்தை அவர் ஏற்றுக் கொண்டிருந்தாலும், அவர் வெளியரங்கமாக, "என் பிதா என்னிலும் பெரியவராய் இருக்கிறார்" என்று கூறினார். தனது சீஷருக்கு பிதாவிடம் எப்படி கேட்கவேண்டும் என்பதை போதிக்கும்போது, "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்" என்று கூறினார். யோவா.16:23*

## "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"

**- யோவா. 10:30 -**

*இந்த வசனத்தை எடுத்துக் கொண்டு கர்த்தராகிய இயேசு யேகோவா என்ற நாமத்திற்கு பாத்திரர் என்றும், பிதாவும் குமாரனும் அவர்தான் என்றும் அவருக்கு பிதாவானவர் இல்லை, அவர் குமரனாகவும் இல்லை என்றும் கூறப்படுகிறது.*

வீணான இரகசிய ஞானம் என்று பெயர் பெற்ற திருத்துவக் கொள்கைக்காரர்கள், இதுபோன்ற வசனத்தை எடுத்துக் கொண்டு, மூன்று பேரும் ஒரே ஆள்தத்துவத்தன்மை உடையவராக நினைத்துக் கொள்கின்றனர். ஒன்றாய் இருக்கிறோம் என்றால் ஆள் தத்துவத்தில் இல்லாமல், எண்ணத்தில், திட்டத்தில், சித்தத்தில், நோக்கத்தில் ஒருமைப்பாட்டுடன் இருக்கிறார்கள் என்று பொருள். இந்தக் கருத்தை எவ்வளவு நேர்த்தியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். இதற்கு நேர்மாறாக திருத்துவக்காரர்கள் திரித்துக் கூறுகின்றனர். அவர் தன் பிரார்த்தனையில் பிதாவை நோக்கி:

"உலகத்துக்காக வேண்டிக் கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்கிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே... நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்" என்கிறார். யோவா. 17:9; 20-23

பிதாவும் குமாரனும் ஒருமனப்பட்டிருப்பது போல திருச்சபை ஒரு மனப்பட்டிருக்க வேண்டும் என்பதற்காகவே இயேசு கிறிஸ்து பிதாவிடம் மன்றாடினார். திருச்சபை பிதாவிடமும் குமாரனிடமும், செயல்பாட்டில் ஒரே மனதுடையவர்களாகயிருக்க வேண்டுமேயல்லாமல், ஆள் தத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இயேசு கிறிஸ்துவின் மனதில் ஒரே ஆள் தத்துவம் கிடையாது. அவர் கூறிய ஒருமைப்பாடு என்பது ஒரே மனத்தில், நோக்கத்தில், சித்தத்தில் அவருடைய பின்னடியார்கள் இருக்க வேண்டும் என்பதே. இந்த ஒருமைப்பாட்டின்படி, பிதாவினிடத்திலும் குமாரனாகிய கிறிஸ்துவிடத்திலும் சிந்தனை, செயல்பாடு ஒரே விதமாய் இருந்தது. பிதாவினிடத்திலும் குமாரனிடத்திலும் காணப்பட்ட ஒருமனப்பாங்கு திருச்சபையாரிடத்திலும் இருக்க வேண்டுமென்பதே அவருடைய

பிரார்த்தனையாய் இருந்தது. பிதாவின் மனதில் இருந்த சித்தமே குமாரனிடத்தில் இருந்ததாலே, இயேசு "என் சித்தமல்ல, உம் சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்றார். எனவே திருச்சபையாரும் தங்கள் சுய சித்தத்தை வெறுத்து கிறிஸ்துவின் சித்தத்தின்படியே எல்லாவற்றையும் செய்ய வேண்டும். ஏனெனில் இதுவே பிதாவின் சித்தமாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஒருமைப்பாடு பிதாவுக்கும் தனக்கும் இருக்கிறது போலத் திருச்சபையாருக்கும் இருக்க வேண்டுமென்று ஜெபித்தார். வேதத்திலில்லாத, பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூன்று கடவுள்கள் ஒன்றாயிருக்கிறார்கள் என்ற பொய்யான கருத்தை, தவறாக புரட்டிப் போதித்து, கர்த்தரின் வார்த்தையை அபத்தமாக்கிவிட்டிருக்கின்றனர். இதற்கு மாறாக, வேதம் சொல்லும் விளக்கமும், கர்த்தர் சொல்லும் விளக்கமும் பிதாவின் சித்தமே கிறிஸ்துவின் சித்தமாகி, கிறிஸ்துவின் சித்தமே திருச்சபையின் சித்தம், என்கிற இந்த ஒருமைப்பாடு எவ்வளவு பொருத்தமானதும் நேர்த்தியானதுமாய் இருக்கிறது.

## "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்"

கிறிஸ்து தன்னைத் தானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று சொன்ன பிறகு, அவரையல்லாமல் பிதாவினிடத்திற்குச் செல்ல முடியாது என்றார். தன்னையறிந்தேன் என்று சொல்கிறவர்கள் பிதாவையும் அறிந்திருக்க வேண்டும் என்றபோது பிலிப்பு, "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்" என்கிறார். யோவா. 14:7-10.

நமது கர்த்தராகிய இயேசுவின் இந்த வார்த்தையே இயேசுவே யேகோவா (யேகோவாவின் குமாரனாக அல்ல) என்பதற்கும் யேகோவா என்ற நாமம் இயேசுவுக்கும் பொருந்தும் என்பதற்கும்

*ஆதாரமாக இருப்பதாக கூறுகிறார்கள். ஆனால் இந்தப் பகுதியியை உற்று நோக்கி கவனித்தால், பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள தொடர்பை விவரமாகக் கூறியிருப்பது எல்லாருக்கும் விளங்கும். இதில் எந்த பகுத்தறிவுவாதியும், திருத்துவத்துக்கு ஆதாரமாகக் கொள்வதற்கிடமில்லை. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்று இயேசு கூறிய வார்த்தைகளின் மூலம் நாம் என்ன புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்? இதன் மூலமாக இயேசு, மனிதன் ஆவியின் ரூபத்திலுள்ளவர்களை ஒருபோதும் காண இயலாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்பதையே விரும்கிறார். அப்.யோவான் அதற்கு சாட்சியாக, "தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலி ருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று கூறுகிறார். (ரோதர்ஹாம் மொழி பெயர்ப்பின்படி- யோவா. 1:18) மோசேயிடம் கர்த்தர், "என்னைக் கண்டு ஒருவனும் உயிருடன் இருக்க முடியாது" என்று கூறியதை யாவரும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். தேவன் தம்மை மனுக்குலத்திற்கு காண்பிக்க வேண்டுமானால், தமது ஆவிக்குரிய மகிமையை அவர்கள் காணும்படி அவர்களது கண்களை அதிசயதக்கவிதமாக திறக்கவேண்டும் அல்லது மகிமை பொருந்திய தம்முடைய ரூபத்தை, மகிமையற்ற மாம்சீக நிலைக்கு தம்மைத் தொடும் படியாகவும், பார்க்கும்படியாகவும் மாற்றிக் கொள்ளவேண்டும்.*

*இதன்படியே தேவன் தம்மை வெளிப்படுத்தினார். தேவனுடைய ஒரே பேறான குமாரனும், நமது கர்த்தருமான இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வந்து மனிதர் மத்தியில் வாழ்ந்தபோது, தேவனுடைய சித்தம், மனம், குணம் போன்ற இயல்புகளை வெளிப்படுத்தினார். மனுக்குலத்திற்கு தேவனுடைய மிகச்சிறந்த பிரதிநிதியாக இயேசு கிறிஸ்து விளங்கினார். இயேசு கிறிஸ்துவுடன் பிலிப்பும் மற்ற அப்போஸ்தலர்களும் மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்து, மனிதர்கள் அறிய வேண்டிய பிரகாரமாக பிதாவாகிய தேவனை அறிந்து கொண்டார்கள். பிதா தன்னை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்த ஒருவரைத் தெரிந்து கொண்டு தமது முழுமையான செயல்பாடுகளை அவர் மூலமாக நிறைவேற்றுகிறார். தேவன்*

*மனிதனுக்கு கிறிஸ்து மூலமாகத் தன்னை வெளிப்படுத்தினதுபோல, பரிபூரணமாக, தெளிவாக, ஒருபோதும் எக்காலத்திலும் வெளிப்படுத்தியதில்லை. இனிவரும் காலத்திலும் வெளிப்படுத்தப் போவதில்லை. "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்." (கிரேக்க மொழியில் தேவனைப் போல பிரத்தியட்சமான என்றுள்ளது)* I *தீமோ. 3:16 இதேபோல அப்.பவுல் திருச்சபையாருக்கும், கிறிஸ்துவின் விசுவாச வீட்டாருக்கும் எழுதும்போது, "சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவின் நிமித்தம் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படுகிறோம்" என்று கூறுகிறார். கிறிஸ்து தேவனை வெளிப்படுத்தியது போல, நாம் கிறிஸ்துவை வெளிப்படுத்துபவர்களாகயிருக்க வேண்டும் என்பது பொருள்.* II *கொரி 4:11*

*பரிபூரண மனிதன் அதரிசனமான தேவனுடைய பரிபூரண சாயலாக இருக்கிறான். ஆகவே இதைக்காட்டிலும் சிறந்த கருத்து எதுவும் இருக்க முடியாது. இதே போலவே பரலோகத் தந்தை, பரலோக குமாரன், கிறிஸ்துவின் பரலோக மணவாட்டி ஆகியவர்களுக்கு ஆயிர வருட அரசாட்சியின்போது, பூரண முற்பிதாக்கள் பிரதிநிதிகளாயிருப்பார்கள். இவர்களை (முற்பிதாக்களை) பார்ப்பவர்கள் எல்லாரும், இவர்களிடத்தில் தேவ சாயலும் தேவ ரூபமும் இருப்பதை உணர்ந்து கொள்வார்கள். மாம்சத்திலிருக்கிற இவர்கள் தேவ சாயலாக இருப்பார்கள். இப்பொழுது ஏகமாய்த் தவித்து வேதனைப்படுகிற முழு சிருஷ்டிகளும் இந்த உன்னத நிலையை, ஆயிர வருட அரசாட்சியின்போது அடைவார்கள். இராஜரீக ஆசாரியக் கூட்டதார் பூமியிலே பிரபுக்களாயிருக்கப் போகிற முற்பிதாக்கள் மூலமாக பூமியை ஆட்சி செய்வார்கள். முழு சிருஷ்டிகளும் தேவ சித்தத்தின்படி பிரபுக்களுக்குக் கீழ்ப்படிந்தால் இந்த உன்னத நிலையை அடைவார்கள். சங்.45:16*

## *நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாகாமையுள்ளவரும்*

*- I தீமோ 6:15,16 -*

*பரலோகத் தந்தையின் மேன்மையை தனது இரண்டாம்*

*பிரசன்னத்தின்போது இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திக் காண்பிப்பார் என்று இந்த வசனம் கூறுவதாக அநேகர் கருதுகின்றனர். ஆனால் இதில் சில உண்மைகளிலிருந்தாலும் ஆயிர வருட அரசாட்சியின் ஆரம்பத்தில் கிறிஸ்து மகிமையடைவதை இது குறிக்காது என்று நாங்கள் கருதுகிறோம். யேகோவா தேவனை அறிந்து கொள்ள தமது வழியை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் கிறிஸ்து காரணராயிருக்கிறார். இருந்தாலும், இது அவருடைய ஆட்சியின் முடிவில், "பிதாவும் தேவனுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும்போது தான்" நிறைவேறுமேயல்லாமல் அவரது வருகையின் போதல்ல. ( I கொரி.15:24-28)*

*இந்த வசனம் பிதாவாகிய தேவனை குறிப்பிடுவதாக கூறுவதால், இயேசு கிறிஸ்து சாவாமையை பெற்றிருப்பதை மறுப்பதாகாது. ஏனெனில் அவரும் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் அனைவரும் சாவாமையை பெற்றுக் கொள்வார்கள் என்பதை வேத வாக்கியங்கள் தெளிவாக போதிக்கின்றன. பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல், குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி (*Self Existence - immortality) *அருள் செய்திருக்கிறார். I கொரி. 15:42,44,53,54; யோவா.5:26*

*இந்த வசனத்தை குமாரனுக்கு பொருத்தி பார்த்தால் அது எல்லா வகையிலும் ஒத்து வருகிறது. ஆனால் இது எந்த வகையிலும் பிதாவாகிய யேகோவா தேவனை புறக்கணிக்கவில்லை. மேலும் அதன் மூலம் இயேசுவே பிதாவாகிய யேகோவா தேவன் என்று நிரூபணமாகவில்லை. பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அப்போஸ்தலர் கூறியபடி, குமாரனைக் குறித்து சொல்லப்பட்ட மகிமை முதலானவை எல்லாம் பிதாவாகிய தேவனுடைய குணாதிசயங்களுக்கு ஒப்பிடத்தகுந்தவையல்ல. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது." I கொரி. 15:27*

*இதேபோன்று பிதாவாகிய தேவனால் இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு கொடுக்கப்பட்ட மகிமையைக்குறித்து இன்னொரு*

*வசனம் கூறுகிறதாவது: "சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிறார்." (கொலோ.2:10) இங்கேயும் அதே பதில்தான். பிதாவினுடைய ராஜ்யமும் வல்லமையும் குமாரனின் ராஜ்யத்திற்கும் வல்லமைக்கும் வேறுபடுத்தி காண்பிக்கப்படவில்லை. ஏனெனில் குமாரன் தேவனோடிருந்தவர், அவருடைய பிரதிநிதி.*

## "தேவனுக்குச் சமமாயிருப்பதை குமாரன் கொள்கையாடின பொருளாக எண்ணவில்லை"

*பிலிப் 2:6-ல் அப்.புவல் கூறும்போது,"அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்..." என்கிறார். இங்கே இந்த பகுதி திருத்துவ போதனையையோ, அல்லது இயேசு கிறிஸ்து தான் பிதாவாகிய யேகோவா என்றோ கூறவில்லை என்பதை நாம் முதலில் கவனிக்க வேண்டும். அப்படியிருக்கும்போது, இங்கே கொள்ளையாடுவதற்கோ, சமமாக நினைப்பதற்கோ இடமேது? "கொள்ளையாடுதல், "சமமாயிருப்பது" ஆகிய வார்த்தைகள் பிதாவும், குமாரனும், ஒருவரல்ல, இருவர் என்பதை போதிக்கின்றன. இதைக்குறித்து இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகளையும் அப்.பவுல் சொன்ன வார்த்தைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், அநேக வித்தியாசங்கள் இருப்பது போன்று தோன்றுகிறது. "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்." "நான் என் சுயமாய் ஒன்றும் செய்வதில்லை" என்று இயேசு கூறுகிறார். பிதாவுக்கு சமமாயிருப்பதாக இயேசு சொன்னதால் அவர் தமது தாழ்மையைக் கைவிட்டு விட்டாரா என்று நாம் கேட்கலாம்.*

*இரண்டாவதாக, அப்போஸ்தலர் மனதில் பதிய வைக்க தேடுகிற காரியம் எவ்வளவு மாறுபாடானாதாக இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். திருச்சபை பிதாவின் கனத்தை அடைய விரும்பி அதை கொள்ளையாட நாட வேண்டும் என்றோ அல்லது ஒருவருக்கொருவர் கனத்தை கொள்ளையாட வேண்டும் என்றோ அப்போஸ்தலர் போதிக்கிறாரா என்றால், இல்லை. நிச்சயமாக இல்லை. இதற்கு நேர்மாறாக வீணாக ஆடம்பர பெருமைகளை வெறுக்கவும், மெய்யான தாழ்மையைக் கடைப்பிடிக்கவும்*

வேண்டுமென பவுல், கூறுகிறார். ஒருவரையொருவர் தங்களிலும் சிறந்தவர்களாக மேன்மையானவர்களாக எண்ண வேண்டும். தன்னுடைய நிரூபத்தைப் படிக்கிற ஒவ்வொருவரும் கிறிஸ்துவைப் போலவே மனத்தாழ்மை உள்ளவர்களாகவும், "கிறிஸ்துவின் சிந்தையே எல்லாரிடமும் இருக்க வேண்டும்" என்றும் அப்.பவுல் உறுதியாக சொல்கிறார். கிறிஸ்துவின் சிந்தை என்பது பிதாவின் மகிமையயையும் கனத்தையும் கவர்ந்து கொள்வதாகவும், அப்படிச் செய்வது கொள்ளையாடுதல் அல்ல என்றும் நினைப்பதாகவும் இருந்தால், அதே சிந்தை சபைக்கும் தேவை என்றால், நாம் ஒவ்வொருவரும் முடிந்தவரை கனத்தையும் மகிமையையும் கவர்ந்து கொள்ள வேண்டும் என்றும், அதற்கு தேவையான முயற்சியும், கிறிஸ்து வெளிப்படுத்தின சிந்தையும் தேவை என்றும் பொருளாகிறது.

ஆனால் இதெல்லாம் மொழிபெயர்ப்பு தவறு. கொள்ளையடித்தல் என்ற சொல் அப்.பவுல் சொல்ல வந்த கருத்துக்கு நேர் மாறாக அமைந்துவிட்டது. கிரேக்கச் சொல்லான "ஹர் பாக்மோஸ்" இவ்விடத்தில் "கொள்ளையாடின" என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டிலேயே இச்சொல் இந்த இடத்தில் மட்டுமே வருகிறது. இந்த கிரேக்க வார்த்தை "கொள்ளையாடுதல்," "சட்டவிரோதமாக எடுத்துக் கொள்ளுதல்" என்பதற்கு இசைவாக வருகிறது. ஆனால் இந்த வாக்கியத்தை தவறாக மாற்றி அமைப்பதால் அப்போஸ்தலரின் பொருள் முற்றிலுமாக தலை கீழாக மாறுகிறது. அந்த வார்த்தைகளை சரியாக அமைத்து பொருள் கொள்வோம். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், கொள்ளையாடி தேவனுக்கு சமமாயிருக்க எண்ணாமல்..." (who thought not by robbery to be equal with God). சாத்தான் தேவனுடைய ஸ்தானத்தையும், கனத்தையும் அபகரித்துக்கொள்ள முயற்சித்தது போல் நமது ஆண்டவராகிய இயேசு முயலவில்லை. (ஏசா. 14:12-14) எனவே பிலி. 2:6-ம் வசனத்திற்கு முன்னும் பின்னும் வரும் வசனங்கள் வீண் பெருமைக்காக கிறிஸ்து எதையும் செய்வதாக சொல்லவில்லை. கிறிஸ்து மிகுந்த மனத் தாழ்மையுடைவராகவே இருந்தார். ஆகவே அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க மனதாயிருக்கிற யாவரும்

மிகுந்த மனத்தாழ்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். பல்வேறு மொழிபெயர்ப்பாளர்கள் "ஹர்பாக்மோஸ்" என்ற கிரேக்கச் சொல்லுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளனர்.

"மனப்பூர்வமாக விரும்பக்கூடிய காரியமாக நினைக்கவில்லை." -க்ளார்க் (did not think it a matter to be earnestly desired." Clarke)

"ஆர்வத்துடன் வைத்துக்கொள்ள நினைக்கவில்லை." -வேக்பீல்டு (did not think of eagerly retaining." Wakefield.

"ஆவலுள்ள விருப்பத்திற்குரிய ஒரு பொருளாக கருதவில்லை." -ஸ்பேவர்ட் (did not regard..... as an object of solicitous desire." Stewart.

"தேவனுடைய ரூபமாயிருத்தும் தேவனுக்கு சமமாயிருப்பது அபகரித்துக் கொள்ளக்கூடிய பொருளல்ல" -ரோதர்ஹாம் "Who in God's form subsisting not a thing to be seized on esteemed the being equal with God." Rotherham.

"தேவனுடைய ரூபமாயிருப்பவர், தேவனுக்கு சமமாயிருப்பதை ஒரு பரிசாக எண்ணவில்லை." -திருத்திய மொழிபெயர்ப்பு (who being (margin, orginally) in the form of God, counted it not a prize (margin, a thing to be grasped) to be on an equality with God." Revised Version.

"தேவனுடைய ரூபமாயிருப்பவர், தேவனுக்கு சமமாயிருப்பது அபகரித்துக் கொள்ளக்கூடிய ஒரு பொருளாக எண்ணவில்லை." -அமர் .ரெவ.கமிட்டி (who existing in the form of God, counted not the being on an equality with God a thing to be grasped." Amer. Rev. Committee.

"அபகரித்துக் கொள்ளக்கூடிய ஒரு பொருளாக எண்ணவில்லை." -ஷர்ப் (Thought not .... a thing to be seized." Sharpe.

"ஆர்வத்துடன் அபகரித்துக் கொள்ளவில்லை." -நீலாண்டு (did not eagerly grasp." Neeland)

"உக்கிரகமாக போராடிப் பெற்றுக்கொள்ளவில்லை" -டிக்கென்சன் (did not violently strive". Dickenson)

"அபகரிக்க வேண்டும் என்று தியானிக்கவில்லை" -டர்ன்புல் (did not meditate a usurpation." Turnbull)

*கடைசியாக சொல்லப்பட்ட விளக்கம்தான் சரியான விளக்கமாக அமைகிறது. இவைகளெல்லாவற்றையும்விட, எம்பாட்டிக் டையக்லாட்டில் சொல்லப்பட்டதே சரியான விளக்கமாகும். அது கூறுகிறதாவது:*

*“தேவனுடைய சாயலாக இருந்தாலும், தான் அந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பிதாவின் ஸ்தானத்தைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால் அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கி ஒரு அடிமையின் ரூபமெடுத்தார்.”*

*அப்போஸ்தலர்களுடைய விளக்கத்தின்படியும் தேவஞானத்தின்படியும் இந்தக் கருத்து மிகவும் சரியானதே, நமது கர்த்தர் ஆவியின் ரூபமாக இருந்தபோது பிதாவின் சாயலாக இருந்தார். அப்போது அவர் தன்னை பிதாவுக்கு சமமாக எண்ணக்கூடிய பேராசையுடையவராக இருக்கவில்லை. தேவ அதிகாரத்தையும், வல்லமையையும், மகிமையையும், மரியாதையையும் அவர் பறித்துக் கொள்ள விரும்பவில்லை. சாத்தானிடமிருந்த பேராசை குணமான, “உன்னதமானவருக்கு ஒப்பாவேன்” என்ற குணம் இயேசு கிறிஸ்துவுக்கு இருக்கவில்லை. பிதாவாகிய தேவனுக்கு அடுத்த ஸ்தானமான உன்னத நிலையி-ருந்தும், பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்பட்டவராக, மனத்தாழ்மையும் அடக்கமுமுடையவராகவும் இருந்தார். தனது ஆவிக்குரிய நிலைமையின் மகிமையையும் மாட்சிமையையும் துறந்து, மேலான நிலமையிலி ருந்து,“தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்ட” தாழ்மையான மானிட நிலைமைக்கு வந்தார். மனித நிலைக்குத் தன்னை தாழ்த்தினது மட்டுமின்றி, மனித நிலையில் இப்பூமிக்கு வந்தபோது, அப்போஸ்தலர் கூறியபடி அடிமை நிலைக்குத் தன்னைத் தாழ்த்தினார். ஆவியான இயேசு கிறிஸ்து மனிதனான இயேசு கிறிஸ்துவாகத் தன்னைத் தாழ்த்தினது மட்டுமின்றி, எல்லோரும் அசட்டை பண்ணக்கூடிய நிலையிலிருந்தும் மரணத்திற்கு ஒப்புக் கொண்டு கேவலமான சிலுவை மரணத்தையும் தாங்கிக் கொண்டார். இப்படியாக எல்லாவற்றிற்கும் கீழாக தன்னைத் தாழ்த்தினதற்குக் காரணம், தெய்வீக சித்தத்திற்கும், பிதாவின் சித்தத்திற்கும் இயேசு கிறிஸ்து கீழ்ப்படிந்ததுதான் என அப்போஸ்தலர்கள் கூறுகின்றனர். இதன்*

காரணமாக மனத்தாழ்மையையும், அடக்கத்தையும் தேவன் மீது கொண்டிருந்த விசுவாசத்தையும் மரணம் மட்டும் காண்பித்தார். "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." *(எபி. 2:7,9; I தீமோ. 2:5,6; பிலி 2:9-11)*

இப்போது நாம் பார்த்த வசனங்களின்படி, மேற்கண்ட எந்த வசனமும் திருத்துவக் கொள்கைக்கு சாதகமாகவோ, நிரூபிக்கப்படும்படியாகவோ இல்லை. மாறாக இவை திருத்துவத்தை எதிர்ப்பது மட்டுமின்றி மற்ற எல்லா வேத வசனங்களும் ஒருங்கிணைந்து காரண காரியங்களின்படியும் பகுத்தறிவின்படியும் ஒருத்துவத்தைக் காட்டக்கூடியதாக இருக்கிறது.

பிதாவினுடைய பெருமையையும் மகிமையையும், அவருடைய குமாரனுடைய பெருமையையும் மகிமையையும், அவருடைய திட்டங்களையும், குணநலன்களின் சகல பரிமாணங்களையும் புரிந்து கொண்டு, பாராட்ட தேவஞானம் வழிநடத்துவதாக.

பிதாவின் ஞானத்தில், கிருபையில் வல்லமையில் குமாரன் கொண்டிருந்த நம்பிக்கை, விசுவாசம், அன்பு ஆகியவற்றை நிரூபித்ததின் காரணமாக தேவன் குமாரனுக்கு வெகுமதியளித்தார். நாம் "பிதாவைக் கனம் பண்ணுகிறது போல குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்பதே உண்மையில் சந்தோஷமான செய்தியாகும். தேவ வார்த்தையை வெளியரங்கமாகவும் முழுமையாகவும் விளக்கி காட்டிய பிறகு, அப்.பவுல் சாட்சியாக தேவ ஆவியில் ஏவப்பட்டு கூறியது ஒவ்வொன்றும் நிச்சயமாக நாம் ஏற்றுக் கொள்ளத் தக்கவையே.

"பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு. அவர் மூலமாய்

*சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." (I கொரி. 8:6)*

*"நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்... அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே... நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர், தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று... வேண்டிக் கொள்கிறேன்." (எபி 1:2-18)*

<u>அத்தியாயம் 3</u>

# ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் ஒரே பேறானவர்

*அவர் யார்?-அந்த வார்த்தையானவர், ஒரு தேவன்-யேகோவா தேவனுடைய ஒரே பேறானவர்-வேதாகமத்தின் சாட்சி- "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தார்"- "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னே நான் இருக்கிறேன்"- "ஆதியும் அந்தமும்"- "யேகோவா பூர்வ முதல் என்னை தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார்"- வார்த்தை மாம்சமானார்-அவதாரம் எடுக்கவில்லை-தம்மைத் தாமே தாழ்த்தினார்-ஐசுவரியமுள்ளவராயிருந்த அவர் நம் நிமித்தம் தரித்திரரானார்-இந்த சாட்சியத்தில் வஞ்சகம் ஏதுமில்லை-நம் ஆண்டவருடைய நடத்தை ஏமாற்றும் நோக்குடையதல்ல - பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமானவர்.*

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்திரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே." *1 தீமோ. 2:5,6*

ஒப்புரவாகுதலின் வேலையை (நாம் தேவனோடு ஒப்புரவாகுதலையும் பாவத்திற்கான பலியையும்) எந்த அளவிற்கு நாம் மதிக்கிறோமோ, அந்த அளவுக்குத்தான், தேவனால் நியமிக்கப்பட்டவரும் பாவத்திற்கு பரிகாரியும், ஜீவனை அளிப்பவரும், புதுப்பிக்கிற வருமாகியவரை நாம் மதிக்க முடியும். யேகோவா தேவனால் உயர்த்தப்பட்டவரும், தேவகிருபையால் நமக்கு மீட்பரும் இரட்சகருமாயிருப்பவர் யார்? முதலில் ஒப்புரவாக்குதலின் பொருளைப் பற்றி நாம் அறியாமல் இருப்பது சரியல்ல. தேவனுடைய வார்த்தை இந்த ஒப்புரவாக்குதலின் பணியைப் பற்றி நன்கு விளக்காவிடில் நாம் இதை நிதானிக்கக் கூடிய

தகுதி இல்லாமல் போயிருக்கும். இரண்டாவதாக, ஒப்புரவாக்குதலை நாம் ஆராயும்போது, இந்த மத்தியஸ்தரின் ஒப்புரவாக்குதலின் மேன்மையும், அதனால் அவருக்கு நாம் செலுத்த வேண்டிய மரியாதையும், அப்போஸ்தலரின் சாட்சி மூலமாக முதலில் புரிந்து கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும். ஆதலால், "தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், முழங்கால்யாவும் முடங்கும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." மேலும், "பிதாவைக் கனம் பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு...., நியாயத் தீர்ப்பு செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்." - பிலிப். 2:9; யோவா. 5:22

இயேசு கிறிஸ்துவைக் குறித்து வேத வசனங்கள் என்ன சொல்கிறது, சொல்லாமல் விடப்பட்டவை எவை என்று நாம் ஆராயும்போது, அப்போஸ்தலருடைய சாட்சி மிகவும் வெளியரங்கமாய் விளக்குவதுமாயும், இசைவாயும், நிறைவளிப்பதாயும் இருப்பதை நாம் காண்கிறோம். தேவ வசனங்களின் சுருக்கமான போதனைகள் என்ன? என்பதை நாம் முத-ல் கண்டு, அதன் ஆதாரங்களை அந்தந்த இடங்களில் காண்போம்.

1. நமது மீட்பர் மாம்ச சரீரத்தில் வந்து மனிதர்களுடன் உலகத்தில் வாசம் செய்வதற்கு முன்பதாக ஆவிக்குரிய நிலையில் ஜீவித்தார்.

2. ஆவிக்குரிய நிலையிலிருந்தபோது, அவர் ஒரு தேவனைப்போல வல்லமையுடையவராக இருந்தார். பிதாவுக்கு அடுத்தபடியாக தூதர்களுக்கெல்லாம் பிரதான தூதராக இருந்தார். பிரதான தூதன் மிகாயேல் என்றால் யார் தேவனுக்கு ஒப்பாயிருக்கக் கூடும்? அல்லது தேவனுடைய பிரதிநிதி என்று பொருள்.

3. யேகோவா தேவனின் எல்லா சிருஷ்டிகளுக்கும் மேன்மையான சிருஷ்டியாகவும், சர்வ சிருஷ்டிக்கும் அவரே நேரடியான சிருஷ்டியும் ஆதியானவராகவும், யேகோவாவின்

பிரதிநிதியான இவர் தேவனின் ஒரே பேறான குமாரனாகவும் இருக்கிறார். யேகோவா தேவனின் வல்லமையைக் கொண்டு, அவருடைய நாமத்தில் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளும்... கர்த்தத்துவங்களானாலும் அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக் கொண்டு அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

*4.* பிதாவின் சித்தத்திற்கிசைவாக எவருடைய வற்புறுத்தலுமின்றி தாமாகவே நம்முடைய மீட்பராக மாம்சத்தில் வந்தார். கிறிஸ்து, நீதி, ஞானம், அன்பு ஆகியவற்றின் அடிப்படையே தேவசித்தம் என அறிந்ததால் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஒப்புரவாக்கும் பணியை மகிழ்ச்சியோடு நிறைவேற்ற முடிந்தது.

*5.* மனித நிலைமைக்கு மிகத் தாழ்மையாக்கிக் கொண்டது சிறிது காலத்திற்கேயல்லாமல் நிரந்தரமாக அல்ல. நம் எல்லாருக்காவும் விலைக்கிரயமாகத் தம்மையே ஈடுப-யாக்கியதினால் இந்த ஒப்புரவாக்குதலின் நோக்கம் நிறைவேறிற்று. எனவே அவருடைய உயிர்த்தெழுதல் சரீரப்பிரகாரமாக அல்ல, அப்.பேதுரு சொல்கிறது போல, "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." - *I* பேதுரு *3:18*

*6.* உயிர்த்தெழுதலில் அவர் ஆவிக்குரிய நிலையைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். அது மட்டுமல்ல, அவருடைய விசுவாசத்திற்கு பிதா வெகு உன்னதமான பரிசளித்தார். அதன் மூலமாக அவர் முழு தெய்வீக சுபாவம் பெற்று, சாகாமையை சுதந்தரித்துக் கொண்டார். ஆவிக்குரிய நிலையிலேயே மகா உன்னதமான ஆவியின் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

*7.* இப்படியாக யேகோவா தேவனால் மிக உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டவரையே நாம் பெரிதும் கனப்படுத்தி மகிமைப்படுத்தி, ஆராதிக்க வேண்டும். வார்த்தையினால் மட்டுமின்றி நோக்கத்தினாலும் செயல்களினாலும் உண்மையாகப் பின்பற்றவேண்டும்.

## தேவகுமாரனைப் பற்றிய வேதாகம சாட்சியங்கள்

இதற்குரிய சாட்சியங்களை வேதாகம ஆதாரங்கள் வாயிலாக

*ஆயராய்வோமாக! முதலில் யோவான் நற்செய்தியை எடுத்துக் கொள்வோம். யோவான் 1:1-ல் கர்த்தர் பூமிக்கு மனிதனாக வரும்முன் "தேவனுடைய வார்த்தையாக" (கிரேக்க மொழியில் லோகோஸ்) இருந்தார். "ஆதியிலே லோகோஸ் இருந்தார்." லோகோஸ் என்ற வார்த்தையைக் குறித்து டாக்டர் அலெக்ஸாண்டர் கிளார்க் குறிப்பிடும்போது, "இயேசு, கிறிஸ்து என்ற இரண்டு சொற்களையும் மொழி பெயர்க்காமல் அப்படியே எழுதியதுபோல லோகோஸ் என்ற சொல்லும் லோகோஸ் என்றே எழுதப்படிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவுக்குப் பட்டங்களாக வழங்கப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான செயல்பாடுகளைக் குறிப்பதாக அமைகிறது. அவருடைய தன்மை, சுபாவம், பணி ஆகியவற்றைக் குறிக்கும் பின்வரும் அடைமொழிகள் வார்த்தை, பேசப்பட்ட வார்த்தை, பிரசங்கம், சொல்லாற்றல், கொள்கை, காரண காரியம், காரணத்தை சிந்திக்கும் திறன் - இவைகள் ஒவ்வொன்றும் பொருத்தமான இடங்களில் சொல்லப்பட்டிருக்க வேண்டும்." நற்செய்தியாளர் தன்னுடைய நிரூபத்தில் இதே அடைமொழியை இயேசு கிறிஸ்துவைக் குறிக்க "ஜீவவார்த்தை" அல்லது "ஜீவன் தரும் லோகோஸ்" என்று எழுதியிருக்கிறார். யோவா. 1:1*

*"தேவனுடைய வார்த்தை" என்பதும் "தேவனுடைய லோகோஸ்" (பிரதிநிதி) என்பதும் நமது கர்த்தர் பூமிக்கு வருமுன் ஆற்றிய பல தரப்பட்ட செயல்பாடுகளைக் குறிக்கும் சரியான உரிச்சொல்லாகும். லோகோஸ் என்பவர் பிதாவாகிய தேவனின் சிருஷ்டிப்புக்கு ஆதியும், சகல சிருஷ்டிகளுக்கும் முந்தின பேறுமானவர். அந்தபடியாகவே தேவ ஞானம், வல்லமை, நன்மை ஆகிய மற்ற படைப்புகளெல்லாம் லோகோஸ் மூலமாகவே வெளியரங்கமாயிற்று. பண்டைய காலங்களில் சில இராஜாக்கள் தங்கள் செய்திகளை இரகசியமாக விசேஷித்தப் பிரதிநிதி மூலமாக, திரைக்கு உள்ளேயிருந்து கொண்டு மெதுவாக சொல்வார்கள். விசேஷித்த பிரதிநிதிகள் சத்தமாக இராஜா சொல்வதை திரைக்கு வெளியேயிருந்து மக்களுக்கு சொல்வார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட இராஜ பிரதிநிதிகளை "இராஜாவின் லோகோஸ்" என்று அழைப்பது வழக்கம். இப்படி சொல்லப்பட்டிருப்பது உண்மையோ, பொய்யோ எனத் தெரியாது.*

ஆனால் இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன் இப்படிப்பட்ட தேவப் பணியை பிதாவின் பிரதிநிதியாக இருந்து செய்து வந்தார் என அறிகிறோம். இயேசு கிறிஸ்து இத்தகைய பணியை செய்து வந்தார் என்பதை வேதாகமத்தில் பல இடங்களில் காணலாம்.

தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர், "ஆதியிலே தேவனோடிருந்த லோகோஸ், ஒரு தேவனாகவும் இருந்தார்" என்று எழுதினார். இது சொல்லர்த்தமான கிரேக்க, ஆங்கிலமொழி பெயர்ப்பின்படி உள்ளது என்பதை கிரேக்க மொழி வல்லுநராக இருப்பவர்களும் இல்லாதவர்களும் கூட ஏற்றுக் கொள்வார். யோவான் 1:1-ல் முதலில் தேவன் என்று வரும் வார்த்தைக்கு முன் சுட்டெழுத்து (ho) வருகிறது. ஆனால் இரண்டாவதாக வரும் தேவன் என்ற சொல்லுக்கு முன் எந்த உரிச் சொல்லுமில்லை. அவ்வாறு உரிச்சொல் இல்லாவிட்டால் அது பிதாவைக் குறிக்குமா அல்லது குமாரனைக் குறிக்குமா என்ற ஐயப்பாடு ஏற்படுவது இயல்பு. அதுபோல உரிச்சொல் கொடுக்கப்படாவிட்டால் பெயர்ச் சொல்லுக்கு முன் "ஒரு" என்று போட வேண்டும் என்பது கிரேக்க மொழிப்படி ஒரு மரபு. இதன்படி:-

"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தி-ருந்தது (ho theos), அந்த வார்த்தை (ஒரு) (theos) தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்." யோவா.1:1-2

"ஆதியிலே" என்று சொல்லப்பட்டிருப்பது எந்தக் காலக் கட்டத்தைக் குறிக்கிறது? யேகோவா தேவன் மட்டுமேயிருந்த ஆரம்பக் காலக்கட்டத்தை இது நிச்சயமாகக் குறிப்பிடாது. ஏனெனில் பிதாவாகிய தேவனுக்குத் துவக்கமும் கிடையாது, முடிவும் கிடையாது. (சங்.41:13; 90:2; 106:48) ஆனால் யேகோவா தேவனின் சிருஷ்டிப்பின் வேலைக்கு துவக்கம் உண்டு. சிருஷ்டிப்பின் ஆதியைக் குறித்து இங்கே குறிப்பிடப்படுகிறது. எனவே, சிருஷ்ப்பின் ஆரம்பத்தில், நமது ஆண்டவராகிய இயேசு மாம்சீக சாயலுக்கு வருவதற்கு முன்பு, லோகோஸாக (வார்த்தை) பிதாவோடு இருந்தார் என்று இந்த அறிக்கை கூறுகிறது. இந்த வார்த்தையானவரே

*(லோகோஸ்) "தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியாயிருக்கிறார்" என்று தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேதவாக்கியம் உறுதிப்படுத்துகிறது. மேலும் அப்போஸ்தலர், நமது கர்த்தர், "சபையாகிய சரீரத்திற்கு தலையானவர்" மாத்திரமல்ல, "மரித்தோரி-ருந்து எழுந்த முதற்பேறுமானவர்" என்றும் கூறுகிறார். ஆனால் அவரே சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர், எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார் என்றும் கூறுகிறார். அவர் கூறுகிறதாவது: "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர், ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும் அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலை நிற்கிறது." (கொலோ.1:15-18) பிதாவின் ஒரே பேறானவராகிய கிறிஸ்து பூமியின் இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவாக, உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டதாக தீர்க்க தரிசனங்கள் கூறுகின்றன. இதைப் பற்றி, "நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் இராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்" என சங்கீதக்காரன் 89:27-ல் குறிப்பிடுகின்றார். "உண்மையும், சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென்" என வெளி. 3:14-ல் இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டதைக் கவனிக்கவும்.*

*நமது கர்த்தர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார் என்ற நிலைமையைக் குறித்தும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறானவர் என்பதற்கும், தேவப்பிரதிநிதியான லோகோஸாயிருந்தார் என்பதற்கும் இசைவாக, தேவனுடைய தற்சுரூபமாக ஒவ்வொரு விஷயத்திலும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்கிசைவாகச் செயல்பட்டார் என நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார். அதாவது, "அவராலே அனைத்துப் படைப்புகளும் உண்டாக்கப்பட்டன. அவராலேயன்றி எப்பொருளும் உண்டாக்கப்படவில்லை."*

(யோவா.1:3 ரோதர்ஹாம் மொழிபெயர்ப்பு) லோகோஸாயிருக்கிற தேவனுடைய ஒரே பேறான இராஜரீகக் குமாரனாகிய கிறிஸ்துவைக் குறித்து எவ்வளவு மேன்மையான கனத்தையும் மகிமையையும் நம் கண்முன் இந்த வசனத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்களுடைய வார்த்தையைவிட இயேசு கிறிஸ்துவுக்கு பிதாவினால் அளிக்கப்பட்ட மகா மேன்மையும் திவ்யமுமான அதிகாரம் மிக மிக உன்னதமானது என்று இதன் மூலமாக அறியலாம். "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே." II கொரி.8:9. "பிதாவே, உலகமுண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்குண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்." (யோவா 17:5) இவ்வசனத்தி-ருந்து கனத்திலும் மகிமையிலும் இயேசு எவ்வளவு ஐசுவரிய நிலைமையி-ருந்தார் என்று புரிந்து கொள்ள முடிகிறது. மீட்புக்குரிய ஆச்சரியமான தெய்வீகத் திட்டம் ஒவ்வொன்றிலும், விழுந்துபோன மனிதர் மேலுள்ள தெய்வீக அன்பு, கிருபை, இரக்கம் ஆகியவை வெளியரங்கமாக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கில் பார்க்கும்போதுதான், தேவனுடைய ஒவ்வொரு செயல்பாட்டின் அடிப்படை நோக்கம், காரண காரியம், திட்டம் இவை யாவும் அவருடைய தெய்வீக குணநலன்களுக்கு ஏற்புடையதாயிருக்கிறதெனப் புரிந்து கொள்கிறோம்.

பெத்லகேமில் மரியாள் வயிற்றில் இயேசு பிறப்பதற்கு முன்பு அவர் ஒருபோதும் இருந்ததில்லை என்று நினைப்பவர்கள், மனித மீட்புக்காக தேவன் ஏற்பாடு செய்த திட்டத்தையே அறியாதவர்கள் ஆவர். இந்த அடிப்படை புரியாததினால் நாம் மேற்கோளாக மேலே காட்டிய எந்த வசனங்களின் பொருளையும் சரியாக உணர்ந்து கொள்ளாதவர்களாக இருகின்றனர். உலகத் தோற்றத்திற்கு முன்பதாக பிதாவினிடத்தில் இயேசுக் கிறிஸ்துவுக்கிருந்த மகிமை, கனம் ஆகியவற்றைப் பற்றி துளியும் அறியார்கள். முன்பு தேவ தூதர்களுக்கு மேலாக இருந்த உன்னத நிலையை விட்டுவிட்டு, தூதர்களுக்கு கீழான மனித நிலைமைக்குத் தன்னைத் தாழ்த்தினர். வேத வசனங்களெல்லாம் மனிதரின் தப்பறையான கோட்பாடுகளி-ருந்து

நம்மை விடுவிக்கிறது. அவர்கள் இயேசு கிறிஸ்துவை பிதாவாகிய தேவனுக்கு ஒப்பாக உன்னத நிலைக்கு உயர்த்துவதால் அவர்கள் தேவனுடைய வார்த்தைகளையும் அப்போஸ்தலருடைய சாட்சியங்களையும் அவமாக்கிப் போடுகிறார்கள். கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், பிதா குமாரனைக் காட்டிலும் பெரியவர் என்றும் வேத வாக்கியம் கூறுகிறது. கிறிஸ்தவ மண்டலங்கள் தங்களது தப்பறையான போதனையி-ருந்து விடுபட முடியாமல் இருக்கின்றன.

சத்தியம் ஒன்றே காரண காரியத்திற்குட்பட்டது.

"அது மெய்யே... நமது விருப்பங்களை வேறு எதுவும் திருப்தி செய்யாத அளவுக்கு சத்தியம் திருப்தி தருகிறது."

இயேசு கிறிஸ்து சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் என்பதையும், அவர் இவ்வுலகத்திற்கு மனிதனாக வந்து, மனுக்குலத்தை மீட்பதற்கு முன்பாக, நெடுங்காலத்துக்கு முன்பாகவே இருந்தார் என்பதையும் அநேக வேத வசனங்கள் உறுதிசெய்கின்றன. இதற்கு உதாரணமாக, "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது." (Iயோவான் 4:9) இயேசு இவ்வுலகத்திற்கு வருமுன் பிதாவினுடைய குமாரனாக இருந்தார் என்றும் அவர் தேவனுடைய குமாரனாயிருந்ததால், இவ்வுலகத்தின் மீட்பின் பணியைச் செய்யவே இவ்வுலகத்திலே தேவனால் நியமிக்கப்பட்டார் என்றும் இந்த அறிக்கைகள் கூறுகின்றன. பல இடங்களில் லோகோஸ் "தேவனுடைய ஒரே பேறான குமாரன்" என சொல்லப்பட்டிருப்பதை நாம் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. லோகோஸ் ஒருவரே பிதாவினால் நேரடியாக சிருஷ்டிக்கப்பட்டவர் அல்லது ஜெநிப்பிக்கப்பட்டவர். மற்ற மனிதர்கள், தேவதூதர்கள் யாவரும் லோகோஸ் மூலமாகவே சிருஷ்டிக்கப்பட்டனர். இதன் மூலம் இயேசு கிறிஸ்து ஒருவரே தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர் என மெய்யாகவே ரூபகாரப்படுத்தப்படுகிறது.

மற்றொரு விளக்கம்: "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத்

*தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." (யோவா.3:17) ஏற்கனவே கிறிஸ்து ஆவியின் ரூபத்தி-ருந்ததால்தான் தேவன் அவரை இந்த மீட்பின் பணியை நிறைவேற்ற அனுப்ப முடிந்தது. அப்போஸ்தலர் யோவான் எழுதிய வரலாற்று சிறப்பு மிக்க லோகோஸைப் பற்றிய செய்தி: "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. மேலும், லோகோஸ் மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." (யோவா 1:10,14) தாம் முன்பே இருந்த நிலைமையைக் குறித்து நமது கர்த்தர் சொன்ன வாக்கியங்கள் மறுக்க முடியாதவைகள். அவர், யோசேப்பை, தனது தந்தை என்று குறிப்பிடவில்லை; பூமியில் தான் வாழ்ந்த வாழ்க்கைதான் தனது துவக்க வாழ்க்கை எனவும் எங்கும் குறிப்பிடவில்லை.*

*மாறாக, யேகோவா தேவனே தனது தந்தை என இடைவிடாமல் கூறுகின்றார். "பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவ தூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" என்ற லோகோஸின் வார்த்தையை நினைவில் கொள்க. பூலோகத் தாயாகிய மரியாளிடம், "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா" என்றார். (லூக்.2:49) தன் சீடர்களிடம், "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன், " "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" (யோவா.6:38,51) என்றார். அநேகர் இதை அவருடைய காலத்தில் விசுவாசிக்காமல் இருந்தார்கள். இன்று வரையிலும் அநேகர் இதை விசுவாசிக்கவில்லை. ஆனால் சத்தியம் நிலைத்திருக்கும். இதைக் கேட்ட சிலர் இது எப்படி இருக்கக் கூடும் என சந்தேகப்பட்டனர். இதைக் கேட்ட சில சீடர்கள் "இது கடின உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்றார்கள். சீடர்கள் முணுமுணுப்பதைக் கேட்ட*

*இயேசு அவர்களிடம், "இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?... அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின் வாங்கிப் போனார்கள்." தான் இவ்வுலகத்திற்கு வருமுன்னே பரலோகத்திலிருந்ததாகவும், பரலோகத்திலிருந்து இறங்கி வந்ததாகவும் இயேசு கூறியது அவர்களுக்கு கடின உபதேசமாயிருந்தது. யோவா.6:60-66*

*"நான் எங்கிருந்து வந்தேன். எவ்விடத்திற்குச் செல்லப் போகிறேன்... என்பது எனக்குத் தெரியும். நான் பரத்திலிருந்து வந்தேன்... உலகத்தில் உண்டாகவில்லை. நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன். நான் சுயமாக வரவில்லை. என்னை என் பிதா அனுப்பினார்... என் பிதா என் சத்தத்தைக் கேட்கிறார். அவரை நான் அறியேன் என்று சொன்னால் நான் பொய் சொல்லுகிறவனாவேன்" என்று இயேசு கிறிஸ்து பரிசேயரிடத்தில் கூறினார். "நீ ஆபிரகாமைவிட பெரியவனா?" என்று இயேசுவிடம் கேட்டனர். அதற்கு இயேசு, உங்கள் பிதாவாகிய "ஆபிரகாம் என் நாளைக் காண ஆசையாய் இருந்தான். அதைக் கண்டு களிகூர்ந்தான்" என்று கூறினார். (இயேசு கிறிஸ்துவின் நாளை ஆபிரகாம் விசுவாசக் கண்களால் கண்டு மேசியாவைக் குறித்த தெய்வ தீர்க்க தரிசனத்தை அறிந்திருந்தான். நிழலாக ஈசாக்கைப் பலியிடும்போது இயேசுவின் பலியை ஆபிரகாம் நினைவு கூர்ந்திருப்பார். மேசியாவின் வருகையின் மகிமையின் நாளை விசுவாசக் கண்கள் கொண்டு பார்த்திருப்பார். இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தினாலே பூமியின் சகல மனுக்குலமும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கும். இனி வரவிருக்கிற இராஜ்யத்தை தனது மனக்கண்ணால் பார்த்தார் என்பதில் ஆச்சரியமில்லை. பரலோக பட்டணத்தையும், புதிய எருசலேமையும், மகிமையடைந்த திருச்சபையையும், அதற்குரிய இராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரையும், பரலோக இராஜ்ஜியத்தையும், அந்த இராஜ்யம் பூமியின் சகல மனுக்குலத்தையும் ஆசீர்வதிக்கிறதையும் மனக்கண்ணில் கண்டு களி கூர்ந்தார். எபி.11:10, 16; 12:22; 13:14)*

*(ஆபிரகாம் இறந்து இரண்டாயிரம் வருடமாயிருக்க) "யூதர்கள்*

*இயேசுவை நோக்கி, உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ என்றார்கள். அதற்கு இயேசு, ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (யோவா.8:14, 23, 42-58)*

இந்த வசனங்களில் எந்தத் தவறும் ஏற்பட சாத்தியமில்லை. நமது கர்த்தர் ஆபிரகாமுக்கு முன்பதாகவே இருந்ததாக உறுதிபடக் கூறுகின்றார். நமது கர்த்தர் பிதாவினால் சிருஷ்டிக்கப்பட்டு, கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டு, மரணமடையும் நாள் வரை இந்த உலகத்தில் தான் இருந்தார். மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த பின் மரணமே இல்லாத சாகாமை அவருக்குக் கொடுக்கப்பட்டது. இனிமேல் மரணத்திற்கு அவர்மேல் அதிகாரமில்லை என்று வேதாகமம் கூறுகிறது. (ரோம.6:9) தேவதூதரிலும் மேலான நிலையி-ருந்த அவர் மனிதனாக பூமிக்கு வந்தபோது "தேவ தூதருக்கும் சற்று சிறிய" நிலையில் இருந்தார். பாவநிலையிலிருந்த மனிதனை மீட்க அவர் இவ்வாறு வந்தார். அவர் மரணத்தின் மூலம் ஆவிக்குரிய நிலையிலிருந்து மாம்சீக நிலைக்கு வரவில்லை. ஆவியின் ஜீவியாக உயர்ந்த நிலையில் இருந்த அவர் தாழ்ந்த நிலைக்கு, மாம்சீக நிலைக்கு மாறினார். "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்ற நமது ஆண்டவரின் வார்த்தை சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறானவராகிய லோகோஸ் அதிலிருந்து மாம்சீக சரீரத்தில் தேவகுமாரனாக, இயேசுவாக வரும் வரை ஜீவனுடையவராகவே இருந்தார். அதில் எந்த மாறுதலும் இல்லை. ஆனாலும் நமது கர்த்தர் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்ட யாவரும் விசுவாசிக்கவில்லை. இப்பொழுதும் அநேகர் இந்த சத்தியத்தை ஏற்காதவர்களாக இருக்கின்றனர். விபரீதமான எண்ணமுடைய மனிதனுடைய சுபாவம் எளிதான, இயல்பான, எதார்த்தமான இயேசுவின் வார்த்தைகளை ஏற்க மறுக்கச் செய்தது. எனவே கர்த்தரை பாவமனுக்குலத்தில் ஒருவர் என்றும், மாம்சீக தந்தையின் மகன் என்றும் கருதினார்கள். சாந்தமுள்ளவர்கள் மட்டுமே "ஆத்துமாக்களை இரட்சிக வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்காக மட்டுமே தேவ வார்த்தையின் நற்சாட்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா.61:1; யாக்.1:21) இயேசுவின் வார்த்தையைக் கேட்டவர்கள் அப்பொழுது அவரது நற்சாட்சியை மறுத்து கல்லெறியத் துணிந்ததுபோல, இப்பொழுதும் சத்தியத்தை கேட்கிற சிலர் அதை மறுத்து ஆண்டவரின் வார்த்தையை கேட்டு ஏற்றுக்கொள்கிற எளிமையான அனைவரையும் (மறைபொருளாக) கல்லெறிய துணிகிறார்கள். காரணம் என்னவெனில் அப்பொழுது உள்ளது போல இப்பொழுதும் அவர்கள் பிதாவையும் குமாரனையும் அறிய வேண்டிய பிரகாரமாக அறியவில்லை. இதை அவர்கள் வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள்.

இதைப்பற்றி நம்முடைய கர்த்தர் குறிப்பிட்டுச் சொன்னது என்னவெனில், “பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான். குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்” (மத். 11:27) என்பதாகும். உலகம் அவரை அறியவில்லை. ஆதியிலே அவர் உன்னதத்தில் ஆவியின் ரூபத்தில் இருந்ததையும் அறியவில்லை. இந்த உலகத்தை இரட்சிப்பதற்காகவே ஆவியின் ரூபத்தி-ருந்து பாவமாம்ச சாயலுக்கு வந்தார் என்பதையும் இந்த உலகம் அறியவில்லை. அவர் சிருஷ்டிப்பின் நாளிலிருந்து பூமியிலே மனிதனாகப் பிறந்த நாள் வரை உள்ள இடைப்பட்ட நீண்ட காலப்பகுதி குறுக்கே இருக்கிறது என்பதை நாம் நினைவு கூறவேண்டும். இந்த நீண்ட காலப்பகுதியின்போது அவர் பிதாவின் மடியில் செல்லப்பிள்ளையாக “நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாக இருந்து, எப்பொழுதும் பிதாவின் சமூகத்தில் சந்தோஷப்பட்டிருந்தார்.” இயேசுவின் சீடருக்கும் இந்த உலகத்திற்கும் பிதாவைத் தெரியாதபோது, இயேசு கிறிஸ்து மட்டும் பிதாவை நன்கு அறிந்திருந்தார் என்பதில் நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. அவர் வெளிப்படுத்தின வார்த்தைகள் மூலமாகவும் இப்பொழுது திறக்கப்பட்டிருக்கிற யுகங்களுக்கடுத்த திட்டத்தின் மூலமாகவும் நாம் தெரிந்து கொள்ள கற்றுக்கொள்கிறோம். இதுபற்றி மறுபடியும் இயேசு கூறிய வார்த்தைகளைக் கவனித்துக் கேட்போமாக: “நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன், நீர் என்னை அனுப்பினதை

*இவர்களும் அறிந்திருக்கிறார்கள்." யோவா. 17:25*

*இப்படிப்பட்ட பரலோகத்திற்குரிய ஆச்சரியமான அறிவின் திறவுகோல் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது: "உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்து உண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர். தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்." (யோவா. 3:31-32) "இந்த மனிதனுக்கு இந்த ஞானம் எப்படி, எங்கிருந்து வந்தது?" என்று இயேசுவின் விரோதிகள் அவரிடத்தில் கேட்டத்தில் ஆச்சரியமில்லை. (மத். 13:54) பரலோக காரியங்களில் அவருடைய ஞானம் இதிலிருந்து விளங்குகிறது. நீண்ட காலமாக பிதாவுக்கு அறிமுகமானதோடு மட்டுமன்றி, மிக நெருக்கமானவராகவும் இயேசு இருந்தார். பிதாவின் வாக்குத் தத்தங்களின் பேரில் அசைக்க முடியாத விசுவாசங் கொண்டிருந்தவராக, பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்டவராக இருந்ததால் சாத்தானையும், உலகத்தையும், மாம்சத்தையும் வெல்லக்கூடிய வல்லமையுடையவராகவும், நம்முடைய பாவங்களுக்காக தேவனால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ப-யைச் செலுத்துகிறவராகவும் இருந்தார். இது குறித்து ஏசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டதாவது: "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியாவார்: என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்." (ஏசா. 53:11)*

*தெய்வீக திருவசனங்களின்படி விசுவாசத்தைக் கொண்டு நடக்கிறவர்கள் மாத்திரமே பிதாவையும் குமாரனையும் அறிந்து கொள்வார்கள்; மனுக்குலம் முழுவதையும் ஒப்புரவாக்குதலுக்குக் கொண்டு வர பிதாவும் குமாரனும் இணைந்தே தீட்டிய திட்டத்தை நிறைவேற்றும் போதுதான், அவர்கள் இந்த ஒப்புரவாகுத-ன் கிரியையின் மேன்மையையும் விசேஷத்தையும் அறிந்து தெளிவடைவார்கள். திருச்சபையின் இலக்கம் பூர்த்தியான பின்பு, மகிமையில் மணவாட்டி தன் மணவாளனோடு கூட்டிச் சேர்க்கப்பட்ட பின்பு அந்த மகிமையின் இராஜ்யம் ஆரம்பமாகும்*

*நாள் வெகுகாலம் செல்லாது. அந்த சமயத்தில் பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். தேவனுடைய வல்லமையைக் கொண்டு லோகோஸ் (தேவப் பிரதிநிதி)மூலமாக சகலமும் சிருஷ்டிக்கப்பட்டதைப் போல, அவர் மூலமாக சகலமும் முந்தின சீருக்குக் கொண்டு வரப்படும். கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவரை அறிந்து, அவர் எதிர்பார்க்கிற நீதியை நடப்பிக்கிறவர்களாக அமைந்திருப்பார்கள். சிருஷ்டிப்பில் எப்படி யேகோவா தேவனின் சித்தப்படி சிருஷ்டித்தாரோ அப்படியே யேகோவாவின் சித்தப்படி உலகத்தை முந்தின சீருக்குக் கொண்டு வந்த பின்பு, அதை ஆசீர்வதித்து வல்லமையில் ஈடு இணையில்லாதவராக யேகோவா தேவனுக்கடுத்த உன்னத நிலையில் வீற்றிருப்பார். இப்படியாக சங்கீதக்காரர் சொன்னது நிறைவேறும். "உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுள்ளவர்களாய் இருப்பார்கள்; விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்." சங்கீ.110:3.*

*கர்த்தர் நிக்கொதேமுவிடம் சொன்ன வார்த்தைகளைக் கவனிப்போம். பரத்திற்குரிய ஞானத்தை கேட்கும் அவனுக்கு அதற்கான பதில் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் பூமிக்குரியவைகளில் கூட விசுவாசம் வைக்க வேண்டியதில் விசுவாசம் வைக்காமல் இருந்தான். பரலோகத்திற்குரிய ஞானத்தைக் குறித்து நிக்கொதேமுவிடம் இயேசு விளக்கமளிக்கையில், "பரலோகத்திலிருந்திறங்கின (பரலோகத்திலிருக்கிறவருமான* NOT FOUND IN SINAIA TIC MSS. *இந்த அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்கள் மூலப்பிரதியில் இல்லை) மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவா.3:13) என்கிறார். ஒருவனும் கெட்டுப் போவது தேவனுக்குப் பிரியமில்லை. அனைவரும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமென்ற பிதாவின் நோக்கத்தை இயேசு நிக்கொதேமுவிடம் இவ்விதமாகக் கூறினார்: "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு*

கூர்ந்தார்." யோவா.3:16

தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாயிருக்கிற லோகோஸைப் பற்றி ஏசாயா, "அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன் ..." என கூறுகிறார். (ஏசாயா. 9:6) சாலமோன் கிறிஸ்துவைப் பற்றி ஞானம் என்ற பெயரிலே விவரிக்கிறார். சுவிசேஷகனாகிய யோவான் யோவா. 1:1, 18-ல் கூறுகிறவைகளுக்கு இது இசைந்திருக்கிறது. சாலமோன் வாக்கியங்களைக் கவனிப்போமாக:

"கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வ முதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்நதார். பூமி உண்டாகுமுன்னும் ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் நான் அபிஷேகம் பண்ணப்பட்டேன். ஆழங்களும், ஜலம் புரண்டு வரும் ஊற்றுக்களும் உண்டாகுமுன்னே நான் ஜநிப்பிக்கப்பட்டேன். மலைகள் நிலை பெறுவதற்கு முன்னும் குன்றுகள் உண்டாவதற்கு முன்னும், அவர் பூமியையும் அதின் வெளிகளையும், பூமியிலுள்ள மண்ணின் திரள்களையும் உண்டாக்குமுன்னும் நான் ஜநிப்பிக்கப்பட்டேன். அவர் வானங்களைப் படைக்கையில் நான் அங்கேயிருந்தேன்; அவர் சமுத்திர விலாசத்தை வட்டணிக்கையிலும், உயரத்தில் மேகங்களை ஸ்தாபித்து, சமுத்திரத்தின் ஊற்றுகளை அடைத்து வைக்கையிலும், சமுத்திர ஜலம் தன் கரையைவிட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்துகையிலும், நான் அவர் அருகே செல்லப் பிள்ளையாயிருந்தேன்; நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாய் இருந்து, எப்பொழுதும் அவர் சமூகத்தில் களி கூர்ந்தேன்." நீதி.8:22-30.

இதுவரைக்கும் நாம் லோகோஸைப் பற்றி கவனித்ததற்கு கூடுதலாக, அவர் தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருப்பதுடன் சர்வ சிருஷ்டிகளுக்கும் முந்தின ஒரே பேறுமானவர். மற்ற சிருஷ்டிகள் யாவும் அவரைக் கொண்டும் அவர் மூலமாகவும் சிருஷ்டிக்கப்பட்டன. இது சம்பந்தமாக நம்முடைய கர்த்தர் சொன்ன வார்த்தைகளைக் கவனிப்போமாக, "பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும், இதோ சதா காலங்களிலும்

*உயிரோடிருக்கிறேன்." (வெளி.1:17,18) மேலும் "முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறாதவது." (வெளி.2:8) லோகோஸைத் தவிர வேறு ஒருவரையும் தேவன் நேரடியாக சிருஷ்டிக்கவில்லை. லோகோஸ் மூலமாகத்தான் மற்ற எல்லா சிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப்பட்டன. லோகோஸ் மட்டுமே தேவனுடைய சிருஷ்டிப்புக்கு முதலும் கடைசியுமானவர். வேறு எந்தக் கோணத்திலும் இதைப் பார்ப்பது தவறாகும். மேற்கண்ட வேத வசனங்களுக்கு ஒத்துப் போகாத வழியில் சிந்தித்தால் அது முரண்பாடாகிவிடும்.*

## "லோகோஸ் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்"

*-யோவா. 1:14-*

*நமது ஆண்டவர் மாம்சத்தில் வெளிப்பட்டது, சாதாரணமாக அவதாரம் எடுத்தார் என்று சொல்லப்படுகிறது. அவதாரம் எடுத்தார் என்ற சிந்தனை தவறானது மட்டுமின்றி வேதத்திற்கு முரணானது. அவதாரம் எடுத்தார் என்றால் மரியாளிடமிருந்து பெற்ற மாம்சசரீரம், அவரது ஆவிக்குரிய சரீரத்திற்கு வெறும் ஓர் ஆடையாக, ஒரு போர்வையாக இருந்தது என்று பொருள். இந்த கோட்பாட்டின் பிரகாரம் நமது ஆண்டவர் இந்த பூமிக்குரிய வாழ்வில் முன் இருந்தது போலவே ஆவியின் ஜீவியாக இருந்தார் என்று பொருள்படுகிறது. முற்காலங்களில் ஆபிரகாம், மனோவா, லோத் போன்றவர்களுக்கு தூதர்கள் காட்சியளித்தது போல, நமது ஆண்டவரும் மனித சாயலானார் என்று சொல்லப்படுகிறது. (ஆதி.18:1,2; 19:1; நியாயா.13:9-11) இதனுடைய அடிப்படைக் கருத்து தவறான அனுமானங்களைக் கொடுப்பதினால் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பைப் பற்றி அநேக முரண்பாடான கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவதாரக் கொள்ளையை ஏற்றுக் கொண்டால், நமது கர்த்தர் கெத்சமனேயில் பட்ட பாடுகளெல்லாம் பாசாங்காக ஆகிவிடும். ஆவிக்குரிய ஜீவியாக இருந்தால் அவருக்கு பயமோ, களைப்போ ஏற்படாது. இந்த அவதாரக் கொள்கையின்படி சிந்தித்தால் அவர் பாடுகளோ களைப்போ அடைந்திருக்க முடியாது. அதன்படி நமது கர்த்தரின் ஜெபம் போலியான பாசாங்காக இருந்திருக்கும். இந்த அவதாரக் கொள்கையின்படி அவரே தேவனாயிருந்தால், அவரே அவரை நோக்கி ஜெபம் செய்வது எப்படி சாத்தியமாகும்? எனவே*

அப்போஸ்தலர்கள் இயேசுவை சுற்றி இருக்கும்போது, அவர் பாவனையான ஜெபம் பண்ணினார் என சிலர் விவாதிக்கின்றனர். இதே தவறான சிந்தனையின் அடிப்படையில்தான் இயேசு மரித்ததும் கூட பாவனையான மரணம் என சிலர் கருதுகின்றனர். ஏனெனில் இயேசு பிதாவாக இருந்தால் அவர் நித்திய நித்தியராக சாகாமையுடையவராக இருப்பதால், அவர் மரணமடைந்திருக்க முடியாது எனச் சிலர் வாதிடுகின்றனர். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்" என்று கதறியதும், மரித்ததும் போலியான பாசாங்காக இருந்திருக்கும். அதைக் கேட்டவர்களும் பார்த்தவர்களும் தங்கள் மனதில் அவரது வேதனையை பதியவைக்க அப்படிச் செய்தார் என்றாகிறது. இந்த அவதாரக் கோட்பாட்டை தர்க்கசாஸ்திரத்தின்படி பார்த்தால், மனிதரின் பாவத்திற்கு உண்மையான மரணம் செலுத்தப்படவில்லை; ஆனால் அதைப் போன்ற ஒரு சாட்சி, நாடகக்காட்சி போல, சினிமா படம் போல, நல்ல காரியத்திற்கு ஒரு ஏமாற்ற நாடகத்தை நடத்தினால் போதும் என்றாகிறது.

இவை எல்லாம் தவறானவையே. தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தின் கருத்துக்கு முற்றிலுமாக எதிரானவை. முன்பு தேவதூர்கள் மனித சரீரத்தில் வந்தது போல இயேசு கிறிஸ்து வரவில்லை, ஆவியின் சரீரத்திற்குப் போர்வை போல மாம்ச சரீரத்தில் வந்தார் என்று வேதாகமத்தில் எங்கும் ஆதாரம் கிடையாது. தன்னுடைய ஆவியின் சாயலைத் துறந்து நம்முடைய பாவ மாம்ச சாய-ல் மட்டுமே வந்தார் என கிரேக்க மூலம் தெளிவுபடுத்துகிறது. அதன்படியே வேதவசனம், "லோகோஸ் (வார்த்தை) மாம்சமானார்" என்று சொல்லுகிறது. அதில் அங்கே வஞ்சனையில்லை, அவமானமில்லை. அவருடைய மகிமையையும் வல்லமையையும் வைத்துக்கொண்டு, தன்னைத்தான் தாழ்த்தினது போல காண்பிக்கவில்லை; ஆவிக்குரிய மேன்மையான சுபாவத்தை வைத்துக்கொண்டு, நம் நிமித்தம் தரித்திரரானது போல அவர் காணப்படவில்லை. ஒரு அடிமைக்குரிய ஆடையை வெறுமே போர்த்திக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அவர் ஒரு மனிதனானார். "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனிதானாகிய கிறிஸ்து இயேசு அவரே." *(I தீமோ. 2:6)*

*இயேசுவின் விசேஷித்தப் பணியாகிய ஈடுபலியைக் குறித்து தொடர்ந்து பார்ப்போம். ஈடுபலியை நிறைவேற்ற அவர் முழுமையான மனிதனாக இருக்கவேண்டும். பாவம் செய்த மனிதன் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டபோது பூரண நிலையில் இருந்தான். அவனை மீட்க வேண்டுமானால் இன்னொரு பூரண மனிதன் தேவை. பூரண மனிதன் பூரண நிலைக்கு சற்று மேலான நிலையிலோ அல்லது சற்று கீழான நிலையிலோ இருக்கக்கூடாது. ஒரு மனிதனின் ஜீவனை மீட்க மற்றொரு மனிதனின் ஜீவன் விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே தெய்வீகச் சட்டம். "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." (I கொரி.15:21) நாம் அபூரணராக, பாவ நிலையிலிருக்கிறது போல, நம்முடைய மீட்பரும் இருந்தார் என்று யாரும் தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். இதற்கு நேர்மாறாக வேதவசனம் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறது. அவர், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்." எபி.7:26, 28; லூக்.1:35*

*"அவர் பாவிகளுக்கு விலகியிருந்தார்" என்பதை சிலர் ஏற்றுக் கொள்வது கடின உபதேசமாகத் தோன்றுகிறது. முழு மனுக்குலமும் கறைபடிந்த பின்னர், அவர் பாவமில்லாத மனிதனாக எப்படி இருக்க முடியும்? தேவனுடைய திட்டத்தின்படி இது எப்படி சாத்தியமாகும் என்பதை ஆராய்வோம். அபூரணமான, பாவம் செய்த, ஆதாமின் பாரம்பரியத்தில் வந்த ஒருவன் நம்மைப்போன்று பாவியாயிருக்கிற ஒருவன் நமக்கு மீட்பராக முடியாது என்ற உண்மையை நம் மனதில் பதியவைக்க வேண்டும். உலகில் பாவம் செய்தவர்கள் ஏராளமானவர்கள் இருக்கும்போது தன்னுடைய குமாரனை அனுப்பாமல் வேறு யாரையாவது அனுப்பியிருக்கலாம் அல்லவா? பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற தங்களது ஜீவனையும் கொடுக்க விருப்பமுள்ள அபூரண மனிதர்கள் அநேகர் இருந்தனர். இதை எபிரேயர் 11ஆம் அதிகாரம் உறுதிப்படுத்துகிறது. அதில் அநேகர் "தேவன் மேல்வைத்த விசவாசத்தில் தங்கள் ஜீவனையும் பெரிதாக எண்ணவில்லை" என்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. பாவத்திற்காக தியாகம் செய்ய பாவிகள் பலர் இருந்தாலும் பாவமே இல்லாத ஒருவர்தான் பாவத்திற்கு ஈடுபலி செலுத்தத் தகுதியானவர்.*

"எல்லோரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்." "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று சொல்லும் வேதவசனம், மேலும் "ஒருவனாகிலும், தன் சகோதரன் அழிவைக் காணாமல்... அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங் கூடாதே (ரோம.3:10,23; சங்.49:7) என்று கூறுகிறது. கர்த்தர் இப்படிப்பட்ட பூரண, பாவமற்ற மனிதனை மீட்க பொருத்தமான மனிதன் ஒருவனுமில்லை என்று கண்டு, உலகை இரட்சிக்க வல்லவரான ஒருவருக்கு அந்தப் பொறுப்பைப் கொடுத்தார். கர்த்தர் மூலமாக பிதாவண்டையில் சேர விரும்புகிற யாவரையும் அவர் இரட்சிக்க வல்லவர். (சங்.89:19; ஏசா.63:1; 59:16; எபி.7:25)

கர்த்தருக்கு மனுக்குலத்தின் மீது இவ்வளவு அன்பும் அனுதாபமும் எப்படி ஏற்பட்டது என்பதையும், நமது கர்த்தர் தாயாகிய மரியாள் மூலம் எப்படி மனுக்குலத்தில் ஒருவரானார் என்பதையும், ஆனாலும் ஆதாம் இழந்த இழப்புக்கள், கறைதிரை, பாவம், சாபம் இவற்றில் எதையுமே அவர் எப்படி சுதந்தரித்துக் கொள்ளவில்லை என்பதையும் காண்போம். அவர் ஆதாமின் மூலமாக வந்திருப்பாரேயாகில், ஆதாமின் மூலமாக வந்த பாவம், சாபம் ஆகியவைகளைச் சுதந்தரித்திருப்பார். தெய்வீக நீதியினால் மரணத்திற்குட்படுத்தப்பட்ட சாபத்திற்கு ஆளாகியிருந்தால், ஆதாமையும் மனுக்குலத்தையும் விலைக் கிரயத்திற்குப் பெற்றுக் கொள்ளத்தக்க ஈடுபலியைச் செலுத்த தகுதியில்லாமல் போயிருப்பார். அவருக்கு தனது தாய் மூலமாக எந்தவித பாவமும் அபூரணமும் தொற்றிக் கொள்ளவில்லை. இதைக் குறித்து அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

## அத்தியாயம் 4

# ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் மாசில்லாதவர்

*முரணானவைகளாக காணப்படுகிற வசனங்களை இசைவுள்ளதாக்குதல் - மேரி மாதா பாவமில்லாதவர் என்ற ரோமன் கத்தோலிக்கரின் போதனை நிலைநிறுத்தப் படவில்லை-தெய்வீக எற்பாட்டிற்கு இயேசுவின் பாவிகளுக்கு விலகின பிறப்பு அவசியம்-இல்லையென்றால் ஈடுபலி சாத்தியமில்லை-புரோட்டோ பிலாஸத்தையும் ஜீவனையும் இணைக்கும் விஞ்ஞானத்தின் நவீன அனுமானம்-லோகோஸ் மாம்சமானது - ஸ்திரீயின் பிறப்பு இன்னும் புனிதமடையவேண்டும்-அபூரண தாய் எப்படி மாசற்ற ஒருவரை பிறப்பிக்க முடிந்தது-வேதம் உறுதிப்படுத்துவது போல இதே கோட்பாடுதான் தெய்வீக திட்டத்தின் மற்ற அம்சங்களில் செயல்படுத்தப்படுகிறது.*

*"அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத் தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை." யோபு 14:4*

*"அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டா ரென்று அறிவீர்கள், அவரிடத்தில் பாவமில்லை." 1 யோவா 3:5*

*"பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்." எபி. 7:26*

**ஆ**தாமின் சந்ததியார் விஷசுனையிலிருந்து வெளிப்பட்ட விஷக்கிருமிகள் தாக்கியதால் அவர்களும் பாவத்திற்கு உள்ளாக்கப் பட்டனர் என்பது முதலாவது நமது அனுபவ அறிவுக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. முதலாவது வசனம் அப்படி

கூறுகிறது. ஆனால் இக்கருத்துக்கு முரண்பாடாக மனிதனாக வந்த இயேசு கிறிஸ்து மற்ற மனிதர்களிலிருந்து மாறுபட்டவராக, கறை திரையற்றவராக, பாவமற்றவராக, மாசற்றவராக இருந்தார் என்று பின்னால் கூறப்பட்ட வேதவசனம் அறிக்கையிடுகிறது. ஒப்புரவாகுதலின் முழுமையான கொள்கைப்படி வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற இரட்சகர் பூரண மனிதனாக இருக்க வேண்டும். உலகத்தின் கறை திரைகளுக்கு விலகினவராகவும் அதே சமயம் மனித குலத்தில் தோன்றினவராகவும் இருக்க வேண்டும். கர்த்தருடைய சிந்திக்கின்ற திறன் படைத்த மக்கள் மத்தியில் இது ஒரு முக்கியமான கருத்தாகும். எல்லா மனித நடைமுறையில் சாத்தியமற்ற காரியத்தையும் யோபுவினுடைய சாட்சியையும் அடிப்படையாகக் கொண்டுப் பார்க்கும்போது நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விஷயத்தில் இதை தேவன் எவ்வாறு நிறைவேற்றினார்? மனித இனத்தை அழிக்கிற பாவத்திற்கும் சாபத்திற்கும் காரணராகிய முதல் பூரண மனிதனுக்கு ஒரு சரியான விலைக்கிரயத்தை, ஈடுபலியை கொடுக்க ஒரு மாசில்லாதவரை இந்த சந்ததியிலிருந்து பிறப்பிக்கிற, இயலாத இந்த காரியத்தை எவ்வாறு தெய்வீக ஏற்பாடு நிறைவேற்றியது என்பதை விளக்க அதிகமான ரூபகாரங்களை கொடுப்பதே இந்த அத்தியாயத்தின் முக்கிய வேலையாகும்.

தேவனால் போதிக்கப்பட்ட மெய்யான சீஷர்களுடைய இரட்சிப்புக்கோ விசுவாசத்திற்கோ நல்லொழுக்க அறிவு அத்தியாவசியமானதல்ல. ஆனால் அநேக தீங்கான விமரிசனம் (நியாயமான, நியாயமற்ற) நிலவுகிற தற்காலத்தில், கிறிஸ்தவ மையக்கொள்கையும், ஈடுபலிக்கு மிகவும் நெருங்கினதுமாகிய இந்த சத்தியத்தை (ஒப்புரவாகுதலை) அறிந்திருப்பது அவசியம். ஏனெனில் பிரசங்க மேடை மற்றும் பீடத்திலிருந்து ஈடுபலியைக்குறித்த போதனைக்கு எதிரான சத்துருவின் தாக்குதலை தாங்கவும், கர்த்தருடைய ஜனங்களின் விசுவாசத்திற்கு ஊக்கமளிக்கவும் இது ஏற்படுத்தப்பட்டது. வேதாகம சத்தியத்தின்படி நமது கர்த்தர் கறை திரையற்றவராக இருந்தார் என்பதே பல நூற்றாண்டுகளாக அநேக பரிசுத்தவான்களுக்கும்,

நமக்கும் போதுமான அடிப்படை ஞானமாய் உள்ளது. இந்த ஞானத்தைத் தந்த தேவனுக்கு நன்றி கூறுவோம். இந்த சத்தியத்தைக் குறித்த வேதாகம வார்த்தையெல்லாம், ஏற்ற வேளையில் விசுவாச வீட்டாருக்கு வருகிற போஜனமெல்லாம் இயற்கை நியதிக்கு இசைவாகவும் தர்க்க சாஸ்திரத்தினால் உறுதிப்படுத்தப் படுகிறதாகவும் இருக்கிறது.

ரோமன் கத்தோலிக்க சபை, தங்களுடைய விசுவாசத்தை நிலைநிறுத்த மரியாளை புனிதவதியாகவும், அவள் கறை திரையற்றவள் என்றும், பூரணமானவள் என்றும் கூறுகின்றனர். இதன் மூலமாக இயேசு கிறிஸ்துவும் பூரணமானவர் என்றும், பாவங்களுக்கு விலகினவர் என்றும் கூறுகின்றனர். இது தவறு. இந்த உலகத்தில் ஆதாமின் வழியில் வந்த எல்லா மனிதர்களைப் போல மரியாளும் ஒருவரே. அவளுடைய ஜீவனும் ஆதாமின் மூலமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதே. மற்ற எல்லாரையும் போல, ஆதாமின் சந்ததியார் சுதந்தரித்துக் கொண்ட மனித பலவீனங்களாகிய கறைதிரை, பாவம் மட்டுமல்லாமல், தவிர்க்க முடியாத மரணத் தீர்ப்புக்கும் உட்பட்டவள். மனிதனாகிய கிறிஸ்து ஒருவரே இதற்கு விதி விலக்கானவர் என்பதே உண்மை.

அநேக இயற்கையின் சீற்றங்களிலிருந்து தேவன் நம்மை தெய்வாதீனமாக காப்பாற்றுவதை நாம் மறவாதிருப்பது நல்லது. உதாரணமாக இயற்கையின் விதியின்படிஉஷ்ணமடைந்த எந்தப் பொருளும் விரிவடைகிறது. குளிர்வடையும் போது சுருங்குகிறது. இதற்கு தண்ணீர் விதிவிலக்காகும். நீரைக்குளிரூட்டும்போது விரிவடைந்து திடமான பனிக்கட்டியாகிறது. உஷ்ணமடையும்போது ஆவியாகப் போய்விடுகிறது. விதிவிலக்கு இல்லாமல் போயிருந்தால், ஆறு கோடைக் காலத்தில் உருகாத பனிக்கட்டியாய் இருந்திருக்கும். அதுபோல கனிமப் பொருட்களிலேயே ஆண்டிமணி (பாதரசம்) இயற்கைக்கு மாறாக விதி விலக்காயிருப்பது எவ்வளவு உதவியாக இருக்கிறது. இதனைப் பயன்படுத்தி அச்சிடும் போது ஓரங்கள் ஒழுங்காயிருக்கிறது. இல்லாவிடில் குளிர் காலத்தில் ஒரு மாதிரியும், கோடை காலத்தில் வேறு மாதிரியாகவும் ஒழுங்கற்றவையாயிருக்கும். தேவ கிருபையால் ஒரே ஒரு விதிவிலக்கான ஈடுபலின் மூலம், ஈட்டுக்

*கிரயம் கொடுத்து மனிதரை மீட்டுக் கொள்ள வாய்ப்பாயிற்று. இந்த சிந்தனையோடு, எப்படி லோகோஸ், "ஆபிரகாமின் வித்து," "ஸ்திரீயின் வித்து," மாம்சமாகியும் கறைதிரை இல்லாதிருந்தார் என்பதையும், ஆதாமுக்கும் அவனது சந்ததிக்கும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஈடுபலியானார் என்பதையும் நாம் ஆராய்வோம்.*

*உயிரோடிருக்கும் எந்த ஜீவியும் வல்லமையையும் ஜீவனையும் தகப்பனிடமிருந்து பெறுகின்றதேயன்றி தாயினிடமிருந்து அல்ல என்ற கருத்தை வேதம் ஏற்கிறது. ஜீவ வித்தை தகப்பனிடத்திலிருந்து தாய் பெற்றுக் கொள்கிறாள். அவ்வித்திலிருந்து கரு உருவாகி, தன்னைத்தானே பேணிக் கொள்ளும் சமயம் வரும் வரையில், தாயிடமே வளர்க்கப்படுகிறது. அதாவது தனக்கு தேவையான ஜீவனுக்கு அவசியமான ஆகாரத்தை பூமியிலிருந்தும், காற்றிலிருந்தும் பெற்று, தன்னைத் தானே போஷித்துக் கொள்ளும் திறன் ஏற்படும்வரை தாயின் கருவில் வளர்க்கப்பட்டு அதன்பின்பு பிறப்பு ஏற்படுகிறது.*

*தகப்பன் என்று சொல்லும்போது ஜீவன் தருபவர் என்ற முக்கியப் பொருளை உணர்த்துவதாயிருக்கிறது. அது போலவே, தேவனே பிதா, யாவருக்கும் ஜீவன் அளிப்பவர்; பூமி ஆதாமுக்குத் தாயாக இருந்தது போலவே அனைத்துலக மக்களுக்கும் பூமி தாயாகிறது. (லூக்.3:38) ஆதாமின் உருவம் பூமியின் இயல்புகளைக் கொண்டே உருவேற்படுத்தப்பட்டது. எனவே பூமி ஆதாமுக்குத் தாய் போன்றது. ஆதாமை மனிதன் என்று சொல்வதற்கான ஜீவன், பிதாவின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. எனவே தேவன் தந்தையாகிறார். மனித வகைகளில் ஆண்களுக்கு மட்டுமே ஜீவன் கொடுக்கக் கூடிய வல்லமை உருவாக்கப்பட்டது. இந்த ஜீவனை கொடுக்கக்கூடிய வல்லமை, ஒவ்வொரு ஆணுக்கும், தனக்கு சந்ததியைப் பிறப்பிக்கும் வல்லமையாக வழங்கப்பட்டது.*

*இந்தக் கொள்கைக்கு இசைவாக பிள்ளைகள் பிதாவினால் உருவாக்கப்பட்டு, தாயால் பெற்றெடுக்கப்பட்டார்கள் என்ற வழக்குச் சொல் ஏற்பட்டது. (ஆதி.24:47) இவ்வாறாக, யாக்கோபு எகிப்துக்குச் சென்றபோது அவன் குமாரர்கள் மூலமாகத் தோன்றிய குமாரர்கள் எழுபது பேர் என்று எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த எழுபது ஆத்துமாக்களும் யாக்கோபின் அரையிலிருந்து*

தோன்றியவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆதி.46:26-27; யாத்.1:5) இவ்விதமாகவே சாலமோன் தாவீதின் கர்ப்பப் பிறப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (I இராஜா. 8:19; II நாளா. 6:9) இவ்விதமாகவே பவுலும், "எல்லா இஸ்ரயேலரும் ஆபிரகாமின் அரையிலிருந்து வந்தவர்கள் " என்கிறார். "மெல்கிசேதேக் ஆபிரகாமுக்கு எதிர் கொண்டு போனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், தசமபாகம் வாங்குகிற அவனும், ஆபிரகாம் மூலமாகத் தசம பாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்." (எபி.7:5, 10)

இப்படியாக முழு மனுக்குலமும் தகப்பனாகிய ஆதாமினால், தாயாகிய ஏவாள் மூலமாக உருவாக்கப்பட்டது. ஏவாளிடமிருந்து ஜீவன் உண்டாவில்லை. அதனால் தான் "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஏவாளுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல என்று எழுதப்படவில்லை. ஆதாமினால் உண்டான மனித இனம், ஆதாம் சோதனையில் தோல்வியடைந்தபோது, முழு மனுக்குலமும் பாவம் சாபம் மரணத் தீர்ப்புக்குள்ளாயிற்று.

சந்ததி அபிவிருத்தியைப் பற்றியும் பாலூட்டிளைப் பற்றியும் நவீன அறிவியல் கூறும் கருத்தையே வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. ஆண்கள் மூலமாகவே சந்ததி விருத்தியடைகிறது என்று விஞ்ஞானிகள் இயற்கையின்படி ஏராளமான தர்க்கரீதியான ஆதாரங்களுடன் விளக்குகின்றனர். இதை ஒரு எளிய விளக்கத்துடன் காண, ஒரு கோழியையும் முட்டையையும் எடுத்துக் கொள்வோம். கோழியிடம் உயிர் அணுக்கள் கிடையாது. எனவே, சேவலிடமிருந்து உயிர் அணுக்களைப் பெற்று அந்த உயிர் அணுக்களைப் போஷித்து முட்டையாக உருவாகக்கூடிய திறனை பெற்றிருக்கிறது.

முட்டையில் உயிர் அணுக்கள் மட்டுமல்லாமல், அதற்கு வேண்டிய போதுமான சரிவிகிதளவில் போஷாக்குகளும் தாதுக்களும் அடங்கியுள்ளன. உயிர் வித்தின் சரிவிகித அளவிலே எல்லாம் முட்டைக்குள் அடங்கியுள்ளன. அதற்கு ஏற்ற சுற்றுப்புறச் சூழ-ல் நன்கு வளரும். மஞ்சள் கரு வெள்ளைக்கரு ஆகியவற்றிலுள்ள உயிர் அணு கருவாகி மெல்ல மெல்ல உயிராகிறது.

முட்டைக்குள் உள்ள உயிர் அணு முட்டை ஓட்டை உடைத்து வெளியே வரும்வரை தனக்கு வேண்டிய உணவுகளை முட்டைக்குள்ளே பெற்று வளர்ந்து வெளிவருகிறது. இப்படியேதான் மனிதனும், மற்ற ஜீவ ராசிகளும் ஜீவனைப் பெறுகின்றனர்.

தகப்பன் பரிபூரணமாக இருந்தால் பிள்ளையும் பரிபூரணமாக இருப்பான் என்பது சரியான காரண காரியத்தின்படி வேதமும் விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். சுமாரான சந்தர்ப்ப சூழ்நிலையில்கூட பூரண உயிர் வித்து பெண் முட்டைக்குள் சென்றவுடன் உறுதியான ஆரோக்கியமான கருவாக உருவெடுக்கிறது. பூரணமாக உருவான கரு, கருப்பைக்குள் தனக்கு வேண்டிய ஆகாரத்தை எடுத்துக் கொண்டு அதற்குள்ளேயே சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி குறுகி, நீண்டு, அசைந்து, சஞ்சரித்துக் கொண்டு வளர்கிறது. எல்லா மூலகங்களும் தனக்குச் சாதகமாக இல்லாவிட்டாலும் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு, வேண்டாததை விட்டுவிட்டு வசதியற்ற சூழ்நிலையிலும் சௌகரியமாக தனக்கு எந்தச் சேதமும் ஏற்படாமல் வளர்கிறது. மாறாக, உயிர் வித்து அபூரணமாக இருந்தால், சுற்றியுள்ள பலவீனத்தையும் தாயிடமுள்ள பலவீனத்தையும் மேற்கொள்ள முடியாமல், விஷத்தன்மையை அகற்ற முடியாமல், பலவீனத்திற்கும், வியாதிக்கும் ஆளாகிறது.

பழங்கால பழமொழி ஒன்று "ஒருவனுக்கு தேவாமிர்தமாக இருப்பது மற்றவனுக்கு விஷமாக இருக்கிறது" என்று கூறுகிறது. நன்றாக செரிக்கக்கூடிய வலிமை பெற்ற மனிதன் தான் உண்ணும் உணவி-ருந்து சத்தை எடுத்துக்கொண்டு ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் நன்றாக செரிக்கக்கூடாத உடலைப் பெற்ற மனிதன் அதே போன்று உண்டால் அவ்வுணவே அவனைக் கொன்றுவிடும். திடகாத்திரமானவன் ஆகாரத்தில் தேவையானவைகளை எடுத்துக் கொண்டு தேவையில்லாதவைகளை தள்ளிவிட்டு விடுகிறான். ஆனால் பலவீனமானவன் அவ்வாறு செய்ய இயலாததால் அவ்வுணவுப் பொருள்களே நஞ்சாகி அடிக்கடி நோய்வாய்ப்படுகிறான். மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருவரும் பூரணர் இல்லை என்பதை நினைவு கூறவேண்டும். ஆகையால்

ஒவ்வொருவரும் தனது அபூரணநிலையால், உணவிலும், நீரிலும், காற்றிலும், உள்ள கிருமிகளை எதிர்கொள்ள திராணியற்றவர்களாயிருக்கின்றனர். இதனிமித்தம் எல்லாரும் அபூரணராக பிறந்து, வியாதியை நீண்ட நாள் மேற்கொள்ள முடியாத வர்களாயிருக்கின்றனர். வியாதி பலகீன உறுப்புகளுக்கு முதலில் பரவி எல்லாவற்றையும் முடிவுக்குக் கொண்டு வந்து விடுகிறது.

ஏவாள் மட்டும் பாவம் செய்திருந்தால் இந்த மனுக்குலத்திற்கு மரணம் ஏற்பட்டிருக்காது. ஆதாம், தான் சிருஷ்டிக்கப்பட்டப் பூரண நிலைமையிலேயே நிலைத்திருந்தால் ஜீவனை இழந்திருக்க மாட்டான். அவனுடைய சந்ததியும் பாவமில்லாமல் பிறந்திருப்பார்கள். தாயாகிய ஏவாள் மீது விதிக்கப்பட்ட மரணத் தீர்ப்பானது அபூரணமான சாபங்களை அவளுக்குக் கொண்டு வந்தது. ஏவாள் மட்டுமே நன்மை தீமையான கனியைச் சாப்பிட்டு சாபம் பெற்றிருந்தால் அவளுடைய சந்ததிக்கு இந்தப் பாவம் வந்திருக்காமல், அவளுடைய சந்ததி பூரண நிலைமையில் இருந்திருப்பார்கள். அவளுடைய சந்ததி சத்தற்ற உணவி-ருந்து நன்மையானவைகளை ஏற்றுக் கொண்டு தீமைகளைவிட்டு, பாவம் சாபம் ஆகியவற்றிற்கு விலகி இருப்பார்கள்.

மாறாக, ஆதாம் பாவம் செய்து ஏவாள் பாவம் செய்யாதிருப்பாளேயானால். பாவத்திற்காக ஆதாமும் அவனுடைய பின்வரும் சந்ததியும் மரண தண்டனை அடைந்திருப்பார்கள்; தாயாகிய ஏவாள் எவ்வளவுதான் ஆரோக்கியமான முட்டையைப் பெற்றிருந்தபோதிலும், தகப்பனாகிய ஆதாம் பரிபூரண நிலைமையை இழந்ததால், அவனுடைய வித்து பாவத்திற்குள்ளாகியிருந்ததால் அபூரண நிலையை அடைந்திருக்கும். “ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல,” “ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே... எல்லாருக்கும் மரணம் ஏற்பட்டது” என்று வேதம் கூறுகிறது. - I கொரி.15:22; ரோம.5:12, 19

முதலாம் ஆதாமுக்கும், இரண்டாம் ஆதாமுக்கும் இவர்களுடைய மணவாட்டிக்கும் இடையே உள்ள ஒற்றுமை எவ்வளவு ஆச்சரியமாக உள்ளது. மனித இனத்தின் மரணம் ஏவாளால் விளைந்தது அல்ல, ஆதாம் மட்டுமே அதற்கு பூரணப் பொறுப்பாளி. எனினும் அந்த சாபத்தைக் கொண்டு வருவதில் ஏவாளுக்கு முக்கிய

பங்குண்டு. அதைப் போலவே பாவம், சாபம், மரணத்தினால் அழிந்து வருகிற மனுக்குலம் மீட்படைய அந்த மீட்பின் பணியைச் செய்வதில் மணவாட்டிக்கும் முக்கியப் பங்கிருந்தாலும் இயேசு கிறிஸ்துவே மீட்புப் பணியின் நாயகராவார். "இழந்து போனதை" சீர்ப்படுத்துவதில் மணவாட்டிக்கும் பங்குண்டென்றாலும், அந்தப் பங்கு கிறிஸ்துவின் மூலமாய் தேவன் மணவாட்டிற்கு காட்டும் தயவு ஆகும்.

ஆதாம் என்கின்ற சுனையே கெட்டுப்போனதால் அவனுக்கு பின்வரும் சந்ததிகள் பாவம், சாபம், மரணம் ஆகியவற்றி-ருந்து விடுபட முடியவில்லை. "அசுத்தத்திலி ந்து சுத்தத்தைப் பிறப்பிக்கத் தக்கவன் யார்? ஒருவனும் இல்லை." இங்கே சொல்லப்பட்டிருக்கும் உதாரணக் குறிப்பு பெண்ணைக் குறிக்காமல் ஆணைக் குறிப்பிடுகிறது என்பதை அறிந்திருத்தல் அவசியம். அசுத்தமாக்கப்பட்ட சுனையிலிருந்து உற்பத்தியாகும் எவனும் சுத்தமானவனாக இருக்க முடியாது. "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." "ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும், உயிரோடிக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக் கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங் கூடாதே." - ரோம.3:10; சங்.49:7-8.

கரு உருவாகி குழந்தையாக பிறக்கும் வரையுள்ள காலப்பகுதியில் தாயின் மனநிலையைப் பொருத்தே அந்தக் குழந்தையின் குணமும், சுபாவமும் அமையும் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. பிறவியிலேயே குழந்தைக்கு உடல்நிலை பாதிப்போ, மனநிலை பாதிப்போ ஏற்படுவதை உதாரணமாகக் கூறலாம். பூரணமான உயிர் அணு ஆரோக்கியமான கர்ப்பப்பையில் இருந்தாலும், அந்தத்தாயின் தீமையான எண்ணம் அந்தக் கருவை நிச்சயமாக பாதிக்கும். தற்காலச் சூழ்நிலையில் மனுக்குலம் இதை தீர்மானிக்க முடியாது. ஏனெனில் இதற்கேற்ற ஆதாரங்களோ சான்றுகளோ கிடையாது. மேற்சொன்ன சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து பிறக்கவில்லை. எனவே நாம் இதை விவாதிக்கத் தேவையில்லை. வேதவாக்கியங்கள் வெளியரங்கமாகத் தெரிவிப்பது யாதெனில்:

*1. இயேசு கிறிஸ்து பிறப்பதற்காகத் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பரிசுத்தமுள்ள மரியாள் "ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளும், தேவனிடத்தில் தயவு பெற்றவளுமாய் இருந்தாள்." (லூக். 1:28- 30,42)*

*2. மரியாள் விசுவாசத்தினால் நிறைந்தவளாயும், தேவனுக்குள் சந்தோஷப்படுகிறவளாயும், தேவத் திட்டத்திற்கு ஒரு கருவியாகவும் இருந்தாள் .*

*3. "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது" (லூக்.1:45-47) என்று மரியாள் கூறினாள். யோசேப்போ அல்லது உலகமோ தன்னை பரிகாசிப்பார்கள் என்று மரியாள் பயப்படவில்லை. அவள் தேவனுக்குள் மனமகிழ்ச்சியாய் வாழ்ந்தாள் என்பதை மேற்கண்ட வசனத்தில் காணலாம். இதனிமித்தம் இயேசு ஆரோக்கியமான குழந்தையாகப் பிறந்தார்.*

*அபூரண, குறைவுள்ள, ஆனால் நல்ல நோக்கமுடைய ஒரு பெண்ணிடமிருந்து பூரண சந்ததி பிறக்காததற்கு ஒரே காரணம், தந்தையினால் பூரண உயிரணுவை கொடுக்க முடியாததேயாகும். எனவே வேத போதனைக்கு இசைவாக இயேசுவின் விஷயத்தில் ஒருபூரண ஜீவன் (ஆதாமிலிருந்து அல்ல) தேவ வல்லமையால் முன்னிருந்த நிலமையிலிருந்து மனித கருவாக மாற்றப்பட்டு தாய் அபூரணமாக இருந்தாலும் பரிசுத்தமாக (தூய்மையாகவும், பூரணமாகவும்) பிறந்தது. (லூக்.1:35) மரியாள், ஆதாமின் சாயலில் மனரீதியாக, ஒழுக்க ரீதியாக, உடல் ரீதியாக அபூரண நிலையிலிருந்தபோதும், இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் இவைகள் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. தற்கால விஞ்ஞான கண்டுபிடிப்புகளின்படியும் வேதாகமத்தின்படியும், இயேசு ஆதாமின் பாவத்திற்குட்படாமல் பூரண மனிதனாகப் பிறந்தார்.*

*தந்தையிடமிருந்து உயிர் தோன்றுகிறது என்றும் தாயிடமிருந்து உருவமும் சாயலும் தோன்றுகிறது என்றும் விஞ்ஞானிகள் நிரூபித்திருப்பதையே வேதாகமும் சாட்சியாக கூறுகிறது. விஞ்ஞான ரூபகாரங்களை சாமான்யன் புரிந்து கொள்ள முடியாது. தேவன் ஞானத்தை பலவகையாகப் பிரித்து*

ஒவ்வொருவருக்கும் தனித்தனியான ஞானத்தைப் போதிக்கிறார். அதனால் எல்லாருடைய சுபாவமும் ஞானமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒரு எல்லைக்கு மேலாக மனிதர் கற்பனைசெய்ய முடியாதபடி தேவன் நிறுத்தி வைத்திருக்கிறார். மனிதன் கழுதையையும் குதிரையையும் சேர்த்து வீரிய இனமான கோவேறு கழுதையை உற்பத்தி செய்தான். ஆனால் தேவன் அவ்வித கலப்பினத்தை இனப்பெருக்கம் செய்ய முடியாதபடி தடுத்துவிட்டார்.

உருவமும், சுபாவமும் தகப்பனிடமிருந்து குழந்தைக்கு உண்டாகின்றது என்கிற பழைய விஞ்ஞானக் கூற்று மறுக்கப்பட்டு, தற்கால அறிவியலின்படி ஜீவன் மட்டும் தந்தையிடமிருந்து வருவதால், தந்தையே ஜீவன் அளிப்பவர் என்று சொல்லப்படுகிறது. சாயல், சுபாவம், பராமரிப்பு ஆகியவைகளெல்லாம் தாயின் மூலமாகவே தரப்படுகிறது. இதை வேதாகமத்தி-ருந்து விளக்க வேண்டுமானால் "மனித குமாரத்திகள்" அதிக அழகுள்ளவர்களென்பதால் அவர்களோடு தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்கள் குடியிருப்பை விட்டுவிட்ட தூதர்கள் சேர்ந்தனர் என்பதை கூறலாம். (ஆதி.6:2,4; யூதா.6; II பேது. 2:4) தேவ தூதர்கள் மனித ரூபம் எடுத்து குழந்தைகளைப் பெற்றபோது, அவர்கள் பலம், பராக்கிரமம், கூர்மையான அறிவு எல்லாவற்றிலும் மனிதனை விட பலமடங்கு மேன்மையானவர்களாக இருந்ததினால் இவர்களைப் "பூர்வத்தில் பேர் பெற்ற மனிதர்களாகிய பலவான்களானார்கள்" என்று வேதாகமம் கூறுகிறது. பூரணத்திலும், வலிமையிலும், ஆயுளிலும், குறைவில்லாத தூதர்களுக்கும் அபூரணமான மரண சாபத்தின் கீழிருந்த பெண்மணிகளுக்கும் பிறந்தவர்களே இந்த பலவான்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

மரிக்கிற ஆதாமின் சந்ததியாரை ஆட்டிப் படைக்கின்ற எஜமான்களாக இந்த பலவான்கள் இருந்தார்கள். இவர்களை எபிரேய மொழியில் நெபிலிம்(NEPHILIM) என்கின்றனர். இவர்களைத் தேவன் அங்கீகரிக்கவில்லை. இவர்கள் ஜீவன் பெறுவதற்கு எந்த ஒரு வாய்ப்பும் வழங்கவில்லை. மரணத் தீர்ப்பும் வழங்கவில்லை. நோவாவையும் அவனுடைய குடும்பத்தாரையும் பாதுகாக்க இந்த

அரக்கர்களை முற்றிலும் ஜலப்பிரளயத்தில் அழித்தது தேவகிருபையே. “இந்த சந்ததியில் நோவா தேவனுக்கு முன்பாக நீதிமானாக இருந்தான்.” ஆதாமுக்குப் பின் வந்த சந்ததியார் மிகவும் கெட்டவர்களாக இருந்தார்கள். அதோடுகூட தூதர்களின் கலப்பினாலே மேன் மேலும் மனித சந்ததி கெட்டுப் போயிருந்தது. புதிய தகப்பன்களாகிய தூதர்களுக்குப் பிறந்ததினால் புதிய அரக்கத் தனமான ஜீவிகள் தோன்றினார்கள் என்று நாம் கூறலாம்.

புராணங்களிலும், இதிகாசங்களிலும் இவர்களின் புகழ் பேசப்படுவதால், இன்றளவும் பெயரைக் கேட்டாலே பயத்துடன் பார்க்கின்றனர். ஜலப்பிரளயத்தில் இவர்கள் அழிக்கப்பட்டு சில நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும்கூட, அவர்களில் சிலர் தப்பிப் பிழைத்து இருக்கிறார்கள் என்ற தவறான செய்தியைக் கேட்டு சமீப கால யுத்தங்களில் வென்றபோதும், யூதர்கள் கலங்கி நடுங்கிப் போயினர். (எண். 13:33; 14:36, 37) கானான் தேசத்தில் பராக்கிரமாசலிகள் இருந்தார்கள் என்பது மெய்யே, இருந்தபோதிலும் இவர்கள் தூதர்களினால் உண்டானவர்கள் அல்ல. இந்தக் கொள்கையை விளக்க இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம். ஜீவன் தகப்பனிடமிருந்து வருகிறது. சுபாவம், உருவம், பராமரிப்பு ஆகியவை தாயிடமிருந்து வருகிறது. யேகோவா தேவன் தெய்வீக சுபாவத்தில் இருக்கிறவர். எனவே வெவ்வேறு சுபாவங்களையுடைய தேவ புத்திரர் தோன்றினார்கள் என்பது உண்மை. ஆவியின் சுபாவமுள்ள தூதர்களுக்கெல்லாம் அவரே தந்தை. (யோபு. 2:1; 38:7; எபி.2:9) அதுபோல மனித சுபாவமுள்ளவர்களுக்கும் அவரே தந்தை (லூக். 3:38). தேவனுடைய சாயலைப் பெறப் போகிற புதிய சிருஷ்டிகளான, முதலாம் உயர்த்தெழுதலில் பங்கு பெற்று, தெய்வீக சுபாவத்திலும் பங்கு பெறப் போகிற பரிசுத்தவான்களுக்கும் ஜீவன் அளிக்கிறவர் பிதாவாகிய தேவனே. ( II பேது. 1:4) தேவனுடைய ஆவியும், வல்லமையுமே ஆவியின் ரூபத்திலுள்ளவர்களை உருவாக்கி அவர்களைப் பரிபாலிக்கிறது. அதே ஆவியும் வல்லமையுமே தான், மனித ரூபத்திலுள்ளவர்களையும் அவர்களுக்குக் கீழான மிருகங்களையும் உண்டாக்கிப் பரிபாலிக்கிறது. (ஆதி. 2:7;I கொரி. 15:47) புதிய சிருஷ்டி தெய்வீக சாயலைத் தரித்துக் கொள்ளும்போது

*தம்முடைய வார்த்தையின்படியே ஜெநிப்பிக்கப்பட்டவர்களாயும், உடன்படிக்கையின் கர்ப்பத்தில் பிறந்தவர்களாயும் உள்ள, இந்த சந்ததியைக் குறித்த தெளிவான கருத்தை தேவன் நமக்கு விளங்கச் செய்கிறார். இந்த உடன்படிக்கை ஆபிரகாமிடம் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையாகும். இந்த உடன்படிக்கையின் தாயாகிய சாராள் மூலமாக ஈசாக்கு பிறந்தார். ஏனெனில் ஈசாக்கு தான் வாக்குத்தத்தத்தின்படியான வாரிசு. இந்த சாராள் உடன்படிக்கையின் மூலமாக நாமும் தேவனுடைய பிள்ளைகளாக, வாக்குத்தத்தத்தின் வாரிசுகளாகிறோம். சாராள் உடன்படிக்கை புதிய உடன்படிக்கை ஆகும். (கலா. 4:23-31; I பேது 1:3; 4, 23; II பேது. 1:4)*

*மேலும் உதாரணமாக கிறிஸ்துவ யுகத்திற்கு முன்னான யூதயுகத்தில், ஒரு குழந்தை தந்தையிடத்திலிருந்து ஆசீர்வாதத்தையும் சலுகைகளையும், தாயினிடத்திலிருந்து தயையும், சுபாவத்தையும் பெறுகிறது என்ற அதே கோட்பாட்டை விளக்குகிறது. தாயிடமிருந்து சுபாவம், உரிமைகள், சலுகைகள், சுதந்திரம் ஆகியவைகளை குழந்தை சுதந்தரித்துக் கொள்கிறது. இவைகளை தகப்பனிடமிருந்து பெறத் தேவையுமில்லை. மென்மேலும் இக்கருத்து வலியுறுத்தப்படும் ஆதார வசனங்கள் - ஆதி. 21:10; யாத். 21:4; கலா. 4:30.*

*மேற்கண்ட விளக்கங்களெல்லாம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு பெண்ணின் மூலமாகத்தான் பிறந்தார் என்பதை எடுத்துக் காண்பிக்கிறது. பரிசுத்தமான வித்து பெண்ணிடத்திலிருந்து "பூமிக்குரிய" சுபாவங்களை சுதந்தரித்துக் கொண்டது. இயேசு முன் இருந்த பரிசுத்த நிலைமையிலேயே, பரிசுத்தத்திலிருந்து பிறழாமல் பூமிக்குரிய சுபாவங்களை பெண்ணிடத்திலிருந்து பெற்றுக் கொண்டார். அசுத்தத்திலிருந்து பரிசுத்தமுள்ளது தோன்றாது."அவர்" தேவனிடத்திலிருந்து வந்தவர். மரியாளினால் அபிவிருத்திச் செய்யப்பட்டு போஷிக்கப்பட்டவர். (யோவா. 8:42; கலா. 4:4)*

*நமது ஆண்டவராகிய இயேசு எல்லாவற்றிற்கும் மேலாக தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டிக்கிறபடியால் இனி அவர் மாம்ச ஜீவியல்ல. ஆதாமின் பாவத்தினால் இழந்த பூரண மனுஷ சுபாவத்தை மனுக்குலம் திரும்பப் பெறுவதே அவரது வேலையாக இருந்தது என்று காண்பிக்கப்படுகிறது. எனவே அவர் முழு*

மனுக்குலத்திற்கும் ஜீவனை அளிப்பவராக அல்லது பிதாவாக இருப்பதாக கூறப்படுகிறது. இப்படியாக தந்தையும், ஜீவன் தருகிறவருமாகிய இயேசு கிறிஸ்து தெய்வீக சுபாவத்தில் இருப்பார். ஆனால் அவருடைய பிள்ளைகளோ மனித சுபாவத்தில் இருப்பார்கள். அவர்களை முந்தின சீருக்கான உடன்படிக்கைக்கு கொண்டு வருவதே ஆபிரகாமின் மூன்றாவது மனைவியாகிய கேத்தூராள் உடன்படிக்கை ஆகும்.

நமது பாடத்தை மறுபடியும் பரிசீலிக்கும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அபூரணமான தாயாரிடத்தில் பிறந்த போதிலும், பரிபூரணமும் குற்றமற்றவருமாக அற்புதமாக பிறந்தார் என்பதை உணர்கிறோம். இது சிருஷ்டிகரின் படைப்பு முறைமைக்கு முரண்பட்டதல்ல, முறையானதே. இதே மாதிரியே முதல் சிருஷ்டியான ஆதாமுக்கு தேவன் ஜீவனைத் தந்தபோது, தாயாகிய பூமி, விசேஷித்த தோட்டமாகிய ஏதேனைத்தவிர, அபூரணமாக இருந்தாலும் ஆதாம் பூரண மனிதனானான். இயேசு கிறிஸ்து மனிதனாக இந்த பூமிக்கு வருமுன் இருந்த பரிசுத்த நிலைமையிலேயே அவருடைய ஜீவ அணுக்கள், மரியாளின் கர்ப்பத்தில் பரிசுத்தமாக நிலை நிறுத்தப்பட்டது என்பதை ஏராளமான வேத ஆதாரங்கள் அறிவுப்பூர்வமாய் உறுதி செய்கின்றன. அவற்றில் ஒன்று, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் இருந்தார்" என்கிறது. (எபி. 7:26) தேவநீதியின்படி இப்படிப்பட்ட ஒருவர் நமது மீட்புக்கு தம்மையே ஈடுகொடுத்து நம்முடைய பாவங்களுக்கு அவர் ஈட்டுக் கிரயமானார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார். இவ்விதமான தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள ஆசாரியர் நமக்கு ஏற்றவராயிருக்கிறார். (மத்.8:16,17; எபி. 7:26)

இப்படியாக இயேசு கிறிஸ்து மாசற்றவராக இருக்கிற அதே சமயத்தில் தம்முடைய சகோதரர்களுக்கு ஒப்பானவராக எப்படி இருக்க முடியும் என்கிற சிந்ததனையைத் தொடர்வோம்.

## அத்தியாயம் 5

# ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் "தம் சகோதரருக்கு ஒப்பானார்" "நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடியவர்"

*அவருடைய சகோதரர்கள் யார்-எதில் அவர் ஒப்பானார்-நாம் சோதிக்கப்படுவதுபோல அவரும் எல்லா காரியங்களிலும் சோதிக்கப்பட்டார், ஆனால் பாவம் இல்லாதிருந்தார்-வனாந்தர சோதனைகள்-நம்முடைய சோதனைகளுக்கு ஒத்திருந்தன-அவைகளில் சில "தெரிந்துகொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக் கத்தக்கவைகள்"-நம்முடைய கர்த்தர் சோதனைமூலம் பூரணராக்கப்பட்டார் என்பதின் பொருள்-குமாரனாயிருந்தாலும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்-எப்படி அவர் பாவமில்லாமல் பாவமாம்சத்தின் சாயலானார்-அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டார்-எப்படி அவர் நமக்காக "பரிதபித்தார்."*

"அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது." எபி. *2:17*

**பி**ரபலமான எதிரும் புதிருமான இரண்டு வித கருத்துக்கள், நம்முடைய கர்த்தருக்கும் மனுக்குலத்துக்கும் இடையேயுள்ள உறவைக்குறித்த எல்லா வேதாகம அறிக்கைகளுக்கும் எதிராக இருக்கின்றன. மூன்றாவதான சத்திய நெறி மட்டுமே பலவகையாக வேதாகம அறிக்கைகளுக்கு இசைவாக, பரிசுத்த காரண

காரியங்களுக்க இசைவாக உள்ளது. இரண்டு தவறான கருத்துக்களில் ஒன்று, மனிதனின் பாடுகள், ஆசைகள், சுற்றுச்சூழ் நிலைகள் ஆகியவைகளைப்பற்றி உண்மையாக உணராமல் மனித சரீரத்தை எடுத்துக் கொண்டு, சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவனே இயேசுவாக வந்தார் என்பது. மற்றொரு கருத்து என்னவெனில், அவர் ஒரு பாவியான மனுஷன், மற்றவர்களைப் போல மனித இனத்தின் கறைகளுக்கும் பங்குள்ளவர், ஆனால் பாவத்தை எதிர்த்து போரிட்டு வெற்றி கண்டவர் என்பதாகும். இரண்டு கொள்கைகளும் தவறானவைகளே என்பதை நிரூபித்துக் காட்ட முயலுகிறோம். இரண்டு கொள்ளைகளுக்குமிடையே தான் சத்தியம் இருக்கிறது. லோகோஸ் தேவனைப் போலவே ஆவியின் சரீரத்தில் இருந்தார். ஆனால் மாம்ச சரீரத்தில் வந்த போது அவர் மெய்யான மனிதனாக இருந்தார். மனிதனாகிய இயேசு கிறிஸ்து “பாவிகளுக்கு விலகினவராக இருந்தார்.” பூரண மனிதனாகிய ஆதாமின் வீழ்ச்சியினாலே முழு மனுக்குலமும் பாவத்தில் விழுந்தது. ஆதாம் பாவத்திலிருந்து மீட்கப்பட்டால் முழு மனுக்குலமும் மீட்கப்படும். பூரண மனிதனான ஆதாமை மீட்க, ஈட்டுக் கிரயம் கொடுக்க பூரண மனிதனாகிய இயேசு கிறிஸ்து ஆயத்தமானார்.

நம்முடைய கர்த்தர் விழுந்துபோன மனுக்குலத்தைப் போல பாவத்திற்குட்பட்டவராகவும், பாடுள்ளவராகவும் வந்தார் என்கிற தவறான வசன விளக்கங்கள், தவறான மேற்கோள்கள் ஆகியவைகளை சரியாக அலசி ஆராய்வது அவசியம். விழுந்துபோன மனித சுபாவத்தில் இயேசு வந்திருந்தாரானால், தெய்வீக நியாயப் பிரமாணத்தை அவராலும் நம்மை போலவே முழுமையாக, பூரணமாக கடைப்பிடிக்க இயலாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். தெய்வீக நியாயப் பிரமாணத்தை பூரண மனிதன் மட்டுமே கடைப்பிடிக்க முடியும். அபூர்ண மனிதன் நடைமுறையில் நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடிப்பது சாத்தியமில்லை. நமது கர்த்தர் பாவமற்றவர் என்பதாலும் அவர் பாவத்திற்கு ஈடுபலியாகத் தன்னையே கொடுக்க முன்வந்ததாலும் பிதாவுக்கு பிரியமானவராயும் ஏற்புடையவராயுமிருந்தார். வேதாகமத்தில் எங்கும் நம்முடைய கர்த்தர் குற்றமற்ற பூரணமானவர் என்று

கூறுவதை இது நிரூபிக்கிறது.

நம்முடைய கர்த்தருடைய சகோதரர்கள் பாவிகளாக இருக்கும்போது, அவர் மட்டும் பாவமற்றவர், பாவிகளுக்கு விலகினவர் என்று சொல்வது எப்படி? பொதுவாக முழு உலக மனுக்குலமும் பாவிகள். ஆனால் முழு மனுக்குலமும் கர்த்தரின் சகோதரர்கள் என்று சொல்வதில்லை என்பதைப் புரிந்து கொண்டால் இந்த வினாவின் பதில் தெரிந்துவிடும். தேவன் சிருஷ்டித்ததினாலே ஆதாம் தேவனின் மகன் என்று எண்ணப்பட்டான். அது அவனது சிருஷ்டிப்பின் காலத்தோடு சரி. அதன் பிறகு அவ்வாறு அல்ல. (லூக். 3:38) ஆதாமிலி ருந்து உண்டானவர்கள் எல்லாரும் “கோபாக்கினையின் பிள்ளைகள் என்று சொல்லப்படுகிறது. (எபேசி. 2:3) உலகத்தின் பாவம் சபாம் மரணம் ஆகியவற்றிற்குத் தப்பி, கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் ஒப்புரவானவர்களே தேவபுத்திரராக தேவனால் அங்கீகரிக்கப்படுவார்கள். (யோவா.1:12) மற்றவர்களைப் பற்றி நம்முடைய கர்த்தர், “நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்” (யோவா. 8:44) என்றார். இயேசு கிறிஸ்து தன்னை கோபாக்கினையின் பிள்ளை என்றோ, பிசாசின் பிள்ளை என்றோ கூறவில்லை. மாறாக, அவர் “தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன்” என்று சொன்னார். கோபாக்கினையின் பிள்ளைகள் எவரையும் இயேசு கிறிஸ்து தன்னுடைய சகோதரர்கள் என்று அடையாளம் காட்டவில்லை. உலகத்திற்குக் கொடுக்கப்பட்ட பாவம், சாபம், மரணம் ஆகிய தீர்ப்பிலிருந்து தப்பினவர்கள் மட்டுமே “தேவனுடைய புத்திரர்கள்” என்று அடையாளம் காட்டப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் இவர்கள் பிதாவுக்கு அண்டையில் வருகிறார்கள். தேவக் குடும்பத்தில் இவர்கள் புத்திர சுவீகார ஆவியைப் பெற்று இருக்கிறார்கள். தேவ இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது “புத்திர சுவிகாரத்தை” இவர்கள் பெற்றிருப்பார்கள். (ரோம.8:15, 23; கலா. 4:5) இவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே ஆதாமின் மரணத் தீர்ப்புக்கு விலகி, தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டு, விசுவாசத்தினாலே நீதிமான்களாகக் கருதப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் உலகத்திற்கு விலகினவர்களாகையால் இந்த அடிப்படையில்

இவர்கள் தேவ தயவைப் பெறுவார்கள். தேவனோடு உடன்படிக்கை செய்தவர்களைப் பற்றி இயேசு, "நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" என்றார். "நான் உங்களை இந்த உலகத்திலிருந்து தெரிந்து கொண்டேன்" என்றார். (யோவா. 15:19; 17:16) எனவே இந்த நோக்கில் பார்க்கும்போது எல்லா வகையிலும் தன் சகோதரர்களுக்கொப்பாக, இயேசு கிறிஸ்து ஆக்கப்பட்டார் என்பதை இக்கருத்து காண்பிக்கிறது. லோகோஸாக இருந்தவர் தம்மைத் தாழ்த்தி பூமியில் மாம்சமானபோது, அவருக்கு சகோதரர் யாரும் இல்லை. ஆனால் அவர்கள் முன்னறியப்பட்டிருந்தார்கள். (எபே.1:4, 12; ரோ. 8:29) அவர் நீதிபாராயிருப்பார் என்பதையும், கிறிஸ்து மூலமாக தேவ கிருபையை ஏற்றுகொண்ட பாவியான மானுடர்களை நீதிமான்களாக்குகிறார் என்பதையும், அதனிமித்தம் அவர்களது பாவங்கள் மூடப்பட்டது என்பதையும் தெய்வீக ஏற்பாட்டின்படி தேவன் முன்னறிந்தார். அவர்கள் பாவங்களை அவர்கள் மேல் சுமத்தாமல் கிறிஸ்துவே சுமந்தார். "அவர்தாமே தமது சரீரத்தில் நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்." சுவிசேஷ யுக சபையை நம்முடைய "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரராகவும்" அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய பரலோக சுதந்திரத்திற்காகவும் அழைத்த அழைப்பின் நோக்கத்தை தேவன் முன்னறிந்து முன்னமே எற்பாடு செய்திருந்தார். இதன்படி இப்படிப்பட்ட வகுப்பார் தீர்க்கதரிகள் மூலமாக கிறிஸ்துவின் சகோதரர்கள் என்று முன்னறிவிக்கப்பட்டார்கள். நமது ஆண்டவர் பிதாவிடம் கூறுவதுபோல் தீர்க்கதரிசனமாக கூறப்பட்டுள்ளதாவது: "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதிப்பேன்." (சங்.22:22; எபி.2 :12)

இது தேவனுடைய தெய்வீக திட்டமாக நமது கர்த்தர் இந்த உலகத்தை மீட்பது மாத்திரமல்ல, தன்னுடன் உடன் சுதந்திரராக இருக்கப் போகிறவர்களுக்கு ஒரு சரியான முன்மாதிரியாக இருக்க வேண்டியதும் அவசியமாயிற்று. ஆகவே, அவர், தனது எல்லா உபத்திரவங்கள், அனுபவங்களின்படி பின்வரும் சந்ததியாகிய தன் சகோதரருக்கு, நல்லதொரு முன்மாதிரியையும், படிப்பினையையும் காண்பிக்கும்படி, தெய்வீக திட்டத்தின்படி தனக்கு குறிக்கப்பட்ட

ஒவ்வொரு பணியினையும் சிரத்தையோடு செய்து முடித்தார்.

## "எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறவர்"

*- எபி.4:15 -*

*நமக்கு இப்பொழுது எத்தனை விதமான சோதனைகள் ஏற்படுகிறதோ, அத்தனை விதமான சோதனைகளையும் அவர் கடந்து வந்தவர். பூமிக்குரிய பெற்றோர்களினால் பாரம்பரியத்தின்படி பிறந்தவர்கள், பாவம் நிறைந்த பலவிதமான பசிகளுக்கு உண்டான அத்தனை சோதனைகளிலும் அவர் சிக்கிக் கொள்ளவில்லை. கறைதிரையற்றவராக, மாசற்ற பரிசுத்தமுள்ளவராக, பாவிகளினின்று விலகினவராக இருந்தும், இந்த சுவிசேஷ யுகத்தில் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு எத்தகைய சோதனைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதோ, அத்தனை சோதனைகளையும் அவர் அனுபவித்தவர். இந்த சுவிசேஷ யுகத்தில் அவருக்கு உடன் சகோதரர்களாக வரப் போகிறவர்களை அவர்களுடைய மாம்ச பலவீனத்தின்படி நிதானிக்காமல், ஆவியின்படி, அவர்களுடைய செயல்பாட்டின்படி, அவர்களுடைய புதிய இருதயத்தின்படி, புதிய சிருஷ்டியின்படி, நல்மனதின்படி நிதானிக்க வேண்டும். ரோம. 8:4; 2 கொரிந். 5:16; யோவா. 8:15*

*வனாந்தரத்தில் கர்த்தர் சோதிக்கப்பட்டபோது நடந்த சம்பவங்கள் இதை நமக்குத் தெளிவாக விளக்குகின்றன. இந்த சோதனைக்கு முன்பாகவே, அவர் தம்மை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, முற்றிலுமாக அர்ப்பணித்து, யோர்தானில் தேவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார். - மத். 4:1-11.*

*1. யோர்தானில் ஞானஸ்நானம் பெற்று வரும்போது, பெற்றுக் கொண்ட வல்லமையினாலே, இக்கற்களை அப்பமாக்கி சாப்பிடும் என்று இயேசுவின் வல்லமையை அவர் சுயநலத்திற்கே பிரயோகப்படுத்த சாத்தான் முதல் சோதனையில் கூறினான். அபூரணத்திற்கோ, பாரம்பரியத்திற்கோ துளிகூட சம்பந்தமில்லாத இது, ஒரு சோதனையே அல்ல. அவர் பெற்றுக் கொண்ட பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே, தான் அனுப்பப்பட்ட உலக மீட்புப்*

பணியை எவ்விதம் நிறைவேற்றுவது என்பதைப் பற்றிய திட்டங்களும், தீர்மானங்களும் எடுக்க நாற்பது நாட்கள் உண்ணாம-ருந்தார். அவர் தனக்குக் கொடுக்கப்பட்ட ஆவியின் வல்லமையைக் கொண்டு, தன் சரீரத் தேவையைப் போக்கி கொள்ள வல்லமை பெற்றிருந்தும், அதை சரீர உபயோகத்திற்காக பயன்படுத்துவது சற்றும் சரியல்ல என்று உணர்ந்திருந்ததால், அதை அவர் உபயோகிக்காமலிருந்தார். மேலும் "மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறது" என்றார். கர்த்தருடைய சகோதரர்களுக்கு இவ்வகையான சோதனைகள் சில வேளைகளில் வரக்கூடும். உலக காரியங்களுக்காக ஆவியின் கிருபைகளை பயன்படுத்த சத்துருவானவன் யோசனை கூறுவான். இப்படிப்பட்ட யோசனைகள் தந்திரமானதும் தேவனுக்கு தம்மை அர்ப்பணம் செய்துகொண்ட ஜனங்களை வழிதவறச் செய்யக் கூடியதுமாயிருக்கிறது

2. தன்னுடைய பணியை கர்த்தர் நிறைவேற்ற, குறுக்கு வழியில் தன்னை தேவ குமாரன் என்று நிரூபிக்கும்படியாக சாத்தான் யோசனை கூறினான். அதாவது தேவ ஆலய உப்பரிகையிலிருந்து அனைவரும் பார்க்கும்படியாகக் குதித்தால், அப்போது எந்த காயமும் இல்லாதிருப்பதை பார்க்கும் ஜனங்கள், அவர் தெய்வீக சக்தியை உடையவர் என்பதை நம்பி, அவரை மேசியாவாக, ஏற்றுக் கொண்டு, அவரது ஊழியத்திற்கு ஒத்துழைப்பார்கள் என்று யோசனை கூறினான். ஆனால் நமது கர்த்தர், இது தேவ திட்டத்திற்கு முற்றிலும் மாறானது என்றும், வேதத்தை சாத்தான் தவறாக பயன்படுத்துகிறான் என்றும் கண்டு, நீதிநெறியை விட்டு மாறாதிருந்தார். அப்படி செய்வது, தேவனை பரீட்சைபார்ப்பது, தேவையற்றது என்று உடனே பதிலளித்தார். என்ன அபாயங்கள் நேரிட்டாலும், தனது பணியில் கடமை தவறாமல், தேவன் காக்க வல்லவராயிருக்கிறார் என்ற அசைக்க முடியாத விசுவாசத்தினால், தேவ சித்தப்படியே யாவற்றையும் செய்தார். தன் பெருமை பாராட்ட, தேவனுடைய சித்தமில்லாமல் நாமே பேராபத்தைத் தேடி பிரபலடைய நினைத்தால் அது தேவ சித்தம் நிறைவேற்றுவதல்ல என்பதை உணர்ந்தார்.

கர்த்தருடைய சகோதரர்களுக்கு இவ்விதமான சோதனைகள்

ஏற்படக்கூடும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படும்போது, நமது கர்த்தர் காண்பித்த முன்மாதிரியை ஞாபகப்படுத்தி கொள்ள வேண்டும். துணிகரமாக பேராபத்தை நாமே தேடிச் சென்றுவிட்டு அம்மாதிரி வேளைகளில், நாங்களே கிறிஸ்துவின் சிலுவை வீரர்கள் என்று பெருமைப்பட்டுக் கொள்ளக் கூடாது. தேவனுடைய பிள்ளைகளுக்கு கொஞ்சமும் சரியல்ல என்று தோன்றுகிற இந்த வீரசாகசச் செயல்கள் சாத்தானின் பிள்ளைகளுக்கு நியாயமாகத் தோன்றும். தேவனுடைய பிள்ளைகளுக்கு போராட்டம் உண்டு, அதற்கு அவர்களுக்கு இன்னும் மிகுந்த தைரியம் தேவை. தேவ பிள்ளைகள் செய்யும் சேவையை உலகம் பாராட்டாது, பெருமையாக எண்ணாது, மாறாக அடிக்கடி துன்பப்படுத்துவார்கள். இப்படி உலகின் பழி பாவத்தையும் ஏளனத்தையும் தாங்கிக்கொள்ளவே இவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இருதயத்தில் விருத்த சேதனம் செய்யப்படாதவர்கள், அவர்கள் மீது இப்படி வஞ்சனையாக, செய்யாத குற்றத்தை செய்ததாகக் கூறுவதை நாம் கிறிஸ்துவினிமித்தம் பொறுமையாய் சகிக்க வேண்டும். ஆகவே இக்காரியத்தில், நம் இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்து, எவ்வாறு சோதனையையும், வேதனையையும் சகித்தாரோ, அவ்வண்ணமே நாமும் சகித்தாக வேண்டும். இந்த உலகம் தேவ பிள்ளைகளுக்கெதிராக சத்தியத்திற்கெதிராக செய்யும் நிந்தைகளைத் தாங்கிக்கொள்ள நமக்கு மிகுந்த மனோபலம் தேவை. தேவ பிள்ளைகள் செய்யும் சேவைக்கு இவ்வுலகில் பாராட்டும், புகழும் கிடைக்காது. மாறாக அவமானமும், நிந்தையுமே கிடைக்கும். மாறாக, பாவிகள் செய்யும் ஒவ்வொரு சேவைக்கும் பாராட்டும், உற்சாகமும் கிடைக்கும்

இம்மாதிரி குறுகலான வழியிலே செல்லுகிறவர்கள் போராடுகின்ற போராட்டங்களில் பிரதானமான ஒன்று, தங்களுடைய சுயசித்தத்தை விடுத்து தேவனுடைய சித்தத்தில் நின்று நிலைப்பதே. பரிபூரணமான மனிதத்தன்மை உள்ளவர்களுக்கும் கூட வரக்கூடிய இயல்பான ஆசைகளை போராடி வெல்ல வேண்டும். அம்மாதிரி ஆசையைத் தூண்டுகிற, நெருப்புப் போல இருக்கிற இவைகளையெல்லாம் எதிர்த்துப் போராடி தங்கள் சரீரத்தை அடக்கி ஆண்டு, தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக,

தங்களுடைய சரீரம், இவ்வுலகக் காரியங்கள் எல்லாவற்றையும் ஜீவபலியாகக் கொடுக்க வேண்டும். இவைகளையெல்லாம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வென்று வாகை சூடினார். இவ்வாறே அவருடைய சகோதரர்களும் இந்த சோதனையை வென்றாக வேண்டும். "ஒரு பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும், தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." போலியான விசுவாசத்தில் மகாபெரிய அடையாளங்களாக தேவாலயத்தின் உப்பரிகையில், ஏறி அங்கிருந்து குதிப்பதுபோன்ற தேவையற்ற அற்புதங்களைச் செய்வதை விட, தன்னைத்தானே அடக்கியாள்வதே மேன்மையானது. போலியான பாவனைகளும், குருட்டு நம்பிக்கை களும், காட்சிக்காக தேவ அற்புதத்தை நிகழ்த்துவதையோ மெய்சத்திய விசுவாசம் ஒருக்காலும் விரும்பாது. இதற்கு மாறாக, மெய் சத்திய விசுவாசமானது, தேவனுடைய திவ்விய அருமையான வாக்குத்தத்தங்களில் மட்டுமே நம்பிக்கை வைத்திருக்கும். தெய்வீக திருவசனத்தில் சொல்லப்பட்டடிருக்கிற முறைமையின்படி எத்தகைய கீழ்ப்படிதலும், விசுவாசமும் நாம் காண்பிக்க வேண்டுமோ, அத்தகைய விசுவாசத்தை நாம் காண்பிக்க வேண்டும். சரீரம், உலகம், பிசாசு இவைகளே நம்மை வழிவிலகச் செய்யும் காரணிகள். இவைகளை யெல்லாம் எதிர்த்து நிற்பதற்கு நமக்கு உறுதியளிப்பது அந்த மெய் விசுவாசமே.

3. மூன்றாவது சோதனை சாத்தானுடன் உடன்பட்டு அதிக சிரமமின்றி, அதிக உழைப்பின்றி, சிலுவை சுமக்காமல், பாடுபடாமல் மரணம் அனுபவிக்காமலே, விரைவிலேயே சுலப வழிகளில் இராஜ்யத்தை ஸ்தாபிப்பது ஆகும். உலகம் அவனது கட்டுப்பாட்டில் உள்ளது என்றும், அவனது உதவியால் நமது ஆண்டவர் ஸ்தாபிக்க விரும்புகிற நீதியின் ராஜ்யத்தை மிக சுலபமாக ஸ்தாபிக்க முடியும் என்றும் சாத்தான் கூறினான். சாத்தான் நீண்டகாலமாக இவ்வுலகை பாவம், குருட்டுத்தன்மை, மூடநம்பிக்கை, அறியாமை ஆகியவைகளில் வழிநடத்துவதில் மிகவும் களைப்படைந்து விழுந்துபோன மனுக்குலத்தை இரட்சிக்க வந்த நமது ஆண்டவரின் ஊழியத்தில் இரக்கம் கொண்டு இப்படிக் கூறினான். எனினும், உலகின் கட்டுப்பாட்டை தன்னிடமே வைத்துக்

*கொள்ள விரும்பினான். உலகை நீதிக்குள் கொண்டு வருவதற்கும், இழந்ததை திரும்ப கொடுத்து உலகை ஆசீர்வதிக்கிற வேலையில் தனது ஒத்துழைப்பை கர்த்தராகிய இயேசுவுக்கு கொடுப்பதற்கும் அவன் (சாத்தான்) கேட்ட விலை என்னவென்றால், தன்னை இயேசு உலகின் ராஜாவாக அங்கீகரித்து தன்னை வணங்க வேண்டும் என்பதே.*

*"உன்னதமானவருக்கு" ஒப்பாகவேண்டுமென்ற தனது பேராசையினாலே சாத்தான் தெய்வீக ஆளுகைக்கெதிராக கலகம் செய்தான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (ஏசா 14:4) இதே நோக்கத்தில்தான் நமது முதல் பெற்றோராகிய ஆதாம் ஏவாளிடத்தில் வஞ்சகமாக நடந்து கொண்டதை நினைத்துப் பார்க்க வேண்டும். அதன் மூலம் ஆதிப் பெற்றோரை, தேவனிடமிருந்து பிரித்து தனக்கு அடிமையாக்கிக் கொண்டான். ஏகமாய்த் தவித்து, பிரசவ வேதனைப்படுகிற இந்த சந்ததிக்கு அதிபதியாய் இருக்க விரும்பாமல், மனப்பூர்வமும் சுதந்திரமுமுள்ள சந்தோஷமான சந்ததிக்கு அதிபராக இருக்கவே விரும்பினான். நித்திய ஜீவன் பெற்ற சந்ததியாரையே தனது பிரஜைகளாயிருக்க விரும்புகிறான். நித்திய ஜீவனும், மெய்ச்சமாதானமும் தெய்வீக சட்டப்படி நடப்பவர்களுக்கு மட்டுமே அருளப்படுகிறது என்பதை சாத்தான் உணர வில்லை என்பதை அறிந்து கொள்ளலாம். எனவே சாத்தான் எல்லாவற்றிலும் ஒன்றைத்தவிர, சீர்திருத்தவாதியாக விரும்பினான். அந்த ஒன்று - அவனது பேராசை நிறைவேற வேண்டும். அவன் மானுடரின் அரசனாவதி-ருந்து குறையைக் கூடாது என்பதாகும். அவன் உலகத்தின் அதிபதி என்று வேதம் கூறுகிறது. (யோவா. 14:30; 12:31; 16:11; 2 கொரி. 4:4) தெய்வீகத்திட்டப்படி இவன் இப்பிரபஞ்சத்தில் தேவனாகவில்லை. மனுகுலத்தின் அறியாமையின் காரணமாகவும், மெய்யைப் பொய் என்று காண்பித்து தவறாக சிந்திக்க வைத்து, தன்னைத்தான் தேவனென்று காண்பித்துக் கொண்டான். இருளை வெளிச்ச மென்றான், தவறை சரி என்றான். மிகக் குழப்பமும், கலவரமும் உள்ளவனானான். உலகத்தை குருடாக்கி, இப்பொழுது உலகில் பெரும்பான்மையாய் இருக்கக்கூடிய கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கிற இப்பிரபஞ்சத்தின் தேவனானான்.*

பாவ நிலையிலிருந்து மனிதன் விடுபட சாத்தான் நூதனமான ஒரு கருத்தை தெரிவித்து வைத்து, அதன் மூலம் விரைவிலேயே மீட்படையலாம் என்று சோதித்தான். இதற்கு மேலாக மக்களை தன் வஞ்சக தந்திரத்தாலும், அறியாமையிலும், இருளிலும் வைத்திருந்து அவர்களை நீதிமார்க்கத்திற்குப் போகாமல் தடுத்து நிறுத்தி, தன் ஆட்சியை நிலைபெறும்படி செய்தான். சாத்தான் தானும் மனமாற்றமடைய விரும்பாமல், உலகமும் மனமாற்றமடைய அனுமதிக்கவில்லை. உலகம் அவனுடைய வஞ்சனைகளைப் புரியாத வரையில், தன் பேராசையினால் உலகத்தைப் பாவத்துக்குள்ளேயே வைத்திருந்து, பாவ சந்தோஷ வாழ்க்கையிலே தொடரச் செய்வான். மனுக்குலம் எவ்வளவாய் பாவத்தை வெறுத்து, பரிசுத்தத்தினை நேசிக்குமோ அந்த அளவு ஆசீர்வாதத்தினைப் பெறுவார்கள். அப்படி அவர்கள் நடந்தால், மெய்த்தேவனை ஆராதித்து, மெய்வழியில் சேவை செய்ய விரும்புவார்கள்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சாத்தானின் குறுக்கு வழியை கண்டிக்கத் தயங்கவில்லை. பிதாவின் ஞானம் மிகவும் சரியான திட்டத்தை கைக்கொண்டது என்று நமது கர்த்தராகிய இயேசு முழு நம்பிக்கை வைத்திருந்தார். உலகினை சீர்திருத்துவதற்கு, மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அவர் உறவாடவில்லை, சாத்தானுடைய குறுக்கு வழியில் செல்ல அவர் எந்த பேரமும் பேசவில்லை.

கர்த்தருடைய சகோதரர்களுக்கு எதிராக சாத்தான் பயன்படுத்தும் விசேஷமான சோதனைகளில் ஒன்றை இங்கேயும் நாம் பார்க்கிறோம். சாத்தான் ஆரம்பகால பேர்க்கிறிஸ்துவ சபையை, உலகத்திருந்து பிரிந்திருக்கக்கூடிய குறுகலான பாதையாகிய சிலுவைப் பாதையை விட்டுவிட்டு, அரசியலில் நுழைந்து படிப்படியாக முன்னேறி, உலக அரசியலில் செல்வாக்கு பெறும் அளவுக்கு தூண்டுவதில் வெற்றிக் கண்டான். உலக அதிபதிகளோடு சேர்ந்து, சாத்தானுடைய துணையோடு பேணிப் பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட பேர்ச்சபை இப்போது கிறிஸ்துவின் இராஜ்யமே ஸ்தாபிக்கப்பட்டு விட்டதாகவும், அதற்கு கிறிஸ்துவின் பிரதிநிதி பூமியில் “போப்” என்கிற கருத்தினை ஏற்படுத்தி விட்டான். இதனால், எவ்வளவு விஷமத்தனமான விபரீத

விளைவுகள் ஏற்பட்டன? எப்படி இந்த போலியான கிறிஸ்துவின் சாம்ராஜ்யம், உண்மையாகவே சாத்தானின் ராஜ்யமாயிற்று? ஏனெனில் அது, சாத்தானுடைய ஏவலின்படியே எல்லாவற்யையும் நடத்துகிறது என்பதை நாம் அறிவோம். இந்த சாத்தானால் ஏற்பட்ட விளைவுகளை, நாம் இருண்ட காலத்தின் செயல்பாடுகளில் கண்டோம். அந்த செயல்பாடுகள், கர்த்தரால் அந்திக் கிறிஸ்து என்று வருணிக்கப்படுகிறது.

சீர்திருத்தம் தைரியமாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இந்த சீர்திருத்த வாதிகளையும், சாத்தான் விட்டுவிடாமல், அவர்களுக்கு பலவித சோதனைகளை ஏற்படுத்தினான். சாத்தானுடைய சோதனைகளை சீர்திருத்தவாதிகள் ஓரளவு மட்டுமே எதிர்க்க முடிந்தது. இந்த உலகத்தின் ஆதாயத்துக்காகவும், பாதுகாப்புக்காகவும் அவர்கள் சத்தியத்தை விட்டுக் கொடுக்கவும் துணிந்தனர். இப்பொழுதிருக்கின்ற உலக ராஜ்யங்களெல்லாம், ஒரு காலத்தில் கிறிஸ்துவின் ராஜ்யமாக மாறியே தீரும் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தபடியால், தங்கள் பணியில் அசதியாய் ஏமாந்தனர். போப்பு மார்க்கம் அரசியலோடு இணைந்து செய்த விஷமத்தனங்களைப் பார்க்கிலும், புரட்டஸ்டண்டு மார்க்கம் செய்த விஷமத்தனம் குறைவாக இருக்கலாம். ஆனால் இவை இரண்டுமே, கர்த்தருடைய வழிகளுக்கு எதிரானவை, பேராபத்தானவையும் ஆகும். இவை புரட்டஸ்டண்டு, கத்தோ-க்க மார்க்கத்தினருக்கு சத்திய வழியை அறிய பெரிய தடைக்கல்லாக இருக்கும். சாத்தானின் சோதனையால் சகோதரர்களுக்கிடையே அடிக்கடி சர்ச்சைகள், விவாதங்கள் ஏற்படக்கூடும். இவைகளை நாம் ஜெயிக்க வேண்டும். கிறிஸ்து நம்மை சுயாதீனத்திற்கு அழைத்ததால், நாமும் அந்த சுயாதீனத்தில் உறுதியாய்ப் பற்றி நிற்கவேண்டும். இந்த உலகத்திலிருந்து சுயாதீனராய் அழைக்கப்பட்டிருப்பது, இந்த உலகோடு ஒட்டி இருப்பதற்கல்ல, அதிலிருந்து பிரிந்து எட்டி இருப்பதற்காகவே.

எல்லா சகோதரர்களுக்கும் இதே சோதனை நமது கர்த்தருக்கு வந்ததுபோல வந்தாலும் காலத்திற் கேற்றபடி, ஒவ்வொரு சோதனையிலும் தந்திரமாக நமது சத்துரு கொஞ்சம் மாறுதல்

செய்வான் என்று நாம் காண்கிறோம். அதாவது உலகை ஆசீர்வதிக்கிற வேலையில், தான் இருதய பூர்வமாக அக்கரையுள்ளவன் போலவும், சீர்திருத்த கொள்கைகளுக்கு தானே தலைவராகவும் காண்பித்துக் கொள்வான். இதற்கு இசைவாக கடைசியாக அவன் செய்த முயற்சி சமுதாயத்தை மேம்படுத்த வேண்டும் என்பதாகும். அநேக சகோதரர்களின் மனதை அதில் வெற்றிகரமாக ஈடுபடுத்துகிறான். ஒரு காலத்தில் இந்த சிலுவையின் வழியில் செல்வது அவசியமாயிருந்தது. ஆனால் இப்போது நாம், அந்த ஆசீர்வாத காலக்கட்டத்தை அடைந்து விட்டபடியால் அது அவசியமுமில்லை. தேவையுமில்லை. சமுதாய, பொருளாதார, மதசம்பந்தமான, அறிவுக் கூர்மையான மறுமலர்ச்சி ஏற்பட்டு முழு உலகமும் உன்னத நிலையை அடைந்து விட்டது என்று கூறுகிறான். அவன் உருவாக்குகிற ஒவ்வொரு திட்டமும், அவனை முன்னிலைப்படுத்தி, நடப்பித்ததாக இருக்கின்றது. சமுதாய, அரசியல் இயக்கங்களில் ஈடுபாடு கொண்டவர்கள், தீவிரமாக ஈடுபட்டால்தான் அந்த மறுமலர்ச்சி நோக்கம் வெற்றியடையும், நிறைவேறும் என்று கூறுகிறான். பாவம், சாபம், மரணம் ஆகியவற்றிலிருந்து விடுபட ஒவ்வொருவரும் மனமாற்றமடைந்து நல்மனசாட்சியுடன் உடன்படிக்கை செய்து, தேவனோடு கிறிஸ்து மூலம் ஒப்புரவாக வேண்டும் என்கிற கடினமான பாதையை விட்டு, எளிய வழியில், சுபீட்சம் பெறலாம் என்பதை ஏராளமான பேர் ஏற்றுக் கொண்டதால், ஊக்கங்கொண்டு, துணிகரமாகத் தன் பணியைத் தொடர்ந்தான். தனிப்பட்ட மனிதரின் பொறுப்பையும், பாவங்களையும் அசட்டை செய்வதும், சமூக நிலைமையை மதித்து, அதை வெளிப்புறமாக சுத்தம் செய்வதுமே சாத்தானின் கொள்கை. கிறிஸ்து மூலமாக தேவனிடம் வருபவர்களே "தேவனுடைய பிள்ளைகளாயும்" கிறிஸ்துவினுடைய "சகோதரர்களாயும்" இருப்பார்கள் என்ற ஆண்டவரது போதகத்தை நாம் அசட்டை பண்ணும்படி செய்வான். அதற்கு பதிலாக எல்லா மனிதர்களுமே சகோதரர்கள் என்றும், மனுக்குலம் முழுவதும் தேவனுடைய பிள்ளைகள் என்றும், யாரும் "கோபாக்கினையின் பிள்ளைகள்" அல்லவென்றும் நம்மை நம்ப வைப்பான். சிலருக்கு சாத்தானே பிதா என்கிற நமது ஆண்டவரின் வார்த்தைகளை நம்புவது கிறிஸ்தவத்திற்கும் பெருந்தன்மைக்கும் மாறானது என்றும் நம்ப

வைப்பான். இப்படியாக அவன், மனிதன் பாவத்தில் விழுந்ததையும், பாவத்திற்கான ஈடுபலியையும், ஒப்புவாகுதலின் வேலைகளையும் மறுத்து, அசட்டை பண்ணச் செய்வான். உண்மையாய் தோன்றுகிற வஞ்சக வார்த்தைகளாகிய அனைத்துலக மக்களும் சகோதரர்களே, அனைவருக்கும் தந்தை தேவனே மற்றும் பொன்னான கற்பனை போன்றவைகளுக்கு மாற்றாக எந்த வார்த்தைகளையும் கூறாமல் நம்மை வஞ்சிப்பான்.

"தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய சிலரைத் தவிர" அநேகரும் இந்த வஞ்சனையினால் சாத்தானுடைய வலையில் வீழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இன்றும் வஞ்சிக்கப்படுகிறார்கள். (மத். 24:24) கிறிஸ்துவினுடைய அடிச்சுவடுகளைச் சரியாகப் பின்பற்றுகிறவர்கள், சாத்தானுடைய போதனைகளைக் கேட்காமல், போதகரும், குருவுமான கிறிஸ்துவின் போதனைப்படி நடப்பவர்களாகிய இவர்களே, தேவனால் தெரிந்து கொள்ளப்படட்வர்கள்; தங்களுடைய சுய புத்தியின் மேல் சார்ந்திராமலும், சாத்தானின் வஞ்சக தந்திரத்தில் சிக்காமலும், "யேகோவா" தேவனுடைய உன்னத ஞானத்திலும் யுகங்களுக்கடுத்த தெய்வீகத்திட்டத்திலும் அசைக்க முடியாத விசுவாசமாய் இருப்பவர்களாகிய இவர்களே தேவனால் போதிக்கப்பட்டவர்கள். கிறிஸ்துவின் சகோதரர்களை அழைத்துத் தெரிந்து கொண்டு, சோதனைகளால் புடமிடப்பட்ட பின்னர், இறுதியில் தேவராஜ்யத்தில் கர்த்தரோடு கூட மகிமைப்படுத்தப்படுவார்கள் என்பதே இக்காலத்திற்குரிய தேவ திட்டத்திற்குட்பட்ட பணியாகும். அதன்படி அவர்களே ஆபிரகாமின் வித்தாக அகில உலகினையும் ஆசீர்வதிப்பார்கள். மன, ஒழுக்க, உடல் ரீதியான மேம்பாடு அடையக்கூடிய, தேவனால் நியமிக்கப்பட்ட ஏற்ற வேளை, வரப்போகிற யுகமாகும். வஞ்சக தந்திரமான சாத்தானுடைய எந்த வகையான சதித்திட்ட சோதனைகளும், தத்துவங்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை ஏமாற்றிட முடியாது. தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு, சாத்தானுடைய வஞ்சகம் தெரியாததல்ல. ஏனெனில் அவர்கள் இவனுடைய உபாயங்களைக் குறித்து முன்னெச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்கள். விசுவாசத்தை தம்முடைய ஜீவபலியின் மூலம் தொடங்கினவரும், அதை முற்றும்

முடிய நிறைவேற்றிய இயேசு கிறிஸ்துவை அவர்கள் எல்லாவிதத்திலும் நோக்கிப் பார்ப்பதால், அவர்கள் முதலாம் உயிர்த்தெழுலுக்குப் பங்குப்பெறும் பாக்கியத்தையும் பெற்று, இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும், தெய்வீக சுபாவத்தையும் பெற்றுப் பங்காளிகளாவார்கள்.

எந்தச் சோதனை அவர்களுடைய அதிபதியாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுக்கு ஏற்பட்டதோ, அதே சோதனை அவருடைய பின்னடியார்களுக்கும் தொடரும். நாம் எந்தெந்த வகைகளில் இப்பொழுது சோதிக்கப்படுகிறோமோ, அந்தச் சோதனைகளால், அவரும் சோதிக்கப்பட்டவர். அவர் சோதிக்கப்பட்டவராகையால், சோதிக்கப்படுகிறவர்களுக்கு என்னென்ன துன்பங்கள் வரும் என்று அறிந்தவராகையால், தேவைப்பட்ட உதவி செய்ய வல்லவராகவும் இருக்கிறார். அவரது உதவியைப் பெற விரும்புகிறவர்கள், அவர் என்னென்ன வகையில் உதவுகிறரோ அவற்றை ஏற்றுக் கொள்ளும் பக்குவமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதுதான் அவருடைய திவ்விய அருமையான வாக்குத்தத்தமாகவும் போதனையாகவும் உள்ளது. பாரம்பரியத்தினால் வரக்கூடிய, மனித பலவீனத்தால் கர்த்தர் நம்மை சோதிக்கிறதில்லை. கர்த்தர் குடிகாரனின் பசியுள்ளவராயிருக்க வில்லை. கொலைகாரனுடைய வெறி அவரிடம் இருக்கவில்லை. கள்ளனின் பேராசை அவரிடம் இல்லை. அவர் பரிசுத்தமுள்ளவரும், கபடமற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார். கிறிஸ்துவின் பின்னடியார்களுக்கு, அவர்களை வீழ்த்திவிடக்கூடிய சோதனைகள் வைக்கப்படுவதில்லை. விசுவாசத்தின் மூலமும், உடன்படிக்கையின் மூலமும் கர்த்தருக்குச் சகோதரர்களானவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள். இவ்வாறு ஆவியினால் பிறந்ததினால் யாரையும் காயப்படுத்தும் சுபாவமற்றவர்களாக இருப்பார்கள். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையின்படி, புதிய சிந்தை உடையவர்களாக மாற்றப்படுவார்கள். கிறிஸ்துவின் ஆவியையும், தெளிந்த புத்தியின் ஆவியையும், பிதாவின் சித்தப்படியே செய்யக்கூடிய அன்பின் ஆவியையும் உடையவர்களாகவும், தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அனைவருக்கும் குறிப்பாக விசுவாச வீட்டாருக்கும்

*நன்மையே செய்யக்கூடியவர்களாயுமிருப்பார்கள். (கலாத். 6:10)*

*புதிய மனதையும், புதிய சிந்தையையும் உடைய "புது சிருஷ்டி" மாம்சீக சரீரத்திலிருப்பதால், பாரம்பரிய பலவீனம், பாவம் செய்கிற குணம் தொடர்கிறது. அதிலிருந்து காக்கப்பட தொடர்ச்சியான பாதுகாப்பு தேவைப்படுகிறது. எப்போதாவது இப்படிப்பட்ட பலவீனத்தால் அவர்களது சித்தத்திற்கு மாறாக ஆட்கொள்ளப்படும்போது, வேண்டுமென்றே செய்யப்படாததால் அவைகள் பாவங்களாகக் கருதப்படுவதில்லை. இவை புதுசிருஷ்டியின் பாவங்களாக கருதப்படாமல் அவர்கள் இருக்கிற பழைய சுபாவத்தின் (மாம்சத்தின்) பெலவீனமாக கருதப்படும். இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்துவின் பாவநிவாரண பலியினால், ஈடுபலியின் புண்ணியத்தினால் மூடப்படுவதாக எண்ணப்படுகிறது. மாம்ச சரீரம் மரித்ததாக எண்ணப்பட்டு, புது சிருஷ்டிக்கு மட்டுமே சோதனை, பயிற்சி, உருவாக்கம், மெருகூட்டுதல் ஆகியவை செய்யப்பட்டு கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அவரது உடன் சுதந்தரராக தயார்படுத்தப்படுகிறார்கள்.*

## "உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல்"

*"தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது." எபி. 2:10*

*மேற்சொன்ன வசனத்தை நாம் நினைவில் கொண்டால், நமது கர்த்தர் மனிதனாக வந்து பட்டபாடுகளினாலே, பூரண மடையவில்லை என்பதையும், மனிதனாக வருதவற்குமுன் அவர் எந்த துன்பத்தையும் அனுபவிக்கவில்லை என்பதையும் நாம் காணலாம். வேதாகமம் நமக்குத் தெளிவாக விளக்குகிறபடி கர்த்தர் ஏற்கனவே பரிபூரணமும், பிதாவின் தற்சொரூபமுமாய் இருந்தார். அந்தப் பரிபூரண நிலையில் பாவமற்றவரும், மாசற்றவருமாயிருந்தது, மனிதனாகி, தாம் பட்ட பாடுகளினாலே மற்றொரு சுபாவ நிலையில் பரிபூரணத்தை பெற்றுக் கொண்டார். உலகம் உண்டாகும் முன்பே, பிதாவோடு இருந்தபோது பரிபூரணமாயிருந்தார். தாம் இருந்த நிலையில் பூரணமும். அவருடைய சித்தம், செயல்பாடு அனைத்தும்*

*பரிபூரணமுமாயிருந்தது. தமது பிதாவுக்கு பரிபூரண விசுவாசமுள்ளவருமாயிருந்தார் என்பது முதலாவது நிலை. இரண்டாவது நிலையிலே அவர் தன்னைத்தானே தாழ்த்தி, மனித சுபாவத்திற்கு, பாவ மாம்ச சாயலில் தாழ்த்திக் கொண்ட பின்னரும், அவர் பூரண மனிதராகவே, பாவங்களுக்கு விலகினவராய் இருந்தார். தற்போதைய மூன்றாவது நிலையே உன்னதத்திற்கு உயர்த்தப்பட்ட பரிபூரண நிலையாகும், தெய்வீக சுபாவமாகும். கடைசியாக சொல்லப்பட்ட வசனம், மூன்றாம் நிலையாகிய பூரண மகிமையடைந்து தெய்வீக சுபாவத்தை அடைந்ததைக் குறித்துக் காண்பிக்கிறது. கனம், மகிமை, சாகாமை ஆகிய உன்னத நிலையாகிய தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டார். தெய்வீக ஞானத்திலே, இப்படிப்பட்ட உன்னத நிலைக்கு உயர்த்துமுன், சில சோதனைகளின் மூலம் சோதிப்பது அவசியம் என்று தேவனுக்குத் தோன்றியது. இப்படிப்பட்ட சோதனைகளைக் கடந்து, தமது தகுதியை நிரூபித்ததால், அவருக்கு அத்தகைய கனம், மகிமையை கொடுத்ததோடல்லாமல், தெய்வீகக் கிருபையின் ஐசுவரியங்களிலெல்லாம் பங்கு பெற்று, "பிதாவை கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு" தேவனுடைய "ஒரே பேரான குமாரன்" என்ற பட்டத்தையும் கொடுத்தார்.*

*இயேசுகிறிஸ்து பிதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்கிறதைக் காட்டும் இந்த வசனங்கள், அந்தக் கீழ்ப்படி த-னாலேயே அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த மாபெரும் மகிமையின் சந்தோஷத்திற்காக எல்லா அவமானங்களையும் சகித்தார் என அப்.பவுல் பின்வருமாறு கூறுகிறார்.*

*"அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார்." - எபி. 12:2*

*இப்படி அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷம் என்னவென்றால்,*

*1. பிதாவினால் ஏற்றுக் கொள்ளத்தக்க, மனமுவந்து செய்யக்கூடிய சேவை மூலம் பெரும் சந்தோஷம்.*

*2. பாவம், சாபம், மரணம் ஆகியவற்றி-ருந்து*

மனுக்குலத்தை மீட்பதில் கிடைத்த சந்தோஷம்.

3. இந்த மீட்புப் பணியை நிறைவேற்றுவதினால், உலகை ஆளுகை செய்யவும், ஆசீர்வதிக்கவும், ராஜரீக ஆசாரியராகவும் பிதாவினால் தகுதியுடைவராக எண்ணப்படுதலினால் உண்டாகும் சந்தோஷமும், புதிய உடன்படிக்கையை ஏற்றுக் கொள்பவர்களை பாவத்திலிருந்து உயர்த்தி தேவ கிருபைக்கு கொண்டு செல்வதினாலும், உலகிற்கு தெய்வீக திட்டத்தை வெளிப்படுத்துவதினாலும் கிடைக்கும் சந்தோஷம்.

4. இந்த உலகம் உண்டாவதற்கு முன் அவர் பிதாவோடு ஆவியின் ரூபத்தில் இருந்த நிலைக்கு மட்டுமல்ல, அதையும் கடந்து, தேவதூதர்கள், பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ள வைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படா தவைகளுமான சகல வஸ்துக்கள், சிங்காசனங்கள், துரைத்தனங்கள் அதிகாரங்கள் ஆகிய எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தையும் கிறிஸ்துவுக்கு தேவன் தந்தருளி உன்னதங்களில் அவரை பிதாவுக்கு அடுத்தபடியான உயர்நிலையிலே, அவருடைய வலது பாரிசத்திலே உட்காரச் செய்தார். தெய்வீக சுபாவத்தை அதனுடன் வருகிற சாகாமையையும் சுதந்தரிக்கப்போகிற, தேவனால் வாக்களிக்கப்பட்ட முடிவில்லாத சந்தோஷம்.

இந்த எல்லா சந்தோஷத்தினையும் பெற ஒரேயொரு நிபந்தனை என்னவென்றால், பிதாவின் சித்தத்திற்கு முழுவதும் கீழ்ப்படிவதே. உண்மை, எப்பொழுதும் அவர் பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே அவருக்கு மனமகிழ்ச்சியாயிருந்தது. இப்பொழுது அவர் உட்படுத்தப்பட்டது போல, எப்பொழுதுமே இதற்கு முன்பு சோதனைக்கு அவர் உட்படுத்தப்பட்டதில்லை. இதுவரையில் அவர் பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்திருந்தது, மகிழ்ச்சிகரமானதும், கெளரவமானதுமாக இருந்தது. ஆனால் சோதனைக்குட்பட்டு கீழ்ப்படிவதென்பது மனிதனாக பூமியில் வந்து துன்பம், வருத்தம், சோதனைகள் அனுபவிப்பதோடல்லாமல், சாகவும் வேண்டியிருந்தது. சாவும் சாதாரண சாவல்ல, சிலுவையில் தொங்கி, அவமான மரணம் அடைந்தாக வேண்டும். இந்த நிபந்தனைகளை

ஏற்று அவர் கீழ்ப்படிய வேண்டும். இந்த எல்லா சோதனைகளையும் கொஞ்சமும் பின்னடையாமல் தடுமாறாமல் வென்று ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தேவனுடைய ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகிய குணங்களில் அசைக்கமுடியாத நம்பிக்கை உள்ளவராகி, அவரின் சித்தம் செய்ய தம்மை முழுமையாக தத்தம் செய்தார். பாவிகள் தமக்கெதிராக செய்த கேலி , ஏளனம், எதிராளியான சாத்தான் கொடுத்த துன்பங்கள் இவற்றையெல்லாம் தயக்கமில்லாமல் தாங்கிக்கொண்டார். இப்படியாக அவர் பட்ட பாடுகள், உபத்திரங்களினால் மேலும் பூரணப்பட்டு, அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த எல்லா சந்தோஷத்தையும் அடையக்கூடிய தகுதியை அவர் சுதந்தரித்துக் கொண்டார். இதன் தொடர்பாக மகா உன்னத நிலையை அடைந்து, தெய்வீக சுபாவத்தையும் பெற்றுக் கொண்டார். கிறிஸ்துவின் செயல்பாடுகளையெல்லாம் கண்டவர்கள். "இவருடைய செயல்பாடுகள், பிதாவாகிய தேவனின் மகிமைக்கு ஏற்றதாகவே இருக்கக் கண்டோம்" என்று சாட்சியம் கூறினார்.

**"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு தாம் பூரணரான பின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்கு காரணரானார்."**

*- எபி.5:8.10 -*

பரிசுத்தாவியினால் ஏவப்பட்டு இந்த நிரூபத்தை எழுதிய அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: நமது கர்த்தர் ஏற்கனவே மாசற்றவராக, பரிபூரண குமாரனாக இருந்தார். அப்போது தேவனிடத்தில் மிகுந்த தயவு பெற்றிருந்தும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராகவே இருந்தார். ஆனால் தற்போது பாவமாம்ச சாய-ல் வந்திருந்து பாடுகளோடும் உபத்திரவங்களோடும் இருந்தபோதும் அவர் பிதாவுக்கு கீழ்ப்படிந்தவராக இருந்தார். சோதிக்கப்பட்டு பரிபூரண தகுதியை நிரூபித்ததால், ஆவிக்குரிய நிலையிலேயே மிக உன்னத நிலையான தெய்வீக நிலைக்கு உயர்த்தப்பட்டார், அவர் பிதாவினால் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டபோது பரிபூரணரானார். அவர் தமக்கு முன்பாக

வைக்கப்பட்டிருந்த உன்னதமான மகிமைக்கு பாத்திரரானார். தன்னுடைய சரீரமாகிய சபைக்கு முதலில் மீட்பைக் கொடுக்கிறார். அதற்குப் பின்பு ஏற்ற வேளையில் எல்லா உலக மகா ஜனங்களும் சத்தியத்தை அறியும் அறிவுக்கு வந்து, மீட்பைப் பெற்று, அவருக்கு கீழ்ப்படிந்திருப்பார்கள்.

பவுல் அப்போஸ்தலரின் இந்த அறிக்கையும் பின்வரும் பேதுருவின் சாட்சியும் எவ்வளவு இசைவாக இருக்கிறது என்பதைக் காண்போம். "இயேசுவை நமது பிதாக்களின் தேவன் எழுப்பி... அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்." அப். 5:30-31

இப்படியாக இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கு முன்பாகவும், தூதர்களுக்கு முன்பாகவும் அவருடைய சகோதரர்களாகிய நமக்கு முன்பாகவும், பிதாவாகிய தேவனுக்கும் அவரது அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் தனது கீழ்ப்படிதலை மெய்ப்பித்துக் காண்பித்தார். இப்படியாக தேவனுடைய பிரமாணத்தை முக்கியப்படுத்தி மதிப்பிற்குரிய தாக்கினார். இது பரிபூரண மனிதனால் நிறைவேற்ற கடினமானதல்ல, மிக மோசமான சூழ்நிலையிலும் இதை நிறைவேற்ற முடியும் என்று நிரூபித்துக் காண்பித்தார். அவரை பின்பற்றுகிறவர்களாகிய நாமும் கூட தேவனுக்கு கீழ்ப்படிகிற, அறிவுள்ள சிருஷ்டிகளோடு, மகிழ்ந்து கூறுவோம்.

"அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும், பலத்தையும், கனத்தையும், மகிமையையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ள பாத்திரராயிருக்கிறார்" எனப்பாடுவோம். (வெளி. 5:12)

மகிமைடைந்த நமது கர்த்தரே, நமது இரட்சிப்பின் அதிபதி. இது சிலுவை வீரர்களாக அவரைப் பின்பற்றி அவருக்கு உடன் சுதந்திரர்களாக விரும்புகிறவர்கள் யாவரும், இப்படிப்பட்ட சோதனைகள் உபத்திரவங்களால் மட்டுமே பூரணராக்கப்பட்டு புதிய சிருஷ்டியாக முடியும் என்பதை காட்டுகிறது. நமது மீட்பின் அதிபதி என்னென்ன உபத்திரவங்களால் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு புதிய சிருஷ்டியானாரோ, இந்த உலகம், மாம்சம், சாத்தான்

ஆகியவற்றின் எதிர்ப்புக்களால் வந்த எல்லாத் தொல்லைகளையும் தனது சித்தத்தை பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படுத்தி சகித்தாரோ, அதே போல நாமும் சகிக்கவேண்டும். இந்தத் துன்பங்கள் மற்ற உலக மக்களுக்கு வரக்கூடிய சாமான்ய துன்பங்களல்ல. கிறிஸ்துவின் நிமித்தம் வரும் உபத்திரவங்களை நீடிய பொறுமையோடு கர்த்தருக்காகவும், கர்த்தருடைய வார்த்தையின் பொருட்டும், கர்த்தருடைய ஜனங்களுக்காகவும், சுயசித்தத்தை நிறைவேற்ற அல்ல, பரலோக பிதாவின் சித்தமாகிய நமது அதிபதியின் சித்தத்தினால் பூரணப்படுத்தப்பட்டு, மனப்பூர்வமாகவும், மனமுவந்தும் நல்ல போர்ச்சேவகனாக எல்லாத் தீங்கையும் சகிக்கும் போதுதான் புதிய சிருஷ்டியாக உருவாக முடியும். எனவே நாம் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவருடைய வழிகளைப் பின்பற்றி நடக்கும்போது, அவருடைய பராமரிப்பும், பாதுகாவலும் நமக்குக் கிடைக்கும். அவருடைய சகாயத்தினால் பரலோக சிங்காசனத்தில் அமரும் பாக்கியம் கிடைக்கும். அவருடைய வாக்குத் தத்தத்தின்பேரில் நம்பிக்கை கொண்டிருக்கிற நமக்கு, யாவும் நன்மைக் கேதுவாகவே நடக்கும். நமது சக்திக்கு மேலாக நம்மை சோதனைக்குட்படுத்துவது அவருக்கு பிரியமல்ல. ஒவ்வொரு சோதனையிலிருந்தும் தப்பிக்கும் மார்க்கத்தையும் அவர் நமக்கு காண்பிக்கிறார். ஒவ்வொரு சோதனைகளிலும் தேவனைக்கேற்ப அவர் தமது கிருபையைக் கொண்டு நம்மைக் காக்கிறார். இதேபோலத்தான் இப்போது சோதனையிலிருக்கும் அவருடைய சகோதரர்களுக்குக் கிருபை அளிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட சோதனைகளின் மூலமாகவே கிறிஸ்துவுக்குள் பரிபூணர்களாக்கப்பட்டு புதிய சிருஷ்டிகளாகிறார்கள்.

*"ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவர்." - கொலோ. 1 :12*

## "பாவமாம்சத்தின் சாயல்"

*மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை (மாம்சமனைத்தும் பாவத்தில் விழுந்ததால், நியாயப்பிரமாணத்துக்கு முழுதும் கீழ்ப்படிய முடியவில்லை) தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனை பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி,*

*மாம்சத்திலே, பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். ஒரு புது ஜீவவழியைத் திறந்து அதன் மூலம் (மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற) நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படி செய்தார். இப்படிப்பட்டவர்களுக்கு இனி ஆக்கினை தீர்ப்பில்லை. ஏனெனில் எல்லா அபூரணங்களையும் பாவிகளாகவும் மரணத்திற்குரியவர்களாகவும் தீர்த்த நியாயப் பிரமாணத்தி-ருந்து நம்மை இயேசு கிறிஸ்துவுக்குள் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் விடுதலையாக்கிற்று. (ரோம. 8:1-4)*

நமது கர்த்தரை பாவிகளில் ஒருவராக எண்ணக்கூடியவர்கள், இந்த வசனத்தை உபயோகப்படுத்தி அவர் பாவி என நிரூபிக்கத் தலைப்பட்டாலும் அந்தக் கருத்துக்கிசைவான வேறு எந்த ஆதாரமும் வேதாகமத்தில் கிடையாது. இயேசு "பாவ மாம்சத்தின் சாயலானார்" என்பதை ஆதாம் விழுந்துபோன நிலைமையான பாவ சந்ததியில் இயேசு பாவியாகப் பிறந்தார் என்று நிரூபிக்க முயல்கின்றனர். ஆனால் அது தவறு. இயேசு கிறிஸ்து, ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட போது இருந்த பரிபூரண நிலைமையில் சிருஷ்டிக்கப்பட்டார் என்பதே மெய். இதை வாசிக்கிறவர்கள் யாவரும் அப்போஸ்தலர்களின் கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வர் என்று நாங்கள் நம்புகிறோம். நமது கர்த்தர் பரலோகத்திலிருந்த ஆவிக்குரிய நிலையைவிட்டு மாம்ச சாயலில் வந்தார். எந்த உலகை மீட்க வந்தாரோ அந்த உலகிலுள்ள மனிதனைப் போல வந்தார். ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தினால், இந்த மனுக்குலம் பாவத்திற்கு அடிமையாக விற்கப்பட்டது. விளக்கவுரையாகச் சொல்லப்பட்ட இடத்தைத் தவிர வேறு எங்கும் நமது கர்த்தர் பாவி என்று குறிப்பிடப்படவில்லை. இதில் கொஞ்மேனும் உண்மையிருக்க முடியாது. எப்படியென்றால் ஒருபாவி இன்னொரு பாவிக்கு ஈடுகட்ட முடியாது. பாவம் இல்லாதவராக வந்தால் தான் பாவத்துக்கு பரிகாரம் செய்யக் கூடும். தெய்வீக நியாயப் பிரமாணத்தின்படி "பாவத்தின் சம்பளம் மரணம்." நமது கர்த்தரிடத்தில் பாவமோ, பாவத்தின் நிழலோ இருந்திருக்குமானால் அவர் தன் ஜீவனையே இழந்திருக்கக்கூடும். அதனால் ஆதாமுக்கு ஈடுபலியாக விலைக் கிரயத்தைக் கொடுக்க அவருக்குத் தகுதியிருந்திருக்காது.

## "நமது பெலவீனங்களை அவர் ஏற்றுக் கொண்டார்"

**-மத். 8:17-**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை எற்றுக் கொண்டு, நம்முடைய

*துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமானதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மீது வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." - ஏசா. 53:4-5.*

பரிபூரணத்திற்கு நேர் எதிரிடையானது பெலவீனம். விழுந்துபோன மனுக்குலத்தின் பாவங்கள் அவர் மீது சுமத்தப்பட்டதால் அவர் பாவி என்றும், பாவியாக இருப்பதால் பரிபூரணராக இருந்திருக்க முடியாது என்றும் தர்க்க ரீதியாக வாதம் செய்கின்றனர். நமது கர்த்தர் கெத்சமனே தோட்டத்தில் இரவில் மிகுந்தவேதனையோடு பாடுகள்பட்டு இரத்த வேர்வை சிந்தினார். இரத்தவேர்வை சிந்துதல் ஒரு அபூர்வ நோய் என்றும், தொற்று நோய் என்றும் மருத்தவர்கள் கூறுகின்றனர். இது நாடி நரம்புகளைத் தளர்ச்சியுறச் செய்து பலவீனப்படுத்தும் பயங்கர நோய். இயேசு சிலுவையைத் தூக்கிக் கொண்டு கொல்கொதாவுக்கு நடந்து சென்றபோது பாரம் தாங்காமல் மயங்கி விழுந்தார். அப்போது மீதமுள்ள தூரத்தைக் கடக்க சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவனை சிலுவையைச் சுமக்க பலவந்தப் படுத்தினர். (மத்.27:32) சிலுவையில் அறையப்பட்டவர்கள் மரணமடையும் காலத்திற்கு முன்பதாகவே இவர் மரித்து விட்டதற்குக் காரணம், இருதயம் நொறுங்கி மார்பு தசைகள் பிய்ந்து போனதினால் என்று கூறப்படுக்கிறது. மரித்த பின்னரும் கூட இரத்தமும் தண்ணீரும் ஈட்டி காயத்திலிருந்து வழிந்தோடியது. இதிலெல்லாம் நம் ஆண்டவர் முழுபலத்தை வெளிப்படுத்தவில்லை. ஏனெனில் முதல் பூரண மனதனாகிய ஆதாம் தொள்ளயிரத்து முப்பது வருடம் வாழ்ந்தான் என்று இதற்கு ஆதாரமாகக் கூறப்படுகிறது. இதனால் ஒரு கேள்வி எழுகிறது. இதெல்லாம் நம் ஆண்டவரைப் பொறுத்த வரை அவரது பெலவீனத்தை நிரூபிக்கவில்லையா? பாரம்பரியத்தினாலேயோ அல்லது வேறு எந்த காரணத்தினாலேயோ அவர் பூரண மனிதலிருந்து குறைவு பட்டிருக்கிறார், ஆகையால் அவர் மாசுள்ளவர் அல்லவா என்ற கேள்வி எழுகிறது.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இது நியாயமாகத் தோன்றும். தெய்வீக ஞானப்படி வேத வசனங்களின் வழிகாட்டுதலின்படி நாம் ஆழமாக ஆராய்ந்து பார்ப்போமாகில்

நமது இரட்சகர் "மாசற்றவரும், பாவத்திற்கு விலகினவரும், பரிசுத்தரும், குற்றமற்றவருமாய்" இருந்தார் என்பது புலப்படும். இந்த ஐயங்களை எல்லாம் அடியோடு போக்கும் திறவுகோல் போன்ற வார்த்தைகளைக் கவனிப்போம். உலக மக்களும் நாமும் எண்ணுகிறது போலவே தீர்க்கதரிசியும் எழுதியிருக்கிறார். எல்லாரையும் போலவே நமது கர்த்தரும் மரண ஆக்கினைக்குட்பட்டவராக பாவத்தாலும் வியாதியாலும் பீடிக்கப் பட்டிருந்தார். தேவனால் அடிக்கப்பட்டவராகவும் இருந்தார் என்று குறிப்பிடுகிறார். ஆனால் தோற்றத்தில் இப்படி காணப்பட்டாலும் நமது பாவத்தினிமித்தமே தேவன் அவரை நொறுக்கச் சித்தமானார். அவருடைய பாவங்களுக்காக அல்ல, நமது பாவங்களுக்காக. நமது துன்பங்கள், உபத்திரவங்கள், பாரங்கள் ஆகிவற்றை அவர் நமக்காகச் சுமந்தார். தெய்வீக நியாயப் பிரமாணத்தின்படி அவர் நமக்குப் பதிலாக நமது இடத்தில் தன்னை ஒப்புவித்து மரணமடைந்தார். "அநீதிமான்களாகிய நமக்காக நீதிமானாகிய அவர் பாடுபட்டார்." முதலாம் வருகையைக் குறித்து மாம்ச இஸ்ரயேலர்கள் மத்தியி-ருந்த தீர்க்கதரிசி பேசும்போது, "நாமோ அவர், தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டுச் சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்." ஆனால் அது தவறு. "அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்று கூறுகிறார். ஏசா. *53:4-5.*

இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை சுவிசேஷகராகிய மத்தேயு நினைவு கூர்ந்து கூறுகிறதாவது: "பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அந்த ஆவிகளை தமது வார்த்தைகளினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக் கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது." மத். *8:16,17*

மனுகுலத்தின் பலவீனங்களை இயேசு கிறிஸ்து

ஏற்றுக்கொண்டதற்கும் வியாதிகளைக் குணப்படுத்துவதற்கும் இடையேயுள்ள சம்பந்தத்தை பெரும்பாலானோர் உணர்ந்து கொள்வதில்லை. யாராலும் பார்க்க முடியாத ஒரு அற்புத வல்லமை அவரிடத்தில் இருந்ததாகவும், அதனால் அவர் தன்னை அலட்டிக் கொள்ளாமல் ஏராளமான பேருடைய பிணி, வாதைகளையெல்லாம் தன்னுடைய பலமோ வல்லமையோ சிறிதும் குறையாமல் நொடியில் தீர்த்து வைத்தார் என்றும் நினைக்கின்றனர்.

நம்முடைய மீட்பருக்கு “உன்னத்திலிருந்து வரும் பலனை் அளவில்லாமல் பிதா கொடுத்திருக்கிறார். ஆகவே எவ்விதத்திலும் தனது திட்டத்தை நிறைவேற்றுவார் என்பதில் எவ்வளவும் ஐயம் கொள்ளக் கூடாது. எனவே கிறிஸ்து தன்னுடைய வல்லமையையோ பலத்தையோ கொஞ்சமேனும் இழக்காமல் மனிதருக்கு அரிதான எந்தக் காரியமும் செய்யும் வல்லமை அவரிடத்தில் இருந்தது. எனவே இயேசுகிறிஸ்து அரிதான தனது வல்லமையைக் கொண்டு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றியதும், திரளான ஜனங்களுக்கு போஜனம் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கவை. ஆனால், வியாதிகளைக் குணப்படுத்தும்போது, அவர்களின் நோய்களைத் தம்மீது ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு நோயிலிருந்து விடுதலை தந்தாரேயல்லாமல், தன்னிடமிருந்த அற்புத சக்தியினால் அதைச் செய்யவில்லை. எவ்வளவு அதிகமாக வியாதியஸ்தர்களைக் குணப்படுத்தினாரோ, அவ்வளவாக தம்முடைய ஆரோக்கியத்தை இழந்தார். இதற்குச் சான்றாக ஒரு ஏழை விதவையைக் குறித்து வேதம் கூறுகிறதைக் கவனிக்கலாம் “பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும், வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்பட்டிருந்தாள்.” எப்படிப்பட்ட விசுவாசம் அவளை இயேசுவிடம் கொண்டுவந்து, “நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்” என்று கூறச் செய்தது என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும். வேதம் கூறுகிறது: “உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்று போயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை

புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள். இதை செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார்.... அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்." மாற்கு. 5:25-34

இதே செய்தியை லூக்கா 6:19-லும் வாசிக்கலாம். "அவரிடத்தி-ருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகை தேடினார்கள்." இவ்விதமாகவே வேதாகமம் குறிப்பிடுகிறபடி, எல்லா மனிதருடைய நோய்கள், பலவீனங்களை நம் இரட்சகர் ஏற்றுக் கொண்டார். இவ்விதமாக பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தன்னுடைய பலத்தைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களின் பலவீனங்களை சுமந்து கொண்டதினால் அவர் மிகவும் பலவீனராயிருந்தார். அவர் தமது மூன்றரை ஆண்டு ஊழியத்தில் சென்ற இடங்களிலெல்லாம் தம்முடைய வல்லமையை, மக்களை குணமாக்குதலின் மூலம் இழந்திருந்தார். எல்லார்மேலும் பரிதாபப்பட்டு, அனைவருக்கும் சுகம் தர தன் வல்லமையை இழந்தார்.

நம்முடைய அன்றாட வாழ்க்கை அனுபவங்களைப் பார்க்கும்போது, இதில் ஒன்றும் நூதனமில்லை என்றுணரலாம். இவ்வளவு இரக்கமும் மன உருக்கமுமுள்ள, நண்பர்களுக்காகவும் எல்லோருக்காகவும் தன்னுடைய பலம், ஆரோக்கியத்தை ஈடாகக் கொடுத்து, சிநேகிதரின் உயிரைக் காக்கக் கூடியவர்கள் இன்று யார் இருக்கிறார்கள்? ஓரளவு தன் சிநேகிதம், உறவைப் பாராட்டும் முகத்தான் கொஞ்சம் தன் ஆரோக்கியத்திலும் வசதியிலும் தியாகம் செய்பவர்கள் சிலர் மட்டுமே இருக்கலாம். இப்படி வியாதிப்பட்டவர்களை சந்திக்கும்போது துன்பப்பட்டவர்களுக்கு இரங்கும் இரக்கம், அந்தப் பிணியினுடைய தன்மை, பரிதாப நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் உருக்கமான இரக்கமும் பெருக்கெடுத்தோடும். மனிதர்களுக்கு மாத்திரமல்ல,

மிருகங்களுக்கும் கூட இந்த இரக்க உணர்விலே, ஒரே மாதிரியாயில்லாமல், பல படிகள் வேற்றுமை இருப்பதை அறியலாம். உதாரணமாக, மாடப்புறாவை எடுத்துக் கொள்வோம். இரக்கமும் கபடற்றுதுமான சுபாவத்தை உடையதாகக் கருதப்படுகிறது. இது மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உதாரணமாக சொல்லப்படுகிறது. பல வகைளிலும் மாடப்புறா மனிதருக்கு உதவி செய்கிறது. சிலர் வியாதிப்பட்டிருக்கும் போதும் கூட, புறாக்களைக் கொண்டு வந்து அவர்கள் இருக்கும் அறையில் தங்கச் செய்யும்போது ஆராக்கியமடைவர். ஆனால் புறாவிற்கு ஆரோக்கியமற்றுப் போகும். எப்படியெனில், புறாவிற்கு தன்னிடமிருக்கக் கூடிய வல்லமையையும், ஆரோக்கியத்தையும் தானமாகத் தந்து, அந்த நோய்களையும் பலவீனத்தையும் தான் ஏற்றுக் கொள்கிறது. வாத நோய்க் கண்டிருக்கும்போது, பறவைகள் அந்த வாதத்தை தம்மிடம் ஏற்றுக் கொள்வதால் நலிவடைகின்றன. ஆனால் நோயாளியோ குணமடைவார்.

ஆறாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும், மனுக்குலத்திலே அன்பு, இரக்கம் ஆகியவை நலிந்து காணப்பட்டாலும், கர்த்தராகிய இயேசுவினிடத்திலே இந்த இரக்கம் அபரிமிதமாகவும், பூரணமாகவும் இருந்ததால், எப்படி "நம்முடைய பெலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடியவராயிருந்திருப்பார்" என்று சிறிதளவு உணரமுடிகிறது. அவருடைய தெய்வீக சுபாவம் மென்மை, பரிவு ஆகிய குணங்களினால், இரக்கம் பெருக்கெடுத்ததாய் இருந்தது. அவர் பாரம்பரியத்தின்படியும், தன் சுபாவப்படியும் சுயநல முள்ளவராகவோ பாவியாகவோ எள்ளளவும் இருந்ததில்லை. மேலும் நாம் வேதத்தில் வாசிக்கிறதாவது: அவர் அவர்கள் மேல் "மனதுருகினார்." "திரளான ஜனங்களைக்கண்டு, அவர்கள் மேல் மனதுருகினர்." யூதர்கள் அழுதபோதும், மார்த்தாள், மரியாள் அழுத போதும் பரிதாபப்பட்டு," இயேசு அழுதார்." சில நேரங்களில் சிலர் உதவி ஏதும் செய்யக் கூடாத நிலையில் தங்களது பரிதாப உணர்ச்சியை மட்டுமே காட்டுவர். ஆனால் இயேசு இதற்கு எதிரிடையாக பரிதாபப்பட்டு அதற்கு பரிகாரமும் செய்தார். தன்னை சிருஷ்டித்தவரின் சாயலுக்கு ஒத்ததாக இருக்கும் மனிதன், சுயநலமும்

கடினமனமும் இரக்கமில்லாத தன்மையும் குணமாகக் கொண்டிராமல், இரக்கமும் மன உருக்கமும் அன்புமுள்ள மிருதுவான குணநலன்களைக் கொண்டவனாக இருக்க வேண்டும். எந்த மனிதனும் பேசிராத உன்னத வார்த்தைகளை உரைத்தவராகிய கர்த்தர், விழுந்துபோன மனுக்குலத்திலுள்ள மக்கள், பாதிக்கப்பட்டிருக்கும் இன்னொருவருக்காக காண்பித்த இரக்கத்தைக் காட்டிலும் எவ்வளவாய் இரக்கப்பட்டிருப்பார் என்பதை சொல்லத் தேவையில்லை.

அதற்காக மாத்திரமல்ல, நமது கர்த்தர் இந்த பூமிக்கு எதற்காக வந்தார் என்ற நோக்கத்தினையும் நினைவில் கொள்ள வேண்டும். அவர் வெறும் அற்புதங்களை எந்த சிரமமுமின்றி செய்துவிடவில்லை. மாறாக, ஒவ்வொரு சுகத்தினை அளிக்கும் போதும், மற்றவர்களது பாடுகளை தாம் ஏற்றுக்கொண்டு சுகமளித்தார். மனிதகுமாரனாக பூமிக்கு வந்த அவர் பணிவிடை கொள்ள வராமல் முழு மனுக்குலமும் மீட்புப்பெற தன் ஜீவனையே ஈடுபலியாகவும் தரவே வந்தார். பாவத்தின் சம்பளம் பாடல்ல, மரணம். நம் கர்த்தர் பாடுகளைப் படுகிறதினால் மாத்திரம், பாவத்தின் சம்பளமாகிய மரணத்தைச் சரிசெய்ய முடியாது. அவர் "ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசி பார்க்க வேண்டியது" அத்தியாவசியமானது. "வேத வாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார்" என்று வாசிக்கிறோம். (I கொரிந். 15:3) ஒரு பாவியின் ஸ்தானத்திற்கு வந்து, சாபத்தினால் ஏற்பட்ட எல்லா விளைவுகளையும் சந்தித்து, இறுதியாக மரண தண்டனையையும் அவர் அனுபவிக்க வேண்டியிருந்தது. பலவிதமான துன்பங்களினாலும், தொல்லைகளினாலும் பலவீனம், நோயினால் மனித குடும்பம் செத்துக் கொண்டே சாகிற அனுபவத்தை அவர் அடைந்தாக வேண்டியிருந்தது. அவர் பாவியாக இராதிருந்தாலும் பாவியின் ஸ்தானத்தையும், சாபத்தையும் வலிய ஏற்றுக் கொண்டதினால், அதன் தண்டனையாக மரணத்தையும் அனுபவிக்க நேர்ந்தது. அதன் மூலமாக தெய்வ நீதியை நமக்காக நிறைவேற்றினார்.

அவருடைய மூன்றரை ஆண்டு சேவையில், தன்னுடைய அன்பு, நேசம், பாசம், அவருடைய நோக்கம் இவற்றை அறியாத

*மக்களுக்காக, பிணி, வருத்தம், பலவீனம் ஆகியவற்றை தம்மீது ஏற்றுக் கொண்டு, மனிதருக்கு பெரிய உபகாரமாக அனுதினமும் தன் ஜீவனையே கொடுத்து, ஆரோக்கியத்தையும், மீட்பையும் அளித்தார். இதைக் குறித்தே, "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார்" என்றும், "அவர் தன் ஆத்துமாவை குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார் " என்றும் வேதம் கூறுகிறது. (ஏசாயா. 53.10,12) அவர் யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட நாள் தொடங்கி, கல்வாரியில் சிலுவையில் அறையப்பட்டு இறுதி மூச்சுவிடும் வரை தன் ஜீவனை படிப்படியாக மரணத்தில் ஊற்றி வந்தார். ஒவ்வொருவரையும் ஆரோக்கியப் படுத்தும்பொழுது, தன்னுடைய ஜீவனாகிய பலம், தன்னிடமிருந்து சென்று கொண்டே இருந்தது. எவ்வளவாய் தன்னுடைய பெலம் இழந்தபோதிலும், முழு மனுக்குலமும் மீட்படைய அது போதுமானதாக இல்லை. கடைசித்துளி இரத்தத்தையும் அவர் சிந்தி, சிலுவையில் தன்னுடைய ஜீவனை விடும்பொழுது, "எல்லாம் நிறைவேறிற்று" என்று சொல்லி மரணமடைந்த பொழுது தான், அந்த ஈடுபலி நிறைவேறியது.*

*நமது கர்த்தர் தனக்குண்டாயிருந்த எல்லா ஜீவ வல்லமையையும் இழக்க வேண்டியிருந்தது. மனிதன் செத்துக் கொண்டே சாகிற அனுபவத்தையும் அவர் அடைய வேண்டியிருந்ததைக் காண்கிறோம். எல்லாவற்றிற்கும் சிகரமாக அவர் கல்வாரியில் சிலுவையில் தொங்கியபோது முழு மனுக்குலத்தின் பாவங்களை ஏற்றுக்கொண்டதால் ஒரு கணம் பிதா அவரை முற்றிலுமாகக் கைவிட நேர்ந்தது. அதை அவர் தாங்க முடியாமல் "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறினார். பாவிகளுக்கு மீட்பளிக்க, இவர் பாவியின் ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள நேர்ந்ததால், பாவிகளுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையை அவர் முழுமையாக ஏற்றுக் கொள்ள நேர்ந்தது. இவையெல்லாம் முழுமையாக அவர் ஏற்று அனுபவித்த பிறகே, அவருடைய ஈடுபலி நிறைவேறித் தீரும். இப்படியாக அவருக்குக் கொடுக்கப்பட்ட எல்லா சோதனைகளையும், நிபந்தனைகளையும் சகித்து வென்றதால், பிதா திருப்தியடைந்தார். எனவே அவர் மனுக்குல இரட்சிப்பின் அதிபதி*

*எனப்பட்டார். ஆகவே அவரை தேவன், சகல தூதர்கள், சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், அதிகாரங்களுக்கு மேலாக உயர்த்தி அரியணையில் தமக்கடுத்த மகிமையான இடத்தில் அமரச் செய்தார்.*

*பிதா தமது வல்லமையான வலது புறச் சிங்காசனத்தை கர்த்தருக்கு அருளுவதற்கு முன்பாக, இப்படிப்பட்ட சோதனைகளை கடந்து, சகித்து வர வேண்டுமென்று விரும்பினார். எனவே அதன் மூலமாக பூமியிலுள்ள எல்லா வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கக் கூடிய அதிகாரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. தேவனுடைய ஒரே பேறான குமாரனும், லோகோஸ் என்ற தேவபிரதிநிதியுமான இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தைச் சோதிக்க மட்டுமல்லாமல், சோதனைக்குட்பட்டால்தான் சோதிக்கப்படுகிறவர்களுக்கு என்னென்ன நிர்ப்பந்தங்கள் என்றுணர்ந்து, அதை எவ்வாறு சகிப்பது என்றும் தெரிந்து கொண்டு, அப்படி சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராகவும், அந்த சகிப்புத் தன்மையைப் பாராட்டவும் கூடிய தன்மையைப் பெற்றிருக்கவும் முடியும் என்று தேவன் விரும்பினார். இப்படிப்பட்டவர்களே சுவிசேஷ யுகத்தில் சபையும், ஆயிர வருடயுகத்தில் உலகமும், கர்த்தர் மூலமாக தேவனிடத்தில் ஒப்புரவாகி, தேவனிடத்தில் வரமுடியும். வேதம் கூறுகிறதாவது: "தேவ காரியங்களைக் குறித்து, இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியாராயிருக்கிறார்." "எல்ல விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டவர்." "தானும் பலவீனமுள்ள வராயிருந்தபடியினாலே, அறியாதவர்களுக்கும், நெறி தப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவராயிருக்கிறார்." "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்." எபி.2:17,18; 4:15-16; 5:2; 7:25,26*

## அத்தியாயம் 6

# ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் தாவீதின் குமாரனும் தாவீதின் ஆண்டவரும்

*எப்படி தாவீதின் குமாரன்-சாலொமோன் வழியாக யோசோப்பின் வம்ச அட்டவணை-நாத்தான் வழியாக மரியாளின் வம்ச அட்டவணை - உயர்ந்தவனை தாழ்த்தி, தாழ்ந்தவனை உயர்த்துதல்-எப்பொழுதி-ருந்து கிறிஸ்துவுக்கு தாவீதின் ஆண்டவர் என்ற பெயர்-“நித்திய பிதா” என்ற நாமத்தின் பொருள் - எப்படி உறுதிப்படுத்துகிறது, எப்படி நடைமுறைக்குரியது-கிறிஸ்துவின் பிள்ளைகள் யார்-சபை அவரது “சகோதரர்கள்”-நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனின் பிள்ளைகள்.*

*“கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்னநினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி?*

*நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில்உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே.*

*தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்-யிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார்.” மத் 22:43-45*

**மு**தன்முதலாக அவர் யாருடைய குமாரன் என்ற இந்த வினா, அவர் இந்த உலகத்திற்கு வரும் முன்பிருந்த நிலையைக் குறிக்காது என்று உணர வேண்டும். மனுக்குலத்திலே இவர் யாருடைய

வழித்தோன்றலில் தோன்றினார் என்பதே அந்த வினா. அவர் கன்னி மரியாளிடத்திலிருந்து பெற்றுக் கொண்ட தன் சரீரத்தின் மூலம் மனிதனாகி மனுக்குலத்தோடு தொடர்புடைவரானார். லூக்கா எழுதினபடி தாவீதின் வம்சத்தில் வந்த நாத்தான் வழியாக மரியாள் தோன்றினாள். (லூக். 3:31). (இங்கே யோசேப்பு ஏலியின் குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். திருமணத்தின் மூலம் மரியாளின் தந்தை ஏலிக்கு சட்டப்படி யோசேப்பு மகனாகிறார். அதாவது மருமகனாகிறார். ஆனால் பிறப்பின்படி அவர் யாக்கோபின் குமாரன். மத்.1:16) யோசேப்பின் வம்சாவழியும் கூட மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் சொல்லப்பட்டபடி, தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் வழியில் வந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது. மரியாள் மூலமாக பிறந்த இயேசுவை யோசேப்பு சுவீகாரப் புத்திரராகத் தெரிந்து கொண்டதால் இயேசுவுக்கு யோசேப்பின் வம்சாவழி அட்டவணையை ஒப்பு நோக்குவதும் முறையே. நாம் எற்கனவே கண்டபடி மரியாள் மட்டுமே இயேசுவின் பிறப்பில் சம்பந்தப்பட்டிருப்பதாலும் மரியாள் இன்னொரு வழியில் தாவீதின் வம்சத்தில் வந்ததாலும் யோசேப்பின் வம்சாவழி அட்டவணையைப் பார்க்கத் தேவையில்லை.

மரியாளுக்கு - யோசேப்புடன் ஏற்பட்ட உறவினால்தான் இயேசுவுக்கு இஸ்ரயேலின் சிங்காசனத்தின் மேல் உரிமை உண்டு என்று சிலர் குறிப்பிடுகிறது சரியல்ல என்று உணர வேண்டும். மாறாக யோசேப்பின் குமாரனாக இயேசு கருதப்பட்டால் தாவீதின் சிங்காசனத்திற்கு வாரிசுரிமையைப் பெற முடியாது. ஏனெனில் தாவீதுக்குப்பின் வந்தவர்களில், சாலமோனின் வழியில் வந்தவர்கள் தான் ஆட்சி உரிமையைப் பெற்றனர். நாத்தான் வழியில் வந்தவர்கள் அல்ல. இருப்பினும் அநேக வேதாகம, குறிப்புகளின்படி தாவீதின் சிங்காசனத்திற்கு சாலமோன் வழியில் தோன்ற வேண்டும் என்ற நியதி இருக்கவேண்டியதில்லை. இதை நாம் சட்டப்பூர்வமான வம்சாவழி அட்டவணைப்படுத்தும்போது, அது சிலர் முன்பதாகவே கற்பனையாகக் கட்டிவிட்ட கதையை சரி என்று ஒத்துக் கொள்ளும் படியாகிவிடும். ஆதலால் அதன்படி யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த குமாரன் என்பதாவிடும். எனவே இந்த வம்சாவழி அட்டவணையைக் கருத்துடன் ஆராய்வது அவசியம்.

இஸ்ரயேலின் மாபெரும் சிங்காசனத்திற்கு வாரிசாக வரப்போகிறவரும், இந்த உலகையே ஆசீர்வதித்து ஆட்சிசெய்ய

*சிங்காசனத்தில் அமரப் போகிறவரும் தாவீதின் வழித்தோன்றலாகத் தான் இருக்க வேண்டும் என்பது எந்த ஐயப்பாட்டிற்கும் இடமில்லாமல், தெய்வ முன்குறிப்பின்படி தீர்மானிக்கப்பட்ட கருத்து என்பதை முதலில் அறிய வேண்டும். இரண்டாவதாக குறிப்பிட்ட சில நிபந்தனைகளின்படி ஆளுகின்ற குடும்பமாகிய சாலொமோனின் வழியில் இயேசு தோன்ற வேண்டும் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் அவர் சாலமோனின் வம்சத்தில் தோன்றியாக வேண்டும். அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படா விட்டால் அவர் வேறு வம்சாவழியில் வந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும் அவர் தாவீதின் வம்சத்திலே வந்தாக வேண்டும், அவர் தாவீதின் குமாரனாகவும் தாவீதின் ஆண்டவராகவும் இருந்ததாக வேண்டும். வேதாகம வசனங்களைக் காண்போம்:*

*"உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின் மேல் வைப்பேன் என்றும், உன் குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவற மாட்டார்." - சங்.132:11,12*

*"கர்த்தர் எனக்கு அநேகக் குமாரரைத் தந்தருளினார், ஆனாலும் இஸ்ரயேலை ஆளும் கர்த்தருடைய இராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காருகிறதற்கு, அவர் என்னுடைய எல்லாக் குமாரரிலும், என் குமாரனாகிய சாலொமோனைத் தெரிந்து கொண்டு, அவர் என்னை நோக்கி, உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும், என் பிரகாரங்களையும் கட்டக்கடவன்; இந்நாளில் நடக்கிறபடியே, அவன் என் கற்பனைகளின்படியும், என் நியாயங்களின்படியும் செய்ய உறுதியாய் இருப்பானானால் அவன் ராஜ்ய பாரத்தை என்றென்றைக்கும் திடப்படுத்துவேன் என்றார்." - நாளா. 28:5-7*

*"உன் பிள்ளைகள் தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு ஆத்துமாவோடும், எனக்கு முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக் கொண்டால், இஸ்ரயே-ன் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கத் தக்க புருஷன் உனக்கு இல்லாமற்*

*போவதில்லை." 1 ராஜா. 2:3*

தேவனுடைய கட்டளையின்படி கீழ்ப்படிந்திருந்தால் மட்டுமே சாலொமோனுடைய வழியில் வருகிறவர்களின் சந்ததியில் மேசியாவின் இராஜ்யத்தையும், வரப்போகிற யுகாயுகத்தையும் ஆளப்போகிற வாரிசு உண்டாகும் என்பதே வாக்குத்தத்தம். இந்த வசனத்தை தீர்க்கமாக ஆராய்ந்தால், அதன்படி, இஸ்ரயேலர்கள் தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமற் போனால், சாலொமோனுக்குப் பின்வரும் சந்ததியார் தேவ ராஜ்யத்தில் ஆளும் தகுதியில் இருக்க மாட்டார்கள் என்று உறுதியாகக் கூறப்படுகிறது. சாலொமோனும் அவனுக்குப் பின்வரும் சந்ததியாரும், தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு ஆத்துமாவோடும், எனக்கு (தேவனுக்கு) முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்துக் கொண்டார்களா என்ற வினா எழுகிறது. அப்படி அவர்கள் கீழ்ப்படியாவிடில் சாலொமோன் வழியில் வந்த மேசியாவின் வம்சாவழிக்கு அவர்கள் புறம்பாக்கப்படுவார்கள்.

இந்த வினாவிற்கு விடைகாண வேதத்தை நன்கு பரிசீ-க்க வேண்டும். சாலொமோனுக்குப் பின்வந்த சந்ததியார் தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனார்களென்று வேதத்தின்மூலம் காண்கிறோம். தெய்வீகக் கட்டளைக்கு கீழ்ப்படியாமற் போய் சாலொமோன் வம்சாவழியினர் அதற்கு அருகதையற்று போனதினால், மேசியா வருவதற்கு, தாவீதின் மற்ற பிள்ளைகளின் வம்சத்தில் தான் அதற்குரிய வாரிசு உருவாக வேண்டியிருந்தது. இங்கு கர்த்தரின் வார்த்தையைக் கேட்போமாக:

*"என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார், நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்." 1 நாளா. 28:9*

*"அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளாமற் போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார். ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி, நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும்,*

*என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற் போய் இந்த காரியத்தைச் செய்தபடியினால், இராஜ்ய பாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக் காரனுக்குக் கொடுப்பேன். ஆகிலும் உன் தகப்பனாகிய தாவீதினிமித்தம், நான் அதை உன் நாட்களிலே செய்வதில்லை; உன் குமாரனுடைய கையினின்று அதைப் பிடுங்குவேன். ஆனாலும் இராஜ்யம் முழுவதையும் நான் பிடுங்காமல், என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் தெரிந்து கொண்ட எருசலேமினித்தமும், ஒரு கோத்திரத்தை நான் உன் குமாரனுக்குக் கொடுப்பேன் என்றார்." - 1 ராஜா. 11:9-13*

*இதன்படி, சாலொமோனின் மரணத்திற்குப்பிறகு, இஸ்ரயே-ன் பத்துக் கோத்திரங்கள் பிரிந்து போய், சாலொமோனின் குமாரனும், சாலொமோனின் வாரிசாக ஆட்சி புரிந்த, ரெகோபெயாமுக்கு விசுவாசமாய்க் கீழ்ப்படிந்திருக்க மாட்டோமென்று பிரிந்து சென்றார்கள் என்று வரலாறு வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் நாம் யூத கோத்திரத்தைக் குறித்தும், அவர்களுக்குத் துணையாயிருந்த பென்யமின் கோத்திரத்தையும் குறித்தும் கர்த்தருடைய வார்த்தையைக் கவனிப்போமாக. சாலொமோன் கோத்திரத்திற்கு விசுவாசமாயிருந்த பென்யமின் கோத்திரம், இஸ்ரயேல் இராஜ்யத்துடன் சேராமல், மேசியாவின் இராஜ்யத்திற்கு நிழலான சாலெமோன் இராஜ்யத்துடன் (யூத இராஜ்யம்) சேர்ந்து கொண்டது. சாலொமோனுக்குப் பிற்பாடு அவனுடைய வம்சாவழியில் வந்த கடைசி மூன்று யூத இராஜாக்கள் யோயாக்கீம், அவரது குமாரன் யோயாக்கீன், யோயாக்கீமின் சகோதரனாகிய சிதேக்கியா ஆகியோரே. இந்த மூவர்களுக்கெதிரான தேவனுடைய சாட்சியை கவனித்துக் கேட்போம். (யோயாக்கீனுக்கு கோனியா, எக்கோனியா என்ற பெயரும் உண்டு) இவர்களுடைய சந்ததியார் எவரும் இராஜ்யபாரம் பண்ணப் போவதில்லை என்பதை எரேமியா மூலம் அறிகிறோம்.*

*"யூதாவின் ராஜாவாகிய யோயக்கீமின் குமாரன் கோனியா, என் வலது கையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றி எறிந்து போடுவேன்... கோனியா என்கிற இந்த*

*மனுஷன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலையோ? ஒருவரும் விரும்பாத பாத்திரமோ? அவனும் அவன் சந்ததியும் தள்ளுண்டதும், தாங்கள் அறியாத தேசத்திலே துரத்தி விடப்பட்டதும் ஏது? தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக் கேள். இந்தப் புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைக் குறித்து எழுதுங்கள்; அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப் போகிறதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்." - எரேமி. 22:24-30*

*"யூதாவின் இராஜாவாகிய யோயாக்கீமைக் குறித்து: தாவீதின் சிங்காசனத்தின் மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்..." எரேமி. 36:30*

*சிதேக்கியாவைக் குறித்து நாம் இவ்வாறு வாசிக்கிறோம் :*

*"இஸ்ரயேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வருங்காலத்தில் உன்நாள் வந்தது. பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப் போடு, அது இனி முன்போ-ராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்." - எசே. 21:25-27*

*இங்கே சாலொமோனுடைய வம்சாவழிகள் முற்றிலுமாக ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டதை பிரகடனப்படுத்துகிறது. உயர்த்தப்பட்ட சந்ததியை தாழ்த்தி, தாழ்த்தப்பட்டிருந்த சந்ததியை உயர்த்த வேண்டும் என்கிற தேவசித்தப்படி, மறைபொருளாகவும், ஆட்சிப் பட்டம் பெறுவதற்கு எந்தவித முயற்சியும் எடுத்துக் கொள்ளாதிருந்த நாத்தானின் வம்சம் உயர்த்தப்பட்டது. மாம்சத்தின்படி வரவேண்டியவராகிய மேசியா, மரியாளின் வயிற்றிலிருந்து பிறக்க, தாவீதின் பிள்ளைகளில் நாத்தானை தேவன் தெரிந்து கொண்டு ஏற்ற வேளையில் உயர்த்தினார்.*

*சாலொமோனின் வாரிசுகள், தேவனுடைய கட்டளைகள், பிரமணாங்களின்படி நடவாததால், சாலொமோனின் வம்சாவழியில் மேசியா வருவார் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. எல்லா உரிமையும் இருந்தும், தங்கள் தீய நடவடிக்கைகளால் அந்த தெய்வ தயவை இழந்து போனார்கள். அதற்கு இதை விட வேறு என்ன சாட்சி வேண்டும்? இதன்படி அவர் யோசேப்பின் வம்சத்தில் வரவேண்டும், வந்து உரிமையையும் பாத்தியதையும் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பது முற்றிலும் தவறானதாகும். ஏனெனில் இந்த யோசேப்பின் வம்சத்திலே வருகிற எவரும் எப்போதும் சிங்காசனத்தில் உட்கார முடியாது என்பது மேற்சொன்ன காரணங்களால் நிரூபிக்கப்பட்டது.*

*சாலொமோனின் கிளையிலிருந்து இராஜ்ய பாரத்தை நீக்கி விட்டு தாவீதின் வேறொரு கிளைக்கு கொடுப்பார் என்பதற்கு வேறொரு ஆதாரம் வேதத்தில் முன்கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு: "இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன்; அவர் இராஜாவாயிருந்து, ஞானமாய் இராஜரீகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரயேல் சுகமாய் வாசம் பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே." (எரே. 23:5,6)*

*இயேசுவின் தாயாகிய மரியாள், இந்த சரியான கருத்தை பரிசுத்த ஆவியின் ஏவுதலால் புரிந்து கொண்டு, தீர்க்கதரிசனமாக, நன்றி நவிலும் ஸ்தோத்திர கீதமாகப் பாடியதை, லூக். 1:46-55இல் காணலாம்.*

*"தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களி-ருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்."*

*இங்கே, தேவனால் ஒரு காலத்தில் தயவு பெற்றிருந்த சாலொமோனின் குடும்பத்தின் ஐசுவரிய நிலையையும்,*

அப்பொழுது அறியப்படாமலிருந்த நாத்தானின் தாழ்ந்த நிலையையும் ஒப்பிட்டு மரியாள் பாடினதை இங்கே நாம் சிந்திக்கப் பொருத்தமாயுள்ளது. அவ்விதமாக சாலொமோனின் வம்சவழியாகிய சிதேக்கியாவின் காலத்திலே பாகையும் கிரீடமும் அகற்றப்பட்டது. இவ்விதமான தாவீதின் வேரிலே நீதியின் கிளையாகிய உரிமைக்காரரிடம் அவைகள் கொடுக்கப்பட வேண்டியிருந்தது.

இவ்விதமாக எப்படி கர்த்தர் தாவீதின் வம்சத்தில் வந்த நீதியின் கிளையாகிறார் என்பதை விளக்கமாகப் பார்த்தோம். எந்த சந்ததியின் வழியாக மேசியா வந்தார் என்றும் பார்த்தோம். அதற்கு சம்பந்தப்பட்ட முழு வேதாகம விளக்கங்களையும் கண்டோம். இப்பொழுது நாம் எப்படி அவர் தாவீதுக்கு ஆண்டவராகிறார் என்பதைக் காண்போம். அவர் தாவீதுக்கு எப்படி குமாரனாகவும், ஆண்டவராகவும் இருக்கிறார்?

இயேசுகிறிஸ்து மாம்சத்தில் இப்பூமிக்கு வந்து நமது மத்தியில் வாசம் செய்வதற்கு முன்பாக ஆவிக்குரிய நிலையில் இருந்தார். அப்போது அவர் தாவீதின் கிளையாகவோ, குமாரனாகவோ இருக்கவில்லை. ஒப்புரவாகுதலின் ஊழியத்தைச் செய்து முடித்த பிற்பாடு, தாவீதுக்கு மாத்திரம் அல்ல, "எல்லாருக்கும் கர்த்தரானார்." *(அப்.10:36)* "கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்." - ரோம. *14:9*

"லோகோஸ்" ஒரு கர்த்தரென்றும், ஒரு தேவன் என்றும், வல்லமையுள்ள ஒருவர் என்றும், அதிகாரத்தில் மேலான ஒருவர் என்றும் சரியாக அழைக்கப்படுவது மெய்யே. முதலாம் வருகையில் மனிதனாக வந்திருந்தபோது, அவர் செய்த வல்லமையான அநேக கிரியைகளைக் கண்ட அப்போஸ்தலர்கள், அவருடைய மரணத்துக்கு முன்பாகவே அவரை கர்த்தர், ஆண்டவர் என்று அழைத்தனர். "நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்" *(யோவா. 13:13)* என்று நாம் படிக்கிறோம். இயேசு கிறிஸ்துவை தேவன், பரிசுத்தப்படுத்தி, உலகிற்கு விசேஷித்த உடன்படிக்கையின் தூதராக அனுப்பினார்.

அவரை தேவன் எல்லா வகையிலும் மகிமைப்படுத்தி, “இவர் என் நேச குமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்” என்று சாட்சியம் பகர்ந்தார். அவருடைய மகிமையைக் கண்ட அனைவரும், பிதாவாகிய தேவனின் ஒரே பேறானவரின் மகிமைக்கேற்றதாக இருப்பதையும், கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருப்பதையும் கண்டார்கள். அவர்கள் பிதாவின் பிரதிநிதியாக அவரை கனப்படுத்த வேண்டும், அவரது வார்த்தையைக் கேட்டு கீழ்ப்படிய வேண்டும், அவரை ஆராதிக்க வேண்டும், வழிபாடு பண்ணவேண்டும். மேலே குறிப்பிட்ட வசனத்தில் அப்போஸ்தலர் சொல்லுகிறபடி, நமது ஆண்டவராகிய இயேசு, மரித்து உயிர்த்தெழுந்ததினிமித்தம் கர்த்தராக அல்லது ஒரு ஆண்டவராக ஆனதில் ஒரு விசேஷித்த மாறுபாடான கருத்து இருந்தது.

இயேசு கிறிஸ்து ஒப்புரவாக்குதலின் மத்தியஸ்தர் பணியை நிறைவேற்றி முடித்து உயிர்த்தெழுந்ததால் எல்லாருக்கும் அவர் - “மரித்தோருக்கும் உயிருள்ளோருக்கும் “-கர்த்தர் என்ற விசேஷித்த கருத்தை அறிகிறோம். இந்த மாபெரும் நோக்கத்திற்காகவே அவர் மனிதனானார். ஆதித் தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பாவத்திற்கு கீழாக விற்கப்பட்ட மனுக்குலம் பாவ ராஜ்யத்திற்கும் மரணதண்டனைக்கும் கீழாக, சீரழிந்த நிலையில், அனுகூலமற்ற நிலையில் இருந்தது. எல்லா தீமைகளிலிருந்தும் விடுதலைபெற தெய்வீக சட்டப்படி, ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். மனுக்குலம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். கிறிஸ்து அதை வாங்குபவரானார், அதன் சொந்தக்காரரானார், “எல்லாருக்கும் ஆண்டவரானார்.” பரலோகத்திலிருந்து தனது மகிமையான இருப்பிடத்தை விட்டுவிட்டு இந்த நோக்கத்திற்காகவே பூமிக்கு வந்து மனிதரானார். இயேசு கிறிஸ்து தன்னையே “ஈடுபலிக்கிரயமாகக் கொடுத்து, ஆதாம் மூலமாக மரணத்தீர்ப்பிடப்பட்ட முழு மனுக்குலத்தையும் மீட்டுக் கொண்டார்” என வேதாகமம் விவரிக்கிறது. இவ்வாறு விலையேறப்பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை (ஜீவன்) விலைக்கிரயம் கொடுத்து முழு மனுக்குலமும் வாங்கப்பட்டது.

விலைக்கிரயம் கொடுத்து மனுக்குலத்தை மீட்ட காரணத்தினாலேயே மனுக்குலத்திற்கு இயேசு "ஆண்டவரும் கர்த்தரும்" ஆனார். இவ்வுலகை தனக்கு அடிமைப்படுத்துவதற்காக தன் இரத்தத்தை விலைக்கிரயமாக இயேசு கொடுக்கவில்லை. பாவம், சாபம், மரணம் ஆகியவற்றிலிருந்து முழு விடுதலையை மனித இனம் பெறவேண்டியே இதைச் செய்தார். தேவனுடைய கிருபையின் வரங்களை எற்றுக் கொள்ளுகிற யாவருக்கும் பாவம் சாபம் மரணத்திலிருந்து விடுதலையளிக்கிறார். ஏதேனில் இழந்துபோன புத்திர சுயாதீனத்தையும் உரிமைகளையும் கல்வாரியில் செலுத்தப்பட்ட விலைக்கியரத்தினால் வாங்கினார். இதை மனுமக்களுக்கு கொடுப்பதே மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதின் நோக்கமாகும். மனுக்குலம் இழந்த உரிமைகளையெல்லாம் மீட்டுத்தர தன்னையே ஈடாகத் தந்ததினால் கிறிஸ்து மனுக்குலத்தை கிரயத்திற்கு கொண்டவரும், எஜமானரும், எல்லாருக்கும் கர்த்தருமானார். இப்படியாக தனது மரணத்தினால் இயேசு கிறிஸ்து தாவீதுக்கு குமாரன் மட்டுமல்ல, ஆண்டவருமானார். எப்படியெனில் தாவீது ஒரு மனுபுத்திரன். இயேசு கிறிஸ்து மனுக்குலத்திற்கெல்லாம் கர்த்தராகிவிட்டதால், மனுப் புத்திரராகிய தாவீதுக்கு இயேசு கிறிஸ்து ஆண்டவராகிறார்.

## "தாவீதின் வேரும் சந்ததியும்"

*- வெளி. 22:16 -*

சபைக்கு கர்த்தர் சொல்லுகிற இந்த வார்த்தைகளில் இதே சிந்தனையும் கருத்தும் காணப்படுகிறது. நமது கர்த்தர் மாம்சத்தின்படி மரியாளிடத்தில் பிறந்தபோது, தாவீதுக்கு குமாரனாகவும், தாவீதின் கிளையில் தோன்றியவராகவும், தாவீதின் வம்சத்தவராகவுமிருந்தார். மாசற்ற தன் ஜீவனை தியாகம் பண்ணியதால் அவர் தாவீதின் வேராகவும், அதோடு அவருக்கு ஆண்டவருமானார். "ஆண்டவர்" என்று கொடுக்கப்பட்டுள்ள வார்த்தை "வேர்" என்ற வார்த்தையி-ருந்து வேறானதாக இருக்கிறது. தாவீதின் வேர் என்பது மூலம், ஜீவனுக்கு மூலம் என்று பொருள்படும். அதாவது தாவீதால் உருவாக்கப்பட்டவர் என்று பொருள்படும்.

"ஈசாய்" என்ற வேரி-ருந்து தாவீது உண்டானதாக வேதம்

*உரைக்கிறது. இயற்கையான பிறப்பின்படி பார்க்கும்போது தாவீதுக்கு வேர் "ஈசாய்." தாவீது எப்படி எப்பொழுது இயேசு கிறிஸ்துவுக்கு தகப்பனும் வேருமானார்? அவர் மாம்சத்தில் வருதற்கு முன்பு அல்ல - மனிதனாக வந்தபோதுதான் மரியாளின் மூலமாக ஆதாமின் இனத்திற்கு உறவு ஏற்பட்டது. (எபி. 2:14-18) அந்த வகையிலே அவர் தாவீதின் கிளையானார், வேராகவில்லை. எப்படி, எப்போது அவர் வேரானார்? அதே காரணத்தினால் அதே சமயத்தில் அவர் தாவீதுக்கு ஆண்டவரானார் என்று பதில் கூறுகிறோம். மனுக்குலத்தின் ஜீவாதார உரிமையை தமது மரணத்தின் மூலம் விலைக்கிரயமாக வாங்கிய காரணத்தினால் தாவீதின் ஜீவாதார உரிமையையும் சேர்த்து வாங்கிய காரணத்தினால் அவர் ஆண்டவரானார்; ஆதாமின் இரட்சகராக, மனுக்குலத்தின் இரட்சகராக, தாவீதின் இரட்சகராக மரித்தோரி-ருந்து உயிர்த்தெழுந்தபோது அவர் ஆண்டவரானார்.*

*எனவே மனிதனாக வருவதற்கு முன்பு லோகோஸாக இருந்தபோதோ அல்லது மனிதன் இயேசுவாக இருந்தபோதோ அவர் தாவீதுக்கு ஆண்டவராகவும் வேராகவும் ஆகவில்லை; ஆனால் அவர் உயிர்த்த மேசியாவாக இருந்தபோது தான் அப்படியானார். "கர்த்தர் (யோகோவா) என் ஆண்டவரை நோக்கி... நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்" என்றார். தாவீது இந்த இடத்தில் ஆண்டவர் என்று சொல்வது, பலியை இன்னும் நிறைவேற்றாத மனிதனாகிய கிறிஸ்து இயேசுவையல்ல, "மரித்தோரி-ருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜக்களுக்கு அதிபதியும்" (வெளி. 1:5) ஜீவனுக்கும் மகிமைக்கும் ஆண்டவரும் மரணத்தை வெற்றி வாகைசூடிய இயேசுவையேயாகும். இதே கருத்தை அப்.பேதுரு," எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசு...." "மூன்றாம் நாளில் தேவன் அவரை எழுப்பி ..." என்றும் குறிப்பிடுகிறார். (அப்.10:36, 46) இந்த மகிமையடைந்த நிலையைக் குறித்து அப்.பவுல், "இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்" என்று மேலும் உரைக்கிறார். (I தீமோ. 6:15)*

## "இரண்டாம் ஆதாம்"

*மனுக்குலத்தின் வேர் அல்லது ஆதித்தகப்பனாகிய ஆதாம், தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதால், பின்வரும் தன் சந்ததிக்கு*

*தான் பெற்றிருந்த தேவ சாயலையும் நித்திய ஜீவனையும் இழக்கச் செய்ததோடல்லாமல் தானும் நித்திய ஜீவனை இழந்தான். பாவத்தின் விளைவாக ஆதாம் தன் சந்ததிக்கு வாங்கித் தந்ததெல்லாம் பாவம், சாபம், சீரழிவு, மரணம் ஆகியவையே. லோகோஸ் மனிதனாக வந்து இரண்டாம் ஆதாம் ஆனார். முதல் ஆதாமினால் இழந்ததையெல்லாம் மீட்டுத் தரவே இயேசு கிறிஸ்து இரண்டாம் ஆதாமாகி, ஆதாம் செய்யத் தவறியதை இயேசு செய்து முடித்தார். அவரில் விசுவாசமாயிருந்து அவருடைய ஈடுபலியை ஏற்றுக் கொண்ட எவரும் இழந்துபோன நித்திய ஜீவன் உட்பட எல்லாவற்யையும் பெற்றுக் கொள்வார்கள்.*

*மனிதனாக வந்த இயேசு கிறிஸ்து இரண்டாம் ஆதாம் என பலர் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அது அவ்வாறு இல்லை. அப்.பவுல் சொல்கிறபடி, "முதலாம் ஆதாம் மண்ணிலிருந்து உருவானவன், இரண்டாம் ஆதாம் விண்ணிலிருந்து வந்த கர்த்தர்." ( I கொரி. 15:47) அவருடைய இரண்டாம் வருகையில்தான் அவர் கல்வாரியில் சிந்திய தனது விலையேறப்பட்ட இரத்தத்தினால் மீட்ட, சகல மனுக்குலத்திற்கும் தகப்பன் ஆவார். ஆதாமின் சந்ததியை விலைக்கிரயம் கொடுத்து மரணத் தீர்ப்பிலிருந்து அவர்களை மீட்டுக் கொண்டதால், அவர் முழு மனுக்குலத்திற்கும் ஜீவனளிக்கின்ற தந்தையாயிருக்க முடிந்தது. இந்த மாபெரும் மீட்புப் பணியை மட்டுமே தமது முதலாம் வருகையில் நமது கர்த்தர் நிறைவேற்றி முடித்தார். ஆதாமின் மூலம் இழந்த எல்லா சலுகைகள், உரிமைகள், நித்தியஜீவன், ஆசீர்வாதங்கள் ஆகியவற்றை கர்த்தர், தமது இரண்டாம் வருகையிலே முழு பூமியையும் முந்தின சீருக்குக் கொண்டு வரும்போது அருளிச்செய்வார். இரட்சிக்கப்பட்ட உலக மக்களி-ருந்து "கிறிஸ்துவுக்கு ஒப்பாயிருக்கும்படி முன் குறிக்கப்பட்டவர்களை தெரிந்து கொண்டு," பரிசுத்தப்படுத்திட இந்த இடைக்காலப்பகுதி தேவைப்படுகிறது. (ரோமர். 8:29) இந்த வகுப்பார் பலவிதமான பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். அவர்கள் இராஜரீக ஆசாரியக் கூட்டம், கிறிஸ்துவின் அங்கம், கிறிஸ்துவின் மணவாட்டி, ஆட்டுக்குட்டியானவரின் மனைவி, அவர் பெறப் போகிற ஆசீர்வாதங்கள், கனம், மகிமை ஆகிய எல்லாவற்றிலும் உடன் வாரிசுகளாகவும் உடன் சுதந்திரர்களாகவும்*

இருக்கப் போகிறவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

கிறிஸ்துவின் மகோன்னதமான ஆயிர வருட ஆட்சியின் மைய நோக்கம் இப்போதிருக்கும் கெட்டுப்போன சந்ததியை முற்றிலுமாக புதிய சந்ததியாக உருவாக்குவதே ஆகும். இப்போதைய உலகம் ஆதிப் பிதாவாகிய ஆதாமின் மூலமாக உருவாக்கப்பட்டது. ஆனால் அவர்கள் ஜீவனைப்பெற தகுதியற்றவர்களானார்கள். அவர்கள் பாவத்தையும், பாவத்தின் சாபமாக வந்த மரண தண்டனையையும் பெற்றுக் கொண்டனர். ஆனால் இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக புதிய ஒழுங்கின்படி புதிய சந்ததி, புதிய ஜீவனைப் பெற்று உருவாக்கப்படும். இந்த பொற்காலம் எப்போது சம்பவிக்கும் என்று தமது சீஷருக்கு இயேசு காண்பித்த வண்ணம் அது ஆயிர வருட அரசாட்சியின் காலமாகும். "என்னை பின்பற்றின நீங்களும் இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயத்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள்" என்று இயேசு கூறினார். சுவிசேஷ யுகத்தில் அவர் தெரிந்து கொள்ளும் திருச்சபைக்கு ஒரு மறுஜென்ம அனுபவம் உண்டு என்பதை வேதமாணவர்கள் பொதுவாகக் கருதுகின்றனர். ஆனால் அநேகர் இதைக் கவனிக்காமல், வேறு ஒரு மறுசந்ததி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்றும், அனைத்து மனுக்குலத்திற்கும் அளிக்கப்படுகிறது என்றும் கருதுகின்றனர். ஒட்டுமொத்தமாக, எல்லாரும் அந்த முழு மறுஜென்ம அனுபவத்தை பெறுவதில்லை. ஆனால் எல்லாரும் ஒரு சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள். அதை சரியாகப் பயன்படுத்துபவர்கள் முழுமையான மறுஜென்மத்திற்கு வழி நடத்தப்படுவார்கள்.

இதைத் தொடர்ந்து, உலக ஜனங்களின் மறு ஜென்மத்திற்கும், சபையின் மறு ஜென்மத்திற்கும் உள்ள வேறுபாட்டை பார்ப்பது நல்லது. சபையைப் பொறுத்த வரை, சுவிசேஷ யுகத்தில் அநேகர் அழைக்கப்பட்டு, சிலர் தெரிந்து கொள்ளப்படுகிறார்கள்; மிகச் சொற்பமானவர்களே, கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக, திவ்விய சுபாவத்தில் பங்கு பெறுகிறவர்களாக அழைக்கப்பட்டவர்கள், முழு மறுஜென்ம அனுபவத்தைப் பெறுகிறார்கள். நாம் முன்பே பார்த்தது போல, உலகத்திற்கு கொடுக்கப்படும் மறு ஜென்மம், புதிய சுபாவம்

*அல்ல, ஆனால் இழந்ததை திரும்பப் பெற்றுக் கொள்கிற பூரண மனுஷ சுபாவம் ஆகும்.*

*இப்படியாக I கொரி 15:45-47-ல் கொடுக்கப்பட்டபடி "அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்ம சரீரமே முந்தினது, ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்" எனப் பார்க்கிறோம். மெய்யாகவே இயேசு கிறிஸ்து மனிதனாக இருந்தபோது ஆதாமைப் போலவும் அவருடைய சந்ததியாரைப் போலவும் இருந்தார். ஆயினும் அவர் ஆபிரகாமின் வித்தானார். (எபி. 2:16) தேவ கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்தார். அந்த நோக்கத்தை நிறைவேற்றி முடித்ததினால் தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவராகும்படி உயிர்த்தெழுப்பப்பட்டார். எனவே முழு மனுக்குலத்தையும் கிரயத்திற்குக் கொண்டவரானார். இனி அவர் பூமிக்குரியவரல்ல, பூமியின் சுபாவத்திற்குரியவருமல்ல, இரண்டாம் ஆதாமாக புதிய ஜீவனை அனைவருக்கும் கொடுக்கின்ற உயிர்ப்பிக்கின்ற ஆவியானார்.*

*முழு மனுக்குலமும் ஆதாம் என்கின்ற வேரிலிருந்து உருவான கிளைகள். எனவே, ஆதாமிலிருந்து தோன்றின கிளைகளின் வழியாகவே நமது கர்த்தராக இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வந்தபோது, ஆபிரகாமுக்குக் குமாரனாகவும், தாவீதுக்குக் குமாரனாகவும், மரியாளுக்கு குமாரனாகவும் வந்தார். (அதே வேளையில் அவருக்குப் பரலோகத்திலிருந்து மேன்மையான ஜீவன் கொடுக்கப்பட்டதால் அவர் பாவிகளுக்கு விலகினவராகவும் பரிசுத்தராகவும் விளங்கினார்) பிதாவின் திட்டத்தின்படி அவருக்குக் கீழ்ப்படிந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னைத் தானே ஈடுபலியாகக் கொடுத்ததினால், தனக்கு உன்னத மகிமையான நிலையைப் பெற்றுக் கொண்டதோடல்லாமல், ஆதாமில் முழு மனுக்குலத்தையும் அதனாலே கிரயத்திற்குக் கொண்டார். அதனாலேயே ஆதாமின் உரிமையாகிய சகல மனுக்குலத்திற்கும் ஜீவனளிக்கும் உரிமையைப் பெற்றுக்*

கொண்டார். இவ்வாறு சகல மனுக்குலத்தையும் தன்னையே கிரயமாகக் கொடுத்து பெற்றுக் கொண்டபடியினால் இரண்டாம் ஆதாம் எனப்படுகிறார். ஆதாமுக்காகவும் அவன் சந்ததிக்காகவும் தன் ஜீவனை கொடுத்ததினால் அவ்வாறு ஆனார். ஆதாமைப் போல இயல்பான வழியிலே பிள்ளைகளைப் பெற்று தனக்கு என்று ஒரு சந்ததியை உருவாக்காமல், ஆதாமின் பிள்ளைகள் யார் யார் தன்னை ஏற்றுக் கொண்டார்களோ அவர்களையே தன் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டார். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களை அவர் நீதியாய் நடத்தி புதிய ஜீவனைப் பெற்று சீர்பெற்று வாழ அருள் செய்கிறார். இதன்படி இயேசு கிறிஸ்து ஈசாயின் வேரோ தாவீதின் வேரோ என்று சொல்லப்படாமல் முழு மனுக்குலத்திற்கும் கிறிஸ்துவே வேரோக விளங்குகிறார். ஆதாம், ஆபிரகாம், தாவீது ஆகியோர் பிதாக்கள் என அழைக்கப்பட்டாலும் அவர்கள் பாவசந்ததிக்கே பிதாக்கள் ஆனார்கள். அவர்கள் எப்பொழுது கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு ஒப்புரவாகிறார்களோ அப்பொழுது கிறிஸ்துவின் பிள்ளைகளாகின்றனர்.

தற்போதுள்ள சுவிசேஷ யுகத்தில் முதல்பணியாக தன்னுடைய சபையாரை அழைத்து, தெரிந்து கொண்டு சீர் பொருந்தச் செய்தது போலவே தனது ஆயிர வருட அரசாட்சிக் காலத்தில் உலக மக்களைச் சீர் பொருந்தி திருந்தச் செய்கின்றார். தேவனுடைய நீதி, நியாயத்தின் படியான திட்டத்திற்கு இசைவாக உட்படுத்தி பூரண ஜீவனுக்கேதுவாக தேவ ஐக்கியத்தில் சபையை வழிநடத்துவதே அவருடைய முதல் பணி. ஞானஸ்நானத்தில் அவர் முதலாவது மரிக்கின்றார். ஆனால் அதற்கு முன்பதாகவே அவர் பூரண மனிதனாக இருந்தார். ஆதாம் பாவம் செய்யும் வரை பூரண மனிதனாக இருந்தான். ஆதாமும் கிறிஸ்துவும் இயல்பாகவே பூரண மனிதர்களாக இருந்தார்கள். நாமோ ஞானஸ்நானத்தி-ருந்து பூரண மனிதராகக் கருதப்படுகிறோம். (எனவே விசுவாசத்தினாலே நாம் நீதிமான்களாக்கப் படுகிறோம்)

நமது கர்த்தரும், திருச்சபையும் திராட்சை கொடிக்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறது. எனவே இந்த திராட்சைக் கிளை, வேர் என்கின்ற உருவகங்கள் நமக்குத் தெளிவான சித்திர விளக்கமாக விளக்கப்படுகிறது. ஆதாமும் அவனது சந்ததியாரும், மெய்யான

திராட்சைக் கொடியாகவும் கிளையாகவும் இருந்தார்கள். ஆயினும் பாவம் என்ற விஷக் கிருமியினாலே தாக்கப்பட்டு, கெட்ட கனியைத் தந்து, மரணத்தைச் சம்பாதித்துக் கொண்டனர். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆதாமின் திராட்சைக் கொடியிலே புதிய கொடியாக ஒட்டவைக்கப்பட்டு, வித்தியாசமான ஆரோக்கியமான கனிகளைக் கொடுத்தார். இந்த திராட்சைச் செடிகளுக்கு ஒரு நூதனமான தன்மை உண்டு. அதன் கிளைகள் புதையுண்டு புதிய வேர்கள் உண்டாகின்றன. அவ்விதமாகவே நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, ஆதாமின் பாவ சந்ததியிலே வந்திருந்தாலும், புதிதாக ஒட்டவைக்கப்பட்ட கொடியாக, சிலுவை மரணத்தின் மூலம் புதைக்கப்பட்ட கிளையாகி, ஆதாமின் வேரிலிருந்து விடுபட்டு, புதிய வேரானார். இவ்விதமாகவே திருச்சபையாரும், இந்த சுவிசேஷ யுகத்திலே, அவரிலிருந்து புறப்பட்ட கிளைகளாக, "புதிய கனிகளாகிய பரிசுத்தக்கனி" கொடுக்கிறவர்களாகிறார்கள். (ரோம. 6:22) இந்த புதிய ஜீவன், கிறிஸ்து என்னும் வேரிலிருந்து புறப்பட்டதாகும். இந்த யுகத்தில், இருக்கக்கூடிய கிளைகள் கிறிஸ்துவைப் போல் மிகுந்த கனிகளைக் கொடுக்கும் கிளைகளாக இருப்பதோடல்லாமல், அவர் புதைக்கப்பட்டது போலவே இவர்களும் தங்களை மரணத்தில் ஊற்றி, அந்த வேருக்கும் சாரத்துக்கும் பங்குள்ளவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் ஆயிர வருட அரசாட்சியில் முழு மனுக்குலமும் முந்தின சீருக்குக் கொண்டு வர ஆயத்தப்படுத்தும் பணியில் ஆரோக்கியமான இந்த அனுபவம் அவர்களுக்கு உபயோகமாக இருக்கும்.

விழுந்து போன ஆதாமென்னும் வேர் (ஆதாம் மற்றும் அவன் மனைவியாகிய வேர்) முழு மனுக்குலத்தையும் பாவம், சாபம், மரணம் என்ற அழிவுக்குக் கொண்டு சென்றது. இதுபோலவே, இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து (அவருடைய மனைவியாகிய திருச்சபையோடு சேர்ந்து) ஆதாமை மீட்பதோடு, யார், யார் அந்த ஈடுபலியின் மேல் விசுவாசமாயிருந்து, மனந்திரும்பி அவரை ஏற்றுக் கொள்கிறார்களோ அவ்வளவு பேருக்கும் புனர்வாழ்வு அளிக்கிறார். இதுதான் "மனுக்குலத்தை முந்தின சீருக்குக் கொண்டு வருவதாகும்." (அப்.3:19-23) இதுவே முதலாம் ஆதாமினால் மனுக்குலம் இழந்த உரிமை, சலுகை, கிருபை யாவற்றையும் திரும்பப் பெற்றுக்

கொள்ளுவதாகும். இப்படியாக கர்த்தராகிய திராட்சைக் கொடியினால், முந்தின சீருக்குக் கொண்டு வரப்பட்ட மனுக்குலம், தேவாதி தேவனுக்குப் புகழ்ச்சியாக நல்ல கனிகளை மிகுதியாக கொடுப்பார்கள். கிறிஸ்துவாகிய தலையும், சரீரமாகிய சபை மட்டுமே இந்த மாதிரியான வேராகக் கூடிய நிலைக்கு உரிமை பெற்றவர்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இந்த சுவிசேஷ யுகத்தில் இவர்களே "பிதாவாகிய தேவனின் முன்னறிவின் படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே... தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்." *(I பேது. 1:2)* கடந்த காலத்தில், பிதாக்களாக எண்ணப்பட்டவர்களாகிய தாவீது போன்றவர்களெல்லாம், கிறிஸ்து என்னும் வேர் (கிறிஸ்து மரிப்பதற்கு முன்னரே) தோன்றுவதற்கு முன்னரே மரித்தவர்கள் ஆதலின், அவர்கள் ஒருக்காலும் இந்த வேருக்கும், சாரத்துக்கும் பங்காளிகளாக முடியாது. ஆயிர வருட யுகத்தில் விசுவாசிகளாக வரப்போகிறவர்களுக்கும், அந்த வேரில் பங்குபெறும் பரம அழைப்பில் பாத்தியத்தை இல்லை. எனவே, பூமிக்குரிய பிரைஜகளாகவோ அல்லது அவர்களை அறிகின்ற வானத்துக்குரிய ஆட்சியாளர்களாகவோ எல்லாரும் கிறிஸ்துவின் சாயலைப் பெற்றிருப்பதினால், தங்களுக்குக் கிடைத்த பாக்கியத்தினால் திருப்தியடைவார்கள். அவருடைய பூரண மனித சாயலை மனுக்குலம் பெற்று, பூர்வ உரிமைகளையும் பெற்று, பூமியில் சந்தோஷமாய் இருப்பார்கள். அவர்கள் பரிசுத்த கிளையாகிய கிறிஸ்துவின் வேரில் உண்டாக்கப்பட்டவர்களாவார்கள். ஆனால் திருச்சபையாராகிய மணவாட்டியோ, கிறிஸ்துவின் சரீரமாகவும், விசுவாசமுள்ள இராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும் இருப்பதோடல்லாமல், கிறிஸ்துவின் பாடுகளில் குறைவில்லாமல் தங்கள் சரீரங்களில் எல்லாவற்றையும் நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள். "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்". - *I கொரி. 15:48,49; எபி. 11:39,40; ரோ. 6:5*

## "நித்திய பிதா"

"அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்."

- *ஏசா. 9:6*

*நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை "வல்லமையுள்ள தேவன்" என்று அழைப்பது எவ்விதத்தில் பொருந்தும் என்று முன்னமே பார்த்திருக்கிறோம். பரலோகத் தந்தையின் சிருஷ்டிப்பிலே இவர் ஒருவரே அதிசயமானவர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இவரே ஆலோசனை கர்த்தாவாகவும் போதகராகவும் இருக்கிறார் என்பதையும் யாரும் மறுக்க முடியாது. தீய ஸ்தாபனங்கள் அழியும் காலத்திலும் மகா உபத்திரவத்தின் காலத்திலும் அவருடைய இராஜ்யம் நிறுவப்படும் என்பதிலே மாறுபட்ட கருத்தில்லை. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சமாதானப் பிரபுவாக இருப்பதால், தேவநீதியின்படியான நித்தியத்திற்கும் சமாதானமாயிருக்கும் சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்துவார். அது தெய்வீக திட்டத்தின்படியும் குணநலன்களின்படியும் தேவ ஒழுங்கிலே அமைக்கப்படும். மற்ற அடைமொழிகளைப் போலவே "நித்திய பிதா" என்ற அடைமொழியும் இயேசுவுக்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை ஆராய்வோம்.*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்" என்று பேதுரு (I பேது. 1:3) கூறுகிறதற்கேற்ப, யேகோவா தேவனே அநாதிப் பிதா என்று கூறுகிற அநேக வேத வாக்கியங்களுக்கு, இது சிலர் கூறுவது போல மாறாதனல்ல. மாறாக நமது கர்த்தரின் இரண்டாம் வருகையில் இந்த பெயர் அவருக்கு பொருந்தும் என்று அநேக வேத வாக்கியங்கள் காண்பிக்கின்றன. ஏனெனில், அவர் ஆயிர வருட யுகத்தில் சீர்திருத்தப்பட்ட மனுக்குலத்திற்கு பிதாவாயிருப்பார். தாவீதுக்கும் மனுக்குலத்திற்கும் புதிய ஆண்டவர், புதிய வேர், இரண்டாம் ஆதாம் என்று தற்போது, கவனித்தவைகளுக்கு இந்த பெயர் பொருத்தமாக இருக்கிறது. இது "நித்திய பிதா"-நித்திய ஜீவனைக் கொடுக்கிற பிதா என்பதை குறிப்பிடுகிறது.*

*தன் சொந்த ஜீவனையே கொடுத்து முழு மனுக்குலத்தையும் கிரயத்திற்குக் கொண்டதால், விலைக்கிரயம் கொடுத்து வாங்கப்பட்ட அகில உலக மக்களுக்கும் அவர் கர்த்தரானார்.*

சகலருக்கும் ஜீவனளித்ததால், சகலரையும் முந்தின சீருக்குக் கொண்டுவந்தபடியால், "பிதா" என்ற சொல்லுக்கு ஜீவன் தருபவர் என்ற பொருளும் இருப்பதால் அவரைப் பிதா என அழைப்பதே சரியாகும். உயிர்த்தெழுதலின் முறையின்படி அகில உலகத்தாரும் உயிர்த்தெழுந்து ஜீவன் பெற்று முந்தின சீருக்கு கொண்டுவர நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து காரணமாயிருந்தமையால், "நித்திய பிதா" என்ற பட்டத்தைவிட வேறு எந்த பட்டமும் அவருக்குப் பொருத்தமாயிராது. தெய்வீகத் திட்டத்தின்படி தெய்வீக நீதி, நியாயத்திற்கேற்ப தனது ஈடுபலியின் மூலம் உலக மகாஜனங்களைக் கிரயத்திற்குக் கொண்டதால், உலகோர் அனைவரும் கர்த்தராகிய கிறிஸ்துவிடமிருந்தே நேரடியாக ஜீவனைப் பெற்றுக் கொள்வார்கள். முந்தின சீருக்கு கொண்டு வரப்பட்ட உலகம், சீராக்கப்படும் வேலைக்குப் பின்னரே, யேகோவா தேவனே ஆசீர்வாதத்திற்கும், ஜீவனுக்கும் மகா பெரிய ஊற்று என்பதையும், கர்த்தராகிய இயேசுவினால் நிறைவேற்றி முடிக்கப்பட்ட மகா பெரிய இரட்சிப்பின் திட்டத்திற்கு காரண கர்த்தா என்பதையும் உணர்ந்து கொள்வார்கள். இயேசு கிறிஸ்து மகிமையின் தந்தையாகவும் அனைவருக்கும் கர்த்தருமானார். - I கொரி. 15:24-28; 3:23; மத். 19:28.

இதுவரை நாம் ஆராய்ந்து வந்த வேதாகம வசனங்களை விளங்கிக் கொள்ள முடியாமல் பல நூற்றாண்டுகளாக, பல்வேறு ஞானிகள், வேதவிமர்சகர்கள், வேத விற்பன்னர்கள், வேத மாணவர்கள் குழம்பி, கலங்கித்தவித்திருந்தனர். அப்படிப்பட்ட குழப்பத்திற்குக் காரணமாய் இருந்த வேத வசனங்களில் இன்னொன்று:

**"உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள், அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்"**

*- சங். 45:16 -*

கன்னி மரியாளிடத்திலிருந்து இயேசு பிறக்கும் வரை வாழ்ந்து வந்த முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோர் நீண்ட நெடுங்காலமாக பிதாக்கள், "முற்பிதாக்கள்" என்றே

கவுரவிக்கப்பட்டனர். அவர்களெல்லாரும் இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோராயிருந்தவர்கள். சற்று முன்பு நாம் ஆராய்ந்தபடி நீதியின் கிளையாகிய மேசியா தாவீதின் வம்சத்தில் வந்தபடியால் தாவீதின் வேரி-ருந்து தோன்ற வேண்டியதாய் இருந்தது. ஆகவே மேசியா தாவீதின் குமாரனாக இருந்தார். இவைகளெல்லாம் மாறவேண்டியிருந்தது. எப்படியெனில், கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை முழுமையடைந்தவுடன் தலையாகிய கிறிஸ்துவுடன் இணைந்து மகிமை அடைவார்கள். அப்பொழுதுதான் அனைவருக்கும் நித்திய ஜீவனை அளிப்பதால், நித்திய பிதாவாகிய இயேசுகிறிஸ்து அனைத்துலகையும் மறுபடியும் முந்தின சீருக்குக் கொண்டு வரும் சீரமைப்புப் பணியைத் தொடங்குவார். அச்சமயத்தில் முன்பு பிதாக்களாயிருந்த அனைவரும் புதிய நித்திய பிதாவுக்குக் குமாரர்களாக இருப்பார்கள். ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, தாவீது ஆகிய அனைவரும் சரியான பொருளின்படி ஜீவனைப் பெற்றவர்களாக இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் ஆதாமினால் மரணத் தீர்ப்பு பெற்ற சந்ததியில் வந்தவர்கள். ஆனால் மனுக்குலத்தை இயேசு கிறிஸ்து தனது நிர்வாகத்திற்குள் கொண்டு வந்தபோது, தாவீதின் வம்சத்திலும் ஆபிரகாமின் வித்தாகவும் வந்தவராகிய இயேசு கிறிஸ்து இந்த மீட்புப்பணியை நிறைவேற்றி முடித்தார். இப்படி தேவசித்தத்தை முழுமையாய் நிறைவேற்றி முடித்தபின் அவருக்குப் பின் வந்தவர்கள் மட்டுமல்ல, மாம்சத்தின்படி அவருக்குப் பிதாக்களாக இருந்தவர்களும் அவருக்கே பிள்ளைகளாவார்கள். முழு மனுக்குலத்தையும் அவர் விலைக்கிரயத்துக்குக் கொண்டு விட்டதால், அவரில்லாமல் யாரும் ஜீவனை (முழுமையான, பூரண, நித்திய ஜீவன்) பெற முடியாது. "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை." யோவான் 3:36 ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, தாவீது, தீர்க்கதரிசிகள் மற்றும் மீதமுள்ள உலக மக்கள் அனைவரும் வருங்காலத்தையும் நித்திய ஜீவனையும் கிறிஸ்து மூலமே பெற வேண்டும். இல்லையென்றால் ஜீவன் கிடையாது. அவரை விட்டுப் போனால் தண்டனைத் தான் கிடைக்கும். தேவன்

*நியமித்த ஏற்ற வேளையிலே, பூச்சக்கரத்திலுள்ள அனைவரும் உயிர்த்தெழுப்பப்பட்டு, உலகுக்கெல்லாம் ஜீவனைக் கொடுக்கிற மாபெரும் ஜீவாதிபதியாகிய கிறிஸ்துவின் மூலம் ஜீவன் பெறுவார்கள் என்பது மெய்யே. ஆகவே அவர் அவர்களது பிதாவாக, ஜீவனை தருபவராக இருப்பார்.*

*திருச்சபையார் ஆவியில் புதுப்பிக்கப்படுவது பரலோகத்தின் பிதாவாகிய தேவனாலே என்பதை அறிந்திருக்க வேண்டியது அவசியம். இதற்கு ஆதாரமான வேத வசனத்தை கவனிப்போம். “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் ....... நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்” (I பேது.1:3,4) என்று அப்.பேதுரு தனது நிருபத்திலும், யோவான் அப்போஸ்தலனும், “நாம் தேவனால் பிறந்தவர்கள்” (யோவா. 5:18) என்றும் கூறுகின்றனர். அப்.பவுலும் இவ்வண்ணமே, “பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு” (I கொரி. 8:6) என்று கூறுகிறார். நமது இருதயங்களில் தமது ஆவியை ஊற்றியதினால், “அப்பா பிதாவே” என்று கூப்பிடப் பண்ணியிருக்கிறார். (ரோமர். 8:15) இதே கருத்தை வலியுறுத்தி நமது கர்த்தரும், உயிர்த்தெழுந்த பிற்பாடு சாட்சியாகக் கூறியதாவது: “நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன்.” யோவான் தனது நற்செய்தியிலும் இதுகுறித்து சாட்சி தருகின்றார். “அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.” (யோவா. 1:12,13) இதைப் போலவே அப்போஸ்தலனாகிய யாக்கோபும் ஜோதிகளின் பிதாவைப் பற்றி, “அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார்” (யாக். 1:18) என அறிவிக்கிறார்.*

*இந்த சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்ட திருச்சபையார், கிறிஸ்துவின் பிள்ளைகளாயிராமல், பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள். அவர்கள் பிதாவின்*

ஆவியினாலே ஜெநிப்பிக்கப்பட்டு, பிதாவின் தெய்வீக சுபாவத்தை சுதந்தரிப்பார்கள். இவர்கள்“தேவனுடைய சுதந்திரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு கிறிஸ்துவுடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்.” *(ரோமர். 8:17)*

*நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் நாம் கொண்டுள்ள உறவு சகோதரத்துவ உறவேயல்லாமல், பிள்ளைக்குரிய உறவல்ல என்ற கருத்து விசேஷமாகவும், திரும்பத் திரும்பவும் கூறப்படுகிற ஒன்றாகும். திருச்சபையாரைப் பற்றி அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல், உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும், நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும், இதோ நானும் தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்-யிருக்கிறார்.” - எபிரே. 2:10-13.*

*ஜீவனைக் கொடுப்பவரின் சரீரம் முழுமையடையும் வரை, “சகோதரர்கள்” அவர்களுடைய ஆண்டவரோடும், இரட்சகரோடும் மகிமையின் குமாரர்களாக, இழந்ததை திரும்பக் கொடுக்கும் வேலையை ஆரம்பிக்கும் வரை, பொதுவாக உலகிற்கு ஜீவனை அளிக்கும் மகா பெரிய வேலை தள்ளிப்போடப் படுகிறது. தேவனுடைய சித்தத்திற்கு இசைய விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவை சோதிக்கப்பட்டு நற்சாட்சிப்பெற்ற முற்பிதாக்களும் கூட, மோசேக்கு மெய்ப்பொருளான கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை நிறைவு பெறும்வரை ஜீவன் கிடைக்காது. (அப். 3:22,23)*

*“இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் (அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாகிய, சுவிசேஷ யுகத்தில் வெற்றி பெறப் போகிறவர்களாகிய) பூரணராகாத படிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்குகென்று முன்னதாக நியமித்திருந்தார்.” - எபி. 11:39,40*

*பூமியை ஆளுகிற அதிகாரம் உள்ளவனாயிருந்த ஆதாம் கீழ்ப்படியாமையினாலே அதை இழந்து போனான். கிறிஸ்து*

இயேசுவுக்குள்ளாக அந்த நிலையி-ருந்து மனுக்குலம் மீட்கப்பட வேண்டியதாய் இருந்தது. தன்னுடைய விலைமதிக்க முடியாத இரத்தத்தைச் சிந்தி, மனுக்குலத்திற்கு மீட்பை இயேசு ஏற்படுத்தினார். இதனால் மனுக்குலத்தை முழுவதும் கிறிஸ்து கிரயத்துக்குக் கொண்டதினால், ஆதாமின் சந்ததியார் இயேசுவின் ஈடுபலியில் விசுவாசம் வைத்தவர்களுக்கு ஜீவன் அளிப்பவரானார். எனவே மனுக்குலத்தின் தந்தை என்ற பொருத்தமான பட்டம் பெறுகிறார். புதிய உடன்படிக்கையில் விசுவாசம் வைத்தவர்களுக்கே ஜீவன் அளிக்கப்படும். இவைகளையெல்லாம் சிந்தித்து தியானிக்கும்போது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்படி தாவீதின் வேராகவும், அவர் சந்ததியில் வந்தவராகவும், அவருக்கு குமாரனாகவும், தாவீதின் கர்த்தராகவும், தந்தையாகவும் இருக்கிறார் என்பதை அறிகிறோம்.

அநேகரைப் போல நாமும் "கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்." (எபே. 2:3) இப்படி உலக ஜனங்களின் ஒரு பகுதியாக இருக்கின்றவர்கள், எப்படி சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய பிள்ளைகளாக, திருச்சபையாராக மாறுகிறார்கள்? என்ற கேள்வி எழுகிறது. இவர்கள் மற்றவர்களைப் போல மகா ஈடுபலி யின் புண்ணியத்தினால் பாவ மன்னிப்பின் அனுபவத்தைப் பெற வேண்டும். "தேவ புத்திரர்கள்" என அழைக்கப்படுவதற்கு எவ்விதத்திலும் அவர்கள் உலகத்தை விட்டு பிரிந்திருக்க வேண்டும். ஆனால் மற்ற உலக ஜனங்களோ, அவர்களுக்கு ஜீவனையளிக்கிற கிறிஸ்துவின் மூலம் ஜீவன் பெறுவதால், அவர்கள் யாவரும் கிறிஸ்துவின் பிள்ளைகளாவார்கள்.

மனிதருக்கு ஜீவ உரிமையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னையே கிரயமாகக் கொடுத்து வாங்கிவிட்டதால் அவருக்குப் பிள்ளைகளாகும் பேறு பெற்றனர். கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியில்தான் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் அதன் பலனாகிய ஜீவனை பெற்று, கீழ்ப்படிந்து, முந்தின சீருக்குக் கொண்டு வரப்படுவார்கள். இதற்கு நேர்மாறாக, திருச்சபையார் இந்த உலகில் வாழ்கிற மனித ஜீவனை பெற கிறிஸ்துவினால் கிரயத்துக்கு கொள்ளப்படவில்லை. இந்த சுவிசேஷ யுகத்தின் விசுவாசிகள் விசுவாசத்தினாலே (அவர்கள் பூரணமடைந்து, பூரண மனித

நிலைக்கு கொண்டு வரப்பட்டு) நீதிமான்களாக்கப்பட்டு பரிபூரண மனித நிலைக்கும், முந்தின சீருக்கும் கொண்டு வரப்படுகிறதாக எண்ணப்படுகிறார்கள். ஆனால் உண்மையில் அல்ல. இப்படி நீதிமான்களாக்கப்படுவது, ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகவே. தாங்கள் பெற்ற மனித ஜீவனையும், அதன் உரிமைகளையும் சலுகைகளையும் தேவ ஊழியத்தில் பலியிட்டு, அதற்கு பதிலாக தெய்வீக சுபாவத்தில் பங்குபெறும் நம்பிக்கையை பெற்றுக் கொள்கிறார்கள்.

பூமிக்குரிய ஜீவனையும், ஆசீர்வாதத்தையும் ஆதாம் இழந்து விட்டான். நமது கர்த்தர், ஆதாமுக்குள்ளாக யார் யார் எதையெதை இழந்தார்களோ அதை அவர்களுக்கு மீட்டுத் தருவார். சீர்திருத்தக் காலத்திலும் அவர் இந்த மனுக்குலத்தையே புதுப்பித்து முந்தின சீருக்குக் கொண்டு வருவார். ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டியும் சரீரமுமாகிய திருச்சபையாரோ, மனுக்குலத்திலிருந்து முதலில் அழைக்கப்பட்டு, பரம அழைப்பு, உன்னத அழைப்பு என அழைக்கப்படுகிற தெரிந்துக்கொள்ளப்பட்ட வகுப்பாராகிறார்கள், அவர்களுடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரருமாகிறார்கள். இயேசு தன் சரீரத்தை பூரணமான ஜீவ பலியாக பிதாவுக்கு ஒப்புக் கொடுத்து தெய்வீக சுபாவத்தைப் பெற்றது போலவே, அவருக்கு உகந்த மணவாட்டியாகப் போகிறவர்களும், கிறிஸ்துவினால் மீட்கப்பட்ட தங்கள் சரீரங்களை, தேவனுக்கென்று பலி பீடத்தில் முழுமையாக காணிக்கையாக்கி தெய்வீக சுபாவத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள். புதிய சிருஷ்டிகளாவதற்கு ஆவியினாலே ஜெநிப்பிக்கப்பட்ட இவர்கள் “உன்னதமானவரின் பிள்ளைகளாகி, கிறிஸ்துவுக்கு சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, இராஜரீக ஆசாரியக் கூட்டத்திலே இயேசு பிரதான ஆசாரியராகவும், இவர்கள் ஆசாரியர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களெல்லாம் பிதாவினால் அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினால் அல்ல. ஆயிர வருட அரசாட்சியில் உலக மகா ஜனங்கள் இயேசுவுக்கு குமாரர்களாயிருப்பதுபோல, விசேஷ அழைப்புக்குட்பட்ட மணவாட்டி வகுப்பார் தேவனுக்குக் குமாரர்களாய் இருப்பார்கள். (ஒப்பு நோக்கவும் யோவா. 6:44; 12:32) பிதா யார் யாரையெல்லாம்

*கிறிஸ்துவுக்குள்ளாக அழைத்தாரோ, அவர்களைக் கிறிஸ்து மூத்த சகோதரராக இருந்து, உடன் சகோதரர்களாகிய இவர்களை குறுகலான பாதையில், தன்னுடைய அடிச்சுவட்டில் நடந்து, மரணமட்டும் சுய தியாக பலியின் ஜீவியம் ஜீவிக்க உதவுகின்றார். எனவே அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக மரிப்பதால், கிறிஸ்துவோடு உடன் ஜீவ பலி செலுத்தியதால், அவருக்கு உடன் சுதந்திரர்களாகிறார்கள். அந்த ராஜ்யத்தில் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராக கருதப்பட்டு, உலக மகா ஜனங்களை ஆள்வார்கள். அவர்களை ஆசீர்வதித்து, நித்திய ஜீவனை அளிப்பார்கள். "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுகிறோம்" என்றும், "அவரோடு கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்" என்றும் நமக்கு அறிவிக்கப்படுகிறது. (கொலோ. 1:24; 2 தீமோ. 2:12) எனவே அனைத்துலக மக்களும் பெறக்கூடிய ஆசீர்வாதம் வேறு, திருச்சபையார் பெறுகிற ஆசீர்வாதமும், தகுதியும் வேறு. ஆனால் மணவாட்டியின் அழைப்பு, பரம அழைப்பு, உன்னத அழைப்பு என்று வித்தியாசமாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அவர்கள் தெய்வீக சுபாவத்தைப் பெறுவார்கள். 2 பேது. 1:4*

*மறை பொருளாயிருக்கிற தேவ இரகசியங்களான தீர்க்க தரிசனங்கள், வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றை புரிந்து கொள்ளுவதற்கு இந்த வசனங்களே திறவுகோலாக இருக்கின்றன என அப்போஸ்தலர்கள் பிரகடனப்படுத்துகிறார்கள். (கொலோ. 1:27) தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, தேவ தூதரிலும் சற்று சிறியவர்களாக மனுக்குலத்தைச் சிருஷ்டித்து, பூமிக்குரியவர்களை பூமிக்குரியவர்களாக சிங்காரவனத்தின் (ஏதேன்) நிலைமையில் வைத்தார். மனுக்குலத்தின் வீழ்ச்சியையும் அதன் விளைவுகளைப் பற்றியும் முன்பே அறிந்திருந்த தேவன், தேவ நீதி, தேவ அன்பு, தேவ ஞானம், தேவ வல்லமை ஆகியவைகளை வெளிப்படுத்துவதற்கான அதன் வாய்ப்புக்களையும் முன்னறிந்திருந்தார். தன்னுடைய முதற்பேறான குமாரரான லோகோஸூக்கு பிதாவினிடத்தில் விசுவாசமாயிருந்து எல்லா நீதியையும் நிறைவேற்றி நிரூபித்துக் காட்டக் கூடிய வாய்ப்பை முன்னதாகவே ஏற்பாடு செய்திருந்தார். அவ்வாறு நிரூபித்துக் காட்டியதால் முழு மனுக்குலத்திற்கும் இரட்சகராகவும் தேவ*

கிருபையின் ஐசுவரியங்களுக்கெல்லாம் வாரிசாகவும், பிதாவாகிய தேவனுக்கு அடுத்தபடியாகவும் இருந்து, எல்லாவற்றிலும் மேன்மை தங்கிய தலைமையேற்கவும் செய்தார். எனவே தேவன் இதற்காகவே அவரை முதற்பேறானவராக ஏற்படுத்தினார். கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர்களாயிருக்கப் போகிற சிறுமந்தையாகிய சபை குணநலன்கள் அடிப்படையிலும், விசுவாசத்தின் அடிப்படையிலும் தேர்வு செய்யப்பட்டு பரலோக இராஜ்யத்தில் கிறிஸ்துவுடனே கூட ஆட்சி செய்வார்கள். இவர்கள் தூதர்களுக்கு மேலாகவும், துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் மேலாகவும், எல்லா நாமங்களுக்கு மேலான நாமத்தைப் பெறுவார்கள்.

இதன்படி, "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே பரிசுத்தப்படுத்தப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்று அப்போஸ்தலர் அறிவிக்கின்றார். (I பேது. 1:2) இதே சிந்தனையை அப். பவுல் இவ்விதமாக சொல்லுகிறார்: "தம்முடைய குமாரன் அநேக சகோதரர்களுக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்." "மேலும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், ... ......... நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன்" என்று கூறுகிறார். (எபேசி. 1:17-19) இப்படிப்பட்ட தேவனுடைய இரக்கத்திற்கு பாத்திரராக நாம் எந்த கிரியையும் செய்யவில்லையென அப்போஸ்தலர் கூறுகிறார். "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே

*அவரோடே கூட உட்காரவும் செய்தார்... ஏனெனில் நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்." (எபேசி. 2:5-7,10)*

## "ஆசீர்பொழியும் மீட்பரே எங்களை பலப்படுத்தும்"

*கர்த்தாவே! அதிசய அற்புதங்களை செய்யும் வரத்தையோ அக்கினி நாவுகளையோ நோய்களை குணமாக்கும் வரத்தையோ நாங்கள் தேடவில்லை. / உம்முடைய நற்செய்தியை பிரகடனப் படுத்தும் வல்லமையை எங்களுக்குத் தாரும். / பாவத்தால் உண்டான காயங்களை போக்கத்தக்க / தைலத்தைத் தாரும்.*

*கர்த்தாவே! உமது ஆவியையும், உமது அனலையும் / எங்கள் மீது பொழிந்தருளும்.*

*எங்களுடைய இளமைக்கு ஆசீர்வாதமாகவும், / முதுமைக்குப் பாதுகாப்பாகவும் விளங்குகிற / உம்முடைய மறைவான தேவ ஞானத்தை / வெளியரங்கமாக்கிக் காண்பியும்.*

*கர்த்தாவே! உமது ஒவ்வொரு திவ்ய திருச்சட்டங்களையும் புரிந்து கொள்ள வேண்டிய ஞானத்தையும் / அதை அனலோடும், அன்போடும் அனைவருக்கும் எடுத்துச் சொல்லும் வல்லமையையும் தாரும். / உம்முடைய கிருபையின் வார்த்தைகள் பொழியப்படுகின்ற / இடத்தில், மக்கள் ஆச்சரியமும், பரவசமும் / அடைவார்களாக.*

*வாழ்வின் கொந்தளிக்கும் கடல் புய-னூடே / நடக்கும்போது, எங்களுக்கு விசுவாசத்தைத் தாரும். / உம்முடைய சித்தத்தின்படி நடப்பது எதுவாயினும் / அதை மனதார ஏற்றுக் கொள்கிறேன். அலைபோல் மனம் நிலை தடுமாறி இருப்பவர்களை மீட்க / செங்குத்தான மலை உச்சிக்கு ஏற வேண்டியிருந்தாலும், / மிகுந்த வைராக்கியத்துடன் அதையும் ஏறிக் கடப்பேன். ஆசீர் பொழியும் மீட்பரே உம் வல்லமையினால் பலப்படுத்தும் / உம்முடைய முகத்தின் பிரகாசத்தால் எங்களை பிரகாசப்படுத்தும், /*

*உம்முடைய பிரகாசமான இருதய சாய-ன்படி / நாங்களும் உம்முடைய ரூபத்தையும், சாயலையும் பெற / கிருபை செய்யும்.*

*உம்முடைய போதனையின்படி நான்போதிக்கவும், / நடக்கவும், நேசிக்கவும் கிருபை செய்யும்.*

## அத்தியாயம் 7

# ஒப்புரவாகுதலின் மத்தியஸ்தர் "மனுஷ குமாரன்"

*இந்த நாமம் எதை அர்த்தப்படுத்தவில்லை-எதை அர்த்தப்படுத்துகிறது-அதன் கீர்த்தி விவாதத்திற் கிடமில்லாதது, வேறு யாராலும் உரிமைகொண்டாட முடியாதது-உலகத்தின் பார்வையில் மனுஷ குமாரன்-பிலாத்துவின் கருத்து-ரூசோவின் கருத்து-நெப்போலியனின் கருத்து-"நாம் விரும்பத்தக்க ரூபம் அவரிடத்தி-ல்லை," "அவருடைய முகப்பார்வை அந்தக்கேடு அடைந்தது" என்ற வசனங்களின் உட்பொருள்-"பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்:"-"அவர் முற்றிலும் அழகுள்ளவர்."*

நமது கர்த்தருக்குக் கொடுக்கப்பட்ட அநேக சிறப்புப் பெயர்களில் அவரே அதிகமாக பயன்படுத்திய பெயர் "மனுஷ குமாரன்" என்பதுதான். சிலர் இதை, அவர் யோசேப்பின் குமாரனாக இருந்ததினால் மனுஷ குமாரன் என்கிற சலுகையைப் பெறுவதாக நினைக்கிறார்கள். அது தவறு. கிறிஸ்து எக்காலத்திலும் யோசேப்பை தனது தகப்பனார் என்று கூறிக் கொள்ளவில்லை. மாறாக, தனக்குத்தானே அவர் இந்த சிறப்புப் பெயரைத் தெரிந்து கொண்டதற்குக் காரணம், தம்முடைய பூமிக்குரிய ஜீவியத்தை குறிப்பதாக மட்டுமல்லாமல், தற்போது அவர் இருக்கின்ற நிலைமையையும், மகிமையையும் குறிப்பதாக உள்ளது என்பது கவனிக்கத்தக்கது. இந்த அடிப்படையை சிலர் பற்றிக் கொண்டிருப்பதால், அவர் பரலோகத்திலும் மனிதனாக இருக்கிறார் என நினைக்கின்றனர். இன்னும் அவர் மனித சுபாவத்தைக் கொண்டுள்ளார் என்றும் நினைக்கின்றனர். "மனித குமாரன்" என்ற

சொற்றொடர் தேவையில்லாமல் காரணமின்றி தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்பதை பின்னால் விரிவாக எடுத்துரைக்க முயன்றிருக்கிறோம். அதே வேளையில் இப்படிப்பட்ட கருத்து முழு வேதாகம கருத்துடன் சிறிதும் இசைவாக இல்லையென்பதைக் கவனிக்க வேண்டும். நமது கர்த்தரின் தாழ்மையான மனுஷ குமாரன் நிலைமை நிரந்தரமானதல்ல, மனித மீறுதலுக்கு நீதியைச் சரிக்கட்டி மனுக்குலத்தை மீட்பதற்காக மட்டுமே இந்த மனுஷ குமாரன் நிலைமைக்கு வந்தார். இதனிமித்தம் பிதாவினிடத்தில் அவரது விசுவாசத்தை நிரூபித்ததினாலே அவர் எல்லாவற்றிற்கும் மேலான நிலைமைக்கு உயர்த்தப்பட்டார். உலகமுண்டாவதற்கு முன்பதாகவே அவர் இருந்த மகிமைக்கு மாத்திரமல்ல, அதற்கும் மேலான மகிமைக்கு அதாவது, தூதர்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள் ஆகியவைகளுக்கு மேலாக - தெய்வீக சுபாவத்திற்கு, வலது பாரிசத்திலுள்ள மேலான இடத்திற்கு உயர்த்தப்பட்டார்.

கீழ்க்காணும் இந்த சொற்றொடரை நமது கர்த்தர் சில விசேஷ இடங்களில் உபயோகப்படுத்தியுள்ளார். அதைக் கூர்ந்து கவனிப்போமாக:

சுவிசேஷயுக அறுப்பு காலத்தில் “மனித குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்.” மத். **13:41**

சுவிசேஷ யுகத்தின் முடிவிலே அறுவடையின் போது “மனுஷ குமாரனுடைய பிரசன்னமும் இருக்கும்.” மத்.**24:27,37**

“மனித குமாரன் மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடும் கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.” மத். **25:31**

“என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய் பரிசுத்த தூதர்களோடும் வரும்போது வெட்கப்படுவார்.” மாற்கு **8:33**

“மனுஷ குமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப் போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்.” யோவா.**6:62**

"பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை." (இவ்வசனத்தில் "பரலோகத்திலிருக்கிறவருமான"என்ற சொற்றொடர் பழைய கையெழுத்துப் பிரதிகளிலில்லை) - யோவா. 3:13.

மனித குமாரன் என்று சொல்லப்படுவது மகிமையுள்ள கர்த்தரைக் குறிப்பிடுவதாகவும், மனுஷனாகிய கிறிஸ்துவை குறிப்பிடுவதாகவும் உள்ளது. முன்பு தேவ பிரதிநிதியாக ஆவியின் சுபாவத்திலிருந்து அவர் பூமிக்கு வந்து மனித சாயல் எடுத்து மனிதனாகி தன்னைத்தானே ஈடுபலியாகக் கொடுத்தார் என்று வேதாகமம் அடையாளம் காண்பிக்கிறது. இந்த மேன்மையை யூதர்கள் அறியாததினால் அவர் "மனித குமாரன்" என்று சொல்லப்படுவது, யோசேப்பின் குமாரன் என்ற சாமான்ய நிலைமையை சொல்வதாக அமைந்துவிட்டது. அதன்படி அவர் ஒரு மனிதன் மூலமாக ஜீவன் பெற்ற சராசரி மனிதனாக காண்பிக்கிறது. இது அவர்கள் கேட்ட கீழ்க்கண்ட வினாவிலிருந்து அறிந்து கொள்கிறோம். "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம், அப்படியிருக்க மனுஷ குமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர், இந்த மனுஷ குமாரன் யார்? என்றார்கள்." (யோவா. 12:34) தானியேல் ஆகமத்தில் மனுஷ குமாரன் என்று சொல்-யிருப்பதை அறிந்திருந்த யூதர்கள், அவர்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்த மேசியாதான் என்று அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர்.

"இராத் தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடம் மட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்தவமும் மகிமையும் இராஜரீகமும் கொடுக்கப் பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும் அவருடைய இராஜ்யம் அழியாததுமாய் இருக்கும்." - தானி. 7:13-14 நமது ஆண்டவர் இதே விளக்கத்தையே தன்னுடைய

அடையாளமாக, வெளிப்படுத்தின ஆகமத்தில் 14:14-லும் தெளிவாக விளக்குகிறார். "மனுஷ குமாரனுக்கொப்பனவராய் தமது சிரசின் மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டேன்." சுவிசேஷ யுகத்தில் அறுப்பின் வேளையில் அறுப்பின் பணியை நிறைவேற்றுகிறவராய் காணப்படுவார்.

இந்த சிறப்புப் பெயர் யோசேப்பின் மகன் என்பதை குறிப்பிடவில்லை என்பது உறுதியானது. அவர் மனித சுபாவத்தை எடுத்ததின் நோக்கம் பலியில் நிறைவேறியது. அவர் தற்போது உயிர்ப்பிக்கிற ஆவியாயிருக்கிறார். (எபி. 2:9,16; I பேது. 3:18; யோவா. 6:51; பிலி. 2:9) இருப்பினும் நமது கர்த்தர் ஏன் இந்த மனித குமாரன் என்ற அடைமொழியைத் தெரிந்து கொண்டார் என்ற வினா எழுகிறது. கர்த்தருடைய ஒவ்வொரு சிறப்பான அடைமொழியும் குறிப்பிட்ட காரண காரியத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை நாம் நன்கறிவோம். அதுபோலவே மனித குமாரன் என்ற அடைமொழிக்கும் தகுந்த காரண காரியமிருக்குமல்லவா? அதை நாம் அறிய வேண்டாமா?

இந்த அடைமொழியை உபயோகப்படுத்துவதற்கு மிக முக்கியமான காரணமும் உண்டு. இந்த அடைமொழியானது மகா உன்னதமான மகிமை பொருந்தியது. எவ்வாறென்றால், அவர் பிதாவுக்கு விசவாசமுள்ளவராக, கீழ்ப்படிந்தவராக, தேவனுடைய எல்லாத் திட்டங்களுக்கும் ஒத்துழைப்பவராக சிலுவையின் மரண பரியந்தம் உண்மையுள்ளவராகி, மனுக்குலத்திற்கு விதிக்கப்பட்ட மரணத்தின் மேலும் வெற்றி சிறந்தவராகி நிரந்தரமான நினைவின் சின்னமாக விளங்குகிறார். அதன் மூலமாகப் பெற்ற இந்த சிறப்புப் பெயர் எல்லா மகிமைக்கும் புகழ்ச்சிக்கும் வல்லமைக்கும் கண்ணியத்திற்கும் சிகரமான தெய்வீக சுபாவத்தை சுதந்தரிக்கக் காரணமாயிற்று. பிதாவின் ஒரே பேரான குமாரன், மனுக்குலத்தார், தூதர்கள் எல்லாருக்கும் முன்மாதிரியான ஒரு அடக்கத்தை, தாழ்மையை, கீழ்ப்படிதலை வெளிப்படுத்திக் காண்பித்தார். "மனித குமாரன்" என்ற சிறப்பு பெயரில் தெய்வீக திட்டமாகிய "தன்னைத் தான் உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான்" என்கிற கொள்கையை

எல்லாரும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பாகவும் இது அமைந்தது. தேவனால் போதிக்கப்பட்டவர்கள், தேவனைப் போற்றித் துதிக்க விரும்புகிறவர்கள் ஆகியவர்களுக்கு "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடரை உபயோகிக்கும் போதெல்லாம் அது ஏராளமான போதனைப் படிப்பினைகளை உள்ளடக்கியதாகவும் விளங்குகிறது.

இதே ரீதியில்தான் நமது கர்த்தர் தாவீதின் வித்தாகவும், ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் வித்தாகவும், அதே வேளையில் ஏவாள் மூலமாக ஆதாமின் வித்தாகவும் இருந்த போதிலும், நாம் ஏற்கனவே பார்த்த பிரகாரம் அவர் "மாசற்றவராகவும் பாவிகளுக்கு விலகினவராகவும்" இருந்தார். "ஸ்திரீயின் வித்துக்கும்" சர்ப்பத்தின் வித்திற்கும் பகைமை உண்டு என்று கூறப்பட்டிருந்தாலும், ஏவாளிடம் ஆதாமைத் தவிர வேறு வித்து இருப்பதாக சொல்லப்படவில்லை. இதே பொருளிலே நமது கர்த்தரும் தாவீதின் வித்து என்று நினைப்பதும் பேசுவதும் சரியானதாக இருக்கும். இதேபோல ஏவாள் மூலமாக ஆதாமின் வித்து என்று நினைப்பதும் சரியானதே "மனுஷ குமாரன்" என்ற சிறப்புப் பெயருக்கு பின்னால் இந்த சிந்தனை இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆதாம் மனுக்குலத்திற்கு தலைவனாகவும், ஜீவனை கொடுப்பவராகவும் இருந்தாலும் தனது கீழ்படியாமையினாலே பின்வரும் சந்ததிக்கு நித்திய ஜீவனை கொடுக்க இயலாமல் தோற்றுப்போனான். இருந்தபோதிலும் தெய்வீக வாக்குத்தத்தத்தின்படியே ஆதாமும் அவன் பின் சந்ததியாரும் மேசியாவினால் மீட்கப்பட்டு, அவர்கள் இழந்த யாவற்றையும் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. ஆதாம் பூர்வீக முதல் மனிதனான படியினால், பூமியும் அதன் ஆட்சிப் பொறுப்பு யாவும் ஆதாமின் வசத்தில் இருந்தன. தீர்க்க தரிசனங்களில் ஆதாமைப் பற்றி குறிப்பு வருவதை கவனிப்போம்: "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர், உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடு மாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும்

*ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும் கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்." - சங். 8:4-8.*

ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே, பூமியின் ஆளுகையும், சுதந்திரமும், உரிமையும் பறிபோயிற்று. மாபெரும் பாவ நிவாரண பலியை கிறிஸ்து செய்ததால், ஆதாம் மட்டுமல்ல, முழு மனுக்குலமும் பாவம், சாபம், மரணத்திலிருந்து மீட்கப்பட்டு விட்டது. நமது கர்த்தரைப் பற்றி, மீகா தீர்க்கதரிசியினால் இவ்வாறு உரைக்கப்பட்டது: "மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் அரணே, முந்தின ஆளுகை உன்னிடத்தில் வரும்." (மீகா. 4:8) தெய்வீக ஏற்பாட்டின்படி, உலகின் நம்பிக்கை ஆதாமின் வாரிசாகவும், ஆபிரகாமின் மாபெரும் குமாரனாகவும், தாவீதின் மாபெரும் குமாரனாகவும், மரியாளின் மாபெரும் குமாரனாகவும் இருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் மேல் விழுந்தது என்று நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட குமாரனுடைய ஜீவன், மானிடர்களாகிய ஆதாம், ஆபிரகாம், தாவீது, மரியாள் ஆகியோர் மூலமாக வந்ததாக அர்த்தம் கொள்ளக்கூடாது. தெய்வீக திட்டத்தின்படி, ஒரு மருமகன் குடும்பத்தில் ஒருவராக கருதப்படுவார் என்பதும், அவர் இழந்து போனதை மீட்க உரிமை பெற்றவர் என்பதும், நாம் ஏற்கனவே அறிந்ததாகும். பூமிக்குரிய பெற்றோர்கள் மூலமாக கிறிஸ்து பிறந்ததாகக் கருதப்பட்டாலும், பூமிக்குரிய மாம்சம், இரத்தம் ஆகியவைகளைக் கொண்ட சரீரத்தை மட்டுமே பூமிக்குரிய பெற்றோர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். ஆனால் அவருடைய ஜீவன் பிதாவினால் கொடுக்கப்பட்டது. அவர் ஆதியில் தேவ பிரதிநிதியாக இருந்த லோகோஸ் என அறியப்பட்டவர்.

இந்தப் பாடத்தைப் பற்றி நாம் எவ்வளவாய் ஆராய்கிறோமோ, அவ்வளவாய் அந்த மனித குமாரன் என்கிற பட்டம் அவருக்கு எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது என்பதை அறிவோம். கிரேக்க மொழி சொல்லாட்சியும், மனித குமாரன் என்கிற சொற்றொடரின் மேன்மையும், இந்த மனித குமாரன் என்று வருகின்ற இடங்களையும், இதுவரை பார்த்த வசனங்களில் இந்த சொற்றொடரின் மகிமையை வ-யுறுத்தி நிரூபித்துக் காண்பிப்பதாக அமைந்துள்ளது. "மனித குமாரன்" என்ற சொற்றொடரை இயேசு

*கிறிஸ்து பலவிடங்களில் வலியுறுத்தி உபயோகித்திருந்தாலும், அதன் சிறப்பு ஆங்கில மொழியில் அவ்வளவு தெளிவாக இல்லை. எனவே, அந்த இரண்டு கிரேக்கச் சொல்லையும் சிந்திப்பது அவசியம். இதை சரியான ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமானால்,* "The son of the man" *என்பதாகும். இப்படிச் சுட்டிக்காட்டும்* "the" *என்ற சொல்-னுடைய மேன்மை வெறும் சுட்டிக் காட்டுவதோடு நில்லாமல்,* "**ஒரே மனிதனுடைய ஒரே குமாரன்**" *என்ற பொருளைத் தருகிறது. நமது கர்த்தரின் இந்தப் பட்டத்திற்குரிய உரிமையும், தகுதியும் பற்றிய எந்த சர்ச்சைக்கும் இடமில்லை. ஆதாம் ஒருவனே பரிபூரணமனிதனாக இருந்தான். தன்னை அவனது சந்ததியில் இணைத்துக் கொண்ட அந்த ஒரே குமாரனைத் தவிர மற்ற அனைவரும் (சந்ததி முழுவதும்) பரிபூரணத்தை இழந்திருந்தனர். அந்த குமாரன் தான் பெற்றிருந்த அனைத்தையும் இழந்து மீட்பராக வேண்டியிருந்தது. அவர் ஆதாமின் சந்ததியரை மீட்கும் வேலையில் இறங்கி, அவர்களை சாபத்தி-ருந்தும் மரணத்திலிருந்தும் மீட்டிருப்பதால், ஒரே மனிதனுடைய ஒரே குமாரன் என்ற பட்டம் சர்சைக்கு இடமின்றி சட்டப்பூர்வமாக அவருக்கு உரியதாயிற்று.*

*"மனுஷ குமாரன்" என்ற அடைமொழி அவர் ஈடுபலி செலுத்தி மீட்புப்பணியை நிறைவேற்றி முடிக்கும் வரையில்தான் பொருந்தும் என்பதில்லை. அதற்கும் மேலாக இந்த சுவிசேஷ யுகத்திலும் தன்னுடன் இந்த ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்யப் போகிற உடன் ஊழியர்களையும் திரட்டி எல்லாவற்றையும் முந்தின சீருக்குக் கொண்டு வந்து சேர்க்கும் வரை இந்தப் பெயர் பொருத்தமாயிருக்கும். அவருடைய ஆயிர வருட அரசாட்சிப் பணியிலும் இந்த அடைமொழி அவருக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. அப்பொழுது அவர் (உயர்த்தப்பட்டு மாற்றப்பட்ட) மனுஷ குமாரானாக "அவருக்கு சொந்த மானவர்கள் மீட்கப்படும்" வேலையை, இழந்ததை திரும்பக் கொடுக்கும் வேலையை செய்வார். எபே.1:14; ரூத். 4:1-10.*

## அவிசுவாசிகள் காண்கின்ற "மனிதனாகிய கிறிஸ்து இயேசு"

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஞானத்தையும் கிருபையையும், அவர் "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும்*

*நிறைந்திருப்பதையும்” அவருடைய பக்தர்கள் மாத்திரமல்ல, அவர்களுடைய எதிரிகளும் சாமான்யர்களும் அறிந்திருந்தனர். அது மட்டுமல்ல, அவர் சாமான்ய மனிதர்களைவிட பல மடங்கு ஞானமுள்ளவராயிருந்ததையும் அறிந்திருந்தனர். “எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டனர்.” (லூக் . 4:22) மேலும் மற்ற மனிதர்களும்கூட “அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை” (யோவா. 7:46) என்றார்கள். இயேசு கிறிஸ்து பிரபலமாவதை பொறுக்காத பரிசேயர், சதுசேயருடைய தூண்டுதலினால், கொலைவெறி கொண்ட யூத கும்பல் திரண்டு வந்தபோது, பிலாத்து, தன் வாழ்நாளில் கண்டிராத மிகப் பெருந்தன்மையுள்ள யூதனாகிய கிறிஸ்துவைக் கொல்ல விரும்பவில்லை. இயேசுவை குற்றம் சாட்டுபவர்கள் அவருடைய கனிவான முகத்தைக் கண்டாவது அவர்களுடைய வெறுப்பு விருப்பமாக மாறி தங்களது கொலை வெறியிலிருந்து மாறுவார்கள் என்று நினைத்து அவர்கள் முன் இயேசுவை நிறுத்தி, “இதோ, இந்த மனிதன்” என்று பிலாத்து கூறினான். இவ்விடம் கூறப்பட்டுள்ள “இதோ, இந்த மனிதன் என்ற சொற்றொடரில் காணப்படும் பொருள் பொதிந்த “கிரேக்க” சொல்லின் ஆழத்தை வேறு எந்த மொழியிலும் மொழிபெயர்க்க முடியாது. நீங்கள் சிலுவையில் அறைந்து கொல்ல நினைக்கிற இந்த மனிதன் யூதர்களில் ஒருவன் மாத்திரமல்ல, யூதர்களுக்கெல்லாம் தலைசிறந்த யூதனும் மனிதர்களுக்கெல்லாம் தலைசிறந்தவனுமாவான் என்று கூறுவதுபோல், “இதோ இந்த மனிதன்” என்ற கூறினான். நமது கர்த்தருடைய மனிதத் தன்மையைப் பற்றி யோவான், “அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது” என்றார். யோவா. 1:14;19:5*

*அகில உலக மக்களும் கொண்டாடும் பிரஞ்சுக்காரராகிய ரூசோ, மனித குமாரனைப் பற்றியும் அவருடைய போதனைகளைப் பற்றியும் கூறிய அவருடைய கீழ்க்காணும் வார்த்தைகளை அனைவரும் அடிக்கடி எடுத்தாளுகின்றனர்.*

*"அகில உலக தத்துவ சாஸ்திரிகளின் ஆடம்பரமான நூல்களை, வேதாகம நற்செய்திகளோடு ஒப்பிடும்போது அவைகளெல்லாம் அற்பமும் குப்பையுமே! அவ்வளவு எளிமையும், உன்னதமான எழுத்துக்களை எந்த மனிதனாலும் எழுதக் கூடுமோ! மற்றவர்கள் சொல்லுகிறபடி கிறிஸ்துவினுடைய ஜீவன் சாதாரண மனிதனுடையதாய் இருக்க முடியுமா? அவருடைய வாழ்வில் பட்டம் பதவி வேண்டுமென்று பாய்ந்தோடுகிற பேராசையுள்ள மனிதனுடைய குணம் இருந்ததா?" அவருடைய குணம் எவ்வளவு மதுரமானவை! அவருடைய வழிகளெல்லாம் எவ்வளவு தூய்மையானவை! அவருடைய போதனைகளெல்லாம் எப்படி உள்ளத்தைத் தொடுகின்றதாயுள்ளது! அவருடைய இரத்தின சுருக்கமான கருத்துக்கள் எவ்வளவு உன்னதமானவை! அவருடைய வார்த்தையின் ஞானம் எவ்வளவு ஆழமானவை! ஏற்ற சமயத்தில் ஏற்ற வண்ணம் ஏற்றம் பெறும் வார்த்தைகளைச் சொல்லும் அவருடைய பாணிதான் என்னே! அவருடைய மறுமொழிகள் எவ்வளவு சிக்கலான கருகலான கேள்விகளுக்கும் பொருத்தமானதாக இருந்தது. அவருடைய பாடுகளின் சாம்ராஜ்யம் பரம பாரட்டுக்குரியது! அவருக்கு இணையாக எந்த மனிதனை, எந்த முனிவரை ஒப்பிடக்கூடும்? எத்தகைய சூழ்நிலையில் எப்படி நடப்பது என்பது எல்லாரையும் விட நன்கு தெரிந்தவர் யார்? எந்த பலவீனத்தையும் மேற்கொண்டு விளம்பரமின்றி அனைத்துலகத்திற்காகவும் பாடுபட்டு மரிக்கக் கூடியவர் யார்? எனது அருமை நண்பர்களே! எந்த மனிதனும் இப்படிப்பட்டவரை கதையில்கூட கற்பனையில் கூட காணமுடியாது. கிறிஸ்துவின் போதனையும் வாழ்க்கையும் இசைந்திருந்தது போல சாக்ரட்டீஸின் போதகமும் அவரது வாழ்க்கையும் இசைந்திருக்கவில்லை. அந்த யூதர்களோ இயேசுவின் குணத்தையோ மேன்மையையோ துளியும் அறிந்து கொள்ள இயலாத குருடராக இருந்தனர். நற்செய்திகள் நற்குண பண்பின் அடிப்படையிலும் சத்திய அடிப்படையிலும் எழுந்தவைகள். அவற்றை ஒருவரும் காப்பியடிக்க முடியாது. எல்லாவகையிலும் அவரைப் பின்பற்றி நடித்துக் காட்ட முயல்பவர்கள் கூட அவருடைய நற்குணங்களை அவ்வளவு சிறப்பாக நடித்துக் கூட காட்டமுடியாது."*

மனுஷ குமாரனைப் பற்றி நெப்போலியன் போனபார்ட் சொன்ன புகழாரமாவது:

“ஆதியிலிருந்து அந்தம் வரை, இயேசு கிறிஸ்து மாறாதவராயிருந்தார். எப்பொழுதுமே எளிமையாகவும் மேன்மை தங்கினவராகவும் இருந்தார். முடிவில்லாத பெருந்தன்மையாளராகவும், முடிவில்லாத கட்டுப்பாடுள்ள வராகவும் இருந்தார். பொதுவான வாழ்வில் எல்லார் முன்னிலையிலும் அவர் பகிரங்கமாக ஜீவித்தாலும், ஒரு சிறிய தவறு கூட கண்டுபிடிக்க அவர் இடந்தரவில்லை. மிகுந்த சாந்தமும், கட்டுப்பாட்டுடன் கூடிய வேகமும், ஒருங்கிணைந்த அவருடைய ஒழுக்க சீலமும், விவேகத்துடன் ஐக்கியமாகி இருப்பதே நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. அவருடைய பேச்சும், செயல்பாடும் ஒரே மாதிரியான பிரகாசத்துடன் வழிகாட்டுகிறதாகவும், மிகுந்த சாந்தமுள்ளதாகவும் எப்போதும் ஒரே சீரானதாகவும் விளங்கினது. பெருந்தன்மை தெய்வீகத் தன்மைக்கு சிறப்பம்சமாக அமைகிறது. உன்னத நோக்கத்திற்கு வேண்டிய அனைத்து அடிப்படைக் காரணமும் அவரிடம் ஐக்கியமாய் இருக்கும்போது, அவருக்கு நாம் என்னபெயர் சூட்டமுடியும்?

“எனக்கு மனிதர்களைப் பற்றியெல்லாம் நன்கு தெரியும், ஆனால் இயேசுவை எந்த மனிதரோடும் ஒப்பிடக் கூடிய நிலையில் அவர் இல்லை. அவரிடமிருந்த ஒவ்வொரு பண்பும் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது. அவர் மெய்யாகவே தனித்தன்மையுடைய விசேஷ ஜீவியாய் இருந்தார். அவருடைய கருத்துக்கள் மற்றும் அவருடைய உறவாடும் உணர்வைத் தொடும் அனுபவங்கள், அவர் வெளிப்படுத்திய சத்தியங்கள், அவருடைய பேசும் திறன் ஆகிய யாவும் இயல்பான, மனித சக்திக்கு அப்பாற்பட்டவை. அவருடைய பிறப்பு, வாழ்க்கை வரலாறு, அவருடைய கொள்கைகளின் ஆழம் ஆகியவை எந்த பிரச்சினைக்கும் முழுமையான தீர்வு உண்டாக்குவதாயும், எல்லாருக்கும் ஒரு நற்செய்தியாகவும் விளங்குகிறது. அவருடைய சுவிசேஷம், மனித அறிவுக்கு எட்டாத அவருடைய விசேஷ குணம், தோற்றம், பல நூற்றாண்டுகளாக பல ராஜ்யங்களையும் கவர்ந்த அவரது முன்னேற்றம் ஆகிய இவைகளெல்லாம் என் புத்திக்கெட்டாத,

பிரம்மிக்கத்தக்க ஆழங் காணமுடியாத அதிசயமாக உள்ளது. இவைகளில் ஒன்றையாவது சாமான்ய மனிதனிடம் கண்டதில்லை. அவரை ஆராய நெருங்கிச் செல்லச் செல்ல, எல்லாம் ஒப்பிட முடியாதவைகளாகவே இருக்கின்றன. அவருடைய மாபெரும் குணாதிசயம் என்னுடைய சிந்தனையையே செயலிழக்கச் செய்துவிட்டது. நான் மிகச் சிறிய அளவே பிரதிபலிக்கிறேன் - அந்த பிரதிபலிப்பு வீண். இன்னும் அநேக, புலப்படாத பண்புகள் ஏராளம்... ஏராளம் ... இது போன்ற ஒரு ஜீவியை எங்காவது காண்பிக்க முடியுமா என்று நான் சவால் விடுகிறேன்."

ஆம், கட்டுக்கதையைப் பார்க்கிலும் சத்தியம் நூதனமானது. உன்னதமான ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்த பூரண நிலையில் இருந்த இயேசு அபூர்ண மனிதர்களை மீட்க வேண்டி அபூரண நிலைமைக்கு வந்தார். அவர் சாமான்ய மனிதருக்கு மேலானவர் அல்ல என்று அறியாமையினால் உலகம் சொல்லுவது மன்னிக்கத்தக்கது. ஆனால் நிச்சயமாக மேலானவர், சாதாரண மனிதனை விட அதிலும் பாவ மனிதனைவிட மிக மேலானவர். அவர் பாவிகளுக்கு விலகினவராகவும் பரிபூரண மனிதனாகவும் காணக்கூடாத தேவனுடைய தற்சொரூபமும் சாயலுமாக இருந்தார் என்பது நிச்சயமே.

## "நாம் விரும்பத்தக்க அழகு அவரிடத்தி-ல்லை"

"இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்தி-ருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற் போனோம்." - ஏசா. 53:2-3

சிலர் அவரை பாவி என்றும், அதனால் அவருடைய முகம் குரூரமாக இருந்ததென்றும், அதனால் அவர் பாவிகளிலிருந்து வேறுபட்டவர் அல்லர் என்றும் நினைக்கத் தலைப்பட்டனர். அதனால் அவர் பாவத்தில் பங்கு பெற்றவர் என்றும், அதன் மூலமாக கிடைக்கும் தண்டனைக்கு உட்பட்டவர் என்றும் நினைக்கின்றனர். இதுவே வேதாகம கருத்து என இவர்கள் தவறாகக் கூறுகின்றனர்.

முழு வேதாகமக் கருத்துக்கும் இது ஒத்துவராத கருத்தாகையால் நாம் இதனை வன்மையாக மறுக்கிறோம். இதை வேத ஆதாரங்களோடு ஒப்பிட்டு சரியான காரணத்தைக் காண விரும்புகிறோம். வேதாகம கொள்கைகளுக்கு முரண்படாமல் சரியான கருத்தை சரியான விளக்கத்தோடு எடுத்துக் காண்பிக்க இயலும்.

பலவகையான கண்ணியம், அழகு, சாந்தம் ஆகியவை பலதரப்பட்ட மக்களுக்கு வெவ்வேறாகத் தோன்றும். ஒரே மனிதருக்கு பலவகையான சந்தர்ப்பங்களில் வெவ்வேறாகத் தோன்றும். நாட்டுப்புற மக்களுக்கு எது கண்ணையும் கருத்தையும் கவர்கின்றதோ அது நகர்ப்புற மக்களுக்கு அழகில்லாததாய் தோன்றும். நாட்டுப்புற மக்களுக்கு இந்திய படைவீரர் அணிந்திருக்கும் ஆடையிலுள்ள அணிகலன்களை பற்றிக் கூறினாலே மிகவும் பிடிக்கும். குத்துச் சண்டை வீரர்களுக்கு அவர்கள் வெற்றிக்கு தரும் விருதுகள் கலை நுணக்கமானவைகள். அநேகருக்கு முன்பு அடங்காத காளையை அடக்கும்போது கைதட்டல் ஆரவாரத்துடன் பாராட்டுவது பலருக்குப் பிரியமானது. காலத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் நிலைமைக்கும் தகுந்தவாறு கருத்துகள் மாறுபடுகின்றன. கிறிஸ்துவின் முதல் வருகையானது யூதர்கள் எதிர்பார்த்த கருத்துக்களின்படி வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. இதன் காரணமாகத்தான் பிலாத்துவும் கூட இயேசு கிறிஸ்துவை யூதர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டும் வண்ணமாக "இதோ இந்த மனிதன்" என்றான். ஆனால் அதே மனிதனைப் பார்த்துத்தான் யூதர்கள் அவரை, "சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும், எங்களுக்கு ராயனைத் தவிர வேறு இராஜா இல்லை" என்று கத்தினார்கள்.

இயேசு முதலாம் வருகையின்போது யூத இராஜ்யம் ரோம இராஜ்யத்தின் ஆளுகைக்குட்பட்டிருந்தது என்பதையும் அறுநூறு வருடங்களாக "புற ஜாதிகளால் யூதர்கள் மிதிக்கப்பட்டிருந்தனர்" என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தின்படி அதற்குப் பின் வந்த தீர்க்கதரிசிகள் எல்லாராலும் தொடர்ந்து முன்னுரைக்கப்பட்ட படியும் மோசேயைப் பார்க்கிலும் மிகப்பெரிய நியாயப் பிரமாணிகரும், யோசுவாவைப் பார்க்கிலும் உன்னத

தளபதியானவரும், தாவீது, சாலமோனைப் பார்க்கிலும் மிகப்பெரிய இராஜாவான தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரை தேவன் குறித்த காலத்தில் அனுப்புவார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். யூதர்கள் தங்கள் கருத்துப்படி மேசியா வருவார் என்று காத்திருந்தனர் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்ரயேலர் மட்டுமல்ல, அனைத்துலக மக்களும் மேசியாவை எதிர்பார்த்திருந்தனர். இயேசு தன்னை மேசியா என்று அறிவித்தபோது, அவரது அறிமுகம் அவர்களுடைய கர்வத்தையும் அகந்தையையும் வெட்கப்படுத்தியது. அவர்கள் தங்கள் முகத்தை அவருக்கு விரோதமாக மறைத்துக் கொண்டனர், முதுகையே காண்பித்தனர். விசேஷமாக அந்த நாட்டையே நடத்தி வந்த பெரிய தலைவர்களும் தேசாதிபதிகளும் காண்பித்த வழியைப் பொது ஜனங்கள் பின்பற்றினர். (லூக்கா. 3:15)

மிகப்பெரிய தளபதியாகவும், நியாயப் பிரமாணிகராகவும், மாபெரும் சர்வாதிகாரியாகவும் உள்ள மிகப்பெரிய தலைவராக எதிர்ப்பார்த்திருந்தார்கள். முழு இராஜ கெம்பீரமும், கர்வமும், தான் என்ற அகந்தையும், பேராசையும், சொல்லிலும் செயலிலும் செருக்குள்ளவரையே தங்கள் இரட்சகராக எதிர்ப்பார்த்தனர். தங்களுக்கு இராஜாவாக வருபவர் இப்படிப்பட்ட குணங்களை உடையவராயிருந்தால்தான் அகில உலகினையும் வெல்ல முடியும். அப்படி அகில உலகையும் அடக்கியாண்டு இஸ்ரயேலை உன்னத நிலைக்கு கொண்டுவர முடியும் என எண்ணியிருந்தனர். இப்படிப்பட்ட கர்வமுடைய, எவரையுமே மதிக்காத, அரக்க குணங்கொண்ட ஏரோதுவை, ரோமப் பேரரசு யூதர்களுக்கு இராஜாவாக நியமித்திருந்தது. அவர்கள் இந்த எண்ணம் கொண்டதற்குக் காரணமே, இப்படிப்பட்ட குணங்களையுடை ரோம இராஜாக்கள், நூற்றுக்கதிபதி, அதிபதிகள் ஆகியோர்களை ஏற்கனவே சந்தித்திருக்கின்றனர். அவர்களுடைய கற்பனையின்படி, இத்தகைய ஆணவ குணங்களை ஒருமிக்கயுடையவன்தான் உரோமப் பேரரசனாக இருக்கமுடியும். இதி-ருந்து அவர்கள் அடிப்படை கருத்துக்களை எடுத்துக் கொண்டு, தாங்கள் எதிர்பார்த்திருந்த மேசியா, இப்படிப்பட்ட குணங்களை இன்னும் அதிகமாக கொண்டிருப்பார் என்றும், தேவசமூகத்தி-ருந்து வருவதைக்

குறிப்பிட இன்னும் அதிக கவுரவத்தையும், கனத்தையும் மகிமையையும் உடையவராயிருப்பார் என்றும் எதிர்பார்த்தனர்.

இப்படிப்பட்ட எதிர்பார்ப்பில் ஆடம்பரமே இல்லாத எளிமையும், தரித்திரத்திலும் வந்த நசரேயனாகிய இயேசுவை அவர்கள் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை என்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் மேசியாவோ, ஆயக்காரர், பாவிகள், ஏழைகளுடன் கலந்திருப்பவராய் காணப்பட்டதோடு, அகில உலகையும் வெல்ல வைத்திருந்த ஒரே ஆயுதம், அவருடைய "வாயின் பட்டயமாகிய தேவ வசனமே." இந்த குணங்களையுடைய ஒருவர், அவர்களுக்கு மேசியாவாகவும், யூத இராஜாவாகவும் பிரகடனப்படுத்தப்பட்டபோது, அவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக இருந்ததால், தங்கள் முதுகை அவருக்குக் காட்டினதில் ஆச்சரியமில்லை. நீண்டகாலமாக, அவர்கள் கற்பனையின்படி எதிர்பார்த்ததற்கு மாறாக, அவர் எளிமையாக வந்தது அவர்களுக்கு பெருத்த, பயங்கர ஏமாற்றம் உண்டாயிற்று, எனவே அவரை "யூதர்களின் ராஜாவாக" ஏற்றுக் கொள்வதை பெருத்த அவமானமாகக் கருதினர். அவர்கள் கூறியதாவது: நாங்கள் எதிர்பார்த்த ஒரு போர் வீரன் குணமோ, தளபதியின் குணமோ, அடக்கியாளும் தன்மையோ அவரிடத்தில் துளியும் இல்லை. நாங்கள் விரும்பிய கண்ணியம், கட்டழகு, தோற்றப் பொலிவு எதுவும் அவரிடத்தில் இருக்கவில்லை. அதனால் நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த நம்முடைய தேசத்தின் தேவைக்கேற்ற, பொருத்தமான போர் வீரன், ராஜதந்திரி மற்றும் ராஜாவுக்குரிய சிறப்பியல்புகள் எதுவுமே அவரிடம் இல்லை. ஆம், இவர்களையொத்த ஒரு வகுப்பார் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை பாரம்பரிய மூதாதையர்களின் நம்பிக்கையின்படி எதிர்பார்ப்பது சரி என்று நினைக்கின்றனர். நேர்மையாகவும் கருத்துடனும் வேதத்தை ஆராய தவறிவிட்டனர். அப்படி ஆராய்ந்திருந்தால், அவர்கள் இரட்சிப்புக்கேற்ற ஞானவான்களாயிருப்பார்கள்.

"நாம் விரும்பத்தக்க ரூபம் அவரிடத்தில்லை" என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னது, இங்கு எவ்வளவு பொருத்தமாகக் காணப்படுகின்றது. அவர்கள் விரும்புகிற வண்ணமாக அவருடைய தோற்றம் இருக்கவில்லை. தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் என்று

ஏற்றுக் கொள்ளப்பட்ட சரித்திர உண்மைகளுக்கு இசைவாக தீர்க்கதரிசனத்தை அர்த்தம் கூறுவதும் விளக்கம் கூறுவதும் இசைவற்றதாயிருக்கும். மேசியாவின் பரிசுத்தத்தைக் குறித்து சொல்லப்பட்ட பரிசுத்தரும், மாசற்றவரும், கலங்கமற்றவரும், பாவிகளுக்கு விலகின வரும் என்பவைகளும், உலகின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்பதும் தர்க்க சாஸ்திரத்திற்கு முரணானதாயிருக்கும்.

## குரூரமாய் மாறிய அவருடைய முகத் தோற்றம்

*- ஏசா. 52:14 -*

இங்கேயும் அவருடைய தோற்றத்தைப் பற்றிய கருத்தைத் தெரிவிப்பதில், தவறான மொழி பெயர்ப்பைக் கையாண்டுள்ளனர். அலட்சியமாகப் படிப்பவர்கள் கூட ஒருவருடைய முகம் குரூரமாக மாறுவதற்கு தவறான ஒழுக்கம், வியாதி, விபத்து ஆகியவையே காரணம் என்று அறிவார்கள். இவர்கள் கூட மனுஷனைப் பார்க்கிலும் நம்முடைய ஆண்டவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும் இவ்வளவு அந்தக்கேடு அடைந்தது என்பதை உணர முடியாதவர்களாயிருக்கின்றனர். இப்படிப்பட்ட அறிக்கையில் எதோ குறை இருக்க வேண்டும். “இதோ இந்த மனிதன்” என்று பிலாத்து ஜனங்களிடம் காண்பித்தது இப்படிப்பட்டவரையல்ல, அவர்கள் தாவீதின் குமாரன் என்றும், பலவந்தமாக அவரை ராஜாவாக்க வேண்டும் என்றும் கூறியது இப்படிப்பட்டவரையல்ல. மேலும் அவருடைய எலும்புகளில் ஒன்றாகிலும் முறிக்கப்படுவதில்லை என்ற உறுதியை வேதம் தரவில்லையா? இப்படிப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள் எப்படிப்பட்ட நல்ல மாற்றத்தை நமக்குத் தெரிவிக்கின்றன. வேதாகம வரலாற்றுக்குப் பொருந்துகின்ற அவருடைய பரிசுத்த தன்மை, தூய்மை காரண காரியங்களுடன் இசைவாக ஆதாரப்பூர்வமாக எடுத்துக் காண்பிக்கப்படுகிறது.

“அவருடைய விகாரமான தோற்றத்தைக் கண்ட அநேகர் அவரைக் கண்டு பிரமிப்படைந்து போலவே, அவர்கள் எதிர்பார்த்த படி வராததினால் அவரைக் காணும்போது பிரமிப்படைவார்கள்.” அவருடைய முதலாம் வருகையில் அவரைப் பரிகாசம் செய்து

*அவருக்கு கேடு செய்தவர்களையும், குத்தினவர்களையும், குட்டினவர்களையும் அவர் பொறுத்துக் கொண்டார். அப்படிப்பட்டவர்களுக்கு தமது வல்லமையான இராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது பதிலுக்கு பதில் தீங்கு செய்யாமல் சகிப்புத் தன்மையோடு அவர்களையும் ஆசீர்வாதிப்பதால் அவருடைய செயல்பாட்டைக் கண்ட யாவரும் அவரைப் பற்றி பிரமிப்படைவார்கள். (எபி. 12:3)*

*"அவர் நிமித்தம் இராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில் தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்." (யாரும் கேள்விப்பட்டிராத நல்ல முன்மாதிரியான ஞானத்தை அப்பொழுது அறிவார்கள்) (ஏசா. 52:15) தனக்குக் கீழ் உள்ள பிரஜைகள் நன்மையை பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, அவர்களிடமே அநீதியையும் அக்கிரமத்தையும், அவமானத்தையும் சகிக்கக்கூடிய தன்மை எந்த உலக மாமன்னர்களிடமும் காணமுடியாத ஒன்றாகும். அவருடைய சிநேகம் "எந்த சகோதரனுடைய சிநேகத்தைப் பார்க்கிலும் உன்னதமானது" என்பது சத்தியமே. எனவே குறித்த காலத்தில் எல்லாரும் பிரமிப்படைவதில் வியப்பில்லை.*

*நம்முடைய அருமையான மீட்பரின் முகத்தில் மனிதர்களின் துன்பத்தின் சாயல் நிச்சயமாய் பதிந்திருந்தது என்பதில் எவ்வளவும் ஐயமில்லை. ஏனெனில் அவர் மனித பலவீனங்களை அனுதாபத்தோடு உணர்ந்து அவருடைய உள்ளத்தையும் தொட்டதால் அவரே அவைகளை எற்றுக் கொண்டார். கல்வாரியில் அவர் தன் ஊழியத்தை நிறைவேற்றி முடிக்கும் வரையில் இந்த முத்திரை பதிந்திருந்தது. உடல் உறுப்புக்கள் எந்த அளவுக்கு மிக அழகாக நேர்த்தியாக மிருதுவாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு வருத்தம், தொல்லைகளின் முத்திரை வெகு ஆழமாகவும், அதிகமாகவும் பதியும் என்பதை மறக்கலாகாது. மனித வீழ்ச்சியில் நாம் பங்கேற்றபடியால் மனிதனுக்கு நேர்கின்ற சாபம், பாவம், நோய், துன்பம், உரிமையிழந்ததினால் வரும் பாதிப்புகள், இடைவிடாத சாபத்தினால் தொடர்கின்ற தொல்லைகள் ஆகியவைகளை நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். ஆனால் பாவமே செய்திராத, பரிபூரணமும்,*

பரிசுத்தமும் நிறைந்தவர் பாவத்திற்கு விலகினவர், பாவ பழக்கமே இல்லாதவர் பாவத்திற்குரிய தண்டனையை அனுபவிப்பது எத்தனை மடங்கு அதிகமான தண்டனையாயிருக்கும்.

நம்முடைய அன்றாட வாழ்விலும் நாம் இப்படிப்பட்ட அனுபவங்களை அடைகின்றோம். ஆடம்பர செல்வ செருக்கிலே இருக்கும் ஒருவன் ஒரு சேரிக்குச் சென்றால், அங்குள்ள வறுமையின் அடையாளங்கள், அசுத்தம், துர்நாற்றம், பேரிரைச்சல், பரிதாபமான அங்கஹீனர்களின் ஓலம், முனகல் ஆகியவற்றையெல்லாம் கண்டு கேட்கும்போது அவர்கள் இருதயம் எவ்வளவு பாதிப்புக்குள்ளாகும் என்பதை உணரலாம். இவைகளையெல்லாம் அவர் காணும்போது மனம் தன்னை அறியாமல் பரிதாபப்பட்டு, இவர்கள் இப்படி வாழ்வதைவிட மரணமே அவர்களுக்குப் பாக்கியமாகத் தோன்றும். இவ்வாறாக தனிப்பட்ட சிந்தனையில் மனதை செலுத்திக் கொண்டிருக்கும்போதே, சிறுவர்கள் உல்லாசமாக விளையாடிக் கொண்டிருப்பதையும் அவன் கண்கள் பார்க்கிறது; சலவை செய்பவர் பாடுவதையும், ஒருவன் திருப்தியடைந்தவனாய் நாளேட்டை வாசித்துக் கொண்டிருக்கிறதையும், ஒரு சிறுவன் பழைய இசைக் கருவி ஒன்றை மீட்ட முயற்சி கொண்டிருக்கிறதையும் காண்கிறது. இப்படிப்பட்ட காரியங்களில் பழக்கபட்டவர்களுக்கு இவைகள் எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதையும் இதைப்பற்றி அறியாதவர்களுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதையும் இதன் மூலம் அறியலாம்.

இந்த பாடம், வருத்தமும் பாவமும் நிறைந்த பூமியின் நிலைமையைப் பற்றிய நமது ஆண்டவரின் கருத்துக்கும் நமது கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை சிறதளவே விளக்குகிறது. பூரணராக இருந்து பரலோக மகிமையை விட்டு, தம்மைத் தாமே தாழ்த்தி மானுடரின் துன்பத்தில் பங்கு பெற வந்த இரட்சகர், "பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிகளாகிய" நம்மைக் காட்டிலும் அதிகம் துன்பப்படுவார். நம்முடைய துன்ப துயரங்களையெல்லாம் அவர் எற்றுக் கொண்ட போது தெய்வீகத் திருமுகம் ஒளியை இழந்து, அழகையுமிழந்ததில் வியப்பென்ன! பூமியின் உபத்திரவரங்களுக்கெல்லாம் தன்னை கையளித்து, மனிதனின் பலவீனம் நோய்களை தானாக வ-ய ஏற்றுக் கொண்டு தன்னுடைய

பலம், ஜீவன், வல்லமை எல்லாவற்றையும் தத்தம் செய்ததால் மனித குமாரனுடைய சாயல் ஆழமாக பதிந்திருந்தது. இருந்தபோதிலும் அவர் ஏன் இப்படி செய்தார் என்று நாம் கேட்பதற்கில்லை. அவர் பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டு, அவருடைய பிதாவிடம் இடைவிடாமல் தொடர்பு கொண்டு, தேவனுடைய பார்வைக்குப் பிரியமானதை எப்பொழுதும் செய்தார். இது நமது இரட்சகரின் முகத்தில் சாந்தமான சாயலைக் கொடுத்திருக்க வேண்டும். பிறகு அது அவருக்கு சந்தோஷமும் துன்பமும், வருத்தமும் சமாதானமும் சேர்ந்த நிலைமையைக் கொடுத்திருக்கும். தேவனுடைய திட்டத்தை அறிந்ததினால், தான் படும் பாடுகளினால் தனக்கு மட்டும் ஆசீர்வாதமாக இராமல், அனைத்து மக்களுக்கும் ஆசீர்வாதத்தை கொண்டு வரும் என்று உணர்ந்து, பாடுகளை சந்தோஷமாக எற்றுக் கொண்டார். மனிதனுடைய துன்பங்கள், வியாதிகள் ஆகியவற்றை ஏற்றதன் மூலம் இவருடைய முகப் பொ-வு பாதிக்கப்பட்டிருந்தாலும், அதோடு தாம் எப்பேர்ப்பட்ட மீட்பைக் கொண்டு வரப் போகிறோம் என்ற நம்பிக்கையும், விசுவாசமும் அவருடைய முகத்தில் தோன்றியதால் எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் அவருடைய இருதயத்தை ஆட்கொண்டிருந்தது என்றறியலாம். அவருக்கு விரோதமான பாவிகளின் முரண்பாடுகளுக்கு மத்தியில் அது அவருக்கு எப்பொழுதும் களி கூறக்கூடிய உள்ளத்தைக் கொடுத்தது.

## “பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்”

பாவமும், பொறாமையும், வெறுப்புடைய இருதயமும் கொண்ட விழுந்துபோன சுபாவத்திற்கு நன்மை, அழகு, சத்தியம், அன்பு ஆகியவை வெறுக்கத்தக்க குணங்களாயின. அதில் அழகு இல்லை, விரும்பத்தக்கது இல்லை. நமது கர்த்தர் இந்தக் கருத்தை அற்புதமாக வலியுறுத்திக் காண்பிக்கின்றார்.

“ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால், அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறார்கள். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கின்றான்.”

*யோவா. 3:19*

*மகிமையுள்ள அன்பின் அருள் பிரகாசத்தை சில நேரங்களில் தீய நெஞ்சம் வெறுத்து அவமாக்கி விடுகிறதை சித்திர விளக்கமாக மேலும் காண்போம். அருள் பிரகாசமான இயேசுவின் முகத்தைக் கண்ட யூதர்கள் கூட "அவனை சிலுவையில் அறையும்" என்று குரூரமாகக் கத்தினார்கள். இத்தகைய அவமானம் இயேசு கிறிஸ்துவுக்கு மாத்திமல்ல; அவரைப் பின்பற்றி வர மனதாயிருக்கிற யாவருக்கும் உண்டாகியிருக்கும். சத்தியத்தினிமித்தம் இரத்த சாட்சியாக மரித்த ஒவ்வொருவரையும் இப்படியே அவமானப்படுத்தினார்கள் என்பதை கவனிக்க வேண்டும். தாங்கள் எவ்வளவாக அவமானப்பட்டும், அவமானப்படுத்தியவர்களுக்காக வேண்டுதல் செய்கிறவர்களுடைய மனோபக்குவம் எவ்வளவு உன்னதமானது? முதல் கிறிஸ்தவ இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படும்போது, அவனும் இயேசுவைப் போல சாட்சியாக கல்லெறிந்தவர்களுக்காக ஜெபித்தான். அப்போது அவனுடைய முகம் தேவதூதனுடைய முகத்தைப் போல அழகாகப் பிரகாசித்தது.*

*"ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன் மேல் கண்ணோக்கமாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம் போ-ருக்கக் கண்டார்கள்." (அப்.6:15) அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் தேவதூதனைப் போன்ற பிரகாசமான முகத்திற்கு கருணை காட்டுவதற்குப் பதிலாக கொடுமை காட்டினர். துன்ப வேளையில் இயேசுவின் முகம் பிரகாசமுள்ள தேவதூதனின் முகச் சாயலுக்கு ஒப்பாயிருந்தது. ஸ்தேவானின் முகம் சற்று குறைவாக பிரகாசமுள்ள தேவதூதனின் முகத்தைப் போ-ருந்திருக்கும். ஆனாலும் ஸ்தேவான் தங்களுக்காக பிதாவிடம் அற்புதமாக வேண்டிக் கொண்டதைக் கூட பொருட்படுத்தாமல், "ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து ....... அவனை கல்லெரிந்தார்கள்." இதைவிடக் உருக்கமாக இயேசு தன்னை நிந்தித்தவர்களுக்காக வேண்டிக் கொண்டபோதிலும் அவர்கள் அதை அலட்சியப்படுத்தி, அவரை சிலுவையிலறைவதையே அவர்களது குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.*

"அவர் எல்லாராலும் நேசிக்கப்படத்தக்கவராக இருந்தார்."

• • •

*"கர்த்தாவே, வானங்கள் உமது மகிமையை வெளிப்படுத்துகிறது;*
*எல்லையற்ற விண்வெளியின் அனைத்து பகுதியின் மூலமாக.*
*எழும்பிய உள்ளம் வெளியே சுற்றித்திரிகிறது,*
*அங்கே உமது வல்லமையையும் ஞானத்தையும் காண்கிறது.*

*"இயற்கையின் அதிசய பிரமாணங்களின் ஆசானே,*
*அதன் மகிமையான கிருபைகளின் பாதுகாவலரே,*
*எல்லாவற்றிற்கும் ஆதிகாரணராகிய உம்மை நாங்கள் வாழத்துகிறோம்.*
*உமது வழிகளை இங்கே காண்பதில் சந்தோஷம் கொள்கிறோம்.*

*"இப்போது உமது மகிமையை விசுவாசத்தால் நாங்கள் காண்கிறோம்;*
*உமது ஞானத்தையும், அன்பையும் கிருபையையும் நாங்கள் காண்கிறோம்;*
*குனிந்து, உம்மை புகழ்ந்து, ஆராதிப்பதில்*
*உமது மகிமையான முகத்தைக் காண ஆவலாயிருக்கிறோம்.*

*"கிறிஸ்துவுக்குள் எல்லாம் பூரணப்படும்போது-*
*பூலோகத்திலுள்ளவைகளும், பரலோகத்திலுள்ளவைகளும் -*
*வானங்களும் பூமியும் பூரணப்பட்டிருப்பதாக*
*என்றென்றைக்கும் கொடுக்கப்பட்ட உமது மகா புகழ்ச்சியினால்."*

## அத்தியாயம் 8

# ஒப்புரவாகுதலின் மார்க்கம் தேவனுடைய பரிசுத்தஆவி

*பரிசுத்த ஆவியின் கிரியை-இப்பொழுதும் ஆயிர வருட யுகத்திலும்-பரிசுத்த ஆவிக்கு பலவிதமான விளக்கப் பெயர்கள், "அன்பின் ஆவி," "சத்திய ஆவி" முதலானவை - எதிர் மாறாக, "அசுத்த ஆவி," "வஞ்சக ஆவி," "பயத்தின் ஆவி" முதலானவை-பிரதிப்பெயர்ச் சொல் பயன்படுத்துதல்-ஆவி என்ற வார்த்தையின் உட்பொருள்- "தேவன் ஆவியாயிருக்கிறார்"-"பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை"-பரிசுத்த ஆவியின் வரங்கள்- வல்லமையை அல்லது பரிசுத்த ஆவியை மாற்றுதல்-ஆவி அளவுடனும், ஆவி அளவில்லாமலும்-உலகத்தின் ஆவி, அந்திகிறிஸ்து-இதற்கும் பரிசுத்த ஆவிக்கும் உள்ள போராட்டம்-ஆவியின் போராட்டங்கள் பரிசுத்த வான்களுக்குள்ளேயும் புறம்பேயும்-பொறாமையை இச்சிக்கிற ஆவி-ஆவியின் போதனை-தேற்றரவாளன், பாரகிளெடோஸ்-அவர் உங்களை எல்லா சத்தியத்துக்குள்ளும் முழு ஒப்புரவிற்குள்ளும் வழிநடத்துவார்-அற்புத வரங்கள் நின்றவுடன் ஆவியின் மேற்பார்வை இராது.*

*"எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்... அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சிகொடுக்கிறார்." ரோம 8:14-16*

*"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்." - யோயேல். 2:28.*

**மா** பெரும் பணியாகிய ஒப்புரவாகுதலை சரியாக பரிசுத்தாவியின் துணையில்லாமல் ஒருக்காலும் சிந்திக்கவோ, நிதானிக்கவோ முடியாது. விசுவாசிகளுக்கு, ஒப்புரவாகுத-ன் வேலையாகிய, தேவ மன்னிப்பை வெளிப்படுத்துகிற வேலையையும், அவர்களுடைய இருதயத்தை தேவனோடு இசைவுள்ளதாக்க வழிநடத்துகிற வேலையையும் பரிசுத்த ஆவி செய்கிறது. தமது ஊழியத்தின் ஆரம்பத்தில், கர்த்தராகிய இயேசு பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் பெற்ற பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலினால், உடன்படிக்கை செய்யப்பட்ட அவரது இருதயம், தேவனுடைய சித்தத்தையும், சரியான மார்க்கத்தையும், ப-யின் குறுகலான பாதையையும் தெளிவாக அறிந்து கொள்ளவும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை மேன்மை பாராட்டவும், இந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற மிகமிகத் தாழ்மையான நிலைக்குச் சென்று கல்வாரி மரணம் வரை எல்லாவற்றையும் சகிக்கவும் முடிந்தது. பிதாவுக்கு பிரியமான வழியிலே பிதா ஏற்றுக் கொள்ளத்தக்க இந்த ஒப்புரவாக்குதலை நிறைவேற்ற பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலினால் நிறைவேற்ற முடிந்தது. அதனால் அனைத்து மனுக்குலத்திற்கும் ஈடுபலி செலுத்தப்பட்டது. அதுபோலவே பரிசுத்தஆவி திருச்சபையை இயக்கி வழி நடத்துவதற்கும் காரணமாயிருக்கிறது. இந்த சுவிசேஷ யுகத்திலே கிறிஸ்துவின் ஈடுபலியை ஏற்றுக்கொண்டு, தங்களை ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்து, குமாரனுடைய பலியினாலே பிதாவினண்டைக்கு வரவழைக்கப்படுகிற யாவரும், பரிசுத்தஆவியிலே இந்த பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகி கிறிஸ்துவுக்குண்டான எல்லா மகிமையிலும் பங்கடைகின்றனர். தேவனுடைய பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே பிதாவோடும் குமாரனோடும் ஒப்புரவாகி மகிமைப்படுத்தப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களே, “தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று” பகுத்தறிந்து அதன்படி செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். தேவனுடைய சாட்சியாகிய வேத வசனத்திற்கு எழுத்தின்படி பொருள் கொள்ளாமல், பரிசுத்தஆவியின் வழிநடத்துதலால் வழிநடத்தப்படுகிறோம். தேவனுடைய

மறைபொருளான இரகசியமான தேவ ஞானத்தையெல்லாம் பரிசுத்தஆவியினால் நாம் விளங்கிக் கொள்கிறோம். "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளாகக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." I கொரி. 2:9,10

புதிய உடன்படிக்கையினாலும், அருமையான மீட்பருடைய ஈடுப-யினாலும் தேவனோடு மனுக்குலம் ஒப்புரவாக்கப்படும் ஆயிர வருட அரசாட்சியின் எல்லாப் பணிகளிலும் கூட பரிசுத்தஆவியின் பங்குண்டு. நமது கர்த்தர் தீர்க்கதரிசி யோயேலின் மூலமாக சுவிசேஷ யுகத்தில் தமது ஊழியக்காரர், ஊழியக்காரிகளின் மேல் மட்டும் பரிசுத்தஆவியை ஊற்றியது போலவே (யோயேல் 2:28,29) இறுதியில் "மாம்சமான யாவர்" மேலும் தமது ஆவியை ஊற்றுவதாகக் கூறியிருக்கிறார். ("மாம்சமான யாவர் மேலும்" என்பதை சிலர் ஏற்கனவே நடந்து முடிந்துவிட்டது என்று தவறாக எண்ணுகின்றனர். ஆனால் அது இன்னும் நடந்து முடியவில்லை. இந்த தேவனுடைய மறைபொருள் அதனுடைய நீள அகல உயரங்கள் உரிய காலத்தில், உரிய நேரத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே விளக்கமாக வெளியரங்கமாகக் கூறப்படும்). பிறகு ஆயிர வருட அரசாட்சியின் போது உலகத்தின் முன்னேற்றங்களெல்லாம் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக பரிசுத்தஆவியினால் நிறைவேற்றப்படும். ஆயிர வருட அரசாட்சியிலும் கூட யார் யார் தங்களை தேவ சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தார்களோ அவர்களுக்கு மட்டுமே பரிசுத்தஆவியின் வழிநடத்துதலிருக்கும். இவர்கள் ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் நித்திய ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் மகிழ்ச்சியையும் நிரந்தரமாகப் பெறுவார்கள். மகிமையடைந்த திருச்சபையாரோடு உலகத்தையே முழுவதுமாக முந்தின சீருக்குக் கொண்டு வரும் பணியில் பரிசுத்தஆவியின் கிரியை இருக்கும் என்பதை நமது கர்த்தர் சாட்சியாகக் கூறியுள்ளார். ஆயிர வருட அரசாட்சியைப் பற்றியும், அக்காலத்தில் சுத்தமான சத்தியத்தைப் பற்றியும், அது வல்லமையுள்ள வற்றாத ஜீவநதியாக கண்ணாடி போலத் தெளிந்து பெருக்கெடுத்தோடுவதை சித்திர விளக்கமாக நம் கண்முன் நிறுத்தி இவ்வாறு கூறுகிறார். "ஆவியும் மணவாட்டியும் வா

என்கிறார்கள், கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக் கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கடவன்." - வெளி. 22:17

பரிசுத்தஆவியின் நிலைமையையும், வல்லமையையும் அதன் கிரியைகளையும் தேவனுடைய பிள்ளைகள் பல நூற்றாண்டுகள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தின்போது, அதாவது மனிதகுமாரனின் நாட்களில், இந்த மறைபொருள் தெளிவாகக் காரண காரியத்துடன் அனைவருக்கும் விளக்கப்படும். ஆதி சபையில் விளங்கியது போல இந்தக் கடைசி காலத்தில் உள்ள திருச்சபையாருக்கு விளங்கிக் கொள்ளப்படும். நாம் காணுகிறபடி திருத்துவக் கொள்கையானது இரண்டாம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக அதிகரித்து நான்காம் நூற்றாண்டில் உச்சக்கட்டத்தை அடைந்து, இன்று வரை பெரிய குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அது அநேக கிறிஸ்தவ மனங்களில் இது குறித்த உண்மைச் சத்தியத்தை இருட்டடிப்புச் செய்து, நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கவிழ்த்துப் போட்டது.

நாம் இதுவரை பார்த்தபடி, வேத வாக்கியங்கள் தெளிவாக பிதாவும் குமாரனும் நோக்கத்திலும் செயலிலும் முழுவதுமாக இசைந்திருப்பதாக காண்பிக்கின்றன. இதைப்போலவே, பரிசுத்த ஆவியைக் குறித்து வேதம் போதிப்பது மிகவும் இசைவாக இருக்கிறது. அதாவது பரிசுத்த ஆவி ஒரு கடவுள் அல்ல என்றும், அது பிதாவும் குமாரனும் பயன்படுத்துகிற ஆவி, பலம், வல்லமை என்றும், இதனிமித்தமே பிதாவும் குமாரனும் எல்லாவற்றிலும் ஒருமைப்பட்டு இருக்கிறார்கள் என்றும் வேதம் கூறுகிறது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் இந்த ஒருமைப்பாடு எப்படி திருத்துவ உபதேசக்காரர்களால் போதிக்கப்படுகிறது பாருங்கள். பெயர் சபையாருடைய ஞான உபதேச குறிப்புப் புத்தகங்களில், 5-ம், 6-ம் பிரிவில் ஒரே கடவுள், மூன்று நபர்களாக இருக்கிறார்கள் என்றும், அவர்கள் முறையே, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்றும், "இம்மூன்று கடவுள்களும் ஒருவரே, எப்படியெனில் இம்மூவரும் சம வல்லமையுடையவர், சம மகிமையுள்ளவர்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இருண்ட காலத்திற்கு பொருத்தமாகக்

காணப்பட்ட தப்பறையான கொள்கையாகும். அந்த இருள் காலத்தில் அறியப்படாத புரியாத புதிராய் இருப்பவற்றையெல்லாம் தொழுதனர். இந்தக் கொள்கையின்படி எது முற்றிலும் புரியாத புதிராய் இருக்கிறதோ அதை வழிபடத் தலைப்பட்டனர். அவைகள் எல்லாமே காரண காரியங்களுக்கு புறம்பாக இருப்பதோடல்லாமல், வேதாகமக் கருத்துக்கு ஒவ்வாமல் இருக்கின்றன. மூன்று பொருள்கள் எப்படி ஒரே ஒரு பொருளாக இருக்க முடியும்? அதைப் போலவே மூன்று நபர்கள் எப்படி ஒரே நபராக ஆக முடியும்? ஒரே ஆளாக இருக்கும்போது எப்படி சமமாக இருக்கமுடியும்? எனவே கூர்மையான அறிவுள்ளவர்கள் எவரும் கடவுள் ஒருவராகவே இருக்கிறார், மூவராக இருக்க முடியாது என்று எளிதில் ஏற்றுக் கொள்வார்கள். ஆகையால் மூன்று நபர்கள் ஒரே நபராக இருக்க முடியாது. அதுபோல ஒரு நபர் மூன்று பேராக இருக்க முடியாது. ஒருவகையில் பார்க்கும்போது நோக்கத்தில், திட்டம், சித்தம், கூட்டுறவு செயல்பாடு ஆகியவற்றில் ஒரு மனப்பட்டு இருக்க முடியும். இப்படிப்பட்ட திருத்துவ தப்பறைகள் சிறுவயது முதலே மிகுந்த வயதான, நரைத்த தாடியுடைய பாதிரிமார்களால் வேதாகம வகுப்புகளில் வற்புறுத்தி திணிக்கப்பட்டன. ஆனால் யாரும் ஒரு கணம் கூட சிந்தித்துப் பார்க்கவில்லை. மாபெரும் எதிராளியான சாத்தான் கர்த்தருடைய பிள்ளைகள் பலரை தப்பறையான, விபரீதமான, சத்தியத்திற்கு விரோதமான இந்தக் கருத்தையும் அவர்கள் நம்ப வேண்டும் என்பதற்காக அதை தேவ இரகசியம் என்று சொல்லி, அவன் கொள்கையில் எப்போதுமே வெற்றி பெற்று வந்தான். இப்படியாக தேவனுடைய வசனங்கள் ஒவ்வொன்றையும் பொருளற்றதாக, பயனற்றதாகச் செய்துவிட்டான். சாத்தானை விசுவாசிக்கிற எவருக்கும் இது தேவ இரகசியமாகவே இருக்கும். “நான் அறியப்பட்டபடியே அறிந்து கொள்ளுவேன்” என்ற காலம் வரையில் (மகிமையடையும் நாள் வரை) அறிந்து கொள்ள மாட்டார்கள்.

இதுவரை வாசித்த அத்தியாயங்களைக் கூர்ந்து கவனித்த வாசகர்கள், சர்வ வல்லமையுள்ள ஒரே தேவன் - யேகோவா என்று அறிந்து கொள்ள ஏராளமான வேத ஆதாரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதை அறிவார்கள். அதோடுகூட தனது ஒரே பேரான

குமாரனை உன்னதத்திற்கும், தன்னுடைய தெய்வீக சுபாவத்திற்கும், தன்னுடைய வல்லமையின் சிங்காசனத்திற்கும் உயர்த்தினார். இதற்கு அடுத்தபடியான வரிசையில் வருகிறவர்கள் யாரெனில், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகும் சகோதரர்களாக மகிமையடைந்த திருச்சபையாராக, மணவாட்டியாக, ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாக வருணிக்கப்படுகிறவர்களே. தற்காலத்தில் அவருடைய பாடுகளுக்கு பங்குள்ளவர்களானதால் அவர்களே அக்காலத்தில் அவருடைய ஆளுகையிலும், ஆசீர்வாதத்திலும் பங்குபெறும் உடன் சுதந்திரவாளிகளாகின்றனர். மேற்சொன்ன செய்திகள் யாவற்றிற்கும் திரளான வேத ஆதாரங்கள் உண்டு. இந்த சத்தியத்திற்கு எதிராக, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தோற்றமளிக்கக் கூடியதாகவோ, எந்த ஒரு ஆதாரமும் இல்லை. அப்படியானால் பரிசுத்தஆவி யார்? அதை எப்படி என்னவென்று விசுவாசிப்பது என்ற கேள்வி எழுகிறது.

இந்த வினாவுக்கான விடையை இதற்கு சம்பந்தப்பட்ட அநேக காரியங்களோடு தீவிரமாக ஆழமாக பரிசீலிப்போம். நமக்கு எந்த ஐயத்தையும் தீர்க்கக்கூடிய தேவனுடைய சாட்சியும் சட்டமுமாகிய வேதவாக்கியங்களை ஆராய்வோம். மனித நீதியை தேடாதிருப்போமாக. நல்லவர்களாக வாழ்ந்து மரித்தவர்கள், நல்லவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஆகியோரின் பரிசுத்த ஆவியைப் பற்றிய ஐயத்தோடு கூடிய கருத்தையும் வேறே எந்தக் கருத்தையும், நமது சொந்தக் கருத்தையும் நாம் ஏற்றுக் கொள்ளாமல், வேதம் என்ன கூறுகிறது என்ற கருத்தையே சிந்திப்போமாக. அவ்வாறு நாம் ஆராயும்போது அப். பவு-ன் புத்திமதிகளைக் கூர்ந்து கவனிப்போம். “தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாகவும்...” (II தீமோத்.3:17) இந்த வசனங்கள் இதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளன. பரிசுத்தஆவியைக் குறித்து எந்தெந்த இடங்களில் எவ்விதமாக வேத வசனங்கள் குறிப்பிட்டிருந்தாலும், அவற்றின் சம்பந்தத்தை ஒருங்கிணைத்து, கர்த்தரிலும், கர்த்தருடைய வார்த்தையிலும் முழுமையாக விசுவாசம் வைத்து சிந்திப்போமாக. இப்படி ஆராயும்போது சத்தியமே நிலை நாட்டப்படும். இவ்வாறு ஜெபசிந்தனையோடும், ஜாக்கிரதையோடும் செய்கின்ற

ஆராய்ச்சிக்குத் தக்க பலன் பெறுவோம். தட்டுகின்ற எவருக்கும் அறிவின் கதவு திறக்கப்படும். தேடுகிறவர்களுக்கு தேவ ஆவியின் ஞானம் வெளிப்படுத்தப்படும். - ஏசா. 8:20; மத். 7:7-8

பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்த ஆவியைக் குறித்து பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவை ஒவ்வொன்றையும் இடம் பொருள் ஏவலுடன் பொருத்தி ஒவ்வொரு வசனமும் காட்டுகிற வெளிச்சத்தில் வெளிச்சம் காணும்போது தெளிவான விளக்கம் பெறலாம். வேதாகமத்தில் பரிசுத்த ஆவியை பல்வேறு வகையாக குறிப்பிட்டுள்ளதைக் கவனிப்போமாக. "தேவனுடைய ஆவி," "கிறிஸ்துவின் ஆவி," "பரிசுத்தப்படுத்துகிற ஆவி," "சத்திய ஆவி," "புத்தியைத் தெளிவிக்கிற ஆவி," "விடுதலையின் ஆவி," "பிதாவின் ஆவி," "வாக்குத் தத்தத்தின் பரிசுத்த ஆவி," "எளிமையும் தாழ்மையும் உள்ள ஆவி," "புரிந்து கொள்ளும் ஆவி," "ஞான ஆவி," "மகிமையின் ஆவி," "ஆலோசனையின் ஆவி," "கிருபையின் ஆவி," "புத்திர சுவீகாரத்தின் ஆவி," "தீர்க்க தரிசன ஆவி."

இந்த சிறப்புப் பெயர்கள் பன்முறை உபயோகப் படுத்தப்பட்டிருந்தாலும், ஒருமுறை ஒருமாதிரி சொல்லப்பட்ட ஆவி வேறுபல சிறப்புப் பெயர்களாக மாறி மாறி சொல்லப்பட்டிருந்தாலும், அவைகள் அனைத்தும் ஒரே பரிசுத்தஆவியின் வல்லமையைக் குறிப்பதற்காகவே சொல்லப் பட்டவை என்பதை எளிதில் கண்டு கொள்ளலாம். பொதுவாக பல இடங்களில் "பரிசுத்த" என்ற அடைமொழி சேர்த்தே சொல்லப் பட்டிருக்கிறது. உதாரணமாக "பரிசுத்த தேவ ஆவி," "வாக்குத்தத்தத்தின் பரிசுத்த ஆவி" போன்றவைகளே. இவைகளில் நாம் புரிந்து கொள்ள ஆராய்ச்சி தேவை, அப்போது இந்த வேற்றுமையான அடைமொழிகள் பட்டங்களல்ல, மாறாக ஒரே கருத்தை வலியுறுத்த சொல்லப்பட்ட வித்தியாசமான சிறப்புப் பெயர்களே என்பதை புரிந்து கொள்ளலாம். ஆனால் எப்படிப் பார்ப்பினும் இந்த அடைமொழிகள் எந்த ஒரு மூன்றாவது கடவுகளுக்கும் பொருந்தாது. இவையனைத்தும் பிதாவாகிய ஒரே தேவனுடைய வல்லமையை, அவருடைய ஆவியை, அவருடைய குணநலன்களைப் பற்றி வெவ்வேறு வார்த்தைகளால் வடிவமைக்கப் பட்டவை. அதேபோல் நமது கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவினுடைய ஆவி, வல்லமை, குணநலன்கள் பற்றிய வெவ்வேறு வார்த்தைகளாலும் வடிவமைக்கப்பட்டவை. ஏனெனில் அவர் பிதாவோடு ஒருமனப்பட்டவராயிருக்கிறார். அதுபோல அவருடைய தூதர்கள், பரிசுத்தவான்கள், யார் யார் அவருடன் ஒருமனப் பட்டிருக்கிறார்களோ, அவர்களையும் குறிக்க இவ்வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு எதிரிடையான பொருளிலும் வேறு வகையான ஆவிகைளப் பற்றி பல்வேறு இடங்களில் கூறப்பட்டுள்ளதைக் கவனிப்போமாக: "பயத்தின் ஆவி," "அடிமைத்தனத்தின் ஆவி," "உலகத்தின் ஆவி," "தப்பறையான ஆவி," "வஞ்சக ஆவி," "அந்தி கிறிஸ்துவின் ஆவி," "சோம்பலின் ஆவி". சாத்தானின் ஆவியைக் குறித்து பல்வேறு வகையான அடைமொழிகளிருப்பதினாலே எவரும் பல்வேறு சாத்தான்கள் இருப்பதாக சொல்வதில்லை. இவைகளெல்லாம் இயல்பாகவும், சரியாகவும் புரிந்து கொள்ளக்கூடிய சாத்தானின் இயல்பு, வல்லமை, குணம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. இவைகளெல்லாவற்றிலும் ஒட்டுமொத்தமாக, சாத்தானின் குணங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி உருவான பொல்லாத ஆவி என்றும், பாவத்தோடும் சாத்தானோடும் இசைவாக இருப்பவர்கள் எல்லாரிடத்திலும் காணப்படுகின்ற தீமையான ஆவி - தீமையை வெளிப்படுத்துகிற சாத்தானின் ஆவியே ஆகும் என்றும் புரிந்து கொள்ளலாம். இவைகளையெல்லாம் வாசிக்கிற எவரும் இதை ஒரு ஆள் தத்துவமாகக் கருதுவதில்லை. பல்வேறு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "ஆவி" என்ற வார்த்தை பலவித ஆவியின் ஜீவிகளைக் குறிப்பதாகவோ, அல்லது இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து வேறொரு கடவுளைக் குறிப்பதாகவோ நினைக்கக்கூடாது. இவைகள் ஆவியின் குணநலன்களையும், யேகோவா தேவனின் சிறப்பியல்புகளையும் செயல்பாடுகளையும் குறிப்பிடுவதற்காகவும் கூறப்பட்டுள்ளது. எந்தளவு தேவ ஆவியைப் பெற்றிருக்கிறார்களோ அந்தளவு தேவனுடைய குணநலன்களைப் பெறுவதோடு, தேவ சித்தத்தின்படி ஒருமனப்பட்டு தேவ குணமுள்ளவர் களாயிருப்பார்கள்.

இப்போது பெரும்பாலும் பரவியிருக்கிற பரிசுத்த ஆவியைப்

*பற்றிய தப்பறையான கருத்துக்கள் வேதத்திற்கு சற்றும் ஒவ்வாத கருத்துக்கள். மனிதனுடைய ஆவியைப் பற்றியும், பின்வரும் அத்தியாயத்தில் காண்போம். தேவ ஆவி, மனித ஆவி என்ற சொற்றொடர்களில் இந்தத் தவறான கருத்து பிரபலமடைய தவறான மொழிபெயர்ப்பும் காரணமாயிருக்கிறது. பொதுவான மொழிபெயர்ப்பில் "நியுமா"* (pneuma) *என்ற சொல் வெறும் காற்று அல்லது ஆவி என்பதற்குப் பதிலாக தொன்னூற்று இரண்டு முறை (92) "பரிசுத்த ஆவி" என்றே தவறாக மொழி பெயர்த் துள்ளனர். மேலும் ஆவி என்பதற்குக்குகூட "நபர்" என்று பொருள்படும்படியாக எடுத்தாண்டுள்ளனர். திருத்திய வேதாகமப் பதிப்புகளில் இதில் 21 இடங்களில் "ஆவி" என்றே திருத்தியுள்ளனர். இதனால்தான் அமெரிக்க வேதாகம மறு பதிப்புக்குழு எஞ்சியுள்ள 71 இடங்களிலும் "ஆவியானவர்" என்ற சொல்லை தவிர்க்கும்படியும், ஆவி என அச்சிட வேண்டும் என்றும் பிரகடனப்படுத்தியது. எனினும் ஆங்கிலேய, அமெரிக்க வேதாகமச் சங்கத்தார் தீவிர திருத்துவக் கொள்ளையுள்ளவர்களாயிருந்தனர்.*

*பரிசுத்த ஆவியை இன்னொரு தேவன் என்று சொல்லுவதற்கோ பிதா, குமாரனிலிருந்து வேறுப்பட்ட இன்னொரு தேவன் என்று சொல்லுவதற்கோ அல்லது சிந்திப்பதற்கோ எந்த அடிப்படையான ஆதாரமும் இல்லை. இந்தக் கருத்துக்கு நேர் எதிரிடையாக, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பிதாவின் ஆவியினாலேயே வெளிப்படுத்தப்பட்ட தகவலில் இவ்வாறு சொல்கிறார்: "கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்." (லூக். 4:18) மேற்கோள் காட்டி சொல்லப்பட்ட இந்த தீர்க்கதரிசனத்தைத் திரும்பி நாம் எபிரேய மொழியில் பார்க்கிறதாவது: "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்." (ஏசா. 61:1) அதே நோக்கத்திற்காக, "ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல்*

*தங்கியிருப்பார்" (ஏசா. 11:2) என்றும் எழுதப்பட்டுள்ளது. இதைப்போன்றே கிறிஸ்துவின் சிந்தையைக் குறித்துச் சொல்லும் போது "கிறிஸ்துவின் ஆவி" என்று சொல்லப்பட்டுள்ளது. "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது." - பிலி . 2:5*

*நமது கர்த்தர் குறிப்பிடுகிற யோவான் 14:26ம் வசனத்தில் குறிப்படுவதை சிலர், இது ஒரு ஆள் தத்துவத்தையே குறிப்பிடுவதாகக் கூறுகின்றனர். ஏனெனில் பொதுவான மொழிபெயர்ப்பிலே அது கீழ்க்கண்டவாறு உள்ளது:*

*"என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." இந்த மொழிபெயர்ப்பில், "தேற்றரவாளன்" என்றோ, "அவர்" என்றோ சொல்லப்பட்டுள்ள பகுதி, கிரேக்க மூலத்தில் இல்லை. இதனை வேண்டுமென்றே திரித்துவ கொள்கைக் காரர்கள், தங்கள் கொள்கைக்கு ஆதாரமாக புகுத்தி இருக்கின்றனர் என்பது தெளிவு. டையகலாட் மொழி பெயர்ப்பில் இதே வரிகள் வருமாறு: "உங்களுக்கு உதவியாக என் பிதா பரிசுத்த ஆவியை என் நிமித்தம் உங்களிடம் அனுப்புவார்; அப்போது நான் சொன்ன வார்த்தைகளையெல்லாம் உங்களுக்கு அந்த பரிசுத்த ஆவியின் மூலம் நினைவு படுத்தப்படும்."*

*இதேபோல பரிசுத்த ஆவி ஆள் தத்துவத்தில் சொல்லப்படுவதற்கு இன்னொரு ஆதார வசனம்:*

*"உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும், அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டது;அவர் உங்களுடனே வாசம் பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்." (யோவா. 14:17) இங்கே சத்திய ஆவி என்பது, வஞ்சக ஆவிக்கு எதிரிடையாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற எந்த இடத்திலும், எந்த ஒரு நபரையும் குறிப்பதாக இல்லை. அதற்கு நேர்மாறாக, சத்தியத்தின் பங்கு பணி பற்றியும், அது கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் செய்கின்ற கிரியை பற்றி மட்டுமே சொல்லப்*

பட்டுள்ளது.

இந்த வசனத்தின் டையகலாட் மொழி பெயர்ப்பு:

"சத்திய ஆவியை உலகம் பெற்றுக் கொள்ள முடியாது; ஏனெனில் உலகம் பரிசுத்த ஆவி என்னவென்றே அறியாமலும், புரியாமலும் இருக்கின்றது; ஆனால் நீங்கள் அதை அறிவீர்கள்; ஏனெனில் பரிசுத்த ஆவி உங்களில் இருப்பதால், நீங்கள் அந்த ஆவியின்படி நடத்தப்படுகிறீர்கள்."

திருத்துவக் காரர்கள் கூறும் இன்னொரு வசனம்:

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்-, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்." (யோவா. 16:13,14) இந்த வசனத்தில், "அவரை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூலப்பதத்தை பல்வேறு இடங்களிலும் "அதை" என்று தான் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே திருத்துவக்காரர்கள் 'அதை' என்றிருப்பதை எடுத்துவிட்டு, 'அவரை' என்று பொருத்தியது தெளிவாகிறது. அதுமட்டுமல்ல, இந்த கிரேக்க மூலச் சொல் "ஹீடாவ்" ("Heautou") ஆண்பாலாகவும், பெண்பாலாகவும், பலர் பாலாகவும், ஒன்றன்பாலாகவும், அஃறிணையாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, மேற்சொன்ன வசனத்தில் ஆண்பாலாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதே வார்த்தை பெண்பாலாக I கொரிந் 11:5 இல் "தன்தலையைக் கனவீனப்படுத்துகிறாள்" என்று எழுதப்பட்டுள்ளது. இதேபோல், வெளி. 2:20 இல் "தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள்..." என்றும், மேலும், I கொரி. 13:4,5இல் "அன்பு தன்னை புகழாது" என்று தமிழில் அஃறிணையாகவும், ஆங்கிலத்தில் பெண்பாலாகவும் சொல்லப்பட்டுள்ளது.

II கொரி. 11:31இல், ஆண்பாலோ, பெண்பாலோ அல்லாமல், பலர் பாலில் சொல்லப்பட்டுள்ளது. "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந் தீர்க்கப்படோம்." அதுபோலவே I கொரி

*16:15*இல், "தங்களை ஒப்புவித்திருக்கிறார்கள்" என்ற வரிகளில் ஆண்பாலாகவோ பெண்பாலாகவோ சொல்லப்படாமல், பொதுவாக சொல்லப்பட்டுள்ளது.

மேலும், லூக். *22:17*இல்:

"நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்" என்ற வரிகளில் உங்களுக்குள்ளே என்பது, ஆண்பாலோ பெண்பாலோ அல்ல என்பதை கவனிக்கவும்.

யோவா. *6:53*இல், "உங்களுக்குள்ளே ஜீவனில்லை" என்ற பகுதியிலும் சொல்லப்பட்டதை கவனிக்கவும். இன்னும் விளக்கமாக இந்த கிரேக்கச் சொல் ஆண்பாலாகவோ, பெண்பாலாகவோ வராமல், பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளதை கீழ்க்காணும் வசனங்கள் மூலம் காண்போம்:

"நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்." மத். *6:34*

"ஒரு ராஜ்யம் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால்..." - மாற்கு. *3:25*

"ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாக பிரிந்திருந்தால்..." மாற்கு. *3:26*

"கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாது" - யோவா. *15:4*

"ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்ல..." ரோம. *14:14*

"அவராலே சரீரம் முழுவதும்...... அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது." எபே *4:16*

"அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்." - யாக். *2:17*

"இதே போன்ற இன்னொரு கிரேக்கச் சொல்லான "எகினோஸ்" (ekinos) என்ற வார்த்தை, "அவர்" என்று இங்கே சொல்லப்பட்டுள்ளது. இதே வார்த்தை 'அவள்' என்றோ, 'அது' என்றோ, 'அதுவே,' 'இதுவே,' 'இவைகள்', 'அவைகள்' என்றோ

எப்படி வேண்டுமானாலும் மொழிபெயர்க்கலாம் என்பதை நாம் அறிய வேண்டும். அவர், அவரை என்று மொழிபெயர்த்திருப்பதைவிட, நமது வேதாகம பொதுவான மொழிபெயர்ப்பில், அநேக இடங்களில் பொதுப்பா-ல் அவை, இவை என்று சொல்லப்பட்டவை ஏராளம்... ஏராளம். இந்தப் பாடத்தில் ஐயப்படுகிற யாராயிருந்தாலும், அவர்கள் தங்கள் ஐயத்தைப் போக்கிக் கொள்ள, கிரேக்க - ஆங்கில அகராதிகளைப் பயன்படுத்தி, பகுத்துப் பார்த்து, தெளிவு பெறலாம். "எகினோஸ்" என்ற வார்த்தைக்கு, உதாரணமாக சில வசனங்களை கவனிப்போம்:

"அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் அந்த நாளிலே சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." - லூக். 10:12

"அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி...." யோவா. 20:15

"அதைக்குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்வேன்." 1 யோவா. 5:16

"அந்நாட்களில் ஒன்றில், அவர் தேவாலயத்திலே ஜனங்களுக்கு உபதேசித்து." -லூக். 20:1

"அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது." - யோவா. 5:9

"அந்நேரமே அந்த இளைஞன் சொஸ்தமானான்." - மத். 17:18

ஆண்பாலோ, பெண்பாலோ, உயர்திணையோ, அஃறிணையோ மாறிமாறி சொல்லப்படுவதினால், அது அந்த நபருக்கு அல்லது அந்தப் பொருளுக்கு எந்த முக்கியத்துவமும் தராது. அதனாலேதான் மொழிபெயர்ப்பிலும் அந்தத் திணை அல்லது பாலுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படவில்லை. உதாரணமாக, பிதாவாகிய தேவனை ஆண்பாலில் சொல்லப்பட்டதால், அவருடைய வல்லமை, செயல்பாடு, அவருடைய ஆவி, அவருடைய குண இயல்புகளைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம் ஆண்பா-லே சொல்ல வேண்டும் என்பது நியதி. சில பொருட்களில் பலமான பொருட்களை ஆண்பாலாகவும், பலவீனமான பொருட்களை பெண்பாலாகவும் எழுதுவது, பல

மொழிகளிலும் இருக்கின்ற ஒரு நியதி. இதே பாணியில் தான், சூரியனை ஆண்பாலாகவும், சந்தினை பெண்பாலாகவும் அகில உலகத்திலும், அகில மொழிகளிலும் சொல்லப்படுகிறது. பரிசுத்த ஆவி என்பது ஒரு ஆள்தத்துவ ரீதியிலே, எல்லா இடங்களிலும் பரப்பப்பட்டிருக்கிற தவறான கருத்து ஏற்படாதிருந்தால் நாம் இதை அவ்வளவாய் ஆராய வேண்டிய அவசியமிராது. (பரிசுத்த ஆவி ஆளல்ல; பிதாவாகிய தேவனின் வல்லமை மட்டுமல்ல, அவருடைய பலமான செயல்பாடுகளையும், அவருடைய குணத்தின் உணர்வுகளையும் உள்ளடக்கியதாகும்). எனவே பரிசுத்த ஆவியைக் குறிக்கிற இடங்களில் ஆண்பாலை உபயோகித்திருப்பது, எந்த விமர்சனத்திற்கும் உட்படுத்தத் தேவையில்லை. ஏனெனில் கடவுள் ஆண்பாலாக சித்தரிக்கப்பட்டிருக்கிறார். அவரே ஜீவனுக்கும் ஆசீர்வாதத்திற்கும், ஊற்றும் காரணமுமானவர். இப்படிச் சொல்வதினாலே, பரிசுத்த ஆவி பிதா, குமாரனைத் தவிர வேறொரு கடவுள் என்று, எண்ணுவதற்கிடமில்லை. எனவே பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடே; அதேபோல குமாரனின் பலம், வல்லமை ஆகியவற்றின் வெளிப்பாடே. இவைகள் ஒரே சித்தம், ஒரு நோக்கம் ஆகியவற்றைக் காண்பிப்பதற்காக ஆவி என்று உபயோகிக்கப்படுத்தப்பட்டதே யல்லாமல், ஆவி என்ற வேறொரு நபரைக் குறிப்பதற்காக அல்ல.

## 'ஆவி' என்ற சொல்லின் பொருள்

'ஆவி' என்பதற்கும், 'பரிசுத்த ஆவி' என்பதற்கும் என்னென்ன அர்த்தங்கள் உண்டு என்பதை, ஆழமாக சிந்தித்து அறிய வேண்டியது அவசியமாகிறது. ஆவி என்பதற்கு என்ன இலக்கணம்? அதனுடைய தெய்வீகத் தன்மைக்குள்ள குணநலன்கள், சிறப்பியல்புகள் என்ன? 'ஆவி' என்ற சொல்லின் சரியான விடை காண வேண்டுமானால், 'ஆவி' என்பதன் மிகச்சிறந்த பொருள் என்ன என்பதையும், வேறு என்னென்ன பொருள்களில் வேதாகமத்தில் எப்படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவது அவசியம்.

1. எபிரேய மொழியில் 'ருவாக்' என்ற வார்த்தைதான், பழைய ஏற்பாட்டில் மற்ற மொழிகளில், 'ஆவி' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனுடைய முதற்பொருள், அடிப்படை

ஆதார முக்கியத்தவம் வாய்ந்த பொருள் 'காற்று' என்பதாகும். புதிய ஏற்பாட்டில் 'ஆவி' என்ற வார்த்தைக்கு கிரேக்க மூலத்தில் 'நியூமா' என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு எபிரேயச் சொல் போலவே, இந்த கிரேக்க மொழியின் அடிப்படை பொருள் 'காற்று' என்பதாகும். இதற்கு சரியான அர்த்தம் தெரிந்துவிட்டது என்பதற்காக, முன்கூட்டியே வேறு தவறான கருத்தை (பரிசுத்த காற்று என்று) அனுமானித்து விடவேண்டாம். ஆனால் கருகலாகவும், மறைபொருளாகவும் இருக்கின்ற இந்த சொல்லின் ஆழத்தை, எல்லாப் பொருளிலும், கற்றவர் கல்லாதவர் அனைவரும் புரியும்வண்ணம் விளக்க முற்படுகிறோம். அதற்காகவே நாம் முதன் முதலில் இதன் அடிப்படை ஆதார அர்த்தத்தை முதலில் தெரிவிக்கின்றோம். இது எப்படி, ஏன், வேறு பொருளிலும் அர்த்தம் கொள்ளப்பட்டது என்பதையும் கருத்தாய் ஆராய்வோம்.

ருவாக், நியூமா என்ற இந்த எபிரேய, கிரேக்கச் சொல் காட்டுகின்ற காற்றின் குணம், காணமுடியாததாகவும் அதே நேரத்தில், மிகுந்த பலமுள்ளதாகவும், இருக்கிறது என்று முன்னதாகவே கண்டோம். பிறகு படிப்படியாக காணமுடியாத வல்லமையை, அது நல்லதோ அல்லது கெட்டதோ குறிப்பிட பயன்படுத்தப்பட்டது. தெய்வீக வல்லமை, யாராலும் காண முடியாதது. அந்த வல்லமை வெளிப்படுத்தப்படும் செயல்பாடுகள் மூலமே அறிய முடிவதால், கர்த்தருடைய வல்லமை, பலம் ஆகியவற்றை விளக்க, இந்தக் காணக்கூடாத காற்று என்ற சொல்லை ஆதாரமாகப் பயன்படுத்தினர். மனிதக் கண்களால் காணக்கூடாதவற்றை பொதுவாக அறிந்து கொள்ள இயற்கையாகவே இப்படிப்பட்ட சொல்லாட்சி அவசியமாகிறது. உதாரணமாக ஜீவ சுவாசம் யாரும் காண முடியாதது. மனிதன் இந்த ஜீவசுவாசத்தினாலே உயிர் வாழ்கிறான். ஆனாலும் அந்த சுவாசத்தைக் காண முடியாது. அதையேதான் 'ஆவி' என்றும் 'ஜீவ சுவாசம்' (பிராண வாயு) என்றும் பல்வேறு விதமாகக் கூறுகிறோம். இது உயிர், சுவாசம் என்பதோடும் கூட, சித்தம் அல்லது சிந்தனை என்ற பொருளிலும் சொல்லப்படும். இந்த சித்தம் அல்லது சிந்தனையும் கூட காணமுடியாதது. இதைச்

சொல்ல, 'ஆவியின் சிந்தனை' என்றோ "சிந்தனையின் ஆவி" என்றோ கூட சொல்வது அவசியமாயிற்று. ஜீவன் கூட காணப்படாதது மட்டுமல்ல, அது பலமுள்ளது, உயிரூட்டமானது என்பதைக் காண்பிப்பதற்காக முற்காலப் பெரியவர்கள் இதை 'ஆவி' என்றனர். இதை இன்னும் நன்கு விளங்கிக் கொள்ள, ருவாக் என்ற எபிரேய சொல், நியூமா என்ற கிரேக்கச் சொல், எத்தனை விதங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காண்பது நலமாக இருக்கும்.

பழைய ஏற்பாட்டின் எபிரேயச் சொல்லான ருவாக், கடுங்காற்று என்ற பொருளில் 4 முறையும், "மூச்சு" என்று 28 முறையும், மனம் அல்லது சித்தம் என்று 6 முறையும், வாசனை என்று 8 முறையும், காற்று, காற்றோட்டமான என 91 இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த வார்த்தையின் அர்த்தம் காணமுடியாத வல்லமை என்பதே வ-யுறுத்தப்படுகிறது. இப்படி பல்வேறு வகையாக உபயோகப் படுத்தப்பட்ட 'ருவாக்' என்ற சொல் இடம் பெற்றுள்ள வேத வசனங்களை கவனிப்போம்.

"உமது நாசியின் <u>சுவாசத்தினால்</u> (ஆங்கிலத்தில் இது blast என்றுள்ளது) ஜலம் குவிந்து நின்றது." - யாத். 15:8

"வானத்தின் கீழே ஜீவ <u>சுவாசமுள்ள</u> சகல மாம்ச ஜந்துக்களையும்..." - ஆதி. 6:17;7:15.

"மாம்சமான சகல மனுஷரின் <u>ஆவியும்</u> அவர் கையி-ருக்கிறது." - யோபு. 12:10

"ஜீவன்களுக்கெல்லாம் <u>சுவாசம்</u> ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல." - பிரசங். 3:19

"ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் <u>மன</u>நோவாயிருந்தார்கள்." - ஆதி.26:35

"சுகந்த வாசனையைக் கர்த்தர் <u>முகர்ந்தார்.</u>" - ஆதி. 8:21

"அவைகளுக்கு மூக்கிருந்தும் <u>முகராது.</u>" - சங்.115:6

"தேவன் பூமியின்மேல் <u>காற்றை</u> வீசப் பண்ணினார்." - ஆதி. 8:1

*"உம்முடைய காற்றை வீசப் பண்ணினீர்." - யாத். 15:10*

*"அவர் சொற்படி பெருங்காற்றே." - சங். 148:8*

*"காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறது போல் அசைந்தது." - ஏசாயா. 7:2*

புதிய ஏற்பாட்டில், கிரேக்கச் சொல்லாகிய *"நியூமா"* என்ற சொல் ஆவி என்றும் மற்றும் ஜீவன், ஆவிக்குரிய, காற்று என்றும் பல்வேறு விதமாகவும் பொருள் கொள்ளப்பட்டுள்ளதை கீழே காண்போம்:

*"மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்டி அதற்கு சத்துவங் கொடுக்கப்பட்டது." - வெளி. 13:15*

*"நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால்.........." - 1 கொரி. 14:12*

*"காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது." - யோவா. 3:8*

*இப்படி எந்த மொழி பெயர்ப்பாயினும், அவைகளை எழுதியவர்களெல்லாம் திருத்துவக் கொள்கைக்காரர்களே என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் அந்த மொழிப்பெயர்ப்பை எதிர்க்கிறதில்லை; அவைகள் ஒருவகையில் சரியே. நியூமா, ருவாக் என்ற இருவார்த்தைகளுமே, ஆள் தத்துவத்திலோ ஆள் தன்மையிலோ சொல்வதற்கு நியாயமில்லை. மாறாக அவைகள் காண முடியாத தேவ வல்லமை, செயல்பாடுகளைக் காணபிப்பதாக இருக்கின்றன.*

## "தேவன் ஆவியாயிருக்கிறார்"

*2. "தேவன் ஆவியாயிருக்கிறார்" என்பதன் உட்பொருள், அவர் காணக்கூடாதவராயும், வல்லமை பொருந்தினவராயும் இருக்கிறார் என்பதே. அதுபோலவே தேவதூதர்களையும் ஆவிகள் என்று கூறுகிறோம். இவர்களும் காணக்கூடாதவர்களாய் வல்லமை பொருந்தினவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட சில நேரங்களில், தேவ வெளிப்பாட்டினால் சிலருக்கு காட்சியளிக்க முடியும். நமது கர்த்தராகிய இயேசு, பூமியில் மனிதராக*

*வந்தபொழுது, அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக இருக்கவில்லை. ஆனால் அவர் மகிமையில் உயர்த்தப்பட்ட பிற்பாடு, இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:*

*"கர்த்தரே ஆவியானவர்." 2 கொரிந். 3:17*

*இப்போது கர்த்தராகிய அவர், காணக்கூடாதவரும், மிகுந்த வல்லமையுடையவருமாயிருக்கிறார். எழுதப்பட்டிருக்கிறபடியே, சுவிசேஷ யுகத்திலிருக்கும் திருச்சபையாராகிய மணவாட்டியும் கூட, தன் மணவாளனோடு சேரும்பொழுது, அவருடைய தெய்வீக சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறார்கள்.*

*"அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." - 1 யோவா. 3:2*

*திருச்சபையாரை ஆவிக்குரியவர்களாக வேதத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. திருச்சபையார் கர்த்தரோடு இசைந்திருக்கும்போது, அவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாய், புதிய சிருஷ்டியாய் இருப்பார்கள் என்று வேதம் சாட்சியிடுகிறது. ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், உயிர்த்தெழுந்து வரும்பொழுது ஆவியில் பிறந்தவர்களாகவே இருப்பார்கள். இங்கே பயன்படுத்தப்பட்ட ஆவி என்ற வார்த்தை ஆள்தத்துவத்தோடு தொடர்புடையதாக உணர்ந்து கொள்ளவேண்டும். அதாவது ஆவியின் ஜீவிகள். யோவா.3:6*

*3. ஆவி என்ற சொல், வேறொரு விதமாகவும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அது உருவாக்கும் வல்லமையையும், வளப்படுத்தும் வல்லமையையும் குறிக்கிறது.*

*"தேவனுடைய ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்." - ஆதி.1:2*

*இப்பகுதியின் ஃபெர்ரர் பென்டன் மொழிபெயர்ப்பு வருமாறு:*

*"தேவனுடைய சுவாசம், தண்ணீர்களை அலைக் கழித்துக் கொண்டிருந்தது."*

அதாவது தேவனுடைய வல்லமையானது, அவருடைய வல்லமையின் உந்துதிறன், தண்ணீர்களை பயனுள்ளதாக மாற்றியது. அல்லது தண்ணீர்களை பலன்தரும் உபயோகத்திற்கு பயன்படும் படி செய்தார். அதைப் போலவே,

“தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.” - 2 பேது. 1:21

தேவன் தாம் சொல்ல நினைக்கிற செய்திகளையெல்லாம் அவர்கள் மூலமாக சொல்லுவதற்கு அவர்களை ஆயத்தப்படுத்தி சொல்ல வைத்தார். இதுபோலவே, மோசேயின் காலத்தில், ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பை, தேவன் தாம் விரும்பிய வண்ணமே செய்வதற்கு ஆசரிப்புக் கூடாரத்தினை செய்ய, மோசேயைத் தெரிந்து கொண்டு, திறமையான வேலையாட்களுக்கு வேண்டிய ஞானம், திறமைகளைக் கொடுத்து, தாம் விரும்பிய வண்ணமாக செய்து முடித்தார். அவர்களுடைய இயல்பிலே எந்த மாற்றத்தினையும் கொண்டு வராமல், பணியில் மட்டும் தேர்ச்சி பெற்ற நிலைமைக்கு மாற்றினார். அதெப்படியெனில், ஆழங்களிலிருந்த ஜலங்கள் அவர் விரும்பிய மாற்றத்திற்கு உட்பட்ட போதிலும், தண்ணீரின் சுபாவத்தை மாற்றவில்லை. இதைப்பற்றி விளக்கமாக யாத்திராகமம் கூறுவதென்னவெனில்,

“கர்த்தர் .... பெசலெயேலை பெயர் சொல்- அழைத்து, அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் வேலை செய்யவும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கவும், மரத்தில் சித்திர வேலை செய்து சகல விநோதமான வேலைகளைச் செய்யவும், அவனுக்கு ஞானத்தையும், புத்தியையும், அறிவையும் அருளி, அவன் சகலவித வேலைகளையும் செய்யும்படி தேவ ஆவியினாலே அவனை நிரப்பினார். அவன் இருதயத்திலும்... அகோலியாபின் இருதயத்திலும், போதிக்கும் வரத்தையும் அருளினார்”... “அவனுக்கு வஸ்திரங்களை உண்டாக்கும் பொருட்டு, நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதயமுள்ளவர்கள்.”

“விநோதமான வேலைகளை அவன் யோசித்துச்

செய்கிறதற்கும், பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திர வேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும், புத்தியும், அறிவும் அவனுக்கு உண்டாக அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்." - *யாத். 35:30-35; 28:3; 31:3-5*

இவ்விதமாகவே, கர்த்தர் மோசேயையும், மூப்பர்களையும் தம்முடைய ஆவியினால், விசேஷ வல்லமையினால் நிரப்பி, சாமான்ய மனிதர்கள் செய்யக்கூடாத காரியங்களாகிய, நியாயந் தீர்த்தல், ஒழுங்கின்படி அவர்களை நடத்துதல் போன்ற செயல்களை அவர்களைக் கொண்டு செய்ய வைத்தார். (எண் 11:17-26) இதைப்போலவே இஸ்ரயேலின் ராஜாக்கள் அவர்கள் எம்மட்டும் கர்த்தரிடத்தில் விசுவாசம் உள்ளவர்களாயிருந்தார்களோ, அம்மட்டும் அவர்களை தம்முடைய ஆவியினால் நிரப்பி, அரிய செயல்களைச் செய்யும்படி அருளிச் செய்தார். உதாரணமாக, சவுல் இஸ்ரயேல் ராஜ்யத்தை நியாயம் விசாரிக்க அருளப்பட்டிருந்த ஆவியின் அதிகாரம், அவனை விட்டு நீங்கும்படியும், அதுவரை எவருக்குமே பிரபலமாயிராத தாவீதினிடத்தில் அந்த ஆவியைப் பொழிந்தருளவும் தேவன் சித்தமாய் இருந்தார். அதன் பிறகு அவன் வெகு பெயர் பெற்றவனானான். (1 சாமு 16:13,14) இதற்குப் பிறகு, சவுலிடத்திலிருந்த ஞானத்தின் ஆவி விலகிப் போனதோடல்லாமல், பொறாமையின் ஆவியும், எரிச்சலின் ஆவியும் அவனைச் சூழ்ந்து கொண்டு, நம்பிக்கையிழந்தவனாக, தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சித் தோல்வியைக் கண்டு மனம் உடைந்தவனானான். அதற்குப் பிறகு, அவன் அந்த சிங்காசனத்தில் வீற்றிருந்த கர்த்தரின் பிரதிநிதி என்ற நிலைமை முற்றிலும் மாறிப்போயிற்று. இஸ்ரயேலின் ஆட்சி சவுலிடமிருந்து பிடுங்கப்பட்ட பிறகு, தேவனிடமிருந்து அவன் பெற்றுக் கொண்ட எல்லா அதிகாரங்களும் போனபடியினாலே, மிகுந்த விரக்தியும் வேதனையும் அடைந்தான்.

## "பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை"

கிறிஸ்து தம்முடைய முதலாம் வருகையில் வருவதற்கு

முன்பதாக, கர்த்தருடைய ஆவி அவ்வளவு வெளியரங்கமாக அருளப்படவில்லை. இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றது முதல், சிலுவை மரணம் வரையில் அவருக்கு அந்த பரிசுத்த ஆவியின் வல்லமை வெளியரங்கமாக அருளப்பட்டிருந்தது. அதேபோல பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தற்போது வரை திருச்சபையாருக்கு பரிசுத்த ஆவியின் வல்லமை பொழியப்பட்டு வருகிறது. இந்த பரிசுத்த ஆவியின் வல்லமை சுவிசேஷ யுக முடிவு வரைக்கும், திருச்சபையார் முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகி உயிர்த்தெழும் வரையில், இந்த வல்லமை வெளிப்படையாய் ஈந்து அளிக்கப்படுகிறது. இதற்கு ஆதாரமாக,

"தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப் படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" (யோவா. 7:39) என குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியின் செயல்பாடுகள், முன்பு இருந்ததைவிட, சுவிசேஷ யுகத்தில் மிக மிக வித்தியாசமாகவும், வெளியரங்கமாகவும் இருக்கிறது. அந்த ஆவியின் வல்லமையைப் பொழிந்ததின் வேறுபாடு விளங்கத் தக்கதாக, 'புத்திர சுவீகாரத்தின் ஆவி,' 'புத்திர சுதந்திர ஆவி,' 'பரிசுத்தத்தின் ஆவி,' 'சத்திய ஆவி' என்ற சொற்றொடர்கள் நமக்கு வகைப்படுத்திக் காண்பிக்கின்றன. ஆதாமின் வீழ்ச்சிக்குப் பிறகு, கிறிஸ்துவின் முதலாம் வருகை வரையில் ஆதாமின் சந்ததியில் எவரும் தேவபுத்திரர் என்ற பாக்கியத்தைப் பெறவில்லை. விசுவாசத்திற்குத் தந்தை என்று போற்றப்படுகின்ற ஆபிரகாமுக்குக் கூட தேவபுத்திரர் என்ற பட்டத்தைக் கொடுக்காமல், "தேவனுடைய சிநேகிதர்" என்று மட்டுமே கௌரவிக்கப்பட்டார். ஆனால் அப். யோவான்: கிறிஸ்துவின் முதலாம் வருகையில்தான், (தேவ பிரதிநிதியாயிருந்த லோகோஸ் மனிதனாய் வந்தபோது)

"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை எற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்..." என்றும், இவர்கள் தேவனாலே

*பிறந்தவர்கள் என்றும் கூறுகின்றார். இவர்களே தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களென்றும், ஆவியில் ஜெநிப்பிக்கப் பட்டவர்கள் என்றும் கூறுகிறார். "ஆவியினால் பிறந்தது ஆவியாயிருக்கும்." - யோவா. 1:12, 13;3:3-8.*

*ஜெநிப்பித்தல் என்ற இந்த அர்த்தத்தில் பரிசுத்த ஆவி தேவ வீட்டாரின் பிள்ளைகளுக்கு மட்டுமே உத்திரவாதம் கொடுக்கிறது. தேவனுக்கு பிரியமான குமாரனாகிய கிறிஸ்து மாம்சத்தில் வந்து, அகில உலகினையும் மீட்கும் வரையில் இந்த தேவ வீட்டாரின் பிள்ளைகள் என்பது அறியப்படாமலிருந்தது. அந்த ஈடுபலியை ஏற்று, விசுவாசிக்கின்ற யாவருக்கும் சுவிகார புத்திரராகும் வாய்ப்பை அருளிச் செய்தார். (கலாத். 4:5; எபேசி1:6) கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்த இஸ்ரயேல் புத்திரர் மாத்திரமே தேவபுத்திரர் என்று கருதப்பட்டார்கள். ஆனால் இப்பொழுதோ, இந்த மெய் விசுவாசத்தினை ஏற்றுக் கொண்ட எவரும், தேவ புத்திரராகும் சிலாக்கியம் பெற்றதாக அப்போஸ்தலர் கூறுகின்றார். இஸ்ரயேலில், தேவன் முன்குறித்த நபர்கள் போதுமானதாக இல்லாததினால், புறஜாதியினின்றும் தனக்கென முன் குறிக்கப்பட்டவர்களை தற்போது சேர்த்துக் கொள்கிறார். இஸ்ரயேலர்களில் மீந்திருக்கிற தமக்குரியவர்களை சேர்த்துக் கொண்ட பிறகு, "தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை தெரிந்து கொண்டார்" என்பதை தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னறிவித்திருந்தார். அவர்கள் தேவனுக்கு புத்திரராகவும், இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகவும் இருப்பார்கள் என்பது தீர்க்கதரிசிகள் மூலமாக முன்னுரைக்கப்பட்டிருந்தும், முன் அறிவிக்கப்பட்டும் இருந்தது. - ரோம 9:4; 29:33; அப். 15:14*

*தேவ ஆவியின் வல்லமை சுவிசேஷ யுகத்திற்கு முன்னால் வெளிப்பட்டதற்கும், சுவிசேஷ யுகத்தில் வெளிப்படுவதற்கும் உள்ள வேற்றுமை என்ன? இந்த வினாவிற்கு, பேதுரு அப்போஸ்தலரின் வசனமே சரியான விடையைத் தருகிறது. முற்பிதாக்களும், தீர்க்கதரிசிகளும் தேவனால் கௌரவிக்கப்பட்டும், தேவ ஆவியினால் நடத்தப்பட்டும் வந்தார்கள். எனினும், அந்த பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, தங்களுக்கு புரியாததை பேசவும் எழுதவும் செய்தனர். ஆனால் அதே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவ*

வீட்டாரின் புத்திரராகிய நமக்கு குறித்த காலத்தில் அவர்களுக்கு புரியாத தீர்க்கசரிசனத்தை வெளிப்படுத்தினார். முற்காலங்களில் பரிசுத்த ஆவியின் வல்லமை அவர்களை இயக்கிற்று. ஆனால் அந்த இயக்கத்தின் காரண காரியம் அவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் நமக்கோ பரிசுத்த ஆவியின் வல்லமை விளக்கமாகவும், வெளியரங்கமாயும், காரண காரியங்களைப் புரிந்து கொள்ளும் படியாக இருக்கின்றது. காலா காலங்களில் தீர்க்கதரிசிகள் மூலமாகவும், அப்போஸ்தலர்கள் மூலமாகவும் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமை, இக்காலத்தில் உள்ள நமக்கு தெளிவான விளக்க உரையாக அமைந்திருக்கிறது. தேவனுடைய வீட்டாராகிய தேவ புத்திரருக்கு, பரிசுத்த ஆவியின் வல்லமையினால், தெய்வீக நன்மை, ஞானத்தின் நீள அகல உயர கன பரிமாணங்கள் முற்றிலும் விளங்கிக் கொள்ளும் படியான வல்லமை பகிர்ந்தளிக்கப்படுவதால், தெய்வீகத் திட்டத்தையும், தெய்வீக வெளிப்பாட்டையும் உணர்ந்து அதற்கேற்றாற்போல் செயல்படச் செய்கிறது. பேதுரு அப்போஸ்தலன் எழுதிய வசனத்தின் மூலமாக, தேவன் மனிதர்களுக்கு உணர்த்த வேண்டியதை, சில நேரங்களில் தேவ தூதர்கள் வாயிலாக, தமது கருத்தை எடுத்துக் கூறி வந்திருக்கிறார். ஆனால் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள் கூட தாங்கள் யாருக்காக இதை எழுதினோம், இது எப்படி நடக்கும் என்றறியாதிருந்தது போலவே, தேவதூதர்களுக்கும் நடைபெறப் போகிற அந்த நிகழ்ச்சி, அதன் காலம் முதலியவைகளை அறிந்து கொள்ள தேவன் அனுமதிக்கவில்லை என்பதை அறிகிறோம். நம்முடைய நன்மைக்கான தேவ திட்டத்தை தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் மூலமாய் அவற்றை எழுதச் செய்தார்.

"உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்து தீர்க்க தரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத்

*தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப் பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்."*

*"தீர்க்கதரிசனமானது, ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." - 1 பேது 1:10-12; 2 பேது 1:21*

## ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவியின் வரங்கள்

*"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு. ஆவியின் வல்லமை ஒன்றே; ஊழியங்களிலும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு; எல்லோருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம், அந்த ஒரே ஆவியானவர் (பிதாவின் வல்லமையினாலே) நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்." - 1 கொரி. 12:4-11*

இங்கே திருச்சபைக்கு பரிசுத்த ஆவியினால் அளிக்கப்படும் வரங்கள் என்னென்ன என்று விவரிக்கப்படுகிறது. இந்த பரிசுத்த ஆவியினாலே ஆதித் திருச்சபைக்கு அளிக்கப்பட்ட வரங்களைப் பற்றியும், பரிசுத்த ஆவியினைப் பற்றியும் நாம் நன்கு அடையாளம் தெரிந்திருக்க வேண்டும். திருச்சபையின் பல்வேறு பிரிவினரிடையே

*பல்வேறு ஆவியின் கிரியை காண்பிக்கப்பட்டதினால், ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான வரங்கள் இருந்ததினால், ஒவ்வொரு வரத்திற்கும் தனித்தனியாக ஒரு ஆவி இருக்கும் என்று அவர்கள் எண்ணவில்லை. ஆனால் ஒவ்வொரு வரங்களையுடைய எல்லாரும், ஒரே கர்த்தரின் பரிசுத்த வல்லமையினால், ஒரே கர்த்தரால் இயக்கப்பட்டார்கள் என்ற உண்மையைப் புரிந்திருந்தனர். யேகோவா தேவனுக்குப் பிரதிநிதியாகிய ஒரே கர்த்தர், தேவைக்கேற்ப பல்வேறு இடங்களில், பல்வேறு வல்லமையை, பல்வேறு நபர்களுக்கு பகிர்ந்தளிக்கிறார். தமது பரிசுத்த திருச்சபையிலும், அவர் தம்முடைய பரிபாலன முறையிலும் பல்வேறு வகைப்பட்ட தேவ ஆவியின் வல்லமையை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொழிந்தருளுகிறார். இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஆவியின் வரங்கள் பொதுவாக ஆதித்திருச் சபைக்கு வழங்கப்பட்டது; ஆயினும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, அப்போஸ்தலர் சொல்லியபடி தீர்க்கதரிசனங்களானாலும், அந்நிய பாஷைகளானாலும், அறிவானாலும் ஒழிந்துபோகும். (1 கொரி. 13:8) இங்கே சொல்லப்பட்ட இந்த வரங்களெல்லாம் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட சுவிசேஷ யுகத்தின் ஆதித்திருச்சபைக்கு மிகவும் அவசியமாயிருந்தது. ஆனால் சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேதாகமம் நிறைவடைந்த பிறகு இந்த வரங்களுக்கு அவசியமில்லாமல் போயிற்று. வேதாகமம் இதற்குப் போதுமான சாட்சி பகர்கின்றது என அப்போஸ்தலராகிய பவுல் கூறுகிறார். "...தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்க... வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது." - 2 தீமோத். 3:16-17*

*இந்த எல்லா வரங்களும் முற்றும்முடிய ஒழிந்து போகவில்லை என்பது உண்மையே. இப்படி இந்த வரங்களெல்லாம் ஒழிந்து போயிற்று என்றால், இதே வரங்களை 18 நூற்றாண்டுகளாக பொழிந்திருந்த கர்த்தர், இப்பொழுது அவைகளை அளித்திட பலமில்லாமல் போய்விட்டார் என்று அர்த்தமா? இல்லை, அல்லது, கர்த்தருடைய ஜனங்கள் அந்த வரங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியில்லாமற் போய்விட்டார்கள் என்று அர்த்தமா? அதுவும்*

*இல்லை. இதற்கெல்லாம் மாறாக, அவைகள் பலவிதமான வெளிப்பாடுகளை குறிக்கின்றன. கர்த்தர் அவைகளை ஏற்றுக்கொண்டதற்கு எந்தவித ரூபகாரமும் இனி தேவையில்லை என்பதைக் குறிக்கின்றன. தற்காலத்தில் அற்புதம் செய்கின்ற அந்த வரங்கள் கொடுக்கப்படுகிறதில்லையாயினும், தேவனுடைய பரிசுத்த ஆவி, நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்து கொண்ட அவர்களுடைய இயல்பான அடிப்படைத் தகுதிகளுக்கேற்றவாறும், அவர்களுடைய வைராக்கியத்தின் சரிவிகித அளவின்படியும் ஒவ்வொருவருக்கும் வல்லமை பகிர்ந்தளிக்கப்படுகிறது. எனவே தான், அப்போஸ்தலர் பின்வரும் மற்ற நிரூபங்களிலும், இந்த ஆவியின் வரங்களையும் வல்லமைகளையும், திறமைகளையும் கர்த்தருக்கும் அவருடைய ஜனங்களுக்கும், அவரது சத்தியத்திற்கும் ஊழியம் செய்ய வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று திருச்சபையை தூண்டுதல் செய்து எழுதுகிறார்.*

*அற்புதம் செய்ய கொடுக்கப்படுகிற வரத்தை விட, மற்ற நற்கிரியைகள், சேவைகள் புரிவதற்குரிய திறமைகளை வளர்த்துக் கொள்வதே மிகச்சிறந்த வரமாகக் கருத வேண்டும். எனவே அப்.பவுல் கூறுகிறதாவது:*

*"இன்னும் அதிகமேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்." I கொரிந்.12:31*

*"அன்பை நாடுங்கள்; ஞான வரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்க தரிசன வரத்தை விரும்புங்கள்." - 1 கொரி.14:1*

*அந்நிய பாஷை பேசுவது ஒரு அடையாளத்திற்காக கொடுக்கப்பட்டதே அல்லாமல் மற்றபடி அல்ல. அவிசுவாசிகள் இந்த அடையாளங்களைக் கண்டு, திருச்சபையின் வழிநடத்துதலுக்கும், திருச்சபைக்கும் வந்து சேர்வார்கள் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். (I கொரி. 14:22) கொரிந்து சபையில் உள்ள அநேகர், அற்புத அடையாளங்களை மிக உயர்வாக எண்ணியிருந்ததினால் அப்போஸ்தலராகிய பவுல், அந்நிய பாஷை பேசுவதை விட, தீர்க்க தரிசனம் சொல்வதே மிகப்பெரிய ஆவியின் வரம் என்று விளக்கிச் சொன்னார். அற்புத அடையாளங்கள் எல்லாம் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல், அவிசுவாசிகளுக்கே அது*

அடையாளமாக இருக்கிறது. இந்த வரமும் இதற்கொத்த வரங்களும், சபை ஸ்தாபிக்கப்பட்டு உலகத்தில் அங்கீகாரம் பெற்றபிறகு சீக்கிரத்தில் மறைந்துவிட்டது.

இதற்கு மாறாக, ஆவியின் கனிகளுக்கு ஆயத்தப்படுத்தும் அருங்குணங்களைப் பயிற்சி செய்து அபிவிருத்தி செய்தலே தூண்டப்பட வேண்டும். இதன் மூலமாக தேவனுக்குரிய தெய்வீக அன்பின் கனிகளை கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதன் மூலமாக சகோதரர்களுக்குள்ளே பரஸ்பர அன்பும், உலகத்தாரை நேசிக்கும் குணமும் அபிவிருத்தியாகும். இந்த ஆவியின் கனிகளுக்கு ஆயத்தப்படுத்துகின்ற அருங்குணங்களாக அப்.பவுல், "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" (கலாத்.5:22,23) என்று விளக்குகிறார். இதில் 'கனி' என்பதற்கு இரண்டு வகையான அர்த்தம் உண்டு. இது ஒரு வரம். இது படிப்படியாக வளர்ந்து, அபிவிருத்தியடைந்து, கடின உழைப்பின் பலனால் மட்டுமே இத்தகைய முதிர்ந்த நிலையை அடைய முடியும். அதுபோலவே ஆவியின் கனிகளும் படிப்படியாக வளர்ந்து பயன்தரக் கூடியவை.

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது." - யாக். 1:17

இப்படிப்பட்ட கனிகளெல்லாம் நேரடியாக, உடனடியாக கொடுக்ககூடிய குணங்களல்ல. மாறாக படிப்படியாக, கடின உழைப்பினால், நாளுக்கு நாள் வளர்ச்சி அடைய வேண்டிய அருங் குணங்களாயிருக்கின்றன. நமது பிதாவாகிய தேவனுடைய வாக்குத் தத்தங்களில் ஈர்க்கப்பட்டு, நமது கர்த்தர், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் மூலமாகப் பெறுகிற போதனையினாலும், பாடங்களினாலும் படிப்படியாக வளர்ந்து, அபிவிருத்தி அடையக் கூடிய குணம்; நமது வாக்கிலும், சொல்லிலும், செயலிலும், தேவனுடைய வசனத்திற்கு எந்த அளவு கீழ்ப்படிந்து, இசைவாக நடக்கிறோமோ அந்த அளவுக்கு அக்கனிகள் நம்மிலே வளர்ச்சியடையும். ஆவியினாலும் தேவனுடைய வசனத்தினாலும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகி, பரிசுத்த ஆவிக்குள்ளாக நாள்தோறும்

வளர்ச்சியடைந்து, ஆவியின் கனிகளாலே மிகுந்த கனி கொடுக்கிறவர்களாகி, அந்த பரிசுத்த ஆவியினாலே முத்திரையிடப்படுவதினால், தேவனுடைய ஏக குமாரனும், நமது கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் சாயலுக்கொப்பான சுபாவத்தினைப் பெறுவோம். இப்படியாக, சத்திய ஆவியின் வழிநடத்துதலால், விசுவாசமுள்ள யாவரும், ஆவியில் பிறந்தவர்களாக மாற்றப்பட்டு முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகும் தகுதியைப் பெற்று, ஆவிக்குரிய ஜீவிகளாகின்றனர். அவர்கள் நல்மனசாட்சியின் உடன்படிக்கை செய்தபொழுதே, ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். இப்படியாக ஆவியிலே பூரணமாக்கப்பட்டு, தேவனுடைய சுதந்திரரும், கர்த்தருக்கு உடன் சுதந்திரருமாக, கர்த்தருக்கொப்பாக இருப்பார்கள். எல்லாத் துரைத் தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிற, இராஜ்யத்தில் பிதாவுக்கு அடுத்தபடியாக இருக்கிற இயேசு கிறிஸ்துவின் ஆவியும் பிதாவின் ஆவியுமாகிய பரிசுத்த ஆவியில் நிறைந்தவர்களாய், பரிபூரணமாக ஐக்கியமாகி இந்த திருச்சபையார் இருப்பார்கள்.

இதுவரை நாம் பார்த்தபடி, அதே ஆவியின் வல்லமையை பிதாவாகிய தேவன், வானத்தின் சர்வ சேனையையும், பூமியையும் சிருஷ்டிக்கப் பயன்படுத்தினார். கடந்த காலத்தில் வாழ்ந்த தீர்க்க தரிசிகளிடத்திலும் அதே ஆவியைக் கொண்டு வழிநடத்தினார். அதற்குப் பிறகு சுவிசேஷ யுகத்தில், தன்னுடைய குமாரனுக்கேற்ற சரீரமாக திருச்சபையை ஆயத்தம் பண்ணி, தேவனுக்கு இசைவுள்ளவர்களாகவும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகவும் மாற்றுவதற்கு இதே பரிசுத்த ஆவியை பயன்படுத்துகிறார். மேலும்இதே பரிசுத்த ஆவியை ஆயிர வருட யுகத்தில் இன்னும் வேறுவிதமாக பயன்படுத்துகிறார். அதாவது கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த திருச்சபை மூலமாக உலகத்தை நீதியின் கொள்கைகளுக்கும், இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமானவருக்கும் ஒருமனப்பாட்டிற்கும் இசைவாகவும் கொண்டு வரவும் பயன்படுத்துகிறார். இந்தப் பணியையாகிலும் அல்லது இதற்கு சம்பந்தப்பட்ட வேறெந்தப் பணியையாகிலும்,

முறையாக நிறைவேற்ற வேறு தேவன் அவசியமில்லை. பரிசுத்த ஆவியின் வல்லமையே போதுமானது. ஒரே கடவுள், தம்முடைய ஒரே திட்டத்தை எந்தெந்தக் காலங்களில், எந்தெந்த முறையில், யாரைக் கொண்டு, எதைக் கொண்டு பொருத்தமாக நிறைவேற்ற முடியுமோ, அதே தேவன் தமது திட்டத்தை செயல்படுத்த, பல்வேறு நிலைகளைப் பயன்டுத்துகிறார் என்கிற இந்தக் கருத்து, மேன்மேலும் நமக்கு உறுதிப்படுத்துகிறது. அவருடைய எல்லாத் திட்டங்களும், நிறைவேற்றப்படும் என்பதை கீழ்க்கண்ட வசனம் உறுதிப்படுத்துகிறது.

*"என் வாயிலிருந்து புறப்படும் வசனமும்.. அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்." - ஏசாயா 55:11*

## தெய்வீக சித்தம், வல்லமை, ஆதிக்கம், ஆவி

நாம் இதுவரை பார்த்தபடி "தேவ ஆவி," அல்லது "பரிசுத்த ஆவி" என்பது தெய்வீக சித்தம், ஆதிக்கம், வல்லமை ஆகும். தேவையான இடங்களில், தேவையான அளவு, தேவையானபடி தெய்வ நோக்கத்தில் செயல்படுகிற எக்காரியமாயினும் அது பரிசுத்தாவியின் செயல்பாடே. இது பரிசுத்தமுள்ள தேவனின் பரிசுத்த சித்தத்தையே குறிப்பதாகும். பல்வேறு வகைப்பட்ட விளைவுகளை ஏற்படுத்த தேவன் தமது பரிசுத்தாவியை பல்வேறு விதங்களில் உபயோகப்படுத்துகிறார். தேவன் எவ்வெவற்றை நிறைவேற்றி முடித்தாலும், அதற்கு உதவியாக எந்தக் கூர்மையான அறிவினால் இயக்கினாலும், எந்திரம் போன்றவற்றால் செய்து முடித்தாலும், அவையெல்லாவற்றையும் இயக்குபவர் சிருஷ்டிப்பின் காலமுதல் அவரேயாகும். இது எப்படியென்றால், ஒரு பெரிய கட்டிடத்தை கட்டுகின்ற கட்டிட ஒப்பந்தக்காரன் அவனே கட்டிடத்தைக் கட்டி முடிப்பதில்லை. அநேகரை பிரதிநிதியாகக் கொண்டு தன்னுடைய கட்டுப்பாட்டில் கட்டிடத்தைக் கட்டி முடிக்கிறான். கட்டிடத்தை யார் கட்டி முடித்தார்கள் என்று கேட்டால், கட்டிட ஒப்பந்தக்காரன் ஒரு செங்கல்லைக் கூட தொடாத போதிலும் அவன் பெயரே விளங்குகிறது. அவனே முழுப் பொறுப்பாளியும்

ஆகிறான்.

இப்படியாக, "யேகோவா தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 2:4) என்று வாசிக்கிறதினாலே அவரே ஒவ்வொரு மூலங்களையும், மூலக்கூறுகளையும் தமது கரம் கொண்டே சிருஷ்டித்தார் என்று சொல்லமுடியாது. பல்வேறு வகையான பிரதிநிதிகளைக் கொண்டு சகலத்தையும் சிருஷ்டித்தார். ஆனால் அந்த சிருஷ்டிக்கு உதவியாக இருந்தவர்களைக் குறிப்பிடாமல் சிருஷ்டித்தவரை மட்டுமே சங்கீதக்காரன் கூறுகிறதாவது:-

"கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும் அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப் பட்டது. அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும்." (சங்.33:6,9) (அவர் கட்டளையின்படியே ஒவ்வொன்றும் குறித்த நேரத்தில் உண்டாயின) அவர் கட்டளையிட்டவுடனேயே சிருஷ்டிப்புக்கள் வெளிப்படையாக தோற்றமளிக்கவில்லை; நாம் அந்த ஆறு நாட்களை சிருஷ்டிப்பின் ஆறு யுக நாட்களாகக் காண்கிறோம். எற்கனவே நாம் கண்டபடி, உண்டான "எப்பொருளும் பிதாவினால் உண்டாயிற்று" என்று துல்லியமாக அறிகிறோம். அதாவது அவருடைய சித்தம், வல்லமை, அவருடைய ஆவி, ஆற்றல் ஆகியவற்றைக் கொண்டு அவருடைய பிரதிநிதியாகிய (லோகோஸ்) கர்த்தராகிய கிறிஸ்துவைக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டது.

ஆதியாகமம் 1:2ல் தேவன் அவரது வல்லமையைக் கொண்டு நடப்பித்த காரியங்களை புரிந்து கொள்வது எளிது. ஆனால் சுவிசேஷயுகத்தில் அவருடைய ஜனங்களை அவரோடு ஒப்புரவாக்குவதற்கு பரிசுத்த ஆவியைக் கொண்டு கிரியை நடப்பிப்பதை புரிந்து கொள்வது மிகக் கடினம். வேதாகம வெளிச்சத்திலே பரிசுத்தஆவியின் பல்வேறு பரிமாணங்களைக் கீழே காணலாம்:-

அ) தேவனுடைய வல்லமை பல்வேறு வகையிலும் எடுத்து வெளிப்படுத்தி காண்பிக்கப்பட்டிருந்தாலும், அவற்றிற்கு அடிப்படையான தெய்வ நீதி, நியாயம், அன்பு இவற்றை ஆதாரமாகக் கொண்டது பரிசுத்த வல்லமையாகும்.

ஆ) இந்த வல்லமை ஒரு ஜீவன் தரும் வல்லமையாகவோ, சரீர பலத்தைக் காட்டக்கூடிய வல்லமையாகவோ, அல்லது சிந்தனைக்குரிய மனோபலமாகவோ, ஆவியின் தூண்டுதலால் உருவாகும் சீரிய சிந்தனையாலும், சொல்லாலும் சிருஷ்டிக்கப்படுகிற உயிர் அளிக்கும் வல்லமையாகவோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த வல்லமையை போன்றோ, அவருடைய திருச்சபையார் முதலாம் உயிர்த்தெழுதலி ல் உயிர்ப்பிக்கும் வல்லமையை போன்றோ இருக்கலாம்.

இ) சத்திய ஆவியின் பணி என்னவென்றால், சத்திய அறிவினாலே நிறைந்து, பூரணப்பட்டு, சத்தியத்தினால் ஜெநிப்பிக்கப்படுதலாகும். தேவன் தம்முடைய சத்தியத்தின்படியும் நீதியின் படியும் தமது ஒழுங்கை நிலைநாட்டுகிறார். எனவே தேவனுடைய வார்த்தையும், அந்த வார்த்தை நிறைவேறுவதற்கான திட்டத்தை வெளிப்படுத்துதலுமே சத்தியம் எனப்படும். “உமது வசனமே சத்தியம்.” இதுபோலவே தேவ திட்டத்தையும் அவருடைய நீதியையும், சத்தியத்தையும் உணர்ந்து கொண்டவர்கள், சத்திய ஆவியால் நடத்தப்படுகிறவர்களாகவும், சத்திய ஆவியின் அருங்குணங்களை கொண்டவர்களாகவும் இருப்பார்கள். எனவே அவர்கள் சத்தியத்தின்படி பிறந்த புதிதாய் ஜீவன் பெற்றவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

பிதாவாகிய தேவன் பாவிகளை கிறிஸ்துவின் பக்கமாக இழுக்கின்றார். எவ்வாறெனில் பொதுவாக அவர்கள் மனதி-ருக்கிற இருளை அகற்றி, பிரகாசமான மனக்கண்களைக் கொடுத்து, அதன் மூலமாக, தான் பாவி என்பதை உணர்ந்து தங்களுக்கு ஒரு மீட்பர் அவசியம் என்பதை உணரச் செய்கிறார். கிறிஸ்துவை தங்களுடைய மீட்பராகவும் மத்தியஸ்தராகவும் ஏற்றுக் கொண்டவர்கள் தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு தேவனால் பிறந்தவர்கள் ஆகின்றார்கள். “சத்தியத்தினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாக” ஆகிறார்கள். புதிய வாழ்வுக்கென்றே தேவ ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் இவர்களே; தேவனுடைய ஒழுங்குக்கும், சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு இசைவாகக் கீழ்ப்படிந்து பிரதிஷ்டையினால் தங்களை ஒப்புக் கொடுக்கிறவர்களை தேவன் ஏற்றுக் கொள்கிறார். சரீரத்தின்

பலவீனங்களையெல்லாம், கிறிஸ்துவின் நீதியாகிய வஸ்திரத்தின் மூலம் மூடுகிறார். இப்படி நீதிமான்களாக மாறியவர்களை தேவன் புதிய சிருஷ்டியாக அங்கீகரித்துக் கொள்ளுகிறார். அவர்கள் தங்களை சத்திய ஆவி எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தவும், ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும் வரை கீழ்ப்படியப் பண்ணவும், இன்னும் மரண பரியந்தம் வழி நடத்தவும் வேண்டும் என்றும் விரும்புவார்கள். அப்படிப்பட்டவர்களே, புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்றவர்களாக கருதப்படுவார்கள். ஏனெனில் கிறிஸ்து மூலமாக இவர்கள் ஒரு விசேஷ உடன்படிக்கையின் மூலம் தேவப்புத்திரராகிறார்கள். யார் அந்த சத்திய ஆவியின் நடத்துதலாலே, முழுமையாக கீழ்ப்படிந்து நடக்கிறார்களோ, அவர்களுக்கு இரட்சிப்பின் அதிபதியாகிய கிறிஸ்துவின் மூலம் பிதாவாகிய தேவன் எல்லாப் பாதுகாப்பும், பராமரிப்பும் தருவதோடு கூட, அவர்கள் வழியில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் நன்மைக்கேதுவாக நடக்கும்படி செய்கின்றார். அப்படி பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்கு உட்படுபவர்களின் வாழ்விலே நீதி, சத்தியம், சமாதானம், மகிழ்ச்சி நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து அதிகமதிகமாகப் பெருகும். சத்திய ஆவிக்கு எவ்வளவாய் கீழ்ப்படிகிறார்களோ. அவ்வளவாய் சத்திய ஆவியின் வல்லமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு வேதம் சொல்கிற புத்திமதி என்னவென்றால், “ஆவியினால் நிறைந்திருங்கள்.” “பரிசுத்த ஆவிக்குள்ளாக நடப்பீர்களாக,” “கிறிஸ்துவின் ஆவி உங்களில் மிகுதியாய் கிரியை செய்து வாசம் செய்வதாக; அதனால் அது நீங்கள் பலனற்றவர்களாவோ, வீணராகவோ இருக்க ஒட்டாது.” இதே பரிசுத்த ஆவியின் வல்லமை, அவர்கள் கர்த்தருக்கு முழு பிரதிஷ்டை செய்த நாளிலிருந்து தொடங்கி அவர்களை வழிநடத்துகிறது. இதே பிதாவின் ஆவி தான் கிறிஸ்துவையும் வழிநடத்தியது. ஆகவே இதை கிறிஸ்துவின் ஆவி என்று சொல்கின்றோம். “கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல.” - ரோமர்.8:9

## “அளவோடு” அருளப்படும் ஆவி, “அளவில்லாமல்” பொழியப்படும் ஆவி

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பிரதிஷ்டை

பெற்றபோது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார். அதேபோல், அவருடைய திருச்சபையாராகிய சரீர அங்கங்கள், தாங்கள் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானம் பெறும்போது, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த இரண்டிலும் ஒரு வேற்றுமை இருப்பதை நன்கு கவனித்தாக வேண்டும். அதாவது திருச்சபையின் தலைவரும் நமது கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து பெற்ற பரிசுத்த ஆவி அளவிட முடியாதது. (யோவா. 3:34) ஆனால் அவருடைய பின்னடியார்களாகிய திருச்சபையாருக்கோ, ஒரு குறிப்பிட்ட அளவு பரிசுத்த ஆவி அருளப்படுகிறது. (1 கொரி . 12:7; ரோமர். 12:3) இந்த வேற்றுமைக்குக் காரணம், நமது கர்த்தர் பரிபூரணராயிருந்தார். ஆனால் அவருடைய பின்னடியார்களாகிய திருச்சபையாரோ நீதிமான்களாகக் கருதப்பட்டாலும் அபூரணராயிருக்கிறார்கள். பூரணராகிய கிறிஸ்து தேவ சாயல், தேவ ரூபம் ஒவ்வொன்றிலும் இசைவாக பூரண பரிசுத்தம் விளங்கும்படியாக இருந்தார். ஆனால் விழுந்துபோன மனுக்குலத்திலிருந்து அழைத்துத் தெரிந்து கொள்ளப்படும் திருச்சபையாரோ, தேவனுக் கிசைவான பூரணர்கள் அல்ல. திருச்சபையாராக அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும், தேவனுடைய சித்தத்தையே நாடி, தேடி, அதையே செய்ய வேண்டியவர்களாகின்றனர். இதில் தங்கள் சுய சித்தத்தை அழித்திட வேண்டும். விழுந்து போன சந்ததியின் காரணமாக, தேவ சாயலிலும், ரூபத்திலும் சரிவிகித அளவு பெற்று, ஒருபோதும் அளவில்லாத பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே விசுவாசிக்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவி ஓரளவாகவும், அதைக் காட்டிலும் பிரதிஷ்டை செய்து, திருச்சபையாராக கிறிஸ்துவின் சரீரமாக புத்திர சுவீகாரம் பெற்றவர்களுக்கு அதைவிட அதிகமாகவும் பரிசுத்த ஆவி பொழியப்படுகிறது. விழுந்து போன நிலையிலிருந்து மாறி, கிறிஸ்துவின் கிருபைக்குள்ளாக கிறிஸ்துவின் ஆவியை எவ்வளவாய் உடையவர்களாயிருக்கிறார்களோ, அந்த அளவு பரிசுத்த ஆவி அருளப்படும். நாம் எவ்வளவு விரைவாய் சத்தியத்தைக் கற்றுக் கொண்டு, கிறிஸ்துவின் அங்கமாகி, தேவ சாயலை அடைய எவ்வளவாய் முயற்சிக்கிறோமோ அவ்வளவாய் தேவ ஆவி அருளப்படும். நம்முடைய ஜீவியத்தில் நாம் எவ்வளவு அதிகமாக தெய்வீக திட்டத்தில் ஈடுபடுகிறோமோ, அவ்வளவு

*விரைவாக பூரண தெய்வீக நிலைமைக்குள் நடத்தப்படுவோம்.*

*தேவனோடு உடன்படிக்கை செய்து கொண்ட விசுவாசிகள், தங்களை முழுமையாக தேவனுக்கென்று அர்ப்பணித்து விட்டவர்கள். தங்களுடைய சுய ஆசை, இச்சை இவைகளையெல்லாம் விட்டுவிட்டு, தேவனுடைய சித்தத்தைச் செய்வதையே நோக்கமாகக் கொண்டவர்கள். அவருடைய வழிகளிலேயே நடக்க முனைவதால், அவருடைய "ஆவியினாலே நடத்தப்படுகிறார்கள்." அவர்கள் "ஆவியினாலே போதிக்கப் படுகிறார்கள்." எனவே அவர்கள் "புதிய ஜீவியத்தில், புதிய ஆவியினால் தேவனுக்குச் சேவை புரிவார்கள்." இதே ஆவியின் பரிபாலனத்திலே நாளுக்கு நாள் முன்னேற வேண்டுமானால், அவர்கள் "ஆவியில் சாந்தம் உடையவர்களாக இருக்க வேண்டும்." (கலாத். 5:22, 23; 6:1) எனவே,*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும்... விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும் நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன்." - எபேசி. 1:17,19*

*இதுவரை நாம் காண்பித்த பரிசுத்த ஆவியின் பல்வேறு கிரியைகளிலாவது, அநேக வேத மாணவருக்குத் தோன்றும் பல்வேறு கிரியைகளிலாவது, இன்னொரு கடவுள் இருந்து தான் இந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. இதற்கு நேர்மாறாக, ஒரே தேவன் என்கிற சிந்தனையின் வழியில் சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்போமேயானால், அவருடைய சர்வவல்லமை, சர்வ ஞானம் ஏராளமாய் இருக்கின்ற சுபாவம் ஒன்றே எல்லாவற்றையும் நிறைவேற்ற போதுமானது. இஸ்ரயேலரை நோக்கி யேகோவா தேவன், "இஸ்ரயேலே கேள்; உன் தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன்" என்று சொல்லியிருப்பதன் மூலம், அவருக்கு யாருடைய உதவியோ, திறனோ தேவையில்லை என்பது புலனாகிறது. தேவனுடைய ஒவ்வொரு வல்லமைக்கு ஒரு தேவன்*

என்று நினைக்கிறவர்களின் வழியை சிந்தித்தால், அப்பொழுது, எல்லா வல்லமையும் பொருந்திய ஒரு தேவன் என்ற நிலையான கொள்கைக்கு மாறாக, ஒவ்வொரு வல்லமையான கிரியைக்கும் ஒவ்வொரு கடவுள்; "புத்திர சுவீகாரத்தின் ஆவி," "எளிமையும் தாழ்மையுமான ஆவி," "கிறிஸ்துவின் ஆவி," "பிதாவின் ஆவி," "அன்பின் ஆவி," "நீதியின் ஆவி," "கிருபையின் ஆவி," "பரிசுத்தத்தின் ஆவி," "சத்திய ஆவி," "பொறுமையின் ஆவி," "மகிமையின் ஆவி," "அறிவின் ஆவி," "இரக்கத்தின் ஆவி" என ஒவ்வொரு வல்லமையான பணிக்கும் ஒவ்வொரு கடவுள் தேவை. ஆனால் அப்போஸ்தலர் தெளிவாகச் சொல்லுகிறபடி, ஆவியினால் வல்லமையாக செயல்படுகின்ற அத்தனை செயல்பாடுகளுக்கும் ஒரே ஆவியின் வல்லமைதான் அடிப்படைக் காரணம். அந்த ஆவி, சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவனின் ஆவியே.

## இவ்வுலகத்தின் ஆவியும், அந்திக் கிறிஸ்துவின் ஆவியும்

இவ்வுலகின் ஆவி என்பது தேவனின் ஆவிக்கு நேர் விரோதமானது. உலகம் முழுவதும் விழுந்துபோன நிலைமைக்குள் இருப்பதாலும், அகில உலகையும் குருட்டாட்டத்துக்குள் நடத்துகிற சாத்தானின் அதிகாரத்துக்குள் இருப்பதாலும், இந்த உலகத்தினுடைய நோக்கமும், குணநலன்களும், தேவனுடைய பரிசுத்த ஆவிக்கு விரோதமாகவும், சத்தியத்திற்கும் நீதிநியாயத்திற்கும் விரோதமாகவும், தேவனுடைய அன்பின் ஆவிக்கெதிராக போர் புரிகிறதுமாய் இருக்கின்றது. எனவே அவருடைய வார்த்தையின்படி வாழ்கின்ற திருச்சபையாருக்கும், அவர்களுடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் விரோதமுள்ள ஆவியாக இந்த ஆவி இருக்கின்றது. சாத்தானின் ஆவி, சுயநலம், வெறுப்பு, பொறாமை, வாக்குவாதம், கலவரம் ஆகியவற்றின் மூலம் கிரியை செய்து உலக மக்களை கட்டுப்படுத்துகிறது. தேவனின் பரிசுத்த ஆவியானது, சாந்தம், சமாதானம், அன்பு, தாழ்ச்சி, பொறுமை, நன்மை, சகோதர சிநேகம் ஆகிய அருமையான குணங்களை அபிவிருத்தி செய்து தேவப்பிள்ளைகளை பெரும்பாலும் வழிநடத்துகின்றது. இந்த இரண்டு ஆவிகள், ஒன்று நன்மையும் அன்பும் நிறைந்ததாயும், மற்றொன்று சுயநலமும்,

தீமையும் நிறைந்ததாயும் இருப்பதால் எப்பொழுதும், ஒருக்காலும் இணையவோ, இசையவோ வாய்ப்பேயில்லை.

இந்த உலகத்தில் கிரியை செய்கிற ஆவி அந்திக்கிறிஸ்துவின் ஆவியாக தேவனுடைய பரிசுத்த ஆவிக்கு விரோதமாகவும், கிறிஸ்துவுக்கு நேரெதிரிடையாக எதிர்த்து நிற்கிறதாயும் இருப்பதாக வேதாகமம் விளக்கமாக எடுத்துரைக்கின்றது. முதன்முதலாக அது கிறிஸ்துவை முற்றிலுமாக மறுதலிக்கச் செய்கிறது. இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்ததையே நம்ப மறுக்கிறது. அப்படி அந்த முயற்சியில் தோற்றால், கிறிஸ்துவை சாதாரண - பாவமுள்ள மனிதன் தான் என்று பறைசாற்றுகிறது. இந்த முயற்சியும் தோற்றுப் போனால், அவர் எதையும் நிறைவேற்றி முடிக்கவில்லை என்றும், அவர் ஒரு முன்மாதிரியான புருஷன்தான் என்றும், அவர் மீட்பர் அல்ல என்றும் வாதிடும். எனவே சத்திய ஆவியினால் சொல்லப்படுகிற சித்தாந்தம் என்று எந்தக் கொள்கையை யார் கூறினாலும், அது வேதத்திற்கு இசைந்திருக்கிறதா என்று நாம் ஆராய்ச்சி செய்து, எல்லா வசனத்துடனும் இசைவாய் இருக்கிறதா என்பதை ரூபகாரப்படுத்தப்பட்டபின் ஏற்றுக் கொள்ள வேண்டும் என வேதம் சொல்லுகிறது. இவைகளை வெளித்தோற்றத்தினைப் பார்த்து நிதானிக்காமல், வேத வசனங்களின்படி நிரூபிக்கிறதா என்பதை கவனித்தாக வேண்டும்.

"பிரியமானவர்களே,... நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள் ... இதனாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்." - 1 யோவா. 4:1,6

## பரிசுத்த ஆவிக்கும், அசுத்த ஆவிக்குமிடையே போராட்டம்

தேவனுடைய சிருஷ்டிகள் யாவரும், தேவனுடைய குணநலன்களான பரிசுத்தம், நீதி, சத்தியம் ஆகிவற்றுடன் தேவ சாயலையும் பெற்றிருக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். தேவனுடைய இந்த பரிசுத்த குணங்களுக்கு எதிரான எந்த சிருஷ்டியாயினும், எதுவாயினும் பரிசுத்தமற்றதாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அநீதியுள்ளதாயும், அசத்தியமுள்ளதாயும்

இருக்கும். இந்த தீமையான காரியங்களெல்லாம் சாத்தானால் உண்டாகின்றன என்று சொல்லப்படுகின்றது. ஏனெனில் அவன் தேவனுடைய விரோதிகளில் முதன்மையானவனும், தேவ நீதிக்கு எதிராக சதி செய்த சதிகாரனும், தப்பறைகளுக்கெல்லாம் முதற் காரணனும், பொய்க்கும் வஞ்சனைக்கும் பிதாவுமானவனாய் இருக்கிறான். இதனால் நாம் பரிசுத்த ஆவியின் கிரியை இன்னதென்றும், அசுத்த ஆவியின் கிரியை இன்னதென்றும் அடையாளம் தெரிந்திருப்பது அவசியம். படிப்பறிவு உள்ளவர்களாயிருந்தும், வேதத்தில் நம்பிக்கை வைக்காத பரிணாமவாத சிந்தனையாளர்களும் (நாத்திகராயிருந்து வேதத்தை விமர்சித்தவர்களும்) சாத்தான் என்ற விரோதியில்லை, அவனுடன் சொல்லப்படுகிற கெட்ட குணநலன்களை உடைய ஒருவரும் இல்லை என்கின்றனர். (எபேசி. 6:12) எந்த தீய சக்திகளும் தன்னில்தானே பிறப்பிலேயே தீயசக்தியாக இருக்கவில்லை. மனிதன் தன்னுடைய அறியாமையே தனக்குப் போதும் என்று இருப்பதும், ஒருவனின் தவறான வழிநடத்தல் மூலமாக தப்பறையைப் பின்பற்றி நடப்பதும், அவன் தீயவனாகிறதற்கு காரணமாகிறது என்கின்றனர். இதே போல் இன்னும் (தப்பறையில்) முன்னேறியவர்கள், (சத்தியம் அல்லாததில்) மேலான படிப்பாளிகள் தத்துவங்கள் என்று தவறாக அழைக்கப்படுகிறதில் முன்னேறி, கடவுள் என்ற ஒருவர் இல்லையென்றும், மனிதனுக்குள் இருக்கிற நல்ல குணங்கள் சீராக விருத்தியடைந்து பூரணத்தை அடைகிறான் என்றும் கூறுகின்றனர்.

நாம் தேவனுடைய வார்த்தைகளுக்கும், போதனைகளுக்கும் செவி சாய்க்கிறதால், அப்போஸ்தலர் சொல்லுகிறபடி தேவன் நம்மை இரட்சிப்புக்கேதுவான ஞானமுள்ளவர்களாகும்படி செய்கின்றார். எனவே நாம் தேவ வார்த்தைகள் - ஜீவ ஊற்று , ஒளி, பரிசுத்த ஆவி என்றும், எந்த மனிதனுடைய நிதானிப்பையும், ஞானத்தையும் கடந்ததென்றும் காண்கிறோம். நமக்கு தேவன் பரிசுத்த ஆவியாக இருக்கிறார் என்றும், அதனால் அவரது பரிசுத்த ஆவி நீதிக்கு இசைவாக கிரியை நடப்பிக்கிறது என்றும், ஆகவே தேவனோடு ஒப்புரவாக விரும்புகிற யாவரும் பரிசுத்தத்தின் ஆவியை பெற்றிருக்க வேண்டும் என்றும் வேதம் கூறுகிறது. தேவ

ஆவியின் பரிபூரணமும், சம்பூரணமாய் நிறையப்பெற்ற ஒரே பேரான குமாரனாகிய கிறிஸ்துவைப் போல, பரிசுத்த தூதர்கள் தங்களுக்கென்று சுயசித்தம் எதுவுமில்லாமல், தேவ சித்தத்தின் படியே நடப்பதைப் போல மனிதர்கள் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட திருச்சபையாரிடம், அவர்களுடைய தலையாகிய கிறிஸ்துவின் ஆவியும், சிந்தையும் இருக்க வேண்டும். (கிறிஸ்துவின் ஆவி, சிந்தை இல்லாதவர்கள் அவருடையவர்கள் அல்ல) அவர்கள் எல்லா தீயகுணங்களையும் விட்டொழித்து பரிசுத்தத்தின் ஆவியின் கனிகளால் நிறைந்திருப்பதையே தேட வேண்டும். அதுபோலவே வேதம் சாத்தானை ஒரு ஆவியின் ஜீவியாக, அதாவது அசுத்த ஆவியின் குணங்கள், சிந்தனை, செயல்பாடு கொண்டவனாக இருக்கின்றான் என விளக்குகிறது. இந்த அசுத்தமான செயல்பாடுகளை அவன் தனது பிரதிநிதிகளோடு உலகமெங்கும் கிரியைகளை நடத்திக் கொண்டிருக்கிறான் என்றும் கூறுகிறது. ( Z WT - ஆகஸ்ட்1, 1894) விழுந்துபோன தூதர்களும் ஆவிக்குரிய ஜீவிகளே. பரிசுத்த மேன்மையைக் காத்துக் கொள்ளாத தூதர்கள் தேவனுடைய நீதியில் நிலை நிற்காமல் வீழ்ச்சியடைந்து சாத்தானின் பிரதிநிதிகளாயினர். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களிலெல்லாம் இந்த அசுத்தஆவியின் கிரியைகளையே செய்து கொண்டிருக்கின்றனர். ஆதாமின் வீழ்ச்சியினாலே மனுக்குலம் முழுவதும் பாவத்திற்கு அடிமைகளும் ஊழிக்காரரும் ஆனார்கள். சிலர் பாவத்தினால் கிடைக்கும அற்ப சந்தோஷத்திற்காக பாவத்தில் நிலை கொண்டிருக்கின்றனர். சிலர் தேவனைப் பற்றிய நம்பிக்கையிருந்தபோதிலும் சாத்தானின் வஞ்சனையான தப்பறைகளினால் ஈர்க்கப்பட்டு தப்பறையான ஆவியினால் நடத்தப்படுகிறவர்களாக மாறிவிட்டனர்.

மனுக்குல மாந்தரின் மனமும் இருதய சிந்தையும் ஒரு போர்க்களமாக இருக்கிறது. யேகோவா தேவனின் ஆவியும், அவருடைய குமாரனும் மனுக்குல மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஆவியுமாகிய பரிசுத்தாவியின் குணநலன்களான அன்பு, நீதி, சத்தியம், பரிசுத்தம் போன்றவைகள், சாத்தானுடைய பொல்லாத ஆவியின் சேனைகளாகிய எல்லாத் தீய குணங்களாகிய பாவம், இருள், அசத்தியம், வெறுப்பு, பொறாமை, தீமை

ஆகியவற்றோடு போராடுகிறது. நமது ஆதித் தகப்பனாகிய ஆதாமினால் அவருடைய குடும்பம் முழுவதும் பாவத்திற்கு அடிமைகளாக விற்கப்பட்டது. அதனால் பாரம்பரியமாக பலவீனம் பின்தொடர்ந்தது. (ரோம. 5:12,21: 6:16-23; 7:14;8:20-21) இந்த அடிமைத் தனத்திற்குள் இருந்த மனுக்குலத்தை இந்த பிரபஞ்சத்தின் தேவன் மேலும் குருடாக்கிவிட்டான். அவன் தீமையை நன்மை என்றும், இருளை ஒளி என்றும் சொல்- உலகத்திலுள்ள பெரும்பான்மையான மக்களை வஞ்சிக்கிறவனாயிருக்கிறான். (II கொரி. 4:4;எபேசி. 6:12; ஏசா. 5:20) இதனால் நன்மை செய்வது கடினம் என்றும், தீமை செய்வது எளிது என்றும் கற்பித்துவிட்டான். தற்காலத்திலுள்ள எல்லா சந்தர்ப்பங்களையும் தீமை செய்வதற்கே ஆதாயமாகக் கருதச் செய்கிறான். இந்த உலகத்தில் பிழைக்க வேண்டுமானால், அசுத்தஆவியினால் நிறைந்த அவனைப் பின்பற்றுவர்களுக்கே எல்லா வாய்ப்புகளையும் ஏற்படுத்தி விட்டான். அகில உலகையும் ஆட்டிப் படைக்கிற தீய ஆவி அவனிடத்திலிருந்து புறப்படுகிறது. எனவே அவன் பணி 1. உலகிலுள்ள பெரும்பான்மையானவர்களை அறியாமையினால் அடக்கி வைத்திருக்கிறான். 2. கூர்மையான அறிவாளிகளை அவர்களுடைய பெருமை, கர்வம் ஆகியவற்றால் ஆட்டிப் படைக்கிறான்.

நமது கர்த்தரின் முதலாம் வருகை வரையில் அந்தப் பொல்லாத ஆவியோடுகூட போர் துவங்கவில்லை. முதலில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சத்திய ஆவி பொழியப்பட்டது. அதன் பின்னர் பெந்தேகோஸ்தே நாளில் அவருடைய சரீரமாகிய திருச்சபைக்கு சத்திய ஆவி பொழியப்பட்டது. (நீதியின்படியான நியாயப் பிரமாணப் போராட்டம், ஒரு சிறிய இராஜ்யமாகிய இஸ்ரயேல் தேசத்தாருக்கு மட்டுமே குறிக்கப்பட்டிருந்தது. நியாயப் பிரமாணம் யாரையும் பூரணமாக்காது. விழுந்துபோன மனுக்குலத்தாரில் யாரும் நியாயப் பிரமாணத்தை போராடி ஜெயித்ததில்லை. நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றியவர் கிறிஸ்து ஒருவரே. தெய்வீக கிருபை சகல மனுக்குலத்துக்கும் பொழிய கிறிஸ்துவே நியாயப் பிரமாணத்தின் மூலம் வழியானார். ஆகவே இஸ்ரயேலர்களில் மீந்திருக்கிறவர்களை கிறிஸ்துவின் பக்கம் திருப்பி ஆவிக்குரிய யுகத்திற்கும் அதன் போராட்டங்களுக்கும் தயார் படுத்தவே நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது.) இருளாயிருந்த உலகம், சத்திய ஆவியால் நிறைந்தவராய் இயேசு கிறிஸ்து

வந்தபோது, வெளிச்சமாயிற்று. அதனிமித்தம் அவர் “உலகின் ஒளி” என அழைக்கப்பட்டார். உடனே போராட்டம் ஆரம்பித்தது. அந்த மெய்யான ஒளி என்பது, பெயர் சபைகளாலல்ல; மாறாக சத்தியத்தின்படி நடக்கிற விசுவாசமார்க்கத்தார் உலகிற்கு தொடர்ந்து ஒளிவீசுகின்றனர். அவர்களே தங்கள் தலையாகிய கிறிஸ்துவின் ஆவியையும், தேவனுடைய ஆவியையுமுடையவர்கள். இந்த யுத்தம் விரைவில் தொடங்க இயலாமலிருக்கக் காரணம் தேவனுடைய பிரதிநிதியாகிய பரிசுத்த ஆவியின் வல்லமையால் ஜெநிப்பிக்கப்பட்ட அவருடைய திருச்சபை உருவாக வேண்டியிருந்தது. மற்றபடி, பாவத்திற்கு அடிமையான மற்ற மனுக்குலத்தார் எவரும் இதற்குத் தகுதியானவர்கள் அல்ல, சிலுவையின் வீரர்களாகவும், தேவ பிரதி நிதிகளாகவும், தேவ நீதியையும் சத்தியத்தையும் நிலைநாட்டுபவர்கள் உருவாக வேண்டியிருந்தது. பரிசுத்த ஆவியின் பணி துவங்குவதற்கு முன்பாக, முதன்முதலில் மனுக்குலத்தின் பாவ நிலைமையிலிருந்து ஒப்புரவாகுதல் நிறைவேற வேண்டும். மனுக்குலம் நீதியிலிருந்து பிறண்டதினால் அது மரணத்திற்கு தீர்ப்பிடப்பட்டு என்றென்றும் பாவ சாப மரண வீழ்ச்சிக்கு உட்பட்டுவிட்டது. ஏன் இப்படி வீழ்ச்சியடைந்தவர்களுக்காக போராட்டம் நடத்த வேண்டும்? அநீதியின் வழியில் சென்று கொண்டிருக்கிற மக்களை ஏன் நீதியின் பாதைக்கு உட்படுத்த வேண்டும்? எனவே முதலில் மரணத்தை பரிகரிக்க ஈடுபலி செலுத்தியாக வேண்டும். கிறிஸ்துவின் ஈடுபலியை பிதா ஏற்றுக் கொண்டதின் பலனாக, கிறிஸ்து மூலமாக தேவபுத்திராக அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவி அருளப்பட்டது.

இந்த யுத்தம் பத்தொன்பது நூற்றாண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. பரிசுத்த ஆவிக்கு விரேதமாகவும், பொல்லாத ஆவிக்கு சாதகமாகவும் போராட்டம் நடப்பதை சிலரே அறிந்து கொள்ளமுடியும். தற்போது பாவத்தின் ஊழியக்காரர்களின் தொகை, போராட்டம் ஆரம்பத்திலிருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு பெருகியிருக்கிறது. இந்த தொகை இன்னும் வெகு வேகமாக, பேர் கிறிஸ்தவர்களைக் காட்டிலும் பெருகிக் கொண்டிருக்கிறது.

இதற்கு மேலும், தீமை, தப்பறை பொல்லாப்பு ஆகியவைகளின் ஆவி, நமது ஆண்டவரிடம் உள்ள பரிசுத்த ஆவிக்கு விரோதமாக ஆர்ப்பரித்து அவரை சிலுவை மரணத்திற்கு கொண்டு சென்றது. அதே போல், கிறிஸ்துவின் சரீரமாகிய விசுவாசிகளுக்கு விரோதமாகவும் ஆர்ப்பரித்து வெற்றிகொள்கிறது. எங்கெங்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் கிடைக்கின்றதோ அங்கெல்லாம், இந்த தூய ஆவியின் கூட்டத்தாரை தீய ஆவியின் கூட்டத்தார் கேலி செய்து, அவமானம் செய்து பரிகசித்துக் கொண்டேயிருப்பர். இதன் காரணம் சத்தியத்தை மறுப்பதற்காகவும், பரிசுத்த ஆவிக்கெதிராக, அசுத்தத் தப்பறைக் கொள்கைகளை நிலைநிறுத்தவுமே ஆகும். சத்தியத்தை வேரற்றுக் போகச் செய்வதே அவர்களுடைய நோக்கம். பரிசுத்தத்ததை அசுத்தமாகத் தோற்றமளிக்கச் செய்வதே அவர்கள் பணி. தன்னலமற்றவர்களை தன்னலமுள்ளவர்களாகத் தோற்றமளிக்கச் செய்வர். இருளை வெளிச்சமென்றும் வெளிச்சத்தை இருள் என்றும் கூறுவர். இந்தத் தீமையின் ஆவி வெறுப்பு, கர்வம், விரோதம், குரோதம், பகை ஆகியவற்றால் அவர்களை நிறைத்துவிடுவதால் அவர்கள் கண்கள் குருடாக்கப்பட்டு விட்டதால், பல நேரங்களில் தாங்கள் என்ன செய்கிறோம் என்று கூட தெரியாமல் செய்து விடுகின்றனர். இதற்கெல்லாம் உச்சகட்டமாக, தாங்கள் தேவனுக்கே சேவை செய்கிறோம் என்று தங்களுடைய பணிகளில் பெருமைப்பட்டு, தப்பெண்ணம் கொண்டிருக்கின்றனர். ஏன் பரிசுத்த ஆவிக்கு பயங்கரமான தோல்வி ஏற்படுகிறது? இந்தத் தோல்வி தொடருமா?

இந்தப் பரிசுத்த ஆவியின் செயல்பாடுகள் தோல்வி போல் காணப்பட்டாலும் இது தோற்றமே அல்லாமல் உண்மையில் தோல்வியே அல்ல என்பதே நமது பதில். மெய்யாகவே இப்படிப்பட்ட பொல்லாத ஆவிகளோடு போராட்டம் தொடங்கிய நாள்முதல் சத்திய ஆவியே வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை. சுவிசேஷ யுகத்தில் சத்திய ஆவியின் இரு தரப்பட்ட பணியும் ஒரே சீராய் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

1) பிரதிஷ்டை எடுத்துக் கொண்டவர்கள், தேவனிடத்திலும் சத்தியத்திலும் எந்த அளவு வைராக்கியமுடையவர்களாய்

*இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களைப் புடமிட சாத்தானால் அவர்களுக்கு சோதனையாக, பல வகைகளிலும் துன்பம் உண்டாகக் கூடும். தற்காலத்தில் தேவபக்தியாய் நடக்க மனதாய் இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். போதகரும் குருவுமாய் இருக்கிற கிறிஸ்து பூலோகத்திலே இப்படிப்பட்ட தீமை அவமானத்தை சகித்தபோது இவைகளுக்கு மேலான சந்தோஷம் பரலோகத்தில் உண்டென்று எண்ணினாரோ அதைப்போல இவர்களும் எண்ண வேண்டும். கிறிஸ்துவைப் போலவே இவர்களும் பூலோக வாழ்க்கையே பெரிதென்று எண்ணாமல், எந்தவித அவமானத்தையும், சோதனைகளையும் சகித்துக் கொண்டு தேவனுக்குக் கீழ்ப்படிவார்கள். **2 தீமோ.3:12; மத். 5:11; 1 பேது. 2:23; அப். 20:24.***

*2) தேவனுடைய பிள்ளைகளிடத்திலுள்ள பரிசுத்த ஆவியின் வெளிச்சம் உலகத்தின்மேல் பிரகாசிக்கும். எதிராளியாகிய பிசாசின் ஆவியினால் முற்றிலுமாக குருடாக்கப்படாத எல்லாரையும் அது கவரும். அது எல்லா அநீதிக்கும் எதிராக சாட்சியம் அளித்து பாவ இருளில் பிரகாசிக்கும். மனசாட்சியில் குருடாக்கப்பட்டவர்களைக் கூட இவர்களுடைய பிரகாசத்தினால், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டவர்களாய், நீதியின் மார்க்கத்திற்கும் தேவனிடத்திற்கும் திரும்பி விடுவார்கள். ஆகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தன் சீடர்களிடம், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றவுடன், நீங்கள் அறிந்த சத்தியத்தை உலகத்தார் கேட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி, அவர்கள் மத்தியில் சாட்சியாகப் பிரகடனப்படுத்த வேண்டியது உங்கள் கடமை என்றார்.*

*பரிசுத்த ஆவி இந்த இரண்டு நோக்கங்களுக்காகவே கொடுக்கப்பட்டது. அதில் இரண்டிலும் வெற்றிமேல் வெற்றி கிடைத்தது. நீதியின் பாதையில் நடக்கிற "ஜெயம் கொள்ளுகிற" "சிறுமந்தையை" அது தெரிந்தெடுத்தது. அவர்கள் சிலுவை வீரர்களாகவும் கிறிஸ்து தளபதியாகவும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தங்களை மரணபரியந்தம் அர்ப்பணித்தவர்கள். இவர்களுக்கு வெகுமதியாக பரலோகத்தில் பரிசு கிடைக்கப் போகிறது. சுவிசேஷ யுகத்தின் கடைசிக் காலத்தில் இருக்கக் கூடிய சிறுமந்தையின் உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சோதித்தறிந்த*

பிறகு பரிசு வழங்கப்படும். உலகம் முழுவதற்கும் சத்திய வெளிச்சத்தைக் கொடுக்கும் பணியிலும் பரிசுத்த ஆவியின் பங்கு பெரிதான வெற்றியைப் பெறுகின்றது. பாவம், சாபம் நிறைந்த இந்த உலகிற்கு தேவதிட்டத்தை சாட்சியாக அறிவித்து, தேவனுடைய நியாயத் தீர்ப்பின் நாள் பற்றி வெளிப்படுத்தி, இன்றைக்கு தீமை செய்து வருகிற யாவருக்கும் தேவன் நீதியை சரிக்கட்டும் நாளில், தீமை செய்பவனுக்கு எவ்வளவு வெளிச்சம் கிடைத்திருந்தும், அந்த வெளிச்சத்தில் நடவாதபடியினால் அதற்குரிய தண்டனையை அடைவார்கள் என்பதாக நமது கர்த்தராகிய கிறிஸ்து முன்னுரைத்தார்.

இந்த சாட்சி இன்றைக்கு உலகத்தின் எத்திசைகளிலும் பரவியிருக்கின்றது. பாவம், தேவநீதி, நியாயத் தீர்ப்பு ஆகிய இந்த மூன்று உறுதியான கொள்கைகள் பற்றி திருச்சபை, இன்றைக்கு அகில உலகத்திற்கும் வெகு விளக்கமாக எடுத்துக் காண்பித்துக் கொண்டிருக்கிறது. உண்மையாகவே இந்த உலகம் இந்த மூன்று காரியங்களான பாவம், தேவநீதி, நியாயத் தீர்ப்பு இவைகளின் பொருளை உணராமல் இருட்டில் இருந்து வந்தது. இந்த நியாயத் தீர்ப்பு ஆயிர வருடங்கள் கொண்ட ஒரு நாள் என்பதை இந்த உலகம் அவ்வளவு திட்டமாக அறியாது. இந்த சுவிசேஷ யுகத்திலே திருச்சபையாருக்கு இருக்கிற பரம அழைப்பைப் பற்றியும், இந்த உலகத்திற்கு ஒன்றும் தெரியாது. மீட்பரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, இந்த உலகத்தோடு ஒட்ட ஒழுகாமல், இந்த உலகில் கிடைக்கக் கூடிய அனுகூலங்களையெல்லாம் இப்போதே விட்டு விட்டவர்கள், அந்த உலகத்தோடு நியாயத் தீர்ப்புக்குள்ளாகாமல், முழு உலகத்தினையும் நியாயந் தீர்க்கும் ஆளுகைக்கு உரியவர்களாகிறார்கள். இந்த தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு நுணுக்கத்தினையும் இந்த உலகம் அறியாது. ஏனெனில் இதில் அவர்களுக்கு துளியும் அக்கறை கிடையாது. இருதயப்பூர்வமாக தேவ திட்டத்தினை, நீதியை அறிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்களுக்கே இந்தக் காரியங்கள் விளங்குமே தவிர, மற்றவர்களுக்கு தேவனுடைய ஆழமான மறைபொருட்கள் விளங்க வாய்ப்பில்லை. இவ்வாறு தேவ திட்டத்தினை அறிந்து, பிரதிஷ்டை செய்து தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள், பிதாவின் ஆவியைப் பெற்றிருப்பார்கள். இவர்கள் பிதாவுக்குக் குமாரர்கள் ஆகிறபடியினாலே, தேவனுடைய

மறைபொருளான எல்லாத் திட்டங்கள், மற்றும் இரகசியங்களையும் தெளிவாக அறிந்து கொள்வார்கள். *1 கொரி.2:10,11*

இவைகளெல்லாம் எது வரைக்கும் இப்படியே இருக்கும் என்ற வினாவுக்கு, இவைகளெல்லாம் எப்போதும் நீடித்திருக்காது, இந்த சுவிசேஷ யுகத்திலே சிறு மந்தையாகிய திருச்சபையார் தெரிந்தெடுக்கப்பட்டு உடன் சுதந்திரர் ஆகும் வரையில்தான் இப்படியிருக்கும் என்று பதில் கூறலாம். தேவ இராஜ்யத்தை ஏற்படுத்துவதே, யேகோவா தேவனின் பரிசுத்த ஆவியின் அடுத்த செயலாகும். தேவ இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட பின்பு நியாயத் தீர்ப்பு துவங்கப்படும். அதன் பின்பு தேவ நீதி நிலை நாட்டப்படும். உத்தம நிதானிப்பும் நீதியும் நியாயமும் பூமியில் செய்யப்படும். பொய்யும் வஞ்சகமும் முற்றிலுமாக அகற்றப்பட்டு தெளிந்த சத்திய அறிவு எங்கும் நிறைந்திருக்கும். இந்த நியாயத் தீர்ப்பு நீண்ட காலப் பகுதியாக காலம் தாழ்த்தப்படாமல் அவ்வப்போதே மீறுதலுக்கான தண்டனைகள் வழங்கப்படும். திருச்சபையாருக்கு கொடுக்கப்படுகிற எச்சரிக்கை “காலத்திற்கு முன்பே யாதொன்றையும் குறித்தும் தீர்ப்பு சொல்லக்கூடாது” என்பதாகும். ஏனெனில் தேவனுடைய நியாயத் தீர்ப்பின் நாள் வரும்போது இவர்களே அந்த நியாயத் தீர்ப்பிலும் அதிகாரம் பெற்றவர்களாவார்கள். இப்படிப்பட்ட நியாயத் தீர்ப்பு அதிகாரம் பெறப் போகிறவர்கள் தேவ நீதியினாலும், சத்திய ஆவியினாலும் தேவனோடு இசைவிணக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நீதியின் நிமித்தம் அவர்கள் துன்பப்பட்டவர்களே. தேவநீதிக்காக இராஜரீக ஆசாரியர்களாக முடிசூட்டப்படுவார்கள். பூமியை முந்தின சீருக்குக் கொண்டு வந்து மனுக்குலத்தை பரிபூரணமாக்கி ஆட்சி செய்வார்கள். தேவ அன்பினாலும், கிறிஸ்துவின் ஈடுபலியினாலும் கிடைத்த நியாயத் தீர்ப்பு நாளின் ஆசீர்வாதத்தை பெறும் சந்தர்ப்பத்தை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்ளாதவர்களை “நித்திய அழிவினால்” அழிக்க இவர்கள் உரிமை பெற்றவர்கள். இப்படியாக, யேகோவா தேவனும், அவரது பரிசுத்த ஆவியும், அவரோடு சேர்ந்த அனைவரும் வெற்றி பெறுவார்கள். பாவமும், சாத்தானும் பொல்லாத ஆவியும் அறுப்புண்டு போவார்கள். இனி சாபமேயிராது. *ஏசா.28:17; 1 கொரி. 4:5;6:2; அப்.3:23; 2 தெ.1:9; வெளி. 22:3*

## பரிசுத்தவான்களுக்கு உள்ளேயும், புறம்பேயும் உள்ள ஆவியின் போராட்டங்கள்

ஆவியின் போராட்டங்களைக் குறித்து நாம் முழுமையாக முன்னரே கண்டோம். தற்காலத்தில் அந்த போராட்டம் சம்மந்தமாக சில காரியங்களைக் காண்போம். பாவத்தோடு போராடுகிற ஒவ்வொரு பரிசுத்தவானும் இது திருச்சபையின் போராட்டம் என்று கருதாமல், தனக்கும் பாவத்திற்குமிடையே நடைபெறும் போராட்டம் என்பதை உணர வேண்டும். திருச்சபை வெற்றி வாகை சூட்டப்படும்போது ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரின் வெற்றியெல்லாம் ஒன்று சேர்ந்தே திருச்சபையின் வெற்றியாகிறது. அதுபோலவே திருச்சபையின் வெற்றி என்பது தேவ ஆவிக்கும், தேவவல்லமைக்கும், தேவநீதிக்கும் கிடைத்த வெற்றியாகும். அநீதியையும், சாத்தானையும் உலகத்தையும் எதிர்த்த போரில் கிடைக்கிற வெற்றியாகும். இவ்வித வெற்றி ஒவ்வொரு தனிப்பட்ட பரிசுத்தவானுக்கும் கிடைக்கக்கூடிய வெற்றியாகும்.

இந்த ஆவிக்குரிய போராட்டத்தைப் பற்றி உண்மையான தேவ ஆவியை பெற்றவர்கள் தவிர மற்ற பெயர் கிறிஸ்தவர்களுக்கோ, ஆவியின் போராட்டம் நடத்துகிறவர்கள் என்றும் ஆன்மீகவாதிகள் என்றும் பரிசுத்தவான்களென்றும் தங்களைக் கூறிக் கொள்கின்ற எவருக்கும் புரியாது. பெரும்பான்மையானவர்களாக இருக்கும் அவர்கள், முழுதத்தம் செய்யாமலும், பரிசுத்த சத்திய ஆவியினை ஒருபோதும் பெற்றுக் கொள்ளாதவர் களுமாயிருக்கிறார்கள். சிலர் சில பிரிவினைவாத மத அடிப்படையில் பிரதிஷ்டை எடுத்துக் கொண்டு, அந்த மத அடிப்படைக் கொள்கைக்கே விசுவாசிகளாயிருப்பார்கள். அப்படிப் பட்டவர்கள் அந்த சபைக்கே பக்தி வைராக்கியமுள்ளவர்களாய், அதற்கே தங்களை தியாகம் செய்பவர்களாய் இருப்பார்கள். சிலர் சில ஒழுக்க சீலங்களுக்காக பிரதிஷ்டை எடுத்துக் கொண்டு, அந்த ஒழுக்கங்களே போதுமென்று இருந்து விடுகின்றனர். அந்த ஒழுக்கத்தை விட்டு விடாதிருந்தாலே போதும் என்று இருந்து விடுகின்றனர். இப்படிப் பட்டவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட சுயநீதியுடையவர்கள், சுயநீதியில் திருப்திப் பட்டுக் கொள்கின்றனர். தன் ஒழுக்கமே தனக்கு நீதி என்று இருந்து

விடுகின்றனர். சிலர் சில புண்ணிய ஒழுக்க நெறிகளையே வழிபாடாகக் கொண்டுள்ளனர். உதாரணமாக சிலர் பொறுமையை அதிகமாக கையாளும்போது நாம் இவ்வளவு பொறுமையாக இருக்கிறோமே என பெருமைப்பட்டு திருப்தியின் ஆவியினால் நிறைந்து விடுகின்றனர். சிலர் கிறிஸ்துவுக்காக தங்களை பிரதிஷ்டை செய்ததாக எண்ணிக் கொண்டு அவர்களை உற்சாகப்படுத்தும் அநேகவிதமான நடவடிக்கைகளால் பெருமைப்பட்டுத் திருப்தியடைந்து விடுகின்றனர். அது எந்த மாதிரியான பணி என்பதுபற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. அது பிரபலமான பணி என்பதாலோ, அது சாத்தானுடைய வழிக்குக் கொண்டு செல்லும் புகழ் என்ற கண்ணியில் சிக்க வைக்கும் அபாயத்தை அறியாமல் பிரபலமாவதை மட்டுமே விரும்புகிறவர்கள், தங்கள் பணி சத்தியத்திற்கு இசைவாக இருக்கிறதா என சிந்திக்கிறதில்லை. எனவே ஏராளமான அவர்களுடைய பணி வெறும் காற்றில் காற்றோடு செய்கிற யுத்தமாக கருதப்படுகிறது. இறுதியாக அவர்களுக்கு ஒன்று மட்டும் புரியும். அது தாங்கள் எந்த தீங்கும் யாருக்கும் செய்யவில்லை என்பது ஆகும். தேவ வசனத்தை ஆராய்ந்து, தேவன் விரும்புகிற ஊழியத்தை, விரும்புகிற வண்ணமாக செய்ய வேண்டும் என்கிற மெய்க்கருத்தை அறிய அக்கறை காட்டாதவர்கள். பலருடைய பாராட்டும், புகழுமே நோக்கமாக் கொண்டு, அதற்காக என்ன சேவை வேண்டுமானால் செய்வோம் என்பதே இவர்கள் நோக்கமாகிறது. எனவே தேவசித்தப்படி ஊழியம் செய்யாத இவர்கள், தங்கள் சித்தப்படி, தங்கள் விருப்பப்படி சேவை என்ற பெயரிலே புகழ்சேர்க்க மட்டுமே பணிபுரிவார்கள். மெய்யான பிரதிஷ்டை செய்யாதவர்கள் இவர்கள், உண்மையில் தேவனுடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புக் கொடுக்காதவர்கள். சிலர் உலக ஞானப்படி தங்களுடைய ஜீவியத்தை தேவனுக்கு அர்ப்பணிக்காமல், சில பரோபகார, தர்ம சிந்தையே போதும் என்று இருந்து விடுகின்றனர். கடவுளுக்கும், மனிதனுக்கும் தங்கள் சேவையே தேவை என்று இறுமாந்து வாழ்கின்றனர். அப்படிப்பட்ட தர்ம சிந்தைக்காக தங்களை பிரதிஷ்டை செய்தவர்கள், தங்கள் தர்ம சிந்தைக்கான பலனை மட்டுமே ஆசீர்வாதமாகப் பெறுவார்கள். சமூக சீர்திருத்தத்திற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள், அதற்குரிய பலனை அடைவார்கள்.

*இவ்வகைப்பட்ட அர்ப்பணிப்பான குணநலன்களில் பல நன்மையும் இருக்கிறது, பல தீமைகளும் இருக்கிறது. இவர்களெல்லாம் தீமைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்களை விட உண்மையிலேயே மேலானவர்கள்தான். இவர்கள் தன்னலத்திற்காக தங்களை ஒப்படைத்தவர்களை விட மேலானவர்களே. தங்களுக்கென்று எந்தக் குறிக்கோளும் இல்லாதவர்களைக் காட்டிலும் இவர்கள் மேன்மையானவர்களே. ஆனால் இவர்களெல்லாரையும் விட, திருச்சபைக்குத் தலையாகிய கிறிஸ்துவைப்போல, பிரதிஷ்டை செய்து தங்கள் சுயசித்தத்தைக் கொன்று, தேவ சித்தப்படி நின்று எல்லாவற்றையும் வென்றவர்களாக தேவ சித்தம் நிறைவேற தங்களை தத்தம் செய்தவர்களுடைய உடன்படிக்கையே உன்னதமானது. முன்சொல்லப்பட்ட எந்த விதமான பிரதிஷ்டை செய்தவர்களும் இவர்களுக்கு ஒப்பாக முடியாது. இந்த பிரதிஷ்டையே, சத்திய ஆவியின்படியான மெய்யான உடன்படிக்கையாகும். இதை உலகம் பெற்றுக் கொள்ள முடியாது.*

*மற்றவைகளைப் பார்க்கிலும், இது முற்றிலும் வேறுபட்ட உன்னதமான பரிசுத்த உடன்படிக்கையாகும். இவர்கள் ஒரே ஒருவருக்குத்தான் தலைவணங்குவார்கள்; அது யேகோவா தேவனுடைய சித்தத்திற்கு மட்டுமே. தங்களுடைய சுயசித்தத்தை யெல்லாம் அர்ப்பணித்து விட்டு தெய்வ சித்தப்படி, மெய்யான அறிவுக்கேற்ற பக்தி வைராக்கியத்துடன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக தங்களையே ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கிற புத்தியுள்ள ஆராதனை செய்பவர்கள் இவர்களே. இவர்கள் தனக்கு வேண்டுமென்று எதையும் ஒளித்துக் கொள்ளவோ, எடுத்துக் கொள்ளவோ மாட்டார்கள். பிரதான ஆசாரியனுடைய மொழியே, ஒவ்வொரு இராஜரீக ஆசாரியனுடைய மொழியாகும். அந்த வைராக்கியமுள்ள குறிக்கோள்: "நான் என் சுய சித்தத்தின் படி செய்ய வராமல், என்னை அனுப்பினவருடைய சித்தத்தைச் செய்யவே வந்தேன்." "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புத்தகச் சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது." (எபி .10:7) இப்படிப்பட்டவர்களே பரிசுத்த ஆவியில் பங்கு பெறுபவர்கள்.*

*தங்களுடைய சுயசித்தத்தை வெறுத்து, தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் தேவ சித்தத்தைச் செய்ய தங்களை முழுமையாய் ஒப்படைத்தவர்கள், வேதாகமத்தின்படியும், தேவசித்தத்தின் படியும், கிறிஸ்துவுக்குள் தங்களை ஒப்புக் கொடுத்த இவர்களே, பரத்திற்குரிய ஆவியில் நடத்தப்படுகிறவர்கள். முன்பிருந்த பூமிக்குரிய பாவ நிலைமையை முற்றிலுமாக விட்டுவிட்டு, தங்களை முழுமையாக மாற்றிக் கொண்ட இவர்களே புது சிருஷ்டிகள் என அழைக்கப்படுவார்கள். இது மட்டுமல்ல, இதற்கு மேலும் மகிமை சேர்க்கப்படும். சத்திய ஆவியினாலே உலகிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள் இவர்களே. பாவங்களினிமித்தம் ஒப்புரவாக்கப்பட்ட கிறிஸ்துவின் புதிதான ஜீவ வழியிலே, தேவனை கிட்டிச் சேரப் போகிறவர்கள் இவர்களே. இவர்களே புதிய சிருஷ்டியாக பிறக்கப் போகிற கருவில் உயிராய் இருப்பவர்கள் ஆவார்கள். இந்த யுகத்தின் இறுதியிலே, இந்த தெய்வீக சுபாவத்தின் பூரண மகிமையடைய, உயிர்த்தெழுதலின் நாளுக்காகக் காத்திருப்பவர்கள் இவர்களே. இந்த உன்னத நிலைமைக்காக பரிசுத்த ஆவியினால் தங்கள் விசுவாசத்தினாலும், சத்தியத்தினாலும், கருவாகி உருவாகிய புதிய சிருஷ்டிகளாவர்.*

*இந்த புதிய சிருஷ்டியின் உருமாற்றம் யாவும், சிந்தை, மனம் சம்பந்தப்பட்டது. உயிர்த்தெழுதலின்போது தான் இந்தக் கரு பூரணமாய் பிறக்கும். இருந்தாலும், இது மனிதச் சரீரத்தோடுதான் ஒப்பிட்டு சொல்லப்படுகிறது. "இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" (2கொரி.4:7) என அப்போஸ்தலர் கூறுகிறார். இதே கருத்தைக் குறித்து பவுல் அப்போஸ்தலன், பூமிக்குரிய வீடு அழியும் போது, பலியிடப்படும் போது, கிறிஸ்துவுடன் மரிக்கும் போது, நமக்கு தேவனுடைய வீடு, புதிய வீடாகிய மகிமையின் சரீரம் - ஆவிக்குரிய பரிசுத்தத்திற்கும் புதிய சிந்தைக்கும் இசைவான சரீரம் - கிடைக்கும் என்று அப்போஸ்தலர் உறுதி அளிக்கிறார். (2 கொரிந். 5:1) நமது இரட்சிப்பின் தளபதியாகிய கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை இறுதிவரை உறுதியாய்ப் பின்பற்றி, நெருக்கமான வழியிலே இடுக்கமான வாசலில் போகிறவர்களாயிருந்தால், நமது விசுவாசத்தின் வெற்றி நிச்சயமே.*

பரிசுத்தம் என்கிற சொல், முழுமை என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியது. எனவே பரிசுத்த ஆவி என்பதற்கு, ஒரு முழுமையான ஆவி என்பது பொருளாகிறது. இப்படிப்பட்ட பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்கள், தங்களுடைய வாக்கு, செயல்பாடு எல்லாவற்றிலும் பரிசுத்தமாய், "தெளிந்த சிந்தை உடையவர்களாய்," எவ்வகைச் செயல்பாட்டையும் செய்வதில் ஆச்சரியமேயில்லை. முன் எப்போதைக்காட்டிலும், அவர்களுடைய நிதானிப்பு, நடபடிகள் மேன்மையானதாய் இருக்கின்றன. இருந்த போதிலும், இந்த உலகத்தில் எதிராளியாகிய குருடாக்கப்பட்ட ஆவி இவர்களைப் பார்த்து, "நீ பேய் பிடித்தவன்" என்றும், "பைத்தியக்காரன்" என்றும் சொல்லத்தான் செய்யும். ஏனெனில் இப்படிப்பட்டவர்கள், உலகில் காணப்படாதவைகளும் நித்தியமுமாயிருக்கிற பரலோகத்துக்குரியவைகளையே நம்பி, விசுவாசித்து கடுமையாய் உழைப்பவர்கள். - 2 தீமோ. 1:7; யோவான். 10:20; 6:27

தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி, வசனத்தினால் ஜெநிப்பிக்கப்பட்டு, தூய ஆவியினால் நடத்தப்படுகிற ஒவ்வொருவருக்கும், பயத்தின் ஆவியாகிய தீய ஆவியே எதிராளியாக இருக்கும். சில தவறு இருப்பதாக அது நம்மை நம்பச்செய்யும். நமக்கு தேவன் "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை" கொடுக்கவில்லை என்றோ, அல்லது அது நமக்கு இல்லை என்றோ, அல்லது சில காரணங்களால் நாம் அதை பெறவே முடியாது என்றோ நம்பச் செய்யும். தேவனுடைய எல்லா பிள்ளைகளும் சந்தேகமும் பயமுள்ள இந்த தவறான ஆவியினால் தாக்கப்படக்கூடும். சிலருக்கு இச்சோதனை இடைவிடாமல் இருக்கலாம், சிலருக்கு எப்போதாகிலும் வரலாம். இந்தத் தீய ஆவியின் சக்தியை எல்லாருமே தைரியத்தோடு போராடி ஜெயிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அப்படி எதிர்த்துப் போராடாவிடில் ஆவியின் கனிகளை அடியோடு கொன்று விடும். இறுதியாக நாம் பெற்றிருக்கிற பரிசுத்த ஆவியின் வல்லமையை படிப்படியாக அணைத்துப் போட்டு, நம்மை விட்டு அடியோடு அகற்றிவிடும்.

இந்த பயத்தின் ஆவி என்பது ஒரு கடவுளுமல்ல அல்லது

*தீயசக்தி கொண்ட பேயுமல்ல; அது நம்மை பயப்படுத்துகின்ற ஒரு சோதனையே. விழுந்துபோன மனுக்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனுடைய எளிமை சுபாவமே காரணம். பிறவியிலேயே சுதந்தரித்துக் கொண்ட அபூரணத் தன்மையின் காரணத்தால் தேவ தயையைப் பெற தகுதியில்லாமற் போயிற்று என்ற எண்ணமே ஆகும். இந்த பயத்தின் ஆவிக்கு எதிரிடையான மருந்து என்னவென்றால், தெளிந்த சத்தியமுள்ள ஆவியின் போதனைகளை ஏற்றுக்கொண்டு அதனுடைய நிச்சயமான உறுதியான விசுவாசத்தின் நிலைப்பாட்டினைப் பற்றிக்கொள்வதேயாகும். நாம் பயத்தின் ஆவியை ஆதரிப்பதற்கு நல்ல காரணங்கள் இருப்பதை சத்திய ஆவி நமக்கு கூறுகிறது. நாம் புது சிருஷ்டியாகி கிறிஸ்துவுக்குள் வந்திருப்பதால் அந்த காரணங்கள் எல்லாம் இனி நிலைத்திருப்பதில்லை. நம் விருப்பத்திற்கு எதிரிடையாக வரக்கூடிய பலவீனங்கள், நம்முடைய குறிக்கோளை நோக்கிச் செல்லாதபடி நம்மைத் தடுக்கமுயற்சித்தாலும் அதற்கு இடங்கொடாமல் அதை வெல்ல வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காகச் செய்த ஒப்புரவாக்குதலின் ஊழியத்தில் நமக்குரிய பங்கை நாம் செலுத்தியாக வேண்டும். ஆவியில் நிறைந்த அப்.பவுல் இதைக் குறித்து:*

*"...தேவன் நம்முடைய பட்சத்தி-ருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." - ரோம. 8:31-34*

*கிறிஸ்துவுக்குள்ளாக புதிய சிருஷ்டியானவர்களுக்கு, சத்திய ஆவியின் வல்லமை, பரிசுத்த ஆவியின் வல்லமை, விசுவாச ஆவியின் வல்லமை ஏராளமாகக் கொடுக்கப்படுவதினால், தீய ஆவியாகிய பயத்தின் ஆவி விரைவில் விரட்டியடிக்கப்படுகிறது. அதனாலே*

பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சமாதானம், சந்தோஷம், விசுவாசம், அன்பு, தேவனிடத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகியவை விளைகின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்விலும் இத்தகைய போராட்டங்களை நிச்சயம் சந்தித்தே ஆகவேண்டும். புது சிருஷ்டிக்கு இந்த “பயத்தின் ஆவி” ஒரு எஜமானனாகவோ, நண்பனாகவோ, இருதயத்தில் வாசம் செய்வதாகவோ இல்லாமல் ஒரு ஊழியக்காரனைப்போல ஆக்கப்படவேண்டும். நம்முடைய இருதய வாச-ல் எந்த பெரிய தீய சக்தியும் நுழையாவண்ணம் நம்மை எச்சரிக்கும் ஒரு நாய்போல, இந்த பயம் நம்மை எச்சரிப்பதோடு, நம்மை நெருங்குகின்ற தீய சக்திகளுக்கும் அபாயக்குரல் கொடுத்து அவைகளை அனுப்பி விடுகிறது. அதனால் நாம் நம்முடைய தேவனோடும், சகோதரர்களோடும், சபையாரோடும் ஆவிக்குரிய நற்காரியங்களைச் செய்ய அனுகூலமாகிறது. தேவனுக்கும் தேவ ஆவிக்கும் விரோதமாக புறம்பேயிருந்து செயல்படும் தீயசக்திகளை நாம் இனம் கண்டு எதிர்த்துப் போரிட வேண்டும். போரிட்டு வெற்றி கண்ட பின்பு, தேவனுடன் ஒப்புரவாகி அவருடைய ஆவியில் நிறைந்தவர்களாக செம்மையான செயல்பாடுகளை சிறப்பாகச் செய்திட முடியும் என அப்போஸ்தலர் போதிக்கின்றார். நாம் எல்லா ஆயத்தங்களையும் செய்திருந்தும் அசதியாய், சோம்பேறித்தனமாய், ஜாக்கிரதையில்லாமல் இருந்து எண்ணை இல்லை என்று மணவாளவன் வந்தபோது, புத்தி இல்லாத கன்னியர்களாய் விட்டு விடப்பட்டவர்களாய் போய்விடக்கூடாது. மாறாக, சர்வ ஜாக்கிரதையுள்ளவர்களாய், அதிகாலையில் மணவாளனோடு மகிழ்ச்சியில் பிரவேசிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

எப்படிப் பார்க்கிலும் பயத்தின் ஆவி தேவனுடைய ஆவி அல்ல; அந்த பயத்தை எங்கே, எப்படி பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நெஞ்சத்தில் கொஞ்சமும் இந்த பயத்திற்கு இடமளிக்காமல், பரிசுத்த ஆவியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகிய அன்பு, மகிழ்ச்சி, சமாதானம் போன்றவையே குடிகொண்டிருக்க வேண்டும். பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். அதேபோல், வெறுப்பு, பொறாமை, பகைமை, பயம், பெருமை, உலகத்தின்மேல்

கொண்டிருக்கிற பேராசை, எதிலும் திருப்தியடையாத தன்மை போன்ற அசுத்த ஆவியின் குடும்பத்தின் குணங்கள் புறம்பே தள்ளப்படும்.

“தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.” (2 தீமோ.1:7) என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

சில வேளைகளில் தாக்குதல் முன்புறமிருந்து வராமல் பின்புறமிருந்து வருகிறது. நண்பர்களுக்காக பயப்படுகிற பயம், உலகிற்காக பயப்படுகிற பயம் - இப்படிப்பட்ட பயங்கள் கூடாது. தேவனை நம்பி விசுவாசியாதவர்கள், மற்றவர்களுக்காக தேவனை விசுவாசிப்பது போல் பாவனை செய்வது வீண். இது மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய விஷயம். இது சமாதானத்தின் ஆவியை முற்றிலுமாகத் துரத்தி, நம் செயல்பாடுகள், பலம் அனைத்தையும் தவறான வழியில் செலுத்தி விடுகிறது. கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார் என்ற சிந்தனையே தவறானது என்று இந்த பயத்தின் ஆவி போதிக்கும். கிறிஸ்துவின் ஈடுபலியினாலே எல்லாரும் மீட்கப்பட்டு ஜீவகால பரியந்தம் ஆசீர்வாதம் பெறுவார்கள் என்பதும், ஒரு கற்பனையே என்று பயத்தின் ஆவி போதிக்கும். பயத்தின் ஆவி நம்மை ஜெயிக்காவிட்டால், அதன் தோழனாகிய தப்பறையின் ஆவி நம்மை எதிர்த்திசையில் நடத்திச் செல்ல முயற்சிக்கும். மேலும் இந்த தப்பறையின் ஆவி உலகோர் அனைவருக்கும், வேண்டுமென்றே தீய வழியில் நடக்கிறவர்களுக்கும், தேவன் ஒரே வித இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் அருளுவார் என்று நம்மை நம்பச் செய்யும்.

எனவே இந்த தப்பறையின் ஆவி, தேவ வசனத்தின்படி தேவ நீதியை, தேவ திட்டப்படி நடத்துவது கடினம். மாறாக மனிதனுடைய சுயநீதியின்படி, யாவருக்கும் சுலபமாய் சுபீட்சம் உண்டாகும் என்று போதிக்கும். இப்படியாக சத்திய ஆவி சொல்லுகிற “தேவ கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், கிறிஸ்து மரணத்தை ருசி பார்த்தார்” என்ற உண்மை சத்தியத்திற்குப் புறம்பாக, விரோதமாக, தப்பறையின் ஆவி, பயத்தின் ஆவி, அடிமையின் ஆவி என்றெல்லாம் வருணிக்கப்படுகிற விரோதியான சாத்தானின் ஆவி கூசாமல் பொய்யைப் பறைசாற்றும். உலகின்

ஒவ்வொரு சிருஷ்டியும் தேவ திட்டப்படி, புதிய உடன்படிக்கையின்படி, தேவனோடு ஐக்கியமாகி ஒப்புரவாக வேண்டுமென்பதே தேவசித்தமாகும். இப்படியாக ஒவ்வொருவனும் சத்திய அறிவுக்கு கொண்டுவரப்பட்டு, பிறகு நியாயந்தீர்க்கப்பட்டு, நித்திய ஜீவனை பெறுவார்கள் அல்லது இரண்டாம் மரணமாகிய அழிவை அடைவார்கள்.

*"இதினாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்." - 1 யோவா. 4:5,6; அப்.3:23*

பரிசுத்த தேவ ஆவியை பெற்றுக் கொள்கிற யாவருக்கும் சந்தோஷமும், சமாதானமும் நிறைந்திருக்கும். இந்த தேவ ஆவியை எவ்வளவாய் பெற்றிருக்கிறார்களோ, அந்த அளவுக்கு கிறிஸ்துவின் சிந்தையும், கிறிஸ்துவின் குணநலன்களும் உடையவர்களாக மாறிஇருப்பார்கள். கர்த்தரின் ஆவி, அவருடைய வாக்குத் தத்தங்களின் பேரில் அசைக்க முடியாத விசுவாசம் வைக்க வழிநடத்துகிறது. இதற்கு எதிரிடையான வழிகளிலே தப்பறையின் ஆவி வழிநடத்துகிறது. தேவ வாக்குத்தத்தங்களில் நம்பிக்கையில்லாமை, மனிதனுடைய அடக்க முடியாத இலாப நோக்கம், எதையும் நம்பாமை, மூட நம்பிக்கைகள், தேவன் வேதத்தின் மூலம் சொல்லாத விஷயங்களில் நம்பிக்கை வைத்தல், தெளிந்த புத்தியின் ஆவியில் நடத்தப்படுகிறவர்கள் சொல்கிற விசுவாசக் கொள்கைகள் எதையும் நம்பாமை ஆகியவற்றில் தப்பறையின் ஆவி வழிநடத்துகிறது. சத்திய ஆவியோ தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய செயல்பாடுகளைத் தீவிரமாக நடப்பிக்கும். தேவனோடு தேவதிட்டத்தில் எவ்வளவு கடினமாக உழைக்க முடியுமோ அவ்வளவாக சுறுசுறுப்பாய் உழைக்கும். அதற்கு மாறாக, தப்பறையின் ஆவி தேவனுக்கடுத்த காரியங்களில் அசதியும் சோம்பேறித்தனமும் கொண்டு மந்தமாக இயங்கும். ஆனால் உலகத்துக்குரிய காரியங்களில் வெகு ஜாக்கியதையாய் இருக்கும். மெய்த்திருச்சபையின் விஷயத்திலும், இதன் மெய்யான அன்பையும் அசட்டை செய்யும். மனிதருடைய நோக்கத்திற்கான விசுவாசப் பிரமாணத்திற்கும், அமைப்புகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அடிபணிந்து நடக்கும். (ரோம.11:8)

## பொறாமையைத் தூண்டும் ஆவி

*ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள்ளாக புது சிருஷ்டியாக இருப்பவர்கள் கூட, இதே மாம்ச சரீரத்திலே இருந்து கொண்டு ஆவிக்குரிய செயல்பாட்டையும் செய்ய வேண்டிய இரட்டைப் பொறுப்புக்கு உட்பட்டிருக்கின்றனர். புதிய சிருஷ்டியானது அதற்குரிய புதிய மேனியை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் செத்ததிற்கொப்பான பழைய மனித சரீரத்திலே இருந்து கொண்டு, புதிய சிருஷ்டிக்கொப்பான செயல்பாடுகளை முயற்சியோடு செய்தாக வேண்டும். புதிய சிந்தையினால் பழைய மனித யோசனைகளை அழித்துப்போட்டு, புதிய சிருஷ்டிக்கொப்பான குணநலன்களை நாளுக்கு நாள் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும். (ஆனால் இது ஒவ்வொரு கிறிஸ்தவனும் இரண்டு சுபாவங்களை உடையவன் என்று பொருள்படவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் வேதாகமக் கருத்துக்கு முற்றிலும் ஒவ்வாதது). "பரம அழைப்புக்குப் பங்குள்ள பரிசுத்த சகோதரர்கள்" ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சிந்தையாகிய புதிய சிந்தையை உடையவர்களாக, பரிசுத்த தேவ குண இலட்சணங்களைக் கொண்டிருந்தால் மட்டுமே தேவனால் அடையாளங் காணப்பட்டு அங்கீகரிக்கப்படுவர். விழுந்துபோன மனித சுபாவமாகிய பழைய சுபாவத்திற்கும், வேத வசனத்தினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஆவியின் சுபாவத்திற்கும் எப்போதும் போராட்டம் உண்டு. சிலநேரங்களில் வேதாகமத்தில் கூட நமது ஜென்ம சுபாவமாகிய மனுஷ சுபாவமே நமது ஆவி என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக,*

*"நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா." -யாக். 4:5*

*பரிசுத்த ஆவியின் அப்பழுக்கற்ற அன்பினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சுபாவம், புதிய சிந்தை உடையவர்கள் ஒருபோதும் பொறாமைப்பட மாட்டார்கள். "அன்புக்கு பொறாமை இல்லை; அன்பு தன்னைப் புகழாது; இறுமாப்பாயிராது." (1 கொரி.13:4) எவ்வப்போது பொறாமையின் ஆவி, வெறுப்பு, கலகம்,*

வீண் பெருமையின் ஆவி நம்மை ஆட்கொண்டு நம் செயல்பாடுகளை இயக்குகின்றதோ, அவ்வப்போதெல்லாம் பழைய மனித சுபாவம் புதிய சிருஷ்டியை அமிழ்த்திவிட்டு, பழைய சுபாவமே மேலோங்க ஆரம்பித்து விடுகிறது. இந்த தீயகுணங்களை விட்டு விட்டு அதற்கெதிரான ஆவியின் கனிகளாகிய சாந்தம், இச்சையடக்கம், நன்மை, தாழ்மை, சகோதர சிநேகம் ஆகிய குணங்களை எவ்வளவாய் பயிற்சி செய்கிறோமோ , அவ்வளவாய் தேவ சுபாவத்தில், தேவ கிருபையில் வளர்ந்து பெருகுவோம். இப்படி ஆவிக்குரிய வளர்ச்சியடையும் போது நாம் கிறிஸ்துவின் சாயலை அடைகிறோம். கிறிஸ்துவின் சாயலாய் மாறும்போது தேவ சாயலாகவும் மாறுவோம். ஆவி என்கிற ஆள் தன்மையில் நிரப்பப்படாமல், தேவ ஆவியின் வல்லமையாலும், தேவ சித்தத்தின்படியான செயல்பாடுகளால் நிரப்பப்படுவதே ஆவியில் நிறைந்திருப்பது என்பதன் பொருளாகும். அப்படிப்பட்ட ஆவியே, தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் இருந்தது.

ஆவிக்குரிய சிந்தனை, செயல்பாடும் மாமிச சிந்தனை, செயல்பாடும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால், இவைகளுக்கிடையே எப்போதும் ஒன்றுக்கொன்று விரோதமான போராட்டம் இருப்பதாக அப்.பவுல் கூறுகிறார்.

"...ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை (விருப்பத்தை) நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு (ஆவியின் விருப்பத்திற்கு) விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் (புதிய சிருஷ்டிகள்) செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக் கொன்று விரோதமாயிருக்கிறது." (கலாத். 5:16,17) மாம்சத்தின்படியான வஞ்சனையும் எதிர்ப்பும் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பதால், பரிபூரணமாக பரிசுத்த வளர்ச்சிக்கு இடையூறாக, இடைஞ்சலாக இருக்கின்றது. இருந்தபோதிலும் தேவனுடைய கிருபையினாலே "புதிய சிருஷ்டி"யாக நம்மை ஏற்றுக் கொண்ட நிலையி-ருந்து, நம்மை முற்றிலுமாக தடைப்படுத்தி விடுகிறதில்லை. இத்தனை

*தடைகளுக்கு மத்தியிலும், இருதயமும், மனமும் பரிசுத்தமாக கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கேற்புடையதாகவே நிலைநிறுத்தப்படுகிறது.*

## ஆவியின் மூலம் தேவனைப் பற்றிய போதனை

*கர்த்தருடைய ஆவி, எவ்வாறு வல்லமையாய் அவருடைய ஞான வெளிச்சத்தில், அவருடைய ஜனங்களுக்கு மத்தியில் பணிபுரிகிறது என்பதை நாம் இதுவரை கற்றுக் கொண்டோம். அந்த ஆவியின் வெளிச்சத்திலே, எல்லாத் தப்பறைகளையும் அகற்றிவிட்டு, சுத்த சத்தியத்தைப் புரிய வைக்கிறது. ஜீவனுள்ள சத்திய பிரகாச வெளிச்சத்தில் நடத்துகிறது என்பதை அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளினால் அறிகின்றோம்.*

*"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்." - 1 கொரி.2:9,10*

*நமது சுயசித்தத்தை விட்டுவிட்டு, தேவசித்தத்திற்கு நம்மை முழுவதும் ஒப்புக் கொடுக்கும்போது, நாம் அவருடைய சிந்தனையிலே, அவருடைய பலத்திலே, அவருடைய ஆவியிலே அவரால் போதிக்கப்பட்டவர்களாய் இருப்போம். இந்தப் புதிய சிந்தனைக்குரிய புதிய குறிக்கோளுள்ள ஜீவியத்தைத் தொடர்வதால் எல்லாவற்றையும் புதிய வெளிச்சத்தில் காண்பதால் எல்லாம் புதிதாகின்றன. புதிய சித்தம், புதிய சிந்தனை தேவனுடைய இரகசியங்களையும் ஆழமாக ஆராயத் தூண்டுகிறது. தேவனுடைய சித்தத்தை நோக்கத்தை ஆராய்ந்து அறிந்து, அதன்படி நடக்கும் அவருடைய மைந்தர்களாகிறோம். நம்முடைய பிதாவின் ஆவியும் சிந்தனையும் உடையவர்களாய், அவருடைய போதனைகளை கவனமாகக் கருத்தில் கொண்டு, அவருடைய அறிவுரைக்கிசைவாக, ஒவ்வொரு காரியத்திலும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.*

"மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக் குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்." - 1 கொரி.2:11

எந்த ஒரு மனிதனும் அடுத்தவன் என்ன நினைக்கிறான் என்பதை ஒருக்காலும் சொல்ல முடியாது. ஆனால் அடுத்தவன் தன் சிந்தனையை வெளிப்படுத்தினால் இவன் புரிந்து கொள்வான். அதைப் போலவே பரிசுத்த ஆவியைப் பெற்று, தேவ சித்தத்திற்கு இசைவாக வருகிறவர்களைத் தவிர, வேறுயாரும் தேவனுடைய சிந்தனையையும், திட்டத்தையும் அறிந்து கொள்ளமுடியாது.

"நமக்கோ தேவன் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்... ஜென்ம சுபாவமான மனிதனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படு கிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." (1 கொரி. 2:10,11,14) யாரிடம் சத்திய ஆவி இருக்கிறதோ, யாரிடம் தேவ சிந்தை தேவ வல்லமை இருக்கிறதோ, அவர்கள் மட்டுமே இதனைப் புரிந்து கொள்வர். நீதிக்கும் சத்தியத்திற்கும் இசைவாக ஆவியை பெற்றிருப்பவர்கள், இந்த ஒழுங்குகளை புரிந்து கொண்ட அளவுக்கு தேவசிந்தையை இன்னும் அறிந்துகொள்ளவும், இன்னும் அதிகமாக அவரது ஆவியை பெறவும் அனுதினமும் தேடவேண்டும். இப்படிக் கீழ்ப்படிகிற தேவபுத்திரர்கள், நாளுக்கு நாள் சத்திய ஆவியிலே வளர்ந்து தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிவார்கள். பூமிக்குரிய காரியங்களை ஆவிக்குரிய காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் இந்த நிலையை அடைய முடியாது. ஆனால் ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடு நிதானித்து நடப்பவர்கள் யாவரும் அந்த தெய்வீக நிலைமையை அடைவார்கள். (1 கொரி. 2:13) "ஆவிக்குரியவன் (தேவனுடைய சிந்தையையும், ஆவியையும் பெற்றுக் கொண்டவன்) எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; (தெய்வீக திட்டப்படி, ஆவிக்குரியவைகளையும், மனிதனுக்குரியவைகளையும் சரியாய் நிதானித்து கணிக்கத்

*தெரிந்தவன்). ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப் படான்." 1 கொரி. 2:15*

*ஜென்ம சுபாவ மனிதன் தேவதிட்டத்தினை, தேவ ஆவியை அறியாததினால் மனப்பூர்வமான பிரதிஷ்டை செய்வதற்கு முன்வராமல் இருக்கிறான். அதனால் ஆவிக்குரிய சிருஷ்டியின் நோக்கம், அவனுக்கு உண்மையற்றதாகவும், காரண காரியத்திற்கு அப்பாற்பட்டதாகவும், அவனால் ஏற்றுக் கொள்ள முடியாததாயுமிருக்கும். இதனாலேயே உலக சிந்தையுடையவர்கள் கர்த்தரைப் பின் பற்றுகிறவர்களை "பைத்தியக்காரர்" என எண்ணுகிறார்கள். ஏனெனில் அவர்கள் இவ்வுலகத்தின் சிந்தையை மட்டுமே உடையவர்கள். (1கொரி. 4:10)*

## பாரகிளெடோஸ் என்கிற தேற்றரவாளன்

*யோவான் 14:16, 26 ஆகிய இருவசனங்களிலே வருகிற "தேற்றரவாளன்" என்ற சொல்லுக்கு பாரகிளெடோஸ் என்ற கிரேக்கப் வார்த்தை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பொருளாக சொல்லப்படுகிற தேற்றுதல் (சாந்தப்படுத்துதல், அமைதிபடுத்துதல்) என்ற வார்த்தை சரியானது அல்ல. சரியான பொருள் உதவி, உற்சாகப்படுத்துதல், பலப்படுத்துதல் ஆகும். இயேசுவின் நாமத்தினால் இயேசுவின் பிரதிநிதியாக பிதாவினால் அனுப்பப்படுகிற பரிசுத்த ஆவி அவரது சீடர்களின் அருகே இருந்து தேவையான நேரத்தில் உதவிகளை செய்யும் என்று நமது ஆண்டவரின் வாக்குத்தத்தம் உணர்த்துகிறது. இந்த பரிசுத்த ஆவி அவரது ஜனங்களை வழிநடத்தி, எல்லா ஆலோசனைகளையும் வழங்கி அவர்களைக் கொண்டு "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" என்று சொல்ல வைத்தார். பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற ஒவ்வொரு செயல்பாடுகளும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஆவியினாலே நம்மை வழிநடத்துவதாகும் என்கிறார்.*

*"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்." - யோவான் 14:18*

*இவ்விதமாக பரிசுத்த ஆவி தன்னுடனே இருப்பதாக காண்பிக்கிறார்.*

"...கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." தேவ உதவியாகிய பாரகிளெடோஸை பெற்றிருக்கவில்லை. ரோம.8:9

முழு திருச்சபையாரிடத்திலும் தேவ வல்லமை உள்ளது. தனக்குரிய இந்த தேவ வல்லமையை ஒவ்வொருவருடைய முயற்சியினாலும் பயிற்சியினாலும் அந்தப் பங்கினைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவரவர் கடமை. சத்திய ஆவியைப் பெற்றுக் கொள்ளும் பிரதான வழி - சத்திய வசனங்களை முழு கவனத்துடன் ஆராய்வதே ஆகும். சத்திய ஆவியைத் தம்முடைய ஆராய்ச்சியின் மூலம் பெற்றுக் கொண்டவர்கள், பெற முயற்சிக்கிறவர்களுக்கு வாய்க்காலாக உறுதுணையாக இருக்கிறார்கள்.

தேவ வல்லமை அல்லது தேவ ஆவி மனிதனால் காணமுடியாத ஒன்று. ஆனால் ஆவியின் செயல்பாடுகள் பார்க்கவும், உணரவும் கூடியவைகள். இது எப்படியெனில், மின்சாரத்தை யாரும் பார்க்க முடியாது. ஆனால் செம்புக் கம்பியின் வழியாக மின்சாரம் பாய்ச்சப்படும் போது விளக்கு எரிவதினால் அனைவரும் பார்க்க முடிகிறது. அதைப்போல மின்சார உந்துதலை பார்க்க முடியவில்லையென்றாலும், அதன் விளைவால் கார் ஓடுகிறதைப் பார்க்க முடிகிறது. மின்னாற்றலினால் ஒளி உருவாவதையும், வெப்பம் உருவாவதையும், தொலைபேசி, தந்தி பணிகள் நடப்பதையும் பார்க்க முடிகிறது. இந்த மின்னாற்றலால் இத்தனை நல்ல பயன்கள் இருப்பதைப் போலவே, அதே மின்னாற்றல் நாற்காலியிலே மரணத்தை வரவழைக்கவும், உபயோகமாகிறது. இதைப் போலவே பரிசுத்த ஆவியும் தேவனுடைய ஆவிக்குரிய சக்தி அல்லது வல்லமை ஆகும். எந்த அளவு அதன் தொடர்பு தேடப்படுகிறதோ, அந்த அளவுக்கு அவரவருக்கு வல்லமை, ஒளி, சக்தி, திறமை முதலிய ஆசீர்வாதங்களைப் பகிர்ந்தளிக்கிறது. அதைப்போலவே வேண்டுமென்றே கீழ்ப்படிய மறுக்கின்றவர்களை இரண்டாம் மரணத்திலும் ஆழ்த்தி விடுகிறது. எனவே எல்லா நற்பணிகளுக்கும் ஏதுவாக, இந்த பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பதற்கு தகுந்த கருவியையும் தொடர்பையும் கர்த்தருடைய ஒவ்வொரு பிள்ளையும் பெற்றிருக்க வேண்டும்.

இவையெல்லாவற்றையும் பார்க்கும்போது,

தேற்றரவாளனாக ஒரு நபரோ, மூன்றாவது கடவுளோ ஒருவர் இருந்து தான் ஆறுதல் தரவோ, வல்லமை தரவோ, உற்சாகமூட்டவோ முடியும் என்ற கூற்று தவிடு பொடியாக்கப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மாறாக, இந்த திடப்படுத்துதல், வழி நடத்துதல் ஆகிய எல்லாப் பணிகளையும் செய்யும் பரிசுத்த ஆவி தேவனுடைய ஆவியும், தேவகுமாரனாகிய கிறிஸ்துவின் ஆவியுமே ஆகும். 18,23-வசனங்களின் மூலமாக தேவனும் அவர் குமாரனுமாகிய கிறிஸ்துவுமே தங்கள் ஆவியினாலே சபையை குணப்படுத்தி, பலப்படுத்தி வழிநடத்தி வருகிறார்கள் என்பது வெளியரங்கமாய் புலனாகிறது. இதை நிரூபிப்பதற்காகவே நமது ஆண்டவர், "இதோ! உலகம் முடியும் வரையில் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று சொன்னது அவர் மாமிசத்தில் அல்ல - ஆவியில் அவர்களோடு உறவாடிக் கொண்டிருப்பதையே தெளிவு படுத்துகிறது.

அவர், அவருக்கே, அவரோடு அவரில் என்று "பாரகிளெடோ"ஸை குறிப்பிடுகிற கிரேக்கச் சொல், ஆண்பாலில் சொல்லப்பட்டது தவறு. இது அவள், அவளுக்கு, அவளால் என்ற பெண்பாலிலும், அது, அதற்கு என்கிற பொதுப்பாலிலும் அஃறிணையிலும் சொல்லக் கூடிய பொதுவான வார்த்தையாகும். ஹீடாவ் (Heautou) என்கிற கிரேக்கச் சொல்லுக்கு "அவருக்கு" என்று இந்த வசனத்தில் சில இடங்களில் வேதத்தில் மொழிபெயர்க்கப் பட்டிருந்தாலும், மற்ற 9 இடங்களில் "அதற்கு" என்று பொதுவான மொழிபெயர்ப்பில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எகினோஸ் (Ekinos) என்ற கிரேக்கச் சொல் 'அவர்' என்று சில இடங்களிலும், பல இடங்களில் இதே வார்த்தை "அவைகள்" என அஃறிணையிலேயே எழுதப்பட்டும் வந்திருக்கிறது. இதே எகினோஸ் என்ற சொல் 'அது' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "...அதைக்குறித்தும் (மரணத்திற்கேதுவான பாவம்) வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்." - 1 யோவா.5:16

## "அவர் உங்களை சகல சத்தியத்திலும் வழிநடத்துவார்"

"சத்திய ஆவியாகிய" தேவனுடைய வல்லமையை எதன் வழியாய்ப் பெறலாம் என்பதற்கு நம் கர்த்தராகிய இயேசுவே, "நான் உங்களுடனே பேசுகிற வார்த்தைகளே, உங்களுக்கு ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது" என்று தெளிவுபடுத்தினார். அதாவது என்

வார்த்தை - என் தந்தையின் சித்தத்தையும், என் சித்தத்தையும் என் ஆவியையும் என் தந்தையின் ஆவியின் வல்லமையையும் குறிக்கிறது என்று கூறுகிறார். எனவே, நாம் ஏற்கனவே சொன்னபடி நம் ஆவிக்குரிய ஜீவிய முன்னேற்றத்திற்கு வேதத்தை சரியாக, முறையாக ஆராய்வதே அவசியமாகிறது. எனவே நமது கர்த்தருடைய கண்டிப்பான "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்" என்ற கட்டளையை நடைமுறையில் கடைப்பிடிக்கக் கடமைப் பட்டவர்களாகிறோம். இவ்விதமாகவே அப். பவுலும் பெரோயா பட்டணத்து விசுவாசிகள், "காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதத்தை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயாவில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசா-களாயிருந்தார்கள்" என்று சாட்சி கொடுக்கிறார். எனவே, அப்.பவுல், "நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும்" என்கிறார். அவர் தீமோத்தேயுக்கு புத்திமதியாக,

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக..." என்று கூறுகிறார். இதே கருத்தினை அப்.பேதுரு வலியுறுத்தி,

"அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்குண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்" என்கிறார். -யோவா.5:39; அப்.17:11; எபி.2:1; 2தீமோ.3:16; 2 பேது. 1:19.

"ஆவியில் நிறைந்திருக்கிற நிலைமை" அல்லது தேவ சிந்தை வெறுமனே வேதத்தை வைத்திருப்பவர்களுக்கோ, அல்லது வேதத்தைப் படிப்பவர்களுக்கோ அருளப்படுவதில்லை. ஆனால் வேதத்தை ஆர்வமுடன் தேடி ஆராய்ந்து புரிந்து கொண்டு, அதற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கே அருளப்படும். தேவ ஆவியில் நாம் நிறைந்திருக்க வேண்டுமென்றால், சத்திய ஆவியின் சுனையாகிய

வேதத்தை வெகு ஆழமாகவும், அதிகமாகவும் நாம் பருக வேண்டும். மண்பாண்டமாகிய நம்முடைய சரீரம் பலவீனமாக இருப்பதால், இந்த சத்திய ஆவிக்குரிய செய்திகள் சில நேரங்களில் கசிந்து வீணாய்ப் போய்விடும்.(எபி. 2:1) ஆவிக்குரிய சிந்தனைகளில் மறதியோ, கசிவோ இருக்குமானால், இந்த உலகத்திற்குரிய ஆவி அந்த காலி இடங்களையெல்லாம் ஆக்கிரமித்துக் கொள்ளும். தேவ ஆவியில் நடக்கிற தேவ பிள்ளைகள், எப்படியாகிலும் பலவீனப்பட்டால், அந்த இடத்தை உலக சிந்தனைகளால் நிறைத்து புதிய ஆவி, புதிய சிந்தனை, புதிய தேவ வல்லமை இவற்றையெல்லாம் அழித்துவிட எப்பொழுதும் இந்த உலகத்தின் ஆவி துடித்துக் கொண்டிருக்கிறது. விசுவாசமுள்ள புதிய சிருஷ்டிகள் யாவரும், கர்த்தரிலும், கர்த்தருடைய ஆவியிலும், எப்பொழுதும் அனலாக இருக்க வேண்டும். பெற்றுக்கொண்ட ஆவியை அணைத்து விடாமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த ஆவி அணைக்கப்பட்டு விடும்.

வேத வசனங்களை மட்டுமே ஆராய்ந்து, கேட்டபொழுது சொல்லக்கூடிய திறமை மட்டுமே பெரிதென்று எண்ணிவிடக்கூடாது. அது அவசியம் தான். ஆனால் அதைவிட சத்திய ஆவியை பெற்றிருப்பது அவசியம். வேத வசனத்தில் சொல்லப்பட்டபடியே தேவசித்தத்தோடு நம்முடைய நோக்கமும் ஒருங்கிணைந்து, மனமுவந்து, ஒன்றோடொன்று இசைந்தால் தான் ஒத்தாசையாக இருந்தால் தான் நாம் சத்திய ஆவியைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த நிலைமையை அடைய ஒரே ஒரு வழிதான் உண்டு. முதலாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய மீட்பரென்றும், நமக்காகப் பாவ நிவாரண பலியானவரென்றும் விசுவாசிக்க வேண்டும். இரண்டாவது, அவரது சித்தத்தை செய்ய, அவரைத் தேடி அறிய நம்மை முற்றிலுமாக அர்ப்பணம் செய்ய வேண்டும்.

தேவநீதியோடு, தேவ சிந்தையோடு ஐக்கியப்பட்டிருக்கும் சத்திய ஆவி அல்லது பரிசுத்த ஆவியாகிய தேவ வல்லமையை ஆவியின் வரங்களோடும், ஆவியின் கனிகளோடும் குழப்பிக் கொள்ளக்கூடாது. ஆவியின் வரங்களினால் ஆவியின் கனிகள்

*கிடைக்கின்றன. இதன் அருங்குணங்கள் சாந்தம், பொறுமை, நற்குணம், சகோதர சிநேகம், அன்பு ஆகியவைகளே. இந்த ஆவியின் அருங்குணங்களுக்கு ஆயத்தப்படுத்துகிற இந்தக் கனிகளை நாம் அனுதினமும் முயற்சியோடு பயிற்சி செய்வோமேயாயின் சத்திய ஆவியின் வல்லமை உத்தம அளவிலே நம்மிடம் குடிகொண்டிருக்கும். சிலர் இந்த ஆவியின் கனிகளால் சத்திய ஆவியின் நிறைவைப் பெற வெகுகாலம் எடுத்துக் கொள்வர். ஆனால் சிலர் பெருமுயற்சியின் பயிற்சியினால் இந்த உன்னத நிலையை வெகு விரைவிலேயே அடைவர். ஒவ்வொருவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை நினைவு கூறவேண்டும்.*

*"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்." (யோவா.15:8) அவருடைய பிரதிஷ்டைக்குட்பட்ட சீஷர்கள் எல்லாம் திராட்சை கொடிகளை குறிப்பிடுகிறதாக நமது ஆண்டவர் கூறுகிற திராட்சை செடியின் உவமையை நாம் நினைவு கூறவேண்டும்.*

*"என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்." - யோவா . 15:2*

*பிரதிஷ்டை எடுத்தவுடனே ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்து என்னும் நற்குலத் திராட்சைச் செடியிலே ஒரு கிளையாகிறான். வேரி-ருந்து அளிக்கப்படுகிற எல்லா சத்துக்கும் பங்குள்ளவனாகிறான். இதனால் பரிசுத்த ஆவியின் மூலம் வழிநடத்தப்படும் போஷாக்கைப் பெற்றுக் கொண்டவுடனேயே அவன் எல்லா கனிகளையும் பெறுவான் என்றோ, அல்லது ஏதாவது ஒன்றையோ பெறுவான் என்றோ எதிர்பார்க்க கூடாது. திருச்சபை என்னும் திராட்சைச் செடியின் தொடர்புகள்- வேருக்கும் அதன் கிளைகளுக்கும் ஆவிக்குரிய சத்திய விஷயங்களில் ஐக்கியமும் உறவும் இருப்பதைக் காண்பிக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்குள் ஜீவன் இருக்கிறது என்பது நிரூபிக்கப்படுகிறது. மெல்லிய நரம்பு போன்ற செடியின் சில உதிரி பாகங்கள், அரும்புகள், மகரந்தங்கள் ஆகியவை சத்திய உணர்வை மேன்மேலும் வலுவூட்டி வளர்க்க*

உதவியாய் இருக்கின்றன. அடுத்தபடியாக இலைகளும், அதற்கடுத்தபடியாக, கிளைகளும், பூ காய் கனியாக வரலாறு படைக்கின்றது. கனி முதலில் தோன்றும்போது அளவில் சிறியதாகவும், துவர்ப்பு சுவையாகவும் இருக்கும். பிறகுதான் அது வளர்ந்து பெரிதாகி இனிப்புச் சுவையை அடையும். தோட்டக்காரன் விரும்புகிறவண்ணமாக அது பெரிதாவதற்கும், கனி கொடுப்பதற்கும் சில காலங்கள் செல்லும். அப்படியே கிறிஸ்துவுக்குள் ஆவியின் கனிகளும், ஒவ்வொரு கிளையிலும் பூத்து, காய்த்து, கனிகொடுக்க சில காலம் பிடிக்கும். எந்தக் கிளையில் இந்த ஆவியின் கனிகளாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, சகோதர சிநேகம், விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவை காணப்படவில்லையோ, அங்கு சத்து குறைந்து, அந்தக் கொடிகள் வாடி வதங்கி செத்துப்போய் விடுகிறது. மற்ற கிளைகளோடு தொடர்பு துண்டிக்கப்பட்டு சத்து இழந்ததினால் அது படிப்படியாக செத்து விடுகிறது.

சுவிசேஷ யுகத்தின் ஆதிச்சபையில் ஊற்றப்பட்ட ஆவியின் வரங்கள் வேறு; ஆவியின் கனிகள் வேறு. ஆதி சபையில் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை, சிலர் தலையின் மேல் வைத்ததின் மூலமாக, சிலருக்குப் பரிசுத்த ஆவியின் வரங்கள் உடனே கொடுக்கப்பட்டது, அதிலே சில விதிவிலக்குகளும் இருந்தன. (அப்.2:4; 10:45) தேவ ஆவியின் வரத்தினை கிரயத்துக்குக் கொள்ள நினைத்த சீமோன் மாகூஸ், பேதுருவை அணுகியபோது, “தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாம் என்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக் கூடவது” என்றார். (அப்.8:13-21) அநேக அற்புதங்களைச் செய்யும் வரம் பெற்றிருந்த பிலிப்பு, தன்னால் மனம் திரும்பப்பெற்ற கிறிஸ்தவர்களுக்கு, தான் பெற்ற வரத்தை கொடுக்க முடியாததினால் அப்போஸ்தலர்களை அழைத்தார். அப்போஸ்தலர் பவுல் சொன்னதுபோல, இவ்வரங்கள் எல்லாம் ஒரு காலத்தில் அழிந்து போகும். இவைகள் எவ்வளவு காலத்திற்கென்று கணக்குப் பார்ப்போமேயானால், அடையாளங்கள் தேவைப்பட்ட அந்தக் காலத்தில், இவ்வரங்கள் கிடைக்கப் பெற்ற அப்போஸ்தலர்களும் இறந்து விட்டனர்; அவர்களால் வரங்களைப் பெற்றவர்களும்

மரித்துப் போன பின்பு அந்த வரங்கள் முற்றிலும் நீக்கப்பட்டது. விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய இந்த வரங்கள் அற்புதம் செய்கிற வரங்களல்ல. இவைகள் ஆவியின் கனிகளைப் போல வளர்ந்து, பெருகி, கனிகொடுக்க வேண்டிய ஆவியின் குணங்களாகும். இக்கருத்தை அப்போஸ்தலர் வேறுபல இடங்களிலும் கூறி இருக்கின்றார். 1 கொரி 13:8; யோவா 15:6

ஆவியின் வரங்களைக் குறித்து அப்போஸ்தலர் பேசுகிறபோது, 1) அப்போஸ்தலர், 2) தீர்க்கதரிசி, 3) போதகர்கள் என்று கூறுகிறார். இப்போதும் அப்போஸ்தலர் வரம் நம்மிடையே உண்டு. ஏனெனில் அவர்களது போதனை புதிய ஏற்பாட்டில் இப்போதும் நமக்குக் கிடைக்கிறது. சொல்லப்பட்டிருக்கிற அந்தப் போதனையைத் தவிர புதிதாக எந்த அறிவுரைகளும் நமக்குத் தேவையில்லை. எனவே அந்த 12 அப்போஸ்தலர்களுக்கு வேறு எந்த வாரிசுகளும் இல்லை; அப்படி எந்த வாரிசுகளும் தேவையாய் இருக்கவுமில்லை. கிறிஸ்துவின் கிரீடமாய் இருக்கிற ஆட்டுக்குட்டியானவரின் 12 அப்போஸ்தலர்களே, 12 நட்சத்திரங்களாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. புதிய எருசலேமாகிய திருச்சபையின் 12 அஸ்திபாரங்கள் இவர்களே. (யோவா 6:70; வெளி 12:1; 21:14) இப்பொழுதும் தம்முடைய திருச்சபைக்கு, போதகர்கள், தீர்க்கதரிசிகள், பலமொழி பேசும் வல்லுநர்களை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இருந்த போதிலும் ஆதித்திருச்சபைக்கு அருளிய பரிசுத்த ஆவியின் சக்தியானது அபரிமிதமாக இருந்தது. அன்று அப்போஸ்தலர்கள் தாங்கள் அடுத்தவர் தலைமீது கைவைத்த உடனேயே பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே அதிகம் படிக்காதவர்கள் கூட பலமொழி பாஷை பேசும் வரம் தரப்பட்டது. அப்படிப்பட்ட வல்லமையான அற்புதங்கள் ஆதிகாலத்திருச்சபைக்கு கொடுக்கப்பட்ட அளவு தற்போது தேவையில்லை. ஆகவே அப்படிப்பட்ட வரங்களும் அளிக்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக தேவன், இயல்பாகவே புரிந்து கொள்ளக்கூடிய தன்மையுடைய, கல்வியறிவு பெற்றிருக்கக்கூடிய பல்வேறு நபர்களை தெரிந்து கொண்டு தம்முடைய சேவைகளில் ஈடுபட வைக்கிறார். உலகியல் தகுதிகள் எத்தனையிருந்தாலும் அவையெல்லாவற்றையும் விட, தங்கள்

இருதயத்தை தேவனுக்கு அர்ப்பணித்தவர்களாய், இருதய சுத்தியோடு அவருக்கு நேராக நடப்பதே அவருக்குப் பிரியம். அவருடைய விசேஷ பிரதிநிதிகளாய் இருக்க வேண்டும் என்று யாரை விரும்புகிறாரோ, அவர்களுக்குத் தமது ஆவியை நிறைவாகத் தந்து, அவர்களுக்கு வேண்டிய தகுதிகளையும் வளரச் செய்கிறார். அவர்களுக்கு எந்த நேரத்தில், எப்படி உதவ வேண்டுமோ அந்த சமயத்தில் உதவி செய்ய அவர் வல்லவராயிருக்கிறார். உதாரணமாக, பேசுவதில் மிகவும் மந்தமாயிருந்த மோசேக்கு உதவியாக ஆரோனை மோசேக்கு வாயாக அவர் தெரிந்து கொண்டார்.

ஆதிகாலத்தில் திருச்சபை நடத்தி வந்த (வெளியரங்கமாக அற்புதம் செய்த) முறைமை மாறியிருந்தாலும், இப்போதும் அதே ஆவியைக் கொண்டு திருச்சபையாருக்குத் தேவையான எல்லா உபகரணங்களையும், உதவிகளையும் செய்து வருகிறார் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய உலகில் அநேகர் தங்களைப் போதகர்கள் என்றும், தீர்க்கதரிசிகள் என்றும் சொல்-க் கொள்பவர்களை நியாயந் தீர்க்க தேவன் தம்முடைய வல்லமையினால் சிறுமந்தையாரைத் தெரிந்து கொண்டு, தம்முடைய சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்களை சகல சத்தியத்திலும், சகல நன்மைகளிலும் வழிநடத்தி வருகின்றார். இப்படிப்பட்ட போலி போதகர்களும், ஊழியக்காரர்களும் பெற்றிருக்கிறவைகளை தேவ பிள்கைள் பெறக்கூடாது. கர்த்தரால் முன் குறிக்கப்பட்டவர்களே அல்லாமல் மற்ற யாரும் இந்த வரங்களை அடைய முடியாது. இப்படிப்பட்டவர்கள் தங்கள் விசுவாசத்தில் தேறி, விசுவாசிக்கிற எவருக்கும் சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சிந்தனையையும், பிதாவின் சித்தத்தையும், திட்டத்தையும் அறிவிப்பார்கள். ஒருவன் இப்படிப்பட்ட விசுவாசத்திற்குரிய நற்செய்தியைக் கொண்டு வராமல், தன்னுடைய சுயஞானத்தின்படியோ, அறியாமையிலோ போதித்து வந்தால் அப்படிப்பட்டவனை, சத்தியத்தை அறிவிக்க வந்த போதகராக ஏற்றுக் கொள்ளக்கூடாது. அப்படிப்பட்டவர்கள் தப்பறைக்கு ஊழியக்காரர்களாயிருக்கலாமே அல்லாமல், தேவ ஊழியராய் இருக்க முடியாது.

*இப்படியாக தேவன் தம்முடைய ஆவியைக் கொண்டு சத்தியத்தின் வல்லமையினாலே, தம்முடையவர்களை அவர்கள் நடக்க வேண்டிய வழியில் நேரடியாகவும், தம்முடைய ஆவியைக் கொண்டு வழிநடத்தும் போதகர்கள் மூலமாகவும், அவர்களை நீதியின் பாதையில் நடத்துகிறார். இப்படியாக திருச்சபையாருக்கு இயேசுகிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியமே மார்க்கமாகவும், பிற்காலத்தில் இதைப் போலவே வரப்போகிற உலக மகா ஜனங்களுக்கு அதுவே மார்க்கமாகவும் தேவன் உண்டாக்கிய வழியே இந்த ஒப்புரவாகுத-ன் வழியேயாம். இதைத்தான் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதிய யோவான்:*

*"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கவடன்" என்று கூறுகிறார். - வெளி. 22:17*

## அத்தியாயம் 9

# ஞானஸ்நானம், சாட்சி, ஒப்புரவாகுதலின் ஆவியினால் முத்திரையிடப்படுதல்

*ஆவியின் ஞானஸ்நானம் ஒன்றுதான்-மூன்று பகுதிகளாக-இந்த ஞானஸ்நானத்தின் உட்கருத்து-"பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள்"-எல்லா மாம்சத்தின் மேலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியின் வேறொரு ஞானஸ்நானம்-இதன் உட்கருத்து-ஆவிக்காக ஜெபித்தல்-ஆவியின் சாட்சி-இதன் முக்கியத்துவம்-இது இல்லாமல் தேவனோடு சமாதானமில்லை-அது தன்னிடம் இருக்கிறதா இல்லையா என்பதை சிலரே அறிந்திருக்கின்றனர்-இதுவே நான் அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிற காரியம்-ஆவியின் சாட்சியை அறிந்துகொள்வதெப்படி-ஆட்சிமுறையில் வேறுபாடுகள்-ஆவியின் சாட்சியம்-ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல்-ஆவியினால் நிறைந்திருத்தல்-ஆவியின் முத்திரை-அது முத்திரையிடும் வாக்குத்தத்தம்-மீட்பின் நாள் வரை-உன்னத நிலையை அடைய வாஞ்சிக்க வேண்டும்-தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.*

"பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்கள் எல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்தி-ருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்கு தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்." அப். 2:1-4

**சு**விசேஷ யுகத்தில் உள்ள திருச்சபையாருடைய

வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள்-ஐம்பதாம் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளாகும். நம்முடைய மீட்பர், நமக்காக, தேவனுக்கு முன்பாக பிரதான ஆசாரியராகத் தோன்றினார் என்று குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஈடுபலியை 50 நாட்களுக்கு முன்பாக கல்வாரியில் தியாக பலியாக நிறைவேற்றி முடித்தார். எனவே அவர் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இந்த ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்து பிரதான ஆசாரியரானார். இந்த ஈடுபலியை தேவன் ஏற்று அங்கீகரித்துக் கொண்டதினால், அப்போஸ்தலர்களும், விசுவாசிகளும், யார் யார் இயேசுகிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஈடுபலியை ஏற்று விசுவாசித்து, பிதாவண்டையில் சேர விருப்பப்படுகிறார்களோ, அவர்களெல்லாரும் தேவ புத்திரர் (யோவா 1:12) என அடையாளம் காட்டப்படுகிறார்கள். இப்படி அவர்கள் தங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு உண்மையென நிரூபிக்கப்பட்டபிறகு, "சுவீகாரத்தின் ஆவி"யைப் பெற்ற தேவ குடும்பத்தின் அங்கங்களாகிறார்கள். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிலைமையை அடைந்தோம் என்பது நிரூபிக்கப்பட்டாக வேண்டும். அவ்வாறு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட அப்போஸ்தலர்களும், விசுவாசிகளும் தங்கள் இருதயங்களில் பரிசுத்த ஆவியின் கிரியை செயல்படுவதை வெளியரங்கமான அடையாளங்களால் திருப்திகரமாகும் அளவுக்கு நிரூபித்துக் காண்பிக்க வேண்டும். இப்படிப்பட்ட விசுவாசிகளுடைய கிரியைகள், அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களைப் பின்பற்றி வரும் விசுவாசிகளுக்கும் இவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றவர்கள், கிறிஸ்துவுக்குள் உடன் சுதந்திரராகப் போகிறவர்கள் என்று வெளியரங்கமாக, திருப்திகரமாக நிரூபிக்கப்பட்டாக வேண்டும்.

இவைகள் எல்லாவற்றிலும் தேவ ஆவியின் வல்லமை வெளிப்படுகிறதேயல்லாமல், பிதாவாகிய தேவன், குமாரனாகிய கிறிஸ்து என்ற இருவரை அல்லாமல், வேறு மூன்றாவதான ஒரு கடவுளோ, அவரின் வல்லமையோ தேவையே இல்லை என்பது இதனால் நிரூபிக்கப்படுகிறது. இதற்கு நேர்மாறாக, பரிசுத்த ஆவி என்பது புதிதாய் பிறந்த ஒவ்வொரு தேவபுத்திரரையும் ஆட்கொண்டு, இயக்கக்கூடிய, வழிகாட்டக்கூடிய தேவ வல்லமையே அல்லாமல்

*இது ஒரு மூன்றாவது தேவனல்ல. இந்த தேவ வல்லமையினால் தான் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோருடைய திறமை வெளிப்படக் காரணமாயிருந்தது. அது நாளுக்கு நாள் அதிகரிக்கவும், பலப்படவும் இந்த தேவ வல்லமையே காரணமாயிருந்தது. "மனிதர்களுக்கு வரங்களை அளித்தார்" என்ற சங்கீதத்தின் வேதப்பகுதியை அப்போஸ்தலர் பவுல் விளக்கும்போது, நமது கர்த்தர் ஆவிக்குரிய வரங்களையே அளித்தார் என்று குறிப்பிடுகின்றார். (சங். 68:18; எபே. 4:8) எல்லா வரங்களுக்கும் மேலாக, முழு உலகத்தினையும் மீட்டிட தம்முடைய ஜீவனையே நமது மீட்பர் தந்தருளினார். மீட்கப்பட்ட இலட்சோப இலட்சம் பேர்களில் ஒரு பகுதியினர் மட்டுமே சிறுமந்தையாகத் தெரிந்தெடுக்கப்பட்டு, கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராக, தேவ இராஜ்யத்தில் ஒருங்கிணைந்து செயல்படுவர். இந்த சிறுமந்தையாகிய சபையாரைத் தெரிந்தெடுத்தல் ஏற்கனவே தொடங்கிவிட்டாலும், பெந்தெகொஸ்தே நாள் வரை காத்திருந்து தேவ ஆவியை முத்திரையாகப் பெற்றுக்கொண்ட போதுதான் அவர்களுக்கு சிறு மந்தை அல்லது திருச்சபையார் என்ற அங்கீகாரம் கிடைத்தது. பிதாவாகிய தேவனே தம்முடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியை திருச்சபையாருக்கு பகிர்ந்தளிப்பதால், விசுவாசிகள் கிறிஸ்துவின் ஒப்புரவாகுதலின் ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதால் அவர்கள் கிறிஸ்துவின் சபையாக, திருச்சபையாராக அங்கீகரிக்கப்படுகிறார்கள். இனிமேல் அவர்கள் அந்நியரும், பாவிகளுமாகக் கருதப்படாமல், தேவனுடைய வீட்டாராக கருதப்படுவார்கள். இனி அவர்கள் ஊழியர்களாயிராமல், தேவ புத்திரர்களாகி, "பரத்திற்குரிய பரிசுக்குப் பங்காளிகளாகின்றனர்." தேவ ஆதிக்கம், பரிசுத்த வல்லமை, பரிசுத்தஆவி ஆகிய இவைகள் இவைகளின் ஊற்றாகிய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தே புறப்படுகிறது. அது தேவனுடைய பிரதிநிதியும் நம்முடைய மீட்பரும், திருச்சபையாருக்கு தலையுமாகிய கிறிஸ்துவின் மூலமாகவே எல்லா மக்களுக்கும் வழங்கப்படும்.*

*பரிசுத்த ஆவியினால் உந்தப்பட்ட அப். பேதுரு இது குறித்து கூறும்போது, இது பிதாவினிடத்திலிருந்து குமாரன் மூலமாக வருகிறது என்கிறார். "இயேசு தேவனுடைய வலது கரத்தினாலே*

உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்." - அப். 2:33 பரிசுத்த ஆவியினால் பெற்றுக் கொள்கிற ஞானஸ்நானத்தைப் பற்றி வெளிப்படையாக வலியுறுத்தி அதன் இலக்கணத்தைக் கூற முடியாது. கர்த்தருடைய ஈடுபலியை நாம் ஏற்றுக் கொண்டோமேயானால், நாம் திருச்சபையாராக அங்கீகரிக்கப்பட அது ஒரு சான்று. அது இல்லாமல் நாம் திருச்சபையார் என்று சொல்வதற்கு எந்த ஆதாரமுமில்லை. நாமும் நீதிமான்களாக ஆக முடியாது.

பிரபலமான கிறிஸ்தவர்களின் மத்தியிலே, சத்தியத்திற்கு எதிரான தப்பறைகளை கவனிக்கும்போது, நாம் அவைகளை தப்பறை என்று தயங்காமல் எடுத்துக் காண்பிக்க வேண்டும். அடிக்கடி பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை காத்திருந்து பெறவேண்டும் என்பதையும் தவறு என்று காண்பிக்கவேண்டும். இப்படி காத்திருப்பது தேவ வார்த்தையின் வாக்குத்தத்தத்திற்கு முற்றிலும் முரணானதும் தேவனுடைய திட்டத்திற்கு முற்றிலும் மாறானதும் ஆகும். வேதாகமத்தின்படி மூன்று வகையான ஞானஸ்நானம் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. இந்த மூன்றுமே மிக அவசியமானது. வேறெந்த விதமான ஞானஸ்நானமும் சொல்லப்படவில்லை. இந்த மூன்றும் மூன்று வகையல்ல, ஒரே ஞானஸ்நானத்தின் மூன்று பாகங்கள் அல்லது பகுதிகள்.

1. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம்.

2. பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானம்.

3. புறஜாதியிலிருந்து முதன்முறையாக வந்த கொர்நேலியு பெற்ற ஞானஸ்நான உடன்படிக்கையினால் அவன் தேவபுத்திரன் ஆனான். இந்த ஆவிக்குரிய மூன்று ஞான ஸ்நானத்தின் ஒழுங்கைப் பற்றி நாம் ஆராய்வோமாக :

1. இயேசுகிறிஸ்து பெற்ற தண்ணீர் ஞானஸ்நானம் அவருக்கு அவசியமாக இருந்தது. அவர் தெய்வீக சாயலும், தெய்வீக

வல்லமையும் உடையவராயிருந்தாலும், அநேகருக்கு இந்த ஆவியின் ஞானஸ்நானம் வெளிப்படையாக விளங்க வேண்டும் என்பதற்காகவும், அவர் தெய்வீக வல்லமையில் பங்கு பெறுவதற்காகவும், தம்முடைய சுதந்திர பாகத்தை எல்லா ஜாக்கிரதையோடும் காத்துக் கொள்ள வேண்டியிருந்தாலும், தேவப்பிரதிநிதியாகவும், தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டவராகவும், அகில உலக மக்களுக்காக மீட்பை ஏற்படுத்த தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பதை எல்லாரும் வெளிப்படையாக அறிய வேண்டி இருந்தாலும் ஆவியின் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. எல்லாரும் அறிய வேண்டிய அடையாளமாக ஒரு புறாவைப் போல் பரிசுத்த ஆவி இறங்கியதை அனைவரும் கண்டனர். புறாவைப் போல் இறங்கினது பரிசுத்த ஆவியின் வல்லமைதான் என்பதை, அதைக்கண்ட யாவரும் புரிந்து கொண்டார்களா என்று நமக்குத் தெரியாது. அச்சமயத்தில் இஸ்ரயேலர்களால் தீர்க்கதரிசி என்று கருதப்பட்ட யோவான் ஸ்நானகன், இஸ்ரயேல் மக்கள் மத்தியில் சீர்த்திருத்தமும், மறுமலர்ச்சியும் செய்து கொண்டிருந்ததால், அவர் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது இந்த புறாவின் ரூபத்தில் இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையைக் குறித்து சாட்சி பகர்ந்தார். அவர் கொடுத்த சாட்சியானது,

*"பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்து, இவர் மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்." - யோவான் 1:32-34*

2. பெந்தெகொஸ்தே நாளில் திருச்சபையார் பெற்றுக் கொண்டது ஆவியின் ஞானஸ்நானம்; அந்த ஞானஸ்நானத்தைக் கொடுத்தவர் கிறிஸ்துவே. யோவான் இங்கு விவரிப்பது போல்,

*"அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்*

கொடுக்கிறவர்."

பேதுரு சாட்சியாக, "கிறிஸ்து தன்னுடைய பரிசுத்தஆவியை நமக்காகப் பொழிந்தருளினார்" என்று இந்த செய்தியை உறுதிப்படுத்துகிறார். அவர் ஒருவர் மாத்திரமே ஆவியின் அபிஷேகத்தைக் கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஏனெனில், அவர் தன்னுடைய விலைமதிக்க முடியாத இரத்தத்தினால் இந்த உலகினையே மீட்டு இரட்சித்தார். கிறிஸ்துவை அல்லாமல் ஒருவரும் பிதாவினண்டையில் வரமுடியாது. பிதா ஒருவரையும் நியாயத் தீர்க்கிறதில்லை. அனைவரையும் நியாயந் தீர்க்கிற நியாயதிபதி கிறிஸ்துவே. அவரேதான் எல்லாருக்கும் மேலாக உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டு, பிதாவின் பிரதிநிதியாக செயல்படுகின்றார். தன் மூலமாக பிதாவினண்டையில் வருகிற ஒவ்வொருவரையும் இயேசுகிறிஸ்து பிதாவோடு ஒப்புரவாக்குகிறார். நாம் ஏற்கனவே பார்த்தபடி திருச்சபையார் இப்படி பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்படுவது அனைவருக்கும் வெளியரங்கமாய் காணப்படும்படி, வெளிப்படையான சாட்சியத்திற்காகவே ஆகும். அதுபோலவே கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்பட்டது, அனைவருக்கும் சாட்சியாக பிரகடனம் செய்வதற்காகவே ஆகும்.

வேகமாக வீசிய காற்று அந்த இடத்தை நிரப்பியது; அக்கினிமயமான நாவுகளைப் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. (பதினொரு அப்போஸ்தலர்கள் மட்டுமே கர்த்தரின் பிரதிநிதிகளாக பரிசுத்த ஆவியின் நாவுகளாக திருநிலைப்படுத்தப்பட்டனர்) காணமுடியாத பரிசுத்த ஆவியின் வல்லமையை மற்றவர்கள் காணும்படியாக அந்த நாவுகள் தோன்றின. அதுபோலவே புறா ரூபத்தில் யோவானுக்குக் காண்பிக்கப்பட்டது வெளியரங்கமான அடையாளமேயல்லாமல், அந்தப் புறாவின் வடிவத்தில் தேவ வல்லமை கொடுக்கபட வேண்டுமென்பதில்லை. புறா என்பது தூய்மைக்கும் சமாதானத்திற்கும், அடையாளமாக இருப்பதால் அது பிதாவாகிய தேவனுடைய அன்பின் ஆவியின் முழுமையை பொருத்தமாக காண்பிக்கிறது. அதுபோலவே பிரிந்திருக்கிற நாவுகள் போல

அப்போஸ்தலர்கள் மேல் வந்தது, பரிசுத்த ஆவியின் வல்லமையை அனைவருக்கும் விளக்கிக் காண்பிக்க பொருத்தமாக அமைந்தது. அதன்படியே அவர்கள் இந்த உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாய், தேவனுக்கென்று சாட்சி பகர வேண்டியவர்கள் என்பதைக் காண்பிக்கிறது. அப்.2:32; 3:15; 5:32; 10:39,41; 13:31

3. அதுபோலவே புற ஜாதியிலிருந்தும் தேவன் தனக்கென ஒரு ஜனத்தை ஆயத்தப்படுத்த, முதன்முதலாக இந்த அபிஷேகம் கொர்நேலியுவுக்குக் கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது. ஏனெனில் இதுவரை புறஜாதியார் தேவனற்றவர்களும், தேவனுடைய காணியாட்சிக்கு புறம்பானவர்களும், அவருடைய ஊழியக்காரராக இருக்கக் கூட தகுதியவற்றவர்கள் என்று கருதப்பட்டனர். இதன் காரணமாக தேவனுடைய ஜனமாகிய யூதர்கள், இந்த புறஜாதியார் உன்னதமான தேவனுடைய ஜனமாக ஆவார்கள் என்று கனவிலும் கருதவில்லை. இந்த தெய்வீக தயவு அவர்களுக்கு கோடிட்டுக் காண்பிக்கும் வண்ணமாக, யூதர்கள் மத்தியில் இருக்கும்போதே கொர்நேலியு தேவ புத்திரனாக அங்கீகரிக்கப்பட்டார்.

தேவ திட்டப்படி, யூதர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கக் கூடிய கிருபையின் காலமாகிய 70 வாரங்களும், அதாவது பெந்தெகொஸ்தே நாளிலிருந்து 3 1/2 ஆண்டுகள் வரையிலும் புறஜாதியாருக்கு இந்த பரம அழைப்பு கொடுக்கப்படவில்லை (வேதாகமப் பாடத் தொகுதி எண் -2, அதிகாரம் 7 காண்க). எனவே புறஜாதியிலிருந்து இந்த பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாய் வந்து சேர்ந்தவர்களும், யூதர்களிலிருந்து வந்து சேர்ந்தவர்களும் எந்த வேற்றுமையுமின்றி கிறிஸ்துவுக்கு உடன் வாரிசுகளாகும் பாக்கியம் பெற்றார்கள் என்பது மெய்யே. யூதர்கள் பெந்தெகொஸ்தே நாளில் ஆவிக்குரிய உடன்படிக்கை பெற்றபோது, இந்த உண்மைக் குறித்து குறிப்பிடப் இயலவில்லை. அப்போஸ்தலர்கள், மற்ற யூதர்கள் மத்தியில் இந்த வேற்றுமை மனப்பான்மை வெகு ஆழமாக வேரூன்றியிருந்ததால், பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது போல, கொர்நேலியுவுக்கு பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டதற்கு, அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு தகுந்த ஆதாரம் அவசியமாயிருந்தது.

பெந்தெகொஸ்தே நாளில் நிகழ்ந்ததுபோல பிரிந்திருக்கிற நாவு போல அக்கினியின் வெளி அடையாளங்கள் கொர்நேலியுவுக்கு கொடுக்கப்படவில்லை. எனினும் அன்றைக்கு அளிக்கப்பட்ட அதே ஆவியின் வல்லமை இவருக்கும் அளிக்கப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்ட வரங்களில் சிலவற்றை இவரும் பெற்றிருக்கக்கூடும்.

தேவன் புறஜாதியாரையும் தெரிந்துகொண்டார் என்பதை வேறு எப்படி நாம் அறிந்து கொள்ளமுடியும். ஆபிரகாமின் வித்தாகிய சுபாவப்படியான விசுவாசிக்கிற இஸ்ரயேலர்களுக்கு மட்டுமே இந்த பரம அழைப்பும், ஆவியின் வரங்களும் ஆவியின் ஞானஸ்நானமும் வழங்கியிருந்தாரானால் புறஜாதியாரிலிருந்து வந்த கர்த்தருடைய பிள்ளைகளின் நிலைமை என்ன என்பது குறித்து சுவிசேஷயுகம் முழுவதும் நமக்கு சந்தேகமும், ஐயப்பாடும் இருந்திருக்கும். கொர்நேலியு பரிசுத்த ஆவியினால், ஞானஸ்நானம் பெற்றதினால் மட்டுமே, யூதன், புறஜாதியான் என்ற பாகுபாடு இல்லை என்ற உண்மையை தேவன் வெளியரங்கமாக்கினார். ஆண் என்றும் பெண் என்றும், அடிமை என்றும் சுயாதீனன் என்றும் பேதமே இல்லை என்று சாட்சியாக நிரூபிக்கப்பட்டது. ஒருவனும் தன்னுடைய சுய நீதியினாலே தேவனுக்கு முன்பாக ஒப்புரவாக முடியாது. தேவனுடைய நேசகுமாரனும், நம்முடைய கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் வருகிறவர்கள் மட்டுமே அவருக்குள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். 1 கொரி.12:13

இதுவரை ஆராய்ந்த இந்த மூன்று வகையான பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைத் தவிர, வேறு ஞானஸ்நானத்தைப் பற்றி வேதாகமத்தில் எவ்வித குறிப்புகளும் கிடையாது. எனவே, அடிக்கடி, காத்திருந்து, ஜெபித்து பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெறவேண்டும் என்று கர்த்தருடைய பிள்ளைகள் எண்ணுவது தவறானதும் தேவையற்றதுமாகும். ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தின் பின்சேர்க்கையான கொர்நேலியுவின் மேல் பொழியப்பட்ட பரிசுத்த ஆவியின் வரங்கள் எல்லா தேவைகளையும் நிறைவுசெய்கிறது. அந்த ஞானஸ்நானங்கள் எல்லாம் தனிப்பட்ட நபர்கள்மேல் வந்த ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை

*முழுமைக்கும் பிரதிநிதித்துவமாக கொடுக்கப்பட்டவைகளாகும். திருச்சபையாருக்குக் கொடுக்கக்கூடிய வரங்கள் இரண்டு பாகங்களாகக் கொடுக்கப்பட்டது. 1. பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 2. கொர்நேலியுவின் வீட்டில் புறஜாதியாராகிய அனைவருக்கும் கொடுக்கப்பட்டது. இந்த ஆவியின் வரங்கள் பொதுவானவை என்பதை பேதுரு அப்போஸ்தலனிடம் கர்த்தராகிய இயேசு, தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாகக் கூறிய வார்த்தையிலிருந்து புரிந்து கொள்ளலாம்.*

*"பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்." - மத்.16:19*

*ஒரு சாவி என்பது திறக்கும் ஆற்றலைக் குறிக்கிறது. சாவிகள் என்று பன்மையில் கூறும்போது, ஒன்றுக்கும் மேற்பட்ட கதவுகள் திறக்கப்படுவதைக் குறிப்பிடுகிறது. உண்மையில் அங்கு இரண்டு பூட்டுக்கும், இரண்டு சாவிகள் இருந்தன. அந்த இரண்டு சாவிகளையும் பேதுரு அப்போஸ்தலன் உபயோகித்தார். கர்த்தர் முன்பதாகவே கூறியபடியே, யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் பூட்டப்பட்டிருந்த பூட்டை பேதுரு அப்போஸ்தலன் திறந்தார். முதல் திறவுகோலை பெந்தெகொஸ்தே நாளிலே பரிசுத்த ஆவியைப் பெற்ற மூவாயிரம் பேருக்கு மத்தியிலே பேதுரு அப்போஸ்தலர் பேசினபோது உபயோகித்தார். அதனால் அந்த மூவாயிரம் பேர்களுடைய மனக்கதவுகள் திறக்கப்பட்டு, புதிய சுவிசேஷ யுகத்தைக் கண்டனர். (அப்.2:37-41) மறுபடியும் புறஜாதியாருக்கு சுவிசேஷம் போதிக்கப்பட குறித்தகாலம் வந்தபோது, நமது கர்த்தர் அவரது சித்தத்தின்படி இந்த வேலையை பேதுருவுக்குக் கொடுத்தார். பேதுருவை கொர்நேலியு வீட்டிற்குச் செல்லவும், பேதுருவை அழைப்பிக்கும்படி கொர்நேலியுவுக்கும் கட்டளையிட்டு, பேதுருவை கொர்நேலியுவுக்கும் அவரது வீட்டாருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கூறினார். இந்த சமயத்தில் பேதுரு இரண்டாவது சாவியை புறஜாதியாருக்குச் சுவிசேஷ கதவை திறக்கப் பயன்படுத்தினார். கொர்நேலியுவுக்கும் அவன் வீட்டாருக்கும், அங்கு கூடியிருந்த விசுவாசிகளான அத்தனை பேருக்கும் அற்புதமான பரிசுத்த ஆவியை பொழிந்தருளி தேவன் இதை வெளிப்படுத்தினார்.*

*முழுக்கு ஸ்நானத்தில் ஒரு மனிதனை முழுமையாக நீரில் முழுக்குவதற்கொப்பாக, ஆவியின் ஞானஸ்நானம் என்பது அவர்களை முழுமையாக தேவ வல்லமையினாலும், ஆவியினாலும் நிரப்புதல், அபிஷேகம் பண்ணப்படுதல் என்பதே சரியான கருத்தாகும்.இதே அபிஷேகம், சுவிசேஷ யுக நாள் துவங்கி இன்றளவும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் அங்கமாகின்ற ஒவ்வொருவருக்கும் முற்றிலுமாய்ப் பொழியப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்த ஆவியின் நிரப்புதல், பரிசுத்தபடுத்துதல், ஆசீர்வதித்தல், அபிஷேகம் பண்ணுதல் ஆகியவை திருச்சபையின் கடைசி உறுப்பினர் வரையிலும் முழுமையாக தொடர்ந்து கொண்டே இருக்கும். அப். யோவானும் இந்த ஞானஸ்நானத்தை அபிஷேகம் என்று கூறுகிறார்.*

*"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது." - (1 யோவா 2:27; சங். 133:2)*

*முழுமையாக ஆவியின் அபிஷேகத்தினைப் பெற்றதையே முக்கியப்படுத்தி இங்கு சொல்லியிருக்கிறது. பரிசுத்த ஆவியின் அபிஷேகமாகிய இந்த ஒரே அபிஷேகத்தைத் தவிர நீங்கள் பெற்ற வேறு அபிஷேகங்களைப் பற்றி அவர் கூறவில்லை. அவைகளெல்லாம் முற்றிலும் தேவையற்றதும் தேவ ஏற்பாட்டிற்கு மாறுபாடானதும் ஆகும். தேவ கருத்தின்படி முழுசபையும் ஒன்றாகவே கருதப்படுகிறது. "எப்படியெனினும் சரீரம் ஒன்று, அதற்கு அவயங்கள் அநேகம்; அந்தப் பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்." - 1 கொரிந் 12:12,27 இந்தக் கருத்துக்கு இசைவாக வேதாகமம் எடுத்துச் சொல்வது என்னவென்றால், கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட நபர்களாகக் கருதினாலும், பல வகைகளிலும் தனித்தனியே அவரவர்க்கு என்ன தேவையோ அவற்றை வழங்கிவந்த போதிலும், இப்படி நாம் நமது பிதாவின் முன்பாக காணப்படுகிறபோது, தனித்தனி அங்கங்களாக காணப்படுகிறதில்லை. இப்படி பல்வேறு வகையான அங்கங்கள் இருந்தாலும், தனித்தனியே அவைகளைச் சொல்லாமல் ஒரே சரீரம் என்று சொல்வதுபோல, கிறிஸ்து என்கிற தலையிலே சரீரமாகிய அவயவங்கள் உள்ளன. நாம் விசுவாசிகளான பிறகு, கிறிஸ்துவின்*

சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, தலையாகிய கிறிஸ்துவுக்குள் இசைவாயிருக்கின்ற சரீர அங்கமாக மாற வேண்டும் என்று வேதம் நமக்கு அறிவிக்கின்றது.

நல்மனசாட்சியின் உடன்படிக்கை என்கிற ஞானஸ்நானத்தைக் குறித்து நாம் வேறொரு அத்தியாயத்தில் இன்னும் விளக்கமாக எடுத்துரைப்போம். விசுவாசிக்கிற யாவரும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்காக அழைக்கப்படுகிறார்கள். இப்படி பிரதிஷ்டைக்குட்படும்போது தான் பரிசுத்த ஆவிக்குள்ளான ஸ்நானம் பெறமுடியும். பரிசுத்த ஆவி என்பது ஒரு ஆள் அல்ல. பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமை, பலம். இந்த பலத்தைத் தேவன் திருச்சபையாருக்குக் கொடுக்கின்றார். இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்குள் அங்கமாக மாறவேண்டும். இந்த பரிசுத்த ஆவியின் அருளை வேறெந்த வழிகளிலும் பெறமுடியாது. திருச்சபை, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக இருக்க வேண்டும் என்ற கருத்தினை வைத்துக் கொண்டு, பூமியில் இருக்கக்கூடிய ரோமன் கத்தோலிக்க சபை, மெத்தடிஸ்ட் சபை, பிரெஸ்பிடேரியன் சபை அல்லது மனித அமைப்புக்களாகிய ஏதாவது ஒரு சபையில் அங்கமாக வேண்டும் என்று கருதிவிடக்கூடாது. திருச்சபையின் அங்கமாகவேண்டும் என்று கூறுகிறோம். எந்தளவு பரிசுத்த ஆவியின் அருளைப் பெற்றார்களோ, அந்தளவு தெய்வீக அன்பின் திட்டத்தினைப் புரிந்து கொண்டு, அத்திட்டத்தின் பணிகளைப் பகிர்ந்து செய்கின்றவர்களும், ஆவியின் கனிகளால் சாட்சி பகர்கின்றவர்களுமே திருச்சபையின் உறுப்பினர்களாகக் கருதப்படுவர்.

உண்மையாகவே கிறிஸ்துவோடு யார் ஐக்கியமாயிருக்கிறார்களோ, அதே அளவு ஐக்கியத்தை திருச்சபையின் அங்கத்தினர்களோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும். இத்தகையவர்கள் இப்பொழுதோ, பிற்காலத்திலோ அன்றைக்கு பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றப்பட்ட ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க தேவையில்லை. திருச்சபை முழுவதையும் பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குள் ஏற்றுக் கொண்டதினாலே, தற்கால திருச்சபையார் முற்காலத்தில் பெந்தெகொஸ்தே நாளில் வழங்கப்பட்ட ஆவியின்

அருளையும், கொர்நேலி யுவின் வீட்டில் வழங்கப்பட்ட ஆவியின் அருளையும் மகிழ்வுடன் மறுபடியும் தங்கள் நினைவுக்குக் கொண்டு வந்து பூரிப்படைகின்றனர். இத்தகைய தெய்வீக ஏற்பாட்டினாலே எல்லாருக்கும் முழு திருப்தியிருக்கும். தேவனுடைய திட்டத்தினை புரிந்து கொள்ளாதவர்கள் ஜெபிக்கும்போது, பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றப்பட்ட ஆவியை இன்றைக்கு எங்கள் மீது பொழிந்தருளும் என்று கேட்கும்போது, கர்த்தர் அவர்களின் ஜெபத்தைக் கேட்டு கோபம் கொள்வதில்லை. மாறாக, அவர்கள் அறியாமையை அகற்றி, அவர்கள் தெய்வத் திட்டத்தைப் புரிந்து தெளிவடைந்து கொள்ளும் நாள் வரை காத்திருந்து, அவர்களையும் ஆசீர்வதித்து ஏற்றுக்கொள்கிறார். இப்படிப்பட்டவர்களுக்காக தேவன், அந்த பெந்தெகொஸ்தே நாளில் செய்த அற்புதத்தை செய்கிறதில்லை, தம்முடைய திட்டத்தினை மாற்றிக் கொள்ளப் போவதுமில்லை.

இப்படி தேவ திட்டத்தை அறியாமல் ஜெபிக்கின்ற அன்பர்கள், தொடர்ந்து ஆவிக்குரிய ஸ்நானத்தைப்பெற வேண்டுமென்று ஜெபிக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள், அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளின் ஆவியை வருங்காலத்திலும் ஊற்ற வேண்டும் என்று எவ்விடத்திலும் ஜெபிக்கவில்லை என்பதை அறியாதிருக்கிறார்கள். இப்படி அப்போஸ்தலர்களுக்குத் தெரியாததை தெரிந்திருக்கிறோம் என்ற ஞானத்தில் பேசுகிறார்களா? அல்லது அப்போஸ்தலர்களைப் பார்க்கிலும் தங்களைப் பரிசுத்தவான்கள் என்று எண்ணிக் கொள்வதால் இவ்வாறு ஜெபிக்கிறார்களா? அல்லது ஆவியினால் நிறைய வேண்டும் என்று மிகவும் வாஞ்சிக்கிறார்களா? அது அவர்களுடைய தவறான வேண்டுகோள்கள், தங்கள் சொந்தக் கற்பனைகள் என்று நாம் அறிந்து கொள்கின்றோம். அறியாமையில் சிறு பிள்ளைகள் பெற்றோர்களிடம் அவர்கள் விருப்பத்திற்கெதிராக சீண்டிக் கொண்டிருப்பதைப் போல இவர்களுடைய வேண்டுதலும் அதே அறியாமையின் தன்மையை உடையதாக இருக்கின்றது. அவர்களுடைய மன்றாட்டு அவசியமற்றது. எனவே அவர்கள் மன்றாடினாலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட போவதில்லை.

## ஆவியின் பொதுவான ஞானஸ்நானம்

*"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்." - யோயேல் 2:28*

பாவம் செய்து தேவகிருபையை இழந்த மனுக்குலம், தேவனோடு ஒப்புரவாக, மனுக்குலத்தின் பாவத்திற்கென கிறிஸ்து தன்னையே ஈடுபலியாகக் கொடுத்து, தேவனுக்கும் மனிதனுக்கும் ஒப்புரவு உண்டாக்கியது இந்த பரிசுத்த ஆவியின் கிரியை. தேவனே நியாயாதிபதியாகவும், அனைவரையும் நீதிமான்களாக்கு கிறவராகவும் இருக்கிறார் என்பதை நிரூபிக்க இயேசு தம்மைத்தாமே ஈடுபலியாக தந்ததின் நோக்கம் இந்த ஒப்புரவாக்குதலை விசுவாசிக்கிற யாவரும் தேவனண்டை சேர கிறிஸ்து வழி ஏற்படுத்தியதே ஆகும். எனவே பிதாவண்டையில் வர விரும்புகிறவர்கள் கிறிஸ்துவின் மூலமாகத்தான் வர முடியும். பூமியில் இருக்கிற எல்லாருக்கும் சந்தர்ப்பம் கொடுத்து, தேவனைப் பற்றி அறிகிற அறிவினையும் போதிக்கும்போது அதை ஏற்றுக் கொள்கிற யாவரும் மீட்படைவர். இதனால் மகிமையடைந்த ஒப்புரவாக்குதலின் மத்தியஸ்தராகிய கிறிஸ்து உலக மக்கள் ஒவ்வொருவரையும் தேவனுடைய திட்டத்திற்குட்பட்டவர்களாக, தேவ பிள்ளையாகி தேவனோடு ஐக்கியப்படும்படி செய்கின்றார். விழுந்துபோன மனுக்குலம் தேவனோடு ஒப்புரவாகுவதற்கான வழிமுறைகளை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். 1. திருச்சபையாராக இந்த சுவிசேஷ யுகத்தில் உள்ள சிறுமந்தை 2. ஆயிர வருட அரசாட்சியில் எவ்வளவு பேர் மனப்பூர்வமாக தேவ திட்டத்தினை ஏற்று கீழ்ப்படிய மனதாயிருக்கிறார்களோ அத்தனை பேர்களும்.

தேவனோடு ஒப்புரவாகி உடன்படுவது என்பது பாவத்துக்கு விலகி மன்னிப்பைப் பெற்று தேவனோடு இசைவதாகும். பாவத்தை விட்டுவிட மனதில்லாதவர்கள் தேவனோடு இசைவாக என்றென்றும் இருக்கமுடியாது. பாவத்தை விட்டுவிட்டவர்கள், தேவ நீதியின்படி கீழ்ப்படிபவர்களாய் தேவனோடு முழு இசைவாக இருப்பார்கள். பரம பிதாவின் சிந்தை, நோக்கம், கருத்துப்படியே அவர்களுக்குத் தேவையானவற்றை கிறிஸ்துவின் மூலம் பெற்றுக் கொள்வார்கள். அவர்களுடைய மனம் புதிதாகிறதினாலே அவர்கள்

மறுரூபப்பட்டிருப்பார்கள். வரப்போகிற ஆயிரம் வருட யுகத்திலே முழு மனுக்குலமும் தம்முடைய குமாரன் மூலமாக ஒப்புரவாகுவதற்கு தேவன் வைத்துள்ள சித்தமும், திட்டமும் இதுவே. இந்த சுவிசேஷ யுகத்திலே மணவாட்டிகள் கிறிஸ்துவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே அடுத்த யுகம் துவங்கும். இதுவே தேவனுடைய சித்தமும் திட்டமுமாகும். தேவனுடைய திருச்சட்டத்தின்படி எல்லாம் நிறைவேறித் தீரும்; அதிலிருந்து ஒரு சிறு புள்ளியாகிலும் மாறாது. பாவமும் அபூரண நிலையும் மன்னிக்கப்பட்டு, அந்த மன்னிக்கப்படுதலே அவனுக்கு நீதியும், பூரணத்தன்மையுமாக ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஆதாமின் மீறிதலினாலே, அவனும் அவன் பின்னடியார்களும் விழுந்துபோன நிலையிலிருந்து சீர்திருத்தப்பட்டு, தேவசாயலைப் பெற்று முன்னிருந்த நிலைமைக்கு கொண்டு வருவது இயேசு கிறிஸ்துவின் கையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட பணியாகும். இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான், எல்லாருடைய மனக்கண்களையும் குருடாக்கி அகில உலகினையும் தப்பறையின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தான். இந்த நிலைமையை முழுவதும் மாற்றி, தப்பறை அறியாமை, மூடநம்பிக்கையைப் போக்கி, முழு மனுக்குலத்தினையும் தேவன் பக்கமாக திருப்பும் பணியின் ஒரு பகுதியாக சாத்தான் தள்ளப்படுவான். 2 கொரி. 4:4; வெளி. 20:2 அதன்பின்னர், வஞ்சனை, தப்பறை, அறியாமை ஆகியவற்றிலிருந்து உலகம் விடுபட்டு, நீதி, சத்திய ஆவி, அன்பு அகியவற்றின் கீழ் இருப்பார்கள். மனிதர்களிடமிருந்த கோபம், சுயநலம், வெறுப்பு, கலக மனப்பான்மை ஆகிய குணங்களின் ஆதிக்கங்கள் வேரோடு ஒழிக்கப்பட்டு, நீதியின் ஆவி, நன்மை, கிருபை, அன்பு, கருணை ஆகியவை அபிவிருத்தி அடையும். இப்படியாக தேவனுடைய பரிசுத்த ஆவி, இயேசு கிறிஸ்துவின் மூலமாக முழு மனுக்குலத்திற்கும் மூன்று படிகளில் ஊற்றப்படும். முதலாவதாக அவர்களுடைய மனக் கண்களைப் பிரகாசமாக்குகிறார்; இரண்டாவதாக அவர்கள் சுபாவத்தின்படி பெற்றிருக்கிற பலவீனங்களை ஜெயிக்க வல்லமை, பலம் தந்து இன்னும் அவர்களுக்கு வேண்டிவற்றை தந்து உதவுகின்றார். மூன்றாவதாக, ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே இழந்து போன தேவ

ரூபத்தினையும், தேவ சாயலையும் திரும்பப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக போதித்து வழிநடத்துவார்.

இந்த உலகத்தின் வருங்காலம் மகிமை நிறைந்ததாகவும், சலுகை நிறைந்ததாயும் இருக்கப் போகிறது. கடந்த காலங்களில் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் மாறாக, சொல்லி முடியாத பெரிய பேரின்பம் காத்திருக்கின்றது. கர்த்தரின் விரோதிகளுக்கும், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள மனதில்லாமல் கீழ்ப்படிய மறுப்பவர்களுக்கும் இத்தகைய நன்மைகளில் எதுவும் கிடைக்காது. மாம்சமான யாவர் மேலும் ஆவி ஊற்றப்படுகிறது. ஆனால் அதன் நன்மைகளைப் பெற்று அனுபவிப்பவர்களுக்கு மட்டுமே அது தேவைப்படும் இந்த சுவிசேஷ யுகத்தில், சத்திய ஆவியைப் பெற தங்களை அர்ப்பணித்து, சத்தியத்தை புசித்து, பரிசுத்த ஆவிக்கும் கீழ் வந்து ஆசீர்வதிக்கப்பட விரும்புகிற விசுவாசிகளுக்கு தேவைப்படுகிறது. எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் மேலான தீர்க்கதரிசியும், எல்லா ஜீவன்களுக்கும் ஜீவனளிப்பவரும், மெல்கிசேதேக்கின் முறையின்படி ஆசாரியருமாகிய, கிறிஸ்து அவரது சொல்லுக்குக் கீழ்ப்படிகிற உலக ஜனங்கள் யாவரையும் ஆசீர்வாதத்தினால் நிரப்புகிறார் (தலையாகிய கிறிஸ்துவும் சரீரமாகிய சபையும் ஒருங்கிணைந்து இப்பணியை நிறைவேற்றுவர்). இவர்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறதினதால் நித்திய ஜீவனுக்குரிய நிரத்தர ஆசீர்வாதத்தை பெற்றுச் சுகித்திருப்பார்கள். ஆனால், கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாத அனைவரும் இரண்டாம் மரணத்தின் மூலமாக அழிக்கப்படுவர்.

“அந்த தீர்க்கதரிசியின் சொல் கேளாதவனெவனோ, அவன் ஜனத்தி-ராதபடி நிர்மூலமாக்கப்படுவான்.” - அப்.3:23

யோயே-ன் தீர்க்கதரிசனம் முன்பின் எதிர்மாறாக நிறைவேறுவதாக காணப்படுகிறது. மாம்சமான யாரும் ஆசீர்வதிக்கப்படுவது முதலாவதாகவும், சபை ஆசீர்வதிக்கப்படுவது கடைசியாகவும் கூறப்பட்டுள்ளது.

கர்த்தருடைய சிந்தையிலிருந்த திட்டத்தின்படியே யாவும் ஒழுங்காக நடைபெறுகின்றன என்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை; மகா வாக்குத்தத்தத்தின் மகிமையான காரியங்கள்

புரிந்துகொள்ள குறித்த காலம் வரும் வரை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. (தானி. 12:9,10) பல நூற்றாண்டுகளாக இந்த வசனங்கள் படிக்கப்பட்டு வந்தாலும், அந்த மகிமையின் இரகசியங்கள் தேவன் குறித்த அந்த ஏற்ற வேளையில்தான் உணர்ந்து கொள்ளப்படும். இந்த சுவிசேஷ யுக முழுவதுமாக அவர் தம்முடைய ஊழியக்காரர், ஊழியக்காரிகள் மேல் மட்டுமே தம்முடைய ஆவியை ஊற்றுகிறார். அப்படிப்பட்ட ஆவியை பெற்றவர்களின் ஆசீர்வாதம், அவர்கள் சொல்லி முடியாத சந்தோஷத்தைப் பெற்றனர்.

கிறிஸ்துவோடுகூட நல்மனச் சாட்சி செய்து கொண்டு அவரின் பாடுகளில் பங்கு கொண்டவர்களாக கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராவார்கள். கிறிஸ்துவைப் போலவே தேவ புத்திரராகவும் அபிஷேகம் பெறுவார்கள். பெந்தெகொஸ்தே நாளில் இவ்வித மகிமையைக் குறித்தே அப்.பேதுரு போதகம் பண்ணினார். தீர்க்கதரிசனத்தின் இரண்டு பகுதிகளை எடுத்துச் சொன்னார். பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே உரைக்கப்பட்ட இரண்டு தீர்க்கதரிசனங்களில் மாம்சமான யாவர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்படும் என்பதை விளக்காமல் இரண்டாவது பகுதியைக் குறித்தே அதிகமாக விளக்குகிறார். ஏனெனில் அதைப் புரிந்துக் கொள்ளக்கூடிய ஏற்ற காலம் இன்னும் வரவில்லை. ஊழியக்காரர்கள், ஊழியக்காரிகள் மேல் பரிசுத்தஆவியை ஊற்றினது பற்றி இந்த சுவிசேஷ யுகத்தின் துவக்கக் காலத்தில் விளக்கிய பேதுரு, பின்வரும் யுகத்தில் மாம்சமான யாவர் மேலும் பரிசுத்தஆவியை ஊற்றுவது பற்றி விளக்கிச் சொல்லவில்லை. பேதுரு தன்னோடும் தன் உடன் விசுவாசிகளோடும் பெற்றுக் கொண்ட ஆவியின் வரத்தினாலே, “யோயேலினால் முன்னுரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறுகிறது” என்கிறார். யோயேலினால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. மறுபகுதி இனிவரும் யுகத்தில் நிறைவேற்றப்படும். மாம்சமான யாவர் மேலும் ஆவி ஊற்றப்படாமலிருப்பதோடு, மேலும் சொல்லப்பட்ட காரியங்கள் இன்னும் நிறைவேறவில்லை. “கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுள்ள நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமுமாக

மாறும்" போன்ற காரியங்கள் நடைபெறக்கூடிய நாள் இப்போது சமீபமாக வந்திருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளுக்கும், எல்லார் மேலும் பரிசுத்தஆவி ஊற்றப்படுகிற நாளுக்கும் இடையே தேவனுடைய கோபாக்கினை நாள் குறுக்கிடுகிறது. இவைகளுக்கெல்லாம் பின்புதான் மாம்சமான யாவர் மேலும் பரிசுத்தஆவி ஊற்றப்படும்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி, சுவிசேஷ யுகத்திலே திருச்சபையார் பெற்றுக்கொண்ட தேவ ஆவிக்கும், வரப்போகிற அடுத்த யுகத்தில் அனைத்துலக மக்களும் பெற்றுக் கொள்ளப் போகிற தேவ ஆவிக்கும் வித்தியாசம் எதுவுமில்லை. ஏனெனில் இதுவும் அதே சத்திய ஆவி, நீதியின் ஆவி, பரிசுத்த ஆவி, பரிசுத்தமாக்கும் ஆவி, தேவனோடு இசைவாயிருக்கும் ஆவி, நன்மைக்கும் சத்தியத்திற்கும் நீதிக்கும் இசைவாக ஜனங்களை நடத்துகிற ஆவி ஆகும். அல்லாமலும் சுவிசேஷ காலத்தில் ஆவியைப் பெற்று ஜீவித்ததற்கும் பிற்காலத்தில் ஆவியைப் பெற்று ஜீவிப்பதற்கும் ஒரே மாதிரியான காரியமாயிராது. இப்பொழுது தேவனுடைய ஆவியை பெற்றுக் கொண்டு இவ்வுலகில் வாழும்போது, உலக ஆவியாகிய பொல்லாத ஆவியோடு ஏராளமான இடங்களில் போராட்டங்கள் ஏற்படும். இப்போது ஆவியைப்பெற்றுக் கொண்டவர்கள், தேவனோடு தேவ ஆவிக்கு இசைவாக நடக்க முயற்சி செய்யும் போது இத்தகைய ஆவியைப் பெறாதவர்களிடமிருந்து திரளான கன-ன் எதிர்ப்பும் வீண்பழிகளும் ஏற்படும் என்று இதனால்தான் தீர்க்கமாக இந்த உபதேசம் கொடுக்கப்படுகிறது.

பின்வரும் யுகத்தில் தேவ ஆவியைப் பெற்றவர்கள் மேல் வீண் பழி சுமத்துகிறவர்கள் இருக்க மாட்டார்கள். தற்போது இருக்கும் உலகத்தைக் காட்டிலும் வரப்பேகிற யுகத்திலிருக்கும் ஒழுங்கு, ஆட்சி, பரிபாலனம், அதிகாரம் ஆகியவைகள் முற்றிலும் மாறுபட்டவையாக இருக்கும். ஏனெனில் இந்த உலகத்தின் அதிபதியாக சாத்தான் இருக்கிறான். வரப்போகிற யுகத்தின் அதிபதியாக இயேசு கிறிஸ்து இருப்பார். இந்த யுகத்தில் பெரும்பான்மையான மக்கள் விருப்பப்பட்டோ அல்லது விருப்பட்டாமலோ, அல்லது தெரிந்தோ தெரியாமலோ சாத்தானுக்கு

உட்பட்டிருக்கிறார்கள். வரப்போகிற யுகத்தில் இயேசு கிறிஸ்துவின் நீதியின் இராஜ்யத்திற்குள்ளாக முழுமனுக்குலமும் கீழ்ப்படிந்திருக்கும். அப்போது சத்தியம் இலவசமாக, சிறியவர்கள்முதல் பெரியவர்கள் வரை போதிக்கப்படும் வரப்போகிற யுகத்தின் சட்டதிட்டங்களின் ஒழுங்கு, நீதி, சத்தியம், நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அரசு அமையும். தேவ இராஜ்யத்தில் தேவனுடைய சட்ட ஒழுங்கின்படி கீழ்ப்படிந்து நடக்கிறவர்களிடத்தில் சத்திய ஆவி வாசமாயிருப்பதால், எவரும் வீண்பழி சொல்லி அவர்களை அவமானப்படுத்த முடியாது. மாறாக எந்தளவுக்கு தேவ ஆவியை பெற்றுக் கொள்கிறோமோ அந்தளவுக்கு கிருபையையும் ஆசீர்வாதமும் கிடைக்கும்.

ஆயிர வருட யுகத்தில் பெறுகிற பரிசுத்த ஆவி, சுவிசேஷ யுகத்தில் பெறுகிற பரிசுத்த ஆவி போல அல்ல. ஏனெனில் சுவிசேஷ யுகத்தில் பெறுகிற பரிசுத்த ஆவி, ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலையும், இராஜ்யத்தில் கிறிஸ்துவின் உடன் சுதந்தரராக ஏற்றுக் கொள்ளப்படுதலையும் குறிப்பிடுவதாக இருக்கிறது. அந்த வாக்குத்தத்தம் இந்த சுவிசேஷ யுகத்தில் பரிசுத்த ஆவியைப்பெற்று, நீதியின் நிமித்தமாக இந்த பொல்லாத உலகத்தில் உபத்திரவப்படுகிற ஊழியக்காரர்களுக்கும் ஊழியக்காரிகளுக்கும் உரியதாகும். ஆகையால் அவர்கள், "ஆவியின் மகிமையாலும் தேவ மகிமையாலும் முடிசூட்டப்படுவார்கள்." *1 பேதுரு 4:14*

ஆயிர வருடஅரசாட்சியின்போது பரிசுத்தஆவியின் நிலைப் பாடானது, அதைப் பெற்றுக் கொண்டவர்கள் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவுடன் இசைந்திருப்பார்கள் என்று முக்கியப்படுத்திக் காட்டுகிறது. கிறிஸ்துவுடன் இசைந்திருப்பதால் இவர்கள் தேவனோடு ஒப்புரவாகி, பொதுவாக மனுக்குலம் முழுவதற்கும் தேவன் ஏற்பாடு செய்துள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். இந்த ஆசீர்வாதங்கள் ஆவிக்குரிய சுபாவ மாற்றத்தை ஏற்படுத்தாது. ஆனால் பூமிக்குரிய பரிபூரண சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள். ஆதாமினால் இழந்துபோன பூரண நிலைமைகளையெல்லாம் மீண்டும் பெறுவார்கள். *(அப்.3:19-21)* ஆதாமினால் இழந்துபோன பூரணத்துவம் இரண்டாம் ஆதாமாகிய

*இயேசு கிறிஸ்துவின் மாபெரும் பாவ நிவராண பலி யினாலே ஒப்புரவாக்கப்பட்டு முந்தின சீரைப் பெற்று, பரிபூரண மனித நிலைக்கு கொண்டு வருவதே பரிசுத்தஆவியின் நிலைப்பாடு ஆகும். இறுதியாக சர்வ மனுக்குலமும் பிதாவாகிய தேவனுடைய சாயலைப் பெற்று பரிபூரண மனிதர்களாயிருப்பார்கள்.*

*தனது சுய ப-யினாலே சர்வ உலக மக்களையும் கிறிஸ்து, ஆயிர வருட ஆட்சியிலே புதுப்பித்து, புது வாழ்வுக்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தருவார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மரணத் தீர்ப்பை சுதந்தரித்துக் கொண்ட மனிதனாகிய ஆதாமுக்கு ஈடுபலி செலுத்த, இயேசு கிறிஸ்து மனிதனாக பூமிக்கு வந்தார். பூரண மனிதன் இழந்ததை ஒரு பூரண மனிதனே ஈடுசெய்ய முடியும். பாவங்களுக்காக கிறிஸ்துவின் நிவாரண பலியின் மூலம் ஆதாமும் அவன் சந்ததியும் விலைக்கிரயத்திற்கு கொண்டதால், மனிதனாகிய ஆதாம் இழந்த உரிமைகள், சலுகைகள், ஆளுகைகள் ஆகியவைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளும்போது, ஆதாம் பூரண மனித நிலைமையிலேயே இருப்பான். அவன் சந்ததியும் புனர்வாழ்வு பெறும்போது அவைகள் முன்பிருந்த நிலையையே திரும்பப் பெறும். இரண்டாம் ஆதாமாக முழு உலகத்தையும் கிரயத்திற்குக் கொண்டு புதுவாழ்வு அளித்ததால் முழு மனுக்குலத்திற்கு கிறிஸ்து தகப்பனாகிறார். எபேசி. 1:14; அப்.3:19-23*

*மாம்சத்தில் இயேசு கிறிஸ்து இரண்டாம் ஆதாமாக இருக்க வில்லை. உயிர்த்தெழுந்த பின்னரே ஆவியின் நிலையில் இயேசு கிறிஸ்து இரண்டாம் ஆதாமாகிறார். எனவே இரண்டாம் ஆதாம் ஆவிக்குரிய நிலையிலிருப்பதால் அவருடைய சந்ததியும் ஆவிக்குரிய நிலையில் இருக்க வேண்டும் என்று பொருள்படாது. மனுக்குலத்திற்கு இயேசு இரண்டாவது தந்தையாகிறார் என்றாலும் கூட அவர் சகலருக்கும் ஜீவனளிக்கிறார் என்ற பொருளிலே அல்லாமல் அவர் சகலரையும் பெற்றெடுக்கவில்லை. உதாரணமாக ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது தேவகுமாரன் என்று அழைக்கப்பட்டான். ஆனால் தேவன் அவனைப் பெற்றெடுக்கவில்லை; சிருஷ்டித்தார். தேவன் ஆவியின்*

ஜீவியாயிருக்கிறார். தேவன் ஆதாமை சிருஷ்டித்ததால் அவனை ஆவியின் ஜீவி என்று சொல்லக்கூடாது. அவன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டதால் அவன் மனித சுபாவமுள்ளவன். தேவன் எல்லோருக்கும் தம்முடைய பிரதிநிதியாகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஜீவன் அளிப்பதால், அவர் தந்தை என்றென்னப்படுகிறார். அவர் தந்தை என்பதால் அவர் எல்லோரையும் பெற்றெடுத்தார் எனச் சொல்லக்கூடாது. இந்தச் செய்திகளை நாம் ஏற்கனவே “மாசில்லாதவர்” என்ற தலைப்பின் கீழ் உள்ள அதிகாரத்தில் விளக்கியிருக்கிறோம். யாரும் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக இதை இங்கே கொடுத்திருக்கிறோம். மனிதனையும் அவன் ஆண்டு கொள்ளவேண்டிய மிருகங்கள், பறவைகள் ஆகியவைகளின் குடியிருப்பாகிய பூமியையும் சிருஷ்டிக்கும்போது கீழ்ப்படியாமையினால் வீழ்ச்சியுறுவான் என்பதை அறிந்திருந்த தேவன், தமது நோக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அவர் பூர்வத்தில் செய்த எற்பாட்டில் எந்த மாற்றமும் செய்ய வில்லை. பூர்வத்திலே தேவன் தான் போட்ட திட்டத்தை கெட்ட எண்ணத்துடன் சாத்தான் கவிழ்த்துப் போட்டாலும் தம்முடைய திட்டத்தின்படியே கொஞ்சமும் மாறாமல் தமது குமாரன் மூலமாக முழுமையாக நிறைவேற்றுவார். சுவிசேஷ யுக திருச்சபையார் கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக, உடன் சுதந்திரராக உன்னதத்திற்கு உயர்த்தப்பட்டு மகிமைப்படுத்தப் படுவார்கள். இந்த விசேஷ கூட்டத்தாரைத் தவிர மற்ற எல்லாரும் முந்தின சீருக்குக்குக் கொண்டு வரப்பட்ட புதிய பூமியிலே ஆசீர்வாதமாயிருப்பார்கள். திருச்சபையாராகும் விசேஷ அழைப்பைப் பெற்றவர்களோ, அழைக்கப்பட்டு, தெரிந்து கொள்ளப்பட்டு, பலவித சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்கு தகுதியுள்ளவர்களாகத் தயார் செய்தபின், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராக, மனித சுபாவத்திற்கு மேலாக ஆவிக்குரிய தூதர் சுபாவத்திற்கு மேலாக கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள் ஆகியவற்றுக்கு மேலாக தெய்வீக சுபாவத்தைப் பெறுவார்கள்.

ஆவியின் ஸ்நானம் என்றொரு புது ஸ்நானத்திற்காக ஜெபிக்க

தேவையில்லை; நமது ஊழியத்தைத் திருப்திகரமாக செய்து முடிக்க, தேவ வழிநடத்துதலுக்காக, தேவ ஆவிக்காக ஜெபிக்க வேண்டும்.

## பரிசுத்தஆவிக்காக ஜெபித்தல்

*“பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமப் பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா.” - லூக். 11:13*

எல்லாம் குமாரன் மூலமாகவே உண்டாக்கப்பட்டது என்றாலும், இதற்கெல்லாம் காரணராகிய பிதாவை இங்கும் மற்றெங்கும் மகிமைப்படுத்துகிறார். பிதாவிடமிருந்து புறப்படுகிற எல்லா ஆசீர்வாதங்களுக்கும் குமாரரே ஊற்றாகிறார். எல்லாரையும் ஒப்புரவாக்கி மீட்கும் பணி பிதாவுடையதாகிலும், அப்பணியை குமாரன் மூலமாகவே நிறைவேற்றுகிறார். நாம் பரிசுத்தத்தில் நாளுக்கு நாள் மேன்மேலும் வளருவதே பிதாவின் சித்தமும் விருப்பமுமாக இருக்கிறது என்று நமது கர்த்தர் அறிக்கையிடுகிறார். எல்லா ஆசீர்வாதங்களுக்கும் உன்னதமான ஆசீர்வாதமான இதையே தேடவும், கேட்கவும் கர்த்தர் ஆலோசனை கூறுகிறார். பரம பிதாவுக்கு, நமது பூமிக்குரிய தேவைகள் என்ன என்பதை நம்மைக் காட்டிலும் நன்கு தெரிந்திருக்கிறார்; எவைகள் நமக்கு உதவியாக இருக்கும், எவைகள் நமக்குப் பேராபத்தை விளைவிக்கும் என்பதையும் நன்கு அறிந்திருக்கிறார். எனவே நாம் அறிவில்லாத புறஜாதியாரைப் போல பூமிக்குரிய ஆசீர்வாதங்களை ஜெபத்தில் கேட்பது தேவையற்றது. எனவே அவருடைய குமாரன் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கிறவர்கள், பிதாவாகிய தேவன் நமது தேவைகளை நன்கு அறிந்துணர்ந்திருக்கிறார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்களாயிருப்பதால், அவர் நமக்குப் போதுமானவற்றையும் மிகச் சிறந்தவைகளையுமே தருவார் என்று அவருடைய வாக்குத்தத்தத்திலும் அவர் மீது வைத்திருக்கும் விசுவாசத்திலும் திருப்தியடைவார்கள்.

பிதாவாகிய தேவன் அவருடைய ஆவிக்கு இசைவாக பரிசுத்த குணநலன்களையே கேட்க வேண்டும் என்று விரும்புகிறார். இப்படிப்பட்ட இசைவான மன்றாட்டுக்களைக் கேட்டு விரும்பித்

தேடுகிறவர்களுக்கு அவர்கள் திருப்தியடையும்படி தேவன் அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கிறார். இப்படி அவருக்கு இசைவானவை களையே கேட்டு நடக்கிறவர்களின் வாழ்க்கையை அவருடைய ஒழுங்கின்படி நடத்துகிறார். அவர்களுக்குள்ளோ அல்லது அவர்களின் சுற்றுப்புறச் சூழ்நிலைகளிலுள்ள தடைகளையோ மேற்கொள்ளும் படி செய்து, அவருடைய பரிசுத்தஆவிக்கு இசைவாக நடக்கும்படி செய்கிறார். இப்படி அநுக்கிரகம் பெற மீண்டும் மீண்டும் புதிதாக ஞானஸ்நானம் பெறுவது அவசியமில்லை. ஞானஸ்நானம் முத-ல் செய்யவேண்டிய உடன்படிக்கை. அதன்பின் பெறவேண்டிய அருட்கொடைகளெல்லாம் சத்திய ஆவி, தெய்வீக அன்பின் வாய்க்கால்கள் வழியாக நமது மனம், சொல், சிந்தை யாவிலும் ஊடுருவிப் பாய்ந்து நம்முடைய செயல்பாடுகள் அவருக்கிசைவாக நடந்தேற வேண்டும். தேவஞானம், தேவ பராமரிப்பு, நாம் அவருக்கு இசைவாக செல்லும் வழிகளிலே எந்த தடைகளும் நேராவண்ணம் அவைகளைத் தவிர்த்து செம்மையான வழிகளில் நம்மைச் சேர்க்கிறது. யார் வாஞ்சையோடு பரிசுத்தஆவியை நாடித் தேடி ஜெபிக்கிறார்களோ, அவர்களுக்கே அந்த ஆவியின் வல்லமையைத் தாராளமாகக் கொடுக்கின்றார். இந்த உலக சிந்தனை, உலக ஆவி ஆகியவற்றை நமது இருதயத்தை விட்டே விரட்ட வேண்டும். அதற்கு பதிலாக தேவ ஆவி, தேவ சிந்தனையே ஆதிக்கம் செலுத்தும் வண்ணமாக நமது இருதயத்தில் குடிகொண்டிருக்க வேண்டும். சுய சித்தத்தை வேரோடு களைந்து விடவேண்டும். நாம் உலக விருப்பங்களை அறவே விட்டொழித்து இருதயத்தை காலி யாக வைத்திருந்தால்தான், ஆவிக்குரிய அருட்கொடைகளை நிரப்பிக் கொள்ள முடியும்.

எபேசியருக்கு அப்.பவுல் எழுதுகிறதாவது: “விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாய் இருக்கவும், நீங்கள் அன்பிலே வேறூன்றி நிலை பெற்றவர்களாகி, சகல பரிசுத்தாவன்களோடும் கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உரயமும் இன்னதென்றும் உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள

வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்படவும் வேண்டும்." - எபேசி 3:17-19. யாரொருவரிடத்தில் கிறிஸ்துவின் சிந்தை எவ்வளவாய் பரிபூரணமாக வாசம் செய்கிறதோ அவ்வளவாய் பிதாவின் ஆவியும் குணநலன்களும் அவரிடம் நிறைவாயிருக்கும்.

தேவனுடைய பிள்ளைகள் திருத்துவத்தில் சமமான மூன்றாவது கடவுளை கேட்பதில் பிதாவாகிய தேவன் சந்தோஷப்படுவார் என்பதற்கான ஆதாரம் முழு வேதாகமத்தில் எங்கும் காணப்படவில்லை. அப்படிப்பட்ட கருத்து எந்த வேதாகமப் பகுதிக்கும் தொடர்பற்றதும் ஆதாரத்துடன் நிலை நிறுத்தக்கூடாததாயும் இருக்கிறது. அப்படிப்பட்ட தவறான கருத்து கொண்டிருப்பவர்கள் தப்பறையான கொள்கைகளினால் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், சத்திய அழகையும் காணக்கூடாதபடி குருடாக்கப்பட்டிருக்கிறார்கள். மனித பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அப்பத்தையும் மீனையும் முட்டையையும் கொடுப்பது போல் திருத்துவ தேவர்கள் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டு கொடுப்பது விநோதமான கொள்கையாகும். (அடுத்து வருகிற வசனங்களைப் பார்க்கவும்) பரிசுத்த ஆவி என்பது தெய்வீக சிந்தை, தேவ வல்லமை என்றும், அது தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர்களை ஆவியில் பலப்படுத்தவும், ஆறுதல்படுத்தவும் கொடுக்கப்படுகிறது என்றும் புரிந்து கொண்டால் மட்டுமே அந்த முழுப்பகுதியும் அர்த்தமுடையதாக இருக்கும்.

இந்த வசனம் சொல்லுகிறபடி பூமிக்குரிய நல்ல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான ஆகாரம் கொடுப்பது போல, பரம தந்தை கேட்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை தருகின்றார். உலகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவையான ஆகாரத்தைக் கொடுத்தாலும் அவர்கள் வற்புறுத்தி திணிப்பதில்லை. அதுபோலவே பரமதந்தையும் ஆவிக்குரிய ஆகாரத்தை பலவந்தமாகத் திணிக்காமல் தேவைக்கேற்பவே அவர்கள் கேட்குமளவுக்குப் பகிர்ந்தளிக்கின்றார். நாம் இப்படிப்பட்ட ஆகாரத்தினையே பசியோடும் தாகத்தோடும் தேடவேண்டும். இவைகளை சந்தேகத்தோடு அல்ல;

விசுவாசத்தோடு தேடவேண்டும். அவர் நல்ல அருட்கொடைகளை அவர் சித்தத்திற்கேற்ப வழங்கும்படி வேண்டிக் கொள்ள வேண்டும். பரிசுத்தஆவிக்காக நாம் தேவனிடம் விண்ணப்பம் பண்ணும்போது, கர்த்தருடைய ஆவி நம்மீது பொழிந்திடும். நமது ஜெபத்திற்கு தேவன் அளித்த விடையாக நம்மைச் சுற்றிலும் தேவ ஆவியினால் நிரப்பி நம்மை வழிநடத்தும்.

இதனை பெற்றுக் கொள்ளும் வழி வேதாகமத்தில் உள்ளது. ஆனால் அது எங்கே எவ்விடத்தில் சொல்லப்பட்டுள்ளது என்பதை அறிந்தால் மட்டும் போதாது. அதை உட்கொள்ள வேண்டும். அதனை நமக்கு முழு திருப்தியளிக்கும் வகையில் உணவாக மட்டுமின்றி, விருந்தாக உட்கொள்ளாவிடில் விரும்பிய ஆவியின் பலனைப் பெற முடியாது. ஒருவனுக்கு வேண்டிய உணவு படைக்கப்பட்டாலும் அவன் பசியில்லை என்பானேயானால் அவன் பட்டினியாய்த்தான் இருப்பான். அப்படிப்பட்டவன் முன்பு உணவு வைக்கப்படுவதும் வைக்கப்படாமல் இருப்பதும் ஒன்றே. உணவு வேண்டும் என்று கேட்டால் மட்டும் போதாது. அதனை புசிக்கவும் விருப்பமுடையவர்களாயிருக்க வேண்டும். பரிசுத்தஆவிக்காக ஜெபம் செய்வதோ, வேதாகமம் கையிலிருப்பதோ மட்டும் போதாது; வேதாகமத்திலிருந்து தேவ ஆவியைப் பெற ஏதோ பொழுது போக்குக்காக படித்தேன் என்றில்லாமல் அதை ஆகாரமாக மென்று சுவைத்து தன்மயமாக்கிக் கொள்ள வேண்டும்.

நமது ஆண்டவர், “நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது” என்றார். - யோவா *6:63*

ஆவியில் நிறைந்திருக்கிற ஒவ்வொருவருக்கும் இதுவே சத்திய வாக்கு என்பதற்கு ஆதாரம்.

“உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும் என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தது.” *(எரே 15:16; வெளி 10:9)* சத்திய வசனத்தை நாம் வேண்டியளவு உட்கொள்ளும்படியான அளவு கொடுக்கப்பட்டிருந்தாலும் அதனை அசட்டை செய்துவிட்டு, “கர்த்தாவே,” “கர்த்தாவே” என்மேல் ஆவியை நிரம்பப் பொழிந்தருளும் என வேண்டுவது வீணிலும் வீணாகும்.

*பரிசுத்தஆவிக்காக நாம் ஜெபம் செய்துவிட்டு அதற்கான முயற்சி எதுவும் செய்யாவிடில் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாகவே வளர்ச்சியின்றி இருப்போம். சத்திய ஆவியினாலே உள்ளான மனுஷன் வளராமல், வெறும் வெளியடையாளங்களைத் தேடுவது பயனற்றது.*

## *"பரிசுத்தஆவியின் சாட்சி"*

*"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார்." - ரோமர் 8:16*

*இந்த வசனத்தைக் காட்டிலும் தேவ பிள்ளைகளுக்கு வேத சித்தாந்தம் எதுவுமில்லை. ஏனெனில் "எல்லாபுத்திக்கும் மேலான தேவசமாதானம்" இதனை சார்ந்தே அமைகிறது. (பிலிப் 4:7) அவர்கள் தேவ ஆவியின் புத்திரர் என்று சாட்சி பெறாவிட்டால், தேவ குடும்பத்தில் சுவீகாரம் பெற்றவர்கள் என நிரூபிக்கப்படாவிட்டால் அவர்களுக்கு இந்த "விசுவாசத்தின் பூரண நிச்சயம்" எவ்வாறு ஏற்படும்? (எபி 10:22) இருந்தபோதிலும் ஆவியின் சாட்சி பகர்தல் என்ற கருத்தை எத்தனை பேர் சரியாக புரிந்திருக்கிறார்கள்? நாம் தேவ குமாரர்கள் என்று நற்சாட்சி பெற எத்தகைய அனுபவங்களை எதிர்பார்க்க வேண்டும்?*

*எனவே இந்த வினா மிகவும் அவசியமானது. நாம் தேவனோடு ஒப்புரவாகி, தேவ குமாரர்களாக மாறி இருக்கிறோம் என்பதற்கு எப்படி பரிசுத்தஆவியின் சாட்சி விளங்கும்? தெய்வீக ஏற்பாட்டின்படி, தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயிர வருட அரசாட்சியில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரவாளியாகும் மகிமைக்காக ஆயத்தம் பண்ணுகிறார். அநேக கிறிஸ்தவர்கள் சில பல கொள்கைகளில் குழப்பமடைந்தாலும் பரிசுத்தஆவியின் சாட்சியிடுதல் பற்றி அதிகக் குழப்படைமடைந்துள்ளனர். பரிசுத்தஆவியின் சாட்சியிடுதலைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்ளாததினால், கர்த்தருடைய பிள்ளைகளிலும் அநேகர் என்னவென்று புரியாததினால், தாங்கள் நற்சாட்சி பெற்றோமா இல்லையா என்பதையே அறியாமலிருக்கின்றனர். ஏனையோர் தங்களுடைய ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டாமல், பரிசுத்தஆவியினால் கிடைக்கும்*

மகிழ்ச்சியின் நிச்சயத்தைக் குறித்து, இதுவே தாங்கள் பரிசுத்தஆவியின் சாட்சியைப் பெற்றதாக உணர்கின்றனர். ஆனால் மிக விரைவிலேயே இது அவர்களுக்கு திருப்தியளிக்கவில்லை என்பதை அறிந்து கொள்கின்றனர். அது எப்போது அவர்களுக்கு மிக அவசியமாக தேவைப்படுகிறதோ அப்போது அது உதவாமல் போய்விடுகிறது. தாங்கள் ஆரோக்கியமாயிருக்கிறபோதும், பொருளாதாரத்தில் மிக வேகமாக முன்னேறும்போதும், அநேக சிநேகிதர்கள் இருக்கும்போதும் எல்லாராலும் பாராட்டப்படும் போதும் அவர்கள் மிகுந்த சந்தோஷமடைகின்றனர். ஆனால் தாங்கள் இந்த நிலைமையில் இருந்து மாறுபடும்போது அவர்கள் மிகுந்த வேதனைப்படுகிறார்கள். அவ்வாறு வேதனைப்படும்போது தாங்கள் பரிசுத்தஆவியை இழந்துவிட்டதாக வேதனையோடு கூக்குர-டுகின்றனர்.

"நான் கர்த்தரை முதன்முதலாக அறிந்தபோது ஏற்பட்ட
சந்தோஷ, ஆனந்த பாக்கியங்கள் எங்கே?"

இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய உணர்வுகளாலேயே தவறாக வழிநடத்தப்பட்டு வஞ்சிக்கப்படுகின்றனர். சில சமயங்களில் சத்துருவால் வழிநடத்தப்பட்டு, சோதனைக்குள்ளாக்கப்படும் போது, தாம் தேவனிடத்தில் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் நினைத்து சந்தோஷப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்களின் தவறான இந்த நம்பிக்கையே தேவ கிருபையை அடிக்கடி இழப்பதற்கும் திடீரென்று இழப்பதற்கும் காரணமாகிறது. நம்பத் தேவையில்லாததை வெகு பாதுகாப்பு என்று நம்பினதினால் வஞ்சிக்கப்படுகிறார்கள். இதனால் தேவனுடைய பாதுகாப்பை இழந்து உலக சோதனைகளுக்கு இரையாகும்போது அவர்கள் ஆதியில் கொண்டிருந்த சந்தோஷம் எங்கே? மேலும் வாழ்வில் வரும் சோதனைகளும் ஏமாற்றங்களும் நம்மைப் பிதாவினண்டையில் நெருக்கமாக இட்டுச் சேருவதற்கும் நமது இரட்சகரின் அன்புக்கும் பரிவுக்கும் நம்மை மிகவும் தகுதியுள்ளவர்களாக்கவும் கொடுக்கப்பட்ட திட்டம் என்பதை இந்த வகுப்பினர் உணராமலிருக்கின்றனர். இவர்கள் சரியான ஆவியின் சாட்சியினை பெறாததினால் துன்பம் வரும்போது துவண்டு போய், தாங்கள் பெற்ற ஆவியின் சாட்சியோடு எல்லாமே பறிபோயிற்று

என்று அங்கலாய்க்கின்றனர். தாங்கள் இழந்த உலகப் பொருள்களைத் திரும்பப்பெற வாஞ்சையாயிருக்கின்றனர். இந்த வகுப்பினர் வாழ்க்கையில் அநேக கெத்சமனே பாடங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை தேவன் கொடுத்தும் அவைகளைக் கற்றுக் கொள்ளாமல், கர்த்தருடைய மடியில் அமர்ந்து இன்னும் இதைவிட அருமையான பாடங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை முற்றிலுமாக இழந்து போகின்றனர்.

வேறொரு வகுப்பார் தங்களுடைய நம்பத்தகாத உணர்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதால், தேவன் தாங்கள் நம்பத்தகுந்த சாட்சியை கொடுக்கவில்லை, தங்களுக்கு தயை காண்பிக்கவில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றனர். தேவகுமாரர்களாக தேவ குடும்பத்தில் சேரத்தக்க நிச்சயமான தகுதியும் சாட்சியும் தங்களுக்கு தரப்படவில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுகின்றனர். அவர்களுடைய சந்தேகங்கள், எண்ணங்கள், பிரபலமான இந்த பாடலில் எதிரோலிக்கிறது.

"நான் கர்த்தரை நேசிக்கிறேனா? இல்லையா?
நான் அவருடையவனா அல்லது இல்லையா?
இந்த ஆர்வமுள்ள கேள்வி நீண்ட நாட்களாக
என்னுள் அடிக்கடி எழுகிறது."

இந்த நிச்சயமற்றத்தன்மை தேவனுடைய தெரிந்து கொள்ளுத-ன் திட்டத்தை தவறாகப் புரிந்து கொள்ளவும் ஒரு காரணமாகிறது. அடிக்கடி மாறக்கூடிய இவர்களின் உணர்வுகளின் காரணமாக தேவ புத்திரராக இருக்க வேண்டிய திடத்தன்மையில்லாததால், அவர்களுடைய முடிவு அவர்கள் பார்வையில் சரியாயிருப்பது போல இருந்தாலும், தேவனுடைய பார்வையில் சரியாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருக்க முடியாது. மற்றவர்கள் வேதாகமம் சொல்லுகிறபடி, "உம்மை உறுதியாகப் பற்றிக் கொள்ள மனதையுடைவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்" என்ற வசனத்திற்கு இலக்கணமாக இருப்பார்கள். அவர்கள் தங்களுக்கு கிடைக்கும் சமாதானத்தைப் பொறுத்து, தாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதை நிதானிப்பார்கள். சிலர் உலகத்தாரையும் புற ஜாதியாரையும் பார்க்கும்போது அவர்கள்

சமாதானமாக வாழ்வதாகத் தோற்றமளிக்கலாம். ஆனாலும் அவர்களிடத்தில் ஆவியின் சாட்சியின் உறுதிப்பாடு காணப்படாததால், அவர்களுடைய நம்பிக்கையும் சாட்சியும் திடனற்றுப் போகும். அவர்களுக்கே அவர்களுடைய வாழ்க்கையில் நிச்சயமிருக்காது. காரிருள் சூழும்போது, ஒருவன் வஞ்சிக்கப்படும்போது வேதனைக்குள்ளாகின்றான். அந்த வஞ்சனையினால் கர்த்தரின் ஆவியையே கலங்கப் பண்ணி விடுகின்றான். ஏனெனில் "பயமானது வேதனையுள்ளது."

எதையும் வெகு எளிதில் நம்பக்கூடிய உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள், எதையும் சீக்கிரம் விசுவாசிப்பார்கள். அவர்களுக்கு பரிசுத்த ஆவி தங்கள் காதில் இரகசியமாக ஏதோ சொன்னதாக நம்பி தங்களை தாங்களே மெச்சிக் கொண்டு, அதனை செயல் படுத்தவும் துணிவார்கள். ஆனால் தாங்கள் நம்பி விசுவாசித்தது பொய்யானதும் தப்பறையானதும் என்பதைப் பின்னர் புரிந்து கொள்வார்கள். மற்றும் சில கிறிஸ்தவர்கள் எதற்கும் காரண காரிய அடிப்படையில் செயல்படுவர். அவர்கள் எளிதில் வஞ்சிக்கப்பட முடியாது. தங்களுக்கு நண்பர்களாயிருக்கிற சிலர் இவ்வாறு பரிசுத்த ஆவி தங்கள் காதில் இரகசியமாகச் சொன்ன காரியங்களைக் கேட்டு பிரமிப்படைகிறார்கள்.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் - ஆவி என்பது தேவ வல்லமையென்று உணராமல், அது ஒரு ஆள்தத்துவம் என்று நம்புவதே ஆகும். இந்த அடிப்படைக் காரணமே தவறானதால், அதை சரி என நிரூபிக்க ஆள்தத்துவம் போன்ற தவறான எண்ணத்தையே சாட்சிக்கு அழைக்கிறார்கள். பரிசுத்த ஆவி தேவன் அப்பியாசப்படுத்த விரும்புகிற சக்தி அல்லது வல்லமை என்று தெளிவாகப் புரிந்து கொண்டால் "ஆவியினால் சாட்சி பகர்தல்" என்பதை எளிதில் விளங்கிக் கொள்ளலாம். இந்தத் தெளிவான கருத்தை முறையாகப் புரிந்து கொள்வதே ஆவியின் நிச்சயமான சாட்சி. இந்த ஆசீர்வாதமான சாட்சியைப் பெற்றுக் கொண்டவர்கள், அதை அறியாது இருக்கின்றவர்களுக்கு அதை அறிவிக்கக்கூடிய ஆசீர்வாதத்தினைப் பெற்றிருப்பார்கள். இதனால் சாட்சியம் சொல்பவர்களும், சாட்சியத்தைக் கேட்பவர்களும் ஆவிக்குரிய நிபந்தனையின்படி ஜீவிக்கத் தொடங்குவார்கள். இந்த ஆவியின்

சாட்சியத்தைப் பெறாத எவரும் தங்களை தேவகுமாரர்களென்றோ, பிதாவின் ஒழுக்க குணநலன்களுக்கேற்புடையவர்களென்றோ அங்கீகாரம் பெமுடியாது.

இப்படி மெய்யான சாட்சியை பெற்றிருப்பவர்களிடமும், வேதாகமத்தை எப்படி படிப்பது என்பதை கற்றவர்களிடமும் சரியான அனுபவமுள்ளவர்களிடமும் எப்படிப்பட்ட உன்னதமான சந்தோஷமும் சமாதானமும் வருகிறது! அப்படிப் பட்டவர்களுக்கு, துயரமே மகிழ்ச்சியாகவும், இருளே ஒளியாகவும் அவர்களுடைய கஷ்ட நஷ்டத்தில் தேறுதலும், பலவீனத்தில் பலமும் உண்டாகும். இந்தக் காரியத்தைக் குறித்தும், இன்னும் எல்லா பாடத்தைக் குறித்தும் தெளிவான வழி நடத்துதலும் நமது பிதாவின் வார்த்தையான பரிசுத்த வேதாகமத்தில் காணப்படுகிறது. வேதத்திலும், வேதத்தின் வாயிலாகவும், பரிசுத்த ஆவியின் சாட்சி பிதாவின் ஆவியோடு சேர்ந்து, நமது ஆவியோடு சாட்சி பகர்கின்றது.

"ஓ கர்த்தரின் பரிசுத்தவான்களே!
அவருடைய உன்னதமான வார்த்தைகளினால்
உங்களுடைய விசுவாசத்திற்கு எவ்வளவு
உறுதியாய் அஸ்திவாரமிடப்பட்டிருக்கிறது!
கிறிஸ்துவையே அடைக்கலமாகக் கொண்டு
நாடித்தேடி ஓடுகிற உங்களுக்கு
அவர் சொன்னதைக் காட்டிலும்
புதிதாக வேறெதைச் சொல்ல இயலும்?"

## ஆவியின் சாட்சியிடுதலை அறிவதெப்படி?

ஒரு மனிதனின் மனதை அவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகள், அவனுடைய நடக்கைகள் மூலம் அறிந்து கொள்ளலாம். அதுபோலவே தேவனுடைய சிந்தை, தேவனுடைய ஆவியை அவருடைய வார்த்தைகளினாலும், அவருடைய செயல்பாடுகள், வழிநடத்துதல்கள் ஆகியவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். செத்த, கெட்ட கிரியைகளிலிருந்து நீங்கி சீர்திருந்தியவர்களாய் விசுவாசத்தோடு நற்கிரியை செய்பவர்களாய் இருக்கிற எவரையும் அவர் முற்று முடிய இரட்சிக்க வல்லவராய்

இருக்கிறார் என்று அவருடைய வார்த்தைகள் சாட்சியிடுகின்றன. (எபி. 7:25) ஆவியின் சாட்சி தங்களுக்குண்டா என்று அறிய விரும்புகிற யாவரும் கேட்டுக் கொள்ள வேண்டிய வினாக்களாவன:

அவரே எனது மீட்பர் என்று அடையாளங் கண்டு அவரண்டையில் நான் இழுக்கப்பட்டிருக்கிறேனா?

அவருடைய ஈடுபலியின் மூலமாக உண்டான நீதியின்படி பிதாவுடன் ஒப்புரவாகியிருக்கிறேனா? அந்த ஒப்புரவு ஏற்கப்பட்டுள்ளதா? இந்த வினாவிற்கு ஆம் என்று விடையளித்தால், அடுத்த கேள்வி இதோ:

நான் ஞானஸ்நானம் பெற்று என்னை முழுமையாக தத்தம் செய்துள்ளேனா? என் வாழ்வு, என்னுடைய காலம், நேரம், என்னுடைய தகுதி, திறமைகள் ஆகிய எல்லாவற்றையும் அவருக்கே முழுமையாகத் தத்தம் செய்து விட்டேனா?

இந்த வினாக்களுக்கும் விடை ஆம் என்று இருந்தால், கேள்வி கேட்டுக் கொள்கிறவர்களுக்கு ஆவியின் சாட்சி நிச்சயம் உண்டு என்று அறிந்து கொள்ளலாம். பிதாவாகிய தேவனால், அவருடைய நேசகுமாரன் மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தன்னை தம் குமாரனாக அங்கீகரிக்கப்பட்டதாக அறியலாம். தன்னுடைய இருதயத்தின் எண்ணங்கள், உணர்வுகள் ஆகியவற்றை ஆராயும்போது, அது கிறிஸ்துவின் புண்ணியத்தில், இன்னும் நம்பிக்கையையும், ஆண்டவரின் சித்தத்தை நிறைவேற்ற அர்ப்பணித்ததையும் தெய்வீக உறவினாலும் ஐக்கியத்தினாலும் வரும் சமாதானத்தையும் நம்பிக்கையையும் தன் இருதயத்தில் காண்கிறான். மாற்றியமைக்கவே முடியாத ஒரே நோக்கமாய் உள்ள தேவ வார்த்தையின்படி, அதே குணநலன்களை உடையவர்களாய் நம்மை முழுமையாக மாற்றிக் கொள்ளும்போதுதான், கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் பெற்றிருக்கக்கூடிய கிருபையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். அவ்வாறில்லாவிட்டால் மணலில் கட்டிய வீடுபோல தேவகிருபை சரிந்து போய்விடும். நம் வாழ்விலே மிக சிக்கலான நேரத்தில், சந்தேகங்களும் பயங்களும் ஊடுருவும் போதெல்லாம் நாம், நம் பாதைக்கு வெளிச்சமாகிய வேதத்தையே திரும்பத் திரும்ப பகுத்து அதன் அஸ்திவாரத்திலிருந்து

*ஆராய்ந்து பார்க்கும்பொழுது, நம்முடைய இருதயம் கர்த்தருக்குள் விசுவாசத்தோடு இருக்குமாயின், பளிச்சென, சந்தோஷம், சமாதானம், விசுவாசம் ஆகியவை உடனடியாக நம்மிடம் திரும்பவும் நாம் இம்மாதிரி வழுவிப் போகக்கூடிய காலங்களில், விலையேறப் பெற்ற அவருடைய திருஇரத்தத்தின் மேல் கொண்டிருக்கிற விசுவாசம் சிதையும்போதோ, நம்முடைய நல்மனசாட்சியின் உடன்படிக்கையிலிருந்து விழக்கூடிய நிலை வரும்போதோ, நம்முடைய நிலை என்ன என்பதை சரிவரப் புரிந்து கொண்டு, எதனால் குறைவு பட்டிருக்கிறோம் என சரியாகத் தெளிந்து, திரும்ப சரி செய்து, நம்முடைய "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை" நிலைநிறுத்தக் கடவோம். (எபி. 10:22) "அவருடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவன், தேவன் சத்தியமுள்ளவர் என்று முத்திரை போட்டு நிச்சயப்படுத்திக் கொள்கிறான்" (யோவான் 3:33) என்பதைத் தவறாமல் கவனிக்கவும். "இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்." கர்த்தருடைய ஜனங்கள் தேவ கிருபையின் நிலமைக்கு ஒரு தடவை வந்த பிறகு, தேவ சித்தத்திற்கு தங்களது விருப்பத்தை இசைவாக்க தொடரும் காலம் வரை தேவ தயவின் கீழ் நிறைந்திருப்பார்கள் என்று நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். தேவ கட்டளைக்கு அவர்களது இருதயம் கீழ்ப்படிந்திருக்கும் காலத்தை அவர்கள் தேவனிடத்திலும் மனிதரிடத்திலும் காட்டுகின்ற பாராட்டும் ஒத்த அன்பிலிருந்து புரிந்து கொள்ளலாம். - எபி.11:6; 13:8*

*தேவனுடைய வார்த்தையின் சாட்சியில் விசேஷமாகக் குறிப்பிட்டுக் காண்பித்தபடியே நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள், தேவனுடைய பிள்ளைகள் என்ற நிச்சயத்தை பெறுகிறார்கள். இந்த சுவிசேஷ யுகத்தில் இப்படிப்பட்டவர்களே மெய்யான திராட்சைச் செடியின் கிளைகளாகவும் மெய்யான திருச்சபையின் உறுப்பினராவதற்குரிய தகுதி பெறும் பயிற்சிக்கு உரியவர்களாகவும் இருப்பார்கள். (யோவா 15:1) இப்படிப்பட்டவர்களே கிறிஸ்துவின் சரீரமாகிய மெய்த்திருச்சபைக்கு அங்கமாகின்றனர் என்று வேதாகமம் சாட்சி பகர்கின்றது. வேத வசனங்கள் மூலம், தேவனுடைய ஆவியில்*

சாட்சியம் பெற்று இவர்கள் ஆவியிலும் சிந்தையிலும் சாட்சியம் பெற்றவர்களாகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு அதே சத்திய ஆவியினாலே, அவர்களுடைய பயிற்சிக் காலம் முழுவதும், தங்கள் இருதயத்தில் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவர்களாக நாள்தோறும் மனப்பூர்வமாகவும், மனமகிழ்ச்சியாகவும் தங்கள் சிலுவையைச் சுமப்பார்களேயானால், கிறிஸ்துவின் அடிச்சுவட்டை எவ்வளவு நெருக்கமாய்ப் பின்பற்ற முடியுமோ, அவ்வளவாய் பின்பற்றி கிறிஸ்துவின் சபையில் அவர்கள் நிரந்தர உறுப்பினராகும் நிச்சயத்தைப் பெறுகிறார்கள். அவர்களது ஓட்டத்தை முடிக்கும் போது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவர்களாய், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். - பிலிப் 3:10

தேவ ஆவியினாலே, அவருடைய வார்த்தையின் மூலம் உண்மையான திராட்சைச் செடியின் கிளைகளாக இணைந்திருப்பவர்கள், ஆவியின் கனிகளான அன்பின் கனிகளைக் கொடுக்காவிட்டால், தேவன் அவர்களை அக்கிளையிலிருந்து வெட்டி எறிந்துவிடுவார் என்று உறுதிபடக் கூறுகின்றார். “என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் (பிதா) அறுத்துப் போடுகிறார், கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம் பண்ணுகிறார்.” (யோவா 15:2) பரலோகப்பிதா தமது குமாரர்களோடு, தண்டித்தல், சுத்திகரித்தல், கறைதிரைகளை நீக்குதல், கனிதரும் குணங்களை விருத்தி செய்தல் ஆகியவற்றால் செயலாற்றுவதை இப்படியாக தேவ ஆவி அவருடைய வசனத்தின் மூலம் நமக்கு சாட்சி பகர்கிறது. திராட்சைச் செடியோடு ஐக்கியப்பட்டிருக்கின்ற அனுபவம், நாம் அதற்குப் பின்னும் அதே செடியில் தான் நிலைத்திருக்கிறோம் என்கிற நிச்சயமான அடையாளங்களை உடையவர்களாயிருந்தால், நாம் கர்த்தருடைய பாதுகாப்பில் இருக்கிறோம் என்பதே ஆவியின் சாட்சியாய் அமைய வேண்டும். இதற்கு மாறாக, சொல்லப்பட்ட ஏதாவது ஒரு ஒழுக்கத்தில் குறைவுபட்டாலும், அவர்கள் திராட்சை செடியோடு இணைந்திருக்கப் பெற்றும்கூட, ஆவியின் சாட்சியம் இல்லாததினாலே கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்பட்டோமா, என்பது சந்தேகத்திற்குரியதாகிவிடும். - எபி 12:7

நாம் எல்லா நிலைகளிலும் பூரணராகி, முழு பரிபூரணத்தையும் அடைந்த பிறகு, அநேக பரீட்சைகளிலும் நிரூபிக்கப்பட்டவர்களாக இருப்போமேயானால் நிலமை வேறாக இருக்கும். நம்முடைய பரிபூரணத்தின் நிமித்தமும், தேவனோடு இசைவாய் இருப்பதினாலும் அவர் நம்மில் அன்புடையவராயிருப்பார்; தண்டனையும் கசப்பான அனுபவமும் அவரது கிருபையற்ற நிலமையை குறிக்கிறது. நாம் எல்லாரும் அபூரணர் என்பதை நாம் அறிவோம். தேவன் எதிர்பார்க்கிற உன்னத ஒழுக்க தரத்திற்கு நாம் மிகவும் குறைவு பட்டவர்கள். தேவனுக்குகேற்புடையதெல்லாம் நமது புதிய இருதயம், புதிய சிந்தை, மறுரூபமாக்கப்பட்ட மனது. நாம் படிப்படியாக கிறிஸ்துவின் புண்ணியத்தினால் பூரணராக்கப்பட்டு, பயிற்சிக்குட்படுத்தப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, முன்னேற்றமடைந்து, இறுதிப் பரிபூரணம் அடைய வேண்டும். தேவனுடைய பூரணத்தையும், நமது அபூரணத்தையும் முதலில் நன்கு புரிந்து கொண்டால், நாம் முன்னேற்றமடைவதற்குத் தேவையான பாடங்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பாக இருக்கும். அந்த தெய்வ சாயலை அடைய நாம் எத்தனையோ பயிற்சியும் முயற்சியும் செய்து நம்மை சீர்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

மகிமையுள்ள ஒரு ஆலயத்தை தேவன் ஆயத்தம் பண்ணிக் கொண்டு வருகிறார் என்று வேதாகமம் நமக்கு தெரிவிக்கின்றது. இதன் மூலமாக, உலக மாந்தர் அனைவரும் தேவனோடு ஒப்புரவாகி, ஒரு மனப்படுவார்கள். இந்த ஆலயத்தைக் குறித்தும் அதை நிர்மாணிக்கப் போகிற மிகப்பெரிய சிற்பாசாரியரைப் பற்றியும் வேதத்தின் வாயிலாக அறிகிறோம். இந்த முழு ஆலயத்தின் முக்கியமான பிரதான மூலைக்கல்லாகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டே இந்த ஆலயம் நிர்மாணிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. அந்த ஆலயத்துக்குரிய ஜீவனுள்ள கல்லாக தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக இருக்க வேண்டுமானால் அவர்களுக்கு என்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பதை நன்கு தெரிந்திருக்க வேண்டும். இவர்கள் தங்கள் தலையாகிய கிறிஸ்துவோடே “ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள்.” இயல்பாகவே

கரடுமுரடாக இருக்கின்ற நாம், அந்த ஆலயத்திற்குரிய கிருபையில் கொஞ்சமேனும் இசைவில்லாமலிருக்கும் போது, மூலைக்குத் தலைக்கல்லான கிறிஸ்துவிடமிருந்து பல வகையிலும் மாறுபட்டிருக்கிறோம் என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். இப்படிப்பட்ட முரட்டாட்டமுள்ள மனதையுடைய நாம், தேவ கிருபையினாலே தெய்வாலயத்தில் வைக்க வேண்டிய கல்லாக மாற்றப்பட்ட வேண்டுமானால், எவ்வாறு கல் உளியினால் செதுக்கி, சீராக்கப்படுகிறதோ அது போல நாமும் செதுக்கப்படவேண்டும். கர்த்தருடைய சுத்தி, உளி இவைகளினால் செதுக்கப்படாதவர்கள், அவருடைய ஆவியின் சாட்சியைப் பெறாதவர்கள் ஆவர். இத்தகைய சிட்சையை வேதத்தின்படி அமைந்த மனதோடு பெற்றுக்கொண்டால்தான், ஆவியின் சாட்சியைப் பெற்றவர்களாக ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களாவார்கள். இந்த ஆலயத்தின், மூலைக்குத் தலைக்கல்லான கிறிஸ்துவும் கூட இந்த சிட்சைக்குத் தப்பவில்லை. இடுக்கமான வாசல், நெருக்கமான வழி, உபத்திரவம் இவைகளில்லாமல், நாம் ஓய்வாக சந்தோஷமாக இருப்போமேயானால் நாம் நிச்சயமாக ஜீவனுள்ள கற்களாக மாற முடியாது. மாறாக, உபத்திரவம், துன்பம், நெருக்கமான வழி, இடுக்கமான வாசல் இவைகளுக்காகவே குறிக்கப்பட்டவர் களாயிருந்து நாம் இதனை அனுபவிக்கும்போது தான், ஜீவனுள்ள கற்களாக மாறி, ஆவிக்கேற்ற மாளிகையின் ஒரு பகுதியாக தேவ பிள்ளைகளாகும் சாட்சியைப் பெறுவோம். இப்படிப்பட்ட ஏமாற்றங்களும், துன்பங்களும் நம்முடைய வாழ்க்கையில் வராவிடில், நாம் தேவகிருபையை இழந்து விட்டோம் என்றெண்ணி, கர்த்தரிடத்தில் திரும்பி, ஏன் எங்களுக்கு இந்த பரீட்சைகள் கொடுக்கவில்லை என்று வினவ வேண்டும். அதனாலே விசுவாசத்தில் நாம் தொடர்ந்து நிலைத்திருக்க, "நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும்." *(2 கொரி. 13:5)* தேவ சித்தப்படி செய்ய, நம்மை முழுமையாய் தத்தம் செய்து ஒப்புக் கொடுத்திருக்கிறோமா? நமது போதகரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மெய்யான விசுவாசத்தில் நடக்கிறோமா? என்று நம்மை நாமே சோதித்துப் பார்த்தல் அவசியம். தேவனுடைய உளியினால், சுத்தியினால் செதுக்கப்படுகிற அனுபவம், மெருகேற்றுதல்,

*சிட்சையினால் ஒழுக்கத்திற்குட்படுத்தப்படும் அனுபவங்கள் நமக்கு ஏற்படும்போது, நாம் பொறுமையாக, மனப்பூர்வமாக, சந்தோஷமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் இவைகளெல்லாம் பிதா நம்மிடம் கொண்டுள்ள அன்பினாலே நமக்குக் கிடைக்கின்றன. இவைகள் நாம் பரம அழைப்பைப் பெறவும், ஆவியின் சாட்சியம் பெறவும், அதனால் நாம்* தேவபுத்திரராகவும், சுதந்திரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகும் *பாக்கியம் பெறவும் அத்தியாவசியமாகிறது. "நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே, தேவனுடைய சுதந்திரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு, அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்." - ரோம 8:17*

## ஆவியின் "ஊழியங்களில் வித்தியாசங்கள்"

*"கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ, அவனை சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்கிற எந்த மகனையும் தண்டிக்கிறார்."*

*"எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல், வேசிப்பிள்ளைகளாய் இருப்பீர்களே." - எபி 12:6,8*

*பாடுகளும் உபத்திரவங்களும் உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் வருகிறது. தேவனுடைய பரிசுத்தவான்களுக்கும் வருகிறது. ஆனால் இவைகளெல்லாம் தேவ குமாரர்கள் என்பதற்கான அடையாளங்கள் அல்ல. யார், யார் தேவசித்தத்தை நிறைவேற்ற முழுமையாய் தங்களை தத்தம் செய்கிறார்களோ அவர்களுக்கு இத்தகைய துன்பங்களை சகிப்பதின் மூலமாக தேவ புத்திரர் என்ற பாக்கியம் கிடைக்கிறது. தேவனுடைய வார்த்தையும், அவருடைய ஆவியும் தேவப்புத்திரர்களுக்கு மட்டுமே சாட்சி பகரும். கர்த்தருடைய குடும்பத்திற்கு கொடுக்கப்படும் சிட்சை எல்லாருக்கும் எல்லா சமயத்திலும் ஒரே விதமாக இருப்பதில்லை. பூமிக்குரிய பிள்ளைகளுக்கு இடம், பொருள், சந்தர்ப்பத்திற்கிசைய வெவ்வேறு ஒழுக்கங்கள் தேவைப்படுகிறது. அதுபோலவே, தேவனுடைய பிள்ளைகளுக்கும் இந்த ஒழுங்கு இருக்க வேண்டும். ஒரு சிலரை ஒரு பார்வையினாலே உணர்த்த முடியும். ஒரு சிலருக்கு வெளிப்படையாகத் திட்டினால் தான் புரிந்து கொள்வர். இன்னும்*

சிலருக்கு கசையிலடித்தும், திரும்ப திரும்ப சொல்லவும் வேண்டியிருக்கும். பூமிக்குரிய பெற்றோர் தங்களிடத்தில் பணிவாக, உடனுக்குடன் கீழ்ப்படிகிற பிள்ளைகளிடத்தில் மிகுந்த சந்தோஷமடைகிறார்கள். அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு, அவர்களை ஒரு பார்வை பார்த்தாலே தங்களை சீர்திருத்திக் கொள்வார்கள். அதைப் போலவே நமது பரம பிதாவும், தம்முடைய வார்த்தைகளுக்கு நடுங்குகிறவர்களைக் கண்டு சந்தோஷ மடைகிறார். - ஏசா 66:5

இப்படிப்பட்டவர்கள் தேவனோடு ஒத்துழைத்து, அவருடைய குணநலன்களுக்கிசைவாக தம்முடைய குணநலன்களை மாற்றிக் கொண்டு, குறைகளை மாற்றி நிறைவு செய்து, பிதாவின் வழிகாட்டுதல், ஆலோசனைக்கு செவி கொடுத்து, அன்போடு கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொண்டு, எப்பொழுதும் அவருடைய அங்கீகாரத்தை புன்முறுவலோடு தேடிப்பெற வேண்டும். இப்படிப்பட்டவர்களின் உணர்வை ஒரு கவிஞர் உன்னதமாக பாராட்டி வடித்திருக்கிறார்.

"மெய் ஜோதியாம் என் தேவனே
நீர் தங்கினால் ராவில்லையே,
என் நெஞ்சுக்கும்மை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்."

தங்களைத் தாங்களே சோதித்து நிதானிக்கின்ற இந்த வகுப்பாருக்கு, கர்த்தரின் சிட்சை அதிகமாகத் தேவைப்படாது என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். ( 1 கொரி 11:31) இப்படிப்பட்ட வகுப்பினராய் இருக்க விரும்புகிறவர்கள், தங்களையே முழுவதும் தத்தம் செய்தவர்களாய் இருக்க வேண்டும். இவர்களே தங்கள் கர்த்தரோடு கூட தேவ ராஜ்யத்தில், உடன் சுதந்தரராயிருக்கும் தகுதியைப் பெற்று, ஜெயங் கொள்ளுகிறவர்களாய் இருப்பார்கள். இப்படி கீழ்ப்படிதலோடு, ஜாக்கிரதையாக காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு கர்த்தர் சொல்லுகிறதாவது:

"உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." - சங் 32:8.

"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக் கொள்வீர்." - (சங். 73:24) யார்

*அடிக்கடி கசையடி கொடுத்து திரும்பத் திரும்ப போதிக்கும் நிலையில் இருக்கிறார்களோ, அவர்கள் ஜெயம் பெற மாட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய மணவாட்டி என்கிற தகுதியுடைவர்களல்ல. அப்படிப்பட்டவர்களுக்கு சத்திய ஆவியின் சாட்சி கிடையாது. - வெளி 7:9, 14*

*துன்பம் வருதல் தவறு செய்ததையோ அல்லது கர்த்தர் அங்கீகாரத்தை நீக்குவதையோ எப்பொழுதுமே குறிக்கிறது என்று கூறமுடியாது. அதற்கு மாறாக, நமது கர்த்தரும், அவரது விசுவாசிகளும் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். தேவ கிருபை உண்மையுள்ள விசுவாசிகளையும். கீழ்ப்படி தலுள்ளவர்களையும், துன்பத்திற்குள்ளும், தன்னல மறுப்பிற்குள்ளும் வழிநடத்துகிறது. ஆனால் இது எதிர் மாறான விருப்பத்திற்கான தண்டனையல்ல. ஆனால் இது சோதனையாக, சுயதியாகம், அன்பின் அளவு, பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்தல் ஆகிய நீதியினிமித்தம் வருகிற துன்பமாக இருக்கிறது. நம்முடைய பாவங்களுக்காக நமது கர்த்தர் தண்டனையை எற்றுக் கொண்டார், அவருக்காக அல்ல. அதைப் போலவே அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க மனதாயிருப்பவர்கள், தங்களுடைய பாவங்களுக்காக அல்ல, மற்றவர்களின் பாவங்களுக்காக தண்டனையை அனுபவிக்கிறார்கள். இவர்களைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகிறதாவது:*

*“கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.” - கொலோ. 1:24*

## *பரிசுத்த ஆவியின் சாட்சியம் என்ன?*

*முன் சொல்லப்பட்டவைகளிலிருந்து, கர்த்தருடைய பிள்ளைகளாக தங்களைக் கூறிக்கொள்கின்றவர்கள், தாங்கள் தேவ பிள்ளைகளாவதற்கு ஆவியின் நற்சாட்சி பெற்றிருக்கிறார்களா என்று தங்களைத் தாங்களே சோதித்து ஆராய்வது அவசியம். திரும்பத் திரும்ப நம்மை நாம் இவ்விதமாக சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். இப்படி விழிப்புணர்வோடு தேவ அன்பிலே நம்மைக் காத்துக் கொண்டு, அவரது ஆவியின் சாட்சியத்தில் களிகூறுவோமாக.*

*நாம் தொடர்ந்து நம்மை தூய்மையுடனும், துப்புரவுடனும் வைத்துக் கொள்ள, நம்மிடமுள்ள நோயுள்ள பகுதிகளை கழித்துப் போடுகிறோமா? மாம்சத்திற்குரிய இத்தகைய குறைகள் - அவைகள் பெரியவையாயிருந்தாலும், சிறியவையாயிருந்தாலும் அவைகளை அவ்வப்போது நீக்கி விடுகிறோமா? நம்முடைய ஆவிக்கு எதிராகப் போராடுகிற கோபம், தீமை, வெறுப்பு, பொறாமை, கலகம், சுயநலம், முரட்டுத்தனம் இன்னும் அன்பின் ஆவியாகிய இயேசு கிறிஸ்துவில் இருந்த ஜீவ ஆவியின் பிரமாணத்திற்கு மாறுபாடான யாவற்றையும் நீக்கிவிடுகிறோமா? இப்படிச் செய்தால் தான் நாம் சரியான பாதையில் அதாவது தாழ்ச்சி, பொறுமை, சாந்த குணம், சகோதர சிநேகம், அன்பு ஆகியவைகளில் வளர்ச்சி அடைகிறோம் என்பதை உணர முடியும். இம்மாதிரி தங்களைத் தாங்களே சோதித்தறிந்து கர்த்தருடைய வார்த்தையின்படி நீதியின் பாதையில் யார் யார் நடக்கிறார்களோ, அவர்களெல்லாம் ஆவியின் நற்சாட்சி பெற்றதை உணர்ந்து கொள்வார்கள்.*

*மேலும், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்" என்று ஆவி சாட்சியிடுகிறது. (1 யோவா 5:18) தேவனுடைய பிள்ளைகளை, மரித்ததாகக் கருதப்பட்ட அவர்களுடைய பழைய குணங்கள் தோன்றி, எப்படியாகிலும் நசுக்கி விடக்கூடும். அறியாமல் தேவ பிள்ளைகள் மனம் பதறி ஒரு தவறான வார்த்தையை சொல்-யிருக்கலாம். இருந்தாலும் அவர்கள் மனதார தேவப் பிரமாணத்தை மீறமாட்டார்கள். எனவே நம்முடைய இருதயம் தேவனுடைய சித்தத்தைச் செய்யவே மிகவும் பிரியப்படுகிறது.அதை ஒருக்காலும் மீறவோ, எதிர்க்கவோ மாட்டோம். இந்த உலக நம்பிக்கைகளும், சிநேகங்களும் பகையாக மாறினாலும் தேவனுடைய சித்தம் நிறைவேற என்னால் முடிந்த யாவும் செய்வேன். இப்படி தேவசித்தத்தை செய்ய எல்லா முயற்சியும் செய்கிறபடியால், சத்திய ஆவியின் சாட்சியம் நமக்கு உறுதியாகக் கிடைக்கின்றது. ஒரு காலத்தில் நாம் தேவ குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டோம் என்ற நிச்சயத்தை மாத்திரமல்ல, இப்போதும் அதே உறுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறோம் என்ற நிச்சயத்தைப் பெறுகிறோம்.*

*கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக ஆவியின் நற்சாட்சி*

*பெற்றவர்கள், உலகிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாக கர்த்தரின் ஜனமாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுடைய நம்பிக்கை, நோக்கம், பொதுவான ஆவியின் தன்மை, குணநலன்கள் ஆகியவை மாறுபட்டிருக்கும்.*

*"நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் நேசித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும் நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்ட படியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." (யோவா 15:19) "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." - 2 தீமோ 3:12.*

*இந்த வார்த்தைகள், சரியாக நம்முடைய வாழ்க்கையில் பிரதிப-க்கிறது என நம் இருதயம் சாட்சியிடுகிறதா? அப்படியானால், நாம் தேவ பிள்ளைகள் என்று ஆவியினால் சாட்சியிடப்படுகிறோம். நம்முடைய கர்த்தரால் சொல்லப்பட்ட இந்த வார்த்தை உலகப் பிரகாரமாக ஜீவிக்கிறவர்களுக்காகவும் கூட சொல்லப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஏனெனில் அவர்களுக்கு இவ்வுலகின் எண்ணங்களே அடிப்படையாக இருக்கின்றது. நம்முடைய கர்த்தருடைய நாட்களில், யூத சபையைச் சேர்ந்தவர்கள் இத்தகையோராய் இருந்தார்கள் என்பது மெய்யே. மதத்தையே தொழிலாகக் கொண்டவர்கள்தான் இயேசு கிறிஸ்துவை குற்றஞ்சாட்டி அவதூறு செய்தவர்கள். கர்த்தருடைய வழியில் நடக்கிறவர்கள், தங்களுக்கு நிந்தை, அவமானம் ஏற்படும்போது, அதை எண்ணி ஆச்சரியப்படக் கூடாது. இந்த உலகத்தின் ஆவி எப்பொழுதுமே சத்திய ஆவிக்கெதிராக போர் புரிந்து கொண்டிருக்கும். எந்த இடத்தில் இவ்வுலகின் ஆவி அதிகமாய் இருக்கிறதோ அவ்விடத்தில் சத்திய ஆவிக்கு நேர் விரோதமாக துன்பங்களும் அதிகமாயிருக்கும் என்பது இயல்பு. ஆனால் இதைவிட, தேவனுடைய பிள்ளைகளென சொல்லிக் கொள்கிறவர்களிடத் தி-ருந்தே அதிக துன்பங்கள் வரும் என்பதை அறிய வேண்டும். கர்த்தரின் நாளில் ஆசாரியர்களாயிருந்தவர்கள் தான் அவரை பேய்களின் அதிபதியாகிய பெயல் செபூல் என்று அழைத்தார்கள். "வீட்டெஜமானையே பெயல் செபூல் என்று சொன்னர்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக*

*நிச்சயமல்லவா?" (மத் 10:25) என்று நமது கர்த்தரின் வார்த்தை மூலமாக பரிசுத்த ஆவி சாட்சியிடுகிறது. நம்மைக் குறித்து தீமையாக, பேசும்போது சத்தியத்தோடு நாம் கொண்டுள்ள உறவினாலேயே இப்படிச் செய்கிறார்கள் என்று கர்த்தரின் ஆவி நம்மைக் குறித்து சாட்சியிடுகிறது. இவ்வாறு துன்பங்கள் நேரும்போது நாம் சத்தியத்தின் சரியான பாதையில் நடக்கிறோம் என்பதற்கும் இதுவே சான்று.*

*நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, யூத சபையின் பிரபலமான தலைவர்களோடு கை கோர்த்துக் கொண்டு, அன்பின் சத்தியத்தைக் குறித்து சாட்சியிடாமல் இருந்திருந்தால், அன்றைய நாளில் பின்பற்றப்பட்டு வந்த போதனைகளை சுட்டிக் காட்டி கண்டிக்காமல் இருந்திருந்தால், அவரை குற்றம் சாட்டியும் வெறுத்தும் இருந்திருக்க மாட்டார்கள். மாறாக மனிதர்களுக்குள்ளே மிகப்பெரிய தலைவராக அவரை உயர்த்தியிருப்பார்கள். "மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாய் இருக்கிறது" (லூக் 16:15) என்று அவரே தன்னைக் குறித்து அறிக்கையிட்டார்.*

*நமது கர்த்தர், பரிசேயர் சதுசேயருடைய வஞ்சகங்களை வெளிப்படுத்தி, அவர்களுடைய தவறுகளைச் சுட்டிக் காட்டாதிருந்தாரேயானால், அவரை துன்பப்படுத்தவோ, வேதனைக்குள்ளாக்கியிருக்கவோ மாட்டார்கள். அவர்களிடம் பாராட்டை பெற்றிருப்பார். சத்தியத்திற்காக துன்பப்பட்டிருக்கவும் நேர்ந்திருக்காது. அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறவர்கள், அவரைப் போலவே தங்கள் சத்திய வெளிச்சத்தை பிரகாசமாக மற்றவர்களுக்கும் எடுத்துக் காட்டுவதினால், இயேசுவுக்கு எந்த வகுப்பாரிடமிருந்து எதிர்ப்பு வந்ததோ, அதைப் போலவே இவர்களுக்கும் இன்றைய பெயர் சபைகளின் தலைவர்களாய் இருக்கிறவர்கள் மூலமாக வெறுப்பு, பகையை சந்திப்பர். அன்பின் அடிப்படையில், சத்தியத்தைச் சொன்ன காரணத்திற்காகவே துன்பத்தை அனுபவித்தார்களானால் அவர்கள் மிகுந்த சந்தோஷப்படுவார்கள். அப்போஸ்தலர் கூறுகிறதாவது:*

"தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவி உங்கள் மேல்

*தங்கியிருக்கிறது." (1 பேது 4:14) அவர்கள் குறுகலான பாதையில் நடந்து, தங்களுடைய விசுவாசத்தை காட்டுவதை தேவ ஆவியின் மூலமாக சாட்சி பகருகின்றனர்.*

*இரட்சகரைக் குறித்தும், அவரது வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷ குமாரனும் தன் சம்பத்தை சேர்க்கும் நாளில் வெட்கப்படுவார் என்று பரிசுத்த ஆவியின் சாட்சியாக இயேசு கிறிஸ்து சாட்சியிடுகிறார். (மாற்கு 8:38) யார் யாரெல்லாம், கிறிஸ்துவை தங்கள் மீட்பரென்றும், போதகரென்றும் தங்கள் இருதயத்தில் நேசித்து ஏற்றுக் கொண்டு, சமயம் வாய்க்கும் போதெல்லாம் இசேுவை தங்கள் போதகரென்றும் மீட்பரென்றும் சாட்சியிடுகிறார்களோ, அதுவே அவர்கள் பெற்ற ஆவியின் சாட்சியமாகிறது. அப்படிப்பட்டவர்கள் தேவ ராஜ்யத்தின் வாரிசாகவும், தேவனுடைய பிள்ளையென்றும் திரும்பவும் பரிசுத்த ஆவியினால் சாட்சி பெறுகிறார்கள். இப்படிப்பட்டவர்களைத் தான் அவர் தன்னுடைய பிதாவின் முன்னிலையிலும், பரிசுத்ததூதர்களின் முன்னிலையிலும் தன்னுடையவர்கள் என்று அறிக்கையிடுவார். அதுவே அவர்கள் மகிழ்ச்சியடைவதற்குக் காணரமாகிறது. யாரிடம் இந்த ஆவியின் சாட்சியம் இல்லையோ, அவர்கள் அதற்கு மாறாக, இவர்கள் கர்த்தரைக் குறித்து வெட்கப்படுகிறவர்கள் என்று அவர்களுடைய இருதயமே சாட்சியிடுகிறது. கர்த்தரைப் பின்பற்றுகிறோம் என்று சொல்வதற்கு வெட்கப்படுகிறவர்கள் கர்த்தரின் சகோதரர்களை தங்கள் சகோதரர் என்று சொல்வதற்கும் அவருடைய சரீரமாகிய சபையாரைக் குறித்தும் வெட்கப் படுவார்கள். அவர் போதித்த போதனைகளைக் குறித்தும் வெட்கப் படுகிறார்கள். அவரின் இரண்டாம் வருகையிலே, இப்படிப்பட்டவர்கள் தங்கள் மனப்போக்கை மாற்றிக் கொள்ளவில்லையென்றால் அவரும் இவர்களைக் குறித்து தன் பிதாவின் முன்னிலையிலும், பரிசுத்ததூதர்கள் முன்னிலையிலும் வெட்கப்படுவார்.*

*மேலும், பரிசுத்த ஆவி, "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோவா 5:4) என்று சாட்சியிடுகிறது. நமது இருதயம், நமது ஆவி, நமது சிந்தை ஆகியவற்றை பரிசுத்த ஆவியின்*

இந்த சாட்சியத்தின் வெளிச்சத்தில் ஆராய்வோமாக. இந்த வேதாகமம் கூறுகிறபடி இத்தகைய தரத்தில் நாமும் வெற்றிபெறும் இலக்கை நோக்கிச் செல்கிறோமா? இந்த தெய்வீக தரத்தின்படி நாம் கர்த்தருடையவர்கள் என்றால் இந்த உலகத்தின் நோக்கம், நம்பிக்கைகள், ஆசை ஆகியவற்றிற்கு நாம் இசைந்திருக்கக் கூடாது. நாம் இந்த "உலகத்தை ஜெயித்தோம்" என்கிற ஒரே வார்த்தையில் இவைகளெல்லாம் அடங்கியிருக்கிறது. உலகத்தோடும் உலகக் காரியங்களோடும், உலக ஆவியான சுயநலத்தோடும், பெருமை,பேராசை ஆகியவற்றோடும் இணைந்திருப்பவர்கள் இந்த உலகத்தை ஜெயிக்காதவர்கள் என்பதை உடனே கண்டு கொள்ளலாம். ஒரு மத சம்பந்தமான பணியோ, அல்லது ஒழுக்க சம்பந்தமாக வாழ்கிறோம் என்பதினாலோ, ஞாயிற்றுக்கிழமைகளில் சிறுவர்களுக்கு ஞான உபதேசம் கற்றுக் கொடுப்பதினாலோ, ஏதோ ஒரு மதப் பிரிவினையைச் சேர்ந்த சபையில் அங்கத்தினர்களாக இருப்பதாலோ, ஏழைகளுக்கு உதவுவதினாலோ நாம் உலகத்தை ஜெயித்தவர்களாக இருக்க முடியாது. மேற்சொன்ன எவைகளினாலும் நாம் இந்த உலகத்தினை ஜெயித்தோம் என்று ஆவியின் சாட்சி பெற முடியாது. ஆவியின் சாட்சியம் கூறுகிறபடி நம்முடைய சரியான விசுவாசமே நாம் இந்த உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். எனவே நாம் தரிசித்து நடக்காமல் விசுவாசித்து நடந்தால் தான் ஆவியின் சாட்சியத்தைப் பெற முடியும். உலகப் பிரகாரமான புகழ், பிரபலமாக நினைக்கும் உலக ஆர்ப்பாட்டம், இந்த மதப் பிரிவு தான் பெரிது என்ற பெருமை பாராட்டல் போன்ற இவைகளை நாம் ஒரு பொருட்டென்று எண்ணக் கூடாது. காண்கிற இவைகளை அல்ல, காணாதவைகளாகிய ஆவிக்குரியவைகளும், நித்தியமானவவை களுமாகியவற்றையே தேட வேண்டும். *(2 கொரி 4:18)* கீழ்க்காணும் கவிஞரின் வார்த்தையின்படி நம்முடைய விசுவாசம் அமைய வேண்டும்.

"திரளான ஜனங்களோடு வெளிச்சத்தில் செல்வது எனக்கு விருப்பமல்ல,
அந்தகாரத்தில் நடந்தாலும் தேவனோடு நடப்பதையே விரும்புகிறேன்."

மேலும், வேத வாக்கியங்களின்படி, நாம் தேவ பிள்ளைகளானால் நிகழ்காலமாயினும், வருங்காலமாயினும் அறியாமல் இருக்க மாட்டோம் என்று நமக்கு

*கொடுக்கப்பட்டிருக்கிற பரிசுத்த ஆவி சாட்சியமிடுகிறது. ஏனெனில் நாம் தேவனுடைய கிருபை, வார்த்தையின்படி தேவனால் போதிக்கப்பட்ட வர்களாயும், தேவனால் பிரகாசிக்கப் பட்டவர்களாயும் இருக்கிறோம். நாளுக்கு நாள் நாம் பூரண வயதுள்ளவர்களாகும்படி, ஞானத்திலும், கிருபையிலும் வளர, திருவசனமாகிய ஞானப்பாலை மாத்திரமல்ல, அப்போஸ்தலர் சொல்லுகிறபடி பலமான ஆகாரத்தையும் உட்கொள்ளத்தக்க ஞானேந்திரியம் உள்ளவர்களாக ஆகவேண்டும். (1பேது 2:3; எபி.5:13,14) நாம் நாளுக்குநாள் ஆவியிலும் விசுவாசத்திலும், தைரியத்திலும், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவ பக்தி, சகோதர சிநேகத்தோடே அன்பு ஆகிய எல்லாவற்றிலும் வளர்ந்தால் கிறிஸ்துவோடும், பிதாவோடும் ஐக்கியப்பட வழிவகுக்கும். அப்படி அவர்களுக்கு இசைந்த ஆத்துமாக்களாக இருந்தால், தம்முடைய திவ்விய திட்டத்தைக் குறித்தும், தம்முடைய கிருபையின் குணநலன்களைப் பற்றியும் கர்த்தர் மென்மேலும் நமக்குத் தெளிவாக எடுத்துரைத்துக் கொண்டிருப்பார்.*

*இந்த ஆவியின் வளர்ச்சியைக் குறித்து, அப்.பேதுரு, "இவைகள் உங்களுக்குஉண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களைத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான்... இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." (2 பேது 1:5-11) இத்துடன் யோவா 16:12-15-ஐயும் ஒப்பிடுக.*

*இங்கு சொல்லியிருக்கிற ஆவியின் கனிகளான சாட்சியங்களை கிறிஸ்துவின் புதிய சிருஷ்டியாகப் போகிறவர்கள், ஒவ்வொருவரும் பெற்றிருக்கிறோமா என்று தங்களைத் தாங்களே சோதித்தறிய வேண்டும். இச்சாட்சியங்களைப் பெற்று நாளுக்கு நாள் அவைகள் வளர்ந்து பெருகுகிறதா என்றும் பரிசோதித்துக் கொள்ள*

வேண்டும். ஆவியின் கனிகளுக்கு, அன்பின் வளர்ச்சிக்கும் மிகவும் அத்தியாவசியமானது அறிவில் வளர்வதே ஆகும். நாம் தெய்வீக அறிவில் வளர வேண்டுமானால் அதற்கு மிக அவசியமானது ஆவியின் கனிகளை நாம் பெற்றிருப்பது. கடமை என்ற படியையும், கீழ்ப்படிதல் என்ற படியையும் நாம் கடந்து செல்லச் செல்ல தெய்வீக அறிவிலும் ஒவ்வொரு படியாக முன்னேறிச் செல்கிறோம். அப்படி ஒவ்வெரு படியாக நாம் கீழ்ப்படிதலோடும், கடமையுணர்வோடும் முன்னேறிச் செல்லும்போது, தெய்வீக அறிவிலும் முன்னேறிச் செல்ல முடியும். கிறிஸ்து என்னும் பள்ளியிலே தேவனால் போதிக்கப்படுகிற யாவரும் இப்படிப்பட்ட ஆவியின் நற்சாட்சி பெறுகிறார்கள். தெய்வீக அறிவிலும் கிருபையிலும் இப்படிப்பட்ட ஆவியின் சாட்சி இருக்குமானால் நாம் மிகவும் சந்தோஷப்பட்டுக் களி கூறலாம். தெய்வ அறிவிலும் கிருபையிலும் தேவன் வழிகாட்டும் வண்ணமாக, பரிபூரணமடைந்து நாம் அதே பாதையில் நேராய் நடக்கக் கடவோம்.

## எதிர்காலத்திற்குரிய பரிசுத்த ஆவியின் சாட்சி

அடுத்த யுகத்தில் பரிசுத்த ஆவி, ஒப்புரவாக்கப்பட்ட உலக மனுக்குலத்திற்கு சாட்சியிடும். பரிசுத்த ஆவியின் சாட்சி, தோற்றத்தில் ஒரே மாதிரி தோன்றினாலும், உண்மை செயல்பாட்டில் வெவ்வேறு விதமாக இருக்கும். வரப்போகும் யுகத்தில் ஆவியைப் பெறுபவர்கள் யோயேல் தீர்க்க தரிசனப்படி சொற்பமான ஊழியயக்காரர்களும் ஊழியக்காரிகளுமாக இல்லாமல் “மாம்சமான யாவரும்” ஆவியைப் பெற்றவர்களாக இருப்பார்கள். அன்றைய நாளில் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்பட மாட்டார்கள். அப்பொழுது யாரும் யாரையும் உபத்திரவமோ, துன்பப்படுத்தவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள். அப்பொழுது யாரும் குறுகலான பாதையில், நெருக்கமான வழியில் கடந்து செல்லத் தேவையில்லை. ஏனெனில் பலியின் நாள் கடந்து போயிருக்கும். பெரும்பாதையான வழி அங்கே உண்டாயிருக்கும். அங்கே தடுக்கலின் கற்கள் எதுவுமிருக்காது. (ஏசா. 35:8; 62:10)
“பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.” (அப்.3:23; சங். 37:7-11) நன்மை செய்கிறவர்களுக்கு ஆசீர்வாதமும்,

வேண்டுமென்றே தீமை செய்பவர்களுக்கு தண்டனையும், அழிவும் ஏற்படும் என்று ஆவி சாட்சி பகர்கின்றது. தேவனுடைய ஆவி ஒன்றுதான். ஒவ்வொரு செயல்பாட்டை செய்யும் போதும் அதற்கேற்ற பரிபாலனம் வித்தியாசப்படும்.

கர்த்தருடைய பரிசுத்த வார்த்தையின்படி பரிசுத்த ஆவி எப்படியெல்லாம் செயல்படுகிறது. அதனுடைய சாட்சிகள் என்ன என்பதைக் கற்ற பிற்பாடு, மனப்பூர்வமாகவும், சரீரப்பூர்வமாகவும் பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளைப் பற்றிய தப்பறையான சந்தேகங்கள், பயம் இவைகள் நீங்கி தெளிவடைந்த வர்களாய் பூரண திருப்தியடைகிறோம். எல்லாக் கிறிஸ்துவர்களுக்கும் தங்களுடைய ஆவியிலும், மனதிலும் ஒரே விதமான ஆவியின் வரம் அளிக்கப்படுகிறதில்லை. நீண்ட அனுபவமும் அபிவிருத்தியு முடைய கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியைப் பற்றியும், பரிசுத்த ஆவியின் செயல்பாடுகளைப் பற்றியும், பரிசுத்த ஆவியின் சாட்சிகளைப் பற்றியும் வேதாகமம் என்ன சொல்கிறது என்று அறிந்திருப்பது அவசியம். இந்த பரிசுத்த ஆவியின் எல்லா வகையான சாட்சியங்களையும் பெற்றுக் கொள்ளாத இளைய கிறிஸ்தவர்களும் இருக்கலாம். ஒரு வேளை அவர்களில் சிலர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் எல்லா வகையான சாட்சியங்களைப் பெறாவிட்டாலும் ஒரு சில சாட்சியங்களைப் பெற்றிருக்கக் கூடும். திராட்சைத் தோட்டக் காராகிய பிதாவாகிய தேவன் சிறிய செடியாக இருக்கும்போதே கனிதர வேண்டுமென எதிர்பார்ப்பதில்லை. புதிய இளங்கிளையிலிருந்து பச்சையான காய்களையோ பழுத்த கனிகளையோ அவர் எதிர்பார்க்கிறதில்லை.

ஆவியின் சாட்சியில் முதற்படியாக, கர்த்தர் தங்களை புதிதாய் ஜெநிப்பித்து, ஏற்று, அங்கீகரித்துக் கொண்டார் என்பதே ஆகும். அதன்படி அவர்கள் மெய்யான திராட்சைச் செடியில் இருக்கின்ற இளங்கிளையாக இருப்பர். அவர்களுக்குள் இந்த மெய்யான திராட்சையின் குணநலன்கள் உண்டாகி, விரும்பும் வண்ணமாக வளர்ந்து, திராட்சைச் செடியோடு கூட கனி கொடுப்பவர்களாக இருப்பார்கள். ஆவிக்குரிய குடும்பத்தில் புதிதாய்ப் பிறந்த குழந்தை வளர்ச்சியடைந்து முதிர்ந்த அங்கத்தினரோடு அதனுடைய உறவை

*வெளிப்படுத்தும், பலமான ஆகாரத்தை புசித்து அல்ல, ஏனெனில் அது அவர்களை அஜீரணப்படுத்தும்; பாலாகாரத்தை பருகி பலப்படுவார்கள். 1 பேது 2:3*

மேற்சொன்ன ஆவியின் சாட்சியங்களில் ஏதாவது சில சாட்சியங்களைப் பெற்றவர்கள், அதனிமித்தமாக மகிழ்ச்சியடைய வேண்டும். அப்படி தங்களிடம் எந்த சாட்சியமும் இல்லையென்றால், அவர்கள் வேதாகம விசுவாசக் கொள்கையின்படி, ஆவியின் சாட்சியத்தைப் பெற்றுக் கொள்ள எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எதிலெதிலெல்லாம் ஆவியின் சாட்சியம் பெற தங்களிடம் என்னென்ன குறை உள்ளதோ அதை கண்டுபிடித்து நீக்கி விடவேண்டும். அப்படிப்பட்டவர்கள், "நீண்ட காலமாக இந்தக் கருத்தை அறிய நான் ஆவலாயிருந்தேன்" என்று பாட அவசியமில்லை. இதற்கு மாறாக, விசுவாசத்தின் பூமு நிச்சயத்தை பெற்றிருப்பார்கள் என்பதையும், விசுவாசத்தில் வேரூன்ற கட்டப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டிருப்பார்கள் என்பதையும் அறிந்து கொள்வார்கள். இதுவே தேவனால் ஏற்படுத்தப்பட்ட தெய்வீக நெறி. எப்போதுமே தோல்வியைக் காணாத தேவ வாக்குத் தத்தங்களில் நம்முடைய விசவாசத்தை பாதுகாப்பாக உறுதியாய் வைத்திருப்போமேயானால், பயம், சந்தேகம் போன்ற நம்பிக்கையில்லாத மாளிகையிலிருந்து முழுமையாக நாம் தப்பித்துக் கொள்ள முடியும். நம் வாழ்வின் இருளான வேளைகளிலும், சோதனை, ஏமாற்ற நேரங்களில் அல்லது மற்ற எந்த மாதிரியான சூழ்நிலைகளிலும் நமது பரலோகத் தந்தையின் புன்முறுவல், வேதனை, இருளை மாற்றி நமக்கு வெளிச்சத்தையும், பாதுகாப்பையும் தருகிறது. இந்த சரியான கருத்தை கீழ்க்கண்ட கவிதையிலும் காணலாம்.

*"இருள் தேவ முகத்தைக் காண முடியாமல் செய்யும் போதெல்லாம் / நான் / அவரது மாறாத கிருபைகளையே பற்றி இருக்கிறேன். / வெள்ளம், புயல், அபாயங்கள் என்னைச் சூழும்போது, / அவருடைய வாக்குத்தத்தங்கள், உடன்படிக்கைகள் / அவருடைய இரத்தமே என்னைக் கரை சேர்க்கிறது. / என்னுடைய முழுபலமும் என்னை விட்டகலும்போது / அவர்தாமே எனக்கு அடைக்கலமும் பெலமுமாகின்றார்."*

## ஆவியினால் பரிசுத்தமாக்கப்படுதல்

*"...ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்." - 1கொரி 6:11*

பரிசுத்தமாக்கப்படுவதன் அடையாளம் என்னவென்றால் நம்மை உலகிலிருந்து பிரித்து தேவனுக்கென்று முழுமையாய் ஒப்புக் கொடுத்தல். இப்படிப் பரிசுத்தமாக்கப்படுபவர்கள், விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட வேண்டும். நம்முடைய சுயநீதியின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவின் நீதியால் பாவங்களிலிருந்து கழுவப்பட்டு நீதிமான்களென்ற நிலைக்கு உயர்த்தப்பட வேண்டும். உலகத்தார் தேவனுக்கு முன்பாக மெய்யான நீதிமான்காளக்கப்பட வேண்டுமானால், ஆயிர வருட அரசாட்சியில் ஒப்புரவாகுதலின் மூலமாக ஒப்புரவாக்குதலின் மத்தியஸ்தரின் உதவியும், வழிகாட்டுதலும் பெற்று, நீதிமான்களாக முடியும். நீதிமானக்கப்படுதல், விசுவாசத்தினால் அப்படி எண்ணப்படுவதாக இருந்தாலும், முக்கியத்துவம் குறைந்ததல்ல. இந்த எற்பாடு சுவிசேஷ யுகத்தில் நடைபெறுகிறது. இதனிமித்தம் சுபாவத்தின்படி நாம் பாவிகளாகவும் அபூரண சரீரத்தில் வாழ்ந்தாலும், நாம் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டதின் மூலம் தேவனால் நாம் சுத்தமுள்ளவர்களாகவும் பரிசுத்தமுள்ளவர்களாகவும், நீதிமான்களாகவும் எண்ணப்படுகிறோம். "வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார்" என்பதை நாம் விசுவாசிக்கிறோம். பாவத்திலிருந்து விலக விரும்புகிற நாம், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே பாவமற கழுவப்பட்டவர்களாக, பூரணர்களாகவும் தேவனால் ஏற்று அங்கீகரிக்கப்படுகிறோம். விசவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்ட நாம், தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறமையால் நாம் அவரிடத்தில் நெருங்கிச் சேர முடியும். அவரும் நம்மை ஏற்றுக் கொள்கிறார். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்ட நாம், தேவனால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நற்கிரியைகளைச் செய்யத் தக்கவர்களாகிறோம். வேத வசனங்களின் மூலமாக நாம்

*நீதிமான்களாக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படும் போது ஆவியின் சாட்சியை முத்திரையாகப் பெற்றுக் கொள்கிறோம் என்ற நிச்சயம் ஏற்படுகிறது.*

*கிறிஸ்துவின் மேல் வைத்திருக்கக்கூடிய விசுவாசத்தின் விளைவாலும், நாம்அவரோடு செய்த உடன்படிக்கையினாலும், நாம் பெற்றுக் கொள்கிற பரிசுத்த ஆவி அல்லது தேவனுடைய சிந்தை, உடன்படிக்கையின்படியே மரண மட்டும் கிறிஸ்துவின் மரணத்திற்கொப்பான மரணம் வரை காத்துக் கொள்ள பலம் தருகிறது. நம்முடைய பிதாவின் வார்த்தையின் மூலமாக நாம் பெற்றுக் கொள்ளும் சத்திய ஆவி, மேலும் நமது கீழ்ப்படிதலின் ஆவியினாலே இந்த உலகம் மற்றும் நமது சொந்த அநீதியின் செயல்பாடுகளை ஜெயிக்கக்கூடிய வல்லமையை நமக்குத் தருகிறது. சத்திய ஆவியின் மூலமாக நாம் பெற்றுக் கொண்ட தூய்மையாக்கும் அனுபவங்கள், நம் எல்லாருடைய நீதிமான்களாக்கப்படுதலும், நம் எல்லாரையும் தேவனுடைய நீதியை செய்வதற்காக உலகி-ருந்து பிரித்தெடுத்து அவருக்கு ஒப்புக் கொடுத்தலும், பாவத்திற்கு விலகியிருத்தலும் இவையெல்லாவற்றாலும் கிடைக்கக்கூடிய வெற்றிகளும் ஆசீர்வாதங்களும், கிறிஸ்துவின் கிருபையினாலே தேவனிடமிருந்து புறப்படுகிற பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே நாம் பெறுகிறோம் என்பதை இதுகாறும்நாம் சிந்தித்த வேத வசனங்கள் நமக்கு சான்றுடன் நிரூபிக்கின்றன.*

*இந்த உண்மையை வேதாகமத்தின் மற்ற பகுதிகளும் சாட்சியிடுகின்றன. “சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவராக.” (1 தெச 5:23) என்று அப்.பவுல் திருச்சபைக்காக மன்றாடுகிறார். இப்படி சொல்வதால் அவர் தாம் சொன்ன கருத்துக்கு அதாவது தேவனுடைய பரிசுத்த ஆவியே பரிசுத்தப்படுத்துகிறது என்ற கருத்துக்கு நேர் எதிராக சொல்கிறார் என்பதாகாது. தேவனே நம்மை பரிசுத்தப் படுத்துகிறவர். பரிசுத்த ஆவி என்பது, வழிமுறை, ஒரு மீடியம், வேறு ஒரு ஆள் அல்ல.*

*“ஆவியின் பரிசுத்தமாக்குத-னாலே கீழ்ப்படிதலுக்கும்... தெரிந்து கொள்ளப்பட்ட...” (1 பேது 1:2) என்று அப். பேதுரு அறிக்கையிடுகிறார். பிதா யாரைத் தெரிந்தெடுக்கிறாரோ அவர்களை, அழைத்ததோடு நிற்காமல், “அழைப்பையும் தெரிந்து*

கொள்ளுதலையும்" அவர்களுக்கு உறுதியாக்கும்படி ஆலோசனை கொடுத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து நிரந்தரமான குறிக்கோளின்படி, பிதாவின் சித்தத்தின்படியும் திட்டத்தின்படியும், தேவனுடைய பரிசுத்தாவியினாலே (வல்லமை) தேவனுடைய சித்தத்திற்கு அவர்களை முழுமையாக கீழ்ப்படிய வைக்கிறார். தேவனுடைய சித்தப்படி, திட்டத்தின்படி தங்களை முழுமையாக ஒப்புக் கொடுத்தவர்களே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஆவர்.

வேறொரு நிரூபத்தில், அப்.பவுல் திருச்சபையை தூய்மையும் துப்புரவுமாக பரிசுத்தப்படுத்தும் பணிக்கு வேத வார்த்தைகள் பயன்படுவதாக கூறுகிறார். "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல்... தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்." (எபே. 5:26) முதலாவது ஒரு இடத்தில் தேவன் திருச்சபையை பரிசுத்தப்படுத்துகிறார் என்றும், மற்றொரு இடத்தில் தேவ ஆவி திருச்சபையை பரிசுத்தப் படுத்துகிறது என்றும் அப்போஸ்தலர் கூறியிருப்பது இந்த வசனத்திற்கு முரணாக இருக்கின்றது என்று தவறாக நினைக்கக் கூடாது. ஒவ்வொரு வசனத்திலும் தெளிவாகவும் தவறில்லாமலும் அவர் கூறுகிறது என்னவென்றால், தேவனுடைய பரிசுத்த ஆவி, சத்திய வசனத்தின் மூலம் கிரியை செய்து, தேவனின் திட்டப்படி, நம்மில் சுத்தமாகுதலையும், நீதிமானாக்குதலையும், பரிசுத்தமாகுதலையும் நடப்பிக்கிறது.

இதே கருத்துப்படியே நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் ஜெபித்தார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்." - யோவா. 17:17 பல்வேறு இடங்களிலும் இது குறித்து சொல்லியிருப்பவைகளை எடுத்து ஆராய்வோமானால், திருச்சபையைப் பரிசுத்தப்படுத்துவது சத்திய ஆவியே என்று நாம் அறியலாம். உடன்படிக்கை செய்து கொண்டவர்களை பரிசுத்தமாக்கும் நோக்கத்திற்காகவே பரிசுத்த வேதாகம வார்த்தைகளை அருளியிருக்கிறார்.

யார் யாரெல்லாம் கிறிஸ்துவுக்குள்ளாக பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் "கிறிஸ்து

*இயேசுவுக்குள் புது சிருஷ்டிகள்" என்றும், "இயேசு கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். (1 கொரி 1:2) கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்படுதல் என்பது வேதவசனத்திற்கு புறம்பாகவோ அல்லது பரிசுத்தாவிக்கு புறம்பாகவோ அல்ல. நாம் தேவனுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டதால், அந்தத் திட்டத்தின்படி ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படும் நிலைமைக்கு வழிநடத்தப்பட்டு நமது கர்த்தராகிய கிறிஸ்துவோடு ஐக்கியப்படுகிறோம். இதே கருத்தை தெளிவாக விளக்குகின்ற வேத வசனத்தைக் கீழே காண்க. "பரிசுத்தம் செய்கிறவரும் பரிசுத்தஞ் செய்யப்படுகிறவருமாகிய யாவரும் ஒருவராலே உண்டாகியிருக்கிறார்கள். இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல வெட்கப்படவில்லை." (எபி 2:11) இவ்வாறு "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் சத்திய ஆவியாகிய தேவனுடைய ஆவியினால் நாம் கழுவப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுகிறோம்."*

## "நீங்கள் ஆவியினால் நிறைந்திருங்கள்"

*"ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும்... உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி... தேவனை ஸ்தோத்தரியுங்கள்." (எபேசி 5:18-20)*

*கர்த்தருடைய ஜனங்கள் அவருடைய நிறைவான ஆவியை நிரம்பப் பெற்றுக் கொள்பவர்களும் உண்டு, குறைவாகப் பெற்றுக் கொள்பவர்களும் உண்டு என்று வேதாகமம் நமக்கு அறிவிக்கின்றது. அவருடையவர்களாக இருக்க வேண்டுமானால், கிறிஸ்துவின் ஆவியில் கொஞ்சமேனும் உடையவர்களாக இருக்க வேண்டும்.*

*"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." (ரோம 8:9) தேவன் நமக்கு அருளியிருக்கிற வேதாகமத்தின் மூலமாக, நாம் அவருடைய திட்டத்தை, அவருடைய நோக்கத்தை எல்லாவற்றையும் புரிந்து கொண்டு செயல்பட, நாம் எவ்வளவாய் முயற்சி செய்து தேடுகிறோமோ அவ்வளவாய் சத்திய ஆவியினைப் பெற்றுக் கொள்ள முடியும். நம்முடைய இருதயத்தையும், வாழ்க்கையையும் சுத்திகரிப்பதன் நோக்கத்திற்காகவே அவர் நம்மை உலக ஆவியை உடையவர்களிடமிருந்து பிரித்து எடுத்தர் என்பதை வெளிப்படுத்துகிறார்.*

*இந்தப் பகுதியிலும், வேதாகமத்தின் எந்தப் பகுதியிலும் பரிசுத்த ஆவியை ஒரு நபராக நினைப்பதற்கே இடமில்லை. அப்படி ஆவி ஒரு நபராயிருந்திருந்தால், அந்த ஆவியைப் பெற்றுக் கொள்கிறவர்கள் மிகுந்த ஆவியினால் நிரப்பப்பட்டனர், குறைவான ஆவியினால் நிரப்பட்டனர் என்று சொல்ல முடியாது. நுழைக்கூடிய நபரே நிரப்புதலை செய்யமுடியும், அந்த நபர் பெரியவராக இருந்தால் அதிகமாக நிரப்ப முடியும், சிறியவராக இருந்தால் குறைவாக நிரப்ப முடியும். பரிசுத்த ஆவி மூன்று கடவுளர்களில் ஒருவராக இருந்தால் உன்னதமான தேவனுக்கொப்பாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உன்னத தேவனுக்கொப்பான ஒரு பூரணர், அபூரணமான மனிதனையோ, அவனுடைய சிறிய இருதயத்தையோ நிரப்பி, அதில் வாசம் செய்ய முடியாது. தெய்வீக வல்லமை, சக்தி, திறன் தான் இந்த பரிசுத்த ஆவி என்று புரிந்து கொண்டால்தான், அப்போஸ்தலருடைய புத்திமதி அர்த்தமுள்ளதாக இருக்கும். வேதத்தில் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ள தேவனுடைய ஒரே பேறான குமாரனும், நமது மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விளங்கிய பரிசுத்த சிந்தையை, தேவனுடைய சிந்தையை பெற நாம் தொடர்ந்து முயலவேண்டும்.*

*பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்று மேலே சொல்லப்பட்ட சிந்தனை, பிரிதொரு இடத்திலும் அப்போஸ்தலர் சொல்கிற சிந்தனைக்கு இசைவுள்ளதாக இருக்கக் காணலாம். நம்முடைய சாவுக்கேதுவான, ஒழுகுகிற பாத்திரம்போல, வெடித்து சிதைந்து காணப்படுகிற இந்த சரீரத்தினை, தேவ வல்லமையால் நிரப்ப வேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறார். நம்முடைய அபூரணமான சரீரம், எதையுமே சீக்கிரத்தில் நழுவிப்போக, வழுவிப் போக விட்டுவிடும் என்பதை அறிந்த நாம், அவ்விதமே தேவ கிருபையை, தேவ வல்லமையே நழுவ விட்டுவிடாதபடி எச்சரிக்கையாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்கும்படி அப்போஸ்தலர் கூறுகிறார். இது குறித்து அப்போஸ்தலர்,*

*“நம்முடைய பொக்கிஷத்தை (தேவ ஆவி, புதிதாக்கப்பட்டு, தேவனுக்கு இசைவாக இருக்கக்கூடிய சிந்தனை) மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்” (எபி 2:1; II கொரி 4:7) என்றார். கிறிஸ்துவினுடைய பாடுகளில் பங்குபெற்று, அவருடைய*

அடிச்சுவடுகளில் நடந்து, அதனால் பெறப்போகும் மகிமையை சுதந்தரிக்கப் போகிறவர்கள், கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட கர்த்தருடைய வழியைத் தேடி நடந்தாக வேண்டும் என்ற கட்டுப்பாடு வரையறை செய்கிறது. இந்த நோக்கம் நிறைவேற நாம் கர்த்தரோடும், அவருடைய சரீர அங்கமாகிய திருச்சபையாரோடு அன்புடனும், பரிவுடனும், இசைவாகவும், நெருக்கமாக ஒத்துழைக்க வேண்டும். முழு திருச்சபையும் பரிசுத்தமாக்குகிற சுனை போன்ற அவருடைய திருவசனத்தை, மிக நெருக்கமாகக் கைக்கொள்ள வேண்டும். “உம்முடைய வசனத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உமது வசனமே சத்தியம்.” - யோவா *17:17*

நாம் இதற்காக தேவன் கொடுத்துள்ள தெய்வீக ஏற்பாட்டையும், தெய்வீக நோக்கத்தினையும் சிறிதும் தெரிந்துகொள்ள முயற்சிக்காமல், பரிசுத்த ஆவியினால் நிரப்பும் என்று வேண்டிக் கொள்வது வீணானது. தேவனடைய வசனங்களை நாம் அசட்டை செய்வோமாகில், தேவனுடைய பரிசுத்தமாக்கும் சக்தியையே அசட்டை செய்கிறோம் என்பதாகும். நாம் ஜெபத்தை அசட்டை செய்வோமாகில், அந்த ஜெபத்தின் மூலமாகக் கிடைக்கிற மற்றொரு சலுகையையும் அனுகூலத்தையும் நாம் இழந்து விடுவோம். கர்த்தருடைய ஜனங்களோடு, ஆவியின் முத்திரையைப் பெற்றவர்களோடு நாம் ஐக்கியப்பட அசதியாய் இருப்போமேயானால், அவர்களுக்குக் கிடைக்கும் நன்மையான பயன்கள், அனுகூலங்கள் கிடைக்காமற் போய்விடும். இந்த நன்மைகள் தேவனால், சரீரமாகிய திருச்சபையின் “சகல கணுக்களினாலும் இசைவாய் கூட்டி இணைக்கப்பட்ட” அங்கங்களுக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவை. அவரது வார்த்தைகளை வெளியரங்கமாக்குவதற்கு சரீரத்தில் இணைக்கப்பட்டுள்ள பலவித அங்கங்கள் மூலமாக தேவன் வாக்குத்தத்தம் பண்ணின உதவிகளையும் அதன் மூலம் பெறுகிற பரிசுத்தமாக்கும் வல்லமையாகிய ஆவியையும் இழந்து விடுகிறோம். *1* கொரி *12:25-28;* எபே. *4:16*

ஆகவே, “நீங்கள் ஆவியினால் நிறைந்திருங்கள்” என்ற புத்திமதியில் ஆழமாக உய்த்துணர வேண்டிய கருத்துக்கள் உள்ளன.

நம்முடைய ஆவியின் ஜீவியத்திற்குரிய அபிவிருத்திற்காக, தேவன் ஏற்பாடு செய்திருக்கும் எல்லா உதவிகளையும், உபகரணங்களையும் நாம் உபயோகித்தாக வேண்டும். கர்த்தரோடு நாம் நேரடியாக தொடர்பு கொள்ள முடியாவிட்டாலும், நாம் அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும், ஜெபத்தின் மூலமாகவும், அவருடைய பிள்ளைகள் மூலமாகவும் தொடர்பு கொள்ள முடியும். அப்போஸ்தலர்களுடன் நாம் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாவிட்டாலும், நாம் அவர்களது வார்த்தைகளின் மூலமாகத் தொடர்பு கொள்கிறோம். கர்த்தருடைய பிள்ளைகளோடு நாம் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாதபடி தூரத்தில் இருந்தாலும், அவர்களோடு கடிதம் வாயிலாகவும், வேதப் பத்திரிக்கைகள் மூலமாகவும் தொடர்பு கொண்டு, கருத்துப் பரிமாற்றம் செய்வதால் உறவு கொள்ள முடியும். நாம் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட விருப்பமாயிருந்தால், அவருடைய போதனைகளுக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

## ஆவியின் முத்திரை

*“நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப் பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.” - எபேசி 1:13,14*

முற்காலங்களில் முத்திரை பல நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது. அவைகளாவன - 1. கையொப்பம் - ஒப்புக் கொள்வதற்குரிய அடையாளம், ஒப்புக் கொள்வதற்குரிய அடையாளச் சான்றுக்குறி 2. இரகசிய முத்திரை - அன்னியர் அறிந்து கொள்ள முடியாத பாதுகாப்புக்காக. - மத் 27 :66; வெளி 10:4; 20:3 காண்க.

மேற்சொன்ன பொருள்களில், முதலாவது பொருளின்படி கர்த்தருடைய பிள்ளைகள், “வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினாலே முத்திரையிடப்படுகிறார்கள்.” இங்கே சிலர் நினைக்கிறபடி அப்போஸ்தலர், திருத்துவக் கடவுளர்களில் ஒருவரால் நிரப்பப்படுவதில்லை, மாறாக அவருடைய வல்லமையினால் நிரப்பப்படுகிறார்கள் என்கிறார். இதன்

வித்தியாசத்தை எல்லாரும் நன்கு உணரக்கூடியபடி, "வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆவியை அச்சாரமாகப் பெற்றீர்கள்" என்கிறார். பரிசுத்த ஆவி (வல்லமை) பிதாவினிடத்திலிருந்து வருகிறது. பரிசுத்த ஆவியைக் கொண்டு கிறிஸ்துவின் மூலமாக பிதாவாகிய தேவன் முத்திரையிடுகிறார். இதுவே ஆவிக்குள்ளாக முத்திரையிடப்படுதல். இப்படி ஆவிக்குள்ளாக முத்திரையிடப்படுதலுக்கு அப்போஸ்தலர் சாட்சி பகர்வதை அப். 2:33 இல் காணலாம். மேலும், தேவ குமாரர்களாகப்போகிற அனைவருக்கும் முதன்மையாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து முத்திரையிடப்பட்டார் என்று வேதமே சாட்சி கூறுகிறது.

"அவரைப் பிதாவாகிய தேவன் (பரிசுத்த ஆவியினால்) முத்திரித்திருக்கிறார்." - யோவா 6:27

"வாக்குத்தத்தத்தின் ஆவி" என்ற சொற்றொடர், மற்ற பரிசுத்த ஆவி சம்பந்தப்பட்ட சொற்றொடர்களைப் போலவே, "பரிசுத்தத்தின் ஆவி," "சத்திய ஆவி" என்ற கருத்துக்களை விளக்குகிறதாய் அமைகிறது. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஆவியின் முத்திரையிடப்படுதலுக்கும், வாக்குத்தத்தத்திற்குமிடையே உள்ள தொடர்பை இது நன்கு விளக்குவதாய் அமைகிறது. தேவனுடைய உடன்படிக்கைகள் எல்லாவற்றிலும் இந்த "முத்திரையிடப்படுதலே" முற்போக்கான சான்றாகும். இப்படி உடன்படிக்கை செய்து அவரில் பிரதான அன்பு கூறுபவர்களுக்கு, "மகா மேன்மையும், அருமையுமான வாக்குத் தத்தங்களும் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" என்பது உண்மை. தேவனால் அனுமதிக்கப்பட்ட சோதனைகளை தெய்வ அன்பு, பக்தி வைராக்கியத்தினாலே சகித்து, இறுதி வெற்றி பெறும்போது, எல்லா வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்வர்.

அப்போஸ்தலர் இதே "ஆவியின் முத்திரை" யிடுதலைப் பற்றி, இதே நிரூபத்தில் ஆவியின் "வாக்குத்தத்திற்கும்" நம்முடைய மீட்கப்படும் நாளுக்கும் தொடர்பு படுத்திக் கூறுகின்றார். (எபேசி 4:30) இதே கருத்தினை வேறு வார்த்தைகளில் தொடர்புபடுத்தி விளக்குகின்றார். மீட்கப்படும் நாளுக்கென்று வாக்குத்தத்தின் ஆவியினால் முத்திரையிடப்படுதல் என்பது நாம் (திருச்சபையார்)

*"ஆவியின் முதற்பலன்கள் ஆகிறோம்" என்பதாகும். நமக்கும் கர்த்தருக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம் நிறைவேற்றி முடிக்கப்பட்ட பிற்பாடு, கைமேல் பலனைப் பெற்றுக் கொள்ளலாம். நாம் இடையில் பின்வாங்கிப் போகாமலிருந்தால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதமான பாக்கியத்தை நிச்சயம் பெறலாம்.*

*தேவனுடைய புத்திரர் என்றும், உடன்படிக்கையின் உறவு, குமாரத்துவம், சுவீகாரத்துவம் என்ற முத்திரை, நம் நெற்றிகளில் வெளியரங்கமாகப் போடப்பட்ட அடையாளமல்ல. அல்லது பூமிக்குரிய காரியங்களில் தேவனுடைய தயவு பெற்றிருப்பதற்கான வெளியரங்கமான அடையாளமுமல்ல. உலகத்துக்குரிய சொத்து, சுகம், சம்பத்து பாக்கியமுமல்ல. குணமாக்கும் வரத்தோடோ, அந்நிய பாஷை பேசுகிற வரத்தோடோ, இப்போதோ அல்லது எப்பொழுதுமோ சம்பந்தப்பட்டதல்ல. இப்படி அநேக அற்புத வரங்களைப் பெற்றதாக சொல்லப்படுபவர்களிடத்தில் ஆவியின் முத்திரையோ, சாட்சியமோ காணப்படுவதில்லை. அப். 8:13-23; 1 கொரி 13:1-3.*

*பரிசுத்த ஆவியின் முத்திரை, பெற்றுக்கொண்டவர்களின் இருதயத்தில் முத்திரையிடப்பட்டது. அதைப் பெறுகிறவர்களை அது இரட்சிக்கும் என்பதை ஒருவனும் அறிய மாட்டான். அவனது அனுதின வாழ்க்கையில் அதன் கனிகளை மற்றவர்கள் காணமுடியும். (வெளி 2:17) "உங்களோடு கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்தரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவி என்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்." (2 கொரி 1:21,22)*

*இந்த அச்சாரமாகிய புத்திர சுவிகாரத்தின் முத்திரை அன்பின் ஆவியாகும். இது பிதாவோடும் அவரது பரிசுத்த ஏற்பாடுகளோடும் ஒப்புரவை ஏற்படுத்துகிறது. இந்த ஏற்பாட்டினாலே அவரை நாம் அப்பா! பிதாவே! ஓ, என் தேவனே உம்முடைய சித்தப்படி செய்யவே நான் பிரியப்படுகிறேன் என்று கூக்குர-டுகிறோம். இந்த புத்திர சுவிகாரத்தின் ஆவியின் அச்சாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள், பிதாவின் சித்தத்தையே நாடித் தேடி செய்வதோடு நில்லாமல்,*

அப்படி செய்வதில் கொஞ்சமும் சலிப்படையாமல் மகிழ்ச்சியடைவர்கள். 1 யோவா. 5:3

புத்திரசுவிகாரத்தின் ஆவி, முதற்பலன்களை பெற்றிருத்தல் அல்லது வரப்போகிற சுதந்தரத்தின் அச்சாரம் என்பது ஆவியின் மிகவும் மேலான சாட்சியமாகும். இதுவே தற்கால கிறிஸ்தவ ஜீவிய அனுபவத்தின் சாரமாகும். இந்தளவு உன்னத நிலையை அடையும் முன்னர், தலையாகிய கிறிஸ்துவும் அவருடைய சரீரமாகிய திருச்சபையுடன் சேர்ந்து கொண்டு, சத்திய ஆவியினாலே ஜெநிப்பிப்பட்டவர்களாகி, தேவனால் நாம்பெற்ற ஆவியில் பரிசுத்தப்படுத்தப்பட்டு, நமது கர்த்தருடைய சித்தத்தைத் தெரிந்து அதன்படியே செய்ய, அபிஷேகத்தில் நம்முடைய பங்கை நாம் பெற வேண்டும். நாம் ஆவியினால் உயிர்ப்பிக்கப்பட்டு நீதியின் சேவையைச் செய்ய ஆயத்தப்படும்போது தான் இந்த அனுபவத்தைப் பெறுகிறோம். நாம் கருவுற்ற நிலையைக் கடந்து, தேவப்புத்திரர் என்று அடையாளம் காணப்பட்டு தேவனால் முத்திரையிடப்படுகிறோம் என்பதற்கு இது ஒரு சாட்சியாகும்.

எல்லா விசுவாசிகளும் தாங்கள் அபிஷேகம் பண்ணப்படவேண்டும் என்பதையும், தேவ ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் நாடித் தேடுகிறார்கள். இவ்வாறு ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் எவர்களோ, அவர்கள் பிதாவுடன் ஒப்புரவாகி, அவருக்குக் குமாரர்களாயிருக்க விரும்புகிறவர்கள், அவருடைய முழு சித்தத்திற்கு இசைவாகத் தங்களைத் தத்தம் செய்யவேண்டும். சத்திய ஆவியினால் இந்த உன்னத நிலைக்கு உயர்ந்தவர்கள் எவர்களோ அவர்களை பிதாவானவர் ஏற்று, அங்கீகரித்து, முத்திரையிடுகிறார். இந்த உன்னத நிலையை அடைந்த பின்னர், தேவ ஆவியை அவித்துப் போடாமல் அசட்டை செய்யாமல், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட விலைமதிப்பற்ற பொக்கிஷத்தை அணைத்துப் போடாதிருக்க வேண்டும். அன்பின் ஆவியை விட்டு விலகாமல், பரிசுத்தஆவியின் ஐக்கியத்தில் களிகூரவேண்டும். வேதனை, சோதனை ஆகியவற்றில் சிக்கிக் கொள்ளாமல் இருளின் ஆவியின் தொடர்பை விட்டு விடவேண்டும். ஆவியின் முத்திரையை கெடுத்துவிடாமல், எப்பொழுதும் பிரகாசமாகவும் புதிதாகவும்

வைத்துக் கொள்ள, இதனைப் பெற்றவர்கள் இடைவிடாமல் முயற்சி செய்ய வேண்டும்.

## அத்தியாயம் 10

# தெளிந்த புத்தியுள்ள ஆவி

*தேவ ஆவி அவருடைய ஜனங்களி-ருந்து பயமுள்ள ஆவியை நீக்கும்-மனுக்குலம் பொதுவாக மாம்சத்திலும் ஆவியிலும் தெளிவற்றவர்கள்-பரிசுத்த ஆவி எந்த பொருளில் தெளிந்த புத்தியுள்ள ஆவி-பலனை அளிக்கும் செயல்பாடுகள்-தெளிந்த புத்தியுள்ள ஆவிக்கு ரூபகாரங்கள்.*

*"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." 2 தீமோ 1:7*

இங்கு பயமுள்ள ஆவி இன்னொரு ஆவிக்கு எதிரிடையாக ஒவ்வொரு மொழியிலும் விமர்சிக்கப்பட்டுள்ளது. அன்பின் ஆவி, வல்லமை, தெளிந்த சிந்தை ஆகியவை ஒரு நபராக அல்லது மூன்று கடவுள்களில் ஒருவராக எடுத்துக் கொண்டால், பயத்தின் ஆவி என்பதும் வேறொரு ஆள் தத்துவமாக எடுத்துக் கொள்ளவேண்டும். எந்த காரண காரியத்திற்கும் ஒத்துவராத மூன்றாம் ஆள் தத்துவத்தை வேதப்படியோ, தர்க்க சாஸ்திரப்படியோ நிரூபிக்க முடியாது.

கர்த்தருடைய ஜனங்கள் எந்த அளவுக்கு பரிசுத்தஆவியைப் பெற்றிருக்கிறார்களோ, அந்த அளவுக்கு மேன்மேலும் ஆவியின் வல்லமையை அதிகரிக்கச் செய்கிறது. ஆவியின் வல்லமை அதிகரிக்கும்போது பயத்தின் ஆவி குறைந்து போகும். கிறிஸ்தவர்களிடத்தில் பயத்தின் ஆவி காணப்பட்டால் அவர்களிடத்தில் விசுவாசக் குறைவுண்டு என்பதைக் காண்பிக்கிறது. பயத்தின் ஆவியிருக்குமிடத்தில் சந்தேகத்தின் ஆவி காணப்படும். சந்தேகத்தின் ஆவியிருக்குமிடத்தில் பரிசுத்த ஆவி இராது. கிறிஸ்துவ ஜீவியத்தில் தனிப்பட்ட முறையிலோ, திருச்சபையிலோ கிறிஸ்தவ வளர்ச்சியின் ஒவ்வொரு காரியத்திலும், பயத்தின் ஆவியே

ஆவிக்குரிய எல்லா தீமைக்கும் ஊற்றும் காரணமுமாய் இருக்கிறது. இது சரீர பலவீனத்தினாலும் இயலாமையினாலும் குறிப்பிடப்படுகிறது. பரிசுத்தஆவியைப் பெற்ற தேவபிள்ளைகள் இயல்பான மனித சுபாவத்தைப் பார்க்கிலும் அருட்கொடைகளால் பன்மடங்கு திறன் பெற்றவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர்களுடைய பயங்களெல்லாம் நீக்கப்பட்டு இருதயம் நிலை வரப்பட்டு, அவர்களுடைய விசுவாசம் வேரூன்றி நாட்டப்பட்டிருக்கும். அவர்களுடைய ஆத்துமா உறுதியாக திரைக்குள்ளாக நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கும். உபத்திரவமாகிய அலைக்கழிக்கும் எத்தகைய புயல், சூறாவளி ஏற்பட்டாலும் அவைகளையெல்லாம் கடந்து நிற்கும் வ-மை பெற்றிருக்கிறார்கள். பரிசுத்தஆவியைப் பெற்றிருக்கிறவர்களுக்கு அதுவே அவர்கள் பெற்றிருக்கும் பலமாயிருப்பதால் அவர்களுடைய விரோதிகளுக்கு அது மிகுந்த ஆச்சரியத்தைத் தரும்.

கிறிஸ்துவின் நற்செய்தியைச் சொல்ல, உடலாலும் மனத்தாலும் வல்லமையானவர்களையே தெரிந்து கொண்டார் என்று மேன்மை பாராட்ட இடமில்லை. எனவே அவருடையவர்கள் என்பதால் வல்லமையுடைவர்களாகிறார்கள். இதற்கு நேர் எதிரிடையாக, தங்கள் பலவீனத்தை நன்கு உணர்ந்த பலவீனமானவர்களையே தெரிந்து கொண்டு, அவர்களைக் கொண்டு பலமான கிரியைகளை நடப்பிக்கிறார் என்று உண்மையின்படியும், வேதாகம சாட்சியங்களின்படியும் நன்கு அறிந்து கொள்ளலாம். பலவீனர்களாயிருந்த போதிலும் பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொண்டதினால், அதன் மறுரூபப்படுத்தும் வல்லமையினாலே பலவான்களாக மாற்றப்படுகிறார்கள். உலகில் பலவீனமானவைகளையே தெரிந்து கொண்டு தேவன் அவைகளை பலமுள்ளவர்களாக்குகிறார் (ஆவியின் மூலம், தேவ வல்லமையின் மூலம்). தப்பறை, பாவம் ஆகிய வல்லமையான கோட்டைகளைத் தகர்க்கவே இவர்களை பலமுள்ளவர்களாக்குகிறார். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சிறந்த போர்வீரர்களாக பொறுமையுடன் போராடவும், இயல்பாகவே தங்களுடைய மேல் அதிகாரிகளாக மேம்பட்ட நிலையிலுள்ளவர்களை வெல்லக்கூடிய பலத்தையும், அவர்களிடமிருந்து வரக்கூடிய தொல்லைகளைச் சகிக்கும்

*வல்லமையையும் அளிக்கின்றார். I கொரி 1:27; II கொரி 10:4; II தீமோத் 2:3-4*

*முற்காலங்களில், உலகில் மிக பலவீனர்கள் என கருதப்பட்டவர்கள் கிறிஸ்துவின் நிமித்தமாக தங்களையே தத்தம் செய்து கடைசிவரை நிலைத்து நின்று இரத்த சாட்சிகளாயினர். உலகில் மிகுந்த பலவான்களோடு இந்த பலவீனர்கள் நிலை தடுமாறாமல் போரிட்டு, சோதனைகளைச் சகித்து வெற்றி பெற்றனர் என்பது கடந்த காலத்தில் நிகழ்ந்த பல உண்மைச் சான்றுகளாகும். முற்காலத்தில் மட்டுமல்ல, இக்காலத்திலும் இப்படிப்பட்ட வகுப்பினர் தங்களிலும் பலவான்களைத் தோற்கடித்து வருகின்றனர். முற்காலங்களில் இத்தகைய வகுப்பார் சகித்த துன்பங்கள் வேறு, இக்காலத்தில் இத்தகைய வகுப்பார் சகிக்கின்ற துன்பங்கள் வேறு, இருப்பினும் சகிப்புத் தன்மை என்பது எக்காலங்களிலும் ஒரே தன்மையுடையவைகளே. எனவே கிறிஸ்துவுக்குள் உண்மையான போர்ச் சேவகனாக மனஉறுதியுடன் தீமையைச் சகித்து சகோதரர்களுக்காக தமது ஜீவனையும் கொடுப்பது இன்னும் அவசியமாக இருக்கிறது. உலகிலேயே பலவீனமாக இருப்பவர்கள், உதவாதவன் என்று எல்லாராலும் தூஷிக்கப் படுகிறவர்களாயிருக்கிறவர்கள், நம்முடைய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இவர்கள் உலகத்தின் ஞானத்தையும் அதிகாரங்களையும் இன்னும் அவமாக்கிப் போடுகிறார்கள். I கொரி. 1:27-28*

*நம்மிடம் இருக்கும் தேவ ஆவி, வல்லமையின் ஆவி மட்டுமல்ல, ஆனால் அது ஈவு இரக்கமுள்ள கருணையின் ஆவியுமாகும் என்று அப்போஸ்தலர் இயம்புகிறார். இது எல்லா மனிதரிடத்திலும் காணப்படுகின்ற சாமான்யமான அன்பு அல்ல. பிராணிகளிலும்கூட இந்த அன்பு காணப்பட்டாலும் அவைகளுக் கெல்லாம் அடிப்படை சுயநலமே. பரிசுத்தஆவியைப் பெற்றவர்களிடத்தில் காணப்படும் அன்பு எல்லாரிடமும் காணப்படுகின்ற இயல்பான, சாதாரணமான அன்பை விட நீள, அகல, கன பரிமாணங்களைக் கடந்து அதிகரித்து, சுயநலத்தை வேருடன் அழித்திருக்க வேண்டும். தேவனுடைய விசேஷ சுபாவமான இந்த அன்பு, தன்னலமற்றதாகவும், நீதி,*

*சத்தியம், நன்மை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் உண்டாகும் அன்பு ஆகும். குறைவானது போய் நிறைவானது வரும் வரை இந்த அன்பின் ஆவி கரை கடந்து பலுகிப் பெருக வேண்டும். - I கொரி 13:10*

*"தெளிந்த புத்தியுள்ள ஆவி" என்று அப்போஸ்தலர் கூறுகிறதைக் காட்டிலும் ஆண்டவரின் பிள்ளைகளிடத்தில் இருக்கிற பரிசுத்த ஆவிக்கு எடுத்துக்காட்டாக காட்டக் கூடியது வேறு எதுவுமில்லை. இதற்கு நேர் மாறாக, தெளிந்த சிந்தையுள்ள ஆவி இந்த உலக மகா ஜனங்களிடம் அதிகமாக இருப்பதாகவும், கர்த்தருடைய ஜனங்களிடத்தில் தெளிந்த சிந்தை இல்லாதது போலவும் தோற்றமளிக்கும். நாம் முன்னரே பார்த்தவண்ணமாக மிகுந்த அபூர்ண நிலையில் இருப்பவர்களை கவர்ந்து இழுத்து பூரணமாக்க வேண்டும் என்பதே நற்செய்தியின் சாரம். ஏனெனில் இவர்கள் தாங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்று ஒப்புக்கொண்டு அறிக்கையிடுகிறவர்கள்; தங்களுக்கு உன்னதத்தில் இருந்து கிருபையும், தயவும், பலமும் தேவை என்று விரும்புகின்றவர்கள். எனவே இவைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. பலமும் ஆரோக்கியமுள்ள மற்றவர்களோ, தங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்த்து எல்லா வகையிலும் தாங்கள் உயர்ந்திருப்பதாக பெருமைப்பட்டு, தங்கள் சுயநீதியே நீதி என்று திருப்தியடைகின்றனர். இப்படி திருப்தியடைந்தவர்கள் தேவ தயவை எதிர்பார்க்கிறதில்லை.*

*கள்ளங் கபடற்ற நன்மையைச் செய்யும் இருதயத்தில் சத்திய ஆவி ஏற்றுக் கொள்ளப்படும்போது, அது நியாயத்தின்படி நீதியின் கனிகளைக் கொடுக்கும். அவர்கள் இயல்பாகவே பலவீனர்களாக இருந்தாலும், பலமுள்ளவர்களாயிருந்தாலும், கர்த்தருடைய ஜனங்களுக்கு கர்த்தருடைய ஆவியிலிருந்து பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதனால் அவர்கள் "தெளிந்த புத்தியுள்ள ஆவி"யை முறையாகப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த ஆவியைப் பெற்ற பின்னர் முன்பிருந்த நிலையை விட அவர்களுடைய கருத்து, தெளிவானதாகவும், உண்மையானதாகவும், நம்பத் தகுந்ததாகவும் இருக்கிறது. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நோக்கத்திலும் எதைச் செய்வது, எதைச் செய்யக்கூடாது என்பதைக் குறித்து,*

*கர்த்தருடைய வார்த்தை என்ன தீர்க்கமான முடிவு கொடுக்கிறது என்பதை முதன்முதலாக ஆராய்ந்தறிவது அவசியம். யார் யார் கர்த்தரைத் தங்கள் போதகரும், குருவும் என்று ஏற்றுக் கொள்கிறார்களோ, யார் யார் அவரது கீழ்ப்படிதலின் ஆவியை பெற்றிருந்து தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறார்களோ அவர்களே "தெளிந்த புத்தியின் ஆவியுடையவர்கள்." ஏனெனில் அவர்கள் தங்கள் சுயநீதியை நம்ப மாட்டார்கள். தாங்கள் புரிந்து கொண்டதே சரி என்றிருக்க மாட்டார்கள். மாறாக கர்த்தருடைய வழிகாட்டுதலுக்குக் கீழ்ப்படிவார்கள். மனித சக்திக்கு அப்பாற்பட்ட தெய்வீக ஞானத்தின் ஆலோசனையும், வழிகாட்டுதலும் கிடைக்காதவர்களின் வாழ்வில் ஏற்படக்கூடிய தொல்லைகள், பொல்லாப்புகள், கண்ணிகளிலிருந்து இவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்.*

*நமது மனித சந்ததி பாவத்தில் வீழ்ந்ததன் விளைவாக பாவம், சாபம், மரணத்திற்குட்பட்டு தண்டிக்கப்பட்டது. அதன் காரணமாக, மனம் மற்றும் உடல் ரீதியாக, ஆரோக்கியமற்ற நிலை ஏற்பட்டது. இந்த பாதிப்பு அவர்களின் பாரம்பரியத்தைப் பொறுத்தும், சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்தும் மாறுபடுகிறது. ஒரு சிலர் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாயும், ஒரு சிலர் உள்ள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள். மொத்தத்தில் அனைத்து மாந்தருமே பாதிப்புக்குட்பட்டவர்களாயிருக்கின்றனர் என்பதை,*

*"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை..." (ரோம. 3:10) உருவகமாக, எல்லாரும் உடலாலும் உள்ளத்தாலும் காயமேற்பட்டு, இரணமாகி, சீழ்ப்பிடித்து, குணப்படுத்த முடியாத அழுகும் நிலையில் உள்ளார்கள். (ஏசா 1:5,6) அகில உலக மாந்தரின் உடலும், உள்ளமும் இந்தக் கொடிய நிலைக்கு வரக் காரணம் - பாவத்தின் சாபமே.*

*சரீரத்தில் ஒரு அவயவத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் முழு உடலும், உள்ளமும் அதனால் பாதிக்கப்படுகிறது என்பது அனைவராலும் உணர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. ஆரோக்கியமில்லாத உடலால் ஓம்பப்படுகிற மனம் ஒருக்காலும் பரிபூரணமான ஆரோக்கியமாக இருக்காது. உடலில் ஒரு உறுப்பாகிய இரைப்பை, வாயுக் கோளாறினாலோ, அமிலக்*

கோளாறினாலோ புண்ணாகி பாதிக்கப்பட்டால், அந்த நபருடைய உடல் மாத்திரமல்ல, உள்ளமும் நிச்சயமாக பாதிக்கப்படும். நுரையீரலில் ஏதாவது ஒரு பாதிப்புண்டானால், அது அவர்களுடைய மனநிலையையே பாதிக்கச் செய்கிறது. அதுபோலவே மற்ற உறுப்புக்களாகிய இருதயம், ஈரல், சிறுநீரகங்கள் இவைகள் நோயுற்றால், அவைகளுடைய இயக்கங்கள் சீராக இராது. இதன் விளைவாக இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்பட்டு, இறுதியில் எல்லாவற்றிற்கும் மையமாக இருக்கக்கூடிய மூளையே பாதிக்கப்பட்டு விடும். தவறான உணவுகள் உட்கொள்வதால் நரம்பு மண்டலத்தில் சக்தி குறைவு ஏற்பட்டு, மூளையில் வலி ஏற்படுகிறது. சுரக்க வேண்டிய சுரப்பிகள் சரியாக சுரக்காததினாலோ, அல்லது பிரிய வேண்டிய நீர் பிரியாததினாலோ காய்ச்சல் ஏற்படும். இதனால் அதனுடைய இயக்கங்கள் ஸ்தம்பித்து விடும். பூரணமான நிலையில் உள்ளவர்கள் சிந்திப்பதை விட, இந்த நிலையில் சரிவர சிந்திக்கவோ, முழு மனநிலையோடு செயல்படவோ முடியாது. மூளை பெரிதும் பாதிக்கப்பட்டால் தான் அது பைத்திய நிலையை அடையும். இல்லாவிடில் சாதாரண பாதிப்பு தான். சித்த சுவாதீனம் இழந்து போனால் முழு ஆரோக்கியத்தையும் அழித்துவிடும். நல்ல அனுபவமும் நிதானமும் உள்ள எவரும் இந்த முடிவுகளைப் பற்றி வினவமாட்டார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு எப்படி எங்கே எவ்விதமாக பரிசுத்த ஆவியின் ஆற்றல் நியாயத் தீர்க்கவும், நிதானிக்கவும் கொடுக்கப்படுகிறது? அதனால் எப்படி தெளிந்த புத்தியுள்ள ஆவியுடையவர்கள் ஆகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது. தெய்வீக சிந்தையானது தெளிந்த, ஆரோக்கியமான, பரிபூணரத்தோடு உள்ளது. எல்லா விஷயங்களிலும் தங்கள் சுயபுத்தியின் மேல் சாராமல், சொந்த எண்ணங்களை முற்றிலுமாக அகற்றிவிட்டு, தங்கள் வாழ்வில் தேவ சித்தத்தையும் தெய்வ நிதானிப்பையும் பெரிதென நாடித்தேடவேண்டும். அந்தளவுக்கு தேவனுடைய சிந்தையை அறிந்ததினாலே தேவனுடைய குணாதிசயங்களைப் பெற்று, தேவசிந்தை உள்ளவர்கள் ஆவார்கள் என நாம் விடையளிக்கிறோம். கிறிஸ்தவர்களின் மூளை இயல்பான மனித சுபாவப்படியான

செயல்பாட்டிலிருந்து மாற்றப்படுகிறது என்று கூறவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியினாலும், சத்திய ஆவியினாலும் வழிநடத்தப்படுவதால் சுய நிதானத்தில் ஏற்படும் தவறுகளையெல்லாம் அகலச் செய்கிறது. அவர்களுக்கு எழுகின்ற பல்வேறு ஐயங்களைப் போக்க, தேவ வசனங்களின்படியாக இவையெல்லாவற்றையும் சரியாய் நிதானிக்கக்கூடிய பரிசுத்த ஆவியின் ஆற்றல் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இதை விளக்க ஒரு கடிகாரம் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அந்தக் கடிகாரம் சரியான நேரத்தை காட்டுகிறதா என்று கவனிக்க ஒரு காலக் கணிப்பொறியை வைத்து கணக்கிடும்போது, ஒவ்வொரு 24 மணிநேரத்திற்கொருமுறை 30 நிமிடம் காலதாமதமாக ஓடுகிறது என்று கண்டுபிடித்தால், அதை ஒவ்வொரு 24 மணிநேரத்திற்கொருமுறை அந்த 30 நிமிடத்தை சரி செய்கிறோம். இதனால் நாம் அந்த கடிகாரம் எத்தனை மணிக்கு எத்தனை காலதாமதம் செய்யும் என்றும் கண்டுபிடிக்க முடியும். அதைப் போலவே நம் வாழ்வின் பல்வேறு பணிகளிலும், விஷயங்களிலும் காணப்படுகிற குறைபாடுகளை கண்டறிந்து நிதானித்து சரி செய்து கொள்ள முடியும். நம்முடைய உடலாலும் உள்ளத்தாலும் எற்படுகிற உணர்ச்சிப்புயல், சில வேளைகளில் மிக வல்லமையாகவும், சில நேரங்களில் பலவீனமாகவும், சில நேரங்களில் மிகுந்த வேகத்தோடும், சில நேரங்களில் மந்தமாகவும் இருப்பதை பூரண திட்ட அளவின்படி அறிந்து கொள்ளலாம். நமக்கு எல்லா வகைகளிலும் முன்மாதிரியான இயேசு கிறிஸ்துவின் சிந்தனை, செயல்பாடுகளுக்கு ஒப்பாக, நமது சிந்தனைகளையும், செயல்பாடுகளையும், வழிமுறைகளையும் மாற்றிக் கொள்ள முடியாமல் இருக்கும்போது, நாம் அதனை சரிசெய்ய முயற்சிகள் மேற்கொள்கிறோம். கிறிஸ்துவின் முன்னோடியான வழிமுறையைப் பின்பற்றி நடக்க முயற்சி எடுக்காதவர்கள், இந்தப் பரிபூரணத் தராதரம் இல்லாதவர்கள், தாங்களும் அவ்வழியில் நடக்க மாட்டார்கள், அவ்வழியில் நடக்க முயல்பவர்களையும் பாராட்ட மாட்டார்கள்.

தங்கள் நண்பர்களிடத்திலும், அண்டை அயலார் களிடத்திலும் இந்த தெளிவான சிந்தை இல்லை என்பதற்கு ஏராளமான சாட்சியங்கள் காணப்பட்டால், அவர்கள் பணிகள் சிறப்பாகவும் இராது, சரியாகவும் இராது. இவர்களிடம் ஆரோக்கியமான சிந்தை இல்லாததினால் மற்றவர்களின் பணிகளிலும் தலையிட்டு அவர்களையும் குழப்புகின்றனர். தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறவர்கள் மற்றவர்களையும் வஞ்சனையாக நிதானிப்பார்கள். தங்கள் சொந்த விஷயத்தினையே சரியாக செய்யத் தெரியாதவர்கள், அண்டை அயலார் விஷயங்களில் அழைக்காமல் நுழைந்து புறங்கூறித் திரிபவர்கள் - தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டவர்களாவர். தெளிந்த சிந்தனை இல்லாதவர்கள் என்பதற்கு இந்த ஒரு சாட்சியம் போதாதா? இதுவே அவர்கள் புத்தியற்றவர்கள் என்பதைக்காட்டும் அளவுகோல். இதே கொள்கையின்படி, இன்னும் ஆழமாக ஒவ்வொருவரையும் அவர்களுடைய பேச்சின்படி நிதானித்தோமேயானால், அவரவர் தெளிவற்ற சிந்தனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அப்படி தெளிவற்ற சிந்தனை உடையவர்களாயிருப்பவர்கள், அந்தக் குறுகிய வட்டத்தை விட்டு கடந்திடாதபடி காலக் கிரகத்திற்குள் காலங் கழிக்கும்படி ஆகிவிடும். ஆணவம், பயம், தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளுதல் ஆகிய குணங்களே மனக்குழப்பங் களுக்கெல்லாம் காரணம் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பைத்தியக்கார விடுதியில் இருக்கிற பெரும்பான்மையோர், இப்படிப்பட்ட மனக்கட்டுப்பாடு இல்லாததினால் அவர்களைக் கண்டவர்களெல்லாம் கட்டுப்படுத்தும் நிலைக்கு ஆளாகின்றனர். மீதியிருப்பவர்களில் பெரும்பாலானோர் பிசாசின் வஞ்சக ஆவியினால் வஞ்சிக்கப்பட்டவர்கள். நாம் பைத்தியக்கார விடுதியில் நுழையும்போது, சிலர் தங்களை ராஜாக்களாக பாவித்துக் கொண்டு, ஒரு மரக்கிளையை செங்கோலாக வைத்துக் கொண்டு பேசுவதையும், இன்னும் சிலர் எந்தத் துறையில் பிரபலமாக வேண்டுமென எண்ணினார்களோ அந்தத் துறையில் மேதைகளாக பாவித்துக் கொண்டு பைத்தியகாரத் தனமாக நடப்பதைக் காணலாம். அதற்கேற்ற வண்ணமாக தங்களை யாராவது

தொட்டால் உடனே கோபித்துக் கொள்வர், மற்றவர்கள் தங்களை இழிவாக நடத்துவதாக கோபித்துக் கொள்வர். தாங்கள் எவ்வளவோ தியாகங்கள் செய்தும் எவ்வளவோ தொல்லைகளை சகித்தும், மற்றவர்கள் தங்களுக்குரிய கௌரவம் கொடுத்து பாராட்டவில்லையே என்று வருந்துவதையும், இன்னும் சிலர் தங்கள் நண்பர்களே தங்களுடைய திறமைகளை மறைத்து ஓரங்கட்டி விட்டார்கள், தங்களுக்கு அதிர்ஷ்டம் கிடைக்காதபடி நண்பர்கள் தடுத்துவிட்டார்கள் என்று நினைக்கின்றனர். ஒருசிலர், பயத்தினால் தங்களுடைய ஜீவன் பிழைக்க ஓடுகிற ஓட்டத்தில் தாங்கள் மட்டுமே புத்திசா-த்தனமாக இருப்பதாகவும், மற்றெல்லாரும் பைத்தியகாரத்தனமாக இருப்பதாகவும் கற்பனை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது மன்னிக்க முடியாத பாவங்களினால் கடவுள் அவர்களுக்கு விரோதமாக எழும்பி, நித்திய நித்தியமாக சித்திரவதைக்கு இவர்களை உள்ளாக்குகிறார் என நினைக்கிறார்கள்.

சரியான சிந்தனைத் தெளிவில்லாதவர்கள், ஒன்றில் மகாபெரிய காரியங்களைச் செய்ய எண்ணுவார்கள், அல்லது இழிவான செயல்களைச் செய்ய எண்ணுவார்கள். இந்த உலகம், உலகத்தின் ஆவி, இவ்வுலகத்தின் பேராசை பெருமைகள் இவைகளையெல்லாம் சார்ந்து பெருகும்போது, தப்பறை, பயம், மூட நம்பிக்கைகள் இவையெல்லாம் இயல்பு நிலையை விட இன்னும் அதிகரிக்கின்றன. இதன் விளைவாக பைத்தியக்காரத்தனம் நாகரீக உலகில் மிக விரைவாகப் பெருகி முழுபைத்திய உலகமாக மாறி வருகிறதை காண்கிறோம்.

நமக்கும், உலக மாந்தர் அனைவருக்கும், இந்த பைத்தியக்கார நிலையில் உள்ளவர்களுக்கும் என்ன தேவையென்றால் தெளிந்த ஆரோக்கியமான சிந்தையே. ஆனால் உடல் ரீதியாகவும், உள்ள ரீதியாகவும் உலகமெல்லாம் குணப்பட ஆயிர வருட அரசாட்சியை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இக்காலத்தில், மாபெரும் வைத்தியராகிய இயேசு கிறிஸ்து அனைவருடைய பைத்திய நிலைகளை மாற்றி உன்னத சிந்தனையை தருவார். அந்த சரியான ஏற்ற வேளை வரும் வரையில், இதற்கெல்லாம் விமோசனமும், ஆசீர்வாதமும் கிடைக்காது.

*சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்டிருக்கிற திருச்சபையார், தங்களுடைய கர்த்தர் மூலமாகவும், அவருடைய திருவசனங்கள் மூலமாகவும், பரிசுத்த ஆவியை அதாவது தெளிவான சிந்தனையை பெற்றுக் கொள்கிறார்கள். இந்தத் தெளிவான சிந்தனை என்பது பிதாவின் சிந்தையே. எந்தளவுக்கு தங்களுக்குக் கிடைத்த பரிசுத்த ஆவியின் சலுகை, உரிமையை சந்தர்ப்பதற்கிற் கேற்றவாறு பயன்படுத்துகிறார்களோ, அந்தளவுக்கு தங்களின் இயல்பான சுபாவத்தையும், உள்ளம், உடல் ரீதியான சுபாவத்தினாலும் நம்மைக் கவிழ்த்துப் போடுகிற அளவுக்கு உண்டாகும் தொல்லைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். அப்போஸ்தலர் மூலமாக கர்த்தருடைய வார்த்தை நம்மை இவ்வாறு வழிநடத்துகிறது:*

*“நான் சொல்லுகிறதாவது... உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, (மாம்சத்தின் படியல்ல, புதிய சிருஷ்டிக்கேற்ற) தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.” (ரோம.12:3) பெரும்பாலானவர்கள், தங்கள் வாழ்க்கை முழுவதுமாக வெற்றி கொள்ள வேண்டிய பணி என்னவென்றால், தங்களைத் தாங்களே மகா உன்னதமாக, பெருமையாக எண்ணிக் கொள்ளும் சுபாவத்தை ஜெயிக்க வேண்டும். இதுவே அவர்கள் பெறக்கூடிய தெளிந்த புத்தியுள்ள ஆவியாகும். இந்த கர்வமான குணத்தைச் சீர்திருத்த போதகரும் குருவுமாகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை நமக்கு உதவுகிறது. “சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.” (மத்.5:5) இதுவுமில்லாமல், அப்போஸ்தலரின் ஆறுதலும் ஆலோசனையுமான வார்த்தைகளும் இதற்கு உதவுகின்றன. “தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.” (யாக் 4:6) “ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.” (1பேது 5:5,6)*

*இந்த உலகப்படியான வல்லவர்களையோ, பெரிய அறிஞர்களையோ, நீதிமான்களையோ, உலகின்படி, சுயநீதியின்படி தேவன் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் தேவ நீதியின்படி நடக்கக்கூடிய தாழ்ச்சியுள்ள, விசுவாசத்தில் ஐசுவரியமுள்ள,*

தங்களுடைய ஞானத்தைப் பெரிதாக எண்ணாமல், தங்களுடைய நீதியை எண்ணாமல், கிறிஸ்துவுடைய நீதி ஞானமே தங்கள் ஞானம், தங்களுக்கு பரிகாரம் என்றும் தங்களுக்கு அவரே எல்லாம் என்று ஏற்றுக் கொள்கிறவர்களையே தேவன் தெரிந்து கொள்கிறார்.

இதுபோலவே, "பயத்தின் ஆவி" உள்ளவர்கள், தங்களுடைய பயமுள்ள ஆவியை எதிர்த்துப் போராட, "சத்திய ஆவி," "அன்பின் ஆவி" யைப் பெற்று அதை எதிர்க்க வல்லவர்களாகிறார்கள். அந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டால், "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்." (1யோவா 4:18) தேவ சித்தத்தையும், தேவனுடைய வார்த்தைகளையும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டையும் நன்கு அறிந்துணர்ந்தவர்களுடைய மனதில், அநேகரை அச்சமூட்டி வருத்திக் கொண்டிருக்கிற பயத்தை வேருடன் அகற்றி விடுகிறது. இந்த பயத்திற்குப் பதிலாக தெளிந்த சிந்தையும், வெட்கமேற்படுத்த முடியாத நம்பிக்கையும் கொடுக்கிறது. ஏனெனில் பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு அவர்களுடைய இருதயத்தில் மிகவும் அதிகமாய் குடி கொண்டிருக்கிறதினால், இந்த தெளிந்த சிந்தை ஏற்படுகிறது.

தங்கள் வாழ்வில் சாதிக்க வேண்டுமென்பதற்காக சிலர், அதிகப்படியாக தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்வதினால், அவர்கள் சத்திய ஆவியால் உற்சாகப்பட்டு, உயர்ந்த நிலையை அடைந்து, தங்களுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகமாக இருப்பார்கள். வேறு சிலர், தன்னைத் தானே உயர்த்திக் கொண்டு, அநேகரை சீர்திருத்திக் கொள்ளப் பெற்றுக் கொண்ட சத்திய ஆவியை, தங்கள் கர்வத்தாலும், மிதமிஞ்சிய எண்ணத்தாலும், தங்கள் மனசாட்சியை பெரிதென்று எண்ணுவதால் தங்களையே வஞ்சித்துக் கொள்கிறார்கள். ஆவியில் எளிமையுள்ளவர்கள் தேவனுடைய உதவியை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் இரண்டாவது சொல்லப்பட்டவர்கள் தடுக்கப்படுகிறார்கள்; கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறார்கள்; தேவனுக்குப் பிரியமானதெதுவோ அவைகளினால் போதிக்கப்பட்டு, அவர்களுக்கே அவர்கள் உதவியாக இருப்பார்கள். இதைக் குறித்தே அப்போஸ்தலராகிய பவுல் கூறுகிறதாவது: "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை

அறிந்தவனென்று (நிச்சயமாக) எண்ணிக் கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக (அவனது சுயஞானத்தினால்) அவன் இன்னும் அறியவில்லை." *(1 கொரி 8:2)* கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்வதினாலோ, ஏதாவதொரு மனித அமைப்புக்களாகிய பெயர் சபையில் சேர்வதாலோ, வேதாகமம் என்னிடம் இருக்கிறது என்று சொல்வதினாலோ மறுரூபம் அடைந்து, குணநலன் மாறிவிட்டது என்று சொல்ல முடியாது. ஆனால் கிறிஸ்துவோடு சேர்ந்து, பிதாவின் தெளிந்த சிந்தையையும் கிறிஸ்துவின் சிந்தையையும், சத்திய ஆவியாகிய வார்த்தையின் ஆவியை. புனிதத்தின் ஆவியை, தெளிந்த புத்தியின் ஆவியை, பிதாவின் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்வதின் மூலம் அடையமுடியும்.

தேவ கிருபையினால், தேவ கிருபையை உணர்ந்து எற்றுக் கொள்ளும்போது, தெளிந்த சிந்தையுள்ள ஆவியை ஒருவன் பெற்றுக் கொள்கிறான். இதனால் எல்லா வழிகளிலும் உலகிலுள்ள மற்றெல்லாரிலும் அனுகூலமான பயனைப் பெறுகிறான். தெளிந்த சிந்தையுள்ளவனிடத்திலே ஞானமுள்ள ஆவி தங்கும். இப்படிப்பட்ட ஆவியுடையவன் மற்றவர்களைக் காட்டிலும் உலகின் ஜீவியம், சொத்து, புகழ், சமூக அந்தஸ்து ஆகியவற்றைப் பற்றி தெளிந்த பகுத்தறிவின் ஞானமுள்ளவனாவான். இந்த புதிய ஞானநிலையை அடைந்ததினாலே, மற்றவர்கள் காணக்கூடாதவற்றையும், காணக்கூடிய தெளிவு இவனிடம் இருக்கும். கர்த்தருடைய வார்த்தையினால் போதிக்கப்பட்ட இவனுடைய மனம், உலக ஆஸ்திகளெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் குவிந்திருந்தாலும் தான் மரணமடையும்போது ஒன்றையும் எடுத்துச் செல்ல முடியாது என்பதைப் பகுத்தறிகிறது. புகழ் என்பது கடந்தோடுகிற உள்ளே ஒன்றுமில்லாத ஒரு பொருள்; வேகமாகச் சுழல்கின்ற உலக வாழ்க்கையில் புகழும் மரணமடையும், எல்லாராலும் மறக்கப்படும் என்பதை அவர்கள் அறிவார்கள். சமூகமே ஆழமற்ற திடமற்றதாக உள்ளது. இதனுடைய தொழில்களோ, ஒருவரையொருவர் மதிப்பீடு செய்வதோ எதார்த்தமுடையதல்ல. மனித வாழ்க்கை நீர்க்குமிழி போல இருக்கிறது. அது மரணத்தோடு முடிவடைகிறது. இல்லாவிடில் பொருளாதார வீழ்ச்சியடையும்போது அவனும்

வீழ்ச்சியடைகிறான் என்பதை அறிவார்கள். உலக மொழியின்படி பார்த்தோமேயானால், உலகப் பிரகாரமாக சொத்து, சந்தோஷம் இவையெல்லாவற்றிற்காக மனிதன் எடுக்கும் முயற்சி வீணிலும் வீண் என்பது உலகப் பழமொழிகளிலே கூட விளக்கிக் கூறுவர். உலகத்திலுள்ள சராசரி ஆண் பெண்ணின் பார்வையில் கூட, இவ்வுலக வாழ்க்கை ஒரு சீட்டாட்டம் போலவும், அதனுடைய விளைவுகளோ திருப்தியடையாததாகவும் இருக்கிறது. இதில் வெற்றியடைபவர்கள் கூட கடைசியில் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றுமில்லை என்று கருதுகின்றனர்.

மறுபக்கத்தில் பார்க்கும்போது, இந்த சுவிசேஷ யுகத்தில் பரம அழைப்புக்கு அழைக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட தேவ பிள்ளைகளுக்கு, மனுக்குலத்தை முழுவதும் அடிமைப்படுத்துகிற வஞ்சனைகள், சண்டை சச்சரவுகள் ஆகியவற்றி-ருந்து விடுபட, மேன்மையான தெளிந்த சிந்தை கொடுக்கப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளுக்கோ உன்னதமான நோக்கங்கள், உன்னதமான சந்தோஷங்கள், பரலோக ராஜ்ய சமூகத்தில் உன்னத அந்தஸ்து, பரலோக ஐஸ்வரியமும், பரலோகத்துக்குரிய நித்திய ராஜ்யத்திற்குரிய பாக்கியமும் கிடைக்கின்றது. பரிசுத்த ஆவியின் அருளால் உண்டாகும் மாபெரும் இலட்சியம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரலோகத்துக்குரிய பரிசுத்த நோக்கம், ஆவியின் நற்கனிகளினாலும், கிருபையினாலும் உண்டாகி, அன்பின் அடிப்படையிலே கிரியை செய்யும். இதற்கு நேர்மாறாக இந்த உலகத்தின் பேராசைகளுக்கோ சுயநலமே அடிப்படை.

ஒரு ஆண் அல்லது பெண் இவ்வுலகத்துக்குரிய அழிந்து போகக்கூடிய வீணான பேராசை, பூமிக்குரிய அற்பமான நோக்கம் ஆகியவைகளில் வைத்த நம்பிக்கையை விட்டுவிட்டு, பரத்துக்குரியவைகளில் நோக்கமாயிருந்து அவைகளையே தேடுகின்றவர்களுக்கு, தற்கால ஜீவியத்தில் எந்த சந்தர்ப்பங்களிலும் நல்ல நிதானத்தைப் பயிற்சி செய்ய வாய்ப்புக் கிடைக்கும். ஏனென்றால் அவர்கள் உலகத்துக்குரியவைகளை நோக்கும்போது, அவைகளில் எந்தப் பிரியமோ, நோக்கமோ இல்லாமல் காணப்படுவார்கள். இந்த உலகத்தில் அவன் இருந்து வாழக்

கடமைப்பட்டவன், ஆதலால், எல்லா மனிதருக்கு முன்பாகவும் நேர்மையாகவும் நீதியாகவும் இந்த நோக்கத்தோடு வாழ வேண்டியது அவசியம். அளவு கடந்த இந்த உலகத்துக்குரிய பேராசையை எந்தளவு கட்டுப்படுத்துகிறானோ, அந்தளவுக்கு மற்றவர் பொருள் மேல் வைக்கும் அளவு கடந்த பேராசை, அநியாயமாக அபகரித்தல் இதனால் வரக்கூடிய பெருமை, புகழ் ஆகியவற்றி-ருந்து அவன் விடுதலை பெற்று இதன் மூலம் நீதியைக் கற்றுக் கொண்டு, எல்லாரிடமும் கருணையாய் நடக்கக் கற்றுக் கொள்கிறான். ஒரு கிறிஸ்தவ அனுபவத்தில் ஒருவன் ஆரோக்கியமான திடமனதுடன் செயல்பட்டானென்றால் அவன் மேன்மையான நிதானத்தைக் கொண்டிருப்பான். அவனுக்கு பூமிக்குரிய, மாம்சத்துக்குரிய, அழிவுக்குரிய சிந்தனை உண்டாகாது. அவன் மனம் பழுதாகாது. தெய்வீக வார்த்தையினால் கொடுக்கப்படுகிற திவ்ய அருமையான வாக்குத்தத்தங்களினாலே அவன் புதிய சிந்தை குணநலன்களையுடைய புதிய படைப்பாகிறான். (2 பேது 1:4) புதிதாக்கப்பட்ட சிந்தையை தேவனால், தேவ ஆவியின் மூலம் பெற்றுக் கொண்டு, ஆவிக்குரிய புதிதாக்குத-ன் காரணத்தினால் அவன் தெளிந்த புத்தியுடைய புதிய மனிதனாகிறான். அவன் எந்த அளவு பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிறானோ, அந்த அளவு அவன் மனமும் சிந்தையும் ஆரோக்கியமுள்ளதாய் இருக்கும். கர்த்தரை சிநேகிப்பதிலும் அவருடைய நீதியைத் தேடுவதிலும் அவன் எவ்வளவு தீவிரமாய் இருக்கிறானோ அந்த அளவுக்கு அனலாகவும், விரைவாகவும் இருப்பான். தீவிரமற்றிருப்பவன் எவனோ அவன் குளிராகவும், மெதுவாகவும் தெளிந்த சிந்தையைப் பெறுவான். நமது போதகரும் குருவுமாய் இருக்கிற அவர், "மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக எதைக் கொடுப்பான்?" (மத் 16:26) என்று வினவினார். ஒரு மனிதன் தெளிவான ஆரோக்கியமான சிந்தை உடையவனாயிருந்தால், அதற்கு ஈடாக இவ்வுலக ஆஸ்தி, புகழ், உன்னத பதவி ஆகிய எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். இதற்கு நேர்மாறாக இந்த உலக ஆஸ்தி, புகழ், பதவி வேண்டுமென்று விரும்புகிறவர்கள், திருப்தி அளிக்காதவைகளாகிய செல்வத்தை சேர்க்கவும், வீண் பெருமை, ஆடம்ரம், சமூக அந்தஸ்து, பாவத்தினால் வரக்கூடிய சந்தோஷங்கள் ஆகியவைகளுக்காகவும் தங்களை வருத்தி கஷ்டப் படுகிறார்கள். தெளிந்த சிந்தையுடைவர்கள்

யாவரும் தங்களுக்கு எதிர்கால வாழ்வு இல்லாவிடினும் இந்த பாவ சந்தோஷ வழியைப் பின்பற்றுவது ஞானமற்றது என்று உணர்வார்கள். தற்காலத்தில் பெரும்பாலானவர்கள் இந்த உலகத்தில் எல்லாவற்றையும் நன்கு அனுபவிக்க வேண்டும் என்று எண்ணி, அதற்கு ஆயத்தமாகி, தாங்கள் தேடின இன்பம் தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்றெண்ணி விரக்தியால் மாண்டு போகிறார்கள். அவர்கள் தேடி வைத்த புகழ், ஐஸ்வரியங்களெல்லாம் சிதறிப்போகும். அப்படியே சிதறிப்போகாவிட்டாலும் அது பிற்கால சந்ததிக்கு தெளிந்த சிந்தையில்லாமல், பணப் பேராசை பிடித்தவனுடைய கதி இதுதான் என்பதை பறைசாற்றும் ஞாபகச் சின்னமாக அமையும்.

இந்த உலகின் வாழ்க்கை நியாயத்தின்படி சரியான குறிக்கோளோ, நோக்கமோ இல்லாமல் இருப்பதை அப்போஸ்தலராகிய பேதுரு,

"உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தை என்றார்." ( 1பேது 1:18)

தகுதியில்லாத பொருளுக்காக வீணாக உழைக்கிறது பாரம்பரிய செயல். மனிதர் தாங்கள் செய்வது சரியா தவறா என பகுத்தறியாமல், தங்கள் பெற்றோர் செய்வதையே தாங்களும் கடைப்பிடிக்க வேண்டுமென நினைக்கின்றனர். நாம் அந்தப் பாரம்பரியத்தின்படி நடவாமல் திரும்பியதற்கு காரணம் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டிருக்கிறோம் என்பதை கற்றுக்கொண்டதினால் தான் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்த உலகத்தின் பாதை வீணிலும் வீணானது என்று நாம் தேவனுடைய கிருபையின் வார்த்தை மூலம் கற்றுக் கொண்டிருக்கிறோம். தெளிந்த சிந்தையின் பாக்கியம் கிடைக்காததினாலும், மனுக்குல வீழ்ச்சியினாலும் எல்லாரும் அந்த மாயையான பாதையிலேயே பின்தொடர்ந்து போகின்றனர். நம்மை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவர் மூலம், நாம் உடன்படிக்கை செய்து, அந்த தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றுக் கொண்டதினால் நாம் இவைகளைக் கற்றுக் கொள்கிறோம்.

வேதாகமத்தின் வழியாக, பரிசுத்த ஆவியின் பார்வையில்

*தற்கால ஜீவியத்தை நோக்கிப் பார்ப்போமேயானால், அந்த அழைப்பை கேட்டு, பரிசை பார்க்கிற அனைவருக்கும் அந்த பரிசைப் பெறுவதற்கு ஆயத்தப்படுத்துகிற பள்ளியாகத் தோன்றும். யாருடைய கண்கள் வேதாகமத்தை உள்ளே ஊடுருவிக் காணத் திறந்திருக்கிறதோ, அவர்கள் பெரும்பாலானவர்கள் செல்கின்ற பாதை ஞானமற்றது என்பதைப் புரிந்து கொள்வர். பெரும்பாலானவர்கள் தங்கள் சுயநல நோக்கத்தைத் தடைபண்ணாமலும், தங்கள் விழுந்துபோன சுபாவத்தின் படியே பாரம்பரியத்தைக் கைவிடாமலும், பல சந்தர்ப்பங்களில் நல்ல குணநலன்களை விட்டு தாங்கள் பிறந்தபோது இருந்த நிலையி-ருந்ததைவிட இன்னும் மோசமான சுபாவத்தை பின் சந்ததியாருக்கு விட்டுச் செல்லும்போது கெட்ட சுபாவத்தோடு கூட, பின்வரும் சந்ததிக்கு அவர்களுக்கே உரிய பலவீனங்களும் சேர்ந்து கொள்கிறது.*

*மறுபுறம் பார்ப்போமேயானால், தேவனுடைய வசனமும் அந்த வசனத்தின் பரிசுத்த ஆவியும் நம்மை இவ்வுலகப் பேராசைகள், நோக்கங்களை அடையவிடாமல் தடுக்கிறது; மேலும், "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது" என்று எச்சரிக்கிறது. - 1 தீமோ 6:10*

*ஆவிக்கெதிரிடையான எல்லைக் கோடாகிய சோம்பேறித்தனத்திலிருந்து நம்மைப் பாதுகாத்து, எல்லா மனிதருக்கும் முன்பாக நீதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதோடல்லாமல், தன் வீட்டுக்கு வேண்டிய எந்த வருமானத்தையும் நேர்மை யான வழியில் ஈட்டப் போதிக்கிறது. வேத வசனங்கள் "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள், ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்" என்று நமக்கு புத்திமதி கூறுகிறது. (ரோம 12:11) உண்மையில் மதிப்பில்லாத உலக பொக்கிஷங்கள், ஆடம்பரங்கள், மற்றவர்கள் கேலி செய்து வாழ்கிற வாழ்க்கை - ஆகிய இவற்றிலிருந்து கர்த்தரின் ஆவியைப் பெற்றவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். தெளிவற்ற சிந்தனையிலிருந்தும், சோம்பேறித்தனத்தி-ருந்தும் கர்த்தரின் ஆவியைப் பெற்றவர்கள் காக்கப்படுகின்றனர். எல்லா நல்ல சேவைகளையும் செய்ய பலமுள்ளவர்களாகும்படி புத்தி*

புகட்டுகிறது. இவர்களது நற்சேவை மனுக்குலம் முழுவதற்கும் உதவியாக இருப்பதால் தெய்வீக அங்கீகாரம் பெறுகிறது. இந்த சேவை கர்த்தர் தமக்கே செய்த சேவையென கருதப்படுவதால் நித்திய ஜீவனையும் ஏராளமான வெகுமதிகளையும் பெறுவார்கள்.

தற்காலத்தில் தெளிந்த புத்தியுள்ள ஆவி நற்குண ஐசுவரியத்தையும், கிருபையின் ஐசுவரியத்தையும் அடைய சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஏனெனில் இந்த ஐசுவரியத்தை பூச்சியாவது, துருவாவது கெடுப்பதில்லை; ஆனால் நித்திய சந்தோஷத்தைத் தரும். தெளிந்த புத்தியுள்ள ஆவி தற்காலத்தை அசட்டை செய்துவிட்டு வருங்காலத்தில் வாழும் படிச் சொல்லவில்லை; எதிர்காலத்தை நினைவில் நிறுத்திக் கொண்டு, தற்காலத்தில் ஞானமாய் வாழும்படி செய்கிறது.

தெளிந்த புத்தியுள்ள ஆவி செம்மையான குணநலன்களைப் பெற்றிட, அகலமும் ஆழமுமான எல்லா வழிமுறைகளிலும் நடத்துகிறது. தெளிந்த புத்தியுள்ள ஆவியை உடையவர்களுக்கு அது அவர்களைப் பற்றிய சரியான கருத்தை காட்டுகிறது மட்டுமல்ல, தன்னைப் போல அழைக்கப்பட்டு, பின்னர் விழுந்துபோன நிலையி-ருக்கிற உடன் சகோதரர்களைப் பற்றிய சரியான கருத்தை காட்டுகிறது. அதனால் ஒருவரில் ஒருவருக்கு கருணையையும், ஐக்கியத்தையும் உண்டாக்குகிறது. அவன் தன் உடலும் உள்ளமும் பாவ நிலைமையில் இருப்பதால், தனக்கே கிருபை, சீர்திருத்தம் தேவை என்பதை உணர்ந்திருக்கிறான். முழு உலக மனுக்குலமும் பாவ நிலைமையிலிருப்பதால் முழு உலகத்திற்கும் கிருபையும், சீர்திருத்தமும் தேவை என்பதை உணர்ந்திருக்கிறான். தனது மனத்திலுள்ள குறைவுகள், சமத்துவமற்ற சிந்தனைகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்யக் கற்றுக் கொள்கிறான். அவன் "இவ்வுலகின் அதிபதியாகிய சாத்தானால்" குருடாக்கப்பட்டு, தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றுக் கொள்ள இயலாது இருக்கிறவர்கள் மீது பரிவு காட்டுகிறான். இயேசுவின் முகத்தில் தெய்வீக நன்மையின், மகிமையின் பிரகாசத்தை காணக் கூடாமயிருக்கிறவர்கள், தங்கள் உள்ளத்தில் பிரகாசிக்கவும், தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெறவும் உதவுவான். (2 கொரி 4:4)

கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக, தன்னுடைய

*சுவீகாரத்தின் பரிசுத்த ஆவியில் எந்த அளவுக்கு வளருகிறானோ, அந்த அளவுக்கு படிப்படியாக இன்னும் சாந்தம், இரக்கம், தாராளமனது, பரோபகார சிந்தை உடையவனாய், தேவசுபாவம் உள்ளவனாக மாறுகிறான். இப்படிப்பட்ட கருணை, காருண்யம் மிகுந்த குணநலன்கள் உண்டாகியிருந்து பெருகினால், அவனுடைய வெளித் தோற்றத்தையோ நடவடிக்கையையோ மட்டும் மாற்றாமல், அவனுடைய சிந்தனையையும், வார்த்தைகளையும் முற்றிலுமாக மாற்றுகிறது. அநாகரீகமான கள்ளங்கபடமுள்ள செயல்பாடுகளை அவன் பெற்றுள்ள பரிசுத்த ஆவி அருவருக்கின்றது. இந்த அருவருப்பு நிறைந்த செயல்பாடுகளை எந்தளவு தன் பகைவர்கள், நண்பர்கள், அயலாரிடத்தில் காட்டுகிறானோ அவர்களைப் பற்றிய அநீதியான சிந்தனை, இரக்கமற்ற செயல்பாடு ஆகியவை வெளிப்பட்டு பரிசுத்த ஆவிக்கு விரோதமான செயல்பாடாக அமையும்.*

*தெளிந்த புத்தியுள்ள ஆவி ஒருவரிடத்தில் உண்டாயிருக்குமேயானால் அவர்கள், படிப்படியாக நல்ல கணவனாக, சிறந்த தந்தையாக, சிறந்த குமாரனாக, சிறந்த மனைவியாக, சிறந்த தாயாக, சிறந்த மகளாக மாறுவது உறுதியாகும். அதற்கு தற்போதைய சுயநல சிந்தனை, சொல், செயல்பாடுகள் ஆகியவற்றை யாவரும் நேசிக்கக்கூடிய அளவிற்கு மாற்றி அமைத்ததே காரணம். தெளிந்த சிந்தையை பெற்றவன், பரிசுத்த ஆவியைப் பெற்றவன், அன்பின் ஆவியை உடையவன், எந்த அளவுக்கு அந்த ஆவியை சுதந்தரித்திருக்கிறானோ அந்தளவுக்கு தன்னுடைய உரிமை, சலுகையை பெரிதாக எண்ணாமல், மற்ற எல்லாருடைய உரிமை, சலுகை இவைகளுக்கு முதலிடம் கொடுத்து, அவர்களுடைய உணர்வுகளைப் போற்றி மதிக்க ஆரம்பித்து விடுவான். எல்லா விஷயத்திலும் முதலில் கடவுளுடைய சித்தத்தை முதன்மையாக நிறுத்தி, அதற்கடுத்த நிலையில் கர்த்தரில் பிரியப்படுகிற, தன்னோடு தொடர்பு கொள்கிற மற்றெல்லாருடைய நன்மையையும் விசேஷமாக தனது சொந்த குடும்பத்தாருடைய நன்மையையும் நாடுவான். இந்த விருப்பத்திற்கிசைவாக முதலில் தேவனைப் பிரியப்படுத்தவும், அடுத்து விசுவாசக் குடும்பமாகிய திருச்சபையாரைப் பிரியப்படுத்தவும், யார் யாருடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறதோ அத்தனை பேருக்கும் தேவ சித்தப்படி என்ன பேசுவது, எப்படி சிந்திப்பது, எப்படி செயல்படுவது என்பவை பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படும்.*

தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றுக்கொண்ட ஆணோ, பெண்ணோ, அதனாலேயே எல்லா விஷயங்களிலும் நல்ல கணவன், நல்ல மனைவி, நல்ல தந்தை, நல்ல தாய், நல்ல சகோதரன் நல்ல சகோதரி என்ற நற்சாட்சி பெற்றிருக்க முடியாது. ஏனெனில் நாம் முன்னரே பார்த்தபடி, கிறிஸ்துவின் நற்செய்திப் பணியை, இந்த நாகரீகமான சமூகத்திற்கு எடுத்துச் செல்லும்போது, எவ்வளவோ பலவீனர்களும் ஒன்றுக்கும் உதவாதவர்களென்று கருதப்பட்டவர்களுமாகிய நம்மைத் தெரிந்து கொண்டு, இதேபோல ஒன்றுக்கும் உதவாதவர்களென்று கருதப்பட்ட மற்றவர்களையும் இந்த தெளிந்த சிந்தையுள்ள வர்களாகும்படி சீர்பொருந்தச் செய்து கர்த்தருக்கென்று தங்களை முற்றிலுமாக உடன்படிக்கை செய்து ஒப்புக் கொடுப்பார்கள். இதன்பிறகு அவர்கள் தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றுக் கொள்வார்கள். இதற்கு நேர்மாறாக, இவ்வுல ஆடம்பரச் செல்வச் சிறப்பில் பிறந்தவர்கள், தங்களுடைய சுயநீதியைச் சார்ந்திருப்பதால், கர்த்தர் காண்பிக்கின்ற நல்ல வழியையோ, உதவியையோ ஏற்றுக் கொள்ள மறுப்பார்கள். இம்மாதிரி ஆடம்பரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தமையினால் பெருந்தன்மையான கணவராகவோ, மனைவியாகவோ, பாராட்டுக்குரிய குழந்தைகளாகவோ, பெற்றோராகவோ கருதப்படலாம். பாரம்பரியத்தின்படி வருகிற கிறிஸ்தவப் பெற்றோருக்கு அவர்கள் மற்ற குழந்தைகளைவிட ஞானத்திலும், மேன்மையிலும் சிறந்து விளங்குவார்கள். இப்படிப்பட்டவர்கள் இரட்சகரை ஏற்றுக்கொண்டு, புதிய சிந்தைக்கு ஒப்புக் கொடுக்காவிட்டால், அவர்கள் விழுந்து போன நிலைமைக்கே தள்ளப்படுவது நிச்சயம். அவர்களுடைய அன்பு, இரக்கம் ஆகியவை வெளிப்படையான தோற்றமாகவே இருக்குமல்லாமல் உள்ளான அன்பாக இருக்க முடியாது. உள்ளே சுயநலமாகவும், வெளியே பொதுநலத் தோற்றமுமாக வேஷமிடுகிறார்கள். வருங்காலத்தில் அவர்கள் வேஷம் வெளியரங்கமாகி, இன்னும் கீழான நிலைக்கு அவர்களை விட்டுவிடும்.

ஒரு ஆணோ, பெண்ணோ ஒழுக்கக் கேட்டிலும், ஞானமற்ற தன்மையிலும், அவனுடைய மனது எவ்வளவு பாதாளமும், பரிதபிக்கக்கூடிய நிலையில் இருந்தாலும், தேவனுடைய சத்தியமும், கிருபையும் அவர்களை விழுந்துபோன நிலையிலிருந்து உன்னத

நிலைக்கு உயர்த்தும். அவர்களை மற்றவர்களைப் பார்க்கிலும் பெருந்தன்மை உள்ளவர்களாக, தூய்மை, இரக்கம், மென்மை உள்ளவர்களாக, தயாள சிந்தை உள்ளவர்களாக மாற்றும். அவர்கள் எந்தளவிற்கு இந்த புதிய சிந்தையை, தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்று வளர்கிறார்களோ அந்த அளவுக்கு இந்த மாற்றம் நிகழும்.

மனுக்குலத்தின் பொறுப்பற்ற பிரச்சாரமே, பொதுவாக தெளிவற்ற மனித சிந்தனையை எடுத்துக் காட்டுகிறது. பின்வரும் சந்ததிக்கு சுகக்கேடு உண்டாக்குகிறது என்ற விளைவை எண்ணாமல், பின்வரும் சந்ததியைப் பத்திரமாகப் பாதுகாப்பதற்காகவாவது நாம் செய்வது சரியா, தவறா என்று சிந்திக்காமல் மனுக்குலம் முன்னேறுகிறது. இயற்கைக்கு முரணாக தாழ்ந்த விலங்குகள், கால் நடைகளாகிய ஆடு, குதிரை, நாய் போன்றவைகளை மேன்மையான இனமாக முன்னேற்ற அறிந்திருக்கிறார்கள். மனிதனுடைய இயல்பான பகுத்தறிவை எப்படி பயற்சி எடுத்து பயன்படுத்துவது என்பதைக் குறித்து அப்போஸ்தலர் விசுவாசிகளுக்கு விவரிக்கின்றார். "...புருஷர்களே உங்கள் மனைவியானவளோடு விவேகத்தோடு வாழ்ந்து... அவர்களுக்கு செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்." *(1 பேதுரு 3:7)* தெளிந்த புத்தியுள்ள ஆவியோடு புருஷர்கள் இந்த ஆலோசனையையும் கேட்டு அதன்படி நடந்தால், மனைவிகள் எவ்வளவு பலவீனர்களாக இருந்தும், அதிகப்படியான பளுவைச் சுமக்கிறார்கள் என்பதை அறிந்து, அவர்களை வெகு சாந்தத்தோடும் விவேகத்தோடும் நடத்துவார்கள்

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், ஊழியக்காரிகள் மட்டுமே இந்த தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றிருக்கிறார்கள். அனைத்துலக மக்களும் ஆசீர்வதிக்கப்படப் போகிற காலம் சமீபமாக இருப்பதினால் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். மகிமையின் இராஜாவாகிய கிறிஸ்துவோடு கூட, அவர்களுடைய ஊழியக்காரரும் மகிமையடையும் காலம் சமீபமாக இருப்பதினால் தேவனுக்கு நன்றி கூறுவோம். அவர்கள் மகிமையடைந்த பின்னர், அனைத்துலக மக்களும் இந்த தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

## அத்தியாயம் 11

# ஒப்புரவாகுதலின் பரிசுத்த ஆவி மறுக்கும் செய்திகளை ஆழ்ந்து ஆராய்தல்

முரணாக காணப்படுகிற வசனங்களை ஆராய்தல்-ஆவியை அவித்துப் போடாதிருங்கள்-பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்-சத்திய ஆவி-தேற்றரவாளன்-பரிசுத்த ஆவியால் நிறைந்திருத்தல்-பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லுதல்-கர்த்தருடைய ஆவியை சோதித்தல்-பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்-ஆவியானவர் சொன்னார்-பரிசுத்த ஆவிக்கு நலமாக கண்டது-பரிசுத்த ஆவியினால் தடைபண்ணப்பட்டது-பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார்-பரிசுத்த ஆவி உங்களை கண்காணிகளாக வைத்தது-பரிசுத்த ஆவி ஒரு போதகர்-பரிசுத்தராலே பெற்ற அபிஷேகம்-ஆவியானவர் வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார்-ஆவியானவர் உலகத்தை கண்டித்து உணர்த்துவது எவ்வாறு-இதனாலே பரிசுத்த ஆவி இன்னதென்றும், அந்திகிறிஸ்துவின் ஆவி இன்னதென்றும் அறிவீர்கள்.

வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் (பொதுவான பதிப்பு மற்றும் திருத்திய பதிப்பு) திருத்துவக்கொள்கைக் காரராயிருப்பதினால் வேதத்தில் அநேக பகுதிகளில் தங்களுக்கு ஆதரவாக சில வசனங்களை சேர்த்துக் கொண்டனர் என்பதை பல அத்தியாயங்களில் முன்பு பார்த்தோம். அதாவது பிதாவினுடைய பரிசுத்த ஆவி, குமாரனால் கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் ஒப்புரவாக்குதலின் ஆவியாக இருக்கிறது என்பதைப் பார்த்தோம். பலருக்கு ஐயப்பாடு எழுவதாக தோன்றுகிற பல வசனங்களை

ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்வோம். சத்திய ஆவியினாலே வழிநடத்தப்படுகிறவர்களாய், வேத வசனத்தை இருதயத்தின் ஆழத்தில் முழுவதுமாய் விசுவாசிக்கிறவர்களாய் இந்த வசனங்களை ஆராய்வோம். எளிதில் புரிந்துகொள்ள இயலாத மற்ற பகுதிகளை, அதன் மறுப்புகளை நீக்கியபின் ஆராய்வோம்.

## "ஆவியை அணைத்துப் போடாதிருங்கள்"

*- 1 தெச 5:19 -*

ஆவியை அணைத்துப் போடுவதென்பது,வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருக்கிற விளக்கை அணைப்பதற்கு ஒப்பானது அல்லது எரிகின்ற நெருப்பை அணைப்பதற்கொப்பானது. இங்கே சொல்லப்பட்டிருக்கிற அணைத்துப் போடுதல் என்பதற்கான கிரேக்க பதம் 8 முறை புதிய ஏற்பாட்டில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடங்களிலும் அது நெருப்பை, ஒளியை அணைக்கக் கூடிய அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த சிந்தனையை நம் மனதில் கொண்டு, நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதால், அது நம்மை ஒளியூட்டுகிறது என்ற அடிப்படைக் காரணத்தினாலேயே நாம் "உலகிற்கு ஒளி" என்று அழைக்கப்படுகிறோம். (மத் 5:14) நாம் உலகின் ஆவியைப் பெற்று உலகப் பொருள்களால் கவரப்பட்டு போவோமேயானால் நாம் பெற்றுக் கொண்ட ஆவியை, பரிசுத்த ஆவியை, தேவ சிந்தையை அணைத்துவிட்டவர்களாவோம். நம்மிடமிருந்து மற்ற அநேகருக்கு பிரகாசிக்க வேண்டிய ஒளி அணைக்கப்பட்டுப் போய்விடும். இந்தக் கருத்தை ஒத்து நம் ஆண்டவர், "உன்னிலுள்ள வெளிச்சமே இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!" என்கிறார். மத். 6:23

## "நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்"

*- எபே. 4:30 -*

முத்திரை என்பது ஒரு அடையாளக் குறி அல்லது ஒரு உத்தியோகத்தின் நியமனம். இவ்வுலகத்தின் பிள்ளைகள் என

அடையாளம் காட்ட அவர்களுக்கு சில அடையாளங்கள் போடப்பட்டிருப்பதைப் போல, கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாகப் போகிற தேவ பிள்ளைகளுக்கு வேறு அடையாளங்கள் அல்லது குண விசேஷங்கள் அளிக்கப்படுகின்றன. இதில் ஒரு வகுப்பாருக்கு இவ்வுலகத்தின் ஆவியாகிய, இவ்வுலகத்திற்குரிய குணநலன்கள் தரப்பட்டிருக்கின்றன. இன்னொரு வகுப்பாருக்கு தேவ ஆவியின் அடையாளங்கள் (தேவ சிந்தனை, குணநலன், தேவ மனம்) கொடுக்கப்படுகின்றன. தேவனுக்குள்ளாக மெய்யான பிரதிஷ்டை செய்யப்பட்ட நாள் தொடங்கி, அவர்களுடைய பேச்சு, செயல்பாடுகள், குணநலன்கள் இவற்றில் இந்த முத்திரையிடப்பட்ட ஆவியின் அடையாள சாட்சியங்கள் காணப்பட வேண்டும். இந்த புதிய சிந்தை கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் எவ்வளவாய் வளர்கிறதோ, அவ்வளவாய் ஆவியின் அடையாளங்களும் வெளியரங்கமாகத் தெரியும். அதாவது, நம்முடைய சுய சித்தம், தீர்மானங்களை விட்டொழித்து, எல்லாக் காரியங்களிலும் தேவ சித்தத்தையும், தேவ ஆவியின் வழிநடத்துதலையும் நன்கு உணர்ந்து அதற்கேற்ப நம்மை ஒப்புக் கொடுக்கும் போது, தேவனுடைய சிந்தையும், மனமும் நமக்கு உண்டாகும். இப்படியாக கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்க வேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறார். பிதாவின் சித்தத்தை மட்டுமே செய்ய வேண்டும் என்ற எண்ணம் நம்மில் உருவாக வேண்டும். எனவே நம்முடைய புதிய சிந்தை என்பது முழுமையாக தேவனே நமக்குக் காண்பிக்கின்ற வழியாகும். கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக நாம் பெற்றுக் கொண்ட தேவ ஆவியை எந்த விதத்திலும் துக்கப்படுத்தாமல், இருக்கவேண்டும் என்பது அப்போஸ்தலரின் ஆலோசனை. நாம் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு விரோதமாக எதையும் செய்யாதிருப்போமாக; நாம் செய்ய வேண்டிய கடமைகளில் சிறிதும் தவறாமலும் இருக்கவும் வேண்டும். நீங்கள் தேவபுத்திரர் என்பதை சாட்சி பகர்கின்ற தேவ முத்திரையாகிய ஆவியை, தேவ சிந்தையை எவ்விதத்திலும் துக்கப்படுத்தாதிருங்கள். இப்படி செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் நம்மை தூண்டுகிறார்.

## "சத்திய ஆவி"

*"சத்திய ஆவியாகிய............ அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." யோவா. 16:13*

இந்த வசனத்தையும், வசனத்தின் பொருளையும் குறித்து நாம் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். சீடர்களாயிருந்தாலும், யூதர்களாயிருந்தாலும் சுபாவத்தின்படி மனிதராக இருப்பதால், அவர்கள் பூமிக்குரிய சிந்தனையிலே மனிதனுக்குரிய மீட்பும், பூமிக்குரிய இராஜ்யமும் விழுந்துபோன மனிதரைக் கொண்டே ஏற்படும் என எதிர்பார்த்தனர். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவர்களை விட்டுப் பிரிவதைப் பற்றியோ தம்முடைய மரணத்தைப் பற்றியோ பேசாமல், தேவராஜ்யத்தைப் பற்றியே பேசிவந்தார். அவர் போய் இராஜ்யத்தின் அதிகாரத்தைப் பெற்றுத் திரும்பிவந்து, தன்னிடத்தில் விசுவாசமுள்ளவர்களை தன்னோடு சேர்த்துக் கொண்டு, அவர்களையும் உடன் வாரிசுகளாக்கி, தேவ ராஜ்யத்தை ஸ்தாபித்து அவர்களோடு ஆளுகை செய்வார். - (லூக். 19:12) தான் இறந்துவிடுவேன் என்று சொன்னவுடன் ஏமாற்ற மடைந்திருந்த அவர்களை ஆறுதல்படுத்தி, உங்களை முற்றிலும் நான் தனியாய் விடேன் என்று உறுதிபடக் கூறினார். பிதாவின் வேலையாக அவர் போன பின்பு, அந்த சமயத்தில் பிதா தம்முடைய பிரதிநிதியாக ஒரு தேற்றரவாளனை அனுப்புவதாகக் கூறினார். அதனாலேயே வேறொரு மேசியா என்றோ, வேறொரு போதகரென்றோ எண்ணிவிடக் கூடாது. அப்படி வருபவர் "அவர் தம்முடைய சுயமாய் பேசாமல்" தான் கேள்விப் பட்டவைகளையே போதிப்பார். என்னுடைய போதனைக்கு முரணாக அவர் போதிக்க மாட்டார். நீங்கள் ஏற்கனவே பெற்றுக் கொண்ட உபதேசத்தின்படியே உங்களுக்குப் போதிப்பார். "தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்."

இந்த தேற்றரவாளன் ஒரு வகையில் பிதாவுக்கும் எனக்கும் தகவல் தொடர்பு வாய்க்காலாகவும், என்னை விசுவாசித்து பின்பற்றி வருகிற உங்களுக்கு தகவல் தொடர்பு வாய்க்காலாகவும் இருக்கும். நான் ஏற்கனவே சொன்ன பல்வேறு சத்தியங்களையும், சத்திய

ஆவியாகிய அவர் உங்களுக்கு விளக்கிக் கூறுவார். நான் சொல்லி நீங்கள் புரிந்து கொள்ளாத யாவையும் அவர் உங்களுக்கு விரிவாய் விளக்குவார். இன்னும் சில உங்களுக்கு இப்போது புரியாததாய் இருக்கும். நான் போய் பிதாவின் சமூகத்திற்குச் சென்று, உங்களுக்கு ஈடுபலியாக மீட்கும் பொருளை சமர்ப்பிக்கும் வரை அதை புரிந்து கொள்ளக் கூடாதவர்களாக இருப்பீர்கள். ஆகவே தேவனுடைய திட்டத்தின்படி தேற்றரவாளன் மூலமாகத் தொடர்பு கொண்டு ஆவிக்குரிய விஷயங்களை உங்களுக்கு தெளிவாக்குவேன். நீங்கள் தேவனோடு ஒப்புரவாக்கப்படாததால் அந்தச் செய்திகளை அறிந்து கொள்ளும் உரிமை உங்களுக்கு இப்போது இல்லை. என் மீட்புப் பணியை நிறைவேற்றி பிதாவிடம் சென்றபின், என்னுடைய பெயரில் பிதாவின் ஆவி உங்களிடத்தில் அனுப்பப்படும்போது, எதிர்காலத்தில் நீங்கள் அறிய வேண்டிய அவசியமான எல்லாக் காரியங்களையும் குறித்து உங்களுக்கு ஒவ்வொரு படியாக, நீங்கள் புரிந்து கொள்ளும் விதமாக, சரியான விதத்தில் வழிநடத்துவார்.

"அவர் (பிதாவின் பரிசுத்த ஆவி, வல்லமை, ஆதிக்கம்) என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள் (அவருடைய திட்டங்களும், என்னுடையவைகளும் பரிபூரணமாயிருக்கிறது); அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்." (யோவா 16:14,15)

நீங்கள் வேறொரு புதிய போதனையை என்னுடைய போதனைக்கு மாறாக எதிர்பார்க்கக் கூடாது. என்னுடைய போதனையை அடிப்படையாகக் கொண்டு அதில் அபிவிருத்தி அடைந்த போதனையையே எதிர்பார்க்க வேண்டும். அனுப்பப்படுகிற தேற்றரவாளன் என்னுடைய போதனையையே அடிப்படையாகக் கொண்டு போதிப்பார். நான் மேசியா என்பதைத் துல்-யமாக எடுத்துக் காட்டுபவராக இருப்பார். இதனாலே நீங்கள் வரப்போகிற தேற்றரவாளனையோ அவருடைய போதனையைக் குறித்தோ ஐயப்படத் தேவையில்லை. ஏனெனில் அது பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிற சத்திய ஆவியே. இந்த சத்திய ஆவியே என் தூதனாக உங்களிடத்தில் வந்து, என்னுடைய போதனைகளையும், வரப்போகிற யாவற்றையும் குறித்துத்

தெளிவாக விளக்கும். *(யோவா. 16:13)*

இந்த சுவிசேஷ யுகத்தில் திருச்சபைக்கு சத்திய ஆவியே கிறிஸ்துவின் பாடுகளை உணர்த்தி, அவருடைய பாடுகளில் திருச்சபையின் ஒவ்வொரு அங்கமும் பங்குபெற வேண்டிய அவசியத்தையும் நமது மீட்பரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து சென்ற பாதையே நம்முடைய பாதையும் வழியுமாக இருக்க வேண்டும் என்பதையும் காண்பிக்கிறது. அந்தப் பாடுகளினால் அவர் பெற்ற உன்னத மகிமையும் இதனால் நமக்குக் காண்பிக்கப் படுகிறது. "தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படியாகும்" என்று காண்பிக்கப்படுகிறோம். *(ரோம 8:17)* இந்த எல்லா சத்தியத்துக்கும் எல்லோருக்கும் பிதாவாகிய யேகோவா தேவனே ஆசான். எனவே இந்த சுவிசேஷ யுகத்திலே நாம் பெற்றுக் கொள்கிற யாவையும் அவரிடத்தி-ருந்து புறப்பட்டவையே. நன்மையான எந்த ஈவும் பரிபூரணமான எந்தக் கொடையும் அவர் மூலமாகவே வருகின்றது. கடந்த கால நிழலான போதனைகள் மூலமாகவும் தீர்க்கதரிசனத்தின் மூலமாக அனுப்பப்பட்டவைகள் ஆவியினால் ஏவப்பட்ட நமது ஆண்டவரின் வசனத்தின் மூலமாகவும் அப்போஸ்தலரின் வார்த்தைகள் மூலமாகவும் நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. நமது இருதயங்களில் பரிசுத்த ஆவியைப் பெற்று பிதாவின் வார்த்தைகளுக்கும் திட்டத்திற்கும் இசைவாக நடப்போமானால், தேவன் அவர்களுக்கென்று வைத்திருக்கிறவைகளை நம்மால் மதிக்க முடியும், அவரை நேசிக்க முடியும் இத்தகைய வகுப்பார் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்பவர்களாய் இருப்பார்.

## "என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன்"

*- யோவான் 14:26 -*

நாம் ஏற்கனவே பொல்லாத ஆவிக்கும், நல்ல ஆவிக்கும் பொருந்துகிற சொல்லாகிய "கோஸ்ட்" (ghost) என்கிற ஆங்கிலப் பதம் தப்பறைகளுக்கெல்லாம் காரணமாயிற்று என்பதையும், பிதாவாகிய தேவனுடைய வல்லமையே பரிசுத்த ஆவி என்பதையும்,

அது ஒரு தனி ஆளல்ல என்பதையும் வெகு விளக்கமாகக் கூறியிருக்கிறோம். இந்த பரிசுத்த ஆவி பிதாவின் ஆதிக்கத்தில் இருக்கிற வல்லமையே தவிர, அது மகிமையிலும் வல்லமையிலும் பிதாவுக்கிணையான ஒரு மூன்றாவது ஆள் அல்ல. ஆனால் இது மூன்றாவது ஆள் என்று மனிதர்களுடைய கற்பனையாக விசுவாசப் பிரமாணத்தில் நீண்டகாலமாகப் புகுத்தப்பட்டுள்ள தப்பறையேயன்றி வேறல்ல. நம்முடைய பலம், வல்லமை யாவும் நம்முடைய வசம் இருப்பதுபோல, முழு தேவ வல்லமையும் பிதாவாகிய தேவனுடைய வசத்திலே உள்ளது. எனவே தான் பிதா, "நான் என் ஆவியை அனுப்புவேன்" என்று சொல்லக் காரணமாயிற்று. அல்லது தீர்க்கதரிசியின் கீழ்க்காணும் வசனத்தை சிந்திப்பது நல்லது. "நான் என் ஆவியை உன்னில் ஊற்றுவேன்." மேலும் ஒரு ஊழியக்காரனை எஜமான் தன் பேரில் அனுப்புவதுபோல, இந்த பரிசுத்த ஆவியை இயேசுவின் நாமத்தில் பிதாவானவர் அனுப்பினார் என்று வெளியரங்கமாக வேதம் தெரிவிக்கின்றது. இவ்விடத்தில்தான் தப்பறையான சித்தாந்தமாகிய கனத்திலும், வல்லமையிலும், மகிமையிலும் சமமான மூன்று கடவுளர்கள் கொள்கை திருத்துவம் என்ற பெயரில் திரித்துரைக்கப்பட்டது. இந்த வசனத்திலோ பிதாவின் மேன்மை விசேஷமாகக் கூறப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவி என்பது பிதாவின் ஆவி, வல்லமை, ஆதிக்கம் ஆகும். இவ்வல்லமை நமது மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தேவைப்படும் சமயத்தில் அனுப்பப்படுகிறது. ஏன் இயேசுவின் நாமத்தில் கொடுக்கப்பட வேண்டும்? ஏனெனில் பாவிகள் அனைவரையும் தேவனுக்கு முன்பாக ஒப்புரவாக்கி, மீட்டு மறுசீரமைக்கும் முழுப் பொறுப்பும் குமாரனிடமே ஒப்படைக்கப்பட்டது. இப்பணியில் உதவவே பிதாவாகிய தேவனின் வழியாக குமாரனுக்கு பரிசுத்த ஆவி வழங்கப்படுகிறது. அந்த ஆவியினாலே குமாரன் தன்னுடைய விலைமதிக்க முடியாத இரத்தத்தினால் பெற்றுக் கொண்ட மீட்பின் ஆசீர்வாதங்களை அனைத்துலக மக்களுக்கும் வழங்குகின்றார்.

இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று, தேவனோடு உடன்படிக்கை செய்தபோது, பிதாவின் ஆவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது இறங்கியது. இது உண்மையாகவே அவருக்கு ஆசீர்வாதமாகவும், தேற்றரவாகவும் இருந்தது. ஆனாலும் அவர்

*தெய்வீகத் திட்டத்தினை நிறைவேற்ற இந்த உலகத்துக்குரிய நோக்கம், நம்பிக்கை எல்லாவற்றையுமே முழுமையாக தியாகம் செய்ய வேண்டியிருந்தது. நமது கர்த்தர் சுயசிந்தனை, சுயநோக்கம், சுயநலம் உள்ளவராக வேறு நோக்கத்தில் பரிசுத்த ஆவியின் உதவியை நாடியிருந்தால், அது தேற்றரவு தருவதற்குப் பதிலாக அமைதியின்மையை உண்டு பண்ணியிருக்கும்; அவரது இருதயம் அமைதியை இழந்து கலவர நிலமைக்கும், அதிருப்தி நிலைமைக்கும் ஆளாக்கியிருக்கும். தேவனுடைய ஜனங்களுக்கும் அவ்வாறேயாகும். தேவ சிந்தையில் இருக்க வேண்டிய மனிதன் அதைவிட்டு விட்டு சுபாவ சிந்தையில் நடந்தால், அவனுடைய சந்தோஷம் நிம்மதி பறிபோய்விடும். ஏனெனில் பரிசுத்த ஆவி, பரிசுத்த சிந்தை, பரிசுத்த மனம் இதனோடு இவனுடைய சுபாவம் ஒத்துப் போகாமல், முரண்பாடானதால், கண்டிப்புக்கு ஆளாகிறான். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளாக புதிய சிருஷ்டியாக இருப்பவன், தன்னுடைய சுய சித்தத்தைக் கொன்று பிதாவின் சித்தம் என்னவென்று தேடி அதன்படி நடப்பவனாக இருப்பான். அவன் வேதவாக்கியங்களின்படி பிதாவின் சித்தத்தையும், திட்டத்தையும் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பதால், அது இன்னல்கள், வீண்பழி சுமத்தப்படும் போதும் உண்மையில் ஆறுதல் அளிப்பதாகவும், சமாதானம், சந்தோஷம், மனநிறைவு தருவதாகவும் இருக்கின்றது. இந்த சிந்தனைக்கு இசைவாக, அப்போஸ்தலரின் சத்திய வாக்கு மேலும் உறுதிப்படுத்துகிறது. சத்திய வசனத்தின்படியே பரிசுத்த ஆவியைப் பெற்று தெய்வ சித்தத்தின் மேன்மையை உணரும்போது ஆறுதலும் தேறுதலும் அடைவார்கள். அப்போஸ்தலர் கூறுகிறதாவது:*

*"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது." (ரோம. 15:4)*

## "*பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்*"

*"அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்*

தொடங்கினார்கள்." *(அப். 2:4)*

இந்த வேதவசனம் பரிசுத்த ஆவியின் இரண்டு விதமான செயல்பாட்டைக் காண்பிக்கின்றது. (1) அப்போஸ்தலர்களிடம் காணப்பட்ட செயல்பாடுகள், பிதாவின் குணம், மனம், நோக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது. ஏனெனில் அவர்கள் தேவ ஆவியை சுவீகரித்துக் கொண்டனர்; பிதாவாகிய தேவனுடைய நோக்கத்திற்கும், சித்தத்திற்கும், மகிமையடைந்த கிறிஸ்துவின் நோக்கத்திற்கும் சிந்தைக்கும் மிக நெருக்கமாக ஐக்கியப்பட்டிருந்தார்கள். (2) உலகிற்கு சாட்சியாக அற்புத வரங்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால், வல்லமையினால், அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப்பட்டது. அதனால் அவர்கள் திருச்சபையை ஸ்தாபிக்கவும் ஏதுவாயிருந்தது. தேவன் ஒரு நபராக ஒரு மனிதனுக்குள் நுழைவது என்று எண்ணுவது காரணகாரியத்திற்கு மாறானது. அதுவும் தேவன் நூறு பேருக்குள்ளும் ஆயிரம் பேருக்குள்ளும், பதினாயிரம் பேருக்குள்ளும் புகுந்து கொள்வது என்பது பகுத்தறிவுக்கு முற்றிலும் ஒவ்வாத கற்பனை. உன்னத மானவரின் பலம், வல்லமை, யேகோவா தேவனின் ஆதிக்கம் நூறு பேருக்குள்ளும், ஆயிரம் பேருக்குள்ளும், பதினாயிரம் பேருக்குள்ளும் செல்லமுடியும். இது யேகோவா தேவன் அண்ட சராசர சிங்காசனத்தில் வீற்றிருப்பதை தடைசெய்யாது.

## பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்யுரைத்தல்

"பேதுரு அவனை நோக்கி, அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பியதென்ன?" - *அப் 5:3*

தேவன் தம்முடைய ஜனங்களை தம்முடைய ஆவியினால் நிரப்புகிறது போல, சாத்தான் தன்னுடைய வஞ்சகப் பொய்யை அனனியாவின் இருதயத்தில் நிரப்பினான். சாத்தானுடைய ஆவி சுயநலம் நிறைந்ததும், வஞ்சகம் நிறைந்ததுமாய் இருப்பதால் தன்னுடைய காரியத்தினை நிறைவேற்ற எந்த வஞ்சனையும் செய்யத் தயங்காது. அப்.பேதுரு ஆவியை பகுத்தறியும் விசேஷ வரம் பெற்றிருந்ததினாலே, அனனியா, சப்பீரா ஆகியோரின் இருதயத்தின் யோசனையையும், வஞ்சனையையும் நன்கு அறிந்திருந்தார்.

அனனியாவும் சப்பீராளும் உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசியதைக் கண்டித்தார். இந்த சம்பவத்தில் அப்போஸ்தலனாகிய பேதுருவின் கண்டிப்பான வார்த்தைகளை உன்னிப்பாக நாம் கவனித்தால், "பரிசுத்த ஆவி," "தேவன்" ஆகிய இச்சொற்றொடர்களை மாற்றி மாற்றி உபயோகப் படுத்தியிருக்கிறார் என்பதை அப்.5:3,4 வசனங்களில் திட்டமாக, தெளிவாக வாசித்து புரிந்து கொள்ளலாம். மூன்றாம் வசனத்தில் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னாய் என்றும் 4ம் வசனத்தில் தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றும் அப்போஸ்தலர் கூறுகிற கருத்து ஒன்றே. தேவனுடைய பரிசுத்த ஆவி அப்போஸ்தலர் மூலமாக செயல்பட்ட போது, தேவனுக்கு பதிலாக தேவ ஆவி தேவனுடைய பிரதிநிதியாக செயல்பட்டது. அனனியாவும் சப்பீராளும் பேதுருவினிடத்தில் பொய் சொல்லியிருந்தாலும், அது தேவனுடைய பிரதிநிதியாகிய பரிசுத்த ஆவிக்கெதிராக சொல்லப்பட்ட பொய் ஆகிறது. பரிசுத்த ஆவியாகிய தேவப் பிரதிநிதியிடம் பொய் சொன்னது, தேவனிடமே பொய் சொன்னதற்கொப்பாகிறது.

## பரிசுத்த ஆவியை சோதித்தல்

"பேதுரு அவளை நோக்கி, கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன ? அப்.5:9

முன்னர் சொல்லப்பட்ட இடத்தில் ஆவி என்பதை எப்படிப் புரிந்து கொண்டோமோ, அவ்விதமே இவ்விடத்திலும் புரிந்து கொள்ள வேண்டும். இங்கே தேவனுடைய ஆவி என்பதற்கு பதிலாக, கர்த்தருடைய ஆவி என்று வருவதினால் அது கிறிஸ்துவையே குறிக்கிறது. இதனுடைய காரண காரியத்தை நாம் உடனடியாக புரிந்து கொள்ளலாம். பிதாவின் ஆவியே பரிசுத்த ஆவி, அது திருச்சபையில் விசேஷ வண்ணமாக செயல்பட்டது. திருச்சபைக்கு ஆண்டவராகவும், தலையாகவும் தேவனுடைய பிரதிநிதியாகவும் இருப்பவர் கிறிஸ்துவே. கிறிஸ்து தம்முடைய சரீரமாகிய திருச்சபையை தம்முடைய (சிந்தை) ஆவியைக் கொண்டு வழிநடத்துகிறார். இதில் கிறிஸ்துவினுடைய (சிந்தை) ஆவியே அவருடைய அப்போஸ்தலர்களை வழிநடத்துகிறது.

## பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம்

*"எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை." - மத் 12:32*

இந்தப் பகுதியிலிருந்து, பரிசுத்த ஆவி ஒரு தனிப்பட்ட கடவுள் என்றும், பிதாவாகிய தேவன், குமாரனாகிய கிறிஸ்துவோடு இவரும் ஒரு தேவன் என்றும் கருதுகின்றனர். இவையெல்லாவற்றிற்கும் மேலாக இவ்வசனத்திலிருந்து பரிசுத்த ஆவி பிதாவாகிய தேவனையும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவையும் விட அதிக முக்கியத்துவத்தையும், கனத்தையும் பெறுகிறார் என்று நினைக்கிறார்கள். நாம் ஏற்கனவே கண்டபடி, பிதாவாகிய ஒரே தேவனைத் தவிர வேறே கடவுளைக் குறித்து வேதம் எங்கேயும் குறிப்பிடுவதில்லை. எல்லாவற்றிலும் உன்னதமான அவரே சகலத்தையும் படைத்தவர். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரைக் கொண்டு இவற்றைப் படைத்தார். அவர் பிதாவுக்கடுத்த உன்னத நிலையில், தேவ வல்லமையினாலே உயர்த்தப்பட்டார். பரிசுத்த ஆவி என்பது பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிற வல்லமை ஆகும். இது கிறிஸ்துவைக் கொண்டு செயல்படுவதாகும். ஆகவே பிதாவைக்காட்டிலும், குமாரனாகிய கிறிஸ்துவைக்காட்டிலும் இது ஒரு தனிப்பட்ட பெரிய நபரல்ல. நாம் எற்கனவே கண்டபடி பரிசுத்த ஆவியை எவ்விதத்திலும் ஆள் தத்துவத்தில் சொல்ல முடியாது. இது பிதாவினுடைய ஆவி, கர்த்தருடைய ஆவி, வல்லமை, ஆதிக்கம் ஆகியவைகளையே குறிக்குமேயல்லாமல், தனிப்பட்ட ஆளைக் குறிக்காது. பரிசுத்த ஆவியானவர் என்று குறிப்பிட்டிருந்தாலும் கூட, தேவனுடைய ஞானம், வல்லமை, அன்பு இவற்றையே குறிக்குமேயல்லாமல் ஒரு தனிப்பட்ட நபரைக் குறிக்காது. இந்த வேதப்பகுதி எதைக் குறித்துக் காண்பிக்கிறது என்பதை ஆராய்வோம்.

இதிலிருந்து நாம் இயேசு கிறிஸ்து, பிதாவிடமிருந்து பெற்றுக் கொண்ட தெய்வீக வல்லமையாகிய பரிசுத்த ஆவியை உபயோகப்படுத்தி ஒரு பிசாசைத் துரத்தினார் என்பதைப் காண்கிறோம். அற்புதங்களைக் கண்ட பரிசேயர்கள் அதை மறுக்கமுடியவில்லை. எனவே அவர்கள் இது சாத்தானின்

வல்லமையினால் செய்யப்படுகிறது என்று கூறினர். இது என்னுடைய பலத்தினாலும் அல்ல, சாத்தானின் பலத்தினாலுமல்ல, "தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்த முடிந்தது" என்று பதிலுரைத்தார். நல்ல காரியம் செய்ததைப் பாராட்ட மனதில்லாமல், கெட்ட நோக்கங்களைக் கற்பித்து, தீமையான காரணத்தைச் சொல்லி அந்த அற்புதத்தையே மறுதலித்ததினால், இயேசுகிறிஸ்து பரிசேயர்களை மிகவும் கடிந்து கொண்டார். இந்த அற்புதத்தைச் செய்ய பேராசையோ, சுயநலமோ, பெருமையோ காரணமாய் இருக்கவில்லை என்பதை அந்த பரிசேயர் அறியும்படி இயேசு கூறினார். விரியன் பாம்புக் குட்டிகளே! என்று அவர்களை கடிந்து கொண்டார். அவர்கள் தங்கள் பாரம்பரியத்தின் மேல் அஸ்திபாரமிட்டு, சிறிய அற்பமான வெளியரங்கமாய் எல்லோருக்கும் தெரிகின்ற காரியங்களைக்கூட காணமுடியாதபடி அவர்களுடைய மனக் கண்கள் குருடாக்கப்பட்டிருந்தது. அந்த சம்பவத்திலிருந்து, ஆவியினால் பாதிக்கப்பட்டவனுக்கு அசுத்த ஆவி பிடித்திருந்தது என்பது எதார்த்தமான சாட்சியாக விளங்குகிறது. ஒரு கெட்ட அசுத்த ஆவி இன்னொரு அசுத்த ஆவியை விரட்டும் என்பது ஏற்க முடியாதது. ஜனங்களுக்குப் போதிக்கிற போதகர்களாகிய இவர்கள், எந்தக் காரணமும் இல்லாமல், சாத்தானால் இந்த குணாதிசயம் நிகழ்ந்தது என்று கூறியதால் அவர்கள் மன்னிக்க முடியாதவர்களாய் இருந்தனர்.

அவர்கள் வேண்டுமென்றே பிதாவாகிய தேவனையோ, தன்னைக் குறித்தோ தேவதூஷணம் சொல்லாமல், தான் பெற்றிருக்கிற பரிசுத்த ஆவியைக் குறித்தே தேவ தூஷணம் சொன்னார்கள் என்று நமது கர்த்தர் மேலும் சுட்டிக் காட்டினார். காணக்கூடாத தேவனைப் பற்றி தவறாகப் புரிந்து கொண்டது மிக இலேசான குற்றமாகக் கருதப்பட்டிருக்கலாம். அதனாலே இயேசுகிறிஸ்துவினுடைய குறிக்கோளைத் தவறாகப் புரிந்து கொண்டு, ஏதோ அவர் தனது இராஜ்யத்தை ஸ்தாபிக்க, தன்னைத் தான் உயர்த்த, தனக்கொரு சிங்காசனத்தை அபகரிக்க இப்படிச் செய்தார் என்று சொல்வது கூட அவர்களுடைய தற்பெருமை, பேராசை எண்ணத்தினுடைய விளைவால் எழுந்தது என்பதால் அது பெரும்பழியல்ல. ஆனால் அவர்களுடைய செயல்பாடே மிக

மோசமானதாய் இருந்தது. அவர்களோடிருந்த ஒருவன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தபோது, தெய்வீக வல்லமையினாலே அற்புதமாக குணமடைந்ததை சாட்சியாகக் கண்டிருந்தும், தேவ வல்லமைக்கெதிராக தேவதூஷணம் சொன்னது மிகப்பெரிய குற்றமாகும். நல்ல ஒரு சேவையை தீமையாக அவர்கள் எடுத்துக் காண்பித்தது, அவர்கள் இருதயத்திலுள்ள விரோதத்தையும் குரோதத்தையும் காண்பிக்கிறது. அவர்கள் செய்த மற்ற அநேக தவறுகளைப் பார்க்கிலும் பரிசுத்த ஆவியின் வல்லமையையே பழி சொன்னதுதான் மன்னிக்க முடியாத மிகப்பெரிய தவறாகும்.

இயேசுவையும் அவருடைய வார்த்தையையும், அவருடைய செயல்பாடுகளையும், அறியாமையினாலும், தங்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டிருந்ததாலும் அவர்கள் தன்னைப் பற்றி தவறாக விளக்கிக் காண்பித்தார்கள் என்பதை அவர்களுக்கு சுட்டிக் காண்பித்தார். இதுபோலவே தேவனுடைய அநேக செயல்பாடுகளை தவறாக விளக்கியிருக்க வேண்டும்; தீமையாக (தவறாக) பேசியிருக்க வேண்டும். அவர்கள் சாத்தானின் வல்லமைக்கு எதிராக தேவனுடைய வல்லமையை கண்ணாரக் கண்டு உணர்த்திருந்தும், பரிசுத்த ஆவியின் செயல்பாட்டை தீய ஆவியினால் செய்ததே என்று கூறத் துணிந்தது அவர்கள் இருதயத்தில் அசுத்த ஆவி குடி கொண்டிருப்பதைக் காண்பித்தது. மனிதர்களுக்கு அவர்கள் அறியாமையினால் பாவம் செய்தால் அவர்களுக்கு அவை மன்னிக்கப்படும். முதல் மனிதனுடைய வீழ்ச்சியினாலே இந்த அறியாமை தொடர்ந்து வருகிறது. இந்த சாபத்திற்கும், பாவத்திற்கும் உள்ளான எல்லாருக்காகவும் ஈட்டுக் கிரயம் கொடுக்கப்பட்டது. ஆனால் வெளியரங்கமாக தெய்வீக கிருபை விளங்குவதினால், அறிந்தே பாவங்களை செய்து, பின்னர் அது பாரம்பரியமான மாம்ச பெலவீனம் என்று சொல்வது தவறானது. வேண்டுமென்றே இருதயத்தின் தீய குணத்தினாலே செய்யப்பட்ட பாவங்கள் மன்னிக்கவே முடியாத பாவங்கள் என்று தீர்க்கப்படும்.

வேண்டுமென்றே மனதாரச் செய்யும் பாவங்கள் ஒருபோதும் இந்த யுகத்திலும், வரக்கூடிய யுகத்திலும் மன்னிக்கக் கூடாதவைகள். எந்த ஒரு மனிதனையும் வற்புறுத்தி தன்னோடு இசைவாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய நோக்கமல்ல. அவர்களை

பாவத்திலிருந்து மீட்ட பின்னர், சத்திய அறிவையும், தேவனுடைய நன்மையும் சாட்சியாகப் பெறும் வாய்ப்பை அவரது பரிசுத்த ஆவியின் செயல்பாடு மூலமாக ஏற்படுத்துகிறார். யார் இந்த தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவில்லாமல் மனப்பூர்வமாக எதிராய் நடக்கிறார்களோ, அவர்கள் வேண்டுமென்றே பாவம் செய்கிறவர்களாகவும், அதே நேரத்தில் தேவனுடைய வல்லமைக்கு, புத்திக் கூர்மையுள்ள எதிராளியாயும் இருக்கிறார்கள் என்பது நிரூபணமாகின்றது. இப்படிப்பட்டவர்களுக்கு திரும்பவும் ஒரு கிருபையின் ஏற்பாட்டை தேவன் செய்யவில்லை.

பரிசேயர்களும் சதுசேயர்களும் தேவனுடைய பரிசுத்த வல்லமையைக் குறித்த போதுமான, தெளிவான அறிவைப் பெற்றிருந்தார்களா என்பதை நாம் அறியோம். பரிசுத்த ஆவியை அசுத்த ஆவி என்று வீண்பழி சொன்னால் அது இரண்டாம் மரணத்திற்குக் கொண்டு செல்லும் என்பதை அறியாதிருந்தார்களா என்பதை நாம் அறியோம். நாம் அவர்கள் இருதயத்தின் யோசனையை அறிய முடியாதவர்களாதலால், அவர்களுக்கு எந்தவித நியாயத் தீர்ப்பும் நம்மால் கூற முடியாது. இது சம்பந்தமாக கர்த்தர் நமக்கு எந்த தெளிவான அறிக்கையையும் வேதத்தின் வாயிலாகக் கூறவில்லை. அவர்கள் அந்தத் தெளிவான வெளிச்சத்திற்கெதிரான பாவம் செய்தவர்களானால், தேவ ஆவிக்கு விரோதமாக முழு மனதோடு பாவம் செய்தவர்களாகக் கருதப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எந்த எதிர்கால நம்பிக்கையும் கிடையாது. தேவனுடைய கிருபையை மனதார மறுத்த-த்ததினால் அவர்கள் இரண்டாம் மரணத்தில் நிச்சயமாக அழிக்கப்படுவார்கள் என்பது உறுதி. ஆனால் அவர்கள் போதுமான வெளிச்சமோ, அறிவோ கிடைக்கப்பெறாதிருந்தார்களேயானால், தேவ ஆவியோடு போதுமான தொடர்பு கொண்டிராதிருந்தார்களானால், அவர்களை இரண்டாம் மரணத்திற்கு உடனடியாக தீர்ப்பளிக்காமல், முழு வேதனைக்கு உட்படுத்தி தீர்ப்பளிக்காமல், அதில் அவர்கள் மனம் மாற ஒரு வாய்ப்பு அளிக்கப்படும்.

பரிசுத்த ஆவிக்கு விரோதமாகவும், தெய்வீக வல்லமை பற்றிய அறிவுக்கும், பரிசுத்த ஆவியின் வெளிச்சத்திற்கும் விரோதமாக செய்யப்படும் ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்படாது.

அவர்களுக்கு ஓரளவு வெளிச்சம் கிடைத்திருந்தும், வேண்டுமென்றே பாவம் செய்தால், "அடியும்" தண்டனையும் தவிர்க்க முடியாது. தேவனுடைய ஆவிபெற்று ஏராளமான வெளிச்சம் பெற்றிருந்தும், வேண்டுமென்றே தவறு செய்வார்களேயானால் அவர்களுக்கு அதிக "அடிகளும்," தண்டனைகளும் உறுதி. தவறு எது, சரி எது என்று பகுத்தறியக்கூடிய முழு அறிவைப் பெற்றிருந்தும் பரிசுத்த ஆவிக்கெதிராக மீறுதல் செய்பவர்களுக்கு நித்திய அழிவாகிய இரண்டாம் மரணமே முடிவு. அது அவர்கள் பாவத்தின் சம்பளமாகும். முதல் மனிதனாலே அறியாமையினாலே விளைந்த பாவத்தின் பலன்கள், ஈட்டுக்கிரயம் செய்யப்பட்ட போதே மன்னிக்கப்பட்டு விட்டது. ஆனால் அறிந்தே செய்யும் தனிப்பட்ட பாவங்களுக்கு மன்னிப்பே கிடையாது. பல பாவங்கள் ஓரளவு வேண்டுமென்றேயும், ஓரளவு அறியாமையும் பலவீனமும் கலந்தும் செய்யப்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எந்தளவு அறியாமையும் பலவீனங்களும் இருக்கிறதோ, அந்தளவு இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியை ஏற்று விசுவாசிப்பதினால், கிறிஸ்து இயேசுவின் மூலம் மன்னிப்பைப் பெற்று தேவ கிருபையைப் பெறலாம். மனப்பூர்வமாக அறிந்து செய்கிற எந்தப் பாவமும் மன்னிக்கத் தக்கதல்ல. அப்படிப்பட்ட பாவங்களுக்கு "அடி," தண்டனை ஆகியவற்றின் மூலமாக பரிகாரம் செய்தாக வேண்டும். செய்த பாவத்தில் மன்னிக்கத்தக்க குற்றங்கள் இருந்தால் அவற்றை மன்னிக்கலாம். ஆனால் மன்னிக்கவே முடியாத அம்சங்கள் இருந்தால் அதற்கு முடிவு மரணமே.

அறிந்தே செய்கிற பாவங்களெல்லாம் வெளிச்சத்திற்கு விரோதமாக, பரிசுத்த ஆவிக்கு விரோதமாக, சத்திய ஆவிக்கு விரோதமாக செய்யப்படும் பாவம். இந்தப் பாவங்களுக்கு எக்காலத்திலும் மன்னிப்பு இல்லை.

## "ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பி-ப்புடனே சொன்னார்"

- *அப் 8:29* -

இந்த வார்த்தைகளிலிருந்து மூன்றாவதொரு கடவுள் இருக்கிறார் என்று எண்ணுவதற்கிடமில்லை. இதற்கு மாறாக, என்ன செய்யப்பட வேண்டுமோ அது செய்யப்பட்டது. வேதாகமத்தின்

*இதர பகுதிகள் இதற்கிசைவாக இருக்கின்றன. கர்த்தர் தம்முடைய ஆவியின் வல்லமையினாலே, ஆதிக்கத்தினாலே, பிலிப்புக்கு வழிகாட்டி, இரதத்தில் போய் சேரும்படி கூறினார். பிலிப்பு எப்படி பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டார் என்பது பற்றி நமக்கு அறிவுறுத்தப்படவில்லை. எனவே அது எவ்வாறு நடந்திருக்கும் என்று ஆராய்வதோ அல்லது கற்பனை செய்து பார்ப்பதோ அவசியமுமல்ல, ஞானமுள்ள செயலுமல்ல. தேவன் யாராவதொருவரிடம் தம்முடைய ஆலோசனைகளைக் குறித்து போதிக்க தொடர்பு கொள்ள வேண்டுமானால், அவருக்கு ஏராளமான எல்லையில்லாத வழிமுறைகள் உண்டு. அப்.8:39 ஐ பார்க்கவும்.*

**"ஆவியானவர் : இதோ மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள்" என்றார்.**

*- அப். 10:19 -*

*முன்னர் சொன்ன வசனத்திற்கு என்ன மறுப்புச் சொன்னோமோ அதே பதில் இதற்கும் பொருந்தும். தேவ ஆவி, வல்லமை பேதுருவிடம் எப்படி ஆதிக்கம் செலுத்திப் பேசியது என்பது நமக்கு அவசியமல்ல. பேதுருவை பரிசுத்த ஆவி அல்லது தேவ வல்லமை வழி நடத்தியது என்பதை அறிவது நமக்குப் போதுமானது. தொடர்ந்து வாசிக்கும்போது அந்த தேவ வல்லமையினால் வழிநடத்தப்பட்ட பேதுரு, சொல்லப்பட்டபடியே செய்ததிலிருந்து நமக்கு அந்த தேவ வல்லமையின் வழிகாட்டுதலை புரிந்து கொள்ள முடிகின்றது.*

**"பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்"**

*- அப்.13:2 -*

*ஒரு சில இடங்களில் பரிசுத்த ஆவி ஆணாக சொல்லப் பட்டிருப்பதைப் போன்று இங்கேயும் ஆண் பாலில் சொல்லப் பட்டிருக்கிறது. தேவனைக் குறிக்கும் அநேக இடங்களிலெல்லாம் ஆண் பாலாகத்தான் உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. இந்த இடத்தில் ஆண் பாலில் சொல்லுவதில் தவறு இல்லை. ஆனால் இங்கே யேகோவாவின் வல்லமையைக் குறித்துத் தான், அவர் கொடுத்த*

செய்தியைக் குறித்துத்தான் கூறப்படுகிறது. பரிசுத்தஆவி எப்படி பவுலையும் பர்னபாவையும் பிரிந்து போகும்படி கூறினார் அல்லது எப்படி பிரிந்து போகும்படி செய்தார் என்பது நாம் அறியோம். எனினும் கர்த்தருடைய அர்ப்பணம் செய்யப்பட்ட பிள்ளைகள் சத்தியத்திற்கு ஊழியர்களாக இருக்கும் பொருட்டு அவருடைய ஆவியினால் அழைக்கப்பட்டார்கள் என்பதையும், அவர்களுடைய தகுதிக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்றாற்போல் அவர்கள் உண்மையுள்ளவர்களாகவும் உற்சாகமுள்ள ஊழியர்களாகவும் இருக்க வேண்டும் என்பதையும் நாம் அறிவோம். பொதுவான அழைப்பிலே எல்லாருக்கும் இதே போன்ற அறிவுரைகளை பரிசுத்தஆவி எல்லாருக்கும் கூறுகின்றது. அந்த ஆவியின் வார்த்தை, "ஏன் இங்கே சோம்பலாக இருக்கிறீர்கள்? நீங்களும் திராட்சைத் தோட்டத்திற்கு போங்கள்" என்றது. சத்தியப் பணிக்காக விசேஷ தகுதியும், திறமையும் பெற்றவர்களுக்கு கர்த்தர் விசேஷித்த அழைப்பைத் தருகிறார் என்பது உணரப்படவேண்டும். பவுலும் பர்னபாவும் எல்லாரையும்போல பொதுவான தகுதியையும் திறமையையும் பெற்றிருந்தாலும், அதற்கு மேலும் அவர்களுக்குச் சிறப்புத் தகுதியின் காரணத்தினாலேயே அவர்கள் தனித்தனியே பிரிந்து பிரச்சாரம் செய்ய அனுப்பப்பட்டனர். சிறப்பாக பரிசுத்தஆவியினால் கொடுக்கப்படும் விசேஷ தகுதி திறமைகளில் ஒன்றாகிய தீர்க்கதரிசன வரத்தைக் கொடுப்பது அக்கால திருச்சபையில் நடைமுறை பழக்கமாயிருந்தது. பவுல், பர்னபாவைப்பற்றி கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அறிய அப்.13:1ஐ வாசிப்போம். "அந்தியோகியா பட்டிணத்திலுள்ள சபையிலே ............. தீர்க்க தரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.

தன்னுடைய ஊழியத்திற்கான அழைப்பைப் பற்றி காலத்தியர் சபைக்கு (கலாத் 1:1) பவுல் கூறிய வார்த்தைகளை நினைவு கூறுவோம். இந்த வசனத்தின்படி பவுல் தனக்கு பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் அழைப்பு வந்ததாக கூறியிருக்கிறார். மூன்றாம் ஆளாக பரிசுத்தஆவியை பவுல் ஏற்றுக் கொண்டிருந்தால் இங்கே அதைக் குறிப்பிட்டு இருப்பார் அல்லவா? "மனுஷராலுமல்ல, மனுஷர் மூலமாயுமல்ல, இயேசு

கிறிஸ்துவினாலும் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நான்" என்று எழுதினார். பரிசுத்தஆவி ஒரு ஆளாக இருந்து அவர் கடவுளாக இருப்பாராகில், இம்மாதிரியான ஊழியக்காரர்களை ஏற்படுத்துவது பரிசுத்தஆவியின் வேலை (சில பொதுவான சபைகளின் கருத்தாகும்) என்பது உண்மையாயிருந்தால், பரிசுத்தஆவியை குறிப்பிடாமல் ஒதுக்குவது அவசியமற்றதும் காரணமற்றதுமாயிருந்திருக்கும். ஆனால் நாம் பரிசுத்த ஆவியைப் பற்றி சரியான கருத்தில் அதாவது அது ஆவி, சக்தி, செல்வாக்கு அல்லது பிதாவுடைய அதிகாரம், குமாரனுடைய அதிகாரம், அல்லது இருவருடைய அதிகாரம் (ஏனெனில் அவர்களது நோக்கம் ஒன்றே) என்ற கருத்தில் இருப்பதால் இசைவாகவும் நியாயத்திற்குட்பட்டதுமாய் இருக்கிறது.

## "பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது"

*- அப்.15:29 -*

பிறவியில் யூதர்கள் அல்லாதவர்களுக்கு நியாயப் பிரமாணம் பொருந்துமா? என்பது போன்ற வினாக்களுக்கு விடைகாண அப்போஸ்தலர்கள் அந்தியோகியாவில் விசேஷக் கூட்டம் ஒன்றை கூட்டியிருந்தனர். அந்தியோகியாவில் கூடி அவர்கள் எடுத்துக் கொண்ட தீர்மானமோ, தீர்ப்போ அப்போஸ்தலர்களுடையது மட்டுமல்ல, இந்த தீர்ப்பு கர்த்தருடைய சிந்தையை பரிசுத்தஆவியினால் பெற்று வெளியிட்டதினால், அது கர்த்தருடைய சிந்தை, கர்த்தருடைய தீர்ப்பே ஆகும்.

தேவசிந்தை, தேவ சித்தம் ஆகியவைகளை எப்படி அறிந்து கொள்வது பற்றி ஆலோசனையாக யாக்கோபு அப்போஸ்தலர் நடபடிகள் 15:13-18 லில் விளக்கமாக கூறுகிறபடி எந்தவொரு தீர்மானமும், தீர்க்கதரிசனங்களுக்கும் வேதத்திற்கும் ஒத்திருக்க வேண்டும். அப்படியிருந்தால் அதை தேவசித்தம் என்று தீர்மானிக்கலாம். இதை தேவனுடைய திருவுளப்படி ஆராய்வதே அவருடைய சித்தத்தை அறிவதாகும். தேவனுடைய காரண காரியத்துடன், புறஜாதியாரில் முதல்முதலாக மனமாற்றமடைந்த

கொர்நேலியுவிடம் பேதுருவைச் செல்லுமாறு அனுப்பியது பரிசுத்தஆவியின் வழிநடத்துதலே. இன்னமும் நிறைவேறாத தீர்க்க தரிசனத்தைக் குறித்து தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர் விவரித்துச் சொன்னபோது, அது வேத ஆவியால் வெளிப்படுத்தப்பட்ட தேவ சிந்தனை என்பதை அங்கிருந்த அனைவரும் உணர்ந்து ஏற்றுக் கொண்டனர்.

## ஆசியாவில் பிரசங்கம் பண்ண பரிசுத்தஆவியின் தடை

*- அப். 16:6 -*

பரிசுத்த ஆவி ஒரு ஆளாக இருந்து, அவர்களோடு பேசி தடை பண்ணினார் என்றெல்லாம் நினைக்கிறார்கள். இந்த வசனம் வெளிப்படுத்துகிற ஒரு தோரணை இவ்வாறு இருக்கக்கூடும் என்று பொதுவாக நினைக்கிறார்கள். ஆனால் வெகு நெருக்கமாக சந்தர்ப்ப சூழ்நிலையை வைத்து இதை ஆராய்ந்து பார்க்கும்போது, பரிசுத்த ஆவி ஒரு அள் அல்ல, நாம் ஏற்கனவே பார்த்தபடி அது தேவ வல்லமை என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம். யேகோவா தேவனின் பரிசுத்த வல்லமை, ஆதிக்கம் ஆகியவற்றினை இணைத்துக் காட்டுகிறதாக இவ்வசனம் அமைகிறது. அதுபோலவே நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியும், தேவனுடைய சித்தப்படி தேவனுக்கென்று உடன்படிக்கை செய்கிற யாவருக்கும் வழங்கப்படுகிறது. அப்போஸ்தலரும் அவருடைய நண்பர்களும் எந்த வகையில் ஊழியம் செய்வதற்காக அங்கு செல்ல தடை செய்யப்பட்டார்கள் என்று நாம் அறியோம். ஆனால் அவர்கள் எப்படியோ ஆசியாவுக்குள் செல்லமுடியாதபடி பாதகமான சூழ்நிலையால் தடுக்கப் பட்டனர். அவர்கள் எப்படி தடுக்கப்பட்டார்கள் என்பது முக்கியமல்ல; இதில் தெரிந்து கொள்ளும் பாடம் என்னவென்றால், தேவனே அவரது சொந்த வேலையை வழிநடத்துகிறார்; அப்போஸ்தலர்களது வழிநடத்துதலும் செயல்பாடும் தெய்வீக மேற்பார்வையிலேயாகும். அவர்கள் கர்த்தரின் ஆவியால் வழிநடத்தப்பட்டனர். அவரது காண முடியாத வல்லமையால் அவரது ஊழியக்காரர்களாக அவர்களை இயக்கினார்.

எந்த வகையில் பார்த்தாலும், தேவன் அவர்களது மனதில்

இந்த எண்ணத்தைத் தோற்றுவிப்பது மட்டுமல்லாமல் நடைமுறையிலும் தமது ஆவியைக் கொண்டு முழுமையாகச் செயல்படுத்துகிறார். பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் எப்படியிருக்கும் என்பதற்கு இந்த வசனமே விளக்கமாக அமைந்திருக்கிறது. அப்.பவுலுக்கு இரவில் ஒரு தரிசனம் கொடுக்கப்பட்டது. மக்கெதோனியாவைச் சேர்ந்த மனிதன் ஒருவன் அந்த தரிசனத்தில் காணப்பட்டான். மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த தரிசனத்தைக் கண்ட பிற்பாடு, கர்த்தர் மக்கெதோனியாவுக்குச் சென்று தங்கள் ஊழியத்தைச் செய்ய அழைக்கிறார் என்று நிச்சயித்துக் கொண்டனர். (அப்.16:9,10) தம்முடைய ஊழியக்காரர்களை அப்போஸ்தலர் காலத்தில் எவ்வாறு தேவன் வழிநடத்தினாரோ, அதேபோல இக்காலத்திலும் தம்முடைய ஆவியைக் கொண்டு போதித்து வழிநடத்துகிறார் என்பதில் பெரிய வேற்றுமை எதுவும் இல்லை. இப்படி நேரடியாக சொல்லாத, தனிப்பட்ட முறையில் செய்யச் சொல்லாமல் தேவனுடைய ஆவியின் பலத்தினாலோ ஆதிக்கத்தினாலோ, தூண்டுதலினாலோ என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யும்படி செய்கிறார். அப்.பேதுரு சிறையிலிருந்தபோது, ஒரு தூதனைக் கொண்டு நேரில் சொன்னது போல (அப்.5:19;12:7), அப்.பவுல் தமஸ்குவுக்கு செல்லும் வழியில் கர்த்தர் பவுலிடம் தனிப்பட்ட முறையில் பேசினது போல, (அப். 9:4;1 கொரி 15:8) இப்படி பரிசுத்த ஆவியின் மூலமாக இல்லாமல் கர்த்தரே நேரடியாகவோ, ஒரு தூதன் மூலமாகவோ செய்தியை தெரிவிக்கிறார்.

**"கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறார்"**

*- அப்.20:23 -*

இங்கே பரிசுத்த ஆவிக்கு ஆள்தத்துவம் உண்டு என்பதற்கு எந்தவித அவசியமும் இல்லை. அதற்கு நேர்மாறாக, தேவனுடைய சித்தத்தை, தேவ சிந்தையை தனக்கு எருசலேமில் கட்டுக்களும், உபத்திரவங்களும் காத்திருக்கிறது என்பதை பவுலுக்கு தமது ஆவியைக் கொண்டு உணர்த்தினார். இதுபோன்று, செசரியாவில்

நடந்த இன்னொரு சாட்சியத்தை கவனிக்கவும். அகபு என்னும் பெயர் கொண்ட தீர்க்கதரிசி சொன்ன தீர்க்க தரிசனத்தைப் பற்றி இவ்வாறு வேதம் கூறுகிறது.

"அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக் கொண்டு, இந்த கச்சையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டி, புறஜாதியார் கைகளில் ஒப்புக் கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்." *(அப்.21:11)*

பவுலின் மேல் பிரியமாய் இருந்த நண்பர்கள், இப்படியொரு ஆபத்துள்ள சூழ்நிலையில் எருசலேமுக்குச் செல்ல வேண்டாம் என்று வேண்டினர். ஆனால் பவுலோ, கர்த்தருடைய ஆவியின்படி, அவருடைய சித்தத்தின்படி அங்கு சென்றே தீருவேன் என்று உறுதியாக இருந்தார். கர்த்தருடைய திட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் கொஞ்சமும் மாற்ற மாட்டேன் என்று உறுதியாக இருந்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, எருசலேமிலே மரணமடையவும் நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்றார் (இவ்விடத்தில் பரிசுத்த ஆவியினிமித்தம் மரணமடைகிறேன் என்று சொல்லாமல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் மரிக்கத் தயார் என்று சொன்னதை கவனிக்கவும்).

அப்.பவுலுடைய நண்பர்கள் அவருடைய விவேகமான உறுதியை உணர்வுப்பூர்வமாக உணர்ந்ததால், "கர்த்தருடைய சித்தம் நிறைவேறட்டும்" என்றனர். இப்படியாக ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், பரிசுத்த ஆவியின் சாட்சியை ஆதிக்காலத் திருச்சபையார், இயேசுவின் சித்தமே, பிதாவின் சித்தம். இரண்டும் ஒன்றே என்று ஏற்றுக் கொண்டிருந்தனர். - *(அப். 21:10-14)*

## பரிசுத்த ஆவி சிலரை கண்காணிகளாக எற்படுத்துகிறார்

"ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையிருங்கள்." *(அப்.20:28)*

எபேசு சபையி-ருந்த மூப்பர்களுக்கு இந்த ஆலோசனை

வழங்கப்பட்டது. சத்தியத்திற்கு ஊழியம் செய்யும்படி அவர்களை யாரும் நியமிக்கவில்லை. தாங்களாகவே நியமித்துக் கொள்ளவுமில்லை. கர்த்தருடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தான் அவர்கள் இந்த அழைப்புக்கும் தெரிந்து கொள்ளுதலுக்கும் பாத்திரவான்களானார்கள் என்பதை கவனமாக நினைவில் வைக்கும்படி இங்கு அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். சத்தியப்பணியின் உத்தியோகத்திற்கு அழைக்கப்பட்டதிலிருந்து, கர்த்தருடைய ஆவியினாலே இந்தத் திருநிலைக்கு உயர்த்தப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு, சபையின் ஊழியக்காரர்களாக நியமிக்கப்பட்டு, வழிநடத்தப்பட்டு, கர்த்தருடைய பரிசுத்தவான்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டுமென்று அப்போஸ்தலர் இங்கே கூறுகின்றார். வேறொரு இடத்தில் அப்போஸ்தலர் உலகத்தை நோக்கியல்ல சபையைக் குறித்தே இவ்வாறு கூறுகிறார்.

"ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது... தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும் ஏற்படுத்தினார்... இவ்வாறாக ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு,.... எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே." *(1 கொரி 12:6,7,28)*

தேவ வல்லமை மூலம் பிதாவாகிய தேவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுமே, தேவனுடைய திருச்சபையின் பல்வேறு ஊழியக்காரர்களை நியமிக்கிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் பிதா, குமாரனைத் தவிர வேறொரு மூன்றாவது நபராக பரிசுத்த ஆவி இக்காரியத்தை செய்யவில்லை என்பதை அப்போஸ்தலர் இங்கே விளக்கிக் காண்பிக்கிறார். தேவன் கிறிஸ்துவோடிருந்து, தன்னுடைய ஜனங்களாகிய திருச்சபையாரை தன்னுடைய ஆவியின் வல்லமையினாலே வழிகாட்டி, அவர்கள் நடக்க வேண்டிய வழியில் நடத்துகிறார். அவருடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே அகில உலகத்தின் காரியங்களும், சகலத்தையும் அறிகிற அறிவினாலும், அவருடைய சர்வ வல்லமையினாலும் வழிநடத்தி

வருகிறார். இந்த மெய் சத்தியமானது, மூன்றாவது நபர் பரிசுத்த ஆவி என்பதைப் பொய்யாக்குகிறது; இந்த வேலை கர்த்தரால் அவரது பரிசுத்த ஆவியின் மூலமாய் நிறைவேற்றப்படுகிறது என்பதையும் காண்பிக்கிறது. தேவனுடைய சித்தம், நோக்கம் இவைகளின்படி யார் யார் ஊழியக்காரர், போதகர்கள், மூப்பர்கள் என்று தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்கள் கர்த்தருடைய சேவைக்கு தங்களை உடன்படிக்கையின் மூலம் ஒப்புக் கொடுத்தவுடன், அவர்களை தேவ ஆவியினால், தேவ சிந்தையின்படி அந்த உத்தியோகத்திற்கேற்ற தகுதி, திறமைகளால் நிரப்புகின்றார். இந்த உத்தியோகத்திற்கு மனிதர்களால் தெரிந்தெடுக்கப்பட்டாலும், அவர்கள் தேவனால், தேவ ஆவியினால், தேவசித்தப்படி செய்ய தெய்வ வல்லமையே தங்களுக்கு இந்த பதவியைக் கொடுத்தது என்று ஏற்றுக் கொண்டிருந்தனர். அதற்கேற்றாற்போல், பொறுப்பையும் உத்தியோகத்தையும் கவனிக்க வேண்டியவர்களாயிருந்தனர்.

## பரிசுத்த ஆவி ஒரு போதகர்

*"நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்... அவைகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்." -1 கொரி 2:10,13*

நாம் ஏற்கனவே ஆராய்ந்தபடி, இந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்போது, அவர்களை தேவனுடைய சித்தத்தையும் திட்டத்தையும் நன்கு புரிந்து கொண்டு அதற்கிசைவாக செயல்படும்படி கற்பிக்கின்றது என மேற்சொன்ன வசனமும் நிரூபிக்கின்றது. அவருடைய சத்திய வசனத்தின் மூலமாகவும், ஆவி அல்லது அந்த வசனத்தின் உண்மையான அர்த்தத்தின் மூலமாகவும் தேவனோடு முழு இசைவுக்கு வந்த பிறகுதான் தேவனுடைய ஆழங்களையும், இரகசியங்களையும் புரிந்து கொள்ள முடியும். நம்மிடத்தில் கிரியை செய்கிற "தேவனிடத்திலிருந்து வருகிற தேவனுடைய ஆவிக்கும்" சுபாவ மனிதனிடத்தில் கிரியை செய்கிற "உலகத்தின் ஆவிக்கும்" உள்ள வித்தியாசத்தை இங்கு அப்போஸ்தலர் காண்பிக்கிறார். உலகத்தின் ஆவி ஒரு நபராக இல்லாமல் ஒரு

உலகத்தின் சிந்தையாக, ஆதிக்கமாக இருப்பது எவ்வளவு தெளிவாக இருக்கிறது பாருங்கள்! அது போலவே தேவனுடைய ஜனங்களில் கிரியை செய்கிற தேவ ஆவி, ஒரு தனிப்பட்ட நபராயிராமல், தேவனின் பரிசுத்த சிந்தை, குணநலன்கள், ஆதிக்கம் என்பதைக் குறிக்கும் என்பது நிச்சயமாகிறது.

## "தேவனுடைய ஆவிக்கு உரியவைகள்"

*"ஜென்ம சுபாவ மனுஷனோ, தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான், அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளாதலால், அவைகளை அறியவுமாட்டான்." 1 கொரி. 2:14*

இதுவரை நாம் பார்த்த எல்லா வசனங்களுக்கு இசைவாகவும், ஆணித்தரமான இக்கருத்தை இவ்வசனம் வலியுறுத்துகிறது. எந்த அளவு உலக ஆவிகளால் ஒரு மனிதன் நிறைந்திருக்கிறானோ, அந்த அளவுக்கு தேவனுடைய ஆழமான, மறைபொருளான, மகிமையுள்ள காரியங்களை "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் செய்திருக்கிற நன்மைகளைப் பற்றி" அறிந்து கொள்ளவோ, உணரவோ இயலாது. இம்மாதிரி தேவனுடைய மறைபொருள்கள் "முத்துக்கள்" என்று வேதாகமத்தில் வருணிக்கப்படுகிறது. எனவே இவைகள் பன்றிகளுக்கோ, சுயநலமிகளுக்கோ இந்த உலகத்தின் ஆவியை மிகுதியாகப் பெற்றிருப்பவர்களுக்கோ உரியதல்ல. ஆனால் பரிசுத்த திருவசனமாகிய தண்ணீர்களைக் கொண்டு கழுவப்பட்டு, விலைப்பேறப் பெற்ற கர்த்தரின் இரத்தத்தின் மூலம் விசுவாசம் வைத்தவர்களாய், கர்த்தருக்கு அருகில் கொண்டு வரப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, முழுமையாய் கர்த்தருடைய சித்தம் செய்ய தங்களை தத்தம் செய்தவர்களுக்கே இது உரியது. இப்படிப் பட்டவர்களுக்கே அவருடைய கிருபையின் ஐஸ்வரியங்களையெல்லாம் படிப்படியாக பகிர்ந்தளிக்கிறார். இதுவே "ஏற்ற வேளையில் அவர் கொடுக்கின்ற ஆகாரமாய்" இருக்கின்றது.

எல்லாரும் அறிந்து கொள்ள இயலாத ஒரு அரிதான போதனை இது. விழுந்துபோன மனித நிலையிலுள்ளவர்களுக்கும், புதிய சிருஷ்டியாகி ஆவிக்குள் வழிநடத்தப்படுகிறவர்களுக்குமிடையே

உள்ள வேற்றுமையை அடையாளங் காட்டுவதாய் அமையும். தேவனின் ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை காணக்கூடாத குருடர்களாய் இருப்பவர்களிடத்திலே, இந்த ஆவியின் சாட்சியோ, ஆவியைப் பெற்றதற்கான ரூபகாரமோ கிடையாது. அவர்கள் தேவ புத்திரர் என்பதற்கோ, பரலோகத் தந்தைக்கும் அவர்களுக்குமிடையே உள்ள உறவு பற்றியோ, தேவனிடத்தில் விசுவாச உறவு பற்றியோ எந்த சான்றும் இல்லை. "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் செய்திருக்கிற நன்மைகளைப் பற்றி" இவர்களுக்கு அக்கறை இல்லை. அவர்களிடம் கர்த்தருடைய ஆவி இல்லாததினால் இப்படிப்பட்ட மேன்மையான சிந்தை அவர்களிடத்தில் இல்லை. எல்லாருக்கும் தெரிந்த பேர் சபைகளிலே இருக்கக் கூடிய போதகர்கள், இந்த காரியங்களைப் பற்றிய தங்கள் அறியாமையை ஒத்துக்கொள்கிறது மாத்திரமல்ல, அது குறித்து பெருமை பாராட்டுகின்றனர். அதன் மூலம், தேவனின் சிந்தை அவர்களிடம் இல்லை என்பதையும் தேவனுடைய திட்டங்களை அறியாதவர்களாய் இருக்கிறார்கள் என்பதையும் பிரகடனப் படுத்துகிறார்கள். எனவே அவர்கள், சத்திய ஆவியாகிய அவரது ஆவியை அதிகமாக பெற்றிருக்க முடியாது. அந்த அளவுக்கு சத்தியத்தையும் அவர்கள் பெற்றிருக்க முடியாது. தேவனுக்குரியவைகளை அறிந்து நிதானிக்கக் கூடிய ஆற்றல் எவ்வளவு என்பதற்கு பரீட்சை வைக்கப்படுகிறது. உலக சிந்தனை உள்ளவர்களிடத்தில் ஆவியின் சிந்தனை மறைக்கப்பட்டிருக்கிறது. "நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தியிருக்கிறார்."

## பரிசுத்தராலே பெற்ற அபிஷேகம்

*"நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று, சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்." "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத் திருக்கிறது. ஒருவனும் உங்களுக்குப் போதிக்க வேண்டியதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது;அது சத்தியமாய் இருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக." - 1 யோவா. 2:20,27*

அபிஷேகம் என்ற சொற்றொடர் கூர்மையான ஆராய்ச்சி, சிந்தனையுள்ள வேத மாணவர்களுக்கு, பழைய ஏற்பாட்டில் நடந்த

அபிஷேகங்களைப் பற்றிய சிந்தனைகளை நினைவுக்கு கொண்டு வருகிறது. பிரதான ஆசாரியர் ஸ்தானத்துக்கு வருகிற ஒவ்வொருவர் மேலும், இஸ்ரயேலின் இராஜாவாக நியமிக்கப் பட்டவர்கள் மீதும் பரிசுத்த எண்ணையை அவர்கள் தலையில் ஊற்றி அபிஷேகம் பண்ணப்பட்டது. மாம்ச இஸ்ரயேலர்கள் நிழலாய் இருப்பது போல அதற்குப் பொருளாக ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தேவனுடைய ஜனங்களாக இப்போது இருக்கிறார்கள். பொருளாக வந்த கிறிஸ்துவுக்கு நிழலாக அக்காலத்து பிரதான ஆசாரியர்களும, இராஜாக்களும் இருக்கிறார்கள். பிரதான ஆசாரியர்களும், இராஜாக்களும், தங்களுடைய உத்தியோகத்தில் நிலைப்படுத்துவதற்கு, பரிசுத்த எண்ணெயால் அபிஷேகம் பெற்றார்கள். அதுபோலவேதான் திருமுழுக்குப் பெறும்போது இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். அதனால் யேகோவா தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவானார். (அபிஷேகம் பண்ணப்பட்டவர்)

தெரிந்து கொள்ளப்பட்ட திருச்சபையார் அவர்களுடைய கர்த்தரும் தலையுமாகிய அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவுக்கு சரீரமாயும், இராஜரீக ஆசாரியக் கூட்டமாயும் இருப்பார்கள். யோர்தானில் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். பிதாவினுடைய வல்லமையாகிய பரிசத்த ஆவியினால் கிறிஸ்து மரணத்தி-ருந்து உயிர்த்தெழுப்பப்பட்டபோது "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்கு அளிக்கப்பட்டது." (மத். 28:18; எபே.1:19,20) அவர் பிதாவின் அங்கீகாரத்தோடு அவரது திருச்சபை அங்கங்களுக்கு பெந்தெகொஸ்தே நாளில் உண்மையான அபிஷேக எண்ணெயை பொழிந்தருளினார். தலையில் ஊற்றப்படுகிற அபிஷேக எண்ணை எவ்வாறு சரீரத்தின் மீது வழிந்தோடுகிறதோ, அதுபோலவே முதலில் தலையாகிய கிறிஸ்து பெற்றுக் கொண்ட அபிஷேகத்தை அவருடைய சரீரமாகிய சபைக்கும் பொழிந்தருளினார். அதன்பின்னர் தேவனால் "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்று வேத வசனம் கூறுகிற சரீரத்தோடு இணைகிற விசுவாசிகளும் கிறிஸ்துவுக்குள்ளாக அபிஷேகம் பண்ணப்படுகிறார்கள். அபிஷேக ஆவியின் வழிநடத்துதலினால் தேவனால் முதலாவது போதிக்கப்பட்ட

இவர்கள் இந்த உலகை ஆண்டு ஆசீர்வதிப்பார்கள்.

அபிஷேகம் செய்தல் என்பது, வழுவழுப்பை, எண்ணெய் பசையை, உராய்வு இன்மையை குறிக்கின்றது. இதனை கிரேக்க மொழியில் “கிறிஸ்மா” என்றழைப்பர். பூர்வீக மரபின்படி இந்தச் சொல்லின் பொருளோடு மனம் அல்லது வாசனையைக் கலந்து சொல்லப்படும் பொருளாக இருக்கிறது. இந்த அபிஷேகத்தைப் பெறக்கூடிய இக்காலத்துத் திருச்சபையார், தேவனுடைய கிருபையின் ஐஸ்வரியத்தினாலே, பரிசுத்தம், தயாள குணம், பொறுமை, சகோதர சிநேகம், பரிவு ஆகிய நற்குணங்களால் உயர்ந்து உன்னத நிலையை அடைவதை, இந்த அபிஷேகம் என்ற சொல் அழகுற ஆணித்தரமாக விளக்குகின்றது. இந்த அன்பின் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் அனைவருக்கும் அவர்களுடனேகூட இனிமையும் சுத்தமுமான சுகந்த வாசனையைக் கொண்டு வருகிறது. புறம்பான மனிதன் கரடு முரடான சுபாவம் உடையவனாய், அறியாமையுள்ள எந்த உபயோகத்திற்குமில்லாத பூமிக்குரிய பாத்திரமாய் இருக்கிறான். இப்படியிருந்தும் தூய்மையாக்குகிற தேவ ஆவிக்கு உட்படும்போது வெகு விரைவாக அந்த இனிமையான சுகந்த வாசனையுள்ள புது இருதயமாக மாற்றப்படுகிறது. இப்படி புதிதாக்கப்பட்ட உள்ளான மனிதன் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, புதிய சிருஷ்டிக்கு இசைவான குணங்களாகிய, “உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ...” அவைகளையே நடைமுறையில் கடைப்பிடிக்கும். (பிலிப். 4:8)

பரிசுத்த ஆவியைப் பற்றிய சரியான கருத்தை விளக்குவதாய் “அபிஷேகம்,” “வல்லமையாய் வழிநடத்தப்படுதல்” என்ற இரண்டு சொற்களும் விளங்குகின்றன. பரிசுத்த ஆவி தேவனுடைய வல்லமை, ஆதிக்கம் ஆகும். இது தேவனுடைய கட்டளை, அவருடைய வாக்குத் தத்தத்தங்களின் மூலமாக காணக்கூடாத தேவ வல்லமை பயிற்சியளித்து வழிநடத்துகிறது. தாம் ஒருவரே ஞானமுள்ளவரும், சர்வ வல்லமையுள்ளவருமான தேவனுக்கு, எது சரி என்று தோன்றுகிறதோ, அதனை அவரவர்க்கு உரிய நேரத்தில் உரிய வண்ணம் செய்கின்றார். இந்த வார்த்தைகளின்படி இந்த

வல்லமை ஒரு பலமே அல்லாமல் ஒரு தனி நபரல்ல. நாம் எப்படி இன்னொரு நபருடன் சேர்ந்து அபிஷேகம் பண்ணப்பட முடியும்?

"நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்று" என்ற இந்த வசனத்தில் "பரிசுத்தர்" என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது என்று ஒருவேளை சிலர் நினைக்கலாம். ஆனால் நாம் இல்லை என்கிறோம். பரிசுத்தர் என்பது பிதாவைக் குறிக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில் கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களைப் பற்றி பேதுரு அப்போஸ்தலன், அபிஷேகத்தைலம் ஊற்றப்பட்டது போல தேவ வல்லமை ஊற்றப்பட்டது என்றுதான் சொல்லுகிறாரேயல்லாமல், ஒரு ஆளாக பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டார் என்று சொல்லவில்லை. இயேசுவைப் பற்றி பேதுரு சொல்லும்போது, "பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" என்று கூறுகிறார். இந்த அற்புதமான வல்லமை அல்லது ஆதிக்கம் பல்வேறு இடங்களில், பல்வேறு வகையாக வெளியரங்கமாய் இருக்கிறது. உயிர்ப்பிக்கிற சிந்தனையை ஊட்டுவதாகவும், அக்கினி நாவுகளாகவும், படிக்காதவர்கள் அநேக மொழிகளைப் பேசவும், தேவ வல்லமை காரணமாயிற்று. மேலும் யோயே-னால் முன்னுரைக்கப்பட்ட வாசகம் கூட, "நான் என் ஆவியை ஊற்றுவேன்" என்பதாகும். இங்கே "ஊற்றுவேன்" என்ற வார்த்தை ஒரு நபரைக்குறிக்கும் என்று யாராவது கூறமுடியுமா? அதாவது அவர் தேவனால் குமாரனிடம் கொடுக்கப்பட்டு உற்றப்பட்டாரா? கேட்கிறதும் காண்கிறதுமாகிய "இது" வாக இருந்தாரா? நிச்சயமாக இல்லை. அப்படிப்பட்ட வார்த்தையை வல்லமையிலும், மகிமையிலும் சரிசமானமாய் இருக்கக்கூடிய திருத்துவ தேவர்களில் மூன்றாவது நபருக்கு பயன்படுத்துவது அவமரியாதைக்குறியதாகும்.

இவ்விதமான அபிஷேகம் பெற்றவர்களே சகலத்தையும் அறிவார்கள் என்ற தவறான கூற்றே ஏறக்குறைய எல்லாரையும் நம்பச் செய்து விட்டது. ஆனாலும் அநேக கர்த்தருடைய பிள்ளைகள் ஆவியின் அபிஷேகத்தை முழு நிச்சயமாகப் பெற்று, தாங்கள் சகலமும் அறிந்தவர்கள் என்ற உணர்வு பெற்றார்களா? இன்னும் சிலர், தங்களுக்கு சகலமும் தெரியாததினால் தாங்கள் ஆவியின்

அபிஷேகம் பெற்றுக் கொள்ளவில்லையோ என்று ஐயப்படுகின்றனரே! "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றதை அறிந்திருக்கிறீர்கள்" ("சகலத்தையும்" என்ற வார்த்தை பழைய கிரேக்க மூலப்பிரதிகளில் காணப்படவில்லை) என்று மொழிபெயர்த்தால் விஷயம் எவ்வளவு எளிமையாகிவிட்டது பார்த்தீர்களா! ஆம், உண்மையாக, சுபாவ மனிதனின் நோக்கம், இருதயம், குணநலன்கள், பண்பாடு இவற்றிற்கும், தெய்வீக அன்பாலும், பண்பாலும், நீதியாலும் இயங்குகின்ற புதிய சிருஷ்டியின் சிந்தை, குணநலன்கள், விருப்பம் இவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளை மெய்யான தேவபிள்ளைகள் நன்கு உணர்வார்கள்.

மிகச்சிறந்த, அதே நேரத்தில் எளிமையும் தாழ்மையுள்ள தேவ பிள்ளைகளில் எத்தனை பேர் கீழ்வரும் வாக்கியத்தை வாசிக்கும் போது ஆச்சரியமும், பிரமிப்பும் அடைகிறார்கள்?

"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை..." 1 யோவா. 2:27

அப்படிப்பட்ட அபிஷேகம் நாங்கள் பெறவில்லையே! எங்களுக்கு யாராவது அதைப்பற்றி போதிக்க வேண்டும். ஏனெனில் அப்படிப்பட்ட அபிஷேகம் பெறுவது எங்களுக்கு மிகமிகத் தேவை. அப்படிப்பட்ட ஆவி நேரடியாகவோ, மறைமுகமாகவோ, எந்த மனித உபகரணம் மூலமோ எங்களுக்குக் கிடைக்கவில்லையே! அதனால் அதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. இப்படிப்பட்ட எளிய ஆத்துமாக்கள், மிகவும் வருந்தி, தங்களுக்கு ஒன்றும் தெரியாமற் போய்விட்டதென்றும், கபடற்ற எதார்த்தமான தங்கள் சுபாவத்தினால் எண்ணுவார்கள். அவர்களுக்கு அறிமுகமான மேலான பரிசுத்தவான்கள் என்று கருதப்படுபவர்களும்கூட, அதேபோல் மனித போதகத்தின் தேவையில் இருக்கிறார்கள் என்பதைக் காண்பதில்லை. எதார்த்தமில்லாத பரிசுத்தத்தில் குறைவுள்ள, உறுதியான கொள்கையில்லாத சிலர், தங்களையும், தங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களையும் கெடுப்பதற்காக முயற்சிப்பார்கள். எப்படியெனில், தாங்கள் எந்த மனிதரிடத்திலும்

கற்றுக் கொள்ளவில்லை. நேரடியாக தேவ ஆவியின் ஏவுதலால் போதிக்கப்பட்டதாக பெருமையடித்துக் கொள்வார்கள். இப்படியாக தங்களுடைய பேச்சு, நடத்தை எதிலுமே தவறாமை வாய்ந்தவர்கள் என்று கூறிக்கொள்கிறோம் என்பதை அறிகிறதில்லை. அவர்களுடைய சிந்தனையில், செயல்பாட்டில், பரிசுத்த ஆவியின் ஏவுதல் இருப்பதாக கூறிக் கொண்டு, பேச்சு, சிந்தனை, செயல்பாடு எல்லாம் தப்பறையாய் செய்வதினால், தேவனுடைய பரிசுத்த ஆவியை தங்களுடைய தப்பறைகளுக்கும் அறிவீனமான செய்கைகளுக்கும் காரண கர்த்தா என்று தாங்கள் பிரதிபளிப்பதையும் கூட அவர்கள் அறிகிறதில்லை.

மேற்கண்ட பகுதியை நாம் சிந்தித்தால், பொதுவாக வேதத்திற்கொவ்வாததாக இருப்பதை உணரலாம். சபையிலே அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள் என்ற நியமனங்களே பரிசுத்த ஆவியின் வரங்கள் என்று அப்போஸ்தலர் பவுல் எழுதவில்லையா? ஒருவரும் போதிக்கத் தேவையில்லை என்றால், ஏன் திருச்சபையில் இப்படிப்பட்ட உத்தியோகங்கள் எற்படுத்தப்பட்டிருக்கிறது? இப்படி விசேஷமான வரங்களாகிய உத்தியோகங்களை சபையில் எற்படுத்த காரணங்கள் என்ன என்று அப்போஸ்தலர் கூறுகிறார்? அவர் சொல்வதைக் கேளுங்கள்.

“மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும், விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும்...” (எபேசி. 4:11-13) இதையும் ஒப்பிட்டுப் பார்க்கவும். - 1 கொரி. 12:28-31

அப்.யோவான், பவுல் அப்போஸ்தலனும் மற்றுமுள்ள அப்போஸ்தலரும் சொல்வதற்கு மறுதலையாக சொல்கிறார் என்று எண்ணி விடக்கூடாது. இவர்களெல்லாம் போதகர்களே. இவர்கள் திருச்சபைக்கு, பரிசுத்த ஆவிக்கு உகந்தபடி, போதகராவதா, தீர்க்க தரிசியாவதா, கண்காணிகளாவதா இவற்றில் எது என்பதைத்

தேடவேண்டும் என்றும் திருச்சபையை ஆளுகை செய்கிறவர்களுக்கு கனம் தரவேண்டும் என்றும் போதிக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் ஆத்துமாக்களை நடத்துகிறவர்களாகவும், ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம் பண்ணுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். (எபி.13:17) திருச்சபைக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களைத் தெரிந்து கொள்வது சபையின் இன்றியமையாத பொறுப்பு என்று அப்.பவுல் ஆலோசனை கூறியுள்ளதற்கு இது இசைவாக இருக்கிறது. அவர்கள் போதக சமர்த்தர்களாக இருக்க வேண்டும், ஆரோக்கியமான உபதேசத்தை உடையவர்களாகவும், கடிந்து கொண்டு புத்திமதி சொல்கிறவர்களாகவும், விசுவாசத்திலே ஆரோக்கிய முள்ளவர்களாயிருக்கும்படி அவர்களை கண்டிப்பாய் கடிந்து கொள்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார். மேய்ப்பர்களாக இருப்பவர்கள் தங்களை உயர்த்திக் கொள்ளாமல், தங்களுக்குக் கீழ் உள்ள தேவனுடைய சுதந்திரமாகிய மந்தை முழுவதையும் அன்பினால் ஆள வேண்டும்; செவித்தினவுள்ளவர்களாக பேசாமலும், புகழ் ஆடம்பரம் இவைகளை விரும்பாமலும் இருக்க வேண்டும். ஆனால் ஏற்ற வேளையில் தகுதியான ஆகாரத்தை வழங்குகிற பந்தி விசாரிப்புக்காரராகவும் இருக்க வேண்டும். - 1 பேது.5:24; 1 தீமோ. 3:2; 2 தீமோ. 2:25; தீத்து 1:9,13

மேலும் யோவானும் ஒரு போதகரே, போதிக்கப்பட வேண்டிய அவசியமான போதனையாகிய நாமும், யோவானும், ஆரோக்கியமான உபதேசம் என்று கருதுகிற போதனையையே இதே நிரூபத்தில் யோவான் கற்பிக்கிறார். யோவானுடைய எழுத்துக்களை நன்கு படித்து அறிமுகமாயிருக்கிற எவரும், அவர் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதாமல், சமூக நலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதுகிறவர் என்று சொல்ல மாட்டார்கள்.

"...அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்" (யோவா 1:1-3) என்று யோவான் தன்னுடைய நிரூபத்தைத்

*துவக்கும்போதே, தன் கொள்கையைப் பற்றி ஆழமாக விளக்குகிறார். இதனைத் தொடர்ந்து, அவர் கூறுகிறாதவது:*

*"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்." - 1 யோவா. 2:1*

*"மேலும் நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன்." -1 யோவா. 2:8*

*அதோடுகூட, "பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள். நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராய் இருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்." - 1 யோவா. 3:7*

*"நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவி கொடுக்கிறான்." - 1 யோவான் 4:6*

*".........நீங்கள் அறியவும்..........உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்." 1 யோவா.5:13*

*மிக முக்கியமான போதனையோடு தன்னுடைய நிரூபத்தை முடிக்கின்றார். அந்த போதனையவாது:*

*"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக." - 1 யோவா.5:21 (கடவுளுக்குச் சமமாக யாரையும் கருதாதீர்கள். கடவுளைத் தவிர வேறு எவருக்கும் ஆராதனை செய்யக்கூடாது, மரியாதை செய்யக் கூடாது.)*

*இவைகளைப் பார்க்கும்போது, திருச்சபைக்கு எந்த ஒரு மனித போதகரும் தேவையில்லை என்று எவ்விதத்திலும் யோவான் கூறுகிறதில்லை. அதற்கு மாறாக பரிசுத்த ஆவி, திருச்சபைக்கு இதே நோக்கத்திற்காக மனிதர்கள் மூலமாக எல்லா போதனைக்கும் வழிகாட்டுதலுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப்படியானால், "உங்களுக்கு எந்த மனிதரும் போதிக்கத் தேவையில்லை, நீங்கள் பெற்றுக் கொண்ட அபிஷேகமே உங்களுக்கு சகலத்தையும் குறித்து போதிக்கும்" என்ற வார்த்தைக்கு என்ன பொருள் யோவானால் தரப்படுகிறது? சத்தியத்தின் அடிப்படையிலே இதற்கான பதில் இதற்கு முந்தின அதிகாரங்களில் விளக்கமாக எடுத்துரைத்துள்ளோம்.*

*வேதாகம விற்பன்னர்கள் இந்த ஆகமம் சுமார் கி.பி.90-இல்*

*எழுதப்பட்டிருக்கலாம் என்கின்றனர். ஏனெனில் அச்சமயத்தில் உலகத்தில் கிறிஸ்தவ மதம் பிரபலமாயிருந்தது. மாம்சீக இஸ்ரயேலரில் மீந்திருக்கின்றவர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டபோது அவர்கள் மேல் வெறுப்பு ஏற்பட்டு, பழி சுமத்தி, அப்போதிருந்த நாகரீக உலகமெங்கும் அவர்கள் சிதறடிக்கப்பட்டனர். அக்காலத்தில் வாழ்ந்த கிரேக்க தத்துவ ஞானிகளுடன் கிறிஸ்தவ மதத்தினர் பல விஷயங்களில் ஒத்துப் போயினர். இதுவே கிரேக்க மதமும், கிறிஸ்தவ மதமும் ஐக்கியப்பட காரணமாயிற்று. அதற்குப் பின்னர் கிறிஸ்துவ ஞானிகள் என்றும், தத்துவக் கிறிஸ்தவர்கள் என்றும் ஏற்பட்டு, அதை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருந்த வேளையில், அவர்களை அப்.பவுல், "போலியான தத்துவ ஞானிகள்" என்று அழைக்கிறார். (1 தீமோ. 6:20) இந்த தத்துவ ஞானிகள் இயேசு கிறிஸ்துவை மகான் என்றும், நல்ல போதகரென்றும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருந்தாலும், தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. அவர் வானத்தில் ஆவியின் ரூபத்தில் இருந்தவர், பூமியில் மனித ரூபத்தில் வந்தவர் என்றும் அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. அவர் "தேவ ரூபமாய் இருந்தும்," சகல மனுக்குலத்தையும் மீட்கும் பொருட்டாக "மாம்சமானார்;" தனக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய ஜீவனையளிக்கும் காரண கர்த்தர் இவரே என்றும் அவர்கள் விசுவாசிக்கிறதில்லை. அவர்கள் ஏற்கனவே தங்களுக்கு நித்திய ஜீவன் உள்ள எதிர்காலத்தைக் குறித்து பிரசங்கித்துக் கொண்டிருந்த வேளையில், கிறிஸ்தவர்களும் அதே கருத்தினை போதித்தவுடன் மகிழ்ச்சியடைந்தனர். பிளாட்டோ போன்ற தத்துவ சாஸ்திரிகள் கொண்டிருந்த நித்திய ஜீவன் கொள்கைக்கும், சத்திய வேதப்படி கிடைக்கக்கூடிய நித்திய ஜீவனுக்கும் வேறுபாடுகள் உண்டு. தத்துவ சாஸ்திரிகள் கொள்கைப்படி நித்திய ஜீவன் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இயல்பாக இருக்கக்கூடிய சாகாமை, அமரத்துவம் ஆகிய குண விசேஷங்களாகும். ஆனால் கிறிஸ்தவக் கொள்கைப்படி நித்திய ஜீவன் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாகக் கொடுக்கப்பட்டதல்ல. ஆனால் கிறிஸ்து இயேசுவை மீட்பர் என்று ஏற்றுக் கொண்ட எவருக்கும் தேவன் விரும்பி அளிக்கும் பரிசாக*

*உள்ளது. ரோம. 2:7; 5:15,21; 6:23; 2 கொரி.9:15*

*கிறிஸ்தவர்களை நோக்கி, இந்த கிறிஸ்தவ சாஸ்திரிகள் கூறுகிறதாவது: "இவ்வளவு கௌரவமுள்ள, சுதந்திரமான சிந்தனையையுடைய பகுத்தறிவுள்ள ஜனங்களை சந்தித்ததில் பெருமகிழ்ச்சியடைகிறோம்." யூதருடைய மூடநம்பிக்கையான பழக்க வழக்கங்கள், மடமையான கொள்கைகள் இவற்றிலிருந்தெல்லாம் விடுதலையடையக் கூடிய மார்க்கத்தைக் காட்டிய உங்கள் மாபெரும் போதகராகிய இயேசு கிறிஸ்துவை மனந்திறந்து பாராட்டுகிறோம். இருந்தபோதிலும் நீங்கள் இன்னும் ஒரளவு அடிமைத் தனத்திற்குள்ளாகவே இருக்கிறீர்கள். நீங்கள் எங்களுடைய தத்துவங்களை தீவிரமாக ஆராய்ந்தால் இன்னும் அதிக விடுதலையைப் பெறுவீர்கள். நீங்கள் யூதர்களுடைய கொள்கைகளான ஒரே கடவுள், அவருடைய ஒரே குமாரன்தான் உங்கள் போதகராகிய இயேசு கிறிஸ்து என்கிற நூதனமான கருத்து, அவர் மூலமாக ஸ்தாபிக்கப்படும் மேசியாவின் ராஜ்யம், ஆகியவைகளே உங்கள் கொள்கைக்கும் பொதுவாய் இருக்கிறது. எங்களுடைய தத்துவத்தை நீங்கள் தீவிரமாக ஆராய்ந்தீர்களானால் இவைகளையெல்லாம் விட்டு விடுவீர்கள். 2பேது.2:19; யூதா.4*

*யோவானின் நிரூபம் இம்மாதிரி தப்பறையான கொள்கைகளி-ருந்து உண்மைக் கிறிஸ்தவர்களை பாதுகாக்கவே எழுதப்பட்டது. ஆதி முதல் அவர்கள் கேள்விப்பட்டிருந்த போதனைகளில் நிறைந்திருக்க வேண்டும் என்றும், (1 யோவா. 2:24) இந்த தத்துவ போதனைகள் எல்லாம் பொய்யானவைகள் என்றும் போதிக்கிறார். இந்த தப்பறையான போதகர்கள் எல்லாம் அந்தி கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்றும், சபையில் வெளிப்படுவார்கள் என்று அவர்கள் அடிக்கடி கேள்விப்பட்டிருந்த அந்திக் கிறிஸ்துக்கள் இவர்கள் என்றும் அப்.யோவான் கூறுகிறார். (2 தெச 2:3-7; 1 யோவா 2:18) மேலும், அவர், "உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" என்று கூறுகிறார். 1 யோவான் 2:26*

*அதற்குப் பிறகு 27-ம் வசனத்தின் நூதனமான செய்தியின் விளக்கத்தைக் கீழ்க்கண்டவாறு காணலாம்:*

ஆனாலும் அருமையிலும் அருமையானவர்களே, உலக ஞான தத்துவத்தினாலே எந்த மெய்யான தேவ பிள்ளையும் நெறி தவறமாட்டார்கள். உலகின் எந்தத் தத்துவமும் நம் இருதயத்தில் கிறிஸ்துவின் இடத்தைப் பிடித்து விடமுடியாது. தந்தையினால் மிக அருமையான நேசிக்கப்படுகிறவரும் அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டவருமாகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் பெற்ற மாபெரும் நற்செய்திக்கு ஈடாக எந்த ஒரு உலக ஞானக் கொள்கையும் கிடையாது. இதனுடைய முழுமைக்கும் உண்மைக்கும் சவாலாக எந்த வினாவும் எழுப்ப முடியாது. பரிசுத்தவான்கள் மூலமாக ஒரே தரம் ஒப்புவிக்கப்பட்ட நமது மகா பரிசுத்தமுள்ள விசுவாசம் எல்லா காரண காரிய அடிப்படையில் உண்டாயிருந்ததுடன், அந்த பிரமிப்பூட்டும் அற்புத செய்தி உங்களுக்கு திருப்தி ஏற்படுத்துவதை தியானியுங்கள். அது அக்காலத்தில் அற்புதம் செய்யும் வரங்களோடும், அந்நிய பாஷை வரங்களோடும் அருளிச் செய்யப்பட்டது. இவ்வுலக தத்துவ ஞானிகள் இந்த அற்புத அதிசயங்களை கிழக்கு தேசங்களிலே போலிச் சாமியார்கள் செய்கிற கண்கட்டி வித்தைக்கொப்பாக போலியான செயல்பாடு என்கின்றனர். இதையல்லாமல் புதிதாக்கப்பட்ட உங்கள் இருதயத்தில், நீங்கள் பெற்றுக் கொண்ட அபிஷேகம் உங்களுடைய சிந்தையை முற்றிலுமாக மாற்றியமைத்ததை சாட்சி பகர்கின்றது. இதே சாட்சியினாலே அன்றாட வாழ்வில் ஆவியின் கனிகள் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் முற்றிலும் புதிய சிருஷ்டியாக மாற்றியமைப்பதை எந்த போலிச் சாமியார்களும் செய்து காண்பிக்க முடியாது. உங்களை வஞ்சிக்கிற எந்த உலகத் தத்துவ ஞானிகளும் உங்கள் சாட்சியை ஒருக்காலும் மறுதலிக்க முடியாது.

நம்முடைய பரிசுத்த வேதாகமத்தின் படியான இந்த அடிப்படை சத்தியங்கள், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை போலி என்று கூறாமல் மெய்யான தேவனுடைய குமாரனென்றும், நம்முடைய மீட்பரென்றும் எடுத்துக் காட்டுகிறது. கிறிஸ்துவுக்குள், அவருடைய ஆவிக்குள் இசைந்து அவருடைய வழிகளை நடைமுறையில் கடைப்பிடிப்பதே நித்திய ஜீவன் பெற ஒரே வழியாகும். அப்படி நடந்தால் உங்களுக்கு எவரும் போதிக்கத் தேவையில்லை. எவ்வளவாய் உங்களில் இந்த அன்பின் பரிசுத்த ஆவி

தங்கித் தரித்திருக்கிறதோ, அவ்வளவாய் உங்களை தேவநெறியில் நடத்தி, இப்படிப்பட்ட எல்லா தேவதூஷணங்களிலிருந்தும் அந்திக் கிறிஸ்துவின் கொள்கைகளிலிருந்தும் கவசம்போல உங்களைக் காக்கும். மீட்புக்கு தேவனுடைய வல்லமையையும், இயேசுவை தேவனுடைய குமாரனாக ஏற்றுக் கொண்டிருப்பதின் மூலமே "எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதனம்" உங்கள் இருதயத்தில் வந்தது என்று நினைத்திருக்கும் வரை இந்த ஆவி உங்களை இந்த விஷயத்தில் உறுதியாய் நிலைத்திருக்கச் செய்யும். பிதாவின் மூலமாகவும் கிறிஸ்துவின் மூலமாகவும் பெற்ற இப்படிப்பட்ட அன்பின் பரிசுத்த ஆவியின் வைராக்கியம் பரீட்சை பார்க்கப்படும்பொழுது இதே பரீட்சையே எல்லாக் காரியங்களையும் நிரூபிக்க உதவியாயிருக்கும். இந்த அன்பின் ஆவிக்கு மறுதலையாகவோ, எதிராகவோ சொல்லப்படும் எந்தக் கருத்தும் பொய்யான போலிப் போதகமாகும். கிறிஸ்துவுக்குள்ளாக நாம் ஜீவித்தால் மட்டுமே வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட பரிசைப் பெறுவோம், கிறிஸ்துவை விட்டுவிட்டால் சகலத்தையும் விட்டுவிட்டவர்களாகி விடுவோம் என்பதே அதன் போதகம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

## வாக்குக்கடங்காத பெருமூச்செறிந்த விண்ணப்பம்

*"...ஆவியானவர் தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்... இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்." ரோம.8:26,27*

பிதாவாகிய தேவனின் மகத்துவமான அன்பையும் பராமரிப்பையும் தேவ ஜனங்கள் புரிந்து கொள்வதற்காக, உரைக்கப்பட்ட இந்த பகுதியை வெகு ஜனங்கள் தவறாகப் புரிந்து கொண்டார்களென்று அறிந்து வருந்துகிறோம். அவர்கள் பரிசுத்த ஆவி பிதாவை நோக்கி பெருமூச்சோடு ஜெபம் பண்ணினார் என்று சொல்கிறார்கள். சிலர் "வாக்குக்கடங்காத அவருடைய பெருமூச்சு " என்றிருப்பதை கேட்கக்கூடிய வார்த்தைகளால் விளக்க முற்படுகின்றனர். இன்னும் சிலர் விளக்கங்காண முடியாதிருந்தாலும், பரிசுத்த ஆவியின் வாக்கினால் வெளிப்படுத்த முடியாத பெருமூச்சை, தங்களது பெரு மூச்சின் அளவு ஈடு செய்கிறது என்று நினைக்கின்றனர். பெயர் சபையாரின் ஞான உபதேசத்தில்

சொல்லுகிறபடி, பரிசுத்த ஆவி ஆள்தத்துவமுடையவர் என்றும், பிதாவுக்கும் குமாரனுக்கும் வல்லமையில் சமமானவர் என்றும், அவர் ஆண்டவரின் பிள்ளைகளுக்காக வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு பிதாவிடமும் குமாரனிடமும் விண்ணப்பம் செய்வது அவசியம் என்று கூறுவது நூதனமான கற்பனையாகவும், உண்மைக்கு புறம்பாகவும் இருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, என்னண்டையில் நேரடியாக வாருங்கள், பிறகு நாம் பிதாவினிடத்திற்கு நேரடியாகச் செல்வோம், ஏனெனில் "பிதா தாமே நம்மிடத்தில் அன்பாய் இருக்கிறார்" என்று உறுதிப்படக் கூறினார். சிலர், பிதாவினிடத்திலும், குமாரனிடத்திலும் செல்ல வேண்டுமானால், மத்தியஸ்தராகிய பரிசுத்த ஆவியின் மூலமாகத்தான் செல்ல வேண்டும்; ஏனெனில் அவர்தான் வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு விண்ணப்பம் பண்ணி மத்தியஸ்தம் பண்ணுகிறவர்; ஆதலி ன், இவர் மூலமாகச் சென்றால் தான் பிதாவும், குமாரனும் நம்மை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கின்றனர். பரிசுத்த ஆவி இன்னதென்றும், அதனுடைய பணி இன்னதென்றும் அறியாததினால் ஏற்பட்ட குழப்பமே தற்போதைய மகா குழப்பமான சிந்தனைக்குக் காரணமாயிருக்கிறது.

இந்தத் தப்பறையான விளக்கத்தில் உள்ள தவறை - அந்த வார்த்தையை இன்னும் விளக்கிச் சொல்கிறது. வாக்குக் கெட்டாத, வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத விண்ணப்பம் என்றால் அது எப்படி விண்ணப்பமாக முடியும்? பரிசுத்த ஆவி சர்வவல்லமையுள்ள யேகோவா தேவனுடைய வல்லமை என்று சரியான பொருள் கொண்டு பார்க்கும்போது கூட அது, தன் கருத்தை விளக்கிச் சொல்ல வார்த்தையில்லை என்பது எப்படி ஏற்றுக் கொள்ளக் கூடும்? எனவே இந்தப் பகுதி நூதனமாகவும் மாறுபாடு உள்ளதாகவும் இருக்கிறது. கடந்த யுகங்களில் தேவனுடைய சித்தம், மனம், ஆவி ஆகியவற்றை விளக்க ஏராளமான விளக்கங்கள் தீர்க்க தரிசிகளின் வார்த்தைகள் மூலமும், செயல்பாடுகள் மூலமும் வலியுறுத்தி சொல்லப்பட்டிருந்ததை நாம் அறிவோம். இக்காலத்தில் அவருடைய வல்லமையும், திறமையும் குறைவாக இருக்கிறது என்று நாம் கூறமுடியாது. அப்படியானால் வேதாகமம், "வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்று

*கூறுவதின் பொருள் என்ன?*

*தேவ ஆவியானவர் வேண்டுதல் செய்கிறார் என்பதே இவ்வசனத்திலுள்ள தவறாகும். மாறாக நமக்காக வேண்டுதல் செய்வது நமது சொந்த ஆவியே, பரிசுத்தவான்களுடைய ஆவி, தேவனிடம் வேண்டுதல் செய்கிறது. அது அடிக்கடி தன்னை சரியாக வெளிப்படுத்திக்கொள்ள தவறுகிறது. இந்த வேத வசனத்தை, அதன் கருத்தை தீர்க்கமாக சிந்தித்து ஆராய்ந்தால் இப்போது சொன்ன விளக்கத்தை நன்கு புரிந்து கொள்ளலாம். பாவத்தில் சிறைப்பட்டு பெருமூச்செறிகிற மனுக்குலத்தின் கதறலைக் குறித்தே அப்போஸ்தலர் இவ்விதம் எழுதுகிறார். இந்த சிறையிலிருந்து மனுக்குலம் விடுவிக்கப்படும் என்று அப்போஸ்தலர் உறுதிபடக் கூறுகிறார். இந்த மீட்பு, "தேவனுடைய பிள்ளைகளாகிய" திருச்சபையார் தனது மீட்பின் அதிபதியாகிய கிறிஸ்துவினால் மகிமையடைந்த பிறகே உண்டாகும். (ரோம. 8:19-21 வசனங்கள்) உலக மீட்புக்காகத் தவிக்கிற தவிப்பி-ருந்து கடந்து, தற்காலத் திருச்சபை இருக்கிற நிலைமையை அடைந்து, "ஆவியின் முதற் பலன்களைப் பெற்ற நாமும் கூட, நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரம் வருவதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்." - ரோம. 8:23*

*ஒரு காலத்தில் உலக சிந்தையை, உலக ஆவியைப் பெற்றிருந்த நாம், இப்போது புதிதாக்கப்பட்டு, பரிசுத்தமான புதிய சிந்தையை, புதிய ஆவியை உடையவர்களாய் இருந்தாலும், ஆதாமின் வழிவந்த நம்முடைய சரீரம் இன்னும் அபூரண நிலையிலேயே உள்ளது. எனவே நாம், புதிய சிருஷ்டிகளாக, சரீரத்தில் தவித்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் சுபாவத்தை முதலாம் உயிர்த்தெழுதலில் பெற பாரம் சுமந்து தவிக்கிறோம். விசுவாசத்தினாலே மாம்சத்துக்குரிய இந்த சரீரம் மரித்ததாகக் கருதி, நாம் பூரணமடைந்த புதிய சிருஷ்டியாகவும், இப்பொழுதே நாம் மீட்கப்பட்டவர்களாகவும், "நம்பிக்கையினால் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம்" என்றும் கருத வேண்டுமென்று அப்போஸ்தலர் விரிவாக விளக்கிச் சொல்கிறார். (வசனம் 24) நாம் நம்மைக் குறித்து எவ்வாறு கருதிக்கொள்ள வேண்டும் என்று காண்பித்த பிறகு தெய்வீக நிலைப்பாட்டில் நாம் புதிய சிருஷ்டியாக, பரிசுத்தமுள்ள*

ஆவிக்குரியவர்களாக கருதப்படுகிறோம் என்பதை நம் மனதில் கொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலர் விளக்குகின்றார்; தேவன் மனித சுபாவத்தையோ, மனித பலவீனங்களையோ ஒரு பொருட்டாகக் கருதாமல், தேவ சேவையில் ஆவிக்குரிய நிலைப்பாட்டில் இருக்கக்கூடிய அவர்களுடைய மனம், சிந்தை, நோக்கம், உற்சாகம் ஆகியவற்றிலேயே அவருடைய பார்வையும் கருத்தும் உள்ளது என்கிறார். புதிதாக்கப்பட்ட நம்முடைய மனதில் ஆவி உற்சாகமுள்ளது என்பதையும், ஆனால் சரீரமோ பலவீனமானது என்பதையும் தேவன் நன்கு அறிவதால், அவர் நம்மை நம்முடைய மாமிசத்துக்குரிய செய்கைகளின்படி நியாயந் தீர்க்காமல், ஆவியின்படி நியாயந் தீர்க்கிறார்.

நாம் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதும், புதிய சிருஷ்டியாக, புதிய சிந்தையுள்ளவர்களாக சுவீகாரப் புத்திரர் ஆனதும், கர்த்தருக்குள் நாம் உடன்படிக்கை செய்து கொண்டதும் நம்மை தேவனோடு ஒரு புதிய நெருக்கமான உறவை உண்டாக்குகிறது. இதனாலே நமக்கு மிகுந்த நம்பிக்கை கிடைப்பதினால் மகிழ்ச்சியடைகிறோம். “அந்தப்படியே ஆவியும் (நமது புதிய பரிசுத்த சிந்தை) நமது (மாம்சீக) பல வீனங்களில் உதவி செய்கிறது. நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியே (நமது பரிசுத்த சிந்தை) வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு (“நமக்காக” என்பது மூலத்தில் இல்லை) வேண்டுதல் செய்கிறது. ஆவி (ஆவி அல்லது நமது ஆவி) தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் (தேவன்) ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.”

பூமிக்குரிய மண்பாண்டமாய் இருப்பதால் அவர்களுடைய சரீர பலவீனங்களைப் பொருட்படுத்தாமல், தேவன் அவர்களை ஆவிக்குரிய வழியில், அவருடைய சேவையில் அவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகமூட்டி, அவர்களுடைய இருதயத்தின் விருப்பப்படி வேண்டிய வண்ணம் கிருபையளிக்கிறார். இவ்வண்ணமாக அவர்களுடைய இருதயத்தின் விருப்பங்களை ஏற்று அங்கீகரிக்கிறார்.

பலவீனத்திலும் அறியாமையிலும் நாம் இருக்கும்போது நமது பரலோக பிதா, நமது வார்த்தைகளுக்கு பதிலாக நமது இருதயத்தின் எண்ணத்தை அங்கீகரிப்பது நமக்கு எத்தனை அதிர்ஷ்டவசமானது. அவருடைய ஜனங்கள் அடிக்கடி அவரிடம் கேட்க வேண்டியதைக் கேட்பதில்லை. அநேக கர்த்தருடைய ஜனங்கள், தங்களது ஜெபத்தில் ஆவியின் ஞானஸ்நானம், அக்கினியின் ஞானஸ்நானம் என்ன என்று புரிந்து கொள்ளாமலேயே அவ்வரத்தினைத் தவறாகக் கேட்கின்றனர். நல்ல மனசாட்சியோடு ஜெபம் பண்ணினாலும், சத்திய வசனங்களுக்கு இசைவாக ஜெபிக்கா விட்டால் அது ஆசீர்வாதத்திற்கு மாறாக சாபத்தையே கொண்டு வரும். யோவான் ஸ்நானகன் தான், “இயேசு கிறிஸ்து வந்து உங்களை ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார்” என்று சொன்னார். ஆதித் திருச்சபையார் 50-ம் நாளிலே (பெந்தகொஸ்தே நாள்) காத்திருந்த போது அவர்களுக்கு இதன் ஆசீர்வாத பகுதி வழங்கப்பட்டது. இதற்கடுத்தப்படியாக மீதமுள்ள இஸ்ரயேலர்களுக்கு அந்த ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. இந்த ஆசீர்வாதத்தின் பிற்பகுதியாகிய சாபத்தின் அக்கினி, தங்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளாத யூதர்கள் மீது வருஷிக்கப்பட்டு கி.பி. 70-ல் தேவனால் தள்ளப்பட்ட யூத ராஜ்யம் சிதறுண்டு அழிந்தது. தேவன் கிருபை பொருந்தியவராய் இருப்பதினால், வேண்டிக் கொள்பவர்கள் ஆசீர்வாதத்தைக் கேட்பதாக எண்ணி சாபத்தையே விண்ணப்பித்தாலும், தேவன் ஆசீர்வாதத்தையே கொடுக்கிறார்.

விழுந்துபோன மனுக்குலத்தின் பலவீனத்தினால் சாத்தானின் கண்ணியினால் வஞ்சிக்கப்பட்டும், ஒரு தப்பிதத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அனுபவத்தை சிலர் பெற்றிருந்திருக்கிறார்கள். அவர்கள் கிட்டத்தட்ட தைரியத்தை இழந்தவர்களாக பரலோக கிருபையின் சிங்காசனத்தை ஜெபத்தில் நாடுகிறார்கள். சொல்ல அவர்களுக்கு வார்த்தைகளில்லை, அதனால் தேவனிடம் பாரத்தோடும் ஆவியில் முனகுகிறார்கள். நீங்கள் இவ்வாறு தான் ஜெபிக்க வேண்டும் என்று முறைபடுத்தி ஆச்சார சடங்கு வழியிலே ஜெபிக்க வேண்டுமென்று தேவன் விரும்புவதில்லை. அதற்கு மாறாக, அவர்களுடைய இருதயம் எதை

விரும்புகிறது என்று கண்டுகொள்கிற தேவன், அவர்களுடைய இருதயத்தையும், பாரத்தையும் உணர்கின்ற தேவன், அவர்கள் கேட்கின்ற மன்னிப்பையும், ஆசீர்வாதத்தையும், தேற்றரவையும் அளிக்கின்றார். அவர்கள் மன்றாட்டில் கேட்காத ஆசீர்வாதங் களையும் பலத்தையும் அளிப்பதோடு, அவர்களுடைய எல்லாக் குறைகளையும் தாராள மனதுடன் மன்னிக்கிறார்.

இதுகுறித்து வெகு விளக்கமாக அப்போஸ்தலர் விவரித்த பின்னர், முடிவுரையாக, "இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? (நமக்காக தேவன் ஒவ்வொன்றையும் ஏற்கனவே ஆயத்தப் படுத்தியிருக்கிறார். நம்முடைய அபூரணங்களும், பலவீனங்களும் நம்முடைய செயல்பாடு என்று தேவன் கருதுகிறதில்லை. நமது மன்றாட்டிலுள்ள வார்த்தைகளில் குறைவு ஏற்பட்டாலும், நம்முடைய விருப்பத்தை உள்ளபடியே எடுத்துச் சொல்ல இயலாமையை பொருட்படுத்தாமலும், நமது மனதின் ஆவலையும், ஆர்வத்தையும் அறிந்து ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறார். நம்முடைய ஆர்வத்தை உள்ளபடியே எடுத்துச் சொல்ல இயலாத ஜெபங்களையும் அவர் அறிந்து என்ன தேவையோ அதை ஆசீர்வாதமாகப் பொழிந்தருளுகிறார். எனவே) தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாக இருப்பவன் யார்?"- ரோம. 8:31

## பரிசுத்த ஆவி உலகை கண்டித்து உணர்த்துவது எவ்வாறு?

"அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." - யோவா. 16:8

சத்திய ஆவியைக் குறிப்பிடும் இடங்களிளெல்லாம் ஆண் பாலில் குறிப்பிடப்படுவது ஏன் என்றும், பரிசுத்த ஆவி தேவனின் ஆவியென்றும், தேவன் ஆண் பாலில் சொல்லப்படுகிறவர் என்றும் விரிவாகவும், விளக்கமாகவும் இதுவரை ஆராய்ந்திருக்கிறோம். ஆனாலும் இப்பொழுது இந்த வசனத்தை சிலர் பரிசுத்த ஆவி பாவிகளிடம் கிரியை செய்து அவர்களை சீர்திருத்துகிறவர், எனவே இது மூன்றாவது ஒரு ஆள் என்பதற்கு ஆதாரமாகக் காண்பிக்கின்றனர். இது சரியா என இப்போது நாம் ஆராய்வோம். இவ்விதமாகச் சொல்வது எவ்வித்திலும் சரியல்ல. இதற்கு நாம் மறுப்புத்

தெரிவிக்கிறோம். ஞானஸ்நான உடன்படிக்கை செய்து கொண்டவர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்படுகிறது என்பதையும், விசுவாசியாதவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்படுவதில்லையென்பதையும், தாங்களே ஆவியைப் பெற்றுக் கொண்டதாக சொல்லிக் கொள்பவர்களிடத்திலும் பரிசுத்த ஆவி அளிக்கப்படுவதில்லை என்பதையும் வேதாகமம் சரியாக நிதானித்துப் போதிக்கிறது. இந்த உலகத்தின் பிள்ளைகள் இவ்வுலகின் ஆவியையே பெற்றிருக்கிறார்கள். அதுபோலவே தேவனுடைய பிள்ளைகள் தேவ ஆவியைப் பெற்றிருந்து, தேவ சிந்தை, தேவ சித்தம் தேவ குணநலன்களையும் பெற்றிருக்கிறார்கள். "இவ்வுலகத்தின் ஆவி" அதாவது "மாம்ச சிந்தை" "தேவனுக்கு விரோதமான பகை." மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுடைய ஆவியையோ சித்தத்தையோ அறிய மாட்டார்கள். பரிசுத்த ஆவியை உடையவர்கள் மட்டுமே தேவ சிந்தையையும், நோக்கத்தையும் புரிந்து கொள்வார்கள். தேவனுடைய சித்தத்திற்கு இசைவாகவும், கீழ்ப் படிதலோடும் தெய்வ வழிநடத்துதல் எங்கெங்கே சாட்சியாகக் காணப்படுகிறதோ, அங்கெல்லாம் புதிதாய்ச் சீரமைக்கப்பட்ட மறுரூபமாக்கப்பட்ட புதிய சிருஷ்டியின் ஜீவியம் அடையாளம் காட்டிவிடும்; இதற்கு சாட்சியாகவும், இசைவாகவும், "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்லன்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். கிறிஸ்துவின் ஆவியில்லாதவர்கள் கிறிஸ்துவைச் சாராதவர்கள், அவர்களெல்லாரும் உலகத்துக்குரியவர்கள். அவர்கள் பிதாவின் ஆவியைப் பெறாதவர்களாதலால் கிறிஸ்துவுடையவர்களாக முடியாது.

ஆவியின் கனிகளும், வசனத்தின் மூலம் அதன் சாட்சிகளுமே நாம் பரிசுத்த ஆவியினால் புதுப்பிக்கப் பட்டிருக்கிறோம் என்பதற்கு சாட்சியாகும். திருச்சபையில் உள்ள தேவனுடைய ஆவி இவ்வுலகின் ஆவியாக இருக்க முடியாது. தேவனுடைய ஆவி என்பது எந்த வகையிலும் இந்த உலகத்தின் ஆவிக்கு சம்பந்தப்பட்டதல்ல. இவ்வுலகத்தின் ஆவியைப் பெற்றவர்கள் கோபாக்கினையின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் பிதாவாகிய சாத்தானால் உண்டானவர்கள். இந்த உலகத்தின்

ஆவியாகிய இருளின் ஆவி, சுயநலஆவி, மாம்சத்தின்படியே செயல்படும் ஆவி, உலகத்தையே பின்பற்றிச் செல்வதால் வெளியரங்கமாக சில நேரங்களில் மட்டுமே அந்த பரிசுத்த ஆவியின் சிந்தனை தோன்றும். ஆனால் சத்திய ஆவியையும் அன்பின் ஆவியையும் பெற்ற பின்னர் இந்த உலகத்தின் ஆவியை வெகுவாக மாற்றி விடுகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. புதிய மனம், புதிய சிருஷ்டியாக மாற விருப்பமில்லாதவர்களுக்கு, பரிசுத்த ஆவியாகிய நீடிய சாந்தம், நீடிய பொறுமை, தயவு ஆகிய நற்குணங்கள் அழகாகத் தோன்றாததிலும், அவர்களுக்குக் கவர்ச்சியாக இராததிலும் வியப்பேதுமில்லை.

சிலர் பரிசுத்த ஆவியைப் பெறாமலே நல்ல வாழ்வு வாழ விரும்பி, தங்களுடைய சிறந்த ஒழுக்கம், முறையான வளர்ப்பு இவைகளைக் காண்பிக்கிறதற்காக, இந்த நற்குணங்களைக் கடைப்பிடிப்பதும் உண்டு. மேலும் பலர் தங்கள் நற்குணங்களை வெளிப்பார்வைக்கு கடைப்பிடித்தாலும், அவர்களுடைய இருதயம், தேவனுடைய பரிசுத்த ஆவிக்கும், சத்திய வேதத்திற்கும் இசைவில்லாதிருக்கிறது. விழுந்து போன பாவ சாயலை மறைப்பதற்காக எப்படி தகரத்திற்கு தங்க முலாம் பூசுகிறார்களோ அதுபோல, இந்த நற்குணங்களை போர்வையாகப் போர்த்திக் கொள்கிறார்கள். ஆனால் இவர்களோ புதிய சிருஷ்டியாக மாற மனதில்லாதவர்கள், பரிசுத்தமாக்கப்படாதவர்கள், சுயநலக் காரர்களும், கர்த்தரோடும், கர்த்தருடைய பரிசுத்த ஆவியிலும், இசைவில்லாதவர்கள். எனவே நாம் மெய்யான கர்த்தருடைய ஆவியிலும், மெய்யான பரிசுத்தத்திலும் விளங்குபவர்கள் யார் என்பதையும் உள்ளொன்றும் புறமொன்றும் வைத்து இப்பிரபஞ்சத்திற்கொத்த போலி வேஷம் தரித்திருப்பவர்கள் யார் என்பதையும் சரியாக நிதானிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மெய்யான கர்த்தருடைய ஆவியிலே நடப்பவர்களே தேவபுத்திரர் ஆவர். அவர்களே தேவ தயவைப் பெறுவர். அவர்களே இறுதியில் ஆசீர்வதிக்கப்பட்டு மகிமைக்கு உயர்த்தப்படுவர்.

விசுவாசத்தின் மூலமும், பிரதிஷ்டையின் மூலமும் கர்த்தருடையவர்கள் என்று அடையாளங் கண்டவர்களுக்கு மட்டுமே

*அவர் தம்முடைய ஆவியில் தொடர்பு கொள்கிறார் என்றால், அவருடைய சத்திய ஆவி வரும்போது சகல பாவத்தால் நிறைந்திருக்கிற இந்த உலகத்திற்கு பாவம், நீதி, நியாயத் தீர்ப்பு இவைகளைக் குறித்து உணர்த்தி சீர்திருத்துவார் என்று சொல்லியிருப்பதன் பொருளென்ன?*

*தங்களுடைய விசுவாசத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் தக்கதாக பரிசுத்த ஆவியைப் பெற்று அதன் ஐசுவரியத்தில் இருக்கிற ஆண்டவரின் அடியார்கள் உலகிற்கு ஒளியாயிருப்பார்கள் என்ற நமது ஆண்டவரின் அறிக்கையை நாம் ஞாபகத்தில் கொண்டுவரும்போது, நமது ஆண்டவரின் வார்த்தையை எளிதில் விளங்கிக் கொள்ள முடியும். மெய்யாகவே பிரதிஷ்டைக்கு உட்பட்ட திருச்சபையாரிடமிருந்து பிரகாசிப்பதே இந்த சத்திய ஒளியாகும். அந்த ஒளி உலகின் மேலும் பேர் சபையின் உலக சிந்தையை உடையவர்கள் மேலும் அவர்களது இருளை கண்டிக்கும் வகையில் உள்ளது. நமது கர்த்தர் தாம் தேவனுடைய ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட பிற்பாடு, தம்மைக் குறித்து, "நான் உலகிற்கு ஒளியாய் இருக்கிறேன்" என்றார். மேலும், "நான் உலகில் இருக்கும் நாள் வரையில் உலகிற்கு ஒளியாய் இருப்பேன்" என்றார். (யோவா. 8:12; 9:5) இந்த சுவிஷேச யுகத்தில் அதே பரிசுத்த ஆவியினாலே அபிஷேகம் பெற்ற தம்முடைய திருச்சபையாரை நோக்கி, "நீங்கள் உலகிற்கு ஒளியாக இருக்கிறீர்கள்... உங்கள் வெளிச்சம் மனிதர்கள் முன்பு பிரகாசமாய் இருப்பதாக" (மத். 5:14-16) என்றார்.*

*இதேபோல் கிறிஸ்துவின் திருச்சபையாரை நோக்கி அப்.பவுல், "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (எபேசி 5:8; 1 தெச 5:5) என்கிறார். மேலும் பவுல், "தேவன்... தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" (2 கொரி 4:6) என்று கூறுகிறார். இப்படியாக நாம் பார்க்கிறபடி பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய சத்திய ஒளியே நம்முடைய இருதயத்திலும், உலகத்தார் அனைவரையும் பிரகாசிக்கச் செய்யப் போகிற ஒளியாகும். எனவே*

*பிலிப்பியருக்கு எழுதும்போது அப்.பவுல் இவ்வாறாக புத்திமதி கூறுகின்றார்: "...ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே, குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும், தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்." - பிலி* ***2:14-16***

*எனவே, பரிசுத்த ஆவியின் ஒளி உலகிற்கு நேரடியாகப் பிரகாசிக்காமல், கிறிஸ்து, திருச்சபையார் ஆகியோரின் மூலமாக, அந்த ஒளியின் பிரதிபலிப்பு அவர்களை அடைகிறது. தேவனுடைய ஆவி நேரடியாக அவர்களோடு தொடர்பு கொண்டு, அவர்களை செயல்பட வைக்காமல், பரிசுத்த ஆவி நேரடியாக திருச்சபையாரோடு தொடர்பு கொண்டு, அவர்களை ஆவியினால் முத்தரித்து, அவர்களது வெளிச்சம் உலகத்தின் இருளில் பிரகாசிக்கச் செய்கிறது.*

*பிரதிஷ்டை செய்து ஒப்புக் கொடுத்த திருச்சபையார் மூலமாக அகில உலகும் கண்டித்து சீர்திருத்தம் பண்ணப்படுகிறதை அப்போஸ்தலர் இவ்வாறு கோடிட்டுக் காண்பிக்கின்றார்.*

*"...வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் ... கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்... அவைகளெல்லாம் கடிந்து கொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும், வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது." - எபேசி.* ***5:8, 11,13***

*தேவனுடைய சத்திய ஒளியானது தேவனுடைய சித்தத்தையும், மனதையும் தெளிவாக விளக்குவதாய் இருக்கிறது. அது பிரகாசமுள்ள பரிசுத்த ஜீவியம் செய்ய வழிநடத்துகிறது. இந்த உலகத்தின் இருளை கண்டித்து, பாவம் என்ன என்பதையும், அது நீதிக்கு எதிரிடையானது என்பதையும் அறிந்து கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு காண்பிக்கிறது. இந்த அறிவு ஒளி கிடைத்த பிறகு, வருகிற நியாயத்தீர்ப்பில் பாவத்திற்கு தண்டனை உண்டு என்றும் நீதிமான் வெகுமதி பெறுவான் என்றும் தெளிவு கிடைக்கிறது. சத்திய வார்த்தை சாத்தியப்படாத போது, தெய்வ பக்தியோடு கூடிய வாழ்க்கை தெய்வ பயமற்றவர்களுக்கு எப்போதும்*

ஒரு கண்டனமாயிருக்கும்.

கர்த்தருடைய ஜனங்களில் இருக்கக்கூடிய பரிசுத்த ஆவி, அவர்களைச் சூழ்ந்திருக்கிற மற்றவர்களிடத்தில் உள்ள சுயநலம், பரிசுத்தத்திற்கு விரோதமான எந்தத் தவறையும் கண்டித்து உணர்த்தி சீர்திருந்தும்படி செய்கிறது. எனவே தான் அப்.பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது,

"...சகல மனுஷராலும் அறிந்தும் வாசிக்கப்பட்டும் இருக்கிற ஜீவனுள்ள கிறிஸ்துவின் நிரூபங்கள்" என்றார். (2 கொரி. 3:2) கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருகிற, நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட திருச்சபையார், எப்பொழுதுமே உலகிற்கு ஒளியாக இருக்கிறார்கள். அந்த வெளிச்சம், எதிர்பார்க்கிற அளவுக்கு தேவன் விரும்புகிற வண்ணமாக மிகப்பெரிய வெளிச்சமாயிராவிடினும் வெளிச்சம் தருவது நிச்சயம். இயேசு கிறிஸ்துவின் (முதலாம் வருகை) நாளிலும், இருளோடு உறவாடிக் கொண்டிருந்தவர்கள் வெளிச்சமாகிய இயேசு கிறிஸ்துவையும் பகைத்தார்கள். ஏனெனில் வெளிச்சத்தின் ஆவி இருளின் ஆவியை கண்டித்தது. உலகிற்கு மாபெரும் ஒளியைக் கொண்டு வந்த இயேசு கிறிஸ்துவை எவ்வாறு எல்லாரும் பகைத்து, வீண்பழி சுமத்தி, குற்றஞ் சாட்டி மரணத்துக்குள்ளாக்கினார்களோ அதுபோலவே, திருச்சபையாரும் அவர் அனுபவித்த துன்பங்களிலெல்லாம் பங்கு பெற்றாகவேண்டும். - யோவா. 16:2,3; ரோம. 8:17,18

திருச்சபையாரின் பிரதான பணி என்னவெனில், தங்களுடைய மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதியாய்க் கட்டப்பட வேண்டுமென்பதே. (யூதா 20) இரண்டாவது முக்கியப் பணியாக சத்தியத்திற்கு சாட்சியம் பகர்ந்து, அநேகரை சீர்திருத்தி இந்த ஒளியினிடத்திற்குக் கொண்டு வருவதாகும். இந்த கண்டித்தல் வெளிப்படையான உலக ஆவியைப் பெற்றவர்களைக் காட்டிலும் பெயர்க் கிறிஸ்தவர்களை கண்டிப்பதே அவர்களது விசேஷப் பணியாகும். இயேசுவின் நாளிலும் இதேபோல தேவபக்தியின் வேஷம் தரித்தவர்களிடத்திலும், தேவனற்றவர்களிடத்திலும் அவர் தம்முடைய ஒளியைப் பிரகாசிக்கச் செய்து, அவர்களைக் கண்டித்து

சீர்திருத்தினார். ஆகவே கர்த்தர், நம்முடைய வெளிச்சம் இடைவிடாமல் தொடர்ந்து பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்றார். "உன்னிலிருக்கிற வெளிச்சமே இருளாயிருந்தால், அந்த இருள் எவ்வளவு பயங்கரமானதாயிருக்கும்!" தனி நபரிடத்திலோ, உலகத்திலோ அவர்களுடைய வெளிச்சம் மறைக்கப்பட்டுப் போனால் அது மிகக் கொடியதான இருளாய் இருக்கும். ஒருதரம் பிரகாசிக்கப்பட்டு சத்திய வெளிச்சத்தைப் பெற்ற ஒரு மனிதர், அந்த வெளிச்சத்தை இழந்து இருளுக்குள் சென்று விட்டால் அது சாத்தானுக்கு எவ்வளவு மகத்தான வெற்றியாய் இருக்கும். அப்படிப்பட்டவன் செய்ய நினைக்கிற தீங்கு, சாதாரண மனிதன் செய்வதைப் பார்க்கிலும் இரண்டு மடங்காக இருக்கும். "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கக் கடவன்." யார் தங்கள் விளக்கைக் கொளுத்தி அதை மரக்காலில் வைத்து மறைக்கிறார்களோ, அவர்கள் இருளை நோக்கி உறுதியான அடியெடுத்து நடக்கின்றனர்.

## "இதனாலே பரிசுத்த ஆவி இன்னதென்றும் அந்திக்கிறிஸ்துவின் ஆவி இன்னதென்றும் அறிவீர்கள்"

*-1 யோவா 4:2,3; 2 யோவா 7 -*

"தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது, மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல, வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே."

அறிவுக்கூர்மையுள்ள எவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணமாக, அப்போஸ்தலர், பரிசுத்த ஆவியை ஒரு ஆள் தத்துவத்தில் கூறாமல், அது தேவ வல்லமை, ஆதிக்கம்,சித்தாந்தம், போதனை என்று விளங்கிக் கொள்ளும்படி குறிப்பிடுகின்றார். கர்த்தருடைய பிள்ளைகள் யார் எந்த கொள்கையை சத்தியம் என்று எடுத்துச் சொன்னாலும் அதை வேத வழி பகுத்தறிந்து, சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி (தப்பறையின் ஆவி) இன்னதென்றும் சோதித்தறிய வேண்டும். அது கடவுளிடமிருந்து வரக்கூடிய நன்மையா அல்லது சாத்தானிடமிருந்து வரக்கூடிய தீமையா என்பதைப் பகுத்தாராய வேண்டும். இவை இரண்டுமே போதகர்கள்,

தீர்க்கதரிசிகள் என்று கருதப்படுபவர்களால் கூறப்படுவதே. கர்த்தரும், அப்போஸ்தலர்களும், அவர்களது அடியார்களும் வேத ஆதாரமுள்ள அடிப்படை சத்தியத்தை, கோதுமை மணியாக விதைத்தனர். அதனாலே விசுவாசிகள் பிரதிஷ்டைக்குட்பட்டு, பரிசுத்த தேவ ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு புதிய சிருஷ்டியாக புதிய ஜீவியம் தொடங்கினார்கள். விரோதியாகிய சாத்தானும் அவனுடைய ஊழியக்காரர்களும் தப்பறையையும், அசத்தியத்தையும் களையாக பெயர் சபைகளில் விதைத்தனர். இவர்களிடம் கிறிஸ்துவின் ஆவியாகிய பரிசுத்த ஆவி இராமல், அதற்குப் பதிலாக இனிப்புக்கலந்த இவ்வுலக ஆவியின் போதனையைக் கொடுத்தனர். எந்த போதகர்கள் எந்த போதனையைக் கொடுத்தாலும், அது சத்தியத்திற்கு இசைவானதா அல்லது தப்பறைக் கொள்கையில் வழி நடத்துகிறதா என்பதை பகுத்து, சோதித்து, நிதானிக்க வேண்டும். இதனால் சத்திய வேதப்படி சொல்லுகிறவர்கள் உண்மைப் போதகர்களென்றும், தப்பறையாய்ப் போதிப்பவர்கள் பொய்ப் போதகர்களென்றும் நிதானிக்கலாம். இத்தகைய தீர்ப்புக்கு ஆதாரமாயிருப்பது பரிசுத்த வேதாகமமே. ஏனெனில் "அநேககள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால்" இத்தகைய விழிப்புணர்வு மிக அவசியம்.

போதனையில் பொய் எது? மெய் எது? சத்திய ஆவி எது? வஞ்சக ஆவி எது? என்று கண்டறிய அப்போஸ்தலர் ஒரு பரிசோதனையை சொல்கிறார். கிறிஸ்துவின் பரிசுத்த ஆவி சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துகிறது போல, அந்திக்கிறிஸ்துவின் ஆவியாகிய சாத்தானின் ஆவி சகல தப்பறைகளுக்குள் வழிநடத்துகிறது. எப்படியெனில், ஒரே விசை ஒப்புவிக்கப்பட்ட மகா பரிசுத்தமான விசுவாசத்தை விட்டு விலகச் செய்து, நாசமோசத்திற்குள் நடத்திச் செல்கிறது. அதுமட்டுமல்லாமல் தன் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்டுக் கொண்ட கர்த்தரையே மறுத-க்கச் செய்து விடுகின்றது. (2 பேது 2:1) இந்த பரிசோதனை, மாமிசத்தில் வந்த மேசியாவை ஏற்றுக் கொள்ளுகிறவன் விசுவாசி என்றும், அதை மறுதலிக்கிறவன் அவிசுவாசி என்றும் தீர்க்கிறது. இந்த விலைக்கிரயமாகக் கொடுக்கப்பட்ட ஈடுபலியை ஏற்றுக் கொள்வது சரியான பரீட்சையாக இருந்து வந்தது. இப்போதும்

அவ்வாறே இருக்கின்றது. இந்த ஈடுபலிக் கொள்கையை மறுக்கின்ற எந்த போதகர்களும் அந்திக் கிறிஸ்துவின் போதகத்தை உடையவர்களே. இந்த ஈடுபலிக் கொள்கையை அலட்சியப்படுத்துகிற கொள்கைகள், எத்தனையோ நன்மையான பலகோட்பாடுகள் அதில் இருந்தாலும் அது தேவனுடைய கொள்கை அல்ல என்பதால் அது ஆபத்தானது. இந்த ஈடுபலிக் கொள்கையை அறிக்கையிடுகிற எந்தக் கோட்பாடும் அடிப்படையில் சரியானதும், தேவனால் உண்டானதும், சரியான பாதையில் வழிநடத்துகிறதுமாய் இருக்கிறது.

கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட அடிப்படை சத்தியத்தில், தொடக்கக் காலத்திலேயே கலப்படம் செய்யப்பட்டது என்பதை இரண்டு நிலைப்பாடுகளால் அறியலாம். அவ்விரண்டு கொள்கைகளும் மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கை பண்ணாதவை.

1. புறஜாதியாரின் தத்துவங்கள் ஞானம் என்று பொய்யாய் பேர் பெற்றிருக்கிற விபரீதக் கொள்கைகளை உடையது. ( 1 தீமோ. 6:20,21) அப்படிப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவையும் ஒரு பெரிய தீர்க்கதரிசி என்றும், ஒரு போதகரென்றும் தங்களுடைய தத்துவ ஞானிகளின் வரிசையில் இவரையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் அவரை தேவகுமாரனல்ல என்றும், அவர்களுடைய தத்துவ ஞானிகளுக்கு மேலானவர் அல்ல என்றும் மறுத்தார்கள். அந்த புறஜாதியாரின் கூற்றுப்படி, அவர் யூதர்களின் மேசியா அல்ல; மேலும் யூதர்கள் தங்கள் தேசம்தான் உலகிலேயே தலைசிறந்ததென்றும், தேவனால் தயைபெற்ற தேசமென்றும் கூறுவது, தங்களுடைய பெருமையினாலும், போராசையினாலும், குருகிய மனப்பான்மையினாலும், கர்வத்தினாலும் பெருமைப்பட்டுக் கொள்கிற கட்டுக்கதை என்றார்கள். இப்படியாக அவர்கள், நமது கர்த்தர் மாம்சத்தில் வருவதற்கு முன்பாக இருந்தார் என்பதையும், மாம்சத்தில் அவர் வந்தார் என்பதையும், விழுந்துபோன மனுக்குலத்தின் ஒரு அங்கம் என்பதையும் மறுக்கின்றனர். ஆனாலும் அவர் மனிதர்களில் பிரகாசமான ஒரு உதாரணப் புருஷன் என்று ஏற்றுக் கொள்கிறார்கள்.

2. விரோதியாகிய சாத்தான், தன் மரபு வழக்கத்தின்படி ஆரம்பத்திலேயே ஒரு எல்லையிலே ஒரு தப்பறையைப் புகுத்திவிட்டு, அதற்கு நேர் எதிர் முனையில் இன்னொரு தப்பறையை உண்டாக்கி விட்டு, இதில் சரி எது, தவறு எது என்று வழக்காடும் முனைப்பிலே இருக்கும்போது, சத்தியம் எது என்ற அடிப்படையை மறந்து விடச் செய்வதே அவன் நோக்கம். எனவே சாத்தான், ஒன்றுக்கொன்று எதிரிடையான பொய்க் கொள்கையைப் புகுத்த, இயேசு கிறிஸ்து மனிதனல்ல, அவரே மெய்யான பிதாவாகிய தெய்வம் என்று கற்பித்தான்; ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அவர் தன்னை மனிதராக போலியான பாவனை செய்தார்; ஆனால் அதே நேரத்தில் அவருடைய தெய்வீக வல்லமையையும் கொண்டிருந்தார். தன்னுடைய தெய்வீக மகிமையை மறைத்து வைத்துக் கொண்டு, மாறுவேடத்தில் மனித சரீரமெடுத்து வந்தார். அவர் அழுவதாகவும், பசி, தாகத்தால் வாடுவதாகவும், சாவதாகவும் தோற்றமளிக்க சித்தங் கொண்டார். இந்தக் கொள்கை, மேசியா மனிதனாக வந்தார் என்ற உண்மையை மறுத-க்கின்றது. அதாவது, "வார்த்தை மாம்சமாயிற்று" (யோவா 1:14) என்ற சத்தியத்திற்கு எதிரானது.

சத்திய ஆவிக்கெதிரான இந்த இரண்டு பொய்யும் போலியுமான கொள்கைகளில் ஒன்றை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, இன்று நம்மைச் சுற்றியிருக்கிற பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்தப் பொய்மையில் சிக்கியிருப்பதைக் கண்டு மிகுந்த ஆச்சரியப்படுகிறோம். இதுவே அந்திக் கிறிஸ்துவின் ஆவி. அதில் மீதமுள்ள மற்றவர்களோ மிகுந்த மனக்குழப்பத்தில் இருக்கிறார்கள். திகில் கொண்டவர்களாய் அவர்கள் எந்தக் கருத்தையும் சரியாய் நிதானிக்க முடியாதவர்களாய் இருக்கிறார்கள். எனவே அவர்கள் இந்த அடிப்படை சத்தியமான ஈடுபலிக் கொள்கையில் பிடிப்போ, விசுவாசமோ இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். "லோகோஸ்" என்கிற "வார்த்தை மாம்சமானது" என்ற அடிப்படைக் கொள்கையை விசுவாசியாத எவரும், ஈடு பலியை (ஈட்டுக்கிரயம்) விசுவாசிக்கமாட்டார்கள். இப்படிப் பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவை அபூரணமான மனிதனென்றும், மனுக்குலத்தின் அங்கமாகிய ஒருவருடைய மாம்சீக குமாரன் என்றும் தான் விசுவாசிக்கின்றனர். இப்படியாக அப்போஸ்தலர்

சத்திய ஆவிக்கும், தப்பறையின் ஆவிக்கும் பரீட்சையாக சொல்லப்பட்டிருக்கிற இந்த வார்த்தை (லோகோஸ்), இன்றும் என்றும் உண்மையறிய உதவியாய் இருக்கின்றது. இந்த வார்த்தையின்படி, பரிசுத்தஆவியினால், தேவனால் நடத்தப்படுபவர்கள் யார்? தப்பறையின் ஆவியினால் நடத்தப்படுபவர்கள் யார்? என்பதை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

இந்த வசனங்கள் பொதுவான மொழிபெயர்ப்பில் மொழி பெயர்ப்புத் தவறால் நிகழ்ந்தது என்று கூறுவோரும் உண்டு. குறை கூறுபவர்கள் சரியான கிரேக்க இலக்கணத்தையும், மரபுகளையும் அறியாததினால் அவ்வாறு சொல்கிறார்கள். இங்கு மொழிபெயர்ப்பில் எந்தக் தவறுமில்லை. விமர்சனம் பண்ணுகிறவர்கள்தான் தவறாக விமர்சிக்கிறார்கள்.

1. இந்த இரு வசனங்களிலும், மாம்சத்தில் வந்தஇயேசுவை என்று இருப்பதை கிரேக்க இலக்கணத்தின்படி, "மாம்சத்தில் வரப்போகிற" என்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

2. இப்படி மாற்றி "மாம்சத்தில் வரப்போகிற" என்று எழுதினால், கிறிஸ்து இரண்டாம் வருகையில் அவர் மாம்சத்தில் வருவார் என்று பொருளாகிவிடும். அப்போது அது அந்திக்கிறிஸ்துவின் கொள்கையை உறுதிப்படுத்துவதாய் அமையும்.

இதற்கு நாம் அளிக்கின்ற பதிலாவது:

1. கிரேக்க மொழியில் "எர்க்கோமாய்" (erchomai) என்ற அடிப்படைச் சொல்லிருந்து, "எலலுதோட்டா" (eleluthota) என்ற சொல் உருவெடுத்தது. ( 1 யோவா. 4:2) "எர்க்கோமெனான்" (erchomenon என்ற (2 யோவா 7) கிரேக்கச் சொல்லுக்கு 'வருகை' என்ற பொருள் இருப்பது உண்மையே. 'வருகை' என்ற சொல், வாக்கிய அமைப்பைப் பொறுத்துத்தான் அது கடந்த காலத்தை குறிக்கிறதா அல்லது எதிர்காலத்தைச் குறிக்கிறதா என்று தீர்மானிக்க முடியும். உதாரணமாக, ஆண்டவருடைய முதலாம் வருகை என்பது அனைவரும் விசுவாசிக்கக்கூடிய ஒரு கொள்கை. இது இறந்த காலத்திற்குரியது. ஆனால் "இரண்டாம் வருகை"யை பெரும்பாலும் விசுவாசிக்கிறதில்லை. இந்த வாக்கியத்தில் 'வருகை' என்பது

எதிர்காலத்திற்குரியது. எனவே இந்த சொல், உபயோகிக்கக்கூடிய வாக்கிய அமைப்பைப் பொறுத்து தான் எந்தக்காலம் என்பது நிர்ணயிக்கப்படுகிறது. "வரும் என்று கேள்விப்பட்ட அந்திக் கிறிஸ்துவின் ஆவி இதுவே" என்ற வசனத்தில், "வரும்" என்ற சொல் எதிர்காலத்தைக் குறிப்பதாயிருந்தாலும், அது நிகழ்காலத்தையும், கடந்த காலத்தையும் குறிப்பதாய் உள்ளது.

2. இந்த வசனத்தில் சொல்லப்பட்ட கருத்து எதிர்காலத்தைச் சார்ந்தது என்று சிலர் சாதிக்கின்றனர். அவர்கள், நமது கர்த்தர் மாம்ச சரீரத்தி-ருந்து தெய்வீக சரீரத்திற்கு மாறவில்லை என்பது அவர்களின் எண்ணம். அதனால் அவர் சாதாரண மானிட நிலையில் மாம்ச சரீரத்தில் உள்ளவரென்றும் கருதுகின்றனர். அவர் பட்ட காயங்களை, தழும்புகளை, நித்திய நித்தியத்திற்கும் அவர் ஏற்றாக வேண்டுமென நினைக்கின்றனர். "தேவன் அவரை உன்னதத்திற்கு உயர்த்தினார்" என்பதையும், "இப்பொழுது கர்த்தர் அந்த ஆவியின் ரூபத்திலிருக்கிறார் " என்பதையும், "இதுவரை நாம் அவரை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனிமேல் நாம் அவரை ஒருபோதும் மாம்சத்தின்படி அறியோம்" என்பது போன்ற பல ஆதார வேத வசனங்களை அவர்கள் புறக்கணித்துவிட்டனர் அல்லது அசட்டை செய்து விட்டனர். (பிலிப் 2:9; 2 கொரிந் 3:17; 5:16) இப்படிப்பட்டவர்கள் தங்கள் தவறான கொள்கைக்கு ஆதரவாக, சம்பந்தமற்ற, காரண காரியத்திற்கு உட்படாத வேத வசனங்களை சொல்லிக் கொண்டிருப்பது, அவர்களிடத்தில் காணப்படும் பெரிய வஞ்சனையாகும். பெரும்பான்மையான கிறிஸ்துவ மண்டலத்தில் உள்ளவர்கள் இந்தத் தவறான கருத்தையே நம்பிக் கொண்டிருக்கின்றனர் என்பது உண்மையே. இவர்களில் யாருக்கும் மொழிப் பயிற்சியோ, மொழி பெயர்ப்பின் சிக்கல்களோ தெரிந்திருக்க நியாயமில்லை.

இந்த வசனத்திற்கு ஆதாரமாக சில பண்டிதர்களுடைய விசேஷக் கருத்துக்களை இவ்விடத்தில் நினைவு கூர்வது பொருத்தமாய் இருக்கும் என்று நம்புகிறோம். கம்பர்லேண்ட் பிரிஸ்பிடேரியன் சபையைச் சார்ந்த வேய்னஸ்பர்க் கல்லூரியில் மொழியியல் துறையில் பேராசிரியராக இருக்கும் டாக்டர் J.R.ரைன்ஹார்ட் என்பவர் 1 யோவா. 4:2; 2 யோவா. 7 ஆகிய

வசனங்களை மேற்கோளாகக் கொண்டு கூறும் விளக்கத்தைக் காண்போம்.

"1. மேற்சொன்ன வசனங்கள், வில்சனின் எம்பாட்டிக் டயக்ளாட் என்கிற பிற்கால மொழிபெயர்ப்பின்படி, ஏற்கனவே இருந்த மொழிபெயர்ப்புகளைப் பற்றி கவனிக்காமல், ஒவ்வொரு கிரேக்கச் சொல்லுக்கும் தனித்தனியே பொருள் மேலே எழுதப்பட்டிருக்கிறது. "எலலுதோட்டா" என்கிற கிரேக்கச் சொல் செயற்படு பொருள் வேற்றுமையாகவும், ஒருமையிலும் ஆண்பாலிலும் எழுதப்பட்ட ஒருசொல். "எர்க்கோமாய்" என்கிற கிரேக்கச் சொல்லை முதலடியாகக் கொண்டு எழுந்த சொல்லே மேற்கண்ட சொல்லாகும். இந்த வினைச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு வருகிற பல்வேறு வினைச் சொற்களும், வினைத் தொகையாக மூன்று காலத்திற்கும் பொருந்தியதாக எழுதுவது மரபு. இதனுடன் "ஹோமோலீகாய்" என்ற கிரேக்கச் சொல் சேர்ந்து வரும்போது, அது இறந்த காலத்தை மட்டுமே காட்டும் என்பது கிரேக்க இலக்கண மரபாகும். (குட்வின் கிரேக்க இலக்கணம் + + 1588, 1288)

"இப்படிப்பட்ட சூழ்நிலையில் கீழ்க்காணும் மொழிபெயர்ப்பு சரியாக இருக்கும். "மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டான ஆவி."

"2. இரண்டாவது மேற்கோள் காட்டிய வசனத்தில் (2 யோவா 7) வருகிற சொல் "எர்க்கோ மெனான்" வினைச்சொல் "எர்கோமாய்" என்ற மூலச் சொல்லின் நிகழ்காலத்தைக் குறிக்கும் ஒருமை ஆண்பாலைக் குறிக்கிற கிரேக்க இலக்கண மரபாகும். "ஹோமோலேகவுன்ட்ஸ்" (homologounts) மூலம் ஈசெல்தோன் (eiselthon) என்பதுடன் இதன் சம்பந்தம், அந்த சந்தர்ப்பம், சூழ்நிலையில் இறந்த காலத்தை குறிப்பிடுவது சரியாக இருக்கிறது. (இபித். + 1289)

"ஆகவே, இரண்டாவது மேற்கோளாகச் சொல்லப்பட்ட வசனம் கீழ்க்கண்டபடி அமைப்பதே சரியானதாகும். "பல வஞ்சக ஆவிகள் இந்த உலகத்திலே வந்து போயினர். இயேசு கிறிஸ்து

மாம்சத்தில் வந்தார் என்பதை அறிக்கை பண்ணாதவர்கள் இவர்களே."

இந்த விளக்கத்தையோ, மொழிபெயர்ப்பையோ எந்த கிரேக்க அறிஞரும் சரியல்ல என்று கூறமாட்டார்கள். அப்படிப்பட்ட அறிஞர்கள் இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகையில் வரும்போது மாம்சத்தில்தான் வருவார் என்று கருதி தன்னுடைய கருத்தை நிலை நாட்ட விரும்புகிறவர்கள் கூட இம்மொழி பெயர்ப்பை சரியென்று ஏற்றுக் கொள்வர்.

இறுதியாக, இயேசு கிறிஸ்து தம் முதலாம் வருகையில், மாம்சத்தில் வந்தார் என்று விசுவாசிப்பதே, ஈடுபலியை விசுவாசிப்பதற்கு அடிப்படையாகும். அவர் மாம்சத்தில் வந்ததை மறுப்பவர்கள் ஈடுபலியையும் மறுதலிக்கிறவர்களாவார்கள். (இப்படி இது சத்தியமாக இராவிடில் அவர் ஈடாகவோ, பலியாகவோ இருக்க முடியாதே) எனவே இயேசு கிறிஸ்து உயிர்த்தெழும்வரை மனிதராக இருந்தது மட்டுமல்லாமல், இரண்டாம் வருகையிலும் மனிதாரகத்தான் வருவார் என்பதை விசுவாசிப்பவர்கள், அவருடைய ஈடுபலியை விசுவாசியாதவர்கள் என்பதை திட்டமாகத் தெரிந்து கொள்ளலாம். நமது கர்த்தர் தன் மாம்ச சரீரத்தை தேவனுக்கு ஒப்புக் கொடுக்காதிருந்தால், அல்லது தன்னுடைய சரீரத்தை மூன்று நாளைக்கு மட்டும் விட்டுக் கொடுத்து மறுபடியும் அதே சரீரத்தைப் பெற்றுக் கொண்டாரென்றால் விலைக்கு வாங்கிய ஒன்றை கொடுத்தவரிடத்திலேயே திருப்பிக் கேட்பது போலவும் இருக்கிறது. ஆனால் இதற்கு மாறாக, கிரயத்துக்கு வாங்கியது என்பது உறுதியானதும், இறுதியானதுமாகும். நமது கர்த்தர் மனிதரானது ஆனது தான். அவர் திரும்ப மனித உடலைப் பெற்றுக் கொள்ளவே இல்லை. அவரை தேவன் உன்னதத்திற்கு உயர்த்தி, அவருக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தையும் சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள் துரைத்தனங்கள், அதிகாரங்கள், தேவ தூதர்கள் ஆகியவர்களுக்கும் மேலான சுபாவத்தைத் தந்தருளினார். பிதாவிற்கு அடுத்தபடியான ஸ்தானத்தில், வேறு எவருக்கும் கொடுக்கப்படாத இடம் கொடுக்கப்பட்டது. அவர் இனி ஒருக்காலும் நம்மில் ஒருவரைப் போன்ற மனிதனாக இருக்கவே முடியாது. நாம்

விசுவாசமுள்ளவர்களாக இறுதிவரை நிலைத்திருந்தால், நாம் அவரை தரிசிக்கக் கூடியவர்களாய் மாற்றப்பட்டு, அவருக்கொப்பான வர்களாய் இருந்து அவரை தரிசிப்போம். - 1 யோவா 3:2

## அழகுள்ள அனைத்தையும் கடந்த அழகு

*மீட்பரின் மேன்மை தங்கிய மாட்சியமைகளெல்லாம்*
*அவருடைய நெற்றி சிங்காசனத்தில் வீற்றிருக்கிறது;*
*சுடர்விடும் மகிமையால் அவருடைய தலை கிரீடம் சூட்டப்பெற்றது,*
*கரைகாணாத கிருபை அவரது உதடுகளை ஊடுருவுகின்றது.*

*மனித குமாரர்களில் எவரோடும்*
*ஒப்பிட முடியாதவர்;*
*வானமண்டலங்களிலுள்ள அழகுடைய எல்லாவற்றையும் விட அழகானவர்.*

*மனுக்குலம் மாபெரும் துயரப் பள்ளத்தாக்கில்*
*மருண்டு வீழ்ந்ததைக் கண்டவுடனேயே,*
*அவர்களைக் காப்பாற்ற பறந்தோடி வந்தார்;*
*அவமானச் சிலுவையை நமக்காக அவர் சகித்தார்,*
*நமது துக்கதுயரங்களை தனதாக்கிக் கொண்டார்.*

*மாமேன்மையும் அருமையுள்ள திவ்ய வாக்குத் தத்தங்களால்,*
*நம்மை பாதுகாக்கிறார்;*
*நமது விசுவாசம் இம்மாமலையைச் சார்ந்து இருக்கும்வரை*
*அசைக்கமுடியாத பாதுகாப்பு அரணாகிறது.*

*ஓ! ஆழங்காண முடியாத ஐஸ்வரியமான,*

*அகல நீளம் அளவிட முடியாத தெய்வீக அன்பே!*

*நீசன் என்னை சொந்தமாக்கிய நேச மீட்பரே!*

*நீச உலகில் எனக்கு ஏதும் வேண்டாம்.*

## *அத்தியாயம் 12*

# ஒப்புரவாகுதலின் பாடம் -மனிதன்

*மனிதன் என்றால் என்ன? - பழமைவாதிகளின் கருத்து-விஞ்ஞான பூர்வமான பதில்-வேதாகமப் பதில்-மனிதனின் சரீரம்-மனிதனின் ஆவி-மனிதனின் ஆத்துமா-தவறான மொழிபெயர்ப்பினால் குழப்பம்-ஆத்துமா பெருகுதல்-மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆத்துமா செல்லுகிற இடமாகிய "ஹேதேஸ்," "சியோல்" என்றால் என்ன? ஆவிக்குரிய செய்திகளை ஆழ்ந்து ஆராய்தல்.*

*"மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன். நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர். ஆடுமாடுகளெல்லாவற்றையும் காட்டு மிருகங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும் கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்."*
*- சங்.8:4-8*

ஒரு மனிதன் என்பவன் எவ்வளவு பாக்கியமானவனாக இருந்திருக்க வேண்டும்? ஏனெனில் இந்த வானத்தையும் பூமியையும் படைத்த பரமபிதா அவனைத் தம்மோடு ஒப்புரவாக்க தனது சொந்த குமாரனையே ஈடுபலியாகக் கொடுத்திருக்கிறார். பூமியில் தேவன் சிருஷ்டித்த படைப்புகளெல்லாவற்றிலும், மனிதனே உன்னதமானவன் என்பதை நாம் அறிந்தாக வேண்டும். அப்படியிருப்பினும், நம்முடைய நிதானம், நம்முடைய அறிவு, ஞானம் அனைத்தும் ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தி, அந்த வட்டத்திற்குள் வளைய வரும்படியாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிருஷ்டி கர்த்தாவாகிய அவருடைய மகத்துவமுள்ள வேதத்தில்

குறிப்பிட்டு காண்பிக்கப்பட்ட அளவே நம்மால் அறிந்து கொள்ள முடியும். “மனுக்குலத்தைப் பற்றி படிக்க வேண்டிய உன்னத படிப்பே- மனிதன்” என்று பழமொழியாக சொல்லப்பட்டாலும், மனிதனைப் பற்றிய படிப்பே மாண்புமிக்க படிப்பும், அதே சமயத்தில் புரிந்து கொள்ள மகா கடினமான படிப்புமாகும். மனிதன் என்பவன் யார்? இதனைக் குறித்து இரண்டு பொதுவான கருத்துக்கள் நிலவுகின்றன. அவை இரண்டுமே வேதாகமத்திற்கேற்ற சரியான கருத்தல்ல. இரண்டு விதமான கருத்துக்களிலும் ஓரளவு உண்மையிருப்பினும், அந்த இரண்டு கருத்துக்களும் தவறான முடிவினையும், தவறான பாதைக்கு இட்டுச் சென்று தப்பறையான முடிவைத் தருகின்றது. இந்தக் குழப்பத்தில் சிக்கிக் கொள்ளாதபடி எச்சரிக்கையாயிருக்க நினைப்பவர்கள் கூட, தப்பறையின் மேல் குழப்பமடைந்து இறுதியில் குழம்பிவிடுகிறார்கள். பெரும்பாலான தவறான கருத்துக்களும் உண்மையின் சாயல் உள்ளதுபோல தோற்றமளிக்கும். சத்தியத்தை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகிறவர்களுக்கும்,சத்தியத்தின் முழுப்பயனை அடைய விரும்புகிறவர்களுக்கும், சத்தியத்திற்குத் தங்கள் இருதயங்களில் இடங்கொடுத்து, சத்தியமே தங்களை எல்லாத் துறைகளிலும் வழிகாட்ட வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கும் நாம் இப்பொழுது பார்க்கின்ற பாடம் முக்கியமானதாகும். இப்பொழுது நாம் சிந்திக்கின்ற இந்த ஒப்புரவாகுதலின் பாடம் மனிதனைப் பற்றிய எல்லாப் படிப்புகளிலும் மிக விசேஷமான பாடமாகும். மனிதன் யார் என்ற சரியான கருத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் வேதாகமத்தின் முக்கியப் பாடமான பாவம், சாபம், மரணத்தால் தேவனிடம் ஏற்பட்ட பகை நீங்கி ஒப்புரவாகுதல் ஆகியவைகளை புரிந்து கொள்ள முடியாது.

மனிதன் யார் என்ற கேள்விக்கு பொதுவாகவும், புராதனமாகவும் இருக்கிற கருத்தை இங்கே ஆராய்வோம். அடுத்து விஞ்ஞான கருத்தையும், இறுதியாக வேதாகம கருத்தையும் கவனிப்போம். மேற்சொன்ன இரண்டு கருத்துக்களும் வேதாகமத்திற்கு இசைவானதல்ல என்பதையும் வேதாகமத்தினால் மட்டுமே இசைவான கருத்தை காரண காரியத்தோடு அறிவியல்

ரீதியாக விளக்க முடியும் என்பதையும் நிரூபிப்போம்.

## மனிதனைப் பற்றிய புராதனக் கருத்து

பழைய வேத சாஸ்திரிகளின் கருத்து:-

"மனிதன் -உடல், ஆத்துமா, ஆவி என்கிற மூன்று பாகங்களால் உருவானவன்." மிருகங்கள் பிறப்பது போலவே மனிதனும் தோன்றுகிறான். அவ்வாறு தோன்றும்போது, கடவுள் தம்முடைய பாகமான அழிக்க முடியாத ஆவியையும், ஆத்துமாவையும் அந்த உடலுடன் கலக்கச் செய்து விடுகிறார். இது எப்படி ஐக்கியப்படுத்தப் பட்டது என்பது யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இந்த ஆத்துமா சாகாமை வாய்ந்தது. ஆவி, ஆத்துமா என்பதை, வகைப்படுத்தி, பிரித்துக் காண்பிக்க இயலாததினால் இரண்டும் ஐக்கியமுள்ளவை. மேலும் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று மாறக்கூடியது. ஆவி ஆத்துமா இரண்டும் சேர்ந்துதான் மனிதன். இந்த மனிதனுக்கு வெளிப்போர்வையாக சரீரம் கொடுக்கப்படுகிறது. பூமிக்குரிய நாளெல்லாம் அவன் வாழ்கின்ற வீடே அந்த உடலாகும். அவன் மரணமடையும்போது அவன் உயிர் தங்கியிருந்த சிறையாகிய கூட்டைவிட்டு (சரீரம்) விடுதலையாகி இதைவிட சுதந்திரமான ரம்மியமான இடத்திற்கு போய் விடுகிறது.

இதை வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், பழங்கால வேத சாஸ்திரப்படி, மனிதன் ஆவிக்குரிய ஜீவியைப் போல இருக்கிறான். எந்த விதத்திலும் பூமிக்குரியவனாக இருப்பதில்லை. ஆனாலும் இந்த மாம்ச ரீதியான அனுபவங்களை அடைய வேண்டியது ஒரு விதிவிலக்கு. மரணத்தின் மூலம் சிறையிலிருந்து விடுப்பட்டவுடன் ஆசீர்வாதங்களைப் பெறுகிறான் என்று அவர்களது கொள்கை வரையறை செய்கிறது. மனிதன் எவ்வளவு தான் சத்துணவு, ஆரோக்கிய வழிமுறைகளை கடைப்பித்து தன் வாழ்நாளெல்லாம் வாழ்ந்தாலும், ஆயுள் நாட்களை அறிவியல்படி அதிகரிக்க எண்ணினாலும், இவையெல்லாம் இந்தக் கொள்கை அடிப்படையில் மிகத் தவறான செயல்பாடுகளாகும். மரணத்திலிருந்து விடுதலையாகிற செய்தி கூட பரிணாம வாதத்தை நோக்கிச் செல்கின்ற இன்னொரு படியாகும் என்று கருதப்படும்.

அறிவியல் கூறுகின்றபடி, மனிதனும் உடனடியாக மனிதனாகவே படைக்கப்படவில்லை. நீண்ட காலத்திற்குப் பின்னர் தான் அவன் மனித நிலையை அடைந்தான். இதுபோலவே இப்போது பிராணியாக, மிருகமாக இருக்கக் கூடியவைகள் ஆவிக்குரிய நிலைமைக்கும், பூமிக்குரிய நிலையில் இருப்பவர்கள் பரலோக நிலைமைக்கும் பரிணாம மாற்றமடைவார்கள் என்பதே அநேகருடைய சிந்தனை. இது அளவையியலின் படியும், விஞ்ஞான முடிவுக்கும் உட்பட்டதாக அநேகர் கருதுகின்றனர். அதன்படி மனிதன் மனிதனாக உண்டாக்கப்படாமல் பரிணாம வளர்ச்சியின் மூலம் மனித நிலையிலேயே பல யுகங்களாகியிருக்கலாம் என்பது அவர்கள் கூற்று. வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடங்கி, நுண்ணிய உயிரியாக இருந்து, பல்வேறு நிலைகளைக் கடந்து குரங்கு நிலையையடைந்து, இறுதியாக மனித நிலையை அடைந்தான். ஆதி மனிதன் தோன்றிய காலத்தில், தற்காலத்தில் இருக்கிற மனித நிலைமையைக் காட்டிலும் மிகமிக கீழ்த்தரமாக அவன் இருந்திருக்க வேண்டும். பரிணாம வளர்ச்சியின்படி மனிதன் இப்பொழுதிருக்கிற நிலையை அடைய வெகுகாலம் ஆனது. இனி அடுத்த நிலைமையை அடைய வேண்டுமானால் அதற்கும் நெடுங்காலம் சென்று, அவன் ஆவிக்குரிய ஜீவியாகிய தூதனுடைய நிலைமையையோ, கடவுள்களுடைய நிலைமையையோ அல்லது சாத்தான்களுடைய நிலைமையையோ அடைவான்.

இவைகளெல்லாம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் வளர்ச்சி, பெருமையைச் சார்ந்ததாகும். பூர்வத்தில் உபயோகமற்றதாயிருந்த பிராணிகள், பொருள்கள் கூட இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சியின் மூலமாக பயன்படும் பொருளாக மாற்றிக் காண்பித்திருக்கிறது. அறிவிய-ன்படி எதிர்காலத்தில் அவை இன்னும் உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படக் கூடும். இந்த பரிணாம வளர்ச்சி நாகரீகமடைந்த மக்கள் வாழும் தேசங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று சொல்வதிற்கில்லை. பொதுவாக பார்க்கும்பொழுது, எல்லா புறஜாதிமக்களும், காட்டுமிராண்டிகளும் கூட மனிதனைப் பற்றி நாகரீகமடைந்தவர்கள், நாகரீகமடையாதவர்கள் எல்லாருக்கும் ஒரே கருத்துதான் நிலவுகிறது. ஒரே வித்தியாசம் என்னவெனில் நாகரீகமடையாதவர்கள் மனித ஆரம்பத்தைக் குறித்து

அறியாதிருக்கிறார்கள். இந்த சிந்தனை எல்லா புறஜாதியாரின் தத்துவத்திற்கும் தற்கால அறிவியலார் வகுத்த கொள்கைகளுக்கும் ஆதரவாய் இருக்கிறது. இந்தக் கருத்துக்களை அவர்கள் வேற்றுமையான முறையில் விளக்குவதற்குக் காரணம் இவர்கள் அடிப்படையில் பரிணாமக் கொள்கையை மிகவும் நேசித்து, பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் எதிர்கால வாழ்க்கையை நம்பிக்கையோடும் ஆவலோடும் எதிர்பார்த்திருப்பதேயாகும். விஞ்ஞான ரீதியில் காரண காரியத்தின் அடிப்படையில் அவர்களுடைய பரிணாமக் கொள்கை அடிப்படையிலேயே ஒத்துவராதிருந்தும், தங்களுடைய மாயமான கருத்தை நியாயப்படுத்த முனைகிறார்கள். மனிதனுக்குள் இந்த ஜீவன் எப்படி தோன்றியிருக்க முடியும் என்பதற்கு சரியான விளக்கமில்லை.

## அறிவியல் பார்வையில் மனிதன்

மனிதன் யார் என்ற கேள்விக்கு அறிவியல் பூர்வமாகவும், எளிய முறையிலும் சொல்ல வேண்டுமானால், அவன் ஒரு மிருகத்தைப் போலவே பிறந்திருந்தாலும் மிக உன்னத நிலைக்கு முன்னேறியிருப்பவன் என்று சொல்லலாம். மற்ற மிருகங்களைப் போலல்லாமல், மனித உடல் கூற்றில் அமைப்பிலேயே வேறுபாடு உண்டு. அந்த வகையில் பார்த்தோமேயானால் மிக உயர்ந்த பெருந்தன்மையான முன்னேற்றத்தைக் கண்டது மனிதனே. மனிதனுக்கும் தங்களை விட கீழான மிருகத்திற்கும் மூளை அமைப்பில் ஒரே தோற்றம் காணப்பட்டாலும், மதிநுட்பம், நுண்ணறிவு ஆகியவற்றைப் பயிற்சியால் விலங்குகளை விட, மிக உன்னத முன்னேற்றம் அடைந்து வளர்ந்து கொண்டே செல்வதால், கீழ்த்தரமான விலங்குகளைவிட மேன்மை நிலையை அடைவதுடன், அவைகளை ஆண்டு நடத்துகிற அரசனாகவும், எஜமானனுமாக இருக்கிறான். மனிதனுடைய மூச்சு, அல்லது ஜீவ ஆவி, இவையனைத்தும் விலங்குகளுக்கு ஒத்தே இருக்கிறது. மனிதன் தன்னை உருவாக்கியவர்களிடமிருந்து சாயல், தோற்றம் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டது போலவே மிருகங்களும், தங்கள் சாயல் தோற்றங்களை, தங்களை ஈன்ற விலங்குகளிடமிருந்து சுதந்தரித்துக் கொள்கின்றன.

அறிவியலின்படி ஒவ்வொரு மனிதனும் ஒரு ஆத்துமா அல்லது உணர்வுள்ள ஒரு ஜீவி. ஆனால் எதிர்காலத்தைப் பற்றியோ, நித்திய வாழ்வைப் பற்றியோ அறிவியலில் இது சம்பந்தமாக எந்த ஒரு ஆலோசனையையோ, முன் வடிவோ கிடையாது. எந்த அடிப்படையிலும் இதற்கு ஒரு முடிவையோ, கருத்தையோ, விளக்கத்தையோ, காரணத்துடன் எடுத்துக் காட்ட முடியவில்லை. அறிவியல் எதிர்காலத்துக்குரிய எந்த நம்பிக்கையையும் பரிணாமக் கொள்கையின் அடிப்படையில் நமக்கு தராவிட்டாலும், கடந்த காலத்தை தேடமுடியும் என்று நம்புகிறது. இயற்கையின் நியமத்தை இறைவனாகக்கொண்ட பரிணாமவாதத்தால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட செயல்பாடுகளில் அறிவியல் பெருமிதம் கொண்டிருக்கிறது. இதே இயற்கையின் விதியின்படியே ஒவ்வொரு செயல்பாடுகளும் நம்பிக்கையோடு முன்னேறி, படிப்படியாக தற்போதைய நிலையைக் காட்டிலும் மனுக்குலம் முழுவதும் மாபெரும் கடவுளுக்கு ஒப்பாவார்கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறது.

## வேதாகமப் பார்வையில் மனிதன்

சில விஷயங்களில் மேற்சொன்ன இரண்டு கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டாலும், அவைகளில் சில அடிப்படையான கருத்துக்களை வேதாகமம் மறுத்துரைக்கின்றது. வேதாகமம் ஏனோதானோவென்று கருத்துக் கூறாமல், தெய்வ வெளிப்பாட்டை உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் தெளிவாக வலியுறுத்திச் சொல்வதோடு அதிகாரப் பூர்வமாயும் சொல்கிறது; மனிதனுடைய துவக்கத்தையும், தற்கால நிலைமையையும் கூறுகின்றது. வேதாகமப் பார்வை ஒன்றே திடமானது; சரியான பாரம்பரியக் கொள்கையும், சரியான அறிவியல் கொள்கையும் இதுவேயாகும். வேத கருத்து மனிதனுடைய பெருமையை தாழ்த்தவில்லை. அது, மனிதன் தனது சொந்த பரிணாமத்தினாலேயோ அல்லது கடவுளேயல்லாத இயற்கையின் நியமத்தினாலேயோ உண்டானவன் அல்ல என்று கூறுகிறது. முதல் மனிதனாகிய ஆதாமை தேவசாயலாக சிருஷ்டித்ததில் தேவனுக்கும் மகிமை, மனிதனுக்கும் பெருமை என்பது மனிதன் சிருஷ்டிப்பைப் பொறுத்த வரையில் வேதாகமப் பார்வையாகும். அந்த சாயலைக்

காப்பாற்றிக் கொள்ள முடியாமல் வீழ்ச்சிக்குள்ளானது மனிதனே. உடல், மன, ஒழுக்க வலுவிழந்து முடிவில் மரணத்திற்கு வழிநடத்துகிற பாவமே (கீழ்ப்படியாமை) இந்த வீழ்ச்சிக்கெல்லாம் அடிப்படைக் காரணம். மனிதன் வீழ்ச்சியடைந்து பாவத்தில் வாழ்ந்தாலும், மனிதனை பாவத்திலிருந்து மீட்பதற்காக ஒரு மீட்பரையும் மீட்பின் திட்டத்தையும், ஆயிர வருட அரசாட்சிக் காலத்தில் மனிதன் தான் முன்பிருந்த நிலைக்கு திரும்பவும் கொண்டுவருகிற ஏற்பாடும் தேவனுடைய தயாள குணத்தை வெளிப்படுத்துகிறது.

மனிதனுடைய இயல்பான சுபாவத்தைப் பற்றிப் படிக்கும்போது கிறிஸ்தவ மக்கள் மனதில் பல குழப்பங்கள் தோன்றுவதற்கு அடிப்படையான காரணம் என்னவெனில், வேதாகமக் கருத்தை சரிவரப் புரிந்து கொள்ளாததே ஆகும். அவர்கள் பொதுவான மனுக்குலத்தையும் சபையையும் பிரித்து பார்க்க தவறிவிட்டார்கள். வேதாகமத்தில் கூறியிருக்கிற தற்போதுள்ள சுவிசேஷ யுகத்தில், மனிதர்கள் மத்தியிலிருந்து தேவன் தெரிந்து கொண்ட திருச்சபையாகிய சிறுமந்தை, ஆவியின் சரீரத்தை எடுத்து தேவ சாயல் பெறுவதற்கு தகுதியுள்ளவர்களாக்குவதைக் குறித்து சரியாக புரிந்து கொள்ளத்தவறினதே குழப்பங்களுக்கெல்லாம் காரணம். “சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து” உணராமல் இருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் திருச்சபையாருக்கு மட்டுமே சொல்லப்பட்ட விஷயங்களையும் வாக்குத்தத்தங்களையும் அனைத்து மனுக்குலத்திற்கும் உரியது என்று எடுத்துக் கொள்கிறார்கள். அதுபோல் இழந்ததை திரும்ப பெறுகிற நம்பிக்கை மனுக்குலத்திற்கு மட்டுமே உரியது. “மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்” எல்லாம் மனுக்குலத்திற்குரியது அல்ல, சபைக்கு மட்டுமே உரியது. எனவே அப்.பவுல், “சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்” (ரோம 8:10) என்கிறார். இது திருச்சபையாருக்குத்தான் பொருந்துமேயல்லாமல், உலகத்தாருக்குப் பொருந்தாது. இந்த சுவிசேஷ யுகத்தில் திருச்சபையாருக்கு மாத்திரமே விசேஷ அழைப்பு கொடுக்கப்படுகிறது. இந்த அழைப்பு

*சகல மனுக்குலத்திற்கும் என்று தவறாக சிலர் வாதிடுகின்றனர். இந்த இடத்தில் "மரணமும்" "ஜீவனும்" சொல்லர்த்தமாக கூறப்படாமல் ஜீவிக்கும் நிலைமையையும், மரித்த நிலைமையையும் தொடர்புபடுத்திக் காண்பிக்க கூறப்பட்டதாகும். தேவ கிருபையினால் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் அந்த நிலைமைக்கு வந்தவுடனேயே அவர்கள் மரண சாபத்திலிருந்து மீட்கப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள். சாவுக்கினமான தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்து தங்களையே ஜீவ பலியாக தத்தம் செய்பவர்களாகக் கருதப்படுவார்கள். இந்த பூமிக்குரிய விஷயங்களில் அவர்கள் தங்களை மரித்தவர்களாகக் கருதிக் கொள்வார்கள். இப்படிப்பட்டவர்கள் இனிமேல் மாம்சத்துக்குரியவர்களல்ல, தேவனுடைய வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் புதிய சிருஷ்டியாக ஜெநிப்பிக்கப் பட்டவர்களாகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதினாலும், அவர்மேல் வைத்திருக்கிற விசுவாசத்தினாலும் நீதிமான்களாக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசிகள் (திருச்சபையார்) தெய்வீக நிலைப்பாட்டில் புதிய ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றுக் கொண்டவர்களாகிறார்கள். ஆனால், "மரணம்," "ஜீவன்" என்ற வார்த்தைகளின் பயன்பாடு உலகத்தாருக்கு உரியதல்ல, ஏனெனில் உலகத்திற்கு மனித சுபாவத்தைத் தவிர வேறு எந்த சுபாவமும் கிடையாது. எந்த பொருளிலும் உலகம் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட போவதில்லை.*

*இன்னொரு வசனத்தையும் அடிக்கடி சபையாருக்கு பதிலாக உலகத்தாருக்கு பயன்படுத்துகிறார்கள்.*

*"இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டகளில் பெற்றிருக்கிறோம்." (2 கொரி. 4:7)*

*இங்கு திருச்சபையாரை மட்டுமே பொக்கிஷமாகிய சிந்தையை, புதிய சுபாவத்தை உடையவர்கள் என்று குறிப்பிடுகிறது. பொக்கிஷமான இந்த புதிய சுபாவத்தை சாவுக்கேதுவான இந்த சாமான்ய மனித சரீரத்திலேயே பெற்றிருப்பதால் மண்பாண்டம் என்று குறிப்பிடுகிற விளக்கம் பொருத்தமானதே. இந்த விளக்கம்*

சபையாருக்கு மிகவும் பொருத்தமானதே. மனுக்குலம் பரலோக பொக்கிஷத்தை பெற்றிருப்பதாகவும், இந்த மாமிச சரீரமாகிய மண்பாண்டத்தில் புதிய சுபாவமாகிய பொக்கிஷத்தை பெற்றிருப்பதாகவும் கூறுவது தவறு. உலகத்திற்கு ஒரே சுபாவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மனித சுபாவமேயல்லாமல், புதிய சிருஷ்டியின் ஐஸ்வரியமான தெய்வீக சுபாவமல்ல. பிற்காலத்திலாவது அது அத்தகைய தேவ சுபாவத்தைப் பெறுமென்றும் சொல்வதற்கில்லை. இதற்கு நேர்மாறாக, மனுக்குலத்திற்கு கொடுக்கப்படக்கூடிய உன்னதமான ஆசீர்வாதம் என்னவெனில், அவர்கள் பூரண மனித நிலையாகிய முந்தின சீருக்கு கொண்டு வரப்படுவதேயாகும். ஏதேனில் இழந்துபோன பரிபூரண மனுஷ சுபாவத்தை கல்வாரியில் மீட்டெடுப்பார்கள். அப். 3:19-23.

இதுபோலவே புதிய ஏற்பாட்டில் அநேக வசனங்கள் உலக ஜனங்களுக்கு பொருந்தாமல், புதிய ஆவிக்குரிய சுபாவத்திற்கு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட, அர்ப்பணம் செய்த திருச்சபையாருக்கு மட்டுமே பொருத்தமாயிருக்கிறது என்பதை அறியலாம். அப்போஸ்தலர்கள் ஒவ்வொரு நிரூபத்திலும் ஒவ்வொரு விதமாக வாழ்த்துரை சொல்வதில் உள்ள கருத்தாழமான சொல்லாட்சியை ஆராய்ந்து பார்ப்பது அவசியம். அநேகம் பேர் இது உலக ஜனங்களுக்காகவும் எழுதப்பட்டது என்று நினைக்கின்றனர். அது தவறு. முற்றிலும் புதிய சிருஷ்டியாகிறவர்களாகிய பரிசுத்தவான்களுக்கே, விசுவாச வீட்டராகிய திருச்சபையாருக்கே பொருந்தும்.

இந்த அதிகாரத்தில், "மனிதன் யார்" என்று செய்யப்படுகிற ஆராய்ச்சி பொதுவான உலக மனிதனைப் பற்றியே அல்லாமல் தேவனால் அழைக்கப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்டு, ஏற்கனவே ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட, கிறிஸ்துவுக்குள்ளான புதிய சிருஷ்டிகள் இறுதிவரை உறுதியாய் விசுவாசத்தில் நிலைத்திருந்து முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குப் பெறப் போகிறவர்களாகிற இவர்களைப் பற்றி அல்ல என்பதை அனைவரும் நினைவில் கொள்வது நல்லது. இவைகளுக்கு மாறாக நாம், முதல் மனிதனாகிய ஆதாமையும் அவனுடைய சந்ததியாரைப் பற்றியுமே இங்கு சிந்திக்கின்றோம். மனுக்குலத்தின் அங்கமாக நாம் யார்? நம்முடைய

சுபாவம் என்ன? என்பதையே அறிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறோம். இப்படியாக மனிதன் எதனால் விழுந்தான்? எங்கு எப்படி வீழ்ந்தான்? எதிலிருந்து எப்படி மீட்கப்பட்டான்? மனிதன் திரும்பவும் எந்த நிலைமைக்கு சீர்திருத்தப்படுவான்? என்பது போன்ற ஒன்றுக்கொன்று தொடர்புடைய காரியங்களை மிக நன்றாய்ப் புரிந்து கொள்வதற்கே இந்த ஆராய்ச்சி.

## மனிதன் - சரீரம், ஆவி, ஆத்துமா

'விலங்கு' என்ற சொல்லுக்கு என்ன விளக்கமோ, அதே விளக்கத்தையுடையவனாக மனிதனும், விலங்கும் ஜீவனும் உணர்வும் உள்ளவை என்பதில் விஞ்ஞானத்திற்கும், வேதாகமத்திற்கும் வேறுபாடில்லை. மனிதன் விலங்கின் வகையாகக் கருதப்பட்டாலும், பூமியிலுள்ள மற்றெல்லாப் பிராணிகளுக்கும் அவன் அரசனாகவும். பிரதானமானவனாகவும் இருக்கிறான் என்பதை ஒப்புக் கொள்ளத் தடையில்லை. அறிவியல் சொல்லுகிற இந்தத் தர்க்க ரீதியான வாதங்களை வேதாகமம் தடையில்லாமல் ஏற்றுக் கொள்கிறது. இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் கொடுத்திருக்கிற வசனத்தை நன்கு கவனிக்கவும். இதில் மனிதன் தேவ தூதருக்குக் சற்றுச் சிறியவனாகப் படைக்கப்பட்டு இருந்தாலும், பிராணிகள், பறவைகள் இவையெல்லாவற்றிற்கும் மேலாகவும், அவற்றை ஆளுகின்ற அரசனாகவும் தேவனுடைய பிரதிநிதியாகவும் ஏற்படுத்தப்பட்டான் என்று தாவீது கூறியிருக்கிறார்.

தெய்வீக சுபாவத்தின் ஒரு சிறு பகுதி அல்லது பொறி ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்பட்டதாக வேதாகமத்தில் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு சிறுகுறிப்பும் கிடையாது. இதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாதிருப்பினும், ஆதாரமில்லாத ஒன்றை ஒரு கொள்கையாக, தத்துவமாக சித்தரிக்க முனைந்தவர்களுடைய வெறும் கற்பனையேயல்லாமல் வேறல்ல. இந்த ஆதாரமற்ற, அடிப்படையற்ற முற்றிலும் கற்பனையான ஒரு தத்துவம், கடவுளிலிருந்து ஒரு பகுதி ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பிலேயே வழங்கப்படுகிறது என்பதே பிற்காலத்தில் தோன்றிய தப்பறையான உபதேசங்களுக்கெல்லாம் அடிப்படையாயிற்று.

இந்தக் கொள்கை தேவனுடைய மகிமைக்கு இழுக்காகவும், அவருடைய குண இலட்சணங்களான ஞானம், நீதி, அன்பு, வல்லமை இவைகளுக்கு முரண்பட்டதாகவும் இருக்கிறது.

இப்படிப்பட்ட தெய்வீக சுபாவம் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற தவறான தத்துவத்தின் காரணமாகவே, அப்படிப்பட்ட நித்திய எரிநரகக் கொள்கையும் தேவைப்பட்டது. மற்ற மிருகங்களைப் போலவே மனிதனும் படைக்கப்பட்டிருந்தால், மற்ற மிருகங்கள் சாவது போலவே இவர்களும் சாவார்கள். அப்படியில்லாமல் தெய்வீக சுபாவத்தின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டதினால் இவர்கள் சாகமுடியாது. அதனாலேயே இவர்களை நித்திய எரிநரகத்தில் அழிக்க வேண்டியதாய் உள்ளது. தேவன் நித்தியராய் இருப்பது போல தேவனிடமிருந்து ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்ட மனிதனும் நித்தியத்திற்கும் இருப்பான். இதனால் தாம் சிருஷ்டித்த ஒரு மனிதனை அவரே அழிக்க விரும்பினாலும் கூட அழிக்க முடியாத நிலையை அடைந்துவிட்டான். இதனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் ஒருக்காலும் அழிக்கபட முடியாததால், அவன் எங்காவது ஒரு மூலையில் ஏதாவது ஒரு ரூபத்தில் இருந்து கொண்டே இருப்பான் அவர்கள் கொள்கையின்படியே பார்க்கப் போனால், விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச்சிலரே (சிறுமந்தை) பரிசுத்தவான்களாகவும், தேவனுக்குப் பிரியமானவர்களாகவும் இருப்பார்கள்; பரிசுத்தவான்களாகிய சிலர் ஆசீர்வதிக்கப்படுவது போல, பரிசுத்த மற்ற கோடான கோடிப்பேர் நித்திய எரிநரகத்தில் சதாகாலமும் வெந்து கொண்டிருப்பர். துன்மார்க்கர் பூமியிலிராதபடி அழிக்கப்படுவது எல்லா மனிதனுடைய விருப்பத்திற்கும், கடவுளுடைய மகிமைக்கு ஏதுவாகவும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும். அகில உலகத்திற்கும் சந்தோஷமும், சமாதானமும் உண்டாக இப்படி துன்மார்க்கர் சங்கரிக்கப்படுவதே நலமாயிருக்கும். எவரையும் படைக்கின்ற கடவுள் துன்மார்க்கராய்ப்போன, தன்னால் படைக்கப் பட்டவர்களையே அழிக்க திராணியவற்றவர் என்பதே அவர்களுடைய வாதம். இதற்குக் காரணம், அந்தக் கொள்கையின்படி படைக்கும்போதே அந்த தெய்வீகத் தன்மை ஒவ்வொரு

மனிதனிடமும் கொடுக்கப்பட்டு விட்டது. இந்தக் தத்துவமும் கொள்கைகளும் தர்க்க ரீதியிலும், காரண காரிய அடிப்படையிலும் சத்தியத்திற்கு நேர் விரோதமான கொள்கை என்று நாம் நம்புகிறதை அனைவரும் அறிய வேண்டி விளக்கமாக எடுத்துக் காண்பிக்கிறோம். இதற்கு சத்திய ஆதாரம் இல்லை என்பது மட்டுமல்ல, இதுமுற்றிலும் இருண்ட யுகத்தின் புராணக் கட்டுக்கதை. இவைகள் சத்தியத்திற்கொவ்வாத தப்பறையான கட்டுக் கதைகளென்பதை வேதாகமம் ஆணித்தரமாக எடுத்தியம்புகிறது.

வேதாகம அடிப்படையின்படி மனிதன் என்பவன் இரண்டு கூறுகளால் ஏற்பட்டவன். (1) உடல், (2) ஆவி இவையிரண்டும் சேர்ந்து ஆத்துமா என்கிற உயிருள்ள உணரும் தன்மையையும், நுண்ணறிவுமுள்ள மனிதத்தன்மையை உண்டாக்குகின்றது. 'சரீரம்' என்பது அங்கங்களால் ஆன உடற்கூறு மட்டுமே. இது ஜீவனளிக்கக்கூடிய உயிருடனோ, உயிருள்ளதால் உண்டாகக்கூடிய உணர்வுடனோ நேரடியாகத் தொடர்பு ஏற்படாமல், உயிரும் உடலும் ஒன்று சேர்ந்த பின்னரே உணர்வுப்பூர்வமாக ஒவ்வொன்றையும் உணர முடிகிறது, நுண்ணறிவு ஏற்படுகிறது. சரீரமில்லாமல் எந்த மனிதனும் உயிர்வாழ முடியாது என்ற போதிலும், வெறும் சரீரம் மாத்திரமே மனிதனாக முடியாது. அதுபோலவே ஜீவ ஆவி இல்லாவிடில் அவன் மனிதனாக வாழ முடியாததுபோல, வெறும் ஆவி மட்டுமே மனிதனாக முடியாது. பழைய ஏற்பாட்டில் வரக்கூடிய 'ஆவி' என்ற பதத்திற்கு எபிரேய சொல் 'ரூவாக்' என்பதாகும். இதற்கு அநேக பொருள் இருந்தாலும், பிரதானமாக 'மூச்சு' என்பதே அதனுடைய முக்கியப் பொருள். இதினிமித்தமாக ஜீவ சுவாசம், ஜீவ ஆவி என்றெல்லாம் சொற்கள் தோன்றின. எனவே முதன்முதலில் உயிர்பெற்ற மனிதன், சுவாசத்தினால் தாங்கப்படுகிறான்.

இருந்தபோதிலும், 'ஜீவ ஆவி' என்பது வெறும் மூச்சு சம்பந்தமான பொருள் மட்டுமல்லாமல், கருத்தாழம் கொண்ட ஒரு சொல். முதன்முதலாக ஒரு மனிதன் சுவாசிக்கின்ற ஜீவக் காற்றாகும். அந்தக் காற்றை மட்டும் அவன் சுவாசிக்காதிருந்தால் அவனுக்குள் ஜீவன் தோன்றாது. நாம் நமது தந்தையாரிடமிருந்து பெறுகின்ற ஜீவனின் கருவானது, தாய் மூலமாகப் போஷிப்பிக்கப்பட்டு வளர்ச்சி பெறுகின்றது. மிருக ஜீவன்கள் தங்கள் சுவாசத்தின் ஜீவனை எப்படி

பெற்றோரிடமிருந்து பெறுகின்றனவோ அதுபோலல்லாமல், அதி அற்புதவிதமாக, மனிதர் தங்கள் ஜீவ சுவாசத்தைப் பெறுகிறார்கள் என்பது உண்மையல்ல. மனிதருக்குக் கீழான நான்கு கால் பிராணிகள், குதிரை, நாய் போன்றவை அதனுடைய ஆண்களால் ஜீவன் கொடுக்கப்பட்டு, பெண் இனத்தால் பெற்றெடுக்கப்பட்டு, பேணப்பட்டு வளர்ச்சி பெறுகின்றன. இத்தகைய மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் பிறப்பால் பேதமில்லை. இவைகளுக்கிடையே ஒற்றுமை உள்ளதே அல்லாமல் வேற்றுமை இருப்பதாக வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. மனிதன் தெய்வ சுபாவத்தில் ஒரு பகுதியைப் பெற்றிருக்கிறான், ஆதலால் அவன் விலங்குகளைவிட வேறுபட்டவன் என்பதெல்லாம் மனிதருடைய தப்பறையான கொள்கையும், மனிதனுடைய சொந்த கண்டுபிடிப்புமாகும். இவ்வுலகிற்கு வந்து பிறந்த ஒவ்வொரு மனிதக் குழந்தையையும், தேவன் நேரடியாகப் படைத்தார் என்பது தவறான கொள்கையாகும். எப்படியெனில் வேதாகமம் மறுக்கிற கருத்தை இவர்கள் ஆதரிக்கின்றனர். அப்படி ஒவ்வொருவரையும் கடவுளே படைக்கிறார் என்பது உண்மையானால், பாவம், குழப்பம், அபூரணம் இவற்றுக்கெல்லாம் அவரே காரணராகிவிடுவார். மாறாக "அவருடைய கிரியை உத்தமமானது" என்று வேதாகமம் விளம்புகிறது. *(உபா 32:4)* மன ரீதியாகவும், உடல், ஒழுக்க ரீதியாக குறைவுள்ள அங்கஹீனங்களோ, பலவீனமோ, குறைபாடுள்ள எந்தப் பிறவியும் தேவனால் படைக்கப்பட்டதாய் இருக்க முடியாது. இவர்கள் பூரணமான ஆதாமின் விழுகைக்குப் பின்னால் பல காலமும், பல பாவங்களின் தொகுப்பினாலும் விபத்துக்கள் போல வந்து நேர்ந்த விபரீதப்பிறப்புக்கள். பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமை மட்டுமே தேவன் தனது பொறுப்பில் படைத்தார். தேவனே ஒவ்வொரு குழந்தையின் பிறப்புக்கும் பொறுப்பாளி என்பவர்கள், ஒவ்வொரு பிறவிக் கோளாறுக்கும் அங்கஹீனத்திற்கும் பைத்தியத்திற்கும் தேவனையே பொறுப்பாளியாக்குகிறார்கள். பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து அங்கக் குறைபாடுகளையோ, புண்ணியமோ, பழியோ, கெட்ட பழக்கங்களையோ, நற்குணங்களையோ, திறமைகளையோ சுதந்தரித்துக் கொள்கின்றனர் என்று வேதாகமமும்

*அறிவியலும் சரியாக எடுத்துரைக்கின்றது.*

*“இப்படியாக ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்த படியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று” (ரோமர் 5:12) என அப்போஸ்தலரும் வெகு விளக்கமாக இந்தக் கருத்தை எடுத்துரைக்கிறார். இதே கருத்தை, “பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின” - (எரேமி. 31:29) என முற்காலத்திலேயே எரேமியா இந்த பலவீனத்தின் தொடர்ச்சியை எடுத்துக் காண்பிக்கின்றார். (எசேக் 18:2)*

*நம்முடைய முதல் பெற்றோருக்கு தேவன் தம்முடைய சாகாமை வாய்ந்த ஜீவனில் ஒரு பகுதியை வழங்கியிருக்கக்கூடாதா? அந்த நித்திய ஜீவன் வழிவழியாக, தலைமுறை தலைமுறையாக அனைத்துலக மக்களும் பெற்றிருக்க வாய்ப்பில்லையா? என்று சிலர் கேட்கலாம். இந்தக் கருத்தைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்று கருத்தாய் கவனிப்போமாக. எல்லாருக்கும் கிடைக்கப் பெற்றிருக்கிற வேதாகமம் தவிர, வேறு பிரத்தியேகமான எந்த வெளிப்பாடும் எவருக்கும் எக்காலத்திலும் தேவனால் வழங்கப்படவில்லை. எனவே நமக்கு என்ன தெரிய வேண்டுமோ அதை வேறுயாருக்கும் தனியாக வெளிப்படுத்தாமல், கொடுக்கப்பட வேண்டிய எல்லா விளக்கங்களும் வேதாகமத்திலேயே கொடுக்கப்பட்டுவிட்டன. ஆதியாகமத்தில் இதைப்பற்றி என்ன வாசிக்கிறோம்? மிருகங்கள், தாவரங்கள் ஆகியவற்றை அவர் சிருஷ்டித்ததை வெகு சுருக்கமாகச் சொல்லிவிட்டு, மனிதனை சிருஷ்டித்ததை மட்டும் வெகு விளக்கமாகவும் துல்லியமாகவும் சொல்லியிருக்கிறார். மனித சிருஷ்டிப்பைப் பற்றி வெகு எளிமை யாகவும் தெளிவான மொழியிலும் சொல்லப்பட்டுள்ளது. அப்படிச் சொல்லப்பட்ட பகுதியில் எங்கும் இப்படி சாகாமை வாய்ந்த தன்மையின் ஒரு பகுதி கொடுக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை. விலங்குகளைப் பார்க்கிலும் மனிதன் அவைகளை ஆண்டு கொள்பவனாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் என்பதில், விலங்கிலிருந்து மனிதன் வேறுபட அவனுக்கு சாகாமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எங்கும் குறிப்பிடப் படவில்லை.*

மனிதன் எல்லாவற்றிற்கும் மேலான உருவத்தில், மேலான சரீரத்துடன் காரண காரியத்தை சிந்திக்கக்கூடிய மிருகங்களுக்கில்லாத பகுத்தறியும் மூளையுடன் படைக்கப்பட்டான். சாமான்ய மிருகங்களுக்கெட்டாத தொலை நோக்குப் பார்வையுடையவனாக மனிதன் படைக்கப் பட்டான். இவைகளெல்லாம் இப்படி அருளப்பட்டிருப்பதால் மனிதன் மற்ற விலங்குகளுக்கு மேற்பட்டவனாகவும், ஆவியின் ரூபத்தில் இருக்கிற அவருடைய தேவ சாயல், தேவரூபம் உடையவனாக, மாம்சத்தில் படைக்கப்பட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (யோவா 4:24)

## மனிதனின் ஆவி

இந்த 'ஆவி' என்ற வார்த்தைக்கு பொது மொழி பெயர்ப்புகளிலெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிற மூல எபிரேயச் சொல் "ரூவாக்" என்பதாகும். அதன் கிரேக்கச் சொல் "நியூமா" என்பதாகும். இதனை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். ஆனாலும் தேவனுடைய கருத்தை உள்ளபடியே விளங்கிக் கொள்ள வேண்டுமானால் அதற்கு வேறு என்னென்ன அர்த்தங்கள் உள்ளன என்பதை புரிந்து கொண்டிருக்க வேண்டியது அவசியம். நாம் ஏற்கனவே பார்த்தபடி, "ஆவி" என்பதற்கு "காற்று" என்பது முதற்பொருளாகவும், அடுத்தபடியாக அது கண்ணில் காணமுடியாத வல்லமையையும் குறிக்கும். இதே சொல் தேவனைக் குறிப்பிடுகின்ற இடங்களில் அவருடைய வல்லமையையும், அவரைக் காணக்கூடாத தன்மையையும் குறிக்கும். தேவனுடைய செயல்பாட்டையும் ஆதிக்கத்தையும் விளக்குவதற்கு இச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆவி என்பது காணமுடியாத மனதின் திறனைக் காண்பிக்கிறது. ஏனெனில் அது தொட்டுணர முடியாமலும் காணக்கூடாமலும் இருக்கக் கூடிய சக்தி அல்லது வல்லமையைக் குறிக்கும். "வார்த்தை"களும் காணக்கூடாதவைகளாயிருப்பினும் வல்லமை வாய்ந்தவைகளாகும். மின்சாரத்தைப் போவே "ஜீவனும்" எல்லா முக்கியத்துவமும், எங்கும் வியாபித்திருக்கிறதாயும், காணமுடியாத தன்மையையும் குணங்களையும் உடையதாயுமிருக்கிறது. எனவே இப்பொழுது சொல்லப்பட்ட தன்மையையும் பொதுவாக விவரிக்க ஆவி என்ற சொல் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக, வேதாகமம் நமது மனதின் ஆவி என்றும், காணமுடியாத நம்முடைய

மனதின் வல்லமை என்றும், ஒரு மனிதனின் ஆவி என்றும், ஒரு மனிதனின் மனவல்லமை என்றும், மனோ சக்தி என்றும் கூறுகின்றது; ஜீவ ஆவி, ஜீவிக்கும் வல்லமை நமது உடல்களையும் எல்லா ஜீவிகளையும் இயக்குகிறது. தேவ ஆவி அல்லது வல்லமையை பயன்படுத்தி தேவன் எல்லாவற்றையும் இயங்கச் செய்கிறார். ஞானமுள்ள மனமே ஞான ஆவியாகும். அன்பென்ற குணத்தை தோற்றுவித்து, செயல்படுத்துகிற ஆவியே அன்பின் ஆவியாகும். தீமையான குணம், தீய செயல்களை வெளிப்படுத்துகிற ஆவி தீய ஆவியாகும். சத்தியம் பயிற்றுவித்து, சத்திய வழியிலே முற்றும் முடிய நடத்துகிற ஆவி சத்திய ஆவியாகும். உலகம் பயிற்றுவித்து, உலக குணங்களால் செயல்படுத்தும் ஆவி உலக ஆவியாகும். இதுபோலவே, பரலோக ஜீவிகள் காணக்கூடாதவைகளாகவும், வல்லமையுடையவைகளாகவும், அறிவுக்கூர்மை உடையவைகளாயும் இருப்பதால் அவை ஆவியின் ஜீவிகளாக கூறப்படுகின்றன. இது, நமது ஆண்டவராகிய இயேசு, "தேவன் ஆவியாயிருக்கிறார்" என்று குறிப்பிடுகிற பிதாவாகிய தேவனை மட்டும் குறிக்காதபடி, உயிர்த்தெழுதலுக்குப்பின் இருக்கிற கிறிஸ்துவையும் குறிக்கிறது. வேதம் கூறுகிறது: "நமது கர்த்தரும் இப்போது ஆவியாயிருக்கிறார்." தேவ தூதர்களுக்கும், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் திருச்சபையாராகிய மணவாட்டிக்கும், இந்த ஆவிக்குரிய நிலமை பொருந்துகிறது. மேலும், சாத்தானும் அவனது தூதர்களும் கூட வல்லமையுள்ள, காணக்கூடாத ஆவியின் ஜீவிகளாக இருப்பதாக வேதம் கூறுகிறது.

## புதிய ஏற்பாட்டில் கூறப்படுகிற புதிய சுபாவம், புதிய ஆவி

மனிதனைப் பற்றி சொல்லும்போது, 'ஆவி' என்று குறிப்பிடுகின்ற இடங்களை நாம் சிந்திக்கையில், கீழ்க்கண்டவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

1. புதிய ஏற்பாட்டில், 'ஆவி,' 'ஆவிக்குரிய' என்ற சொற்கள் கீழ்க்கண்டவற்றைக் குறிக்க உபயோகப் படுத்தப்பட்டுள்ளன.

அ) புதிய சுபாவத்திற்குட்பட்ட பரிசுத்தவான்களுடைய 'மனது.' தேவ ஆவியினாலும், வார்த்தையினாலும்

*ஜெநிப்பிக்கபட்டவர்கள், கிறிஸ்துவுக்குள்ளாக புதிய சிருஷ்டிகளாக்கப்பட்டவர்கள். இவர்களே மனித நிலையிலிருந்துஆவிக்குரிய நிலைமைக்கு அழைக்கப்பட்டவர்கள். இவர்கள் இறுதிவரை விசுவாசத்தில் உறுதியாய் இருந்தால், முதலாம் உயிர்த்தெழுதலில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த சுபாவத்தைப் பெறுவார்கள்.*

*ஆ) உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் கிறிஸ்து பெற்ற "ஆவிக்குரிய" நிலையை அடைவார்கள். அது பரம பிதாவின் மகிமையுள்ள புதிய தெய்வீக சுபாவமாகும். இதன்படியாக, திருச்சபையின் நம்பிக்கை எதிர்காலத்தில் மகிமையுள்ள நிலைக்கு உயர்த்தப்படும்.*

*இ) ஆயிர வருட அரசாட்சியில் இந்த பூமிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெறும் உலக ஜனங்களைவிட, திருச்சபையார் பெறப்போகும் மகிமையோ, ஆவிக்குரியதாயும், பரத்துக்குரியதாயும் இருக்கும்.*

*ஈ) தூதர்களைப் பற்றி குறிப்பிடுகையில், அவர்கள் இயல்பாகவே பரத்துக்குரிய ஆவிக்குரிய மேனியைப் பெற்றிருப்பார்கள். மாம்சத்திற்குரிய மேனியை அல்ல. 'ஆவி,' 'ஆவிக்குரிய' என்று சொல்கின்ற இடங்களிலெல்லாம் அது காணக்கூடாத தன்மையை காண்பிப்பதாய் இருப்பதை கவனிக்கவும்.*

*இப்படிப்பட்ட வார்த்தைகளின் சில உதாரண உபயோகங்களை கீழே காண்போமாக:*

*அ) "பவுல்... எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிர்ணயம் பண்ணிக் கொண்டு..." (நியூமா -மனது, சித்தம், நோக்கம்) - அப்.19:21*

*அ) "பவுல் அத்தனே பட்டணம் விக்கிரக ஆராதனைகளால் நிறைந்திருக்கிறதைக் கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்தார்." இவ்விடத்தில் சொல்லப்பட்ட நியூமா (ஆவி) மனதின் உணர்வுகளைக் குறிக்கும். அப். 17:16*

*அ) "பவுல் ஆவியில் வைராக்கியம் கொண்டு, இயேசுவை*

*கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்."*

*இங்கு நியூமா என்ற சொல் மனதின் உத்வேகம் என்று பொருள்படுகிறது. - அப்.18:5*

*அ) (அப்பொலோஸ்) "கர்த்தரால் உபதேசிக்கப்பட்டு... ஆவியில் அனலுள்ளவனாய் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான்." (இவ்விடத்தில் நியூமா என்ற கிரேக்கச் சொல்லுக்கு அனல் போன்ற வைராக்கியம் என்று பொருள்). அப்.18:25*

*அ) "இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறதைக் குறித்து, தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே, என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாய் இருக்கிறார்." - ரோம 1:9 (இங்கு நியூமா என்ற சொல், என்னுடைய புதிய மனம், 'புதிதாக்கப்பட்ட சிந்தை' என்று பொருள்)*

*அ) "...தேவனுக்குரியவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." - 1 கொரிந். 6:20 (இங்கு சொல்லப்பட்ட நியூமா என்ற சொல் மனதைக் குறிக்கும்)*

*அ) "நான் சரீரத்தினாலே உங்களுக்குத் தூரமாயிருந்தும், ஆவியினாலே உங்களோடு கூட இருக்கிறவனாய், இப்படி செய்தவனைக் குறித்து நான் கூட இருப்பது போல..." - 1 கொரிந் 5:3 (இங்கு நியூமா - உள்ளத்தின்படி என்று பொருள்)*

*அ) "அழியாத அலங்கரிப்பாய் இருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைத்திருக்கிற குணமே." -1 பேது 3:4*

*(நியூமா - குணம் என்று பொருள்)*

*ஆ) "ஜென்ம சரீரம் விதைக்கப்படும்; ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." - 1 கொரிந் 15:44 (இங்கு ஆவிக்குரிய என்ற சொல்லுக்கு நியூமேட்டிக்கோஸ் என்ற கிரேக்கச் சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது)*

*ஆ) "ஜென்ம சரீரமுண்டு, ஆவிக்குரிய சரீரமுண்டு." - 1 கொரிந் 15:44 (ஆவிக்குரிய - நியூமேட்டிக்கோஸ்)*

*ஆ) "ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல; ஜென்ம சரீரமே முந்தினது." - 1 கொரிந் 15:46 (நியூமேட்டிக்கோஸ்)*

*ஆ) "ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. - 1 கொரி. 15:46 (நியூமேட்டிக்கோஸ்)*

*இ) "மாம்ச சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம்." - ரோம. 8:6*

*(நியூமா - தேவனுடைய சித்தத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நடத்தப்படுகிற மனதைக் குறிக்கும்)*

*இ) "ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள்." - கலாத் 6:1*

*(நியூமேட்டிக்கோஸ் - இவ்விடத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதாயும், புதிய சிந்தை உடையது என்றும் பொருள். நியூமா - குணநலன்கள்)*

*இ) "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் ... உன்னதங்களில் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." - எபே. 1:3*

*(நியூமேட்டிக்கோஸ் ஆவிக்கினமான ஆசீர்வாதம்)*

*இ) "ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்-க் கொண்டு..." - எபேசி. 5:19 (நியூமா - தேவனின் பரிசுத்த ஆவி நியூமேட்டிக்கோஸ் - புதிய ஆவிக்கேற்ற ஞானப்பாட்டுக்கள்)*

*இ) "நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத் தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற ஆவியினாலே நிரப்பப்படவும்..." - 1 கொலோ. 1:9 (நியூமேட்டிக்கோஸ் - தேவனையும் அவருடைய திட்டத்தையும் அறிவதால் ஏற்படுகிற புதிய சிந்தை)*

*இ) "நீங்கள் ஆவிக்கேற்ற மாளிகையாகவும் ... கட்டப்பட்டு வருகிறீர்கள்." 1 பேது. 2:5 (நியூமேட்டிக்கோஸ் - ஆவிக்குரிய ஒரே*

*குடும்பத்தைச் சார்ந்த என்ற பொருள்படுகிறது)*

*ஈ) "குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறி சொல்லுகிறதினால் ..." அப்.16:16 (நியூமா - காணக்கூடாத ஒரு வல்லமை)*

*ஈ) "பவுல் திரும்பிப் பார்த்து, நீ இவளை விட்டுப்புறப்படும் படி... உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னார்." - அப்.16:18 (நியூமா - ஒரு பெண்ணைப் பற்றியிருக்கும் அசுத்த ஆவியை குறிக்கும்)*

*ஈ) "பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டு புறப்பட்டன." - அப் 19:12,13 (நியூமா)*

*ஈ) "பொல்லாத ஆவி நீங்கள்.. யார் என்று சொல்-..." - அப். 19:15 (நியூமா)*

*ஈ) "சதுசேயர்... தேவதூதனும் ஆவியும் இல்லை என்றும் சொல்கிறார்கள்." - அப்23:8 (நியூமா - ஆவிக்குரிய ஜீவி)*

*ஈ) "ஒரு ஆவி அல்லது ஒரு தேவதூதன் இவனுடனே பேசின துண்டானால் நாம் தேவனுடனே போர் செய்வது தகாதது." - அப்.23:9 (நியூமா - ஆவி)*

## பழைய ஏற்பாட்டில் "ஆவி"

*2. பொதுவாக மனுக்குலத்தில் உள்ள அனைவரையும் குறிக்க பழைய ஏற்பாட்டில், "ஆவி" என்று சொல்கிற மரபு உண்டு. எப்படியிருந்தாலும், (உ) ஜீவ ஆவியையே குறிப்பதாய் இது உள்ளது. முதன்முதலாக ஆதாமுக்கு நிபந்தனைக்குரிய நித்திய ஜீவன் என்கிற வெளிச்சம் கொடுக்கப்பட்டது. அது அவனுக்கு பின்வழிவந்த தலைமுறை தலைமுறைக்கும் பின் சந்ததிக்கும் தொடர்ந்து வந்தது. இந்த ஜீவன் காணக்கூடாத ஒரு வல்லமையாகும். அல்லது, ஊ) மனதின் ஆவி அல்லது சித்தம் - இந்த காணமுடியாத வல்லமையே ஜீவனைக் கட்டுப்படுத்துகிறது.*

## ரூவாக், நியூமா - ஒரு உயிரளிக்கும் வல்லமை

*மனிதனுடைய படைப்பிலே ஜீவ ஆவி என்பது ஜீவனுக்குக் காரணமாயிருக்கிற மூச்சு ஆகும். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட சகல*

*ஜீவ ஜந்துக்களுக்கும் கொடுக்கப்பட்ட ஜீவ ஆவி பொதுவான ஒன்றே. இது ஏதோ மனிதன் மாத்திரம் பெற்றுக் கொண்டிருக்கிற ஆவியல்ல. இதை கீழ்க்காணும் வசனங்கள் வெகு விளக்கமாக எடுத்துக் காண்பிக்கின்றன.*

*உ) "வானத்தின் கீழே ஜீவ சுவாசமுள்ள சகல மாம்ச ஜந்துக்களையும்" - ஆதி. 6:17; 7:15 (இங்கு ரூவாக் என்ற கிரேக்கச் சொல் எல்லா ஜீவன்களின் மூச்சு அல்லது ஆவி என்று பொருள் படும்)*

*உ) "வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவ சுவாசமுள்ளவைகள்" - ஆதி. 7:22 (ரூவாக் - ஆவி, ஜீவ ஆவி என்று பொருள்படும்)*

*உ) "அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபின் ஆவி உயிர்த்தது." - ஆதி. 45:27 (ரூவாக் - உயிரளிக்கக்கூடிய உடலின் வல்லமைகள் புதுப்பிக்கப்பட்டன)*

*உ) "அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது." - நியாயாதி 15:19 (ரூவாக் - பலம், சக்தி, ஆற்றல் ஆகிய உடலின் வல்லமைகள் திரும்பக் கிடைத்தது)*

*உ) "மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையில் இருக்கிறது." - யோபு 12:10 (ரூவாக் - சகல மனிதரின் ஆவியும், தெய்வீக வல்லமைக்குள் அடக்கம் என்பதைக் காண்பிப்பதற்காக தேவனுடைய கையில் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது)*

*உ) "தேவனே, மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவனே, ஒரு மனிதன் பாவம் செய்திருக்கச் சபையார் எல்லார் மேலும் கடுங்கோபம் கொள்வீரோ?" - எண். 16:22 (ரூவாக் - ஜீவ வல்லமை, ஜீவ ஆவி என்று பொருள் தருகிறது)*

*பூர்வீகமான தத்துவ சாஸ்திரிகளினால் உண்டாக்கப்பட்ட கொள்கை: மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசமான ஆவி கொடுக்கப்பட்டுள்ளது, மரணத்தில் மனிதனின் ஆவி மேலே வானிற்குச் செல்கிறது, விலங்குகளின் ஆவி தாழ பூமிக்குக் கீழே இறங்குகிறது என்பது ஆகும். ஞானியாகிற சாலொமோன் இதுபற்றி கீழ்க்கண்டவாறு வினவுகிறார்.*

*உ) "உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழ பூமியில்*

*இறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? - பிரச. 3:19-21 (ரூவாக் - மனிதனின் ஜீவ ஆவி, மிருகங்களின் ஜீவ ஆவி என்று பொதுவாகப் பொருள்படும்)*

*உ) "மனு புத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும், அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள்; ஜிவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல;" (ரூவாக் - ஜீவ ஆவி, ஜீவ சுவாசம் என்று இவ்விடத்தில் பொருள்படுகிறது) - பிரசங் 3:19*

இவ்விடத்தில் நாம் பார்த்தபடி, மனிதனுக்கும் விலங்கிற்கும் ஜீவ சுவாசத்தில் வேற்றுமையில்லை என்பதை அறிகிறோம். ஆனால் வேற்றுமையிருப்பதாக கருதுகின்ற வேறு சில இடங்களை இப்போது ஆராய்வோம்.

*உ) "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்." -சங். 31:5 (ரூவாக் - இவ்விடத்தில் ஜீவ ஆவி அல்லது உயிரளிக்கும் வல்லமை என்று பொருள் தருகிறது)*

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரிக்கும் தருவாயில் சொல்ல வேண்டிய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாக இவ்விடத்தில் சொல்லப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து ஜீவ ஆவியை பிதாவிடமிருந்து கொடையாகப் பெற்றார். பிதாவின் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்தவராக, மனிதனுக்கு மீட்பளிக்க, மனிதராகி, தன் ஜீவ ஆவியை தேவனுக்கு தத்தம் செய்யும்போது, உயிர்த்தெழுதல் மூலமாக ஜீவ ஆவியை திரும்ப கொடுக்கிற தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மேல் தமது நம்பிக்கையை பிரகடனப்படுத்தினார்.

மனுக்குலம் முழுவதும் அவர்களின் ஆதித் தகப்பனாகிய ஆதாமின் மூலமாக, யாவருக்கும் ஜீவ ஊற்றாகிய பிதாவாகிய தேவனிடமிருந்து, ஜீவ ஆவியைப் பெற்றுக் கொண்டனர். கீழ்ப்படியாமையினாலே ஆதாம் தன்னுடைய ஜீவ ஆவியின் உரிமையை இழந்து போனான். படிப்படியாக தன்னுடைய ஜீவ ஆவியை விட்டு, செத்துக் கொண்டே செத்து, 930-ஆம் வயதில் முழுமையாக செத்துப் போனான். மரணத்தில் இந்த சரீரமானது, அது சிருஷ்டிக்கப்படுமுன் இருந்த நிலைமைக்குச் சென்றுவிடுகிறது.

*ஜீவிக்கின்ற உரிமையாகிய ஜீவ ஆவியானது அந்த உரிமையை, சலுகையை, வல்லமையை, அனுமதித்த தேவனிடத்தில் திரும்ப செல்கிறது. எந்த ஒரு பொருளையும் யார் கொடுத்தார்களோ, அவர்களுடைய நிபந்தனைக்குக் கட்டுப்படாதபோது, அதை கொடுத்தவரிடமே திரும்பக் கொடுத்ததுபோல, இந்த ஜீவ ஆவியையும் தேவனிடத்திற்கு திரும்ப கொடுத்துவிட வேண்டியதாகிறது. (பிரசங் 12:7) சிலர் சொல்வது போல இந்த வசனத்தின்படி ஜீவ ஆவி ஏதோ சிறகு முளைத்து, பறந்து தேவனிடத்தில் சென்று அடைகிறது என்பதற்கான எந்தக் குறிப்பும் இல்லை. ஜீவ ஆவி என்பது நுண்ணறிவல்ல; ஒரு ஆளுமல்ல இது ஒரு உரிமை அல்லது சலுகை. அந்த உரிமை அல்லது சலுகை பறிபோன பிற்பாடு கொடுத்தவரிடமே அந்த சலுகை திரும்பிவிடுகிறது. மனிதன் பாவத்திற்குப்பட்ட போதே நிபந்தனையை மீறிவிட்டான். அதனால் அந்த ஜீவ உரிமை பறிக்கப்பட்டுவிட்டது. மனிதன் பறிகொடுத்த அந்த ஜீவ உரிமை, அதைக் கொடுத்தவரிடமே திரும்பிச் சென்றுவிடுகிறது. அந்த சரீரமோ, அது படைப்புக்கு முன்னிருந்த நிலைமையாகிய மண்ணுக்கு திரும்பி மன்ணோடு மண்ணாகிறது.*

*தெய்வீக வாக்குத்தத்தத்தின் மீது இயேசு கிறிஸ்துவுக்கு விசுவாசம் இருந்ததினால், அவர் மரித்தாலும் உயிர்த்தெழுதலில் இழந்த ஆவியை திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இருந்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீட்பின் காரணமாக எல்லா மனுக்குலத்திற்கும் தாங்கள் இழந்த ஜீவனைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. “புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினால்” இந்த சலுகை ஏற்பட்டது. (எபி. 12:24) நம்பிக்கையில்லாத மற்றவர்களைப் போல விசுவாசிகள் துக்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆதாம் தனக்கும் தன் பின்வரும் சந்ததிக்கும் இருந்த ஜீவ உரிமையை பறிகொடுத்து விட்டார். இந்த ஜீவ உரிமையையே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து முழு மனுக்குலத்திற்கும் பெற்றுத் தந்தார். இயேசு கிறிஸ்துவும் ஸ்தேவானும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிச்சயமாகிய உயிர்த்தெழுதலை நம்பினதால் தங்கள் ஜீவ ஆவியை தேவனிடம் ஒப்படைத்துவிட்டு உயிர்த்தெழுதலின் போது திரும்ப பெற்றுக்*

*கொண்டது போலவே, இயேசு கிறிஸ்துவை போலவே விசுவாசிகளும் தேவனுடைய திட்டம், வாக்குத்தத்தங்களின்படி தங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் தங்கள் ஜீவனை தேவனிடம் ஒப்படைத்துவிட்டு உயிர்த்தெழுதலின் போது தாங்கள் ஜீவிக்கிற உரிமையைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். உலகத்தாரைப்பொறுத்தமட்டில் உயிர்த்தெழுதல் என்பது மனித உடலோடு உயிர் அல்லது, ஜீவ ஆவி இணைவதாகும். (மூலச் சொல்லாகிய ரூவாக் (எபிரேய), நியூமா (கிரேக்கு) ஆகியவைகள் ஜீவ ஆவியைக் குறிக்கும். சுவிசேஷ யுக திருச்சபையாரைப் பொருத்தமட்டில் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்கள், ஆவியின் மேனியை ஜீவ ஆவியோடு பெற்றுக் கொள்வார்கள். மூலச் சொல்லாகிய ரூவாக் (எபிரேயு), நியூமா (கிரேக்கு) என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. - 1 கொரி 15:42-45.*

*பூமிக்குரிய உயிர்த்தெழுதல் குறித்து எழுத்தோவியமாக எசேக்கியேல் தீர்க்க தரிசனத்தில் (37:5-10, 13, 14) சரீரம், ஜீவ சுவாசம் (ஜீவ ஆவி) இவை இரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாட்டை விளக்கியுள்ளது. எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டவைகள் அடையாளங்களாக சொல்லப்பட்டாலும் அந்த மாம்ச சரீரத்தில் எலும்பு, தசை, நரம்பு ஆகிய எல்லாம் இசைவாக இணைக்கப்பட்டிருந்தாலும் ரூவாக் என்ற ஜீவ சுவாசம் பெறாமல் அது உயிரடைய முடியாது. இந்த ஜீவ சுவாசம் மனிதருக்கு மாத்திரமல்ல, விலங்குகளுக்கும் உயிரோடிக்க அத்தியாவசியமானது என்று பல இடங்களில் ஏற்கனவே விளக்கி இருக்கிறோம். எசேக்கியே-ன் தீர்க்கதரிசனத்தின் கீழ்க்காணும் வரிகளை ஆழ்ந்து சிந்திப்போமாக.*

*உ) "நான் உங்களுக்குள் <u>ஆவியை</u> (ரூவாக் - ஜீவ ஆவி, ஜீவ சக்தி) பிரவேசிக்கப் பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்."*

*உ) "நான் ............... மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோ-னால் மூடி உங்களில் <u>ஆவியைக்</u> கட்டளையிடுவேன். அப்பொழுது நீங்கள் உயிரடைவீர்கள்." (ரூவாக் - ஜீவ ஆவி, ஜீவ சக்தி)*

*உ) "நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ... மாம்சமும்*

*உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது; ஆனாலும் அவைகளில் ஆவி (ரூவாக் - ஜீவ ஆவி, ஜீவ சக்தி) இல்லாதிருந்தது.*

*உ) "அவர் என்னைப் பார்த்து: நீ ஆவியை (ரூவாக் - ஜீவ ஆவி, ஜீவ சக்தி, மூச்சு) நோக்கித் தீர்க்க தரிசனம் உரை; மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை (ரூவாக் - ஜீவ ஆவி, ஜீவ சுவாசம்) நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, (ரூவாக்) நீ காற்றுத் திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள் மேல் ஊது என்கிறார் என்று சொல் என்றார்."*

*உ) "நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்; அப்பொழுது ஆவி (ஜீவ ஆவி, ஜீவ மூச்சு, உயிருள்ள சக்தி) அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்தார்கள்."*

*உ) "நான் உங்கள் பிரேதக் குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக் குழிகளி-ருந்து வெளிப்படப் பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள். என் ஆவியை (ரூவாக் - ஜீவ ஆவி - ஜீவ சுவாசம்) உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்."*

*ஜீவ ஆவி அல்லது வல்லமையின் ஆவியை சிருஷ்டிகர் ஆதாமுக்குக் கொடுத்தபோது அவன் கீழ்ப்படிந்திருந்தால், அந்த உரிமைச் சலுகைள் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும், அவனோ கீழ்ப்படியாமல் போனதினால் உரிமைகள் சலுகைகள் பறிபோய் விட்டன. எனவே ஆதாம் பெற்றிருந்த ஜீவ ஆவி அதனைக் கொடுத்தவரிடமே திரும்பிப் போய்விட்டது. ஒரு மனிதனாக அல்ல, ஒரு பொருளாக அல்ல, ஒரு உரிமையாக ஒரு சலுகையாக. ஜீவ உரிமை சலுகையைக் கொடுத்தவர், கட்டளையிட்ட நிபந்தனைகளை மீறினபோது, கொடுத்த சலுகைள், உரிமைகள் கொடுத்தவரிடமே திருப்பிக் கொடுக்க வேண்டியதாயிற்று. (பிர. 12:7)*

*உ) "ஆவியை (ரூவாக் - ஜீவ ஆவி) விடாதிருக்கிறதற்கு ஆவியின் (ரூவாக் - ஜீவ ஆவி, ஜீவ வெளிச்சம்) மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை." (பிர 8:8)*

*இழந்துபோன தன்னுடைய ஜீவ உரிமையை அல்லது*

*சலுகையை, மரணத்தில் ஒவ்வொரு மனிதனும் தேவனிடம் ஒப்புவித்த உரிமையை, எல்லாருக்காகவும் தன் விலையேப்பெற்ற இரத்தத்தினால் இயேசு மீட்டுக் கொடுத்ததினாலே மனுக்குலம் முழுமைக்கும் இழந்துபோன சலுகைகள் உரிமைகள் தேவ கிருபையினாலே திருப்பிக் கிடைக்கிறது. இவ்வாறு இயேசு தமது இரத்தத்தினால் கிரயத்திற்குக் கொண்டதால், அவரே புதிய ஜீவனளிக்கும் தந்தையாகவும், அவரை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டவர்கள் எல்லாரையும் முந்தின சீருக்குக் கொண்டு வருகிறதினால் மனுக்குலத்தின் பிதா எனவும் அழைக்கப்படுகிறார்.*

*இதுகுறித்து புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு உதாரணத்தைத் தருகிறோம்.*

*உ) "ஆவியில்லாத (நியூமா - ஜீவ வெளிச்சம், ஜீவ சுவாசம்) சரீரம் செத்ததாயிருக்கிறது." - யாக் 2:26*

## ரூவாக், நியூமா - மனம், சித்தம்

*மனம் அல்லது சித்தம் என்பது காணமுடியாத வல்லமை அல்லது ஆதிக்கம். இதைக் குறித்துக் காட்டக் கூடிய சமமான வார்த்தைகள் எபிரேயு மொழியில் "ரூவாக்" என்றும் கிரேக்க மொழியில் "நியூமா" என்றும் குறிக்கப்பட்டுள்ளதை கீழ்க்காணும் பகுதிகளில் காண்போம்.*

*ஊ) "அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக : என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள (ரூவாக் - மனம், குணம்) ஸ்திரீ." (1 சாமு. 1:15)*

*ஊ) "மூடன் தன் உள்ளத்தையெல்லாம் (ரூவாக் - திட்டங்கள் சிந்தனைகள், மனம், நோக்கம்) வெளிப்படுத்துகிறான்." (நீதி. 29:11)*

*ஊ) "என் ஆவி (ரூவாக் - மனம்,) தொய்ந்து போயிற்று." (சங். 77:3)*

*ஊ) "என் ஆவி (ரூவாக் - மனம்) ஆராய்ச்சி செய்தது." (சங். 77:6)*

*ஊ) "ஆவியில் (ரூவாக் - குணம், மனம்) உண்மையுள்ளவனோ காரியத்தை அடக்குகிறான்." (நீதி. 11:13)*

*ஊ) "மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளை (ரூவாக் - மனம், சிந்தனைகள், குறிக்கோள்) நிறுத்துப் பார்க்கிறார்." -(நீதி. 16:2)*

*ஊ) "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை." (ரூவாக் - குணம்-சித்தம் மனம்) - நீதி.16:18)*

*ஊ) "சிறுமையானவர்களோடே மனத்தாழ்மையாயிருப்பது நலம்." (ரூவாக் - மனம்,குணம்) (நீதி. 16:19)*

*ஊ) "மாயையும், மனதைச்(ரூவாக் - சித்தம்) சஞ்சலப் படுத்துகிறதுமாயிருக்கிறது." (பிரச. 6:9)*

*ஊ) "பெருமையுள்ளவனைப் (ரூவாக் - மனம், குணம்) பார்க்கிலும் பொறுமையுள்ளவன் (ரூவாக்- மனம், குணம்) உத்தமன், உன் மனதில் (ரூவாக் - மனம், குணம்) சீக்கிரமாய் கோபம் கொள்ளாதே." (பிர. 7:8-9)*

*புதிய ஏற்பாட்டிலிருந்து சில உதாரணங்களைப் பார்ப்போம்.*

*ஊ) "அந்தப் பிள்ளை(யோவான்) வளர்ந்து, ஆவியிலே (நியூமா - உள்ளம், சுபாவம்) பலங் கொண்டது." - லூக் 1:80*

*ஊ) "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே (நியூமா - உள்ளம், குணம், சுபாவம்) அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள்."-ரோம. 12:11*

*ஊ) "நாங்களோ உலகத்தின் ஆவியைப் (நியூமா - குணம், உள்ளம்) பெறாமல்..." 1 கொரி. 2:12*

*ஊ) ".....என் ஆவிக்கு (நியூமா - உள்ளம்) அமைத-ல்லாதிருந்தது." - II கொரி 2:13*

*ஊ) "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவி உள்ளவர்களாகி," (நியூமா - ஒழுக்கம், குணம்) எபேசி. 4:23*

*ஊ) "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமாகிய ஆவியாகிய.."(நியூமா - மனம், குணம்) 1பேது. 3:4*

*பூர்வ மொழியிலிருந்து ஆவி என்று பொதுவாக மொழி பெயர்க்கப்பட்டிருப்பது சரியே. ஏனெனில் பொதுவாக ஆவி*

என்பதை ஜீவ ஆவி என்றும், சாந்தமும், அமைதலுள்ள ஆவி என்றும், நல்ல ஆவி என்றும், கோபத்தின் ஆவி என்றும் பல நேரங்களில் பலவாறாக மாறக்கூடிய மன இயல்பு என்றும், கசப்பான ஆவி என்றும், உக்கிரக் கோபமான ஆவி என்றும் பலவிதத்திலும் மாறுபடும் தன்மையை விளக்கிக் கூறுகின்றோம். இப்படி சமயத்திற்கு சமயம் மாறுபடுகின்ற தன்மை, மனிதனுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் உண்டு. ஆவி என்பது உணர்வுகளை மையமாகக் கொண்டது. அது மனிதனைக் குறிக்காமல் மனித உணர்வுகளையே குறிக்கும் என்ற உண்மையை விளக்கவே, ஏராளமான உதாரணங்கள் மூலமாக எடுத்துக் காட்டினோம். மனித சிருஷ்டிப்பில் இச்சொல்லை உபயோகிக்கும்போது ஜீவ வல்லமை அல்லது ஜீவ ஆவியை, அதன் ஆதிக்கத்தை உணர்த்துவதற்காக உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த ஜீவ வல்லமை, ஜீவ ஆவி எல்லா மிருகங்களுக்கும் பொதுவானது.

## நெஷாமா - ஜீவ சுவாசம்

சில இடங்களில் "ரூவாக்" என்ற எபிரேயச் சொல் "சுவாசம்" என்று மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும் இதற்கென்றே எபிரேய மொழியில் "நெஷாமா" என்ற சொல்லும் உள்ளது. இது 26 இடங்களில் வருகிறது. இவற்றில் 19 முறை "மூச்சு" என்றும், ஒரு இடத்தில் "ஆர்வத்தைத் தூண்டுதல்" என்றும், "ஆவி" என்று இரு இடத்திலும், "ஆத்துமா" என்று ஒரு முறையும், "வேகமான காற்று" என்று மூன்று முறையும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த உதாரணத்தில் பார்த்த நெஷாமா என்ற சொல்லுக்கு பல வகையான அர்த்தம் இருப்பினும் அவையெல்லாவற்றிற்கும் ஒட்டு மொத்தமாக "ஜீவ வல்லமை" என்பதே அதன் மையப் பொருளாகும். இது எவ்வகையிலும் நித்திய ஜீவன் அல்லது சாகாமை என்ற பொருளில் ஒருக்காலும் இங்கே கூறப்படவில்லை என்பதை கீழ்க்காணும் உதாரணங்களிலிருந்து அறிந்து கொள்வோமாக:

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ (கேயா) சுவாசத்தை (நெஷாமா) அவன் நாசியிலே ஊதினார் (நாபாக்)." ஆதி. 2:7

"அப்பொழுது மாம்ச ஜந்துக்களாகிய பறவைகளும், நாட்டு

*மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின் மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்களும், பூமியின் மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன. வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவ (கேயா) சுவாசமுள்ளவைகள் (நெஷாமா) எல்லாம் மாண்டு போயின." -ஆதி 7:21,22*

வேதாகமத்திலேயே நெஷாமா என்ற சொல் முதன்முறையாக இரண்டு முறை மேற்கண்ட இடங்களில் உபயோகப்படுத்தப் பட்டதைப் பார்த்தோம். நாம் ஏற்கனவே சொன்ன கருத்தை விளங்கச் செய்வதற்கும். நிரூபிக்கவும் இந்த உதாரணங்களே போதுமானது. இந்த இரண்டு இடங்களில் எந்த இடத்திலும் அது நித்திய ஜீவனையோ, சாகாமை கொள்கையையோ குறிக்கவில்லை. மாறாக வெறும் ஜீவ வல்லமை பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது. இந்த ஜீவ வல்லமை தான் ஆதாமுக்குக் கொடுக்கப்படுவதாக முதல் வசனத்தில் வாசித்தோம். இரண்டாம் வசனமாக சொல்லப்பட்ட இடத்தில் அதே ஜீவ வல்லமை பூமியின் மேல் ஊறுகின்றவை, நடப்பவை, பறப்பவை ஆகியவற்றிற்கும், மனிதனுக்கும் கொடுக்கப் பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஜீவ சுவாசம் திருப்பி எடுத்துக் கொள்ளப்பட்டபோது அதன் பலனாக எல்லா மனிதர்களும் மிருகங்களும் இறந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மனிதன் சாவது போலவே மிருகங்களும் சாகின்றன. ஆனாலும் மனிதனுக்குத் தான் ஒரு தெய்வீக நோக்கத்தை, திட்டத்தை தேவன் வைத்து வைத்திருக்கிறார். அதன்படி ஏற்றவேளையில் அவர்களுக்கு ஈட்டுக்கிரயம் கொடுத்து மரணப் பிடியி-ருந்து வாக்குத்தத்தத்தின்படி மீட்டுக்கொள்கிறார். உயிர்த்தெழுதலின் மூலமாக, மனிதன் மறுபடியும் ஒரு ஜீவியாகிறான், ஆத்துமாவாகிறான்.

## ஒரு மனித ஆத்துமா

ஆதியாகமத்தை வாசிக்கிற பலர், சிருஷ்டிப்பைக் குறித்து சொல்லப்பட்ட வசனமாகிய, மனிதனை மண்ணினால் உருவாக்கி, அவன் மேல் தன் ஜீவ சுவாசத்தைக் கொடுத்தார் என்று தவறாக எண்ணுகின்றனர். ஆனால் அது அவ்வாறல்ல. "அப்போது மனிதன்

ஜீவாத்துமாவானான்" என்று எழுதியிருக்கிறது. சராசரியான மனிதர்கள் இந்தப் பகுதியைப் படிக்கும்போதெல்லாம் "ஆத்துமா" என்ற ஒரு பிரத்யேகமான பொருள் உடலில் இருப்பதாகத் தவறாக எண்ணுகின்றனர். தான் என்ன என்று புரிந்து கொள்ள முடியாத ஒரு பொருளே இந்த ஆத்துமா. இதைத் தப்பறையாய்ப் புகுத்தியவர்கள் புகட்டிய பாடமே இந்த ஆத்துமா என்ற எங்குமில்லாத ஒரு பொருள். இந்த ஆத்துமா என்னவென்பதை போதித்தவர்களும் சிந்தித்ததில்லை, போதிக்கப்பட்டவர்களும் சிந்தித்ததில்லை. தங்களுக்குப் போதித்த இறையியல் வல்லுனர்கள் நன்கு ஆராய்ச்சி செய்து தான் போதித்திருப்பார்கள்; ஆகவே அந்தக் கருத்துக்களை ஏன், எவ்வாறு என்று கேட்பது அவசியமற்றது என்று கருதுவதால், சொன்னதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

"ஆத்துமா" என்ற சொல்லின் அர்த்தத்தை சரிவர இவர்கள் புரிந்து கொள்வதில்லை. சிலர் இதை அலட்சியமாக கவனக் குறைவாக பலவாறு அர்த்தம் கொள்ள நினைக்கின்றனர். எனவே வேதாகமக் கருத்தின்படி, மனிதனே ஜீவாத்மா என்பதை இவர்கள் மனிதனுக்குள் ஒரு ஆத்துமா என்று கூறிவிட்டனர். இது உண்மையிலே மிகுந்த மாறுபாடான கருத்து. சத்தியத்தைத் தேட விரும்புகிற எவரும், அவர்களால் இயன்ற அளவுக்கு எதார்த்தமாக ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும். விசேஷமாக ஒரு புரியாத கருத்தையோ, புதிய கருத்தையோ ஆராயும்போது எதார்த்த மன நிலையோடு ஆராய்தல் அவசியம். எளிதில் புரிந்து கொள்ள முடியாததும், இரகசியமாக இருப்பவைகளையும் கருத்தாய் ஆராயும்போது எதார்த்த மனநிலை அவசியம். இல்லையென்றால் அதை ஆராய நம்மிடம் சக்தியில்லை என்ற எண்ணத்தை சந்திக்க நேரிடும். மர்மமானதும் புரிந்து கொள்ள முடியாததுமான இந்த ஆத்துமாவுக்கு பல குணங்களையும் வல்லமைகளை கொடுப்பது ஒரு இயற்கையான சுபாவமாகும். எனவே ஆத்துமாவைப்பற்றிய ஒரு பொதுவான கருத்து என்னவென்றால்: அது விசித்தரமான ஞானமுடையது, விசித்திரமான வல்லமைகளைப் பெற்றிருக்கிறது; அழிக்க முடியாதது; தொட்டுணர முடியாதது புத்திக் கெட்டாதது என்பதாகும்.

*பாப்டிஸ்ட் சபையின் பிஷப் ஒருவர், ஆத்துமாவைப் பற்றிய பழைமை கருத்தை விளக்கமாகச் சொல்வதை கீழே காண்போம்: "ஆத்துமா என்பதற்கு, ஒரு சரீரமோ, உடற்கூறில் ஏதாவதொரு பாகமோ, அதற்கு உருவமைப்போ இல்லை; அதற்குள்ளும் ஒன்றுமில்லை, புறமும் ஒன்றுமில்லை. இலட்சோப இலட்சம் ஆத்துமாக்களை ஒரு கொட்டை ஓட்டிற்குள் அடைத்து வைக்க முடியும்." முழுவதும் தப்பறையான இந்த ஆத்துமாக் கொள்கையை விளக்க, பல்வேறு பொருள்களை உவமானமாக, உவமேயமாகச் சொல்லி குழப்பத்தில் ஆழ்த்துகிற கொள்கையை வகுத்துவிட்டனர். இந்த கொள்கை, தெய்வீகத் தன்மையின் ஒரு பகுதியே 'ஆத்துமா' என்றும், இந்த ஆத்துமா மட்டுமே உண்மையான உயிருள்ள நிலை என்றும், தெய்வீகத் தன்மையும் அறிவுக் கூர்மையான ஜீவனும் உள்ளதென்றும், சரீரத்தோடு ஒட்டாமல் தனித்து நிற்கிறதும், ஒரு சில காலத்திற்கு மட்டும் சரீரத்தில் குடியிருந்து விட்டு, சரீரம் கெட்டு ஒன்றுக்கும் உதவாதபோது, இந்த ஆத்துமா அதை விட்டு வெளியேறி விடுகிறது என்றும் கூறுகிறது. இதுவரையில் எவரும் எந்த ஒரு ஆத்துமாவும் ஒரு சரீரத்திற்குள் குடியேறுவதையோ, அங்கிருப்பதையோ அங்கிருந்து வெளியேறுவதையோ கண்டதில்லை. ஒரு மனிதனுக்குள் இருக்கிற ஆத்துமாவை நவீன விஞ்ஞான உபகரணங்களாகிய மைக்ரோஸ் கோப், புகைப்படம், X கதிர்கள், ஸ்கேன் ஆகிய எந்தக் கருவியிலும் இதுவரை எவராலும் காண முடியவில்லை. எனவே அதற்கு ஒரு சரீர அமைப்போ, உருவமோ, தனி பாகங்களோ கிடையாது. மைக்ராஸ்கோப்பின் மூலம் கூட காணமுடியாத நுண்ணிய பொருளாக இருப்பதால், 50 மில்லியன் ஆத்துமாக்களை ஒரு மிகச் சிறிய கொட்டையின் ஓட்டிற்குள் அடக்கி வைக்க முடியும் என்கின்றனர். உண்மையாகவே பிஷப் கொடுத்த மிக அருமையான விளக்கம் ஒன்றுமில்லாமையைப் பற்றிய விளக்கமாகும். அப்படியானால் 100 மில்லியன் ஆத்துமாக்களைக் கூட (100 மில்லியன் ஒன்றுமில்லாமை) ஒரு கொட்டை ஓட்டிற்குள் அடக்கி வைத்தாலும் கூட இன்னும் நிறைய இடமிருக்கும்.*

*இவ்வளவு பெரிதாக விளம்பரப்படுத்துகிற இந்த ஆத்துமா கொள்கைக்கு அடிப்படைதான் என்ன? இவ்வகையான ஆராய்ச்சியே*

தேவை இல்லை என்பதே இதற்கு பதில். தேவனுடைய கொள்கையையும், திட்டத்தினையும் மறுதலிக்கின்ற மனிதன், தானாகவே கற்பனையில் கண்டுபிடித்த எதிர்காலவாழ்க்கைக் குரியதே இந்த ஆத்துமாக் கொள்கையாகும். மனித சித்தாந்தத்தின்படி, ஏதோ ஒன்று மரணத்தைக் காணாமல் இருக்க வேண்டும். அப்படி எதுவுமில்லையென்றால் அவனுக்கு எதிர்காலமோ, எதிர்காலத்தில் ஜீவனோ இல்லை. ஆனால் தெய்வீகக் கொள்கையின்படி, ஆதியில் சிருஷ்டித்த அதே தேவனுக்கு மரித்த மனிதனை மீண்டும் உயிர்த்தெழுச் செய்யும் வல்லமை உண்டு என்கிறது. இதுவே பரிசுத்த தேவனுடைய வார்த்தைக்கும் உலகத்திலுள்ள அனைத்து நாகரீகமடைந்த, நாகரீகம் இல்லாத மனிதர்களுடைய கொள்கைக்கும் இடையே உள்ள முரண்பாடாகும். எல்லா மனிதர்களுடைய கொள்கையின்படி, மனிதன் சாவதில்லை. எனவே உயிர்த்தெழுதலும் தங்களுக்கு ஜீவன் அளிக்கிறவரும் தேவையில்லை என்றும் கற்பிக்கின்றது. வேதாகமத்தின்படி மனிதன், தான்செய்த பாவத்திற்காக மரித்தாக வேண்டும். ஜீவனளிக்கின்றவர் இல்லாமல், உயிர்த்தெழுதல் இல்லாமல் இருந்தால், எதிர்காலம் எதுவுமில்லாமல் மரணமே மனிதனின் முடிவாயிருக்கும்.

இந்த மனிதக் கொள்கையைத்தான் உலகிலிருக்கிற பெரும்பாலான ஜனங்களும், மதநூல்களும் கற்பிக்கின்றன. பெயர்க் கிறிஸ்தவர்கள் எழுதியிருக்கின்ற நூல்களிலும் இப்படிப்பட்ட சாகாமை வாய்ந்த ஆத்துமா என்று எழுதியிருக்கின்றனர் என்று வருத்தத்துடன் நாம் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களின் கொள்கைப்படி, மனிதனுக்குள் ஒரு ஆத்துமா உள்ளது. அது சரீரத் தோடு தொடர்பில்லாமல் தனித்து ஜீவிக்கிறது. அது சாகாமை வாய்ந்ததும், அழிக்க முடியாததுமாக உள்ளது. எனவே அது நித்திய நித்தியத்திற்கும் மகிழ்ச்சி அல்லது துக்க நிலைமைக்குச் செல்லுவதே அதன் விதி. இதற்கடுத்த வினாவிற்குச் செல்வோம்:

## ஆத்துமா என்றால் என்ன?

வேதாகமத்தின்படி மேற்கண்ட வினாவுக்கு விடைகாண முயல்வோம். மனிதன் என்பவன் ஒரு சரீரம், ஒரு ஆவி

உள்ளவனாயிருப்பதோடு ஒரு ஆத்துமாவாகவும் இருக்கிறான். இவ்விஷயத்தில் அறிவியலும் வேதாகமமும் உடன்படுகிறது. மண்டை ஓட்டிலிருந்து அது மனிதனுடையதா அல்லது விலங்குகளின் எலும்பா என்பதை அறிவதுடன், அந்த மண்டை ஓட்டுக்குரியவருடைய குணநலன்கள், சுபாவம், தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். உடற்கூறு சாஸ்திரப்படி தங்களுக்கு பண்புகளை தீர்மானிக்க திறமையிருப்பது குறித்து எல்லாருக்கும் தெரிவதில்லை. இதனை வைத்து, கூர்மையான அறிவுள்ளவன் யார்? முட்டாள் யார்? இரக்க சுபாவமுள்ளவன் யார்? மூர்க்க குணமுள்ளவன் யார்? என்று கண்டு கொள்ளலாம். இந்த உடற்கூறு அங்க அமைப்பைப் படிக்காதவர்களுக்கு, மனிதர்களுடைய இயற்கையை விட்டுப் பிரிக்க முடியாத குணம், தன்மை, சுபாவம் இவைகளை தோற்றத்தோடு ஒப்பிட்டு சரியாகப் புரிந்து கொள்ள இயலாதவர்கள். இவர்கள் வாழ்வின் பாடங்களையே கற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் தங்கள் அறிவை சரிவரப் பயன்படுத்துவதில்லை. எனவே இவர்கள் எதையும் நமது பாடத்தையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாக,நிதானிக்க முடியாதவர்களாக இருப்பார்கள்.

வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற 'ஆத்துமா' என்ற சொல்லுக்கு, "ஒரு உணர்ச்சியைக் காண்பிக்கக்கூடிய ஒரு ஜீவி " எனலாம். அதாவது, ஐம்புலன்களால் உணரக்கூடிய அறியக்கூடிய உணர்ச்சிகளை உடைய ஜீவியாகும். இக்கருத்தை மனதில் கொண்டு எந்த வித பேதமுமில்லாமல் விருப்பு வெறுப்பில்லாமல், நேரடியாக ஆதியாகமத்தில் சொல்லப்பட்ட வசனத்தை ஆராய்வோம். இந்த அடிப்படையிலே, 1. சரீரம் அல்லது அங்க ஜீவி உருவானது, 2. ஜீவ ஆவி எனப்படுகிற ஜீவ சுவாசம் அனுப்பப்பட்டது. அதனால், 3. ஜீவ ஆத்துமா அல்லது ஒரு உணர்வுள்ள மனிதனானான். இது புரிந்துகொள்ள மிகமிக எளிமையானது. சரீரம் ஆத்துமாவல்ல. ஆவி அல்லது ஜீவ சுவாசம் தான் ஆத்துமா என்பதும் சரியல்ல என்று இதனால் தெரிய வருகிறது. ஆனால் இவ்விரண்டும் (ஆவியும், சரீரமும்) கர்த்தரால் இரண்டறக் கலந்து இணைக்கப்பட்ட பிற்பாடு, அதுவே உணர்வுப்பூர்வமாக உயிருள்ள, ஜீவ ஆத்துமாவாகிய எதையும் உணரக்கூடிய வல்லமையைப் பெற்ற மனிதனாகிறான்.

இதில் மர்மமோ, இரகசியமோ, மறைவான ஞானமோ ஒன்றுமில்லை. மிருகங்களைக் காட்டிலும் விசேஷமான எந்த ஒரு தெய்வீக ஜீவஒளியும் மனிதனுக்கென்று கொடுக்கப்பட்டதாக வேதத்தில் இல்லை. விலங்குகளை சிருஷ்டிக்கும்போது, அதிகப்படியாக எந்தத் தகவலும் வேதத்தில் இல்லாததால், படைப்பைப் பொறுத்தவரையில் மனிதன் மேம்பட்டவன் என்று சொல்ல முடியாது. நாயின் உடல் உறுப்பைப் பெறாமல், அது நாய் என்று அழைக்கப்பட முடியாது. அந்த நாயின் சரீரத்தில், சரீரத்தோடு கூடிய ஜீவன் அல்லது உயிர் இருந்தால் தான் அது உயிருள்ள நாய் எனப்படும். உயிர்பெறாத நாயின் உடல் மட்டும் நாயாகிவிடாது. இதற்கு முதலாவது அடிப்படைத் தேவை என்னவென்றால் ஜீவ சுவாசமாகிய உயிர் மூச்சு அல்லது ஜீவ ஒளி. அந்த ஜீவ ஒளி வந்தவுடன் நாய் என்றழைக்கப்படுகிறது. இதே ரீதியில்தான் ஒவ்வொரு விலங்குக்கும் சம்பவிக்கிறது.

இதற்கு இசைவாக இருக்கிற இன்னொரு உண்மையை சொன்னால் அநேகர் ஆச்சரியமடைவார்கள். வேதாகமத்தின்படி, ஒவ்வொரு நாயும் ஒரு ஆத்துமா; ஒவ்வொரு குதிரையும் ஒரு ஆத்துமா; ஒவ்வொரு வாத்தும் ஒரு ஆத்துமா; ஒவ்வொரு பறவையும் மீனும் ஆத்துமா ஆகும்; இதை வேறுவழியில் சொல்ல வேண்டுமானால், எல்லா வகை உணர்ச்சியையும் புரிந்து கொள்ளக் கூடிய உணர்ச்சிப் பூர்வமான ஜீவிகள் தான் ஆத்துமா அவைகளில் சிலவற்றிற்கு உணர்ச்சிகள் கூடுதலாகவும், சிலவற்றிற்கு குறைவாகவும் இருக்கக்கூடும். வேதாகமத்தைப் பொறுத்த வரையில் மீன், ஊர்வன, பறவைகள், மிருகங்கள், மனிதன் எல்லாருக்கும் இந்த உணரும் தன்மையே உயிருள்ளது என்றும், ஆத்துமா என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. சாதாரணமாக சொல்லக்கூடிய தவற்றை அதாவது எல்லாருக்கும் ஆத்துமா உண்டு என்று நாம் இங்கு சொல்லவில்லை என்பதைக் கவனிக்கவும். எல்லாவற்றிற்கும் ஜீவன் இருப்பதால் இவை அனைத்தும் ஜீவாத்துமாக்கள் என்கிறோம். நாம் இதை நிரூபிப்போம்.

ஆதியாகமத்தில் 1, 2, 9-ம் அதிகாரங்களில் ஜீவாத்துமா என்று மொழி பெயர்க்கப்பட்ட ஒரே எபிரேயச் சொல் 9 இடங்களில், பறவை விலங்குகளுக்கு சொல்லப்பட்டுள்ளன. ஆனால் (தனி ஆத்துமா ஒன்று

உண்டு என்ற புராதன, புராணக் கட்டுக்கதையை, மூடநம்பிக்கையை நம்பிக் கொண்டிருப்பவர்கள், அந்த நம்பிக்கையைக் காப்பாற்ற) மொழிபெயர்ப்பாளர்கள் வேண்டுமென்றே ஜீவாத்மா என்பதை வெறும் ஜீவ ஜந்து, மாம்ச ஜீவன் என்று மொழிபெயர்த்து, விலங்குகளும் ஆத்துமா என்பதை மறைத்து விட்டனர். வேதாகமத்தில் இந்த இடத்திலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் இந்த மொழி பெயர்ப்பாளர்கள் மனிதனுக்கு மட்டும் ஆத்துமாவை சேர்த்தெழுதி, விலங்குகளுக்கு ஆத்துமாவை ஜாக்கிரதையுடன் விட்டுவிட்டனர். ஆனால் ஒரே ஒரு இடத்தில் மட்டும் 'விலங்குக்கும்' "ஆத்துமா" என்று எழுதிவிட்டனர். எண்.31:28ம் வசனத்தில், "ஆத்துமா" என்ற சொல்லுக்கு மாற்றாக வேறு எவ்வகையாக அமைத்தாலும் அது சரியான வாக்கியமாக அமையாது என்ற காரணத்தால், உள்ளபடியே எழுதி வைத்தனர்.

"யுத்தத்திற்குப்போன படைவீரர்களிடத்தில் கர்த்தருக்காக மனிதரிலும் பாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும் ஐந்நூற்றிற்கு ஒரு பிராணிவீதமாக ..." (ஒரு பிராணி என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் (ஆத்துமா) Soul என்றுள்ளது. இவ்விடத்தில் மனிதனைக் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல், விலங்கையும் குறிக்கிறதற்காக ஆத்துமா என்றே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ஒரு இடத்தில் உள்ளது போல அவர்கள் எதார்த்தமாக மொழி பெயர்த்திருந்தார்களேயானால் இன்னும் அநேக இடங்களில் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாக 'ஆத்துமா' என்றே மொழிபெயர்த்திருப்பர்.

ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற 9 வசனங்களில் விலங்குகளுக்கும் 'ஆத்துமா' (நெபேஷ்) என்ற உபயோகக் குறிப்பை ஆராய்ச்சிக்காக கீழே தருகின்றோம்.

"தேவன் நீந்தும் ஜீவ (ஆத்துமா) ஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார்." (ஆதி. 1:20) இந்த கோடிட்ட வார்த்தை நெபேஷ் என்கிற எபிரேயச் சொல்லின் தமிழாக்கமாகும். இதற்கு ஆத்துமா என்று பக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சிருஷ்டிப்பின் ஐந்தாவது

*நாளில் மனிதன் படைப்புக்கு வெகு காலம் முன்பே படைக்கப் பட்டதாகும்.*

*"தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களையும் சிருஷ்டித்தார்." (ஆதி 1:21) கோடிட்ட சொல் நெபேஷ் என்ற எபிரேய சொல்லின் மொழி பெயர்ப்பாகும். இதற்கு ஆத்துமா என்று பொருள். இவையும், சிருஷ்டிப்பின் 5-ம் நாளில் மனிதப் படைப்புக்கு முன் படைக்கப் பட்டவை. இவைகள் மீன் ஆத்துமாக்களாகும்.*

*"தேவன்: பூமியானது ஜாதி, ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய (நெபேஷ்) நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாகப் பிறப்பிக்கக் கடவது என்றார்." (ஆதி. 1:24) இவைகள் தரையிலிருக்கக்கூடிய ஆத்துமாக்கள். இவை மீன் இனத்தை விட கொஞ்சம் உயர்ந்த நிலையிலுள்ளவை. இவைகளும் மனித ஆத்துமா படைக்கப்படுவதற்கு முன்பாகவே படைக்கப்பட்டவை.*

*"பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும், பூமியின் மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாக கொடுத்தேன் என்றார்." (ஆதி.1:30) இங்கே சொல்லப்பட்ட மூன்று வகையான பிராணிகளும் 'நெபேஷ்' என்ற எபிரேய சொல்லின்படி ஜீவனுள்ள ஆத்துமாக்களே. மனிதனை ஆத்துமா என்று குறிக்க என்ன சொல் உபயோகப்படுத்தப் பட்டதோ, அதே எபிரேய சொல்லே இதற்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.*

*"தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும்... ஆதாம் அவைகளுக்கு என்ன பெயரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று." (ஆதி. 2:19) இதற்கு விளக்கமே தேவையில்லை. மனிதனுக்கு மட்டும் 'ஆத்துமா' என்பது இருக்கக்கூடிய ஒரு பாகமல்ல என்பது ஐயத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது. உணர்வுள்ள,*

ஜீவனுள்ள எல்லாப் படைப்புகளுக்கும் இது பொருந்துகிறது என்பதை அறிக. கீழ்நிலையிலுள்ள விலங்குகளிலிருந்து மேல்நிலையிலுள்ள மனிதர் எல்லாருக்கும் இந்த உணர்வுகள் கொடுக்கப்பட்டுள்ளதால் இந்த ஆத்துமா என்பது பொதுவானதே.

"நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக;... மாம்சத்தை அதன் உயிராகிய ரத்தத்தோடே புசிக்க வேண்டாம்." *(ஆதி 9:3,4)* எபிரேய மொழியில் நெபேஷ் (ஜீவாத்துமா) என்று இருப்பது இங்கு ஜீவ ஜந்து என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் மனிதன் புசிக்கலாம் என்று சொல்லப்பட்ட பிராணிகளும் ஆத்துமா தான் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனாலும் அந்த விலங்கின் உயிர் அதன் இரத்தத்தில் இருப்பதால், இரத்தத்தோடு புசிக்கக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால் இரத்தம் - உயிர் - ஆத்துமா. அதனால் மனிதன் இரத்ததாகம், இரத்த வெறியுள்ளவனாக மாறிவிடக் கூடாது என்பதே இதன் கருத்து.

"நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் இனி பூமியில் உண்டாகப் போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம் பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும் உங்களிடத்தில் இருக்கிற சகலகாட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்." *(ஆதி. 9:9-10)* ஜீவனுள்ள எந்தப் பிராணியாகட்டும், மனிதனாகட்டும் பல வகைகளிலும் தாழ்வானவைகளாக இருப்பினும், அவைகளும் ஆத்துமாக்களே.

"தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தி-ருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும் நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக." *(ஆதி 9:12)* இதைக் காட்டிலும், வெளியரங்கமாக எப்படிச் சொல்ல முடியும்?

"எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவ ஜந்துக்களுக்கும் (நெபேஷ்) உண்டான என் உடன்படிக்கையை நினைவு கூறுவேன்." *(ஆதி.9:15)*

ஆதியாகமம் 9:16ம் வசனத்திலும் இதே கருத்து இதே

வண்ணமாக சொல்லப்படுகிறது. நாம் கேலியாகவோ பரியாசமாகவோ, மிருகங்களும் ஆத்துமா தான் என்று சொல்ல வரவில்லை. தவறான மொழிபெயர்ப்பு என்ற திரை விலக்கப்படும்போது தேவன் தமது வார்த்தையிலிருந்து நமக்கு வெளிப்படுத்த விரும்பினதை நாம் புரிந்து கொள்கிறோம்.

வேதாகமத்தில் இன்னும் அநேக வசனங்களை ஆதாரமாக எடுத்துக் காட்டமுடியும். ஆனால் போதுமான அளவு ஆதாரங்களை ஏற்கனவே காண்பித்திருக்கிறோம். வேதாகமத்தில் சொல்லப்பட்டிக்கிற ஆத்துமா என்ற சொல், உயர்நிலையிலுள்ள மனிதனுக்கும் தாழ்நிலையிலுள்ள விலங்குக்கும் பொருந்தும். மனிதனின் எதிர்கால வாழ்வின் நம்பிக்கையையும், மிருகங்களிலும் அவனது மேன்மையையும் அடிப்படையாகக் கொண்ட கொள்கைக்கு காரணமான மனிதனுக்கு மட்டுமே ஆத்துமா உண்டு, விலங்குகளுக்கு ஆத்துமா இல்லை என்பதெல்லாம் பொய்யே என்பதை உணரலாம். அதோடு இந்த மூட நம்பிக்கைகளெல்லாம் ஒழிய புரட்சிகரமான சீர்திருத்த சிந்தனை தேவை என்பதை அறியலாம்.

சிறிய புழுவானாலும் பெரிய யானையானாலும், சிறிய மீன் முதல் பெரிய திமிங்கலம் வரை எல்லாவற்றிற்குமே ஜீவன் உண்டு. ஜீவன் உள்ள யாவும் ஆத்துமாக்களே. இவ்வாறு நாம் போதிப்பதால் இவைகள் எல்லாவற்றிற்கும் ஒரு எதிர்கால ஜீவியம் உண்டு; அவைகள் இருக்கிற நிலையிலிருந்தே ஆவிக்குரிய நிலைக்கு மாற்றப்பட வேண்டும்; அல்லது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு எதிர்காலத்திலும் நித்திய ஜீவன் பெறுவார்கள் என்று யாரும் தவறாக நினைத்துவிட வேண்டாம். இப்படிப்பட்ட கருத்து கேவலமானதும், அர்த்தமற்றதும், பைத்தியக்காரத்தனமானதும், துளியும் காரணமில்லாததும், ஆதாரமற்றதுமாகும். மிருக மண்டலங்களில், ஒவ்வொரு நாழிகையும், ஒவ்வொரு நிமிடமும் கோடானுகோடி ஜீவாத்துமாக்கள் பிறக்கின்றன, இறக்கின்றன.

மனிதனே, தாழ்வான நிலையில் உள்ள ஆத்துமாக்களான மிருகங்களைக் காட்டிலும் மேன்மையான அரசானகவும், கர்த்தனாகவும் இருக்கிறான் என்பதே நமது வாதம். ஆனாலும் இந்தப்

பூமிக்குரிய படைப்புக்களிலே ஒரே ஒருவன் மட்டும் (ஆதாம்) மிக உன்னத தேவ சாயலையும், தேவ ரூபத்தையும் உடையவனாக தன்னை சிருஷ்டித்தவரைப் போலவே இருந்தான்.

மனிதனும் அவனுக்குக் கீழாயிருக்கிற விலங்குகளும் 'ஆத்துமா' என்று பொதுவாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், மனிதனுக்கு விலங்குகளை விட அங்க அமைப்பில், சிந்தனையில் பெரிதான வேறுபாடு உண்டு. மனிதன் நேராய் நிமிர்ந்து நடப்பதினால் மாத்திரம் விலங்குகளைவிட உயர்ந்தவன் என்று சொல்வற்கில்லை. கடவுளைப் போல, தேவமுகத்தைப் போல ஒளியுள்ள முகமும், சிந்திக்கின்ற மேன்மையான கூர்மையான அறிவும் தான், மனிதனை, விலங்கினின்று வேறுபடுத்திக் காண்பிக்கின்றது. உடற்கூறைப் பொறுத்தமட்டில் அல்ல: மனம், ஒழுக்க ரீதியிலே விலங்குகளை விட மனிதன் மேன்மையானவன். அதோடு கூட மனிதன் தன்னை உண்டாக்கினவரின் தெய்வீக சாய-ல் படைக்கப்பட்டான். விலங்குகளிலும் பல தரப்பட்ட விலங்குகள் உண்டு. அவைகளில் சில வெகு மதிநுட்பத்தோடு செயலாற்றுவதையும் நாம் காண்கிறோம். இருந்தபோதிலும் அவைகளின் மதிநுட்பத்திற்கு ஒரு எல்லையுண்டு. அவைகளுக்கப்பால் செல்ல அவற்றால் முடியாது. ஆனால் மனிதனின் மதிநுட்பமும், பகுத்தறியும் ஆற்றலும் எல்லையில்லாததும், அளவிட முடியாததுமாகும். ஏனெனில் அவன் தேவசாயலில், தன்னை உண்டாக்கினவரின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான். மனிதன் எத்தனையோ யுகங்களாக பாவம் சாபம் இவைகளுக்குட்பட்டு, எத்தனையோ தலைமுறைகளாக தேய்மானமடைந்திருந்தாலும், இன்னும் தேவசாயலை மனித முகத்தில், விசேஷமாக, தேவனோடு மனிதனை ஒப்புரவாக்குகிற கிறிஸ்துவின் ஊழியத்தை ஏற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்தவர்களாகி, தேவனுக்குப் பிரியமான குமாரனின் சாயலுக்கொப்பாக தங்களை மாற்றிக் கொண்டு 'தேவ புத்திரர்' ஆகிறவர்களின் முகத்தில் காணமுடிகிறது.

வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவையான சில பொருட்களின் பெயர் சொன்னலே, குதிரை, நாய், பறவைகள் போன்றவை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு போதிக்க முடியும். சில

*நேரங்களில் அவை தங்களுடைய அறிவாற்றலை நிரூபிக்கக்கூடிய சில செயல்பாடுகளை விளக்கமாகக் காண்பிக்க முடியும். சில மிருகங்கள் இருபது எண்ணிக்கை வரை எண்ணக் கூடியதாகவும் இருக்கின்றன. இந்த அறிவாற்றல் இருப்பதினாலே, இந்த நாய், குதிரை போன்றவைகளுக்கு, எண் கணிதம், ஜியோமிதி, வான சாஸ்திரம் ஆகியவற்றை யார் கற்றுக் கொடுக்க முடியும்? சில விலங்குகளுக்கு அதைக் கடிக்காதே, இதை தின்னாதே, உதைக்காதே, கொல்லாதே என்று சில ஒழுக்க போதனைகளை கற்றுக் கொடுக்க முடியும். ஆனால் இந்த விலங்குகளுக்கு பத்துக் கட்டளையை யாரால் கற்பிக்க முடியும்? சில விலங்குகளுக்கு தங்கள் எஜமானரையும் அவரின் நண்பர்களையும் அறிமுகப்படுத்தி, அவர்களோடு சிநேகமாக இருக்க கற்றுக் கொடுக்க முடியும். ஆனால் தேவனை நேசிக்க, சேவிக்க யாரால் கற்றுக் கொடுக்க இயலும்? வஞ்சகம் செய்யும் எதிரிகளை சகிக்கக் கூடிய சகிப்புத் தன்மையை யாரால் கற்றுக் கொடுக்க முடியும்?*

*இப்பொழுது நாம் பார்த்த வேற்றுமைகளுக்கெல்லாம் காரணம், அவைகளுக்கும் மனிதருக்கும் கொடுக்கப்பட்ட ஆத்துமாவிலும், சுவாசத்திலும் உயர்வு தாழ்வு இருக்கிறது என்பதல்ல. இதையே பிரசங்கி 3:19 சொல்கிறது. "ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே." இதனால் மனிதன் மட்டும் தான் ஆத்துமா, மிருகங்கள் இல்லை என்பதாகாது. ஏற்கனவே நாம் கண்டபடி, ஜீவனுள்ள யாவும் ஆத்தமா தான். ஏற்கனவே நாம் பார்த்த வண்ணம், எல்லா மனிதரும் சாட்சியாகக் காண்கிறபடி, ஒவ்வொரு மனிதருக்கும் வித்தியாசமான அங்க அமைப்பு, உடற்கூறு, வித்தியாசமான ஒழுக்கம், குணம் உண்டாகின்றன. இதன் காரணமாகவே சிலர் ஒழுக்க சீலர்களாகவும், சிலர் ஒழுக்கக் கேடுள்ளவர் களாகவும் காண்கிறோம். சிலருக்கு பருத்த உடலும், பெருத்த எடையும் இருப்பதனாலேயே மேன்மையும் உயர்தரமுமான தன்மைக்கு சான்றாகாது என்பதை கவனிக்கவும். அப்படிப் பார்த்தால் உருவில் பெரிய யானை, திமிங்கலங்கள் தான் பூமியின் கர்த்தர்களாக இருப்பார்கள். மூளையின் செயல்பாடாகிய அறிவுக் கூர்மையால் மட்டுமே மேன்மை ஏற்படும்.*

*பூமியில் படைக்கப்பட்ட எல்லாவற்றிலும் மனிதனே*

*மேன்மையான படைப்பாய் இருக்கிறான். "பூமியிலிருந்து உண்டான மண்ணானவன்." ஆகவே ஒரு மனிதனுக்கு ஏற்படுகிற மேன்மையானது, அவனுடைய அறிவாற்றல், செயல்திறன் இவற்றால் உண்டாகும். இவையே தேவன் மனிதனுக்களித்த கொடை.*

## "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்"

*மேற்சொன்னவைகளுக்கு இசைவாக, ஆத்துமா சாகக் கூடிய தன்மை உள்ளது என்பதே உண்மை. வேதாகமத்திலும் 'ஆத்துமா' சாகும் தன்மையுடையது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் மனித தத்துவங்களும், பெயர் சபையாரின் பாட்டு புத்தகங்களும், ஆத்துமா சாகாமை வாய்ந்தது என்ற தப்பறையான கொள்கையைப் பறைசாற்றுகிறது. இதற்கு ஆதாரமாக நமது கர்த்தர் நமக்கு ஈடுபலியாகும் போது, "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி".... "அவருடைய ஆத்துமா தன்னை குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்போது...." (ஏசாயா 53:10,12) என்று வாசிக்கிறோம். ஆதாமின் ஆத்துமாவே மரணத் தீர்ப்புக்கு உள்ளானது. அதிலிருந்து, அந்த மரணத்திலிருந்து மீட்பு வாக்குத் தத்தம் பண்ணப்பட்டது. எனவே வேதவசனமும் இந்த மீட்பைப்பற்றி, "தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார்" (சங் 49:15) என்று கூறுகிறது. ஏற்கனவே நாம் பார்த்தபடி, ஒரே மீட்பராகிய கிறிஸ்துவின் மூலம் எல்லா ஆத்துமாக்களும் மீட்கப்பட்டன. எனவே நமது நண்பர்களாகிய எல்லா மனுக்குலமும், "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள்" என்று சொல்லப்படுகிறது. 1 தெச. 4:14*

*இங்கே அப்போஸ்தலர் "கிறிஸ்துவுக்குள்" என்று குறிப்பிடுவது பரிசுத்தவான்களை மட்டுமல்ல; ஏனெனில் இவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக தேவ ஆவியினாலே பரிசுத்த ஆவியைக் கொண்டு ஜெநிப்பிக்கப்பட்டு புதிய சிருஷ்டிகளானவர்கள், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர்களாகி, அவருடைய சரீரமாகிய திருச்சபையாரானவர்கள். ஆனால், "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள்" என்பது முழு மனித இனத்தையும் குறிக்கும். நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தன்னையே ஈடுபலியாகத் தந்தது*

*தம்முடையவர்களுடைய பாவங்களுக்கு மட்டுமல்லாமல், அனைத்துலக மக்களுடைய பாவங்களுக்கும் சேர்த்தே ஈடுபலியாகத் தன்னை ஈந்தார். இந்த தியாக ஈடுப-யினாலே, நமக்கு மட்டுமல்லாமல், அனைத்துலக மக்களுக்கும் ஜீவனளிக் கிறவராகிறார். உலக ஜனங்கள் அவரை விசுவாசித்து ஏற்றுக் கொண்டதற்கு சாட்சியாய் மீட்கப் பெறும் வாய்ப்பைப் பெறுவது, எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியாகும். - 1 யோவா 2:2 ;1 தீமோ. 2:4-6*

*இந்த பகுதியிலிருந்து, அப்போஸ்தலர் மனதில் உள்ள கருத்து வெளியரங்கமாகிறது. அறிவில்லாத புறஜாதியாரைப் போல மரணத்தைக் கண்டு துக்கமடையாதிருங்கள் என்று புத்திமதி சொல்லுகிறார். உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை இங்கே உறுதிபடக் கூறுகிறார். ஏனெனில் இயேசுகிறிஸ்து மனிதருடைய பாவங்களுக்காக மரித்தார். மனிதனை நீதிமானாக்க அவர் உயிர்த்தெழுந்தார். இப்படி "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள்" மரணத் தீர்ப்பிலிருந்து சட்டப்படி தெய்வீக வல்லமையினால் மீட்கப்படுகிறவர்களாகி விடுகின்றனர். பரிசுத்தவான்கள் மட்டுமே இத்தகைய ஆசீர்வாதத்திற்குட் படுவார்களென்றால் அப்பொழுது விசுவாசிகளாயிருந்தவர்கள், பிற்காலத்தில் விசுவாசிகளாகின்றவர்கள் ஆகியவர்களுக்கு இது ஆறுதல் தரக்கூடிய செய்தியாக இல்லையே. ஏனெனில் பெரும்பாலான உலக ஜனங்கள் அப்பொழுதும் இப்பொழுதுமுள்ள விசுவாசிகளுக்கு நண்பர்களாக இருந்தாலும் அவர்களை பரிசுத்தவான்கள் என்று சொல்ல முடியாது. மரணமாகிய உறக்கத்திலிருந்து பரிசுத்தவான்கள் மாத்திரமே விழித்தெழுவர் என்றால் மற்றவர்களுக்கு அது ஆறுதலை அளிப்பதற்கு பதிலாக வருத்தமும், மனவேதனையும் தருவதாய் இருக்கும். ஆனால் அப்போஸ்தலர் இங்கே, உலகிலுள்ள அனைவரும் இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் என்கிறார். ஆனாலும் இந்தக் கருத்தை பரலோகப்பிதாவும், அவரோடு உடன்படிக்கை செய்தவர்களையும் தவிர மற்றெவரும் உணரார்கள். எப்படியெனில் சத்திய வேதாகமத்தின் வழியே தேவன் தம்முடையவர்களுக்கு தமது கிருபையுள்ள எதிர்கால திட்டத்தை போதித்திருக்கிறார். தெய்வீக நன்மை நிறைந்த கிருபையின் நீள, ஆழ,*

*அகல உயரங்கள் அவர்களுக்குப் போதிக்கப்பட்டமையால் மிகுந்த சந்தோஷப்பட்டு களிகூறுகின்றார்கள். இதனால் அவர்கள், "நம்பிக்கையற்ற மற்ற புறஜாதியாரைப் போல துக்கிக்கமாட்டார்கள்." (1 தெசலோ 4:13)*

*இயல்பான மரணத்தில் எதுவுமே அறியாதிருப்பது போல நல்ல, ஆழ்ந்த உறக்கத்தில் உருவகமான மரணத்தில் எதுவுமே தெரியாது. எந்த நினைவும் இராது. அந்த நிலை அவர்கள் இல்லாம-ருக்கிற நிலைமையைக் குறிக்கும். அப்படி இல்லாம-ருக்கிற நிலைமையிலும், தேவ வல்லமையினால், தேவ நோக்கத்திற்காக அவர்கள் பாதுகாக்கப் படுகின்றனர். எப்படி எந்த நிலையில் அவர்கள் சுயநினைவை மரணத்தில் இழந்தார்களோ அதே நிலையில் சுயநினைவு கொடுக்கப்பட்டு, மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டு, இழந்த யாவற்றையும் திரும்பப் பெறுகிறார்கள். எத்தனை ஆண்டுகள் கழித்து அவர்கள் எழுப்பப்பட்டாலும் அவர்களுக்கு அத்தனை ஆண்டுகள், யுகங்கள் கழிந்ததாகவே தெரியாது. அவர்கள் எந்த நேரத்தில் மரமணடைந்தார்களோ அடுத்த கணத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டதாக இருக்கும்.*

*சிலருக்கு காயம் ஏற்பட்டு அதனிமித்தம் மூளையில் அழுத்தம் ஏற்பட்டு தற்காலிகமாக சுய நினைவை இழந்து சாகாமல் இருக்கிறவர்கள் நிலைமையை கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலைமையில் மூளையில் உள்ள அழுத்தத்தை ஒரு அறுவை சிகிச்சை மூலம் நீங்கும் போது, நினைவு திரும்பி, பேச்சு விட்டுவிட்டு, ஞாபக சக்தியும் விட்டுவிட்டு வரலாம். இப்படி அநேக காரியங்களை அறிந்திருக்கிறோம். ஆனால் தெய்வீக வல்லமை மூளையை பழைய நிலைமைக்கு கொண்டு வந்து உயிர்ப்பிக்கும். இவ்விதமாக உயிர்த்தெழுப்பப்படும் போது, அனைத்துலக மக்களும், எந்த நிலையில் எவ்விதம் மரித்தார்களோ, அதே நிலைமையின் தன்மை மாறாமல் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமை-உலக மனுக்குலத்தாருக்கேயல்லாமல், இது உலகி-ருந்து பிரித்தெடுத்து, தெரிந்து கொள்ளப்பட்ட அவருடைய பரிசுத்த திருச்சபையாருக்கல்ல. கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையார், விசேஷமான முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெற்று,*

பலவிதமான அனுபவங்களிலும் பங்கு பெறுவார்கள்.

ஆதாமுக்குள் மரிக்கிற மரணம் தெய்வீக திட்டத்தினாலும் ஈடுப-யினாலும், அழிவிலிருந்து மாற்றப்பட்டு, நித்திரை என்கிற ஒன்றுமில்லாத நிலைமையை அடைகிறது. வேதம் தெளிவாக கூறுகிறதாவது : கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சியிலே, உறக்கமாகிய மரணத்திலிருந்து விழித்தெழுந்தவர்கள் ஒவ்வொருவரும் அந்த அரசாங்கத்தின் ஒழுக்கத்திற்கும், இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கும் கீழ்ப்படிகிறவர்களே, நிலைத்திருப்பார்கள். கீழ்ப்படியாதவர்களோ வேண்டுமென்றே பாவ வழியை தெரிந்து கொள்கிறார்கள். இந்த நிபந்தனைக்கு கீழ்ப்படியாத ஒவ்வொருவரும் தகப்பனாகிய ஆதாமுக்குக் கொடுத்த மரணத் தீர்ப்பின்படி அழிக்கப்பட்டுப் போவர். ஆனால் அது ஆதாமுக்குள்ளாக மரிக்கிற மரணத்திற்கொப்பாகாது. இது என்றென்றைக்கும் உயிர்த்தெழுப்ப முடியாத, முற்றிலும் அழிக்கப் படுகிற மரணமாதலால், இரண்டாம் மரணம் எனப்படுகிறது. இந்த இரண்டாம் மரணத்தைக் குறித்து வேதாகமத்தில் எங்கும் நித்திரைக்கு சமமாக சொல்லப்படவில்லை; இரண்டாம் மரமணடைந்தவர்கள் உயிருடன் எழுப்பப்படுவார்கள் என்று வேதத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை; அதற்கு மாறாக, “கர்த்தருடைய சந்நிதானத்தி-ருந்து நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.” (II தெச 1:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மீட்கப்பட்டு, உயிர்த்தெழுப்பட்ட இந்த வகுப்பார் ஆயிர வருட அரசாட்சியில் நியாயத் தீர்க்கப்படுவார்கள். இதைக் குறித்து வேதாகமம், “பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்” என்று கூறுகிறது. (எசேக் 18:20) தற்காலத்திற்கு இந்த தீர்க்க தரிசனம் பொருந்தாது என்பதற்கான மூன்று காரணங்களை கீழே காணலாம்.

1. தற்காலத்தில் பரிசுத்தவான், பாவி எல்லாருமே மரணமடைந்து கொண்டிருப்பதால் இது பொருளற்றதாகத் தோன்றும்.

2. இது ஒரு இரண்டாம் நியாயத் தீர்ப்பாக சொல்லப்படுவதினால் இது தனிப்பட்ட ஒவ்வொருவருடைய செயல்பாட்டுக்குரிய தீர்ப்பாக அமைகிறது. அதனால் சுவிசேஷ

யுகமாகிய இக்காலத்திற்கு ஏற்றதல்ல. ஒரு மனிதனுடைய கீழ்ப்படியாமையின் காரணமாக உண்டான நியாயத் தீர்ப்பாகிய மரணத்தில் எல்லாரும் மரிக்க வேண்டியதாய் இருக்கிறது. இந்த சாபம் நேரடியாக ஆதாம் பெற்றிருந்தாலும், அவனால் உண்டான எல்லாச் சந்ததிகளுக்கும், அவன் வம்சாவழியில் வந்த அனைவருக்கும் கொடுக்கப்பட்ட தீர்ப்பாகிறது. - ரோமர் 5:12

3. ஆதாமினால் உண்டான பாவத்திலிருந்து விடுதலையானதை இந்த வசனம் (உப தலைப்பு) எடுத்துக் காட்டுகிறது. அதோடு அந்தத் தீர்ப்பின் காரணமாக மற்ற உலக ஜனங்கள் அந்த தீர்ப்புக்குள்ளாக இருப்பதைக் காண்பிக்கிறது. எனவே விசேஷமான இந்த வசனத்தின் பொருள் ஆயிர வருட அரசாட்சியாகிய நியாயத் தீர்ப்பிலே நடைபெறுமென அறியலாம். யூத யுகத்தின் நியாயப்பிரமாண உடன்படிக்கையும் ஆயிர வருட யுகத்தின் உடன்படிக்கையும் பொருந்தியிருக்கிறது - ஒன்றைத் தவிர. அதாவது ஆயிர வருட யுகத்தில் மேன்மையான மத்தியஸ்தர் இருக்கிறார். அவர் நீதியின்படி நடக்க மனதாயிருக்கிற யாவருக்கும், அவர்களுடைய சிறிய குற்றங்களைப் பெரிதுபடுத்தாமல் அவைகளை மன்னித்து மறந்து நித்திய ஜீவனையளிக்க வல்லவராகவும், அதையே விரும்புகிற வராகவும் இருக்கிறார்.

அந்த வசனம் தொடர்ந்து வெளிப்படுத்துகிறதாவது: பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள்; அதனால் பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயிற்று என்ற பழமொழியை இஸ்ரயேலில் இனி சொல்வதில்லை என்றும், எவன் திராட்சைக் காய்களைத் தின்றானோ அவன் பல்லே கூசிப் போகும் என்பதால், "பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன் மேல் தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் தான் இருக்கும்." (எசேக். 18:2,4,20) அதற்குரிய வேளை இன்னும் வரவில்லை என்பது ரூபகாரமாகிறது. ஏனெனில் பிதாக்கள் பாவம் என்னும் திராட்சைக் காய்களைத் தின்றார்கள். அதனால் பிள்ளைகள் பல் இப்பொழுதும் கூசிக் கொண்டு தான் இருக்கிறது. நாம் இப்பொழுதும் அந்த பாரம்பரிய பிரமாணத்தின் கீழ் தான்

இருக்கிறோம். எல்லாரும் ஆதாமின் பாவத்தினால் தான் மரித்துக் கொண்டிருக்கிறார்களேயல்லாமல், தங்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பாவங்களுக்காக அல்ல. இப்பொழுதும் மனுக்குலத்தில் பாதித்தொகையாயுள்ள சிறு குழந்தைகள், நன்மை தீமை இன்னதென்று பகுத்தறியக் கூடிய வயது வருமுன்பே மரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. பிறந்த சில நாட்களில், சில மாதங்களில் எதுவுமே அறியாத மாசற்ற குழந்தைகள் மரிப்பது, அந்த குழந்தைகளின் பாவமல்ல. ஆதாமின் வழியில் வந்த ஒரே காரணம் தான் அவைகளின் மரணத்திற்கு காரணம். அந்த மரண சாபம் இப்பொழுதும் மனுக்குலத்தை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. “நீ செத்துக் கொண்டே சாவாய்” என்ற சாபத்தை ஆதாமின் வழியாக தொடர்ந்து அனைத்து மனுக்குலமும் சுதந்தரித்துக் கொண்டது. அதன்படியே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரியில் தன் ஜீவனைக் கொடுத்து அனைத்து மனுக்குலத்தையும் தேவனிடத்தில் ஒப்புரவாக்கினதினால், அனைவரும் உயிர்த்தெழுந்து அந்த மரண சாபத்தினின்று விடுதலையாக்கப்படுவார்கள்.

இதே நிபந்தனைகளை இறைவாக்கினரான எசேக்கியேல் சொன்ன வண்ணமாகவே, பிற்காலத்தில் நிறைவேற்ற வேண்டிய தீர்க்கதரிசனமாக, எரேமியா *31:29-34*இல் குறிப்பட்டுள்ளார்.

“பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்ல மாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தம் சாவான்; எந்த மனுஷன் திராட்சைக் காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்.”

“அந்நாட்களில்” என்று இங்கு எரேமியா குறிப்பிடுவது, பிற்காலத்தில் வரப்போகிற இயேசு கிறிஸ்துவின் ஆட்சிக் காலத்தையே குறிக்கும்; பாவம் மரணம் ஆட்சி செய்யும் தற்காலத்தை ஒருபோதும் குறிக்காது. இதனைத் தொடர்ந்து இறைவாக்கினராகிய எரேமியா, ஆயிர வருட அரசாட்சியின் மற்ற சிறப்புக்களையும், புதிய உடன் படிக்கைகளையும் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றார். அது யூதாவுக்கும் இஸ்ரயேலுக்கும் நித்திய உடன்படிக்கையாய் இருக்கும். அப்போதுதான் நீண்டகாலமாக அவர்கள் எதிர்பார்த்திருந்த

ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத் தத்தங்களின்படியான ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்பதை கவனிக்கவும். இதனை ரோமர் 11:26-31 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஆதாமினால் உண்டான மரண சாபத்தினின்று, தேவ கிருபையினால் மரணத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறார்கள். அப்படி விடுதலையாக்கப்பட்டவர்கள் தேவனைப்பற்றிய அறிவில் தேர்ந்த பிற்பாடும் தவறினால், அவர்கள் பெற்ற கிருபை வீணாகிவிடும். அவர்கள் திரும்பவும் மரண சாபத்திற்கு ஆளாவார்கள். இந்தக் கருத்தை நமது ஆண்டவர், "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; (எப்படிப் பார்க்கிலும் தற்கால வாழ்வு ஆதாமின் மூலம் சுதந்தரித்துக் கொண்ட மரணத்தால் முடிவடைந்தே தீரும். எனவே இந்த ஜீவியத்திற்காக அஞ்ச வேண்டாம். நீங்கள் மீட்கப்பட்டீர்கள் என்பதையும், உங்களுக்கு நிச்சயம் எதிர்கால வாழ்வு உண்டென்பதையும் நினைவில் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் மூலமாய்ப் தேவன் அளிக்கப்போகிற அந்த ஆத்தும மீட்பை நல்ல எதிர்காலத்தை எவரும் உங்களிடமிருந்து பறிக்கமுடியாது). ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே (கெஹன்னா) அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்." (மத். 10:28) என்று கூறுகிறார். இதன் மூலம் ஆத்துமாவை அழிக்கும் வல்லமை தேவன் ஒருவருக்கே உண்டு என்பது தெளிவாக்கப்படுகிறது. பழைய மூட நம்பிக்கையின் வேத சாஸ்திரிகள் ஆத்துமா அழியாது, அதை அழிக்க தேவனாலும் கூடாது, ஆனால் ஆத்துமாவின் சந்தோஷத்தை கெஹன்னாவில் அழிக்கமுடியும் என்கிற தப்பறையை பரப்பிவிட்டனர் என்பதை நாம் ஏற்கனவே ஆராய்ச்சியின் மூலம் அறிந்திருக்கிறோம். தேவனுடைய வார்த்தையை "வஞ்சனையாய்ப் புரட்டுகிறவர்கள்" தேவ தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ளவே முடியாது. இதே புத்தகத்தில் நரகத்தைப் பற்றிய விளக்கத்தை விளக்கியிருக்கிறோம். ஆனால் இந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'கெஹன்னா' நரகத்தையல்ல, முற்றிலும் அழிக்கப்படுதலாகிய இரண்டாம் மரணத்தையே குறிக்கும். தேவனுடைய மிகப்பெரும் தீர்க்கதரிசியாகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள், தற்காலத்தில் அவருடைய

திருச்சபையாருக்கு மட்டுமே விளங்கும்படி மறை பொருளாகவும், உவமைகளாகவும் சொல்லப்பட்டது. ஏற்ற வேளையில் எதார்த்தமாகவும், வெளிப்படையாகவும் சொல்லும்போது அதற்குக் கீழ்ப்படியாதவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். *அப் 3:23; மத் 13:11*

வேதாகமம், மனிதன் ஒரு ஆத்துமா என்றும், ஆத்துமாவே உயிருள்ள மனிதன் என்றும் எவ்வித ஐயத்திற்கிடமின்றி வகுத்துச் சொல்லுகிறது. இந்த ஆத்துமா பாவம் செய்ததால் ஜீவனை இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்றும், இது தெய்வீக தீர்ப்பின்படி பாவத்தினாலும் சாபத்தினாலும் ஏற்பட்ட சம்பளமாகிய மரண தண்டனையைப் பெற்றுள்ளது என்றும், மனிதனாகிய கிறிஸ்து எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மையே கொடுத்து, மனிதனுக்கு வேண்டிய உரிமை, சலுகைகள், பாவ விமோச்சனம் ஆகியவற்றை திரும்பக் கொடுத்தார் என்றும் கூறுகிறோம். கிறிஸ்து மனிதனைக் கிரயத்துக்குக் கொண்டதால் மரண தண்டனை ரத்தாகிறது. எனவே மரணம் என்பது முற்றிலும் அழிக்கப்படுவதாயிராமல் நித்திரைக்கு ஒப்பாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த நித்திரையி-ருந்து உலக மனுமக்கள் ஆயிர வருட யுக காலையில் அவர்களது இரட்சகரால் உயிர்த்தெழுதல் மூலம் எழுப்பப்படுவர்.

## தவறான மொழி பெயர்ப்பினால் ஏற்பட்ட குழப்பம்

ஆத்துமா என்பது என்ன? ஆவி என்பது என்ன? உண்மையான மனிதன் என்பவன் யார்? என்பன பற்றி பொதுவான மொழி பெயர்ப்பைச் செய்தவர்கள் மிகவும் தவறான கருத்துக் கொண்டிருந்ததால், மிகமிகத் தப்பறையான கருத்துக்கள் பரவ இவ்வகையான மொழிபெயர்ப்புக்களும் ஒரு காரணம் என்பதில் வியப்பில்லை. அவர்கள் எற்கனவே கொண்டிருந்த தவறான கருத்துக்களுக்கு இசைவாக பல இடங்களிலும் தவறாக மொழிபெயர்ப்பு செய்து பொதுவாக வேதாகமத்தைப் படிக்கிற சராசரியான மனிதர்கள் மனதில் குழப்பத்தை பத்து மடங்கு அதிகரிக்கச் செய்தனர். சில வார்த்தைகளின் அர்த்தத்தை திரித்து, மெய்க் கருத்தை மறைத்து எழுதினமையால், எழுதின அக்காலத்தை

விட இக்காலத்தில் குழப்பம் இரட்டிப்பாயிற்று. 1. ஆத்துமா, நரகம் பற்றிய தவறான போதனை. 2. அந்த தவறான போதனைக்கு ஆதாரமாக தவறுதலான மொழி பெயர்ப்பு.

ஆயினும் நாம் இருக்கும் தற்காலம் வேதாகம மூலச் சொற்களுக்கு உள்ள சரியான பொருள்களை அறிந்து கொள்ள ஏராளமான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இதனால் மிக சராசரியான மனிதர்கூட அப்போது மொழி பெயர்த்தவர்களுக்குக் கிடைக்காத மிகச் சரியான பொருளைக் கண்டுபிடிக்கக் கூடிய ஏராளமான துணை நூல்கள் இப்பொழுது கிடைக்கின்றன. தற்போது இருக்கிறவர்களுக்கு பழைய மொழி பெயர்ப்புக்களின் தப்பறையை உணர்ந்து கொள்ள கீழ்க்காணும் மூன்று நூல்கள் எபிரேய, கிரேக்க சொற்களின் ஆழ்ந்த கருத்தை உணர்ந்து கொள்ள உறுதுணையாய் இருக்கின்றன.

1. பரிசுத்த வேதாகமத்தில் கிரேக்க எபிரேய சொற்களுக்கான ஆங்கில ஒத்துவாக்கிய அகராதி (The English man’s Hebrew and Greek Concordance of the Holy Scriptures)

2. பேராசிரியர் யங் அவர்களின் விளக்கமான ஒத்துவாக்கிய அகராதி (Professor Young’s Analytical Concordance to the Bible)

3. ஜேம்ஸ் ஸ்ட்ராங் அவர்களின் முழு விளக்க ஒத்துவாக்கிய அகராதி (Dr. Strong’s Exhaustive Concordance)

இந்த மூன்று பேரகராதிகளிலும் வேதாகமத்திலுள்ள எல்லாக் கிரேக்க எபிரேய மூலச் சொற்களின் மூலப் பதங்கள், அச்சொல்லுக்கான ஏனைய அர்த்தம், உபயோகப்படுத்தப்பட்ட பொருள் அனைத்தையும் அறியலாம். முதல் அகராதியானது எந்த ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவ பிரிவையும் சாராதது. இரண்டாவது அகராதி ப்ரெஸ்பிடேரியன் சபையைச் சார்ந்தவர்கள் எழுதியது. மூன்றாவது அகராதி மெத்தடிஸ்ட் சபையைச் சார்ந்தவர்கள் எழுதியதாகும். இந்த மூன்று பேரகராதிகளிலும் எந்த ஒரு சபையினுடைய தனிப்பட்ட கருத்தும் திணிக்கப்படாமல் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இவைகள் மூன்றும், மூன்று வித்தியாசமான நோக்கம் கொண்டவர் களிடமிருந்து புறப்பட்டிருந்தாலும், சரியான கருத்தை தயங்காமல் சொல்-யிருக்கிறார்கள் என்பதை துணிந்து சொல்லலாம்.

அவைகளின் சாட்சி இசைவானதாகவும், பொருத்தமானதாகவும் எல்லாரும் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வாய்ப்பாகவும், பயன்பாடு நிறைந்ததாகவும் அமைந்துள்ளது.

இந்த தரமுள்ள நூல்களை ஆராய்வதால் நாம் எதைக் காண்கிறோம்? இவைகளை ஆராயும்போது, எபிரேயச் சொல்லாகிய 'நெபேஷ்' பழைய ஏற்பாடு முழுவதிலும், பொதுவாக 'ஆத்துமா' என்று 436 முறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனுடைய பொருள், 'உணர்வுகள் ஒருவன்' என்பதாகும். இந்தக் கருத்தினையும், 36 விதமாக மொழிபெயர்த்துள்ளனர். அவை பின்வருமாறு:

'ஏதாவது' என்ற பொருளில் நான்கு முறையும் 'பசி' என்ற பொருளில் இரண்டு தடவையும், 'மிருகம்' என்று ஒரே தரமும், 'சரீரம்' என்று நான்கு இடங்களிலும், 'மூச்சு' என ஒரே தடவையும், 'சிருஷ்டி' என 9 முறையும் (காண்க. ஆதி 1:21; ஆதி 1:24; 2:19; 9:10, 12,15,16; லேவி 11:46 இருமுறை) 'செத்தது' என 5 முறையும், 'சாவுக்குரிய' என ஒரே தரமும், 'ஆசை' என்று மும்முறையும், 'அதிருப்தி அடைந்த' என ஒரே விசையும், 'மீன்' என ஒரே தடவையும் (ஏசாயா 19:10) 'ஆவி' (Ghost) என இருமுறையும், 'பேராசையுள்ள' என்று ஒரே தரமும், 'உடைய' என ஒரே முறையும், 'அவன்' என ஒரே தரமும், (சங்105:18) 'இதயம்' என்று 15 முறையும், 'இதயப்பூர்வமான' என்று 1 முறையும் 'அவளே' என்று ஒரே தரமும், 'அவளது' என்று ஒரே தரமும், 'அவனே' என்று 4 முறையும், 'ஜீவன்' அல்லது 'உயிர்' என்று 100 தடவையும், 'இச்சை' என இருமுறையும், மனிதன் என 2 தடவைகளும், 'எனக்கு' என 3 முறையும் (எண். 23:10; நியாயதி 16:30; 1 ராஜா 20:32) 'சிந்தை' அல்லது 'மனம்' என 15 முறையும், 'சாகக்கூடிய' என 1 முறையும், 'எனக்கே' என 1 முறையும் (சங். 131:2) 'ஒன்று' என ஒரே முறையும் (லேவி 4:27) 'சொந்தம்' என ஒரே முறையும் (நீதி 14:10); 'ஆள்' என 24 முறையும் (ஆதி 14:21; 36:6; எண். 31:19; 35:11,15,30; உபா 10:22; 27:25; யோசுவா 20:3,9) 'மகிழ்ச்சி' என மும்முறையும், 'தானே' என 21 தடவையும், 'கொல்' என்று ஒரே தரமும், 'பொருள்' என இருமுறையும், (லேவி 11:10; எசேக் 47:9) 'சித்தம்' என மும்முறையும், 'உன்னுடைய' என மும்முறையும் சொல்லப்பட்டுள்ளன.

புதிய ஏற்பாட்டில், நெபேஷூக்குச் சமமான கிரேக்கச் சொல்

"சூச்சே" (Psuche) என்பதாகும். இது 'ஆத்துமா' என்று 56 முறையும், 'சித்தம்', 'மனம்' என்று 3 முறையும் (அப். 14:2; பி-ப் 1:27; எபி 12:3) 'இதயம்' என்று ஒரே முறையும் (எபேசி 6:6) 'ஜீவன், உயிர்' என்று 41 முறையும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இத்தனைவிதமான அர்த்த பேதங்கள் மொழிபெயர்ப்பினால் ஏற்பட்டிருந்தாலும் எதனாலும் சத்தியத்தை மறைக்க இயலாமற் போயிற்று. 'உயிர்' அல்லது 'ஜீவன்' என்கிற பொருள் ஒன்றையே குழப்பிக் கொண்டிருக்கின்றனர். இதனை, உயிர்வேறு, ஆத்துமா வேறு என்று பிரித்துக் கூறுவதுதான் குழப்பங்களுக்கெல்லாம் காரணமாயிற்று. இதனால் ஒரு மனிதன் செத்தாலும் சாகலாமே ஒழிய அவனுடைய ஆத்துமா என்றென்றும் சாகாது என்ற தப்பறையைப் புகுத்த இது ஒரு ஆதாரமாய்ப் போய்விட்டது. கீழ்க்காணும் வசனங்களில் "சூச்சே" என்ற கிரேக்கச் சொல் ஜீவன் என்று மொழி பெயர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் இது, 'ஜீவித்திருக்கிற ஒருவர்' என்றோ 'ஆத்துமா' என்றோ மொழி பெயர்த்திருந்தால் இந்தக் குழப்பங்களையெல்லாம் தவிர்த்திருக்கலாம்.

"பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள்." (சூச்சே - ஆத்துமா, உயிர்) மத் 2:20

"ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும்... விசேஷித்தவைகள் அல்லவா?" (சூச்சே - ஆத்துமா, உயிர்) -மத் 6:25

"தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்." மத் 10:39 (சூச்சே - ஆத்துமா, உயிர்)

"ஆகையால் என்னத்தை உண்போம்... குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காக... கவலைப்படாதிருங்கள்." மத். 6:25 (சூச்சே - ஆத்துமா, உயிர்)

"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்." -மத் 16:25 (சூச்சே - ஆத்துமா, உயிர்)

"மனித குமாரனும்... அநேகரை மீட்கும் பொருளாகத்

*தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்." -மத் 20:28 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ எது நியாயம் என்றார்." - மாற்கு 3:4 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளவான்... மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" - மாற்கு 8:35-37 (சூச்சே - ஆத்துமா, உயிர் இருக்கும் நிலைமை)*

கிரேக்க மூலச் சொல்லான 'சூச்சே' என்ற சொல்லே, மேற்கண்ட வசனத்தில் ஒரு இடத்தில் ஆத்துமா என்றும் இன்னொரு இடத்தில் ஜீவன் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதை கவனிக்கவும். இது எத்தனை பேருக்குத் தெரியும்? (ஆங்கில வேதாகமம்)

*"மனுஷகுமாரனும்.. அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." - மாற்10:45 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ எது நியாயம்?" லூக் 6:9 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்." - லூக் 9:24 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"மனுஷ குமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல..." - லூக் 9:56 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், கவலைப்படாதிருங்கள்.... ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது." - லூக் 12:22,23 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*“யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும்,சகோதரர்களையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்.” -லூக் 14:26 (சூச்சே- ஆத்துமா, உயிர்)*

*“தன் ஜீவனை இரட்சிக்க வகை தேடுகிறவன் அதை இழந்து போவான். இழந்து போகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான்.” -லூக் 17:33 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*கர்த்தருடைய ஜனங்கள், தற்போது அவர்கள் இருக்கின்ற நிலைமை, ஏற்கனவே பெற்றுக் கொண்ட மரணத் தீர்ப்பின் கீழ் மரித்தாக வேண்டிய நிலைமையில் இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆனாலும் தெய்வக் கிருபையின்படி, அவர்கள் யாவருக்கும் மறு ஜீவனளிக்கப்படும். ஆனால் தொடர்ச்சியாக இறந்தவுடனேயே அல்ல என்ற கருத்தை மேலே கடைசியாகச் சொல்லப்பட்ட வசனமும், அதற்கு முன் சொல்லப்பட்ட வசனங்களும் தெளிவாக விளக்குகின்றன. நம்முடைய மீட்பராகிய கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி விசுவாசிகளானவர்கள், ஜீவனுள்ள பலி செலுத்தி, வாழ்நாள் முழுவதும் அவருக்குக் கீழ்ப்பட்டிருப்போமேயானால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட படியே கிறிஸ்துவுடன் கூட உடன் வாரிசுகளாக முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகி தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுவார்கள். இதுவே சுவிசேஷ யுகத்தின் அழைப்பு. கர்த்தருக்கென்று நம்முடைய ஜீவனை ஒப்படைக்க வேண்டும். இவ்விதமாக அவர்கள் தாங்கள் இழந்த ஜீவனை அதாவது ஆத்துமாவை திரும்பப் பெற்றுக் கொண்டு நித்திய நித்தியத்திற்கும் ஆத்தமா அல்லது ஜீவனுடையவர்களாவார்கள். - யோவா 10:10 (ஜீவன் - ஜூவே)*

*“நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் (சூச்சே - ஆத்துமா, உயிர்) கொடுக்கிறான்.” யோவா. 10:11 (நமது கர்த்தர், “தம்முடைய ஆத்துமாவை மரணத்திலுற்றி, தன்னை குற்ற நிவராண ப-யாக ஒப்புக் கொடுத்தார்.” - ஏசா. 53:10,12)*

*“ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.” -யோவா. 10:15 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும்படிக்கு, அதைக் கொடுக்கிற படியால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்." - யோவா 10:17 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*ஜீவனை மறுபடியும் தெய்வீக வல்லமையினாலும், வாக்குத் தத்தத்தின்படியும் உயிர்த்தெழுதலின் மூலமாகவும் பெற்றுக் கொள்ளுவேன் என்று இவ்விடத்தில் கர்த்தர் மொழிகிறார்.*

*"தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அவன் அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக் கொள்ளுவான்." - யோவா 12:25 (சூச்சே - ஆத்தமா, உயிர்)*

*தற்கால தீமை நிறைந்த உலகில், தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருப்பது என்பது, அன்றாட நடப்புக்கள் எதுவுமே ஏமாற்றத்தையும், திருப்தியளிக்காத தன்மையையுமே சந்திக்க வேண்டி வரும் என்பதே இந்தப் பகுதி தரும் சிந்தனை. தேவனுடைய நீதிக்கும், தேவனுக்கும், உடன் சகோதரர்களுக்கும் மனப்பூர்வமாக சேவை செய்கையில் நாம் இத்தகைய துன்பங்களை அனுபவித்துத் தியாகம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இப்படி தேவனுடைய திட்டத்திற்குட்பட்டு தியாகங்கள் செய்யும்போது நம் வாழ்வு அர்த்தமுள்ளதாகிறது. இப்பொழுது அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் வரக்கூடிய யுகத்தில் பேரின்பம் காத்திருக்கின்றது. இந்த உலகத்தில் இப்பொழுது காட்சிக்குத் தெரிகிற இன்பங்களையும், இந்த அற்ப சந்தோஷத்தையும் நீதியையும் தேவனுக்கு கீழ்ப்படிதலையும் காட்டிலும் மேலாக பெரிதென மதிப்பவன், தேவன் நமக்கு கொடுக்கயிருக்கிற, எதிர்கால வாழ்வை, முதலாம் உயிர்த்தெழுதலில் ஆத்துமாவை, ஜீவனை பெற்றுக்கொள்ள தகுதியற்றவனாகின்றான்.*

*"எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ?" - யோவா 13:38 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." - யோவா 15:13 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"தங்கள் பிராணனையும், ஒப்புக் கொடுக்கத் துணிந்தவர்கள்."*

*-அப். 15:25 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது." அப். 20:10 (சூச்சே - ஆத்துமா, உயிர்) (அவன் மரிக்கவில்லை, ஜீவ சுவாசம் அவன் உயிரோடியிருப்பதைக் காண்பிக்கிறது)*

*"ஒன்றையும் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்." -அப். 20:24 (சூச்சே - ஆத்துமா, உயிர், இருக்கும் நிலைமை)*

*உயிர்த்தெழுலின்போது அடையப் போகும் மகிமையை நினைக்கும் போது, தற்போதையை வாழ்க்கை அற்பமானது என்பதை அப்போஸ்தலர் சரியாக அறிந்திருந்தார். தேவனுக்கு மேலாக, கர்த்தருடைய ஜனங்களுக்கு மேலாக, கர்த்தருடைய சேவை தவிர இவ்வுலகில் எதுவுமே அருமையானதும், நினைக்கத் தக்கதும் அல்ல என்று, அப்போஸ்தலர் எண்ணினார். முதலாம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையின் நிமித்தமாக அப்போஸ்தலர் தன்னிடமுள்ள எல்லாவற்றையும் செலவழிக்கவும், தன்னைத்தானே கர்த்தருக்காக அர்ப்பணிக்கவும் பிலிப். 3:8-11 இல் அவர் விளக்கமாக கூறியுள்ளது போல் சித்தமாயிருந்தார்.*

*"மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்குக்கும், கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டாயிருக்குமென்று காண்கிறேன்." அப்.27:10(சூச்சே - ஆத்துமாக்கள், ஜீவன்கள்)*

*"உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது." அப். 27:22 (சூச்சே-ஆத்துமா, ஜீவன்)*

*"நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்களே." - ரோம 11:3 (சூச்சே - ஆத்துமா, ஜீவன்)*

*"அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்." - ரோமர் 16:4 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"அவன் தன் பிராணனையும் எண்ணாமல் கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாய் இருந்தான்." - பிலிப் 2:30 (சூச்சே - ஆத்துமா, ஜீவன்)*

*"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்." - 1 யோவா 3:16 (சூச்சே - ஆத்துமாக்கள், உயிர்)*

*"சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொரு பங்கு செத்துப் போயிற்று." - வெளி 8:9 (சூச்சே - ஆத்துமா, உயிர்)*

*"மரணம் நேரிடுகிறாதயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல்....." வெளி 12:11 (சூச்சே - ஆத்துமாக்கள், ஜீவிகள்)*

*தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதிய மனிதர்கள், வேதாகமம் முழுவதும் நெபேஷ், சூச்சே என்ற வார்த்தைகளை எப்படி பயன்படுத்தினர்கள் என்பதையும், இதன் மூலம் ஆத்துமா என்பது குறித்தும் நாம் தெளிவாக புரிந்து கொண்டோம். இது தெளிவில்லாத, மங்கலாயிருந்த வார்த்தைகளாகிய ஆத்துமா, ஆவி என்ற வார்த்தைகளைப் பற்றி இதற்கு முன்னிருந்த எல்லா இரகசியங்களையும் நீக்குகிறது. இந்த வார்த்தைகள் படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் தெளிவற்றதாகவும், விளக்க முடியததாகவும், புரிந்துகொள்ள முடியாததாகவும் இருந்திருக்கின்றன.*

*சரீரமே ஆத்துமா என்று யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது. நமது கர்த்தர் தெளிவாகச் சொன்னபடி, சரீரத்தை மட்டுமல்ல, ஆத்துமாவையும் அழிக்கக்கூடிய வல்லமை அவருக்கே உண்டு என்பதால், ஆத்துமா சாகும் என்ற உண்மையை விளங்கிக் கொள்வோமாக. இன்னொரு வகையில் பார்க்கும்போது, சரீரமில்லாத ஆத்துமா இருக்க முடியாது. அது பரலோக ஜீவிகளாகட்டும், பூலோக ஜீவிகளாகட்டும், ஆவிக்குரிய ஜீவிகளாகட்டும், அல்லது மிருக ஜீவிகளாகட்டும். ஒரு உடல் இல்லாமல் அது ஆத்துமாவாக இருக்க முடியாது.*

*மனித சிருஷ்டிப்பைப் பற்றி ஆதியாகம வரலாற்றில் பார்க்கும்போது, மண்ணினால் அவன் சரீரம் உண்டாக்கப்பட்டாலும் மனிதனாகி விடவில்லை; ஆத்துமாவாகி விடவில்லை. கண் இருந்தது, ஆனால் காணமுடியவில்லை; காதிருந்தது ஆனால் கேட்க*

முடியவில்லை; மூக்கு இருந்தது, ஆனால் முகர முடியவில்லை; வாய் இருந்தும் பேச முடியவில்லை; நாவிருந்தும் சுவையறியாதிருந்தது; இருதயமிருந்தது, ஆனால் அதில் துடிப்பில்லை; ஜீவனில்லாத இரத்தம் உறைந்து போய் இருந்தது; நுரையீரல் இருந்தது ஆனால் அதில் அசைவில்லை. உயிரில்லாதிருந்ததினால் அது மனிதல்ல. பிணம் உயிரற்ற சரீரம்.

சரீரத்தை ஆயத்தம் பண்ணின பிற்பாடு, அதற்கு அடுத்தபடியாக ஒவ்வொரு வகையிலும் ஆயத்தம் செய்யப்பட்ட உடலுக்கு உயிரூட்ட வேண்டியிருந்தது. இந்த உயிரூட்டத்தைக் காண்பிக்க அவன் நாசியில் ஜீவ சுவாசம் ஊதப்பட்டது. நீரில் மூழ்கிய ஆரோக்கியமான ஒருவனின் சுவாசம் முற்றிலுமாக நின்று போனாலும் அவன் உடலை ஊதி, அமுக்கி செயற்கை முறையில் சுவாசிக்கக் செய்வது இன்றும் வழக்கமாக இருக்கிறது. நுரையீரலையும், கையையும் அசைத்து சுவாசிக்கச் செய்கிறார்கள். படிப்படியாக நுரையீரலிலிருந்து மூக்கு வரை காற்று உள்ளேயும் வெளியேயும் சென்றுவர செய்கிறார்கள். ஆனால் ஆதாம் விஷயத்தில் இவ்வளவாய் செயற்கை சுவாசம் உண்டாக்கத் தேவையிருக்கவில்லை. மாறாக, வளி மண்டலத்தில் இருக்கக்கூடிய பிராண வாயுவை சிருஷ்டிகர் மனித நாசிக்குள் பிரவேசிக்கச் செய்ததின் மூலம் அவன் சுவாசிக்க ஆரம்பித்து விட்டான்.

உயிரூட்டமுள்ள காற்று மூக்கில் சென்று சுவாசம் ஆரம்பித்த உடனேயே நுரையீரல்கள் சுருங்கி விரிய ஆரம்பித்தன. இரத்த அணுக்கள் பிராண வாயுவை ஏற்றுக் கொண்டதால், இரத்தம் இருதயத்தை நோக்கியும், இருதயத்திலிருந்தும் தன் பயணத்தைத் தொடர்ந்து, உடலில் உறங்கிக் கிடந்த ஒவ்வொரு பாகத்தையும் தட்டி எழுப்பி, அதனதன் பணியை செய்ய இயக்கி அதற்கு உணர்வையும் ஆற்றலையும் தந்தது. இமைப்பொழுதில் மூளைக்கு பலம் உண்டானது. மூளையிலிருந்து கட்டளை பிறக்க, தொடுதல், உணர்தல், பார்த்தல், கேட்டல், சுவைத்தல் ஆகிய ஐம்புலன்களும் உண்டாயிற்று. உயிரற்ற ஜடமாக இருந்த உடல் இப்பொழுது இயக்கம் பெற்றது. வேதாகமத்தில் சொல்லப்பட்ட 'ஜீவாத்மா' என்ற சொல்லுக்குரிய இயக்கத்தைப் பெற்றது. ஜீவாத்மா என்பதை வேறு வழியாக விளக்க வேண்டுமாயின்,எல்லா வகை உணர்ச்சிகளையும்

காட்டக்கூடிய, சிந்திக்கக் கூடிய, இயங்கக் கூடிய ஆற்றல் உடைய ஜீவியைக் குறிக்கும்.

ஆதாம் உயிர் உள்ளவனாய் ஆனபிற்பாடு, அந்த உயிரைப் பாதுகாக்க, கனிவர்க்கங்களையும் தாவரங்களையும் உண்ண வேண்டிய அவசியமாயிற்று. அவன் பாவம் செய்த பொழுதோ, தேவன் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டி விட்டார். "அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்ய வேண்டும் என்று... அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டார்." *(ஆதி 3:22,23)* தேவனுடை சத்திய வெளிச்சத்திற்கு முன்னர் பொய்யும் மாயையும் இரகசியம் போன்ற மூடுபனியும் எப்படி சிதறடிக்கப்படுகின்றன!

மனிதன் பாவம், மரணம் ஆகியவற்றில் விழுந்ததால் ஆரம்ப பூரண நிலையிலிருந்து அபூரண நிலையை அடைந்தான். மகா உன்னத நீதிபதியாகிய தேவன், தாம் படைத்தவையெல்லாம், "நன்றாயிருந்தன" என்று சொல்லப்பட்ட நிலையிலிருந்தன. ஆனால் தரக்குறைவான சிந்தனையில் வளர்ந்து, உன்னதமான அறிவுத்திறனை பயன்படுத்த தவறியதால், மூளையின் அறிவுத்திறன் குன்றிப்போனது. இன்னும் அந்த அங்க உறுப்புகள் இருக்கின்றன. அவை இன்னும் விருத்தியடைய முடியும். ஆனால் பிராணிகளின் படைப்பில் அத்தகைய அறிவு வளர்ச்சி சாத்தியமில்லை. சிருஷ்டிகர் விலங்கிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்ட உன்னதமான உடலமைப்பையும் அங்கமைப்பையும் சிந்தனை ஞானத்தையும், விசேஷ கொடையாக அருளிச் செய்திருக்கிறார். மிருகங்களும், மனிதர்களும் ஒரே மாதிரியான சரீரம், எலும்புகள், சுவாசிக்கும் காற்று, ஒரே மாதிரியான குடிக்கும் நீர், ஒரே விதமான உணவு எல்லாம் பெற்றிருக்கின்றன. அவை எல்லாம் ஆத்துமாக்களாக, அறிவு படைத்தவைகளாயிருக்கின்றன. ஆனால் மனிதன் அவனது மேலான சரீரத்தில், மேன்மையான மதிநுட்பம் உடையவனாயிருந்து, சிருஷ்டிகரால் அவன் மேலான ஸ்தானத்தில் உள்ளவனாக மதிக்கப்படுகிறான். எவ்வளவாய் மனிதன் பாவம் செய்தானோ அவ்வளவாக தேவ சாயலையும் ரூபத்தையும் இழந்து கிட்டத்தட்ட மிருக சாயல் (குணம்) உடையவனானான். ஆதியிலிருந்த

மேன்மையிலிருந்து கீழாகி ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டான்.

இந்த விஷயத்தைக் குறித்து அறிவின் கண் யாருக்கு திறக்க ஆரம்பித்திருக்கிறதோ. அவர்கள் ஆத்துமா என்பது அறிவுள்ள ஜீவியை குறிக்கிறது என்பதையும், சுவாசம் அல்லது ஜீவ ஆவி என்பது உயிர் வாழ தேவையான தேவ வல்லமையை குறிக்கிறது என்பதையும் இதுவரை பார்த்ததிலிருந்து உடனே தெரிந்து கொள்வார்கள்; ஜீவ உணர்வை பெற்றிருக்கிற ஒவ்வொரு ஜீவியும் முதலாவது ஒரு சரீரத்தை பெற்றிருக்கிறது; இரண்டாவதாக ஜீவசுவாசம் அவர்களை உணர்வூட்டுகிறது. மூன்றாவதாக அவர்கள் உயிரோடு உள்ளவர்களாக ஆத்துமாக்களாகக் காண்பிக்கிறது. இந்தக் கருத்தை இன்னும் புரியாதவர்களுக்கு எளிதில் தெளிவாக புரிந்து கொள்ள வெப்பமும், ஆத்துமாவும் ஒரே தன்மையுடையவை என எடுத்துக் காட்டலாம். அடுப்பிலுள்ள நிலக்கரி காற்றிலுள்ள பிராணவாயுவினால் எரிகின்ற தழலாக மாறி வெப்பத்தை தருகிறது. நிலக்கரி தன்னில் தானே வெப்பமுடையதல்ல; தீயை பற்ற வைத்து அதற்கு சாதகமான பிராண வாயு கிடைத்த பின்னரே அதனுடைய வெப்பத்தை வெளியிட முடிகிறது. எனவே பிராண வாயு தன்னில் தானே வெப்பத்தை தராது என்பது போலவே, நிலக்கரியும் வெப்பத்தை தரமுடியாது. நிலக்கிரியை பற்றவைத்து பிராண வாயு சேரும்போதே அங்கு வெப்ப முண்டாகிறது. இதே போன்று உடல் மட்டும் ஆத்துமா ஆகாது. உடலில் ஆத்துமா என்று சொல்லுவதற்கான பொருட்கள் இருந்தாலும் அதை உணர்வுள்ள ஆத்துமா என்று கூற இயலாது. ஏனெனில் அதில் உயிர் இல்லை. அது போலவே உயிர் என்பது தேவ வல்லமையினால் ஏற்படுகிற ஜீவ சுவாசம். இருப்பினும் வெறும் ஜீவ சுவாசமே ஆத்துமா ஆகாது. அதற்கு ஒரு உடல் தேவை. உடலுக்கு ஜீவ சுவாசம் தேவை. இரண்டும் சேரும்போதே ஆத்துமாவாகும்.

ஜீவ சுாவசம் உடலிலிருந்து நீக்கப்படும்போது மரணம் சம்பவிக்கும். உடலிலிருந்து உயிரும், உயிரி-ருந்து உடலும் வெவ்வேறாக பிரிகிறது. இப்பொழுதுதான் மரணமடைவது உயிரா? உடலா? என்ற கேள்வி எழுகிறது. ஜீவ சுவாசம் மரணடைகிறதா? நிச்சயமாக இல்லை. உயிருக்கு உணர்ச்சிகள் கிடையாது. அது மின்சாரம் போன்ற ஒரு சக்தி. மின்சாரம் சிந்திக்காது;

உணர்வடையாது, மரணமடையாது, அப்படியானால் சரீரம் சாகிறதா? சரீரம் சாவதில்லை என்பதே நமது பதில். தகப்பன் அளித்த ஜீவனை இழக்கும்போது சரீரம் ஜீவனை இழக்கலாம். ஜீவ சுவாசம் பெறும் முன்னரோ, அதை இழந்த பின்னரோ சரீரம் வெறும் சரீரமே. அதற்கு சிந்திக்கவோ, உணரவோ முகரோவோ எந்த உணர்ச்சிகளும் இல்லை. ஜீவ சுவாசமோ, மூச்சோ சரீரத்திற்குள் பிரவேசிக்கும் முன்னர் உடல் உயிரற்றதாக இருந்தது. ஜீவ சுவாசம், மூச்சு உடலுக்குள் பிரவேசிக்கும்போது அது உயிரடைகிறது. ஜீவ சுவாசம் மீண்டும் உடலிலிருந்து எடுக்கப்பட்ட பின்னர் அது மரித்ததாய், உயிரற்றதாய் போய்விடுகிறது.

எது சாவைக் காண்கிறது? என்பதே நம்முடைய வினா. ஆத்துமா சாகிறது என்பதே நமது பதில். எப்படியெனில் உணர்வைத் தருவதே ஆத்துமா. ஆத்துமா உணர்வற்ற நிலையை அடையும்போது ஆத்துமா மரிக்கிறது. ஜீவ சுவாசமும் உடலும் ஒருங்கே இணையும்போது உணர்வுள்ள ஜீவி தோன்றுகிது. உடலும் ஜீவ சுவாசமாகிய காரணிகள் பிரியும்போது உணர்வுள்ள ஜீவி மறைந்து இல்லாமல் போய்விடுகிறது. எனவே உணர்வுள்ள தன்மையையுடைய ஆத்துமா சாகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கீழான நிலையுள்ள மிருகங்களின் ஆத்துமா சாகிறதெனில் அதை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் தேவ சாய-ல் கூர்மையான அறிவுள்ளவனாக படைக்கப்பட்டவனாகிய மனிதன் உயர்ந்த விலங்காயிருந்து மிருகங்களைப் போலவே அவனுடைய ஆத்துமாவும் சாகும் என்பதே சரிசமமான சத்தியம். இது சத்தியத்திற்கு எவ்விதத்திலும் சளைத்ததல்ல, காரண காரியங்களை சிந்திக்கிற ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே தன்மையில் இந்தக் கருத்து சாட்சி பகர்கின்றது. சில வேத வசனங்களை சிலர் புரட்டி தவறான கருத்துக்களை நிரூபிக்க அவைகளை ஆதாரமாகக் காட்டக்கூடும். ஆனால் போகப்போக அவைகள் கவனிக்கப்பட்டு, இந்த கருத்துக்கு அவைகள் இசைவாக இருப்பதாக கண்டுகொள்ளப்படும்.

மனித சரீரத்திற்கும் விலங்குகளின் சரீரத்திற்கும் அல்லது ஆவி மற்றும் ஆத்துமா ஆகியவற்றின் இடையே உள்ள உறவுகள் பற்றி இன்னொரு விளக்கத்தை கவனிப்போம். ஏற்றப்படாத

மெழுகுவர்த்தி உயிரற்ற உடலுக்கு அல்லது பிணத்திற்கு ஒப்பிடலாம். ஏற்றப்பட்ட மெழுகுக்கு வர்த்தியின் தீபம் சிருஷ்டிகரால் வெறும் சரீரமாக இருந்த உடலுக்கு உயிராகிய உணர்வைக் கொடுப்பதற்கு ஒப்பிடலாம். ஜுவாலை அல்லது ஒளி, உணர்வும், நுண்ணறிவும் உள்ள ஆத்துமாவுக்கு ஒப்பாகும். வெளிச்சம் கிடைக்க பிராண வாயு தேவை. பிராண வாயு வெளிச்சத்தைக் கொடுத்து கரியமில வாயுவாகிறது. அதுபோலவே ஜீவ சுவாசம் அல்லது ஜீவ ஆவி, சரீர அங்கத்தில் இணையும்போது உணர்வுள்ள, உயிருள்ள தன்மை ஏற்பட்டு ஆத்துமா உண்டாகிறது. விபத்து ஏற்படும்போது மெழுகு வர்த்தி அழிந்து போகிறது, வெளிச்சமும் அணைந்து போகிறது. அதுபோலவே மனித சரீரம் அல்லது விலங்கின் சரீரம் நோயாலோ, விபத்தாலோ அழிக்கப்படும்போது அது இருந்த நிலையிலிருந்து ஆத்துமா, நுண்ணறிவு எந்த உணர்வும் இல்லாத நிலைக்குப் போய் விடுகிறது. ஆனால் தண்ணீரில் மூழ்கடித்தோ தீயணைப்பான் மூலமோ எரிகிற மெழுகுவர்த்திக்கு வரும் பிராண வாயுவை தடைசெய்தால் வெளிச்சம் போய் விடுகிறது; ஆனால் மெழுகுவர்த்திக்கு எந்த சேதமும் ஏற்படுவதில்லை. அதுபோலவே தண்ணீரில் அமிழ்த்தியோ அல்லது மூச்சைநிறுத்தியோ ஒரு மனிதனுக்கு கிடைக்கும் பிரணவாயுவை தடைசெய்தால், மனிதன் அல்லது ஆத்துமா இல்லாமல் போகிறது. ஆனால் அந்த சரீரத்திற்கு எந்த சேதமும் ஏற்படுவதில்லை.

பற்ற வைத்த மெழுகுவர்த்தி, தான் எரிவதோடு மற்ற மெழுகு வர்த்திகளையும் எரிய வைக்க முடியும். அணைத்து வைத்த மெழுகு வர்த்தி தன்னைத்தானே எரியச் செய்ய முடியாததுடன், மற்ற மெழுகு வர்த்திகளையும் எரியச் செய்ய முடியாது. அதுபோலவே உயிருள்ள மனிதனோ அல்லது மிருகமோ தன்னை ஒத்த பல உயிருள்ள ஆத்துமாக்களை உருவாக்க முடியும். ஜீவன் என்ற ஆத்துமா மரித்த பின்னர் தானும் ஆத்துமாவாக இருக்க முடியாது; மற்ற ஆத்துமாக்களையும் உருவாக்க முடியாது. இருக்கின்ற ஒன்றாகிய ஆத்துமா மரணத்தில் இல்லாத பொருளாகிவிடுகிறது. எல்லா சக்திகளும், சிந்தனை, உணர்வுகள் அனைத்தும் இல்லாமல் போய்விடுகிறது. இதற்கு இசைவாக யாக்கோபின் பிள்ளைகளைப்

பற்றி, "யாக்கோபின் கர்ப்ப பிறப்பாகிய (யாக்கோபின் அரையி-ருந்து தோன்றியவர்கள்) யாவரும் எழுபது பேர்" (யாத். 1:5) என வாசிக்கிறோம். யாக்கோபு ஜீவனையும் அங்க அமைப்பையும் அதாவது இரண்டும் சேர்ந்த அவனது ஆத்துமாவை ஈசாக்கிடமிருந்து பெற்றுக்கொண்டான். அவன் அதை ஆதாமிடமிருந்து பெற்றுக்கொண்டான். ஆனால் ஆதாமுக்கு மட்டுமே தேவன் ஆத்துமாவை நேரடியாக அருளிச் செய்தார். யாக்கோபு ஜீவன், அங்க அமைப்புக் கூறுகள், ஆத்துமா என்கிற நுண்ணறிவு ஆகியவற்றை தனது வருங்கால சந்ததிக்கு அளித்தான்.

அணைந்த மெழுகுவர்த்தியைப் பற்ற வைக்கத் திறனுடைய யாவரும் மீண்டும் பற்ற வைக்க முடியும். ஆனால் தெய்வீக ஏற்பாட்டின்படி மனித உடல் ஜீவ ஆவியை இழந்து போனால், ஜீவன் காற்றோடு காற்றாக கலந்து விடுமேயல்லாமல் மீண்டும் அந்த உடலுக்கு ஜீவன் அளிக்க முடியாது. மறுபடியும் அந்த பிணத்திற்கு ஜீவன் கொடுக்கின்ற அற்புதத்தை தேவனால் மட்டும் செய்ய முடியும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதல் என்பது மரித்த யாவரும், திரும்பவும் ஜீவ சுவாசம் பெறுவதேயாகும். ஆகையால் சரீரமும் புதுப்பிக்கப்பட்ட ஜீவ சக்தியும் இல்லாமல் ஆத்துமா இருக்க முடியாது. உயிர்த்தெழுதலி ன் வாக்குத்தத்தம் என்பது புதிய சரீரத்தை, அங்க அமைப்பைக் குறிக்கிறது. மண்ணில் போடப்பட்ட மரித்த சரீரத்தை திரும்பவும் உயிரடையச் செய்யாமல், உயிர்த்தெழுத-ல் தேவன் தமக்கு சித்தமான மேனியைக் கொடுக்கிறார் ( 1கொரி 15:37-40) என வேதாகமம் நமக்கு உறுதிபடக் கூறுகிறது.

உயிர்த்தெழுதலில், முற்றிலும் புதிய சுபாவத்தைப் பெறத்தகுதியுடைய விசேஷ வகுப்பார் உண்டு என அப்போஸ்தலர் அறிவிக்கிறார். மாம்சத்திற்குரிய மனித சுபாவத்திற்கு பதிலாக தெய்வீக சுபாவத்தைப் பெறுபவர்கள் அவர்களே. இவர்கள் முற்றிலும் வேறு வகையான சுபாவம் அதாவது, மனித சுபாவத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமான சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள் என்பதை நாம் எதிர்பார்க்கலாம். இதனை விளக்க அதே மெழுகுவர்த்தி உதாரணத்தைக் காண்போம். மாம்ச சரீரமுள்ள மனித சுபாவத்தை சாதராண கொழுப்பி-ருந்து

*உண்டாக்கும் சிறிய பெமுகுவர்த்திக்கு ஒப்பிடலாம். ஆவிக்குரிய மேனியை நல்ல கொழுப்பிலிருந்து செய்யப்படும் மிகப் பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுக்கும் மெழுகுவர்த்திக்கோ அல்லது மின்சார விளக்கிற்கோ ஒப்பிடலாம்.*

*உயிர்த்தெழுலுக்கு உத்திரவாதம் கொடுக்கும் நமது சிருஷ்டிகரைக் காட்டிலும் குறைவான வல்லமையும் ஞானமும் இருந்தால் உயிர்த்தெழுதலில் பழைய தன்மையை இழந்துவிடுவோம் என்ற பயம் நமக்கு வரும். அதுவும் விசேஷமாக முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய ஜீவியாகப் போகிறவர்கள் முந்தைய தன்மையை இழந்துவிடுவார்கள் என்ற பயம் வரும். ஆனால் நாம் இதை எல்லாம் செய்யப்போகிற தேவனை முற்றிலும் நம்பலாம். எந்த ஒரு அனுபவமான பாடமும், முந்தைய அனுபவமும் இழந்துவிடாதபடி நமது ஒவ்வொரு சிந்தனையையும் புதிய மூளையில் பதிய வைக்க தேவன் அறிந்தவராயிருக்கிறார். அவர் தவறே செய்யக் கூடாத மிகுந்த ஞானமுள்ளவரும், இரக்கமுள்ளவரும், மிகுந்த நல்லவராகவும் இருக்கின்றார். நாம் கேட்பதை விட ஏராளமாக தாரளமாக வழங்க வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.*

*ஏராளமான நபர்கள் உயிர்த்தெழுதலின்போது அணுவுக்கு அணு மாறாமல் திரும்ப எழுந்திருப்பார்கள் என எண்ணுகின்றனர். மாறாக "நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல்..." என அப்போஸ்தலர் திருவுளம் பற்றினார். ஆத்துமா அதாவது உணர்வு, நுண்ணறிவு உள்ள ஜீவனையே உணர்வடையச் செய்து புதுப்பிக்கிறார். உயிர்த்தெழுதலில் ஒவ்வொரு மனிதனுக்கும் (ஒவ்வொரு நுண்ணறிவு உள்ள ஜீவிக்கும் அல்லது ஆத்துமாவுக்கும்) தேவனுடைய அளவில்லா ஞானம் விரும்புகிறபடி ஒரு சரீரத்தைக் கொடுக்கிறார்; இந்த யுகத்தில் தெரிந்துகொண்ட மணவாட்டியாகிய சபைக்கு ஆவிக்குரிய சரீரத்தையும், இழந்ததை திரும்பப் பெறப்போகிற வகுப்பாருக்கு மனுஷீக சரீரத்தையும் கொடுக்கிறார்; ஆனால் அவர்கள் மரிக்கும்போது இருந்த அதே சரீரத்தை அல்ல, புதிய மேனியைத் தருகிறார். - 1 கொரி 15:37-38*

*ஆதாம் படைக்கப்பட்டபோது, மண்ணினால் உடலின் ஒவ்வொரு பாகங்களையும் உருவாக்கி ஜீவ சுவாசத்தை இணைக்கும்*

போதுதான் ஜீவாத்துமாவானான், அதாவது உணர்வுள்ளவனானான். ஆனால் இவைகள் ஏதோவொரு காரணத்தினால் பிரியும் போது எந்த வொரு உணர்ச்சியும் சிந்தனையுமில்லாமல் உணர்வுள்ள ஜீவிக்கு முடிவு வந்துவிடுகிறது. ஆத்துமா ஒன்றுமில்லாமல் ஆகிவிடுகிறது. சரீரம் தான் முன்னிருந்த மண்ணுக்கும், ஜீவ ஆவி அல்லது ஜீவ சுாவசம் தன்னை (ஆதாமுக்கு) தந்த தேவனிடத்திற்கும் திரும்புகிறது. இந்த ஜீவ சுவாசம் ஆதாம் மூலம் அவனது சந்ததியாருக்கெல்லாம் வழங்கப்பட்டிருந்தது. (பிர 12:7) அது தேவனிடம் திரும்புகிறது என்றால், அது சிருஷ்டிக்கப்படும்போது இருந்தது போல் மானுட கட்டுப்பாட்டில் இருக்காது என்பதாகும். தெய்வீக வல்லமையின்றி அந்த சக்தியை மீண்டும் ஒருவராலும் பெற முடியாது. கர்த்தரால் போதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்களுடைய எதிர்கால நம்பிக்கையை உயிர்த்தெழுதல் தேவன் பேரிலும் அவரால் உயர்த்தப்பட்ட தேவபிரதிநிதியாகிய கிறிஸ்துவின் பேரிலும் வைத்திருக்கின்றனர். (லூக் 23:46; அப். 7:59) எனவே, அப்பொழுது தேவன் ஈடுபலி மூலமாகவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலின் மூலமாகவும் மனிதனுக்கு எதிர்கால வாழ்க்கையை கொடுக்கவில்லையென்றால், மரணமே மனுக்குலத்தின் எல்லா நம்பிக்கைகளுக்கும் முடிவாக இருந்திருக்கும். (1 கொரி. 15:14-18)

ஆனால் தேவன் மறுபடியும் மனுக்குலம் என்றென்றும் ஜீவிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இத்தகைய திட்டத்தை ஏற்படுத்தினார். அதிலிருந்து என்றென்றைக்கும் தனது கிருபையுள்ள திட்டத்தை மனுக்குலம் அறியும்படி செய்கிறார். இந்த திட்டத்தைக் குறித்து நுட்பமாக பேச, எழுதக் கூடியவர்கள் (உதாரணமாக தேவ ஆவியால் ஏவப்பட்டு வேதாகமத்தை எழுதியவர்கள்) மரணத்திற்கும் உயிர்த்தெழுதலின் காலைக்கும் இடைப்பட்ட வேளை ஒரு நினைவற்ற காலப்பகுதி என்று எல்லோரும் ஒருமனப்பட்டு கூறுகின்றனர். இந்தக் காலப் பகுதியிலே அவர்களுடைய உணர்வு, நுண்ணறிவு செயல்படாததால் இந்தக் காலப் பகுதியை உறக்கத்திற்கு ஒப்பிடுகின்றனர். உண்மையிலேயே இது அற்புதமான விளக்கமாகும். உயிர்த்தெழுதலில் எழுப்பப்படும்போது மரணத் தருவாயில் எந்த மனநிலையில் இருந்தார்களோ, அதே நிலையில் எழுவதால், உறக்கத்திற்கு ஒப்பாகக் கூறுகின்றனர். உதாரணமாக

லாசருவின் மரணத்தைக் குறித்து நமது ஆண்டவர் சொல்லும்போது, "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான். நான் அவனை எழுப்பப் போகிறேன் என்றார்." சீடர்கள் நித்திரையை சரிவர புரிந்து கொள்ளாததால் இயேசு, "லாசரு மரித்துப் போனான்" என்று வெளிப்படையாகச் சொன்னார். (யோவா 11:11-14) மரணத்தில் எந்த நினைவும் இல்லாதிருப்பது என்பது சரிதானா? மரித்திருந்த நான்கு நாட்களில் தான் எவ்வாறு இருந்தான் என்று ஒரு வார்த்தையும் லாசரு குறிப்பிடவில்லை. இந்த நான்கு நாட்கள் லாவரு நரக வேதனையிலிருந்து வரவில்லை. ஏனெனில் இயேசு, "நண்பனே" என்று அழைத்தார். ஒருவேளை லாசரு மரித்த பின் பரலோக பாக்கியத்தில் இருந்திருந்தானேயானால் அவனை நமது ஆண்டவர் திரும்ப அழைத்திருக்க வேண்டியதில்லை. அவ்வாறாக பரலோகத்திலிருந்த லாசரை இயேசு திரும்ப அழைத்திருப்பாரேயானால் அது நட்பிற்கு இலக்கணம் ஆகாது அல்லவா? மாறாக, நமது ஆண்டவர், லாசரு உறக்கத்திலிருக்கிறான் என்றார். உறக்கத்திலிருந்து அதாவது உணர்வுள்ள நிலைக்கு, ஆத்துமா இழந்த நிலையிலிருந்து, ஆத்துமா மீண்டும் புதுப்பித்த உணர்வுடன் லாசரு எழுந்து வந்தான். இவையெல்லாம் லாசருவுக்கு காண்பிக்கப்பட்ட தயை என்று அறிந்ததால் அவனுடைய சிநேகிதர்கள் வெகுவாய் பாராட்டி சாட்சி பகர்ந்தனர்.

நாம் இப்போது மரித்தலும் நித்திரையுமாகிய இரவில் இருக்கிறோம் என்றும், காலை என்பது எழுதலையும் உயிர்த்தெழுதலையும் குறிக்கின்றது என்றும் வேதம் கூறுகிறது. "சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (சங் 30:5) "மண்ணிலே (பூமியில்) தங்கியிருக்கிறவர்களே விழித்துக் கெம்பீரியுங்கள்" (ஏசா 26:19) என்று தீர்க்கதரிசி கூறியிருப்பதுபோல, நித்திரையிலிருப்பவர்கள் உயிர்த்தெழுங்காலையில் கல்லறையிலிருந்து வருவார்கள்.

அப்போஸ்தலர்கள் நம்பிக்கையுள்ள, சமாதானமான இந்த அணி இலக்கணத்தை அடிக்கடி உபயோகித்துள்ளார்கள். உதாரணமாக லூக்கா முதல் இரத்தசாட்சியான ஸ்தேவானின் மரணத்தைக் குறித்து, "அவர் நித்திரையடைந்தார்" என்றும், பவுல் அந்தியோகியா பட்டணத்தில் பிரசங்கம் பண்ணுகிற போது அதே

*கருத்தை, "தாவீது நித்திரையடைந்தான்" என்றும், (அப் 7:60; 13:36) அதேவிதமாக பேதுருவும், "பிதாக்கள் நித்திரையடைந்தார்கள்" என்றும் மரணத்தைக் குறித்து கூறுவதைப் பார்க்கிறோம். (II பேது 3:4)*

*பவுல் கீழ்க்காணும் பல இடங்களில் மரணத்தை நித்திரைக் கொப்பாகவே உருவகப்படுத்தியுள்ளார்.*

*"அவள் புருஷன் மரித்த பின்பு…" - 1 கொரி 7:39 (கிரேக்க மூலத்தின்படி நித்திரையடைவது) "அவர்களில் அநேகர் இந்நாள் வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்." - 1கொரி 15:6*

*"மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால்.. கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே." - 1கொரி 15:13, 18*

*"கிறிஸ்துவோ மரித்தோரிலி ருந்தெழுந்து, நித்திரையடைந்த வர்களில் முதற் பலனானார்." - 1 கொரி 15:20*

*"இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லோரும் நித்திரையடைவதில்லை." - 1கொரி 15:51*

*"சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை." - 1 தெச 4:13*

*"அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும், தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார்." - 1 தெச 4:14*

*"கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை." - 1 தெச 4:15*

*இதே கருத்தை இதே விதமாக தீர்க்க தரிசியாகிய தானியேல் தன் ஆகமத்தில், "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கு… எழுந்திருப்பார்கள்" (தானி 12:2) என்கிறார். அதன்படி நல்லோரும் தீயோரும் நித்திரையைவிட்டு எழுந்திருப்பார்கள் என கூறுகின்றார். அவர்கள் கிறிஸ்துவின் நாள் வரை - ஆயிர வருட அரசாட்சியாகிய நியாயத் தீர்ப்பு நாள்வரை சமாதானத்தில் இளைப்பாறுதலாகிய நித்திரைக்குள் இருப்பார்கள். இதைக்குறித்து அப்.பவுல், "நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை*

*அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்கிறார். - (IIதீமோத் 1:12) இதே உயிர்த்தெழுதலின் நற்செய்தியை பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் காலத்திலிருந்து தேவன் போதித்திருக்கிறார். எனவே பழைய எற்பாட்டில் பற்பல இடங்களிலும், "அவன் தன் பிதாக்களோடு நித்திரையடைந்தான்" என்று சொல்லப்படுகிறது. இதே கருத்தை யோபு இன்னும் வலியுறுத்தி கூறும்போது, "நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்" (யோபு 14:13) என்கிறார். முதல் மனிதனுடைய கீழ்ப்படியாமையினால் அனைவரும் பெற்றுக் கொண்டது சாபமாகிய மரணத்தீர்ப்பு. இதன்படி தற்காலத்தில் மரிக்கிறவர்கள் அந்த தேவ கோபாக்கினையின் தீர்ப்பின்படி மரணமடைகின்றனர். ஏற்ற வேளையில் மரண தண்டனை பரிகரிக்கப்பட்டுவிடும். அதன் பின்னர் நமது மீட்பர் மூலமாக பூமியின் மக்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவார்கள். மேலும் யோபு, "எனக்கு மாறுதல் எப்பொழுது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன். என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின் மேல் விருப்பம் வைப்பீராக" என்கிறார். (யோபு 14:14-15) புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழும் நாம், கர்த்தருடைய அறிக்கையைக் கவனிப்போம். "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்." (அவர்களை உயிரோடெழச் செய்து அவர்களுக்கு தேவனைப் பற்றிய முழுமையான அறிவை போதித்து நித்திய ஜீவனையடைய சந்தர்ப்பம் கொடுக்கிறார்) யோவா* ***5:25,28,29.***

*இந்த நித்திரையாகிய மரணத்தில் அவர்கள் எந்த நினைவுமில்லாமல் இருப்பார்கள். உயிர்த்தெழுந்தவர்கள் எவ்வளவு காலம் நித்திரையிலிருந்தோம் என்பதை அறியார்கள். உண்மையில் "உறக்கம்" என்ற பதம் உருவகமாக உபயோகிக்கப் பட்ட சொல்லாகும். மரணத்திற்குச் சென்றவர்கள் முற்றிலும் அழிக்கப்படுவார்கள். தேவ ஞானத்தின்படி உயிர்த்தெழுதலில் ஒவ்வொருவருக்குரிய அடையாளத்தின்படி எழுந்திருப்பார்கள்.*

அவர்கள் உயிர்த்தெழுதலைப் பற்றியும், அவர்கள் முந்தின சீருக்கு கொண்டு வருவதைப்பற்றியும், மறுபடியும் ஜீவித்திருக்கப் போகிற நிலைமைகள் பற்றியும், கிறிஸ்துவின் மூலமாக தேவஞானம் தீர்மானித்திருக்கிறது. ஆதாம் ஏவாளை தேவன் முதலில் சிருஷ்டித்ததை விட, மறுபடியும் அவர்களை புதிய சிருஷ்டியாக படைக்கப் போவது உண்மையிலேயே தேவனுடைய வல்லமையையும் ஞானத்தையும் வெளியரங்கமாக விளக்கும். இருவருக்கு பதிலாக 50 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் சிருஷ்டிக்கப்படுவார்கள். ஒருவருக்குப் பதிலாக எண்ணிலடங்கா வகையானவர்களை சிருஷ்டிப்பதாக இருக்கும். நமது தேவன் ஒருவருக்கே, அப்படிப்பட்ட சர்வ வல்லமை, சர்வஞானம், சர்வ அதிகாரம் உண்டு. அவர் அதை நிறைவேற்ற சித்தமும் தகுதியும் கொண்டுள்ளார்; தீமையை உலகில் அனுமதித்ததினாலே ஏற்படப்போகும் மிகச் சிறந்த நன்மைகள் தோன்றியவுடன் தீமைகள் அடியோடு வேரறுக்கப்படும். தேவனுடைய குணங்கள் வெளியரங்கமான இலக்கணமாக அதனால் சாட்சி பகரும். அவ்வாறு தீமையை அனுமதிக்காவிடில் தேவனுடைய குணங்களை நிரூபித்துக் காட்ட வேறு வழியில்லை. தேவனுடைய நீதி, தூதர்கள், மனிதர்கள் முன்பாக பிரகாசிக்கப்படும். மேலும் தெய்வீக அன்பு, தெய்வீக வல்லமை இறுதியாக தேவ ஞானம் ஆகிய தேவனுடைய எல்லா குணநலன்களையும் சர்வ சிருஷ்டிகளும் அறிந்து கொள்வார்கள்.

வேதாகம சாட்சியத்தின்படி மரித்தோரின் உயிர்த்தெழுதல் மிக அத்தியாவசியம் என்பது தெளிவாக விளங்குகிறது. ஒருவரும் மரிக்கவில்லை எனில் மரித்தோரின் உயிர்த்தெழுதல் எப்படி நடக்கும்? ஆனால் சிலர், “மரிக்கிறவர்களாகக் காணப்படுகிறவர்கள், முன்பிருந்ததைக் காட்டிலும்உயிருடன் இருக்கிறார்கள்” என்று கருதுகிறார்கள். ஐம்புலன் அறிவாற்றலுள்ளளோருக்கும் வேதாகமத்திலுள்ள கருத்துகளுக்கும் அவர்கள் சொல்லுகிறது முற்றிலும் மாறுபாடானது. “உயிரோடு இருக்கிற அனைவரிடத்திலும் நம்பிக்கையுண்டு; செத்த சிங்கத்தை விட உயிருள்ள நாய்வாசி. உயிரோடு இருக்கிறவர்கள் (அறிவில்லாதவர்களும் கூட) தாங்கள் மரிப்பதை அறிவார்களே,

*மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று; சூரியனுக்கு கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் (எபிரேயு - ஓலம் - நீண்ட முடிவில்லாத காலம்) பங்கில்லை... செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ (ஆத்துமா - உணர்வுள்ள ஒன்று) போகிற பாதாளத்திலே (சியோல் - எபிரேயு மொழியில் ஆத்துமாவைப் பொருத்த வரையில் இது மரித்த நிலையைக் குறிக்கும். இது கல்லறையைக் குறிக்காது. இறந்த சரீரத்தை மட்டுமே வைக்கும் இடத்திற்கு எபிரேயு பாஷையில் "கேபார்" எனப்படும். பார்க்க - சங் 30:3; 49:15; 89:48. இந்த இடத்தை குறிக்கிற சியோல் என்ற சொல்லை கல்லறை என மொழி பெயர்த்துள்ளனர். 2 நாளா 34:28; யோபு 10:19; சங் 88:5. கேபார் என்பது கல்லறை எனப்படும். நமது கர்த்தருடைய ஆத்துமாவும் சியோலுக்குச் சென்றது என்று எண்ணும்போது அது மரித்த, மரண நிலைக்கு சென்று விட்டது என்று பொருள்படும். (சங். 16:10; அப். 2:27) கொடியவர்கள், ஐசுவரியவான்கள் ஆகியோருடைய கல்லறைகளுடனே (கேபார், கல்லறை) அவர் கல்லறையும் இருந்தது - ஏசா 53:9) செய்கையும், வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." (பிர 9:4-10; ஏசா 26:14)*

*"....மனுஷன் கொண்டிருக்கும் நம்பிக்கையை அழிக்கிறீர். நீர் என்றைக்கும் அவனைப் பெலனாய் நெருக்குகிறதினால் அவன் போய் விடுகிறான்; அவன் முகரூபத்தை மாறப்பண்ணி அவனை அனுப்பி விடுகிறீர். அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்; அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்." - யோபு 14:19-21; ஏசா 63:16*

*அப்போஸ்தலர்களுடைய உயிர்த்தெழுதல் கொள்கையின் வாசகங்களின் முக்கியத்துவத்தை 1 கொரி 15:12-54ல் கவனிக்கவும்.*

*"கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப் பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?"*

*மரித்தோர் மரிக்கவில்லையென்றால் எப்பொழுதும் உயிரோடு இருக்கிறவர்களாயிருப்பார்களே. ஒருவரும் மரிக்கவில்லையெனில் மரித்தோரின் உயிர்த்தெழுதல்*

அவசியமில்லையே. அப்படிப்பட்ட கொள்கை அப்போஸ்தலரிடம் இல்லை; அதற்கு நேர் மாறானது. ஒருவேளை தேவன் உயிர்த்தெழுத-ன் மூலம் உயிரடையச் செய்யாதிருந்தால், இறந்தவர்களெல்லோரும் மிருகங்களைப் போல் அழிந்து போயிருப்பார்கள். அவர்கள் உயிர்த்தெழவில்லையெனில் நமது நம்பிக்கை வீணாயிருக்குமே. உயிர்த்தெழுதலின் நம்பிக்கை அல்லாது வேறு நம்பிக்கை இருந்து என்ன பயன்? இந்த வலிமையான விவாதத்தின் ஒவ்வொரு சொல்லையும் நன்கு கவனிக்கவும், மிகப் பிரபலமான அளவையியல் தர்க்க சாஸ்திரிகளில் ஒருவர் கீழ்க்காணும் விவாதத்தை எடுத்துரைக்கிறார்:

"மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லையே (இன்னும் மரணத்தில் இருப்பார்); கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா. உங்களுடைய விசுவாசமும் விருதா. (இறந்த கிறிஸ்துவுக்கு எதுவும் தெரிய வாய்ப்பில்லை) மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினார் என்று நாங்கள் தேவனைக்குறித்துச் சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை."

அப்போஸ்தலர் பவுல் சரீர உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசாமல் உயிருள்ள ஆத்துமாவாயிருக்கிற ஒன்றைக் குறித்துதான் குறிப்பிட்டு சொல்லுகிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். "கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே (சியோல் - ஹேடஸ்) விடப்படுவதில்லை." (அப் 2:31,32) உயிர்த்தெழுதலைக் குறித்த தற்காலக் கொள்கையை உடையவராக அப்.பவுல் இருந்திருப்பாரேயாகில் பவுல் அதைக் கீழ்க்கண்டவாறு சொல்லியிருப்பார்: உங்களில் சிலர் சரீர உயிர்த்தெழுதல் தான் முக்கியமானது என அதைக் குறித்து பேசுகிறீர்கள். உண்மையில் சரீரமே ஆத்துமாவுக்கு ஒரு சிறையாகவும், தடையாகவும் இருக்கிறது. ஆத்துமா சரீரமாகிய சிறையை விட்டு நீங்கினால் தான் "சுதந்திரமடையும்." சரீரம் எப்பொழுது உயிர்த்தெழுந்ததோ,

அப்போதே அதற்கு போராட்டம் தான். அதாவது ஆத்துமா மீண்டும் சரீர சிறைக்குள் தள்ளப்பட்டு அதனுடைய வல்லமை சுதந்திரம் ஆகியவற்றை கட்டுப்படுத்தி மட்டுப்படுத்தப்படுகிறது.

அப்போஸ்தலர் இவ்விதமாக சொல்லவில்லை. ஏனெனில் இது சத்தியத்திற்கு நேர்மாறானது. ஆத்துமா மரணத்திலிருந்து, உயிரற்ற, உணர்வற்ற நிலையிலிருந்து புத்துயிர், புத்துணர்வு கொடுக்கப் படுவதையே உயிர்த்தெழுதல் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். இறந்த சரீரம் உயிர்த்தெழவில்லை. "நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல்... (ஆத்துமா இருக்கிற ஒன்றின் உயிர்த்தெழுதல்) தேவன் தமது சித்தத்தின் படியே (புதிய) மேனியைக் கொடுக்கிறார். விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்." *(1 கொரி 15:37-38)* மண்ணில் புதைக்கப்பட்ட இறந்த மேனியை அல்ல; ஏராளமான புதிய மனித மேனியை மனித குல திரட்சியின்படி கொடுக்கின்றார். ஆனால் அதே சரீரத்தை அல்ல, ஏனெனில் புதைக்கப்பட்டமேனியின் அணுக்கள் முதலாய் உருமாறி அழிந்திருக்கும். அந்த அணுக்கள் எல்லாம் தாவரங்களிலும் சிறிய மிருக சரீரங்களிலும் சென்றிருக்கும். திருச்சபையார் பூமிக்குரிய மேனியை அல்ல; உயிர்த்தெழுந்த நமது கர்த்தரின் தெய்வீக சுபாவத்திற்குரிய ஆவிக்கு ஒத்த மேனியைப் பெறுகிறார்கள். இது இவ்வாறு இருப்பதால் அப்.யோவான், "இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்கிறார். அவர் இருந்த வண்ணமாக அல்ல. *( 1 யோவா 3:2)*

அப்போஸ்தலரின் வாத பிரதி வாதத்தைத் தொடர்ந்து கூர்ந்து கவனிப்போமாக:

"கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே." - *( 1 கொரி 15:17-18)*

ஆத்துமா சாகாது என்ற கொள்கையுடைவர்களின் கூற்றின்படி, அவர்கள் இறந்தாலும் அவர்கள் ஆத்துமா சாவதில்லை என்பதால் ஆத்துமாவின் உயிர்த்தெழுதலை மறுக்கிறார்கள். இவர்களின் இந்தக் கருத்தைத் தொடர்ந்து, வேதாகமம் சொல்லுகிற உயிர்த்தெழுதல் இந்த உடலுக்குரிய உயிர்த்தெழுதலே அல்லாமல் ஆத்துமாவுக்குரிய உயிர்த்தெழுதல் இல்லை என வாதிடுகின்றனர். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அப்போஸ்தலர் சொன்ன ஏராளமான வசனங்களைச் சரியாக சிந்திக்காமல் அவர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். நமது கர்த்தர் மரித்திருந்த மூன்று நாட்களிலும் உயிரோடு இருந்தார் என்று அவர்கள் கருதுகின்றனர். இயேசு மரித்தார் என்று வேதம் திட்டவட்டமாகச் சொல்லுகிறது. யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்ட இயேசுவின் காயம்பட்ட சரீரமே தான் உயிர்த்தெழுந்தது என்று அவர்கள் நினைப்பார்களானால், மரிக்காத (மூன்று நாட்கள் தனது சரீரத்தை மாத்திரம் ஒளித்துவைத்திருந்த) இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்திருப்பது எப்படி வீணானது என்று கூறமுடியும்? அப்படிப்பட்ட விசுவாசம் மரணத்தீர்ப்பிலிருந்து விடுவிக்க முடியாது என்று எப்படி அவர்கள் அங்கீகரிக்க முடியும்? என்றென்றும் உயிரோடிருக்கும் கிறிஸ்து மாம்சீக சரீரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட கிறிஸ்து எப்படி பாவிகளை இரட்சிக்க முடியாது என்றும், எனவே கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் கெட்டிருப்பார்கள் என்றும் எப்படி அவர்கள் கூறமுடியும்?

அவர்களுடைய முழு கொள்கைகளும் வேதாகமத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாய் இருக்கிறது. அவர்கள் எந்த ஆத்துமாவும் சாகும் (கிரேக்கு - அப்போலுமி - முற்றிலும் அழிக்கப்படுதல்) என்பதை மறுத-க்கிறார்கள். அப்போஸ்தலர், ஆத்துமா அழிக்க கூடியது என்று கூறினார். நமது ஆண்டவரும் “தேவன் சரீரத்தையும், ஆத்துமாவையும் அழிக்க வல்லவர்” என்று கூறினார். ஒருசிலர் “கிறிஸ்துவுக்குள் மரிக்கிறார்கள்” என்பதை அவர்கள் மறுதலிக்கிறார்கள்; இவர்கள் மரணம் நித்திரை என்பதை மறுதலிக்கிறார்கள்; நித்திரையிலிருக்கிறவர் மீண்டும் உயிர்த்தெழ காத்திருக்கிறார்கள் என்பதை மறுதலிக்கிறார்கள். மரணம் என்பது “நித்திரை” என்று அப்போஸ்தலரும், நமது கர்த்தரும், அவருடைய

*பரிசுத்த தீர்க்கதரிசிகளும் ஏகமாக ஒரே பொருளில் கூறுகின்றனர். தேவ வல்லமை மட்டுமே இந்த நித்திரையிலிருந்து எந்த ஜீவ நிலைமையிலும் தன் நினைவுக்கு, ஆத்துமா நிலைமைக்கு, உணர்வுள்ள ஜீவியின் நிலைமைக்கு எழுப்ப முடியும். முதலாம் உயிர்த்தெழுதலில் தெய்வீக சுபாவத்திற்கு மாற்றப்படுபவர்களும், பூமிக்குரிய சுபாவத்தில் இருந்ததுபோலவே ஆத்துமாக்களே. தேவனும் ஒரு ஆத்துமாவே. ஏனெனில் தேவனைப் பற்றிக் கூறும் இடத்தில் கிரேக்க மொழியில் சூச்சே* (pshuche) *எனக் கூறப்பட்டுள்ளது. "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின் வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா (உணர்வுள்ள ஜீவி) பிரியமாயிராது." (எபி. 10:38)*

*கிரேக்க தேசம் முழுவதும் கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது பிளாட்டோவின் தத்துவ சாஸ்திரம் தான் (மனிதன் சாவதுபோல் தோன்றினாலும் சாகவில்லை) வியாபித்திருந்தது. அப்போது புற ஜாதியார் மத்தியில் நற்செய்தி வேகமாக வளர முடியாமல் பிளாட்டோவின் கொள்கையால் தடைப்பட்டிருந்தது. உதாரணமாக ஏதென்ஸ் நகரில் பவுல் அப்போஸ்தலர் பிரசங்கம் செய்தபோது மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றி பேசும் வரை ஒரு பிரபல தத்துவ சாஸ்திரியின் பிரசங்கத்தைக் கேட்பதுபோலக் கவனமாகக் கேட்டார்கள். அதுவே அவர்களுக்கு போதுமானதாக இருந்தது. அதற்குமேல் கேட்க அவர்கள் விரும்பவில்லை. யூதர்களுடைய உயிர்த்தெழுதல் கொள்கையை விட தங்கள் கொள்கை அதிக மேன்மையான, முற்போக்குமான கொள்கை என்று கருதினார். "மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து (உயிர்த்தெழுதல் விஷயத்தில் அவர்கள் கொள்கையாகிய மரித்த பின்னும் சாகாமை வாய்ந்த ஆத்துமாவோடு ஜீவிக்கிறார்கள் என்பதை பவுல் ஏற்றுக் கொள்ளாததோடு அதற்கு மறுப்பும் சொன்னார்) அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள். சிலர் நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம் என்றார்கள்." (அப் 17:32)*

*புறஜாதியாரின் கொள்கையாகிய மரணம் மரணமன்று, இது மிகப் பெரிய நீண்டகால ஜீவியத்திற்கான முதற்படியாகும் என்ற கருத்தை யூதர்கள் முதலாம் வருகை வரை ஏற்க மறுத்தார்கள். யூத பிரிவினைகளிலேயே பரிசேயர்கள் தான் மிக முக்கியமானவர்கள்*

பரிசேயரும், வேத பாரகரும் மோசேயின் வழிவந்தவர்களாதலால், மோசேயின் நியாயப் பிரமாணத்திற்கு பாதுகாவலர்களானதால் "மோசேயின் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். (மத் 23:2) பரிசேயர்களைவிட சதுசேயர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் செல்வாக்கில் பரிசேயர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்களாவும் விளங்கினார்கள். சதுசேயர்கள் உண்மையில் விசுவாசமற்றவர்களும் நாஸ்திகர்களுமாயிருந்தார்கள். சதுசேயர்கள் எதிர்கால வாழ்வை முழுமையாய் மறுக்கிறார்கள். மிருகங்கள் இறப்பது போலவே மனிதர்களும் இறக்கின்றனர் என்ற கொள்கையையுடைவர்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லை என்பதே இவர்கள் வாதம். மேசியாவைக்குறித்தஎந்ததீர்க்கதரிசனத்தையும்விசுவாசியாதவர்கள், மனித சக்திக்கு மேற்பட்ட அறிவுக் கூர்மையுடையவர்களையோ, தேவ தூதர்கள் போன்றவர்களையோ விசுவாசியாதவர்கள். யோசேப்பஸ் என்கிற யூத வரலாற்றாசிரியர் யூத பிரிவினர்களிடையே "எஸ்ஸென்னஸ்" என்ற இன்னொரு பிரிவு இருந்ததைக் கவனத்துக்குக் கொண்டு வருகிறார். இவர்கள் புற ஜாதியார் கொண்டிருந்த பிளாட்டோவின் கொள்கையை உடையவர்கள். அந்தக் கொள்கையின்படி மனிதன் உண்மையில் சாவதில்லை. ஆனால் வாழ்க்கையின் முன்னேற்றமான ஒரு பகுதிக்கு மாறுகிறான் என்பதனையே மரணம் என்கின்றனர். யோசேப்பஸ் ரோமாபுரியில் இருந்தபேரரசர்மற்றும்அவையோர்கள்யூதர்களைப்பற்றிமுறையாக சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டி யூதர்களுடைய வரலாற்றை எழுதினார்என்பதைநாம்நினைவில்கொள்ளவேண்டும்.ரோமமக்கள் யூதர்களை "வணங்கா கழுத்துள்ள கலகக்காரர்கள்" என்றே வேதம் கூறுகிறபடிஅறிந்திருந்தனர்.யூதர்கள்வணங்காகழுத்துள்ளவர்களும், கலகக்காரர்களும்,ஆனதற்குஅவர்களுடைய மதமேகாரணம்என்பது சரி.தெய்வீகவெளிப்பாட்டின்சத்தியத்தைஅப்பியாசப்படுத்துவதால் அது சுயாதீனத்தின் ஆவியை ஏற்படுத்துகிறது என்பது ஐயத்துக்கிட மில்லாத உண்மை. ஆண்டான் - அடிமை, ஆசாரியன் - சாமான்யன் என்பவர்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை உடைத்து அவர்கள் அனைவரும் ஒரே பெரிய நியாயாதியும், ராஜாவுமாகிய ஆண்டவருக்கு கீழ்ப்படியக் கூடியவர்கள் என்று போதிக்கிறது.

யோசேப்பஸ் யூதர்களுடைய குணக்கோளாறு மற்றும் அவர்களது மதத்தைப் பற்றிய தவறான கருத்து ஆகியவற்றை போக்கிட முனைந்தார். எனவே யோசேப்பஸ் ரோம பேரரசுக்கும் அந்த அவையோருக்கும் யூதமதமும் பிற மதங்களைப் போன்ற ஒரு மதம் தான் என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்.

1. மரித்தோர் சுய நினைவுடன் இருப்பார்களா?

2. நித்திய நரக போதனையில் விசுவாசம் (வெகு சிலரைத் தவிர எந்த யூதருக்கும் நித்திய நரக போதனையைக் குறித்து எந்த நம்பிக்கையும் இல்லை. ரோம பேரரசு தன் ஜனங்களை பயமுறுத்த இத்தகைய நித்திய நரக போதனை சாதகமாகஇருந்ததால், தன் ஜனங்கள் அரசுக்கு அஞ்சி நடக்க இக்கொள்கை அவசியமாக இருந்தது. அதனால் ரோம பேரரசர்கள் பிரதான ஆசாரியன் என பொருள் படும்படி "போன்டிபெக்ஸ் - மேக்ஸிமஸ்" (Pontifex - Maximus) என்ற பட்டத்தைச் சூடிக் கொண்டனர். இதைப் பின்பற்றியே ரோமச்சபையும் தனது போப்புகளுக்கு இந்தப் பட்டத்தை வழங்கி வந்தது). தனது கருத்தை நியாயப்படுத்த யூத பிரிவினைகளில் ஒன்றான எஸ்ஸென்னஸ் பிரிவினரின் கொள்கையே யூதர்களுக்கு முக்கியமானது என்றார். இது உண்மைக்கு மாறானது. யூதப் பிரிவினரிடையே இவர்கள் மிகச் சிறுபான்மையினர். புதிய ஏற்பாட்டில் இவர்களைப் பற்றி அவ்வளவாய் குறிப்பு இல்லை. மேலும் இவர்கள் அப்போஸ்தலர்களிடமோ கர்த்தரிடமோ எந்த வாக்குவாதமும் நடத்தினதாகக் குறிப்பில்லை. மேலும் பரிசேயர்கள் சதுசேயர்கள் பற்றி அடிக்கடியும் தொடர்ந்தும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "எல்லோரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்கள்"

- லூக்கா 20:37-38 -

நமது கர்த்தர் நியாய சாஸ்திரிக்கு பதிலளித்த பிறகு பரிசேயர் சதுசேயர்களிடம் விவாதம் பண்ணினார். அது அவர்களை தர்ம சங்கடத்திற்குள்ளாக்கியது. சதுசேயர்கள் நமது கர்த்தருடைய கொள்கைகளை மறுத்து பேச தமது கடவுள் நம்பிக்கையற்ற நிலையே மேன்மையானது என்று காண்பிக்கமுடியும் என்று நம்பினர். இந்த சதுசேயர்களுடைய கொள்கையின்படி மரணம் என்பது மரணம் தான். நமது கர்த்தர், "மரித்தோர் எழுந்திருப்பார்களென்பதை மோசேயும் முட்செடியைப் பற்றிய வாசகத்தில் காண்பித்திருக்கிறார். எப்படியெனில், கர்த்தரை ஆபிரகாமின் தேவனென்றும் ஈசாக்கின்

தேவனென்றும், யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார். அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார். எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்றார்." (லூக் 20:37-38)

நமது கர்த்தர், "மரித்தோர் உயிர்த்தெழுப்பப் படுவதால்" இது தன்னில் தானே உயிர்த்தெழுதலை நிரூபிக்கிறதாயிருக்கிறது என்றார். தேவன் ஒருக்காலும் உயிர்த்தெழுதலே இல்லாமல் என்றைக்கும் இராதபடி எவரையும் வேரறுப்பதில்லை. அதன்பின் தேவனுடைய உயிர்த்தெழுதலின் திட்டம் எப்படி நிலையானது என்று காண்பிக்கின்றார். அநேக மனிதர்கள் "மரித்தார்கள்" என்று சொல்லுவது தேவ பார்வையில் அது மரணமல்ல "நித்திரையே." மரித்தவர்கள் "எல்லோரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்கள்." எனவே தேவனுடைய நிலைப்பாட்டின்படி வேதாகமும் மரணத்தை "நித்திரை" என்றே குறிப்பிடுகிறது. மரணமே அழிவு என குறிப்பிடப்படவில்லை. முதல்முதலாக மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்ட நியாயத் தீர்ப்பு மரணத்தீர்ப்பு தான். கிறிஸ்துவின் ஈடுபலியால் அது மரணமாயிராமல், நித்திரைக்கு ஒப்பாகச் சொல்லப்படுகிறது. "நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி, மனுபுத்திரரே (உயிர்த்தெழுதலில்) திரும்புங்கள் என்கிறீர். "(சங் 90:3; 103:4) "நான் ஆபிரகாமின் தேவனாயிருக்கிறேன்" என்பது கடந்த காலத்திற்கு மட்டுமல்லாமல் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் தேவனாயிருக்கிறார் என்பதையே குறிக்கும். (ரோம. 4:17)

## திருச்சபையாருடைய ஆவி, ஆத்துமா, சரீரம்

- 1 தெச. 5:23 -

உடல், ஆத்துமா, ஆவி ஆகிய சொற்கள் ஒட்டுமொத்தமாக திருச்சபையாரைக் குறிக்க வெவ்வேறு உருவகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக அப்.பவுல் திருச்சபையாருக்கு வாழ்த்துரை வழங்கிச் சொல்லும்போது, "உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்ற தாயிருக்கும்படி காக்கப்படுவதாக" என்கிறார். (1 தெச. 5:23) இந்த ஜெபம், பரலோகத்தில் பேர் எழுதப்பட்டிருக்கிற தெரிந்தெடுக்கப்பட்ட முழு திருச்சபையையும் குறிக்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். சிறு மந்தையாரிடம்

மட்டுமே இந்த சத்திய ஆவி பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அநேக களைகளும், பதர்களும் மூடியிருந்தாலும் இந்த சத்திய ஆவியையும் அதன் சரீரத்தையும் நன்கு இன்றும் அடையாளம் காணமுடியும். சிறுமந்தையாரின் ஆத்துமா, அதன் நடவடிக்கையாலும், அறிவுக் கூர்மையாலும், உணர்வுள்ள தன்மையாலும் எல்லா இடத்திலும் ஜனங்களுக்காக கொடிகளை (சிலுவை ஈடுபலி) உயர்த்துவதின் மூலம் சாட்சி பகருகிறது.

வேறு எந்த வகையிலும் அப்போஸ்தலரின் உருவகத்தை விளக்கிக் காட்ட முடியாது. தனிப்பட்டவர்களின் ஆவி பாதுகாக்கப்படுகிற விஷயத்தில் பலர் பலவிதமான கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அப்போஸ்தலர்களின் கருத்து ஒன்றேதான். அப்போஸ்தலர் யாரைக் குறித்து சொல்லுகிறாரோ அவர்களுடைய சரீரங்கள் அழிந்தே தீரும். மற்ற எல்லாருடைய சரீரங்கள் மண்ணோடு மண்ணாவது போல இவர்களுடைய சரீரமும், அழியும். ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற சொற்கள் பன்மையில் வராமல் ஒருமையில் வந்திருப்பதைக் கவனிக்கவும்.

## எல்லா ஆத்துமாக்களும் போகிற இடமான "சியோல்" அல்லது "ஹேதேஸ்" - இந்த சொற்களின் உண்மையான விளக்கம் என்ன?"

மரித்த பின்னர் ஆத்துமா "சியோலுக்கு" அல்லது "ஹேதேஸ்கு" செல்லுகிறது என்று சொல்லப்படுவதால், மனிதனுடைய ஆத்துமா, சரீரத்திலிருந்து ஜீவ ஆவி பிரிந்த பிற்பாடு, உணர்வுள்ளதாக தொடக்கூடியதாக இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. நாம் கர்த்தருடைய வார்த்தையை உள்ளபடியே இந்த கோணத்தில் சரியாக ஆராய்ந்து நிதானிக்க வேண்டும். சியோல் என்பது என்ன? ஹேதேஸ் என்பது என்ன? என்பதைப் பார்க்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் "சியோல்" என்ற எபிரேயச் சொல் 65 இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்று முறை ஆங்கிலத்தில் குழி அல்லது பாதாளம் (pit) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 31 முறை கல்லறை (grave) என்றும், 31 முறை நரகம் (hell) என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவைகள் யாவுமே தவறான மொழி

பெயர்ப்பு. தற்கால அர்த்தங்களின்படி குழி, நகரம், கல்லறை என்பதிலுள்ள பொருள் வேற்றுமைகள் யாவையும் சிந்தித்தால் அர்த்த பேதங்கள் விளங்கும்.

எபிரேயச் சொல்லாகிய சியோலுக்கு (இதற்கு சரியான கிரேக்க பதம் ஹேதேஸ்) அதன் அர்த்தத்தை சரியாகக் கூறக் கூடிய சரியான சொல் கிடையாது. இந்தச் சொல் மறைக்கப்பட்ட அல்லது அணைக்கப்பட்ட அல்லது ஒன்றுமில்லாமல் மரணத்தில் போய்விட்ட நிலைமையைக் குறிக்கும். இதுபோய் சேர்கிற இடமல்ல; ஒரு நிலைமையையே குறிக்கும். எபிரேய மொழியிலுள்ள சியோலுக்கும், ஹேதேஸ் என்கின்ற கிரேக்க சொல்லுக்கும் “முற்றிலும் மறந்துவிட்ட நிலைமை” என்ற பொருள்தான் கிட்டத்தட்ட சரியான பொருளாகும். சியோலுக்கு சந்தோஷம் அல்லது துக்கம் அல்லது வேறு எந்த உணர்வையும் காட்டக்கூடிய பொருள் கிடையாது. அது எந்தச் சொல்லைத் தொடர்ந்து வருகிறதோ அந்த சொல்-ன் தொடர்ச்சிதான் நாம் விளங்கிக் கொள்ள வழி காட்ட வேண்டும். அதனால் நரகத்திற்கு சம்பந்தப்பட்ட எபிரேயச் சொல்லாகிய சியோலையும், கிரேக்கச் சொல்லாகிய ஹேதேசையும் அதற்கு தொடர்புள்ள சொற்களையும் ஆராய்வோமாக. வேதாகமத்தின் மூலமாக சீயோல், ஹேதேஸ், மறதி என்ற தொடர்புடைய சொற்கள் நல்லவர் கெட்டவர் என்ற பேதம் பாராமல் எல்லோரையும் ஏற்றுக்கொள்வதாயிருக்கிறது. அங்கே வெளிச்சமில்லை, அறிவில்லை, ஞானமில்லை, எந்த மார்க்கமுமில்லை. மொழியில்லைஅவர்கள் தேவனை புகழ்வதும் இல்லை, தேவ தூஷணம் சொல்வதுமில்லை. அது முற்றிலும் மௌனமாக்கப்பட்ட ஒரு நிலை. எந்த வழியிலும் அது விரும்பத்தகாத நிலை, உயிர்த்தெழுதலைத் தவிர வேறு எந்த நம்பிக்கையுமில்லாத நிலை.

நல்ல ஆத்துமாவும் கெட்ட ஆத்துமாவும் சியோல் அல்லது மறக்கடிக்கப்பட்ட மறதி நிலைமையை அடைகிறது. ஆயிர வருட அரசாட்சியின் விடியற்காலையில் அழைப்பு வரும்வரை உணர்வற்ற நிலையில் ஒன்றுமில்லாமல் இருக்கும். பொதுவான வேதாகம மொழி பெயர்ப்புச் செய்தவர்கள் சில நேரங்களில் அதிக கவனம் செலுத்தாமல் அசதியாய் மொழி பெயர்த்திருக்கின்றனர். வேண்டு

மென்றே அவர்கள் அவ்வாறு செய்தார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் முடிந்தளவுக்கு நாணயமாகச் செய்திருக்கிறார்கள். என்றாலும் முழு கவனத்துடன் எல்லா இடங்களிலும் ஒரே சீராக மொழி பெயர்க்கவில்லை. சில கருத்துக்களில் அவர்களுக்கு குழப்பமாக இருந்ததால் அந்தக் குழப்பத்திலே அவர்கள் சரிவர மொழி பெயர்க்காமல் விட்டுவிட்டனர். “இருண்ட காலத்தி-ருந்து” சில தப்பறையான கொள்கைகள் அசத்தியமாய் அப்படி பின்பற்றப்பட்டு வந்தாலும், வழிவழியாய் சொல்லி வந்தக் கருத்தை அப்படியே மாற்றாமல், அதற்கேற்ப எழுதிவிட்டனர். மொழி பெயர்ப்பைப் பற்றி இன்னொன்று சொல்ல வேண்டுமானால், இப்பொழுது நரகம் என்றால் என்னவென்று நினைக்கிறோமோ, அதற்கு பழைய காலத்தில் வேறு பல அர்த்தங்கள் இருந்தது. நரகம் என்ற சொல்லுக்கு அக்கினியுள்ள ஒரு இடம் என்றோ அல்லது சித்திரவதை செய்யப்படுகின்ற இடம் என்றோ அர்த்தமில்லை. அதற்கு மறைக்கப்படுகிற, புதைக்கப்படுகிற கல்லறை என்று பொருள். மொழி பெயர்ப்பாளர்கள் நரகம் என்ற சொல்லுக்கு பூர்வீக அர்த்தம் என்ன என்று சொல் ஆராய்ச்சி செய்யாமல் ஒரு காலத்தில் இருந்த அந்த பொருளையே கணக்கில் எடுத்துக்கொண்டனர். விளக்கமாக பல சொற்களை ஆங்கில அகராதியில் ஆராயவில்லை.

கீழ்க்காணும் சியோல் என்ற சொல் வருகின்ற இடங்களை அதற்குரிய அர்த்தத்தோடு அது வருகின்ற பகுதிக்கு எந்த அர்த்தம் பொருத்தமாயிருக்கும் என்பதை வாசகர்களே நிதானித்துக் கொள்ளலாம். நரகம் என்று வருகிற இடங்களிலெல்லாம் சித்திரவதை, மனஉளைச்சல், எரி நரக அக்கினி போன்ற அர்த்தங்களை விட மறதி, ஒன்றும் தெரியாத நிலை என்ற பொருள்கள் மிகவும் பொருத்தமாக இருப்பதை அறியலாம். ஆத்துமாக்கள் சியோல் அல்லது மறக்கப்பட்ட ஒன்றுமறியாத நிலைக்கு செல்லுகிறது என்பதே முடிந்த முடிவாக நிரூபிக்கின்றது. அவ்விடத்தில் சித்திரவதை இல்லை; அங்கே சந்தோஷம் அல்லது வேதனை அல்லது அறிவு, ஞானம், கிரியை எதுவும் இல்லை. எதையும் உணரக்கூடாத நிலையில் உயிர்த்தெழுதலின் காலத்தில் “பிரதான தூதனுடைய சத்தத்திற்காகவும் தேவனுடைய எக்காளத்திற்காகவும் காத்திருக்கிறது.”

*"நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் (சியோல் அல்லது மறதியான நிலை) இறங்குவேன்... இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுது கொண்டிருந்தான்." - ஆதி 37:35)*

*இவ்வாறாக யாக்கோபும் பயங்கர மிருகங்களால் தன் குமாரனான யோசேப்பு இறந்து விட்டதாக எண்ணி புலம்பினான்.*

*"நீங்கள் போகும்வழியில் இவனுக்கு மோசம் நேரிட்டால், நீங்கள் என் நரைமயிரைச் சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப் பண்ணுவீர்கள் என்றான்." (ஆதி. 42:38)*

*இவை யாக்கோபு பென்யமீனை பிரியும்போது, யோசேப்பைப் போல இவனும் கொல்லப்படுவான் என்ற பயத்தில் சொன்ன வார்த்தைகள்.*

*ஆதி 44:29ல் யோசேப்பின் சகோதரர்கள் பென்யமீனை அங்கே விட்டுச்சென்றால் ஈசாக்குக்கு என்ன நடக்கும் என்பது குறித்த அதே வார்த்தைகள் திரும்பச் சொல்லப்படுகிறது. மேலும் 31ம் வசனத்தில் அவர்கள் தங்கள் தகப்பனுக்கு என்னசெய்வார்கள் என்பது குறித்து சொல்லப்படுகிறது. "இப்படி உமது அடியாராகிய நாங்கள் உமது அடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதாளத்தில் (சியோலுக்கு, மறதிக்கு) இறக்கப்பண்ணுவோம்."*

*இங்கே இந்த நான்கு எடுத்துக்காட்டுக்களிலும் "சியோல்" என்ற எபிரேயு வார்த்தை "பாதாளம்" என்று மொழிபெயர்க் கப்பட்டிருக்கிறது. அக்கினி, சித்தரவதை, வேதனை உள்ள இடமாக பொதுவாக சொல்லப்படுகிற நரகம் என்ற வார்த்தை இங்கே போடப்பட்டிருந்தால் எந்த அளவுக்கு அது தவறாக இருந்திருக்கும் என்பதை கவனிக்கும்படி எல்லோரையும் அழைக்கிறோம். சாதாரணமாக புரிந்து கொள்ளப்பட்டபடி நரகம் என்ற இந்த வார்த்தையை போட்டிருந்தால் யாக்கோபு தன்னைப்பற்றியும், அவனது குமாரர்கள் யாக்கோபைப் பற்றியும் கூறியது எவ்வளவு தவறாக போயிருக்கும் என்பதை மொழிபெயர்ப்பாளர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆகவே அவர்கள் "பாதாளம்" என்று*

*மொழிபெயர்த்துவிட்டார்கள். எனினும் யாக்கோபு பாதாளத்திற்கு சென்று விட்டார் என்றோ அல்லது பாதாளத்திற்கு செல்வார் என்ற எண்ணமோ அவர்களுக்கோ, பெரும்பாலான ஜனங்களுக்கோ இல்லை. தனது சரீரம் கல்லறையில் அடக்கம் பண்ணப்படும் என்று அந்த முற்பிதா எண்ணவில்லை. அப்படி எண்ணியிருந்தால் ராகே-ன் கல்லறைக்கு, பயன்படுத்திய எபிரேய வார்த்தையாகிய கேபுரா* (qeburah) *(ஆதி 35:20) என்பதை பயன்படுத்தியிருப்பார். அல்லது யாக்கோபின் கல்லறையைப் பற்றி யோசேப்பு பேசும் போது பயன்படுத்திய வார்த்தையாகிய கேபார்* (qeber) *என்ற வார்த்தையை பயன்படுத்தியிருப்பார். யாக்கோபு மரிப்பதற்கு முன்பே தனக்கென ஒரு கல்லறையை வெட்டி வைத்திருந்தார். (ஆதி 50:5) யாக்கோபு தன் கடைசி குமாரனான பென்யமீனையும் பிரிந்துவிட்டால் தன்னுடைய வயதான காலத்தில் ஏமாற்றத்தாலும் பலவீனத்தாலும் மரித்த நிலைமைக்கு ஒப்பான தன் ஆத்துமா மறதி நிலையில் இருக்கும் என்பதை அவ்வாறு குறிப்பிட்டான்.*

*"கர்த்தர் ஒரு புதிய காரியத்தை நேரிடச் செய்வதால், பூமி தன் வாயைத் திறந்து, இவர்கள் உயிரோடே பாதாளத்தில் (சியோல், மறதி நிலை) இறங்கத்தக்கதாக இவர்களையும் இவர்களுக்கு உண்டான யாவையும் விழுங்கிப் போட்டதேயானால், இந்த மனிதர் கர்த்தரை அவமதித்தார்கள் என்பதை அறிவீர்கள்." - (எண் 16:30)*

*"அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) இறங்கினார்கள். பூமி அவர்களை மூடிக் கொண்டது; இப்படிச் சபையின் நடுவி-ருந்து அழிந்து போனார்கள்.(எண் 16:33)*

*இவ்விரு வசனங்களும் கோராகு, தாத்தான்,அபிராம் ஆகியோரை எவ்வாறு அழித்தார் என்பதைக் காண்பிக்கிறது. இங்கே நரகம்* (hell) *என்று மொழிபெயர்க்காததற்கு காரணம், சித்திரவதை செய்யப்படும் இடம் பூமியின் மேற்பரப்பிலேயே இருக்கிறது என்று கூறும்படி ஆகிவிடுமோ என்று பயந்ததுதான். இந்தக் கருத்தை சரியாக புரிந்து கொள்ளும்போது எவ்வளவு தெளிவு ஏற்படுகிறது. பூமி பிளந்து அவர்களை விழுங்கிக் கொண்டது என்பது அவர்கள்*

முற்றிலுமாக அழிக்கப்பட்டு ஒன்றும் அறியாத மறதி நிலைக்குப் போய்விட்டார்கள் என்பது தெளிவாகப் புரிகிறது.

*"என் கோபத்தினால் அக்கினி பற்றிக் கொண்டது, அது தாழ்ந்த நரக மட்டும் (சியோல், மறதிநிலை) எரியும்; அது பூமியையும் அதன் பலனையும் அழித்து, பர்வதங்களின் அஸ்திபாரங்களை வேகப் பண்ணும்." (உபா 32:22)*

இங்கே சொல்லப்பட்டுள்ள நெருப்பு நிச்சயமாக சொல்லர்த்தமான நெருப்பு அல்ல. இந்த முழு வசனமும் தேவனுடைய எரிச்சலினால் உண்டான நெருப்பைக் காட்டுகிறது. அந்த செய்தி தொடர்கிறது, "அவர்கள் பசியினால் வாடி, எரிபந்தமான உஷ்ணத்தினாலும், கொடியவாதையினாலும் மாண்டு போவார்கள்... வெளியிலே பட்டயமும், உள்ளே பயங்கரமும்... அழிக்கும்." இந்த தீர்க்க தரிசனம் எவ்வாறு நிறைவேறியது என்று நாமாக கற்பனை செய்ய வேண்டியதில்லை. பரிசுத்தாவியினால் ஏவப்பட்டு அப்.பவுல் பேசும்போது இந்த பகுதியைக் குறிப்பிட்டு, இது மாம்சீக இஸ்ரயேலர்களைக்குறிக்கிறது என்றும், அவர்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுத்த பொழுது, அதனால் தேவனால் தள்ளிவிடப்பட்டு இந்த துன்பம் அவர்கள் மேல் வந்தது என்கிறார். அப்.பவுல், ".....அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" என்று கூறுகிறார். ( 1 தெச. 2:16) அவர்கள் செய்த பாவத்திற்காக வருத்தமடையும் வரை அக்கினி பற்றி எரிந்தது. இஸ்ரயேல் தேசத்தின் மீறுதல்களின் நிமித்தம் தேவக்கோபாக்கினை அவர்கள் மீது பற்றி எறிந்த பிறகு அவர்கள் ஒவ்வொருவரையும் தேடிப் பிடித்து மறதிநிலையான மரண நிலைக்கு உட்படுத்தப் பட்டனர். அதன்பிறகு அவர் சமாதானமாக பேசி, "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; எருசலேமுடன் பட்சமாய் பேசி, அதன் போர் முடிந்தது என்றும், அதன் அக்கிரமம் நிவர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவத்தினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும் அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்" என்று கூறுகிறார். (ஏசா 40:1-2) யாக்கோபு தீர்க்க தரிசனமாக இஸ்ரயேலைக் குறித்து கூறிய வார்த்தைகள் தேவசித்தத்தின்படி நிறைவேறித்தீரும் என்று வேத வாக்கியங்களின்

மூலமாக பவுல் இவ்வாறு கூறுகிறார்: "நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை." - (ரோம 11:27) இஸ்ரயேல் தேசத்தின் மீது கோபாக்கினை பற்றி எரிந்து அவர்கள் அழிந்த பின்பு அவர்கள் எல்லா ஆசீர்வாதங்களாலும் நிரப்பப்படுவர் என்று வேதம் கூறுகிறது. (உபாக. 32:26-43)

"கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்; அவரே பாதாளத்திலே (சியோல், மறதி நிலை) இறங்கவும் அதி-ருந்து ஏறவும் பண்ணுகிறவர்." (1 சாமு 2:6)

"மரணக் கண்ணிகள் (சியோல், மறதிநிலை) என்மேல் விழுந்தது." - II சாமு 22:6

தீர்க்கதரிசியாகிய தாவீது தான் மரண அபாயத்திலிருப்பதை உணர்ந்திருந்தார். ஆனாலும் கர்த்தர் சவுலின் கைகளுக்கு தாவீதை தப்புவித்தார். சங்கீதக்காரரின் இந்த தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சொன்னதாக நமக்குத் தெளிவாக எடுத்துக் காண்பிக்கிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை தீமை நிறைந்த இவ்வுலகி-ருந்து முற்றிலுமாக விடுவிக்கப்படும். மகாபெரிய உபத்திரவங்களுக்கு முன்பே கிறிஸ்துவின் சரீரமாகிய சபை வரவிருக்கும் மகிமை நிறைந்த உலகிற்காக விடுவிக்கப்படும். தீமைக்கு எதிரான கோபாக்கினையும், தெய்வீக வல்லமையும் அனைவருக்கும் புலப்படும். (வசனம் 8-18)

"அவனுடைய நரைமயிர் சமாதானமாய்ப் பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) இறங்க வொட்டாதிரு... அவனுடைய நரைமயிரை இரத்தத்துடன் பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) இறங்கப்பண்ண, நீ அவனுக்குச் செய்ய வேண்டியதை அறிவாய்." - (1 இரா 2:6,9)

தாவீது தன் குமாரனகிய சாலமோனைத் சுட்டிக்காட்டி பேசுகிறார். யோவாப் மிகவும் ஆபத்தான மனிதன். இரத்த வெறியன், அவன் மரணமடைவதற்கு முன் பழி வாங்கப்பட வேண்டியவன் என்கிறார். இங்கே மொழி பெயர்ப்பாளர்கள், மோவாப் கெட்டவன் என்று அறிந்திருந்தும் நரகம் (hell) என்பதற்கு பதிலாக பாதாளம்

(grave,Sheol) என்று வேண்டுமென்றே மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஏனெனில் இங்கே நரைமயிரைப் பற்றி சொல்லப்பட்டிருப்பதால் அவர்கள் கொள்கைப்படி, நரைமயிரோடு கூடிய சரீரம் எல்லாம் புதைக்கப்படும், ஆத்துமா அல்லது ஆவி மட்டும் நரகத்திற்கு போகிறது. ஆகவே சியோலுக்கு பதிலாக பாதாளம் (ஆங்கிலத்தில் grave)என்ற வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். யாக்கோபின் நரைமயிராகட்டும் யோவாபின் நரைமயிராகட்டும் எதுவாக இருந்தாலும் முழு சரீரத்தோடு சியோல் என்கிற பாதாளத்தில் போட்டபின் அவர்கள் மறதிநிலையில் இருப்பதைக் குறிக்கும் என்பதை சரியாக சிந்திக்கிறவர்கள் எவரும் புரிந்து கொள்வர். நரைமயிர் அல்லது நரைத்த தலை என்று உருவகப்படுத்திச் சொல்லுவது வயதான நிலைமையைக் குறிக்கும்.

"மேகம் பறந்து போகிறது போல, பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) இறங்குகிறவன் இனி ஏறி வரான்." -யோபு 7:9

யோபு மரணத்தில் மனித ஆத்துமாவைப் பற்றி குறிப்பிடும் போது அது முற்றிலும் அழிக்கப்படும் என்று விளக்கமாக கூறுகிறார். இந்தக் கருத்தைத் தொடர்ந்து தனது முடிவுரையாக 21-வது வசனத்தில் "....இப்பொழுதே மண்ணில் படுத்துக் கொள்வேன், விடியற்காலத்திலே என்னைத் தேடுவீரானால் நான் இரேன்" என்று கூறுகிறார். இந்த இடைக் காலத்தில் ஏற்படும் மரணம் உறக்கத்திற்கு ஒப்பிடப்படுகிறது. தற்காலயுகம் அழுகையும் வியாகுலமும் மரணமுமாகிய இரவுக்கு ஒப்பிடப்படுகிறது. ஆயிர வருட அரசாட்சி விடியற்காலத்திற்கு ஒப்பிடப்படுகிறது. தேவ வல்லமையால் உயிர்த்தெழுதல் ஏற்படும்போது கர்த்தர் யோபுவை விடியற் காலையில் பார்ப்பார். அப்போது அவர் இராமல் போய்விட்டார் என்பது அது முழு அழிவுக்குச் சென்று விட்டது என்பதே பொருள். எப்படிப் பார்க்கிலும் உயிர்த்தெழுதல் தேவ வல்லமையின்படியே நடந்தேறும். கர்த்தரால் குறிக்கப்பட்ட வேளை வரும்போது,.."அவர் தமது கைகளின் கிரியையின் மேல் விருப்பம் வைப்பார்." (யோபு 14:15) கர்த்தருடைய பழிக்குப்பழி வாங்கும் நியாயத் தீர்ப்பின் நாள் கடந்த பின் சீர்திருத்தலின் காலம் தொடங்கும் போது கர்த்தர் அழைப்பார். அந்த அழைப்புக்கு யோபுவும் மற்றவர்களும் பதில்

*கூறுவார்கள். (யோபு 14:14-15)*

*"அது வான பரியந்தம் உயர்ந்தது; உம்மால் என்ன ஆகும்? அது பாதாளத்திலும் (சியோல், மறதிநிலை) ஆழமானது, நீர் அறியக் கூடியது என்ன?" - யோபு 11:8.*

மேற்சொன்ன வார்த்தைகள் யோபுவின் சிநேகிதரான சோப்பார் ஆறுதல் சொல்வதாக நினைத்துக் கொண்டு அவரை துன்பத்துக்குள்ளாக்கின சம்பவம், அதற்காக தேவன் இவரை கண்டித்தார். இதன் மூலமாக, தேவனுடைய திட்டம் ஆட்சிமுறை மனிதனுடைய சிந்தனைக்கு எட்டாதது என்று யோபுவுக்கு எடுத்துக் காண்பித்தார். மனிதனுக்கு தேவனைப் பற்றியோ, தேவனுடைய திட்டத்தைப் பற்றியோ எந்த அறிவும் கிடையாது என்பதை விளக்க "சியோல்" என்ற சொல்லை இதற்கு ஆதாரமாக விளக்குகிறார். அறிவின்மை, பாதாளம் ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு சொல்லுகிறதினால், தேவ அறிவு, தெய்வ திட்டம் ஆகியவை அறியாத, புரியாத நிலை என்பதாகும்.

*"நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்." - யோபு 14:13*

யோபுவின் நம்பிக்கையைக் குறித்து, வெகு எளிமையாகவும், வெளிப்படையாகவும் இங்கு விளக்கப்பட்டிருக்கிறது. தற்போது இருக்கக் கூடிய பாவம், சாபம், மரணம் ஆகிய இதே சோக வாழ்க்கை தொடர்ந்து நீடித்திருக்கக் கூடாது என்று விரும்பினார். இந்த சாபமெல்லாம் தீரும் வரையில் பூமியிலிருந்து தேவ கோபாக்கினை முற்றிலும் நீக்கப்படும் வரையில், சீர்திருத்த மறுமலர்ச்சி வரும் வரையில், மறதிநிலையில் இருக்க அவர் விரும்பினார். அதே வேளையில் என்றைக்கும் இல்லாமல் போய்விட வேண்டுமென்று அவர் விரும்பவில்லை. உயிர்த்தெழுதல் மூலமாக எதிர்கால வாழ்வுக்கு தேவ ஏற்பாட்டின் மேல் நம்பிக்கை வைத்து, குறித்த காலத்தில் பாவத்தின் சாபமெல்லாம் உருண்டோடின பின்பு, தன்னை நினைவு கூர்ந்து, மறதியின் நிலையிலிருந்து அழைத்து, கிறிஸ்து மூலமாக திரும்பக் கொடுத்தலின் வல்லமையினால் தனக்கு மறுபடியும் ஜீவனைத் தரவேண்டும் என்று தேவனிடம் ஜெபிக்கிறார்.

*(அப். 3:19-21)*

*"அப்படி நான் காத்துக் கொண்டிருந்தாலும், பாதாளம் (சியோல், மறதிநிலை) எனக்கு வீடாயிருக்கும்; இருளில் என் படுக்கையைப் போடுவேன். அழிவைப் பார்த்து, நீ எனக்குத் தகப்பன் என்கிறேன்; புழுக்களைப் பார்த்து நீங்கள் எனக்குத் தாயும் எனக்குச் சகோதரியும் என்கிறேன்." - (யோபு 17:13,14)*

நினைவற்ற நிலை, மறக்கப்பட்ட வீடு, துறக்கப்பட்ட படுக்கை அங்கே முற்றிலும் இருள், உறங்குகிற யோபுவின் ஆத்துமா உயிரிழந்தபின் உயிர்த்தெழுதலின் காலத்து விடியலுக்காகக் காத்திருக்க, அவருடைய சடலமோ மறக்கப்பட்ட நிலையில் அழிந்து கொண்டிருக்க, இந்த உருவக மொழி எவ்வளவு அழகிய கருத்தோவியமாக வரையப்பட்டுள்ளது.

*"என் நம்பிக்கை இப்போது எங்கே? நான் நம்பியிருந்ததைக் காண்பவன் யார்? அது பாதாளத்தின் (சியோல், மறதிநிலை) காவலுக்குள் இறங்கும்; அப்போது தூளில் ஏகமாய் இளைப்பாறுவோம் என்றான்." - (யோபு 17:15,16)*

தேவ ஊழியன் தன்னுடைய நம்பிக்கையை, விசுவாசத்தை உறுதிபட எடுத்துக் கூறுகின்ற அதேவேளையிலே, எத்தனை பேர் அதே விசுவாசத்தில் இருப்பார்கள் என்ற வினாவையும் எழுப்புகின்றார். ஏற்கனவே தான் மரிக்கின்ற மரணம் உறக்கத்திற்கு ஒப்பாய் இருக்கிறது என்றும், காலையில் திரும்ப விழித்தெழுவேன் என்றும் தனது விசுவாசத்தை ஏற்கனவே அறிக்கை செய்திருக்கின்றார். மரிக்கிற எவரும் "சியோல்" என்கிற பாதாளத்திற்கு ஒவ்வொருவராக சென்றாலும், இந்த உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை உடையவர்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் எல்லாரும் பாதாளத்தில் புழுதியில் இளைப்பாறியே தீர வேண்டும்.

*"அவர்கள் செல்வவான்களாய்த் தங்கள் நாட்களைப் போக்கி, ஒரு கணப்பொழுதிலே பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) இறங்குகிறார்கள்." (யோபு 21:13)*

கர்த்தருடைய ஜனங்களாக இல்லாதவர்கள் மிகுந்த ஆடம்பரத்திலும் ஐஸ்வரியத்திலும் இருப்பது மேலே வருணிக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் கர்த்தருடைய

*பிள்ளைகளோ அநேக உபத்திரவங்களிலும், வேதனை, சோதனைகளிலும் துன்புறுத்தப்பட்டு ஒரேவிதமாக மரிக்கிறார்கள். இதில் துன்மார்க்கர் உரிய காலத்தில் தெய்வீக தண்டனையின் வழியாக சீர்திருத்தப்படுவார்கள். பிற்காலத்தில் அவர்கள் மேன்மையான ஜீவியம் ஜீவிப்பதற்கு அவர்களை ஆயத்தப்படுத்தி தகுதியுண்டாகும்படி செய்கிறார்.*

*"வறட்சியும் உஷ்ணமும் உறைந்த மழையைப் பட்சிக்கும், அடிப்படியே பாதாளமானது (சியோல், மறதிநிலை) பாவிகளைப் பட்சிக்கும்." - யோபு **24:19***

*எல்லா மனுக்குலமும் பாவத்திற்குட்பட்டது. எனவே எல்லா மனுக்குலமும் மரணத் தீர்ப்புக்குள்ளானதால் மறக்கப்பட்ட நிலையான பாதாளத்திற்குச் செல்கின்றனர். நம்மை மரணத்தி-ருந்து மீட்க வல்லவராகிய அவரே தம்முடைய மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தத்தின்படியே உயிர்த்தெழச் செய்யவும் வல்லவராயிருக்கிற அவர் மீதே, நாம் நமது நம்பிக்கையை வைக்கத்தகும். இவ்விடத்தில் யோபு, தீமை செய்பவர்களையும், தீமை செய்யத்துடித்து தங்கள் சாவை வ-ய விரைந்து வருவிக்கிறவர்களையும் குறித்தே விளக்குகின்றார்.*

*"அவருக்கு முன்பாகப் பாதாளம் (சியோல், மறதிநிலை) வெளியாய்த் திறந்திருக்கிறது. நரகம் மூடப்படாதிருக்கிறது." - யோபு **26:6***

*முடிவு எப்படியிருக்கும் என்று அதன் ஆரம்பத்திலேயே அறிந்திருக்கிற தேவன், பாதாளத்தில் இருக்கக்கூடிய இரகசியங்களும், அவருடைய பார்வையில் வெளியரங்கமாக இருக்கிறது. ஆராய்ந்து முடியாத தேவனுடைய சர்வ ஞானத்தை யோபு விளக்குகின்றார்.*

*"மரணத்தில் உம்மை நினைவு கூர்வதில்லை, பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) உம்மைத் துதிப்பவன் யார்?" - சங். **6:5***

*மனிதன் மரணத்தில் எந்த நினைவுமிராதபடி இருக்கிறான் என்பதற்கு இதைவிட வேறு என்ன தெளிவான, திட்டவட்டமான அத்தாட்சி இருக்க முடியும். இந்த வசனத்தில் துன்மார்க்கரைப் பற்றிக் குறிப்பிடாமல், கர்த்தருடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும்*

*அவரை நன்றியால் துதிக்கின்ற கர்த்தருடைய ஊழியக்காரர்களையே குறிப்பிடுகிறார் என்பதை கவனிக்கவும். கேபாரில் புதையுண்ட மரித்த சடலத்தைக் குறித்து சொல்லாமல், பாதாளத்திற்கு அதாவது மறக்கப்படும் நிலைக்குச் செல்கின்ற ஆத்துமாவைக் குறித்தே இங்கு சொல்லப்பட்டுள்ளது.*

*"துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்." - சங். 9 :17 (சியோல் - மறக்கப்படும் நிலை)*

*எபிரேயச் சொல்லான "ஷப்"* (shub) *என்ற சொல்-ன்படி "பாதாளத்திற்கே திரும்புவார்கள்" என்று பொருள் கொள்ள வேண்டும். துன்மார்க்கர்கள் தேவனையும் தேவனுடைய திட்டங்களையும் ஏற்றுக் கொள்ளாததால் திரும்ப அவர்கள் மரணத்திற்கே திரும்பி விடுவார்கள். மீட்கும் பொருள் கல்வாரியில் கொடுக்கப்பட்டதின் மூலம் ஆயிர வருட அரசாட்சியில் மறக்கடிக்கப்பட்ட மரண நிலையில் இருக்கின்ற மனுக்குலம் முழுவதும் உயிர்த்தெழுந்து வருவார்கள். இருந்த போதிலும் உயிர்த்தெழுந்து வந்த பிறகும் தேவ திட்டத்தை மனதார ஏற்றுக் கொள்ளாதவர்கள் திரும்பவும் மறக்கடிக்கப்பட்ட மரண நிலைக்குச் செல்வார்கள். இதுவே இரண்டாம் மரணம். அந்த நிலைமைக்குச் சென்ற பிற்பாடு மீட்கும் பொருளை அவர்களுக்காக செலுத்த முடியாது. அதன் பிறகு சீர்திருத்தமோ,மீட்போ அவர்களுக்குக் கிடையாது. இந்த பகுதி புற ஜாதியாரைக் குறித்துச் சொல்லப்படவில்லை. அவர்களிடம் தேவனைப் பற்றிய அறிவு இல்லை என்பது நிரூபணமாகிறது. இந்த பகுதி தேவனை மறந்தவர்களை மட்டுமே குறிப்பிடுகிறது. தேவனைப் பற்றி தெளிவாக அறிந்தும் சரியான பொறுப்பில் இருந்தும் மறுதலித்துப் போனவர்களையே குறிக்கும்.*

*"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காண வொட்டீர்." - சங். 16:10*

*அப். பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியால் பூரணமாய் நிறைந்தவராய்ப் பேசினார். அப்பொழுது இது தாவீதைக்*

குறித்துச் சொல்லப்பட்டதல்ல என்ற முக்கிய கருத்தை நாம் விளங்கிக் கொள்ளும்படி சொன்னார். ஏனெனில் தாவீதின் ஆத்துமா சியோலாகிய பாதாளத்தில் விடப்பட்டது. அவருடைய சரீரம் அழிவுக்குட்பட்டது. "அவன் (தாவீது) மரணமடைந்து அடக்கம் பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள் வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது." "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே" என்று தாவீதைக் குறித்து அப்.பேதுரு அறிக்கையிடுகிறார். - அப் 2:27-34

அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகள் கீழ்க்காணும் இரண்டு கருத்துக்களை ஆதாரத்துடன் வலியுறுத்துகின்றன.

1. தாவீதின் ஆத்துமா பாதாளத்துக்கு, எல்லாவற்றையும் மறந்த நிலைக்குச் சென்றது. அப். பேதுரு இந்த பிரசங்கம் செய்யும் வரை தாவீதின் ஆத்துமா பரலோகத்திற்குச் செல்லவில்லை.

2. இயேசு கிறிஸ்துவின் ஆத்துமாவும் பாதாளத்துக்கு, மறந்த நிலைக்குச் சென்றது. ஆனாலும் மூன்றாம் நாளில் உயிர்ப்பிக்கப்பட்டு பரலோகத்துக்குச் சென்றார்.

தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட இந்த வசனங்கள் மெய் சத்தியத்தை நாடி தேடி ஆராய விரும்புகிறவர்களுக்குஇந்தக் கருத்தைத் தெளிவாக விளக்கிக் காண்பிக்கிறது. கீழ்க்காணும் உண்மைகளை நமக்கு இவை விளக்கிக் காட்டுகின்றன.

1. நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆத்துமா மரணத்தில் பாதாளத்திற்கு மறக்கடிக்கப்பட்ட நிலைக்குச் சென்றது.

2. மூன்று நாட்கள் முடியும் வரை அவர் மரித்தவராயிருந்தார்.

3. மூன்றாம் நாள் அவர் மறதி நிலையி-ருந்து தேவனுடைய பரிசுத்தஆவியின் வல்லமையினால் தேவ சாயலில் "மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் முதற்பலனானார்." நமது கர்த்தர் மரித்திருந்த மூன்று நாட்களில் அவருடைய ஆத்துமாவோ, அவரோ இருக்கவில்லை. "அவர் தன் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார். உலகத்தின் பாவத்துக்காக தன் ஆத்துமாவை நிவாரண பலியாகக் கொடுத்தார்." ஆனால் அவருடைய ஆத்துமா உயிர்த்தெழுத-ன்போது புதிய ஆவிக்குரிய சரீரமாகப்

*புதுப்பிக்கப்பட்டது. (தொகுதி 2, பக். 107)*

*"பாதாளக் கட்டுக்கள் (சியோல் -மறதிநிலை) என்னைச் சூழ்ந்துகொண்டது. மரணக் கண்ணிகள் என் மேல் விழுந்தது." சங். 18:5*

*ஆழ்ந்த துயரத்தையும், மரண பயத்தையும் குறிக்க இப்படி உருவகமாகக் கூறப்படுகிறது.*

*"கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்தி-ருந்து (சியோல் - மறதிநிலை) ஏறப்பண்ணி, நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்தீர்." சங் 30:3*

*இது மரணத்திற்கு ஏதுவான நோயி-ருந்து விடுதலை பெற்றதற்கு நன்றி தெரிவிக்கும் ஸ்தோத்திரப் பாடலைக் கொண்டது.*

*"துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் (சியோல் - மறதிநிலை) மவுனமாயிருக்கட்டும்.. பொய் உதடுகள் கட்டப்பட்டுப் போவதாக." சங் 31:17-18*

*இங்கு மட்டுமல்லாது மற்ற அநேக இடங்களிலும் சங்கீதக் காரன் பூமியிலே துன்மார்க்கன், துன்மார்க்கத்தை விட்டு சீர்ப்பொருந்துமாறு வேண்டுதல் செய்கிறார். இவர்களுக்கு ஒரு எதிர்காலம் கிடைக்குமென்றோ, உயிர்த்தெழுப்படுவார்கள் என்ற நம்பிக்கையோ இதிலே உறுதிப்படுத்தப்படவில்லை. இராஜ்யம் கர்த்தருடையதாயும், தேசத்தின் ஆளுகை அவருக்குட்பட்டதாயும் இருக்கும்போது சத்தியம் ஸ்தாபிக்கப்பட்டு செம்மையான நீதி நியாயம் பரிபாலிக்கப்படும். இரக்கமும் அன்பும் ஸ்தாபிக்கப்படும் போதும் சர்வ சிருஷ்டிகளும் பாவத்திலிருந்து விடுபட்டு தெய்வீக அறிவை அறிந்து கொள்ள ஏராளமான வாய்ப்புக்கள் தாராளமாகக் கிடைக்கும். இப்பொழுது துன்மார்க்கராயிருக்கிற பலர் கிறிஸ்துவின் நீதியால் நீதியையும் நியாயத்தையும் தேடுகிற வாஞ்சையினால் பேரழிவிலிருந்து மறைக்கப்படுவார்கள். படிப்படியாக கிறிஸ்துவின் நீதியினால் இவர்கள் நித்திய வாழ்வைப் பெறுவார்கள். துன்மார்கர்கள் கிறிஸ்துவினால் தங்கள் துன்மார்க்கத்தை விட்டு சன்மார்க்கர்களாகி தேவனுக்கேற்ற வகையில் சீர் பொருந்தி நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதை தீர்க்கதரிசியாகிய தாவீதோ மற்ற தீர்க்க தரிசிகளோ*

*எதிர்க்க முடியாது.*

*“ஆட்டு மந்தையைப் போல பாதாளத்திலே (சியோல், மறதிநிலை) கிடத்தப்படுகிறார்கள்; மரணம் அவர்களை மேய்ந்து போடும்; செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டு கொள்வார்கள்; அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக் கூடாதபடி அவர்களுடைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும். ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் (சியோல், மறதிநிலை) வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக் கொள்வார்.” சங். 49:14-15*

*சியோல் என்ற சொல்லுக்கு “கல்லறை” என்பது முக்கியமான முதல் பொருளல்ல; அதனுடைய சரியான பொருள் “எல்லாம் மறந்த நிலை” என்பதை இந்தப் பாடத்தி-ருந்து விளங்கிக் கொள்ளலாம். ஏனெனில் செத்துப்போன ஆடுகளை எவரும் கல்லறையில் புதைப்பதில்லை. எல்லா ஆடுகளும் மறந்த நிலைக்குச் செல்வதோடு அவைகள் இருந்த நிலைமையி-ருந்து இல்லாத நிலைக்குச் சென்று விடுகிறது என்பது பொருள். எல்லாம் மறந்த, இல்லாமல் போன நிலைமையிலிருந்தாலும், தேவன் தன் ஆத்துமாவை திரும்ப மீட்டுக் கொள்வார் என்கிற திடமான நம்பிக்கை தீர்க்கதரிசியாகிய தாவீதிடமிருந்தது. இது அப்.பேதுரு சொன்ன கருத்துக்கு ஒத்துச் செல்கிறது. “தாவீது பரலோகத்திற்கு ஏறிச் செல்லவில்லை.” தாவீதின் ஆத்துமா மறக்கடிக்கப்பட்ட நிலையில், இல்லாமல் போனது. மரணத்திலிருந்தாலும் மறதியிலிருந்தாலும் கர்த்தர் தன்னை உயிர்த்தெழுதலில் மீட்டுக்கொள்வார் என்ற உறுதியான நம்பிக்கை தாவீதுக்கு இருந்தது. மரித்தவர்கள்புதைக்கப்படாத ஆடுமாடுகளைப் போல, இல்லாமல் போன நிலைமை அல்லது மறதியிலிருந்தும் திரும்ப உயிர்த்தெழுதலின் காலத்தில் இல்லாத நிலையிலிருந்து புதுப்பிக்கப்படுவார்கள். உயிர்த்தெழுதலின் காலையில் ஆயிர வருட அரசாட்சியின் காலையில் ஆடு, மாடுகள் ஆகியவைகளை, செம்மையானவர்கள் ஆண்டு கொள்வார்கள். அவர்களை நீதியின்படி நியாயம் விசாரித்து வழிநடத்துவார்கள் என இந்தப் பகுதி துல்-யமாக எடுத்துக் காட்டுகிறது. “பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந் தீர்ப்பார்களென்று” அப்போஸ்தலர் பவுல் விளக்குகிறார். (1 கொரி. 6:2)*

*“மரணம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக; அவர்கள் உயிரோடே பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) இறங்குவார்களாக; அவர்கள் வாசஸ்தலங்களிலும் அவர்கள் உள்ளத்திலும் பொல்லாங்கு இருக்கிறது.” - சங் 55:15*

இந்த வேதவசனம் அநேக கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தவறாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் ஒரு பெரிய தடைக்கல்லாகவும் இருந்து வந்தது. தாவீதைப் போன்ற புனிதமானவர்கள், விரோதிகள் மரணத்தில் அழிக்கப்பட வேண்டும், நித்திய நரகத்தில் வதைக்கப்படவேண்டும் என்று வேண்டிக் கொள்வது எப்படி என்கின்றனர். ஒரு நல்ல மனிதன் இவ்விதமாக வேண்டிக் கொள்ள மாட்டான். இந்தக் கருத்தில் தாவீது மன்றாடவில்லை. நாம் ஏற்கனவே பார்த்தபடியும் இப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறபடியும், சியோல் என்ற பதத்திற்கு எரிநரகம், நித்திய அக்கினி, பட்சிக்கிற அக்கினி, சித்திரவதை என்ற அர்த்தங்கள் கிடையாது. இது எல்லாம் மறந்த நிலைமையை, ஜீவனற்ற நிலைமையை மட்டுமே குறிக்கும். இவைகளைத் தொடர்ந்து நாகரீகமடைந்த மிகப் பிரகாசமான வெளிச்சத்தைப் பெற்ற ஜனங்கள் கொண்டிருக்கிற சட்டப்படி நீதி நியாய விதிகளுக்கு எதிராயிருக்கிற எதிராளிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற தாவீதின் மன்றாட்டு மிகச் சரியானதே என்று ஒப்புக் கொள்வார்கள். இன்றைய நவநாகரீக அரசுகளும் கூட கொலைகாரர்களை தூக்கிலிட தீர்ப்பிடுகின்றனர். அப்படித் தூக்கிலிடப்படுபவர்கள் அதிக வேதனைக்குட்படுத்தாத வகையில் எளிதில் இறக்கச் செய்கின்றனர். இதே கருத்தில் தான் தாவீதும் இப்படிப்பட்ட குற்றவாளிகள் எல்லாம் மறந்த நிலைமைக்கு, இல்லாத நிலைமைக்குப் போக வேண்டும் என்கிறார். இருந்தபோதிலும் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால், இல்லாமல் போனவர்களையும் உயிர்த்தெழுதலின் மூலம் மீட்டுக் கொண்டார். மிகக் கொடிய பாவம் செய்தவர்களுக்காகவும், மிகச்சிறிய பாவம் செய்த எல்லாருக்காகவும், “தேவனுடைய கிருபையினால் இயேசு கிறிஸ்து மரணத்தை ருசி பார்த்தார்.” “எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்தார்... இதற்குரிய சாட்சிஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது.” தேவ சிருஷ்டிப்பில் நம்முடன் இருக்கும் சக

*சிருஷ்டிகள் நம்மைக் காட்டிலும் புத்தி, யுக்தி உடையவர்களாக இருந்தாலும் அல்லது நேர் எதிரிடையான குணங்களையுடைவர்களாக இருந்தாலும் இன்னும் சிலர் பரம்பரையாக வழிவழியாகத் தீமையை செய்து வந்தாலும் இதற்கெல்லாம் காரணம் எதிராளியான இப்பிரபஞ்சத்தின் தேவன் அவர்களுடைய மனக் கண்களைக் குருடாக்கிப் போட்டதுதான். (2 கொரி. 4:4) மனுக்குலத்திலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் அவனவனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பகுத்தறிவின்படி நன்மையைத் தெரிந்து கொண்டால், நித்திய ஜீவனுக்கும், தீமையைத் தெரிந்து கொண்டால் மறதிநிலையாகிய இரண்டாம் மரணத்திற்கும் செல்ல வேண்டும் என்பது தேவனால் வகுத்த நியதி. கிறிஸ்துவின் விலைமதிக்க முடியாத இரத்தத்தின் மூலம் நமக்கு ஜீவனும் வாழ்வும் புதிய உடன்படிக்கையின்படி உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*"நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது; என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் (சியோல், மறதிநிலை) தப்புவித்தீர்." சங் 86:13*

*இங்கே "தாழ்ந்த பாதாளம்" என்று குறிப்பிடுவது மறதி நிலையின் ஆழத்தைக் குறிக்கும். அநேக சங்கீதங்களில் தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவை இவ்விதமாக உருவகமாக சொன்னது போல, இவ்விடத்திலும் அவரையே குறிப்பிடுவதாகத் தவறுதலாக எண்ணிவிடக் கூடாது. அப்படியிருந்தால், மறதியாகிய மரண நிலைக்கு விநோதமான அர்த்தம் கற்பிக்கப்படலாம். மனுக்குலத்தை பொருத்தவரை மரணம் என்பது ஒரு நித்திரை. அது மறதி நிலைமையில் இருக்கக் கூடிய காலம், தற்காலிகமானது. மீட்பின் திட்டத்தின்படி உயிர்த்தெழுதலினால் மாண்டோர் மீண்டும் வருவர். ஆனால் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விஷயத்தில் இது முற்றிலும் மாறுபட்டது. இயேசு கிறிஸ்து ஒரு பாவியின் ஸ்தானத்தில் ஆதாமுக்காகவும் அவனது பாவத்திற்காகவும் (பரிகாரம் பண்ணவே) பாவத்தின் சம்பளமாகிய மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார். இந்த மரணம் நித்திய மரணம். ஆனாலும் தேவனுடைய இரக்கத்தினாலும் வல்லமையினாலும் அவர் பிதாவினால் உயிர்த்தெழுப்பப்பட்டு தான் மீட்டுக் கொண்ட யாவருக்கும் அவர் இரட்சகரானார்.*

*"என் ஆத்துமா துக்கத்தால் நிறைந்திருக்கிறது; என் ஜீவன் பாதாளத்திற்குச் (சியோல், மறதிநிலை) சமீபமாய் வந்திருக்கிறது." சங். 88:3.*

இங்கே மீண்டும் துயரம், மரணத்திற்கு சமீபமாய் வந்திருக்கிறது என்பதை கவிதை வடிவிலே கரைந்துருகும் வண்ணம் கூறுகிறார்.

*"மரணத்தைக் காணாமல் உயிரேடிருப்பவன் யார்? தன் ஆத்துமாவைப் பாதாள வல்லடிக்கு (பாதாளம் - மறதிநிலை) விலக்கி விடுகிறவன் யார்?" - சங். 89:48*

இந்த வசனத்தில் கேட்கப்படும் வினாவும் அதற்குள்ளேயே உள்ள விடையும் எவ்வளவு உறுதியான உண்மை. நாம் இதுவரை ஆராய்ந்த பாதாளம், மறதி நிலை என்ற கருத்துக்கள் தெளிவாக விளங்குகிறதல்லவா? இவைகளிலிருந்து பொதுவாக எல்லோரும் நம்பிக் கொண்டிருக்கிற எரிநரக கருத்து தவறானது என்பது விளங்குகிறது. பொதுவாகப் பரவியிருக்கும் தவறான கருத்து என்னவென்றால், எந்த மனிதனோ எந்த ஆத்துமாவோ மரிப்பதில்லை என்பதாகும். அதன்படி எந்தக் கண நேரத்தில் மரிக்கிறானோ அதுமுதல் அவன்மிகுந்த ஜீவியத்தை பெற்றுக் கொள்கிறான். இப்படிப் பார்க்கும்போது பாதாள மரண மறதி நிலைமையைக் காட்டிலும் ஆத்துமா வல்லமையுள்ளதாகும்; ஆத்துமா சாவதில்லை; இவைகள் இவ்வாறு இருக்க ஆத்துமா பாதாளத்தின் வல்லடிக்குத் தப்பும் வல்லமை பெற்றிருக்கிறதா? என்ற வினா எழுகிறது. சியோலாகிய பாதாளத்திற்கு ஆத்துமாவைத் தொட எந்த அதிகாரமும் கிடையாது. சத்தியமும், வேதாகமமும் எவ்வளவு சீரான ஒத்த தன்மையுடையவைகளாக இருக்கிறது. பொதுவாக உலகம் பின்பற்றும் பிளாட்டோவின் தத்துவங்கள் எவ்வளவு போலியானவை, முரணானவை!

*"மரணக் கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது, பாதாள இடுக்கண்கள் (பாதாளம் - மறநிலை) என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்." -சங். 116:3*

இங்கே மறுபடியும், மரண பயம் சித்திரம்போல வரையப் பட்டுள்ளது.

"உம்முடைய ஆவிக்கு மறைவாக (வல்லமை - தப்பித்தல் - தேவ வல்லமைக்கு விலகி மறைத்துக் கொள்ளுதல்) எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும் நீர் அங்கே இருக்கிறீர், நான் பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்." சங். 139:7-8

சியோல் என்கிற நரகம் (பாதாளம்) நித்தியமும் எரிகிற அக்கினியும் சித்திரவதை செய்யப்படுகிற ஸ்தலமுமாயிருக்கிற இடத்தில் தேவன் வாசம் செய்யும் நிரந்தரமான வாசஸ்தலம் என்பதே தற்போது நிலவி வரும் கருத்தாகும். இதற்கு மாறாக தேவனுடைய வல்லமையை இன்னும் விரிவாக தீர்க்கதரிசி கூறுகின்றார். இந்த அண்டவெளியில் தேவனுடைய பார்வை போகாத இடமே இல்லை என்று நமக்குக் கூறுகின்றார். மரணத்தின் மறதிநிலை கூட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கட்டுப்பட்டது என்பதை குறிப்பிட அவர், "நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய (மறதிநிலை) திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" என்றார். இதுவே நாம் சர்வல்ல தேவனின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கை. மரித்தோரின் உயிர்த்தெழுதல் இந்த விசுவாசத்திற்கு அடிப்படையான நம்பிக்கையாகும்.

"பூமியின் மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறதுபோல, எங்கள் எலும்புகள் பாதாள (சியோல், மறதி நிலை) வாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது." - சங் 141:7

இந்த பகுதியின் முக்கியத்துவம் எளிதில் புரிந்து கொள்ள முடியாததாயிருக்கிறது. எப்படிப் பார்க்கிலும், இது எல்லோரும் பொதுவாகக் கூறுகின்ற எரிநரகம் என்ற பொருளை நிச்சயமாகத் தராது. கீழ்க்காணும்படி "யங்" என்பவர் இந்தப் பகுதியை மொழி பெயர்க்கிறார்: "சவுலின் கட்டளைப்படி ஒருவன் நிலத்தைப் பயிரிடுமுன், உழுது பண்படுத்துவது போல நமது எலும்புகள் சிதறடிக்கப்பட்டன."

"பாதாளம் (சியோல்- மறதிநலை) விழுங்குவது போல் நாம் அவர்களை உயிரோடே விழுங்குவோம்." - நீதி. 1:12

இது கொலைக்காரர்களின் மொழி போலுள்ளது.

*அப்படிப்பட்டவர்கள் கொலை வெறியில் அவர்களைக் கொன்று ஒரு சிறிய உறுப்பும் காணாதபடியும் நினைவிலிராதபடியும் சிதைத்து விடுவர்.*

*"அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும்; அவள் நடைகள் பாதாளத்தைப் (மறதிநிலை) பற்றிப்போகும்." - நீதி. 5:5*

*ஒரு வேசியின் பின் செல்லக்கூடிய ஒருவன் வெட்கப்படத் தக்க விபரீதமான நிலைமைக்குத் தள்ளப்படுகின்றான் என்பதை கவிதை நடையாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அவளுடைய வழிகள் மரண பாதாளத்திற்குரிய அழிவின் வழிக்கு நடத்திச் செல்லும்.*

*"அவள் வீடு பாதாளத்துக்குப் (சியோல் - மறதிநிலை) போகும் வழி; அது மரண அறைகளுக்குக் கொண்டு போய்விடும்." நீதி. 7:27*

*மேற்சொன்னதைப் போன்ற கருத்து இங்கே சொல்லப்பட்டிருந்தாலும் இந்த பாதாளம் பற்றி எரிகிற அக்கினி ஜூவாலை அல்ல; அது சித்திரவதை செய்யப்படுகின்ற இடமுமல்ல; ஆனால் இருண்ட, மரணத்தில் மறக்கப்பட்ட ஒரு இல்லாத பொருளாகும் இடம்.*

*"....அவளுடைய விருந்தாளிகள் நரக பாதாளங்களில் (சியோல் - மறதிநிலை) கிடக்கிறார்களென்றும் அவன் அறியான்." நீதி. 9:18*

*இங்கு உயர்வு நவிர்ச்சியாகச் சொல்லப்படுகிற வேசியின் விருந்தாளிகள்மரணத்திற்குஒப்பிட்டுச்சொல்லப்படுகிறார்கள்.அந்த மனிதனின் ஆண்மை, கண்ணியமெல்லாம் மரணத்தில் ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது என்று சந்தேகத்திற்கிடமின்றி சொல்லப்பட்டுள்ளது. தன்னிச்சையாக நடக்கிற யாவருக்கும் வியாதிகளும், மரணமும் விரைந்து வரும். இவர்களெல்லாரும் மறதியின் பாதையில் செல்லுகிறார்கள். சரீரப்படி மட்டுமல்ல; அவர்கள் சமூகத்தில் மனிதர் மத்தியில் மரியாதை இழந்து மதிகெட்டவர்களாகிவிடுகின்றனர்.*

*"பாதாளமும் (சியோல் - மறதிநிலை) அழிவும் கர்த்தரின் பார்வைக்குப் பிரத்தியட்சமாயிருக்க, மனு புத்திரருடைய இருதயம் அதிக பிரத்தியட்சமாயிருக்குமல்லவோ?" - நீதி. 15:11*

*இவ்விடத்தில் சித்திரவதை செய்யப்படுவதற்கான அடையாளமோ, எந்தவித குறிப்போ இல்லை என்பதைக் கவனிக்கவும். ஆனால் அதற்கு நேர்மாறாக சியோல் என்ற பாதாளம் மறதிநிலை, முற்றிலும் அழிவுக்கு தொடர்பான பொருளைத் தரும்.*

*"கீழான பாதாளத்தை விட்டு (சியோல், மறதிநிலை) விலகும்படி, விவேகிக்கு ஜீவ வழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம்." - நீதி. 15:24*

*நமது மொழி பெயர்ப்பாளர்கள் அதற்குச் சாதகமாக செம்மை யானவர்கள் மேலே பரலோகத்திற்குச் செல்லுகின்றனர் என்றும், அநீதிமான்கள் கீழே பாதாளத்திற்குச் செல்லுகின்றனர் என்றும் எழுதினார்கள். ஆனால் திருத்திய மொழிபெயர்ப்பில், "ஞானமுள்ளவர்களின் ஜீவபாதை கீழேயிருக்கிற பாதாளத்திலிருந்து (கல்லறை) மேல் நோக்கிச் செல்லுகிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சரியாக மொழி பெயர்த்தால் அது கீழ்க்கண்டவாறு இருக்கும்: ஞானமுள்ளவர்கள் செல்லும் ஜீவ பாதை மேல் நோக்கி அதாவது நீதி, நியாயத்தை நோக்கிச் செல்லும். அவர்கள் நீதியினால் மறக்கப்பட்ட பாதாள மரண நிலையிலிருந்து உயிர்த்தெழுதலின் மூலம் மீட்புப் பெறுவார்கள்.*

*"நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்துக்கு (சியோல், மறதிநிலை) அவன் ஆத்துமாவை தப்புவிப்பாயே." -நீதி. 23:14*

*இதன்படி செத்த பிணத்தை பிரம்பு கொண்டு அடித்து திருத்த வேண்டுமென்றோ, பாதாளத்திலுள்ள ஆத்துமாவை சித்திரவதைக்கு உட்படுத்தி அதனால் மீட்க முடியும் என்றோ போதிப்பதில்லை என்பதை விளக்கத் தேவையில்லை. இந்த வசனத்தின் பொருள் தெளிவாக விளங்குகிறது. இங்கே கொடுக்கப்பட்ட கட்டளை என்னவெனில் குழந்தையிடம் பிரம்பை கையாளாமல் இருக்கக்கூடாது. அப்படி உரிய காலத்தில் உரிய அளவு கண்டித்து வளர்த்தால் அதன் ஆயுசு வருடங்கள் கூடிப்போகும்; குழந்தையின் ஆத்துமாவை அகால மரணமடையாமல் காப்பாற்ற உதவும்; இரண்டாம் மரணத்துக்குச் (மறதிநிலை) செல்லாதவாறு தடுத்துக் கொள்ளலாம் என்பதே.*

*"பாதாளமும் (சியோல், மறதிநிலை) அழிவும் திருப்தியாகிறதில்லை. அதுபோல மனுஷனுடைய கண்களும் திருப்தியாகிறதில்லை." -நீதி. 27:20*

*எப்படிப் பார்க்கினும் இது எரிநரகமாகிய அக்கினியைக் குறிப்பதில்லை. அப்படிப்பட்ட சரிவிகித அளவில் மிகப்பெரிய அக்கினி உலையை நிறுவ இயலாது. இதன் சரியான பொருள் என்னவெனில் மரணம் - மறதிநிலையின் கொள்ளளவுக்கு எல்லை இல்லை என்பதாகும்; அழிவு மிதமிஞ்சிய கூட்டமாக இருக்க முடியாது என்பதாகும்.*

*"தா, தா, என்கிற இரண்டு குமாரத்திகள் அட்டைக்கு உண்டு. திருப்தியடையாத மூன்றுண்டு, போதும் என்று சொல்லாத நான்கு முண்டு. அவையாவன: பாதாளமும் (சியோல், மறதிநிலை) மலட்டுக் கர்ப்பமும், தண்ணீரால் திருப்தியடையாத நிலமும், போதுமென்று சொல்லாத அக்கினியுமே." - நீதி. 30:15,16*

*முன் பார்த்த வசனத்திலும் இந்த வசனத்திலும் பாதாளத்திற்கு முடிவேயில்லை. அதன் கொள்ளளவு இவ்வளவு தான் என அரிதியிட்டு உறுதியாகக் கூற இயலாது என்று கூறப்படுகிறது.*

*"செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்; நீ போகிற பாதாளத்திலே (சியோல், மறதிநிலை) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." பிரச. 9:10*

*இங்கே பாதாளம் என்று சொல்லப்படுகிற சியோலாகிய பாதாளம், முற்றிலும் மறக்கடிக்கப்பட்ட நிலையைப் பற்றிய சரியான தகவலை தருகிறது. இது தீயோர் மட்டும் செல்லக்கூடிய இடமன்று, நல்லோரும் நீதிமான்களும் செல்லக்கூடிய இடம் என்று தெளிவாகிறது. அங்கே நற்பணிகளும் கிடையாது. துர்ப்பணிகளும் கிடையாது. அங்கே தேவனை போற்றுவதுமில்லை, தூற்றுவதுமில்லை. அங்கே நன்மையை சிந்திப்பதுமில்லை, தீமையை சிந்திப்பதுமில்லை. அங்கே பரிசுத்த அறிவோ, அசுத்த அறிவோ கிடையாது. பரலோக ஞானமோ வேறு எந்த ஞானமோ*

*அங்கே கிடையாது. சியோல் என்கிற முற்றிலும் மறக்கப்பட்ட நிலைமைக்குப் போய்விட்டால் மேற்சொன்ன எதுவும் அங்கே இராது. இந்தத் தகவல்கள் எவ்வளவு வல்லமையாயும் தெளிவாயும் விளக்கமாயும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன?*

*"....நேசவைராக்கியம் பாதாளத்தைப் (சியோல், மறதிநிலை) போல் கொடிதாயிருக்கிறது." உன்.8:6*

*இங்கே மரண நிலைமை முற்றிலும் மறக்கடிக்கப்பட்ட நிலையை சொல்வதோடு கூட ஒரு முரட்டு சுபாவமாகிய விடாப்பிடியான சுபாவத்தை, மனித சுபாவம் போல் உருவகித்துச் சொல்லப்படுகிறது. இந்த மரணம் எந்தவொரு குணநலமோ அல்லது வேறுபட்ட நிலைமையோ விதிவிலக்கின்றி எல்லா மனிதனையும் ஆட்கொண்டிருக்கிறது.*

*"...பாதாளம் (சியோல், மறதிநிலை) தன்னை விரிவாக்கி, தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது." ஏசா. 5:14*

*இவ்விடத்தில் இஸ்ரயேலர்கள் அவமதிக்கப்பட்டு சிறுமைப்படுத்தப்பட்டு தங்கள் மேன்மையெல்லாம் இழந்திருக்கக் கூடிய நிலைமையைக் குறித்தும், மறந்திருக்ககூடிய நிலைமையைக் குறித்தும் தீர்க்கதரிசி விளக்க சியோல், மறதிநிலை என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றார். அவர்கள் மரித்தவர்களைப் போலானார்கள். அவர்கள் திரளான எண்ணிக்கையில் மறக்கடிக்கப்பட்ட நிலைமைக்குப் போனார்கள். இந்தப் பகுதியில் கல்லறையைப் பற்றியோ, எரிகின்ற அக்கினி கடல் பற்றியோ ஒரு சிறு குறிப்பும் கிடையாது.*

*"கீழே இருக்கிற பாதாளம் (சியோல், மறதிநிலை) உன்னிமித்தம் அதிர்ந்து, உன்வருகைக்கு எதிர்கொண்டு..." - ஏசா. 14:9*

*இது மிகவும் உன்னதமான அடையாள மொழியிலே கூறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இது பாபிலோனைக் குறிப்பதாயுள்ளது. அதன் நிறைவேறுதல் இனிவரும் காலத்தில் நடந்தேறும் என்று நாம் நம்புகிறோம். அந்த நாள் மிகச் சமீபமாக நெருங்கி வருகிறது எனக் கருதுகிறோம். கடலில் வீசப்பட்ட*

*கல்லைப் போல மகா பாபிலோன் அப்படியே முழுமையாய் விழுங்கப்படும். அது பார்வையில் படாமல் மறக்கப்பட்டு போகும். அந்த பாபிலோன் சியோலாகிய மறக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்படும். (வெளி 18:21) இந்தக் கருத்து வெளி 18:4-8ல் கூறப்பட்டள்ளது. "ஒடுக்கினவன் ஒழிந்து போனானே! பொன்னகரி ஒழிந்து போயிற்றே!"*

*"உன் ஆடம்பரமும், உன் வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) தள்ளுண்டு போயிற்று." ஏசா. 14:11*

*இது இரகசியமாகிய மகா பாபிலோனின் வீழ்ச்சியை பற்றி அடையாள மொழியில் கூறுகிறது. அதனுடைய மகிமை பெருமைகளெல்லாம் கடந்த கால நிகழ்ச்சியாக கனவிலும் நினைக்க முடியாத கதையாய் போய்விடுமேயல்லாமல் அது எரிநரகத்தில் எரிந்து கொண்டேயிராது.*

*"மரணத்தோடே உடன்படிக்கையும், பாதாளத்தோடே (சியோல், மறதிநிலை) ஒப்பந்தமும் பண்ணினோம்." ஏசா 28:15*

*இவ்விடத்தில் மெய்ப்போதகமாகிய பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை புறக்கணித்து தப்பறையான போதகத்தின் மூலமாக பயங்கரமான ஆபத்திற்கு, இடறுதலுக்கு,விழுந்து போகுதலுக்கு செல்வார்கள் என்று கர்த்தர் முன்னமே தீர்க்க தரிசனமாகக் கூறுகிறார். இப்படி வஞ்சக ஆவியினால் அநேகரை வஞ்சித்தவர்களுக்கு பதிலடி கொடுக்கும் காலம் நெருங்கி விட்டது. இவர்கள் சத்தியத்தினிமித்தம் பரிசுத்தமாக்கப்படாமல் தப்பறையை தேர்ந்தெடுத்தவர்கள். இப்படிப்பட்ட தப்பான போதகர்களைக் கொண்டு மாபெரும் எதிராளியான சாத்தான் பொய்யான விசுவாசத்தையும், பொய்யான வாக்குத்தத்தங்களையும் தப்பறையாய் உபயோகித்து, அநேகரை தன் வஞ்சக வலையில் சிக்க வைக்கிறான். ஏற்கனவே அவன் போப்பு மார்க்கத்தையும் புறஜாதியாரின் உலகத்தையும் வஞ்சித்து, மரித்தவர்கள் உண்மையிலேயே மரிக்கவில்லை, உத்திரிக்கும் ஸ்தலத்தின் சித்திரவதையி-ருக்கிறார்கள் என்று நம்பவைத்து அவர்களுக்காக ஜெபங்களையும்,பூஜை ப-களையும் ஏறெடுக்க வைத்து விட்டான்.*

இதே எதிராளி புரட்டஸ்டன்ட் சபையினரையும் பிரம்ம ஞானம், ஆவியுலக கொள்கை, கிறிஸ்தவ விஞ்ஞானம் போன்றவைகளால் தாக்கி, மரித்தோர் உண்மையிலேயே மரிக்கவில்லை என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தி, அநேக வஞ்சனைகளுக்குக் கீழ்ப்படுத்தி விட்டான்.

பல்வேறு கிறிஸ்தவ அமைப்புகள் இன்று "மரணத்தோடு உடன்படிக்கை செய்து" அதை நண்பனாக பாவிக்கின்றனர். ஆனால் வேதாகமமோ, மரணம் தான் மனிதனின் மகா பிரதான எதிரியும், பாவத்திற்குச் சம்பளமும் என்கின்றது. பெயர் கிறிஸ்தவர்கள் பாதாளத்தோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள்; அவர்கள் கல்லறையைப் பற்றிக் கூறும் போது, அது பூமிக்குரிய சரீரத்தைக் காப்பாற்றி வைத்திருக்குமிடம் என்றும், சரீரத்தில் ஒன்றுமில்லை என்றும் அது விட்டொழிக்கப் பட்டது என்றும் வாதிடுகின்றனர். "பாவத்தின் சம்பளம் மரணம்" (மறதிநிலை) என்கிற வேதக்கருத்தை இவர்கள் அறியத் தவறிவிட்டார்கள். இவர்கள் சாத்தானின் பொய்யாகிய பாவத்தின் சம்பளம் நித்திய நரகம் என்ற தப்பறையை எளிதில் ஏற்றுக் கொண்டவர்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை ஏற்றுக் கொள்ளத் தவறியவர்கள், இயேசுவின் மரணம் ஈடுபலி என்றும், சர்வ உலக பாவத்திற்கும் பரிகாரம் என்பதையும் மறுதலிக்கிறவர்களாகின்றனர். தேவனுடைய மீட்பின் திட்டத்தையும் அதன் மாண்பினையும் கிறிஸ்துவின் விலைக் கிரயத்தையும் மறுதலிக்கிறார்கள். இதனால், அவர்கள்,"எல்லாம் முந்தின சீருக்குக் கொண்டு வரப்படும்" என்பதையும் அறியாதிருக்கிறார்கள். தேவ கிருபையின் திட்டத்தைப் புரியாததால் அவர்கள் பயத்தோடு வாழ்கின்றனர்.

"நீங்கள் மரணத்தோடு செய்த உடன்படிக்கை விருதாவாகி, நீங்கள் பாதாளத்தோடு (சியோல், மறதிநிலை) செய்த ஒப்பந்தம் நிற்காதேபோம்."-ஏசா 28:18

மரணத்தைக் குறித்தும் மறக்கடிக்கப்பட்ட நிலைமையைக் குறித்தும் வேதாகம சத்திய கருத்துக்களை உலக மக்கள் உள்ளபடியே ஏற்றுக் கொள்ளும்படி, இறுதியாக அவைகளை தேவன் பிரகடனப்படுத்துவார். ஆனால் அதற்கு முன்பாக உலகத்தில் மகா

உபத்திரவமும் குழப்பமும் வஞ்சகத்தில் அகப்பட்டவர்களுக்கு உண்டாயிருக்கும். கர்த்தருடைய வார்த்தையை கவனமாகக் கேட்காதவர்களுக்கு இவ்வாறு சம்பவிக்கும்.

"நான் என் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளத்தின் (சியோல், மறதிநிலை) வாசல்களுக்குட்படுவேன் என்று என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன்." - ஏசா 38:10

யூதாவில் ஆட்சி புரிந்த எசேக்கியாவின் வார்த்தைகள் இவைகள். இவருடைய பயபக்தியை மெச்சி தேவன் அவருடைய ஆயுளில் பதினைந்து ஆண்டுகளைக் கூட்டிக் கொடுத்தார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவருடைய சிந்தனையில் தோன்றியவைகள் இங்கு தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. நித்தியமாய் வாதிக்கப்படும் நரகத்திற்குச் செல்வோம் என்ற எண்ணம் அவருக்கு நிச்சயமாயிருந்திருக்க முடியாது. நல்ல வேளை, இந்தப் பகுதியை மொழி பெயர்த்தவர்கள் இதை நரகம் எனக் குறிப்பிடாமல் பாதாளம் என்றே குறிப்பிட்டுள்ளனர். இதை நரகம் என குறிப்பிட்டிருந்தால் அநேக வினாக்கள் எழுந்திருக்கும். அதில் எது சரி என்று ஆராய வாசகர்களுக்கும் நேரம் தேவைப் பட்டிருக்கும். அது எல்லாருடைய கவனத்திற்கும் கொண்டுவர காலங்கள் கடந்திருக்கும். அரசன் தான் மரணத்திற்கு சமீபமாயிருப்பதையும், தனக்குக்கொடுக்கப்பட்ட நாள் முடிந்து விட்டதாகவும் கருதியிருந்த வேளை அற்புதமான தேவ தயவால் தன் வாழ் நாட்கள் கூட்டிக்கொடுக்கப்பட்டதால், தேவ தயவை ருசி பார்க்க முடிந்தது.

"பாதாளம் (சியோல், மறதிநிலை) உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது." -ஏசா 38:18

எசேக்கியா இராஜா வியாதிப்பட்டிருக்கையில் அவர் கூறிய வார்த்தைகளின் ஒரு பகுதி. மரண பயம் அவரை பற்றியிருந்தது. எசேக்கியாவின் ஆயுளை அதிகரித்ததில் தேவனுடைய நன்மையும் கிருபையும் வெளிப்பட்டது. அதற்காக அவர் தேவனுக்கு நன்றியை ஏறெடுத்தார். "என் ஆத்துமாவின் மேல் தேவரீர் வைத்த வாஞ்சையினால் அதை பாதாள அழிவிலிருந்து காப்பாற்றினீர்"என்று எசேக்கியா இராஜா கூறினார். இதனை மொழிபெயர்த்தவர்கள் சரியாய் சொல்லவில்லை. "பாதாளம் உம்மை துதியாது," ஆராய்ச்சி

மனப்பான்மையுள்ளவர்கள் இப்படிப்பட்ட வசனத்தில் வருகிற பாதாளம் என்றால் என்ன? என்று வினவுவார்கள். எசேக்கியா மரணத்தை சியோலுக்கும், மறக்கப்படும் நிலைமைக்கும் தொடர்புபடுத்தி ஒப்பிட்டுச் சொல்லுகிறார். இதைத் தொடர்ந்து "நான் இன்று செய்கிறது போல உயிரோடிருக்கிறவன், உயிரோடிருக்கிறவனே உம்மை துதிப்பான்" என்கிறார். இதை வேறு வகையில் சொல்ல வேண்டுமானால் உயிருள்ளவன்தான் தேவனைத் துதிக்க முடியும். ஆனால் ஒருவன் இறந்து விட்டால் அவன் ஆத்துமா பாதாளத்துக்குச் சென்றுவிட்டால் அவனால் எவ்வாறு தேவனை துதிக்கமுடியும். உயிர்த்தெழுதலின் விடியற்காலை வரையில் தேவனுடைய கிருபையை அவனால் நினைத்துப் பார்க்க முடியாது. இதே கருத்தை யோபு, "கர்த்தர் அனைவரையும் கூப்பிட்டுக் கேட்பார்; எல்லோரும் அவருக்கு பதில் கூறுவார்கள்" என்கிறார்.

*"நீ தைலத்தைப் பூசிக்கொண்டு ராஜாவினிடத்தில் போகிறாய்... உன்னைப் பாதாளம் மட்டும் (சியோல், மறதிநிலை) தாழ்த்துகிறாய்." - ஏசா. 57:9*

இது உருவகமாக வருணிக்கப்படுகிறது. இது சொல் அர்த்தமாக கல்லறையையோ சித்திரவதை செய்யப்படுகிற இடத்தையோ குறிக்கவே குறிக்காது. இது இஸ்ரயேல் தேசத்தை ஒரு பெண்ணாக குறிப்பிடுகிறது. அந்தப்பெண் தன் கர்த்தராகிய கணவனைக் கைவிட்டு விட்டு பூமியின் இராஜாக்களை சிநேகிக்கிறதாகக் காட்டுகிறது. மறக்கப்பட்ட நிலைமைக்குச் செல்லுகிறதாகக் குறிப்பிடப்பட்டுள்ள இது மரணத்தைக் குறிப்பிடுகிறது. மரண நிலை, மறக்கப்பட்ட நிலை இவைகள் இரண்டும் சத்திய கொள்கைகளையும், கர்த்தரையும் விசுவாசமாகிய நீதியின் நிலைமையையும் மறுதலிக்கிற நிலைமையையே காட்டுகிறது.

*"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால், அவன் பாதாளத்தில்(சியோல், மறதிநிலை) இறங்குகிற நாளிலே புலம்பலை வருவித்தேன்... அவன் விழுகிற சத்தத்தினால் ஜாதிகளை அதிரப் பண்ணினேன். அப்பொழுது பூமியின் தாழ்விடங்களில் (பாதாளம், மறதிநிலை)... பட்டயத்தால்*

*வெட்டுண்டவர்களண்டையிலே பாதாளத்தில் (சியோல், மறதிநிலை) இறங்கினார்கள்." - எசேக். 31:15-17*

பாபிலோனின் வீழ்ச்சியைப் பற்றி தேவன் தீர்க்கதரிசியின் மூலமாக உருவக மொழியில் எடுத்துரைக்கின்றார். இதுவரை பார்த்தபடி பாபிலோனைக் குறித்து சொன்ன தீர்க்கதரிசனங்களிலெல்லாம் சில சொல்லர்த்தமாக நிறைவேறித் தீர்ந்துவிட்டன. ஆனாலும் இன்னும் இரகசிய பாபிலோனை முற்றிலும் அழிக்கப்படும் வரையுள்ள சில தீர்க்கதரிசனங்கள் நிறைவேற வேண்டியிருக்கிறது. பூர்வீக பராக்கிரமமான பாபிலோன் மேதியர்களாலும் பெர்சியர்களாலும் வெல்லப்பட்டது. அதனால் பாபிலோன் தேசம் முழுமையாக மரண நிலைக்குள் அதாவது மறக்கப்பட்ட நிலைமைக்குள்ளாயிற்று. அதைப் போலவே இரகசிய பாபிலோனும் முழுமையாக வீழ்ச்சியடையும்.

*"பராக்கிரமசாலிகளில் வல்லவர்களும், அவனுக்குத் துணை நின்றவர்களும், பாதாளத்தின் (சியோல், மறதிநிலை) நடுவிலிருந்து அவனோடே பேசுவார்கள்." - எசே. 32:21.*

இங்கே எகிப்து மறக்கப்பட்ட நிலைக்கு கடந்து போகிறது. எகிப்து வீழ்ச்சியடையுமுன்னரே அநேக பராக்கிரமசாலிகளின் தேசமும் மறக்கப்பட்டநிலைக்குப் போய்விட்டன. இங்கே எகிப்து தனது வீழ்ச்சியைப் பற்றி தானே கூறுவது போலுள்ளது. வரலாறு தான் கற்றுக் கொடுத்த பாடங்களை திரும்பவும் நினைவு படுத்துகிறது.

*"…..பராக்கிரமசாலிகளுக்குக் கெடியுண்டாக்குகிறவர்களாயிருந்தும், அவர்கள் விருத்த சேதனமில்லாதவர்களாய் விழுந்து, தங்கள் யுத்த ஆயுதங்களோடு பாதாளத்திலிறங்கின." (சியோல், மறதிநிலை) - எசே. 32:27*

மேசேக், தூபால் ஆகியோரின் அழிவைக் குறித்து தீர்க்கதரிசி முன்னறிவித்தார். அவர்கள் தங்கள் போராயுதங்களோடு எவ்வாறு பாதாளத்தில் இறங்கியிருக்க முடியும். போராயுதங்கள் அவற்றின் பணிகள் மறந்தொழிக்க வேண்டிய நிலையைச் சுட்டிக் காட்டும். இம்மானுயேல் தேவ இராஜ்யத்தை துவக்கியிருக்கும்போது பூமியின் மக்களெல்லாம் அந்த ஆசீர்வாதமான இராஜ்யத்திற்குக் கொண்டு வரப்படும்போது இவர்களே புதுப்பிக்கப்படாமல் நித்திய அழிவிற்கு

போய் விடுவார்கள் என அறிந்து நம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். "அவர் பூமியின் கடைமுனை மட்டும் யுத்தங்களை ஓயப் பண்ணுகிறார்" (சங். 46:9) என்பதே மகிமையின் வாக்குத் தத்தங்களாகும்.

"அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்." ஓசியா 13:14

சியோல் என்பது சித்திரவதைக்குள்ளாக்கும் ஓர் இடமன்று என்பதை இதுவரை புரிந்து கொள்ளாதவர்கள் கூட இந்த வசனத்தைப் படித்தார்களானால் அவர்கள் உண்மையை உணர்ந்து தெளிவடைவார்கள். அதோடு மட்டுமன்று கர்த்தர் சியோல் என்கிற பாதாளம் முற்றிலும் அழிக்கப்படும் என்று சொல்லியிருப்பதன் மூலம் அப்படிப்பட்டவர்கள் (நரக போதனையாளர்கள்) எரிநரகமில்லை, சித்திரவதையுமில்லை எனப் புரிந்து கொள்வதால் ஆறுதலடைவார்கள். இதுவரை கேட்டும் கண்டும் நரகத்தை நம்புகிறவர்கள் இனி மேலாவது நித்திய நித்தியமாக இராதபடி பாதாளம் அழிக்கப்படும் என்ற உண்மையைப் புரிந்து கொள்வார்களாக. ஏனெனில் தேவன்தாமே பாதாளம் அழியக்கடவது என்று கட்டளையிட்டார்.

சத்தியத்தின் அடிப்படையில்இந்த செய்திகளெல்லாம் எவ்வளவு எளிமையாயும் நேர்த்தியாயும் அழகாயும் இருக்கின்றன. நமது அருமையான மீட்பரால் அதற்குரிய ஈடுபலி செலுத்தப்பட்டாயிற்று. ஆனாலும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முழுவதும் தெரிந்து கொள்ளப்பட்டு, அவர்களுடைய மணவாளனாலேயே கர்த்தரோடு மகிமைப் படுத்தப்படும் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. அதன் பிறகு மனுக்குலம் முழுவதும் சியோல் என்ற பாதாளத்தி-ருந்தும் மறக்கடிக்கப்பட்ட நிலைமையிலிருந்தும் மீட்டுக்கொள்ளப்பட்டு விடுதலை யடைவார்கள். பிரதான அல்லது முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பாக்கியவான்களாகிய மணவாட்டி உயிர்த்தெழுந்தவுடன்

*அப்போஸ்தலர்கள் சொன்ன வார்த்தை முற்றிலுமாக நிறைவேறும். அந்த வார்த்தை: "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" - 1 கொரி. **15:54,55***

*ஆயிர வருட அரசாட்சியின்போதுதான், மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்ற வார்த்தை நிறைவேறும். மரணம் எப்படி படிப்படியாக மனுக்குலத்தை விழுங்கியதோ, அதேபோல் மரணம் படிப்படியாக விழுங்கப்பட்டுப்போகும். இப்போது மனுக்குலம் முழுவதும் மரணத் தீர்ப்புக் குள்ளாகியிருப்பதால், பாதாளம் அல்லது மறக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இவைகளெல்லாம் படிப்படியாக முழுவதும் நீக்கப்பட்டு போய்விடும். ஏனெனில் மீட்பராலே மனுக்குலம் முழுவதும் மரணத்திலிருந்து மீட்கப்பட்டது. புதிய உடன்படிக்கையின்படி, புதிய நிலைமைகளின்படி, கொடுக்கப்பட்ட ஏராளமான வாக்குறுதிகளின்படி எவரும் மரிக்க மாட்டார்கள். ஆனால் வேண்டுமென்றே மூர்க்கத் தனத்தை விடாமல் பற்றிக் கொண்டு திருந்த மாட்டேன் என்பவர்கள் மரித்தே தீருவார்கள். இதைத்தான் இரண்டாம் மரணம் என்கிறது வேதம். அந்த மரணத்துக்குப்பின் எந்த விமோசனமுமில்லை.*

*"அவர்கள் பாதாள பரியந்தம் (சியோல், மறதிநிலை) தோண்டிப் பதுங்கிக் கொண்டாலும், என் கை அவ்விடத்தி-ருந்து அவர்களைப் பிடித்துக் கொண்டுவரும்." - ஆமோஸ் **9:2***

*தேவன் மனுக்குலத்தின் மீதான தனது வல்லமையையும் அதிகாரத்தையும் குறிப்பாக இஸ்ரயேல் ஜனங்களுக்கான உடன்படிக்கையின்படி அவர்களை ஆசீர்வதித்தலும் ஆகிய தகவல்களை உயர்ந்த உருவக மொழியில் கூறுகின்றார். இஸ்ரயேலில், தனிப்பட்டவர்களை மட்டும் அல்ல அந்த தேசம் முழுவதுமாக அவர் திட்டத்திற்கு இணங்காதவர்கள் அழிக்கப்பட்டுப் போவார்கள். அவருடைய எச்சரிக்கைக்குக் கீழ்ப்படிந்தால், மனம் மாறினால் பாதாளத்தி-ருந்து மீட்கப்பட்டு, கர்த்தரால் மீட்கப்பட்ட*

ஜனங்களாயிருப்பார்கள். தேவனுடைய எச்சரிப்பைக் கேட்காததால் பூமியின் எல்லைகளுக்கெல்லாம் சிதறடிக்கப் பட்டார்கள். அக்காலத்தில் தீர்க்கதரிசி ஆமோஸ் மூலமாக முன்னுரைக்கப்பட்ட செய்தி, அவருடைய வாக்குத்தத்தம் இன்று நிறைவேறுகிறது. "அந்நாளிலே (ஆயிர வருட அரசாட்சி) விழுந்து போன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து... என் ஜனமாகிய இஸ்ரயே-ன் சிறையிருப்பைத் திருப்புவேன்... நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (ஆமோஸ் 9:11-15) நிரந்தரமான சித்திரவதைக்கு செல்லும் வழியை தங்களுக்குத் தாங்களே யாரும் தோண்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் இஸ்ரயேல் தேசமோ தங்களுக்கு குழியை வெட்டிக் கொண்டு பாதாளமாகிய மறதி நிலைக்குச் சென்றார்கள். இருந்தாலும் தேவன் அதை தடை செய்வார்.

"....நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர்." - யோனா 2:2

யோனா விழுங்கிய பெரிய மீன் வயிற்றில் (நரகம் அல்லது பாதாளம்) மூன்று நாட்கள் இரவும் பகலும் இருந்தான். இவ்விடத்திலிருந்து தான் யோனா கர்த்தரை நோக்கி கூப்பிட்டான். அந்த மீன் வயிற்றிலிருந்து தான் யோனாவை மீட்டு வெளியே கொண்டு வந்தார். அதிலிருந்து அவன் மீட்கப்படாதிருந்தால் அதுவே அவனுக்கு மறக்கடிக்கப்படும் நரகம் என்றும், பாதாளம், அழிவு என்றும் சொல்லப்படும் மரண நிலையாகும்.

"அவன் மதுபானத்தினால் அக்கிரமம் செய்து அகங்காரியாகி, வீட்டிலே தரியாமல் அவன் தன் ஆத்துமாவைப் பாதாளத்தைப் போல விரிவாக்கித் திருப்தியாகாமல், மரணத்திற்குச் சமானமாய் ஜாதிகளையும் தன் வசமாகச் சேர்த்து, சகல ஜனங்களையும் தன்னிடமாகக் கூட்டிக் கொண்டாலும்..." ஆபகூக் 2:5

இங்கே அடுத்த தேசத்தை ஆக்கிரமித்துக் கொள்ளக்கூடிய பேராசையுடைய நாட்டைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. இது தற்காலத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் சில வளர்ச்சியில்லாத நாடுகளை அடிமைப்படுத்த, பலவிதமான கட்டுப்பாடு, தடைகளை விதித்து

*ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருப்பதை வெகு பொருத்தமாக எடுத்துரைக்கிறது. அல்லது இது பாவ மனுஷனையும் அவன் சூரியனுக்கு கீழேயுள்ள சகல தேசங்களிலிருந்தும் வருவாயைப் பெருக்கிக் கொள்ள எடுத்துக் கொள்ளும் பேராசையையும் எடுத்துக் காண்பிக்கிறது. எது எவ்வாறிருப்பினும் பேராசை மரணத்தைப் போல இருந்து அதனால் எவ்வளவு செல்வத்தையும் அபகரித்தாலும் திருப்தியடையாத நிலையையே இது காண்பிக்கிறது.*

## புதிய ஏற்பாட்டில் காணப்படும் "ஹேதேஸ்"

*புதிய ஏற்பாட்டில் கிரேக்கச் சொல்லான "ஹேதேஸ்" என்ற சொல்லுக்கு சமமான எபிரேயச் சொல் "சியோல்" ஆகும். பழைய ஏற்பாட்டு மேற்கோள்களை அப்போஸ்தலர்கள் புதிய ஏற்பாட்டில் எடுத்துக் கூறும்போது சியோல் (பாதாளம்) என்று வருகின்ற இடங்களிலெல்லாம் ஹேதேஸ் என்ற கிரேக்கச் சொல்லே எடுத்தாளப்பட்டு வருகிறது. புதிய ஏற்பாட்டில் ஹேதேஸ் என மொழி பெயர்க்கப்பட்டுள்ள சில இடங்களைக் கீழே காண்க:*

*"வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் (ஹேதேஸ், மறதிநிலை) தாழ்த்தப்படுவாய்." -மத் 11:23*

*நித்திய எரிநரகத்திற்குக் கப்பர்நகூம் தள்ளப்பட்டது உண்மையல்ல, அல்லது அது பாதாளமாகிய கல்லறைக்குச் சென்றது என்பதும் உண்மையல்ல; ஆனால் அது மறக்கப்பட்ட நிலைமைக்குள் சென்றுவிட்டது அதாவது அது முற்றிலும் அழிக்கப்பட்டது என்பதே உண்மை.*

*"நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் (ஹேதேஸ், மறதிநிலை) வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை." - மத். 16:18*

*அப்.பேதுரு கர்த்தராகிய இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும் மேசியா, அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும் அறிக்கையிட்டார். முழு திருச்சபையும் கற்பாறையிலே கட்டப்பட்டதுதான். அது அசையாமல் நிலை நிற்கும் என்பது உண்மை. நாம் இரட்சிக்கப்பட ஜீவனுள்ள கல்லாகிய இயேசுவையே அல்லாமல் வேறு எந்தவித நாமமும் நமக்குக்*

*கொடுக்கப்படவில்லை. நமது கர்த்தர் பேதுருவை ஜீவனுள்ள கல்லாகக் குறிப்பிடுகின்றார். அதுபோலவே பேதுருவும் தேவனிடத்தில் உடன்படிக்கை செய்து கொண்ட யாவரும் ஜீவனுள்ள கற்களாக இயேசு கிறிஸ்து என்னும் அஸ்திபாரக் கல்லோடு இணைந்து இசைவாகக் கட்டப்பட்டு வருகிறார்கள் என்கிறார். (1 பேது 2:5) இவர்கள் ஆவியினால் தேவன் வாசம் செய்வதற்கேற்ற மாளிகையாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறார்கள். அவர் குடியிருக்க தகுதியுள்ள மகிமையுள்ள வாசஸ்தலமாக அது தயாராகி வருகிறது. இதிலிருந்து பூமியின் குடிகளையெல்லாம் அவர் ஆசீர்வதிப்பார். இதுவுமல்லாமல் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளானவர்கள் யாவரையும் வருங்கால ஆலயத்திற்குரியவர்களாகச் சேர்த்துக் கொள்கிறார். அப்படிப்பட்டவர்களைத் தற்காலிகமாக மரணத்திற்கு ஒப்புவிப்பதை தேவன் அனுமதிக்கிறார். அதனால் மற்றவர்களைப் போலவே இவர்களும் மரணத்தில் மறதி நிலைமைக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்களுக்கு தைரியம் அளிக்கவே மரணம் அவர்களை மேற்கொள்வதில்லை என்று உறுதியளிக்கின்றார். எனவே மரணத்தின் வாயில் எப்பொழுதுமே அவர்களுக்கு மூடப்பட்டிருப்பதில்லை. பிதாவாகிய தேவனின் வல்லமையினால் கர்த்தராகிய கிறிஸ்து, பாதாளம், மரணம் ஆகியவற்றின் வல்லடியிலிருந்து அவற்றை நொறுக்கி வீழ்த்திவிட்டு உயிர்த்தெழுந்தார். அதைப்போலவே அவருடைய திருச்சபையாரும் மரணமாகிய மறக்கப்பட்ட நிலையிலிருந்து கிறிஸ்துவின் சாயலாக "முதலாம் உயிர்த்தெழுதலில்" பங்கு பெறுவார்கள். இது வேதாகமத்தில் எல்லா வசனங்களோடும் சாட்சி பகர்கிறது. இதற்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை விளக்க முற்பட்டால் அது ஒரு பொருளையும் தராது.*

*"வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள (ஹேதேஸ், மறதிநிலை) பரியந்தம் தாழ்த்தப்படுவாய்." - லூக். 10:15*

*கப்பர்நகூம் பட்டணத்தில் இயேசு சில காலம் தங்கியிருந்ததினால், அது கிறிஸ்துவின் போதனைகளை கேட்கும் பாக்கியத்தையும் அவர் செய்த அற்புதங்களைக் காணும் பாக்கியத்தையும் பெற்றிருந்தது. இந்தப் பெருமைகளால் உயர்வு நவிற்சியாக, "வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர் நகூமே" என்று*

*சொல்லப்படுகிறது. கிறிஸ்து அவர்கள் மத்தியிலே வாசம் பண்ணியிருந்ததை சரியான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ளத் தவறியதினால், இந்தப் பட்டணம் எவ்வளவாய் உயர்த்தப்பட்டதோ அவ்வளவாய் தாழ்த்தப்படும் என்றார். அதனால் அந்தப் பட்டணம் முழுவதும் மறதி நிலையான மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படும் என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.*

*“பாதாளத்திலே (ஹேதேஸ், மறதிநிலை) அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து...” -லூக். 16:23*

*வேதாகமத்திலுள்ள இந்த ஒரு பகுதி மட்டுமே பாதாளத்தில் (ஹேதேஸ் அல்லது சியோல்) சந்தோஷம், சித்திரவதைப்படுகிற சிந்தனை காணப்படுகிறது. பாதாளத்தில் கல்வியும், அறிவும், வித்தையும், உணர்வும் இல்லையே என்று மற்ற எல்லா இடங்களிலும் சொல்-யிருக்க இதற்கு நேர்மாறாக இந்த ஒரு இடத்தில் வேதனை என்ற சொல் வந்திருப்பதால் இதனை ஒரு உவமை என்று விளங்கிக்கொள்ளலாம். இன்னொரு இடத்தில் இந்த உவமையை விளக்கும்படியாக ஐசுவரிய நிலையிலிருப்பது யூததேசம் என்றும் அவர்கள் தீர்க்கதரிசனப்படி சித்திரவதைக்குள்ளாக வேண்டும் என்றும் சித்தரிக்கின்றார். இஸ்ரேல் தேசம் முழுவதும் மரணத்திற்கு ஒப்பாக மறக்கப்பட்ட நிலைமைக்குச் சென்றது என்பது உண்மையே. இஸ்ரயேலர்கள் பூமியின் எல்லா தேசங்களுக்குள்ளும் சிதறடிக்கப்பட்டனர். சிதறடிக்கப்பட்ட தேசங்களில் சித்ரவதைக்குள்ளானார்கள். அவர்கள் தங்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளாததினால் இந்த சாபத்திற்குள்ளானார்கள். மீட்கிறவர் சீயோனி-ருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்கும் வரை இஸ்ரயேலர்களின் உபத்திரவங்கள் தொடரும். அதன் பின்பு தெய்வீக உடன்படிக்கையின்படி தேவ கிருபை பெற்று மீட்கப்படுவார்கள். - ரோம. 11:26-29*

*“என் ஆத்துமாவை பாதாளத்தில் (ஹேதேஸ், மறதிநிலை) விடீர்.” - அப்.2:27*

*இந்த மேற்கொள் சங்கீத புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. தற்போதைய பிரச்சினை என்னவென்றால் ஆத்துமா,சரீரம் - எது பாதாளம், சியோல், ஹேதேஸ் ஆகியவற்றிற்கு செல்கிறது என்பதை*

ஆராய்ந்தறிய வேண்டும். இந்த வசனத்தின்படி நமது கர்த்தராகிய இயேசுவின் ஆத்துமா ஹேதேஸ், சியோலுக்குச் சென்றது என்பது திட்டவட்டமாக போதிக்கப்படுகிறது. எனவே பாதாளத்திலிருந்து அவருடைய ஆத்துமா உயிர்த்தெழுந்து மீட்டுக் கொள்ளப்பட்டது. இவ்விதமாகவே தாவீதின் ஆத்துமாவும் பாதாளத்திற்குச் சென்றது. ஆனால் இன்னும் உயிர்த்தெழுப்பப்பட்டு மீட்கப்படவில்லை. முதலாவதாக உயிர்த்தெழுப்பப்படும் இயேசுவின் சரீரமாகிய திருச்சபையாரின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னரே தாவீதின் ஆத்துமா உயிர்த்தெழுப்பப்படும். அப். 2:29, 34; எபி. 11:32, 39, 40

"அவன் (தாவீது), கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே (ஹேதேஸ், மறதிநிலை) விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான்." - அப். 2:31

நாம் ஏற்கனவே பார்த்த சத்தியத்தை இதுமேலும் உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! (ஹேதேஸ், மறதிநிலை) உன் ஜெயம் எங்கே?" - 1 கொரி. 15:55

அப்போஸ்தலர் தனது வாதத்தை உறுதிப்படுத்த பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு வசனத்தை மேற்கோளாக எடுத்துக் காண்பிக்கின்றார். மரித்தோருக்குள்ள ஒரே நம்பிக்கை உயிர்த்தெழுதலாகும். அதாவது வெறும் சரீர உயிர்த்தெழுதல் அல்ல. அவர் தெளிவாக கூறுகின்றார். விதையாக புதைக்கப்பட்ட மேனி அல்ல; புதிய மேனியாக உயிர்த்தெழும் என்றார். 1 கொரி 15:37-38 காண்க. உயிர்த்தெழலின் நம்பிக்கை, ஆத்துமாவுக்கேயல்லாமல் உடலுக்கல்ல. தேவன் எவ்வித மேனியைக் கொடுக்க விரும்புகிறாரோ அதையே உயிர்த்தெழுதலின்போது கொடுப்பார். "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால்.... உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்.. கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே." (1கொரி. 15:16-18) நித்திரைக்கு செல்லுகிற சரீரம் உயிர்த்தெழுப்பப்படும். மரண அழிவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட சரீரம் அழிந்துவிடும்.

*"மரித்தேன், ஆனாலும், இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய (ஹேதேஸ், மறதிநிலை) திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்." -வெளி 1:18*

இந்த வசனம் தேவபிள்ளைகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் தருகிறது. எனவே நரகம், பாதாளம் என்ற சொற்றொடர்கள் சித்ரவதை, உபாதை என்ற பொருளைத் தராது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். இந்த வார்த்தைகள் கர்த்தருடைய பிள்ளைகளும் மறதிநிலைக்குச் செல்லுகின்றனர் என்பதைக் காட்டுகிறது. மற்ற அநேகரும் அதே இடத்துக்கு செல்லுகின்றனர். ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மறக்கடிக்கப்பட்ட மரண நிலையி-ருந்து பாதாளம் திறக்கப்பட்டு உயிர்த்தெழுதலின் புதிய மேனியோடு வெளிவரும் நம்பிக்கையும் பிறக்கிறது. நமது மாபெரும் உலக இரட்சகராகிய கிறிஸ்து தம்முடையவர்களை மரண சிறையிலிருந்து மீட்டுக் கொண்டு வருவார். இதனாலேயே இயேசுகிறிஸ்து மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களையுடைவராயிருக்கிறேன் என்றார். அதாவது திறக்கவும் மூடவும் சகல அதிகாரமும், வல்லமையும் அவரது கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்து தனது முதலாம் வருகையின்போது இது சம்பந்தமாக ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திலிருந்து தம்மைப்பற்றி சொல்லப்பட்ட வார்த்தைகளை எடுத்துக் கூறினார். அந்த வார்த்தைகள்: *"...சிறுமைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் கூறவும்... கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்." (ஏசாயா 61:1-2; லூக் 4:18)* மரண சிறைப்பட்டு மறக்கப்பட்ட நிலையிலிருப்பவரும் கூட உயிர்த்தெழுந்து வருவார்கள் என்ற மகத்தான நம்பிக்கையே நற்செய்தியாகும். "மரணத்திற்கு அதிபதியாகிய சாத்தானின்" பிடியிலிருந்து விடுதலை பெற்று சுதந்திரத்தை சுவாசிக்கச் செய்வதே தேவனுடைய நல்ல செய்தியாகும். சரியான இந்த வேதாகமப் பார்வையில் பார்த்தால் வாக்கியங்கள் எவ்வளவு அழமான கருத்தோவியமாக காட்சி தருகின்றன. அறியாமையாகிய இருளில்

இவ்வசனங்களைப் படித்தால் குழப்பமே மிஞ்சும். அறியாமை இருளில் நிலைவரமில்லாத கொள்கைகளால் எதையுமே சரியாகப் புரிந்து கொள்ள இயலாது.

"நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் (ஹேதேஸ், மறதிநிலை) அவன் பின் சென்றது. பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற் பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது." - வெளி. 6:8

இந்த வேதவசனத்தை நரக போதனை சிந்தனையோடு கற்பனை பண்ணிப் பார்த்தால், ஹேதேஸ் என்று சொல்லக்கூடிய ஐந்து ஆயிரம் கோடி பேரை சித்ரவதை செய்யக்கூடிய இடம் எவ்வளவு பெரிய பிரதேசமாயிருக்க வேண்டும். இது கற்பனைக்கெட்டாத கொடுங்கோன்மையாகும். அவ்வளவு பெரிய பரந்த வெளியை குதிரையில் ஏறி வலம் வரமுடியாது. இந்த உவமை பொருந்தாத உவமையாகும். மரித்தல், மரண நிலைமை, முற்றிலும் மறக்கடிக்கப்பட்ட நிலைமை, அழிவு, சுயநினைவற்ற நிலை ஆகிய அடையாள மொழியை காரண காரியத்தோடு பொருத்திப் பார்த்தால் முழுவதும் ஏற்புடைய கருத்தே.இந்த அடையாள மொழிக்கு எந்த விளக்கமான விரிவுரையும் கூறாமல் மரண நிலைமை, முற்றிலும் அழிக்கப்படுகிற அல்லது மறந்து விடுகிற நிலைமை என்ற பொருள் கொள்வதோடு திருப்தி கொள்ள வேண்டியதுதான்.

"...மரணமும் பாதாளமும் (ஹேதேஸ், மறதிநிலை) தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின் படியே நியாயத் தீர்ப்படைந்தார்கள்." - வெளி 20:13

ஏதேனில் முதல் நியாயத் தீர்ப்பின்போது, பாவத்தின் சம்பளமாகிய மரண தண்டனை எல்லா மனிதருக்கும் கொடுக்கப் பட்டது. ஏதேனில் நியாயத் தீர்ப்பிற்குப்பின் சுமார் 5000 கோடி பேர் சியோல், மறதிநிலை, ஹேதேஸ் ஆகிய இடத்திற்கு சென்றிருப்பார்கள். அதே மரணத் தீர்ப்பின்படி இப்போது உயிரோடு இருக்கிறவர்களாகக் கருதப்படுகிற ஆயிரங்களான கோடிக்கணக்கான

*மக்கள் உயிரோடிருப்பதாக எண்ணிக் கொண்டாலும் அவர்களில் பத்துக்கு ஒன்பதுபேர் மரித்தவர்களாகவே இருக்கின்றனர். ஆனாலும் மரணத் தீர்ப்புக்கு பரிகாரமாக கல்வாரியில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஈடுபலி செலுத்தியபின், எல்லா மனுகுல குடும்பத்திற்கும் திரும்பவும் ஒரு கிருபையான வாய்ப்பு நல்கப்படுகிறது. இந்த யுகத்தில் திரளான மக்களின் மிகச் சொற்பமான பேரே தெரிந்து கொள்ளப்பட்ட திருச்சபையாராவார்கள். இதன் பொருள் யாதெனில் முன்னர் கூறப்பட்ட அந்த மரணத் தீர்ப்பை திரும்பப் பெற்றுக் கொண்டு மறுபடியும் ஒரு புது பரிட்சை கொடுக்கப்படும் என்பதாகும். அந்த கடைசி நியாயத் தீர்ப்பிலே அவரவர் கிரியைகளின்படி கீழ்ப்படிந்தால் ஜீவனையும், கீழ்ப்படியாவிட்டால் மரணத் தீர்ப்பையும் பெறுவர். மரணத்திற்குட்பட்டு, ஆனால் இன்னும் கல்லறைக்குச் செல்லாதவர்களும் மரித்தவர்களும் எல்லாரும் நியாயத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் கிரியைக்குரிய தகுதி அல்லது தகுதியின்மையின்படி நித்திய ஜீவனையோ அல்லது அழிவையோ பெற்றுக் கொள்வார்கள் என்று வேதம் நமக்கு காண்பிக்கிறது. ஆதலால் ஏற்கனவே சியோல், பாதாளம், மறக்கடிக்கப்பட்ட நிலைமைக்குச் சென்ற அனைவரும் திரும்பவும் சுயநினைவுக்கு வந்து நியாயத் தீர்ப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த நியாயத் தீர்ப்பின் காட்சிகள் அரங்கேறும் காலமாகிய ஆயிர வருட அரசாட்சியின் காலமே, அகில உலக மக்களையும் நியாயந் தீர்க்கும் காலப் பகுதியாகும். இதுபோலவே திருச்சபையாரை நியாயந்தீர்க்கும் காலப்பகுதி சுவிசேஷ யுக காலப்பகுதியாகும்.*

*"அப்பொழுது மரணமும் பாதாளமும் (ஹேதேஸ், மறதிநிலை) அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்." - வெளி 20:14*

*ஹேதேஸ் (பாதாளம்) என்ற சொல்லை நித்திய எரி நரகம் என்று பொருள் கொள்பவர்களுக்கு வேதத்தில் வேறு எந்த ஆதாரமும் இருக்காதது மட்டுமன்றி மாபெரும் குழப்பமே மிஞ்சும். சரியான வேதாகம நோக்கத்தோடு எல்லா வசனங்களும் ஒத்துப் போகிற சரியான தேவ பார்வையில், நோக்கினால் எல்லாம் இசைவாகத் தோன்றும். அக்கினிகடல் (கெகன்னா) முற்றிலும்*

அழிக்கப்படுவதையே குறிக்கும். அதாவது இரண்டாம் மரணம். அதில் எல்லா தீமைகளும் வேரறுக்கப்படும். நாம் எற்கனவே வெளி 20:13-ல் வெகு விளக்கமாக ஆராய்ந்தபடியே மரணமும் ஹேதேஸ் என்று கூறக்கூடிய பாதாளமும் இவ்விடத்தில் இரண்டாம் மரணத்தில் ஒழிக்கப்படுவதாக சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆதாமின் மீறுதலினாலே தற்போதுள்ள மரணத் தீர்ப்புக்குள்ளான நிலைமையே மரணம் எனவும் ஹேதேஸ் எனவும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது இப்போது ஜீவித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிற மரண நிலைமையும் முழுவதும் மரித்த நிலையிலிருக்கிற மறந்த உறக்க நிலைமையும் இப்படி சொல்லப்பட்டுள்ளது.

13-ம் வசனத்தில் சொல்லப்பட்டது போலவே மரண உறக்க நிலையிலிருக்கிற யாவரும் நியாயத் தீர்ப்புக்காக உயிர்த்தெழுப்பப் படுவார்கள். எனவே இந்த வசனத்தின்படி ஆதாமின் மரணமோ மறக்கப்பட்ட நிலையில் உறங்குகின்ற மரணமோ, ஆயிர வருட அரசாட்சிக்கு பிறகு இருக்காது என அறிகிறோம். ஏனெனில் அவைகள் மரணத்தில் விழுங்கப்படுகின்றன அல்லது இரண்டாம் மரணத்தில் இல்லாமல் போய்விடுகின்றன. எதிர்காலத்தில் ஆதாமின் பாவத்திற்காக எவரும் மரிக்கப் போவதில்லை. வருங்கால நியாயத் தீர்ப்பின்போது அதுகுறித்து பேசப்படுவதில்லை. அதற்கு பின்பு ஒரே மரணமாகிய இரண்டாம் மரணம் மட்டுமே உண்டு. மனம் திருந்தாமல் பாவம் செய்கிறவர்களுக்கே இரண்டாம் மரணம் சம்பவிக்கும். பிதாக்களின் பாவங்களை பிள்ளைகள் மீதோ பிள்ளைகளின் பாவங்கள் பிதாக்கள் மீதோ சுமத்தப் படுவது இல்லை. அந்நாட்களில் அவனவன் தன்தன் பாவத்திற்காக சாவான். “பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்.” புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரால் ஆயிர வருட அரசாட்சியில் கொடுக்கப்படும் வாய்ப்பை சரிவர பயன்படுத்திக்கொண்டு ஆதாமின் மூலம் வந்த பலவீனமான தங்கள் சுபாவத்தை மாற்றிக் கொள்ளாவிட்டால் இரண்டாம் மரணமே அவர்களின் முடிவு. ஆயிர வருட அரசாட்சியின்போது அநேகர் ஆதாமின் சுபாவத்தில் இருந்தாலும், மீட்பருடைய ஈடுபலியை விசுவாசிப்பதன் காரணமாக மன்னிப்பு பெறுவர். எனவே ஆயிர வருட அரசாட்சியின் துவக்கத்திலிருந்து உயிர்த்தெழுந்து வரும் ஒவ்வொருவருக்கும் இந்த சந்தர்ப்பமும்,

வாய்ப்பும் அளிக்கப்படும். ஆதாமின் பலவீனங்களும் அபூரண நிலைகளும் அவர்களிடத்தில் காணப்பட்டாலும், அவர்கள் மரணம் ஆதாமுக்குள்ளான மரணமாகக் கருதப்படாமல் அது இரண்டாம் மரணத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும். இவ்வளவு வாய்ப்புக்கள் கொடுத்திருந்தும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவறியது அவர்கள் வேண்டுமென்றே மனப்பூர்வமாக பாவம் செய்ததற்கே ஒப்பாகும். ஏனெனில் இது ஆதாமின் மீறுதலினால் ஏற்பட்டது அல்ல; அவர்களுடைய பாரம்பரியத்தினாலும் அல்ல, அவர்களுடைய பலவீனத்தினாலும் அல்ல.

இதுவரையில் சியோல், ஹேதேஸ் சம்பந்தமாக கூறப்பட்ட எல்லா வேதாகமக் கருத்துக்களையும் ஆராய்ந்தோம். சியோல், ஹேதேஸ் என்ற சொற்கள் மரணத்தில் மனிதர்களின் ஆத்துமா அடைகிற நிலையைக் குறித்து சொல்லப்பட்டதேயல்லாமல், அது ஒரு இடமல்ல என்று நிச்சயமாக உறுதிப்படுத்திக் கொண்டோம். இருந்தாலும் சில பகுதியில் இடத்தைக் குறிப்பிடுவதாக உவமைக்காகச் சொல்லப்பட்டிருந்தாலும் அது சொல்லர்த்தமான ஸ்தலமல்ல. அது ஒரு சிறைப்படுத்துமிடம் என்று உருவகப்படுத்தி யிருந்தாலும் அதில் சிறைப்பட்ட யாவரும் உயிர்த்தெழுத-ன் காலையில் சிறையிருப்பிலிருந்து மீண்டு வருவார்கள். அந்த ஸ்தலம் இருண்ட இடமாகவும், மயான அமைதி நிறைந்த இடமாகவும் உவமைக்காகச் சொல்லப்பட்டது. இந்த நிலைமைக்கு செல்பவர்களிடத்தில் அறிவு, கல்வி, ஞானம், ஆற்றல், சபித்தல், துதித்தல் ஆகிய எதுவும் இருக்காது. அவர்களுக்குக் கர்த்தர் ஒருவரே நம்பிக்கை. தன்னுடைய ஆத்துமாவை தியாகம் செய்து மனுக்குல ஆத்துமாக்களை இரட்சகர் மீட்டார். ஏற்ற வேளையில் அவர்கள் மறக்கப்பட்ட நிலையிலிருந்து அவர்கள் அனைவரையும் மீட்டுக் கொண்டு வருவார். சாபம், தேவ கோபாக்கினை ஆகியவைகள் நீங்கிய பின்பு அவர்களுக்கு தமக்கு விருப்பமான மேனியை, பழைய மேனியை அல்ல, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே புதிய மேனியைத் தருகிறார். ஆசீர்வாதத்தின் யுகமாக ஆயிர வருட அரசாட்சி தோன்றியவுடன் சாபங்களெல்லாம் முடிந்து போகும்.

பொதுவாக புழக்கத்திலிருக்கும் ஆங்கில வேதாகமத்தை மொழி பெயர்த்தவர்களும், மற்ற அநேக மொழி பெயர்ப்பாளர்களும்

கூட, மரணத்திற்கும் உயிர்த்தெழுதலின் வாழ்விற்கும் இடைப்பட்ட பகுதியை குறிப்பிடும் போதெல்லாம், அந்த இருண்ட காலத்தில் உண்டாயிருந்த தப்பறையான கொள்கைகளுக்கேற்ப குழப்பத்தில் எழுதி வைத்ததில் எவ்வளவும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே சத்திய வெளிச்சம் கிடைத்துக் கொண்டிருக்கும் இக்காலத்தில் கூட அப்படிப்பட்ட மொழிபெயர்ப்புகள் உண்மை சத்தியத்தை அறிந்து கொள்ள இயலாத தடைக்கற்களாயிருக்கின்றன. உண்மை சத்தியத்தை அறிந்துணர்ந்திட இப்படிப்பட்ட தடைக்கற்களை நமது பாதைகளிலிருந்து அகற்றிவிட வேண்டும். இத்தகைய தப்பறை போதகங்களையே எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தால் அவைகள் நமது வேத பாட ஆராய்ச்சிக்கு இடையூறாக அமையும். எனவே அத்தகைய பிழைகளை அடுத்த வேதபாட ஆராய்ச்சித் தொகுதியில் விளக்கமாக எடுத்துரைப்போம்.

## சின்னஞ்சிறு வெளிச்சம்

*1. திறந்த கதவில் திறந்த மனமுடன் நின்றிருந்த மங்கை கண்ணில் எங்கிருந்தோ ஒரு மெல்லிய ஒளிக்கற்றையாக வந்தது; சிறியளவிலான அந்த ஒளியின் பிரகாசம் / மிகுந்த இருளைப் பகலாக்கியது. / அந்த மகிழ்ச்சியான மகிமையின் ஒளி / வடதுருவ தாரகையைக் காட்டிலும் / உன்னதமாய் பளிச்சென மின்னியது.*

*2. மெல்லிய ஒளி மிருதுவான தடையம் / அச்சிட்டதாளில் எழுதிய / எழுத்து காட்சியை தெளிவாய் விளக்குவதாய் / விலை மதிக்கவியலாத பொக்கிஷத்தை / வெளியே கொண்டு வருவதாயிருப்பதோடு, சந்தேகங்களை அறவே ஒழித்திட்டது. / மனிதர்களை திறந்த மனதோடு, திறந்த வாயிலில் வழி நடத்துகிறது. / அதனால் இதுவரை அறியாத புதிய உண்மைகளை ஆராய இருக்கிறது.*

*3. இருளைப் போக்கிடும் அந்த இன்ப ஒளி இல்லாமை / நோய், நம்பாமை பகலை பார்க்கிலும் அதிக நேரம் இருளாயிருக்கும் நிலை / வறுமைக்கு இரையாக்கும் இருதய கனம் ஆகியவற்றை / அகற்றும் அந்த சின்னஞ்சிறு வெளிச்சம்.*

*4. சாபத்தின் பள்ளத்தாக்கில் பயணிக்கின்ற ஒவ்வெருவரும் , அவசியம் அறியவேண்டிய சத்தியம். / வழிவிலகிச் சென்று மனந்தளர்ந்து, மனமடிவான மக்களும் / சிறிய வழிகாட்டுதலிருந்தால் தப்பிப் பிழைப்போமென எண்ணுபவரும் / தாங்கள் அலைந்து திரிதலை விட்டு / ஓர் அணி நின்று நேர்வழி காண்பர்.*

*5. நாம் பிழைக்கும்வழி புரியாதபோது / அடுத்தவருக்கு உதவுவது எப்படி? / இருளில் தவிப்பதைவிட இரக்கமாகிய சிறு வெளிச்சம் உத்தமம். / பாதைதெரிய இருளில் பழுதான பாதையில் செல்லாம-ருக்க / பயன்தரும் இச்சிறு வெளிச்சம்.*

## <u>அத்தியாயம் 13</u>

# ஒப்புரவினால் உண்டாகும் நித்திய ஜீவனுக்கும் சாகாமைக்கும் உரிய நம்பிக்கை

*பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியின் மனப்பூர்வமான நம்பிக்கை-இவைகள் ரூபகாரங்கள் அல்ல-ஒப்புரவாகுதலின் வாக்குத்தத்தங்களும் புறவேலைகளும் ரூபகாரங்கள்-தனித்தன்மையும் வேற்றுமையும்-மனித ஆத்துமா சாகாமையுடையதா? அல்லது சாகாமையை பெறக்கூடிய நம்பிக்கை உண்டா? -தேவ தூதர்கள் சாகாமையுடையவர்களா? -சாத்தான் சாகாமையுடையவனா? -சுவிசேஷத்தின் மூலம் நித்திய ஜீவனும் சாகாமையும் வெளியரங்கமானது-வேதத்தில் சாகாத, சாகாமை என்ற வார்த்தைகளின் கிரேக்க மூலம்-சபையின் நம்பிக்கையும், இரட்சிக்கப் பட்ட மனுக்குலத்தின் நம்பிக்கையும் எந்த வகையில் வேறுபாடுகின்றன.*

*"மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்." - யோபு 14:14*

*"நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து … மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்." - II தீமோ 1:10*

மனிதன் இறந்தால் அதோடு அவன் ஜீவன் அழிந்துபோய் விடுகிறதில்லை என்ற தவறான கருத்து நீண்டகலாமாக இருந்து வருகிறது. தோன்றிய ஜீவன் முடிவடைவதில்லை. அது எங்கேயோ ஏதாவது ஒரு இடத்தில் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் இந்த நம்பிக்கை எப்படி, எவ்வாறு என்பதை

வரையறை செய்யவோ, விவரிக்கவோ இயலாது. சிலரிடத்தில் இந்த நம்பிக்கையே பயமாக மாறிவிடுகிறது. பலர் எதிர்காலத்தில் தங்களுக்கு ஆசீர்வாதமான வாழ்வு கிடைக்குமா என்று சந்தேகிக்கின்றனர். சிலர் தங்களுக்கு சாபம்தான் எதிர்காலத்தில் கிடைக்கும் என்ற அவநம்பிக்கையினால் பயப்படுகின்றனர். அநேகர் எதிர்காலத்தைக் குறித்து அதிகம் பயப்படுகிறவர்களாயிருக்கின்றனர். இன்னும் பலர் தங்கள் விசுவாசத்தையே அதிகமாக நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஆதாம் பாவம், சாபம், மரணத்திற்கு தீர்ப்பிடப்பட்ட பின் மனிதன் சாகவே சாவதில்லை என்ற வரைமுறை செய்யவியலாத நம்பிக்கையை முதன்முதலில் தோற்றுவித்தவன் சாத்தான் என்பதில் சந்தேகமில்லை. படிப்படியாக இறுதியில் ஸ்திரீயின் வித்து சாத்தானின் தலையை நசுக்கிவிடும். இதன்படி ஆதாமின் சந்ததியில் வந்த ஒரு சிறு கூட்டத்தார் இறுதியாக மரணத்தை வஞ்சகமாக கொண்டு வந்த சாத்தானையும், பாவம் சாபம் மரணத்தையும் பரிகரித்து வெற்றியடைவார்கள் என்பது உறுதியாகிறது. எதிர் காலத்தில் நம்பிக்கையிருக்க வேண்டும் என்பதையே தேவன் விரும்புகிறார். இந்த நம்பிக்கையில் தேவன் மனிதர்களை உற்சாகப் படுத்த, நோவா மூலமாகவும், ஏனோக்கு மூலமாகவும் தீர்க்க தரிசனமாக கூறுகிறார். ஏனோக்கு "ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்" என்று முன்னறிவித்தான்." (யூதா 15) அதன்படி ஏற்ற வேளையில் எல்லா மனிதர்களுக்கும் மீட்பு உண்டாகும் நற்செய்தியான திட்டத்தை தேவன் வகுத்துள்ளார். இந்த நற்செய்தியை தேவன் முதன்முதலாக ஆபிரகாமுக்குத் தெரிவித்தார். "உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று ஆபிரகாமுக்கு சுவிசேஷமாய் முன்னறிவிக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். இதுவே யூதர்களுக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கை ஏற்பட அடிப்படை காரணமாயிற்று. பூமியின் மக்கள் எல்லாம் மரித்தும், மரித்துக் கொண்டும் இருக்கின்றனர். அப்படி மரித்துக் கொண்டிருக்கிறவர்கள் மறுபடியும் உயிர்த்தெழுவார்கள் என்ற எதிர்கால நம்பிக்கையே வாக்குத்தத்தமாக வழங்கப்பட்டது. யூதர்கள் பல நூற்றாண்டுகளுக்கு பின்னும்

பாபிலோனிய சிறையிருப்பிலும், எல்லா தேசங்களிலும் சிதறடிக்கப்பட்ட நிலைமையிலும், இந்த தேவ வாக்குத்தத்தத்தை அதாவது தங்களுக்கும் ஒரு எதிர்காலம் நிச்சயமாக உண்டு என்ற நம்பிக்கையை தங்களோடே வளர்த்துக் கொண்டு வந்திருந்தார்கள்.

எதிர்காலத்தைக் குறித்த இந்த நம்பிக்கை, யூதர்களுடைய கொள்கையாலோ, சிந்தனையாலோ மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லா மனிதர்களுக்கும் எதிர்காலத்தைக் குறித்த ஒரு நம்பிக்கை சுபாவப்படியே இருந்ததினாலோ அல்லது இவ்விரு காரணங்களினாலோ வந்தது. உலகம் எதிர்காலத்தை நம்புகிறது, அந்த எதிர்காலம் நித்திய நித்தியமாயிருக்கும் என்பதே அந்த நம்பிக்கை. இந்த எதிர்ப்பார்ப்பினாலே "சர்வ சிருஷ்டியும் அந்த எதிர்காலத்திற்காக ஏங்கி ஏகமாய் தவிக்கின்றது" என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். ஆனால் அப்படிப்பட்ட நம்பிக்கையே எதிர்கால வாழ்வுக்குரிய கொள்கையை நிரூபிப்பதாகாது. பழைய ஏற்பாட்டு காலத்தில் யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத் தத்தங்களெல்லாம் இந்த எதிர்கால நம்பிக்கைக்கு சரியான அடித்தளமாக அமையாது. இந்தக் கருத்தைக் குறித்து சரியான கொள்கை ரீதியில் மறையியலில் விரிவாகச் சொல்லப்படவில்லை.

ஆனால் புதிய ஏற்பாட்டில் நமது கர்த்தர் உரைத்த வாக்குத் தத்தங்களே அதற்கு அடிப்படையாக அமைகிறது. அதனைத் தொடர்ந்து அப்போஸ்தலர்களுடைய வாக்குகள் எதிர்கால வாழ்வின் நம்பிக்கையை தெளிவாகவும் உறுதியாகவும் விளக்குகின்றன. பழங்காலத்தில் இருந்த அரைகுறையான நம்பிக்கைக்கு பதிலாக புதிய திட்டமும், தெளிவான நித்திய ஜீவனுக்குரிய வழிகளும் விளக்கமாய் கூறப்பட்டுள்ளன. அவர்களுடைய வார்த்தைகளின்படி எதிர்காலத்தில் ஒரு நம்பிக்கை உண்டு என்பது மட்டுமல்ல, சகலருக்கும் அந்த நம்பிக்கையின் வாய்ப்பு வழங்கப்படும் என்று விளங்கிக் கொள்கிறோம். சத்தியத்தின்படி அந்த நம்பிக்கையின் தத்துவம் நித்திய ஜீவனை பெறுவது எப்படி? அதை காத்துக் கொள்வது எப்படி? என்ற எல்லா விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

பலர் இதன் விளக்கங்களை முறைப்படி அறிய

முயற்சிக்காததால், "விசுவாசத்தில் பலவீனர்களாகின்றனர்." இந்த தத்துவம் தான், என்ன என்பதை நாம் காண்போமாக! அவ்வாறு காணும்போதுதான் பிதாவாகிய தேவன் எவ்வளவு ஞானமாக மனுக்குலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் எதிர்கால வாழ்வை திட்டமிட்டிருக்கிறார் என்பது புரியும். அவ்வாறு புரிந்து கொள்வதால் முன் எப்போதைக் காட்டிலும் இப்போது நித்திய ஜீவனின் நிச்சயத்தை அடைகிறோம்.

புதிய ஏற்பாட்டை அஸ்திபாரமாகக் கொண்டு தொடங்கிய நித்திய ஜீவனளிக்கும் திட்டம் யாவருக்கும் உறுதிப்படுத்துகிறது. நித்திய ஜீவனைக் குறித்து நம்பிக்கை தரக்கூடிய எந்த திறமையோ தகுதியோ நம்மிடத்தில் இல்லை என்ற போதனையை அறியும்போது நாம் மிகுந்த வியப்படைகிறோம். மனுக்குலத் தகப்பனாகிய ஆதாமின் வீழ்ச்சியினால் மனுக்குலமே ஜீவனை இழந்தது. ஆதாம் பூரண மனிதனாகப் படைக்கப்பட்டான்.அவன் சாவு இன்றி என்றைக்கும் ஜீவிக்கிறவனாக சிருஷ்டிக்கப்பட்டான். ஆனால் ஆதாமின் மீறுதலினாலே அவனும் அவனுக்குப் பிறந்த சந்ததியினரும் மரிக்க வேண்டிய நிலைக்குள்ளாயினர். ஆதாமின் சந்ததியினர் சாவை ஆதாமினால் சுதந்தரித்துக் கொண்டனர். தேவனைப் போலவே தேவனுடைய பிரமாணங்களும் பரிபூரணமானவை. அதுபோல அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாமும் பாவம் செய்யும் வரையில் பரிபூரணமாகவே இருந்தான். ஏனெனில் "தேவனுடைய கிரியைகள் பரிபூரணமானவைகள்" என எழுதப்பட்டுள்ளது. எனவே தேவன் தனது பிரமாண விதிகளின்படி பரிபூரணமானவைகளை அங்கீகரிக்கின்றார். அபூரண மானவைகளை அழிவுக்கு தீர்ப்பிடுகின்றார். எனவே ஆதாமின் சந்ததி "பாவத்தில் கர்ப்பம் தரித்து துர்க்குணத்தில் உருவானதால்" நித்திய ஜீவனின் நம்பிக்கை எதிர்காலத்தில் ஆதாமின் சந்ததிக்கு இல்லாமல் போய்விட்டது. புதிய எற்பாட்டில் மட்டுமே இந்த நித்திய ஜீவனுக்குரிய நிபந்தனைகள் சொல்லப்படுவதால் அதை "நற்செய்தி" என நவில்கின்றோம். மனுக்குல வீழ்ச்சியி-ருந்து பூரண நிலைக்கு, தேவ தயவைப் பெற்று நித்திய ஜீவனை அடையும் வழியை, ஆதாமுக்கும், அவன் சந்ததி எல்லாருக்கும் இயேசு கிறிஸ்து திறந்தார்.

இந்த நம்பிக்கை பிதாவாகிய தேவனோடு மனுக்குலம் ஒப்புரவாகுவதில் அடங்கியிருக்கிறது. ஒப்புரவான பின் நித்திய ஜீவனுக்குரிய புதிய நம்பிக்கை உண்டாகிறது. இந்தக் கருத்தைப் பற்றிய முக்கிய குறிப்புகளை கீழே காண்போம்.

1. "கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்."

2. "நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டார்." "எல்லாரையும் மீட்கும் பொருளாகத்தம்மை ஒப்புக்கொடுத்தார்." ஆதாமின் மீறுதலினாலே அவன் சந்ததியும் மரண சாபத்திற்குள்ளானது. இயல்பாகவே அந்த சந்ததியார் ஆதாமின் சாபத் தீர்ப்பில் பங்கு பெற்றனர். "கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினால் அனைவரும் மீட்கப்பட்டனர்." (1 பேது. 1:19)

தேவனுடைய இந்த தாராளமான சலுகை எல்லாருக்கும் உரியதாயிருந்தாலும், சில நிபந்தனைளின்படி செய்கிறவர்களுக்கே நித்திய ஜீவன் அளிக்கப்படும். அந்த நிபந்தனைகளாவன:

1. அவர்கள் கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். 2. அவர்கள் பாவத்திற்கு விலகினவர்களாய் தேவனுக்கும், தேவநீதிக்கும் உட்பட்டு வாழ்கிறவர்களாயிருக்க வேண்டும்.

எனவே "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." (ரோம. 6:23) இந்த பொருள்பற்றி கீழ்க்காணும் வேத வசனங்கள் தெளிவாக சாட்சியிடுகின்றன.

"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், (தேவனுடைய கொடையாக என்றென்றும் வாழும் உரிமையும், சலுகையும்) தேவனுடைய குமாரன் இல்லாதவன் (பரிபூரண) ஜீவன் இல்லாதவன்." 1 யோவா. 5:12

பிதாவாகிய தேவனால் இயேசு கிறிஸ்து "ஜீவன் அளிப்பவர்" என்று நியமனம் செய்யப்பட்டார். அவரைத் தவிர வேறுயாரிடமிருந்தும் நித்திய ஜீவனைப்பெற இயலாது. விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துகிற தருணத்தை நமக்கு கொண்டுவருகிற சத்தியம், நித்திய ஜீவனைப்பற்றிக்

கொள்கிற சத்தியம் "ஜீவத்தண்ணீர்" என்றும் "ஜீவ அப்பம்" என்றும் அழைக்கப்படுகிறது. யோவா. 4:14; 6:40-54

நித்திய ஜீவன் என்ற பரிசு மெய்யாகவே தேவதிட்டத்தைத்தேடி அறிந்து, பரிசுத்தமான ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிப்பவர்களுக்கு கொடுக்கப்படும். அவர்கள் நித்திய ஜீவனை வெகுமதியின் பலனாக அறுவடை செய்வார்கள். - ரோம. 6:23; கலா. 6:8

நித்திய ஜீவனைப் பெற நாம் கர்த்தருடைய மந்தையில் ஒரு ஆடாகச் சேர்ந்து அவருடைய குரலுக்கு செவிசாய்க்க வேண்டும். மேய்ப்பனுடைய அறிவுரைகளின்படி பின் செல்ல வேண்டும். - யோவா. 10:26-28; 17:2-3

நித்திய ஜீவனாகிய பரிசு யார் மீதும் பலவந்தமாகத் திணிக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக அதை விரும்பி, நாடி தேடுகிறவர்களுக்கு வழங்கப்படுகிறது. நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ள விரும்புகிற யாவரும் தங்கள் முழு கவனத்தையும் அதன் மீது வைத்து அதை விடாமல் பற்றிக் கொண்டிருப்பார்கள். 1 தீமோ. 6:12,19

தேவன் நமக்கு இப்போது தருவது உண்மையான ஜீவனைக் காட்டிலும் ஒரு நம்பிக்கையே. அந்த நம்பிக்கையை இறுதியில் உறுதியாகப் பெற்றுக் கொள்வோம். கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொள்பவர்களை நீதியின்படி நீதிமான்களாக்கியவரும் நியாயம் விசாரிப்பதற்கு வழியை ஏற்படுத்தியவரும் தேவனே.

நாம் ஜீவன் பெறுவதற்காகவே, தேவ கிருபையினால் கிறிஸ்து தம்முடைய ஜீவனை தியாகபலியாக ஒப்புக் கொடுத்தார். அவர் நமக்கு பிரதான ஆசாரியரானார். அதனாலே "தமக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பைப் பெற காரணரானார்." (எபி. 5:9) இதுவே அவர் நித்திய ஜீவனை அளிப்பதாகக் கூறிய வாக்குத்தத்தமாகும். - 1 யோவா 2:25

"தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." 1 யோவா. 5:11,12

இந்த நித்திய ஜீவனை ஆதாமுக்கும் அவன் சந்ததியாருக்கும், கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் கிருபையாக அருளிச் செய்கிறார். விசுவாசமுள்ளவர்களாகி, கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன் வாக்குத்தத்தம் செய்யப்படுகிறது. தற்காலத்தில் அப்படிப்பட்டவர்களுக்கு இந்த நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கை மட்டுமே கொடுக்கப்படுகிறது. விசுவாசியாக இருந்தவர்களுக்கு அவர்களின் உயிர்த்தெழுதலின் போது உண்மையாகவே நித்திய ஜீவன் கொடுக்கப்படும்.

தேவனுடைய வார்த்தையின்படி வெளியரங்கமாய் சொல்லப் பட்டிருக்கிற வாக்குத்தத்தங்கள் உலகத் தத்துவ ரீதியின்படி அமையாமல், முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது. தத்துவ சாஸ்திரிகள் மனிதன் நித்திய ஜீவனுக்காக நம்பிக்கை கொண்டிருப்பதாலும், அல்லது அதற்கு பயந்திருப்பதாலும் அவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப் படவேண்டும் என்கின்றனர். ஆனால் பயமும் எதிர்ப்பார்ப்பாகிய நம்பிக்கையுமே ஒரு பரிசு பெறத் தகுதியை உண்டாக்காது. அவர்கள் சொல்லுகிறபடி மனிதனிடத்தில் தொடர்ந்து ஜீவித்துக் கொண்டு என்றென்றைக்குமிருக்கும் தன்மை உண்டு என்பதற்கு அடிப்படையே இல்லை. மனித உறுப்பில் எந்தவொரு உறுப்பும் என்றென்றைக்கும் ஜீவிக்கின்ற தகுதியுடையது எனக் கண்டுபிடிக்கப்படவில்லை, நிரூபிக்கப்படவுமில்லை.

ஆனால் நித்திய ஜீவனைப்பற்றிய வேத கருத்துகளுக்கு விரோதமாக எந்த மாறுபட்ட கருத்துமிருக்க முடியாது. நாம் உயிருள்ள ஆத்துமாவாக பிழைத்திருப்பது, வாழ்ந்திருப்பது “தேவனுடைய கிருபையே” அல்லாமல் வேறொன்றுமில்லை. நாம் பறிக்க இயலாத உரிமையை பெற்று இருக்கவில்லை. மேலும் பூர்வீக புறஜாதி தத்துவங்களின்படி மனிதன் சாகமுடியாது; வேறு பிறவிக்கு மாறுகிறானேயல்லாமல் சாவதில்லை; நித்திய ஜீவன் என்பது தேவனுடைய ஈவல்ல என்று வேதாகமத்திற்கு மாறாகக் கூறுகின்றனர். அது ஒவ்வொரு மனிதனிடமும் இயல்பாக இருக்கக்கூடிய சுபாவம்; தான் என்று தான் எண்ண வேண்டியதற்கு மிஞ்சியே எண்ணுகின்றனர். அப்படிப்பட்ட தத்துவமானது முறையாகப் பயன்படுத்திக் கொள்கிறவர்களுக்கு அது நித்திய

*ஜீவனை கொடுப்பதோடல்லாமல் அது அவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகவுமிருக்கும். அதை முறையாக பயன்படுத்தாதவர்களுக்குக் அது ஆசீர்வாதமாக அமையாமல் சாபமாக அமையும். மாறாக வேதாகமப்படி நாம் முன்னமே காண்பித்ததுபோல "நித்திய ஜீவன்" என்பது தேவனருளும் விலைமதிக்க முடியாத கிருபை வரமாகும். இந்த கொடை, யார் மீட்பரின் குரலுக்குக் கீழ்ப்படிந்து விசுவாசக் கிரியைகளாற்று கின்றார்களோ அவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு அது ஆசீர்வாதமாக அமையாமல் ஆபத்தாக முடியும். இப்போதும் அவர்களுக்குப் பெற்றுக் கொள்வோம் என்ற நம்பிக்கையில்லை. பின் எப்போதும் அவர்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பும் இல்லை. "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." (ரோம 6:23) கெட்டவர்கள், (தெளிவாக சத்தியத்தையறிந்து தெரிந்து பின்னும் வேண்டுமென்றே கீழ்ப்படியாதவர்கள்) தேவ ஜனங்களிலிருந்து இரண்டாம் மரணத்தில் அறுப்புண்டு போவார்கள். அவர்கள் "இல்லாதவர்களாக போய்விடுவார்கள்," "அவர்கள் முழுமையாக அழிக்கப்படுவார்கள்," "நித்திய அழிவே" அவர்களுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பு. இம்மதிரியான மரணத்திற்கு பின் அவர்கள் மீளவும் முடியாது; அதிலிருந்து உயிர்த்தெழவும் முடியாது. அவர்கள் நித்திய ஜீவன், அதிலிருந்து கிடைக்கும் நன்மைகள், மகிழ்ச்சி, ஆசீர்வாதங்கள், விசுவாசிகளுக்குக் கிடைக்கும் பாக்கியங்கள் அனைத்தையும் இழந்து நஷ்டமடைவார்கள். அப்.3:23; சங் 37:9,20; யோபு 10:19, II தெச 1:9*

*கர்த்தருடைய ஜனங்களுக்கு அவருடைய கிருபை வரமாகிய நித்திய ஜீவன் விலைமதிப்பற்று. இந்த நித்திய ஜீவனை விசுவாசத்தோடு உறுதியாகப் பற்றிக் கொள்வது நிலையான நித்திய வாழ்வுக்கு அத்தியாவசியமானது. நித்திய ஜீவனை இவ்வாறு மிக உறுதியாக பற்றிக் கொண்டிருப்பவர்கள், கிறிஸ்துவை தங்கள் மீட்பராக ஏற்றுக் கொண்டு பிரதிஷ்டை செய்து, அவருடைய சித்தப்படி சேவை செய்ய தங்களைத் தத்தம் செய்தவர்களே வாழ்வில் தற்போது ஏற்படும் புயலுக்கும் அஞ்சாமல் போரிட்டு வெற்றி*

*காண்பார்கள்.*

## **“சிறப்பு குணமும், வேற்றுமையும்”**

*சாகாமைக்குரிய நம்பிக்கையைக் குறித்தும் நித்திய ஜீவனைப் பற்றியும் இதுவரை ஆராய்ந்தோம். நித்திய ஜீவன் என்பதை சாதாரணமாக புரிந்து கொள்ளுகிறவர்கள் சாகாமையும் நித்திய ஜீவனும் ஒரே நிலை என்று நினைக்கக்கூடும். ஆதாமின் வழியில் வந்த சகல மனுக்குலத்திற்கும் தேவன் அளிக்கும் கிருபை வரமே நித்திய ஜீவன். ஏற்ற வேளையில் புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் யாவருக்கும் இது கொடுக்கப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக நித்திய ஜீவன் என்பதும், சாகாமை என்பதும் அநேகர் நினைப்பது போல் ஒரே பொருளுள்ள சொற்கள் அல்ல. சாகாமை என்பது தொடர்ந்து ஜீவித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல, அதைக் காட்டிலும் மேன்மையான பொருளுள்ளதாயிருக்கிறது. எனவே வேதாகமம் அனைத்து மனுமக்களும் நித்திய ஜீவன் பெறுவார்கள் எனக் கூறினாலும் குறிப்பிட்ட வெகுசிலரே அதாவது “சிறுமந்தை” எனக் கூறப்படுபவர்கள் மட்டுமே சாகாமையை சுதந்தரித்துக் கொள்வார்கள்.*

*சாகாமை என்பது தெய்வீக சுபாவத்தின் ஒரு குணமாகும். இது தெய்வீகத்தைத் தவிர மனித சுபாவமோ அல்லது தூதர்களின் சுபாவமோ அல்லது வேறு எந்த சுபாவமோ அல்ல. ஏனெனில் கிறிஸ்துவும் அவருடைய “மணவாட்டியும்” தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுகிறவர்களாயிருக்கிறார்கள். பூமியிலும் பரலோகத்திலுமிருக்கக்கூடிய மற்ற ஜீவிகளுக்கு இவர்கள் விதிவிலக்காயிருப்பார்கள். 2 பேது 1:4*

## ***மனித ஆத்துமா சாகாமை வாய்ந்ததா? அல்லது சாகாமை நிலையை அடையும் நம்பிக்கையுடையதா?***

*மனித ஆத்துமா என்பது சரீரமும், ஜீவ சுவாசமும் சேர்ந்ததினால் விளைந்தது. (இந்த சுவாசமே ரூவாக் என்கின்ற காற்று). இது எல்லா பிராணிகளுக்கும் மனிதனுக்கும் ஒரே தன்மையுடையது. ஆனாலும், மனிதனுடைய உறுப்புக்கள் சற்று மேன்மையானது. எனவே சரீர அமைப்பில் மேன்மையான*

*சிந்தனையுடையவனாயிருக்கிறான். அப்படியானால் எல்லா பிராணிகளும் சாகாமை வாய்ந்ததா? இதற்கு பதில் எதிர்மறையே. விலங்குகளை விட மனிதனிடம் எத்தகைய விசேஷ குணமுண்டு? எதனால் அவன் சாகாமைக்குரிய நம்பிக்கையுடை வனாயிருக்கிறான்? இது குறித்து நாம் கவனிக்க வேண்டும்.*

*நம்முடைய சிந்தனையையொட்டி சாலொமோனும் இவ்வாறு கூறுகிறார். கீழான விலங்குகளைப் போலவே மனிதனும் சாகிறான் என்கிறார். "இவைகள் சாகிறது போலவே அவர்களும் சாகிறார்கள். ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் (ஜீவ ஆவி-ரூவாக்) ஒன்றே." (பிரசங்கி 3:19) கோடித்துணி போர்த்தப்பட்ட கரமும், பெட்டியில் வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பிணமும், கல்லறையும் மனிதன் மரித்ததற்கு சான்று பகர்கின்றன. எனவே இதிலிருந்து மனிதன் சாகாமை வாய்ந்தனவல்ல என்பதை அறிகிறோம். ஏனெனில் சாகாமை என்ற சொல்லுக்கு சாகவே முடியாத ஒன்று என்பது பொருள். மனிதன் எவ்வளவுதான் சாகாமையை அடைவோம் என எண்ணியிருந்தாலும் அது தற்காலத்தில் நிச்சயமாக நடைபெறாது. ஒருவேளை எதிர்காலத்தில் சாகாமையை தெய்வீக எற்பாட்டின் மூலம் பெறுவோம் என்ற ஒரு நம்பிக்கை தற்போது உண்டு.*

*இந்த வினாவை மேற்கொண்டு ஆராய்வதற்கு முன்பதாக, 'சாகக்கூடிய,' 'சாகாமையுள்ள' என்கிற சொற்றொடர்களின் பொருள்களை ஆராய்வது அனுகூலமாக இருக்கும். இவ்விருசொற்களின் பொருளை சரியாக உணராததே இப்போது இருக்கிற ஒட்டுமொத்த குழப்பங்களுக்கெல்லாம் காரணம்.*

*'சாகாமையுள்ள' என்ற சொல்லின் பொருள் சாகமுடியாத, அழிவற்ற, அழிக்க முடியாத, அழுகக் கூடாத, எக்காலத்திலும் தேய்ந்து ஓய்ந்து போகாத என்பதாகும். உயிரோடு இருக்கிறவர்கள் - தாங்கள் உயிரோடு இருக்க, உணவு, ஒளி, காற்று முதாலனவைகள் கிடைப்பதைச் சார்ந்தே அவர்கள் உயிருள்ளவர்களாய் இருக்க முடியும். இதைச் சார்ந்திருக்கிறவர்கள் சாகாமையுடையவர்கள் அல்ல. இதுபோன்ற எந்த அடிப்படைத் தேவைகளையும் சாராமல் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான் சாகாமை வாய்ந்தவர்கள். இந்த குணத்தை இயல்பாகவே பெற்றிருப்பது "யேகோவா" தேவன் மட்டுமே. யோவான் **5:26** இல் சொல்-யிருக்கிறபடி, "பிதா தம்மில்*

*தாமே ஜீவனுடையவராயிருக்கிறார்." அவர் இருப்பவராகவே இருப்பதற்கு உரிய உரிமையை யாரிடமிருந்தும் அவர் பெறவில்லை. அவராக அதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவரே நித்திய ஆனந்தமுள்ள ராஜா, எவரும் காணக்கூடாத சாகாமையுள்ளவர். (1 தீமோ 1:17) இந்தப் பாடத்தைப் பற்றிய இவ்வேதாகம வசனங்கள் தீர்மானமாகவும், இறுதியாகவும், உறுதியாகவும் இக்கருத்தைத் தெரிவிக்கின்றன. இத்தகைய பேராற்றலை மனிதர்களோ எந்தத் தூதர்களோ, பிரதான தூதரோ, தேவகுமாரனாகிய கிறிஸ்துவோ (வார்த்தை மாம்சமாவதற்கு முன்னரோ, வார்த்தை மாம்சமாகி நமது மத்தியில் வாசம் செய்தபோதோ) பெற்றிருக்கவில்லை என்பதை நாம் உறுதியாக அறிந்தாக வேண்டும்.*

*ஆனால் "சாவுக்குரிய" என்பது சாவை குறிக்காமல், சாகக்கூடியவர்கள் என்று பொருள்படும். உயிரோடு இருக்க தேவ தயவை சார்ந்தே இருக்க முடியும். உதாரணமாக,தேவதூதர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் சாகாமை வாய்ந்தவர்கள் அல்ல, சாகக்கூடியவர்கள். தேவனுடைய ஞானம், நீதி, நியாயமுள்ள அரசாங்கத்திற்கு எதிராக கலகம் பண்ணினால் தேவன் அவர்களை அழித்து விட முடியும். எனவே அவர்கள் தேவனால், தேவசித்தத்தின் படியே பிழைக்கவும், அசையவும் ஜீவிக்கக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். சாத்தான் ஒளியின் தூதன் என்று பெயர் பெற்றவனாய் இருந்தும், தேவனுக்கு விரோதமாக கலகம் செய்ததால் தேவன் அவனை அழிப்பார் என்று வேதம் கூறுகிறது. (எபி 2:14) இதனால் சாத்தான் சாவுக்குரியவன் என்பது மாத்திரமல்ல தூதர்களும் சிருஷ்டிகரால் அழிக்கப்படக் கூடிய சாவுக்கேதுவான சுபாவத்தை உடையவர்கள் என்று நிரூபிக்கப்படுகிறது. மனிதனைப் பொறுத்த வரையில், தூதர்களுக்கடுத்த கீழான நிலையில் உள்ளவன். (சங் 8:5)அதைத் தொடர்ந்து மனிதன் சாவுக்குரிய நிலையிலும் இருக்கிறான். மனுக்குலம் கடந்த 6000 ஆண்டுகளாக செத்துக் கொண்டே சாகிறது என்பதற்கு ஆதாரமாக ஏராளமான வேத வசனங்கள் சொல்லப்படுகிறது. எனவே தான் கிறிஸ்துவுக்குள்ளான பரிசுத்தவான்களுக்குக் கூட, சாகாமையை நாடித் தேடுங்கள் என்று உபதேசிக்கப்படுகிறது. ரோம. 2:7*

*பொதுவாக, சாதாரண மொழி பெயர்ப்புகளில்* 'mortal' *என்ற*

சொல்லுக்கு ‘சாகிற’ என்றும், ‘immortal’ என்பதற்கு ‘சாகாமை வாய்ந்த’ என்றும் கூறப்பட்டுள்ளது. இவை இரண்டும் தவறு. இந்த இரண்டு சொற்களுக்குமிடையே உள்ள கருத்து பேதத்தை புரிந்து கொள்ள, நாம் ஒரு சிறிய வினாவை எழுப்புவோம்.

## ஆதாம் படைக்கப்பட்டது - சாகக்கூடியவனாகவா அல்லது சாகாமையுடையவனாகவா?

*அதற்குரிய விடை, ஆதாம் சாகாமையுள்ள சுபாவத்தில் படைக்கப்பட்டான் என்று இருப்பின், நம்முடைய வினா: எவ்வாறு அவன் மிரட்டப்பட்டான்? நிபந்தனையை மீறினால் சாகவே சாவாய் என்று சொல்லப்பட்டு, சாவுக்குரிய தீர்ப்பை எப்படி அடைந்தான்? அவன் சாகாமை வாய்ந்தவனாக படைக்கப்பட்டிருந்ததானானால் எப்படி மரித்திருக்க முடியும்? அவனை தண்டிப்பதற்கு தேவனால் ஏன் ஜீவ விருட்சத்தின் கனி இருக்கும் ஏதேன் தோட்டத்திலிருந்து அவன் விரட்டப்பட வேண்டும்? விரட்டப்படாதிருந்தால் ஜீச விருட்சத்தின் கனியை புசித்து என்றென்றைக்கும் வாழ்ந்திருப்பான். - ஆதி 3:22*

*மனிதன் சாகிறவனாகப் படைக்கப்பட்டான் என்பது விடையாக இருந்தால், பொதுவான மொழி பெயர்ப்பின்படி, சாகவே சாவாய் (இது தப்பறையான மொழி பெயர்ப்பு) என்றிருப்பதால் ஒரு நிபந்தனையை வைத்து, அதை மீறினால் சாவாய் என்று தேவன் சொல்ல வேண்டிய காரணமென்ன? ஏனெனில் அவன் படைக்கப் பட்டபோதே சாகிறதற்காகப் படைக்கப்பட்டிருந்தால், இந்த நிபந்தனை அர்த்தமற்றதாக இருந்திருக்கும். ஆதாம் தன்னில் தானே சாகிறவனாக இருந்தால் பின்னர் ஏன் அவன் பாவத்தினாலே, மரணத் தீர்ப்பைப் பெற்றான் என்று தேவன் சொல்லுகிறார்.*

*இந்த சாகாமைக்கும், சாவுக்குரிய என்ற சொற்களுக்குரிய சரியான பொருள் விளங்காத வரையில் குழப்பம் தவிர்க்க முடியாதது. எனவே அந்த சொற்களுக்குரிய சரியான பொருளைக் காண்போம்.*

***சாகாமை வாய்ந்த :*** *எந்த சூழ்நிலையிலும் மரணமடைய முடியாத, மரணத்தை வென்ற, எப்போதும் ஜீவித்திருக்கிற நிலைமையைக் குறிக்கும்.*

***சாவுக்குரிய :*** *சாவுக்குரிய, சாகமுடிகிற ஒரு நிலையைக் குறிக்கும். மரணத் தீர்ப்பு நிறைவேறுகிற வரையில் சாகும்*

நிர்ப்பந்தம் இல்லை. ஆனால் தீர்ப்பு உண்டானபோது மரித்தே ஆகவேண்டும் என்ற நிலை.

இந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் பார்க்கும்போது ஆதாம் சாகிறவனாகவே சிருஷ்டிக்கப்பட்டான். இதன்படி ஆதாம் நீதி நியாயமுள்ள சிருஷ்டிகருக்குக் கீழ்ப்படியாமல் போனால் மரணமும், சிருஷ்டிகரின் நிபந்தனைக்கு கீழ்ப்படிந்தால் நித்திய ஜீவனையும் பெறலாம். ஆதாம் மட்டும் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படிந்திருப்பானே யானால் இப்போதும், இனி எப்போதும் உயிரோடிருந்திருப்பான்.

எனவே ஆதாம் நிபந்தனைக்குட்பட்டு வாழ்ந்தால் நித்திய ஜீவனை உடையவனாகவும், நிபந்தனையை மீறும்போது சாகக்கூடியவனாகவும் சிருஷ்டிக்கப்பட்டான். இந்த நிபந்தனை நிச்சயமற்ற தன்மை என்று கூறிவிட முடியாது. ஆதாமோடு தொடர்பு கொண்ட தேவன் மாறாதவராயிருக்கிறார். அதுபோலவே ஆதாமும் தனக்கு கொடுக்கப்பட்ட நிபந்தனையை மீறாமல் தன் சிருஷ்டிகருக்கு விசுவாசமுள்ளவனாய் கீழ்ப்படிந்திருந்தால் அவனும் நித்திய ஜீவனைப் பெறும் முழு நிச்சயத்தையுடையவனாய் இருந்திருப்பான். அதற்கு மேலே ஆதாம் எதிர்ப்பார்த்துக் கேட்பதற்கு ஒன்றுமில்லை.

ஆதாம் கீழ்ப்படியாமல் போனதற்கு முன்னிருந்த நிலைமை தூதர்களின் நிலைமையை ஒத்திருந்தது. அவனுக்கு நித்திய ஜீவன் கொடுக்கப்பட்டிருந்தது. நிபந்தனையை மீறாமல் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படிருந்திருந்தால் அவன் என்றென்றும் ஜீவித்திருப்பான். ஏனெனில் அவன் மரணத்தை வென்று வாழும் சாகாமையுடையவன் அல்ல. ஏனெனில் ஆதாம் தன்னில் தானே ஜீவனுடையவனாயிருக்கவில்லை. அவன் ஜீவனோடிருக்க தனது சிருஷ்டிக்கரை சார்ந்திருப்பதோடு அவருக்கு பிரியமானதை செய்து கொண்டிருக்கும் வரை ஜீவனும், சிருஷ்டிகருக்கு பிரியமானதை செய்யாதபோது மரணமும் ஏற்படும். எனவே கட்டளைக்கு கீழ்ப்படிந்திருந்திருந்தால் வாழ்வு, மீறினால் மரணம் என எச்சரிக்கப்பட்டிருந்தான். அதன் காரணமாக கீழ்ப்படியாமல் போகும் போது ஜீவ சுவாசமற்றுப் போய்விடும். ஜீவசுவாசம் இல்லாமையால் சரீரம் ஒன்றுமில்லாமல் அழுகிப் போய்விடும். ஆத்துமா அல்லது உணர்வுள்ள மனிதன் உணர்விழந்து மறக்கப்பட்டு ஒன்றுமில்லாத நிலைமைக்குப் போய்விடுகிறது. ஆதாம்

*சாகாமையுள்ளவனாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தால் தேவன் கொடுத்த எச்சரிக்கை அர்த்தமற்றதாகியிருக்கும். ஆனால் ஆதாம் சாகக்கூடியவனாக படைக்கப்பட்டிருந்தால் தேவன் வகுத்த நிபந்தனையின்படி பாவம் செய்கிற நாளிலே சகாவே சாவாய் என்று சொன்னதால் அவன் சிருஷ்டிகருடைய கட்டளையை மீறும்போது சாகக் கூடியவனாகிறான். எனவே தேவன் கொடுத்த தீர்ப்பில் அவன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்த நாளிலே மரணமடைந்தான். II பேதுரு. 3:8*

*அநேகம் பேர் வேதத்தில் பற்பல இடங்களில் சாகாமை வாய்ந்த ஆத்துமா, சாகாத ஆத்துமா, ஒருபோதும் சாவைக் காணாத ஆத்துமா போன்ற வார்த்தைகள் உண்டு என்று நினைக்கிறார்கள். அவர்களுக்கு நாம் வழங்கக்கூடிய ஆலோசனை என்னவென்றால் ஒரு தரமான ஒத்துவாக்கிய அகராதியைக்கொண்டு இந்த சொற்களைக் கருத்தாய் ஆராய்ந்து உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே. அவ்வாறு ஆராய்பவர்கள் பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் போதித்து வரும் சாகாமை வாய்ந்த ஆத்துமா என்பது தப்பறையான கொள்கை என்று விளங்கிக் கொள்வதோடு, இந்த குழப்பங்களுக்கெல்லாம் காரணம் பூர்வத்தில் மொழி பெயர்த்தவர்களின் கவனக் குறைவே என்றும் உணர்ந்து கொள்வர்.*

*வேதாகமத்தின்படி தேவ தூதர்கள் நித்திய ஜீவனுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களும் மரணத்திற்கு உள்ளாகக் கூடியவர்களே. அவர்கள் சாகாமை வாய்ந்தவர்களாக சிருஷ்டிக்கப்பட்டதால் அவர்கள் தேவ தூதர்களாயிருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அவ்வாறு இருந்திருந்தால் தேவன் அவர்களை அழிக்கவே முடியாது. அவர்கள் தேவனுடைய அன்புக்கும் நீதியான சட்ட வரம்புக்கும் உட்பட்டிருக்கும் வரை அவர்களுக்கு நித்திய ஜீவன். இதை எளிதாக விளக்க முடியும். ஏனெனில் பரிசுத்த தூதர்களில் ஒருவனாக இருந்த சாத்தானும் கூட பெருமையினாலும், பேராசையினாலும் பாவம் செய்யவில்லையா? இப்படியாக அவனும் ஒரு சீர்கெட்டவனாக ஆகவில்லையா? மனதார வேண்டுமென்றே தேவனுக்கு எதிராகப் போகவில்லையா? அவனைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:*

*"...துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்." - (சங். 145:20)*

"...நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்." - (தெச. 1:10) சாத்தானின் அழிவைக் குறித்து வெளிப்படையாக வேதம் கூறுகிற அறிவிப்பை நன்கு கவனிக்கவும். இது சாத்தானுக்கு மட்டுமல்ல பொல்லாத வழியில் நடக்கிற தெய்வீக ஏற்பாட்டை மதிக்காத யாவருக்கும் பொருந்தும். - (எபி. 2:14)

வேதாகமம் மனிதன் சாவுக்குரியவன் என்று கூறினாலும் அவைகளெல்லாம் மனிதன் தேவனோடு கொண்டுள்ள கீழ்ப்படிகிற உறவைப் பொருத்தே நித்திய ஜீவனோ அல்லது மரணமோ சம்பவிக்கும். அதே சமயத்தில் தூதர்களும் அதே நிபந்தனையின் கீழ் நித்திய ஜீவனைப் பெறுவார்கள் என்பதையும், "கிறிஸ்து ஒருவரே சாகாமை வாய்ந்தவர்" என்பதையும் வேதம் தெளிவாகப் போதிக்கிறது. (1 தீமோ. 6:16) இந்த நிலைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலையில் பிதாவாகிய தேவன் இருக்கின்றார்.(1 கொரி. 15:27) நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூட தமது உயிர்த்தெழுலின் போது தான் இந்த சாகாமையை (இது தெய்வீக சுபாவத்தை மட்டுமே காண்பிக்கும்) பெற்றுக் கொண்டார். கிறிஸ்து தம்மையே தியாக பலியாக, ஈடுபலியாக பிதாவின் சித்தத்திற்கு தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தற்கு பரிசாக சாகாமையை சுதந்தரித்துக் கொண்டார். "மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் அவர் கீழ்ப்படிந்ததால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்." (பிலிப் 2:8-9). அவர் ஒரே பேரான குமாரனாயிருப்ப தால் எல்லாவற்றிற்கும் மேலானவராயிருந்தாலும், அப்போஸ்தலர் கூறுகிறதுபோல துரைத்தனத்திற்கும், அதிகாரத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையில் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக அவர் உயர்த்தப்பட்டார். (எபே. 1:20).

இந்த பாடத்தைக் குறித்த கருத்தை அப்போஸ்தலருக்கு தேவன் வெளிப்படுத்தியதால் இந்த நிருபத்தை எழுதும்போது பிதாவாகிய தேவனும், குமாரனாகிய கிறிஸ்துவும் மட்டுமே சாகாமை வாய்ந்தவர்கள் என்ற கருத்தைத் தெளிவாக எழுதினார். உண்மையில் தேவனுடைய ஒரே பேரான குமாரன் சாகாமை வாய்ந்தவராகவே படைக்கப்பட்டிருந்தால் அவர் ஈடுபலிக்காக மரித்திருக்க முடியாது. அவர் மரிக்கவில்லை என்றால் உலகத்திற்கு

மீட்பு இல்லாமல் போயிருக்கும். அவர் உலக இரட்சகராயிருக்க முடியாது. தேவ ஏற்பாட்டின்படி அவர் உலக இரட்சகராக மரணத்தை ருசி பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வேதாகமம் கூறுகிறபடி "கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்." அதற்குப்பின் உயிர்த்தெழுதலில் சாகாமை நிலைமைக்கு உயர்த்தப்பட்டார்.

பழைய ஏற்பாட்டில் இந்த நித்திய ஜீவனுக்குரிய எதிர்கால நம்பிக்கை அவ்வளவு தெளிவாகக் கூறப்படவில்லை. ஆனால் சாகாமையைப் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர், "கர்த்தராகிய இயேசு மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" என்று கூறுகிறார். II தீமோ. 1:10

இவைகள் இரண்டு காரியங்களைக் காட்டுகிறது.

1. பரிபூரண ஜீவனாகிய நித்திய ஜீவன் என்பது வேறு. சாகாமை அல்லது அழிக்கப்படாமை என்பது வேறு.

2. நற்செய்திக்கு முன்னர் இவ்விரு பெரிய ஆசீர்வாதங்களைக் குறித்த செய்தி கூறப்படவுமில்லை, அவைகளை எவரும் அறியவுமில்லை, அடையவுமில்லை. இந்த மாபெரும் இரட்சிப்பைப் பற்றி நமது கர்த்தரே முதன் முத-ல் பிரசங்கித்தார். (எபி. 2:3)

நமது கர்த்தரின் நற்செய்தி எவற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது? ஜீவன், சாகாமையாகிய இவ்விரு மாபெரும் ஆசீர்வாதங்களை எவ்வாறு உலகத்திற்கு வெளிச்சமாக எடுத்துக் காட்டியது?

(அ) தேவ கிருபையினாலே இயேசு கிறிஸ்து ஆதாமின் பின் சந்ததியாகிய உலக மனுமக்களை கிரயத்திற்கு கொண்டார். அதன் மூலமாக மனுக்குலத்திலுள்ள ஒவ்வொருவரும் மரணத்திலிருந்து ஜீவன் பெறும் வாய்ப்பை ஏற்படுத்தினார். அதாவது "உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்க தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள்" வரப்போகிறது என்று அறிவிக்கப்பட்டது. முந்தின சீருக்கு எல்லோரையும் உயர்த்துவது

என்று சொல்வதின் கருத்து என்னவெனில், மரித்த யாவரையும் அவரவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழச்செய்வது மட்டுமல்ல, மற்றும் அநேக மரணப் பிடிகளிலிருந்தும் (நோய் வாய்ப்பட்டிருந்தல், அபூரண நிலையிலிருத்தல்) மீட்கப்படுதல் ஆகும். ஆதாம் கீழ்ப்படியாமைக்கு முன்பிருந்த நித்திய ஜீவன் நிலைமைக்கு அனைவரும் மீட்கப்படுவார்கள். இந்த நித்திய ஜீவனை பெறும் வாய்ப்பு அனைவருக்கும் அளிக்கப்படும் என்று கிறிஸ்துவின் நற்செய்தி உறுதியளிக்கிறது. ஏற்ற வேளையில் புதிய உடன்படிக்கையின்படி அனைவரும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். - 1 தீமோ. 2:6

(ஆ) தெய்வீக திட்டத்தில் கிறிஸ்துவுக்கு ஒப்பான ஒழுக்கமும் விவேகமுமுள்ள ஒரு சிறிய கூட்டத்தை விசேஷித்த அழைப்பினால் தெரிந்தெடுத்து ஆயத்தம் செய்ய வேண்டியுள்ளது. இதற்காகவே கிறிஸ்துவின் நற்செய்தி வெளிச்சமாக கொடுக்கப்படுகிறது. இவர்கள் பிதாவின் சித்தத்திற்கும், திட்டத்திற்கும் இசைவாக அவருக்கே விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அப்படிப் பட்டவர்களையே “புதிய சிருஷ்டியாக்கி” அவருடைய தற்சொரூபத்திற்கு மாற்றி, தெய்வீக சுபாவத்திற்குப் பங்கு பெறச்செய்கிறார். தெய்வீக சுபாவத்திற்குரிய அநேக சிறப்பியல்புகளில் தலையான குணமே இந்த சாகாமையாகும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய கிருபையினாலே இந்த மகிமையின் நற்செய்தியின் மூலமாக அனைவருக்கும் வெளிச்சம் தந்தார்.

தேவனுடைய பரிசுத்தர்களாகிய தேவதூதர்கள், கேரூபீன்கள் சேராபீன்கள் - இவர்களில் யாருக்கு இந்த உன்னத அழைப்பு கொடுக்கப்படுகிறது என்று நாம் ஆச்சரியத்துடன் கேட்கிறோம். கிறிஸ்துவின் சுவிசேஷம் தூதர்களுக்கே அல்ல; மனித குமாரனுக்கும், தனது விலையேறப்பட்ட இரத்தத்தினால் மீட்கப்பட்டவர் களி-ருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அவரது “மணவாட்டி”க்கும் மட்டுமே சுவிசேஷம் கொடுக்கப்பட்டது என்பதே பதிலாகும்.

அவரைக் கவனிக்கும்போது, அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது

*பாரிசத்தில் (கிருபையும் மகிமையுமுள்ள ஸ்தானம்) வீற்றிருக்கிறார். அவர் ஐசுவரியவானாயிருந்தார். ஆனால் நமது நிமித்தமாக அவர் தரித்திரரானார். மனிதனும் மனுக்குலமும் மீட்கப்பட வேண்டியவர்கள். மனிதனுக்கு ஈட்டுக் கிரயம் கொடுக்க அவர் மனிதனாக வேண்டியிருந்தது. ஏனெனில் பூரண மனிதனை மீட்க பூரண மனிதனே ஈட்டுக் கிரயம் அதாவது சமவிலைக்கிரயம் கொடுக்க வேண்டியிருந்தது. அவர் அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது கிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். "ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி (அவரது உயிர்த்தெழுதலில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தெய்வீக சுபாவத்திற்கு)... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை (யேகோவாவின் நாமத்தைத் தவிர) அவருக்கு தந்தருளினார்." 1 கொரி15:27; எபி 12:3,2; IIகொரி. 8:9; பிலிப். 2:8-9*

*"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்." வெளி. 5:12*

*கிறிஸ்துவுக்கு இந்த மாபெரும் தகுதியுள்ள நாமத்தைக் கொடுத்ததோடு நில்லாமல், தமது கிருபையின் ஐசுவரியத்தின்படி அதற்கு மேலும் அவரை மகிமைப்படுத்தினார். இந்த தேவ குமாரர்கள் என்னும் சிலாக்கியத்தை பெறும் அனைவரையும் கனம், மகிமை, சாகாமைக்கும் வழிநடத்துகிற மீட்பின் அதிபதியாக தேவன் அவரை நியமித்தார். (எபி. 2:10; ரோம. 2:7) இவர்கள் ஆவிக்குரிய நிலையில் தேவனுடைய முதற்பேறானவருடைய சாயலுக்கும், ரூபத்திற்கும் ஒத்த சாயலை அணிந்திருக்க வேண்டும். விஞ்ஞான பரிணாம வாதங்களுக்கு நேர் எதிரிடையாக தேவன் இந்த மகா மேன்மையையுடைய கேருபீன், சேராபீன் என்கிற தூதர்களுக்கு இந்த மகிமையின் இடத்தை, உரிமையை கொடுக்க விரும்பவில்லை. பாவிகளாயிருந்து, ஆட்டுக் குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டு, அவருக்கொப்பாக புதிய சிருஷ்டியாக (மணவாட்டி என்று அழைக்கப்படுகிற ஆட்டுக்குட்டியானவரின்*

மனைவி, உடன்சுதந்திரர் வெளி. 21:2,9; ரோம. 8:17) மாறியவர்களுக்கே இந்த மகிமையின் இடத்தை கொடுக்க தேவன் சித்தம் கொண்டார். தேவன் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ளவர்களை இந்த உன்னத நிலைக்கு உயர்த்த முன்குறித்திருந்தார். (வெளி. 7:4) தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நிச்சயப்படுத்திக் கொள்ள அவர்களுக்கு இருக்க வேண்டிய குணங்களை தேவன் முன்கூட்டியே தீர்மானித்திருந்தார். அப்படிப்பட்டவர்களுக்கே அந்த உன்னத மகிமையுள்ள ஆளுகையை அளிக்கின்றார். அதற்கு பின் நடைபெறும் எல்லாப் பணிகளும் கிறிஸ்துவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் இப்பொழுது கிரியை செய்துவருகிறார் தேவன் இதுவரைக்கும் கிரியை செய்துவந்தார்.- யோவா. 5:17

சுவிசேஷ யுகத்தில் பெந்தெகொஸ்தே நாள் துவங்கி கர்த்தர் தமது இரண்டாம் வருகையில் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரை உள்ள காலமே கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரைத் தெரிந்து கொள்ளக்கூடிய காலமாகும். இவர்களே "திருச்சபையார்" என்றும் "கிறிஸ்துவின் சரீரம்" என்றும், "இராஜரீக ஆசாரியக் கூட்டம்" என்றும் "ஆபிரகாமின் வித்து" என்றும் (கலாத். 3:29) அழைக்கப்படுகின்றனர். கிறிஸ்துவின் சரீர அங்கமாகிய இவர்கள் படிப்படியாக அபிவிருத்தியடைந்து பயிற்சி பெறவே தீமை தொடர அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் மீட்கப்பட்ட தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்ய பயிற்சி அளிப்பதே இதன் நோக்கம். தங்களை விலைமதிக்க முடியாத இரத்தத்தினால் மீட்டுக் கொண்டவருடைய சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இப்படியாக இவர்கள் இந்த யுகமுடிவில் கர்த்தருடைய ஆவிக்குரிய சுபாவத்தை அடைய பயிற்சியளிக்கப்படுகிறார்கள். பிதாவாகிய தேவன் முன்னிலையில் இப்படிப்பட்டவர்களை கர்த்தராகிய கிறிஸ்து நிறுத்தும்போது, பிதா தாமே தமது ஒரே பேரான குமாரனுடைய சாயலையும் ரூபத்தையும் அவர்களிடத்தில் காணவேண்டும். - கொலோ. 1:22; ரோம. 8:29

மரண பரியந்தம் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து, தன்னைத்தானே தியாக பலியாகச் செலுத்தி சாபத்தை பரிகரிக்கும் வரையில், பிதாவின் ஒரே பேரான குமாரனுக்கும் "கனம், மகிமை, சாகாமை" ஆகிய

*தெய்வீக சுபாவத்தின் மேன்மைகள் அருளப்படவில்லை. இதே விதமாகவே அவருடைய திருச்சபையாராகிய மணவாட்டியரில் ஒவ்வொருவரும் தங்கள் தியாக பலியைச் செலுத்தின பிறகுதான் "கனம், மகிமை, சாகாமை" ஆகிய தெய்வீக சுபாவத்தின் மேன்மைகள் அவர்களுக்கு அருளப்படும். முதற்பேறானவரும், இரட்சிப்பின் அதிபதியுமான கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னரே "அவரது மகிமையில்" பிரவேசித்தார். அப்போதுதான் அவர் முழுமையாக தெய்வீக சுபாவத்தைப் பெற்று "மரித்தோரிலிருந்து எழுந்தவர்களுக்கு முதற்பலனாகி," "ஆவியில் பிறந்தவரானார்." அவர் உன்னதத்திற்கு பிதாவாகிய தேவனுடைய வலது பாரிச சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டார். எனவே அவர் தம்முடைய சபையாகிய மணவாட்டிக்கு, அவர்களும் தங்களுடைய உயிர்த்தெழுதலின்போது தெய்வீக வல்லமையினால் மனித சுபாவத்திலிருந்து கனம், மகிமை, சாகாமை ஆகிய தெய்வீக சுபாவத்திற்கு மாற்றப்படுவார்கள் என்று வாக்களித்தார். எபி 13:20; 2 பேது 1:4*

இதே போலத்தான் திருச்சபையாரின் "உயிர்த்தெழுதலுமிருக்கும்" என்று வேதம் கூறுகிறது. *"மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும் (சாகாமை); கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." - 1 கொரி 15:42-44, 49*

இப்படிப்பட்ட திவ்ய தயவுள்ள பரம அழைப்புக்குத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், தங்களுடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதி செய்து கொள்ள ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட யாவருக்கும் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை அவர்கள் முழுமையாக நிறைவேற்றியாக வேண்டும். அது "புத்தியுள்ள ஆராதனையாக" இருந்தாக வேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனைகளை முழுமனதாக நிறைவேற்றி முடிப்பவர்களுக்கு தெய்வீக சுபாவமாகிய "கனம், மகிமை, சாகாமை" அளிக்கப்படும். இவ்விதமாக அவர்கள் தேவ தூதர்களுக்கும் மேலாக

*தங்கள் மீட்பருடைய உன்னத மகிமைக்கு உயர்த்தப்படுவார்கள். தீமையே வெல்லுகின்ற இந்த கடைசி காலத்தில் அவருடைய முன் மாதிரியைப் பின்பற்றி அவருடைய அடிச்சுவட்டில் நடந்து, அவருக்கு நேரிட்ட அவமானங்களிலும் பங்கு பெற்றால் மிக உன்னத நிலைக்கு உயர்த்தப்படுவார்கள்.*

*இப்படித் தெரிந்து கொள்ளப்பட்ட திருச்பையாருக்கே இந்த மகிமையுள்ள சாகாமையாகிய வாக்குத்தத்தமும், நம்பிக்கையும் வழங்கப்படுகிறது என்ற உண்மை சத்திய வேதத்தில் கூறப்பட்டுள்ளதை நன்கு கவனிக்கவும். நமது கர்த்தர் சொல்லுகிற, தம்மில்தாமே ஜீவனுடையவர்களாயிருப்பதைப்பற்றி யோவான் நற்செய்தியிலே, "பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல (சாகாமை) குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்" என்றார். இந்த சாகாமையை யாருக்குக் கொடுக்க விரும்புகிறாரோ அவருக்குக் கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார். தம்முடைய "சரீரமாகிய சபையார்" ஆகிய மணவாட்டிக்கு இந்த சாகாமையைக் கொடுக்கின்றார். யோவா. 5:26; எபே. 3:6*

*சாகாமையைக் குறித்த இரண்டு கிரேக்க சொற்கள்:*

*1. அத்தனாசியா* (athanasia) *இந்தச் சொல்லுக்கு ஜேம்ஸ் ஸ்ட்ராங் என்பவர் "மரணமின்மை," "மரிக்கக்கூடாத நிலைமை" எனப்பொருள் கூறுகின்றார். இந்தச் சொல் கீழ்க்காணும் வேதப் பகுதிகளில் மட்டுமே எடுத்தாளப்பட்டுள்ளது.*

*"அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் (அத்தனாசியா-சாகாமை).... தரித்துக் கொள்ள வேண்டும்." இது திருச்சபையார் மட்டும் பங்குபெறப் போகிற முதலாம் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. 1 கொரி. 15:53*

*"அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது..." (அத்தனாசியா - சாவாமை) இங்கு திருச்சபையாரின் முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. - 1 கொரி. 15:54*

*"தாம் ஒருவராய் சாவாமையுள்ளவரும்..." (அத்தனாசியா - சாவாமை) நமது கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கிறது. எப்போதும் போல் பிதாவானவர் ஒப்பிடப்படுதலிலிருந்து தவிர்க்கப்பட்டிருக்கிறார். 1 தீமோ. 6:16*

*2. அப்தார்சியா, அப்தார்டோஸ்* (aptharsia, apthartos) *இவ்விரு சொற்களும் ஒரே கிரேக்க மூலச் சொல்லிலிருந்து தோன்றியவை. இவ்விரு சொற்களும் சாகாமை என்று இரண்டு முறையும் சாகவே கூடாத என்று ஒருமுறையும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இன்னும் சரியாக அழிக்க முடியாதவை அல்லது அழிவைக் காணாதவை என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக கிரேக்க மொழி அகராதியைத் தயாரித்தவர்கள் இவ்விதமாகவே பொருள் கூறுகின்றனர். வேதாகமத்தில் வரக்கூடிய இந்த வார்த்தைகளைக் கீழே காண்போம்.*

*"மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் (அப்தார்சியா - அழிவில்லாமை) தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்." ரோம. 2:7*

*"அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் (அப்தார்சியா) எழுந்திருக்கும்." - 1 கொரி. 15:42*

*"மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது; அழிவுள்ளது அழியாமையை (அப்தார்சியா) சுதந்தரிப்பதுமில்லை." - 1கொரி. 15:50*

*"அழிவுள்ளதாகிய இது அழியாமையையும்... தரித்துக் கொள்ள வேண்டும்." (அப்தார்சியா) - 1 கொரி. 15:53*

*"சாவுக்குகேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும் ... (அப்தார்சியா)" - 1 கொரி. 15:54*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத (அப்தார்சியா) அன்புடனே அன்பு கூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக." - எபேசி. 6:24*

*"அவர் மரணத்தை பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் (அப்தார்சியா) சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்."* II*தீமோ. 1:10*

"உபதேசத்தில் விகற்பமில்லாதவனும், நல்லொழுக்க முள்ளவனும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தை பேசுகிறவனுமாயிருப்பாயாக." *(அப்தார்சியா) - தீத். 2:7*

*"அழிவில்லாத (அப்தார்டோஸ்) தேவனுடைய மகிமையை..." ரோம. 1:23*

*"அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள் நாமோ அழிவில்லாத (அப்தார்டோஸ்) கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்." I கொரி. 9:25*

*"மரித்தோர் அழிவில்லாதவர்களாய் (அப்தார்டோஸ்) எழுந்திருப்பார்கள்." - 1 கொரி. 15:52*

*"நித்தியமும் அழிவில்லாமையும் (அப்தார்டோஸ்) அதரிசனமுள்ள இராஜனுமாய் தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு..." 1 தீமோ. 1:17*

*"அழியாததும் (அப்தார்டோஸ்) மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரத்துக்கேதுவாய் ஜீவனுள்ள நம்பிக்கையுண்டாகும்படி ..." 1 பேது. 1:4*

*"அழிவில்லாத (அப்தார்டோஸ்) வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே." - 1 பேது. 1:23*

*"அழியாத (அப்தார்டோஸ்) அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி..." (1 பேது 3:4)*

*இந்தச் சொல்லில் எந்த அழிவும், சேதமும் மதிப்பில் நஷ்டமும் எப்போதும் அடைவதில்லை என்ற பொருள்கள் பொதிந்துள்ளன. உயிருள்ள உணர்வுள்ள பொருள்களுக்கு அப்தார்சியா என்ற சொல்லை உபயோகப்படுத்தினால், அத்தனாசியா என்ற சொல்லுக்கொப்பாக அழிவைக் காண்பதில்லை, மரணத்தைக் காண்பதில்லை, சாகவே சாவதில்லை எனப் பொருள்படும். ஜீவனிருந்தால், அந்த ஜீவன் எக்காரணத்தை முன்னிட்டும் இழக்கப்படுவதில்லை.*

## நித்திய ஜீவனுக்கான மனுக்குலத்தின் நம்பிக்கை

*அறிவியலில் மிகச் சிறந்த, தேர்ந்த விஞ்ஞானிகள் பலரும்,*

ஜீவன் என்பது சிருஷ்டிகரால் கொடுக்கப்பட்ட ஓர் ஈவு அல்ல என்று நிரூபிப்பதற்கு பலவகைகளிலும் முயற்சி மேற்கொண்டு, பரிணாம வாதம் போன்ற பல கொள்கைகளைப் பரப்பி விட்டனர். கொள்கையளவிலே நுண்ணோக்கியால் மட்டுமே காணக்கூடிய சிறிய புழுவிலிருந்து படிப்படியாக வளர்ந்து, இப்போது இருக்கிற பிராணிகள், மனித நிலைமையை அடையப்பெற்றது என்று நிரூபிக்க முயற்சி மேற்கொண்டு, ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளனர். பேராசிரியர் ஹக்ஸ்லே (Huxley) என்பவர், "சரீரத்திற்கு அடிப்படையான ஒன்று - புரோட்டோபிளாசம்" என்று கண்டு பிடித்தார். இப்படி உயிருக்கு காரணமாக ஒன்று மற்றொன்றைச் சார்ந்திருக்கிறது என்று கண்டறியப்பட்டால், சிருஷ்டிகர் கடவுள் என்ற கொள்கை மெல்ல மங்கி முற்றிலும் மறைந்துவிடும். ஆனால் அறிவியலார், இந்த புரோட்டோபிளாசம் என்ற உயிரின் அடிப்படை, உயிரற்ற பொருளிலிருந்து உயிரோட்டத்தை எப்படிப் பெறும் என்று நிரூபிக்க முடியவில்லை. இதனால் அறிவியலாரும் கூட உயிருக்குரிய முழு முதற்பெரும் காரணத்தைக் கண்டு சொல்ல இயலவில்லை. ஆனால் பயபக்தியுள்ள வேத மாணவர்கள் எல்லாவற்றுக்கும் ஜீவ ஊற்றும் காரணருமாய் இருப்பவர் தேவனே என்பதை தெளிவாக அறிந்து ஐயமில்லாமல் அறிக்கையிடுவார்கள். அவரிடமிருந்தே உயர்நிலையிலுள்ள மனிதனும், தாழ்நிலையிலுள்ள விலங்குகளும் ஜீவ சுவாசத்தைப் பெற்றனர். இதன் கருத்து விளக்கத்தை அப்போஸ்தலர், "பிதாவாலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் குமாரன் மூலமாகவே சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." (1 கொரி. 8:6) இயற்கை என்ற புத்தகத்தின் வாயிலாக ஒரு சிருஷ்டிகரைப் பற்றிய ரூபகாரங்களை கிறிஸ்தவன் காண்பதோடு மட்டுமல்ல, வேதாகமம் வெளிப்படுத்துகிற சிருஷ்டிகரையும் சிருஷ்டிப்புக்களையும் காண்கிறான். நமது ஆதிப் பெற்றோரை தேவனே படைத்தார் என்று கிறிஸ்தவன் ஏற்றுக் கொள்கிறான். தேவனே அவர்களுக்கு ஜீவனை அளித்ததுடன் அவர்களைப் போன்ற ஆத்துமா, உணர்வுடைய சந்ததியைப் பெருகச் செய்தார் என்றும் விசுவாசிக்கிறான். மிருகங்களின் சிருஷ்டிப்புக்கும் இதே செய்முறை ஒழுங்குகளை தேவன் கொடுத்திருக்கிறார்.

ஏதேனைத் திரும்பி பார்ப்போமேயாகில், அங்கு ஆதாமும் ஏவாளும் பூரண நிலையில் இருந்தனர். தங்களை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாக நுண்ணறிவும், ஒழுக்கமுமுடையவர்களாக காணப்பட்டனர். அதனால் அவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த மிருகங்களுக்கு மேலான அறிவோடு இருந்தனர். அவர்கள் உயர்ந்த ஆத்துமா உடையவர்களாய் உயர்ந்த, நேர்த்தியான ஜீவிகளாய் இருந்தனர். தேவன் மனிதனை இவ்வாறு உயர்ந்த நிலையில் சிருஷ்டித்ததின் நோக்கம் என்ன என்று நாம் வினவுகிறோம். தேவன் மிருகங்களை சிருஷ்டித்ததின் நோக்கம், தங்கள் இனத்தை அபிவிருத்தி செய்துவிட்டு சில காலம் இருந்து அவைகளுக்கு இடம் கொடுத்து விட்டு மரித்து விட வேண்டும் என்பதே. இந்த மிருகங்களெல்லாம் மனிதனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்பதே. மனிதனும் அவைகளை கிருபையாக ஆண்டு கொண்டான். ஆனால் மனிதனைப் பற்றிய நிலைமை என்ன? மனிதன் மிருகத்தைப் போல சாவதற்குப் படைக்கப்பட்டானா? சாகாமை நிலையிலும் மனிதன் சிருஷ்டிக்கப்படவில்லை. மனிதனிடத்திலே சாகக்கூடாத நிலைமை ஒன்றும் தேவனால் அருளப்படவில்லை என்பதை இதுவரையில் பார்த்தோம். தேவனுடைய நிபந்தனைகளுக்குட்பட்டு ஜீவிப்போருக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதற்கு ஏராளமான வேத ஆதாரங்கள் உண்டு. இப்படிப்பட்ட சாகாமை வாய்ந்த அதிகாரத்தையோ, வல்லமையையோ, சுபாவ இயல்பையோ தேவன் வழங்கவில்லை. தேவனுடைய சித்தம், நோக்கம் ஆகிய அவருடைய கிருபையினாலே மாத்திரம் ஒவ்வொரு அசைவும், இயக்கமும், பிழைப்பும் நடைபெறுகிறது.

சில வேளைகளில் மேலோட்டமாக சிந்திப்பவர்கள், மனிதன் சாவைக் காண்பதில்லை, அழியாமை உள்ளவன், ஏனெனில் அறிவியல் கூற்றுப்படி “பொருள்கள் அழிக்க முடியாதவை” என்று மேற்கோள் காண்பிக்கின்றனர். பொருள் என்பது ஒரு மனிதனோ அல்லது ஆத்துமாவோ அல்லது ஜீவியோ அல்ல. ஏனெனில் அது ஒரு பொருளாய் இருக்கிறது. சரீர அங்கம் என்பது ஒரு பொருள். ஆனால் அது உயிருள்ள ஒரு மனிதனின் சரீரமாக இருக்க வேண்டுமானால் அதற்கு விசேஷ அமைப்பு, இயங்கும் தன்மை இன்றியமையாதது.

அது மனிதனோ, ஜீவாத்துமாவோ ஆக வேண்டுமானால், அதில் ஜீவ ஆவி செலுத்தப்படவேண்டும். உடல் உறுப்புக்களின் இயக்கக் கோட்பாடு அழிக்க முடியாதது என்பதை எவரும் வாதிட மாட்டார்கள். எனவே சிந்திக்கக்கூடிய எவரும், உறுப்புக்களின் இயக்கம் அல்லது ஆத்துமா அழிக்கப்பட கூடியதே என்பதை ஒத்துக் கொள்வார்கள். இந்த அபத்தமான சிந்தனையை சிந்திக்காமல் ஏற்றுக் கொண்டு விட்டால், அற்பமான பூச்சி புழுக்கள் எல்லாவற்றிற்கும் கூட சாகாமை உண்டென்ற தப்பறையான எண்ணம் தோன்றிவிடும். அசைவுள்ள பொருளை அழிப்பதற்கும், அசைவில்லாமல் இருக்கக்கூடிய பொருளை அழிப்பதற்குமிடையே மிகுந்த வேறுபாடுகள் உண்டு.

தேவன் நமது ஆதிப் பெற்றோருக்கு கொடுத்த வாக்குத் தத்தமாவது: தேவனுடைய குமாரனாக, தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் வரையில், அவனுடைய ஜீவன் பாதுகாப்பாக தொடர்ந்து இருக்கும் என்பதே. கீழ்ப்படியாமற்போகும்போது தான் அவன் மரணத்தில் ஆழ்த்தப்படுவான். அதாவது (அவன்) ஆத்துமா இல்லாமற் போகும். நமது ஆதிப் பெற்றோர் இப்படி கீழ்ப்படியாமற்போன போதுதான், பாவத்தின் சம்பளமாக மரணத் தீர்ப்பைப் பெற்றனர் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. இந்த தீர்ப்பினைக் குறித்து கர்த்தர் கூறிய வார்த்தையை நாம் நன்கு கவனித்தாக வேண்டும். தேவன் உயிரற்ற வெறும் சடலத்தை நோக்கி, உயிரடையும் முன்பே இந்தத் தீர்ப்பினைக் கூறவில்லை. ஜீவ சுவாசத்தை நோக்கி தேவன் தமக்குக் தாமே இந்தத் தீர்ப்பைச் சொல்லிக் கொள்ளவுமில்லை. இந்த ஜீவசுவாசம் ஜீவன் தரக்கூடிய, சக்தி தரக்கூடிய ஒரு வல்லமையே அல்லாமல், அது கூர்மையான அறிவுடையதல்ல. ஆதாம் ஜீவாத்துமாவாக முழுமையாகப் படைக்கப்பட்ட கூர்மையான அறிவுடைய, உணர்வுள்ளவனான பின்பே தேவன் அவனிடம் பேசினார். இவ்விதமாக ஜீவனும், அறிவும் உள்ள ஆத்துமாவிடம் தீர்ப்பு சொல்வதே காரண காரியத்துக்கும், தர்க்க ரீதியாகவும் சரியானதாக இருக்கும். இப்பொழுது கர்த்தருடைய வார்த்தையை கவனிப்போமாக: "இதைப் புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய்."

ஆதாம் தேவ கட்டளையை மீறினவுடனே, கட்டளையின்படி

மரணத் தீர்ப்புக்கு உட்பட்டவனாகிறான். அந்த சட்டத்தின்படி அவன் ஆத்துமா மரித்தாக வேண்டும். கர்த்தர் தமது தீர்ப்பின்படி ஆதாம் கட்டளையை மீறின உடனேயே மரிக்கச் செய்திருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக அவன் தொடர்ந்து ஜீவித்துக் கொண்டே இருக்கக்கூடிய சலுகைகளை நீக்கி படிப்படியாக சாகும்படியாக செய்தார். ஜீவ விருட்சத்தின் கனியை அன்றாடம் புசித்துக் கொண்டிருந்தால் அன்றாடம் ஏற்படுகிற தேய்மானத்தை அது சரிசெய்து கொண்டே வரும். மனிதன் மீறுதலுக்குப்பட்டவுடனேயே ஜீவ விருட்சத்தின் கனி அவனுக்குக் கிடைக்கக் கூடாதபடி செய்யப்பட்டது. அவனுக்குக் கீழ்நிலையிலுள்ள பிராணிகளுக்கொப்பாக, அவனும் மரணத்திற்குட்பட்டவனானான். இருந்த போதிலும், மனிதனைக் பொறுத்த வரையில் மரணம் என்பது சாபமாகக் கருதப்பட்டது. ஏனெனில் தெய்வ ஒழுங்கை மீறுகிறதினால் மரணம் உண்டாகிறதினால் அது சாபம் என கருதப்படுகிறது. அதன் காரணமாக, பூமியில் அரசராக ஏற்படுத்தப் பட்ட ஆதாமுக்கு உண்டான மரணம் அவனுக்கடுத்த நிலையிலிருந்த பிரஜைகளுக்கும், விலங்குகளுக்கும் தொடர்ந்தது. அரசனே தன்னுடைய பரிபூரணத்தி-ருந்து வீழ்ந்தமையால் அவனுக்குக் கீழ்ப்பட்ட அனைவரும் பூரணத்தை இழந்தனர்.

தங்களுடைய பிதாவாகிய ஆதாமிடமிருந்து பாவம் செய்வதற்கு முன் ஆதாம் பெற்றிருந்த சலுகைகள், உரிமைகள் பூரண சரீரம் ஆகிய தேவ சலுகைகளை, உரிமைகளை மீறுதலுக்குப் பின் பிறந்த சந்ததியார் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே வேதாகமம் சொல்லுகிறபடி ஆதாமோடு அவன் சந்தியாரும் பாவத்தினால் வீழ்ச்சியடைந்து மரணத்துக்குட்பட்டனர். தேவனுடைய சிருஷ்டிப்பின்படி தேவனுடைய சாயலில், நித்திய ஜீவனை எப்போதும் பெற்றுக் கொள்ளத் தக்க கூர்மையான அறிவுள்ள ஞானமுள்ளவனாய் உண்டாக்கப்பட்ட மனிதனுடைய இரட்சிப்புக்கு தேவனுடைய அனந்த ஞானம், அன்பு, நீதி, வல்லமை ஒரு திட்டத்தை கொடுத்திருக்கிறதா என்று நாம் பார்க்கிறோம். இதன் மூலம் அவர் தான் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்குகிறார் என்று காண்பிக்கிறார் என்று பார்க்கிறோம். (ரோம. 3:25)

இந்த நம்பிக்கை ஒருபோதும் வீணாகாது. மனிதன் தான் இழந்து போன மேன்மையான நிலையை திரும்பவும் பெற கிறிஸ்துவின் மூலமாக மரித்தோரின் உயிர்த்தெழுதல் வழியாக தேவ மீட்பின் திட்டத்தை வேதம் எடுத்துரைக்கிறது. எல்லாரும் தேவ தயவை எளிதில் அடைந்துவிட முடியாது. ஒவ்வொன்றுக்கும் உரிய எல்லைகள் வரையறைகள், நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். ஆனால் இப்பேர்ப்பட்ட பூரண நிலையை அடைய அதற்குரிய வாய்ப்பு அனைவருக்கும் வழங்கப்படுகிறது. ஆதாமின் சந்ததியாரில் கணிசமான பெருந்தொகையான ஜனங்கள் கிறிஸ்துவின் மூலமாக தேவன் ஏற்பாடு செய்திருக்கும் இந்த நியாயமான நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவார்கள் என்று நாம் நம்புகிறோம். இப்படிப்பட்ட இரட்சகர் மீது விசுவாசம் வைத்து, புதிய உடன்படிக்கைக்கு கீழ்ப்படிவார்கள்.

நமது கர்த்தர் தம்மிடம் கேட்கப்பட்ட வினாவிற்கு விடையளிக்காதது போல, நாமும் இதற்கு பதிலளிக்க தேவையில்லை. அவர்கள் இயேசுவிடம் கேட்ட வினா: "இரட்சிக்கப் படுகிறவர்கள் சிலபேர் தானோ?" (லூக் 13:23) நமது கர்த்தர் எல்லாருக்கும் மீட்புக் கிரயத்தை செலுத்தினதினாலே, எல்லாரும் மீட்படைவார்கள் என்ற நற்செய்தியை அனைவருக்கும் எடுத்துக்கூறுவதே நமது கடமையாகும். இந்த மாபெரும் சத்தியத்தை ஏற்ற வேளையில் ஏற்ற காலத்தில் யாவரும் அறிந்து கொள்வார்கள் என்பதே வாக்குத்தத்தம். அவரிடமிருந்தே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு எல்லோருக்கும் வழங்கப்படும். "உலகத்தில் வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி." (யோவா. 1:9; 1 தீமோ.2:4-6) போதகரின் வார்த்தையை கேட்கிறதற்கு காதுடைய எவருக்கும் திரும்பத் திரும்ப நாம் சொல்லிக் கொண்டே இருந்தாக வேண்டும். அவரது வார்த்தைகள்: "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப் படுங்கள். அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களாலே கூடமாற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வீட்டெஜமான் எழுந்து, கதவைப் பூட்டினபின்பு அதனுள் நுழைய முடியாது." (லூக். 13:24,25) அதாவது இந்த சுவிசேஷ யுகத்தில் ஒரே ஒரு அழைப்பு - அது பேரழைப்பாகிய பரம அழைப்பாகும். அது

*சுயதியாகமாகிய இடுக்கமான வாசலாகும். இந்தக் காலகட்டத்தில் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டிருக்கிற சாகாமையை சுதந்தரித்துக் கொள்ள எவ்விதத்திலும் அசதியாயிராமல், மிகுந்த உற்சாகமாய், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இந்த யுகத்தின் இறுதியில் மகாபெரிய உபத்திரவம் வரும்போது, நம்முடைய பரிசுத்த வான்களின் தேர்வு முடிவுபெறும். அவர்கள் மகிமைப்படுத்தப் பட்டார்கள் என்பதை உய்த்துணரலாம். இன்றைக்கு உலகத்திலே நடந்து கொண்டிருக்கிற அநேக உபத்திரவங்களை தவறாக கணக்கிட்டு அநேகர் பரம அழைப்பு முடிந்துவிட்டது என்று கருதி தங்களுடைய உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றாமல் அசதியாய் போய்விட்டனர்.*

*ஆயிர வருட அரசாட்சியின்போது தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் ஆதாமின் சந்ததியாகிய, பொதுவான மனுக்குலத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நிறைவேற்றப்படும். ஆட்டுக்குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டவர்களுக்கு புதிய உடன்படிக்கையின்படி நித்திய ஜீவன் அளிக்கப்படுகிறது. சுவிசேஷ யுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சிறுமந்தை என்கிற ஆட்டுக்குட்டியானவரின் மனைவி தவிர வேறு எவருக்கும் சாகாமை, தெய்வீக சுபாவம் கொடுக்கப்படுவதாக எங்கும் சொல்லப்படவில்லை. ஆதாமுக்கும் அவன் பின் சந்ததிக்கும், முந்தின சீருக்கு கொண்டு வரப்பட்டு பூரண மனித சுபாவமும் நித்திய ஜீவனும் அருளப்படுகிறது. (அப். 3:19-21) ஆதாம் தேவ கிருபையிலிருந்து பாவத்திலும் மரணத்திலும் விழுந்ததற்கு முன்பிருந்த தேவ சாயல் நிலைமைக்கு கொண்டு வரப்படுவார்கள். ஆயிர வருட இறுதியின்போது தேவ சட்டத்திற்கு கீழ்ப்படிகிற மனுக்குலத்தினர் ஆதாமினால் இழந்த யாவற்றையும் கிறிஸ்துவின் மூலமாக திரும்ப பெற்றுக் கொள்வார்கள். அனுபவமும், அறிவும் ஆகிய ஆயுதங்களைத் தரித்தவர்களாயிருப்பதால் அவர்கள் ஆதாமைப் போல எந்த சோதனையையும் தாங்கக்கூடியவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய நீதியின்படி ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், மனப்பூர்வமாகவும், வெளியரங்கமாக வெளிப்படுத்திக் காண்பிக்கக்கூடியவர்களாகவும், தேவனோடு இசைந்து*

*கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்கவேண்டும். இப்படி இசைந்து கீழ்ப்படிந்திருக்கிறவர்களே ஆயிர வருட அரசாட்சிக்குப் பிறகு இருக்கக் கூடிய யுகாயுகத்திலும் வாழ்வார்கள். மற்றவர்கள் இரண்டாம் மரணத்தில் "ஜனத்திலிராதபடி நிர்மூலமாக்கப்படுவார்கள்." - அப். 3:23*

*ஆயிர வருட யுகத்தில் இனி மரணமும், அழுகையும் கண்ணீரும் இல்லாததற்கு காரணம் அந்த யுகத்தில் ஜெயங்கொள்கிறவர்கள் சாகாமை என்ற கிரீடத்தை சுதந்தரித்துக் கொள்வதால் அல்ல. ஆனால் அவர்கள் நீதி எது, அநீதி எது என்பதையும் அதன் விளைவுகளையும் அறிந்து, கற்றுக்கொண்டு, தேவனுக்கும் நீதிக்கும் முழுமையான இசைவுடன் குணநலன்களை பெற்றிருப்பதால் தான். அவர்கள் பரீட்சையில் தேறினவர்களானதால் இனியும் பாவம் செய்யமாட்டார்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவார்கள். அவர்கள் வழி திறந்திருக்கும். அவர்களுக்கு இனி எந்த தண்டனையும் கிடையாது. அவர்கள் தம்மில்தாமே ஜீவனுடையவர்களாயிராமல் தேவனுடைய கிருபையின்படி ஆகாரத்தை சார்ந்து பிழைக்கிறவர்களாயிருப்பார்கள். ஒப்பிடுக. வெளி. 21:4,6,8; 7:16 மத்.5:6*

*சாபத்தினால் மனுக்குலத்திற்கு மரணம் உண்டானது. ஏதேனில் மனுக்குலம் பெற்றிருந்த உண்மையான ஆசீர்வாதங்களை திரும்பப் பெற வேண்டுமானால் சட்டப்படி, சாபம் நீக்கப்பட வேண்டும். ஆதாம் பூரண நிலையிலிருந்தபோது ஏதேனில் பரதீசின் நிலையி-ருந்தான். ஆனால் ஆதாமின் பின் சந்ததியாகிய தற்கால மனிதன் உள்ளத்தால், உடலால், ஒழுக்கத்தால் அபூரணராயிருப்பதால் பரதீசில் வாழும் தகுதியை இழந்துவிட்டான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவம், சாபம், மரணம் ஆகியவற்றிலிருந்து மனுக்குலத்தை மீட்டு தேவனோடு ஒப்புரவாக்கியதால், ஆயிர வருட அரசாட்சியின்போது மனுக்குலம் முந்தின சீருக்கு பழைய தேவ சாயலுக்கு ஜீவனை அளிப்பவரும் மீட்பருமாகிய கர்த்தராகிய கிறிஸ்துவால் மீட்கப்பட்டிருக்கும். மனிதன் சரி எது, தவறு எது அதன் விளைவுகளை அனுபவ ரீதியாக ருசித்துப் பார்க்க வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கம். ஒருமுறை பாவம் செய்தால் அதன் தண்டனை மரணம் என்பதை*

அனுபவப்பூர்வமாக உணர்ந்த பிறகு அவன் பாவம் செய்ய மாட்டான். இப்படி அனுபவப் பூர்வமாகக் கற்றுக் கொண்ட பாடம் வாழ்க்கையில் மீறுதலினால் பெற்ற மிகப்பெரிய தண்டனை நினைவில் எப்போதும் இருக்கும். ஆயிர வருட அரசாட்சியின் போது இவர்கள் தேவ நீதியை கற்றறிவார்கள். தெய்வீக குணங்களாகிய சத்தியம், நன்மை, அன்பு மற்றும் எல்லா கிருபைகளையும் அறிந்திருப்பார்கள். எனவே அவர்கள் மனப்பூர்வமாக கீழ்ப்படிந்திருப்பார்கள். அவர்கள் நித்திய ஜீவன் என்ன என்பதை நன்குணர்ந்திருப்பதால் மகிழ்ச்சியோடு அதை வரவேற்கத் தயாராக இருப்பார்கள். இந்த அனுபவம் ஆதாமுக்குக் கூட ஏற்பட்டிருக்காது. எனவே ஆதாமும் அத்தகைய அனுபவ ரீதியாக பாடத்தைக் கற்றுக் கொள்ள வாய்ப்பு இருந்திருக்காது.

இந்த நோக்கத்திற்காகவே மரணம் பொதுவாக மனுக்குலத்திற்கு படிப்படியாக வந்தது. அதே போல் உயிர்த்தெழுதலும் படிப்படியானதாக இருக்கும். மரணமும் சீரழிவுமாகிய படுபாதாளமாகிய உளையான பாவச்சேற்றி-ருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டெழுந்து ஆதாமின் பூரண ஜீவநிலைமைக்கு உயருவதாக இருக்கும். மாம்சீக, ஆவிக்குரிய ஆபிரகாமின் வித்தாகிய சிறு கூட்டத்தார் மட்டுமே தேவனுடன் இசைவாக கொண்டு வரப்படுவார்கள் என வேதம் கூறுகிறது. இது மட்டுமே மனுக்குலத்தின் பொதுவான காரியங்களிலிருந்து வேறுபட்டது ஆகும். கலா. 3:29; எபி. 11:39,40

இதில் வேதாகமம் ஆவிக்குரிய வித்து அடையப் போகிற சாகாமை என்கிற விசேஷித்த தெய்வீக சுபாவத்தை வெகு பிரகாசமாக எடுத்துக் காண்பிக்கிறது. பொதுவான மனுக்குலத்திற்கு நித்திய ஜீவன் என்கிற தேவ ஈவு அளிக்கப்படுகிறது. யார் யார் தேவக் கட்டளைக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் அனைவரும் இவ்விதமாக ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள். எல்லாருக்கும் நியாயாதிபதியாகிய தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் தேவன் கூறுகிறபடி மரணத்தில் அழிக்கப்படுவார்கள்.

"பாவத்தின் சம்பளம் மரணம்." ரோம. 6:23

"பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்." - எசேக். 18:4,20

*"குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை. தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும்." யோவான் **3:36***

*புற ஜாதி மார்க்கக் கொள்கைகள் யாவற்றையும் விட தேவனுடைய வார்த்தையாகிய வேதம் கூறும் தத்துவங்கள் இந்தப் பாடத்தில் மட்டுமல்ல, வேறு எந்த பாடத்திலும் ஆழமாகவும், மிகத் தெளிவாகவும், பகுத்தறிவு ரீதியிலும் விளக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். தேவன் நமக்குக் கொடுத்த சத்தியத்திற்காக அவரை துதிப்போமாக! தேவ வல்லமையினாலே மனப்பூர்வமாக சத்தியத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல இருதயத்தை நமக்குத் தந்ததற்காக நன்றி நவில்வோமாக!*

*பூமியிலுள்ள கோடான கோடி மக்களை தேவன் எவ்வாறு உயிர்த்தெழுப்பப் போகிறார் என்று சந்தேகம் எழுகிறது. திரும்ப ஞாபகத்திற்கு வரும் தற்கால ஜீவிய அனுபவங்களினால் ஒவ்வொருவரும் தாங்கள் யார் என்பதை அறிவதால் ஆதாயமடைவர்களா? மனிதன் ஒலி நாடாவில் தான் பேசியதை பாதுகாத்து வைத்து விரும்பும்போது அதை போட்டுக் கேட்பது போலவே முன் வாழ்ந்த மனிதர்களை மீண்டும் உயிர்த்தெழச் செய்து அவர்களுடைய சிந்தனைகளையும், உணர்வுகளையும், அனுபவங்களையும் திரும்பக் கொடுப்பது தேவனுக்கு மிக எளிதானதே. தீர்க்கதரிசனமாக உயிர்த்தெழுதலையோ, அல்லது முதல் பிறப்பை பிரதிபலிக்கும் வண்ணமாகவோ தாவீது தேவனுடைய வல்லமையை குறிப்பிடுவதுபோல் தனது சங்கீதத்தில் கூறுகிறார்.*

*"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்ட படியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாகத் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது." - சங். **139:14-16***

## அத்தியாயம் 14

# ஒப்புரவாகுதலின் அவசியம் - சாபம்

*சாபம் வருங்கால தீமையல்ல, தற்கால தீமை-எல்லார் மேலும் கேடு எங்கே, ஏன் வந்தது-பாவத்திற்கு விரோதமான தேவனுடைய உக்கிரம் எப்பொழுது தீரும்-இப்பொழுதும் வருங்காலத்திலும் தப்பித்துக்கொள்-தேவன் மேற்கொண்ட திட்டத்தில் ஒப்புரவாகுதல் அவசியம்-தேவதூதர்களுக்கும் வருங்கால சிருஷ்டிகளுக்கும் மனிதன் ஒரு உதாரணம்.*

*"இனி ஒரு சாபமுமிராது."வெளி. 22:3*

**வே**தவாக்கியங்களின்படி தேவ திட்டம் நிறைவேறும் போது மேற்சொன்ன வசனத்தின்படி பூமியிலுள்ள சாபங்களெல்லாம் ஒழியும்போது இந்த வார்த்தையின் பொருத்தம் யாவருக்கும் விளங்கும். அவ்வாறாக பூமியிலுள்ள மனிதர்கள் சாபத்தி-ருந்து விடுதலை பெறும்போது முழு பூமியிலும் சாபமில்லாத தேவ இராஜ்யம் உருவாகும். ஆனால் சாபம் இப்பொழுது நீங்கவில்லை. உலகத்திலும், உலகிலுள்ள மாந்தர் பேரிலும் சாபம் முற்றிலுமாக இன்னும் நீக்கப்படவில்லை என்று பொருள்படுகிறது. முதன்முதலாக சாபம் மனிதர் மேலும் பூமியின் மீதும் சுமத்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலம் உண்டு என விளங்குகிறது. சாபம் எப்போது எப்படி மனுக்குலத்தின் மீது சுமத்தப்பட்டது என்பதை யாராவது கருத்தாய் ஆராய்கிறபோது, அவை வேத வாக்கியங்களுக்கு இசைவாயிருப்பதையும், அதற்கு ஆதாரமான மூன்று குறிப்புக்களையும் கண்டு வியப்படைவார்கள். அதன் பின்பே இவ்வகையான திட்டம் எந்த மனிதனாலும் ஏற்படாமல் தேவனால் உண்டானது என்று நிச்சயமாய்புரிந்து கொள்வார்கள். வேதாகமம் பல்வேறு கால கட்டங்களில் இரண்டாயிரம் ஆண்டு காலத்தில் பல்வேறு தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டிருப்பினும் அனைத்தும்

இசைவாக ஒரே நோக்கில் எழுதப் பெற்றவை என்பதை புரிந்து கொள்ளவேண்டும். வேறு எந்த பாடக் கருத்திலும் இத்தனை ஆதார சாட்சியங்கள் கூறப்படவில்லை. இந்த சாபத்தைப் பற்றியும் சாபத்தால் மனிதருக்கு நேர்ந்த விளைவுகள் பற்றியும் சாபத்திலிருந்து மீட்பு மற்றும் இறுதியாக சாபம் ஒழிக்கப் படுதலை பற்றியும் இவ்வளவு நிலையான உறுதியான முடிவு வேறு எதிலும் தெளிவாய் கூறப்படவில்லை.

மனுக்குலத்தின் மீது சொல்லப்பட்ட சாபம், அது இப்போதைக்குரியதாக இராமல், வருங்காலத்திற்குரிய நித்திய ஆக்கினையும் சாபமுமாகும் என பொதுவாக புரிந்து கொள்ளப்பட்டு போதிக்கப்படுகிறது. ஆனால் வேதாகமத்தின்படி இந்த சாபம் தற்காலத்திற்குரியது தான். அதாவது மரணம் எதிர்காலத்தில் எடுபட்டுப் போய்விடும். மரண சாபம் என்பது சாகும் வேளையையோ, அந்த நாளையோ, நேரத்தையோ கடைசி மூச்சுவிடுகிற கடைசி கண நேரத்தையோ குறிக்கும் என கருதிவிடக் கூடாது. மரண சாபம் என்ன என்பதை உண்மையாகவே நாம் உணர வேண்டுமாயின், முதலாவது பூரண மனிதனையும் அவனது பரிபூரண உடல், மனவலிமை ஆகியவற்றையும், அவனை தனது சாயலாக படைத்தவருடைய பண்பாகிய உடல் ரீதியான, மனரீதியான, ஒழுக்க ரீதியான இயல்புகளையும் நம் மனக் கண்முன் கொண்டு வர வேண்டும். அவருடைய இயல்பு - மனரீதியாகவும், உடல், ஒழுக்க ரீதியாகவும், மிக உயர்ந்த நிலையில் "நன்றாய் இருந்தது." இந்தப் படைப்புக் கெல்லாம் அதிபதியாகிய அவர் தம் படைப்புப் பற்றி கூறுகிறதாவது:

"தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது." - ஆதி. 1:31

நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமும், அவனுடைய சந்ததியும் இவ்விதமான பரிபூரண நிலைமையை உடையவர்களாயிருந்தனர் என்பதெல்லாம் ஜலப்பிரளயத்தினால் மறக்கடிக்கப்பட்டு விட்டது. ஜலப்பிரளயத்திற்கு முன்பு நமது முற்பிதாக்கள் எவ்வித நிலையில் பரிபூரணத் தன்மையில் இருந்தனர் என்பதைக் கணிக்க இயலாமல் போய்விட்டது. தேவன் தனது கைவேலையைப் பற்றி "உத்தமமானது" என தமது வாக்கினாலே

உரைத்துள்ளார். (உபாக 32:4) மேலும் மனிதனை தேவன் செம்மையானவனாகப் படைத்திருந்தும் அவன் "அநேக உபாயத் தந்திரங்களை தேடிக் கொண்டான்" என்று கூறினார். (பிர. 7:29) ஏதேன் தோட்டத்தை விட்டு மனிதன் துரத்தப்பட்ட பின்பு சாபத்தினாலும், பாதகமான சூழ்நிலைகளினாலும் மனிதன் முழுவதும் மாறிவிட்டான். எவ்வளவு பாதகமான சூழ்நிலைகள் எதிரிடையாக இருந்தபோதிலும் மனித உறுப்புகளின் செயல்பாடுகள் நேர்த்தியாகவேயிருக்கின்றன. மனுக்குலத்தின் தந்தையான ஆதாம் 930 வருடங்கள் உயிருடனிருந்தான். ஆதி. 5:5

தற்காலத்தில் வேகமாக வளர்ந்து வரும் சுகாதார, மருத்துவ, அறிவியல் வளர்ச்சிகளில்லாத காலத்திலேயே ஆதாம் நோயின்றி நீண்ட காலம் வாழ்ந்தான். அறிவியல் வளர்ச்சி பெற்று பல நூற்றாண்டு கால அனுபவம் உள்ள தற்காலத்தில் 10 வயதிற்குட்பட்ட பாலகர்கள் மக்கள் தொகையில் பாதிப்பேர் மரணமடைகின்றனர். இப்போது மனிதர்களின் சராசரி வயது 33 ஆக இருக்கிறது. சாபமும் அதனால் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பின்பு மனிதனின் உடற்கூறு எவ்வளவாய் தேய்ந்துவிட்டது என்பதை தற்கால அறிவியல் புள்ளி விவரங்களைக் கொண்டே சாபம் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று அறிந்து கொள்ளலாம். மனிதன் உள்ளத்தால் எவ்வளவாக திடகாத்திரமாயிருக்கிறானோ அதுபோல உடலாலும் திடகாத்திரமாயிருப்பான் என்பதை நாம் அறிவோம். எவ்வளவாக மனிதனுடைய உடற்கூறு ஆரோக்கியமாயிருந்தால் (மற்றவைகள் மாறாமலிருந்தால்) மனவலிமையும் ஆரோக்கியமாகவும் பலமுள்ளவைகளாகவுமிருக்கும். இந்தளவுக்கு நமது மனவலிமை இருப்பதற்கு நமது தந்தையாகிய ஆதாமுக்குக் கடமைப்பட்டவர்களாயிருப்போம். ஏனெனில் மனவலிமைக்கு ஆதாமே காரணம். ஆகவே பிதாவாகிய தேவன் ஆதாமை சிருஷ்டித்து "மிகவும் நன்றாயிருந்தது" என்றார். ஆதாமின் உள்ளம், உடல், சுபாவம் இவைகள் மூன்றும் நன்றாயிருந்ததால் தேவன் ஆதாமை தனது குமாரன் என்று கூறினார். லூக். 3:38

உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் மனிதனுடைய பூரணத்தைக் குறித்து வேதம் (சிருஷ்டிப்பை பற்றி) கூறும்போது அது சன்மார்க்க பூரணத்தை குறிப்பாக உணர்த்துகிறது. சன்மார்க்க

சரிவையும், அதனிமித்தம் இழிநிலையையும் வைக்கவில்லை என்று வேதம் கூறுவதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சன்மார்க்க குணமில்லாதவனை வேதம் "மிகவும் நன்றாயிருந்தது" என்றும் சிருஷ்டிகரின் சாயல் என்றும் கூறுமா என்பதை சிந்திக்க வேண்டும். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பரிபூரணமாய் படைக்கப்பட்டாலும் அவன் ஒழுக்கக் கேடானவனயிருந்தால் அவன் நல்ல மனிதனாக எப்படியிருக்க முடியும்? ஒருவருக்கு எவ்வளவுதான் திறமையிருந்தாலும் அதனைக் கட்டுப்பாடு செய்யாவிட்டால் ஒழுக்கங் கெட்டவனாகி விடுவான்.

ஆதாமுக்கு எதிராக சொல்லப்பட்ட தீர்ப்பு என்னவென்றால் "செத்துக்கொண்டே சாவாய்" (ஆதி. 2:17) என்பதாகும். இத் தீர்ப்பு அவனுடைய சரீரத்தைப் பற்றியது மட்டுமல்ல, உடல் சம்பந்தமானது மட்டுமல்லாது உள்ளமும் சேர்ந்த முழு மனிதனைப் பற்றியதாகும். இப்படிச் சொல்லும்போது உள்ளத்தைப் பற்றி மட்டுமல்லாது ஒழுக்கத்தையும் பற்றியதாகும். ஏனெனில் மனதும் ஒழுக்கமும் ஒன்றோடொன்று இசைவுடன் தொடர்புடையதாகும். இதனால் தான் முன்பிருந்த மனநிலையிலிருந்து மனிதன் படிப்படியாக விழுந்திருக்கிறான் என அறிகிறோம். மனிதனுக்கு அனுகூலமான நவீன மருத்துவ வசதிகள் ஏற்பட்டும், ஒழுக்கக்கேடு, ஆரோக்கிய குறைவு ஆகியவைகளினால் சராசரி வயது 33 ஆகிவிட்டது. இவ்வளவு ஆயுள் குறுகிய மனிதன் அதிநுட்பமான அறிவியல் கண்டுபிடிப்புகளையுடைய வனாயிருக்கிறான். மனிதனின் ஒழுக்கத் திறமைகளைப் பற்றி அப்போஸ்தலர் கூறும்போது, "நீதிமான் ஒருவனாகிலுமில்லை... எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்." ஏனெனில் ஆதாமின் பாவம், அனைவருக்கும் பங்குண்டாக்கிற்று. ரோமர் 3:10,23

தொடர்ந்து அப்போஸ்தலர், ஆதாம் தெய்வீக வழக்கு மன்றத்தில் வேண்டுமென்றே பாவம் செய்தான் என்றார்; மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை என்றார். (1 தீமோ. 2:14) தெய்வீக ஒழுக்கநெறிக்குத் தேவையான கீழ்ப்படிதல் அவரிடம் நிரம்ப உண்டு என்பதை அவர் நமக்குக் காண்பிக்கின்றார். தமது சிருஷ்டிப்பிலே ஒழுக்க நெறிமுறைகளில்லாத ஒருவரைத் தெரிந்து கொண்டு, திட்டம் தோல்வியடைவது தெய்வீக நீதிக்கு ஏற்புடையதல்ல;

படைப்பிலேயே ஒழுக்கமற்றவர்கள் சோதனைகள் நிறைந்த வாழ்விலே வெற்றியடைய முடியாது. அப்படிப்பட்டவர்கள் அவருடைய கட்டளைக்கு அமைதலாக கீழ்ப்படிய முடியாது. ஆதாமுக்கு நேர்ந்த சோதனையில் மிக முக்கியமான உண்மை என்னவெனில் நித்திய மரணமோ அல்லது நித்திய ஜீவனோ ஆகும். அந்த சோதனையிலே ஆதாம் கீழ்ப்படியாமல் போனது அறியாமல் செய்தது அல்ல; தெரிந்தே செய்தது. அதனால் ஆதாம் பிரமாணத்தின்படி ஏற்ற தண்டனையை மாபெரும் நியாயதிபதியிடமிருந்து பெற்றுக் கொண்டான். விருப்பு வெறுப்பில்லாத நியாயமான சிந்தனையாளர்கள் ஆதாம் செய்த மீறுதலுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை நியாயமானது தான் என்பர்.

மனுக்குலப் பாவத்திற்காக ஈடுபலி செலுத்திய பின்னரும் கூட பிதாவாகிய தேவன் மனுக்குலத்தை உச்ச நீதிமன்றமாகிய தேவ நீதிமன்றத்திற்கு முன்னால் சோதிக்க மறுத்துவிட்டார். ஏனெனில் விழுந்து போன நிலைமையில் பூரண நீதிக்கு முன்பாக நாம் விசாரணைக்கு நிற்கமுடியாது. நமது கிரியைகளால் அவருக்கு முன்பாக நீதிமானாக முடியாது. இதெல்லாம் முடிவாக, மனுக்குலம் அகாதமான பாதாளத்திலே விழுந்துவிட்டது என்பதையும், அதனிமித்தம் ஆதாம், நம்மைவிட மேலான நிலையிலிருந்தும் அவரை சோதனைக்கு நிறுத்தவில்லை என்பதையும், பூரண மனிதன் மட்டுமே சோதனைக்கு நிற்க முடியும் என்பதையும் நிரூபிக்கிறது. தேவன் சுவிசேஷ யுகத்தில்தான் நீதி விசாரணை நடத்துகிறார் என்பது வேதா கமத்திற்கொத்த கருத்தாகும். நித்திய நித்தியமாக ஆவிக்குரிய தேவ சுபாவத்தைப் பெறுபவர்களுக்கு சுவிசேஷ யுகத்திலே நியாயத் தீர்ப்பு நடைபெறும். உலக ஜனங்கள் ஆயிரம் வருட அரசாட்சியில் நியாயத் தீர்ப்பு பெற்று, பூரண மனித சுபாவத்தைப் பெறுவார்கள். "...பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத் தீர்ப்புச் செய்யாமல், நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்." - யோவா. 5:22

வேதாகமம் சொல்லுகிறதுபோல மனிதன் என்பவன் (உள்ளப்பூர்வமாக, ஒழுக்கப் பூர்வமாக, உடல் பூர்வமாக உள்ள ஒருவன்) பெற்ற மரணத் தீர்ப்புக்கேதுவான சாபாமானது, மனிதனுடைய ஒவ்வொரு பாகத்தையும் மூலகங்களையும்

*சார்ந்ததாக இருக்கிறது என்பதை நாம் காணலாம். நம்மைச் சுற்றிப் பார்த்தாலோ உலகிலுள்ள ஒவ்வொருவரையும் பார்த்தாலோ இவ்வுண்மை எளிதில் விளங்கும். சரீர பலம் குன்றும்போது சரீர அங்கங்களிலே மிக பலவீனமான வயிறு, அல்லது இரைப்பை சீக்கிரம் பலவீனப்படுகிறது. சிலருக்கு தசைகள் தளர்ச்சியடைகிறது. வேறு சிலருக்கு எலும்பு மஜ்ஜைப் பாதிப்படைகிறது. இவைகளெல்லாம் ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது சிலருக்கு மனதளவிலும் சிலருக்கு உடல் அளவில் ஏற்படும் நஷ்டம் மிகப் பெரியதாயிருக்கும். இருந்தாலும் எல்லாருமே குறைபாடு உள்ளவர்கள் தான். இந்தச் சாபத்தினாலே அனைவரும் நம்பிக்கையிழந்தவர்களாக இருக்கின்றனர். நாம் பிறந்த களங்கத்தின் பிணைப்பிலிருந்து விடுபட எவருக்கும் நம்பிக்கையில்லை. இதைக் குறித்து சங்கீதக்காரன் கூறுகிறதாவது: "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்." (சங். 51:5) எனவே மரண சாபம் நாம் பிறந்த நாழிகையிலிருந்தே தொடர்கிறது. எனவே இவைகளுக்கெல்லாம் காரணம் நம் தனிப்பட்ட பாவம் அல்ல என விளங்குகின்றது. பாவங்களை நாம் முற்பிதாக்களிடமிருந்து சுதந்தரித்துக் கொண்டோம். சாபத்தையும் பாவத்தையும் முற்பிதாவாகிய ஆதாமிடமிருந்தே சுதந்தரித்துக் கொண்டோம்.*

*நாம் அனைவரும் மரணத்திற்குள்ளாகவே பிறக்கிறோம். சோதித்துப் பார்க்கும்போது இதன் உண்மை அனைவருக்கும் தெரியவரும். உதாரணத்திற்கு, சில சொற்களை கவனிப்போம். இயலாமை* (dis-ease), *தேய்மானம்* (decav), *உடல்வலி*(aches and pains), *பலவீனம்* (weakness), *நோய்* (sickness) *போன்றவைகள் மரணத்தின் ஆரம்பக்கட்ட செயல்பாடுகளாக நம்முள் இயங்குகின்றன. இவ்வாறாக, தெய்வீகத் திட்டத்தை வஞ்சனையாக, புரட்ட சாத்தான் தன் ஆதிக்கத்தை பிரயோகித்து குருட்டாட்டத்தில் தவிக்கவிட்டிருக்காவிடில், சாபத்தின் ஆதிக்கம் தங்களைச் சூழ்ந்திருப்பதை மனிதன் தெளிவாய்க் கண்டு உணர்ந்திருப்பான். அப்போஸ்தலன் இந்த நிலைமையைக் குறித்துக் கூறுகிறார்:*

*"மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்*

*பட்டிருக்கிறது." - ரோம . 1:18*

*மிகமிகக் குறைந்த அளவிலான அநியாயமும் பாவமே. வருங்காலத்தில் தேவகோபம் அக்கினி ஜூவாலையாக வெளிப்படும் என்று அப்போஸ்தலன் இங்கு கூறவில்லை. மாறாக, தற்கால ஜீவியத்தில், தற்பொழுது இவ்வுண்மைகளை மனக்கண்கள் திறக்கப்பட்டவர்கள் கண்டு கொள்வர். ஒவ்வொரு மருத்துவனின் அடையாளமும், தேவ கோபத்தை மனுக்குலம் நோயினாலும் மரணத்திலும் அல்லல்படுவதை வெளியரங்கமாய் குறிப்பிடுகிறது. சவ அடக்கம் செய்வோரின் அடையாளங்கள் தேவ கோபத்தை வெளிப்படுத்துகிறது. மனுக்குலம் செத்துக் கொண்டிருப்பதை நமது கவனத்திற்கு கொண்டு வருகிறது. சவ ஊர்வலமும் சவ ஊர்தியும், ஒவ்வொரு கல்லறையும், துக்கத்தை அறிவிக்கும் கறுப்பு நிறக் கொடியும், தேவகோபம் பாவிகளுக்கெதிராக மட்டுமல்லாமல், அநீதியுள்ளோர் அத்தனை பேருக்கும் எதிராக, குறைந்த அநீதி செய்தோர் மேலும் வெளிப்பட்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. ஆகையால் தப்பித்துக் கொள்ள ஏதுவில்லை. நீதிமான் ஒருவனுமில்லை, ஒருவனாகிலுமில்லை. ஆகையினால், இந்த சாபமாகிய கோபத்துக்கு குழந்தைகளும், வயோதிகரும் கீழ்ப்பட்டவர்களே.*

*தீர்க்கதரிசியான யோபு தன் சாபத்திலும், உக்கிரத்திலும், மனச்சோர்வடைந்திருந்த போது, "நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னை திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தை குறித்தால் நலமாயிருக்கும். என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்; உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக" என்று கூப்பிட்டார். (யோபு 14:13,15) ஆறாயிரம் ஆண்டுகளாக நீடித்து வருகிற கடும் சினம், தேவனின் பழிவாங்கும் நாளிலே முடிவடையும். இந்நாளில் நீதியின்படி கூடுதலான உபத்திரவம், மனுக்குலத்தின் மேல் இருக்கும். ஏனென்றால் நீதியின் பிரமாணத்தை கிறிஸ்தவ சமுதாயம் வெறுத்து, நல்ல வாய்ப்பையும், உரிமையையும் இழந்துவிட்டது. ஆதலால் முன்இருந்ததை விட அதிகமான உபத்திரவ காலம் இந்நாட்களில் உண்டாயிருக்கும். "யாதொரு ஜாதியும் தோன்றினது முதல் அக்கால*

மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்று தானி 12:1-ல் பார்க்கிறோம். தேவனுடைய பரிசுத்தவான்கள் மனுஷகுமாரனுக்கு முன் நிற்கத் தகுதியுள்ளவர்களாகவும், உலகத்திற்கு வரும் எல்லா உபத்திரவத்தி-ருந்தும் தப்பித்துக் கொள்ள பாத்திரவான்களாகவும் இருப்பார்கள் என்று நிச்சயிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இந்த விசேஷித்த கோபக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். ஆனால் வானத்தி-ருந்து எல்லா அநீதிமான்களுக்கும் விரோதமாக வெளிப்படும் பொதுவான கோபாக்கினையிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் அநேக விஷயங்களில் உலகத்தாருடன் பங்குபெறுவார்கள். எனினும் வேதம் குறிப்பிடுவதுபோல, முடிவாக இந்த விசேஷித்த கோபாக்கினையிலிருந்து அவர்கள் வேறுபடுத்தப்படுவார்கள்.

இந்த சுவிசேஷ யுக காலத்தில், கிறிஸ்துவை ஏற்று, தங்களை முற்றிலும் தத்தம் செய்தவர்கள், மரணத்தினின்று ஜீவனைப் பெற்றவர்களாக கருதப்பட்டு "இவ்வுலகத்திலுண்டான கேட்டுக்கு தப்பிப் போவார்கள்." (2 பேது 1:4; 2:18,20) மெய்யாகவே இவர்கள் இன்னும் இந்த உலகில் இருந்து கொண்டு மரணத்துக்குட்பட்டு இவ்வுலக பாடுகளையும், வியாதி, துன்பம் யாவற்றையும் உலகத்தார் போலவே அனுபவிப்பார்கள். ஆகிலும் உலக நோக்கத்தில் இவர்களுக்கும் உலகத்தாருக்கும் வித்தியாசமில்லை. ஆனால் தேவனுடைய பார்வையில், (விசுவாசிகளின் பார்வையிலும் கூட) பெரிய வித்தியாசம் உண்டு. இவர்கள் தேவ சாபத்தினால் மரிக்கின்றவர்களாக எண்ணப்படாமல் இருக்கின்றனர். நீதிமான்களாக இருந்து ஜீவ பலிகளாக தங்களை ஒப்புக் கொடுப்பதால், இவர்கள் கிறிஸ்துவின் பலியின் ஒரு பாகமாக கருதப்படுகின்றனர். அப்போஸ்தலன் சொன்னது போல, இவர்கள் கிறிஸ்துவுடன் மரித்தவர்கள், அவர் பலியிலே பங்கடைந்தவர்கள், மற்றவர்களைப் போல ஆதாமுக்குள் மரித்தவர்கள் அல்ல. "கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம்." - ரோம. 6:8

இவ்விதமாக நம்முடைய சரீரப் பிரகாரமான பெலவீனம், வியாதி, பாடுகள் யாவும், மாம்சத்தில் நமக்கு வழிவழியாக வந்தது. இவைகளிலும் நமக்குப் பங்குண்டு. இதனால் நம் இரட்சகர், இப்படிப்பட்டவை நமக்கு அனுமதிக்கப்பட்டபோது இது தேவனாலே விடப்பட்ட கோபாக்கினை என்று எண்ணக் கூடாதென்கிறார்.

*இப்படிப் பட்டவைகள் நமக்கு வரும்போது, இவைகளின் மூலமாக “தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராக இருக்கிறார்” என்று அப்போஸ்தலர் சொன்னபடி, இவை மூலமாக நாம் அவரிடம் ஆவியிலே பலப்பட்டு, அவர் பிள்ளைகளாக இருக்கவும், மகிமையையும், கனத்தையும் சாகாமையையும் அடைய இவைகளால் சீர் பொருந்துகிறோம். (பிலி 2:13; ரோம 2:7; எபி. 12:11; 2 கொரி 4:17; 2 பேது 1:4-11) எவ்விதத்திலும் இவர்கள் எல்லாக் காரியத்திலும், கண்டு விசுவாசியாமல் காணாமல் விசுவாசித்து நடக்கிறவர்கள். வெளித்தோற்றமாகப் பார்க்கும்போது, இவர்கள் உலத்தாரை விட மேலானவர்கள் அல்ல என்பதாகவே தோன்றும். மெய்யாகவே, தேவனுடைய பிள்ளைகளுக்கே உலகத்தாரை விட அநேகப் பாடுகள், சோதனைகள், கஷ்டங்கள் சில சமயங்களில் இருக்கும். ஏனெனில் உலகத்தாரோடு தேவன், ஒப்புரவாகுதலுக்காக இன்னும். தொடர்பு கொள்ளவில்லை. இவை யாவும் விசுவாசத்தை அதிகப்படுத்தவும், சீர்ப்படுத்தவும், நல்ல ஆவியின் கனிகளில் வளர்ச்சியடையவும் உதவுகிறது.*

*பொதுவாக, சகல மனுக்குலத்திற்கும் இந்த ஒப்புரவாகுதல் எவ்விதம் அவசியம் என்பதை பார்ப்பதே நம் பாடமாக உள்ளது. சகல பூரணமற்ற மனுக்குலத்திற்கும், தேவ கட்டளைப்படி கொடுக்கப்பட்ட சாபம், அல்லது தீர்ப்பு அழிவே. தேவன் சகலத்தையும் நன்மையாகவே சிருஷ்டித்தார். அவருக்கு இது ஒன்றே திருப்தியாக இருந்தது. ஆனால் ஒரு காலப்பகுதிக்கு அவர் பூரணமற்ற காரியங்கள், பூரணமற்ற ஜீவிகள், பூரணமற்ற நிலைமைகளை ஏன் அனுமதித்தார்? இது அவருடைய திட்டங்களின் மாற்றம் என்பதற்கு எந்த சான்றும் இல்லை. இந்த பூரணமற்ற காலப் பகுதி அனுமதிக்கப்பட்டதற்கு காரணம், இதனிமித்தம் தெய்வீக ஞானமானது ஒரு மகிமையான காரியத்தை எதிர்பார்த்தது. “தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படி” என்று அப்போஸ்தலர் எபே.1:12ல் கூறியுள்ளார். அவர், சாத்தானை தேவ கட்டளையை மீறியபோதே, அழித்திருக்கலாம். அவ்விதமே விழுந்து போன தேவதூதரையும், மனிதனையும் அழித்திருந்தால், ஒரு பூரணமற்ற வம்சத்தையே*

தவிர்த்திருக்கலாம். இதற்கு மாறாக தேவதிட்டமானது ஒரு பூரணமற்ற, பாவம் நிறைந்த நிலைமையை சிலகாலம் விட்டு வைத்து தெய்வீக ஏற்பாட்டிற்கு குந்தகம் வராதபடி, இவர்கள் பாதையில் ஓட அனுமதித்து, சாத்தானிலும், தூதர்கள் மற்றும் மனிதனிலும் பாவத்தின் சீரழிவை விளக்கிக் காண்பிக்கவும் செயல்படுகிறது.

மனுக்குலம், மரணத்திற்கும், அழிவுக்குள்ளாகவும் விழுந்ததற்கு, ஏவாளின் புத்தியீன ஏமாற்றமே மறைமுகமான காரணமாகும். இது மனப்பூர்வமாக தேவ கட்டளையை மனுக்குலம் மீறாதிருந்தும், முன்னோர் வழியாக வந்த தண்டனையே. இது தெய்வீக அன்பையும், இரக்கத்தையும் தேவ குணங்களையும் வெளிப்படுத்த ஒரு வாய்ப்பை அளித்துள்ளது. இல்லையேல் தேவ அன்பையும், இரக்கத்தையும் மக்களுக்கு வெளிப்படையாக நிரூபிக்க, வேறு எந்த மார்க்கமும் இல்லை என்றே எண்ணலாம். தேவன் தம்மையும் தமது குணங்களின் சிறப்பியல்புகளையும் மனுக்குலத்திற்கும் தூதர்களின் சேனைகளுக்கும் வெளிப்படுத்த அவர் வைத்திருந்த ஆதிதிட்டத்தின் ஒரு பகுதியாக இது இருக்கிறது. இரட்சிப்பின் திட்டமானது முற்றிலும் நிறைவடையும்போது, தூதர்களும், மீட்கப்பட்ட மனுக்குலமும் தெய்வீக குணலட்சணமான ஞானம், நீதி, அன்பு, வல்லமை ஆகிய இவைகளை மிக அதிகமாக அறிந்து கொள்வார்கள். பாவத்தை அனுமதித்தல், தெய்வீக திட்டத்தின்படி கிறிஸ்து மூலமாக இரட்சிப்பை வாக்குத்தத்தம் பண்ணுதல் ஆகிய தற்போது போதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த பெரிய பாடத்தின் மூலம் அல்லாமல் தேவனுடைய குணத்தின் சிறப்பியல்புகளை நாம் ஒருபோதும் உணர முடியாது. இதைக் குறித்து அப்.பேதுரு, “இவைகளை உற்றுப் பார்க்க தேவதூதர்களும் ஆசையாயிருக்கிறார்கள்” என்கிறார். 1 பேது. 1:12

நாம் பார்த்த பிரகாரம் ஆதாமின் மூலம் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்ட தண்டனை நீதியானதே. இதை எதிர்த்து எவரும் முறையிட முடியாது. (தனது சிருஷ்டிகருக்கு முழுமனதோடு கீழ்ப்படிய போதுமான அறிவுடையவனாக ஆதாம் இருந்தான் என்றும், தேவனுடைய நீதிக்கும் கிருபையுள்ள ஏற்பாடுகளுக்கும் இசைவாக ஆதாம் நடக்காத போது ஜீவனை பறித்துகொள்வது

தேவனைப் பொறுத்த மட்டில் நீதியான ஏற்பாடு என்றும் ஒத்துக்கொள்ளப்படுகிறது) எனினும், நீதியின் முக்கிய அம்சங்களை மனிதன் விட்டு விலகாமல், வேறு தண்டனையை தேவன் வகுத்திருக்கலாம் என்று நினைக்கலாம். இத்தகைய ஒரு காரியத்தை அவர் விழுந்துபோன தூதரிடம் செய்தது ஒரு சான்று. இவர்களுக்கு மரண தண்டனையைக் கட்டளையிடாமல், "மகாநாளின் நியாயத் தீர்ப்புக்காக அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்." - யூதா 6

இதைப்போன்றே, தேவன் மனிதனின் ஆரோக்கியமான சரீரத்தை, மரணத்திற்கு ஒப்புக் கொடாமல், ஆறாயிரம் வருடங்கள் திடபெலத்துடன் ஜீவிக்க விட்டிருக்கலாம். இவ்விதம் கட்டப்பட்ட தூதர்களையும், மனிதனையும், உயிருடன் காத்து, நியாயத் தீர்ப்பின் நாள்வரைக்கும் விட்டிருக்கலாம். ஆனால் யேகோவா தேவன் தம்முடைய காரியங்களில் எல்லைக் குறிப்புள்ளவராக இல்லை. இயற்கையில் எவ்விதம் ஒரு புஷ்பத்தை விட மற்றொன்று மகிமையிலும், அழகிலும் வேறுபட்டுள்ளதோ அதுபோல, ஒரு உயிரினம் மற்றொன்றை விட வித்தியாசப்பட்டிருக்கிறது. ஆதலால், அப்போஸ்தலர் குறிப்பிட்டதுபோல "அவருடைய அநந்த ஞானமானது" (எபே. 3:10) பாவம் செய்த தூதர்களுக்கு ஒரு வகை செயல் தொடர்பும், பாவிகளான மக்களுக்கு மற்றொரு வகை செயல் தொடர்பும் இருக்க, இந்த ஒழுங்கைத் தெரிந்து கொண்டார். தெய்வீக கடுஞ்சினம் இருவர் பேரிலும் வெளிப்பட்டது. இது அன்பும், நீதியுமுள்ள சினமாக இருந்து, பாவத்தை வெறுக்கிறதாகவும், சகல தீமையையும் அழிக்கிறதாகவும் உள்ளது. இதன் மூலம் தீமை செய்கிறவர்கள், பாவத்திற்கும் நீதிக்குமுள்ள வித்தியாசங்களை அனுபவத்தால் அறிந்து, உண்மையுள்ள நீதியின் ஊழியக்காரராக மாறச் செய்யும்.

பாவம் மற்றும் பாவிகளின் கடைசி முடிவு "அழிவு" என்பதை நிரூபிக்க, தேவன் இத்தகைய காரியத்தைத் தெரிந்து கொண்டார். அநேக எச்சரிப்பின் மூலமாக இது மனிதனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. "பாவம் செய்கிற ஆத்துமா சாகும்," "பாவத்தின் சம்பளம் மரணம்." இது ஒரு பொதுவான கட்டளையாக, சகல தேசங்களுக்கும், அனைத்து சிருஷ்டிகளுக்கும் சொல்லப்பட்டு, பூரணமற்ற யாவும் அழிவுக்குள்ளாகும் என்பதை தேவன்

வெளிப்படுத்தினார். பூரணமானதும் முற்றிலும் பூரணமானதும் தேவனுக்கேற்றதுமானவைகள் மட்டும் காக்கப்பட்டு சதாகாலங்களிலும், தங்களுக்கு ஆசீர்வாதமாகவும், தேவனுக்கு மகிமையுள்ள ஜீவிகளாகவும் வாழ்வார்கள்.

ஆனால் இந்த திட்டத்திற்கு மனிதன் மேற்கோளாக இருந்து, ஒவ்வொரு மானிடனும் மரணத்தில் அழிக்கப்படுகின்றான் - எல்லாரையும் மரணம் ஆட்கொண்டது. எனினும், தீமையை அழிப்பதில் தெய்வீக நீதியின் தீவிரத்தை விளக்க மனுக்குலத்தை மேற்கோளாக வைப்பது தெய்வீக திட்டமல்ல. மனுக்குலத்தை துன்பப்பட அனுமதிப்பது, மற்ற ஜீவிகளுக்கு உதாரணமாக அமைந்தது. மாறாக, தேவனுடைய மற்ற ஜீவிகளைக் காட்டிலும் மனுக்குலம் தேவனுடைய இரக்கத்தையும், கிருபையையும் அன்பையும் அதிகமாக அனுபவிக்க வேண்டும் என்பது தெய்வீக ஏற்பாடாகும். ஏற்ற காலத்தில் தேவைக்கேற்ப ஒரு மீட்பின் திட்டத்தை உண்டு பண்ணினார். "ஒரே மனிதனுடைய (ஆதாம்) கீழ்ப்படியாமையினால் அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய (இயேசு) கீழ்ப்படித-னாலே, அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." - ரோம. *5:19*

சுவிசேஷ யுக காலத்தில் அனைவரும் இதன் மூலம் நீதிமான்கள் ஆவார்கள் என்று இதில் அர்த்தம் கொள்ளாமல், இதற்கு மாறாக வேத வாக்கியம் தெரிவிக்கிறபடி, இப்பொல்லாத காலத்தில் "ஒரு சிறு மந்தையே" நீதிமான்களாவார்கள். இவர்கள் பிதாவினால், மேலான அழைப்பிற்காக அழைக்கப்பட்டு, அவரது குமாரனுடன் உடன் சுதந்திரராக இருப்பவர்கள். மற்ற மனுக்குலம், இப்பொழுது அழைக்கப்படுவதில்லை. கிறிஸ்து (தலையும் சரீரமும்) மகிமையில் உயர்த்தப்படும் வரை அழைக்கப்படுவதில்லை. இயேசு, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" என்றார். (யோவா. *6:44; 12:32*) எல்லாருக்கும் பொதுவான இந்த அழைப்பு, வரப்போகும் ஆயிரம் வருட காலத்திற்குரியது, அதற்கு முன் அல்ல. இது ஒரு சிலரையோ, முன்போல் ஒரு கூட்டத்தாரையோ, ஒரு இராஜ்யத்தையோ அல்ல, விலையேறப் பெற்ற இரத்தத்தினால் சகல மனுக்குலமும் இழுத்துக்

கொள்ளப்படும்.

இந்த அழைப்பு கட்டாயமானதல்ல. சுவிசேஷ யுக காலத்தில் பிதாவால் அநேகர் அழைக்கப்பட்டு சிலரே தெரிந்தெடுக்கப்பட்டது போல, கிறிஸ்துவின் மூலமாக அடுத்த யுகத்தில், அநேகர் அழைக்கப்பட்டிருந்தாலும், ஒரு சிலரே தீமையை வென்று பூரணமான தேவராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள். வேதாகமம் தெரிவிக்கிறபடி அந்த காலம் சிக்கலில்லாமல் யாவருக்கும் சுமூகமாக இருக்கும். சத்தியத்தையும் நீதியையும்அறிந்த பிறகு மனப்பூர்வமாக நீதியை வெறுத்து, பாவத்திற்குட்படுகிறவர்கள், அந்தப் பெரிய தீர்க்கதரிசியின் மூலம், இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். -அப்.3:23

ஆயிரம் வருட யுக முடிவில் யேகோவா தேவன் மனுக்குலத்திற்கு செய்யப் போகும் காரியத்தைப் பார்க்கும்போது, மனுக்குலத்திடம் தேவன் அன்பற்றவராக இராமல், நம்மேல் விதித்த மரண தண்டனையை தம்முடைய இரக்கத்தின் மூலம், தம்முடைய ஒரே பேரான குமாரனை ஈடுபலியாகக் கொடுத்து, மீட்பின் திட்டத்தை உண்டாக்கினது ஒரு பெரிய ஆசீர்வாதமே. இதை நாம் ஒரு நோக்கு நிலை மூலமாக மட்டுமே பார்க்க முடியும். அந்த நிலையில் பார்க்கும் போது தற்போதுள்ள துக்கம், கஷ்டம், வேதனை, மரணம் இவை யாவும் நம்முடைய மீறுதலினால் நமக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையாக இருந்தாலும், பாவத்தினின்றும், சாபத்தினின்றும் நம்மை கல்வாரியில் மீட்ட இரட்சகருடன் ஆட்சி புரியும் சிலாக்கியத்தை, ஒரு கூட்டத்தார் இந்த சுவிசேஷ யுகத்தில் பெற்றுக் கொள்ளும் திட்டத்தையும் வகுத்துள்ளார் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆதாமின் பாவத்தினால் வந்த மரண தண்டனை கடினமானதாக இருந்தாலும், (ஆறாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து நீடிக்கும், வேதனை, துக்கம், உபத்திரவங்கள் உட்பட) ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாத தூதர்களைப் பார்க்கிலும் மனிதன் பெற்றுக் கொண்டது சலுகையேயாகும். தூதர்கள் மரண தண்டனை பெறாமலும், வியாதி, வேதனை இவைகளை அடையாமலும், பரிசுத்தரோடு தோழமை கொள்ளாமலும் தடுக்கப்பட்டுள்ளனர். விழுந்து போன தூதர்களைப் போல

மனிதனும் பூமியில் விடப்பட்டிருந்தால் இன்று உலகம் தீமையில் பெருகி, எவ்வளவு பயங்கரமான நிலைமையில் பெருகியிருப்பார்கள் என்று நாம் கற்பனை செய்து பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். மனிதனின் குறைந்த நாள் ஜீவியத்தில் தன்னலம் நிறைந்து, சொத்து சேர்த்து, தன் உடன் சிருஷ்டியை கொடுங்கோல் ஆட்சி செய்கிறான். ஒரு சிலர் ஏழைகளாக இருந்து, சில நாட்களில் கோடீஸ்வரர்களாக மாறுகிறார்கள். இவர்கள் நூற்றுக் கணக்கான வருஷங்கள் உயிருடன் இருந்தால் என்னவாகும்? சிலருடைய பேராசை, தந்திரத்தினால் அநேக குடுபங்கள் மிக தாழ்ந்த ஜீவியம் செய்து அடிமைத் தனத்தில் இருப்பார்கள் என்பது தான் அதன் பலனாக இருக்கும்.

இந்த நிலையில் நாம் கவனிப்போமேயானால், சாகவே சாவாய் என்ற தேவ "சாபம்" அல்லது தண்டனை மனிதனுக்கு கொடுக்கப்பட்டதால், நம் இருதயம் தேவனுக்கு நன்றியுள்ளதாக இருக்க வேண்டும். இந்த அனுபவம் நமக்கு மட்டும் ஒரு கருத்துள்ள பாடமாக இராமல், பரிசுத்த தூதர்களுக்கும், விழுந்து போன தூதர்களுக்கும் கூட ஒரு பாடமாக அமைந்துள்ளது. தேவ திட்டமாக அமைந்த இந்த பெரிய பாடமானது நம்மை மகிழ்ச்சி அடையச் செய்கிறது. இனி வரப்போகும் நாட்களில், இன்னும் உருவாக்கப்படாத அநேக நீதியுள்ள போதகர்கள், பூமியிலிருந்து தங்கள் பாவங்களின் மூலம் அனுபவம் அடைந்து, மீட்கப்பட்டு திரும்பவும் நல்ல நிலைமையை அடைந்து, தங்கள் அனுபவத்தின் மூலமாக, அநேகரை தெய்வீக சித்தத்துக்கு முற்றிலும் கீழ்ப்படியும்படி காத்துக் கொள்வார்கள் என்று யாருக்குத் தெரியும்?

இந்த சாதகமில்லாத ஒரு நிலைமை, ஆசீர்வாதமாக மாற்றப்பட்ட ஓர் உதாரணத்தை இஸ்ரயேலரில் காணலாம். இஸ்ரயேல், தேவனால் மற்ற இராஜ்யங்களிலிருந்து பிரிக்கப்பட்டு ஒரு தனி இராஜ்யமாகவும், தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாகவும் இருந்தார்கள். அவர்களுக்கு அருளப்பட்ட நியாயப் பிரமாணமானது அனுகூலமாக இருந்தும், அது அவர்களுக்கு ஒரு பரீட்சையாகவே அமைந்து, அதில் தோல்வியை அடைந்தனர். இதனால் அவர்கள் தண்டனை அடைந்து, உலகத்தாரைப் போலானார்கள். இவர்கள் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினால் நீதிமானாக நிரூபிக்கப்பட வேண்டியதாயிற்று. இஸ்ரயேலர் பெற்றுக்

கொண்ட பிரமாணம், பூரண கிரியையுடையதாக இருந்தது. மாமிச பெலவீனத்தால் அதைப் பூரணமாக அவர்கள் செய்யக் கூடாதிருந்ததால், மரண சாபத்திற்குள்ளாக செல்ல வேண்டி இருந்தது. இதைக் குறித்து பவுல், "ஜீவனுக்கேதுவான கற்பனை எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக் கண்டேன்" என்றார். (ரோம 7:9-14) இஸ்ரயேலரை ஒருவகையான ஜனமாக உபயோகித்து, எந்த பூரணமற்ற மனிதனும், தேவனுடைய பூரணமான கட்டளையை கைக்கொள்ள முடியாததென்பதை ரூபகாரப்படுத்தினார். இந்தப் பிரமாணத்தை அவர்கள் கைக்கொள்ளக் கூடாதபடி, வீழ்ச்சியை அடையச் செய்தது. இதன்பின்னர், ஆதாமின் சந்ததியாரை மீட்க தேவன் கிறிஸ்துவின் பலியின் மூலம் வகுத்த திட்டத்தின்படி, இவர்களும் மீட்படைய வேண்டியதாயிற்று. (ரோம. 2:11,13; 3:19-23) இதற்காகவே கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் கீழ் பிறந்து, நியாய பிரமாணத்தால் தண்டனை அடைந்த இஸ்ரயேலரையும், ஆதாமின் பாவத்தால் தண்டிக்கப்பட்ட உலக சமுதாயத்தையும், அந்த ஒரே பலியினால் இரட்சிப்படையச் செய்தார். கலா 4:4-5

தேவனுக்கும், மனிதனுக்குமிடையே சமாதானம் அவசியமென்றும், இதனால் இவர்களது ஒப்புரவாகுதலும் அவசியமானதென்பதையும் நாம் பார்க்கிறோம். இதன் மூலம் தேவனே ஜீவனுக்கு ஊற்றும், நித்திய ஜீவனை அனுபவிப்பது அவர் நமக்குத் தரும் வெகுமதி என்றும் வெளிப்படையாகிறது. "தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்." ரோம 6:23 தெய்வீக ஆட்சிக்கும், அதன் கட்டளைகளுக்கும் அடிப்படையான கொள்கை யாதெனில், பாவம் சற்றேனும் அனுமதிக்கப்பட மாட்டது. (ஆபகூக் 1:13) அவர் பாவத்தை மன்னிக்கவே மாட்டார், அதை எந்த ஒரு அளவிற்கும் அனுமதிக்கவும் மாட்டார். சிறிதும் பூரணமற்ற ஒருவரையும் அவர் தன் மகனாக ஏற்றுக் கொள்ள மாட்டார். ஏனென்றால் இவர்களுக்கு நித்திய ஜீவன் அருளப்பட்டுள்ளது. மனிதன் தன் பாவத்தின் மூலம், மரணத்தை பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், தன்னை களங்கப்படுத்தி, கீழாக்கி, சீர்கெட்டு அதிகமாகத் தன் சிந்தனையிலிருந்து மனசாட்சியையும், தேவ சாயலையும் எடுத்துப் போட்டுவிட்டான். இவன் மீண்டும் நித்திய

ஜீவனைப் பெற்றுக் கொள்ளும் நம்பிக்கையை ஒருவர் மூலமாகவே அடைய முடியும். இதைப் பெற்றுக் கொள்ள இரு காரியங்கள் அவசியமானது. (1) நீதியின்படி மனுக்குலத்திற்கு அருளப்பட்ட மரண தண்டனையினின்று விடுதலையடைய வேண்டும்; (2) அவன் பாவத்தின் மூலம் விழுந்துபோன நிலைமையிலிருந்து, பூரணமடைய உயர்த்தப்பட வேண்டும். இவ்விரண்டு காரியங்களும் செய்யப்பட்டால், மீண்டும் பூரணமடைய வாய்ப்புண்டு. இவ்விரண்டும் செய்யப் படாவிட்டால், நித்திய ஜீவனை மீண்டும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பே இல்லை. சிலர் சில பாவங்களை மட்டுமே செய்திருப்பார்கள். சிலர் பாவம் அதிகமாகவும் இருக்கும். ஆனால் சகலரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்து போனவர்களே. ஒருவர் நீதிமானாக இருந்திருந்தால், அவர் தன் சகோதரனுக்கு தன்னை ஈடாகக் கொடுத்திருக்க முடியும் (ஆதாமுக்குள் சகலரும் பாவிகளானோம்.) ஆனால், ஒருவனும் நீதிமானாக இல்லை. “அந்தப்படி நீதிமான் ஒருவனாகிலும் இல்லை.” - ரோம. 3:10,23; சங். 49:7

யேகோவா தேவன் இவை யாவற்றையும் தம் ஞானத்தால் முன்னறிந்திருந்து, இதற்குரிய சில வழிகளை, உலகத் தோற்றத்துக்கு முன்பே மனுக்குலத்திற்கு வகுத்திருந்தார். மனுக்குலம், மீண்டும் விழுந்து போன நிலையிலிருந்து மீட்கப்பட, ஏற்ற காலத்திலே தம்முடைய திட்டத்தை வெளிப்படுத்தினார். ஒருவர் கண்களிலும் இரக்கம் பெறாமலும், ஒருவராலும் இரட்சிக்கக் கூடாமலிருந்தபோது, தேவன் தம்முடைய கரத்தினால் இரட்சிப்பைத் தந்தருளினார். பரலோகத்திலிருந்து தம்முடைய கரத்தை நீட்டினார். மனுக்குலத்தை பயங்கரமான மரணக் குழியிலிருந்தும், பாவச் சேற்றினின்றும் விடுதலையாக்க நீட்டப்பட்டகரம் நம்முடைய இரட்சகரான இயேசுவேயாகும். (சங்.40:2; ஏசா 53:1) இவர் மூலம் தேவன் வெளிப்படுத்திய கருத்து யாதெனில்:-

(1) பாதாளத்தின் வல்லமையிலிருந்தும், மரண தண்டனையிலிருந்தும்,“சாபத்திலிருந்தும்” தற்போது உலகத்தின் மேலுள்ள சகல வேதனையிலிருந்தும் மீட்க ஈடுபலி. இந்த ஈடுபலி நம்முடைய கர்த்தரான இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலே

நிறைவேற்றப்பட்டது. தெய்வீக நீதி முற்றிலும் நிறைவேற்றப்பட்டு, முழு உலகமும் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் விலைக்கிரயமாக வாங்கப்பட்டதாக கருதப்பட்டது.

(2) இரட்சிப்படைந்தவர்களினின்று உடன் சுதந்திரராக ஒரு "சிறுமந்தையை" இப்போது தெரிந்தெடுக்கிறார். இவர்கள் தங்களை பலிகளாக, பயபக்தியாய் ஒப்புக்கொடுத்து, அவருடைய பாடுகளிலும், பலியிலும் பங்குள்ளவர்களாக எண்ணப்பட்டு, பரலோக மகிமையிலும் பங்கடைந்து, அவருடைய பலியின் கனியான - இனிவரும் உலகத்தை ஆசீர்வதிக்கும் காரியங்களிலும் பங்கு பெறுவார்கள்.

(3) இரட்சகரும், அவருடன் இசைந்து ஆட்சிபுரியும் அவர் மணவாட்டியும் (சபையும்), இந்த மீட்பின் வேலையை "உலக தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறும் காலத்தில்" செய்து முடிப்பார்கள். *(அப்.3:19-21)* அப்போது புதிய உடன்படிக்கையின் கீழ் மனப்பூர்வமாகப் பாவத்தில் ஈடுபட்ட அக்கிரமக்காரர், மத்தியஸ்தர் கிறிஸ்துவின் மூலம் அழிக்கப்படுவார்கள். இரட்சிக்கப்பட்ட மற்றவர்கள் தேவ சாயலிலும், நீதியிலும், அறிவிலும் முற்றிலும் தேறினவர்களாக, பரம பிதாவினிடம் திருப்பப்படுவார்கள். இவர்கள் தற்கால பாவ உலகத்தின் காரியங்களையும், தேவனால் சீர்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப் போகும் நீதியான இராஜ்யத்தையும் குறித்து அறிந்தவர்கள். அப்பொழுதுதான், ஒப்புரவாகும் பெரிய வேலை பூரணப்படும். இந்த எல்லாக் காரியங்களையும் அறியக் கூடியவர்கள், தேவனோடு ஒப்புரவாகுதலின் முக்கியத்தை புரிந்து கொள்வார்கள். சிருஷ்டிகருடன் இசைந்திருக்காவிடில், மனுக்குலம் ஆசீர்வாதம் அடையாது. இவ்வித ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள, முதலாவதாக, இந்த ஒப்புரவாகுதல் ஒரு பாவமீட்பை - ஒரு பாவத்தின் பரிகாரத்தை அவசியப்படுத்துகிறது. ஒரு பாவியை நீதிக்குட்படுத்த தேவன் நீதியுள்ளவராகவே இருக்கிறார் - ரோம. 3:25.

மேற் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கும்போது பாவத்திற்காக நம் இரட்சகரின் பலியின் மூலம் ஒப்புரவாகுபவர்களின் எண்ணிக்கை திட்டமானதல்ல.

*பாவத்தினின்றும், சாபத்தினின்றும் மீட்கப்பட்டு, பிதாவாகிய தேவனோடு ஒப்புரவாகும்படி, இரட்சகர் மூலம் கொடுக்கப்பட்ட வாய்ப்பை கீழ்ப்படிதலுடன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்கள் மட்டுமே பெற்றுக் கொள்வார்கள் என அறிகிறோம். தேவனுடைய நீதியான பிரமாணங்களை, முற்றிலும் அறிந்து கடைப்பிடித்தவர்கள் மட்டுமே, கிறிஸ்துவின் மூலம் தேவன்அருளிய நித்திய ஜீவனைப் பெற முடியுமே அல்லாமல், வேறே ஒருவராலும் அதை அடைய முடியாது. "ஏற்ற காலத்தில்" சகலரும், தேவ கிருபையை அறியும் அறிவை அடைந்து இப்போது இந்த உலகில் அனுபவிக்கும் சந்தோஷத்தைப் பார்க்கிலும், மேன்மையான சந்தோஷத்தை அடையும் வாய்ப்பு உண்டென்பதைக் குறித்து நாம் சந்தோஷப்படுகிறோம். 1 தீமோ. 2:6*

## அத்தியாயம் 15

# "எல்லாரையும் மீட்கும் பொருள்" ஒப்புரவாகுதலுக்கு ஒரே அடிப்படை

*மீட்கும் பொருள் இல்லாமல் ஒப்புரவாகுதல் இல்லை-உறுதிசெய்யப்பட்டது ஆனால் பலவந்தப் படுத்தப்படவில்லை-மீட்கும் பொருளாயிருத்தல் ஒரு நன்மையானது-மீட்பு மற்றும் மீட்கும் பொருளின் முக்கியத்துவம்-மனிதனுக்காக மீட்கும் பொருள் என்ன செலுத்தப்பட்டது?- விசுவாசத்தினால் நீதிமானாகுதல் உறுதிப்படுத்தப்பட்டது- "கிரயத்துக்குக் கொள்ளப் பட்டீர்கள்" -யாரால்? - யாரிடமிருந்து? - என்ன நோக்கத்திற்காக? - எப்படி அன்பு நீதியுடன் ஒத்துழைத்தது- "எல்லாரையும் மீட்கும்பொருள்" திரும்ப எடுத்துக்கொள்ளப்படவில்லை-முதல் ஆதாமின் தந்தையின் நிலை உரிமை இரண்டாம் ஆதாமால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டது - மீட்கும் பொருள் மன்னிப்பல்ல-மனிதனுடைய மரணம் மீட்கும் பொருள் அல்ல-மனித இனம் முழுமைக்கும் மீட்பு என்ற கோட்பாட்டினரின் தவறான வாதம்-மீட்கும் பொருளினால் தேவநீதி கட்டுண்டிருக்கவில்லை-ஒரே நாமம்-மத்தியஸ்தரின் முறைமை மோசேயினால் அடையாளப்படுத்தப்பட்டது-மீட்கும்பொருள், பதிலீடு-வேறொரு திட்டம் இருக்கக்கூடுமா?*

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. *எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே.* இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." - *1 தீமோ. 2:5,6*

தேவனுக்கும் மனிதனுக்குமிடையேயான ஒப்புரவாகு

தலானது மனிதனுடைய பாவத்திற்காக செலுத்தப்பட்ட பரிபூரணமான தியாக பலியையே மையமாகவும், முழு ஆதாரமாகவும் கொண்டு அமைகின்றது. தேவன் மனுக்குலத்தின் சாபத்தை நீக்காமலிருந்தால் தெய்வீக தயவை அடையவோ, நித்திய ஜீவன் பெறவோ, மறுசீரமைப்படையவோ வழியில்லாமல் முழு மனுக்குலத்தினையும் குழப்பம் சூழ்ந்து பரிதாப நிலையை ஏற்படுத்தியிருக்கும். தெய்வீக விதிப்படி மனுக்குலத்தார் அனைவரும் பாவிகள் என்பதே. ஏதேனில் உள்ளப்பூர்வமாக தேவ வார்த்தையை மீறி உனக்கு நீயே சாபத்தை வருவித்துக் கொண்டாய் என்பதே மனிதனுக்கான தேவனுடைய ஒரே தீர்ப்பாயிற்று. இச்சாபத்தினால், தேவ நீதியின்படி மனிதனுக்கு எதிராக மரணத்தை தரவேண்டியதாய் அமைந்தது. அச்சாபத்தை விலக்கி என் நீதிக்கெதிராக செயல்பட மாட்டேன் என்கிறார் தேவன். நீதியும், நியாயமும் என்னுடைய சிங்காசனத்தின் ஆதாரம். *(சங். 89:14)* ஆகவே உனக்குக் கொடுக்கப்பட்ட சாபம் என்றென்றைக்கும் நிலைத்திருக்க வேண்டியதொன்றாகும். இச்சாபத்லிருந்து விடுபட அதற்கு நிகரான தேவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஈட்டுக் கிரயம் செலுத்தப்பட வேண்டும்.

மனுக்குலத்திற்கெதிராக கொடுக்கப்பட்ட சாபம், நித்திய வேதனையல்ல என்பதை நாம் முன்னரே தெளிவாகக் கண்டோம். ஆனால், ஆதாம் பாவத்தில் விழுந்ததும் அதற்கு தண்டனை மரணம் என தெளிவாகவும் உறுதியாகவும் தேவனால் எடுத்துரைக்கப்பட்டது. இதனால் தேவன் ஆதாம் ஏவாள் செய்த தவறுக்காக மரணத்தை தவிர வேறு ஏதாவது தண்டனை கொடுத்திருக்கலாமே என்றும், அவர் அவர்களுக்கு பின் விளைவுகளைத் தெளிவாக அறிவிக்காமல் வஞ்சித்துவிட்டார் என்று கூட சிலர் எண்ணலாம். ஆனால் நாம் பார்த்தபடி, மரணத் தீர்ப்பு என்பது பாவத்திற்கெதிரான நியாயத் தீர்ப்பு ஆகும். இதன்படி ஒருவர் ஜீவன் பெற்று வாழ்வது நிபந்தனைக்குட்பட்ட தேவ தயையாகிறது. அதன் பேரில் தேவனுக்கு முழு அதிகாரமும் உண்டு. ஆகவே புசிக்க வேண்டாம் என்று தேவன் கட்டளையிட்டிருந்த கனியை ஆதாம் புசித்ததினால் நித்தியத்துக்கும் எரிநரகத்தில் எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பது நீதியான தீர்ப்பு என நாம் தீர்மானிப்பது சரியான

அனுமானமாயிருக்காது. உள்ளப்பூர்வமாக முழு அறிவுத் தெளிவோடு கீழ்ப்படியாமல் இத்தவறை ஆதாம் செய்திருந்தாலும் அதற்கு இவ்வளவு பெரிதான தண்டனை கற்பனை செய்து கூட பார்க்க முடியாதது. இதற்கும் மேலாக, இத்தவறினால் ஆதாமின் பின் சந்ததியாராகிய கணக்கிலடங்காத ஜனங்களுக்கும் இதே நித்திய தண்டனை பொருந்தும் என்பது சரியான நீதியாய் இருக்காது. ஆனால் நமது தந்தையாகிய ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட மரணத் தீர்ப்பின் மூலமாக, நோய், துன்பம், சாபம் போன்ற பொல்லாப்புகள் அவன் பின் சந்ததியாருக்கும் தொடர்ந்து வருகின்றன. ஏனெனில் அசுத்தமான நீர்ச் சுனையிலிருந்து தெளிந்த நீர் வருமென்று எதிர்பார்க்க முடியுமா? பாவம், சாபம், நோய் இவையே மனுக்குலத்திற்குப் கொடுக்கப்பட்ட சாபம் என்ற தேவனின் தீர்ப்பு நீதியான செயலாகவும் காரண காரியத்திற்குட்பட்டதாகவும் உள்ளது. இதில் அடங்கியுள்ள தேவ நீதியை, நற்குணத்தை, தேவனின் சரியான முடிவைக் கண்டு அனைவரும் அங்கீகரிப்பர்.

பாவத்திற்கெதிரான அபராதம் அறிவிக்கப்பட்டது என்பதை தீர்மானமாக அறிந்து பிறகு, அந்த அபராதத் தொகையாக தேவ நீதிக்கு எது தேவை என்பதையும், சீக்கிரத்தில் சாபம் நீக்கப்பட்டு, குற்றவாளிகள் மரணம் என்னும் மாபெரும் சிறையிலிருந்து விடுவிக்கப்படவும் ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதையும் நாம் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. (ஏசா. 61:1) மனுக்குலம் முழுவதும் பாவம் செய்து நியாயத் தீர்ப்பை வருவித்துக் கொள்ளவில்லை. ஆனால் ஒரே ஒரு மனிதனாகிய ஆதாம் செய்த பாவத்தால் நேரடியான நியாயத் தீர்ப்பாகிய மரணத்தை பெற்றுக் கொண்டான். அந்த சாபம் மறைமுகமாக அவனுடைய பின் சந்ததியாருக்குத் தொடர்கின்றது. இந்த சாபத்தை ஈடுசெய்ய, பொருத்தமான ஒரு விலைக்கிரயம் ஒன்றே, நீதியை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசிமாயும், இவ்வுண்மைகளுக்கு இசைவாயும் அமையும். ஆகவே நீதியை நிறைவேற்றி, ஆதாமையும் அவன் சந்ததியாரையும் விடுவிக்க ஆதாமின் ஜீவனுக்கு ஈடாக இன்னொரு ஜீவன் தரவேண்டியது அவசியமாயிற்று. ஒருவன் செய்த பாவத்தால் அனைவரும் பாவிகளானது போல, ஒருவரின் தியாக பலியால் அனைவரும் மீட்கப்படுவர். இப்படியாக ஒருவர்

ஈட்டுக்கிரயம் செலுத்தினதால், முழு மனுக்குலத்திற்கும் சேர்த்து இந்த ஈட்டுக் கிரயம் செலுத்தப்பட்டாயிற்று. நாம் முன்னரே பார்த்தபடி பாவம் செய்ததால் தண்டனைத் தீர்ப்புக்குள்ளான ஆதாம் ஒரு தேவனுமல்ல, ஒரு தேவ தூதனுமல்ல, தேவ தூதனுக்குச் சற்றே கீழான நிலையில் மனிதனாகப் படைக்கப்பட்டவன். இந்த தெய்வீக சாபத்தி-ருந்து மனுக்குலத்தை விடுவிக்க, ஆதாமின் முந்தைய நிலையான கறை திரையற்ற பூரண நிலைக்கொப்பான நிலையில் உள்ள ஒருவர் ஈடுசெய்வது அவசியமும், கண்டிப்பும் மிகுந்த தேவ நீதியாய் இருந்தது. மனிதருக்குள் இத்தன்மையிலுள்ளோர் எவரும் இருக்கவில்லை. ஏனெனில் ஆதாமுக்குள் அனைவரும் பாவிகளே. விழுந்து போன ஆதாமை தங்கள் தந்தையாகப் பெற்றிருக்கிற அவன் பின் சந்ததியார் தெய்வீக சாபத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள் என்பதை நாம் முன்னரே பார்த்தோம். மனிதனின் நிலை இவ்வாறிருந்தபடியால் பரலோகத்திலிருந்து ஆவியின் ஜீவியாக உள்ள ஒருவர் மனிதனாகப் பிறந்து ஆதாமுக்காகவும், அவனால் ஜீவனை இழந்த பின் சந்ததியாருக்காகவும் ஈடுபலி செலுத்துவது அவசியமாயிற்று.

பரலோகத்திலுள்ள தேவ சன்னிதானத்தில் தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக் கொண்டு தேவ அங்கீகாரம் பெற்றுள்ள தூதர்களில் அநேகர் தேவ சித்தத்திற்கும் திட்டத்திற்கும் மனமுவந்து கீழ்ப்படிந்து, மனிதனுக்காக ஈடுபலியை நிறைவேற்ற காத்திருந்தனர். ஆனால் அவ்வாறு ஈட்டுக்கிரயம் செலுத்த வேண்டுமானால், அவர் அநேக பாடுகள், உபத்திரவங்களை சகித்து தேவனுடைய மேன்மையை, கௌரவத்தை வெளியரங்கமாக நிலை நாட்ட வேண்டிய மிகப்பெரிய பொறுப்பைப் பெற்றவராகிறார். இவ்வாறாக தேவன் பேரில் தான் வைத்திருக்கின்ற பயபக்தியையும், தனது உத்தம குணத்தையும் விசுவாசத்தையும் எண்பித்து தனது பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுபவர், எல்லா தேவ தூதர்களுக்கும் மேலாகவும் சகல துரைத்தனங்கள், அதிகாரங்கள், வல்லமைகள், பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாகவும் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படுவார். இதற்கும் மேலாக, இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, சாத்தான் செய்தது போல தன் சுய கௌரவம், பதவி ஆசை, சுயநலம் ஆகியவற்றிற்கு

உட்பட்டால், முந்திய நிலையை விட கீழான நிலைக்குத் தாழ்த்தப்பட்டு, வீழ்ந்துபோய்விடுவர். அதற்கு மாறாக தன்னையே தாழ்த்தி தேவ சித்தத்திற்கும் திட்டத்திற்கும் முற்றிலும் கீழ்ப்படிபவர் உன்னத நிலைக்கு உயர்த்தப்படுவார். உலக மாந்தர் மேல் தேவன் கொண்டுள்ள அன்பையும், கருணையையும், இரக்கத்தையும் வெளியரங்கமாகக் காண்பிப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக ஆயிற்று. இதனை நிறைவேற்றுபவர் தாழ்ச்சியும், கீழ்ப்படிதலும், தேவ அன்பை வெளியரங்கமாக பறை சாற்றுபவராகவும் இருக்க வேண்டும் என்பதினால் இப்பணிக்கு தன் ஒரே பேறான குமாரனையே நியமிக்க வேண்டியது அவசியமாயிற்று. அதனால் அவரை உன்னத மகிமைக்கு உயர்த்தவும் தேவன் சித்தம் கொண்டிருந்தார்.

நாம் முன்னரே பார்த்தவண்ணமாக, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தான் மனித உருவெடுப்பதற்கு முந்திய நிலையில் இருந்தபோது பிரதான தூதனாக, வார்த்தையாக, பிதாவினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரே குமாரனாக, கிருபையிலும், சத்தியத்திலும் சிறந்து விளங்கினார். உலகை சிருஷ்டித்த நாள் தொடங்கி இன்று வரை தொடர்ந்து யேகோவா தேவனின் பிரதிநிதியாக இருந்து வருகிறார். மற்றெல்லோரையும் சிருஷ்டிப்பதற்கு முன்பதாகவே தேவனின் ஒரே பிள்ளையாக இவர் ஜெநிப்பிக்கப்பட்ட போது தேவனை நன்கு அறிந்தவராகவும், அவருடைய மகிமையைக் கண்டு மகிழ்ந்தவராகவும், அவருடைய வல்லமை புறப்படுகிற வாய்க்காலாகவும் இருந்தார். அப்போஸ்தலர் சொல்லுகிறபடி பரலோக அரசாட்சியில் முதன்மை பெற்றவரும், பரமபிதாவிற்கு அடுத்த ஸ்தானத்தைப் பெற்றவருமாய் இருந்தவர். மனிதனை மீட்கும் மீட்புப்பணியை, தெய்வீக சித்தத்தை நிறைவேற்றும், சிறப்புரிமையைப் பெற்றிருந்தார். தேவன் இவர் மேல் கொண்ட தனிப்பெரும் நம்பிக்கையினிமித்தமும் அவர் மீது காட்டிய தயையினிமித்தமும், இந்த உரிமை வழங்கப்பட்டது. ஏனெனில் அப்பணியை நிறைவேற்றப் போகிறவர் கீழ்ப்படிதலும், பணிவும், தன்னையே தியாக பலியாக தருபவருமாய் இருக்க வேண்டும் என்ற தேவ நீதியின்படி இவர் இந்த மேலான பணிக்கு தெரிந்து கொள்ளப்பட்டார். (மத். 23:12; யாக். 4:10; 1 பேது 5:6) அவ்வாறு

*அப்பணியை செவ்வனே செய்து முடித்தால் தனது மேலான மகிமையை அவருக்குத் தரவும் முன்கூட்டியே தேவன் திட்டமிட்டிருந்தார். தேவன் தனது குமாரன் இறுதிவரை உண்மையுள்ளவராக நடந்து வெற்றி பெற்று உன்னத மகிமைக்கு உயர்த்தும் தகுதியைப் பெறுவார் என்கிற நம்பிக்கையின் அடிப்படையில் அவருக்கே முதல் வாய்ப்பளித்தார். ஏனெனில் படைப்பின் துவக்கத்திலிருந்தே குமாரன் தேவதிட்டத்தை அறிந்து களிகூர்ந்தவராக இருந்ததாலும் இனியும் முன்பிருந்த நிலையையே பெரிதும் விரும்புவார் என்ற எதிர்பார்ப்பிலும் தேவன் அவரை இப்பணிக்குத் தெரிந்தெடுத்தார்.*

*"...எல்லாவற்றிலும் முதல்வராக இருக்கும்படி இவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும் அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று." (விழுந்துபோன தூதர்களும், மனிதர்களும் தேவதயையைப் பெற்று தங்கள் விழுகை நிலையிலிருந்து மீண்டும் சீர்படுத்தப்படுவார்கள்). கொலோ. 1:18-20*

*ஆவிக்குரிய ஸ்தானத்தில் உள்ள ஒருவரை மனிதனுக்கு ஈடுபலி செலுத்த தெரிந்தெடுத்ததினால், பரலோகவாசி ஒருவர் மட்டுமே பூமியில் உள்ள மனிதனுக்கு ஈட்டுக் கிரயமாக பலி செலுத்த வேண்டும் என்று தவறாக நாம் கருதிவிடக் கூடாது. இது நேர் எதிரிடையான, முரணான சிந்தனையாகும். மனிதனின் பாவத்திற்கு ஈடுபலியாக ஒரு ஆவிக்குரிய ஜீவியையோ அல்லது ஆடு, மாடுகளையோ பலியிட முடியாது. ஏனெனில் ஆடு, மாடுகளின் இரத்தம் பாவத்தை ஒருபோதும் போக்க இயலாதவை. ஏனெனில் அவைகள் மனிதனை விட தாழ்ந்த நிலையில் உள்ளவைகள். அதுபோலவே தேவ தூதர்களும் ஆதாம் செய்த பாவத்தை, அதற்கான ஈடுபலியை செலுத்தி ஒப்புரவு உண்டாக்கி விட முடியாது. ஏனெனில் இவர்கள் ஆதாமின் மனித சுபாவத்தைப் பெற்றிருக்கவில்லை. மனித ஜீவன் தான் பாவத்தினால் பறிக்கப்பட்டது. இந்நிலையில், இன்னொரு மனித ஜீவன் மட்டுமே பாவத்திற்கு ஈடுபலியாக,*

விலைக்கிரயமாக ஏற்றுக்கொள்ளப்பட முடியும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், மனிதப் பிறவி எடுத்தால் தான் ஈட்டுக் கிரயம் செலுத்த முடியும் என்பதினால், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தான் முன்பிருந்த மகிமை நிறைந்த ஆவிக்குரிய ஜீவியத்தை விட்டு விட்டு, தன்னையே தாழ்த்தி, மனிதனாக வேண்டியதாயிற்று.

நமது கர்த்தர் ஆவிக்குரிய ஜீவியாக இருந்த மகிமையை விட்டுவிட்டு, தன்னையே தாழ்த்தி, மனிதனுக்குரிய தாழ்ந்த நிலையை எடுத்தார் என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. ஆனால் அவர் பாவ நிவராண பலியாக இருக்கிறார் என்று வேதத்தில் குறிப்பிடவில்லை. இதற்குமாறாக தன்னையே தாழ்த்தியதன் மூலம் ஈட்டுக்கிரய ப லி செலுத்தும் பொருட்டு பாவ நிவாரண ப லியானார். இதனை உரைக்கும் நோக்கத்திற்காகவே, அப்போஸ்தலர் தெள்ளத் தெளிவாக, "ஆதலால் அவர் தேவ தூதருக்கு உதவியாகக் கை கொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கை கொடுத்தார்" (எபி 2:16) என்கிறார். (இங்கு தேவ தூதர்கள் என்பது பாவம் செய்து விழுந்து போன தூதர்களைக் குறிக்கும்). தேவன் தனது பிள்ளைகளாக எத்தனை நபர்களை முன்குறித்தாரோ, அத்தனை பேரையும் மாம்சமும், இரத்தமும் உடையவர்களாயிருந்த அவர்களை பாவம், சாபம் போன்ற கட்டுக்களிலிருந்து விடுபடச் செய்ய விரும்பினார். "அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்." (எபி. 2:14-15) இதனைக் குறித்து இன்னும் விளக்கமாக அப்போஸ்தலர், "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று" என்கிறார். (1கொரி. 15:21) மேலும், அப்.யோவானின் சுவிசேஷம் இதனைக் குறித்து இன்னும் மேலான சான்று பகர்கின்றது. "அந்த வார்த்தை மாம்சமாகியது" (யோவா. 1:14) என்கிறார். இதோடுகூட நமது கர்த்தர் இவ்வுலகிலிருந்தபோது கூறிய வார்த்தைகளும் மேற்கண்ட சாட்சியத்தை உறுதி செய்கின்றது. "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம்

இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." *(யோவா. 3:17)* இந்த உலகம் இன்னும் இரட்சிக்கப்படவில்லை என்ற பொருளையோ அல்லது உலக மாந்தரின் மீட்புக்காக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்ற கருத்தினையோ சொல்லாமல் அவரால் அனுப்பப்பட்டவர் செலுத்தப்போகிற தியாக பலியினாலே உலகம் மீட்கப்படும் என்ற பொருள்படக் கூறுகிறார். நமது கர்த்தருடைய ஊழியத்தின் பிரதான நோக்கத்தினைக் குறித்து அவரே குறிப்பிடுவதாவது: "...மனுஷ குமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." *(மாற்கு 10:45)* இயேசு தாம் மனிதனாக வருவதற்கு முன்பதாக, உலகத் தோற்றத்திற்கு முன்னர், பிதாவோடு பெற்றிருந்த மகிமையை, ஒரு பொருட்டாக கருதாமல் ஆவிக்குரிய ஜீவியின் நிலையிலிருந்து, மனிதனுக்குரிய தாழ்ந்த நிலையை எடுத்தபோது, ஈடுபலிக்காக தன் ஜீவனை ஒப்புக் கொடுக்கவில்லை. மாறாக, தமக்கு முன்பாக வைத்திருந்த தியாகபலியைச் செலுத்துவதற்காக தன்னையே ஆயத்தம் பண்ணினார். அவர் வாலிபப்பருவம் அடைந்தவுடன் நியாயப் பிரமாணத்தின்படி முப்பதாண்டுகள் நிறைவு பெற்றவுடன், தன்னையே ஜீவிபலியாக தத்தம் செய்தார். ஞானஸ்நானத்தில் தன்னை ஒப்புக் கொடுத்து யோவான் ஸ்நானகனால், யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம் பெற்றார் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

அப்போஸ்தலர் சொல்லுகிறபடி, அவர் ஞானஸ்நானம் பெற்றவுடன், "தேவனே! இதோ உம் சித்தத்தை நிறைவேற்ற வருகிறேன்" என்ற பழைய தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. தேவ சித்தத்தை நிறைவேற்றவும், பாவம் போக்கும் பலியாக தன்னையே ஒப்புக்கொடுக்கவும் வந்திருந்தார். எனவே அவர் இதற்கு முன்பு எப்போதும் தன்னை ஒப்புக் கொடுத்ததில்லை. மரண பரியந்தம் தேவ சித்தத்திற்காக ஜீவ பலியாக தன்னையே அர்ப்பணிப்பது அவர் பெற்ற ஞானஸ்நானத்தில் அடங்கியிருந்த பேருண்மை. பழைய ஏற்பாட்டு முறைமையின்படி பாவத்திற்காக செலுத்தப்பட்டு வந்த நிழலான மிருக பலிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, அதற்குப் பொருளான பலியாக தானே மனமுவந்து தேவ நீதிக்குட்பட்ட நிஜமான பாவம் போக்கும் பலியை (தன் சரீர அங்கங்களுக்கும்

சேர்த்து) தன் மரணத்தின் மூலம் நிறைவேற்றினார். இப்படியாக தேவனுக்கும் மனிதனுக்குமிடையேயான புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையை முத்திரையாக ஏற்படுத்தினார். ஆகவே இப்பகுதியில் (1தீமோ 2:5,6) நாம் ஆராய்ந்தவாறு, இயேசுகிறிஸ்து மனிதனாக வருவதற்கு முன் வார்த்தையாக இருக்கும்போது இப்பலியை நிறைவேற்றாமல், "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக" இப்பலியை நிறைவேற்றினார்.

## மனிதனை மீட்கும் தேவ திட்டத்தின் முதற்படி

அப்போஸ்தலர் (எபி. 2:5-9) தேவதிட்டத்தின் முழுப் பகுதியையும் கண்முன் நிறுத்தி, அதில் மனித மறுசீரமைப்புக்கென்று தேவன் வாக்களித்திருக்கிறதை விவரிக்கும்படி சங்கீதக்காரனாகிய தாவீது கூறிய வார்த்தையை மேற்கோளாகக் காண்பிக்கிறார். (சங். 8:4-8) மனுக்குலம் சிருஷ்டிகராகிய தேவனின் பிரமாணங்களுக்குட்பட்டு பரிபூரண சுபாவம் பெற்று, இப்பூமியையும் அதன் ஜீவ ராசிகளையும் அடக்கி ஆண்டு கொள்ளும் கர்த்தாக்களாக, மாற வேண்டுமென்பதே தேவ திட்டம். "இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளிலிருந்து மனிதன், பிதாவாகிய தேவனின் சாயலையோ இப்பூமியின் கர்த்தாவுக்குரிய சாயலையோ இன்னும் அடையவில்லை என்பது புலப்படுகிறது. இந்த திட்டதின் முதற்படியாக,

"தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசி பார்க்கும்படிக்கு தேவ தூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் (மனிதனை மறுசீரமைக்கும் சாத்தியத்தை உண்டு பண்ணினார்) மகிமையினாலும், கனத்தினாலும் முடி சூட்டப்பட்டதைக் காண்கிறோம்." மனிதனுக்கான இரட்சிப்பின் திட்டம் இவ்வாறாக "யேகோவா" தேவனால் மீட்புக்காக சரிநிகரான ஈட்டுக் கிரயப்பலி நிறைவேற்றப்பட்டு துவங்கப் பெற்றது. முந்தைய ஆதாம் எவ்வாறு மகிமையினாலும், கனத்தினாலும் நிறைந்த முழு மனித சுபாவத்தைப் பெற்றிருந்தாரோ அதே சுபாவ, நிலைமையில் உள்ள

ஒருவரைக் கொண்டு ஈடுபலி நிறைவேற்றப்பட்டது. இந்த நோக்கத்திற்காகவே அவர் முன்பிருந்த மேலான மகிமையை விட்டுவிட்டு, தூதர்களுக்கும் கீழான நிலையை விரும்பி ஏற்றுக் கொண்டு "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்." "மரணத்தை உத்தரிப்பதற்காக" அவர் மனுஷ சாயலானார் என நாம் காண்கிறோம். மரணமே மனுக்குலத்திற்கு விரோதமாக கொடுக்கப்பட்ட தண்டனை. நமது பரலோக பிதா, நமது ஈடுபலிக்காகவும், மறுசீரமைப்புக்காகவும், தன்னோடு முழு ஒப்புரவாகுதலுக்காகவும் அநேக ஏற்பாடுகளை செய்திருக்கிறார் என்பதை அறிகிற நாம் மிகுந்த சந்தோஷம் அடைகிறோம். பூரண நீதியின் நிலையில், தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி வெகு நேர்த்தியாக தமது திட்டத்தினை ஏற்பாடு செய்திருக்கிறார். இவ்வாறாக இயேசு கிறிஸ்து மனிதனுடைய பாவத்திற்காக தியாக பலி செலுத்தியது ஆவியின் ரூபத்திலல்ல. அவ்வாறு ஆவிக்குரிய ரூபத்தில் பலி செலுத்தப்பட்டிருக்குமேயானால் அது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்திருக்காது. ஏனெனில் ஈட்டுக்கிரய பலியை நிறைவேற்றுபவர் பரிபூரண மனித சாயலிலிருந்த ஆதாமுக்கு ஒப்பாக இருக்க வேண்டும்.

## மீட்பு, ஈடுபலியின் முக்கியத்துவம்

புதிய ஏற்பாட்டில் 'ஈடுபலி'யைக் குறித்து மிகக் குறைவான விளக்கங்களே தெளிவாகவும், உறுதியாகவும் கூறப்பட்டிருப்பதால் இதைப்பற்றி நன்கு விவரிப்பது அவசியம். இந்தச் சொல்லானது இருமுறை மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தைக் குறித்துச் சொல்லும்போது ஒருமுறையும், அப்போஸ்தலர்கள் அந்தப்பணி நிறைவடைந்ததைப் பற்றி குறிப்பிடும்போது ஒருமுறையும் (தலைப்பு வசனம்) உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. நமது கர்த்தர் இவ்விடத்தில் உபயோகித்த கிரேக்கச் சொல் லூட்ரான் - ஆண்ட்டி (lutron-anti) என்பதாகும். இதற்கு "ஈட்டுத்தொகை கொடுத்து சரிக்கட்டுதல்" அல்லது "மீட்கும் பொருள்" என்று பொருள் ஆகும். நமது கர்த்தர் இந்தப் பொருளில் கூறும் வேதப்பகுதியை கவனிப்போம்.

"மனுஷ குமாரனும்... அநேகரை மீட்கும் பொருளாகத் (lutron-anti- ஈடுசெய்வதற்காக கொடுக்கப்பட்டவிலை) தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." (மாற்கு. 10:45) அப்போஸ்தலர் பவுல் இந்த கிரேக்கச் சொல்லினை வித்தியாசமாக மாற்றி (anti-lutron) "ஈட்டுக் கிரய பலி"என எடுத்துரைக்கிறார். "எல்லாரையும் மீட்கும் பொருளாகத் (ransom-anti lutron) தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." (1 தீமோத். 2:6)

மேற்கண்ட வாக்கியம் உபயோகப்படுத்தப்பட்ட முறையைக் குறித்து எவ்வித சர்ச்சைக்கும் இடமில்லை. அநேகர் தேவனுடைய தேவ வாக்கியங்களை சரிவர பகுத்தாராயாமல் வேகமாக படிப்பதன் மூலம் தங்களையே வஞ்சித்துக் கொள்கிறார்கள். மத்தியஸ்தர் மூலம் மீட்கும் பொருளின் பணி வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டது என்று நமது கர்த்தரே சாட்சி பகர்ந்திருக்கிறார். இந்த மீட்கும் பொருள் அல்லது சரிசமமான ஈட்டுத்தொகை என்ற விஷயத்தை இன்னும் ஆழ்ந்து சிந்திப்போமேயானால், அநேக உண்மைகள் இதிலிருந்தே புறப்படுவதை அறியலாம். அதோடு, ஒப்புரவாக்குதலின் முழுப்பணியும் இந்த வெளிச்சத்தை மையமாகக் கொண்டே பிரகாசிக்கின்றது என்பதையும் அறியலாம். ஈட்டுக்கிரய பலியில் அடங்கியுள்ள ஒரேயொரு உண்மை என்னவெனில், ஆதாம் கீழ்ப்படியாமையினால் தன் ஆத்துமாவையும், பூமியில் தான் பெற்றிருந்த சகல உரிமைகளையும், சலுகைகளையும் இழந்து தண்டனைத் தீர்ப்புக்குள்ளானான். அதன் தொடர்ச்சியாக அவனுடைய பின் சந்ததியராகிய மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கமும் அந்த சாபத்தில் பங்குள்ளவர்களானார்கள். எனவே நமது கர்த்தராகிய இயேசு, சரியான விலைக்கிரயமாகிய தனது மரணத்தினால், பிதாவாகிய ஆதாமின் ஆத்துமாவுக்கும் அதனிமித்தம் அவரது வம்சாவழியினருக்கும் - ஒவ்வொரு மனித ஆத்துமாவுக்கும் சரியான முழுமையான ஈட்டை (கிரயத்தை) செலுத்தினார். - ரோமர் 5:12

வேதாகமத்தில் கர்த்தரின் விலைக்கிரயம் கொடுத்து மீட்கும் பணியைக் குறித்து அநேக இடங்களில் ஏராளமான கருத்துக்

குவியல்கள் இடம் பெற்றுள்ளன. தற்போது மீட்கும்பொருள் என்ற வார்த்தையைக் குறித்து சரிவர ஆராய முற்படுவோம். இதற்கான கிரேக்கச் சொல் ஆண்ட்டி லூட்ரான் (anti-lutron) என்பதாகும். இந்த கிரேக்கச் சொல் மிகத் துல்லியமான பொருளை உடையதாயுள்ளதால் இதனை ஆராய்வது அவசியம். மீட்டல், மீட்கப்பட்ட, மீட்பர், மீட்பு என்ற வார்த்தைகள் - நிவாரணத் தொகை செலுத்தப்பட்டது என்ற பொருளைத் தருவதாயிருந்தாலும், விடுவிக்கப்படுதல் என்ற கருத்தினையும் உள்ளடக்கியதாயுள்ளது. அல்லது யாருக்காக நிவராண பலி செலுத்தப்பட்டதோ, அவர்களை விடுவித்தல் என்ற அர்த்தத்தையும் தருகின்றது. பொதுவாகவே இந்த வார்த்தைகள் ஆங்கிலத்திலும், மூல மொழியிலும் சில நேரங்களில் பலி , ஒப்புக்கொடுத்தல் என்றும், மீட்பு, கிரயம் செலுத்துதல் என்றும், மீட்க வேண்டியவர்களை மீட்டு விடுதலையளித்தல் என்றும் சில இடங்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஈடுபலியைக் குறித்த போலியான போதகத்தின் அதிபதியான சாத்தான், மனிதனுடைய பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுதலை பெற ஈடுபலி தரப்பட்டுள்ளது என்பதை கள்ளத்தனமாக மறைத்து மீட்பு அல்லது மீட்டல் என்ற கொள்கையானது முழு மனுக்குலமும் பெறக்கூடிய விடுதலையைக் குறிப்பதாக உள்ளதென்று கூறி திசை திருப்பி விடுகிறான். தேவகிருபையினால், தனது ஒரே பேறான குமாரனைக் கொண்டு பாவநிராண பலியை நம் நிமித்தமாக கல்வாரியில் நிறைவேற்றி “முடித்ததன்” மூலம் தற்காலத்திலும் வர இருக்கின்ற யுகத்திலும் மனுக்குலம் பெறப்போகின்ற ஆசீர்வாதத்தை மறைத்து, மீட்பைக் குறித்த ஈடுபலியை தெளிவாக எடுத்துரைக்கும் தேவ வசனத்தை புரட்டுகின்றனர். (யோவா. 19:30)

பொதுபதிப்பு வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் மீட்பு என்கிற கிரேக்க வார்த்தைகளுக்கு உண்மைப் பொருள் அறியாமல் உண்மைக்கு மாறுபட்ட விளக்கம் தரக்கூடிய சொற்களைக் கையாண்டிருக்கிறார்கள். இது மீட்கும் பொருளை எதிர்ப்பவர்களுக்கு சாதகமாயிற்று. எனவே படிப்பவர்கள் இச்சொற்களைப் பற்றிய தெளிவான கருத்தை தெரிந்துகொள்வதற்காக, மீட்பு, மீட்டுக் கொள்ளுதல் போன்ற வார்த்தைகளை ஒட்டி வருகிற பல்வேறு கிரேக்க சொற்களையும்

எடுத்து இங்கு தருகின்றோம். பேராசிரியர் யங் தனது ஒத்துவாக்கிய அகராதியில் "மீட்பு" என்ற வார்த்தையைக் குறித்து விளக்கியுள்ள பகுதிகளை இங்கு காண்போம்.

கிரேக்கச் சொல்லான அகோரஸோ (agorazo) என்ற வார்த்தையினை "மீட்பு" என்று சில இடங்களில் மொழி பெயர்த்துள்ளனர். இவ்வார்த்தையைக் குறித்து பேராசிரியர் யங் குறிப்பிடும் போது, "சுயமுயற்சியினால் வெளியரங்கமாக சம்பாதித்தது" என்கிறார். சாதாரண மொழியில் எளிமையாகச் சொல்ல வேண்டுமானால், "சந்தைத் தெருவில் விலைக்கு வாங்கப்பட்டது" என்று கொள்ளலாம். அகோரா (agora) என்ற சொல்லுக்கான மூலப்பொருள் 'வணிகஸ்தலம்' என்பதாகும். இதே பொருளை மையமாக வைத்துதான் வேதாகமத்தில் அநேக இடங்களில் இச்சொல் எடுத்தாளப் பட்டுள்ளது. (மத். 20:3; மாற்கு 12:38; லூக் 7:32; அப். 16:19) புதிய ஏற்பாட்டில், "அகோரஸோ" என்ற சொல் "மீட்கப்பட்ட" என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ள பகுதிகளை இனி காண்போம்:

"...ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக் காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு..." வெளி 5:9

"...அந்தப்பாட்டு பூமியி-ருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக் கொள்ளக் கூடாதிருந்தது." - வெளி 14:3

"...இவர்கள் மனுஷரி-ருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள்." - வெளி 14:4

மேற்கண்ட ஒவ்வொரு வசனத்திலும் வெளியரங்கமாக விலைக்கு வாங்கப்பட்டது என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. இதே வார்த்தை (அகோரஸோ) புதிய ஏற்பாட்டில் பல்வேறு இடங்களிலும் வணிகத்தை பொருளாகக் கொண்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை 31 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் மூன்று முறை

*"மீட்கப்பட்டது" என்ற பொருளிலும், 13 முறை "வாங்கப்பட்டது" என்ற பொருளிலும், 15 முறை "வாங்குதல்" என்ற பொருளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தைக்கு நாம் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் தருகிறோம் என்பதற்கான காரணத்தை இங்கு கூறியாக வேண்டும். நமது சந்ததி சாபத்திலிருந்து விடுதலையாக ஈட்டுக்கிரயம் செலுத்தப்பட்டு விலைக்கு வாங்கப்பட்டோம் என்பதற்கு மறுக்கும் நிலைமை தொடர்ந்து இருந்து வருவதோடு இன்னும் அதிகரிக்கிறது. ஆகவே இச்சொல்லுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்தி-ருந்து" வழுவாமல் பாதுகாக்கவே இவ்வார்த்தையை அதிகமான விளக்கங்களோடு தியானிக்க வேண்டியதாயிற்று.*

*மீட்பு, மீட்கப்பட்ட, மீட்பினை ஏற்படுத்துதல் என்று பொருள் தருகின்ற வார்த்தையோடு தொடர்புடைய இன்னொரு சொல், "எக்ஸ் அகோரஸோ" என்பதாகும். பேராசிரியர் யங் இவ்வார்த்தைக்கு, "ஒருவருடைய சுயமுயற்சியினால் மறைமுகமாய்ப் சம்பாதித்தது" என்று பொருள் தருகிறார். சாதாரண மொழியில் சொல்வோமேயாகில், வெளியரங்கமாக விலைக்கு வாங்கி தன்னுரிமையாக்கிக் கொள்ளுதல் என்று பொருள் தரும். புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையை உபயோகித்து அமைத்த சொற்கள் பின்வருமாறு:*

*"கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாகி மீட்டுக் கொண்டார்." - கலாத். 3:13*

*இங்கு அப்போஸ்தலர் எடுத்துக் காண்பிக்கிறபடி, யூத முறைமையிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள், நியாயப் பிரமாணத்தின் சாபத்திலிருந்து நீங்கலாக்கி, விலைக்கு வாங்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அதன் ஆளுகையிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர். இங்கு உபயோகிக்கப்பட்ட எக்ஸ் அகோரஸோ என்ற சொல்லில்* (exagorazo) *அகோரஸோ என்ற சொல் 'விலைக்கு வாங்கப்பட்டீர்கள்' என்ற பொருளைத் தருகிறது. இச்சொல்லுடன் ஆங்கிலத்தில் முற்சேர்க்கையாக இடம் பெற்றுள்ள "எக்ஸ்"* (ex) *என்ற சொல் சேரும்போது, "விலைக்கு வாங்கப்பட்டதன் மூலம் மீட்கப்பட்டீர்கள்" என்று பொருள் தருகிறது. எனவே இனி அவர்கள்*

*நியாயப் பிரமாண சட்டங்களுக்கு உட்பட்டவர்களல்லர்.*

*"நாம் புத்திர சுவீகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய, தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்." கலாத். 4:4,5*

*நியாயப் பிரமாணத்திற்குட்பட்டிருந்த யூத மக்கள் விலைக்கு வாங்கப்பட்டதோடு, விசுவாசித்தவர்களை தேவனுடைய குமாரர்களாகும்படி மீட்டுக் கொண்டார் என்ற கருத்தும் மேற்கண்ட வசனத்தின் மூலம் தெளிவாகிறது. யோவான் 1:12ஐ ஒப்பிட்டுப்பார்க்கவும்.*

*"நீங்கள் ஞானமற்றவர்களைப் போல் நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்." (எபேசி 5:15,16; கொலோ 4:5) எக்ஸ் அகோரஸோ என்ற வார்த்தையே அதே பொருளில் இங்கும் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. கர்த்தருடைய பிள்ளைகள் தீமை நிறைந்த உலகில் ஜீவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, பாவ சிந்தனைகளிலோ அல்லது ஆதாயமற்ற செயல்களைச் செய்தோ, தங்கள் ஆற்றலையும், காலங்களையும் இழந்துவிடாமல் தேவ பிள்ளைகளாகிய நம் இருதயங்களில் எப்பொழுதும் பரம அழைப்புக்குரிய மேலானவற்றையே நாடித்தேட ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் தீமையின் பிடியிலிருந்து நம்மை மீட்டுக் கொண்டவர்களாக, தீமையிலிருந்து விலகுகிறபோது காலத்தை மீட்டு ஆதாயப்படுத்திக் கொள்ளவும், நாம் ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட்டு, பலப்படவும், மற்றவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களில் உதவவும் முடியும். இம்மாதிரி ஆவிக்குரிய காரியங்களில் நேரத்தை பிரயோஜனப்படுத்தும்போது, சுயத்தை வெறுக்கவும், சுபாவப்படியான மாம்சீக இச்சைகள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றிலிருந்து விடுபடவும் வழிவகுக்கும். இவ்வாறு மீட்கப்பட்ட ஜீவியம் ஜீவிக்கும்போது, உலகத்தார் ஆச்சரியப்பட்டு,*

*"அந்த துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள்*

*விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு நம்மை தூஷிக்கிறார்கள்." -1 பேது. 4:4*

"மீட்பு" என்ற பதத்திற்கு மற்றுமொரு கிரேக்கச் சொல்லான "லுட்ரூ" உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல்லுக்கு 'விலைக் கிரயத்தால் விடுவித்தல்' என்று பேராசிரியர் யங் விளக்கம் தருகிறார். லுட்ரூவின் மூலப்பதம் லுட்ரான் ஆகும். லுட்ரான் என்ற சொல்லோடு ஆன்ட்டி (anti) என்ற முற்சேர்க்கையே அல்லது பிற்சேர்க்கையோ இணையும்போது, ஈட்டுக் கிரயம் என்று பொருள்படுகிறது என்பதை நாம் முன்னரே கண்டோம்.

'லுட்ரூ' என்ற சொல் மூன்று முறை புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது. அதனை கீழே காண்போம்.

*"அவரே இஸ்ரயேலை <u>மீட்டு இரட்சிப்பவர்</u> என்று நாங்கள் நம்பியிருந்தோம்." (லூக். 24:21)*

நமது கர்த்தர் இறந்தவுடன் அப்போஸ்தலர்கள் ஏமாற்றமடைந்தவர்களாக, இஸ்ரயேலை ரோமருடைய நுகத்தினின்று விலை கொடுத்து மீட்பார் என்று எதிர்பார்த்திருந்த அவர்கள் நோக்கம் நிறைவேறாததினால் இவ்வார்த்தைகளைக் கூறினர். ஏனெனில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்படாதவர்களாக இருந்ததினால், தேவ திட்டத்தின் நீள அகல, ஆழ, உயர பரிமாணங்களை அறிந்து கொள்ளாதிருந்தனர். தேவ திருவுளப்படி, நமது கர்த்தர் மரணத்தின் மூலம் ஈடுபலி செலுத்தியதினால் இஸ்ரயேல் ரோமரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதோடு மாத்திரமல்ல, முழு உலகும் சாத்தானின் பிடியிலி ருந்தும், மாபெரும் சிறையாகிய மரணத் தளையினின்றும் விடுதலை பெற்றது.

*"நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு... நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்." (தீத்து 2:14)*

நமது ஆண்டவர் மனுக்குலத்தினிமித்தம் ஈடுபலி கொடுத்தது, அவர்களை பிரேதக் குழியிலி ருந்து உயிரோடெழுப்புவதற்காக மட்டுமல்ல, தேவனால் நிர்ணயிக்கப்பட்ட வேளையில், ஆயிர வருட அரசாட்சியின்போது

மனுக்குலம் தேவனோடு புதிய உடன்படிக்கையின்படி இசைவாக வரவும் ஆகும். இதற்கு மேலாக தற்போது சுவிசேஷ சத்தியத்திற்கு செவி கொடுத்து அவரது விலையேறப் பெற்ற சொந்த இரத்தத்தினாலே இனி பாவத்திற்கு அடிமையாயிராதபடி மீட்கப்பட்டு தங்களை விடுதலையாக்கினவருக்கு ஊழியக்காரர்களாக ஆவதற்கும் ஆகும்.

“உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.” *(1 பேது 1:18,19)* முன்னர் சொல்லப்பட்ட கருத்தோடு இந்த வசனமும் ஒத்திருக்கிறதை கவனிக்கவும். இக்கருத்து உயிர்த்தெழுதலின்போது மரணத்தினின்று மீட்கப்படுதலைப் பற்றி அதிகமாக வலியுறுத்தாமல் நாம் தற்கால தீமையான சந்ததியினின்று விடுவிக்கப்படுவதையும், வீண் வாக்கு வாதங்கள், முட்டாள்தனமான பேச்சுக்கள், பாவம், சாபத்தை சார்ந்திருக்கின்ற யாவற்றினின்றும் விடுவிக்கப்படுவதையே தொடர்பு படுத்துகிறது. இந்த சுதந்திரமானது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் விலைக்கு வாங்கப்பட்டதாகும். இந்த விடுதலை இத்தோடு மட்டும் நின்றுவிடாமல், வரவிருக்கின்ற மாபெரும் உயிர்த்தெழுதலோடும் தொடர்புடையதாகும். ஈட்டுக்கிரய பலி செலுத்தப்படாமல், தேவ நீதி நிறைவேற்றப்படாதிருந்தால் தேவன் நம்மை குமாரர்கள் என்று அங்கீகரிக்க வாய்ப்பில்லாமல் போயிருக்கும். நாம் குமாரர்களாக எண்ணி தொடர்பு கொள்ள முடியாத நிலை தொடர்ந்திருக்கும். தேவன் தன் புத்திர சுவீகாரத்தின் ஆவியை முத்திரையாகக் கொடுத்து அவர் குடும்பத்தில் சேர்க்கவும் கூடாத நிலை தொடர்ந்திருக்கும். இப்படிப்பட்ட தேவகிருபையின் பல்வேறு ஆசீர்வாதங்கள் தற்போது சத்தியத்தை விசுவாசிப்பவர்களுக்கு அருளப்படுகிறது. இவையே இரட்சிப்புக்கான தேவபெலனாயிருக்கிறது. இந்த தேவ வல்லமை, நம் உள்ளத்தில் குடி கொண்டிருந்த பாவத்தினைப் போக்கி, கர்த்தரின் சிந்தை அல்லது ஆவியைப் புகுத்தி, ஆதிக்கம் பெறச் செய்து, இரட்சிப்பின் நாள் வரை நம்மை காத்து நடத்துகிறது.

"மீட்பு" என்ற (redemption) பொருள் தருகிற இன்னொரு கிரேக்க வார்த்தை - லுட்ரோசிஸ் (lutrosis) என்பது. பேராசிரியர் யங் இவ்வார்த்தைக்கு 'கட்டவிழ்த்து விடுதல்' என்று பொருள் தருகிறார். இதற்கு விடுதலையாக்குதல், மீட்டுக் கொள்ளுதல் என்றும் பொருள் தரலாம். இவ்வார்த்தையில் "விலைக் கிரயம் கொடுக்கப்பட்டது" என்ற பொருள் உள்ளடங்கவில்லை என்பதை அறிய வேண்டியது அவசியம். (கீழ்க்காணும் வசனங்கள் தமிழில் சரியாக "மீட்பு" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது) ஆனால் ஆங்கிலத்தில் (KJV) தவறுதலாக redemption என மொழிபெயர்த்திருக்கின்றனர். இது இரண்டு இடத்தில் வருகிறது:

"அவளும் அந்நேரத்திலே வந்து நின்று கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள்." (லூக் 2:38) மேற்கண்ட வசனத்தில் விலைக்கிரயத்தைப் பற்றிக் குறிப்பிட வில்லை என்பதை கவனிக்கவும். எருசலேமில் ரோமர் ஆட்சியின் பிடியிலிருந்து மீட்புக்காகக் காத்திருந்தவர்களைக் குறித்தே அன்னாள் பேசினாள். ஆனால் பிற்காலத்தில் ஈட்டுக்கிரய பலி செலுத்தப்பட்டு மாபெரும் விடுதலை கிடைக்கப் போகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் அவ்வேளையில் இருக்கவில்லை.

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, ... வெள்ளாட்டுக்கிடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, நம்முடைய சொந்த இரத்தத்தினாலும், ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை (deliverence) உண்டு பண்ணினார்." (எபி.9:11,12) இவ்வசனத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்து எவ்வாறு நித்திய விடுதலையாகிய மீட்பை அடைந்தார் என்று குறிப்பிடவில்லை. அதோடு விலைக்கிரயம் செலுத்தப்பட்டது என்பதற்கான குறிப்பு எதுவும் இல்லை. இங்கு அப்போஸ்தலர் தேவனுடைய பிள்ளைகள் தற்காலத்திலும், வர இருக்கின்ற காலத்திலும் மீட்கப்படுவதை மட்டுமே குறிப்பிடுகிறார். மாறாக, எந்த வழிமுறைகளில் எதனை அடிப்படையாகக் கொண்டு மீட்பு ஏற்பட்டது என்றும் குறிப்பிடவில்லை. மாறாக நமது கர்த்தர் மனிதனுக்காக ஈடுபலி செலுத்த வேண்டி தன்னையே தியாக பலியாக்கி, பரிசுத்த ஸ்தலத்தில்

*நுழைந்தார் என்ற கருத்தினையே இவ்விடத்தில் வலியுறுத்துகிறார்.*

*புதிய ஏற்பாட்டில் "மீட்பு"* (redeemed) *என்ற வார்த்தைக்கான கிரேக்கச் சொல் "பாயோலுட்ரோசின்"* (poieolutrosin) *என்பதாகும். "கட்டவிழ்த்துவிடுதல்" அதாவது சுதந்திரம் பெற வழி ஏற்படுத்துதல் என்று பேராசிரியர் யங் இவ்வார்த்தைக்கு பொருள் தருகிறார். இவ்வார்த்தை ஒரேயொரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*"இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக, அவர்... தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக் கொண்டு..."* (redeemed) ***லூக்.1:68,74***

*மேற்கண்ட வசனம் தீர்க்கதரிசனமாக முன்னுரைக்கப்பட்ட ஒன்று. நிறைவேற்றித்தீராத சம்பவங்களை இவ்விடத்தில் நிறைவேறி முடிந்ததாக குறிப்பிடுகிறார். இஸ்ரயேலர்களின் மீட்புக்காக முதற்படி மட்டுமே முடிவடைந்திருந்தாலும், அதன் திட்டங்கள் முழுமையாக நிறைவேறிவிட்டதாக மகிழ்ச்சியோடு இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வசனத்தில் மீட்பு எப்படி ஏற்படுத்தப்படும் என்ற கருத்து கூறப்படவில்லை என்றாலும், மற்ற வேதவாக்கியங்கள் சொல்லுகிறபடி சரிநிகரான ஈட்டுக் கிரயப-செலுத்தப்பட்டதன் மூலம், தேவ ராஜ்யம் இவ்வுலகில் ஸ்தாபிப்பதன் வழியாக ஏற்படுத்தப்படும்.*

*இன்னுமொரு கிரேக்க வார்த்தையான "அப்போலுட்ரோசிஸ்," தவறுதலாக, "விலைக்கிரயம் கொடுத்து மீட்டல்" என்று பொருள் தருகிற* 'redemption' *என்ற ஆங்கிலச் சொல்லினை உபயோகித்து ஆங்கில வேதாகமத்தில் மொழி பெயர்த்துள்ளனர். இவ்வார்த்தை விலைக்கிரயம் செலுத்தப்பட்டது என்று பொருள் தராது. மாறாக, மீட்பு, விடுதலையாக்குதல் என்று மட்டுமே பொருள் தரும். பேராசிரியர் யங் இவ்வார்த்தைக்கு, "கட்டவிழ்த்து விடுதல்" என்று பொருள் தருகிறார். இச்சொல் 10 முறை வேதாகமத்தில் இடம் பெற்றிருந்தாலும், ஒரேயொரு முறை மட்டுமே இதன் சரியான பொருளான 'மீட்பு' என்று பொருள் தருகிற ஆங்கிலச் சொல்லான* 'deliverance' *என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் வேதாகமத்தில் மீட்பு*

*என்று சரிவர மொழி பெயர்த்திருப்பதை கவனத்தில் கொள்ளவும். அது பின்வருமாறு:*

*1. "உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்." (லூக். 21:28)*

*இங்கு ஈட்டுக்கிரயபலி செலுத்தப்பட்டதைக் குறித்தோ, திருச்சபையாரின் மீட்புக்காக முன் கூட்டியே நிறைவேற்றப்பட வேண்டிய ஒழுங்குகளைத் குறித்தோ சொல்லப்படாமல், சாதாரணமாக "மீட்பு" என்ற சொல் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதை கவனிக்கவும்.*

*2. "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்." (ரோம. 3:24)*

*இவ்வசனத்தில் மீட்பு என்று பொருள் தருகிற மூல கிரேக்கச் சொல்லான "அப்போலுட்ரோசிஸ்" மூலப்பிரதியில் இடம் பெற்றுள்ளது. இதன் சரியான பதமாகிய "மீட்பு" என தமிழ் வேதாகமத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கில வேதாகமத்தில்* 'deliverance' *என்ற சொல் உபயோகிப்பதற்கு பதிலாக 'ஈடுபலி செலுத்தி மீட்டல்'என்று பொருள்தருகிற* "redemption" *என்ற சொல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனத்தில் அப்போஸ்தலர் ஈடுபலியைக் குறித்துச் சொல்லாமல், கர்த்தருடைய பிள்ளைகள், இப்போது விசுவாசத்திலும், சீக்கிரத்தில் முதலாம் உயிர்த்தெழுதலிலும் பெறுகிற விடுதலையைக் குறித்துச் சொல்கிறார். இந்த விஷயத்தை தேவ நோக்கில் அவர் கருதுகிறார். அர்ப்பணித்தவர்களின் கிரியையின் புண்ணியங்கள் ஒதுக்கிவைக் கப்பட்டு, அவர்கள் நிபந்தனையின்றி நீதிமான்களாக் கப்படுகிறார்கள். தேவன், கிறிஸ்து இயேசுவுக்குள் ஏற்பாடு செய்திருக்கிற மீட்பின் மூலமாகவே இது நிறைவேறுகின்றது. இந்த மீட்பின் மூலமாக நடைபெறும் காரியங்களை பின்வரும் வசனத்தில் அப்போஸ்தலர் எடுத்துக் காண்பிக்கிறார்.*

*"கிறிஸ்து இயேசுவினுடைய <u>இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே</u> பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்." - ரோமர் 3:26*

*3. ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட (விசுவாசிகளாகிய திருச்சபையார்) நம்முடைய சரீர மீட்பாகிய* (deliverance) *புத்திர சுவீகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்." - ரோமர் 8:23*

*இவ்வசனத்தில் கல்வாரியில் தனது உயிரைக் விலைக்கிரயமாகக் கொடுத்ததினிமித்தம் நாம் மீட்கப்பட்டோம் என்ற கருத்து கொஞ்சம் கூட இடம் பெறவில்லை. இருந்த போதிலும் ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் மீட்பு* (deliverance) *என்று சாதாரணமாக மொழிபெயர்க்க வேண்டிய இப்பகுதியில் தவறுதலாக விலைக்கிரயம் கொடுத்து மீட்டார் என்ற பொருள் தருகிற* redemption *என்ற ஆங்கில வார்த்தையை உபயோகித்திருக்கிறார்கள். கல்வாரியில் ஈட்டுக்கிரய பலி செலுத்தியதின் ஒரு பகுதியாக திருச்சபையார் தற்போது மீட்கப்படுகிறார்கள் என்ற கருத்தினை இப்பகுதி புலப்படுத்துகிறது.*

*4. "கிறிஸ்து இயேசுவே... தேவனால் நமக்கு ஞானமும், நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்* (deliverance)." (I *கொரிந். 1:30,31)*

*இவ்வசனத்திலும் கல்வாரியில் கொடுக்கப்பட்ட ஈட்டுக்கிரயத்தைப் பற்றிய குறிப்பு இல்லை. அனாலும் மீட்பு* (deliverance) *என்று பொருள் தருகிற பகுதியை ஆங்கில வேதாகமத்தில்* redemption *என்று தவறுதலாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். அப்போஸ்தலர் இவ்விடத்தில் கர்த்தர் நமக்காக செய்த செயல்களை எடுத்துச் சொல்லாமல் அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு இனிமேல் கிடைக்கக்கூடிய பலன்களைப் பற்றி குறிப்பிடுகிறார். அவரே நமக்கு ஞானமாய் இருக்கிறார். அவ்வாறு அவர் ஞானமாய் நம்மில் நிலைத்திருக்கவும், அவர் சித்தத்தை நாம் செய்யவும் வேண்டுமானால், நமது சுய விருப்பு வெறுப்புகளை விட்டுவிட வேண்டும். அப்பொழுதுதான் தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றுக் கொண்டு, ஞானமாய் நடக்கவும் முடியும். அவர் நமக்கு நீதியாய் இருக்கிறபடியால் அதினிமித்தம் நீதிபரராகி தேவனுடைய பிரதிநிதியாயிருந்து எல்லோருக்காகவும் ஈடுபலி செலுத்த தம்மையே ஒப்புக் கொடுத்தார். இந்த நீதியை ஏற்றுக் கொண்டு, அவர் வழியாகவே பிதாவாகிய தேவனிடம் சென்று சேர*

முடியும். இயேசுவே நம்மைப் பரிசுத்தப்படுத்துபவர். அவர் பெற்றுத்தந்த தகுதியின் மூலமாகவே நாம் ஜீவனுள்ள பலி செலுத்துபவர்களாய் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம். மெய்யாகவே கிறிஸ்துவின் வல்லமை நம்மீது பொழியப்படுவதினால் தான் நம்மால் ஜீவனுள்ள பலி செலுத்தவும், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவும், நாம் செய்து கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றவும் முடிகிறது. அவரே நமக்கு மீட்புமானவர். அதாவது தேவ கிருபையினால், நம்மை தமது விலைமதிக்க முடியாத இரத்தத்தினால் விலைக்கு வாங்கி, நாமும் ஜீவனுடையவர்களாகும்படி அருள் செய்திருக்கிறார். ஏற்ற வேளையில், தமது திருச்சபையாரை, தமது விலைமதிக்க முடியாத இரத்தத்தினால் சம்பாதித்த தகுதியின் மூலம் தப்பறையின் தளைகளி-ருந்தும் மரணத்தினின்றும் விடுவிக்கவும் அவர் வல்லவராயிருக்கிறார். இங்கு மீட்பைக் குறித்து மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது, விலைக்கிரயமாக வாங்கப்பட்டதைக் குறித்து குறிப்பிடவில்லை. அவர் நம்மை விலை கொடுத்து வாங்கியதினால் நமக்கு ஞானம், நீதி, பரிசுத்தம், மீட்பு ஆகியவற்றை அருளக்கூடிய உரிமையைப் பெற்றிருக்கிறார்.

*5. "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு* (deliverance) *இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது." (எபேசி. 1:7)*

மேற்கண்ட வசனத்திலும் ஆங்கில வேதாகமத்தில் மீட்பு என்று பொருள் தருகிற deliverance என்ற வார்த்தையை உபயோகிப்பதற்கு பதிலாக ஈட்டுக்கிரயம் செலுத்தி மீட்டல் என்று பொருள் தரக்கூடிய சொல்லான redemption என்று தவறுதலாக மொழி பெயர்த்திருக்கிறார்கள். இவ்வசனத்திலும் அப்போஸ்தலர், கல்வாரியில் விலைக்கிரயம் கொடுத்து மீட்கப்பட்டதைக் குறித்துக் கூறவில்லை. மாறாக பிதாவாகிய தேவனால் நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டோம் என்பதையும், தமது ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் தியாக பலியின் மூலம் நம்மை விடுவித்ததே மீட்பு கிடைத்தற்கான அடிப்படையாகும் என்பதையும் குறிப்பிடுகிறார். இவ்வாக்கிய அமைப்பின் மூலம் அப்போஸ்தலர்

கூறுவது என்னவெனில், நமது பாவம், சாபம், மரணம் ஆகிய தீர்ப்பிலிருந்து நம்மை விடுவித்ததையே“பாவ மன்னிப்பாகிய மீட்பு” என்று இங்கு குறிப்பிடுகிறார். இவ்வசனத்தின் கருத்தினை சரியாக புரிந்து கொள்ள கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்க வேண்டும்: பிதாவாகிய தேவன் தமக்குள் ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி, சிறுமந்தையாகிய கூட்டத்தை முன்குறித்து ஏற்ற வேளையில் தெரிந்தெடுக்க சித்தம் கொண்டிருந்தார். அக்கூட்டத்தார், தெய்வீக புத்திரர்கள் ஆக தேவ சாயலை அணிந்து கொண்டு, தமது ஒரே பேறானவரும், தம்மால் மிகவும் நேசிக்கப்பட்டவரும், நமது கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு உடன் வாரிசுகளாக இருக்கவும், அதற்கு அத்தியாவசியமான தமது கிருபையினை ஒவ்வொரு கட்டமாகப் பொழிந்து தமது நோக்கத்தின்படி வழிநடத்தியும் வருகிறார். தமது குமாரனுக்குள் நம்மை ஏற்றுக்கொண்டு, அவர் செலுத்தின தியாக பலியாகிய இரத்தத்தின் மூலம் தெய்வீகக் கோபத்திற்கும், சாபத்திற்கும் உட்பட்டிருந்த நம்மை மீட்டு, நமது பாவங்களை மன்னித்தார். இவ்வாறு நாம் நீதிமானாக்கப்பட்டோம் அல்லது விடுதலை பெற்றோம்.

*6.*“அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்...” (எபேசி 1:14) மனிதனுடைய பாவங்களுக்கு பதிலீடு செய்யும் பலியாக கிறிஸ்து தம்மையே கையளித்து மனுக்குலம் முழுவதையும் தன்னுடைமையாக்கிக் கொண்டார். யார் யார் சுவிசேஷ நிபந்தனைகளை ஏற்று கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் தேவ தயை பெற்று திருச்சபையாராக, மணவாட்டியாக உயர்த்தப்படுகின்றனர். மனுக்குலம் ஆயிர வருட அரசாட்சியிலும் முதலாவதாக திருச்சபையார் அதன் அதிகாலை வேளையிலும் மீட்படைந்து உயிர்ப்பிக்கப்படுவார்கள். பூமி மனிதனுடைய பூர்வாங்கமாக இருப்பதால் அதே ஈடுபலியினால் இப்பூமியும் விலைக்கிரயத்துக்கு கொள்ளப்பட்டது. ஆகவே சபிக்கப்பட்டிருந்த இப்பூமியும் சாபத்திற்கு நீங்கலாக்கப்பட்டு, கர்த்தரின் தோட்டமாகலி பரதீசாக மாற்றப்படும். இதற்கான விலைக்கிரயம் கொடுக்கப்பட்டு விட்டாலும் தேவன் நிர்ணயித்த ஏற்ற காலத்தில் தான் பூமியானது மீட்கப்படும்.

*7. “(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.” (கொலோ 1:14)*

*இவ்வசனத்திலும் மீட்பு* (deliverance) *என்று பொருள் தருகிற சொல் தமிழில் சரியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், ஆங்கிலத்தில் தவறுதலாக* redemption *(விலைக்கிரயம் கொடுத்து விடுவித்தல்) என்று பொருள் தரும்படியான வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது. திருச்சபையாராகிய நாம் எற்கனவே பாவம் சாபங்களிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம். அதனால் தேவனோடு இசைவுடையோராய் நாம் ஐக்கியப்பட்டிருக்கிறோம். இவ்வசனத்தில் பாவங்களுக்காக செலுத்தப்பட்ட தியாகப்பலியைப் பற்றி வலியுறுத்தாமல், நமது பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டதையே பிரதானமாக அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். இருந்த போதிலும் செலுத்தப்பட்ட தியாகப்பலியை அப்போஸ்தலர் புறக்கணிக்கவில்லை. அதற்கு மாறாக, நமது கர்த்தர் சிந்திய இரத்தத்தின் பலனாகவும், அவரின் மரணத்தின் மூலமும், பாவத்திற்காக செலுத்தப்பட்ட தியாக பலியின் மூலமே, நம்மால் பாவத்தின் பிடியிலிருந்தும், சாபத்திலிருந்தும், கட்டுக்களிலிருந்தும் விடுபட முடிந்தது என்பதை அப்போஸ்தலர் எடுத்துரைக்கிறார்.*

*8. “…நீங்கள் மீட்கப்படும்* (deliverance) *நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.” (எபே. 4:30)*

*இந்த வசனத்திலும் மேற்சொன்ன விதமாக ஆங்கில வேதாகமத்தில் மீட்பு* (deliverance) *என்ற வார்த்தைக்குப் பதிலாக, கல்வாரியில் செலுத்தப்பட்ட விலைக்கிரயம் என்று பொருள் தருகிற* redemption *என்ற வார்த்தை உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. ஏனெனில் இவ்வசனத்திற்கு விலைக்கிரயம் கொடுத்து மீட்டல்* (redemption) *என்ற பொருள் பொருந்தாது. ஏனெனில் அந்த தியாக பலியானது வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, உன்னதங்களில் வீற்றிருக்கிற தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே தேவ புத்திரர் என்று எவரும் பரிசுத்த ஆவியினால்*

முத்திரையிடப்பட்டனர். தற்போது ஆவியை முத்திரையாகப் பெற்றவர்கள், தேவ புத்திர சுவீகார நிலையைக் காத்துக் கொண்டு, தெய்வீக சாயலை அடைவதற்காக, ஆவியை அணைத்துவிடாமல் காக்க வேண்டும். தற்போது சுவிசேஷ அழைப்பைப் பெற்றவர்களில் யார் யார் ஆவியில் முத்திரையிடப்பட்டார்களோ அவர்களே, ஆவியின் முதற்கனிகளாவார்கள். இவ்வாறு முத்திரை பெற்றவர்கள் உன்னத ஆசீர்வாதமாகிய தெய்வீக சாயலை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் அவர்கள் தந்தை நியமித்த ஏற்ற காலம் வரும்வரை காத்திருக்க வேண்டியது அவசியம். அதுவே "மீட்கப்படும் நாள்," ஆயிர வருட அரசாட்சியின் நாள். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய திருச்சபையார் அந்நாளில் சகாயம் பெறுவார்கள் என வேதம் கூறுகிறது. "தேவன் அதின் நடுவில் இருக்கிறார், இது அசையாது; அதிகாலையில் தேவன் அதற்கு சகாயம் பண்ணுவார்." *(சங்.46:5)* யார் யார் பரிசுத்த ஆவியையும் அதன் முத்திரையையும் இழந்து விடுகிறார்களோ, அவர்கள் பாவம், சாபம், மரணம் ஆகியவற்றினின்று மீட்கப்படும் அதிகாலை வேளையில் நடைபெறும் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைய முடியாது.

*9. "ஆகையால் முதலாம் (முந்தைய) உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு* (deliverance) *அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்." (எபி.9:15)*

மேற்கண்ட வசனத்திலும் ஆங்கில வேதாகமத்தில் deliverance என்ற சரியான வார்த்தையை பயன்படுத்தாமல், redemption என்று தவறுதலாக மொழிபெயர்த்துள்ளனர். நமது கர்த்தரின் மரணத்தில் புறஜாதியாரைக் காட்டிலும் இஸ்ரயேலருக்கு அதிகப் பங்கும், அர்த்தமும் உண்டு. அதாவது, ஆதாமின் மீறுதலால் ஏற்பட்ட சாபம், மரணம் இவற்றிலிருந்து ஈட்டுக்கிரயம் கொடுத்து மீட்டதோடு மட்டுமல்லாமல், அதோடு கூட நியாயப் பிரமாண உடன்படிக்கையின்படி சபிக்கப்பட்டிருந்த யூதர்களுக்கும் சேர்த்து மீட்பு வழங்கப்பட்டது. அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த

கட்டளைகளை நிறைவேற்றாததால் இருவிதமான சாபத்திற்குட் பட்டிருந்தனர். முதலாவதாக ஆதாமின் மீறுதல் மூலம் சகல மனுக்குலத்திற்கும் இடப்பட்ட சாபத்திலும், இரண்டாவதாக பழைய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய மோசேயின் மூலமாக தேவன் சீனாய் மலையிலிருந்து ஏற்படுத்தியிருந்த நியாயப் பிரமாண உடன்படிக்கையின் படியும் சாபத்திற்குட்பட்டிருந்தனர். இவ்விதமாக சாபத்திற்குட்பட்டிருந்ததை ஒரு பாடல் வெகு அழகாக விவரிக்கின்றது.

"நியாயப் பிரமாணம் தந்த சாபம் - ஆதிப்பெற்றோரின்
வீழ்ச்சியினால் விழுந்த வடு - அனைத்தையும்
ஒரேயடியாக நீக்கி நம்மை மீட்டார்
உத்தமர் இயேசு."

10. "...வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும் படிக்கு விடுதலை (deliverance) பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்." *(எபி. 11:35)*

இந்த ஒரு வசனத்தில் மட்டுமே ஆங்கில வேதாகமத்தில், சரியாக விடுதலை என்று பொருள் தருகிற (deliverance) என்ற வார்த்தையை உபயோகித்திருக்கின்றனர். ஏனெனில் இவ்விடத்தில் redemption என்ற ஆங்கிலச் சொல்லை உபயோகித்திருந்தால் வசனத்தின் கருத்தே தலைகீழாயிருந்திருக்கும்.

ஆங்கில வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் விடுவித்தல், மீட்கப்படல், (redeem, redeemed) மீட்பர், (redeemer) விலைக்கிரயம் கொடுத்து மீட்டல் (redemption) போன்ற வார்த்தைகள் எபிரேய மூல மொழிச் சொல்லுக்கான சரியான பொருள் தரக்கூடிய ஆங்கிலச் சொற்களாக இருக்கின்றது. உதாரணமாக ஃகால் (gaal) என்ற எபிரேயச் சொல்லுக்கு ஈடுசெய்து விடுவித்தல் என்று யங் மொழிபெயர்ப்பு கூறுகிறது.

"என் மீட்பர் (redeemer) உயிரோடிருக்கிறார் ... என்றும் நான் அறிந்திருக்கிறேன்." - யோபு *19:25*

"...உன்னதமான தேவன் தங்கள் <u>மீட்பர்</u> என்று நினைவு கூர்ந்தார்கள்." -சங். *78:35*

"உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு (redeemeth)..." -சங். *103:4*

*"அவன் விலைபட்டுப் போனபின் திரும்ப மீட்கப்படலாம். அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கலாம்* (redeem). *அவனுடைய பிதாவின் சகோதரனாவது, அந்தச் சகோதரனுடைய புத்திரனாவது, அவன் குடும்பத்திலுள்ள அவனைச் சேர்ந்த இனத்தாரில் எவனாவது அவனை மீட்கலாம்; தன்னால் கூடுமானால், தன்னைத் தானே மீட்டுக் கொள்ளலாம்* (redeem)." *- லேவி 25:48,49*

*"விலையின்றி விற்கப்பட்டீர்கள், பணமின்றி மீட்கப்படுவீர்கள்* (redeemed)." *ஏசா. 52:3; 1பேது. 1:18 ஐயும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.*

*"மீட்பர்*(redeemer) *சீயோனுக்கும், ... வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார்." - ஏசா 59:20*

*புதிய ஏற்பாட்டில் கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்கள் ஈட்டுக்கிரயம் தந்து மீட்டல்* (redemption) *என்ற பொருள் மூலச் சொல்லில் இடம் பெறாதிருந்தும், தவறுதலாகவும், வஞ்சனையாகவும்* redemption *என்ற இவ்வார்த்தையே அநேக இடங்களில் மொழியாக்கம் செய்துள்ளனர் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதே நமது நோக்கம். நமது கர்த்தர் மரித்து தன்னையே ஈடுபலியாக செலுத்தியதன் மூலம், உலகத்தை விலைக்கிரயமாக்கிக் கொண்டதை மறுத்து, விடுதலை செய்தல்* (deliver) *என்ற பொருள் உடைய வார்த்தையை உபயோகிக்காமல்* redeem *என்ற ஆங்கில வார்த்தையை மேற்கண்ட வசனங்களில் உபயோகித்திருக்கின்றனர். இவ்வாறு மொழிபெயர்ப்பாளர்கள் செய்த தவறுகளைக் கண்டறிந்து சரியான பொருள் கொள்ள வேண்டுமானால், அவ்வார்த்தையின் மூலமொழிச் சொல்லையும், அதன் சரியான அர்த்தத்தையும் அறிய வேண்டும்.*

*புதிய ஏற்பாட்டினை எழுதியவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, மனுக்குல சந்ததியார் அனைவரும் விலைக்கிரய பலி செலுத்தப்பட்டதன் மூலம் விலைக்கு வாங்கப்பட்டனர் என்ற கருத்தை தெளிவாகவும் உறுதியாகவும் அநேக இடங்களில் குறிப்பிட்டுள்ளனர் என்பதை நாம் ஏற்கனவே விளக்கியிருக்கின்றோம். வியாபார ரீதியான பரிமாற்றம் அல்லது ஒரு*

பொருள் வாங்குவதற்கு ஈடாக தரக்கூடிய மற்றொன்று என்று பொருள் கொள்ளுவதற்கு தேவையான ஆதாரங்களை வேதாகமத்தில் அவர்கள் உறுதியிட்டு எழுதியுள்ளனர். வேறு சில இடங்களில், விடுதலை என்று பொருள் தரக்கூடிய வார்த்தை (deliverance) உபயோகப்படுத்தப் பட்டிருந்தாலும், ஈட்டுக்கிரய பலியின் மூலமாகத்தான் (ransom) மீட்பு சாத்தியமாயிற்று என்ற கூற்றினை நாம் ஏற்கனவே எடுத்துக் காண்பித்திருக்கின்றோம். (antilutran - ஈட்டுக்கியரம்) மீட்பு இவ்விதமாக நிறைவேற்றப்பட்டு பாதுகாப்பளித்தது என்பதற்கு இவ்வாக்கியங்களே போதுமான ஆதாரங்களைத் தாங்கியுள்ளது.

நமது மீட்பர் தமது சொந்த ஜீவனைக் கொண்டு, "தமது விலைமதிக்க முடியாத இரத்தத்தினால்" இவ்வுலகத்தை விலைக்கியரமாக்கிக் கொண்டார் என்று வேதாகமம் வெளியரங்கமாக சாட்சியிடுகிறது. இதன்மூலம் தேவப் பிள்ளைகள் தங்கள் "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தை" அடைய வேண்டுமென்ற நோக்கத்தை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது. மேலும் மரண தண்டனையாகிய சாபத்தை நீக்குவது, தேவ நீதிக்கு விரோதமானதல்ல. மாறாக, தேவ நீதியின் பரிபூரணமாகிய அன்பை நிறைவேற்றுவதாக உள்ளது. மேலும் தேவ நீதியானது மாறாதது, எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றியே தீரும் என்பதற்கு மனுக்குல மீட்புக்காக கொடுக்கப்பட்ட விலைக்கிரயமே சான்று பகர்கின்றது. தேவ அன்பும், நீதியும் ஒன்றொடோன்று இசைவாய் இணக்கமாய் செயல்பட்டு வருகிறது என்ற நம்பிக்கையை இது ஏற்படுத்தியிருக்கிறது. இதே முறைமை தொடர்ச்சியாக அகில உலகையும் என்றென்றும் ஆண்டு கொள்ளும். அப்பொழுது, இயேசு கிறிஸ்துவை மத்தியஸ்தராக ஏற்றுக் கொண்டு, பிதாவினிடத்தில் ஒப்புரவாக விரும்புகிறவர்களின் பாவம், சாபம் ஆகியவை நீக்கப்பட்டு, ஒப்புரவு நிறைவேற்றப்படும். அவ்வாறு கீழ்ப்படிய மறுப்பவர்கள் தேவகிருபையை புறக்கணித்து விடுவதால் இரண்டாம் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படுவார்கள். ஏனெனில்,

"...தேவனுடைய கோபம் அவர்கள் மேல் நிலை நிற்கும்." - (அப்.3:23; யோவா. 3:36; வெளி. 22:3)

தேவனுடைய அன்பும் நீதியும் எப்படி இசைவாய்ப் பொருந்தி மீட்கப்பட்டவர்களாகிய நம் பாவங்களை மன்னித்தது என்பது பிரதானமல்ல, பாவங்கள் மன்னிக்கப்பட்டதே பிரதானமாகும். ஏனெனில் தேவ தயவை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிகிற அத்தனை பேருக்கும் இலவச கிருபையின் பரிசாக இது அருளப்பட்டது. நாம் இதனை விலை கொடுத்து வாங்க முடியாது. மேலும் இக்கிருபைக்கு ஈடாக தேவனுக்கு எதனையும் கொடுக்கவும் முடியாது. இது தேவ கிருபையாக நமக்கு அளிக்கப்படுகிறதென்றால்,

* ஏன் கஷ்டப்பட்டு சத்தியத்தை ஆராய வேண்டும்,

* ஏன் இக்கிருபை இயேசுவின் மரணமாகிய விலைக் கிரயத்தைக் கொடுத்து பெறப்பட்டது என்ற உண்மையை நமக்கு அறிவுறுத்த தேவன் ஆவலாயிருக்கிறார், போன்ற கேள்விகள் எழுகின்றன. இது போன்ற கேள்விகளுக்கு நாம் அளிக்கும் பதில் என்னவெனில், நாம் அவரையும் அவருடைய திட்டங்களையும் அவரது கட்டளைகளையும் அவைகளின் இசைவையும், செயல்பாடுகளையும் நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதை நமக்கு இப்படியாக விளக்குகிறார் என்பதே; தேவன், பாவத்தை அனுமதிப்பதாக தீர்மானமாய் உரைக்கவோ, பாவத்தை அனுமதிக்கவோ, மன்னிக்கவோ செய்து பாவத்திற்கான தம் தீர்ப்பை ஒருபோதும் ஒதுக்கி வைக்கவோ, முடிவுக்குக் கொண்டுவரவோ இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறார். தமது நீதி, நித்திய நீதி என்று நாம் உணர வேண்டுமென அவர் விரும்புகிறார். இதில் எள்ளளவும் ஐயம் கிடையாது. தாம் மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பின் நிமித்தம் தாம் நீதியாக கொடுத்த தண்டனைத் தீர்ப்புக்கு முரணாக நடக்க மாட்டார் என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். மீட்கும் பொருளின் பலன்களை ஏற்றுக்கொண்டதால்மட்டுமே அவர் ஒரு பாவியின் பாவத்தை ஒதுக்கிவைத்து தேவநீதியாகிய தண்டனைத் தீர்ப்பிலிருந்து விலக்கு அளிக்க கூடும். மனிதன் பாவம் செய்து, மரணத் தீர்ப்பை சம்பாதித்து, மரணத்தைத் தழுவிக் கொண்டான். ஆகவே அன்பும் கருணையும் மனுக்குலத்தின் தந்தையாகிய ஆதாமுக்கு பதிலீடு செலுத்தி, அவனை மீட்பதைத்

*தவிர வேறு நம்பிக்கை எதுவுமில்லை. அப்படி ஆதாமுக்காக பதிலீடு செலுத்துபவர் நாம்முன்பே பார்த்தபடி, ஆதாமுக்கு ஒப்பாக பரிபூரண மனித சுபாவத்தைப் பெற்றிருக்க வேண்டும். அப்படி பதிலீடு செலுத்துபவர் பாவம், சாபம், கோபம் இவற்றிற்கு உட்படாத பரிசுத்தராக, கறைதிரையற்றவராக, பாவத்திலிருந்தும் பாவிகளிலிருந்தும் விலகி தனித்திருப்பவராகவும், தேவனால் அங்கீகரிக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும். ஆதாம் வீழ்ச்சியடைவதற்கு முன்பிருந்த பரிபூரண நிலைமையை உடையவராகவும் இருக்க வேண்டும்.*

*நமது கர்த்தராகிய இயேசு மாம்சமான போது, பாவ மாம்ச சரீரத்தையுடையவராக அல்லாமல், பரிசுத்த நிலையில், கறைதிரையற்றவராக, பாவிகளிலிருந்து விலகி தனித்திருப்பவராக காணப்பட்டார் என்று முன்னரே பார்த்தோம். கிறிஸ்து இயேசு இவ்வாறாக பரிபூரண சுபாவமுடைய மனிதனாக ஆதாமுக்கு சரிநிகரான சாயலை உடையவராக இருந்ததினால் நமது நிமித்தமாக ஈடுபலி செலுத்தவும், மீட்பர் என்கிற அந்தஸ்தை அடையவும் தகுதியுள்ளவராகிறார். அவர் ஆதாமின் பின்சந்ததியாராகிய முழு மனுக்குலத்திற்கும் சேர்த்து தனது ஜீவனையும், மனிதனுக்குள்ள அனைத்து உரிமைகளையும் இழந்து விலைக்கிரயம் செலுத்தியதினால் மனிதனின் தார்மீக உரிமைகள் அனைத்தின் மீதும், அதிகாரம் பெற்றவராகிறார். எனவே ஆதாமினால் இழந்துபோன அனைத்தையும், இவர் மூலம் பெற முடியும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, மனிதனாக இவ்வுலகில் இருந்தபோது ஞானஸ்நானம் பெற்று, மனிதனுக்காக தனக்குள்ள தெல்லாவற்றையும் கொடுத்து தியாக பலி செலுத்தினார் என்று முன்னரே பார்த்தோம். தான் பிரசங்கித்த இடங்களிலெல்லாம் இதைக் குறித்து போதித்திருந்தார்.*

*“பரலோக ராஜ்யம் நிலத்தில் புதைத்திருந்த பொக்கிஷத்திற்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.” - மத். 13:44*

*இங்கு நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்தைக்*

கொண்டு, தனக்குள்ள எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தை கொள்ளுகிற மனிதனாக நமது ஆண்டவர் தன்னை கூறிக்கொள்கிறார். இங்கு நிலம் உலக மனுக்குலத்தையும், பூமி முழுவதையும் குறிக்கின்றது. (எபேசி 1:14) இவ்வுலக மனுக்குலத்தாரிலிருந்து நமது கர்த்தர் ஒரு புதையலைக் காண்கிறார். தீர்க்கதரிசனமாக ஈட்டுக் கிரய பலியினால் கிடைத்த மீட்பின் பலனை இங்கு குறிப்பிடுகிறார். பாவம், சாபம் ஆகிய தளைகளில் கட்டுண்டிருந்தவர்களில் ஒரு சிலர் மீட்கப்பட்டு தேவனுடைய புத்திரர் என்ற சுதந்திர சுவீகார நிலைமையை அடைவதை அதாவது சுவிசேஷ யுகத்தில் திருச்சபையார் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு வழிநடத்தப்படுவதையும், வரவிருக்கின்ற யுகாயுகத்தில் உலகிலிருந்து தகுதியுடையவர்கள் என தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மீட்கப்படுவதைக் குறித்தும் இங்கு குறிப்பிடுகிறார். இந்த பொக்கிஷத்தின் பொருட்டுத்தான் நிலமானது விலைக்கு வாங்கப்பட்டது. ஆயிர வருட அரசாட்சிக் காலம் முடிவடையும்போது ஈடுபலியின் முழு வெற்றியும், விலைக்கிரயம் கொடுத்து மீட்டதன் முழு பலனும் நிறைவேறக் காண்போம். இதைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி, நமது கர்த்தர் அந்நாளில் "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்" (ஏசாயா 53:11) என்கிறார். அந்நாளில் கர்த்தர் தன் ஜீவனையும்,தனக்கிருந்த எல்லாவற்றையும் இழந்து இவ்வுலகை விலைக்கு வாங்கியதன் பலனைக் கண்டு பூரிப்படைவார்.

## மனிதனுக்காக என்ன ஈடுபலி செலுத்தப்பட்டது?

கர்த்தர் நமக்காக என்ன செய்தார்? நமது நிமித்தம் என்ன விதமான விலையை செலுத்தினார்? தமது மரணத்தில் எதனை தியாகமாக ஒப்புக் கொடுத்தார்? எல்லாரையும் மீட்கும் பொருளாக இது இருப்பதினால், மனிதகுலத்தின் தண்டனைக்கு ஈடுகட்டும் பொருத்தமான பலியாக இருக்க வேண்டும் என்பது மட்டும் நிச்சயம். நமது கர்த்தர் மரணத்தின் மூலமான என்றென்றும் எரிகின்ற நித்திய நரகத்திற்குச் செல்லவில்லை. ஏனெனில் அத்தகைய பழிவாங்கும் செயல் தேவனால் பாவத்திற்கு தண்டனையாக ஏற்படுத்தப்படவில்லை என்பதற்கு ஆதாரமாக ஏராளமான வேத ஆதாரங்கள் உண்டு. அந்த போதனை சாத்தானால் மனுக்குலத்தின்

*மேல் வஞ்சகமாகத் திணிக்கப்பட்ட ஒன்று. நமது கர்த்தர் மனிதனுக்காக, மனிதனுக்கு பதிலீடாக முழுமையான விலைக்கிரயம் கொடுத்தார். இவ்வாறு முழு ஈட்டுக்கிரயம் செலுத்தப்படாதிருந்தால் மனிதன் இன்னும் பாவ தண்டனைகளை அனுபவிக்க நேர்ந்திருக்கும். ஆகையால் நித்திய வேதனை போன்ற தண்டனை கொடுக்கப்படவேயில்லை என்பது நிச்சயமாகிறது. தேவவார்த்தையின் சாட்சியங்களை நன்கு அறிந்தவர்கள், "கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்" என்ற உண்மையை உணர்ந்து கொள்வர். (1கொரி 15:3) "கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்... பாடுபட்டார்." (1பேது 3:18)*

*"நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி (ஹிலாஸ்மோஸ் -* hilasmos) *அவரே; நம்முடைய (திருச்சபையார்) பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்."(1 யோவா. 2:2)*

*"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; அவருடைய தழும்புகளால் (மரண பரியந்தம் சுயத்தை வெறுத்தல்) குணமாகிறோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்." - ஏசா 53:5,6*

*வேதாகமத்திற்கு சிறிதும் ஒவ்வாத பாரம்பரிய வழியில் வந்த எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வஞ்சனையான சாத்தானின் போதனைக்கும், வேதாகமம் சொல்லுகிற உண்மையான போதனைக்கும் உள்ள வித்தியாசத்தினை மேற்கண்ட வாக்கியங்களின் மூலம் நன்கு விளங்கிக் கொள்ளலாம்.*

*"பாவத்தின் சம்பளம் மரணம்." - ரோமர் 6:23*

*"பாவம் செய்கிற ஆத்துமா சாகும்." - எசேக். 18:4*

*மேலும் நமது நிமித்தமாக இந்த அபராதத் தொகை எப்படி எதிர்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டது என்பது பற்றி அப்.பவுல் கூறுகிறதாவது:*

*"வேத வாக்கியங்களின்படி கிறிஸ்து நமது பாவங்களுக்காக*

மரித்தார்." மேலும் நம்மை நீதிமான்களாக்குவதற்கு உயிர்த்தெழுந்திருக்கிறார் என்கிறார். (1 கொரி 15:3; ரோமர் 4:25) அவருடைய மரணம் ஈட்டுக் கிரயமாக செலுத்தப்பட்ட பலி என்றாலும், பலி செலுத்தப்பட்ட உடனேயே நீதி சரிக்கட்டப்பட்டு விடவில்லை.முதலாவதாக, நம் பொருட்டு கர்த்தர் ஈடுபலியை பிதாவிற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும். தேவன் அவரை உன்னதங்களுக்கு உயர்த்தியவுடன் நமக்காக தேவனுடைய பிரசன்னத்திற்கு முன் சென்று, அங்கிருந்து கொண்டே ஈடுபலியினால் சம்பாதித்த பலனை திருச்சபையாருக்கு அருளிச் செய்து வருகிறார். இதன் பின்னரே கீழ்க்கண்டவைகளால் நீதிமான்களாக்கப்படுதல் ஆரம்பமாகிறது.

1. ஈட்டுக்கிரயபலி 2. அவரை விசுவாசித்து கீழ்ப்படிகிற அனைவருக்கும் இது பிரயோகிக்கப்படுகிறது. இவ்வாறாக தமது மரணத்தினால் அவர் செய்த தியாகத்தோடு அவரது உயிர்த்தெழுதலும், உன்னதங்களுக்கு அவர் எடுத்துக் கொள்ளப்பட்டதும் அவசியமாயிற்று.

"...இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." (எபி. 9:22) நியாயப் பிரமாண விதி நடைமுறையிலிருந்த யூத யுகத்தில் தேவன் காளை மற்றும் ஆட்டு இரத்தத்தினை பலியாக செலுத்த கட்டளையிட்டிருந்தார். இவைகள் ஒருபோதும் பாவத்தை போக்க இயலாதவை என்றாலும், பின்னர் நடைபெற இருக்கும் பாவம் போக்கும் நிஜமான பலிகளுக்கு நிழலாக இருக்கவும் தேவன் ஏற்பாடு செய்திருந்தார். "இரத்தம் சிந்துதல்" என்பது மரணத்தைக் குறிப்பதாகவுள்ளது. இதற்கு ஜீவனை படிப்படியாக விடுதல் என்றும், தியாக மரணத்தைக் குறிப்பதாகவும் பொருள்படும். இயற்கையாக மரணமடைவதை இதற்கு உதாரணமாக கொள்ள முடியாது. சரியாகச் சொல்லப் போனால் ஒருவர்கூட இயற்கையாக மரமணடைவதில்லை. இயற்கை நியதியின்படி மனிதன் வாழ்வதற்காகவே படைக்கப்பட்டான். மரணம் என்பது மனித வாழ்விற்கான விதிமுறைகளுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியது. மனிதனுடைய மீறுதலினாலும், அதனால் வந்த சாபத்தினாலும் பெற்ற தீர்ப்பே மரணம்.

*யூதர்கள் நமது கர்த்தராகிய இயேசுவை வேறு வழிகளில் மரணத்திற்குட்படுத்த திட்டமிட்டிருந்தாலும்கூட, தேவநீதி எவ்விதத்திலும் சரிக்கட்டப்பட்டு நீதிநியாயத்தின்படி நிறைவேற்றப் பட்டிருக்கும். ஏனெனில் மீறுதலினால் பரிசுத்த நிலையிலிருந்து வீழ்ந்து போன மாசுள்ள ஆத்துமாவுக்கு பரிகாரமாக, அவர் தன் மாசற்ற ஆத்துமாவை முழுமையாகக் கீழ்ப்படுத்த வேண்டும் என்பதே நிபந்தனையாய் இருந்தது. ஈட்டுக்கிரய பலியை ஒருவர் செலுத்த வேண்டுமானால், மனித நிலையில் பாடு அனுபவித்து இரத்தம் சிந்தியாக வேண்டும். மற்ற எதுவும் அவசியமானவைகளல்ல. பாவத்தின் சம்பளம் மரணம். ஆகையால் இயேசு பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை ருசிப்பார்த்தவுடன் அபராதத் தொகை நிறைவேற்றப்பட்டது. அவர் அடைந்த சிலுவை மரணமும், ஈட்டியால் ஊடுருவ குத்தப்பட்டதும் அவசியமாயிற்று.*

*இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பூமியில் பலிபீடத்தின் பாதத்தில் பலியாக சிந்தப்பட்டவுடன் முழு மனுக்குலமும் விலைக்கு வாங்கப்பட்டது மட்டுமல்லாமல் அவர் இரத்தம் இப்பூமியின்மேல் தெளிக்கப்பட்டதால் பூமியும் சேர்த்து அவரது உடைமையானது. ஒரு குற்றவாளி போல வெளியரங்கமாக துன்பங்களை ஏற்கவும், அவமானத்தின் உச்சகட்டமாகிய சிலுவையில் அறையப்படவும் அவசியமாயிற்று. ஏனெனில், நமது கர்த்தர் இறுதி வரை கீழ்ப்படிதலுள்ளவராய் இருக்கிறாரா என்பதை பரீட்சித்துப் பார்க்க பிதாவாகிய தேவன் தீர்மானித்திருந்தார். பரலோகத்தில் இருந்த மேன்மையான நிலைமையை விட்டுவிட்டு, பூமியில் தாழ்மையான மனிதனானதோடு மட்டும் பரீட்சை நின்றுவிடாமல், மனிதனுக்கு ஈடுபலி செலுத்துவதற்காக மரணத்தை முழு மன சுதந்திரத்தோடு ஏற்று கீழ்ப்படியவும் பரீட்சை பார்க்கப்பட்டது. அதோடுகூட அவமானத்தின் உச்சகட்டம் வரை துன்பத்தை சகித்து கீழ்ப்படிந்து தந்தையின் கரத்திலிருந்து வரக்கூடிய மிகப்பெரிய ஆசீர்வாதமாகிய உன்னதங்களுக்கு உயர்த்தப்படுவதற்கான தகுதியை நிருபித்தார்.*

*பரலோகத்திலிருந்த தமது வாசஸ்தலத்தை விட்டுவிட்டு நமது நிமித்தமாக, மனிதனானார் என்பதை தமது நிருபத்தில் எடுத்துச் சொல்லிய அப்போஸ்தலர், பிறகு கூறுகிறதாவது:*

*"அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும், கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை (மேன்மை, கனம், ஸ்தானம்) அவருக்குத் தந்தருளினார்." - பிலிப். 2:8,9,11 (ஒப்பிட்டுப் பார்க்க 1 கொரி. 15:27) இவ்விடத்தில் எல்லா நாமத்திற்கும் மேலாக என்று குறிப்பிடும்பொழுது, தந்தையின் நாமத்தை தவிர மற்ற நாமங்களுக்கு மேலாக உயர்த்தினார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.*

*விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறோம் என்றும், நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம் என்றும் வேதாகமம் மேற்கோளாக உரைக்கின்ற ஒவ்வொரு வசனத்திற்கும் இசைவாகவும், சாட்சியாகவும் கீழ்க்காணும் வசனம் அமைகிறது.*

*"தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி... நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." (2 கொரி 5:19,21; 1 தெச 4:14;15:10) பாவியினுடைய குற்றத்தைப் போக்க மீட்பர் வல்லவராயிருக்கிறார். நமது பாவங்களுக்காக முழுமையான ஈட்டுக் கிரய பலியை செலுத்தியதால், நீதிமான்களாக விரும்புகிறவர்கள், அவரது தியாக பலியின் புண்ணியத்தால் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். (ரோமர் 5:17-19) சீர்ப்படுத்துதலுக்குட்பட்டு நியாயந் தீர்க்கப்படுவது அவசியமானது என்பது நாம் தேவபார்வையில் அநீதியுள்ளவர்களாய், அந்நியராய் இருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறது. மனிதன் தன்னைத் தானே நீதிமானாக காண்பிக்க முடியாது என்பதே உண்மை. நியாயப் பிரமாண உடன்படிக்கைக்கு உட்பட்டிருந்த இஸ்ரயேலர், தங்களுடைய கிரியைகளின் மூலம் நீதிபரர்களாகக் காட்டிக் கொள்ள இயலாமல் போனது, மனிதன் இயற்கையாகவே பாவம் செய்கிற குணம் உடையவனாக இருக்கிறான் என்பதை நிரூபிக்கிறது. ஆனால் மெய்யாகவே நாம் கறைதிரையற்ற மீட்பரால், அவர் பெற்றுத் தந்த தியாக பலியின் தகுதியினால் நாம் மீட்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட வேண்டும் என்பதே உண்மை.*

*நீதிமானாக்கப்படுதல் என்பது சீர்பொருந்தச் செய்தலைக் குறிக்கிறது. இயல்பாகவே நாம் நீதிமான் என்ற பரிபூரணத்தை அடைந்து விடவில்லை. கிறிஸ்துவின் நீதியையும் அவர் நமக்காகச் செய்த தியாக பலியையும் ஏற்றுக் கொண்டு விசுவாசிப்பதன் மூலம், நாம் நீதிமான்களாகக் கருதப் படுகிறோம். தனது சொந்த கிரியைகளின் மூலம், ஒருவன் நீதிமானாக முடியாது. அது தேவனால் அங்கீகரிக்கப்படாது. (காண்க. கலாத். 2:16; ரோமர் 3:27,28) நியாயப்பிரமாண விதிகளுக்குட்பட்டிருப்பவர்கள் அந்த நியாயப் பிரமாண விதிகளால் பூரணராக முடியாது. (கலாத். 5:4; ரோமர் 3:20) கிறிஸ்துவினால் முழுமையாக நிறைவேற்றப்பட்ட பணியை விசுவாசித்து தேவனுக்கு முழுமையாக அர்ப்பணம் செய்வதே நீதிமானாக்கும். காண்க. கலாத். 2:17; 3:13, 14; ரோம 4:24,25*

*நாம் பாவங்களிலிருந்து கழுவப்பட்டு, துப்புரவாக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஏராளமான வேத வசனங்கள் எடுத்துரைக்கின்றன. அதில் அனைத்து வசனங்களும் ஈடுபலியின் போதனைக்கு ஆதாரமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஏனெனில் பாவத்திலிருந்து கழுவப்படும் வல்லமை கிறிஸ்துவின் இரத்தத்தினாலும், அவர் செலுத்திய மேன்மையான தியாக பலியினால் கிடைத்த சலுகையின் அடிப்படையிலுமே பெறப்பட்ட தாகும். காண்க.1 யோவா. 1:7; வெளி. 1:5; 1 கொரிந். 6:11; 2 பேது.2:22; தீத்து. 3:5; எபி. 9:14; 1 பேது. 1:19*

*நீதிமானாக்கப்படுதல் அடையாளமாக நீதியின் வஸ்திரம் என்றும், சுத்தமும், தூய்மையுமான வெண்ணிற சணல் ஆடை என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த நீதியின் ஆடைகளைக் கொண்டு நமது கர்த்தர், யார் யார் தம்முடைய விலைமதிக்க முடியாத இரத்தத்தின் மேல் விசுவாசம் கொள்கிறார்களோ அவர்களது பாவக் கறைகளையும், குற்றங் குறைகளையும் மூடிமறைத்து ஏற்றுக் கொள்கிறார். கிறிஸ்து பெற்றுத் தந்த சலுகைகளை ஒதுக்கி வைத்து விட்டு, நமது சொந்த முயற்சியில் நீதிமானாக முயற்சித்தால் அந்த சுயநீதி, 'அழுக்கான கந்தை' போல் இருக்கும். (ஏசா 64:6) நீதிமானாகும் பாதையில் நாம் தொடர்ந்து முயன்று ஓடி, தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்போமேயாகில், நமது கிறிஸ்துவ ஜீவியம் முழுவதிலும் பரிசுத்தமாகும் பணி தொடர்ந்து நடக்கும்*

என்பதை வேதவசனங்கள் எடுத்துரைக்கின்றன. இதைக் குறித்தே அப்போஸ்தலர், "நமது சரீரங்கள் சுத்தமான ஜலத்தால் கழுவப்படுகிறது" என்கிறார்; திருச்சபையானது, "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்கப்படுகிறது" என்கிறார். இவ்வாறாக "நமது மாம்ச அழுக்கை நீக்கி" நமது இருதயங்கள் சுத்திகரிக்கப்படுகின்றன என்பதை வேதவசனங்கள் பொருத்தமாய் கூறுகின்றன. இந்த வேதாகம வாக்கியங்கள் அன்றாட வாழ்வில் மிக எளிதாக கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்கத் தேவையான ஆலோசனைகளை எளிதாக வழங்கி உற்சாகப்படுத்துகின்றன. நமது பேச்சு, சிந்தனை,செயல்கள் ஆகியவற்றில் நாம் மேற்கொள்ளும் சுத்திகரிப்பு முயற்சியானது கிறிஸ்துவுக்குள் நம்மை தேவ சித்தத்தை நிறைவேற்றவும், அவரண்டையில் சேர்க்கவும் வழிகோலும். இவையனைத்தும், கிறிஸ்துவின் இரத்தத்தின் மேல் கொண்டிருந்த விசுவாசத்தின் மூலம், நீதிமானாக்கப்பட்டாலும் அவரை முழு மனத்தோடு ஏற்றுக் கொண்டதினிமித்தம் நடைபெறுகின்றன. வேதாகமக் கருத்துப்படி நாம் ஞானஸ்நானத்தின் மூலம் தேவனோடு உடன்படிக்கை செய்த பின்னர், நமது பலவீனங்கள், அபூரணத் தன்மைகள் ஆகியவை யேகோவா தேவனின் கிருபையினால், கர்த்தர் தந்த ஈட்டுக் கிரயப் பலியினால் மறைக்கப்பட்டு பின்னர் நமது விசுவாசத்தினால் சீர்பொருந்தச் செய்கிறது. இவ்விதமாக பூரணரானவர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். நமது சுயமுயற்சியிலும், ஆர்வத்தினாலும் கழுவப்பட்டிருந்தாலும் இன்னும் அபூரணர்களாகவே இருக்கிறோம் என்பது வெளிப்படையானதே. கிறிஸ்துவின் நீதியினால் நமது அபூரணங்கள் மறைக்கப்பட்டபடியால் நாம் பிதாவாகிய தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம். இவ்விதமாக நாம் முத-ல் "பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாய்" (எபே. 1:6) பின்னர் அனுதினமும் தேவ நீதியை வெளியரங்கமாக நேசித்து, பரிசுத்தத்தை அடைய நாம் செய்யும் முயற்சிகளால் கர்த்தரை மகிழ்விக்கிறோம்.

வேதாகம வாக்கியங்கள் அநேக இடங்களில் கர்த்தர் நமது பாவ நிவாரண பலியானார் என்று வலியுறுத்துகின்றது."உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி." (யோவான் 1:29)

நியாயப் பிரமாணத்தின்படியான அனைத்து பலிமுறைமைகளும், யூதர்கள் பலிபீடத்தின் மேல் சிந்திய அனைத்து இரத்தமும் நமது நிமித்தமாக செலுத்தப்பட்டஇந்த மாபெரும் தியாக பலியையே மையமாகக் கொண்டு செய்யப்பட்டன. அப்போஸ்தலர் இதைக் குறித்தே, "காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டதே" என்று கூறுகிறார். அதற்குப் பொருளான "விலையேறப் பெற்ற இரத்தமே" பாவ நிவராணியாகும் என்கிறார். பாவங்களுக்காக செலுத்தப்பட்ட இந்த தியாகப் பலியைக் குறித்து புதிய ஏற்பாட்டில், எபி.9:12; 10:10; எபேசி. 5:2;1 கொரி. 5:7; 1 பேது 2:22,24; 2 கொரி. 5:21 ஆகிய பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளதைக் காண்க.

கிறிஸ்து செலுத்திய இந்த தியாகபலி திருச்சபைக்காகவும் உலக மாந்தர் அனைவருக்காகவுமே. இதைக் குறித்து வேதாகமத்தில், "அவர், தேவனுடைய கிருபையினாலே, ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்" என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராய் பாடுபட்டார். நாமும் உலக ஜனங்களும் தேவனோடு இசைவாக சீர் பொருந்திடச் செய்யவும், நித்திய ஜீவன் செல்லும் பாதையை மறைமுகமாக திறந்து விடவும், தேவனுடைய உண்மையான பிள்ளைகள் தேவ தயவையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளவும் அவர் மரணத்தை ருசி பார்க்க வேண்டியிருந்தது. இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. 1 தெச 5:10; ரோம 5:8; 1 கொரி 15:3; 2 கொரி 5:14;15; யோவா 10:15; 11:50-52; 1 பேது 2:24; 3:18

மனிதனாக இவ்வுலகில் வந்த இயேசு கிறிஸ்து தம் மரணத்தினால், அவருடைய இரத்தத்தினால், பாவம், மரணம் போன்ற அனைத்திலிருந்தும் நம்மை விடுதலையாக்கினார். அநேக வேத வாக்கியங்கள் இதே கருத்தை மாறுபட்ட கருத்துக்கிடமின்றி ஆணித்தரமாக உறுதிப்படுத்துகின்றன. வேத வாக்கியத்தின் இந்த பகுதியை மறுதலிக்கிற எந்தக் கருத்தும் "வேத வசனத்தை புரட்டுவதாகும்." காண்க. 1 பேது 1:2; அப்.4:12; 20:28; வெளி 5:9; 1:6; ரோமர் 5:9; எபி 13:12

## *யாரால், ஏன், யாரிடமிருந்து, என்ன நோக்கத்திற்காக "நீங்கள் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்கள்?"*

*"நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்." - 1 கொரி 7:23*

*"...எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு..." - வெளி 5:9*

*"...உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுத-த்து..." 2 பேது 2:1*

*வேதாகம சாட்சியங்களின்படி, மனிதன் விலைகொடுத்து வாங்கப்பட்டான் என்பது சர்ச்சைக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நாம் முன்னரே பார்த்தவாறு, "அகோரஸோ" என்ற கிரேக்க மூலச்சொல்லிருந்து "வெளியரங்கமாய் வாங்கப்பட்டீர்கள்" (bought) என்று மொழி பெயர்த்துள்ளனர். அப்படி விலை கொடுத்து வாங்கப்பட்டிருந்தால், கீழ்கண்ட வினாக்கள் இயல்பாகவே எழுகின்றன.*

*1. மனிதன் யாரால் விலை கொடுத்து வாங்கப்பட்டான்?*

*2. யாருக்காக மனிதன் விலை கொடுத்து வாங்கப்பட்டான்?*

*3. ஏன் மனிதன் விலைகொடுத்து வாங்கப்பட வேண்டும்?*

*இதனைக் குறித்து மேற்சொன்ன குறியீட்டு வரிசையிலேயே ஆராய்வோம்.*

*1. மனுக்குலம் முழுமையும் விலை கொடுத்து வாங்கப்பட்டது என்பதைக் குறித்து வேதாகமம் தெளிவாகவும், விவாதித்திற்கிடமின்றியும் எடுத்துரைப்பதோடு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நம்மை விலைகொடுத்து வாங்கியவர் என்றும் தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது. அதற்கும் மேலாக, அந்த விலையானது கிறிஸ்துவின் இரத்தமே என்றும், மனிதனாகிய கிறிஸ்து இயேசு தனதுசொந்த ஜீவனை கல்வாரியில் ஈடுபலியாக ( ஈடுபலி என்பதற்கான கிரேக்க மூலச் சொல் ஆன்ட்டி லூட்ரான் என்பதாகும்) மனுக்குலம் முழுவதற்கும் சேர்த்து செலுத்தினார் என்றும் வேதாகமம் உறுதியாக எடுத்துரைக்கிறது.*

இந்த வினாவிற்கான விளக்கத்தினை நாம் ஏற்கனவே தெளிவாக விளக்கியிருக்கிறோம். ஆகவே அடுத்த வினாவிற்குச் செல்வோம்.

*2. யாரிடமிருந்து மனிதன் விலை கொடுத்து மீட்கப்பட்டான்?* சத்தியத்திற்கு எதிராளிகள் கர்த்தர் நம்மை சாத்தானிடமிருந்து மீட்டுக் கொண்டாரா என்று கேலியாகவும், ஆச்சரியத்துடனும் வினவுகின்றனர். அப்படி விலைக்கிரயம் செலுத்த யாரும் இல்லை என்று வாதிடுகின்றனர். சரியாக நிதானிக்கத் தவறி, ஈடுபலியை மறுப்பவர்கள் - தேவன் இம்மாதிரியான வியாபார பேரத்திற்கு உடன்படுவதற்கு சாதாரண மனிதல்ல என்கின்றனர். மனிதனோடு ஐக்கியம் வைத்துக் கொள்ள தேவன் ஒருபோதும் வாஞ்சசையுடையவராக இருக்கமாட்டார் என்பது அவர்களது வாதம். மனிதனின் பாவம், மரணம் ஆகியவற்றிலிருந்து அவனை விடுவித்து அவனோடு ஒப்புரவு செய்துகொள்ள தேவ வல்லமையினால் எல்லாவற்றையும் செய்து கொண்டேயிருக்கிறார். ஆகவே மனிதனை மீட்பதற்கு ஈட்டுக்கிரய பலியை தேவன் கேட்கமாட்டார் என்று வாதிடுகின்றனர். ஆனால் வேதாகம போதனையின்படி, அவர்களின் மேற்கண்ட கூற்றுகள் முற்றிலும் முரணானவை என்று நாம் பதிலளிக்கிறோம். ஏனெனில் தேவன் அன்புள்ளவர், நீதிபரர் என்றும், பாவியின்மேல் மனமிரங்குபவர் என்றும், மனிதன் தேவநீதியின்படி தீர்ப்புக்குள்ளாக்கப்பட்டான் என்றும் வேதம் கூறுகிறதால், அதே நீதியின்படி ஈட்டுகிரய பலி செலுத்தி அவனை மீட்பதைக் காட்டிலும், தேவ நீதியை வேறு எவ்விதத்திலும் சரிக்கட்ட முடியாது; எளிதாக அவனை விடுவிக்கவும் கூடாது.

சாத்தான் மரணத்தையும், சாபத்தையும் மனுக்குலத்தின் மேல் சுமத்தினான் என்று வேதாகமம் உறுதியாய் உரைக்கிறது. "...பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கு அப்படியானார்." (எபி. 2:14; யோவா 14:30) மற்றொரு இடத்தில் சாத்தானைக் குறித்து பேசும்போது,"இந்த உலகத்தின் அதிபதி" என்று இயேசு கூறுகிறார். இருந்தபோதிலும் இந்த உலகத்தை அதிகாரத்துடன் அவன் ஆட்சி செய்வதற்கான

பட்டம் எதுவும் அவனுக்குக் கொடுக்கப்படவில்லை. இதற்கு மாறாக, வேதாகமம் சொல்லுகிறபடி, சாத்தான் மனிதனின் வீழ்ந்து போன நிலைமையை தனக்கு சாதமாக்கிக் கொண்டு தவறான வழியில் அதிகாரம் செலுத்துகிறான். தேவனுக்கு விரோதமாக மனிதனின் இருதயத்தை அறியாமை, மூடப்பழக்க வழக்கங்கள், பலவீனம் ஆகியவற்றின் மூலம் வஞ்சகமாக குருடாக்கி வைத்திருக்கிறான். பாவத்தை ஏற்படுத்திய சாத்தான் தன் வல்லமையை பிரயோகித்து பாவத்தின் உச்சகட்டமாக மரணத்தையும் வருவித்தான். பாவம் இருந்திருக்காவிடில், இந்த உலகில் சாத்தானின் அதிகாரம் ஆதிக்கம் செலுத்தியிருக்க முடியாது. மனிதன் உள்ளப்பூர்வமாக பாவம் செய்ததினால்தான் தேவதயவை இழந்து போனான். அதனைத் தொடர்ந்து தனது இருதயத்தில் தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்தார். (ரோமர். 1:28) மனுக்குலத்தின் மேல் சாத்தான் கொண்டுள்ள அதிகபட்சமான அதிகாரம் என்னவெனில், தன் வல்லமையை தவறாகப் பயன்படுத்தி தனக்கு அடிமையானவர்களை இன்னும் பலவீனப்படுத்துவதே ஆகும்.

இதற்கும் மேலாக, “நீ சாகவே சாவாய்” என்ற தெய்வீக தண்டனை மனுக்குலத்தை ஆட்கொண்டபடியால் சாத்தானும், அவனோடு தீமை செய்கிற மற்ற கூட்டாளிகளும் ஒன்று சேர்ந்து இந்தத் தீர்ப்பை நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டனர். இவ்விதமாக மனித கோபத்திற்கும், ஆவிக்குரிய ஜீவிகளது கோபத்திற்கும், தேவன் காரணராயிருந்த போதிலும் வருங்காலத்தில் எந்த உள்நோக்கமுமில்லாத புகழ் எற்படவும், தமது திட்டங்கள் நிறைவேறவும் இவற்றை அனுமதிக்கிறார். (சங்.76:10) ஆனால் தேவன் சாத்தானை மனுக்குல சந்ததியின் ஆளுனனாக இருக்க ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. மனுக்குல சந்ததியானது தேவனுடைய அற்புதமான சிருஷ்டிப்பாகும். அவர் ஒருவருக்கே அது வணக்கமும், ஆராதனையும் செலுத்த வேண்டும். ஆனால் அவரை அடையாளம் கண்டு ஏற்றுக் கொள்ளத் தவறியதால் கீழ்ப்படியாமைக்குட்பட்டு தண்டனைத் தீர்ப்புக்குள்ளாகிறது. தேவ

நியதியின்படி ஜீவன் பெறத் தகுதியற்றவர்களாகி, முடிவை வருவித்துக் கொண்டது.

ஆதிப்பெற்றோர்களின் கீழ்ப்படியாமையினால் தேவநீதியின்படி மரண தண்டனை சாபமாய் வந்தது. அதே தீர்ப்பு அவர்களின் சந்ததியராகிய மனுக்குலம் முழுவதற்கும் தொடர்கிறது. இயேசு கிறிஸ்துவின் ஈட்டுக் கிரய பலியைத் தவிர வேறு எவ்வகையிலும் ஜீவன் பெறுவதற்கான நம்பிக்கை இல்லை. தெய்வீக நீதியே நீதிபதியாய் இருந்து மனிதனது ஜீவியத்திற்கு சாபத் தீர்ப்பை வருவித்தது. ஆகவே, சாபத்திலிருந்து ஆதாமின் மனுக்குல சந்ததி மீள்வதற்கு அதே தேவ நீதிக்கு ஈட்டுக்கிரயபலி செலுத்தப்பட வேண்டியதும் அவசியமாயிற்று.

சாத்தான் சுதந்திரமாக தனது வல்லமையை செயல்படுத்த உரிமை கொடுக்கப்பட்டது என்றாலும், எல்லாவற்றிற்கும் மேலான நீதிபரராகிய யேகோவா தேவனால் அனுமதிக்கப்படாதிருந்தால் எக்காரியத்தினையும் செய்ய அவனால் முடியாது. சாத்தானின் மூலமாக மரணம் ஏவப்பட்டிருந்தாலும், அது மனுக்குலத்தின் பாவத்தின் பொருட்டு தேவனால் அனுமதிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் தேவன் விதித்திருந்த கட்டளையை மீறினதால், கீழ்ப்படியாமைக்கு தண்டனையாக மரணம் வழங்கப்பட்டது. சாத்தான் தனது வல்லமையினால் மரண தண்டனையை நிறைவேற்றுபவனைப் போல மரணத்திற்கு பிரதிநிதியாக இருந்து வழிநடத்துகிறான். மரண தண்டனையை நிறைவேற்றுபவன் சட்டத்தின் ஊழியக்காரனாயிருந்து தண்டனையை நிறைவேற்றுகிறான். மனுக்குலம் அனைத்திற்கும் மாபெரும் நீதிபரராயிருக்கிறவரால், ஒரு சில காலத்திற்கு இந்த தண்டனையை நிறைவேற்றக் கூடிய அதிகாரத்தினை சாத்தான் பெற்றிருக்கிறான். அறிவிக்கப்பட்ட தண்டனை “பாவத்தின் சம்பளம் மரணம்,” “நீ சாகவே சாவாய்” என்பதாகும்.

நீதிமன்றத்தில் ஒரு சிறைக் கைதிக்கு தண்டனையாக அபராதமோ அல்லது மீட்கும் பொருளோ செலுத்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டால் அந்த அபராதத் தொகையை ஜெயில் அதிகாரி வசம் அளிப்பதில்லை. அது நியாயத் தீர்ப்பளித்த நீதிமன்றத்திலேயே

செலுத்தப்பட வேண்டும். அதுபோலவே பாவத்தினைப் போக்க செலுத்தப்பட்ட ஈடுபலியானது சாபத்தை செயல்படுத்தும் அதிகாரம் பெற்ற சாத்தானிடம் ஒப்படைக்காமல், (தண்டனையை நிறைவேற்றும் அதிகாரம் பெற்றிருந்த போதிலும்) பாவத்தை கண்டிக்கிற, சாபத் தீர்ப்பை கட்டளையிட்ட நீதிபரராகிய தேவனிடத்திலேயே ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு காரணகாரியத்தோடு பகுத்தாராயும்போது, மனிதனுடைய பாவத்திற்காக செலுத்தப்பட்ட ஈடுபலியானது எல்லாருக்கும் நீதிபரராயிருக்கிற பிதாவாகிய தேவனிடத்தில் தான் செலுத்த வேண்டும் என்று நிரூபணமாகிறது. கிறிஸ்து இயேசுவின் தியாக பலியைக் குறித்து வேதவாக்கியங்கள் என்ன கூறுகின்றது என்று இப்பொழுது கவனிப்போம். ஈடுபலியானது யாரிடத்தில் செலுத்தப்பட்டது? சாத்தானிடத்திலா? பிதாவாகிய தேவனிடத்திலா? இந்த கேள்விக்கு பதிலுரையாக, நாம் கூறுவது: உலகத்தின் பாவங்களை நீக்குகிற இந்த மேலான பலிகளை நிழலாக காண்பிக்கிற யூத யுகத்தின் முன்னடையாளங்கள் மற்றும் பலிகள் அனைத்தும், கர்த்தராகிய இயேசுவை அடையாளப்படுத்துகிற ஆசாரியன் மூலமாக தேவனுக்கு செலுத்தப்பட்டன என்பதே. காண்க. லேவி 4:3, 4, 27, 31, 34, 35 ; 5 : 11, 12 ; 9 : 2, 6,7; யாத். 30: 10 ; 2 நாளாக. 29 : 7-11, 20-24

மேற்கண்ட வேதபகுதிகளும், நாம் கொடுத்த விளக்கங்களுமே இக்கேள்விக்கு வெகு விளக்கமாக பதிலளிக்கின்றன. இன்னும் இதனைக் குறித்து அதிகமான விளக்கங்கள் தேவைப்படின் அப்போஸ்தலர் பவுல் எழுதிய நிருபத்தி-ருந்து காணலாம்.

“காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், சரீர சுத்தியுண்டாக்கும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம்... உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!... அழைக்கப்பட்டவர்கள் ....நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின்

*மத்தியஸ்தராயிருக்கிறார்." எபி 9:13-15,26; 7:27;10:4-10,12,20; எபேசி 5:2; தீத்து 2:14; கலாத் 1:4; 2:20; 1 யோவா 3:16; யோவா 1:29; 1 பேது 1:19; 1 கொரிந் 10:20; ரோமர் 12:1*

இவ்வாறாக தேவன் முன் தீர்மானித்தபடி கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் மனிதனுக்கு ஈட்டுக்கிரய பலி செலுத்தப்பட்டது; தேவன் இப்பலியை ஏற்றுக் கொண்டார் என்று வேத ஆதாரங்களின் மூலம் நாம் நிரூபிக்கிறோம்.

*3. மனிதன் ஏன் விலைக்கு வாங்கப்பட்டான்?* விழுந்துபோன, அபூரண சிருஷ்டியாகிவிட்ட மனிதனின் உள்ளத்தில் தேவனின் அரும்பெரும் குணநலன்களாகிய நீதி, ஞானம், அன்பு, வல்லமை ஆகியவை மிகவும் குறைந்து அபூரண நிலையில் காணப்படுகிறது. தெய்வீகத் திட்டத்தின்படி இதனை நிவர்த்தி செய்ய ஈடுப- தேவைப்பட்டது என்பதற்கான காரண காரியத்தைப் புரிந்து கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ சிலருக்கு மிகவும் கடினமாயிருக்கிறது. இதன் காரண காரியத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், வேதாகமத்தை கவனமாய் ஆராய்ந்து அதில் கூறப்பட்ட சாட்சியங்களை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளப் பிரயாசைப் படவேண்டும். தங்களுடைய அபிப்பிராயங்களை முன்னிறுத்தி சிந்திப்பதைத் தவிர்த்து வேதவசனங்களில் நம்பிக்கை வைப்பது பலனளிக்கும். இப்பாடத்தைப் புரிந்து கொள்ள ஒரு சில ஆலோசனைகளை உங்கள் முன் வைக்கிறோம். விழுந்து போன நிலையில் அபூரண சிருஷ்டியாகிவிட்ட மனுக்குலம், தங்களுக்குள்ளாக ஞானம், அன்பு, நீதி, வல்லமை ஆகிய குணநலன்களில் இசைவில்லாமல் நேரெதிராகவும், ஒன்றுக்கொன்று முரண்பாடாயுமுள்ளது. ஆனால் வானகத்திலுள்ள பரம தந்தை அவ்வாறில்லாமல் அந்த நான்கு குணநலன்களும் பரிபூரணத் தன்மையுடையதாய் ஒன்று மற்றொன்றிற்கு இணக்கமாயும் இசைவாயும் செயல்படுகிறது. இக்குணநலன்களில் எவ்வித முரண்பாடும் ஏற்படுவதில்லை. முதலில் தேவ ஞானமானது செயல்படுத்தப்போகும் காரியத்தை ஆராய்ந்து பார்க்கிறது. பின்னர் மனித இரட்சிப்புக்கான சிறந்த திட்டத்தை தெய்வீக நீதி, அன்பு, வல்லமை இவற்றின் முழு ஐக்கியத்தோடு செயலாக்கம் செய்கிறது. மனிதன், தெய்வீக ஞானத்தின் வழிநடத்துதலில் ஒரு சட்ட

விதிமுறைக்குட்படுத்தப் பட்டான். அந்தக் கட்டளையை மீறியதால் தன் ஜீவனை அழிவு ஆட்கொண்டு மரணத் தீர்ப்பினை வருவித்தது. தேவஞானம் மனிதன் முன்யோசனையோ அனுபவமோ இன்றி வீழ்ந்து போவான் என்று முன்னரே அறிந்திருந்ததால், விழுகையினால் மனுக்குலம் அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளட்டும் என்ற நோக்கத்தில் அவனைச் சுதந்திரமாய் தீமையில் செல்ல அனுமதித்தது. விழுகைக்குப் பின் தெய்வீக வழிநடத்துதலும், பராமரிப்பும் எவ்வாறிருக்கும் என்கிற குறிப்புகளை வேதாகமத்தின் மூலம் வெளிப்படுத்தி மனுக்குலம் அறிந்துக்கொள்ளச் செய்திருக்கிறார்.

மனிதன் தெய்வீக விதிமுறைக்கு எதிராகச் செயல்பட்ட உடனேயே, தேவநீதி முன்சென்று அவன் கலகக்காரன் என்று தீர்ப்பிட்டு, மரணத் தீர்ப்பினை அவனுக்கு வழங்கியது. அவனுக்கு உயிர்வாழத் தேவையான அனைத்து அத்தியாவசியத் தேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏதேன் தோட்டத்திலிருந்து அவனை வெளியே துரத்தி சாத்தானிடம் ஒப்படைத்தது. கட்டளையை மீறியதன் சாபத்தினால், தீமை அவனை ஆட்கொள்ளவே, மனிதன் செத்துக் கொண்டே சாகிற நிலைக்குத் தள்ளப்பட்டான். தெய்வீக சுபாவத்தின்படியான நீதி இவ்வாறு மனிதனிடம் செயலாற்றுகையில் தெய்வீக அன்பானது எவ்விதத்திலும் மாறாதிருந்தாலும், அது இரு காரணங்களுக்காக வலிமை குன்றிக் காணப்படுகிறது. முதலாவது தேவ அன்பானது தேவநீதிக்கெதிராக செயல்பட முடியாது. விழுகையினால் ஏற்பட்ட தீர்ப்பை நிறைவேற்றும் பலவிதமான படிகளில் அன்பு குறுக்கிட முடியாது. நீதியின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கிற மனிதனை மீட்டுக் கொள்ள தெய்வீக அன்பினால் முடியாது. ஏனெனில் நீதியே தேவ சிங்காசனத்தின் ஆதாரம். இரண்டாவதாக அந்த சமயத்தில் குறுக்கிட்டு பாவத்திற்காக ஈடுபலி கொடுத்து தேவ அன்பானது மனிதனை விடுவிக்கமுடியாது. ஏனெனில் அவ்வாறு இடையில் அன்பு குறுக்கீடு செய்யுமானால் அது முன்னரே திட்டமிட்டு நிறைவேற்றி வருகிற தேவ ஞானத்திற்கு எதிராகிவிடும். இவ்வாறு தெய்வீக அன்பும் வல்லமையும் மனுக்குலத்தை மீட்க வழியின்றி ஒருசில காலத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம்

நேரிட்டிருக்கிறது. ஆனால் தேவஞானம் அனுமதித்ததினால், தேவநீதி செயல்படுத்தப்பட அனுமதிக்க வேண்டியிருந்தது. இதனிமித்தம் கடந்த ஆறாயிரம் வருடங்களாக மனுக்குலம் தவிப்பும், வேதனையும், சஞ்சலமும் மரணமும் நிறைந்த வாழ்வை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நீதிக்கு இசைவாக அன்பு செயல்பட்டு மனிதனை விடுவிக்க முடியாமல் உள்ளது. மாறாக, தெய்வீக அன்பு, தேவனால் உரைக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் மற்றும் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நடைபெற்ற நிழலான பலி முறைமைகளைக் கொண்டு அறிவுரை கூறியும் தேவ ஞானத்தினால் முன் குறிக்கப்பட்ட காலத்தில் மனுக்குலம் விடுதலை பெற்று அன்பு பூரணப் பட்டிருக்கும் என உற்சாகப்படுத்தி தற்போது தேற்றிவருகிறது. இவ்வாறாக அன்பானது கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும் காலத்தை எதிர்நோக்கி பொறுமையோடு காத்திருக்கிறது. அந்நாளில், தேவ ஞானத்தின் வழிநடத்துதலின்மூலம் தெய்வீக வல்லமையின் உதவியுடன் அன்பு செயல்படும்.

வேதாகமம் உரைக்கிறபடி காலம் நிறைவேறினபோது (கலாத். 4:5) அன்பு தன் உச்சக்கட்ட வெளிப்பாட்டைக் காட்டியதனால், ஏற்ற காலத்தில் (ரோம. 5:6) தேவன் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். மனிதனாக வந்த இயேசுவும் தேவ கிருபையினால் "ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்." (1 தீமோ. 2:5; எபி. 2:9) தேவ அன்பு இவ்வுலகில் இருந்து வந்த போதிலும் அதுவரை தெய்வீக அன்பின் முழு பரிமாணம் இன்னதென்று மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்படவில்லை. நாம் வேதத்தில் காண்கிறதாவது:

"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படி... அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது." "நாம் பாவிகளாயிருக்கும்போதே கிறிஸ்து நமக்காக மரித்தார்..." (1யோவா. 4:9; ரோமர்.5:8)

இவ்வாறாக வெளிப்பட்ட தேவ அன்பானது, தேவனுடைய

பிரமாணத்திற்கு இசைவாக அதன் தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்தது. அது ஒருபோதும் தெய்வீக நீதிக்கு முரண்பாடாக செயல்படவில்லை. தெய்வீக அன்பு கொடுக்கப்பட்ட சாபத் தீர்ப்புக்கு எதிராகவோ, அதை நிறைவேற்றத் தடை ஏற்படுத்தவோ, தீர்ப்பை மீறுவதாகவோ இல்லாமல், அந்த தீர்ப்புக்கு சரி நிகராகத் தகுந்த ஈட்டுக்கிரயம் செலுத்தி மனிதனை சாபத்தி-ருந்து விடுவிக்கவுமே இவ்விதமாக செயல்பட்டது. தேவ நீதி அளித்த மரண தண்டனையை சரிகட்டி தேவ அன்பு ஆதாமின் தண்டனையிலிருந்து மனுக்குலத்திற்கு விடுதலையை கொண்டுவந்தது. இந்த தேவ அன்பின் வெற்றி தேவநீதியின் வெற்றிக்கு எந்த விதத்திலும் குறைவானதல்ல. இயேசுவை ஈட்டுகிரய பலியாக தேவநீதிக்கு செலுத்தியதின் மூலம், அன்பானது, இவ்வெற்றியை அடைந்தது. தேவனுடைய குணலட்சணமாகிய இந்த தேவ நீதிதான் அவரது நீதியான தீர்ப்பையும் அதன் தண்டனையையும் நிறைவேற்றுகிறது.

அன்பின் வெற்றி இத்தோடு முடிந்துவிடவில்லை. ஈட்டுக்கிரயம் மட்டுமே தற்போது நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக மனுக்குலம் முழுவதும் மறுசீரமைப்புக்குள்ளாகி தேவனுடைய திட்டத்தையும், அவரது நீதி நியாயத்தையும் மனப்பூர்வமாக ஏற்றுக் கீழ்ப்படியும்போது, பெறப்போகும் ஆசீர்வாதங்களே தேவ அன்பின் உச்சகட்ட நிலையை வெளிக்காட்டுவதாக அமையும். ஈடுபலி செலுத்தப்படுவதற்கு முன்னர், தெய்வீக ஞானத்தின் வழிநடத்துதலுக்கு உட்பட்டு, தேவ அன்பு நான்காயிரம் வருடங்களாகப் பொறுமையோடு காத்திருந்தது. ஈடு பலி செலுத்தப்பட்ட பிற்பாடும் அவ்விதமே மேலும் இரண்டாயிரம் வருடங்கள் மாபெரும் மறுசீரமைப்புக்குள்ளாகும் நாள்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. (அப்.3:19-21) ஆனால் ஈடுபலி செலுத்தப்பட்ட நாள் துவங்கி, மறுசீரமைக்கப்படும் காலம் வரை உள்ள இடைப்பட்ட காலமாகிய இரண்டாயிரம் வருட சுவிசேஷ யுகத்தில் தெய்வீக ஞானத்தின் அனுமதியின் பேரில் தேவ அன்பானது சுவிசேஷ யுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட "சிறுமந்தை" என்கிற ஒரு விசேஷித்த வகுப்பார் மேல் கிரியை செய்கிறது. இவ்வாறு மீட்கப்பட்ட வகுப்பாரி-ருந்து "தமது நாமத்திற்கென்று ஒரு

ஜனத்தை" தெரிந்துகொள்கிறது. இவர்களே கிறிஸ்துவின் உடன் சுதந்திரராகி மணவாட்டியாகப் போகும் திருச்சபையார்.

கிறிஸ்துவினால் இவ்வாறு விலைக்கிரயமாகக் கொள்ளப்படுவதற்கான அவசியம் என்னவென்றால், மனுக்குலத்தின் முற்பிதாவாகிய ஆதாம் தன்னையே பாவத்திற்கு விற்றதன் மூலம் தன் முழு சந்ததியையும் பாவத்திற் குள்ளாக்கினான். "நாமோ பாவத்திற்குக் கீழாக விற்கப்பட்டோம்..." (ரோம 7:14; 5:12) பாவத்தின் அடிமைத் தனத்தினின்று மனிதனை ஈட்டுக் கிரயத் தொகையைக் கொடுத்து மீட்க வேண்டியதாயிருந்தது. நித்திய ஜீவன் பெறுவதற்கான தகுதியைப் பெற வேண்டுமானால், சாபத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்படுவது அவசியம்.

இப்பொழுது விலைக்கு வாங்கப்பட்டோம் என்பதைக் குறித்து இன்னும் விளக்கமாக ஆராய்வோம். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எழுத்துப்பூர்வமாக மாத்திரமல்லாமல், உண்மையாகவே சிலுவை மரணத்தில் ஈட்டுக்கிரய பலி செலுத்தியதன் மூலம் நம்மேல் முழு அதிகாரம் கொண்டவராக, ஆள்பவராக, மனுக்குலத்திற்குத் தந்தையானார். இந்த ஈடுபலி செலுத்தி விலைக்கு வாங்கியதன் மூலம் தன் மனுக்குல சந்ததியைப் பாவத்திற்கு விற்றுப் போட்ட தந்தையாகிய ஆதாமின் இடத்தைப் பிடித்துக் கொண்டார். தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்து, தன் சுய விருப்பத்தின் மூலமாக செய்த பாவத்தால் மனுக்குலம் முழுவதையும் ஆதாம் விற்றுப்போட்டான். ஆனால் மனிதனாகிய இயேசு கிறிஸ்துவோ, பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தன்னையே தியாக பலியாக்கி ஆதாமுக்காக ஈட்டுக்கிரய பலி செலுத்தி மனுக்குல சந்ததி முழுவதையும் விலைக்கிரயமாக வாங்கினார். வேதாகமம் இக்கருத்தைக் குறித்து கூறுகிறதாவது: "கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்து மிருக்கிறார்." (ரோமர் 14:9)

இவ்வாறு நமது கர்த்தர் தமது மரணத்தின் வழியாக தெய்வீக நியாயத் தீர்ப்பினால் சாபத்திற்குள்ளான நம்மை விடுவித்ததின் மூலம் நமக்கு குருவாகவும், அதிகாரியாகவும், மனுக்குல சந்ததிக்கு

தந்தையாகவும், தனது சொந்த பிள்ளைகளாகிவிட்ட மனுக்குலத்தை வழிநடத்தக்கூடிய முழு அதிகாரமும் பெற்றவராகிறார்.

இதன் பொருட்டுத் தான் நமது கர்த்தர் இரண்டாம் ஆதாம் என்ற அந்தஸ்தைப் பெறுகிறார். ஏனெனில் இயேசு மனிதனாக வந்து தமது சொந்த உயிரைத் தியாகம் செய்து நம்மை விடுவித்து விலைக்கு வாங்கியதன் மூலம் ஆதாமின் இடத்தை சுதந்தரித்துக் கொண்டார். இதில் நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய உண்மை என்னவெனில், மனிதனாக கிறிஸ்து இயேசு இவ்வுலகில் வந்தவுடனே மனுக்குல சந்ததிக்கு தந்தையாகிவிடவில்லை. தனக்குள்ளதெல்லாவற்றையும் மனுக்குல மீட்புக்காக தியாகமாக்கி ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும் சேர்த்து, ஒரு மனிதன் செய்த பாவத்திற்காக இன்னொரு மனிதனாகிய கிறிஸ்து முழுமையான, தேவனால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஈடுபலி செலுத்திய பிற்பாடு தான் மனுக்குலத்தின் தந்தையாகிறார். ஆதாம் மீறுதலுக்குள்ளானபோது அவன் சந்ததியார் யாரும் பிறந்திருக்கவில்லை என்றாலும், அவன் செய்த தவறினால் நேரடியாக அல்லாமல் மறைமுகமாக வந்த சாபத்தீர்ப்பு பின்சந்ததியாரையும் பற்றிக் கொண்டது. இதனைத் தொடர்ந்து நேரடியாக அல்ல மறைமுகமாக அவர்கள் விலைக்கு வாங்கப்பட வேண்டிய அவசியமாகிவிட்டது. மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின் அரையிலிருந்த பிறவாத சந்ததியினர், ஆதாம் பாவம் செய்த போது பிறந்திராத அவனது சந்ததியாருக்கு ஈடுபலி அல்லது ஈட்டு கிரய பலியாயினர்.

## கொடுக்கப்பட்ட விலைக்கிரயம் திரும்பப் பெறப்படவில்லை

வேதாகமம் தீர்மானமாக உரைக்கிறபடி, நமது கர்த்தர் மாம்ச சரீரத்தில் மரணத்திற்குள்ளாக்கப்பட்டார், ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதை நாம் முன்னரே பார்த்தோம். அவர் மரிக்கும்போது மனிதனாக மரித்தார். ஆனால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும்போது ஆவிக்குரிய ஜீவியாக உன்னத நிலைக்குரிய தெய்வீக சாயலை உடையவராக எழுந்திருந்தார். மனிதனாக தாம் வந்த நோக்கத்தை நிறைவு செய்தபின், தாம் செய்த பணி, பிதாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர், மரித்தோரிலிருந்து மகிமையான உன்னத அந்தஸ்துக்கு, தேவ தூதர்களுக்கும் மேலாக,

உயர்த்தப்பட்டார். எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தையும் பெற்றுக்கொண்டார்.

கிறிஸ்து இயேசு மனிதனாக மரிக்க வேண்டியதோடு நில்லாமல், மனுக்குலம் மரணத்தினின்று விடுபட மீட்கும் பொருளை விலைக்கிரயமாக நித்திய நித்தியத்திற்கும் செலுத்த வேண்டி, மனித நிலையில் இனி ஒருபோதும் ஜீவிக்காமல் மரித்த நிலையிலேயே இருக்க வேண்டியதாயிருக்கிறது. ஆகவே நமது கர்த்தர் மனிதனாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்படவுமில்லை. கிறிஸ்து இயேசு மனிதனாக மீண்டும் ஒருமுறை ஒருபோதும் ஜீவிக்கக் கூடாது என்பதும் தேவ நீதிப்படி அவசியமாயிற்று. நமது ஈடுபலியின் கிரயத்தை இன்னும் அவர் தேவநீதியிடம் விட்டிருக்கிறார்.

நமது கர்த்தர் உயிர்த்தெழும்போது மனிதனாகவே உயிர்த்தெழுப்பப்பட்டார் என்று சொல்வோமானால் அதில் இரண்டு தவறுகள் அடங்கியிருக்கிறது:

1. மனுக்குலத்திற்காகவும் ஆதாமின் பாவத்திற்காகவும் செலுத்தப்பட்ட மீட்கும்பொருள், திரும்பப் பெற்றுக் கொண்டதாக அர்த்தமாகிறது. அவ்வாறானால் நாம் பாவத்திலிருந்து விடுபட வழியின்றி, திரும்பவும் பழைய நிலையிலேயே பாவம் சாபம் மரணத்திற்குள்ளாகவே இருந்திருப்போம்.

2. இயேசுகிறிஸ்து பரலோகத்தில் முன்பிருந்த ஆவிக்குரிய உன்னத நிலையை விட்டு மனிதனாகி நமது மீட்பரானார். திரும்பவும் தாழ்நிலையாகிய மனித நிலையிலேயே உயிர்த்தெழுப்பப்பட்டார் என்று சொன்னால், அது, நமது கர்த்தருக்கு நித்திய நித்தியத்துக்குமான மிகப்பெரிய இழப்பாகிறது. அவரைப் பொறுத்தவரை தேவனுக்குக் கீழ்ப்படிதலுக்கு பலன் நித்தியத்துக்கும் தாழ்ந்த மனித பிறவியிலேயே இருப்பதாகும் என்று பொருளாகிறது. இவ்வாறான பகுத்தறிவுக்கு சற்றேனும் பொருந்தாத அபத்தம் தேவ திட்டத்தில் இடம் பெறவில்லை. நமது கர்த்தர் தன்னையே தாழ்த்தி மனித சாயலானார். மனிதன் என்ற முறையில் விழுந்து போன மனிதனுக்காக மீட்கும் பொருளை விலைக்கிரயமாகக் கொடுத்தார். இவ்வாறு தேவனிடத்தில் இறுதிவரை கீழ்ப்படிந்து நடந்ததால்,

மரித்த கிறிஸ்துவை தேவன் உயிரோடு எழுப்பியது மட்டுமல்லாமல், மனிதனுடைய சாயலுக்கும் மேலாக, அவரது பழைய ஆவிக்குரிய சாயலுக்கும் மேலான நிலைக்கு, அதாவது தெய்வீக சாயலுக்கு பங்குள்ளவராக மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார். உயர்த்தப்பட்ட நிலையில் இனி கிறிஸ்து சாவுக்குட்படவே முடியாது. அவர் தற்போது சாகாமையைத் தரித்துக் கொண்டிருக்கிறார்.

இயேசு கிறிஸ்து ஆதாமிற்கும் அவன் சந்ததிக்கும் சேர்த்து தன்னையே மீட்கும் பொருளாக ஈட்டுக்கிரய பலி செலுத்தி முடித்த நிலையில் ஆதாமினுடைய சந்ததியினருக்கு தந்தையாக, ஆதாமின் ஸ்தானத்திலிருந்து, இரண்டாம் ஆதாமாக இருக்க முடியாது. மனிதனாக வந்த கிறிஸ்து மரித்துவிட்டார். மனித நிலையில் என்றைக்கும் அவர் மரித்தவராகவே இருக்கிறார். ஒருபோதும் மனிதன் என்ற முறையில் இம்மனுக்குல சந்ததிக்கு தந்தையாகவோ, ஜீவன் தருபவராகவோ இருக்க முடியாது.

உயிர்த்தெழுந்து மகிமையடைந்த நிலையிலிருக்கும் கிறிஸ்து இயேசு, தெய்வீக சயாலை சுதந்தரித்த பிற்பாடு, மனுக்குலத்தை விலைக்கிரயமாகக் கொண்டபின், மனுக்குலத்தின் தந்தை என்ற பட்டத்தை சுதந்தரித்துக் கொண்டார். இதுவே இரண்டாம் ஆதாமின் சிறப்பு. நமது கர்த்தராகிய இயேசு மாம்ச சரீரத்தில் இப்பூமியில் இருந்தபோது இரண்டாம் ஆதாம் என்ற பெயர் அவருக்குப் பொருந்தாது. மாம்ச சரீரத்தில் மனுக்குலத்தின் தந்தை என்ற நிலையையும் அவர் அடையவில்லை. அவர் மனித ரூபத்தில் ஆதாமையும் அவன் சந்ததியினரையும் விலைக்கியரமாக கொள்ளவும், மீட்கவுமே வந்தார். எனவே மகிமையடைந்த நிலையில்தான் கிறிஸ்து மனுக்குலத்தின் தந்தை என்ற நிலையினை அடைந்தார். அந்நிலையை அடைவதற்கும் மனுக்குலத்தினை மீட்பதற்கும் எதையும் தனக்கென வைத்துக் கொள்ளாமல் அனைத்தையும் இழந்தார். அப்போஸ்தலர் வேதாகமத்தில் சொல்லுகிற பிரகாரமாக, "முந்தின மனுஷன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் (இரண்டாம் ஆதாம்) வானத்திலிருந்து வந்த கர்த்தர்.... மண்ணானவனுடைய சாயலை (ஆதாம்) நாம் அணிந்திருப்பது போல நாம் (திருச்சபையார்,

*கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரர் மகாமேன்மையும் அருமையுமான வாக்குத் தத்தங்களுக்கு பங்குள்ளவர்கள் - ரோமர் 8:17; 2 பேது 1:14) வானவருடைய சாயலையும் (இரண்டாம் ஆதாம்) அணிந்து கொள்வோம்." "அந்தப்படியே முந்தின மனஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்ம சரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது." - 1கொரி. 15:45-49*

மனுக்குலம் ஏன் விலை கொடுத்து வாங்கப்பட்டது என்பதனை குறித்து இன்னும் விளக்கமாகப் பார்க்கலாம். அப்போஸ்தலர் சாட்சியிடுகிறபடி, நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசு நம்மை விலைக்கிரயமாகக் கொண்டதினால் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் என்ற உரிமையைச் சுதந்தரித்துக் கொண்டார். (எபி. 8:6; 9:14-16) புதிய உடன்படிக்கையானது தேவன் வழங்கிய மாபெரும் ஏற்பாடாகும். இவ்வுடன்படிக்கை விழுந்து போன மனுக்குலத்தினரோடு தேவன் தமது கருணையைக் காண்பிக்க ஏற்படுத்தப்பட்டது. இந்த புதிய உடன்படிக்கையானது மத்தியஸ்தராகிய கிறிஸ்துவையல்லாமல் செயல்பட முடியாது. மனுக்குலத்தினருக்காக மத்தியஸ்தர் தேவனிடத்தில் ஒரு சில வாக்குறுதிகள் கொடுத்திருக்க வேண்டும். முதலாவதாக, அவருடைய தியாகபலியின் மூலம் முழுமையான ஈட்டுக்கிரய பலி செலுத்தி மனிதனை மீட்டாக வேண்டும். அவ்வாறு இயேசு நிறைவேற்றியது "இரத்தத்தினாலான உடன்படிக்கை" எனப்படுகிறது. இதனால் இந்த உடன்படிக்கையானது சக்தி வாய்ந்ததும் செயல்பாடுள்ளது மாயிருக்கிறது. பாவம், சாபத்தால் நிலைகுலைந்து போயிருந்த மனுக்குலத்தை விலை கொடுத்து மீட்டு, புதிய உடன்படிக்கையினால் முத்திரையிட்டு அவ்வுடன்படிக்கையை செயலாக்கம் பெறச் செய்திருக்கிறார். விலைக்கு மீட்ட மனுக்குலத்தை பரிபூரண சுபாவத்திற்குக் கொண்டு வருவதற்கான முழு அதிகாரத்தையும் பெற்று அதனை நிறைவேற்றத் தயாராய் இருக்கிறார். தேவ சித்தத்திற்கு இசைவாக மனுக்குலம் பூரண சுபாவத்தை அடையத் தேவையான அனைத்தையும் செய்ய விருக்கிறார். அவர்களை அன்பில் கறைதிரையற்றவர்களாகவும்,

மாசற்றவர்களாகவும் தேவன் முன்னால் நிறுத்திய பிறகு தேவனோடு ஒப்புரவாக்கக் கூடிய மத்தியஸ்தமோ, ஒரு விசேஷ உடன்படிக்கையோ இனி அவசியமற்றதாகிறது. ஒப்புரவாக்குத-ன் பணி இப்பொழுது தான் ஆரம்பமாயிருக்கிறது. இவ்வுலக மனுக்குலம் இன்னும் பிதாவாகிய தேவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையென்றாலும், ஆயிர வருட அரசாட்சிக் காலத்திற்குள் மறுசீரமைப்புக்குள்ளாக்கப்பட்டு, மனப்பூர்வமாக சத்தியத்தை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிபவர்கள் தேவனோடு இசைவாகப் பொருந்தி முழுமையான ஒப்புரவடைவார்கள்.

இந்த சுவிசேஷ யுகக் காலத்தில், மீட்கப்பட்ட ஒரு சந்ததியினருக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. அந்த தெய்வீக அழைப்பினைப் பெற்றவர்கள் மத்தியஸ்தர் மேல் வைத்த விசுவாசத்தின் மூலம் தேவனை நெருங்கி வர வாய்ப்பளிக்கப் படுகிறது. இவர்களது கிரியைகள் பூரணமாகக் கருதப்பட்டு ஏற்கப்படுகிறது. தேவனின் திட்டத்தினை ஏற்று தேவனுக்கு முழுமையாக கீழ்ப்படிந்து தங்கள் மீட்பராகிய கிறிஸ்துவோடு இணைந்து இவர்கள் செலுத்தும், ஜீவபலி தேவனால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதனால் அவர்கள் தேவனுடைய குமாரனின் சாயலைப் பெறும் வளர்ச்சியில் முன்னேறுகிறார்கள். அவர்கள் மனப்பூர்வமாகவும், சந்தோஷமாகவும் கிறிஸ்துவோடு துன்பப்படும்போது, படிப்படியாக மகிமையின் சாயலுக்கு உயர்த்தப்படுகிறார்கள். மேலும் தங்கள் ஜீவகாலபரியந்தம் இவ்வாறு தேவ சித்தத்திற்குப் பணிந்து அதனை நிறைவேற்றுபவர்கள், ஆயிர வருட அரசாட்சியின்போது உலக மாந்தர் புதிய உடன்படிக்கைக்குட்பட்டு ஆசீர்வாதம் பெறும்காலத்தில், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராக இருப்பார்கள். இவர்கள் மனுக்குலத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட விசேஷித்த வகுப்பார் என்பதனை நினைவில் கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சகோதரர்கள், கிறிஸ்துவின் மணவாட்டி, திருச்சபையின் சரீர அங்கங்கள் என்றழைக்கப்படுகின்றனர். ஆனால் அவர்கள் ஒருபோதும் கிறிஸ்துவின் பிள்ளைகள் என அழைக்கப்பட முடியாது. ஏனெனில்

இவர்கள் பரலோகத் தந்தையின் புத்திரர்கள். சத்திய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியினாலும் ஜெநிப்பிக்கப்பட்டு பரலோக சாயலை சுதந்தரித்துக் கொள்ளப் போகிறவர்கள். நாம் ஏற்கனவே பார்த்தபடி இவர்கள் தந்தையாகிய யேகோவா தேவனை, தங்களது தந்தையாக சத்தியத்தின்படி சரியாய் அறிந்தவர்கள், அவரால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். இதனால் இவர்கள் கிறிஸ்து இயேசுவின் சகோதரர்கள் எனப்படுகிறார்கள். -1 பேது 1:3,4

அனைத்து மனுக்குலத்தினருக்குமான தேவதிட்டம் மாறுபட்டதாய் உள்ளது. உலக மனுக்குலம் விசுவாசத்தின்படி நியாயந்தீர்க்கப்படாமலும் தெய்வீக சாயலுக்கு ஜெநிப்பிக்கப்படாமலுமிருந்து தேவனுடைய ஆயிர வருட அரசாட்சிக்காக காத்திருக்க வேண்டியிருக்கிறது. அந்நாட்களில் யேகோவா தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டு புதிய சுபாவத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாய், தங்கள் பழைய சுபாவத்திலேயே - பழைய பாவக்கறைகள் கறைதிரைகள் அனைத்தும் நீக்கப்பட்டு பூரண மனித சுபாவத்தை அடைவார்கள். ஆகவே உலகத்தார் இவ்வாறு ஏதேனில் இழந்து போன தங்கள் ஆசீர்வாதங்களை மறுபடியும் பெற்றுக் கொள்வார்கள். (மத். 18:11; அப். 3:19-21) இந்த உலக ஜனங்களுக்கு தேவன் அளிக்கின்ற கிருபையானது மீட்கும் பொருளைச் சார்ந்தே அமையும். கிறிஸ்து இயேசு மனுக்குலத்தை மீட்பதற்காக தனது பூரண மனித சுபாவத்தினையும் தனது உரிமை, சுதந்திரம் அனைத்தையும் இழந்து - ஏதேனில் ஆதாமினால் இழந்து போன அனைத்திற்கும் சரிகட்டும் விதமாக தன்னையே ஈட்டுகிரய பலியாக்கினார். இதனால் மனுக்குலம் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டு, உரிமையையும், ஆளுகையையும், நித்திய ஜீவனையும் அடைவார்கள். மனுக்குலம் இவ்வாறு விலைக்கு வாங்கப்பட்டதால், ஏற்ற காலத்தில் அனைத்து உலக ஜனங்களும், புதிய உடன்படிக்கைக்குட்பட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வர்.

கர்த்தர் இந்த சுவிசேஷ யுகத்தினை, கிறிஸ்துவின் சரீர அங்கங்களை தெரிந்தெடுப்பதற்காக உபயோகித்து வருகிறார். திருச்சபையின் தலைவராகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

இவ்வுலகின் ஜனங்களுக்கு ஜீவன் தருபவராக, தந்தையாக இருப்பார். அவரது சாயலைப் பெற்றிருக்கின்ற அச்சிறுமந்தை, இவ்வுலகில் கிறிஸ்துவைப் போலவே பலபாடுகளையும் அவமானங்களையும் சகித்து, வர இருக்கின்ற முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையில் பங்கு பெறப் போகின்றார்கள். புதிய உடன்படிக்கையின்படி, பிரதான ஆசாரியரும் மாபெரும் தீர்க்கதரிசியும், ராஜாவும், உலக மனுக்குலத்திற்கு ஜீவன் தருபவருமாகிய கிறிஸ்துவோடு இச்சிறு மந்தையும் இணைந்து, யார் யார் ஜீவனைப் பெறப்போகிறார்களோ அவர்களுக்கு ஜீவனை அளிப்பர். இக்கருத்தினை மையமாகக் கொண்டு தான் வேதாகமத்தில் நமது கர்த்தரை, "நித்திய பிதா" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் அவர் இந்த நாமத்திற்குரிய தனது பணியை இன்னும் முற்றும் முடிய நிறைவேற்றி முடித்துவிடவில்லை. இருந்த போதிலும், தெய்வீக ஏற்பாட்டின்படி தனது சொந்த ஜீவனை பலியாக செலுத்தி தன் வல்லமையினால் இவ்வுலகினை விலைக்கிரயமாகக் கொண்டதினால், தொடர்பு கொள்ள அவர்கள் அனைவர் மேலும் உரிமையும், அதிகாரமும் பெற்றிருக்கிறார். அவரது நிபந்தனைக்குட்பட்டு அவர்கள் இழந்துபோன ஜீவன், மனித உரிமை, சலுகைகள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொண்டு வாழ்வர்.

இதற்கும் மேலாக, வேதாகமம் சொல்லுகிறபடி, இயேசு கிறிஸ்து தனது உயிரையே மனுக்குலத்திற்காக தியாகம் செய்ததால், உலக மனுக்குலம் முழுவதையும் தன்னுடையதாக்கிக் கொண்டார். இதன்மூலம் மனுக்குல சந்ததியினரிடம் தந்தை என்ற சட்டரீதியான உரிமையும் பெற்றிருக்கிறார். இதனால் அவர்கள் நித்திய ஜீவன் பெற தகுதியுடைவர்களா, தகுதியற்றவர்களா என தீர்மானிக்கவும், தீர்ப்பு வழங்கும் உரிமையினையும் பெற்றிருக்கிறார். மேற்சொன்னவைகளை உலக ஜனங்களின் தந்தை என்ற முறையில் அடுத்த யுகத்தில் செயல்படுத்துவார். இந்த நியாயத்தீர்ப்பு நமது கர்த்தரால் இப்பொழுது மணவாட்டியாக வரப்போகிற திருச்சபையாருக்கு நடந்து கொண்டிருக்கிறது. அப்போஸ்தலர் எடுத்துரைக்கிற பிரகாரம், பரலோகத் தந்தை கிறிஸ்துவுக்கு தலைவராக இருப்பதுபோல, கிறிஸ்து திருச்சபைக்கு தலைவராக இருக்கிறார். குடும்பத்தில் கணவன் மனைவிக்கு தலைவனாக இருக்கிறான். இந்தக் கருத்தினை

வ-யுறுத்தவே அப்போஸ்தலர், "...பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத் தீர்ப்புச் செய்யாமல், நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்" என்று கூறுகிறார். (யோவான் 5:22) கிறிஸ்துவுக்கு நிச்சயிக்கப்பட்ட மணவாட்டி மணவாளனாகிய கிறிஸ்துவின் மூலமாகவே இந்த சுவிசேஷ யுகத்தில் பிதாவை அணுக முடியும். கிறிஸ்துவையன்றி அவர்கள் நேரடியாக தேவனிடத்தில் சேர முடியாது. மணவாட்டியின் விண்ணப்பங்கள், மணவாளனின் நாமத்தின் மூலம் அவர் பெற்ற தகுதியின் மூலமாகவே ஏறெடுக்கப்பட வேண்டும். அவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று தேவபுத்திரர்கள் என்ற முழு சுதந்திர நிலையை அடைந்து மகிமைப்படுத்தப்படும் நாள் வரை இவ்வாறே தொடர்ந்து நடைபெற்றாக வேண்டும்.

இதைப்போலவே கிறிஸ்துவின் பிள்ளைகளாக்கப்படப் போகிற உலக மனுக்குலத்தார் தங்கள் தந்தையும் தலைவருமாகிய கிறிஸ்துவிடமே தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்தாக வேண்டும். ஏனெனில் பரம பிதாவாகிய "யேகோவா" தேவன் அவர்களை அறிந்து ஏற்றுக் கொள்ளாததினால் அவர்கள் பிதாவாகிய தேவனிடம் தொடர்பு கொள்ள முடியாது. இனிவர இருக்கின்ற ஆயிர வருட அரசாட்சியின் போது அவர்கள் உயிர்த்தெழுப்பப்பட்டு பரிபூரணராக்கப்பட்டு இந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியைப் பெறும்வரை கிறிஸ்துவோடு மட்டுமே அவர்கள் தொடர்பு கொள்ள முடியும். ஆயிர வருட அரசாட்சி முடிவடையும்போது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, பிதாவாகிய தேவனிடம் அரசாட்சியை ஒப்படைக்கும்போது, பூரணராக்கப்பட்ட உலகமாந்தர் அனைவரும், அனைவருக்கும் தந்தையான மாபெரும் வல்லமை வாய்ந்த "யேகோவா" என்னும் திருநாமம் கொண்ட தேவனிடம் கிறிஸ்துவால் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, தேவனுடைய நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படுவார்கள். (1 கொரிந். 15:24)

மேற்கண்ட நிலைப்பாட்டின்படி எப்படி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீட்கப்பட்டு, மறுசீரமைப்புக்குள்ளான சந்ததிக்கு தந்தையாகிறார் என்பதையும் அதோடுகூட, ஆதாமை தாமே பிதாவின் சித்தத்திற்குட்பட்டு சிருஷ்டித்திருந்தாலும் கூட, பலிக்கு

முன்னால் ஆதாமின் தந்தை அல்லது அவனது பிள்ளைகளின் தந்தை என அழைப்பது பொருத்தமற்றது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. எழுதியிருக்கிறபடி, "உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." கிறிஸ்து ஆதியில் லோகோஸாக இருந்தபோது பெற்றிருந்த நிலைக்கும், இப்பூமியில் மனிதனாக வந்த நிலைக்குமுள்ள வேறுபாடு என்னவெனில், "யேகோவா" தேவனுடைய பிரதிநிதியாக (லோகோஸ்) அவர் எவ்வித பாதிப்புக்கோ, துன்பத்துக்கோ உட்படாமல் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். ஆனால், அவர் பூமிக்கு மனிதனாக வந்தபோது துன்பம், வேதனைகளைத் தாங்கி, தன் சொந்த இரத்தத்தினைக் கொடுத்து தியாக பலி செலுத்தி அதன் மூலம் மனிதன் ஜீவிப்பதற்கான உரிமைகளைப் பெற்றுத் தந்தார்.

## மீட்கும்பொருள் - மன்னிப்பு அல்ல

மன்னிப்புக்கும், ஈடுபலிக்குமுள்ள வேற்றுமையை சரியாக வகைப்படுத்தி ஆராயத் தவறிவிடுவதால் குழப்பம் ஏற்படுகிறது. பொதுவாகவே கிறிஸ்துவ மண்டலம் தீர்மானமாக்கிக் கொண்டது என்னவெனில், நமது ஜீவன் மரணத்திலிருந்து மீட்கப்பட்டு, கல்லறையிலேயே கிறிஸ்துவின் விலை மதிக்க முடியாத இரத்தத்தின் மூலம் ஈட்டுக் கிரயபலி செலுத்தப்பட்டு விடுகிறது. இக்கூற்றிற்கு ஆதாரமாக சில வேதவசனங்களைத் தவறாக சுட்டிக் காட்டுகின்றனர். அதே மூச்சிலே அவர்கள் எல்லா பாவங்களிலிருந்தும் பிதாவின் கிருபையுள்ள மன்னிப்பைக் குறித்தும் பேசுகின்றனர். ஆனால் மன்னிப்புக்கும், மீட்கும் பொருளுக்கும் நேரெதிரான பொருள் பொதிந்துள்ளது என்பதை கண்டிப்பாக அறிந்தாக வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்ட வார்த்தைகளுக்கு தரமுள்ள ஆங்கில அகராதியிலிருந்து விளக்கம் காண்போம்.

மீட்பு (redeem) : விலைக்கிரயம் செலுத்தி தன் உடைமையாக்கிக் கொள்வது.

மீட்கும்பொருள் : அடிமையாய் சிறைப்பட்டுக் கிடக்கிற ஒருவனுக்கு அதற்கீடான விலை கொடுத்து அவனை விடுவித்தல். மேற்கண்ட இரண்டு வார்த்தைகளுக்கும், மன்னித்தல் (pardon) என்ற வார்த்தைக்குமிடையே உள்ள முரண்பாட்டை இனி காண்போம்.

மன்னித்தல் (pardon) : அபராதம் செலுத்துவதிலிருந்து மன்னித்து விடுவித்தல்.

வெப்ஸ்டர் அகராதி : அபராதம் செலுத்துவதிலிருந்து பின் வாங்குதல். தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுவித்தல்.

pardon என்ற வார்த்தையை ஒத்த இன்னொரு வார்த்தையான forgive என்பதற்கான விளக்கம் காண்போம்.

forgive - தண்டனை தருவதி-ருந்து விடுவித்தல் - பழிவாங்குதலைக் கைவிடுதல்.

"பிரமாணம் மன்னிப்பளித்தலை அறியாது."

எனவே மேற்சொன்ன விளக்கங்களிலிருந்து "மீட்பு," "மீட்கும் பெருள்" என்ற சொற்களுக்கான விளக்கமும், "மன்னித்தல்" என்பதற்கான பொருளும் ஒன்றொடோன்று ஒவ்வாத மாறுபட்ட பொருள் தருவதாயிருக்கிறது என்பது தெளிவாகிறது. வேதாகமத்தில் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் விழுந்துபோன மனிதனோடு கொண்டுள்ள தேவனின் தொடர்பை எடுத்துரைக்கின்றன. வேதத்தை வாசிக்கும் மாணவர்கள் பரிசுத்த வேதாகமத்தில் ஒரே பொருள்தரக்கூடிய பல சொற்கள் இடம் பெற்றிருப்பதால், வேதாகமம் கவனக்குறைவாக எழுதப்பட்டிருக்கிறது என்று தவறாகப் புரிந்து கொள்கின்றனர். இதன் காரணமாக இடத்திற்குத் தகுந்தாற்போல் "மீட்கும் பொருள்," "மீட்பு" என்ற சொற்களுக்கு "மன்னிப்பளித்தல்" என்ற பொருளை உபயோகித்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு வருகின்றனர். இந்த செயல்பாடு "சத்திய வசனத்தை நிதனமாய்ப் பகுத்து" ஆராய்ந்து ஏற்றுக் கொள்வதி-ருந்து வெகு தூரம் நம்மை இழுத்துச் செல்கிறது. இரு வெவ்வேறு விஷயத்தினை ஒரே பொருளாக கருதுவதால் குழப்பம் ஏற்படுகிறது. இவ்வாறு குழம்பிப் போவதால் இவ்விஷயத்தில் அநேகர் சத்திய வேதம் என்ன கூறுகிறது என்று கவனிக்காமலும், தேடி அறிய முற்படாமலும் இருக்கின்றனர். இதனால் தங்களது "மீட்கும் பொருள் இல்லை" என்கிற கொள்கை தவறாகிவிடுமோ என்று பயப்படுகின்றனர்.

தேவன், ஆதாமின் மீறுதல்களை மன்னிக்காமல் அதற்கான

அபராதத்தை நிறைவேற்றி முடித்தார் என்ற விளக்கத்தை விட வேறெந்த விளக்கங்களும் இப்பாடத்திற்குப் பொருந்தாது. தேவ வார்த்தை சாட்சியமளிக்கிறபடி தேவ கோபம் வெளியரங்கமாக வெளிப்பட்டதினால் மனுக்குலத்தை துன்ப துயரங்கள் வாட்டி வருவதையும் மரண வேதனையை அனுபவிப்பதையும் நாம் நேரில் காணமுடிகிறது. தேவன் இவ்வுலக ஜனங்களின் பாவங்களை மன்னிக்கவில்லை என்பதற்கு சாட்சியமாக மனுக்குலம் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை ஆறாயிரம் வருடங்களாக ருசி பார்த்து வருவதைக் காண்கிறோம். கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்திற்காக செலுத்திய ஈட்டுக்கிரய பலியின் புண்ணியத்தினால் நீதிமானாக்கப்படுதலுக்கு உள்ளாக்கப்பட்டனர். பாவிகளுக்கு பதிலாக, பாவத்திற்கு ஈடாக ஈடுபலி செலுத்தி பாவிகளிடம் அபராதத் தொகை எதுவும் பெறாமல் அவர்களது பாவங்களை மன்னித்தார். ஆதாம் தேவ கட்டளையை மீறியபோது தேவன் உடனே அவனை மன்னித்திருந்தாரானால் ஏதேனிலேயே தொடர்ந்து ஜீவிக்க அனுமதித்து, உயிர் வாழத் தேவையான அனைத்தையும் செய்து கொடுத்திருப்பார். அவனும் இன்னும் உயிரோடு இருந்திருப்பான். அவனுடைய சந்ததியார் அனைவரும் ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் நேரிட்ட மரணத்தை ருசி பார்க்க நேர்ந்திருக்காது.

தேவன், மனிதனை மீட்டு, மன்னிப்பதற்காக எப்பொழுது பிரசன்னமானாலும் அது பாவம், சாபம், மரணம், நோய், துன்பம் ஆகிய அனைத்திலுமிருந்து முழு விடுதலை கொடுத்து மீட்டு இழந்து போன யாவற்றையும் மறுசீரமைப்பு செய்து மீட்டுத் தருவதாக இருக்கும். தேவன் ஆதாமின் மூலமாக உண்டான பாவத்திற்கு இன்னும் மன்னிப்பளிக்கவில்லை என்பதும் பாவிக்கு எதிராக தொடர்ந்து தமது நீதியின்படி தண்டனைத் தீர்ப்பளித்து வருகிறார் என்பதும் நிரூபணமாகிறது. இவ்வுலகத்தார் மீட்கப்பட்டதைக் குறித்தோ மீட்கும் பொருள் செலுத்தப்பட்டதைக் குறித்தோ வெளியரங்கமான அடையாளம் எதுவும் இல்லை. கர்த்தருடைய வார்த்தையின்மேல் விசுவாசம் உள்ளவர்கள் மட்டுமே அறிந்து உணர்ந்து பெற்றுக் கொள்வர். ஆயிர வருட அரசாட்சியின்போது தான், கண்ணால் காண்கின்ற சாட்சியங்களின் மூலம் ஈடுபலியைக் குறித்து

*சரியாக விளங்கிக் கொள்ள முடியும். மறுசீரமைப்புப் பணி நடந்து கொண்டிருக்கும் அவ்வேளையில், நம் மீட்பர் நம்மை விலைக்கிரயமாக்கிக் கொண்டதால் பெற்ற உரிமைகளைப் பயன்படுத்தி முந்தின சீருக்குக் கொண்டு வருவார்.*

*"மன்னிப்பு" அல்லது "பிழை பொறுத்தல்" என்ற சொற்கள் உலகத்தார் மற்றும் அவர்கள் மேல் சாபமாய் பற்றிக் கொண்டிருக்கிற பாவம் நீக்கப்படுதலைப் பற்றிக் கூறாமல், மீட்பரையும் அவர் தந்த மீட்கும் பொருளையும் விசுவாசித்து ஏற்றுக் கொண்டு மரணத்திலிருந்து நீங்கி ஜீவனுக்குட்பட்டவர்களாகக் கருதப்படுகிற, சாபத்தினின்று நீங்கி நீதிமானாக்கப்பட்டவர்களையே குறித்து கூறுகிறது. மாபெரும் மத்தியஸ்தராகிய கிறிஸ்து அவர்களை விலைக்கிரயம் கொடுத்து சாபத்தினின்று மீட்டு இலவசமாக அவர்களது பாவங்களை மன்னித்து புதிய சிருஷ்டிக்கான ஜீவனைத் தொடங்க அனுமதித்திருக்கிறார். அவர்கள் தெய்வீக சட்டத்தின்படி எழுத்திற் குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் இவர்களது பழைய பாவக்கறைகளைப் போக்குவதோடு அவர்களது குற்றங்கள் யாவற்றையும் தொடர்ந்து மன்னித்துக் கொண்டே வருகிறார். (அவர்கள் புதிய சிந்தை, ஆவிக்குட்பட்டிருக்கிற படியாமல், அவை மனப்பூர்வமாக செய்த பாவமாக இருக்காது. - 1 யோவா. 3:9; 5:18) அவர்கள் தங்கள் பழைய அபூரண சந்ததியின் சரீரத்தில் ஜீவிப்பதால் அதன் மூலம் அவர்கள் சிந்தை, வார்த்தை, செயல்பாடுகளில் ஏற்படும் பலவீனங்களை உள்ளப்பூர்வமாக செய்யாத தவறுகளாகக் கருதி மன்னிக்கிறார். இதைப் போலவே நமது பரலோகத் தந்தையும், நம்மேல் கருணை கூர்ந்து, நமது மீறுதல்கள், பலவீனங்களை மன்னித்து தொடர்ந்து தமது கிருபையை காட்டுவேன் என்று கூறியிருக்கிறார். ஆனாலும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செலுத்திய பலியின் மூலமே தேவகிருபை அளிக்கப்பட்டுள்ளது.*

*"இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள். ... தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்,.... கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக*

அவரையே ஏற்படுத்தினார்." (ரோமர். 3:24-26) மேலும் வேதம் தீர்மானமாக உரைக்கிறதாவது: "அவருடைய (தேவனுடைய) கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய (கிறிஸ்துவின்) இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது." எபேசி. 1:7; கொலோ. 1:14

"நாம் அவருடைய குமாரனின் மரணத்தினால் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம்." எவ்வாறெனில் தேவன் முன்னேற்பாடு செய்தபடி நமக்காக ஈட்டுகிரய பலியை கிறிஸ்து நிறைவேற்றினபடியால், தேவன் நமது பாவங்களை ஒழியப் பண்ணினார். தேவன் நம்மேல் அன்பு செலுத்தியதின் நிமித்தமாக, தம் ஒரே பேறான குமாரனை நம் மீட்புக்காக அளித்தார். இவ்வாறாக, "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்." (நமக்கு பதிலாக எந்த விலையுமின்றி தம்மையே ஒப்புக்கொடுத்த அவரது அன்பார்ந்த குமாரன் மீது அவர்களது பாவங்கள் சுமத்தப்பட்டது) இயேசு கிறிஸ்து மரிக்கும் வரை மீறுதலினால் வருகின்ற தண்டனைகள் மனுக்குலத்தின் மீதே சுமத்தப்பட்டு வந்தது. அதன் பிறகு நமக்கு பதிலாக நம் ஆண்டவராகிய இயேசுவின் மூலம் செலுத்தப்பட்ட விலைக்கிரயத்தினால் தேவன் அத்தண்டனைகளை ஒழியப் பண்ணினார் - அதாவது மன்னித்தார். ஆனால் தேவன் அபராதம் செலுத்தவதிலிருந்து மன்னிக்காமல் " நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப் பண்ணினார்." (ஏசா. 53:6) "அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்." (1 பேது. 2:24) இவ்வாறாக செலுத்தப்பட்ட அபராதத் தொகையின் மூலம் தேவ நீதியை முழுமையாக நிறைவேற்றியபடியால் கிறிஸ்து இயேசுவின் மூலமாக நாம் நமது தண்டனையிலிருந்து விடுதலையடைந்தோம். 1 யோவா. 1:7; 2:12; எபேசி. 4:32; அப். 4:12; 10:43; 13:38; லூக். 24:47

பாவமற்ற ஒருவர் பாவிகளுக்காக மரித்ததால் தேவன், கிறிஸ்துவை வலுக்கட்டாயமாக நிர்ப்பந்தித்து நீதியை நிறைவேற்றினார் என்று தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. மாசற்ற ஒருவர், கறைதிரை உள்ளவர்களுக்காக தன்னையே மனமுவந்து கையளித்தாலொழிய தேவ நீதி, கறைதிரை உள்ளவர்களினால்

ஏற்பட்ட களங்கத்தைப் போக்காது. இவ்வாறுதான் கிறிஸ்து தானே முன்வந்து நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டார். வேதாகமும் இக்கருத்தினையே வலியுறுத்துகிறது. தேவனுடைய கோபத்தினால் உண்டான பயத்தினாலோ, நிர்ப்பந்தத்தினாலோ அவர் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக,

*"அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, (தந்தையின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தால் கிடைக்கக்கூடிய சந்தோஷம், மனுக்குலத்தை மீட்டு, சீர்பொருந்தச் செய்வதால் ஏற்படுகின்ற மனமகிழ்ச்சி, அநேகரை மகிமைக்கு உயர்த்துவதால் கிடைக்கும் மகிழ்ச்சி) அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்தார்..." - எபி. 12:2*

கிரேக்க வார்த்தைகளான அப்போலூ (apoluo), அபீமி (aphiemi), அபேசிஸ் (aphesis) ஆகியவை புதிய ஏற்பாட்டின் ஆங்கிலப் பிரதியில் "தண்டனையி-ருந்து விடுவித்தல்" என்று பொருள் தரக்கூடிய forgiveness, forgiven, forgive என்று சரியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஒரு சிலர் தவறாக எண்ணுகிறபடி அபராதம் செலுத்துவதிலிருந்து விடுவித்தல் - தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுவித்தல் (pardon) என்ற பொருள் இதற்குப் பொருந்தாது. தேவன், பாவியை நிபந்தனை ஏதுமில்லாமல் பதிலீடு செலுத்தப்படாமல் மன்னித்துவிடவில்லை. வேதாகமம் சாட்சியமளிக்கிறபடி, தேவன் சிறையிலிருப்பவன் படுகுழிக்குப் போகாதவாறு அவன் மேல் இரக்கம் வைத்து, அவனை இரட்சிப்பதற்காக மீட்கும் பொருளை கண்டுபிடித்தேன் என்பார். (யோபு 33:24) எல்லாரையும் மீட்கும் பொருளாகத் (ஈட்டுக்கிரயம்) தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு இவரே. (1 தீமோத் 2:6) எனவே ஏற்ற வேளையில் மரித்து படுகுழியிலிருக்கின்ற சிறைப்பட்டோர் அவர் சத்தத்தைக் கேட்டு வெளியே வருவர். அப்பொழுது மீட்பராகிய இயேசு கிறிஸ்து வல்லமையையும் ஆட்சி பரிபாலனத்தையும் தன்னுரிமையாக்கிக் கொள்வார்.

புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கிற தண்டனைத் தீர்ப்பி-ருந்து மன்னித்தல் அல்லது அபராதம் செலுத்துவதிலிருந்து மன்னித்தல் (pardon) என்ற சொல் இடம்பெறாவிட்டாலும், இதற்கு

ஒத்த பொருளைத் தரக்கூடிய கிரேக்கச் சொல் காராஸொமாய் (karozomai) இடம் பெற்றுள்ளது. இதற்கு எவ்வித நிபந்தனையுமின்றி மன்னித்தல் என்று பொருள். இவ்வார்த்தைகள் இடம் பெறும் ஒரு சில வசனங்களைக் கொண்டு, தேவன் பாவிகளை அவர்கள் மீறுதலினால் விளைந்த சாபத்திலிருந்து எவ்வித நிபந்தனை யுமின்றி மன்னித்தார் என்ற கருத்து தேவ திட்டத்திற்கு விரோதமானது என்று நிரூபிப்போம். காராஸொமாய் என்ற வார்த்தை 12 இடங்களில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

"கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." - கொலோ. 3:13

"கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான்... எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான்..." லூக் 7:42,43

மேற்கண்ட வசனங்களில் நான்கு முறை இடம் பெற்ற 'மன்னித்தல்' என்ற வார்த்தை நிபந்தனையற்ற மன்னிப்பைக் குறிப்பிடுவதாக உபயோகிக்கப்பட்டுள்ளது. இவ்வசனங்களில் இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீடர்களும் மட்டுமே இந்த நிபந்தனையற்ற மன்னிப்பைத் தருவதாக உள்ளதேயல்லாமல், பிதாவாகிய யேகோவா தேவன் இம்மன்னிப்பைத் தருவதாக குறிப்பு இல்லை. சீமோன், மரியாள் மற்றும் இன்னும் அநேகருக்காகவும் நமது ஆண்டவராகிய இயேசு ஈடுபலி கிரயம் செலுத்தும் வேலையை செய்து கொண்டிருந்ததாலும், இதனிமித்தம் தேவ நீதி நிறைவேற்றப்படும் என்று உணர்ந்ததாலும், வாங்குபவர் என்ற நிலையில் எந்த வித நிபந்தனையும் இன்றி அவர்களை மன்னிக்க முடிந்தது. பாவிகளை விலைக்கிரயம் கொடுத்து வாங்கியதன் நோக்கம் என்னவெனில், பாவம், சாபத்திற்குட்பட்டிருக்கிற அவர்ளை எவ்வித நிபந்தனையுமின்றி இலவசமாக மன்னித்து விடுவிக்கவேயாகும். நமது கர்த்தர், தனது சொந்த இரத்தத்தால் மீட்டுக் கொள்ளப்பட்ட மனுக்குலத்தாரின் பாவங்களை மன்னிக்க விருப்பமில்லாதிருக்கிறாரா? ஆதாமின் பாவத்தினால் விளைந்த

சாபத்தை இன்னும் அவர்கள் மேல் சுமத்துகிறாரா? மேற்கண்டவைகள் உண்மையாக இருக்குமானால், கர்த்தர் தம்மையே தியாக பலியாகத் தந்தது அவர்களுக்கு எவ்வித பலனுமளிக்காது. அப்படிப்பட்டவர்கள் இன்னும் விழுந்துபோன சாபத்திற்குள்ளான நிலையிலேயே பரிதவிக்க வேண்டியிருக்கும். அல்லது பரலோகத் தந்தை நேரடியாக நம் பாவங்களை மன்னித்திருந்தால் கிறிஸ்துவின் மரணம் மதிப்பற்றதாயும், பயனற்றதாயும் இருந்திருக்கும். அவரது பலியினால் எதனையும் நிறைவேற்றவில்லை என்ற நிலை உருவாகியிருக்கும்.

தேவன் நீதியுள்ளவர் என்று அனைவரும் அங்கீகரிக்கின்றனர். அவ்வாறு நீதியுள்ளவராக இருந்தால், சாபத்தால் வீழ்ச்சியடைந்திருக்கும் மனிதனை வரம்பு மீறி தண்டிக்க மாட்டார். அந்த தண்டனை ஆறாயிரம் வருடத்திற்கு முன்னால் நீதியாக இருந்திருக்குமேயானால், அது இப்போதும் நீதியானதாக இருக்கிறது. வரக்கூடிய காலங்களிலும் இது நீதியானதாகவே இருக்கும். மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்த தண்டனை கடுமையாய் இருப்பதினிமித்தம் பாவியை இன்னும் தண்டனைக்குள்ளாக்காமல் மன்னித்திருந்தாரானால் தண்டனை கொடுக்கும் சமயத்திலோ அல்லது மன்னிப்பளிக்கும் போதோ தேவன் நீதியற்றவராக எண்ணப்படுவார். ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் மனுக்குலத்தை பாவத்தினால் ஜீவனிலிருந்து வீழ்ந்து போகச் செய்வது தேவநீதியின்படி சரியாயிருந்தால், ஈட்டுக்கிரய பலி செலுத்தப்படாமல் தண்டனைத் தீர்ப்புக்குட்பட்டவர்களை விடுவித்து ஜீவனை அளிப்பது மிகத் தவறானதாகும். எனவே தேவநீதியின்படி தண்டனைத் தீர்ப்பிலிருந்து மனுக்குலத்தை விடுவிக்க வேண்டுமானால், மனித சாயலிலுள்ள மாசு மருவற்ற ஒருவர், மனப்பூர்வமாக தன்னையே தியாக பலியாக ஈட்டுக்கிரயம் செலுத்தி தண்டனையை நீக்குவதன் மூலம் சரிக்கட்டப்பட வேண்டும்.

> “உறுதியாக அடித்தளமிடப்பட்ட மலைகள் போல்,
> அசையாது தேவநீதி என்றென்றும் நிலைத்து நிற்கும்.”

தேவனுடைய வாக்குத்தத்தங்களின் பேரில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் அவர் செய்து வருகிற அனைத்து

செயல்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைவது அவரது நீதியே. வேதாகமம் தீர்மானமாக உரைக்கிறபடி, அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (யாக். 1:17)அப்படி அவர் மாறக் கூடியவராயிருந்து, ஆதாமின் காலத்தில் கொடுக்கப்பட்ட மரண தண்டனையை ஆறாயிரம் ஆண்டுகளுக்குப்பின், தனது முடிவை மாற்றி, நீக்குவாரானால், இன்னும் ஏறக்குறைய ஆறாயிறம் ஆண்டுகளுக்குப் பிறகு, நமது பாவத்தை மன்னித்து மரண தண்டனையி-ருந்து நம்மை விடுவித்த தனது முடிவை மாற்ற மாட்டர் என்று எப்படி நம்ப முடியும்? தேவனுடைய கிருபையினாலே கிறிஸ்து நமக்காக மரித்து தேவ நீதியை நிறைவேற்றி நித்திய ஜீவன் பெற வகை செய்தார் என்கிற மாபெரும்உண்மையைத் தவிர பாவ சந்ததியில் பிறந்தவருக்கு வேறு ஆதாரம் ஏதுமில்லை.

ஆகவே யேகோவா தேவனை பொறுத்தவரை நாம் அவரது கிருபையினால் கிறிஸ்துவின் மூலம் பாவ மன்னிப்புப் பெற்றோம். கர்த்தராகிய கிறிஸ்து இயேசு நம்மை விலைக்கு வாங்கியதால் உண்டான உறவை பொறுத்தவரை, அவர் மூலமாக தந்தையிடம் வந்து சேர்பவர்களை அவர் எவ்வித முன் நிபந்தனையுமின்றி, இலவசமாக மன்னித்து வருகிறார். விசுவாசிக்கிற நம்மைப் பொறுத்த வரையில், தேவத் திட்டமே முழு வெற்றி பெற்று வருகிறது என்பது கண்கூடான உண்மை. தேவன் நம்மிடத்தில் ஈட்டுக்கிரயம் ஏதும் எதிர்பார்க்காமல் நம் பாவங்களை மன்னித்திருக்கிறார். அதற்காக அவர் நம்மிடம் எதிர்பார்த்ததெல்லாம் தேவனோடு வழக்காடக் கூடிய சத்திய அறிவை நாம் பெறவேண்டும் என்பதும், நமது பாவங்கள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும், உறைந்த மழையைப் போல் எப்படி வெண்மையானது என்பதையும், தேவன் நம்மை நீதிமானக்குவதிலும் விடுவிப்பதிலும் எப்படி நீதிபரராயிருக்கிறார் என்பதையும் நாம் காண வேண்டும் என்பதுமேயாகும். இவ்வாறாக தேவன் நமக்கு விசுவாசம், நம்பிக்கை என்கிற உறுதியான அஸ்திவாரத்தை வழங்கியிருக்கிறார்.

## *மரணம் மனிதனின் கடனை தள்ளுபடி செய்யாதா?*

*பாவத்தின் சம்பளம் மரணம் - நித்தியத்திற்கும் எரிகின்ற எரிநரகமல்ல என்று ஒப்புக்கொண்டவுடன் பெரிய எதிரியின் தூண்டுகோலால் அநேகர் இந்த காரியத்தை குறித்து தவறான விவாதத்திற்கு செல்ல ஏதுவிருக்கிறது. அந்த தவறான விவாதம் என்னவென்றால், பாவத்தின் சம்பளம் மரணம் என்று சொல்வோமேயாகில், மரணம் சம்பவிக்கும்போது ஒவ்வொருவரும் தங்கள் பாவத்திற்கான தண்டனையை செலுத்தி விடுகிறார்கள் என்பதாகும். இக்கருத்தின் விளைவாக அவ்வாறு மரித்தபிறகு, மீட்பர் என்று ஒருவரோ, மீட்கும் பொருளோ அவசியமில்லை என்பதாகும். ஒவ்வொருவனும் தனக்குத்தானே ஈட்டுக்கிரய பலி செலுத்திக் கொள்கிறான். தனக்காக அபராதத்தை தானே செலுத்தி தன்னை மீட்டுக் கொள்கிறான் என்று வாதிடுகின்றனர். அவர்களின் கூற்றுப்படி மனிதனின் மரணத்திற்குப் பிறகு தேவநீதியை செயல்படுத்த எந்த உரிமையுமில்லை. ஏனெனில் தேவநீதி மனிதனின் அழிவில் திருப்தியடைந்திருக்கிறது. இதனால் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இரண்டாம் கட்ட நடவடிக்கை என்று இவர்கள் வாதிடுகின்றனர். மனிதன் தனக்குத்தானே மரணத்தின் மூலம் மீட்கும் பொருளை பலியாகச் செலுத்திவிடுவதால், மற்றும் ஒரு மீட்கும் பொருள் அநீதியாக எண்ணப்படுகிறது. இதனால் சாபத்தீர்ப்பான தண்டனைக்கு இரண்டு ஈட்டுக்கிரய அபராதங்கள் செலுத்தப்பட வேண்டும் என்ற தவறான கருத்தும் எழுகிறது.*

மேற்கண்ட கோட்பாடு பகுத்தறிவிற்கு பொருந்துகிறதோ இல்லையோ வேதாகமம் கூறுகின்ற கருத்துக்கு நேர் முரணானது, ஊறு விளைப்பது. வேதாகமம் மனுக்குலத்தை மீட்க இரட்சகர் அவசியமென்றும், அவர் கொடுக்கின்ற மீட்கும் பொருளின் மூலமாகவே ஆதாமின் பாவத்திலிருந்து நம்மால் விடுதலை பெற முடியுமென்றும், அதன் மூலமாகவே நித்திய ஜீவன் பெறக்கூடிய உரிமையைப் பெறுகிறோம் என்றும் தீர்மானமாக உரைக்கின்றது. இதற்கான ஆதார வசனங்களை நாம் ஏற்கனவே ஆராய்ந்திருக்கிறோம். எண்ணிடலங்கா அவ்வசனங்களை திரும்பவும் எடுத்துக்கூற வேண்டிய அவசியமிருக்காது. எனவே வேதத்திற்கு ஒவ்வாத அக்கருத்தினை பெரிதுபடுத்துவதை விட்டு

விட்டு, வேதத்திற்கிசைந்த, பகுத்தறிவோடு கூடிய சிந்தனையை செலுத்தி, வேதமே சத்தியம் என்பதை நிரூபிப்போம். மனுக்குல சந்ததி பாவத்திலிருந்து விடுபட இயேசு தன்னையே மீட்கும் பொருளாக விலைக்கிரயம் தந்தது அவசியமென்றும், அவர் தேவ நீதியை வெற்றிகரமாக நிறைவேற்றினார் என்றும், தேவன் நீதியுள்ளவர், இயேசுவை தங்கள் சொந்த மீட்பராக ஏற்று விசுவாசிக்கிறவர்களை நீதிமான்களாக்குகிறவர் என்றும் நிரூபிப்போம்.

கர்த்தர் ஆதாமுக்கு கொடுத்த தண்டனை, அவன் மெல்ல மெல்ல மரணமடைய வேண்டும் என்பது மட்டுமா? பாவம் செய்ததினால் ஆதாமும் மனுக்குலம் முழுவதையும், அணு அணுவாக சோதனைகளை அனுபவங்களாகப் பெறவேண்டும் என்பது மட்டும் தேவதிட்டமா? இது மட்டும் சாபமல்ல. உண்மையாகவே முழு மரணமே ஆதாமினால் மனுக்குலத்திற்கு ஏற்பட்ட தண்டனை. மேலும் மரணம் என்பது ஜீவனற்ற உணர்வற்ற, முற்றிலும் அழிக்கப்பட்ட நிலையாகும். எனவே ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்க வேண்டிய தண்டனை என்னவெனில், மரணத்தில், இனி என்றென்றும் ஜீவனே இல்லாத நிலையில் தரித்திருப்பது ஆகும். “பாவம் செய்கிற ஆத்துமா சாகும்” என்று நாம் முன்னரே பார்த்தபடி, ஆத்துமாவின் அழிவு என்பது கொடுக்கப்பட்ட தீர்ப்பின்படி நித்தியத்திற்கும் தொடர வேண்டியதாயிற்று. இதற்கு ஒரேயொரு தீர்வு நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீட்கும் பொருளாக தம்மையே பலியாக்குதலேயாகும். எனவே இவர் தந்த மீட்பின் பொருட்டே, மனிதனுக்கு மரணம் ஒரு முடிவல்ல, அவன் உறக்கத்திலிருக்கிறான் என்று சொல்லப்பட்டது. நமது கர்த்தராகிய இயேசுவினால் நிறைவேற்றப்பட்ட தேவ நீதியால் உண்டான மீட்பின் முழு பலனாகிய மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் ஏற்றவேளையில் நடைபெறும். நாம் பார்த்தபடி, இது மீட்புக்காக கொடுக்கப்பட்டதில்லையா? இல்லையென்றால் ஆதாமிய மரணம் இரண்டாம் மரணமாக இருந்திருக்க வேண்டும். ஆதாவது “கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய

தண்டனையாக" இருந்திருக்க வேண்டும். இவ்வாறு மீட்பின் நிபந்தனைகளைக் குறித்த இப்பாடம் தெளிவாக அறியப்பட்டவுடன், பகுத்தறிவுள்ள ஒருவருக்கு மேலும் ஐயப்பாடு எழ வாய்ப்பில்லை. பாவத்தினைப் போக்குவதற்காக செலுத்தப்பட்ட இயேசுவின் ஈடுபலியாகிய அபராதத் தொகை, ஒரு மனிதனை முற்றிலும் விலைக்கிரயமாக்கிக் கொண்டது. இனி பாவத்திற்கான தண்டனையைப் போக்கும் பொருட்டு, கூடுதலாக யாதொரு துன்பத்தையோ, இன்பத்தையோ அனுபவிக்க அவசியமில்லை. இந்த நிலைப்பாட்டில் நாம் சிந்திக்கும்போது,தெய்வீக தீர்ப்புக்குட்பட்டு சாபத்தின் பிடியி-ருக்கும் மனுக்குலத்தின் கடுமையான நிலைமை புரியவருகிறது. அதோடுகூட, மீட்கும் பொருள் மனுக்குலத்திற்கு மிகமிக அவசியமானது என்றும் அறிந்து, தேவ அன்பை வியந்து போற்றுகிறோம். நமது கர்த்தராகிய இயேசு நமது மீட்பராக மீட்கும் பொருளை கொடுத்து நமக்காகத் தன்னையே பலியாக்கியதின் பொருள் என்னவெனில், நமக்கு கொடுக்கப்பட்ட ஆரம்ப தண்டனையை நிறைவேற்றினார். அதாவது "நித்திய அழிவாகிய தண்டனையை, மரணத்தை நிறைவேற்றினார்." இது முதற்கொண்டு கிறிஸ்து மாம்ச சரீர நிலையில் காணப்பட மாட்டார். நம் பொருட்டு விலைக்கிரயம் தருவதற்காகவே மாம்ச சாயலை, மனித ரூபத்தினை அவர் எடுக்க வேண்டியிருந்தது. மேலும் விலைக்கிரமாக தன் உடலையே தியாகம் செய்தார். அவ்வாறு தியாகம் செய்த மாம்ச சரீரத்தினை மீண்டும் பெறாததால் மனுக்குலத்திற்காகக் கொடுக்கப்பட்ட விலைக்கிரயம் மீண்டுமாக திரும்பப் பெறப்படவில்லை என்பது அத்தாட்சியாகிறது. புதிய உடன்படிக்கையின் நிபந்தனையின்படி அனைத்து மனுக்குலத்திற்கும் இந்த ஈட்டுக்கிரயப்பலியின் மூலம் கிடைக்கப் பெற்ற ஆசீர்வாதங்கள் சென்றடைகிறது. நமது அருமை மீட்பர் பரிபூரண மனித நிலையில் மனுக்குலத்தின் உரிமைகள், பரிபூரணத் தன்மை ஆகியவற்றிற்கு முழுச் சொந்தக்காரர் ஆகிவிட்டபடியால், ஆதாம் தனது கீழ்ப்படியாமையினால் இழந்து போன அத்தனை உரிமை சலுகைகளையும் திரும்பவும் பெற்றிருக்கிறார். எனவே தெய்வீக சட்ட திட்டங்களுக்குட்பட்டு யார் யார் அவரை

விசுவாசிக்கிறார்களோ அத்தனை பேருக்கும் இந்த ஆசீர்வாதங்கள் மறுசீரமைக்கும் காலங்களில் அதாவது, "உலகத் தோற்ற முதல் தம்முடைய பரிசுத்த தீர்க்க தரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் காலங்களில்" கிடைக்கப்பெறுகிறது. (அப். 3:19-21)

## "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும்"

"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." - 1 தீமோ 2:4

மீட்கும் பொருளைக் குறித்து மற்றொரு தப்பறையான கருத்து சிலரது வழியை நெருக்குகிறது. அநேகர் எவ்வித வேத ஆதாரமுமின்றி, மனிதர்கள் கூறிய தப்பறையான கருத்துக்களை நம்பி ஏற்றுக் கொண்டதன் விளைவாகவே பாவத்தின் சம்பளம் நித்தியத்துக்கும் வெந்து எரிகின்ற நரகம் என்றும், இருதயத்தில் தூய்மையுள்ளவர்களும், சிறுமந்தையாகிய தெரிந்து கொள்ளப்பட்ட திருச்சபையார் மட்டும் இந்த நியதியிலிருந்து விடுபட்டவர்கள் என்றும் கூறுகிற போதனைகளை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் தற்போது அந்த போதனைகளிலிருந்து விடுபட்டு, அதற்கு நேரெதிரான போதனையாகிய அகில உலகத்திற்கும் நித்திய நித்தியத்திற்கும் இரட்சிப்பு ஏற்படும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட போதனைகளை ஏற்றுக் கொண்டனர்.

பெரும்பான்மையானோர், அனைத்துலக மாந்தருக்கும் இரட்சிப்பு கிடைக்கும் என்ற தவறான நம்பிக்கை கொண்டவர்கள் ஈடுபலியை முற்றிலுமாக மறுக்கிறார்கள். ஒருசிலர் மட்டுமே மீட்கும் பொருளாகிய ஈடுபலியின்மேல் விசுவாசம் கொண்டுள்ளனர். ஆனாலும் இந்த வகுப்பார் ஈடுபலியின் செயல் தன்மைகளைப் பகுத்து புரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர். இந்த வகுப்பார், மேற்குறிப்பிட்ட வசனத்தை விடாப்பிடியாய் பிடித்துக் கொண்டு, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவது தேவ சித்தமாயிருப்பதால் நிச்சயமாக அதை நிறைவேற்றுவார்; ஏனெனில், பரலோகத்தில் அவர் சித்தம் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படும் காலம் வந்து கொண்டிருக்கிறது என்று திருப்திப்பட்டுக் கொள்கின்றனர். இன்னும் அவர்களின் கூற்றுப்படி, கிறிஸ்து இயேசு எல்லோருக்குமாக

செலுத்திய மீட்கும் பொருளானது, எல்லாரையும் இரட்சிப்பதற்கான தேவ சித்தத்தை பாதுகாத்துக் கொள்ளவே என்றும் நிதானிக்கின்றனர். அவர்கள் தங்களுக்கென ஒரு தப்பறையை பாதுகாப்பு என்றெண்ணி இயேசு கிறிஸ்துவின் விலைக் கிரயத்தை தேவன் ஏற்றுக் கொண்டபடியால், பாவிகளை மீட்பதற்கான தமது நீதியை நிறைவேற்ற வேண்டிய நியதிக்கு கட்டுப்பட்டிருக்கிறார்; இதனால் ஏதேனில் இழந்து போன நித்திய ஜீவனை மனக்குலத்திற்குத் தந்தாக வேண்டும் என்கின்றனர். அவர்களது கருத்தை நாம் முடிந்த அளவு எடுத்துரைப்பதன் நோக்கம் என்னவெனில், இதற்கெல்லாம் எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி சரியான பதிலை பெறுவார்கள் என்பதற்காகவே ஆகும்.

அவர்களது காரண காரியங்கள் புரிந்து கொள்ள முடியாதவைகள். இக்கருத்துக்கு ஆதரவாக ஒரு சில வசனங்களை அவர்கள் எடுத்துப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இதனை ஆணித்தரமாக மறுப்பதற்கு எண்ணிலடங்கா வசனங்கள் உள்ளன. இவ்வசனங்களைப் படித்து ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் தான் உண்மையை உணர்ந்து சரியான தீர்மானத்தை எட்டமுடியும். வேதாகமத்தில் ஒரு சில வசனங்கள் கூறும் கூற்றின் ஒரு பகுதியை மட்டுமே நோக்காமல், மறுபக்கத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது அவர்களது கருத்து தவறானது என்று அறியலாம். அதோடு சில வசனங்கள் அந்த கருத்துரைகளுக்கு ஏற்றாற்போல் இருப்பதாக அவர்களால் யூகிக்கப்படுகிறது.

நமது பரமபிதா தீர்மானமாக உரைக்கிறபடி, “மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள் சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.” (எசேக். 18:32) சாபத்திற்குள்ளான மனுக்குலத்திற்கு தேவன் தயை காண்பித்து, அதற்கு ஈடாக தன் குமாரனைக் கொண்டு ஈடுபலி செலுத்தச் செய்தது புதிதாக நடைபெற்ற காரியமல்ல. அவர் அதனை முன்கூட்டியே தீர்மானித்திருந்தார். தேவன் மாறாதவர்; தமது சிருஷ்டிகளுக்கு எப்பொழுதும் நன்மை செய்யவே விரும்புகிறவர்; அவர்களை ஒழுக்கத்திலும், பகுத்தறிவிலும் பூரணர்களாக ஒரு இயந்திரம் போல நடமாடுபவர்களாக அவர் படைத்திருக்கலாம். அவர்களது விருப்பப்படி செய்ய முடியாமல் தேவன் அவர்களை

உருவாக்கியிருக்கலாம். ஆனால் தேவன் அவ்வாறு செய்யாமல் தமது சாயலாகவும், ரூபத்தின்படியேயும் அவனை சிருஷ்டித்தார். நன்மையையோ தீமையையோ தெரிந்தெடுத்து நடக்கக்கூடிய முழுமன சுதந்திரத்துடன் நடமாட வேண்டுமென்று அவனை அவ்வாறு சிருஷ்டித்தார். தம்மை யார் என்று உணர்ந்து வழிபட வேண்டுமென்று அவர் விரும்புகிறார். மன சுதந்திரமில்லாமல் தமது கட்டுப்பாட்டினால் அவனைக் கொண்டு வந்து, வற்புறுத்தி தமக்கு வழிபாடு செய்வதை தேவன் விரும்புவதில்லை. மாறாக தாமாக முன்வந்து, முழுமன சுதந்திரத்துடன் "....தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார்." (யோவா. 4:23, 24) அன்பினாலும் அவரது நீதியான கொள்கைகளை பாராட்டுவதினாலும் அவரை மனமுவந்து தொழவேண்டும் என்பதையே விரும்புகிறார்.

தேவன் ஆதியில் ஆதாமை அழைத்து நன்மை தீமை அறியத்தக்க கனியை உண்ணவேண்டாம் என்று கட்டளையிட்ட காலங்களில், ஆதாமோடு நேசமாயிருந்து, தமது நன்மையினால் நிரப்பியிருந்தார். ஆதாம் தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையை மீறினபோதோ மீறுதலுக்கான தண்டனையாகிய மரணத் தீர்ப்பை தயங்காமல் நிறைவேற்றினார். மரிக்கிறவனுடைய மரணத்தை தேவன் விரும்பாதபோதிலும், இத்தண்டனையை ஆறாயிரம் வருடங்களாக நிறைவேற்றி வருகிறார். தற்பொழுது கிறிஸ்து இயேசுவைக் கொண்டு ஈட்டுக்கிரய பலியை நிறைவேற்றியதால் மனுக்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் தம்மோடு ஒப்புரவாகும் வாய்ப்பை ஏற்பாடு செய்திருக்கிறார். இதன் மூலம் நித்திய ஜீவன் பெறக்கூடிய தகுதியை ஒருவர் அடைய முடியும். அவ்வாறு ஒருவர் நித்திய ஜீவன் பெற வேண்டுமானால், அதற்குரிய நிபந்தனைகளையும் தேவன் விதித்திருக்கிறார். புது உடன்படிக்கையின் நிபந்தனையானது, தேவநீதியை ஏற்று கீழ்ப்படிவதனால் உண்டாகும் புது இருதயமும், முறையான ஆவியுமே. இப்புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளை இவ்வுடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் துணையுடன் மட்டுமே நிறைவேற்ற முடியும். தேவனுடைய

குமாரனை உடையவன் ஜீவனை பெற்றுக் கொள்வான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவகோபம் அவன் மேல் தங்கும் (யோவா. 3:36) என்று வேதம் தீர்மானமாய் உரைக்கின்றது.

மரிக்கிறவனுடைய மரணத்தைக் காண தேவன் விரும்புகிறதில்லை. இக்கருத்துக்கிசைவாக புதிய ஏற்பாட்டின் வாக்கியங்கள், எல்லா மனிதரும் இரட்சிப்படைய வேண்டுமென்பதும் அனைவரும் சத்தியத்தை அறிகிற அறிவைப் பெற வேண்டுமென்பதுமே அவர் சித்தம் என்கிறது. வேதாகமம் சொல்லுகிறபடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் வைத்திருக்கின்ற கிருபையை மறுதலிக்கின்றவர்கள் தேவ தயவை இழந்து பரிதாபமாக இரண்டாம் மரணத்தில் அழிக்கப்பட்டுப் போவார்கள். நீதிக்கு பதிலாக பாவத்தைத் தெரிந்து கொண்டதால், பாவத்தின் சம்பளம் இந்த இரண்டாம் மரணமே.

நாம் பார்க்கின்ற வசனம் குறிப்பிடுகிறதாவது: ஆதாமின் பாவத்தில் விழுந்துபோன மனுக்குல சந்ததியார், தங்கள் அறியாமை என்கிற இருளிலிருந்தும், குருடராயிருக்கிற நிலையிலிருந்தும் விடுபட்டு, இரட்சிப்படைய வேண்டுமென்பதே தேவ சித்தம். இம்மனுக்குலத்திற்கு நித்திய நித்தியத்திற்குமான இரட்சிப்புக் கிடைக்கும் என்பதற்கான ஆதாரமேதுமில்லை என்ற போதிலும் ஆதாமின் விழுந்துபோன நிலையிலிருந்து மீண்டு வருவதே ஆசீர்வாதமாகிறது. மனுக்குலத்தின் தந்தையாகிய ஆதாம் ஏதேனில் இருந்தபோது நித்திய ஜீவனைப் பெற்றிருந்தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அவ்வேளையில் பூரண மனித சுபாவத்தையும் பெற்றிருந்தான். மரணத் தளைகள் ஏதும் அவனை அப்போது அரவணைக்கவில்லை. தமக்குக் கீழ்ப்படிகிறானா என சோதிப்பதற்காவே அவனை அங்கு வைத்திருந்தார். தனது குணநலன்களை இன்னும் பூரணமாக்கிக் கொண்டு நித்திய ஜீவனுக்குத் தகுதியுள்ளவனாக தேவனுக்கு இசைவானவனாக ஜீவிக்கவே தேவன் அனுமதித்திருந்தார். மேலும் ஆதாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் சேர்த்து ஈட்டுக்கிரய பலி செலுத்தி, மரணச் சாபத்திலிருந்து அவர்களை மீட்டுக்கொண்ட போதிலும் இப்பலி செலுத்தப்பட்டதினால் மட்டும் அவர்கள் நித்திய ஜீவனை அடைந்து

விட முடியாது. அவ்விலைக் கிரயத்தின் மூலம் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு தகுதியுள்ளவர்கள் தானா என பரீட்சிக்கப்படுவதற்கு, புதிய சோதனைக்கு சாதகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆதாமும் அவன் சந்ததியாரும் இனி புதிதாகப் பரீட்சிக்கப்படுவது ஆதியிலே ஆதாம் சோதிக்கப்பட்டதைக் காட்டிலும் அதிக நன்மை பயக்கக்கூடியதாகவும், தேவ தயவை பெறக்கூடியதாகவும் இருக்கும். ஏனெனில் அறிவு திறன் வளர்ச்சி யடைந்திருக்கிறது. மனிதன் பாவநிறைவின் பூதாகார நிலையை அறியவும், நீதியின் ஆசீர்வாதத்தை அறியவும், கிறிஸ்துவுக்குள் தேவ கிருபையை அறியவும் சந்தர்ப்பம் பெற்றிருக்கிறான். நித்திய ஜீவனடைவதற்கான பரீட்சை ஆயிர வருட அரசாட்சியில் மனுக்குலம் முழுவதற்கும் நடைபெறும் போது, இந்த சத்திய அறிவைப் பெறும் வாய்ப்பு வழங்கப்படும். இதனைப் பயன்படுத்தி கீழ்ப்படிதலைக் காட்டுவோர் ஜீவன் பெறுவர். இந்த ஆயிர வருட அரசாட்சியின் போது தான் வெண்ணிற சிங்காசனத்திற்கு முன் மனுக்குலம் முழுமையும் நித்திய ஜீவன் பெறுவதற்கான நியாயத் தீர்ப்படைய பரீட்சைக்குள்ளாக்கப்படுவர். - வெளி. 20:4

தேவசித்தப்படி எல்லா மனுஷரும் ஆதாமின் சாபத்தி-ருந்து நீங்கப் பெற்று இரட்சிப்படைய சத்தியத்தை அறிகிற அறிவின் மூலமாக வாய்ப்பளிக்கப்படுகிறது. இதற்காகவே மனிதனாக வந்த இயேசு கிறிஸ்துவை தமக்கும், மனிதருக்குமிடையே மத்தியஸ்தராக தேவன் ஏற்படுத்தினார். அவர் எல்லோரும் மீட்படைய மீட்கும் பொருளைச் செலுத்தினார். இதற்கான சாட்சியங்கள் ஏற்ற காலங்களில் வெளியாக்கப்படும்.

ஆதாமின் மூலமாக ஏற்பட்ட தண்டனைத் தீர்ப்பி-ருந்து "எல்லா மனுஷரும் இரட்சிப்படைய வேண்டும்" என்பதே தேவ சித்தம் என்ற வேத வாக்கியத்திற்கிணையான இன்னொரு வசனம், அப்.பவு-ன் மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. "...இந்தப் பிரகாரம் இஸ்ரயேல் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள்." - ரோம. 11:26 மேற்கண்ட வசனத்தில், அனைத்து இஸ்ரயேலர்களும் நித்திய இரட்சிப்படைவார்கள் என்ற பொருளில் கூறப்படாமல், அவர்களது அறியாமை இருளிலிருந்து நீக்கப்பட்டு காக்கப்படுவர் என்பதாகும்.

*ஏனெனில், தேவ ஜனங்கள் என்கிற அந்தஸ்திலிருந்த அவர்கள் தங்கள் மேசியாவை மறுதளித்ததின் நிமித்தமாகவே இந்த அறியாமை வந்தது. எல்லா மனுஷரும் இரட்சிப்படைய வேண்டுமென்ற இந்தப் பாடமானது, ஆதாமின் வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களைக் குறித்து மட்டும் பேசுகிறது. எல்லா மனிதரும் தேவனுடைய தண்டனைத் தீர்ப்பி-ருந்து இரட்சிப்படைவதோடு மட்டுமல்லாமல், சாத்தானால் குருடாக்கப்பட்ட இவர்களது மனக்கண்கள் மீண்டும் திறக்கப்பட்டு, அறியாமை என்னும் இருளி-ருந்து விடுபட வேண்டும் என்பதே தேவசித்தம்.*

*“தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.” ( 2 கொரிந். 4:4)*

*ஆதாமின் பாவம், சாபத்தால் வந்த அனைத்து தொடர்ச்சியான தீமைகளிலிருந்து அனைவரும் சத்தியத்தை அறிகிற அறிவின் மூலம் மீட்கப்பட வேண்டும் என்பதே தேவசித்தம். ஏன் இவ்வாறு அவர் சித்தம் கொண்டிருக்கிறார்? மீட்பரின் மீட்கும் பொருளாகிய ஈட்டுக்கிரய பலியினால் சம்பாதித்த நித்திய ஜீவனை அடைய வழிநடத்தப்படும்போது அந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும், அதன் மூலமாக தங்கள் ஜீவனை ஆதாயப்படுத்திக் கொள்ளவுமே சத்தியத்தை நன்கு நிதானித்தறிய வேண்டுமென அவர் விரும்புகிறார். இந்நோக்கத்தினை செயல்படுத்துவதற்காகவே ஆயிர வருட அரசாட்சியை உபயோகிக்கிறார். அந்த ஆயிர வருட அரசாட்சிக்கு முன்பாக சாத்தான் கட்டப்படுவான். (வெளியரங்கமாக தீமைகள் அனைத்தும் அடக்கப்பட்ட) பிறகு மனிதனை அறியாமையிலிருந்து மீட்கும் பணி ஆரம்பமாகும். இதனைக் குறித்து, “அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்” (ஏசா 35:5) என எழுதப்பட்டுள்ளது. சாத்தான் கட்டப்பட்டிருப்பதாலும், இப்பரீட்சையில் எளிதாக ஜெயிக்க தேவதயவு அபரிமிதமாக அளிக்கப்படுவதாலும், மனிதன் எளிதில் வெற்றிபெற ஏதுவாகும். தெய்வீக ஏற்பாட்டின்படி இப்பணியானது படிப்படியாக நிறைவேற்றப்பட்டு முழுமை பெற ஆயிரம் வருடம் அவசியமாகிறது.*

## தேவ நீதி, மீட்கும் பொருளால் எவ்வகையிலும் கட்டுண்டிருக்கவில்லை

இன்னொரு தவறான கருத்து என்னவெனில், தேவன் தமது நீதியின் மூலம் ஒவ்வொரு மனிதனையும் மறுசீரமைத்து மீட்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறார் என்பதாகும். தேவன் எந்தக்கடமை ஆற்றவும் கட்டுப்பட்டவரல்லர். இம்மனுக்குல சந்ததியாரை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தேவன் விலைக்கு விற்றுப்போட்டார். நாம் முன்னரே பார்த்தபடி நமது கர்த்தர், "தமது சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மூலம் நம்மை மீட்டுக் கொண்டார்." மனுக்குலத்தைப் பொறுத்த மட்டில் தேவன் எவ்வித தனிப்பட்ட பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. அவர் தாமே நேரடியாக மனுக்குலத்தோட தொடர்பு கொள்வதுமில்லை. அவர்களை தாமே நியாயம் தீர்க்க உத்தேசிக்கவுமில்லை. அவர்கள் நித்திய ஜீவன் பெற தகுதியுடைவர்களா என்று பார்ப்பதுமில்லை. இதற்கு மாறாக, இப்பொறுப்புக்கள் அனைத்தையும் தமது குமாரனிடத்தில் ஒப்படைத்திருப்பதாக நாம் நிச்சயித்திருக்கிறோம். இம்மனுக்குலத்திற்கான விலைக்கிரயத்தை அவர் கொடுத்து விலைக்கு வாங்கி விட்டபடியால், இந்த சந்ததிக்கு அவரே கர்த்தராகவும், குருவாகவும் கட்டுப்படுத்துகிறவராகவும், அதிபராகவும், தீர்க்கதரிசியாகவும், பிரதான ஆசாரியராகவும், அரசராகவும் இருக்கிறார். தேவ திட்டத்திற்கு இசைவாக இச்சுவிசேஷ யுகத்தில், தெரிந்து கொள்ளப்பட்ட திருச்சபையாரை உலகத்தை மறுசீர்ப்படுத்தி கீழ்ப்படிகின்ற மனுக்குலத்தை ஆசீர்வதிக்க அடையாளம் காணவும் ஏற்பாடு செய்திருக்கிறார்.

இம்மனுக்குலத்தை முழுமையாக தமது குமாரனிடத்தில் வழிநடத்த ஒப்புவித்ததால், தேவன் இம்மனுக்குலத்தின் மீது ஆர்வமில்லாதிருக்கிறார் என்று தவறாகக் கருதிவிடக் கூடாது. அவர் தமது பிரமாணத்தின் தேவைகளை சந்திக்க கிறிஸ்து இயேசுவுக்குள், தமது தீர்மானத்தின்படி இவ்வாறு ஏற்பாடு செய்திருக்கிறார். தெய்வீக விதிமுறைகள் மாறாதவைகள். மேலும் பாவ சம்பந்தமான, அபூரணத் தன்மையுள்ள எவற்றையும் அவை ஊக்குவிப்பதில்லை. ஏனெனில் அந்த பிரமாணங்கள் பரிபூரண ஜீவிகளுக்காகவே

ஏற்படுத்தப்பட்டன. நமது பரலோக தந்தை அபூரணத் தன்மையுள்ள எவற்றையும் சிருஷ்டிக்கவில்லை. தாம் படைத்து முடித்த பின்னர், மனிதன் தேவனுக்கு விரோதமாக கீழ்ப்படியாமற் போன பிறகே அபூரணத் தன்மை அவனை ஆட்கொண்டது. தேவன் மனுக்குலத்திற்குப் பாவத்தை அனுமதித்த பிறகு, அபூரண நிலையிலுள்ள மனிதனோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தாரேயானால் கீழ்க்கண்டவாறு பொருள் காண நேர்ந்திருக்கும். 1. அனைவரும் அபூரணர்கள், தகுதியற்றவர்கள் என்று உடனடியாக தீர்ப்பிட்டு அதனை நிறைவேற்ற நேர்ந்திருக்கும் அல்லது 2. மனிதனின் தவறுகளிலிருந்து அவனை தண்டிக்க தேவன் தவறிவிட்டார் என்ற கருத்துக்கு இடம் வகுக்கும். இது அவரது சாம்ராஜ்யத்தின் பிரமாணத்தை மீறுவதாயிருக்கும். எனவே மனிதனுடைய நன்மைக்காகவும், தமது நீதிக்கு களங்கமேற்படாமல் அதனைக் காத்துக் கொள்ளவும், பரலோக தந்தை முழு மனுக்குலத்தையும் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் கைகளில் ஒப்படைத்தார். இயேசு கிறிஸ்து இம்மனுக்குலத்தோடு தொடர்பு கொண்டு பூரண நிலையை அடைய தேடுகின்ற அபூரண நிலையிலுள்ளவர்களை நீதியின்படி தண்டிக்காமல், அவர்கள் மேல் கருணை காட்டி, படிப்படியாக அவர்களது அபூரணத்தன்மையைப் போக்கி, இந்த ஆயிர வருட யுக முடிவுக்குள் அவர்களை பரிபூரண நிலைக்கு கொண்டு வரும் பணியைச் செய்வார். அவ்வாறு இம்மாபெரும் தீர்க்கதரிசிக்குக் கீழ்ப்படிந்து பூரணமாக்கப்பட்டவர்களை மத்தியஸ்தம் செய்து பிதாவின் கைகளில் ஒப்படைப்பார். அவ்வாறு கிறிஸ்துவின் மூலம் பூரண நிலைக்கு உயர்த்தப்பட்டவர்கள், தெய்வீகத் தரத்திற்கொத்த நிலையிலிருப்பதால் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுவர். கீழ்ப்படிய மறுப்பவர்கள் இரண்டாம் மரணத்தின் மூலம் அறுப்புண்டு போவர். (அப்.3:23) இதன் மூலம் நாம் அறிந்து கொள்கிற உண்மை என்னவெனில், கடந்த காலத்தில் நாம் செய்த பாவங்கள் கழுவப்பட்டிருந்தாலும், தற்போதையஅபூரணத் தன்மையால் பிதாவின் நீதிமன்றத்தின் முன் நியாயத் தீர்ப்பை எதிர்நோக்கி நிற்கும்போது மரணத் தீர்ப்பினை சந்திக்க நேரிடும். இதைக் குறித்து அப்போஸ்தலர் சிறிய விஷயங்களில் கூட நாம்

*கிறிஸ்துவுக்குள் பெறவிருக்கும் தயையிலிருந்து விலகி விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தி,*

*"ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கர மாயிருக்குமே" (எபி. 10:31) என்று எச்சரிக்கிறார்.*

*தெய்வீக ஏற்பாட்டின்படி பாவிகளுக்கு கிறிஸ்துவின் வழியாகவே மத்தியஸ்தராகிய அவரது ஒப்புரவாக்குதலின் பணிக்குட்பட்டு, மறுசீரமைப்புக்குள்ளாதலே தேவ கிருபையாக அளிக்கப்படுகிறது. இதைத் தவிர வேறு எவ்வித மார்க்கத்திலும் பாவிக்கு கருணை காட்டப்படுவதில்லை. இந்த தெய்வீகப் பாதுகாப்பிற்கு உட்படாதவர்கள் மேல், தேவ நீதி இரக்கம் காட்டாமல் பாவக்கறை, திரைகள் அனைத்தையும் நெருப்பினால் சுட்டெரிக்க தயாராக இருக்கும்.*

*தேவன் பாவிகளோடு தொடர்பு கொண்டு, அவர்கள் அபூரணர்களாக இருந்தபோதிலும் அவர்களின் சிறந்த முயற்சிகளை ஆசீர்வதித்து, அவர்களின் பாவங்களை மன்னித்து விடுவாரானால், இயேசு கிறிஸ்து மீட்பராக வந்து தனது இரத்தத்தைக் கொடுத்து பெற்ற புதிய உடன்படிக்கை அர்த்தமில்லாமல் போய்விடும். மேலும் பரலோகத்திலுள்ள தேவ தூதர்களும் மனுக்குல மாந்தர் செய்த ஒரு பாவத்தை மன்னித்த தேவன், நாம் ஒரு தவறு செய்தாலும் மன்னிப்பார், இரக்கம் காண்பிப்பார், தமது ஐக்கியத்தி-ருந்து தள்ளிவிட மாட்டார் என்ற நியதியில் பாவம் செய்யும் உரிமையை தம் வசம் எடுத்துக் கொள்வர். ஆகையால் பாவத்தில் ஏற்கனவே விழாத எல்லா தேவ தூதர்களும் பாவத்தில் விழும் ஆபத்து இருக்கிறது. எனவே ஒவ்வொரு தூதரும் தெய்வீக சட்டத்தையும் தேவ நீதியையும் புறக்கணித்து ஒரு பாவத்திற்கு மன்னிப்பை பெறுவதற்கு தேவ இரக்கத்திற்கு துணிவு கொள்வார்கள். மேலும் ஏன் ஒவ்வொரு தூதரும் ஒரு பாவ முயற்சி செய்து தேவ மன்னிப்பின் அனுபவத்தைப் பெறக்கூடாது என விவாதம் ஏற்படலாம். இவையெல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது, தேவன் தமது சொந்த விருப்பத்தின்படியும், தமது பரிசுத்த சிருஷ்டிப்புகளின் நன்மைக்காகவும் தமது படைப்பில் பூரணமானதையே அங்கீகரிப்பார் என்கிற கருத்து நமக்கு நிச்சயமாகிறது. பூரணத்திற்குச்*

*சற்று குறைவாக இருந்தாலும் அது புறக்கணிக்கப்படும்பொழுது,*

*"நீதியும் நியாமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்" என்பது நிஜமாகும். (சங். 89:14)*

## "நாம் இரட்சிப்படைய வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை"

*விழுந்துபோன மனுக்குலத்தின் மேல் எவ்வித தெய்வீக கிருபையும், கிறிஸ்துவின் மூலமாகவே கிறிஸ்துவுக்குள்ளாகவே பொழியப்படுகிறது என்பது தற்போது தெளிவாக அறிய முடிகிறது. தேவன் தமது கிருபையை தனிப்பட்ட விதத்திலோ, அல்லது குமாரன் தனது சுதந்திரத்தின்படியோ மனுக்குலத்திற்கு அளிப்பதில்லை. எனவே இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் நாம் சிந்திக்கும்போது,*

*"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப் படவும் இல்லை" (அப். 4:12) என்ற இவ்வசனம் நன்கு தெளிவாகிறது. அதோடு கூட நமது இரட்சகரின் பணி மனுக்குலத்தை விலைக்குக் கொண்டதோடு முடிந்து விடாமல் மாபெரும் மருத்துவராகிய கிறிஸ்து, ஆயிர வருட அரசாட்சியின்போது அந்த மனுக்குலத்தாரில் எத்தனை பேர் கீழ்ப்படிகிறார்களோ, அவர்களது பாவம், நோய் ஆகியவற்றை குணப்படுத்தி, அவர்களது சாயலில் பரிபூரணத்தை கொடுத்து ஜீவனுக்குள் பிரவேசிக்கச் செய்வார். ஆயிர வருட அரசாட்சியின் முடிவில், தமக்குக் கீழ்ப்படிந்து பரிபூரண சுபாவத்தைப் பெற்றவர்களை பிதாவாகிய தேவனிடத்தில் ஒப்படைக்க தயார் செய்வார்.*

*மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் கரங்களில் மனிதர்கள் அனைவரும், இரட்சிக்கும் அனைத்து வல்லமைகளும் கொடுக்கப்பட்டிருந்தால், மீட்கப்பட்ட அனைவரும் நித்திய நித்தியத்திற்கும் இரட்சிப்பைப் பெற்று விடுவார்களா அல்லது இவ்விஷயத்தில் வரைமுறை ஏதாவது உள்ளதா? என்ற வினா எழுகிறது. இதற்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கிறது என*

வேதாகமம் தெளிவாய்க் கூறுகிறது. உதாரணமாக ஆயிர வருட அரசாட்சியில் ஆதாமினால் உண்டான சாபம் மனுக்குலத்தின் மேல் தொடரக் கூடாமல் நிறுத்தி வைக்கப்படும். அப்போது,

"பிதாக்கள் திராட்சைக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயின என்று அந்நாட்களில் சொல்ல மாட்டார்கள். அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சைக் காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப் போகும்" (எரேமி 31:29,30) என்ற நீதிமொழி நிஜமாகும். இன்னுமொரு தீர்க்கமான வேத வசனத்தில் காண்கிறபடி, நமது கர்த்தர் தேசங்களை ஆளுகை செய்யும் அக்காலத்தில்,

"பொல்லாதவர்கள் அறுப்புண்டு போவார்கள்." (சங். 37:9)

அப்.பேதுரு ஆயிரம் வருட அரசாட்சிக் காலத்தைப் பற்றி குறிப்பிடும்போது, "தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீரும் காலங்கள்" என்று குறிப்பிட்ட பிற்பாடு,

"அந்தத் தீர்க்கதரிசியின் (மகிமையடைந்த கிறிஸ்து - தலையும் சரீரமும்) சொல் ( கீழ்ப்படிதல்) கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" என்கிறார். இதுவே இரண்டாம் மரணம். (அப். 3:19-23)

இதே பகுதியைக் குறித்து அப்.பவுல் கூறும்போது,

"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல்... சாகிறானே. தேவனுடைய குமாரனைக் காலின் கீழ்மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் (தெய்வீக) ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான்?... ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே."

"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, (கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் தந்த கிருபையின் அறிவு. அனைத்து மக்களும் இந்த அறிவின்கீழ் வந்து சேர்வார்கள்) நாம் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத் தக்க

*வேறொரு பலி இனியிராமல் (இந்த சத்திய அறிவுக்கும் ஒளிக்கும் எதிராக மனப்பூர்வமாய்ப் பாவம் செய்தவர்களுக்கு ஆதாமின் பாவத்திற்கான ஒப்புரவாகுதல் பொருந்தாது) நியாயத் தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்." - எபி. 10:26-31*

மேற்கண்ட வசனங்களில் தெளிவாகக் குறிப்பிட்டபடி நிழலான மோசேக்கு எதிராக கலகம் செய்தவர்கள் அடைந்த தண்டனையை விட மிகக் கடுமையான தண்டனை, பொருளான மகிமையடைந்த கிறிஸ்துவுக்கு எதிர்த்து நிற்பவர்களுக்கும் இருக்கும். மோசேயை எதிர்த்தவர்கள் மரணத் தீர்ப்பைப் பெற்றவர்களானால், கிறிஸ்துவை எதிர்ப்பவர்கள் எவ்வளவு கடுமையாக நியாயந் தீர்க்கப்படுவர்? இன்னும் தெளிவாக விளக்க வேண்டுமாயின், மோசேக்கு எதிராக செயல்பட்டவர்களுக்கு மரணம் மட்டுமே தண்டனையாக முடிந்தது, இத்தண்டனை ஆதாமினால் பெற்ற ஜீவனுக்கே பாதிப்பு ஏற்பட்டது. இது தேவன் கிறிஸ்துவுக்குள் அவரது மீட்கும் பொருளினால் மீட்க தீர்மானித்திருக்கின்ற மறுவாழ்வை எவ்விதத்திலும் பாதிக்காது. ஆனால் ஒருவன் கிறிஸ்துவின் விலைக் கிரயத்தினால் பெற்ற சத்திய அறிவை அடைந்த பின்பு, மோசேக்கு மெய்ப்பொருளான கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் போனால், இவ்வுலக ஜீவியத்தில் ஒரு சில காலம் தண்டனைத் தீர்ப்போடு ஜீவித்து மரிப்பதோடு நில்லாமல், தனது ஆத்துமாவையும் இழந்து மறுபடியும் புதுப்பிக்க வழியில்லாமல் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு, நித்திய ஜீவனையும் இழந்து போவான். அப்படிப்பட்டவர்களும் மற்றும் பொல்லாதவர்கள் அனைவரும் வைக்கோல் துரும்பை போலவும், முட்கள், நெருஞ்சில்கள் மற்றும் பயனற்ற செடிகளைப் போலவும் அழிவைக் காண்பர்.

இதுபோலவே, புதிய ஏற்பாடு முழுவதும் பாவத்திற்கெதிரான தெய்வீகத் தீர்ப்பு மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் மூலம் பாரபட்சமின்றி செயல்படுத்தப் போவதை சாட்சியமாகப் பிரசங்கிக்கின்றன. அறியாமையினாலும் பலவீனங்களினாலும் செய்யும் தவறுகளுக்கு இந்த தேவசட்டம் விலக்கு அளிக்கிறது.

ஆனாலும் இந்த அறியாமை, பலவீனங்கள் ஆயிரம் வருட அரசாட்சியின்போது மறுசீரமைக்கும் பணியினால் நீக்கப்பட்டு விடும். அப்பொழுது தேவ சட்டமாகிய நீதி படிப்படியாக நிலை நிறுத்தப்படும். ஆயிரம் வருட அரசாட்சி முடிவடையும் போது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் பரீட்சைக்குட்படுத்தப்பட்டு பாவத்தில் நிலைத்திருக்கிற, பாவத்தை விரும்புகிற கலகக்காரரும், பொல்லாதவர்களும் பரலோகத் தந்தையின் கோபத்திற்குள்ளாகி இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவர். தங்கள் சொல், செயல், சிந்தனையின் மூலம் மறு சீரமைப்புக்குட்படுத்தப்பட்டு தேவநீதிக்கு இசைவானவர்கள் பரிபூரண சுபாவத்தைப் பெறுவர்.

இவ்வாறாக நாம் மேலே பார்த்தபடி,தேவசித்தம் பரலோகத்தில் நிறைவேறி வருவதைப் போல பூமியிலும் நிறைவேறும். இதன் மூலம் (1) ஆதாமினால் சாபத்திற்குள்ளான அனைவரும் சத்தியத்தை அறிகிற அறிவுக்கு கொண்டு வரப்பட்டு சீர்பொருந்தி மீட்படைவர். (2) இவ்வாறு கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய ஜீவன் வழங்கப்பட வேண்டும் என்பது தேவ சித்தமாயிருக்கிறது. (3) கீழ்ப்படிய மறுக்கிற யாவரும் மனுக்குலத்தினின்று அழிக்கப்பட்டுப் போவதும் தேவ சித்தமாயிருக்கிறது. இவ்விதமாக தேவசித்தம் இப்பூமியில் நிறைவேற்றப்படும். ஒருவரும் இதை தடுக்க முடியாது.

அனைத்து மனுக்குலமும் ஆதாமின் மீறுதலினால் உண்டான சாபத்தி-ருந்து விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே ஈட்டுக்கிரய பலி செலுத்தப்பட்டதினால், உலக மனுக்குலம் முழுவதும் பரிபூரண சுபாவத்திற்கு உடனடியாக மறுசீரமைப்புக்குள்ளாவர் என்று சிலர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அம்மாதிரியான எதிர்பார்ப்பு வேதாகமத்தின் போதனைக்கும், பகுத்தறிவுக்கும் பொருத்தமாயிராது. வேதாகமத்தின் எப்பகுதியிலும் மறுசீரமைப்புக்குள்ளாகுதல் ஒரே சமயத்தில் உடனடியாக அனைவருக்கும் அளிக்கப்படுவதாக கூறப்பட வில்லை. மாறாக, படிப்படியாக மறுசீரமைப்பு நடைபெறப் போவதாக கூறுகிறது. அனைத்து மனுக்குலமும் உடனடியாக மீட்கப்பட்டு மனித சுபாவத்திலிருந்து பரிபூரண சுபாவத்திற்கு உயர்த்தப்படுவர் என நம்புவோர், சரிவர நிதானிக்காததினால்

இம்முடிவுக்கு வருகின்றனர். மனுக்குலத்தின் தந்தையாகிய ஆதாம், விழுகைக்கு முன் பெற்றிருந்த அதே தயையும், சூழ்நிலைகளும் மனுக்குலத்தார் நித்திய ஜீவன்பெற மறுசீரமைக்கப்படும்போது உண்டாயிருக்காது. ஆதாம் இருந்த அதே பரிபூரண சுபாவம் மட்டுமே கிடைக்கப் பெறும் என்று நிதானிப்பது பொருத்தமாயிராது என்று நாம் கருதுகிறோம். அதற்கு மாறாக, ஆதாம் பெற்றிருந்த தயையைக் காட்டிலும் அதிகமான தயை அபூரணராயிருக்கிற மனுக்குலத்திற்கு அளிக்கப்படும். பலவீனங்களும் அபூரணத் தன்மையும் விழுகையின் மூலம், மனுக்குலம் முழுவதற்கும் தடை செய்ய முடியாத அளவு அதிக அளவில் பரவியிருப்பதால், இது மீட்கப்பட்டவர்கள் தெய்வீக சட்டத்திற்கு பூரணமாய் கீழ்ப்படியாதபடி தடை ஏற்படுத்தும் என நினைக்கின்றனர். ஆனால் தேவ பராமரிப்பு அபரிமிதமாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்களை வழிநடத்தும் என்று நாம் அறிகிறோம். மனுக்குலம் முழுவதும் மறுபடியும் எல்லோரும் ஒரே சமயத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டு ஆதாம் விழுகைக்கு முன் அனுபவித்த பூரண மனிதத் தன்மை பெறுவார்களானால் சில நியாயமான ஐயப்பாடுகள் எழும். அவைகளைக் கீழே பார்க்கலாம்

1. பூரண மனிதர்களாக ஆக்கப்பட்டவுடன், தேவனது பரிபூரண சட்டத்திற்கு அவர்கள் பூரணமாய்க் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இவர்களுக்கு இனிமேல் மன்னிப்பு ஒருபோதும் வழங்கப்படக் கூடாது. அப்படி, ஆதாமுக்காக யாரும் சிருஷ்டிக்கப்பட வில்லை. ஒரு சிலர் மட்டுமே இந்த பரீட்சைக்குட்பட்டு தேர்ச்சி பெறுவர். காரணம் - அவர்கள் தற்கால ஜீவியத்தில் பாவத்தினால் அடைந்த அனுபவங்கள், அதன் விளைவுகள் என்ன என்பதை அறிந்திருப்பதேயாகும். ஆனால் பெரும்பாலானோர் ஆதாம் விழுகையின்போது பாவத்தின் விளைவுகளை அறியாதிருந்த அதே நிலைமையிலேயே பாவத்தினைப் பற்றிய போதிய அறிவு இல்லாதிருக்கின்றனர். ஏனெனில் இச்சந்ததியில் பெரும்பாலானவர்கள் சிறு பிராயத்திலேயே இறந்து விடுகின்றனர். எஞ்சியுள்ளவர்கள் நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறியாமல் இறக்க நேரிடுகின்றது.

2. பாவத்தினைப் பற்றியும், பாவத்தின் விளைவுகளைப் பற்றியும் தேவன் ஆறாயிரம் வருடங்களாக உலகத்திற்கு போதித்து

வந்திருந்தும், அநேகர் தேவநீதி நியாயங்களைக் குறித்து மிகக் குறைந்த அறிவைப் பெற்றிருக்கின்றனர். மனுக்குலம் முழுமைக்கும், தேவ ஞானத்தைக் குறித்தும், நீதியினால் ஏற்படுகின்ற மேலான ஆதாயத்தைக் குறித்தும் ஆயிரம் வருட அரசாட்சியின்போது அறிவுறுத்தப்படும்போது மட்டுமே, பூரண அறிவைப் பெற்றுக் கொள்வர்.

*3. மனுக்குல சந்ததியினர் உடனடியாக மறுசீரமைப்புப் பெற்றால் அவர்கள் அனுபவ ரீதியாக, புதிய சந்ததியாக அவர்களின் பழைய அனுபவங்கள் மறந்த நிலையில் இருப்பார்கள். ஏனெனில் தற்போதைய பரிபூரண சாயலில் புதிய வல்லமைக்குரிய சிந்தையைப் பெற்றிருந்தால் தன்னைக் குறித்தே அடையாளங்காண முடியாத நிலையில் ஒவ்வொருவரும் இருப்பர். குழந்தைப் பருவத்திலேயே மரித்தவர்கள் தங்களைக் குறித்த பழைய நினைவுகளே சரிவர மனதில் பதியாதிருப்பதால் தங்களது பூர்வீகம் என்ன என்பதையும் தாங்கள் உயிர்த்தெழுந்து மறுசீரமைப்புக் குள்ளாகியிருக்கிறோம் என்பதையும் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. இவ்வாறு உடனடியாக மறுசீரமைப்புக்குள்ளாக்குவது தேவதிட்டமாயிருக்குமானால் ஆதியிலேயே ஏதேனில் இலட்சக்கணக்கான மனிதர்களை சிருஷ்டித்திருந்து, எல்லோரையும் பரீட்சை பார்த்திருப்பார். அவர்கள் உயிர்த்தெழுத-ல் அதே நிலையை திரும்ப பெற்றுக் கொள்ளப் போவதால் தற்கால பாவ அனுபவங்களை அனுபவித்தும் அதன் மூலம் யாதொரு நன்மையும் இல்லாமற் போகிறது. அவ்வாறே, அதே நிலையில் ஒவ்வொரு முறையும் இலட்சக்கணக்கான மனிதர்களை மறுசீர்ப்படுத்துவதையே தம் திட்டமாக செயல்படுத்தியிருப்பார். இவ்வாறு செய்வதினால், பாவத்தைக் குறித்து தற்காலத்தில் கொடுக்கப்படுகிற அனுபவங்கள் பயனற்றதாகிவிடும்.*

*4. ஒவ்வொருவரும் உடனுக்குடன் பூரண சுபாவத்தைப் பெற்றுக் கொள்வதாக வைத்துக் கொண்டால், ஆபிரகாமின் வித்தாகிய திருச்சபைக்கு தனது ஆண்டவருடன் சேர்ந்து உலகத்தை ஆசீர்வதிக்கும் இராஜரீக ஆசாரியத்துவத்தின் வேலையை செய்ய சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். (கலாத். 3:16,29) தெய்வீக ஏற்பாட்டின்படி இந்த ராஜரீக ஆசாரியர்கள் பலவீனமுள்ள, அபூரணத்*

தன்மையுடைய சிலருக்கு போதித்து அவர்களைப் பூரணமடையச் செய்வது இவர்களின் கடமையாகும். அந்த அபூரணத் தன்மையுடையவர்களிடமிருந்து, பாவங்களுக்காக செலுத்தப்பட்ட காணிக்கைகளை ஏற்றுக் கொள்வதும் அவர்களுக்கு இரக்கம் காட்டி மன்னிப்பதும் இவர்களின் பணியாகும். ஆகவே இரண்டாம் வருகையில் உடனடியாக அனைவரையும் மறுசீர்படுத்துவது தேவசித்தமும், திட்டமுமாயிருக்குமானால் இந்த ஆசாரியக் கூட்டத்தினரை தெரிந்தெடுத்தது அவசியமில்லாமற் போய்விடும்.

5. மறுசீரமைப்புக்குள்ளாக்குதல் உடனடியாக நிகழ்ந்து விடும் என்று வைத்துக் கொண்டால், தேவன் ஏன் மறுசீரமைப்பின் காலங்கள் என ஆயிரம் வருடத்தை நிர்ணயித்தார்? ஆதாமின் சாபத்தை போக்கி மனுக்குலத்தை ஒரே சமயத்தில் சீர்ப்படுத்தி பரிபூரண சுபாவமடைய செய்ய ஒரு வருடமே நீண்ட காலமாக இருந்திருக்கும்.

6. மனுக்குலத்தை நொடிப்பொழுதில் பரிபூரணத் தன்மை அடையச் செய்தால், இனி அவர்களுக்கு இரக்கம், கருணை தேவையில்லை என்று பொருளாகிறது. இனி அவர்கள் தெரிந்து செய்த தங்கள் மீறுதலுக்காக எங்கள் மேல் கருணை காட்டுங்கள் என்று வேண்டுகோள் விடுக்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக, தெரிந்தே செய்த பாவத்தினிமித்தமாக மீறுதலுக்குட்பட்டவர்கள் தங்களைத் தாங்களே சாபத்திற்குள்ளாக்கி மரணத் தீர்ப்பை வருவித்துக் கொள்கிறார்கள். ஆகையால் இவர்கள் ஆதாமின் விழுகையிலிருந்து வேறுபட்டவர்கள். ஆதாமின் மீறுதலுக்கு இயேசுவின் ஈடுபலியினால் மீட்பு சாத்தியமாகிறது. ஆனால் இவர்கள் உள்ளப்பூர்வமாக பாவம் செய்வதினால் மீட்பு சாத்தியமில்லை. ஆகவே உடனுக்குடன் மறுசீரமைத்தலின்படியான இந்த நிலைப்பாட்டில் ஒவ்வொரு மனிதனும் மீறுதலுக்குட்படுபவன் ஆனதால் சாபமாக மரணத்தை தனித்தனியாக சந்தித்தே ஆக வேண்டும். ஆகவே ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் ஒரேயொரு பாவத்திலிருந்து விடுவிக்க வேண்டுமானால் கூட இன்னொரு ஜீவனைப் பலியாகத் தரவேண்டியது அவசியமாகிறது. மீறுதலுக்குட்பட்ட ஒரு மில்லியன் ஜனங்களின் பாவங்கள் நீக்கப்பட, ஒப்புரவாக்கப்பட்ட பரிபூரணமான பரிசுத்த நிலையிலுள்ள இன்னொரு மில்லியன்

ஜனங்களைப் பலியாகத் தர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆனால் தேவன், கிறிஸ்துவுக்குள்ளாக முழுமையான, அனைவருக்கும் பொருந்தும் பலியை ஒப்புக் கொடுக்கச் செய்து இனி பாவத்திற்காக வேறெந்த கூடுதலான பலிகளும் அவசியமில்லாமல் செய்து விட்டார். அவ்வாறில்லாமல் உடனடியாக கிறிஸ்துவினால் பரிபூரணத் தன்மைக்கு மறுசீரமைப்புக்குட்படுத்தி புதுப்பிக்கப்பட்டவர்களது வேண்டுதல்கள் (கிறிஸ்துவின் பலியின் பலன்கள் மூலம்) கேட்கப்படுவதில்லை. ஏனெனில், அவர்கள் கிறிஸ்து தம் விலைக்கிரயத்தின் மூலம் சம்பாதித்த எல்லாவிதமான தேவ கிருபையையும் ஏற்கனவே பெற்றுவிட்டனர். அவ்வாறு அவர்கள் ஏற்கனவே முழுமையாக மறு சீரமைப்பு அடைந்திருந்தால் இனி மேற்கொண்டு பாவத்திற்காக செலுத்தப்பட்ட தியாக பலியில் எவ்வித பங்கும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டது.

இனி நாம் தெய்வீக திட்டத்தின்படி மனுக்குலம் படிப்படியாக மறு சீரமைப்புக்குள்ளாக வேண்டியதன் அவசியத்தை காரண காரியத்தோடு ஆராய்வோம். சிருஷ்டிகரோடு, ஒப்புரவாக வேண்டுமானால் அவருடைய நீதியைக் கற்று வளர்ச்சியடைவதன் மூலமே கூடும். இந்த ஒப்புரவாகுதலி ன் திட்டத்தினால் மனுக்குலம் அடையப் போகும் நன்மைகளையும் சிந்திப்போம்.

1. அனைத்து மனுக்குலத்தினரும், ஆதாமின் மரணத்தில் உறக்க நிலையிலிருந்தாலும், இயேசுவின் ஈடுபலியாகிய விலைக்கிரயத்தினால் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள உயிரோடெழுப்பப்படுவர். இதுவே மறுசீரமைப்பின் முதல் கட்டமான ஆசீர்வாதமாகும். பிறகு அவர்கள் இராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரின் பராமரிப்பின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுவார்கள். இச்சுவிசேஷ யுகத்தில் இந்த ஆசாரியக் கூட்டத்தார் பாவத்திற்கெதிராகப் போராடி வெற்றி பெற்று பாவத்தின் விளைவுகளை நன்கு அறிந்திருப்பதினால், மனுக்குலத்தை பொறுமையோடும் சகிப்புத் தன்மையோடும் இருந்து சீர்ப்பொருந்தச் செய்யும் தகுதியுடையோராயிருப்பர். அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து ராஜாக்களாகவும், ஆசாரியர் களாகவும் இருப்பார்கள். (வெளி. 5:10)

*ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தான் மரிக்கும்போது எந்த சிந்தையில் மரித்தானோ அதே நிலையில் உயிர்த்தெழுப்பப் படுவதால் அவனது குணநலன்கள் பாதுகாக்கப்படும். மேலும் அவனுடைய பாவம், பலவீனங்கள் மன்னிக்கப்பட்டு தேவ நீதியைக் கற்று படிப்படியாக சீர்பொருந்தி வரும் அனுபவம் அவனுக்கு நல்ல படிப்பினைகளைத் தரும். பாவத்திற்கும், தேவ நீதிக்குமிடையே உள்ள வித்தியாசமும் அதனால் தெள்ளத் தெளிவாகும். இவ்வாறு நமது மாபெரும் இரட்சகர் உலக மனுக்குலத்தாரில் பரிபூரண நிலைக்கு யார் யார் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிகிறார்களோ அவர்களை உயர்த்துவார். தங்களுடைய முழு அறிவுடன், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புகளை உதாசீனம் செய்து பரிபூரண சுபாவத்தை அடைய மறுப்பவர்களுக்கு, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தவணைக் காலமாகிய நூறு வருட வாழ்க்கைக்குப் பிறகு ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவர். இனி இவர்களுக்கு மீண்டும் சீர்பொருந்தும் வாய்ப்பு அருளப்படுவதில்லை. ஏனெனில் இவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தும், ஓரளவு நன்மை தீமை பற்றிய அறிவில் நிறைந்திருந்தும், கிறிஸ்துவுக்குள்ளான தேவ கிருபையை மறுத்து விடுகின்றனர். மாபெரும் தீர்க்கதரிசியின் சொல் கேளாமல் அலட்சியம் செய்து பரிசுத்தத்தை அடைவதற்கான பெரும் பாதையில் முன்னேறவில்லை. (ஏசாயா 65:20; 35:8) ஆனாலும் தீர்க்கதரிதரிசி கூறுகிறபடி, நூறு வயது சென்று மரிக்கிறவனும் பாலகன் என கருதப்படுவான். ஏனெனில் யாரெல்லாம் பரிசுத்தத்தை அடையும் வழியில் நடக்க மனதாயிருக்கிறார்களோ அவர்கள் ஆயிரம் வருட அரசாட்சி முடியும் வரையில் உயிருடன் ஜீவிப்பார்கள்.*

*2. ஆயிரம் வருட அரசாட்சியின்போது, இவ்வுலக மனுக்குலத்தார் அபூரண நிலையிலேயே இருந்து பரிசுத்த பெரும் பாதையில் செல்ல முயற்சி எடுக்கும் போதும், அரிய பாடங்களை படிப்படியாக கற்றுக்கொள்ளும்போதும், ஆவியின் பலவித கனிகளை விருத்திசெய்யும் போதும் கிறிஸ்துவின் ஈடுபலியின் புண்ணியம் அவர்களை மூடுகிறது. இவ்வாறு அவர்கள் தங்கள் ஜீவனையடைய வழி நடத்தப்படும் பாதையில் ஆதாமினால் ஏற்பட்ட பலவீனங்களாலோ அல்லது விவேகமற்றிருப்பதாலோ வேறு வழி*

முறைகளைக் கடைப்பிடிப்பதினாலோ சில தடைகளோ கறைகளோ ஏற்படலாம். அவைகள் ஒரு வரைமுறைக்குள்ளாக மாபெரும் ஆசாரியரின் மூலம் மன்னிக்கப்படும்.

நித்திய ஜீவனுக்கோ, நித்திய மரணத்திற்கோ பரீட்சிக்கப்படுவதற்கு உடல் ரீதியான பூரணமோ அல்லது அறிவு ரீதியான பூரணமோ தேவை என்று கூறுகிறவர்கள், தற்போது திருச்சபையார் பரீட்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மறுக்கிறார்கள். எல்லாம் வேதத்திற்கு இசைவாயிருக்க வேண்டும். மனுக்குலத்தின் பரீட்சைக்கும் அப்படிப்பட்ட பூரணத்தன்மை அவசியமில்லை.

நம்மைப்போலவே, உலகமும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னதாக கிறிஸ்துவுக்குள்ளான தேவ கிருபையின் அறிவுக்குள்ளாக கொண்டுவரப்படும். இதை தேவனும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பூரணத்தை அடையும்போது, ஆதாமினால் சுதந்தரித்துக் கொண்ட அவர்களது பெலவீனங்கள் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் தகுதியினால் மூடப்படும். மேசியாவின் ஆயிரம் வருட ஆட்சி முடியும் வரை, தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிவோர் எவரும் பரிபூரண சுபாவத்தை அடைவதில்லை.

3. ஆயிரம் வருட அரசாட்சியைக் குறித்து வேதாகமம் அது உலகத்தினருக்கு நியாயத் தீர்ப்பின் நாள் என உரைக்கின்றது. "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு (தலையும் சரீரமுமான கிறிஸ்து) பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்." - அப். 17:31

உலக மனுக்குலமாகிய ஆதாமின் சந்ததியை வலுக்கட்டாயமாகப் கீழ்ப்படியப் பண்ணி, நித்திய ஜீவனை தந்து ஒவ்வொருவரையும் காப்பாற்றுவார் என்பது தேவதிட்டமாய் இருக்குமானால் ஏன் வர இருக்கின்ற யுகம் நியாயத் தீர்ப்பின் நாள் என அழைக்கப்படவேண்டும்? நியாயத் தீர்ப்பு என்பது சோதனைக் குட்படுத்தப்பட்டு பரீட்சிப்பதையே குறிக்கும். இதனடிப்படையில் எத்தனை பேர் பரீட்சையில் தேர்ச்சி பெறுகிறார்களோ, அவர்கள் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டு ஆசீர்வாதம் பெறுவர்.

கீழ்ப்படிய மறுக்கும் கூட்டத்தார் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டு விலக்கப்படுவர். இந்த நியாயத் தீர்ப்பானது நித்திய ஜீவன் அல்லது நித்திய மரணத்தை வரையறுப்பதாகும்.

நமது கர்த்தரால் சொல்லப்பட்ட செம்மறி ஆடு, வெள்ளாடு உவமை சுவிசேஷ யுகத்திற்குப் பொருந்தாது. ஆயிரம் வருட அரசாட்சியில் உலக மாந்தருக்கு நடைபெற இருக்கும் நியாயத் தீர்ப்பையே இது குறிப்பிடுகிறது. அவ்வசனமானது, "மனுஷ குமாரன் தன் சகல மாட்சிமையோடு வரும்போது... தமது மகிமை பொருந்திய சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது..." இப்படி ஆரம்பிக்கிறது. நமது ஆண்டவரின் வாக்குத்தத்தத்தின்படி, மணவாட்டியாகிய தெரிந்தெடுக்கப்பட்ட திருச்சபை அவருடைய மகிமையிலும், சிங்காசனத்திலும் பங்கு பெறும். பிறகு "சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள்." அப்பொழுது செம்மறி ஆடுகளை வலதுபுறம் தனியாகப் பிரித்து அவரது தயை பெற்றவர்களாகவும், வெள்ளாடுகளை இடது புறமாகப் பிரித்து சபிக்கப்பட்டவர்களாகவும் அவர்களை நீதியாய் நியாயம் தீர்ப்பார். இவ்வாறு தனியே பிரித்தெடுப்பதும், நியாயத் தீர்ப்பு செய்வதும் ஆயிரம் வருட அரசாட்சி காலம் முழுவதும் நடைபெறும். முடிவில், செம்மறி ஆடு பிதாவின் தயை பெற்று நித்திய ஜீவன் பெற அவர் முன்பாக கொண்டுவரப்பட்டு அன்பாய் உபசரிக்கப்படுவர். கீழ்ப்படியாத வெள்ளாடுகள், சாத்தானை தங்கள் தலைவனாகக் கொண்டதால், தீமை செய்கிற அனைவரோடும் சேர்த்து நித்திய அழிவிற்கான தண்டனையைப் பெறுவர். அவர்களுக்கு ஜீவன் பெறுகின்ற பாதை நித்தியத்திற்கும் துண்டிக்கப்பட்டதாயிருக்கும். இதனையே அழியாத அக்கினி (இரண்டாம் மரணம்) என அடைமொழியாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஆயிரம் வருட ஆட்சியில் நடைபெறும் மாபெரும் நியாயத் தீர்ப்பின் நாளைக் குறித்து வேதாகமத்தில் குறிப்பிடும்போது தூய்மையும் நீதியும் நிறைந்த பெரிய வெண்ணிற சிங்காசனத்தின் முன்பாக, நியாயத் தீர்ப்பு நடைபெறும் என தீர்ப்பு செய்யும் விதத்தைப் பற்றி சித்திர விளக்கமாகக் கூறுகிறது. அந்நாளில் பரலோகத் தந்தையின் ஆவியில் வளர்ச்சி பெற்று, பூரணப்பட்டு அன்பின் ஆவியில் வளர்ந்தவர்களே கர்த்தருடைய பிள்ளைகள் எனப்படுவர். உலகத் தோற்றமுதல் அவர்களுக்கென்றே

உருவாக்கப்பட்ட, பூமிக்குரிய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வர். மற்றவர்கள், தங்களுக்குக் கிடைத்த தயை நிறைந்த நாட்களை வீணடித்து கர்த்தருக்கு ஒப்பாய் அன்பின் ஆவியில் பூரணர்களாக ஆகும் தகுதியை இழந்ததால் கர்த்தரின் விரோதிகள் என எண்பிக்கப்பட்டு, சாத்தானோடுகூட அழிக்கப்படுவார்கள். ஒப்பிட்டுப் பார்க்க - வெளி. 20:9-13

## மீட்கும் பொருள் - பதிலீடு

பதிலீடு (substitution) குறித்த போதனையில், கிறிஸ்தவ மக்கள் பல நூற்றாண்டுகளாக உறுதியாக நிலைத்திருக்கக்கூடிய கொள்கை என்னவெனில் பாவத்தின் சம்பளம் கொடிய நித்திய நரகம் என்பது. ஆனால் தற்போது அந்த போதனை வேதாகமத்தை பகுத்தாராய்வதன் மூலமாக சிறிது சிறிதாக மறைந்து வருகின்றது. அவ்வாறு பாவத்தின் சம்பளம் நரகம் என்று வைத்துக் கொண்டால், நமது கர்த்தர் நாம் செய்த பாவத்திற்கு கிடைக்கும் தண்டனையை அவர் ஏற்றுக் கொள்ளும்போது, அவர் நித்திய நித்தியத்திற்கும் நரகத்தில் வேகடிக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாவிடில் நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற முடியாது. இந்த சிந்தனை கேட்பதற்கு உறுதியாக வாதிடவும் கூடும் என்றாலும் அந்த போதனை தப்பறையாக இருக்கிறது. பாவத்தின் சம்பளம் நித்திய எரி நரகமல்ல. அது மனிதனுக்கெதிராக கொடுக்கப்படுகிற பாவத்தின் தண்டனை அல்ல. இருந்தபோதிலும், அநேகர் பாவத்தின் சம்பளம் மரணம் என்றும், நமது கர்த்தராகிய இயேசுவே மனிதனுக்குப் பதிலாக பாடுபட்டு மரணத்தை ருசி பார்த்து மனிதன் எவ்வாறு துன்பப்படுவானோ அதே மனித நிலையில் துன்பத்தை அனுபவித்தார் என்றெல்லாம் அறிந்திருந்தும், பதிலீடு செய்யப் படுதலைக் குறித்து தவறான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பதிலீட்டைப் பற்றி வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா? அப்படி குறிப்பிடப்படாதிருக்குமானால் நாம் ஏன் அச்சொல்லை உபயோகிக்க வேண்டும் என வினவுகின்றனர்.

வேதாகமம் எபிரேய கிரேக்க மொழிகளிலேயே எழுதப்பட்டது. இந்த மூல பாஷைகளிலிருந்து மற்ற மொழிகளில் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டது. இவ்விடத்தில் சொல்லப்பட்ட substitution (பதிலீடு) என்ற ஆங்கில வார்த்தை,

மூலமொழிக் கிணையாக மொழி பெயர்க்கப்பட்டதா என ஆராய்வது இங்கு அவசியமாகிறது. கிரேக்கப் பதத்திற்கிணையாக substitution (பதிலீடு, மற்றவருக்காக செயல்படுபவர்) என்று வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்கள் சரியான சொல்லையே கையாண்டிருக்கின்றனர். கிரேக்க வேதாகமத்தின் அநேக இடங்களில் பதிலீடு, பதிலாக (substitution, substitute) என்ற பொருளே அதிகமாக இடம் பெறுகிறது. பதிலீடு என்ற வார்த்தையைத் தவிர பொருத்தமான வார்த்தை இல்லாததால் மொழிபெயர்ப்பாளர்கள் இதனை உபயோகித்திருக்கின்றனர். பதிலீடு (substitution) என்ற வார்த்தைக்கு எதிர்ப்பதமான வார்த்தையானது மீட்கும்பொருள் (ransom) என்ற வார்த்தைக்கும் எதிர்ப்பதமான பொருளைத் தருகிறது. நாம் ஏற்கனவே பார்த்தபடி, வேதாகமம் தெளிவாகவும், உறுதியாகவும் உரைக்கிறபடி, நாம் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலம் விலைக்கு வாங்கப்பட்டோம். அவர் நமக்காக தம் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி மீட்கும் பொருளை பதிலீடாகத் தந்து நம்மை விடுவித்தார். ஆகவே இயேசு தந்தது பதிலீடுதான் என்பது உறுதியாகிறது.

ஒரு பொருளை நாம் விலை கொடுத்து வாங்கும்போது, அதற்கீடாக என்ன விலை கொடுக்கிறோமோ அதுவே பெற்ற பொருளுக்கு பதிலீடாகும். உதாரணமாக, நாம் ஒரு ரொட்டித் துண்டை கடையில் சென்று, அதற்கான விலை கொடுத்து வாங்குவதாகக் கொள்வோம். நாம் ரொட்டித் துண்டை வாங்க என்ன விலை கொடுத்தோமோ, அதுவே பதிலீடு ஆகிறது. ஒரு விவசாயி ஒரு சாக்கு கோதுமையை மில்லுக்கு எடுத்துச் சென்று விற்றுவிட்டு அதற்குப் பதிலாக ரொட்டி மாவை வாங்கி வருவதாக வைத்துக் கொள்வோம். இதில் ரொட்டி மாவுக்கு கோதுமை பதிலீடு ஆகிறது. அது போலவே ஈடுபலி செலுத்துகின்ற ஒருவர் மற்றவருக்காக விலை கொடுத்து பதிலீடு செலுத்துபவராகிறார். இவ்வாறாக, மனிதனாக உலகிற்கு வந்த இயேசு கிறிஸ்து தன்னையே மரணத்திற்கு ஒப்புக் கொடுத்து விலைக்கிரயம் செலுத்தியதினால், விழுந்துபோன ஆதாமிற் கிணையாக விலை கொடுத்ததினால் ஆதாமுக்கும் ஆதாமின் மூலமாக தங்கள் ஜீவனை இழந்த அவனது சந்ததியார் அனைவருக்கும் பதிலீடு செலுத்தியவராகிறார். ஆகவே

இவ்விஷயத்தில் சொல்லப்பட்ட உண்மைகள் அனைத்தும் பொருத்தமானதாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. ஆனால் இரு நாடுகளிடையே சண்டை ஏற்படும்போது பிடிக்கப்படும் கைதிகளை, ஒரு நாடு எத்தனை கைதிகளை விடுவிக்கிறதோ, அதே எண்ணிக்கையிலான கைதிகளை மற்றொரு நாடும் விடுவிக்க ஒப்பந்தமிட்டு அதன்படி செய்வார்கள். ஆனால் மனிதனுக்கு ஈடாக மனிதன், பொருட்களுக்கு ஈடாக பொருட்கள் என்ற ரீதியில் கிறிஸ்துவின் ஈடுபலி பொருந்தாது.

கடையில் சென்று வாங்கும் ரொட்டித் துண்டிற்கு ஈடாக என்ன விலை (பணம்) கொடுத்ததாலும் இரண்டும் ஒரே தன்மையுடையதல்ல. அதாவது ரொட்டியும் வெள்ளியும் ஒரே மதிப்புடையதாக இருந்தாலும் இரண்டும் ஒரே தன்மையுடையவைகளல்ல. பூரண மனிதனை மீட்கும் விஷயத்திலும், மனிதனை ஒத்த பரிபூரணத்திலும் சாயலிலும் சரிநிகராக உள்ள ஒருவரைக் கொண்டு பொருத்தமான முழுமையான ஈட்டுக் கிரயத்தை செலுத்த தேவன் ஏற்பாடு செய்தார். மனுக்குலத்தின்மேல் சுமத்தப்பட்ட சாபத்தீர்ப்பினின்று விடுதலையாக்குவதற்கு முன்பாகவே ஈட்டுக்கிரயம் செலுத்தப்பட வேண்டுமென தேவன் தீர்மானித்திருந்தார்.

“பதிலீடு” என்ற வார்த்தை மனிதர்களிடத்தில் அடிக்கடி உபயோகிக்கப்படுகிற வார்த்தையாக இருந்தாலும், கிறிஸ்துவின் பதிலீட்டைப் பொறுத்தமட்டில் குழப்பத்தை உண்டாக்குகிறதாய் உள்ளது. போர்க்காலத்தில், அத்தியாவசியமான பணிக்கு இராணுவத்துறையோடு ஒப்பந்தம் செய்த கொண்ட ராணுவ வீரர் ஒருவர், தவிர்க்க முடியாத காரணத்தினால் தனக்கு பதிலாக வேறொரு நபரை பணியமர்த்த அனுமதிக்கப்படுவார். பணியமர்த்தப்பட்ட அந்த நபர் இராணுவத்தில் அந்த நபருக்கு பதிலாக செய்ய வேண்டிய பணிகளை சரிவர செய்து முடிக்க வேண்டும். தனக்கு பதிலாக வேறு ஒருவரை பணியிலமர்த்தியவர், இராணுவ விதிமுறைகளிலிருந்தும் கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலையாகிறார். இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் பதிலீடு என்ற சொல் இசைவாய்ப் பொருந்துகிறது. எப்படியெனில்

*விடுவிக்கப்பட்டவருக்கு பதிலாக பணிமேற்கொள்ள இராணுவ அதிகாரியால் அனுமதி அளிக்கப்பட்ட நபர், உடல் ரீதியாக அப்பணிக்கு தகுதியுடைவர் என நிரூபித்தாக வேண்டும்; இரண்டாவதாக பதிலீடு தருகின்ற அந்த நபர் இராணுவத் துறையோடு ஒப்பந்தம் செய்ய தயாராயிருந்து தன்னையே பதிலீடாக கையளிப்பவராக இருக்க வேண்டும். இந்தப் பண்புகள் நாம் ஆராய்கின்ற பாடத்திற்கு பெரிதும் பொருத்தமுடையதாய் உள்ளது. நமது கர்த்தராகிய இயேசு, முற்பிதாவாகிய ஆதாமிற்கு பதிலாக பதிலீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டார். அவர் தெய்வீக நீதி நியாயத்தின்படியும், சட்ட திட்டங்களுக்கு உட்பட்டும் ஆதாமிற்குப் பதிலீடு செய்யத் தகுதியுடைவர் என எண்பித்தார். இன்னொரு தேவையையும் பூர்த்தி செய்கிறார். அதாவது பூமிக்கு வந்து நமது இடத்தை எடுத்துக்கொண்டு தம்மை அர்ப்பணித்த போது அவர், மரண தண்டனைக்கு உட்படாதவராயிருந்தார்; அந்த அர்ப்பணம் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது; பறிக்கப்பட்ட ஆதாமின் ஜீவனுக்கு கொடுப்பதற்கு முழு சுதந்திரமான பரிபூரண ஜீவனைப் பெற்றிருந்தார்.*

*மேற்குறிப்பிட்ட இரண்டு பதிலீடுகளுக்கிடையே தொடர்பு முற்றுப் பெற்று விட்டது என்பதை அறிய வேண்டும். ஏனெனில் இராணுவத்தில் பணிபுரிய ஒப்பந்தம் செய்த வீரர் ஒப்பந்தத்தின்படி போரில் பணியாற்றும்போது உபத்திரவங்கள், துன்பங்கள் இவைகளை அனுபவிக்க நேரிடுகிறது. செய்த ஒப்பந்தம் அத்துடன் நிறைவு பெற்று விடுகிறது. ஆனால் ஆதாமின் விஷயத்தில் கொடுக்கப்பட்ட சாசனமோ மரணத் தீர்ப்பு. மேற்கண்ட இவ்விரு விஷயங்களிலும் பதிலீடு என்ற வார்த்தை பொருந்தி வரக்கூடிய இடம் எதுவெனில், இராணுவ வீரன் ஒப்பந்தத்தின்படி இராணுவத் தளத்திற்கு ஊழியம் செய்ய செல்கின்ற நிலையும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிதாவினிடத்தில் தன்னை காணிக்கையாக ஒப்புக் கொடுத்து மரணப் பாதையைத் துவக்குவதையும் தொடர்பு படுத்தலாம். ஏனெனில் இராணுவ வீரனுக்குப் பதிலாக வந்த வீரனை இராணுவம் ஏற்றுக் கொண்டு, அவ்வீரனை விலக்கி, பெயரை நீக்கியது போல தெய்வீக நியாயந் தீர்ப்பின்படி கிறிஸ்து ஆதாமுக்காக*

மரணத்திற்குள் நுழைந்தபோது பட்டியலிலிருந்து ஆதாமின் பெயர் நீக்கப்பட்டு தெய்வீக சாபம் போக்கப்பட்டது. மேற்சொன்ன இரண்டு ஒப்பீடுகளும் இத்துடன் நிறைவு பெற்றுவிட்டன. இனிமேல் தொடராது.

"பதிலீடு" என்ற சொல் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்ட கருத்துக்களை தவறாய்ப் புரிந்து கொண்டு தங்களது கருத்தே சரியானது என்று தப்பெண்ணம்கொண்டு இருப்பவர்களுக்கு அதன் உண்மையான தாற்பரியத்தை விளக்குவது நமது நோக்கமல்ல. அவர்கள் தப்பெண்ணம் கொண்டிருப்பதால் வேதாகமத்தின் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள முடியாமல் போகிறது. எனினும் நாம் நமது ஆவியின் துணைகொண்டு மீட்கும் பொருளாகிய பதிலீட்டை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த வேதப் பாடத்தைக் குறித்த தெளிந்த அறிவைப் பெற்றவர்கள் கிறிஸ்துவே நமக்கு பதிலாக ஈடுலி செலுத்தினார் என்பதை ஏற்க மறுத்தால், அவர்கள் தாங்கள் நீதிமானாக்கப்படுதலுக்கு தேவையான விசுவாசத்தில் குறைவுள்ளவர்களாக இருப்பார்கள்.

## இரட்சிப்புக்கென்று வேறெதாவது திட்டம் இருக்கக் கூடுமா?

அபூரண நிலையிலிருந்து மீட்கும் பொருளைக் குறித்த பாடத்தைப் படிக்கும்போது இதைக் குறித்து விவாதிக்கவும், மனிதனுக்கு பதிலீடாக, மீட்கும் பொருளாக தமது குமாரனின் மரணத்தின் மூலம் உலகத்தை இரட்சிப்பதற்கு பதிலாக ஏன் வேறு ஒரு முறையில் உலகத்தை தேவன் இரட்சித்திருக்கக்கூடாது என்று கேட்கவும் விரும்புகின்றனர். அவர்கள் இதைக் குறித்து தவறான அணுகுமுறையைக் கையாண்டுள்ளனர் என்பதே அவர்களுக்கு நாம் கூறும் பதில். அவர்கள் சிந்திக்க வேண்டிய கேள்வி என்னவெனில் தேவன் வேறெதாவது வழியை தந்திருக்கிறாரா? அல்லது ஈடுபலியைக் குறித்த திட்டத்தினை தெரிந்தெடுத்து அதன்படி நடத்துகிறாரா என்பதேயாகும்.

தெய்வீக ஞானமானது மனுக்குலத்தின் இரட்சிப்புக்கு வேறு ஒரு திட்டத்தினை கேள்விக்கிடமின்றி நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும். ஆனால் இரட்சிப்புக்கேதுவான, மீட்கும்

பொருளையல்லாமல் வேறு நன்மையான எந்த சிறந்த திட்டமும் செயற்படுத்தப்படவில்லை என்பது நாம் கண்ட உண்மை. எல்லாம் வல்ல தேவனால் தீர்மானிக்கப்பட்ட இரட்சிப்பின் திட்டம் அனைத்து மனுக்குல மாந்தருக்கும் நன்மை பயக்கக்கூடியது என்பதை அவர் பகுத்தாராய்ந்து அத்திட்டத்தினை செயலாக்கும்போது ஏற்படுகிற விளைவுகளையும், அதனால் ஏற்படுகின்ற இறுதி நன்மைகள் எல்லாவற்றையும் அறிந்திருந்தார். தேவன், விழுந்து போன தூதர்களுக்கு வேறொரு திட்டத்தை செயல்படுத்தி இருந்திருப்பது நிரூபணமானால் விழுந்து போன மனுக்குலத்திற்கும் வேறொரு திட்டத்தை ஏற்பாடு செய்திருப்பார் என்று நாம் சொல்லலாம். ஆனால் நாம் பார்க்கின்றபடி அது நிச்சயமாக பூரண நன்மையை மனுக்குலத்திற்குத் தருவதாக அமையாது. மேலும் அனைவர் பார்வையிலும் அது ஏற்றுக் கொள்ள முடியாததாயும் இருந்திருக்கும்.

ஒருவேளை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மனுக்குலம் மட்டும் ஆசீர்வதிக்கப்பட்டு, மறுசீரமைப்புக்குள்ளாவார்கள் என தேவன் ஏற்பாடு செய்திருப்பார் என வைத்துக் கொண்டால், இதனால் வரும் பாதகங்கள் அதிகமாயிருக்கும். அவையாவன:

1. நமது சந்ததியினர் ஒழுக்கத்தில் சீர் குலைந்து போவது எவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கும். அது நிறைவான மன நிலையையும், வலுவான உடல் தன்மையையும் பெற்றிருந்தும், ஒழுக்க ரீதியாக விழுந்து போன நிலையில் மனுக்குலம் தொடர்ந்து அனுமதியளிக்கப்பட்டிருந்தால் அதன் விளைவுகள் சொல்லி மாளாது. இம்மாதிரி திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்குமேயானால், 10 அல்லது 20, 50, 100 வருடங்களுக்குள்ளாக பாவத்தின் விளைவுகளைத் தெளிவாக அறிந்துவிடுவர். இதே நிலை ஆறாயிரம் வருடங்களாகத் தொடர்ந்திருந்தால் வஞ்சகம், எண்ணிப்பார்க்க முடியாத அளவு பெருகி, மனுக்குலத்தை வாட்டி வதைத்திருக்கும். தேவனிடமிருந்து பிரிந்திருந்து மரணத் தீர்ப்பை மட்டும் இன்னும் அடையாமலிருந்தால் இத்திட்டம் எவ்வளவு கொடூரமானதாயிருக்கும்.

2. இரட்சிப்பைக் குறித்த தேவ திட்டம் மேற்கண்டவாறு பெருந்திரளான எண்ணிக்கையில் நிறைவேற்றப்படும் என்று

*வைத்துக் கொண்டால் கூட அத்திட்டத்தின் மூலம் தெய்வீக குணநலன்களை இந்த அளவுக்கு வெளிப்படுத்தியிருக்க முடியாது.*

a. *ஆனால் தேவ நீதியானது மரணத்தீர்ப்பை இம்மனுக்குலத்தின் மேல் சாபமாக சுமத்தியபோது, "ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவம் செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது." இவர்கள் பாவம் செய்யாத போதிலும் அனைவரும் பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்டவர்கள், துர்க்குணத்தில் உருவானவர்கள். தலைமுறை தலைமுறையாக இவ்வாறு மனுக்குலத்தை பாவம் ஆண்டு வருகிறது. (ரோமர் **5:14,12:** சங் **51:5**) இப்பாவக் கறையை நீக்க பரிபூரணமான தேவநீதி நிறைவேற்றப்படவேண்டும். இதில் எள்ளளவும் குறைவு ஏற்பட்டாலும் நிராகரிக்கப்படும் என்பதை தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.*

b. *நாம் துர்க்குணத்தில் தேவனை விட்டு வெகு தொலைவி-ருந்தாலும், நாம் இன்னும் பாவிகளாக அவரது அன்பிற்கு அபாத்திரராய் இருந்தபோதிலும், நமது மீட்புக்காக, நம் மேல் வைத்த அன்பின் காரணமாகச் செலுத்தப்பட்ட மாபெரும் மீட்கும்பொருளாகிய விலைக்கியரத்தினை செலுத்தியதன் மூலம் அன்பு என்ன என்பதை நமக்கு விளங்கப் பண்ணினார்.*

c. *மனிதனுக்கு மரணத் தீர்ப்பை சாபமாகத் தந்து தம் திட்டத்தினை நிறைவேற்றிய தேவன் மீண்டும் ஏற்ற வேளையில், மரணத்தி-ருந்து அவனை மீட்டு மறுசீரமைப்புகுள்ளாக்கி உயிர்த்தெழுப்புவார். சிருஷ்டிப்பின் நாட்களில் நடைபெற்றதைக் காட்டிலும் அதிசயிக்கத்தக்க, மாபெரும் தெய்வீக வல்லமையை வெளிப்படுத்த இது ஒரு சந்தர்ப்பமாக அமையும். எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி தெய்வீக வாக்குத்தத்தமாகிய உயிர்த்தெழுதலை இவ்வுலகில் வாழ்ந்து மரித்த இலட்சக்கணக் கானவர்களுக்கு கொடுக்கவும் திரும்பவும், முன்பிருந்த நிலையை கொடுக்கவும் மாபெரும் வல்லமை அவசியம். அவர்கள் உயிர்த்தெழும்போது, மரிப்பதற்கு முன்னால் எந்த நினைவில் இருந்தார்களோ அதே நினைவோடு உயிரோடெழுப்ப வேண்டுமானால் ஒரு மனிதனைச் சிருஷ்டிப்பதை விட அதிக*

வல்லமை தேவைப்படுகிறது.

d. இத்தெய்வீக திட்டம் முழுமையாக நிறைவேற்றி முடிக்கப் படும்போது, தெய்வீக ஞானத்தின் மேன்மை வெளியரங்கமாகும். இத்திட்டத்திற்குகொப்பாக அல்லது இதனை விட அற்புதமான திட்டம் ஒன்று இருக்க முடியாது என்ற பேருண்மை அந்நாளில் அனைவராலும் அறியப்படும். மனிதர்களும், தூதர்களும் இக்காரியம் என்ன நோக்கத்திற்காக நடக்கின்றது என்ற அவரது செயல்பாட்டின் உள்ளர்த்தத்தையும், காரண காரியத்தையும் தற்போது அறிய முடியாமல் போனாலும், இந்த தெய்வீக சித்தத்திற்கெதிராக சாத்தானும் மற்றும் விழுந்துபோன தூதர்களும் தடை ஏற்படுத்திக் கொண்டு வந்தாலும், தம் ஞானத்தால் தேவன் எவ்வாறு முடிவை ஆரம்பத்திலேயே அறிந்திருந்தார் என்பதையும் அனைத்துக் காரியங்களையும் தமது ஆலோசனையின்படியே செய்து முடிக்கும் அற்புதத்தையும் எண்ணி ஆச்சரியமடைவர். தேவன் தமது தெய்வீக நோக்கம் நிறைவேறும் பொருட்டு, அனைத்தையும் நன்மைக்கேதுவாக செய்து முடிக்க வல்லவராயிருக்கிறார் என்று வெளியரங்கமாக அனைவருக்கும் தெரியவரும். “என் வாயிலிருந்து புறப்படும் வசனம்... அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பிய காரியமாகும்படி வாய்க்கும்” (ஏசாயா 55:11) என்ற வசனம் இறுதியில் நிரூபணமாகும்.

மேலும், மனிதனை அனுசரித்து, பாவம் செய்த தூதர்களை தொடர்கிற திட்டத்தை அல்லது ஏதாவது வேறு திட்டத்தை நாம் சிந்தனையில் கொண்டுவர முடியும். ஆனால் அது கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையை தெரிந்துகொள்கிறதற்கு மகா பெரிய சந்தர்ப்பமாக இருந்திருக்காது; மேலும், வார்த்தையானவர் பரம பிதாவிடம் வைத்திருக்கிற விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் சோதிப்பதற்கு மகா பெரிய சந்தர்ப்பமாக இருந்திருக்காது; இதன் விளைவாக, அவர் தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவராக உயர்த்தப்படுவதற்கும், இரட்சிக்கப்பட்ட சிறு மந்தை அவரது அடிச் சுவட்டில் நடக்கவும் சந்தர்ப்பம் இருந்திருக்காது. முடிவாக பார்த்த இப்பாடங்கள் அனைத்தும் மனுக்குலத்திற்காக மட்டுமல்ல, தேவனுடைய அறிவுள்ள படைப்புக்கள் அனைத்திற்கும், நித்திய

*நித்தியத்திற்குமாக ஏற்படுத்தப்பட்டவை.*

*“ஆ ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத் தீர்ப்புகள் அளவிடப் படாதவைகள் அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும் படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாகவும், அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமென்.” ரோமர் **11:33-36***

## அத்தியாயம் 16

# ஒப்புரவாகுதலின் ஊழியம் அல்லது ஒப்புரவாகுதல்

*இந்த ஊழியம் இராஜரீக ஆசாரியத்துவத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது-ஒப்புரவாகுதலை போதிக்க அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளது-இந்த சந்தோஷ செய்தி ஏன் பாராட்டப்படுவதில்லை-இந்த ஊழியத்தின் பலன்கள்-துன்பமும் மகிமையும்-இது எப்படி விசுவாசத்தை சோதிக்கிறது-உண்மையுள்ளவர்கள் மட்டுமே வருங்கால ஒப்புரவாகுதலின் வேலையில் பங்கு பெறுவார்கள்.*

*"மேலும் ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத் தாமே உயர்த்தவில்லை." - எபி 5:4,5*

இயேசு கிறிஸ்துவை பிரதான ஆசாரியராகப் பெற்றிருக்கிற இராஜரீக ஆசாரியக் கூட்டத்தினரே ஒப்புரவாகுதலின் ஊழியத்திற்கும், ஒப்புரவாகுதலுக்கும் பங்கு பெறுகிறவர்களாவர். அனைத்து ஆசாரியர்களும் சுவிசேஷ யுகம் துவக்கி, முடியுமட்டும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு வழி நடத்தப்பட்டு, அவருக்குப் பிரியமான லிகளை செலுத்தி வருகிறார்கள். (ரோமர் 12:1) இவர்கள் கிறிஸ்துவின் பாடுகளுக்கு பங்காளிகளானதால், வரவிருக்கின்ற ஆயிர வருட அரசாட்சியிலும், மகிமையிலும் அவரோடு பங்கு பெற்று, மாபெரும் ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நிறைவேற்றுவார்கள்.

பிரதான ஆசாரியரின் கீழ் இயங்கும் உடன் ஆசாரியர்களாகிய இவர்கள், சுபாவத்தின்படி மற்ற மனுக்குல மாந்தரைப் போலவே கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தார்கள். எனவே இவர்கள்

தேவனால் ஆசாரியர்களாவதற்கு அழைக்கப்படுமுன் தேவனோடு ஒப்புரவாக வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில்,

"தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை."

நமது மீட்பரும், பிரதான ஆசாரியருமானவரிடமிருந்து ஒப்புரவாகுதலை அடையும்வரை, நாம் அவரோடு கூட பலியின் ஜீவியத்தில் இணைந்தவர்களாகவும், மத்தியஸ்தர்களாகவும், இணைந்து சீரமைப்பவர்களாகவும், அவரோடு ஒன்று சேர்ந்து ஒப்புரவாக்குபவர்களாகவும் அதிகாரமும், உரிமையும் பெற முடியாது. முழுமையான ஒப்புரவாகுதல் நிகழ்ந்த பிறகே இந்த உரிமை சலுகைகளைப் பெறமுடியும்.

புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்று, யார் யார் தேவ பிள்ளைகளும், ஆசாரியர்களுமாக ஆகின்றார்களோ, அவர்கள் அப்போதி-ருந்து ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை அல்லது மறுசீரமைப்பின் பணியை அவரவர் வாய்ப்புக்கும், திறமைக்கும் ஏற்றபடி செய்ய ஆரம்பிக்கும்படி பரிசுத்த ஆவி தூண்டுகிறது. பிரதான ஆசாரியர் செய்ததைப் போன்று, பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டு வருகிற ஒவ்வொருவரும் நன்கு அறிந்து உணர்ந்து இவ்வாறு சொல்வார்கள்:

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார், சிறுமைப்பட்டவர்களுக்குச் (அகங்காரிகளுக்கும், கடின இருதயமுடையோருக்குமல்ல) சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், ...கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தை கூறவும்..." - ஏசா 61:1-2

இந்த அனுக்கிரக காலப்பகுதியில், கிறிஸ்து தந்த தகுதியினைப் பெற்று ஜீவபலி செலுத்துகின்ற சிறுமந்தையாரின் பலி தேவனுக்குப் பிரியமானதாய் இருப்பதால் அதனை ஏற்றுக் கொள்கிறார்.

அப்போஸ்தலர் பவுல், ஒரு ஆசாரியனாயிருந்து, கேட்கச் செவியுள்ளவர்களுக்கு, திருவசனத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியின் ஏவுதலால் அறிந்து, அவர் சந்தித்த "கேட்கச் செவியுள்ளவர்களிடத்தில்" நமது அருமை மீட்பர் "எல்லாரையும்

*மீட்கும் பொருளாக" தம்மை பலியாக கொடுத்த சத்திய செய்திகளை அறிவித்தார். அனைவரும் மறுசீரமைப்புக்குள்ளாகி, தேவனோடு ஒப்புரவாகி நீதியின் பாதையில் நடவுங்கள் என்றும் புத்திமதி கூறினார்.*

*இதைக் குறித்த அப்போஸ்தலரின் வார்த்தைகளை 2 கொரிந். 5:17-20 இல் காணலாம்.*

*"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் (பழைய பாவம், நோக்கம், எதிர்ப்புகள்) ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் (இப்புதிய சிந்தை) தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாகுத-ன் (கிரேக்கச் சொல்* kattalage - *ஒப்புவாகுதல் ரோமர் 5:11) ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக் கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாகுதலின் உபதேசத்தை எங்களிடத்தில் (இராஜரீக ஆசாரியக் கூட்டத்தார்) ஒப்புவித்தார்."*

*"ஆனபடியினாலே, (தேவன் நம்மை அழைத்து, தமது நாமத்தினிமித்தம், ஆசாரிய ஊழியம் செய்யவும், தேவ தயையின் நற்செய்தியை அறிவிக்கவும் விரும்பினார்.) தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக (பிதாவின் பிரதிநிதியும், பிரதான ஆசாரியரும், நமது தலையுமாயிருக்கிறவர்) ஸ்தானாதிபதிகளாயிருந்து தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்கிறோம்."*

*இந்த மகிழ்ச்சிகரமான, பாராட்டத்தக்க செய்தியை எல்லா வேதாகமப் பாட வகுப்புகளிலும் எல்லா இடங்களிலும் பொறுப்புணர்வோடு அறிவிக்கும்போது பொதுவாகவே அனைவரும் ஏற்க மறுக்கின்றனர். இவ்வாறு இராஜரீக ஆசாரியர்கள் புலம்புவதை ஏசாயா தீர்க்க தரிசி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.*

*"எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் (தேவனின் வல்லமை, கிறிஸ்துவின் மூலம்) யாருக்கு வெளிப்பட்டது?" (ஏசா. 53:1; யோவா. 12:38)*

இராஜரீக ஆசாரியர்களாகும்படி தேவனால் அழைக்கப்பட்ட அநேகரில், சிலருக்கு மட்டுமே இந்த செய்தி பலனளிக்கக் கூடியதாக இருக்கிறது. தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்திற்குத் தானாய் ஏற்படுவதில்லை.

இச்சுவிசேஷத்தை பொதுவாக அனைவரும் மறுத-ப்பதற்கான காரணம் தெளிவாகப் புலப்படுகிறது. ஏனெனில் மறுசீரமைப்புக்குள்ளாகி, தேவனோடு ஒப்புரவாகுதல் என்பது பாவத்திற்கு எதிரான செயல். ஆகவே தேவனோடு சமாதானமாகுதல் என்பது இழிவான ஆசைகளுக்கும் பலவீனத்திற்கும் எதிரான போராட்டமாகும். அதாவது பாவத்திற்கு அடிமைகளாயிருந்து அதற்கு ஊழியம் செய்து வந்த நிலையிலிருந்து முற்றிலுமாக மாற்றப்பட்டு நீதியின் ஊழியத்திற்கு மாறும் மாபெரும் செயல் நடைபெறுவதையே குறிக்கும். அநேகர் பாவத்தை வெறுத்து (பாவத்தின் அடிப்படைத் தன்மையிலிருந்தும், தீமையிலிருந்தும் விலகுதல்) தேவன் தம் பிள்ளைகளுக்காக வைத்திருக்கின்ற ஆசீரைப் பெறவும், தேவனோடு ஒப்புரவாகவும் ஏங்குகின்றனர். இவர்கள் தங்களது பாவ வழிகளைவிட்டு, நீதியின் வழியில் நடக்க அடியெடுத்து வைக்கின்றனர். அவ்வாறு முயலும் போது இவர்களின் பலவீனங்கள் வெற்றி கொள்ள முடியாத அளவுக்குப் பெருகியிருப்பதை உணர்கின்றனர். முழு மனுக்குலமும் பாவத்தின் பிடியில் சிக்குண்டு அடிமைப்பட்டுக் கிடக்கிறது. இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும் வாய்ப்பு யாருக்குக் கிட்டுமெனில், இப்பாவப் பிடியிலிருந்து விடுதலை பெற்று இரட்சிப்படைய வேண்டும் என்று நாடித் தேடுபவர்களாயும், குருவாகிய இயேசுவின் சாட்சியத்திற்கு கவனமாய் செவி சாய்ப்பவர்களாயும் இருப்போருக்கேயாகும். நமது ஆண்டவரின் சாட்சியம் : "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்பதேயாகும். ஒரே மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவே, "வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார்." அப்போஸ்தலர் கூறுகிறபடி,மாபெரும் விரோதியும், இப்பிரபஞ்சத்தின் அதிபதி யுமாகிய சாத்தான், தப்பறையான கொள்கையினால் எண்ணிலடங்கா ஜனங்களின் மனதினை குருடாக்கி வைத்திருக்கிறான். ஆகையினால் அவர்கள் மீட்பரால் ஏற்படுத்தப்பட்ட ஒப்புரவாகுதலை உணர்ந்து

மனந்திரும்பவும், பாராட்டவும் முடியாமல் போகிறது.

இவ்விதமான சூழ்நிலையில், பாவத்தின் விளைவுகள் அபரிமிதமான அளவு அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஆகவே இந்நிலையில் தேவனுடைய பிரதிநிதிகள், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் கிறிஸ்துவுக்குப் பதிலாக (சரீர அங்கத்தினர்கள் என்ற முறைப்படி) பிரதான ஆசாரியனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நீதியினிமித்தம் அவரோடு துன்பத்தை அனுபவிக்க வேண்டியதில் ஆச்சரியம் ஏதுமில்லை. நமது மாபெரும் ஆசாரியராகிய கிறிஸ்து, "ஒப்புரவாகுதலின் உபதேசத்தை" வெகு தெளிவாக வெளியரங்கமாகப் பேசினார். நீதியை விரும்பி அதன்படி நடக்கிறோம் என்று பெருமை பேசிய இஸ்ரயேலரால் அவர் வெறுத்து ஒதுக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். அவர் வழிவந்த அப்போஸ்தலர்களும், தாங்கள் உண்மையாய் நடந்ததினாலும், "ஒப்புரவாகுத-ன் உபதேசத்தை" விட்டுப் கொடுக்காததினாலும் நிந்திக்கப்பட்டனர்.

"என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்." "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாகச் சொல்வார் கள்." உலகம் உங்களை வெறுக்கிறதென்று ஆச்சரியப்படாதேயுங்கள். உலகம் உங்களைப் பகைக்கும் முன்னர் என்னையும் பகைத்தது என்று அறியுங்கள். (மத்.10:22. 5:10-12) மாபெரும் போதகராகிய இயேசு கிறிஸ்துவின் இவ்வார்த்தைகள் இன்றுள்ளது போலவே இந்த யுக இறுதி வரையிலும் கூட உண்மையாக நடந்தேறும். யார் யார் விசுவாசத்தோடு அவரது பிரதிநிதித்துவத்தை அப்பியாசப்படுத்தி, தேவனுடைய முழு ஆலோசனையையும் அறிவிக்க வெட்கப்படாமல் இருக்கிறார்களோ அவர்கள் கிறிஸ்துவுக்குள் படும் உபத்திரவங்கள் இன்னதென்று வெகு விரைவில் அறிந்து இவ்வாறு கூறுவர்.

"...உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது." (சங். 69:9; ரோமர். 15:3)

"ஒப்புரவாகுத-ன் ஊழியத்தை" ஆசாரியர்கள்

*நிறைவேற்றுவதற்கு அவர்கள் பெற்ற ஆவியின் அபிஷேகம் ஊக்குவித்து வழிநடத்துகிறது. இதனால் ஒவ்வொரு ஆசாரியனும் தன்னையே முழுமையாக தேவசித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து, ஒவ்வொருவரும் தங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்றும், இதுவே அவர்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை என்றும் உணர்ந்து கொள்கின்றனர். (ரோம. 12:1) இங்கே தெய்வீக திட்டத்தின் ஞானம் அற்புதமாக விளங்குகிறது.*

*ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொரு சகோதரனும், கிறிஸ்துவினிமித்தம் சகிப்புத் தன்மையோடு, எந்தளவு துன்பங்கள், சுயதியாகம் செய்கிறார்களோ, அவைகளே தேவபார்வையில் விசுவாசக் கிரியைகளாக எண்ணப்பட்டு அதே அளவிற்கு வெகுமதியாக, தேவப் பிரதிநிதிக்குரிய அந்தஸ்து அளிக்கப்படுகிறது. கிறிஸ்துவினிமித்தமும், சத்தியத்தினிமித்தமும் இவ்வாறு துன்பங்களை அனுபவிக்கத் தவறுபவர்கள், புதிய உடன்படிக்கையின்படி விசுவாசமற்ற ஊழியக் காரார்களாகிறார்கள். கிறிஸ்துவினிமித்தமும், சத்தியத்தினிமித்தமும் சிலுவை சுமக்கும் நல்ல போர் வீரர்களாக, தற்போது விசுவாசத்துடன் ஜீவிக்கின்றவர்கள் மட்டுமே, ஆயிரம் வருட அரசாட்சியில் கிறிஸ்துவோடு உடன் சுதந்திரர்களாக இணைந்து, ஒப்புரவாக்கும் உன்னத ஊழியத்தைச் செய்யும் தகுதி பெறுவார்கள்.*

*"கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்." அவரோடு கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம், நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்."- ரோம. 8:17; 2 தீமோ. 2:12,13, தீத்து 1:16*

*"...ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு." - வெளி. 3:11*

*"...நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்." - வெளி. 2:10*